முன்னுரை

பரிசுத்த வேதாகமத்தில், ஆரம்பத்தில் முற்பிதாக்களைப்பற்றியும், அதன் பின்பு தீர்க்கதரிசிகள், நியாயாதிபதிகள் ஆகியோரைப்பற்றியும் எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள் பரலோகத்தின் தேவனோடு நெருங்கிய ஐக்கியத்திலிருந்தார்கள். அவர்கள் கர்த்தரோடே முகமுகமாகப் பேசினார்கள். கர்த்தருடைய வார்த்தையும் அவர்களுக்கு தாமதமில்லாமல் உண்டாயிற்று. முற்பிதாக்களின் சரித்திரம் நம்முடைய விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணுவதற்காக எழுதப்பட்டிருக்கிறது.

முற்பிதாக்களின் காலத்தில், கர்த்தருடைய தரிசனம் அவர்களுக்கு பிரத்தியட்சமாய்க் கிடைத்துபோல, இப்போது நமக்கு கிடைப்பதில்லை. நியாயாதிபதிகளின் காலத்திற்கு பின்பு, கர்த்தருடைய பொதுவான பராமரிப்பே, அவருடைய ஜனத்திற்கு கொடுக்கப்பட்டது. நம்முடைய காலத்தில், நாமும் கர்த்தருடைய பொதுவான பராமரிப்பினால் வழிநடத்தப்படுகிறோம்.

முற்பிதாக்களுக்கு மேசியாவைப்பற்றிய அடையாளங்கள் அதிகமாய்க் காண்பிக்கப்படவில்லை. ஆனாலும் அவர்களிடத்தில் மேசியாவைப்பற்றிய எதிர்பார்ப்பு அதிகமாயிருந்தது. சுவிசேஷத்தின் இரகசியங்களை காணவேண்டுமென்று தீர்க்கதரிசிகளும், ராஜாக்களும் ஆவலாய் வாஞ்சித்தார்கள்.

"அநேக தீர்க்கதரிசிகளும் ராஜாக்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணாமலும் கேளாமலும் போனார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (லூக் 10:24).

ராஜாக்களின் புஸ்தகத்திற்கு, சாமுவேலின் இரண்டு புஸ்தகங்களும் முன்னுரையாக எழுதப்பட்டிருக்கிறது. சாமுவேலின் புஸ்தகத்திலே இஸ்ரவேலின் ராஜரீகம் சவுலின் காலத்தில் ஆரம்பமானது பற்றியும், தாவீதின் ராஜகுடும்பத்தாரைப் பற்றியும் எழுதப்பட்டிருக்கிறது.

ராஜாக்களின் இரண்டு புஸ்தகங்களிலும், இஸ்ரவேலை ராஜ்யபாரம்பண்ணின தாவீதின் சந்ததியாரைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. தாவீதுக்கு பின்பு, அவருடைய குமாரன் சாலொமோன், சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவானார். அதன் பின்பு இஸ்ரவேல் தேசம், வடக்கு இஸ்ரவேல் தேசம் என்றும், தெற்கு யூதா தேசம் என்றும் இரண்டாகப் பிரிந்தது.

சாலொமோனுக்கு பின்பு, யூதாதேசத்திலும் இஸ்ரவேல் தேசத்திலும், பல ராஜாக்கள் ராஜ்யபாரம் பண்ணியிருக்கிறார்கள். அவர்களைப்பற்றிய சரித்திரம் ராஜாக்களின் புஸ்தகத்தில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்தாரும், யூதாதேசத்தாரும் முடிவிலே அந்நிய தேசத்து சிறையிருப்புக்குப் புறப்பட்டுப்போனார்கள்.

ஆதியாகமம் புஸ்தகத்திலிருந்து குடும்ப நிர்வாகத்தைப்பற்றியும், பொருளாதாரத்தைப் பற்றியும் நாம் நல்ல உபதேசங்களைப் பெற்றுக்கொள்கிறோம். இராஜாக்களின் புஸ்தகங்களிலிருந்து அரசியல் பிரமாணங்களைப்பற்றியும், சமுதாய வாழ்க்கையைப்பற்றியும் நல்ல உபதேசங்களைக் கற்றுக்கொள்கிறோம்.

இராஜாக்களின் புஸ்தகத்தில் தாவீதின் வம்சவழியில் வந்த இராஜாக்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தாருக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தாவீதின் வம்சத்தில் வந்தவர். தாவீதின் குமாரர்களில் சிலர், அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றினார்கள். வேறுசிலரோ தாவீதைப்போல ஜீவிக்காமல், கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள்.

BELLWETHER INTERNATIONAL

1 இராஜாக்கள் - விரிவுரை
I KINGS - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

இராஜாக்களின் புஸ்தகத்திலே யூதாதேசத்து இராஜாக்களின் சுபாவங்கள் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தாவீது ராஜா கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவர். சாலொமோன் ஞானமுள்ளவர். ரெகொபெயாம் எளிமையானவர். அபியா வீரமுள்ளவர். ஆசா நேர்மையானவர். யோசபாத் மார்க்க காரியங்களில் ஈடுபாடுள்ளவர். யோராம் ஒரு துன்மார்க்கன். அகத்சியா பிறரை வஞ்சிக்கிறவர். யோவாஸ் பின்மாறிப்போனவர். அமத்சியா அவசரப்படுகிறவர். உசியா பராக்கிரமமுள்ளவர். யோசியா இளகிய இருதயமுள்ளவர். யோவாகாஸ், யோயாகீம், யோயாக்கீன் ஆகியோர் துன்மார்க்கர். துன்மார்க்கமான இராஜாக்கள் தங்களையும் அழித்து, தங்கள் தேசத்தையும் அழித்துப்போட்டார்கள்.

இஸ்ரவேல் தேசத்தை ஆளுகை செய்த இராஜாக்களில், நல்லவர்களும் கெட்டவர்களும் சமபங்காக இருக்கிறார்கள். நல்ல இராஜாக்களின் ராஜாசனம் நீண்டகாலத்திற்கு நிலைத்திருக்கிறது. துன்மார்க்கரின் ராஜாசனமோ சீக்கிரத்தில் முடிந்துபோகிறது.

தாவீதின் மரணம் (1இராஜா 1,2 ஆகிய அதிகாரங்கள்). சாலொமோனின் மகிமையான ஆட்சிக்காலம் . சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறார் (1இராஜா 3-10 ஆகிய அதிகாரங்கள்). யூதாவுக்கு ராஜாவாக ஆட்சி புரிந்த அபியா, ஆசா, ஆகியோரின் ஆட்சிக்காலத்திலும், இஸ்ரவேலுக்கு ராஜாவாக ஆட்சிபுரிந்த பாஷா, ஓம்ரி ஆகியோரின் ஆட்சிக்காலத்திலும் இஸ்ரவேல் தேசத்தின் மகிமை மங்கிப்போயிற்று (1இராஜா 15,16 ஆகிய அதிகாரங்கள்).

எலியாவின் அற்புதங்கள் (1இராஜா 17-19 ஆகிய அதிகாரங்கள்). பெனாதாத்திற்கு விரோதமாக ஆகாப் வெற்றி பெறுகிறான். ஆகாபின் துன்மார்க்கமும் வீழ்ச்சியும் (1இராஜா 20-22 ஆகிய அதிகாரங்கள்).

இஸ்ரவேலின் ராஜாக்கள் ஜனங்களுக்கு ஆண்டவரைப்போல முக்கியமானவர்களாகயிருந்தாலும், அவர்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக மனுஷராகவே இருக்கிறார்கள். அவர்களும் கர்த்தருக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டியவர்கள்.

1 அதிகாரம்

தாவீது ராஜா வயது சென்ற விர்த்தியாப்பியனாயிருக்கிறார். அவருடைய சரீர ஆரோக்கியம் குறைந்துபோயிற்று (1இராஜா 1:1-4). அதோனியா தாவீதின் ராஜ்யத்தை அபகரித்துக்கொள்ள முயற்சி பண்ணுகிறான் (1இராஜா 1:5-10).

நாத்தானும் பத்சேபாளும், தாவீதுக்கு பின்பு சாலொமோனை ராஜாவாக்க பிரயாசப்படுகிறார்கள். அவர்கள் தாவீது ராஜாவினிடத்திலிருந்து தங்களுக்கு சாதகமான உத்தரவைப் பெற்றுக்கொள்கிறார்கள் (1இராஜா 1:11-31). தாவீதின் கட்டளைப் பிரகாரம் சாலொமோன் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்படுகிறார். ஜனங்கள் சந்தோஷப்படுகிறார்கள் (1இராஜா 1:32-40).

அதோனியாவின் சதி முறியடிக்கப்படுகிறது. அவனோடு கூடயிருக்கிறவர்கள் சிதறிப்போகிறார்கள் (1இராஜா 1:41-49). சாலெமோன் அதோனியாவை மன்னிக்கிறார். ஆனாலும் அதோனியா யோக்கியமாக நடந்துகொள்ள வேண்டுமென்று சாலொமோன் அவனுக்கு கட்டளை கொடுக்கிறார் (1இராஜா 1:50-53).

தாவீதுராஜா
1இராஜா 1:1-4

1இராஜா 1:1. தாவீதுராஜா வயதுசென்ற விர்த்தாப்பியனானபோது, வஸ்திரங்களினால் அவனை மூடினாலும், அவனுக்கு அனல் உண்டாகவில்லை.

1இராஜா 1:2. அப்பொழுது அவனுடைய ஊழியக்காரர் அவனை நோக்கி: ராஜசமுகத்தில் நின்று, அவருக்குப் பணிவிடை செய்யவும், ராஜாவாகிய எங்கள் ஆண்டவனுக்கு அனல் உண்டாகும்படி உம்முடைய மடியிலே படுத்துக்கொள்ளவும் கன்னியாகிய ஒரு சிறு பெண்ணை ராஜாவாகிய எங்கள் ஆண்டவனுக்குத் தேடுவோம் என்று சொல்லி,

1இராஜா 1:3. இஸ்ரவேலின் எல்லையிலெல்லாம் அழகான ஒரு பெண்ணைத் தேடி, சூனேம் ஊராளாகிய அபிஷாகைக் கண்டு, அவளை ராஜாவினிடத்தில் கொண்டுவந்தார்கள்.

1இராஜா 1:4. அந்தப் பெண் வெகு அழகாயிருந்தாள்; அவள் ராஜாவுக்கு உதவியாயிருந்து அவனுக்குப் பணிவிடைசெய்தாள்; ஆனாலும் ராஜா அவளை அறியவில்லை.

தாவீது ராஜா இப்போது வயது சென்ற விர்த்தாப்பியனாயிருக்கிறார். தாவீது இதுவரையிலும் நல்ல சரீர ஆரோக்கியத்தோடிருந்தார். இப்போதோ அவருக்கு முதிர்வயதாயிற்று. அவருடைய சரீரத்தின் பெலனும் குறைந்துபோயிற்று. தாவீதின் சரீரத்திலே அனல் உண்டாகவில்லை. அவருடைய சரீரம் நடுங்கிக்கொண்டிருக்கிறது. அரண்மனையின் மருத்துவர்கள் தாவீதின் சரீரத்தை வஸ்திரங்களினால் மூடுகிறார்கள். அதினாலும் அவருக்கு அனல் உண்டாகவில்லை.

தாவீதின் ஊழியக்காரர், அரண்மனை வைத்தியரை நம்பவில்லை. வைத்தியருக்கு திறமையில்லை என்றும், வைத்தியர்களால் தாவீதுக்கு ஒரு நன்மையும் செய்ய முடியாது என்றும் தாவீதின் ஊழியக்காரர் நினைக்கிறார்கள். தாவீதின் சரீரத்தை வஸ்திரங்களினால் மூடி அவருக்கு அனல் உண்டாக்குவதற்கு பதிலாக, தாவீதுக்கு வேறுவிதமாக அனல் உண்டாக்கலாம் என்று அவருடைய ஊழியக்காரர் யோசிக்கிறார்கள்.

சரீரத்தின்மீது வஸ்திரங்களினால் மூடும்போது, வெளியிலிருந்து சரீரத்திற்குள் அனல் உண்டாகும். அவர்களோ தாவீதின் சரீரத்திற்கு உள்ளேயிருந்து அனல் புறப்பட்டு வருவதற்கு என்ன செய்யலாம் என்று யோசிக்கிறார்கள். அந்த அனலும் தாவீதின் சரீரத்தில் தங்கியிருக்கவேண்டும். அனல் அதிகரிக்கவேண்டும். இதை எப்படி செய்வது என்று அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ராஜாவின் அரண்மனையிலுள்ள விலையுயர்ந்த வஸ்திரங்களினாலும் தாவீது ராஜாவுக்கு அனல் உண்டாக்க முடியவில்லை.

தாவீதின் ஊழியக்காரர் அவருக்கு மதியீனமான ஒரு ஆலோசனையைச் சொல்லுகிறார்கள். அவர்கள் அந்த ஆலோசனையை தாவீதுக்கு சொல்லுவதற்கு முன்பாக, கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை விசாரித்திருக்கவேண்டும். அல்லது அரண்மனையின் வைத்தியர்களோடு ஆலோசனைபண்ணியிருக்கவேண்டும். ஆனால் தாவீதின் ஊழியக்காரரோ ஒருவரிடத்திலும் ஆலோசிக்காமல், தங்களுடைய மதியீனமான யோசனையை சொல்லுகிறார்கள்.

தாவீதின் ஊழியக்காரர் அவரை நோக்கி "ராஜசமுகத்தில் நின்று, அவருக்குப் பணிவிடை செய்யவும், ராஜாவாகிய எங்கள் ஆண்டவனுக்கு அனல் உண்டாகும்படி உம்முடைய மடியிலே படுத்துக்கொள்ளவும் கன்னியாகிய ஒரு சிறு பெண்ணை ராஜாவாகிய எங்கள் ஆண்டவனுக்குத் தேடுவோம்" (1இராஜா 1:2) என்று சொல்லுகிறார்கள்.

தாவீதும் தன்னுடைய ஊழியக்காரரின் மதியீனமான ஆலோசனையை ஏற்றுக்கொள்கிறார். தாவீதின் ஊழியக்காரர் தங்களுடைய ஆலோசனைப் பிரகாரம், இஸ்ரவேலின் எல்லையிலெல்லாம் அழகான ஒரு பெண்ணைத் தேடி, சூனேம் ஊராளாகிய அபிஷாகைக் கண்டு, அவளை ராஜாவினிடத்தில் கொண்டுவருகிறார்கள். அந்தப் பெண் வெகு அழகாயிருக்கிறாள்; அவள் தாவீது ராஜாவுக்கு உதவியாயிருந்து அவருக்குப் பணிவிடைசெய்கிறாள்; ஆனாலும் தாவீது ராஜா அவளை அறியவில்லை (1இராஜா 1:3,4).

தாவீது சூனேம் ஊராளாகிய அபிஷேகோடு சயனிப்பதற்கு முன்பாக அவளை திருமணம் செய்துகொள்கிறார். தாவீதுக்கு ஏற்கெனவே மனைவிகள் இருக்கிறார்கள். அந்த மனைவிகளோடு, இப்போது அபிஷேகும் மனைவியாகிறாள்.

அதோனியா தாவீதின் குமாரன். தாவீது மரித்த பின்பு அதோனியா, தாவீதின் மனைவியாகிய அபிஷேகை திருமணம் செய்துகொள்ளவேண்டுமென்று விரும்புகிறான்.

"ராஜாவாகிய சாலொமோன் தன் தாயாருக்குப் பிரதியுத்தரமாக: நீர் சூனேம் ஊராளாகிய அபிஷாகை அதோனியாவுக்குக் கேட்பானேன்? அப்படியானால் ராஜ்யபாரத்தையும் அவனுக்குக் கேளும்; அவன் எனக்கு மூத்த சகோதரன்; அவனுக்கும் ஆசாரியனாகிய அபியத்தாருக்கும் செருயாவின் குமாரன் யோவாபுக்குமே அதைக் கேளும் என்றான்" (1இராஜா 2:22).

அதோனியா
1இராஜா 1:5-10

1இராஜா 1:5. ஆகீத்திற்குப் பிறந்த அதோனியா என்பவன்: நான் ராஜா ஆவேன் என்று சொல்லி, தன்னைத்தான் உயர்த்தி, தனக்கு இரதங்களையும் குதிரைவீரரையும், தனக்குமுன் ஓடும் ஐம்பது காலாட்களையும் சம்பாதித்தான்.

1இராஜா 1:6. அவனுடைய தகப்பன்: நீ இப்படிச் செய்வானேன் என்று அவனை ஒருக்காலும் கடிந்துகொள்ளவில்லை; அவன் மிகவும் அழகுள்ளவனாயிருந்தான்; அப்சலோமுக்குப்பின் அவனுடைய தாய் அவனைப் பெற்றாள்.

1இராஜா 1:7. அவன் செருயாவின் குமாரனாகிய யோவாபோடும், ஆசாரியனாகிய அபியத்தாரோடும் ஆலோசனைபண்ணிவந்தான்; அவர்கள் அவனிடத்திலிருந்து அவனுக்கு உதவிசெய்துவந்தார்கள்.

1இராஜா 1:8. ஆசாரியனாகிய சாதோக்கும், யோய்தாவின் குமாரனாகிய பெனாயாவும், தீர்க்கதரிசியாகிய நாத்தானும், சீமேயியும், ரேயியும், தாவீதோடிருக்கிற பராக்கிரமசாலிகளும், அதோனியாவுக்கு உடந்தையாயிருக்கவில்லை.

1இராஜா 1:9. அதோனியா இன்ரோகேலுக்குச் சமீபமான சோகெலெத் என்னும் கல்லின் அருகே ஆடுமாடுகளையும் கொழுத்த ஜந்துக்களையும் அடித்து, ராஜாவின் குமாரராகிய தன் சகோதரரெல்லாரையும், ராஜாவின் ஊழியக்காரரான யூதாவின் மனுஷர் அனைவரையும் அழைத்தான்.

1இராஜா 1:10. தீர்க்கதரிசியாகிய நாத்தானையும், பெனாயாவையும், பராக்கிரமசாலிகளையும், தன் சகோதரனாகிய சாலொமோனையும் அழைக்கவில்லை.

தாவீதுக்கு அவருடைய பிள்ளைகள் மூலமாக ஏராளமான வேதனைகளும், பாடுகளும், உபத்திரவங்களும், நெருக்கங்களும் உண்டாயிற்று. அம்னோன், அப்சலோம் ஆகியோர் தாவீதுக்கு துக்கத்தைக் கொடுத்தார்கள். இவர்களில் ஒருவன் மூத்தவன். மற்றவன் தாவீதின் மூன்றாவது குமாரன்.

"எப்ரோனிலே தாவீதுக்குப் பிறந்த குமாரர்: யெஸ்ரயேல் ஊராளான அகினோவாமிடத்தில் பிறந்த அம்னோன் அவனுக்கு முதல் பிறந்தவன். நாபாலின் மனையியாயிருந்த கர்மேல் ஊராளான அபிகாயிலிடத்திலே பிறந்த கீலேயாப் அவனுடைய இரண்டாம் குமாரன்; மூன்றாம் குமாரன் கேசூரின் ராஜாவான தல்மாய் குமாரத்தியாகிய மாக்காள் பெற்ற அப்சலோம் என்பவன்" *(2சாமு 3:2,3).*

அபிகாயிலிடத்திலே பிறந்த கீலேயாத் என்பவன் தாவீதுக்கு இரண்டாவது குமாரன். ஒருவேளை இந்தக் குமாரன் தாவீதுக்கு ஆறுதலாயிருந்திருக்கவேண்டும். தாவீதின் நான்காவது குமாரன் அதோனியா. "நாலாம் குமாரன் ஆகீத் பெற்ற அதொனியா என்பவன்; ஐந்தாம் குமாரன் அபித்தால் பெற்ற செப்பத்தியா என்வன்" *(2சாமு 3:4).* இவன் எப்ரோனில் பிறந்தவன்.

அதோனியா அப்சலோமைப்போல அழகானவன். இவன் அப்சலோமுக்கு பின்னால் பிறந்தவன். அப்சலோமுக்கும் அதோனியாவுக்கும் அதிக வயது வித்தியாசமில்லை. இரண்டுபேருடைய குணாதிசயமும் ஒன்றுபோலிருக்கிறது. அதோனியா மிகவும் அழகுள்ளவனாயிருக்கிறான். அப்சலோமுக்கு பின் அவனுடைய தாய் அவனைப் பெற்றாள் *(1இராஜா 1:6).*

தாவீதின் பார்வையில், அவருடைய நான்காவது குமாரன் அழகுள்ளவனாயிருக்கிறான். ஆனால் அவனுடைய சுபாவமோ கேடானதாயிருக்கிறது. தாவீது அவனை கிரீடத்திலே வைக்கப்படும் முத்து என்று நினைத்தார். அவனோ தாவீதுக்கு முள்ளாயிருக்கிறான்.

ஆகீத்திற்குப் பிறந்த அதோனியா என்பவன்: "நான் ராஜா ஆவேன்" என்று சொல்லி, தன்னைத்தான் உயர்த்தி, தனக்கு இரதங்களையும் குதிரைவீரரையும், தனக்குமுன் ஓடும் ஐம்பது காலாட்களையும் சம்பாதிக்கிறான். அவனுடைய தகப்பனாகிய தாவீது: "நீ இப்படிச் செய்வானேன்" என்று அவனை ஒருக்காலும் கடிந்துகொள்ளவில்லை *(1இராஜா 1:5,6).*

தகப்பனும் மகனும் தப்பு செய்கிறார்கள். தகப்பன் தன்னைக் கண்டிக்கவில்லையென்றாலும், பிள்ளைகள் ஒழுக்கமாய் வளரவேண்டும். தங்களை நம்புகிற பெற்றோரை ஏமாற்றிவிடக்கூடாது. பிள்ளைகள் தப்பு செய்யும்போது, பெற்றோரும் அவர்களைத் கண்டிக்காமல் விட்டுவிடக்கூடாது. பிள்ளைகளை பெற்றோர் கண்டித்து வளர்க்கவில்லையென்றால், பிற்காலத்தில் மற்றவர்கள் அவர்களை கண்டிக்கவேண்டிய நிலை ஏற்படும்.

தாவீது வயது சென்ற விர்த்தாப்பியனாயிருக்கிறார். தாவீதுக்கு அதிக வயதானதினால் அவரால் சரியாக ராஜ்யபாரம் செய்ய முடியவில்லை. தாவீதால் ராஜாசனத்தில் வீற்றிருக்க முடியவில்லை. அவர் படுக்கையில் படுத்து ஓய்வெடுத்துக்கொண்டிருக்கிறார். அதோனியா தாவீதின் முதுமையை தனக்கு சாதமாக பயன்படுத்துகிறான். அவன் தன்னைத்தானே உயர்த்துகிறான். "நான் ராஜா ஆவேன்" என்று பெருமையோடு சொல்லுகிறான்.

தாவீது சீக்கிரத்தில் மரித்துப்போவார் என்பது அதோனியாவுக்கு தெரிந்திருக்கிறது. அவர் மரிக்கும்போது இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் அவருக்காக துக்கங்கொண்டாடுவார்கள். புலம்பல் பாடலைப் பாடுவார்கள். தாவீது மரித்துப்போன பின்பு, இஸ்ரவேலின் ராஜாசனத்தில் யாராவது ஒருவர் வந்து அமரவேண்டும். அது ஏன் தானாக இருக்கக்கூடாது என்னும் ஆசை அதோனியாவின் மனதில் உண்டாயிற்று.

தாவீது உயிரோடிருக்கும்போதே, அதோனியா இஸ்ரவேலுக்கு ராஜாவாக தன்னை ஆயத்தம்பண்ணுகிறான். தன்னைத்தானே உயர்த்துகிறான். தனக்கு இரதங்களையும், குதிரை வீரரையும், தனக்கு முன் ஓடும் ஐம்பது காலாட்களையும் சம்பாதிக்கிறான். தாவீதுக்கு பின்பு, "நான் ராஜா ஆவேன்" என்று அதோனியா உறுதியாய்ச் சொல்லுகிறான்.

தாவீதின் ராஜாசனத்திலே, சாலொமோன் ராஜ்யபாரம் பண்ணுவதற்கு அதிக வாய்ப்புள்ளது. இது அதோனியாவுக்கும் தெரியும். தேவனும், தாவீதும் சாலொமோனை ராஜாவாக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால் அதோனியாவோ, தாவீதுக்கு பின்பு, தானே ராஜாவாகவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறான். அதற்காக தன்னை ஆயத்தம்பண்ணுகிறான்.

"இதோ, உனக்குப் பிறக்கப்போகிற குமாரன் அமைதியுள்ள புருஷனாயிருப்பான்; சுற்றிலுமிருக்கும் அவன் சத்துருக்களையெல்லாம் விலக்கி அவனை அமர்ந்திருக்கச் செய்வேன்; ஆகையால் அவன் பேர் சாலொமோன் என்னப்படும்; அவன் நாட்களில் இஸ்ரவேலின்மேல் சமாதானத்தையும் அமரிக்கையும் அருளுவேன்" (1நாளா 22:9).

"தாவீது கிழவனும் பூரண வயதுள்ளவனுமானபோது, தன் குமாரனாகிய சாலொமோனை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக்கினான்" (1நாளா 23:1).

தாவீதுக்கு வயதாயிற்று. அவர் விர்த்தாப்பியனாயிருக்கிறார். அவரால் சரியாக செயல்பட முடியாது. தாவீதின் மூலமாக தனக்கு ஒரு நன்மையும் உண்டாகாது என்பதை அதோனியா நன்றாய் அறிந்திருக்கிறான். தாவீது உயிரோடிருக்கும்போதே, இஸ்ரவேலின் ராஜாசனத்தில் தான் அமர்ந்து ராஜரீகம்பண்ணவேண்டும் என்று அதோனியா ஆசைப்படுகிறான்.

தாவீது ராஜாவால் இஸ்ரவேல் தேசத்தை ராஜரீகம் பண்ண முடியாது. அவர் வயதானவர். ஆகையினால் அவரால் ஆளுகை செய்ய முடியாது. சாலொமோனாலும் இஸ்ரவேலை ஆளுகை செய்ய முடியாது. ஏனெனில் சாலொமோனுக்கு ராஜாவாகும் வயது வரவில்லை. சாலொமோன் வாலிபவயதிலிருக்கிறார். ஆகையினால் சாலொமோன் இஸ்ரவேலுக்கு ராஜாவாக ஆவதற்கு முன்பாக, தான் ராஜாவாகவேண்டுமென்று அதோனியா ஆசைப்படுகிறான்.

ராஜாவுக்கு இரதங்களும் குதிரை வீரரும் வேண்டும். அப்போதுதான் மனுஷர் பார்வையிலே அவர் உயர்ந்தவராயிருப்பார். அதோனியாவும் தன்னைத்தானே உயர்த்துகிறான். தனக்கு இரதங்களையும் குதிரை வீரரையும் சம்பாதிக்கிறான். இவை தன்னைப் பலப்படுத்தும் என்றும், இவை தனக்காக யுத்தம்பண்ணும் என்றும் அதோனியா நம்புகிறான். தான் ராஜாவாகும்போது, தன்னை பவனியாக அழைத்துச் செல்வதற்கு இவையெல்லாம் ஆயத்தமாயிருக்கும் என்று நினைத்து, அதோனியா தனக்கு இரதங்களையும் குதிரை வீரரையும் சம்பாதிக்கிறான்.

அதோனியா செருயாவின் குமாரனாகிய யோவாபோடும், ஆசாரியனாகிய அபியத்தாரோடும் ஆலோசனைபண்ணிவருகிறான்; அவர்கள் அவனிடத்திலிருந்து அவனுக்கு உதவிசெய்துவருகிறார்கள் (1இராஜா 1:7).

அதோனியாவுக்கு ஆலோசனை சொல்லுகிறவர்களும் வயது முதிர்ந்தவர்கள். இவர்கள் ஒரு காலத்தில் தாவீதுக்கு உண்மையுள்ள ஊழியக்காரராயிருந்தவர்கள். தாவீது ஆபத்துக்களிலும், நெருக்கங்களிலும், உபத்திரவங்களிலும் இருந்தபோது இவர்கள் தாவீதோடு கூடயிருந்து அவருக்கு உதவி செய்தவர்கள். புத்தியுள்ளவர்கள். ராஜ்யபாரத்தில் அனுபவமுள்ளவர்கள். இவர்கள் தாவீதை விட்டு பிரிந்து வரமாட்டார்கள் என்று பொதுவாக எல்லோரும் நினைத்திருப்பார்கள். ஆனால் இவர்களோ இப்போது, அதோனியாவின் பக்கத்திலிருந்து, அவனுக்கு ஆலோசனை சொல்லி, உதவிசெய்கிறார்கள்.

அதோனியாவோடு கூடயிருக்குமாறு கர்த்தர் யோவாபையும், அபியத்தாரையும் அனுமதித்திருக்கிறார். அவர்கள் ஏற்கெனவே கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தவர்கள். அவர்கள் துன்மார்க்கமான காரியங்களில் ஈடுபட்டவர்கள். கர்த்தர் யோவாபையும், அபியத்தாரையும் அவர்கள் தங்களுடைய பாவங்களினிமித்தமாக, அவர்களைத் தண்டிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார். அவர்கள் தங்களுடைய துன்மார்க்கத்திற்கு தண்டனை பெறவும், அவர்கள் தங்களைத் தாங்களே அழித்துக்கொள்ளவும், அதோனியாவோடு கூட சேர்ந்திருக்கிறார்கள்.

அதோனியாவோடு யோவாபும் அபியத்தாரும் இருந்தாலும், தாவீதுக்கு உண்மையுள்ளவர்கள் இன்னும் அவரோடு கூடயிருக்கிறார்கள். ஆசாரியனாகிய சாதோக்கும், யோய்தாவின் குமாரனாகிய பெனாயாவும், தீர்க்கதரிசியாகிய நாத்தானும், சீமேயியும், ரேயியும், தாவீதோடிருக்கிற பராக்கிரமசாலிகளும், அதோனியாவுக்கு உடந்தையாயிருக்கவில்லை (1இராஜா 1:8).

அதோனியா யோவாபையும் அபியத்தாரையும் நம்புவதுபோல, தாவீதோடு கூடயிருக்கிறவர்களை நம்பவில்லை. அவர்களும் அதோனியாவுக்கு உடந்தையாயிருக்கவில்லை.

அதோனியா ஒரு பெரிய விருந்தை ஆயத்தம்பண்ணுகிறான். விருந்திற்கு தன்னுடைய திட்டத்தின்படி அநேகரை அழைக்கிறான். அதே வேளையில் அவன் சாதுரியமாக தன்னுடைய விருந்திற்கு ஒரு சிலரை அழைக்காமல், அவர்களைப் புறக்கணித்து விடுகிறான்.

அதோனியா இன்ரோகேலுக்குச் சமீபமான சோகெலெத் என்னும் கல்லின் அருகே ஆடுமாடுகளையும் கொழுத்த ஜந்துக்களையும் அடித்து, ராஜாவின் குமாரராகிய தன் சகோதரரெல்லாரையும், ராஜாவின் ஊழியக்காரரான யூதாவின் மனுஷர் அனைவரையும் அழைக்கிறான். தீர்க்கதரிசியாகிய நாத்தானையும், பெனாயாவையும், பராக்கிரமசாலிகளையும், தன் சகோதரனாகிய சாலொமோனையும் அழைக்கவில்லை (1இராஜா 1:9,10).

அதோனியா ஆயத்தம்பண்ணும் விருந்து இன்ரோகேலுக்குச் சமீபமான சோகெலெத் என்னும் கல்லின் அருகே நடைபெறுகிறது. இன்ரோகேல் எருசலேமுக்கு அருகாமையிலிருக்கிறது. தாவீது ராஜாவின் குமாரரும் அவருடைய ஊழியக்காரரும் இந்த விருந்திற்கு அழைக்கப்படுகிறார்கள். தாவீதின் குமாரர்கள் எல்லோரும் அழைக்கப்பட்டாலும், சாலொமோன் அழைக்கப்படவில்லை. சாலொமோனும் தாவீதின் குமாரன். அவர் அதோனியாவுக்கு சகோதரன்.

அதோனியா சாலொமோனை தனக்கு போட்டியாக நினைக்கிறான். அவன் சாலொமோனை வெறுக்கிறான். அதோனியா ஆடுமாடுகளையும் கொழுத்த ஜந்துக்களையும் அடிக்கிறான். அதோனியாவோடுகூட ஆசாரியனாகிய அபியத்தாரும் இருக்கிறான். ஆகையினால் அதோனியாவின் விருந்து ஒரு மார்க்க ஆராதனைபோல நடைபெறுகிறது. அவன் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாகவேண்டும் என்று சதிஆலோசனைபண்ணுவது மூடி மறைக்கப்படுகிறது. அதோனியாவின் சகோதரரும், ராஜாவின் ஊழியக்காரரும் மார்க்க ஆராதனைக்கு வருவதாக நினைக்கிறார்கள். ஆனால் அவர்களோ அதோனியாவின் கண்ணியிலே சிக்கிக்கொள்கிறார்கள்.

நாத்தான்
1இராஜா 1:11-14

1இராஜா 1:11. அப்பொழுது நாத்தான் சாலொமோனின் தாயாகிய பத்சேபாளை நோக்கி: நம்முடைய ஆண்டவனாகிய தாவீதுக்குத் தெரியாமல், ஆகீத்தின் குமாரனாகிய அதோனியா ராஜாவாகிற செய்தியை நீ கேட்கவில்லையா?

1இராஜா 1:12. இப்போதும் உன் பிராணனையும், உன் குமாரனாகிய சாலொமோனின் பிராணனையும் தப்புவிக்கும்படிக்கு நீ வா, உனக்கு நான் ஆலோசனை சொல்லுவேன்.

1இராஜா 1:13. நீ தாவீது ராஜாவினிடத்தில் போய்: ராஜாவாகிய என் ஆண்டவனே, எனக்குப்பின் உன் குமாரனாகிய சாலொமோன் ராஜாவாகி, அவனே என் சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பான் என்று நீர் உமது அடியாளுக்கு ஆணையிடவில்லையா? அப்படியிருக்க, அதோனியா ராஜாவாகிறது என்ன? என்று அவரிடத்தில் கேள்.

1இராஜா 1:14. நீ அங்கே ராஜாவோடே பேசிக்கொண்டிருக்கையில், நானும் உனக்குப் பின்வந்து, உன் வார்த்தைகளை உறுதிப்படுத்துவேன் என்றான்.

தாவீதுக்கு பின்பு சாலொமோன் இஸ்ரவேலுக்கு ராஜாவாகவேண்டும். அதோனியாவின் சதித்திட்டம் முறியடிக்கப்படவேண்டும். இதற்காக நாத்தானும் பத்சேபாளும், தாவீது ராஜாவினிடத்தில் தங்கள் கோரிக்கையை எடுத்து சொல்லுகிறார்கள்.

அதோனியாவின் சதிஆலோசனை தாவீதுக்கு தெரியவில்லை. பத்சேபாளும் வயது முதிர்ந்தவளாயிருக்கிறாள். நாத்தான் பத்சேபாளிடத்தில் அதோனியாவைப்பற்றி சொல்லும் வரையிலும் அவளுக்கு அதோனியாவின் சதிஆலோசனை தெரியவில்லை.

சாலொமோன் ஒரு வாலிபன். சாலொமோனுக்கு அதோனியாவின் சதித்திட்டம் நிச்சயமாய்த் தெரிந்திருக்கும். ஆனாலும் சாலொமோன் அதைப்பற்றி அதிகமாய்க் கவலைப்பட்டதாக தெரியவில்லை. சாலொமோனுக்கு விசேஷித்த ஞானம் இருக்கிறது. ஆனால் சாலொமோனோ தன்னுடைய ஞானத்தையும் புத்தியையும் பயன்படுத்தி, அதோனியாவின் சதித்திட்டத்தை முறியடிக்க முயற்சி பண்ணவில்லை.

சாலொமோன் சகல காரியங்களையும் கர்த்தருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்துவிடுகிறார். அதோனியாவின் சதிஆலோசனைகள் சாலொமோனுக்கு தெரிந்திருந்தாலும் அவர் அமைதியாயிருக்கிறார். தனக்காக தன்னுடைய சிநேகிதர்கள் அதோனியாவைக் கவனித்துக்கொள்வார்கள் என்று சாலொமோன் எதிர்பார்க்கிறார். எல்லோரும் அமைதியாகயிருந்தாலும், நாத்தான் அமைதியாகயிருக்கவில்லை.

நாத்தான் சாலொமோனின் தாயாகிய பத்சேபாளைப்போய் பார்க்கிறார். அதோனியாவின் சதித்திட்டத்தை அவளுக்கு எடுத்துச் சொல்லி அவளை எச்சரிக்கிறார். தாவீதுக்கு பின்பு சாலொமோன் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக வேண்டும். தாவீது ராஜா இதை ஏற்கெனவே பத்சேபாளுக்கு ஆணையிட்டு உறுதிபண்ணியிருக்கிறார். பத்சேபாள் தாவீதுக்கு அவருடைய வார்த்தைகளை ஞாபகப்படுத்தவேண்டும்.

சாலொமோனுக்கு கர்த்தருடைய சித்தமும், அவருடைய திட்டமும் தெரியும். கர்த்தர் அவருக்கு விசேஷித்த ஞானத்தைக் கொடுத்திருக்கிறார். தாவீதின் இருதயத்தைப்பற்றியும், அவருடைய மனதிலுள்ள எண்ணங்களைப்பற்றியும் சாலொமோனுக்கு நன்றாய்த் தெரியும். சாலொமோன் இஸ்ரவேல் தேசத்தின்மீது அதிக அக்கறையுள்ளவர். ஆகையினால் தாவீதுக்கு பின்பு, சாலொமோன் இஸ்ரவேலுக்கு ராஜாவாகவேண்டுமென்று நாத்தான் விரும்புகிறார்.

கர்த்தர் நாத்தான் மூலமாய் சாலொமோனுக்கு யெதிதியா என்று பேரிடுகிறார். "அவர் தீர்க்கதரிசியாகிய நாத்தானை அனுப்ப, அவன் கர்த்தரின் நிமித்தம் அவனுக்கு, யெதிதியா என்று பேரிட்டான்" (2சாமு 12:25). ஆகையினால் நாத்தான் இப்போது அமைதியாயிருக்கக்கூடாது. ஒன்றும் செய்யாமல் சும்மாயிருக்கக்கூடாது. இஸ்ரவேலின் சிங்காசனத்திற்கு ஆபத்து வந்திருக்கிறது. அதோனியா தன்னுடைய வஞ்சனையினால், இஸ்ரவேலின் ராஜாசனத்திலே அமருவதற்கு திட்டமிடுகிறான். அவனுக்கு யோவாபும், அபியத்தாரும் ஆலோசனை சொல்லுகிறார்கள்.

தாவீதுக்கு பின்பு, சாலொமோன் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாகவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம். இஸ்ரவேலின் சிங்காசனத்திலே அமர்ந்து ஆளுகை செய்யும் உரிமை, தாவீதுக்கு பின்பு சாலொமோனுக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. சாலொமோன் இஸ்ரவேலுக்கு ராஜாவாக இருந்தால்தான், இஸ்ரவேல் தேசத்திற்கு நன்மை உண்டாகும்.

அதோனியா இஸ்ரவேலுக்கு ராஜாவானால், அவனுடைய சதிஆலோசனை நிறைவேறும். அதோனியாவின் ஆட்சியில் இஸ்ரவேலுக்கு செழிப்பு இருக்காது. நீதிமான்களுக்கு துன்பம் வரும். நாத்தானுக்கும் பத்சேபாளுக்கும் ஆபத்து வரும்.

தாவீது ராஜாவை எல்லோரும் எளிதாகப் போய் பார்க்க முடியாது. ஆனாலும் பத்சேபாளால் ராஜாவைப் பார்க்க முடியும். ஆகையினால் நாத்தான் வேறு யாரையும் பார்க்காமல், பத்சேபாளைப் போய் பார்க்கிறார்.

நாத்தான் சாலொமோனின் தாயாகிய பத்சேபாளை நோக்கி: "நம்முடைய ஆண்டவனாகிய தாவீதுக்குத் தெரியாமல், ஆகீத்தின் குமாரனாகிய அதோனியா ராஜாவாகிற செய்தியை நீ கேட்கவில்லையா?" (1இராஜா 1:11) என்று கேட்கிறார்.

நாத்தான் அதோனியாவின் சதித்திட்டத்தை பத்சேபாளுக்கு சொல்லுகிறார். பத்சேபாளுக்கும் அதோனியாவின் சதித்திட்டம் தெரியவில்லை.

அதோனியா ராஜாவானால், சாலொமோனின் ஜீவனுக்கு ஆபத்து வரும். சாலொமோன் தன்னுடைய கிரீடத்தை இழந்துவிடுவார். சாலொமோனுக்கு ஆபத்து வரும்போது, நாத்தானுக்கும், பத்சேபாளுக்கும் ஆபத்து வரும். இவர்கள் எல்லோரும் தப்பவேண்டுமென்றால், இந்தப் பிரச்சனையை தாவீது ராஜாவினிடத்தில் சொல்லவேண்டும்.

நாத்தான் பத்சேபாளை நோக்கி, "இப்போதும் உன் பிராணனையும், உன் குமாரனாகிய சாலொமோனின் பிராணனையும் தப்புவிக்கும்படிக்கு நீ வா, உனக்கு நான் ஆலோசனை சொல்லுவேன்" (1இராஜா 1:12) என்று சொல்லுகிறார். அதோனியா ராஜாவானால், நாத்தானும், பத்சேபாளும், சாலொமோனும் செத்துப்போவது நிச்சயம்.

பத்சேபாள் ராஜாவினிடத்தில் போகவேண்டுமென்றும், தான் சொல்லுகிற ஆலோசனைப் பிரகாரம் அவள் தாவீது ராஜாவிடம் பேசவேண்டுமென்றும் நாத்தான் பத்சேபாளுக்கு சொல்லுகிறார்.

நாத்தான் பத்சேபாளை நோக்கி, "நீ தாவீது ராஜாவினிடத்தில் போய்: ராஜாவாகிய என் ஆண்டவனே, எனக்குப்பின் உன் குமாரனாகிய சாலொமோன் ராஜாவாகி, அவனே என் சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பான் என்று நீர் உமது அடியாளுக்கு ஆணையிடவில்லையா? அப்படியிருக்க, அதோனியா ராஜாவாகிறது என்ன? என்று அவரிடத்தில் கேள்" (1இராஜா 1:13) என்று சொல்லுகிறார்.

தனக்கு பின்பு சாலொமோன் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக வேண்டுமென்று, தாவீது ஏற்கெனவே பத்சேபாளுக்கு ஆணையிட்டு சொல்லியிருக்கிறார். தாவீது தனக்கு சொன்ன ஆணையை பத்சேபாள் அவருக்கு ஞாபகப்படுத்தவேண்டும். தாவீதுக்கு வயதாயிற்று. அவருக்கு ஒருவேளை ஞாபகமறதி வந்திருக்கலாம். தாவீதுக்கு அதோனியாவின் சதித்திட்டமும் தெரியவில்லை. ஆகையினால் பத்சேபாள் தாவீதினிடத்தில் போய் "அதோனியா ராஜாவாகிறது என்ன" என்று கேட்கவேண்டும்.

தாவீதை வஸ்திரங்களினால் மூடினாலும் அவருக்கு அனல் உண்டாகவில்லை. ஆனாலும் பத்சேபாளின் வார்த்தைகள் தாவீதுக்கு அனல் உண்டாக்கும். தாவீது தனக்கு சொன்ன ஆணையை, பத்சேபாள் அவருக்கு ஞாபகப்படுத்தும்போது, அவருடைய மனச்சாட்சி அவருக்குள்ளே அனல் உண்டாக்கும்.

பத்சேபாள் தாவீதோடு பேசிக்கொண்டிருக்கும்போது, தானும் அங்கே வருவதாக நாத்தான் சொல்லுகிறார். நாத்தான் பத்சேபாளை நோக்கி "நீ அங்கே ராஜாவோடே பேசிக்கொண்டிருக்கையில், நானும் உனக்குப் பின்வந்து, உன் வார்த்தைகளை உறுதிப்படுத்துவேன்" (1இராஜா 1:14) என்று சொல்லுகிறார். இரண்டுபேரும் சேர்ந்து வந்தால், திட்டமிட்டு வருவதுபோல இருக்கும். ஆகையினால் நாத்தான் பத்சேபாளை முதலாவது அனுப்புகிறார். அதன் பின்பு நாத்தான் எதேச்சையாக தாவீதைப் பார்க்க வருவதுபோல, அங்கே வருவதாக சொல்லுகிறார். பத்சேபாள் தாவீதோடு சொல்லுகிற வார்த்தைகளை நாத்தான் உறுதிபண்ணுவார்.

பத்சேபாள்
1இராஜா 1:15-21

1இராஜா 1:15. அப்படியே பத்சேபாள் பள்ளியறைக்குள் ராஜாவிடத்தில் போனாள்; ராஜா மிகவும் வயதுசென்றவனாயிருந்தான்; சூனேம் ஊராளாகிய அபிஷாக் ராஜாவுக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தாள்.

1இராஜா 1:16. பத்சேபாள் குனிந்து, ராஜாவை வணங்கினாள்; அப்பொழுது ராஜா: உனக்கு என்னவேண்டும் என்று கேட்டான்.

1இராஜா 1:17. அதற்கு அவள்: என் ஆண்டவனே, எனக்குப்பின் உன் குமாரனாகிய சாலொமோன் ராஜாவாகி, அவனே என் சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பான் என்று நீர் உம்முடைய தேவனாகிய கர்த்தரைக் கொண்டு, உமது அடியாளுக்கு ஆணையிட்டீரே.

1இராஜா 1:18. இப்பொழுது, இதோ, அதோனியா ராஜாவாகிறான்; என் ஆண்டவனாகிய ராஜாவே, நீர் அதை அறியவில்லை.

1இராஜா 1:19. அவன் மாடுகளையும் கொழுத்த ஜந்துக்களையும் ஆடுகளையும் திரளாக அடித்து, ராஜாவின் குமாரர் அனைவரையும் ஆசாரியனாகிய அபியத்தாரையும், யோவாப் என்னும் படைத்தலைவனையும் அழைத்தான்; ஆனாலும் உமது அடியானாகிய சாலொமோனை அழைக்கவில்லை.

1இராஜா 1:20. ராஜாவாகிய என் ஆண்டவனே, ராஜாவாகிய என் ஆண்டவனுக்குப்பிறகு அவருடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பவன் இன்னான் என்று தங்களுக்கு அறிவிக்கவேண்டும் என்று இஸ்ரவேலர் அனைவரின் கண்களும் உம்மை நோக்கிக் கொண்டிருக்கிறது.

1இராஜா 1:21. அறிவியாமற்போனால் ராஜாவாகிய என் ஆண்டவன் தம்முடைய பிதாக்களோடே படுத்துக்கொண்டபின்பு, நானும் என் குமாரனாகிய சாலொமோனும் குற்றவாளிகளாய் எண்ணப்படுவோம் என்றாள்.

நாத்தானுடைய ஆலோசனைப் பிரகாரமாகவும், அவருடைய வழிநடத்துதலின் பிரகாரமாகவும் பத்சேபாள் காலதாமதம்பண்ணாமல் உடனே செயல்பட ஆரம்பிக்கிறாள். அவள் தாவீது ராஜாவைப் போய்பார்த்து, தன்னுடைய விண்ணப்பங்களை அவரிடத்தில் முறையிடுகிறாள். பத்சேபாள் தன் ஜீவனுக்காக தாவீது ராஜாவினிடத்தில் பரிந்து பேசுகிறாள்.

தாவீது ராஜா வயது சென்ற விர்த்தாப்பியனாயிருந்தாலும், பத்சேபாள் அவரை எப்போது வேண்டுமானாலும் போய்ப்பார்க்கலாம். தாவீது இப்போது சூனேம் ஊராளாகிய அபிஷாகை திருமணம் செய்திருக்கிறார். ஆனாலும் தாவீது ராஜாவின் பள்ளியறைக்குள் போவதற்கு, பத்சேபாளுக்கு தடையேதுமில்லை.

பத்சேபாள் பள்ளியறைக்குள் தாவீது ராஜாவிடத்தில் போகிறாள்; தாவீது ராஜா மிகவும் வயதுசென்றவராயிருக்கிறார்; சூனேம் ஊராளாகிய அபிஷாக் ராஜாவுக்குப் பணிவிடை செய்துகொண்டிருக்கிறாள் (1இராஜா 1:15).

பத்சேபாள் தாவீது ராஜாவுக்கு மரியாதை செலுத்துகிறாள். பத்சேபாள் குனிந்து, தாவீது ராஜாவை வணங்குகிறாள்; அப்பொழுது தாவீது ராஜா: "உனக்கு என்னவேண்டும்" என்று பத்சேபாளிடம் கேட்கிறார் (1இராஜா 1:16). பத்சேபாளின் வார்த்தைகள் மரியாதையும் கண்ணியமும் நிரம்பியதாயிருக்கிறது.

தாவீது ராஜா பத்சேபாளுக்கு ஏற்கெனவே ஒரு சில காரியங்களை ஆணையிட்டுக் கொடுத்திருக்கிறார். தாவீது தனக்கு சொன்ன ஆணையை, பத்சேபாள் இப்போது அவருக்கு ஞாபகப்படுத்துகிறாள்.

பத்சேபாள் தாவீது ராஜாவினிடத்தில், "என் ஆண்டவனே, எனக்குப்பின் உன் குமாரனாகிய சாலொமோன் ராஜாவாகி, அவனே என் சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பான் என்று நீர் உம்முடைய தேவனாகிய கர்த்தரைக் கொண்டு, உமது அடியாளுக்கு ஆணையிட்டீரே" (1இராஜா 1:17) என்று அவர் தனக்கு இட்ட ஆணையை ஞாபகப்படுத்துகிறாள்.

தாவீது பத்சேபாளுக்கு இட்ட ஆணையை ஒருவேளை மறந்திருக்கலாம். தாவீதுக்கு வயது அதிகமானதினால், இஸ்ரவேல் தேசத்திலே என்ன நடக்கிறது என்பதையும் அவர் அறியவில்லை. தாவீது தன் வார்த்தைக்கு உண்மையுள்ளவர். அவர் தன்னுடைய மனச்சாட்சிக்கு கீழ்ப்படிவார். தாவீதின் குணாதிசயம் பத்சேபாளுக்கு நன்றாய்த் தெரியும். ஆகையினால் பத்சேபாள் தாவீது ராஜாவினிடத்தில் பேசும்போதே, அவர் தனக்கு இட்ட ஆணையை முதலாவதாக அவருக்கு ஞாபகப்படுத்துகிறாள்.

ஆனால் அதோனியாவின் சதித்திட்டத்தைப்பற்றி தாவீதுக்கு ஒன்றும் தெரியவில்லை. பத்சேபாள் தாவீதுக்கு, அதோனியாவின் சதித்திட்டத்தைப்பற்றிச் சொல்லுகிறாள்.

பத்சேபாள் தாவீது ராஜாவினிடத்தில், "இப்பொழுது, இதோ, அதோனியா ராஜாவாகிறான்; என் ஆண்டவனாகிய ராஜாவே, நீர் அதை அறியவில்லை. அவன் மாடுகளையும் கொழுத்த ஐந்துக்களையும் ஆடுகளையும் திரளாக அடித்து, ராஜாவின் குமாரர் அனைவரையும் ஆசாரியனாகிய அபியத்தாரையும், யோவாப் என்னும் படைத்தலைவனையும் அழைத்தான்; ஆனாலும் உமது அடியானாகிய சாலொமோனை அழைக்கவில்லை" (1இராஜா 1:18,19) என்று சொல்லுகிறாள்.

தாவீது பத்சேபாளுக்கு இட்ட ஆணைக்கு விரோதமாக, அதோனியா ராஜாவாகிறான். ஆனால் தாவீது ராஜா அதை அறியாதிருக்கிறார். அதோனியா ஒரு பெரிய விருந்து வைக்கிறான். அதற்கு சாலொமோனை அழைக்கவில்லை. அதோனியா சாலொமோனை தன்னுடைய சத்துருவாகப் பாவிக்கிறான். அவன் சாலொமோனுடைய முக்கியத்துவத்தையும், மேன்மையையும் குலைத்துப்போட முயற்சிபண்ணுகிறான்.

அதோனியா திட்டமிட்டு சதிபண்ணுவது பத்சேபாளுக்கு தெரிந்திருக்கிறது. அதோனியாவின் சதித்திட்டத்தை தாவீது ராஜாவால் மாத்திரமே முறியடிக்க முடியும். தாவீது வயது சென்றவராயிருந்தாலும், இஸ்ரவேல் தேசத்தார் எல்லோரும், அவருடைய வார்த்தைக்கு அதிக மதிப்பும் மரியாதையும் கொடுக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே தாவீதின் வார்த்தைக்கு கீழ்ப்படிய ஆயத்தமாயிருக்கிறார்கள்.

தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருக்கிறார். அவருக்கு அதிக வயதாயிற்று. ஆனாலும் அவர் தேசத்தின் காரியங்களை அறியாதவராயிருக்கக்கூடாது. இஸ்ரவேலின் சிங்காசனத்திலே தனக்கு பின்பு யார் அமர்ந்திருக்கவேண்டும் என்பதை, தாவீது இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருக்கும் அறிவிக்கவேண்டும். தாவீது இன்னும் அதை செய்யவில்லை. ஆகையினால் தாவீதின் முதுமையைப் பயன்படுத்தி, அதோனியா இஸ்ரவேலுக்கு ராஜாவாக சதிஆலோசனை பண்ணுகிறான்.

தாவீது அமைதியாயிராமல், தன்னுடைய ராஜரீக அதிகாரத்தைப் பயன்படுத்தி, தனக்கு பிறகு இஸ்ரவேலின் சிங்காசனத்தில் யார் அமர்ந்திருக்கவேண்டும் என்பதை வெளிப்படையாகச் சொல்லவேண்டும் என்று, பத்சேபாள் தாவீது ராஜாவினிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறாள்.

பத்சேபாள் தாவீது ராஜாவை நோக்கி, "ராஜாவாகிய என் ஆண்டவனே, ராஜாவாகிய என் ஆண்டவனுக்குப்பிறகு அவருடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பவன் இன்னான் என்று தங்களுக்கு அறிவிக்கவேண்டும் என்று இஸ்ரவேலர் அனைவரின் கண்களும் உம்மை நோக்கிக் கொண்டிருக்கிறது. அறிவியாமற்போனால் ராஜாவாகிய என் ஆண்டவன் தம்முடைய பிதாக்களோடே படுத்துக்கொண்டபின்பு, நானும் என் குமாரனாகிய சாலொமோனும் குற்றவாளிகளாய் எண்ணப்படுவோம்" (1இராஜா 1:20,21) என்று சொல்லுகிறாள்.

இஸ்ரவேலர் அனைவரின் கண்களும் தாவீதை நோக்கிக்கொண்டிருக்கிறது. அவர்கள் தாவீது ராஜாவின் தீர்மானத்தைக் கேட்பதற்கு காத்துக்கொண்டிருக்கிறார்கள். தாவீது இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜா மாத்திரமல்ல, அவர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கர்த்தருடைய தீர்க்கதரிசியாயும் இருக்கிறார். கர்த்தர் தாவீதை அபிஷேகம்பண்ணியிருக்கிறார் என்பதும், கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின் மூலமாக பேசுகிறார் என்பதும் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தெரிந்திருக்கிறது.

"தாவீதுடைய கடைசி வார்த்தைகள்: மேன்மையாய் உயர்த்தப்பட்டு, யாக்கோபுடைய தேவனால் அபிஷேகம் பெற்று, இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடின ஈசாயின் குமாரனாகிய தாவீது என்னும் புருஷன் சொல்லுகிறது என்னவென்றால்; கர்த்தருடைய ஆவியானவர் என்னைக் கொண்டு பேசினார்; அவருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது" (2சாமு 23:1,2).

இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தாவீது ராஜாவின் விசேஷித்த குணாதிசயத்தைப்பற்றி தெரிந்திருப்பதினால், அவர்களுடைய கண்கள் தாவீதை நோக்கிக்கொண்டிருக்கிறது. அவர்களுடைய செவிகள் தாவீதின் வார்த்தைகளைக்கேட்க ஆயத்தமாயிருக்கிறது. அவர்களுடைய இருதயங்கள் தாவீதின் தெய்வீக வழிநடத்துதலுக்கு கீழ்ப்படிய ஆயத்தமாயிருக்கிறது. ஆகையினால் தாவீது இந்த சூழ்நிலையில் அமைதியாயிராமல், தன்னுடைய தீர்மானத்தை சொல்லவேண்டும். தாவீதின் வார்த்தைகள் இஸ்ரவேல் ஜனத்தார் அனைவருக்கும் கட்டளையாகவும், பிரமாணமாகவும் இருக்கும்.

தாவீது ஏற்கெனவே பத்சேபாளுக்கு இட்ட ஆணையை, இப்போது நிறைவேற்றவேண்டும். இல்லையென்றால் பத்சேபாளுக்கும், அவளுடைய குமாரனாகிய சாலொமோனுக்கும் ஆபத்து வரும் என்று பத்சேபாள் தாவீது ராஜாவினிடத்தில் வேதனையோடு சொல்லுகிறாள்.

நாத்தான்
1இராஜா 1:22-27

1இராஜா 1:22. அவன் ராஜாவோடே பேசிக்கொண்டிருக்கையில், தீர்க்கதரிசியாகிய நாத்தான் வந்தான்.

1இராஜா 1:23. தீர்க்கதரிசியாகிய நாத்தான் வந்திருக்கிறார் என்று ராஜாவுக்குத் தெரிவித்தார்கள்; அவன் ராஜாவுக்கு முன்பாகப் பிரவேசித்து முகங்குப்புற விழுந்து ராஜாவை வணங்கினான்.

1இராஜா 1:24. நாத்தான்: ராஜாவாகிய என் ஆண்டவனே, அதோனியா எனக்குப்பின் ராஜாவாகி, அவனே என் சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பான் என்று நீர் சொன்னதுண்டோ?

1இராஜா 1:25. அவன் இன்றையதினம் போய், மாடுகளையும் கொழுத்த ஜந்துக்களையும் ஆடுகளையும் திரளாக அடித்து, ராஜாவின் குமாரர் அனைவரையும் இராணுவத்தலைவரையும், ஆசாரியனாகிய அபியத்தாரையும் அழைத்தான்; அவர்கள் அவனுக்கு முன்பாகப் புசித்துக் குடித்து, ராஜாவாகிய அதோனியா வாழ்க என்று சொல்லுகிறார்கள்.

1இராஜா 1:26. ஆனாலும் உமது அடியானாகிய என்னையும், ஆசாரியனாகிய சாதோக்கையும், யோய்தாவின் குமாரனாகிய பெனாயாவையும், உமது அடியானாகிய சாலொமோனையும் அவன் அழைக்கவில்லை.

1இராஜா 1:27. ராஜாவாகிய என் ஆண்டவனுக்குப்பின் தமது சிங்காசனத்தில் வீற்றிருப்பவன் இவன்தான் என்று நீர் உமது அடியானுக்குத் தெரிவிக்காதிருக்கையில், இந்தக் காரியம் ராஜாவாகிய என் ஆண்டவன் கட்டளையால் நடந்திருக்குமோ என்றான்.

பத்சேபாள் தாவீது ராஜாவோடே பேசிக்கொண்டிருக்கிறாள். அப்போது தீர்க்கதரிசியாகிய நாத்தான் அங்கே வருகிறார். நாத்தான் பத்சேபாளிடம் ஏற்கெனவே சொன்ன பிரகாரமாக, அவர் ஏற்ற வேளையிலே அங்கே வருகிறார். அவர் பத்சேபாளின் கோரிக்கைகளையும் விண்ணப்பங்களையும் உறுதிபண்ணுவதற்காக வருகிறார். பத்சேபாள் தாவீது ராஜாவினிடத்தில் தன்னுடைய விண்ணப்பங்களை ஏறெடுத்துவிட்டாள். இப்போது தாவீது ராஜா அவளுடைய விண்ணப்பங்களுக்கு பிரதியுத்தரம் சொல்லவேண்டும். தாவீது அவளுக்கு பிரதியுத்தரம் சொல்லுவதற்கு முன்பாகவே, நாத்தான் அங்கே வருகிறார். தாவீது ராஜாவின் பிரதியுத்தரம் சாலொமோனுக்கு சாதகமாயிருக்கவேண்டும். இதற்காக தாவீது ராஜாவினிடத்தில் சாலொமோனைப்பற்றிப் பேசுவதற்கு, நாத்தான் அங்கே வருகிறார்.

தீர்க்கதரிசியாகிய நாத்தான் வந்திருக்கிறார் என்று ராஜாவுக்குத் தெரிவிக்கிறார்கள்; நாத்தான் தாவீது ராஜாவுக்கு முன்பாகப் பிரவேசித்து முகங்குப்புற விழுந்து ராஜாவை வணங்குகிறார் (1இராஜா 1:23). பத்சேபாளைப்போலவே, தீர்க்கதரிசியாகிய நாத்தானுக்கும், தாவீது ராஜாவை எப்போது வேண்டுமானாலும் வந்து பார்ப்பதற்கு விசேஷித்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பத்சேபாள் அதோனியாவைப்பற்றியும், தன்னுடைய பிரச்சனையைப்பற்றியும் சுருக்கமாகச் சொன்னாள். நாத்தான் வந்தவுடனே, அதோனியாவைப்பற்றிய பிரச்சனையை வெளிப்படையாகப் பேசுகிறார். நாத்தான் பத்சேபாளைவிட ஞானமுள்ளவர். அவர் கர்த்தருடைய தீர்க்கதரிசி.

அதோனியா இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாகும் சம்பவத்தை பத்சேபாள் சொன்னாள். நாத்தான் அந்த சம்பவத்தை உறுதிபண்ணும் வண்ணமாக, அதை தாவீது ராஜாவுக்கு தெளிவாக எடுத்து சொல்லுகிறார். அதோனியாவின் விருந்தைப்பற்றி பத்சேபாள் தாவீதுக்கு சுருக்கமாகச் சொன்னாள். நாத்தானோ அந்த விருந்து ஏற்கெனவே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று அந்த விருந்தைப்பற்றி வர்ணிக்கிறார்.

தீர்க்கதரிசியாகிய நாத்தான் தாவீது ராஜாவை நோக்கி, "ராஜாவாகிய என் ஆண்டவனே, அதோனியா எனக்குப்பின் ராஜாவாகி, அவனே என் சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பான் என்று நீர் சொன்னதுண்டோ? அவன் இன்றையதினம் போய், மாடுகளையும் கொழுத்த ஜந்துக்களையும் ஆடுகளையும் திரளாக அடித்து, ராஜாவின் குமாரர் அனைவரையும் இராணுவத்தலைவரையும், ஆசாரியனாகிய அபியத்தாரையும் அழைத்தான்; அவர்கள் அவனுக்கு முன்பாகப் புசித்துக் குடித்து, ராஜாவாகிய அதோனியா வாழ்க என்று சொல்லுகிறார்கள்" (1இராஜா 1:24,25) என்று சொல்லுகிறார்.

அதோனியாவின் விருந்திலே புசித்து குடித்திருக்கிறவர்கள், "ராஜாவாகிய அதோனியா வாழ்க" என்று சொல்லுகிறார்கள். தாவீது ராஜா உயிரோடிருக்கும்போதே, அவர்கள் அதோனியாவை ராஜா என்றும், அவர் வாழ்க என்றும் சொல்லுகிறார்கள். அவர்கள் "ராஜாவாகிய அதோனியா வாழ்க" என்று சொல்லுவது, தாவீது ராஜா ஏற்கெனவே மரித்துப்போனது போல இருக்கிறது. அதோனியாவை ராஜாவாக்கும் காரியத்தை அவர்கள் கர்த்தரிடத்திலும் விசாரிக்கவில்லை, தாவீது ராஜாவினிடத்திலும் விசாரிக்கவில்லை.

அதோனியா ராஜாவாகிற விஷயத்தில் தாவீதுக்கு தொடர்பு இருப்பதுபோல நாத்தான் சொல்லுகிறார். இந்த விஷயத்தில் தாவீதுக்கு சம்பந்தம் இல்லையென்றால், அவர் இப்போதே தன்னுடைய தீர்மானத்தை எல்லோருக்கும் முன்பாக தெளிவுபடுத்த வேண்டும். இல்லையென்றால் அதோனியா தாவீது ராஜாவின் சம்மதத்தோடு ராஜாவாயிருக்கிறார் என்று எல்லோரும் நினைப்பார்கள்.

நாத்தான் தாவீதிடத்தில் பேசும்போது, "அதோனியா எனக்குப் பின் ராஜாவாகி, அவனே என் சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பான் என்று நீர் சொன்னதுண்டோ" என்று முதலாவதாக கேட்கிறார்.

தாவீது ராஜா நாத்தானின் குற்றச்சாட்டுக்கு உடனே பதில் சொல்லவில்லை. ஆகையினால் நாத்தான் இந்தக் குற்றச்சாட்டை, மறுபடியும் தெளிவாக தாவீது ராஜாவினிடத்தில் சொல்லுகிறார். "ராஜாவாகிய என் ஆண்டவனுக்குப்பின் தமது சிங்காசனத்தில் வீற்றிருப்பவன் இவன்தான் என்று நீர் உமது அடியானுக்குத் தெரிவிக்காதிருக்கையில், இந்தக் காரியம் ராஜாவாகிய என் ஆண்டவன் கட்டளையால் நடந்திருக்குமோ" (1இராஜா 1:27) என்று நாத்தான் தாவீது ராஜாவிடம் கேட்கிறார்.

அதோனியா ராஜாவாவது தாவீது ராஜாவின் சம்மதத்தோடு நடந்திருக்குமென்றால், தாவீது கர்த்தருடைய வார்த்தைக்கும் உண்மையுள்ளவராயில்லை, அவர் தன்னுடைய சொந்த வார்த்தைக்கும் உண்மையுள்ளவராயில்லை என்று பொருள்படும் வண்ணமாக நாத்தான் தாவீது ராஜாவின்மீது குற்றம் சொல்லுகிறார்.

தாவீது ராஜாவினிடத்தில் குற்றம் இல்லையென்றால், அவர் இனிமேலும் அமைதியாயிராமல், தன்னுடைய மனதிலுள்ள தீர்மானத்தை உடனே சொல்லிவிடவேண்டும். தாவீது எல்லோருக்கும் முன்பாக "சாலொமோன் எனக்குப் பின் ராஜாவாகி அவனே என் சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பான்" என்று அறிவிக்கவேண்டும்.

தாவீது பத்சேபாளுடைய விண்ணப்பத்திற்கு பிரதியுத்தரம் சொல்லுவதற்கு முன்பாக, நாத்தான் தாவீது ராஜாவிடத்தில் இவ்வாறு பேசி, அவருடைய மனதை சாலொமோனுக்கு ஆதரவாகப் பக்குவப்படுத்துகிறார்.

நாத்தான் அதோனியாவின் விருந்திற்கு அழைக்கப்படாதவர்களைப்பற்றிச் சொல்லும்போது, "அதோனியா உமது அடியானாகிய என்னையும், ஆசாரியனாகிய சாதோக்கையும், யோய்தாவின் குமாரனாகிய பெனாயாவையும், உமது அடியானாகிய சாலொமோனையும் அவன் அழைக்கவில்லை" (1இராஜா 1:26) என்று சொல்லுகிறார்.

நாத்தான் தாவீது ராஜாவினிடத்தில், தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "உமது அடியானாகிய என்னையும்" என்று சொல்லி, தன்னை தாவீதுக்கு மிகவும் நெருக்கமானவராகவும், கீழ்ப்படிதலுள்ளவராகவும் காண்பித்துக் கொள்கிறார். நாத்தான் சாலொமோனைப்பற்றிச் சொல்லும்போதும், "உமது அடியானாகிய சாலொமோனையும் அவன் அழைக்கவில்லை" என்று சொல்லி, சாலொமோனையும் தாவீதுக்கு உண்மையுள்ளவராகக் காண்பித்துக்கொள்கிறார்.

நாத்தானின் வார்த்தைகளைக் கேட்கும்போது, தாவீதுக்கு அதோனியாமீது கோபம் வரும். சாலொமோன்மீது பாசம் வரும். தாவீது சாலொமோனுக்கு ஆதரவாகப் பேசுவார். இதையெல்லாம் மனதில் வைத்திருந்து, நாத்தான் தாவீது ராஜாவிடம் சாலொமோனுக்கு ஆதரவாகப் பேசுகிறார்.

தாவீது
1இராஜா 1:28-31

1இராஜா 1:28. அப்பொழுது தாவீதுராஜா பிரதியுத்தரமாக: பத்சேபாளை என்னிடத்தில் வரவழையுங்கள் என்றான்; அவள் ராஜா சமுகத்தில் பிரவேசித்து ராஜாவுக்கு முன்னே நின்றாள்.

1இராஜா 1:29. அப்பொழுது ராஜா: உன் குமாரனாகிய சாலொமோன் எனக்குப்பின் அரசாண்டு, அவனே என் ஸ்தானத்தில் என் சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பான் என்று நான் உனக்கு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர்மேல் ஆணையிட்டபடியே, இன்றைக்குச் செய்து தீர்ப்பேன் என்பதை,

1இராஜா 1:30. என் ஆத்துமாவை எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி மீட்ட கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று ஆணையிட்டான்.

1இராஜா 1:31. அப்பொழுது பத்சேபாள் தரைமட்டும் குனிந்து ராஜாவை வணங்கி, என் ஆண்டவனாகிய தாவீதுராஜா என்றைக்கும் வாழ்க என்றாள்.

தாவீது ஏற்கெனவே பத்சேபாளுக்கு இட்ட ஆணையை இப்போது உறுதிபண்ணுகிறார். "தன்னுடைய ஸ்தானத்தில், தனக்கு பின்பு, சாலொமோன் தாவீதின் சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பான்" என்று, தாவீது ராஜா தன்னுடைய தீர்மானத்தை சொல்லுகிறார்.

நாத்தான் தாவீது ராஜாவோடு பேசிக்கொண்டிருக்கும்போது, பத்சேபாள் வெளியிலே நின்றிருக்கவேண்டும். அப்பொழுது தாவீதுராஜா பிரதியுத்தரமாக: "பத்சேபாளை என்னிடத்தில் வரவழையுங்கள்" என்று சொல்லுகிறார்; பத்சேபாள் ராஜா சமுகத்தில் பிரவேசித்து ராஜாவுக்கு முன்னே நிற்கிறாள் (1இராஜா 1:28).

தாவீது ராஜா பத்சேபாளை நோக்கி, "உன் குமாரனாகிய சாலொமோன் எனக்குப்பின் அரசாண்டு, அவனே என் ஸ்தானத்தில் என் சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பான் என்று நான் உனக்கு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர்மேல் ஆணையிட்டபடியே, இன்றைக்குச் செய்து தீர்ப்பேன் என்பதை, என் ஆத்துமாவை எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி மீட்ட கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (1இராஜா 1:29,30) என்று ஆணையிடுகிறார்.

தாவீது ஏற்கெனவே பத்சேபாளுக்கு இட்ட ஆணையை இப்போது மறுபடியுமாக உறுதிபண்ணுகிறார். தாவீது பத்சேபாளிடம் ஏற்கெனவே ஆணையிட்டபோது, "உன் குமாரனாகிய சாலொமோன் எனக்குப்பின் அரசாண்டு, அவனே என் ஸ்தானத்தில் என் சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பான் என்று நான் உனக்கு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர்மேல் ஆணையிடுகிறேன்" (1இராஜா 1:29) என்று சொன்னார்.

தாவீது பத்சேபாளுக்கு ஏற்கெனவே இட்ட ஆணையை இப்போது மறுபடியும் உறுதிபண்ணுகிறார். தாவீது தன்னுடைய ஆணையை உறுதிபண்ணும்போதும் கர்த்தருடைய நாமத்தினால் உறுதிபண்ணுகிறார். "நான் உனக்கு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர்மேல் ஆணையிட்டபடியே, இன்றைக்குச் செய்து தீர்ப்பேன் என்பதை, என் ஆத்துமாவை எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி மீட்ட கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (1இராஜா 1:29,30) என்று தாவீது ஆணையிடுகிறார்.

தாவீது தன்னுடைய ஆணையை உறுதிபண்ணுவதில் காலதாமதம்பண்ணவில்லை. தான் ஏற்கெனவே இட்ட ஆணையை இப்போது விவாதம்பண்ணவுமில்லை. அதை மாற்றவும் முயற்சி பண்ணவில்லை. தாவீது தன்னுடைய ஆணையை உறுதிபண்ணும் வார்த்தைகள், இஸ்ரவேல் தேசத்தில் நடைமுறையில் கடைப்பிடிக்கப்படும் பொதுவான வழக்கமாகும்.

"ஆனாலும் தாவீது பேரோத்தியனான ரிம்மோனின் குமாரராகிய ரேகாபுக்கும், அவன் சகோதரன் பானாவுக்கும் பிரதியுத்தரமாக: என் ஆத்துமாவை எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி மீட்ட கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு நான் சொல்லுகிறதைக் கேளுங்கள்" (2சாமு 4:9).

தாவீது பத்சேபாளுக்கு தன்னுடைய ஆணையை உறுதிபண்ணும்போது, கர்த்தர் தனக்கு செய்த நன்மைகளையும் நினைவுகூர்ந்து, அதை அங்கீகரிக்கிறார். "என் ஆத்துமாவை எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி மீட்ட கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" என்று தாவீது சொல்லுகிறார்.

தான் கர்த்தரை நம்பியதுபோலவே, தன்னுடைய ஸ்தானத்தில், தன்னுடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் சாலொமோனும் கர்த்தரை நம்பவேண்டும் என்று தாவீது தன்னுடைய ஆணையில் சொல்லுகிறார். கர்த்தர் தன்னுடைய ஆத்துமாவை எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி மீட்டதுபோல, அவர் சாலொமோனுடைய ஆத்துமாவையும் எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி மீட்பார் என்று தாவீது விசுவாச வார்த்தைகளைச் சொல்லுகிறார். தன்னுடைய ஆத்துமாவுக்கு இக்கட்டு வந்ததுபோல, சாலொமோனுடைய ஆத்துமாவுக்கும் இக்கட்டு வருவதற்கு வாய்ப்புள்ளது என்று தாவீது எச்சரிப்பின் வார்த்தைகளையும் சொல்லுகிறார்.

தாவீது சாலொமோனைப்பற்றிய வார்த்தையை பத்சேபாளுக்கு சொல்லுகிறார். தாவீது பத்சேபாளிடம் ஏற்கெனவே ஆணையிட்டிருந்தார். இப்போது அவர் அவளிடத்திலேயே தன்னுடைய ஆணையை உறுதிபண்ணுகிறார்.

அப்பொழுது பத்சேபாள் தரைமட்டும் குனிந்து தாவீது ராஜாவை வணங்கி, "என் ஆண்டவனாகிய தாவீதுராஜா என்றைக்கும் வாழ்க" (1இராஜா 1:31) என்று சொல்லுகிறாள்.

பத்சேபாள் தாவீதை வாழ்த்துகிறாள். தாவீதுக்கு நல்ல ஆரோக்கியமும் நீண்ட ஆயுசும் கிடைக்கவேண்டுமென்று விரும்பி, "என் ஆண்டவனாகிய தாவீது ராஜா என்றைக்கும் வாழ்க" என்று சொல்லி வாழ்த்துகிறாள். தாவீது மரித்த பின்புதான், சாலொமோன் அவருடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்க முடியும். தன்னுடைய மகன் சீக்கிரத்தில் ராஜாவாகவேண்டும் என்று பத்சேபாள் அவசரப்படவில்லை. "என் ஆண்டவனாகிய தாவீது ராஜா என்றைக்கும் வாழ்க" என்று சொல்லி தாவீதை வாழ்த்துகிறாள். தாவீது இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருப்பது, இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருக்கும் ஆசீர்வாதமாகவும், பாக்கியமாகவும் இருக்கிறது என்பதை பத்சேபாள் அங்கீகரிக்கிறாள்.

ராஜாவாகிய சாலொமோன்
1இராஜா 1:32-40

1இராஜா 1:32. பின்பு தாவீதுராஜா, ஆசாரியனாகிய சாதோக்கையும் தீர்க்கதரிசியாகிய நாத்தானையும் யோய்தாவின் குமாரன் பெனாயாவையும் என்னிடத்தில் வரவழையுங்கள் என்றான்.

1இராஜா 1:33. அவர்கள் ராஜாவுக்கு முன்பாகப் பிரவேசித்தபோது, ராஜா அவர்களை நோக்கி: நீங்கள் உங்கள் ஆண்டவனுடைய சேவகரைக் கூட்டிக்கொண்டு, என் குமாரனாகிய சாலொமோனை என் கோவேறு கழுதையின்மேல் ஏற்றி, அவனைக் கீகோனுக்கு அழைத்துக்கொண்டு போங்கள்.

1இராஜா 1:34. அங்கே ஆசாரியனாகிய சாதோக்கும் தீர்க்கதரிசியாகிய நாத்தானும் அவனை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணக்கடவர்கள்; பின்பு எக்காளம் ஊதி, ராஜாவாகிய சாலொமோன் வாழ்க என்று வாழ்த்துங்கள்.

1இராஜா 1:35. அதின்பின்பு அவன் நகர்வலம் வந்து, என் சிங்காசனத்தில் வீற்றிருக்கும்படி, அவனைக் கூட்டிக்கொண்டு வாருங்கள்; அவனே என் ஸ்தானத்தில் ராஜாவாயிருப்பான்; அவன் இஸ்ரவேலின்மேலும் யூதாவின்மேலும் தலைவனாயிருக்கும்படி அவனை ஏற்படுத்தினேன் என்றான்.

1இராஜா 1:36. அப்பொழுது யோய்தாவின் குமாரன் பெனாயா ராஜாவுக்குப் பிரதியுத்தரமாக: ஆமென், ராஜாவாகிய என் ஆண்டவனுடைய தேவனாகிய கர்த்தரும் இப்படியே சொல்வாராக.

1இராஜா 1:37. கர்த்தர் ராஜாவாகிய என் ஆண்டவனோடே எப்படி இருந்தாரோ, அப்படியே அவர் சாலொமோனோடும் இருந்து, தாவீதுராஜாவாகிய என் ஆண்டவனுடைய சிங்காசனத்தைப் பார்க்கிலும் அவருடைய சிங்காசனத்தைப் பெரிதாக்குவாராக என்றான்.

1இராஜா 1:38. அப்படியே ஆசாரியனாகிய சாதோக்கும், தீர்க்கதரிசியாகிய நாத்தானும், யோய்தாவின் குமாரன் பெனாயாவும், கிரேத்தியரும் பிலேத்தியரும் போய், சாலொமோனைத் தாவீதுராஜாவினுடைய கோவேறுகழுதையின்மேல் ஏற்றி, அவனைக் கீகோனுக்கு நடத்திக்கொண்டுபோனார்கள்.

1இராஜா 1:39. ஆசாரியனாகிய சாதோக்கு தைலக்கொம்பைக் கூடாரத்திலிருந்து எடுத்துக் கொண்டுபோய், சாலொமோனை அபிஷேகம்பண்ணினான்; அப்பொழுது எக்காளம் ஊதி, ஜனங்களெல்லாரும் ராஜாவாகிய சாலொமோன் வாழ்க என்று வாழ்த்தினார்கள்.

1இராஜா 1:40. பிற்பாடு ஜனங்களெல்லாரும் அவன் பிறகாலே போனார்கள்; ஜனங்கள் நாகசுரங்களை ஊதி, பூமி அவர்கள் சத்தத்தினால் அதிரத்தக்கதாக மகா பூரிப்பாய்ச் சந்தோஷித்தார்கள்.

தாவீது அதோனியாவின் சதித்திட்டத்தை முறியடிக்கிறார். சாலொமோனுடைய உரிமையை பாதுகாக்கிறார். இஸ்ரவேல் தேசத்திலே ஜனங்கள் மத்தியிலே பொதுவான அமைதியை நிலைநிறுத்துகிறார். இஸ்ரவேல் தேசத்திற்கு சாலொமோனை தனக்கு பின்பு ராஜாவாக்குவது தாவீதின் தீர்மானமாயிற்று. தாவீது தன்னுடைய தீர்மானத்தை நிறைவேற்றும் பொறுப்பை, நாத்தான், யோய்தா, பெனாயா ஆகியோரிடத்தில் ஒப்புக்கொடுக்கிறார். இவர்கள் தாவீதின் ராஜாசனத்திலே அதிகாரமுள்ளவர்கள். இவர்கள் இதுவரையிலும் தாவீதுக்கு உண்மையுள்ளவர்களாயிருந்திருக்கிறவர்கள். இவர்கள் தாவீதின் நன்மையை நாடுகிறவர்கள்.

தாவீதுராஜா, "ஆசாரியனாகிய சாதோக்கையும் தீர்க்கதரிசியாகிய நாத்தானையும் யோய்தாவின் குமாரன் பெனாயாவையும் என்னிடத்தில் வரவழையுங்கள்" (1இராஜா 1:32) என்று கட்டளையிடுகிறார். அவர்கள் ராஜாவுக்கு முன்பாக பிரவேசிக்கிறார்கள்.

தாவீது ராஜா அவர்களிடம் தன்னுடைய தீர்மானத்தை சொல்லுகிறார். சாலொமோனை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணுமாறு அவர்களுக்கு கட்டளை கொடுக்கிறார்.

தாவீது ராஜா அவர்களை நோக்கி: "நீங்கள் உங்கள் ஆண்டவனுடைய சேவகரைக் கூட்டிக்கொண்டு, என் குமாரனாகிய சாலொமோனை என் கோவேறுகழுதையின்மேல் ஏற்றி, அவனைக் கீகோனுக்கு அழைத்துக்கொண்டு போங்கள். அங்கே ஆசாரியனாகிய சாதோக்கும் தீர்க்கதரிசியாகிய நாத்தனும் அவனை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணக்கடவர்கள்; பின்பு எக்காளம் ஊதி, ராஜாவாகிய சாலொமோன் வாழ்க என்று வாழ்த்துங்கள்" (1இராஜா 1:33,34) என்று சொல்லுகிறார்.

அவர்கள் தன்னுடைய கட்டளைப்பிரகாரம் சாலொமோனை அபிஷேகம்பண்ணினபின்பு, அவர்கள் சாலொமோனுக்கு என்ன செய்யவேண்டும் என்றும் தாவீது அவர்களுக்கு கட்டளை கொடுக்கிறார்.

தாவீது ராஜா அவர்களை நோக்கி, "அதின்பின்பு சாலொமோன் நகர்வலம் வந்து, என் சிங்காசனத்தில் வீற்றிருக்கும்படி, அவனைக் கூட்டிக்கொண்டு வாருங்கள்; அவனே என் ஸ்தானத்தில் ராஜாவாயிருப்பான்; அவன் இஸ்ரவேலின்மேலும் யூதாவின்மேலும் தலைவனாயிருக்கும்படி அவனை ஏற்படுத்தினேன்" (1இராஜா 1:35) என்று சொல்லுகிறார்.

ஆசாரியனாகிய சாதோக்கும், தீர்க்கதரிசியாகிய நாத்தானும் சாலொமோனை ராஜாவாக அபிஷேகம்பண்ணும்போது, அவர்கள் தங்களோடுகூட தாவீது ராஜாவுடைய சேவகரையும் கூட்டிக்கொண்டு போகவேண்டும். ராஜா பயன்படுத்தும் கோவேறு கழுதையின்மேல் சாலொமோனை ஏற்றி, அவரை கீகோனுக்கு அழைத்துக்கொண்டு போகவேண்டும்.

சாதோக்கும் நாத்தானும் கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறவர்கள். சாதோக்கு ஆசாரியன். நாத்தான் தீர்க்கதரிசி. இவர்கள் இருவரும், கர்த்தருடைய நாமத்தினால், சாலொமோனை ராஜாவாக அபிஷேகம்பண்ணவேண்டும்.

சாதோக்கும், நாத்தானும் இஸ்ரவேல் தேசத்திலே உயர்ந்த அந்தஸ்திலே இருக்கிறவர்கள். இவர்கள் தாவீதின் அரண்மனையில் முக்கியமான பொறுப்புக்களை வகிக்கிறவர்கள். இவர்கள் இஸ்ரவேலின் இராணுவத்திற்கும், இஸ்ரவேல் தேசத்தாருக்கும் தலைவர்களாயிருக்கிறார்கள். சாதோக்கும் நாத்தானும், சாலொமோனை ராஜாவாக அபிஷேகம்பண்ணிய பின்பு, அவர்கள் எக்காளம் ஊதி, "ராஜாவாகிய சாலொமோன் வாழ்க" என்று வாழ்த்தவேண்டும்.

சாதோக்கும் நாத்தானும் எக்காளம் ஊதுவது, இஸ்ரவேல் தேசத்தாரின் சந்தோஷத்திற்கும், சமாதானத்திற்கும் அடையாளம். இதுபோன்ற விசேஷித்த சம்பவங்களில் எக்காளம் ஊதவேண்டுமென்று மோசேயின் பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் எக்காளம் ஊதியும் சாலொமோனை வாழ்த்தவேண்டும். "ராஜாவாகிய சாலொமோன் வாழ்க" என்று தங்கள் வாயின் வார்த்தைகளினாலும் சாலொமோனை வாழ்த்தவேண்டும்.

தாவீது சாலொமோனை கீகோனிலே ராஜாவாக அபிஷேகம்பண்ணுமாறு சொல்லுகிறார். சாலொமோனை ராஜாவாக அபிஷேகம்பண்ணின பின்பு, அவர்கள் ராஜாவாகிய சாலொமோனை, தாவீதின் நகரமாகிய எருசலேமுக்கு அழைத்து வரவேண்டும். அங்கே சாலொமோன் தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கவேண்டும்.

தாவீது இப்போது வயது சென்ற விர்த்தாப்பியராயிருக்கிறார். அவருடைய சரீர பலம் குறைந்துபோயிற்று. தாவீது தன்னுடைய சரீரத்தில் பலவீனமாயிருக்கும் இப்போதும், அவர் மரித்துப்போன பின்பும், ராஜாவாகிய சாலொமோன் தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்து, சமஸ்த இஸ்ரவேல் தேசத்தையும் ஆளுகை செய்யவேண்டும்.

தாவீது சாலொமோனைப்பற்றிச் சொல்லும்போது, "அவன் இஸ்ரவேலின்மேலும் யூதாவின்மேலும் தலைவனாயிருக்கும்படி அவனை ஏற்படுத்தினேன்" (1இராஜா 1:35) என்று சொல்லுகிறார். சாலொமோனை ராஜாவாக அபிஷேகம்பண்ணுவது, தாவீதுக்கு மனத்திருப்தியாகவும், சந்தோஷமாகவும் இருக்கிறது. தாவீதுக்கு நெருக்கமானவர்கள் எல்லோருக்கும், அவருடைய தீர்மானம் சந்தோஷத்தைக் கொடுக்கிறது.

ஆசாரியனாகிய சாதோக்கும், தீர்க்கதரிசியாகிய நாத்தானும், தாவீதின் கட்டளையை காலதாமதம்பண்ணாமல் உடனே நிறைவேற்றவேண்டும். தாவீது மரித்துப்போன பின்பு இஸ்ரவேல் தேசத்திலே குழப்பங்களோ, பிரச்சனைகளோ, கலவரங்களோ ஏற்படக்கூடாது. இஸ்ரவேல் தேசத்தார் மத்தியிலே சமாதானம் இருக்கவேண்டும்.

தாவீது ராஜா சாதோக்குக்கும் நாத்தானுக்கும், சாலொமோனை ராஜாவாக அபிஷேகம்பண்ணுமாறு கட்டளை கொடுக்கிறார். அப்போது அங்கே யோய்தாவின் குமாரன் பெனாயாவும் இருக்கிறான். இவன் தாவீதின் சேவகருக்கு படைத்தளபதி. தாவீதின் தீர்மானத்தை பெனாயா அங்கீகரிக்கிறான். அவன் தாவீது ராஜாவையும், சாலொமோனையும் வாழ்த்துகிறான்.

அப்பொழுது யோய்தாவின் குமாரன் பெனாயா தாவீது ராஜாவுக்குப் பிரதியுத்தரமாக: "ஆமென், ராஜாவாகிய என் ஆண்டவனுடைய தேவனாகிய கர்த்தரும் இப்படியே சொல்வாராக. கர்த்தர் ராஜாவாகிய என் ஆண்டவனோடே எப்படி இருந்தாரோ, அப்படியே அவர் சாலொமோனோடும் இருந்து, தாவீது ராஜாவாகிய என் ஆண்டவனுடைய சிங்காசனத்தைப் பார்க்கிலும் அவருடைய சிங்காசனத்தைப் பெரிதாக்குவாராக" (1இராஜா 1:36,37) என்று சொல்லுகிறான்.

தாவீதின் தீர்மானம் பெனாயாவுக்கு திருப்தியாயும், ஆறுதலாயும், சந்தோஷமாயும் இருக்கிறது. "சாலொமோன் என் ஸ்தானத்தில் ராஜாவாயிருப்பான்" என்று தாவீது சொன்னார். தாவீது உயிரோடிருக்கும்போதும், அவர் மரித்த பின்பும், சாலொமோன் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருப்பார். ராஜாவின் வார்த்தையை பெனாயா அங்கீரித்து, "ஆமென்" என்று சொல்லுகிறான்.

ராஜாவின் வார்த்தைகளை பெனாயா மனப்பூர்வமாய் அங்கீகரிக்கிறான். ராஜாவின் வார்த்தைக்கு எதிர்த்துப்பேச அங்கே ஒருவருமில்லை. எல்லோருமே ராஜாவின் கட்டளைக்கு கீழ்ப்படிகிறார்கள். தாவீதுக்கு பின்பு, சாலொமோன் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாகவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. கர்த்தருடைய சித்தம் நிறைவேறுகிறது.

"சாலொமோன் என் ஸ்தானத்தில் ராஜாவாயிருப்பான்" என்று தாவீது சொன்னபோது, பெனாயா, "தேவனாகிய கர்த்தரும் இப்படியே சொல்வாராக" என்று சொல்லுகிறான். பெனாயா கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை விசுவாசிக்கிறான். கர்த்தர் சாலொமோனின் ஆட்சியைக் குறித்து வாக்குப்பண்ணியிருக்கிறார். கர்த்தருடைய சித்தம் நிறைவேறும்.

பெனாயா சாலொமோனை ஆசீர்வதிக்கும்போது, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணி, கர்த்தருடைய நாமத்தினால் சாலொமோனை ஆசீர்வதிக்கிறான். "கர்த்தர் ராஜாவாகிய என் ஆண்டவனோடே எப்படி இருந்தாரோ, அப்படியே அவர் சாலொமோனோடும் இருந்து, தாவீது ராஜாவாகிய என் ஆண்டவனுடைய சிங்காசனத்தைப் பார்க்கிலும் அவருடைய சிங்காசனத்தைப் பெரிதாக்குவாராக" (1இராஜா 1:37) என்று சொல்லி பெனாயா சாலொமோனை ஆசீர்வதிக்கிறான்.

கர்த்தர் தாவீதோடு கூடயிருந்தார். அவர் சாலொமோனோடும் கூடயிருப்பார். கர்த்தர் தாவீதின் சிங்காசனத்தை பெரிதாக்கினார். அவர் சாலொமோனுடைய சிங்காசனத்தை, அதைவிட பெரிதாக்குவார் என்று பெனாயா ஆசீர்வதிக்கிறான். தாவீது தன்னுடைய பிள்ளைகளை நேசிக்கிறார். சாலொமோனுடைய சிங்காசனம் தாவீதின் சிங்காசனத்தைவிட பெரிதாயிருக்கும்போது, தாவீது அதைப் பார்த்து பொறாமைப்படமாட்டார். அவர் தன்னுடைய பிள்ளைகளின் நன்மைகளையும், முன்னேற்றத்தையும் விரும்புகிறவர். தன்னுடைய வாழ்த்துதலை தாவீது ராஜாவும் அங்கீகரிப்பார் என்று பெனாயா நம்புகிறான்.

சாதோக்கும், நாத்தானும், பெனாயாவும் சாலொமோனை ராஜாவாக அபிஷேகம்பண்ணுகிறார்கள். ஆசாரியனாகிய சாதோக்கும், தீர்க்கதரிசியாகிய நாத்தானும், யோய்தாவின் குமாரன் பெனாயாவும், கிரேத்தியரும் பிலேத்தியரும் போய், சாலொமோனைத் தாவீதுராஜாவினுடைய கோவேறுகழுதையின்மேல் ஏற்றி, அவனைக் கீகோனுக்கு நடத்திக்கொண்டுபோகிறார்கள் (1இராஜா 1:38).

ஆசாரியனாகிய சாதோக்கு தைலக்கொம்பைக் கூடாரத்திலிருந்து எடுத்துக் கொண்டுபோய், சாலொமோனை அபிஷேகம்பண்ணுகிறான்; அப்பொழுது எக்காளம் ஊதி, ஜனங்களெல்லாரும் "ராஜாவாகிய சாலொமோன் வாழ்க" என்று வாழ்த்துகிறார்கள். பிற்பாடு ஜனங்களெல்லாரும் சாலொமோன் பிறகாலே போகிறார்கள்; ஜனங்கள் நாகசுரங்களை ஊதி, பூமி அவர்கள் சத்தத்தினால் அதிரத்தக்கதாக மகா பூரிப்பாய்ச் சந்தோஷிக்கிறார்கள் (1இராஜா 1:39,40).

தாவீது ராஜாவின் கட்டளையை நிறைவேற்றுவதற்கு, சாதோக்கும், நாத்தானும், பெனாயாவும் காலதாமதம்பண்ணவில்லை. தாவீது சாலொமோனை கீகோனுக்கு அழைத்துக்கொண்டு போகச்சொன்னார். தாவீது சொன்ன பிரகாரம் அவர்கள் சாலொமோனை கீகோனுக்கு அழைத்துக்கொண்டு போகிறார்கள்.

கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்திலே உடன்படிக்கைப் பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அங்கே பரிசுத்த பணிமுட்டுக்களெல்லாம் பத்திரமாக வைக்கப்பட்டிருக்கிறது. அவற்றின் மத்தியில் அபிஷேக தைலக் கொம்பும் இருக்கிறது. ஆசாரியனாகிய சாதோக்கு, விசேஷித்த வைபங்களில், அபிஷேக தைலத்தைப் பயன்படுத்துவான்.

சாதோக்கு ஆசரிப்புக்கூடாரத்திலிருந்து தைலக்கொம்பை எடுத்துக்கொண்டு போகிறான். சாதோக்கு அபிஷேக தைலத்தினால் சாலொமோனை அபிஷேகம்பண்ணுகிறார். சாலொமோன் வல்லமையினாலும், தாராளத்தினாலும் அபிஷேகம்பண்ணப்படுகிறார். ஜனங்களெல்லோரும் சாலொமோனை வாழ்த்துகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கிறார்கள்.

அதோனியா
1இராஜா 1:41-51

1இராஜா 1:41. அதோனியாவும் அவனோடிருந்த எல்லா விருந்தாளிகளும் போஜனம் பண்ணி முடிந்தபோது அதைக்கேட்டார்கள்; யோவாப் எக்காளசத்தத்தைக் கேட்டபோது, நகரத்தில் உண்டாயிருக்கிற ஆரவாரம் என்ன என்று விசாரித்தான்.

1இராஜா 1:42. அவன் பேசிக் கொண்டிருக்கையில், ஆசாரியனாகிய அபியத்தாரின் குமாரன் யோனத்தான் வந்தான்; அப்பொழுது அதோனியா, உள்ளே வா, நீ கெட்டிக்காரன், நீ நற்செய்தி கொண்டுவருகிறவன் என்றான்.

1இராஜா 1:43. யோனத்தான் அதோனியாவுக்குப் பிரதியுத்தரமாக: ஏது, தாவீதுராஜாவாகிய நம்முடைய ஆண்டவன் சாலொமோனை ராஜாவாக்கினாரே.

1இராஜா 1:44. ராஜா ஆசாரியனாகிய சாதோக்கையும், தீர்க்கதரிசியாகிய நாத்தனையும், யோய்தாவின் குமாரன் பெனாயாவையும், கிரேத்தியரையும் பிலேத்தியரையும் அவனோடே அனுப்பினார்; அவர்கள் அவனை ராஜாவுடைய கோவேறுகழுதையின்மேல் ஏற்றினார்கள்.

1இராஜா 1:45. ஆசாரியனாகிய சாதோக்கும், தீர்க்கதரிசியாகிய நாத்தனும், அவனைக் கீகோனிலே ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள்; நகரமெல்லாம் முழங்கத்தக்கதாக அங்கேயிருந்து பூரிப்போடே புறப்பட்டுப் போனார்கள்; நீங்கள் கேட்ட இரைச்சல் அதுதான்.

1இராஜா 1:46. அல்லாமலும் சாலொமோன் ராஜாங்கத்துக்குரிய சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறான்.

1இராஜா 1:47. ராஜாவின் ஊழியக்காரரும் தாவீது ராஜாவாகிய நம்முடைய ஆண்டவனை வாழ்த்துதல் செய்யவந்து: தேவன் சாலொமோனின் நாமத்தை உம்முடைய நாமத்தைப் பார்க்கிலும் பிரபலப்படுத்தி, அவருடைய சிங்காசனத்தை உம்முடைய சிங்காசனத்தைப் பார்க்கிலும் பெரிதாக்குவாராக என்றார்கள்; ராஜா தம்முடைய கட்டிலின்மேல் குனிந்து பணிந்துகொண்டார்.

1இராஜா 1:48. பின்னும் ராஜா: என்னுடைய கண்கள் காண இன்றையதினம் என் சிங்காசனத்தின்மேல் ஒருவனை வீற்றிருக்கச் செய்த இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னார் என்றான்.

1இராஜா 1:49. அப்பொழுது அதோனியாவின் விருந்தாளிகளெல்லாரும் அதிர்ந்து எழுந்திருந்து, அவரவர் தங்கள் வழியே போய்விட்டார்கள்.

1இராஜா 1:50. அதோனியா, சாலொமோனுக்குப் பயந்ததினால் எழுந்துபோய், பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக்கொண்டான்.

1இராஜா 1:51. இதோ, அதோனியா ராஜாவாகிய சாலொமோனுக்குப் பயப்படுகிறான் என்றும், இதோ, அவன் பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக்கொண்டு, ராஜாவாகிய சாலொமோன் தமது அடியானைப் பட்டயத்தாலே கொன்றுபோடுவதில்லை என்று இன்று எனக்கு ஆணையிடுவாராக என்கிறான் என்றும், சாலொமோனுக்கு அறிவிக்கப்பட்டது.

அதோனியாவும் அவனோடு கூடயிருக்கிற விருந்தாளிகளும் விருந்து புசிக்கிறார்கள். அவர்கள் குடித்து வெறித்திருக்கிறார்கள். ஆசாரியனாகிய சாதோக்கு சாலொமோனை ராஜாவாக அபிஷேகம்பண்ணினான். அப்பொழுது ஜனங்களெல்லோரும் எக்காளம் ஊதுகிறார்கள். "ராஜாவாகிய சாலொமோன் வாழ்க" என்று வாழ்த்தி ஆர்ப்பரிக்கிறார்கள். இந்த வாழ்த்துதலின் ஆர்ப்பரிப்பு அதோனியாவின் செவிகளிலும் கேட்கிறது.

அதோனியாவும் அவனோடிருந்த எல்லா விருந்தாளிகளும் போஜனம்பண்ணி முடிந்தபோது அதைக்கேட்கிறார்கள்; யோவாப் எக்காளசத்தத்தைக் கேட்டபோது, "நகரத்தில் உண்டாயிருக்கிற ஆராவாரம் என்ன" (1இராஜா 1:41) என்று விசாரிக்கிறான்.

அதோனியாவோடு கூடயிருக்கிறவர்கள், அவனை ராஜாவாக அறிவிக்க ஆயத்தமாயிருக்கிறார்கள். அதுவரையிலும் அவருடைய விருந்தாளிகள் போஜனம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அதோனியாவும் அவனோடு கூடயிருக்கிற ஜனங்களும் போஜனம்பண்ணிக் கொண்டிருக்கும்போதே, சாலொமோன் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்படுகிறார். அவர்கள் போஜனம்பண்ணி முடியும்போது, சாதோக்கு சாலொமோனை ராஜாவாக அபிஷேகம்பண்ணி முடித்துவிடுகிறான்.

அதோனியாவும் அவனோடிருக்கிற எல்லா விருந்தாளிகளும் போஜனம்பண்ணி முடிக்கும்போது, அங்கே எக்காள சத்தம் கேட்கிறது. யோவாப் அதோனியாவோடு கூடயிருக்கிறான். யோவாபுக்கு இப்போது வயதாயிற்று. அவனுக்கு யுத்த வியூகங்கள் நன்றாய்த் தெரியும். யோவாப் எக்காள சத்தத்தைக் கேட்டவுடன் எச்சரிப்படைந்து, "நகரத்தில் உண்டாயிருக்கிற ஆரவாரம் என்ன" என்று விசாரிக்கிறான்.

அதோனியாவும், அவனோடுகூடயிருக்கிற விருந்தாளிகள் எல்லோரும், அந்த எக்காள சத்தத்தையும், ஆரவார சத்தத்தையும் பற்றி அறிந்துகொள்ள ஆவலாயிருக்கிறார்கள். அப்போது ஆசாரியனாகிய அபியத்தாரின் குமாரன் யோனத்தான் அங்கே வருகிறான்.

யோவாப் பேசிக்கொண்டிருக்கையில், ஆசாரியனாகிய அபியத்தாரின் குமாரன் யோனத்தான் வருகிறான்; அப்பொழுது அதோனியா, யோனத்தானிடம், "உள்ளே வா, நீ கெட்டிக்காரன், நீ நற்செய்தி கொண்டுவருகிறவன்" (1இராஜா 1:42) என்று சொல்லுகிறான்.

கெட்டிக்காரன் நல்ல செய்தி கொண்டு வருவான் என்று அதோனியா நம்புகிறான். யோனத்தான் கொண்டு வருவது நல்ல செய்திதான். ஆனால் அது அதோனியாவுக்கு நல்ல செய்தியல்ல.

யோனத்தான் அதோனியாவுக்குப் பிரதியுத்தரமாக: "ஏது, தாவீதுராஜாவாகிய நம்முடைய ஆண்டவன் சாலொமோனை ராஜாவாக்கினாரே. ராஜா ஆசாரியனாகிய சாதோக்கையும், தீர்க்கதரிசியாகிய நாத்தனையும், யோய்தாவின் குமாரன் பெனாயாவையும், கிரேத்தியரையும் பிலேத்தியரையும் அவனோடே அனுப்பினார்; அவர்கள் அவனை ராஜாவுடைய கோவேறுகழுதையின்மேல் ஏற்றினார்கள்" (1இராஜா 1:43,44) என்று எருசலேம் நகரத்தில் நடைபெற்ற சம்பவத்தை சொல்லுகிறான்.

அதோனியா தான் ராஜாவாகவேண்டுமென்று சதித்திட்டம் போட்டிருக்கிறான். ஆனால் தாவீது ராஜாவோ சாலொமோனை ராஜாவாக்கிவிடுகிறார். இந்தச் செய்தியைக் கேட்டபோது, அதோனியா அதிர்ந்தியடைந்திருக்கவேண்டும். சாலொமோன் அபிஷேகம்பண்ணப்பட்ட விதத்தையும் யோனத்தான் அதோனியாவுக்கு விரிவாகச் சொல்லுகிறான்.

யோனத்தான் அதோனியாவை நோக்கி, "ஆசாரியனாகிய சாதோக்கும், தீர்க்கதரிசியாகிய நாத்தனும், அவனைக் கீகோனிலே ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள்; நகரமெல்லாம் முழங்கத்தக்கதாக அங்கேயிருந்து பூரிப்போடே புறப்பட்டுப் போனார்கள்; நீங்கள் கேட்ட இரைச்சல் அதுதான். அல்லாமலும் சாலொமோன் ராஜாங்கத்துக்குரிய சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறான்" (1இராஜா 1:45,46) என்று சொல்லுகிறான்.

தாவீது சாலொமோனை ராஜாவாக்கினதினால், தாவீது ராஜாவும் அவருடைய ஊழியக்காரரும், ஜனங்களும் சந்தோஷமாயிருக்கிறார்கள் என்னும் செய்தியையும் யோனத்தான் அதோனியாவுக்கு சொல்லுகிறான்.

யோனத்தான் அதோனியாவை நோக்கி, "ராஜாவின் ஊழியக்காரரும் தாவீது ராஜாவாகிய நம்முடைய ஆண்டவனை வாழ்த்துதல் செய்யவந்து: தேவன் சாலொமோனின் நாமத்தை உம்முடைய நாமத்தைப் பார்க்கிலும் பிரபலப்படுத்தி, அவருடைய சிங்காசனத்தை உம்முடைய சிங்காசனத்தைப் பார்க்கிலும் பெரிதாக்கு வாராக என்றார்கள்; ராஜா தம்முடைய கட்டிலின்மேல் குனிந்து பணிந்துகொண்டார். பின்னும் ராஜா: என்னுடைய கண்கள் காண இன்றையதினம் என் சிங்காசனத்தின்மேல் ஒருவனை வீற்றிருக்கச் செய்த இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னார்" (1இராஜா 1:47,48) என்று சொல்லுகிறான்.

இஸ்ரவேல் ஜனங்கள் தாவீது ராஜாவை ஆசீர்வதிக்கிறார்கள். அவர்கள் சாலொமோனுக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்கள். கர்த்தர் சாலொமோனின் நாமத்தை, தாவீதின் நாமத்தைப் பார்க்கிலும் பிரபலப்படுத்த வேண்டுமென்றும் ஜெபம்பண்ணுகிறார்கள். மேலும் கர்த்தர், சாலொமோனுடைய சிங்காசனத்தை தாவீதின் சிங்காசனத்தைப் பார்க்கிலும் பெரிதாக்கவேண்டும் என்றும் ஜனங்கள் ஜெபம்பண்ணுகிறார்கள்.

சாலொமோன் இஸ்ரவேல் தேசத்தின் ராஜாசனத்தை கட்டியெழுப்பவேண்டும். தாவீதுஅதற்கு அஸ்திபாரம் போட்டிருக்கிறார். சாலொமோன் அந்த அஸ்திபாரத்தின்மீது இஸ்ரவேல் தேசத்தைக் கட்டியெழுப்பவேண்டும். ஒரு இராட்சதனுடைய தோளின்மீது, அவனுடைய சிறுபிள்ளை அமர்ந்திருக்கும்போது, அந்தப் பிள்ளை, இராட்சதனைவிட உயரமாயிருக்கும்.

சாலொமோன் தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கும்போது, சாலொமோனுடைய நாமம் தாவீதின் நாமத்தைவிட பிரபலமாயிருக்கும். இஸ்ரவேல் ஜனங்கள் சாலொமோனுக்காக ஜெபம்பண்ணும்போது, தாவீது ராஜாவும், தன்னுடைய கட்டிலின்மேல் குனிந்து பணிந்துகொள்கிறார். அவர்கள் ஏறெடுக்கிற ஜெபத்தை தாவீதும் அங்கீகரிக்கிறார்.

தாவீதின் ஊழியக்காரர் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணிய பிறகு, தாவீதும் கர்த்தரிடத்தில் தனியாக ஜெபம்பண்ணுகிறார். "என்னுடைய கண்கள் காண இன்றையதினம் என் சிங்காசனத்தின்மேல் ஒருவனை வீற்றிருக்கச் செய்த இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" (1இராஜா 1:48) என்று சொல்லி தாவீது கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறார்.

இந்த சம்பங்களெல்லாம் எருசலேமிலே நடைபெறுகிறது. ஆசாரியனாகிய அபியத்தாரின் குமாரன் யோனத்தான், இந்த சம்பவங்களையெல்லாம் அதோனியாவுக்கு சொல்லுகிறான். அதோனியாவின் சதித்திட்டம் முறிந்துபோகிறது. அவனுடைய விருந்தும் அப்படியே நின்றுவிடுகிறது. அப்பொழுது அதோனியாவின் விருந்தாளிகளெல்லாரும் அதிர்ந்து எழுந்திருந்து, அவரவர் தங்கள் வழியே போய்விடுகிறார்கள் (1இராஜா 1:49).

யோனத்தான் சொன்ன செய்தியைக் கேட்டு அதோனியாவும் பயத்தினால் நடுங்குகிறான். அதோனியா சாலொமோனை அவமதித்தான். அதோனியா தன்னுடைய விருந்திற்கு அவன் சாலொமோனை அழைக்கவில்லை. அதோனியா தன் விருந்தாளிகளோடு போஜனம்பண்ணினான். அந்த வேளையிலே சாலொமோன் சமஸ்த இஸ்ரவேல் தேசத்திற்கும் ராஜாவானான். அதோனியா, சாலொமோனுக்குப் பயந்ததினால் எழுந்துபோய், பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக்கொள்கிறான் (1இராஜா 1:50).

அதோனியா சாலொமோனை விருந்துக்கு அழைக்காமல், அவனை அவமானப்படுத்தினான். தன்னுடைய விருந்தாளியாகயிருப்பதற்கு சாலொமோனுக்கு தகுதியில்லை என்று அவனை ஒதுக்கி தள்ளினான். ஆனால் இப்போதோ சாலொமோன் அதோனியாவுக்கு நியாயாதிபதியாயிருக்கிறான்.

"ஒருவன் பிறனுக்கு விரோதமாகச் சதிமோசஞ்செய்து, அவனைத் துணிகரமாய்க் கொன்றுபோட்டால், அவனை என் பலிபீடத்திலிருந்தும் பிடித்துக்கொண்டு போய்க் கொலைசெய்யவேண்டும்" (யாத் 21:14).

தன்னால் சாலொமோனுக்கு விரோதமாக எதிர்த்து நின்று யுத்தம்பண்ண முடியாது என்பது அதோனியாவுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. இப்போது அதோனியாவுக்கு சாலொமோனுடைய கிருபையும் இரக்கமும் தேவைப்படுகிறது.

கர்த்தருடைய கிருபையைப் பெற்றுக்கொள்வதற்கு, அவருடைய பலிபீடத்தின் கொம்புகளை பிடித்துக்கொள்ளலாம். அதோனியாவும் சாலொமோனுக்கு பயந்து, கர்த்தருடைய பலிபீடத்தின் கொம்புகளை பிடித்துக்கொள்கிறான். கர்த்தரும், சாலொமோனும் தனக்கு கிருபையும் இரக்கமும் காண்பிப்பார்கள் என்று அதோனியா எதிர்பார்க்கிறான்.

இதோ, அதோனியா ராஜாவாகிய சாலொமோனுக்குப் பயப்படுகிறான் என்றும், இதோ, அவன் பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக்கொண்டு, "ராஜாவாகிய சாலொமோன் தமது அடியானைப் பட்டயத்தாலே கொன்றுபோடுவதில்லை என்று இன்று எனக்கு ஆணையிடுவாராக என்கிறான்" என்றும், சாலொமோனுக்கு அறிவிக்கப்படுகிறது (1இராஜா 1:51).

அதோனியா தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்பவில்லை. சாலொமோனுக்கு விரோதமாக தான் போட்ட சதித்திட்டத்திற்காக, அதோனியா வருத்தப்படவில்லை. அதோனியா தன்னுடைய ஜீவனைக்குறித்தே கருத்தாயிருக்கிறான். சாலொமோன் தன்னை கொன்றுபோடக்கூடாது என்று எதிர்பார்க்கிறான்.

சாலொமோனும் அதோனியாவும் 1இராஜா 1:52,53

1இராஜா 1:52. அப்பொழுது சாலொமோன்: அவன் யோக்கியன் என்று விளங்க நடந்துகொண்டால் அவன் தலைமயிரில் ஒன்றும் தரையிலே விழப்போகிறதில்லை; அவனிடத்தில் பொல்லாப்புக் காணப்படுமேயாகில், அவன் சாகவேண்டும் என்றான்.

1இராஜா 1:53. அவனைப் பலிபீடத்திலிருந்து கொண்டுவர, ராஜாவாகிய சாலொமோன் ஆட்களை அனுப்பினான்; அவன்வந்து, ராஜாவாகிய சாலொமோனை வணங்கினான்; சாலொமோன் அவனைப் பார்த்து: உன் வீட்டிற்குப் போ என்றான்.

சாலொமோனும் அதோனியாவை ஒரு நிபந்தனையோடு மன்னிக்கிறார். அதோனியாவைப்பற்றி தனக்கு செய்தி சொன்னவர்களிடம், "அதோனியா யோக்கியன் என்று விளங்க நடந்துகொண்டால் அவன் தலைமயிரில் ஒன்றும் தரையிலே விழப்போகிறதில்லை; அவனிடத்தில் பொல்லாப்புக் காணப்படுமேயாகில், அவன் சாகவேண்டும்" (1இராஜா 1:52) என்று சாலொமோன் கட்டளையிடுகிறார்.

அதோனியாவைப் பலிபீடத்திலிருந்து கொண்டுவர, ராஜாவாகிய சாலொமோன் ஆட்களை அனுப்புகிறான்; அதோனியாவந்து, ராஜாவாகிய சாலொமோனை வணங்குகிறான்; சாலொமோன் அவனைப் பார்த்து: "உன் வீட்டிற்குப் போ" (1இராஜா 1:53) என்று சொல்லுகிறார்.

அதோனியா சாலொமோனுக்கு விரோதமாக சதிபண்ணினாலும், சாலொமோன் அவனை தன்னுடைய சகோதரனாகவே பாவிக்கிறார். அதோனியா பாவம் செய்தவன். சாலொமோனோ அவனுக்கு கிருபையும் இரக்கமும் காண்பிக்கிறார். தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவும், தமக்கு விரோதமாகப் பாவம் செய்கிறவர்களுக்கு கிருபையும் இரக்கமும் காண்பிக்கிறார்.

1 இராஜாக்கள் - விரிவுரை
I KINGS - COMMENTARY

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

நம்முடைய பாவங்களுக்கு நாம் மனந்திரும்பி, கர்த்தருடைய பாதபடியிலே நம்மை பணிவோடு ஒப்புக்கொடுக்கும்போது, கர்த்தர் நம்முடைய பாவங்களை மன்னிக்கிறார். நம்முடைய பழைய மீறுதல்களையும், அக்கிரமங்களையும் நினையாதிருக்கிறார். சாலொமோன் அதோனியாவை மன்னிக்கும்போது, "அவன் யோக்கியன் என்று விளங்க நடந்துகொள்ளவேண்டும்" என்னும் நிபந்தனையை சொல்லுகிறார்.

கர்த்தர் நம்முடைய பாவங்களை தமது கிருபையினால் மன்னிக்கும்போது, நம்முடைய பாவசுபாவங்கள் நம்மைவிட்டு நீக்கவேண்டும் என்றும், நாம் இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரிக்கக்கூடாது என்றும், நம்முடைய மாம்சத்தின் இச்சைகளுக்கு இடங்கொடுத்து நாம் அதற்கு அடிமையாகிவிடக்கூடாது என்றும், கர்த்தர் நம்மை எச்சரிக்கிறார்.

அதோனியா யோக்கியன் என்று விளங்க நடந்துகொள்ளவில்லையென்றால், அவனுக்கு தண்டனை கொடுக்கப்படும். அதுபோலவே விசுவாசிகளாகிய நாமும், பரிசுத்தமாய் ஜீவிக்கவில்லையென்றால், நமக்கு அழிவு வரும்.

2 அதிகாரம்

தாவீதின் மரணத்தோடு அவருடைய ஆட்சிக்காலமும் முடிவு பெறுகிறது. தாவீது மரணமடையும் காலம் சமீபித்தபோது, அவர் தன்னுடைய குமாரனாகிய சாலொமோனுக்கு கட்டளையிட்டு சொன்னது. சாலொமோன் கர்த்தரை சேவிக்கவேண்டும் (1இராஜா 2:1-4). யோவாப், பர்சிலா, சீமேயி ஆகியோரைப்பற்றி தாவீது சொன்னது (1இராஜா 2:5-9). தாவீதின் மரணமும், அவருடைய ஆட்சிக்காலமும் (1இராஜா 2:10,11).

சாலொமோனுடைய ராஜ்யபாரத்தின் ஆரம்பம் (1இராஜா 2:12). சாலொமோன் சமாதான பிரபுவாகயிருந்தாலும், அவர் தன்னுடைய ராஜ்யபாரத்தின் ஆரம்பத்தில், நீதியை நிலை நிறுத்துகிறார்.

சாலொமோன் அதோனியாவுக்கு மரணதண்டனை விதிக்கிறார் (1இராஜா 2:13-25). ஆசாரியனாகிய அபியத்தாரை ஆசாரிய ஊழியத்திலிருந்து விலக்கி வைத்துவிடுகிறார் (1இராஜா 2:26,27). யோவாபுக்கு மரணதண்டனை கொடுக்கிறார் (1இராஜா 2:28-35). சீமேயி எருசலேமைவிட்டு வெளியே போகக்கூடாது என்று அவனுக்கு நிபந்தனை கொடுக்கிறார் (1இராஜா 2:36-38). மூன்று வருஷங்களுக்கு பின்பு சீமேயி எருசலேமைவிட்டு வெளியே போனதினால், அவனுக்கு மரணதண்டனை விதிக்கப்படுகிறது (1இராஜா 2:39-46).

தாவீதின் மரண வாக்குமூலம் 1இராஜா 2:1-11

1இராஜா 2:1. தாவீது மரணமடையும் காலம் சமீபித்தபோது, அவன் தன் குமாரனாகிய சாலொமோனுக்குக் கட்டளையிட்டுச் சொன்னது:

1இராஜா 2:2. நான் பூலோகத்தார் யாவரும் போகிற வழியே போகிறேன்; நீ திடன்கொண்டு புருஷனாயிரு.

1இராஜா 2:3. நீ என்ன செய்தாலும், நீ எங்கே போனாலும், எல்லாவற்றிலும் புத்திமானாயிருக்கிறதற்கும், கர்த்தர் என்னைக் குறித்து: உன் பிள்ளைகள் தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமாவோடும் எனக்கு முன்பாக உண்மையாய் நடக்கும்படிக்குத் தங்கள் வழியைக் காத்துக்கொண்டால், இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கத்தக்க புருஷன் உனக்கு இல்லாமற்போவதில்லை என்று சொன்ன தம்முடைய வார்த்தையைத் திடப்படுத்துகிறதற்கும்,

1இராஜா 2:4. மோசேயின் நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி, நீ உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளையும், கற்பனைகளையும் நியாயங்களையும் சாட்சிகளையும் கைக்கொள்ள, அவர் வழிகளில் நடக்கும்படிக்கு அவருடைய காவலைக் காப்பாயாக.

1இராஜா 2:5. செருயாவின் குமாரனாகிய யோவாப், இஸ்ரவேலின் இரண்டு சேனாபதிகளாகிய நேரின் குமாரன் அப்னேருக்கும், ஏத்தேரின் குமாரன் அமாசாவுக்கும் செய்த காரியத்தினால் எனக்குச் செய்த குற்றத்தை நீ அறிந்திருக்கிறாயே; அவன் அவர்களைக் கொன்று, சமாதான காலத்திலே யுத்த காலத்து இரத்தத்தைச் சிந்தி, யுத்த காலத்து இரத்தத்தைத் தன் அரையிலுள்ள கச்சையிலும் தன் கால்களில் இருந்த பாதரட்சையிலும் வடியவிட்டானே.

1இராஜா 2:6. ஆகையால் உன் யுக்தியின்படியே நீ செய்து, அவனுடைய நரைமயிர் சமாதானமாய்ப் பாதாளத்தில் இறங்கவொட்டாதிரு.

1இராஜா 2:7. கீலேயாத்தியனான பர்சிலாயின் குமாரருக்குத் தயைசெய்வாயாக; அவர்கள் உன் பந்தியிலே சாப்பிடுகிறவர்களுடன் இருப்பார்களாக; உன் சகோதரனாகிய அப்சலோமுக்கு முன்பாக நான் ஓடிப்போகையில், அவர்கள் என்னை ஆதரித்தார்கள்.

1இராஜா 2:8. மேலும் பகூரிம் ஊரானான பென்யமீனனாகிய கேராவின் மகன் சீமேயி உன்னிடத்தில் இருக்கிறான்; நான் மகனாயீமுக்குப் போகிற நாளிலே, அவன் என்னைக் கொடிய தூஷணமாய்த் தூஷித்தான்; ஆனாலும் அவன் யோர்தானிலே எனக்கு எதிர்கொண்டுவந்த படியினால்: நான் உன்னைப் பட்டயத்தாலே கொன்றுபோடுவதில்லை என்று கர்த்தர்மேல் அவனுக்கு ஆணையிட்டுக்கொடுத்தேன்.

1இராஜா 2:9. ஆகிலும் நீ அவனைக் குற்றமற்றவன் என்று எண்ணாதே; நீ புத்திமான்; அவனுடைய நரைமயிரை இரத்தத்துடன் பாதாளத்தில் இறங்கப்பண்ண, நீ அவனுக்குச் செய்யவேண்டியதை அறிவாய் என்றான்.

1இராஜா 2:10. பின்பு தாவீது தன் பிதாக்களோடே நித்திரையடைந்து, தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணப்பட்டான்.

1இராஜா 2:11. தாவீது இஸ்ரவேலை அரசாண்ட நாட்கள் நாற்பது வருஷம்; அவன் எப்ரோனில் ஏழு வருஷமும், எருசலேமில் முப்பத்துமூன்று வருஷமும் அரசாண்டான்.

தாவீது இஸ்ரவேல் தேசத்தில் உயர்ந்தவராகவும் நல்லவராகவும் இருந்தவர். இப்போது அவர் மரிக்கிறவராக இருக்கிறார் (1இராஜா 2:1). தாவீது மரித்துப்போகிறார் (1இராஜா 2:10). கர்த்தருடைய பிள்ளைகள் இந்தப் பிரபஞ்சத்தில் மரித்துப்போனாலும், இந்த மரணத்திற்கு பின்பு மற்றொரு ஜீவன் உள்ளது. இது விசுவாசிகளுக்கு வாக்குப்பண்ணப்பட்டிருக்கிற ஆசீர்வாதம்.

பரிசுத்தவான்களின் மரணம் அவர்களுக்கு மகிமையாயிருக்கிறது. விசுவாசிகள் பூமியிலே அடக்கம்பண்ணப்பட்டாலும், அவர்கள் உயிர்த்தெழுந்து, கர்த்தரோடுகூட நித்தியகாலமாய் ஜீவிப்பார்கள். இதுவே நம்முடைய ஆனந்த பாக்கிய நம்பிக்கை.

தாவீதுக்கு மரணமடையும் காலம் சமீபித்திருக்கிறது. அப்போது அவர் தன்னுடைய குமாரனாகிய சாலொமோனுக்கு, தன்னுடைய வார்த்தைகளை கட்டளையிட்டு சொல்லுகிறார். தாவீது சாலொமோனுக்கு தன்னுடைய மரணவாக்குமூலத்தை அறிவிக்கிறார். தாவீதுக்கு பின்பு சாலொமோன், இஸ்ரவேலின் சிங்காசனத்தில் அமர்ந்து, ராஜ்யபாரம் பண்ணுகிறார். தாவீதுக்கு பல வருஷமாக ராஜ்யபாரம் பண்ணின அனுபவமுள்ளது. சாலொமோன் இப்போதுதான் புதிதாக ராஜ்யபாரம் பண்ண வந்திருக்கிறார்.

தாவீது தன்னுடைய மரணத்தைப்பற்றிச் சொல்லும்போது, "நான் பூலோகத்தார் யாவரும் போகிற வழியே போகிறேன்" (1இராஜா *2:2*) என்று சொல்லுகிறார். எபிரெய பாஷையிலே, "நான் பூலோகத்தார் யாவரும் போகிற வழியே நடக்கிறேன்" என்று பொருள்படுமாறு எழுதப்பட்டிருக்கிறது.

மரணம் ஒரு பாதை. நம்முடைய ஜீவியத்தின் பாதை மரணத்தோடு முடிவு பெறுவதில்லை. மரணம் நம்முடைய ஜீவியத்தின் ஒரு பகுதி. மரணத்திற்கு பின்பும் நாம் கடந்து செல்ல வேண்டிய பாதை இருக்கிறது. விசுவாசிகளாகிய நாம் எல்லோரும் பரலோகத்தை நோக்கி பிரயாணம்பண்ணுகிறோம்.

பரலோகத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிற பரிசுத்தவான்களும், பூலோகத்தார் யாவரும் போகிற வழியே போகவேண்டும். எல்லோரும் மரிக்கவேண்டும். ஒரு தரம் பிறப்பதும், ஒரு தரம் மரிப்பதும் எல்லா மனுஷருக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது. விசுவாசிகள் பூலோகத்தார் யாவரும்போகிற மரணத்தின் வழியாக, மிகுந்த சந்தோஷமாய்ப் போகிறார்கள்.

"நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்" *(சங் 23:4).*

தீர்க்கதரிசிகளும், ராஜாக்களும் மரணத்தின் வழியாக போகவேண்டும். நாம் மரணத்தின் பள்ளத்தாக்கை கடந்த பின்பு, அதிக பிரகாசமான ஸ்தலத்திற்குள்ளே பிரவேசிப்போம். இந்த உலகத்தில் நாம் அனுபவிக்கும் ஆசீர்வாதங்களைவிட, பரலோகத்திலே நாம் அனுபவிக்கப்போகும் ஆசீர்வாதங்கள் அதிக மகிமையுள்ளதாயிருக்கும்.

தாவீது இப்போது பூலோகத்தார் யாவரும் போகிற மரண வழியாகப் போகப்போகிறார். தாவீது மரணத்தை சந்திப்பதற்கு முன்பாக, தன்னுடைய குமாரனாகிய சாலொமோனுக்கு, அவர் செய்ய வேண்டிய கடமைகளை, அவருக்கு ஞாபகப்படுத்துகிறார்.

சாலொமோன் இப்போது வாலிபவயதிலிருக்கிறார். அவர் தன்னை ஒரு சிறுபிள்ளை என்று நினைத்துக்கொண்டிருக்கிறார். சாலொமோன் இப்போது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருக்கிறார். தாவீது சாலொமோனுக்கு தன்னுடைய ஆலோசனையை சொல்லும்போது, "நீ திடன்கொண்டு புருஷனாயிரு" (1இராஜா 2:2) என்று முதலாவதாக சொல்லுகிறார்.

சாலொமோன் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். அவர் தன்னுடைய கடமைகளை முழுமனதோடும், நேர்த்தியாயும் செய்து நிறைவேற்றவேண்டும். சாலொமோனுடைய நற்குணத்திற்கும், நற்கிரியைகளுக்கும், அவருடைய மனச்சாட்சி நற்சாட்சி கொடுக்கவேண்டும்.

தாவீது இஸ்ரவேல் தேசத்தை ஆளுகை செய்யும்போது, தன்னுடைய சுயவிருப்பத்தின் பிரகாரம் ஆளுகை செய்யாமல், கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் ஆளுகை செய்யவேண்டும். "கர்த்தருடைய வழிகளில் நடக்கும்படிக்கு அவருடைய காவலைக் காப்பாயாக" (1இராஜா 2:4) என்று தாவீது சாலொமோனுக்கு கட்டளையிட்டு சொல்லுகிறார்.

சாலொமோன் நல்ல ஆவியோடு கிரியை செய்யவேண்டும். அவர் திடன்கொண்டு புருஷனாயிருக்கவேண்டும். அவருடைய வயது வாலிபவயதாகயிருந்தாலும், அவர் தன்னுடைய இளமைப்பருவத்திலிருந்தாலும், அவர் இஸ்ரவேலை திடன்கொண்டு, புருஷனாயிருந்து ஆளுகை செய்யவேண்டும்.

கர்த்தர் தாவீதுக்கு ஆசீர்வாதமான வார்த்தைகளை வாக்குப்பண்ணியிருக்கிறார். கர்த்தர் சொன்ன தம்முடைய வார்த்தைகளை கர்த்தர் தாமே திடப்படுத்தவேண்டும். அதற்காக சாலொமோன் கர்த்தருடைய கட்டளைகளையும், கற்பனைகளையும், நியாயங்களையும், சாட்சிகளையும் கைக்கொள்ளவேண்டும்.

சாலொமோனைப்போலவே, விசுவாசிகளாகிய நாம் எல்லோரும், கர்த்தருடைய கட்டளைகளையும், கற்பனைகளையும், நியாயங்களையும், சாட்சிகளையும் கைக்கொள்ளவேண்டும். அப்போது கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை நமக்கும் திடப்படுத்துவார்.

கர்த்தருடைய வாக்குத்தத்தம் நம்முடைய ஜீவியத்தில் நிறைவேறவேண்டும். இதற்காக கர்த்தர் நமக்கு சொல்லும் நிபந்தனைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். சாலொமோன் என்ன செய்தாலும், எங்கே போனாலும் அவர் எல்லாவற்றிலும் புத்திமானாயிருக்கவேண்டும் என்று தாவீது சொல்லுகிறார்.

கர்த்தர் தாவீதைக் குறித்தும், அவருடைய சந்ததியைக் குறித்தும் சில ஆசீர்வாதமான வார்த்தைகளைச் சொல்லியிருக்கிறார். "உன் பிள்ளைகள் தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமாவோடும் எனக்கு முன்பாக உண்மையாய் நடக்கும்படிக்குத் தங்கள் வழியைக் காத்துக்கொண்டால், இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கத்தக்க புருஷன் உனக்கு இல்லாமற்போவதில்லை" (1இராஜா 2:3) என்று கர்த்தர் தாவீதுக்கு வாக்குத்தத்தமாகச் சொல்லியிருக்கிறார்.

தாவீதின் சந்ததியில் மேசியா பிறப்பார். இது கர்த்தருடைய விசேஷித்த வாக்குத்தத்தம். இந்த வாக்குத்தத்தம் நிறைவேறவேண்டுமென்றால், தாவீதும் அவருடைய பிள்ளைகளும் தங்கள் முழுஇருதயத்தோடும், தங்கள் முழுஆத்துமாவோடும் கர்த்தருக்கு முன்பாக உண்மையாய் நடக்கவேண்டும். அவர்கள் தங்களுடைய வழியைக் காத்துக்கொள்ள வேண்டும். இது வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்கு சொல்லப்பட்டிருக்கிற நிபந்தனை. கர்த்தருடைய வாக்குத்தத்தம் நிறைவேறவேண்டுமென்றால், தாவீதின் சந்ததியில் வருகிற ஒவ்வொருவரும், இந்த நிபந்தனைக்கு கீழ்ப்படியவேண்டும்.

தாவீதின் குமாரனாகிய சாலொமோன், தன்னுடைய ஜீவியகாலத்தில், கர்த்தர் தாவீதுக்கு சொன்ன நிபந்தனைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். சாலொமோன் தன்னுடைய முழுஇருதயத்தோடும், முழுஆத்துமாவோடும் கர்த்தருக்கு முன்பாக உண்மையாய் நடக்கவேண்டும். அவர் தன்னுடைய வழியைக் காத்துக்கொள்ளவேண்டும்.

சாலொமோன் தன்னுடைய ஜீவியகாலத்தில் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதுபோல, அவருடைய பின்சந்ததியாரும், அவர்களுடைய ஜீவியகாலங்களில், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவேண்டும். தாவீதின் சந்ததியில் வருகிறவர்கள் எல்லோருமே கர்த்தருக்கு முன்பாக உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். கர்த்தர்மீது பயபக்தியுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

தாவீது தன்னுடைய குமாரனாகிய சாலொமோனுக்கு ஒரு சில தனிநபர்களைப்பற்றியும் கட்டளை கொடுக்கிறார். சாலொமோன் தாவீதின் கட்டளைப் பிரகாரம் அவர்களுக்கு செய்து முடிக்கவேண்டும். தாவீது முதலாவது கட்டளையாக யோவாபைப்பற்றிச் சொல்லுகிறார். யோவாப் தாவீது ராஜாவின் சேனையில் படைத்தளபதியாக இருந்தவன்.

தாவீது யோவாபைப்பற்றிச் சொல்லும்போது, "செருயாவின் குமாரனாகிய யோவாப், இஸ்ரவேலின் இரண்டு சேனாபதிகளாகிய நேரின் குமாரன் அப்னேருக்கும், ஏத்தேரின் குமாரன் அமாசாவுக்கும் செய்த காரியத்தினால் எனக்குச் செய்த குற்றத்தை நீ அறிந்திருக்கிறாயே; அவன் அவர்களைக் கொன்று, சமாதான காலத்திலே யுத்த காலத்து இரத்தத்தைச் சிந்தி, யுத்த காலத்து இரத்தத்தைத் தன் அரையிலுள்ள கச்சையிலும் தன் கால்களில் இருந்த பாதரட்சையிலும் வடியவிட்டானே" (1இராஜா 2:5) என்று சொல்லுகிறார்.

தாவீது சாலொமோனை நோக்கி, "ஆகையால் உன் யுக்தியின்படியே நீ செய்து, அவனுடைய நரைமயிர் சமாதானமாய்ப் பாதாளத்தில் இறங்கவொட்டாதிரு" (1இராஜா 2:6) என்று யோவாபைக் குறித்து கட்டளைகொடுக்கிறார்.

யோவாப் அப்னேரையும், அமாசாவையும் கொன்றுபோட்டான். ஆனால் தாவீதோ அவனுக்கு எந்த தண்டனையும் கொடுக்கவில்லை. அப்னேரும் அமாசாவும் இஸ்ரவேலின் இரண்டு சேனாபதிகளாயிருந்தவர்கள். அவர்கள் மிகவும் பிரதானமானவர்கள். ஆனால் யோவாபோ அவர்கள் இருவருடைய இரத்தத்தையும் சிந்தினான். சமாதான காலத்திலே யுத்தகாலத்து இரத்தத்தை சிந்தினான். இதனால் தாவீதுக்கு தீங்கும் சேதமும் உண்டாயிற்று. ஆனால் யோவாபோ அதைப்பற்றி நினைத்துப் பார்க்கவில்லை. அவன் தன் பாவத்திற்கு வருத்தப்படவில்லை.

"யோவாப் எனக்கு செய்த குற்றத்தை நீ அறிந்திருக்கிறாயே" என்று தாவீது சாலொமோனுக்கு சொல்லுகிறார். யோவாப் துணிகரமாகப் பாவம் செய்தவன். அவன் தன்னுடைய பாவத்தைக் குறித்து வெட்கப்படவுமில்லை. பாவத்திற்கு தண்டனை கிடைக்குமே என்று பயப்படவுமில்லை. யோவாப் யுத்தகாலத்து இரத்தத்தை தன் அரையிலுள்ள கச்சையிலும், தன் கால்களிலிருந்த பாதரட்சையிலும் வடிய விட்டான். அப்னேரும் அமாசாவும் குற்றமற்றவர்கள். ஆனால் யோவாபோ குற்றமற்றவர்களின் இரத்தத்தை சிந்தி குற்றம் செய்தான்.

யோவாப் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாகவும், இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீதுக்கு முன்பாகவும் பாவம் செய்திருக்கிறான். ஆனால் யோவாப் இன்னும் நீதியாய்த் தண்டிக்கப்படவில்லை. யோவாபுக்கு என்ன செய்யவேண்டும் என்னும் பொறுப்பை, தாவீது சாலொமோனுடைய தீர்மானத்திற்கு விட்டுவிடுகிறார். "ஆகையால் உன் யுக்தியின்படியே நீ செய்து, அவனுடைய நரைமயிர் சமாதானமாய்ப் பாதாளத்தில் இறங்கவொட்டாதிரு" (1இராஜா 2:6) என்று தாவீது சாலொமோனுக்கு கட்டளையிடுகிறார்.

தாவீது சாலொமோனிடம் யோவாபைப்பற்றிச் சொன்னபின்பு, அவர் பர்சிலாயின் குடும்பத்தைப்பற்றியும் சொல்லுகிறார். ஒருவேளை தாவீது சாலொமோனுக்கு பர்சிலாயின் குடும்பத்தைப்பற்றிச் சொல்லும்போது, பர்சிலா மரித்துப்போயிருக்கவேண்டும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

தாவீது சாலொமோனை நோக்கி "கீலேயாத்தியனான பர்சிலாயின் குமாரருக்குத் தயைசெய்வாயாக; அவர்கள் உன் பந்தியிலே சாப்பிடுகிறவர்களுடன் இருப்பார்களாக; உன் சகோதரனாகிய அப்சலோமுக்கு முன்பாக நான் ஓடிப்போகையில், அவர்கள் என்னை ஆதரித்தார்கள்" (1இராஜா 2:7) என்று சொல்லுகிறார்.

பர்சிலா மரித்து அடக்கம்பண்ணப்பட்டாலும், தாவீது அவரிடத்திலிருந்து பெற்ற உதவிகளும், அவரைப்பற்றிய நினைவுகளும் இன்னும் தாவீதின் மனதிலே மரித்துப்போகவில்லை. தாவீதைப்போலவே, நாமும் நமக்கு நன்மை செய்தவர்களை மறந்து விடக் கூடாது. நாம் மரித்து அடக்கம்பண்ணப்பட்டாலும், நம்முடைய பின்சந்ததியார், நமக்கு உதவி செய்தவர்களை நினைவுகூரவேண்டும். நம்முடைய சந்தியார் அவர்களுக்கு, தங்களால் முடிந்த பிரதி உபகாரங்களை செய்யவேண்டும்.

தாவீது மக்னாயீமுக்கு போனபோது, சீமேயி அவரைத் தூஷித்தான். தாவீது இப்போது சாலொமோனிடம் சீமேயியைப்பற்றியும் சொல்லுகிறார்.

தாவீது சாலொமோனை நோக்கி, "மேலும் பகூரிம் ஊரானான பென்யமீனனாகிய கேராவின் மகன் சீமேயி உன்னிடத்தில் இருக்கிறான்; நான் மக்னாயீமுக்குப் போகிற நாளிலே, அவன் என்னைக் கொடிய தூஷணமாய்த் தூஷித்தான்; ஆனாலும் அவன் யோர்தானிலே எனக்கு எதிர்கொண்டு வந்தபடியினால்: நான் உன்னைப் பட்டயத்தாலே கொன்றுபோடுவதில்லை என்று கர்த்தர்மேல் அவனுக்கு ஆணையிட்டுக் கொடுத்தேன். ஆகிலும் நீ அவனைக் குற்றமற்றவன் என்று எண்ணாதே; நீ புத்திமான்; அவனுடைய நரைமயிரை இரத்தத்துடன் பாதாளத்தில் இறங்கப்பண்ண, நீ அவனுக்குச் செய்யவேண்டியதை அறிவாய்" (1இராஜா 2:8,9) என்று சொல்லுகிறார்.

தாவீது மிகவும் நெருக்கமான சூழ்நிலையிலிருந்தபோது, சீமேயி அவரைத் தூஷித்தான். சரீரத்தில் ஏற்பட்டிருக்கும் காயத்திற்கு தைலம் தடவுவதற்கு பதிலாக, சீமேயி காயத்தின்மீது காடி உப்பைப் போட்டு, அதன் வேதனையை அதிகரிக்கச் செய்தான்.

சீமேயிக்கு என்ன செய்யவேண்டும் என்பதை, தாவீது சாலொமோனுடைய தீர்மானத்திற்கு ஒப்புக்கொடுத்துவிடுகிறார். "நீ அவனுக்கு செய்ய வேண்டியதை அறிவாய்" என்று தாவீது சொல்லுகிறார்.

சாலொமோன் சிமேயிக்கு தன்னுடைய நியாயத்தீர்ப்பை சொல்லுகிறார். சாலொமோன் ராஜா சீமேயியை அழைப்பித்து, அவனை நோக்கி: "நீ எருசலேமிலே உனக்கு ஒரு வீட்டைக் கட்டி, அங்கேயிருந்து எங்கேயாவது வெளியே போகாமல், அங்கேதானே குடியிரு. நீ வெளியே போய்க் கீதரோன் ஆற்றைக் கடக்கும் நாளில், நீ சாகவே சாவாய்; அப்பொழுது உன் இரத்தப்பழி உன் தலையின்மேல் இருக்கும் என்பதை நீ நிச்சயமாய் அறிந்துகொள்" (1இராஜா 1:36,37) என்று சொல்லுகிறார்.

ஆனால் சீமேயி தன்னுடைய வேலைக்காரரைக் கண்டுபிடிப்பதற்காக எருசலேமிலிருந்து காத் ஊருக்கு போய்விடுகிறான். சாலொமோன் ராஜா சீமேயிக்கு கொடுத்த கட்டளையை, அவன் மீறிவிடுகிறான். தாவீதின் கட்டளைப் பிரகாரம் பெனாயா சீமேயியைக் கொன்றுபோடுகிறான் (1இராஜா 1:46).

சாலொமோன் சீமேயியை பழிவாங்கவேண்டுமென்று விரும்பவில்லை. ஆனாலும் தேவனுடைய உடன்படிக்கையின்மீதும், அவருடைய ஆளுகையின்மீதும் சாலொமோன் பக்தி வைராக்கியமாயிருக்கிறார். தேவனுக்கு விரோதமாகவும், தாவீது ராஜாவின் குடும்பத்திற்கு விரோதமாகவும் கலகம்பண்ணியவர்களை சாலொமோன் கர்த்தருடைய நாமத்தினால் தண்டிக்கிறார்.

பின்பு தாவீது தன் பிதாக்களோடே நித்திரையடைகிறார். அவருடைய சரீரத்தை தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணுகிறார்கள் (1இராஜா 2:10). தாவீதின் முற்பிதாக்கள் அடக்கம்பண்ணப்பட்ட கல்லறையில், தாவீதை அடக்கம்பண்ணவில்லை.

சவுலை அவருடைய சொந்த நகரத்தில், அவருடைய பிதாக்களோடு சேர்ந்து அடக்கம்பண்ணினார்கள். ஆனால் தாவீதையோ, தாவீதின் நகரமாகிய எருசலேமில் அடக்கம்பண்ணுகிறார்கள். தாவீது இந்த நகரத்தை ஸ்தாபித்தார். தாவீது எருசலேமிலே தன்னுடைய சிங்காசனத்தையும் ஸ்தாபித்தார். அங்கே அவர் தன்னுடைய வீட்டாரை அடக்கம்பண்ண கல்லறை தோட்டத்தையும் ஸ்தாபித்தார்.

"மேன்மையாய் உயர்த்தப்பட்டு, யாக்கோபுடைய தேவனால் அபிஷேகம் பெற்று, இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடின ஈசாயின் குமாரனாகிய தாவீது என்னும் புருஷன்" *(2சாமு 23:1)* என்று தாவீது தன்னைப்பற்றி சொல்லுகிறார்.

"ஆகையால் என் இருதயம் பூரித்தது, என் மகிமை களிகூர்ந்தது; என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும்" *(சங் 16:9)* என்று தாவீது சொல்லுகிறார். .

தாவீது இஸ்ரவேலை அரசாண்ட நாட்கள் நாற்பது வருஷம்; அவர் எப்ரோனில் ஏழு வருஷமும், எருசலேமில் முப்பத்துமூன்று வருஷமும் அரசாண்டார் (1இராஜா 2:11).

அதோனியாவின் மரணம்
1இராஜா 2:12-25

1இராஜா 2:12. சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதுடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தான்; அவன் ராஜ்யபாரம் மிகவும் ஸ்திரப்பட்டது.

1இராஜா 2:13. ஆகீத்தின் குமாரனாகிய அதோனியா சாலொமோனின் தாயாகிய பத்சேபாளிடத்தில் வந்தான். நீ சமாதானமாய் வருகிறாயா என்று அவள் கேட்டதற்கு: சமாதானமாய்த்தான் வருகிறேன் என்றான்.

1இராஜா 2:14. பின்பு அவன்: உம்மோடே நான் பேசவேண்டிய ஒரு காரியம் இருக்கிறது என்றான். அதற்கு அவள்: சொல் என்றாள்.

1இராஜா 2:15. அப்பொழுது அவன்: ராஜ்யம் என்னுடையதாயிருந்தது என்றும், நான் அரசாளுகிறதற்கு இஸ்ரவேலரெல்லாரும் என்மேல் நோக்கமாய் இருந்தார்கள் என்றும் நீர் அறிவீர்; ஆனாலும் ராஜ்யபாரம் என்னைவிட்டுத் தாண்டி, என் சகோதரனுக்கு ஆயிற்று; கர்த்தரால் அது அவருக்குக் கிடைத்தது.

1இராஜா 2:16. இப்பொழுது நான் உம்மிடத்தில் ஒரு மன்றாட்டைக் கேட்கிறேன்; அதை எனக்கு மறுக்கவேண்டாம் என்றான். அவள்: சொல் என்றாள்.

1இராஜா 2:17. அப்பொழுது அவன்: ராஜாவாகிய சாலொமோன் உம்முடைய சொல்லை மறுப்பதில்லை; சூனேம் ஊராளாகிய அபிஷாகை எனக்கு அவர் விவாகம்பண்ணிக் கொடுக்க, அவரோடே பேசும்படி வேண்டுகிறேன் என்றான்.

1இராஜா 2:18. அதற்கு பத்சேபாள்: நல்லது, நான் உனக்காக ராஜாவிடத்தில் பேசுவேன் என்றாள்.

1இராஜா 2:19. பத்சேபாள் அதோனியாவுக்காக ராஜாவாகிய சாலொமோனிடத்தில் பேசும்படி போனாள்; அப்பொழுது ராஜா எழுந்திருந்து, அவளுக்கு எதிர்கொண்டு வந்து அவளை வணங்கி, தன் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து, ராஜாவின் தாயார் தன் வலதுபுறமாக உட்கார, அவளுக்கு ஒரு ஆசனத்தை வைத்தான்.

1இராஜா 2:20. அப்பொழுது அவள்: நான் உம்மை ஒரு சிறிய மன்றாட்டைக் கேட்க விரும்புகிறேன்; எனக்கு அதை மறுக்கவேண்டாம் என்றாள். அதற்கு ராஜா: என் தாயாரே, கேளும்; நான் உமக்கு மறுப்பதில்லை என்றான்.

1இராஜா 2:21. அப்பொழுது அவள்: சூனேம் ஊராளாகிய அபிஷாகை உம்முடைய சகோதரனாகிய அதோனியாவுக்கு விவாகம்பண்ணிக் கொடுக்கவேண்டும் என்றாள்.

1இராஜா 2:22. ராஜாவாகிய சாலொமோன் தன் தாயாருக்குப் பிரதியுத்தரமாக: நீர் சூனேம் ஊராளாகிய அபிஷாகை அதோனியாவுக்குக் கேட்பானேன்? அப்படியானால் ராஜ்யபாரத்தையும் அவனுக்குக் கேளும்; அவன் எனக்கு மூத்த சகோதரன்; அவனுக்கும் ஆசாரியனாகிய அபியத்தாருக்கும் செருயாவின் குமாரன் யோவாபுக்குமே அதைக் கேளும் என்றான்.

1இராஜா 2:23. பின்பு சாலொமோன் ராஜா: அதோனியா இந்த வார்த்தையைத் தன் பிராணனுக்குச் சேதமாகச் சொல்லாதிருந்தால், தேவன் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்று கர்த்தர்மேல் ஆணையிட்டு,

1இராஜா 2:24. இப்போதும் இன்றைக்கு அதோனியா கொலையுண்பான் என்று என்னைத் திடப்படுத்தினவரும், என்னை என் தகப்பனாகிய தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கப்பண்ணி, தாம் சொன்னபடி எனக்கு வீட்டைக் கட்டுவித்தவருமாகிய கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று சொல்லி,

1இராஜா 2:25. ராஜாவாகிய சாலொமோன் யோய்தாவின் குமாரன் பெனாயாவுக்குக் கட்டளைகொடுத்து அவனை அனுப்பினான்; இவன் அவன்மேல் விழுந்து அவனைக் கொன்றுபோட்டான்.

சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதுடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறார்; அவருடைய ராஜ்யபாரம் மிகவும் ஸ்திரப்பட்டிருக்கிறது (1இராஜா 2:12). தாவீது இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாகும்போது அவருக்கு அநேக பிரச்சனைகளும், பாடுகளும், நெருக்கங்களும் உண்டாயிற்று. அவர் மிகுந்த கஷ்டங்களுக்கு மத்தியிலே இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தார்.

தாவீதுக்கு ஏற்பட்ட பிரச்சனையைப்போல சாலொமோனுக்கு பிரச்சனைகள் ஏற்படவில்லை. சாலொமோன் மிகவும் எளிதாகவும், சமாதானமாகவும் தாவீதின் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறார். சாலொமோன் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவானவுடன், அவருடைய ராஜ்யபாரம் மிகவும் ஸ்திரப்படுகிறது.

தாவீதின் ஆட்சிக்காலமும் நல்ல ஆட்சிக்காலமாயிருந்தது. ஒரு நல்ல ஆட்சி முடியும்போது, மற்றொரு நல்ல ஆட்சி ஆரம்பமாவது அந்த தேசத்திற்கு மிகப்பெரிய ஆசீர்வாதம். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை ஆசீர்வதிக்கிறார். அவர்களுக்கு தாவீது, சாலொமோன் ஆகியோரைப்போல நல்ல ராஜாக்களைக் கொடுக்கிறார்.

சாலொமோன் சமஸ்த இஸ்ரவேலையும் நீதியாய் ராஜ்யபாரம்பண்ணுகிறார். சாலொமோன் தன்னுடைய ராஜ்யபாரத்தை ஸ்திரப்படுத்துவதற்காக, தனக்கு விரோதமாக எழும்புகிற கலகக்காரர்களையெல்லாம் ஒடுக்குகிறார். அதோனியா சாலொமோனுக்கு விரோதமாக எழும்பியிருக்கிறான்.

தாவீது உயிரோடிருக்கும்போதே, அதோனியா இஸ்ரவேலுக்கு ராஜாவாக வேண்டுமென்று சதித்திட்டம் பண்ணினான். ஆனால் அவனுடைய சதித்திட்டம் முறிந்துபோயிற்று. தாவீது சாலொமோனை சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாக்கினார். சாலொமோனும் அதோனியாவை மன்னித்து உயிரோடே விட்டுவிட்டார்.

அதோனியா மன்னிக்கப்பட்டாலும், அவனுடைய மனதிலே இன்னும் பாவமும், கலகக்குணமும், சதிஆலோசனைகளும் நிரம்பியிருக்கிறது. தாவீது வயது சென்ற விர்த்தாப்பியனாயிருந்தபோது, அவருக்கு அனல் உண்டாக்க, சூனேம் தேசத்தாளாகிய அபிஷாகை தாவீதினிடத்தில் கொண்டு வந்தார்கள். அபிஷாக் தாவீதின் மறுமனையாட்டி. அதோனியா தன்னுடைய தகப்பனாராகிய தாவீதின் மறுமனையாட்டியாகிய அபிஷாகை விவாகம்பண்ண வேண்டுமென்று சதித்திட்டம் பண்ணுகிறான்.

அதோனியாவுக்கு அபிஷாகின்மீது அன்போ, பாசமோ இல்லை. அதோனியா அபிஷாகை நேசிக்கவுமில்லை. ஆனாலும், அபிஷாகை விவாகம்பண்ணிக்கொண்டால், தன்னால் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக முடியுமென்று அதோனியா சதிஆலோசனை பண்ணுகிறான்.

அப்சலோம் தாவீதின் மறுமனையாட்டிகளிடத்தில் பிரவேசித்தான். இதனால் இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் தன்னோடு கூடயிருப்பார்கள் என்று அப்சலோம் எதிர்பார்த்தான். அதோனியாவும் இப்போது அப்சலோமைப்போல சதிஆலோசனை பண்ணுகிறான். அப்சலோமும் அதோனியாவும் சகோதரர்கள். அவர்கள் இருவரும் ஒன்றுபோலவே சதிஆலோசனை பண்ணுகிறார்கள்.

அதோனியா அபிஷாகோடும், தாவீதின் மனைவிகளோடும் பிரவேசிக்கவேண்டுமென்று சதித்திட்டம் பண்ணுகிறான். இவ்வாறு செய்வதினால், இஸ்ரவேல் ஜனங்கள் தன்னை, சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாக அங்கீகரிப்பார்கள் என்று அதோனியா எதிர்பார்க்கிறான்.

அதோனியாவோடுகூட, அவனுடைய படைத்தளபதியாகிய யோவாபும், ஆசாரியனாகிய அபியத்தாரும் இருக்கிறார்கள். இவர்கள் இருவருமே துன்மார்க்கர்கள். அபிஷாகை விவாகம்பண்ண வேண்டும் என்னும் துன்மார்க்கமான ஆலோசனையை, இவர்கள் இருவரும் அதோனியாவுக்கு சொல்லிக்கொடுத்திருக்கவேண்டும்.

அதோனியா அபிஷாகோடு நேரடியாகப் பேச போகவில்லை. அவன் திட்டமிட்டு, பத்சேபாளைப் பார்க்கப் போகிறான். அதோனியா தன்னிடத்தில் வருவதை பத்சேபாளும் எதிர்பார்க்கவில்லை. அவன் திடீரென்று வருகிறான். தன்னுடைய சதித்திட்டத்திற்கு, பத்சேபாள் உதவியாயிருப்பாள் என்று அதோனியா நினைக்கிறான்.

அதோனியா பத்சேபாளிடத்தில் வந்தபோது, தனக்கு அபிஷாகின்மீது சிநேகம் இருப்பதுபோல நடிக்கிறான். பாசாங்கு பண்ணி பத்சேபாளை நம்பவைக்கிறான். அவனுடைய வார்த்தையில் உண்மையில்லை. அதோனியா ஒரு மாய்மாலக்காரன்.

தாவீதுக்கு பிறகு சாலொமோனை இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாகவேண்டுமென்று பத்சேபாள் முயற்சி பண்ணினாள். இது அதோனியாவுக்கும் தெரியும். ஆகையினால் அதோனியா தன்னிடத்தில் வரும்போது, அவன் சிநேகமாக வருகிறானா அல்லது பகைவனாக வருகிறானா என்பது பத்சேபாளுக்கு தெரியவில்லை. பத்சேபாள் அதோனியாவிடம் அவனுடைய வருகைக்கான காரணத்தைக் கேட்கிறாள்.

ஆகீத்தின் குமாரனாகிய அதோனியா சாலொமோனின் தாயாகிய பத்சேபாளிடத்தில் வருகிறான். "நீ சமாதானமாய் வருகிறாயா" என்று பத்சேபாள் அவனிடத்தில் கேட்கிறாள். அதற்கு அதோனியா "சமாதானமாய்த்தான் வருகிறேன்" (1இராஜா 2:13) என்று சொல்லுகிறான்.

அதோனியா தனக்கு தீங்கு செய்ய வருகிறானோ என்று பத்சேபாள் சந்தேகப்படுகிறாள். அதோனியா இஸ்ரவேலின் சிங்காசனத்தில் அமர முடியாமல் போனதற்கு, நாத்தானும், பத்சேபாளும் முக்கிய காரணமாயிருந்தவர்கள். ஆகையினால் பத்சேபாள் அதோனியாவின் மனநிலையை அறிந்துகொள்ள விரும்புகிறாள்.

பின்பு அதோனியா பத்சேபாளிடத்தில்: "உம்மோடே நான் பேசவேண்டிய ஒரு காரியம் இருக்கிறது" என்று சொல்லுகிறான். அதற்கு பத்சேபாள்: "சொல்" (1இராஜா 2:14) என்று சொல்லுகிறாள்.

பத்சேபாள் தன் குமாரனாகிய சாலொமோனை அதிகமாய் நேசிக்கிறாள். சாலொமோனுடைய ராஜ்யபாரம் இப்போது ஸ்திரப்பட்டிருக்கிறது. சாலொமோனுக்கு அதோனியா மூலமாய் ஒரு பிரச்சனையும் வரக்கூடாது என்று பத்சேபாள் விரும்புகிறாள். ஆகையினால் பத்சேபாளும், அதோனியாவோடு பேசுவதற்கு சம்மதிக்கிறாள். அவன் வந்த காரியத்தை தன்னிடத்தில் சொல்லச்சொல்லுகிறாள்.

அதோனியா பத்சேபாளிடத்தில் முதலில் தன்னைப்பற்றிச் சொல்லுகிறான். இஸ்ரவேலுக்கு ராஜாவாக தனக்கே உரிமை இருப்பதாக தன்னுடைய நிலமையை எடுத்துச் சொல்லுகிறான். இஸ்ரவேல் ஜனங்களும் தன்னை நேசிக்கிறார்கள் என்று அதோனியா பத்சேபாளிடத்தில் தன்னுடைய செல்வாக்கைப்பற்றிச் சொல்லுகிறான். சாலொமோன் இப்போது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருப்பது, கர்த்தருடைய தெய்வீக சித்தம் என்பதை அதோனியா அங்கீகரிக்கிறான்.

அதோனியா பத்சேபாளிடத்தில் "ராஜ்யம் என்னுடையதாயிருந்தது என்றும், நான் அரசாளுகிறதற்கு இஸ்ரவேலரெல்லாரும் என்மேல் நோக்கமாய் இருந்தார்கள் என்றும் நீர் அறிவீர்; ஆனாலும் ராஜ்யபாரம் என்னைவிட்டுத் தாண்டி, என் சகோதரனுக்கு ஆயிற்று; கர்த்தரால் அது அவருக்குக் கிடைத்தது" (1இராஜா 2:15) என்று சொல்லுகிறான்.

தனக்கு இஸ்ரவேலின் சிங்காசனத்தில் அமருவதற்கு ஆசை இருப்பதுபோல அதோனியா காண்பித்துக்கொள்ளவில்லை. அந்த ஆசை அவனுடைய இருதயத்திலிருக்கிறது. அவனுடைய இருதயத்தில் அபிஷாகின்மீது பிரியமோ பாசமோ இல்லை. ஆனால் அதோனியாவோ பத்சேபாளிடத்தில், அபிஷாகைப்பற்றி பேசுகிறான்.

அதோனியா பத்சேபாளிடத்தில் "இப்பொழுது நான் உம்மிடத்தில் ஒரு மன்றாட்டைக் கேட்கிறேன்; அதை எனக்கு மறுக்கவேண்டாம்" என்று கேட்கிறான். அதற்கு பத்சேபாள் "சொல்" என்கிறாள். அப்பொழுது அதோனியா பத்சேபாளிடத்தில், "ராஜாவாகிய சாலொமோன் உம்முடைய சொல்லை மறுப்பதில்லை; சூனேம் ஊராளாகிய அபிஷாகை எனக்கு அவர் விவாகம்பண்ணிக் கொடுக்க, அவரோடே பேசும்படி வேண்டுகிறேன்" (1இராஜா 2:16,17) என்று சொல்லுகிறான்.

தன்னுடைய நிலமை மிகவும் பரிதாபமாயிருப்பதுபோல அதோனியா பத்சேபாளிடத்தில் காண்பித்துக்கொள்கிறான். ராஜ்யபாரம் தன்னைவிட்டு தாண்டிப்போயிற்று என்றும், தனக்கு தகுதியிருந்தும் தன்னால் ராஜாவாக முடியவில்லை என்றும் அதோனியா தன்னுடைய பரிதாபமான நிலமையை பத்தேபாளிடத்தில் சொல்லுகிறான்.

அதோனியாவின் மனதிலே வருத்தம் இருக்கிறது. இந்த வருத்தம் தன்னைவிட்டு நீங்கவேண்டுமென்றால், தான் அபிஷாகை விவாகம்பண்ணவேண்டும் என்று அதோனியா விரும்புகிறான். புதிய விவாகமும், புதிய மனைவியும், தன்னுடைய துக்கத்தை நீக்கி, தனக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும் என்பதுபோல அதோனியா பத்சேபாளிடத்தில் மாய்மாலமாய்ப் பேசுகிறான்.

அதோனியா தன்னைப்பற்றிச் சொன்னாலும், சாலொமோன் இஸ்ரவேலுக்கு ராஜாவாயிருப்பது தனக்கு மிகவும் பிரியமான காரியம் என்பதுபோலவும் பத்சேபாளிடத்தில் பேசுகிறான். "ராஜ்யபாரம் என்னைவிட்டுத் தாண்டி, என் சகோதரனுக்கு ஆயிற்று, கர்த்தரால் அது அவருக்கு கிடைத்தது" என்று அதோனியா பத்சேபாளிடத்தில் சாலொமோனைப்பற்றி சந்தோஷமாய்ப் பேசுகிறான். அதோனியா சாலொமோனுடைய ராஜசனத்தை தன்னுடைய வார்த்தைகளினால் அங்கீகரிக்கிறான்.

அதோனியாவின் வார்த்தைகள் சமாதானமாயும், இனிமையாயும் இருக்கிறது. ஆனால் அவனுடைய இருதயமோ கேடுள்ளதாயிருக்கிறது. அவனுடைய மனதில் துன்மார்க்கமும், வஞ்சகமும் நிரம்பியிருக்கிறது. அதோனியா சாலொமோனுடைய சிங்காசனத்திற்கு தீங்கு செய்யவேண்டும் என்று தன்னுடைய மனதில் திட்டமிடுகிறான். ஆனாலும் அதோனியாவின் வார்த்தைகள் மாத்திரம் சாலொமோனுக்கு ஆதரவாயிருக்கிறது.

அதோனியா பத்சேபாளிடத்தில் பேசும்போது அவளைப்பற்றியும் பெருமையாகப் பேசுகிறான். "ராஜாவாகிய சாலொமோன் உம்முடைய சொல்லை மறுப்பதில்லை" என்று அவளைப் புகழுகிறான். இஸ்ரவேல் தேசத்தார் எல்லோரும் சாலொமோனுடைய சொல்லை மறுப்பதில்லை. சாலொமோனோ பத்சேபாளுடைய சொல்லை மறுப்பதில்லை. பத்சேபாள் சாலொமோனுக்கு தாயாகயிருப்பதினால், அவள் இஸ்ரவேல் தேசத்தார் எல்லோருக்கும் தாயாகயிருக்கிறாள் என்று அதோனியா அவளைப் புகழுகிறான்.

அபிஷாகை விவாகம்பண்ண வேண்டும் என்னும் தன்னுடைய விருப்பத்தை பத்சேபாள் சாலொமோனிடத்தில் சொல்லவேண்டும் என்று அதோனியா விரும்புகிறான். அதோனியா நேரடியாகவே சாலொமோனிடத்திலோ அல்லது அபிஷாகிடத்திலோ தன்னுடைய விருப்பத்தை சொல்லியிருக்கலாம். ஆனால் தான் நேரடியாகப் பேசுவதற்கு பதிலாக, பத்சேபாள் மூலமாய்ப் பேசினால், தன்னுடைய விருப்பம் நிறைவேறும் என்று அதோனியா எதிர்பார்க்கிறான்.

பத்சேபாளும் அதோனியாவின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்கிறாள். பத்சேபாள் தனக்காக சாலொமோனிடத்தில் பேசவேண்டும் என்று அதோனியா வேண்டிக்கொண்டபோது, பத்சேபாளும், "நல்லது, நான் உனக்காக ராஜாவிடத்தில் பேசுவேன்" (1இராஜா 2:18) என்று அதோனியாவுக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறாள். பத்சேபாள் அதோனியாவுக்கு வார்த்தைகளினால் பிரதியுத்தரம் சொல்வதோடு, தான் சொன்ன வார்த்தைகளை நிறைவேற்றுவதற்காக உடனே செயல்படுகிறாள். பத்சேபாள் அதோனியாவுக்காக ராஜாவாகிய சாலொமோனிடத்தில் பேசும்படி போகிறாள் (1இராஜா 2:19).

சாலொமோன் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாகயிருந்தாலும், அவர் தன்னுடைய தாயாராகிய பத்சேபாளுக்கு மதிப்பும் மரியாதையும் காண்பிக்கிறார். பத்சேபாள் சாலொமோனிடத்தில் பேசுவதற்காக போகும்போது, சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதினுடைய சிங்காசனத்தில்மேல் வீற்றிருக்கிறார். பத்சேபாள் தன்னிடத்தில் வந்தபோது, சாலொமோன் ராஜா எழுந்திருந்து, அவளுக்கு எதிர்கொண்டு வந்து அவளை வணங்கி, தன் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து, ராஜாவின் தாயார் தன் வலதுபுறமாக உட்கார, அவளுக்கு ஒரு ஆசனத்தை வைக்கிறார் (1இராஜா 2:19).

பத்சேபாளுக்கு அதோனியாவின் காரியம் சிறிய காரியமாகயிருக்கிறது. அவளுக்கு அதோனியாவின் சதித்திட்டம் தெரியாது. அதோனியாவுக்கு உதவிசெய்வதினால், தான் சாலொமோனுக்கும் உதவிசெய்வதாக பத்சேபாள் நினைக்கிறாள். பத்சேபாள் சாலொமோனுடைய தாயாராயிருந்தாலும், அவள் அவருக்கு கட்டளை கொடுக்கவில்லை. தன்னுடைய விண்ணப்பத்தை ஒரு மன்றாட்டாகவே கேட்கிறாள்.

பத்சேபாள் சாலொமோனுக்கு வலதுபுறமாக ஒரு ஆசனத்தில் அமர்ந்து, சாலொமோன் ராஜாவினிடத்தில், "நான் உம்மை ஒரு சிறிய மன்றாட்டைக் கேட்க விரும்புகிறேன்; எனக்கு அதை மறுக்கவேண்டாம்" என்று கேட்கிறாள். அதற்கு சாலொமோன் ராஜாவும், "என் தாயாரே, கேளும்; நான் உமக்கு மறுப்பதில்லை" (1இராஜா 2:20) என்று சொல்லுகிறார்.

பத்சேபாளும் காலதாமதம்பண்ணாமல் சாலொமோன் ராஜாவினிடத்தில் அதோனியாவுக்காக பரிந்து பேசுகிறாள். "சூனேம் ஊராளாகிய அபிஷாகை உம்முடைய சகோதரனாகிய அதோனியாவுக்கு விவாகம்பண்ணிக் கொடுக்கவேண்டும்" (1இராஜா 2:21) என்று பத்சேபாள் சாலொமோன் ராஜாவினிடத்தில் தன்னுடைய மன்றாட்டைச் சொல்லுகிறாள்.

அதோனியாவின் விருப்பம் விநோதமாகயிருக்கிறது. ஆனாலும் அதோனியாவின் மனதிலுள்ள சதித்திட்டம் பத்சேபாளுக்கு புரியவில்லை. அதோனியா முறையில்லாமல் ஆசைப்படுவதற்காக, பத்சேபாள் அவனைக் கண்டிக்கவுமில்லை. பத்சேபாள் அதோனியாவைக் கண்டிக்காமலிருப்பதும், அவள் அவனுக்காக சாலொமோனிடத்தில் பரிந்துபேசுவதும் விநோதமாகயிருக்கிறது.

பத்சேபாள் தாவீதின் மனைவி. அவளுக்கு தாவீதின் அரண்மனையில் நடக்கும் குடும்பக்காரியங்கள் எல்லாம் தெரியும். தாவீது வயதுசென்ற விர்த்தாப்பியனாயிருந்தபோது, அவருக்கு அனல் உண்டுபண்ண வேண்டும் என்பதற்காக, அவருடைய ஊழியக்காரர்கள் அபிஷாகை அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு வந்தார்கள். தாவீது அபிஷாகை விவாகம்பண்ணவில்லை. அவர் அவளை அறியவில்லை. அபிஷாக் தாவீதுக்கு மறுமனையாட்டியாக கொடுக்கப்பட்டிருக்கிறாள்.

அபிஷாகை தாவீதுக்கு விவாகம்பண்ணி கொடுக்கப்படாததினால், அவளை அதோனியாவுக்கு மனைவியாகக் கொடுக்கலாம் என்று பத்சேபாள் நினைக்கிறாள். இந்த விவாகத்தின் மூலமாய் அதோனியாவின் வருத்தம் குறையும் என்றும், அவனிடத்தில் காணப்படுகிற சாலொமோனுக்கு விரோதமான கோபம் நீங்கும் என்றும் பத்சேபாள் நினைக்கிறாள். தன்னுடைய மன்றாட்டை சாலொமோன் மறுக்கமாட்டார் என்று நம்பி, அவரிடத்தில் பத்சேபாள் அதோனியாவின் விவாக காரியமாக பரிந்துபேசுகிறாள்.

சாலொமோன் இஸ்ரவேல் தேசத்தை நீதியாக ஆளுகை செய்கிறார். பத்சேபாளின் விண்ணப்பத்தில், அதோனியாவின் சதிஆலோசனையிருப்பதை சாலொமோன் புரிந்துகொள்கிறார். பத்சேபாள் தன்னிடத்தில் முறையில்லாத காரியத்தை விண்ணப்பமாகச் சொல்லுகிறாள் என்பதை சாலொமோன் அவளுக்கு முதலாவதாக புரிய வைக்கிறார்.

ராஜாவாகிய சாலொமோன் தன் தாயாருக்குப் பிரதியுத்தரமாக: "நீர் சூனேம் ஊராளாகிய அபிஷாகை அதோனியாவுக்குக் கேட்பானேன்? அப்படியானால் ராஜ்யபாரத்தையும் அவனுக்குக் கேளும்; அவன் எனக்கு மூத்த சகோதரன்; அவனுக்கும் ஆசாரியனாகிய அபியத்தாருக்கும் செருயாவின் குமாரன் யோவாபுக்குமே அதைக் கேளும்" (1இராஜா 2:22) என்று சொல்லுகிறார்.

"ராஜ்யபாரத்தையும் அவனுக்கு கேளும்" என்று சாலொமோன் பத்சேபாளிடத்தில் மிகவும் கோபமாகச் சொல்லுகிறார். பத்சேபாளின் மன்றாட்டு, சாலொமோனுடைய ராஜ்யபாரத்தைக் கேட்பதற்கு சமமாகயிருக்கிறது. பத்சேபாளோ சாலொமோனுடைய ராஜ்யபாரம் ஸ்திரப்படவேண்டும் என்பதற்காகவே, அவள் சாலொமோனிடத்தில் அதோனியாவுக்காக பரிந்துபேசுகிறாள். அவளுக்கு அதோனியாவின் சதிஆலோசனை தெரியவில்லை.

சாலொமோன் ஞானமுள்ளவர். அவருக்கு அதோனியாவின் சதி ஆலோசனைகளும், அதோனியாவுக்கு இந்த சதிஆலோசனையில் உடந்தையாயிருக்கிறவர்களைப்பற்றியும் நன்றாய்த் தெரிந்திருக்கிறது. ஆகையினால் சாலொமோன் பத்சேபாளிடத்தில் "ராஜ்யபாரத்தையும் அதோனியாவுக்காக கேளும்" என்று சொன்னவுடனே, "அவனுக்கும் ஆசாரியனாகிய அபியத்தாருக்கும், செருயாவின் குமாரன் யோவாபுக்குமே அதைக் கேளும்" என்றும் கோபத்தோடு சொல்லுகிறார்.

பத்சேபாள் அதோனியாவுக்காக பரிந்து பேசினாலும், சாலொமோன் ராஜா தன்னுடைய தீர்ப்பை அதோனியாவுக்கு உடனே சொல்லிவிடுகிறார். பின்பு சாலொமோன் ராஜா: "அதோனியா இந்த வார்த்தையைத் தன் பிராணனுக்குச் சேதமாகச் சொல்லாதிருந்தால், தேவன் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்" (1இராஜா 2:23) என்று கர்த்தர்மேல் ஆணையிடுகிறார்.

சாலொமோன் அதோனியாவுக்கு உடனே மரணதண்டனை கொடுக்கிறார். சாலொமோன் ராஜா, "இப்போதும் இன்றைக்கு அதோனியா கொலையுண்பான் என்று என்னைத் திடப்படுத்தினவரும், என்னை என் தகப்பனாகிய தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கப்பண்ணி, தாம் சொன்னபடி எனக்கு வீட்டைக் கட்டுவித்தவருமாகிய கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (1இராஜா 2:24) என்று சொல்லுகிறார்.

அதோனியா இஸ்ரவேல் தேசத்தின் சிங்காசனத்தின்மேல் ஆசைப்படுகிறான் என்பது சாலொமோனுக்கு தெளிவாக தெரிந்திருக்கிறது. அதோனியா உயிரோடிருக்கும் வரைக்கும், தனக்கும் தன்னுடைய சிங்காசனத்திற்கும் பாதுகாப்பு இருக்காது என்பதை சாலொமோன் அறிந்திருக்கிறார். ஆகையினால் சாலொமோன் அதோனியாவுக்கு உடனே மரணதண்டனை கொடுத்து, அந்தத் தண்டனையை நிறைவேற்றுமாறு பெனாயாவுக்கு கட்டளை கொடுக்கிறார்.

ராஜாவாகிய சாலொமோன் யோய்தாவின் குமாரன் பெனயாவுக்குக் கட்டளைகொடுத்து அவனை அனுப்புகிறார்; பெனாயா அதோனியாவின்மேல் விழுந்து அவனைக் கொன்றுபோடுகிறான் (1இராஜா 2:25). அபியத்தாரின் பேராசை அவனுடைய மரணத்திற்கு காரணமாயிற்று. இக்காலத்திலும் அநேகர் ஆட்சியைப் பிடிக்கவேண்டும், பதவியைப் பிடிக்கவேண்டும் என்று பேராசைப்பட்டு, தங்களுடைய ஜீவனை இழந்துபோகிறார்கள்.

அபியத்தாருக்கு தண்டனை 1இராஜா 2:26,27

1இராஜா 2:26. ராஜா: ஆசாரியனாகிய அபியத்தாரை நோக்கி: நீ உன் நிலங்கள் இருக்கிற ஆனதோத்திற்குப் போய்விடு; நீ மரணத்திற்குப் பாத்திரவானாயிருந்தும், நீ என் தகப்பனாகிய தாவீதுக்கு முன்பாகக் கர்த்தராகிய ஆண்டவருடைய பெட்டியைச் சுமந்தபடியினாலும், என் தகப்பன் அநுபவித்த உபத்திரவத்தையெல்லாம் நீ கூட அநுபவித்தபடியினாலும், இன்றைய தினம் நான் உன்னைக் கொலைசெய்யமாட்டேன் என்றான்.

1இராஜா 2:27. அப்படியே கர்த்தர் சீலோவிலே ஏலியின் வீட்டாரைக் குறித்துச் சொன்ன வார்த்தையை நிறைவேற்றும்படியாக, சாலொமோன் அபியத்தாரைக் கர்த்தருடைய ஆசாரியனாயிராதபடிக்குத் தள்ளிப் போட்டான்.

அதோனியா சாலொமோனுக்கு விரோதமாகக் கலகம்பண்ண, யோவாபும் அபியத்தாரும் அவனுக்கு உடந்தையாயிருக்கிறார்கள். இவர்கள் இருவரும் அதோனியாவுக்கு அபிஷாகைப்பற்றி ஆலோசனை சொல்லியிருக்கவேண்டும். சாலொமோன் தன்னுடைய வேவுகாரர் மூலமாக, யோவாப், அபியத்தார் ஆகிய இருவரின் துர்ஆலோசனைகளை அறிந்துகொள்கிறார். ஆகையினால் சாலொமோன், பத்சேபாளிடத்தில் அதோனியாவைப்பற்றிச் சொன்னபோது, யோவாபைப்பற்றியும், அபியத்தாரையும் பற்றியும் சொல்லுகிறார்.

"அப்படியானால் ராஜ்யபாரத்தையும் அவனுக்குக் கேளும்; அவன் எனக்கு மூத்த சகோதரன்; அவனுக்கும் ஆசாரியனாகிய அபியத்தாருக்கும் செருயாவின் குமாரன் யோவாபுக்குமே அதைக் கேளும்" (1இராஜா 2:22) என்று சாலொமோன், இவர்கள் இருவரைப்பற்றியும் பத்சேபாளிடத்தில் சொல்லுகிறார்.

யோவாபும் அபியத்தாரும் கர்த்தருக்கு விரோதமாகவும், இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாகவும், சாலொமோனுடைய ராஜ்யபாரத்திற்கு விரோதமாகவும் பாவம் செய்கிறார்கள். இவர்கள் இருவரும் இஸ்ரவேல் தேசத்திலே பிரதானமானவர்கள். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு இவர்கள் நல்ல எடுத்துக்காட்டுக்களாக, முன்மாதிரியாக ஜீவிக்கவேண்டியவர்கள். இவர்கள் தேசத்தில் பிரபல்யமானவர்களாயிருப்பதினால், இவர்களுடைய சுபாவங்கள், இஸ்ரவேல் தேசத்தார் மத்தியில் எளிதாக பரவிவிடும்.

அதோனியா சாலொமோனுக்கு விரோதமாக பண்ணுகிற கலகத்திலே, யோவாபுக்கும் அபியத்தாருக்கும் சமபங்கு இருக்கிறது. ஆனாலும் சாலொமோன் இவர்கள் இரண்டு பேரையும் ஒன்றுபோல தண்டிக்கவில்லை. சாலொமோன் இவர்களுக்கு கொடுக்கும் தண்டனையில் வித்தியாசமிருக்கிறது. இந்த வித்தியாசத்திற்கும் ஒரு காரணமுள்ளது.

ஆசாரியனாகிய அபியத்தார் ஏற்கெனவே தாவீது ராஜாவுக்கு நன்மை செய்திருக்கிறார். தாவீது அனுபவித்த உபத்திரவங்களை அபியத்தாரும் அனுபவித்திருக்கிறார். கர்த்தராகிய ஆண்டவருடைய பெட்டியை சுமந்திருக்கிறார். அபியத்தார் செய்த நன்மைகளை சாலொமோன் மறக்கவில்லை. ஆகையினால் சாலொமோன் அபியத்தாருக்கு மரணதண்டனை கொடுக்கவில்லை.

சாலொமோன் ராஜா ஆசாரியனாகிய அபியத்தாரை நோக்கி: "நீ உன் நிலங்கள் இருக்கிற ஆனதோத்திற்குப் போய்விடு; நீ மரணத்திற்குப் பாத்திரவானாயிருந்தும், நீ என் தகப்பனாகிய தாவீதுக்கு முன்பாகக் கர்த்தராகிய ஆண்டவருடைய பெட்டியைச் சுமந்தபடியினாலும், என் தகப்பன் அநுபவித்த உபத்திரவத்தையெல்லாம் நீ கூட அநுபவித்தபடியினாலும், இன்றைய தினம் நான் உன்னைக் கொலைசெய்யமாட்டேன்" (1இராஜா 2:26) என்று சொல்லுகிறார்.

அபியத்தார் ஆசாரியனாகயிருந்தாலும், அவன் தாவீதுக்கு ஏராளமான உதவிகளை செய்திருந்தாலும், அவனுக்கும் சாலொமோனுக்கு விரோதமான துரோகத்தில் பங்கு இருக்கிறது. சாலொமோன் தன்னுடைய ஞானத்தினாலே அபியத்தாரின் குற்றங்களைக் கண்டுபிடிக்கிறார். சாலொமோன் அபியத்தாரை கொன்றுபோடாமல் தப்பவிட்டாலும், அவனுக்கு தண்டனை கொடுக்காமல், அவனைத் தப்பவிடவில்லை.

அபியத்தார் ஏற்கெனவே தாவீதுக்கு செய்த நன்மைகளை சாலொமோன் நினைவுகூருகிறார். அபியத்தார் கர்த்தராகிய ஆண்டவருடைய பெட்டியை சுமந்ததையும் சாலொமோன் மறக்கவில்லை. இதன் நிமித்தமாக, அபியத்தார் கொலைசெய்யப்படவில்லை. சாலொமோன் அபியத்தாரை அவனுடைய ஆசாரிய ஊழியத்திலிருந்து தள்ளிவிடுகிறார்.

அபியத்தார் இனிமேல் எருசலேமில் தங்கியிருக்கக்கூடாது. அவன் தன்னுடைய நிலங்கள் இருக்கிற ஆனதோத்திற்கு போய்விடவேண்டும். அபியத்தார் சாலொமோனுடைய அரண்மனையிலோ, எருசலேம் நகரத்திலோ, ஆசாரிப்புக்கூடாரத்திலோ, பலிபீடம் இருக்கும் இடத்திலோ பிரவேசிக்கக்கூடாது. அபியத்தார் எருசலேமின் ஜனங்களோடு எந்தத் தொடர்புமில்லாமல், ஆனதோத்திலே தனியாயிருக்கவேண்டும்.

சாலொமோன் அபியத்தாரை கர்த்தருடைய ஆசாரியனாயிராதபடிக்கு தள்ளிப்போடுகிறார். கர்த்தர் சீலோவிலே ஏலியின் வீட்டாரைக் குறித்து சொன்ன வார்த்தையை நிறைவேற்றும்படியாக இந்த சம்பவம் நடைபெறுகிறது. ஏலியின் குடும்பத்திலே அபியத்தாரே கடைசி ஆசாரியனாயிருக்கிறான்.

"ஆகையால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: உன் வீட்டாரும் உன் பிதாவின் வீட்டாரும் என்றைக்கும் என் சந்நிதியில் நடந்துகொள்வார்கள் என்று நான் நிச்சயமாய்ச் சொல்லியிருந்தும், இனி அது எனக்குத் தூரமாயிருப்பதாக; என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்; என்னை அசட்டை பண்ணுகிறவர்கள் கனஈனப்படுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (1சாமு 2:30).

யோவாபின் மரணம் 1இராஜா 2:28-34

1இராஜா 2:28. நடந்த இந்தச் செய்தி யோவாபுக்கு வந்தபோது, அவன் கர்த்தருடைய கூடாரத்திற்கு ஓடிப்போய், பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக்கொண்டான்; யோவாப் அப்சலோமின் பட்சம் சாயாதவனாயிருந்தும், அதோனியாவின் பட்சம் சாய்ந்திருந்தான்.

1இராஜா 2:29. யோவாப் கர்த்தரின் கூடாரத்திற்கு ஓடிப்போனான் என்றும், இதோ, பலிபீடத்தண்டையில் நிற்கிறான் என்றும், ராஜாவாகிய சாலொமோனுக்கு அறிவிக்கப்பட்ட போது, சாலொமோன் யோய்தாவின் குமாரனாகிய பெனாயாவை அனுப்பி, நீ போய் அவன்மேல் விழு என்றான்.

1இராஜா 2:30. பெனாயா கர்த்தரின் கூடாரத்திற்குப் போய், அவனைப் பார்த்து: வெளியே வா என்று ராஜா சொல்லுகிறார் என்றான். அதற்கு அவன்: நான் வரமாட்டேன்; இங்கேயே சாவேன் என்றான்; ஆகையால் பெனாயா ராஜாவினிடத்தில் போய், யோவாப் இன்னபடி சொல்லி, இன்னபடி எனக்கு மறுஉத்தரவு கொடுத்தான் என்று மறுசெய்தி சொன்னான்.

1இராஜா 2:31. அப்பொழுது ராஜா அவனை நோக்கி: அவன் சொன்னபடியே நீ செய்து, அவனைக் கொன்று, அடக்கம்பண்ணி, இவ்விதமாய் யோவாப் முகாந்தரமில்லாமல் சிந்தின இரத்தத்தை என்னைவிட்டும் என் பிதாவின் வீட்டைவிட்டும் விலக்கிப்போடு.

1இராஜா 2:32. அவன் தன்னைப்பார்க்கிலும் நீதியும் நற்குணமுமுள்ள இரண்டுபேராகிய நேரின் குமாரன் அப்னேர் என்னும் இஸ்ரவேலின் படைத்தலைவன்மேலும், ஏதேரின் குமாரன் அமாசா என்னும் யூதாவின் படைத்தலைவன்மேலும் விழுந்து, என் தகப்பனாகிய தாவீதுக்குத் தெரியாமல் அவர்களைப் பட்டயத்தால் கொன்ற அவனுடைய இரத்தப்பழியைக் கர்த்தர் அவனுடைய தலையின்மேல் திரும்பப்பண்ணுவாராக.

1இராஜா 2:33. இப்படியே அவர்களுடைய இரத்தப்பழி என்றும் யோவாபுடைய தலையின் மேலும், அவன் சந்ததியாரின் தலையின்மேலும் திரும்பவும், தாவீதுக்கும் அவர் சந்ததியாருக்கும் அவர் வீட்டாருக்கும் அவர் சிங்காசனத்திற்கும் என்றென்றைக்கும் கர்த்தராலே சமாதானம் உண்டாயிருக்கவும் கடவது என்றான்.

1இராஜா 2:34. அப்படியே யோய்தாவின் குமாரன் பெனாயா போய், அவன்மேல் விழுந்து அவனைக் கொன்றுபோட்டான்; அவன் வனாந்தரத்திலிருக்கிற தன்னுடைய வீட்டிலே அடக்கம்பண்ணப்பட்டான்.

சாலொமோன் யோவாபின் பழைய பாவங்களை நியாயந்தீர்த்து, அவனுக்கு மரணதண்டனை கொடுக்கிறார். சாலொமோன் ஆசாரியனாகிய அபியத்தாரைத் தண்டிக்கிறார். கர்த்தருடைய ஆசாரியனாயிராதபடிக்கு அபியத்தாரைத் தள்ளிப்போடுகிறார். இந்தச் செய்தியை கேள்விப்பட்டு யோவாப் பயந்து நடுங்குகிறான். யோவாபும் அபியத்தாரும் சேர்ந்து, சாலொமோனுக்கு விரோதமாக சதிபண்ணினார்கள். சாலொமோன் அபியத்தாரைத் தண்டித்ததினால், அடுத்து தனக்கும் தண்டனை வரும் என்று நினைத்து யோவாப் பயப்படுகிறான்.

அபியத்தாருக்கு நடந்த இந்தச் சம்பவம் யோவாபுக்கு அறிவிக்கப்படுகிறது. அப்போது யோவாப் கர்த்தருடைய கூடாரத்திற்கு ஓடிப்போய், பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக்கொள்கிறான்; யோவாப் அப்சலோமின் பட்சம் சாயாதவனாயிருந்தும், அதோனியாவின் பட்சம் சாய்ந்திருந்தான் (1இராஜா 2:28).

சாலொமோன் அதோனியாவைக் கொன்றுபோட்டார். அபியத்தாரை கர்த்தருடைய ஆசாரியனாயிராதபடிக்கு தள்ளிப்போட்டார். சாலொமோன் அடுத்து தன்னையும் தண்டிப்பார் என்று யோவாப் பயப்படுகிறான். அவன் கர்த்தருடைய கூடாரத்திற்கு ஓடிப்போய், பலிபீடத்தின் கொம்புகளை பிடித்துக்கொள்கிறான். யோவாப் பலிபீடத்திலே தனக்கு அடைக்கலம் தேடுகிறான்.

யோவாபைப்பற்றிய செய்தி சாலொமோனுக்கு அறிவிக்கப்படுகிறது. யோவாப் அப்னேரையும் அமாசாவையும் கொன்றுபோட்டவன். ஆகையினால் யோவாப் பலிபீடத்தண்டையிலே நின்றாலும், அவனைக் கொன்றுபோடுமாறு சாலொமோன் பெனாயாவுக்கு கட்டளை கொடுக்கிறார்.

யோவாப் கர்த்தரின் கூடாரத்திற்கு ஓடிப்போனான் என்றும், இதோ, பலிபீடத்தண்டையில் நிற்கிறான் என்றும், ராஜாவாகிய சாலொமோனுக்கு அறிவிக்கப்படுகிறது. அப்போது, சாலொமோன் யோய்தாவின் குமாரனாகிய பெனாயாவை அனுப்பி, "நீ போய் அவன்மேல் விழு" (1இராஜா 2:29) என்று சொல்லுகிறார்.

யோவாப் அதோனியாவின் பட்சமாய்ச் சாய்ந்திருந்து சாலொமோனுக்கு விரோதமாக சதிபண்ணினான். அவன் தனக்கு விரோதமாக செய்த பாவத்தை சாலொமோன் பெரிய குற்றமாக நினைக்கவில்லை. ஆனால் யோவாப் அப்னேரையும், அமாசாவையும் கொன்றுபோட்டது, சாலொமோனுடைய பார்வையில் மிகப்பெரிய குற்றமாயிருக்கிறது.

யோவாப் குற்றமில்லாத இரண்டு நீதிமான்களைக் கொன்றுபோட்டவன். சமாதான காலத்திலே அவர்களுடைய இரத்தத்தை சிந்தி, தாவீதுக்கு தீங்கு செய்தவன். அப்னேரும் அமாசாவும் யாருக்கும் ஒரு தீங்கும் செய்யவில்லை. அவர்கள் இருவரும் தாவீதுக்கு நன்மை செய்ய ஆயத்தமாயிருந்தார்கள். யோவாப் அவர்கள் இருவரையும் கொன்றுபோடாமல் உயிரோடே விட்டிருந்தால், அவர்கள் தாவீதுக்கு இன்னும் அதிகமாய் சேவை செய்திருப்பார்கள்.

யோவாப் அப்னேரையும், அமாசாவையும் கொன்ற குற்றத்திற்காக, அவன் சாகவேண்டுமென்பது சாலொமோனுடைய தீர்ப்பாயிருக்கிறது. யோவாப் நீதியின் பட்டயத்தால் கொல்லப்படவேண்டும். யோவாப் இப்போது பலிபீடத்தண்டையிலே இருக்கிறான். பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக்கொண்டு அங்கே தனக்கு அடைக்கலம் தேடுகிறான். ஆனாலும் யோவாப் சாகவேண்டுமென்று சாலொமோன் தீர்ப்பு சொல்லுகிறார். யோவாப் பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக்கொண்டு தப்பித்துப்போவதைவிட, அவன் செத்துப்போவதே அவனுக்கு கிடைக்கும் நீதியான தீர்ப்பாயிருக்கும் என்று சாலொமோன் நினைக்கிறார்.

யோவாபோ பலிபீடத்தைவிட்டு வெளியே வரவும் விரும்பவில்லை. அதே வேளையில் தன்னால் தண்டனைக்கு தப்பிக்க முடியாது என்பதும் அவனுக்கு தெரிந்திருக்கிறது. சாலொமோன் பெனாயாவிடம், "நீ போய் யோவாபின்மேல் விழு" என்று கட்டளை கொடுக்கிறார்.

பெனாயா கர்த்தரின் கூடாரத்திற்குப் போகிறான். அங்கே யோவாப் பலிபீடத்தின் கொம்புகளை பிடித்துக்கொண்டிருக்கிறான். பெனாயா யோவாபைப் பார்த்து, "வெளியே வா என்று ராஜா சொல்லுகிறார்" என்கிறான். அதற்கு யோவாப், "நான் வரமாட்டேன்; இங்கேயே சாவேன்" என்று பெனாயாவுக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறான்; ஆகையால் பெனாயா ராஜாவினிடத்தில் போய், யோவாப் இன்னபடி சொல்லி, இன்னபடி எனக்கு மறுஉத்தரவு கொடுத்தான் என்று மறுசெய்தி சொல்லுகிறான் (1இராஜா 2:30).

யோவாப் கர்த்தருடைய கூடாரத்திலே, பலிபீடத்தின் கொம்புகளை பிடித்துக்கொண்டிருப்பதினால், அவனை என்ன செய்வது என்று பெனாயாவுக்கு தெரியவில்லை. யோவாபை பலிபீடத்தண்டையிலே கொன்றுபோடுவதா அல்லது அவனை அங்கேயிருந்து வெளியே இழுத்துக்கொண்டு வந்து, கர்த்தருடைய கூடாரத்திற்கு வெளியே அவனை கொன்றுபோடுவதா என்பதும் பெனாயாவுக்கு தெரியவில்லை. பெனாயாவுக்கு கர்த்தருடைய பிரமாணம் தெரியாது. ஆனால் சாலொமோனோ கர்த்தருடைய பிரமாணத்தை நன்றாய் அறிந்திருக்கிறவர்.

யோவாப் கர்த்தருடைய கூடாரத்தைவிட்டு வெளியே வர மறுக்கிறான். பெனாயாவுக்கு யோவாபை எப்படி கொல்லுவது என்று குழப்பமுண்டாயிற்று. சாலொமோனுடைய ஆலோசனையைப் பெற்று, அதன் பிரகாரமாக யோவாபுக்கு செய்யலாம் என்று பெனாயா தீர்மானிக்கிறான். நடந்த சம்பவத்தை பெனாயா சாலொமோனுக்கு சொல்லுகிறான்.

அப்பொழுது சாலொமோன் பெனாயாவை நோக்கி, "அவன் சொன்னபடியே நீ செய்து, அவனைக் கொன்று, அடக்கம்பண்ணி, இவ்விதமாய் யோவாப் முகாந்தரமில்லாமல் சிந்தின இரத்தத்தை என்னைவிட்டும் என் பிதாவின் வீட்டைவிட்டும் விலக்கிப்போடு" (1இராஜா 2:31) என்று சொல்லுகிறார்.

யோவாப் ஆசாரிப்புக் கூடாரத்திலிருந்தாலும், அங்கே அவனுக்கு ஏன் தண்டனை கொடுக்க வேண்டும் என்பதற்கான காரணத்தையும் சாலொமோன் பெனாயாவுக்கு சொல்லுகிறார். சாலொமோனுக்கு கர்த்தருடைய நியாயப்பிரமாணம் தெரியும். யோவாப் பெனாயாவையும் அமாசாவையும் கைப்பிசகாய் கொன்றுபோடவில்லை. யோவாப் திட்டமிட்டு, சதிஆலோசனை செய்து, துணிகரமாய் அவர்கள் இரண்டு பேரையும் கொன்றுபோட்டான்.

யோவாப் தன்னைப்பார்க்கிலும் நீதியும் நற்குணமுமுள்ள இரண்டுபேராகிய நேரின் குமாரன் அப்னேர் என்னும் இஸ்ரவேலின் படைத்தலைவன்மேலும், ஏதேரின் குமாரன் அமாசா என்னும் யூதாவின் படைத்தலைவன்மேலும் விழுந்து, தாவீதுக்குத் தெரியாமல் அவர்களைப் பட்டயத்தால் கொன்று போட்டான்.

"ஆகையால் யோவாபின் இரத்தப்பழியைக் கர்த்தர் அவனுடைய தலையின்மேல் திரும்பப்பண்ணுவாராக. இப்படியே அவர்களுடைய இரத்தப்பழி என்றும் யோவாபுடைய தலையின் மேலும், அவன் சந்ததியாரின் தலையின்மேலும் திரும்பவும், தாவீதுக்கும் அவர் சந்ததியாருக்கும் அவர் வீட்டாருக்கும் அவர் சிங்காசனத்திற்கும் என்றென்றைக்கும் கர்த்தராலே சமாதானம் உண்டாயிருக்கவும் கடவது" (1இராஜா 2:32,33) என்று சாலொமோன் தன்னுடைய நியாயத்தீர்ப்பை உறுதிபண்ணுகிறார்.

குற்றமில்லாமல் கைப்பிசகாய்க் கொன்றுபோட்டவனுக்கு, பலிபீடத்தண்டையிலே அடைக்கலம் கொடுக்கப்படும். துணிகரமாய்க் கொன்றுபோட்டவனுக்கு பலிபீடத்தண்டையில் அடைக்கலம் இல்லை. எதேச்சையாக ஒருவனை கொன்றுபோட்டவன், பலிபீடத்தின் கொம்புகளை பிடித்துக்கொண்டால், அவனுடைய பாவத்தை நிவிர்த்திபண்ணுவதற்காக அங்கே மிருகத்தின் இரத்தம், பாவநிவாரண பலியாக செலுத்தப்படும். யோவாபின் பாவமோ துணிகரமான பாவம். அவனுடைய பாவத்திற்கு மன்னிப்பு இல்லை. அவன் தண்டிக்கப்படவேண்டியவன். ஆகையினால் யோவாபை பலிபீடத்தண்டையிலே கொன்றுபோடுமாறு, சாலொமோன் பெனாயாவுக்கு கட்டளை கொடுக்கிறார்.

கிறிஸ்துவே நமக்கு அடைக்கலமாயிருக்கிறார். நாம் விசுவாசத்தினாலே கிறிஸ்துவையும், அவருடைய நீதியையும் பற்றிக்கொள்ள வேண்டும். நாம் மரித்தாலும் கிறிஸ்துவின் சமுகத்திலே மரிக்கவேண்டுமென்று தீர்மானமாயிருக்கவேண்டும். பலிபீடத்தின் கொம்புகள் கொடுக்கும் பாதுகாப்பைவிட, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தம்மிடத்தில் அடைக்கலமாக வந்திருக்கிறவர்களுக்கு கொடுக்கும் பாதுகாப்பு பெரிதாயிருக்கும்.

சாலொமோனுடைய கட்டளையின் பிரகாரம், யோய்தாவின் குமாரன் பெனாயா கர்த்தருடைய ஆசாரிப்புக்கூடாரத்திற்குப் போய், யோவாப்மேல் விழுந்து அவனைக் கொன்றுபோடுகிறான்; யோவாப் வனாந்தரத்திலிருக்கிற தன்னுடைய வீட்டிலே அடக்கம்பண்ணப்படுகிறான் (1இராஜா 2:34). பெனாயா யோவாபை எல்லோருடைய கண்களுக்கு முன்பாக கொன்றுபோட்டிருக்கவேண்டும்.

சாலொமோனுக்கு யோவாபை பழிவாங்கவேண்டும் என்னும் எண்ணமில்லை. அவர் தன்னுடைய தகப்பனாராகிய தாவீதின் கட்டளையை நிறைவேற்றுகிறார். நீதியான காரியங்களை செய்வது சாலொமோனுக்கு பிரியமாயிருக்கிறது. சாலொமோன் கர்த்தருக்கும், இஸ்ரவேல் தேசத்திற்கும், தன்னுடைய ராஜ்யபாரத்திற்கும் உண்மையுள்ளவராயிருக்கிறார். யோவாபுக்கு தண்டனை நிறைவேற்றின பின்பு தாவீதுக்கு கர்த்தராலே சமாதானமுண்டாயிற்று.

சாலொமோன் சொன்ன பிரகாரம், தாவீதுக்கும் அவர் சந்ததியாருக்கும் அவர் வீட்டாருக்கும் அவர் சிங்காசனத்திற்கும் என்றென்றைக்கும் கர்த்தராலே சமாதானம் உண்டாயிற்று. யோவாபைப்போல கலகத்தையும், குழப்பத்தையும் உண்டுபண்ணுகிற மனுஷர் செத்துப்போன பின்பு, தேசத்திலே சம்பூரண சமாதானமும், சந்தோஷமும் உண்டாயிற்று.

சாலொமோன் தன்னுடைய வீட்டாருக்கும், சிங்காசனத்திற்கும் சமாதானமும் ஆசீர்வாதமும் தேவைப்படும் போது, அவர் கர்த்தரை நோக்கிப் பார்க்கிறார். கர்த்தரே எல்லா சமாதானத்திற்கும் பாத்திரர். அவரே எல்லா ஆசீர்வாதங்களுக்கும் ஊற்றாகவும், ஊற்றின் கண்ணாகவும் இருக்கிறார். கர்த்தர் கொடுக்கும் ஆசீர்வாதம் பரிபூரணமடையவேண்டும் என்பதற்காக, தாவீது நித்திய காலத்தை நோக்கிப் பார்க்கிறார். சாலொமோனுடைய சமாதானம் கர்த்தராலே உண்டான சமாதானம். கர்த்தருடைய சமாதானம் என்றென்றைக்கும், நித்திய காலத்திற்கும் தங்கியிருக்கும்.

பெனாயாவும் சாதோக்கும் 1இராஜா 2:35

1இராஜா 2:35. அவனுக்குப் பதிலாக ராஜா யோய்தாவின் குமாரன் பெனாயாவை இராணுவத்தின்மேலும், ஆசாரியனாகிய சாதோக்கை அபியத்தாரின் ஸ்தானத்திலும் வைத்தான்.

பெனாயாவும் சாதோக்கும் சாலொமோனுக்கு உண்மையுள்ள சிநேகிதராயிருக்கிறார்கள். அவர்கள் இருவரும் சாலொமோனுடைய ராஜ்யபாரத்திற்கு உதவியாயிருக்கிறார்கள். சாலொமோன் ராஜா யோவாபுக்கு பதிலாக யோய்தாவின் குமாரன் பெனாயாவை இராணுவத்தின்மேல் தலைவராக வைக்கிறார். சாலொமோன் ஆசாரியனாகிய சாதோக்கை அபியத்தாரின் ஸ்தானத்தில் வைக்கிறார் (1இராஜா 2:35).

தாவீதுக்கு படைத்தலைவனாயிருந்த யோவாப் செத்துப்போனான். அவனுடைய ஸ்தானத்திலே, சாலொமோனுடைய சிநேகிதனாகிய பெனாயா படைத்தலைவனாக நியமிக்கப்பட்டிருக்கிறான். சாலொமோன் அபியத்தாரை ஆசாரிய ஊழியத்திலிருந்து தள்ளிவிடுகிறார். இதனால் கர்த்தர் ஏலியின் வீட்டாரைப்பற்றிச் சொன்ன வாக்குத்தத்தம் நிறைவேறுகிறது.

"நான் என் உள்ளத்துக்கும் என் சித்தத்துக்கும் ஏற்றபடி செய்யத்தக்க உண்மையான ஒரு ஆசாரியனை எழும்பப்பண்ணி, அவனுக்கு நிலையான வீட்டைக் கட்டுவேன்; அவன் என்னால் அபிஷேகம்பண்ணப்பட்டவனுக்கு முன்பாகச் சகல நாளும் நடந்துகொள்ளுவான்" (1சாமு 2:35).

சீமேயியின் மரணம் 1இராஜா 2:36-46

1இராஜா 2:36. பின்பு ராஜா சீமேயியை அழைப்பித்து, அவனை நோக்கி: நீ எருசலேமிலே உனக்கு ஒரு வீட்டைக் கட்டி, அங்கேயிருந்து எங்கேயாவது வெளியே போகாமல், அங்கேதானே குடியிரு.

1இராஜா 2:37. நீ வெளியே போய்க் கீதரோன் ஆற்றைக் கடக்கும் நாளில், நீ சாகவே சாவாய்; அப்பொழுது உன் இரத்தப்பழி உன் தலையின்மேல் இருக்கும் என்பதை நீ நிச்சயமாய் அறிந்துகொள் என்றான்.

1இராஜா 2:38. சீமேயி ராஜாவைப் பார்த்து: அது நல்ல வார்த்தை; ராஜாவாகிய என் ஆண்டவன் சொன்னபடியே, உமது அடியானாகிய நான் செய்வேன் என்று சொல்லி, சீமேயி அநேகநாள் எருசலேமிலே குடியிருந்தான்.

1இராஜா 2:39. மூன்று வருஷம் சென்றபோது, சீமேயியின் வேலைக்காரர் இரண்டுபேர் மாக்காவின் குமாரனாகிய ஆகீஸ் என்னும் காத்தின் ராஜாவினிடத்துக்கு ஓடிப்போனார்கள்; உன் வேலைக்காரர் காத் ஊரில் இருக்கிறார்கள் என்று சீமேயிக்கு அறிவித்தார்கள்.

1இராஜா 2:40. அப்பொழுது சீமேயி எழுந்து, தன் கழுதையின்மேல் சேணம்வைத்து, தன் வேலைக்காரரைத் தேட, காத் ஊரிலிருக்கிற ஆகீசிடத்துக்குப் புறப்பட்டுப் போனான்; இப்படிச் சீமேயி போய், தன் வேலைக்காரரைக் காத் ஊரிலிருந்து கொண்டுவந்தான்.

1இராஜா 2:41. சீமேயி எருசலேமிலிருந்து காத் ஊருக்குப் போய், திரும்பிவந்தான் என்று சாலொமோனுக்கு அறிவிக்கப்பட்டபோது,

1இராஜா 2:42. ராஜா சீமேயியை அழைப்பித்து: நீ வெளியே புறப்பட்டு எங்கேயாவது போகிறநாளிலே சாகவேசாவாய் என்பதை நீ நிச்சயமாய் அறிந்துகொள் என்று நான் உன்னைக் கர்த்தர்மேல் ஆணையிடச் செய்து, உனக்குத் திடச்சாட்சியாகச் சொல்லியிருக்க, அதற்கு நீ: நான் கேட்ட வார்த்தை நல்லதென்று சொல்லவில்லையா?

1இராஜா 2:43. நீ கர்த்தரின் ஆணையையும், நான் உனக்குக் கற்பித்த கட்டளையையும் கைக்கொள்ளாதே போனதென்ன? என்று சொல்லி,

1இராஜா 2:44. பின்னும் ராஜா சீமேயியைப் பார்த்து: நீ என் தகப்பனாகிய தாவீதுக்குச் செய்ததும் உன் மனதுக்குத் தெரிந்திருக்கிறதுமான எல்லாப் பொல்லாப்பையும் அறிந்திருக்கிறாய்; ஆகையால் கர்த்தர் உன் பொல்லாப்பை உன் தலையின் மேல் திரும்பப்பண்ணுவார்.

1இராஜா 2:45. ராஜாவாகிய சாலொமோனோ ஆசீர்வதிக்கப் பட்டவனாயிருப்பான்; தாவீதின் சிங்காசனம் என்றைக்கும் கர்த்தருக்கு முன்பாக உறுதியாயிருக்கும் என்று சொல்லி,

1இராஜா 2:46. ராஜா யோய்தாவின் குமாரனாகிய பெனாயாவுக்குக் கட்டளைகொடுத்தான்; அவன் வெளியே போய், அவன்மேல் விழுந்து அவனைக் கொன்றுபோட்டான். ராஜ்யபாரம் சாலொமோனின் கையிலே ஸ்திரப்பட்டது.

சாலொமோன் ராஜா, சீமேயியை அழைப்பிக்கிறார். அவனுக்கு தன்னுடைய நியாயத்தீர்ப்பை சொல்லுகிறார். சாலொமோன் சீமேயியை நோக்கி, "நீ எருசலேமிலே உனக்கு ஒரு வீட்டைக் கட்டி, அங்கேயிருந்து எங்கேயாவது வெளியே போகாமல், அங்கேதானே குடியிரு. நீ வெளியே போய்க் கீதரோன் ஆற்றைக் கடக்கும் நாளில், நீ சாகவே சாவாய்; அப்பொழுது உன் இரத்தப்பழி உன் தலையின்மேல் இருக்கும் என்பதை நீ நிச்சயமாய் அறிந்துகொள்" (1இராஜா 2:36,37) என்று சொல்லுகிறார்.

சீமேயி இப்போது பகூரிம் ஊரிலுள்ள தன் வீட்டிலிருக்கிறான். யோவாபின் மரணத்தையும், அதோனியாவின் மரணத்தையும் குறித்து சீமேயி கேள்விப்பட்டிருப்பான். தாவீதின் வீட்டாரைக் குறித்து சீமேயியின் மனதிலே கோபம் இருக்கிறது. அவனுடைய மனச்சாட்சி அவனுக்கு விரோதமாக சாட்சி சொல்லுகிறது. சாலொமோன் தன்னை தண்டிப்பார் என்பது சீமேயிக்கு தெரிந்திருக்கிறது. ஆனால் அவர் தன்னை எப்போது தண்டிப்பார் என்பதும், எப்படி தண்டிப்பார் என்பதும் சீமேயிக்கு தெரியவில்லை.

சாலொமோன் இஸ்ரவேல் தேசத்தை ஞானத்தோடு ராஜ்யபாரம் பண்ணுகிறார். எல்லா வழக்குகளையும் நீதியாய் நியாயம் விசாரித்து, நியாயமான தீர்ப்பு சொல்லுகிறார். சாலொமோன் எல்லா குற்றவாளிகளுக்கும் ஒன்றுபோல் தீர்ப்பு கொடுப்பதில்லை. அதுபோல எல்லா குற்றங்களையும் ஒன்றுபோல் தண்டிப்பதுமில்லை. குற்றவாளிகளின் குற்றத்திற்கு தகுந்த பிரகாரம், சாலொமோன் அவர்களுக்கு தண்டனை கொடுக்கிறார்.

சாலொமோன் சீமேயிக்கு மரணதண்டனை கொடுக்கவில்லை. அவன் எருசலேமிலே தனக்கு ஒரு வீட்டைக் கட்டி தங்கியிருக்கவேண்டும். தாவீது ராஜா சீமேயிக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தை சாலொமோனும் அங்கீகரிக்கிறார். சாலொமோன் தாவீதின் வார்த்தைகளை மதிக்கிறார். ஆகையினால் சாலொமோன் சீமேயியை உடனே கொன்றுபோடாமல், அவனை எருசலேமில் தங்க அனுமதி கொடுக்கிறார்.

சீமேயி எருசலேமுக்கு வெளியே எங்கும் போகக்கூடாது. அவன் வேறு எந்தப் பட்டணத்திற்கும்போய் யாரோடும் பேசவும் கூடாது. மற்ற ஊர் ஜனங்களோடு தொழிலோ வியாபாரமோ பண்ணவும் கூடாது. சீமேயி துர்க்குணமுள்ளவன். சீமேயியின் இஷ்டத்திற்கு அவனை வெளியே அனுப்பிவிட்டால், அவன் தாவீதின் குடும்பத்தாரைப்பற்றி எல்லா ஊர்களிலும் அவதூறான செய்தியை பரப்புவான். ஆகையினால் சாலொமோன் சீமேயியை தன்னுடைய நேரடி கட்டுப்பாட்டில், எருசலேமிலே வைத்திருக்கவேண்டுமென்று தீர்மானிக்கிறார்.

சீமேயி எருசலேமிலே தன்னுடைய வீட்டிலிருந்தாலும், அவன் சாலொமோனுடைய பார்வையில் கைதுபண்ணப்பட்டவனைப்போல இருக்கிறான். சீமேயி சிறைச்சாலையில் அடைக்கப்படவில்லை. ஆனால் அவன் எருசலேமிலே அடைக்கப்பட்டிருக்கிறான். சாலொமோனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தால் சீமேயிக்கு மரணமில்லை. இல்லையென்றால் அவனுக்கு நிச்சயம் மரணமுண்டு. சீமேயி எருசலேமைக் கடந்து, வெளியே போய் கீதரோன் ஆற்றைக் கடக்கும் நாளில் அவன் சாகவே சாவான் என்று சாலொமோன் அவனுக்கு தீர்ப்பு சொல்லியிருக்கிறார்.

சீமேயியும் சாலொமோனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிறான். சீமேயி சாலொமோன் ராஜாவைப் பார்த்து: "அது நல்ல வார்த்தை; ராஜாவாகிய என் ஆண்டவன் சொன்னபடியே, உமது அடியானாகிய நான் செய்வேன்" என்று சொல்லுகிறான். சீமேயி அநேகநாள் எருசலேமிலே குடியிருக்கிறான் (1இராஜா 2:38).

சாலொமோன் தன்னை உடனே கொன்றுபோடாமல் ஜீவனோடு விட்டுவிட்டது சீமேயிக்கு மிகுந்த சந்தோஷமாயிருக்கிறது. சீமேயி அநேகநாள் எருசலேமிலே குடியிருந்ததால், அவனுக்கு ராஜா சொன்ன கட்டளை மறந்துவிடுகிறது. அல்லது ராஜாவின் ஆட்கள் தன்னைக் கவனிக்கமாட்டார்கள் என்று சீமேயி இறுமாப்பாயிருந்திருக்கிறான்.

மூன்று வருஷம் சென்றபோது, சீமேயியின் வேலைக்காரர் இரண்டுபேர் மாக்காவின் குமாரனாகிய ஆகீஸ் என்னும் காத்தின் ராஜாவினிடத்துக்கு ஓடிப்போகிறார்கள்; "உன் வேலைக்காரர் காத் ஊரில் இருக்கிறார்கள்" என்று சீமேயிக்கு அறிவிக்கிறார்கள். அப்பொழுது சீமேயி எழுந்து, தன் கழுதையின்மேல் சேணம்வைத்து, தன் வேலைக்காரரைத் தேட, காத் ஊரிலிருக்கிற ஆகீசிடத்துக்குப் புறப்பட்டுப் போகிறான்; இப்படிச் சீமேயி போய், தன் வேலைக்காரரைக் காத் ஊரிலிருந்து கொண்டுவருகிறான் (1இராஜா 2:39,40).

சீமேயி எருசலேமிலிருந்து பெலிஸ்தருடைய தேசத்திற்குப் போய்விட்டு, மறுபடியும் திரும்பி எருசலேமுக்கு வந்திருக்கிறான். சீமேயி ஒரு முக்கியமான வேலையாகத்தான் அங்கு போயிருந்தான். சீமேயி சாலொமோன் ராஜாவினிடத்தில் பெலிஸ்தரின் தேசத்திற்கு தன் குடும்ப வேலையாக போகவேண்டும் என்று அனுமதி கேட்டிருந்தால், சாலொமோன் ராஜா அவனுக்கு அனுமதி கொடுத்திருப்பார். ஆனால் சீமேயி சாலொமோனிடம் அனுமதி கேட்கவில்லை. யாருக்கும் தெரியாமல் பெலிஸ்தரின் தேசத்திற்கு போய்விட்டு, எருசலேமுக்கு திரும்பி விடலாம் என்று சீமேயி நினைக்கிறான்.

சீமேயி ஏற்கெனவே தாவீதுக்கு விரோதமாகத் தூஷண வார்த்தைகளைச் சொல்லி குற்றம் செய்தவன். இப்போது சீமேயி சாலொமோனின் வார்த்தைக்கு கீழ்ப்படியாத குற்றத்தையும் செய்து விடுகிறான். சீமேயியினுடைய குற்றங்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது.

தான் பெலிஸ்தரின் தேசமாகிய காத் ஊருக்குப்போனது யாருக்கும் தெரியாது என்று சீமேயி நினைக்கிறான். ஆனால் சீமேயின் போக்குவரத்துக்களெல்லாம், சாலொமோன் ராஜாவுக்கு, அவருடைய வேவுகாரர் மூலமாக அறிவிக்கப்படுகிறது. சீமேயி எருசலேமிலிருந்து காத் ஊருக்குப் போய், திரும்பிவந்தான் என்று சாலொமோனுக்கு அறிவிக்கப்படுகிறது (1இராஜா 2:41).

சாலொமோன் ராஜா காலதாமதம்பண்ணாமல் சீமேயியை தன்னிடத்தில் அழைத்து வரச்சொல்லுகிறார். சீமேயி செய்த தப்பிதத்தை சாலொமோன் அவனுக்கு உணர்த்துகிறார். சாலொமோன் சீமேயியை நோக்கி "நீ வெளியே புறப்பட்டு எங்கேயாவது போகிறநாளிலே சாகவேசாவாய் என்பதை நீ நிச்சயமாய் அறிந்துகொள் என்று நான் உன்னைக் கர்த்தர்மேல் ஆணையிடச் செய்து, உனக்குத் திடச்சாட்சியாகச் சொல்லியிருக்க, அதற்கு நீ: நான் கேட்ட வார்த்தை நல்லதென்று சொல்லவில்லையா?" (1இராஜா 2:42) என்று கேட்கிறார்.

சாலொமோன் தனக்கு சொன்ன கட்டளை சீமேயிக்கு ஏற்கெனவே தெரிந்திருக்கிறது. சீமேயி சாலொமோன் ராஜாவின் வார்த்தையைக் கேட்டு, "அது நல்ல வார்த்தை; ராஜாவாகிய என் ஆண்டவன் சொன்னபடியே, உமது அடியானாகிய நான் செய்வேன்" (1இராஜா 2:38) என்று வாக்குப்பண்ணினான். ஆனால் இப்போதோ சீமேயி சாலொமோன் ராஜாவின் கட்டளையை மீறி விடுகிறான்.

சாலொமோன் சீமேயியைப் பார்த்து, "நீ கர்த்தரின் ஆணையையும், நான் உனக்குக் கற்பித்த கட்டளையையும் கைக்கொள்ளாதே போனதென்ன?" (1இராஜா 2:43) என்று கேட்கிறார்.

சீமேயி தாவீதுக்கு தீங்கு செய்திருக்கிறான். அவருக்கு விரோதமாகத் தூஷண வார்த்தைகளைச் சொன்னான். சீமேயி தாவீதின்மீது கற்களை எரிந்தான். இவையெல்லாம் சீமேயி தாவீதுக்கு விரோதமாக செய்த பொல்லாப்புகளாகும். இந்தப் பொல்லாப்புகளையெல்லாம் சீமேயி மறக்கவில்லை. அவன் அவற்றையெல்லாம் அறிந்திருக்கிறான். தாவீதும் சீமேயியின் பொல்லாப்புகளை சாலொமோனுக்கு சொல்லியிருக்கிறார். சீமேயி கர்த்தரின் ஆணையையும், சாலொமோன் அவனுக்கு கற்பித்த கட்டளையையும் கைக்கொள்ளாமல் போய்விட்டான். சாலொமோன் சீமேயிக்கு தன்னுடைய நியாயத்தீர்ப்பை சொல்லுகிறார்.

சாலொமோன் ராஜா சீமேயியைப் பார்த்து: "நீ என் தகப்பனாகிய தாவீதுக்குச் செய்ததும் உன் மனதுக்குத் தெரிந்திருக்கிறதுமான எல்லாப் பொல்லாப்பையும் அறிந்திருக்கிறாய்; ஆகையால் கர்த்தர் உன் பொல்லாப்பை உன் தலையின் மேல் திரும்பப்பண்ணுவார். ராஜாவாகிய சாலொமோனோ ஆசீர்வதிக்கப்பட்டவனாயிருப்பான்; தாவீதின் சிங்காசனம் என்றைக்கும் கர்த்தருக்கு முன்பாக உறுதியாயிருக்கும்" (1இராஜா 2:44,45) என்று சொல்லுகிறார்.

சாலொமோன் ராஜா சீமேயிக்கு தன்னுடைய நியாயத்தீர்ப்பைச் சொல்லும்போது, பெனாயா ராஜாவுக்கு அருகில் நிற்கிறான். தன்னுடைய நியாயத்தீர்ப்பை நிறைவேற்றும் பொறுப்பை சாலொமோன் பெனாயாவுக்கு கொடுக்கிறார்.

சாலொமோன் ராஜா யோய்தாவின் குமாரனாகிய பெனாயாவுக்குக் கட்டளைகொடுக்கிறார்; பெனாயா வெளியே போய், சீமேயியின்மேல் விழுந்து அவனைக் கொன்றுபோடுகிறான் (1இராஜா 2:46). கர்த்தர் சீமேயியின் பொல்லாப்பை அவன் தலையின்மேல் திரும்பப்பண்ணுகிறார்.

சாலொமோன் சொன்ன பிரகாரமாக, அவர் ஆசீர்வதிக்கப்பட்டவராக இருக்கிறார். தாவீதின் சிங்காசனம் என்றைக்கும் கர்த்தருக்கு முன்பாக உறுதியாயிருக்கிறது. ராஜ்யபாரம் சாலொமோனின் கையிலே ஸ்திரப்படுகிறது.

3 அதிகாரம்

சாலொமோனுடைய ராஜ்யபாரத்தின் ஆரம்பகாலத்தில் ஒரு சிலருடைய இரத்தம் சிந்தப்படுகிறது. சாலொமோன் யாரையும் பழிவாங்கவில்லை. நீதியை நிலைநிறுத்தும்போது, குற்றவாளிகளுக்கு தண்டனை கொடுக்கவேண்டும். சாலொமோன்மீது யாருடைய இரத்தப்பழியும் விழவில்லை.

தனக்கு விரோதமாக கலகம்பண்ணியவர்களை சாலொமோன் ஒடுக்குகிறார். கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் இஸ்ரவேல் தேசத்தார்மீது வந்திறங்குகிறது. சாலொமோன் பார்வோனின் குமாரத்தியை விவாகம்பண்ணுகிறார் (1இராஜா 3:1).

சாலொமோன் காலத்தில் பொதுவான மார்க்க ஆராதனை (1இராஜா 3:2-4). சாலொமோன் கர்த்தரிடத்தில் ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளுமாறு ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர் தம்முடைய கிருபையினால் சாலொமோனுடைய ஜெபத்திற்குப் பதில் கொடுக்கிறார் (1இராஜா 3:5-15).

சாலொமோன் ராஜாவினிடத்தில் இரண்டு வேசிகள் தங்களுடைய வழக்குக்காக வருகிறார்கள். சாலொமோன் இவர்களுடைய வழக்கை தீர்த்த விதம் எல்லோருக்கும் ஆச்சரியமாயிருக்கிறது. சாலொமோன் ராஜாவின் ஞானம் அனைவருக்கும் தெரியவருகிறது (1இராஜா 3:16-21).

சாலொமோன் பலிபீடத்திற்கு முன்பாக கர்த்தருக்கு பலி செலுத்துகிறார். அவர் தன்னுடைய நியாயசனத்தில் அமர்ந்திருந்து வழக்குகளை விசாரிக்கிறார். சாலொமோனுக்கு பலிபீடமும், நியாயாசனமும் நியாயம் விசாரிக்கும் ஸ்தலமாக இருக்கிறது.

பார்வோனின் குமாரத்தி
1இராஜா 3:1-4

1இராஜா 3:1. சாலொமோன் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனோடே சம்பந்தங்கலந்து, பார்வோனின் குமாரத்தியை விவாகம்பண்ணி, தன்னுடைய அரமனையையும் கர்த்தருடைய ஆலயத்தையும் எருசலேமின் சுற்றுமதிலையும் கட்டித் தீருமட்டும் அவன் அவளைத் தாவீதின் நகரத்தில் கொண்டுவந்து வைத்தான்.

1இராஜா 3:2. அந்நாட்கள்மட்டும் கர்த்தருடைய நாமத்திற்கு ஒரு ஆலயம் கட்டப்படாதிருந்ததினால், ஜனங்கள் மேடைகளிலே பலியிட்டுவந்தார்கள்.

1இராஜா 3:3. சாலொமோன் கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, தன் தகப்பனாகிய தாவீதின் கட்டளைகளில் நடந்தான்; ஆனாலும் அவன் மேடைகளிலே பலியிட்டுத் தூபங்காட்டி வந்தான்.

1இராஜா 3:4. அப்படியே ராஜா பலியிட கிபியோனுக்குப் போனான்; அது பெரிய மேடையாயிருந்தது; அந்தப் பலிபீடத்தின்மேல் சாலொமோன் ஆயிரம் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தினான்.

சாலொமோனுடைய நல்ல குணாதிசயங்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது. "சாலொமோன் கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, தன் தகப்பனாகிய தாவீதின் கட்டளைகளில் நடக்கிறார்" (1இராஜா 3:3). கர்த்தரும் சாலொமோன்மீது அன்பாயிருக்கிறார்.

"பின்பு தாவீது தன் மனைவியாகிய பத்சேபாளுக்கு ஆறுதல் சொல்லி, அவளிடத்தில் போய், அவளோடே சயனித்தான்; அவள் ஒரு குமாரனைப் பெற்றாள்; அவனுக்குச் சாலொமோன் என்று பேரிட்டான்; அவனிடத்தில் கர்த்தர் அன்பாயிருந்தார்" (2சாமு 12:24).

சாலொமோன் என்னும் பெயருக்கு "கர்த்தருக்கு அன்பானவர்" என்று பொருள். சாலொமோனின் பெயருக்கு ஏற்ற பிரகாரம், கர்த்தர் அவர்மீது அன்பாகயிருக்கிறார். தன்மீது அன்பாகயிருக்கும் கர்த்தரிடத்தில், சாலொமோன் அன்புகூருகிறார்.

இயேசுவின் சீஷர்களில் யோவான் அவருக்கு மிகவும் அன்பானவர். அவரிடத்தில் அன்பு நிரம்பியிருந்தது. சாலொமோன் ஞானமுள்ளவர். ஐசுவரியமுள்ளவர். அவர் பெரியவர். சாலொமோனிடத்தில் ஏராளமான நல்ல சுபாவங்கள் இருந்தாலும், "அவர் கர்த்தரிடத்தில் அன்புகூருகிறார்" என்பதே மிகவும் பிரதானமான நல்ல சுபாவம்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் அன்புகூருவதுபோல, அவர் கர்த்தருடைய ஆராதனையிலும் அன்புகூருகிறார். கர்த்தரிடத்தில் அன்புகூருகிறவர்கள் எல்லோருமே, கர்த்தருடைய ஆராதனையை நேசிப்பார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் அவருடைய வார்த்தையைக் கேட்பதற்கும், அவரிடத்தில் பேசுவதற்கும் விரும்புவார்கள். கர்த்தரோடு ஐக்கியமாயிருப்பதே விசுவாசிகளுக்கு பேரானந்தம்.

சாலொமோன் தாவீதின் கட்டளைகளில் நடக்கிறார். தாவீது இந்தக் கட்டளைகளை சாலொமோனுக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

"நான் பூலோகத்தார் யாவரும் போகிற வழியே போகிறேன்; நீ திடன்கொண்டு புருஷனாயிரு. நீ என்ன செய்தாலும், நீ எங்கே போனாலும், எல்லாவற்றிலும் புத்திமானாயிருக்கிறதற்கும், கர்த்தர் என்னைக் குறித்து: உன் பிள்ளைகள் தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமாவோடும் எனக்கு முன்பாக உண்மையாய் நடக்கும்படிக்குத் தங்கள் வழியைக் காத்துக்கொண்டால், இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கத்தக்க புருஷன் உனக்கு இல்லாமற்போவதில்லை என்று சொன்ன தம்முடைய வார்த்தையைத் திடப்படுத்துகிறதற்கும், மோசேயின் நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி, நீ உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளையும், கற்பனைகளையும் நியாயங்களையும் சாட்சிகளையும் கைக்கொள்ள, அவர் வழிகளில் நடக்கும்படிக்கு அவருடைய காவலைக் காப்பாயாக" (1இராஜா 2:2-4).

"என் குமாரனாகிய சாலொமோனே, நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி; கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்; நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார். இப்போதும் எச்சரிக்கையாயிரு; பரிசுத்த ஸ்தலமாக ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்குக் கர்த்தர் உன்னைத் தெரிந்து கொண்டார்; நீ திடன்கொண்டு அதை நடப்பி என்று சொன்னான்" (1நாளா 28:9,10).

தாவீது கர்த்தருக்கு முன்பாக நடந்தார். சாலொமோனும் தாவீதைப்போலவே, கர்த்தருடைய கட்டளைகளில் நடக்கவேண்டும். கர்த்தரிடத்தில் உண்மையாய் அன்புகூருகிறவர்கள், கர்த்தருடைய கட்டளைகளில் நடப்பார்கள். அவர்களுடைய மனச்சாட்சிகளும் கர்த்தருடைய கட்டளைகளில் நடக்குமாறு அவர்களை வழிநடத்தும்.

சாலொமோன் கர்த்தரை கனம்பண்ணுகிறார். அவரை மகிமைப்படுத்துகிறார். கர்த்தருடைய ஆராதனை தாராளமாய் நடைபெறுகிறது. கர்த்தருக்கு பலியாக செலுத்தப்படுவது ஒருபோதும் வீணாய்ப்போவதில்லை. கர்த்தருக்கு பலிசெலுத்தியதினால் தங்களுக்கு நஷ்டமுண்டாயிற்று என்று ஒருவரும் சொல்லமாட்டார்கள்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்ததும், தன் தகப்பனாகிய தாவீதின் கட்டளைகளில் நடந்ததும் அவருடைய நல்ல சுபாவங்கள். தாவீதினிடத்தில் இப்படிப்பட்ட நல்ல சுபாவங்கள் இருந்தாலும், அவரிடத்தில் வேறு சில சுபாவங்களும் காணப்படுகிறது. சாலொமோன் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனோடே சம்பந்தங்கலந்து, பார்வோனின் குமாரத்தியை விவாகம்பண்ணினார். இது சாலொமோன் செய்த நன்மையான காரியமா அல்லது தீமையான காரியமா என்பது சந்தேகத்திற்கு இடங்கொடுக்கிறது.

பார்வோனின் குமாரத்தி யூதமார்க்கத்தை ஏற்றுக்கொண்டவள் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். அவள் யூதமார்க்கத்தமைந்தவள் அல்ல என்றால், சாலொமோன் பார்வோனின் குமாரத்தியை விவாகம்பண்ணியது கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின்படி ஏற்றுக்கொள்ள தக்கதல்ல. ஆனாலும் சாலொமோன் பார்வோனின் குமாரத்தியை விவாகம்பண்ணியது ஞானமான காரியமல்ல என்று வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள்.

சாலொமோன் தன்னுடைய சிநேகிதரின் ஆலோசனைப் பிரகாரம், பார்வோனின் குமாரத்தியை விவாகம்பண்ணினார் என்றும் ஒரு கருத்துள்ளது. எகிப்து தேசத்தில் ஏராளமான தெய்வங்கள் இருந்தன. பார்வோனின் குமாரத்தியோ அந்தத் தெய்வங்களை ஆராதிக்காமல், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை மாத்திரமே ஆராதித்தாள்.

ஆனாலும் பிற்காலத்தில் சாலொமோன் அந்நிய ஸ்திரீகளைப் பின்பற்றி, அவர்களுடைய அந்நிய தெய்வங்களுக்கு தூபங்காட்டினார்.

"சாலொமோன் சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும், அம்மோனியரின் அருவருப்பாகிய மில்கோமையும் பின்பற்றினான். சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதைப்போல கர்த்தரைப் பூரணமாய்ப் பின்பற்றாமல், கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்" (1இராஜா 11:5,6).

சாலொமோனின் ஆரம்பகால ராஜ்யபாரத்தில் கர்த்தருடைய நாமத்திற்கு ஒரு ஆலயம் கட்டப்படவில்லை. ஆகையினால் ஜனங்கள் மேடைகளில் பலியிட்டு தூபங்காட்டி வந்தார்கள். சாலொமோனும் மேடைகளிலே பலியிட்டு தூபங்காட்டி வருகிறார்.

அப்படியே சாலொமோன் ராஜா பலியிட கிபியோனுக்குப் போகிறார்; அது பெரிய மேடையாயிருக்கிறது; அந்தப் பலிபீடத்தின்மேல் சாலொமோன் ஆயிரம் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துகிறார் (1இராஜா 3:4).

ஆபிரகாரம் கர்த்தருக்கு பர்வதங்களில் பலிபீடங்களைக் கட்டினார். "பின்பு அவன் அவ்விடம்விட்டுப் பெயர்ந்து, பெத்தேலுக்குக் கிழக்கே இருக்கும் மலைக்குப் போய், பெத்தேல் தனக்கு மேற்காகவும் ஆயீ கிழக்காகவும் இருக்கக் கூடாரம்போட்டு, அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டான்" (ஆதி 12:8).

"அப்பொழுது அவர்: உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார்" (ஆதி 22:2). ஆபிரகாம் தோப்பிலே கர்த்தரைத் தொழுதுகொண்டார்.

"ஆபிரகாம் பெயர்செபாவிலே ஒரு தோப்பை உண்டாக்கி, சதாகாலமுமுள்ள தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை அவ்விடத்தில் தொழுது கொண்டான்" (ஆதி 21:33).

தன்னுடைய முற்பிதாக்களைப்போலவே சாலொமோனும் மேடைகளிலே பலியிட்டு தூபங்காட்டி வருகிறார். மோசேயின் பிரமாணத்தில், கர்த்தரை ஒரே ஸ்தலத்தில் தொழுதுகொள்ளவேண்டும் என்னும் பிரமாணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவரையிலும் இஸ்ரவேல் ஜனத்தார் மலைகளிலும், தோப்புகளிலும், மேடைகளிலும் கர்த்தருக்கு பலியிட்டு வந்தார்கள்.

"உங்கள் தேவனாகிய கர்த்தர் தம்முடைய நாமம் விளங்கும்படி, உங்கள் சகல கோத்திரங்களிலும் தெரிந்துகொள்ளும் ஸ்தானமாகிய அவருடைய வாசஸ்தலத்தையே நாடி, அங்கே போய், அங்கே உங்கள் சர்வாங்க தகனங்களையும், உங்கள் பலிகளையும், தசமபாகங்களையும், உங்கள் கை ஏறெடுத்துப் படைக்கும் படைப்புகளையும், உங்கள் பொருத்தனைகளையும், உங்கள் உற்சாகபலிகளையும், உங்கள் ஆடுமாடுகளின் தலையீற்றுகளையும் கொண்டுவந்து, அங்கே உங்கள் தேவனாகிய கர்த்தருடையசந்நிதியிலே புசித்து, நீங்கள் கையிட்டுச் செய்ததும், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களை ஆசீர்வதித்ததுமான யாவுக்காகவும் நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் சந்தோஷப்படுவீர்களாக" (உபா 12:5-7).

தாவீது ஆசரிப்புக்கூடாரத்திலே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைக் கொண்டு வந்து வைத்தார். அவர் உயர்ந்த மேடைகளில் பலியிடவில்லை. சாலொமோனோ, மற்ற எல்லா காரியங்களிலும் தன் தகப்பனாகிய தாவீதின் கட்டளைகளில் நடக்கிறார். ஆனால் கர்த்தருக்கு பலியிடும் விஷயத்தில் சாலொமோன் தாவீதின் கட்டளைகளில் நடக்கவில்லை. சாலொமோன் கர்த்தருக்கு ஏராளமான பலிகளை செலுத்தவேண்டுமென்று விரும்பினார். ஆனால் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவேண்டும் என்னும் ஆர்வம் சாலொமோனுடைய இருதயத்தில் காணப்படவில்லை. பலியைவிட கீழ்ப்படிதல் உத்தமம் என்பது சாலொமோனுக்கு தெரியவில்லை.

சாலொமோனின் ஜெபம் 1இராஜா 3:5-15

1இராஜா 3:5. கிபியோனிலே கர்த்தர் சாலொமோனுக்கு இராத்திரியில் சொப்பனத்திலே தரிசனமாகி: நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்று தேவன் சொன்னார்.

1இராஜா 3:6. அதற்குச் சாலொமோன்: என் தகப்பனாகிய தாவீது என்னும் உமது அடியான் உம்மைப்பற்றி உண்மையும் நீதியும் மன நேர்மையுமாய் உமக்கு முன்பாக நடந்தபடியே தேவரீர் அவருக்குப் பெரிய கிருபைசெய்து, அந்தப் பெரிய கிருபையை அவருக்குக் காத்து, இந்நாளில் இருக்கிறபடியே அவருடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கிற ஒரு குமாரனை அவருக்குத் தந்தீர்.

1இராஜா 3:7. இப்போதும் என் தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் உமது அடியேனை என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே ராஜாவாக்கினீரே, நானோவென்றால் போக்கு வரவு அறியாத சிறுபிள்ளையாயிருக்கிறேன்.

1இராஜா 3:8. நீர் தெரிந்துகொண்டதும் ஏரானத்தினால் எண்ணிக்கைக்கு அடங்காததும் இலக்கத்திற்கு உட்படாததுமான திரளான ஜனங்களாகிய உமது ஜனத்தின் நடுவில் அடியேன் இருக்கிறேன்.

1இராஜா 3:9. ஆகையால் உமது ஜனங்களை நியாயம்விசாரிக்கவும், நன்மைதீமை இன்னதென்று வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்; ஏராளமாயிருக்கிற இந்த உமது ஜனங்களை நியாயம் விசாரிக்க யாராலே ஆகும் என்றான்.

1இராஜா 3:10. சாலொமோன் இந்தக் காரியத்தைக் கேட்டது ஆண்டவருடைய பார்வைக்கு உகந்த விண்ணப்பமாயிருந்தது.

1இராஜா 3:11. ஆகையினால் தேவன் அவனை நோக்கி: நீ உனக்கு நீடித்த நாட்களைக் கேளாமலும், ஐசுவரியத்தைக் கேளாமலும், உன் சத்துருக்களின் பிராணனைக் கேளாமலும், நீ இந்தக் காரியத்தையே கேட்டு, நியாயம் விசாரிக்கிறதற்கு ஏற்ற ஞானத்தை உனக்கு வேண்டிக்கொண்டபடியினால்,

1இராஜா 3:12. உன் வார்த்தைகளின்படி செய்தேன்; ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன்; இதிலே உனக்குச் சரியானவன் உனக்குமுன் இருந்ததுமில்லை, உனக்குச் சரியானவன் உனக்குப்பின் எழும்புவதுமில்லை.

1இராஜா 3:13. இதுவுமின்றி, நீ கேளாத ஐசுவரியத்தையும் மகிமையையும் உனக்குத் தந்தேன்; உன் நாட்களில் இருக்கிற ராஜாக்களில் ஒருவனும் உனக்குச் சரியானவன் இருப்பதில்லை.

1இராஜா 3:14. உன் தகப்பனாகிய தாவீது நடந்தது போல், நீயும் என் கட்டளைகளையும் என் நியமங்களையும் கைக்கொண்டு, என் வழிகளில் நடப்பாயாகில், உன் நாட்களையும் நீடித்திருக்கப்பண்ணுவேன் என்றார்.

1இராஜா 3:15. சாலொமோனுக்கு நித்திரை தெளிந்தபோது, அது சொப்பனம் என்று அறிந்தான்; அவன் எருசலேமுக்கு வந்து, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக நின்று, சர்வாங்க தகனபலிகளையிட்டு, சமாதானபலிகளைச் செலுத்தி, தன் ஊழியக்காரர் எல்லாருக்கும் விருந்துசெய்தான்.

சாலொமோன் ராஜா பலியிட கிபியோனுக்குப் போகிறார்; அது பெரிய மேடையாயிருக்கிறது; அந்தப் பலிபீடத்தின்மேல் சாலொமோன் ஆயிரம் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துகிறார். சாலொமோன் கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்கிறார். அவர் கர்த்தரிடத்தில் அன்புகூருகிறார். கர்த்தரும் சாலொமோனிடத்தில் அன்புகூர்ந்து, அவருக்கு ராத்திரியில், சொப்பனத்தில் தரிசனமாகிறார்.

கர்த்தர் சாலொமோனுக்கு தரிசனம் கொடுத்த ஸ்தலம் கிபியோன். இது ஒரு பெரிய மேடையாயிருக்கிறது. இங்கே கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரமும், வெண்கல பலிபீடமும் இருக்கிறது.

"அவனும் அவனோடேகூடச் சபையார் அனைவரும், கிபியோனிலிருக்கிற மேடைக்குப் போனார்கள். தாவீது தேவனுடைய பெட்டிக்கு எருசலேமிலே கூடாரம்போட்டு ஆயத்தம்பண்ணின ஸ்தலத்திற்குக் கீரியாத்யாரீமிலிருந்து அதைக் கொண்டுவந்தான்; கர்த்தரின் தாசனாகிய மோசே வனாந்தரத்திலே பண்ணின தேவனுடைய ஆசரிப்புக்கூடாரம் அங்கே இருந்தது. ஊரின் புத்திரனாகிய ஊரியின் குமாரன் பெசலெயேல் உண்டுபண்ணின வெண்கலப் பலிபீடமும் அங்கே கர்த்தரின் வாசஸ்தலத்திற்கு முன்பாக இருந்தது; சாலொமோனும் சபையாரும் அதை நாடிப்போனார்கள்" *(2நாளா 1:3-5).*

சாலொமோன் கிபியோனிலுள்ள வெண்கல பலிபீடத்தின்மேல் ஆயிரம் சர்வாங்க தகனபலிகளை செலுத்துகிறார். கர்த்தர் அங்கே சாலொமோனை சந்திக்கிறார். நாம் எந்த ஸ்தலத்தில் கர்த்தரை ஆராதிக்கிறோமோ, அந்த ஸ்தலத்தில் கர்த்தர் நம்மோடு கூடயிருக்கிறார். நாம் ஆராதிக்கும் ஸ்தலம் தேவனுடைய பிரசன்னத்திற்கு அடையாளமாயிருக்கிறது.

கர்த்தர் சாலொமோனுக்கு ராத்திரியிலே தரிசனமாகிறார். சாலொமோன் பகல் முழுவதும் வெண்கல பலிபீடத்தின்மேல் ஆயிரம் சர்வாங்க தகனபலிகளை செலுத்தினார். பலிசெலுத்தி முடிந்தபின்பு, இரவுவேளையில் சாலொமோன் நித்திரை செய்கிறார். சாலொமோன் அமைதலாகவும் ஆறுதலாகவும் படுத்து உறங்குகிறார். நாம் கர்த்தருடைய ஊழியத்தில் பூரணமாய் ஈடுபட்டிருக்கும்போது, கர்த்தருடைய ஆறுதல் நமக்கு கிடைக்கும்.

சாலொமோன் பகல் முழுவதும் கர்த்தருக்கு ஆயிரம் சர்வாங்க தகனபலிகளை செலுத்தினார். அவர் இரவுவேளையிலே ஓய்வாக நித்திரைபண்ணுகிறார். அமைதியான சூழ்நிலையும், ஓய்வாகயிருக்கும் சூழ்நிலையும் கர்த்தரோடு ஐக்கியமாயிருப்பதற்கு அநுகூலமாயிருக்கும்.

கர்த்தர் சாலொமோனுக்கு சொப்பனத்திலே தரிசனமாகிறார். சாலொமோன் ராத்திரியிலே அயர்ந்த நித்திரையிலிருக்கிறார். அவருடைய சரீரத்தின் அவயவங்களெல்லாம் ஓய்விலிருக்கிறது. அப்போது கர்த்தருடைய பிரசன்னம் சாலொமோனுடைய மனதிற்குள் பிரவேசிக்கிறது. சாலொமோன் நித்திரையிலிருப்பதினால், அவருடைய அவயவங்களும் இயங்காமல் நித்திரையிலிருக்கிறது. கர்த்தருடைய பிரசன்னத்திற்கு தடையோ தொந்தரவோ இல்லை.

கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளிடத்திலும், தம்முடைய பரிசுத்தவான்களிடத்திலும் சொப்பனத்தின் மூலமாக பேசுகிறார்.

"அப்பொழுது அவர்: என் வார்த்தைகளைக் கேளுங்கள்; உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன்" *(எண் 12:6).*

"கனநித்திரை மனுஷர்மேல் இறங்கி, அவர்கள் படுக்கையின்மேல் அயர்ந்திருக்கையில், அவர் இராக்காலத்துத் தரிசனமான சொப்பனத்திலே மனுஷருடைய செவிக்குத் தாம் செய்யும் காரியத்தை வெளிப்படுத்தி, அதை அவர்களுக்கு வரும் தண்டனையினாலே முத்திரை போட்டு, மனுஷன் தன்னுடைய செய்கையைவிட்டு நீங்கவும், மனுஷருடைய பெருமை அடங்கவும் செய்கிறார்" (யோபு 33:15-17).

ஒரு சில சொப்பனங்கள் மாயையாயிருக்கும். கர்த்தர் நம்மோடு சொப்பனத்தில் பேசுவதற்கும், நம்முடைய மாம்சப்பிரகாரமான சொந்த சொப்பனங்களுக்கும் வித்தியாசமுண்டு. கர்த்தர் நம்மோடு பேசுவது தெய்வீக சொப்பனங்கள். நம்முடைய சொந்த சொப்பனங்களெல்லாம் மாயையான சொப்பனங்கள். தெய்வீக சொப்பனங்களுக்கும் மாயையான சொப்பனங்களுக்கும் வித்தியாசமுண்டு.

"அநேக சொப்பனங்கள் மாயையாயிருப்பதுபோல, அநேக வார்த்தைகளும் வியர்த்தமாயிருக்கும்; ஆகையால் நீ தேவனுக்குப் பயந்திரு" (பிர 5:7).

கிபியோனிலே கர்த்தர் சாலொமோனுக்கு இராத்திரியில் சொப்பனத்திலே தரிசனமாகி: "நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள்" (1இராஜா 3:5) என்று தேவன் சொல்லுகிறார்.

சாலொமோன் தன்னைச் சுற்றிலும் பிரகாசிக்கிற தேவனுடைய மகிமையைக் காண்கிறார். அப்போது "நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள்" என்னும் சத்தத்தையும் சாலொமோன் கேட்கிறார்.

சாலொமோன் ராத்திரியிலே நித்திரைபண்ணிக்கொண்டிருக்கும்போதே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். கர்த்தருடைய கிருபை சாலொமோனுக்கு உதவி செய்கிறது. சாலொமோன் நித்திரையாயிருந்தாலும், அவருடைய ஜெபம் நித்திரை பண்ணவில்லை. அது விழிப்போடிருக்கிறது. தேவனுடைய கிருபை சாலொமோனுக்குள் கிரியை செய்கிறது.

சாலொமோனுடைய மனதிலே கிருபை நிரம்பிய வாஞ்சைகள் உண்டாகிறது. சாலொமோன் தன்னுடைய இருதயத்தின் வாஞ்சைகளை கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்.

கர்த்தர் தாவீதுக்கு செய்த நன்மைகளை சாலொமோன் அங்கீகரிக்கிறார். சாலொமோன் கர்த்தரிடத்தில் "என் தகப்பனாகிய தாவீது என்னும் உமது அடியான் உம்மைப்பற்றி உண்மையும் நீதியும் மன நேர்மையுமாய் உமக்கு முன்பாக நடந்தபடியே தேவரீர் அவருக்குப் பெரிய கிருபைசெய்து, அந்தப் பெரிய கிருபையை அவருக்குக் காத்து, இந்நாளில் இருக்கிறபடியே அவருடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கிற ஒரு குமாரனை அவருக்குத் தந்தீர்" (1இராஜா 3:6) என்று தன்னுடைய ஜெபத்தில் சொல்லுகிறார்.

கர்த்தர் நம்முடைய முற்பிதாக்களுக்கு செய்த நன்மைகளை நினைத்துப் பார்ப்பது நமக்கு ஆசீர்வாதமாயிருக்கும். கர்த்தர் நம்முடைய முன்னோருக்கு கொடுத்த ஆசீர்வாதங்கள், நமக்கும் கடந்து வரும்போது, அது நமக்கு இரட்டிப்பான சந்தோஷத்தைக் கொடுக்கும். கர்த்தர் தாவீதுக்கு பெரிய கிருபைகளை கொடுத்தார். அந்தக் கிருபைகள் சாலொமோனுக்கும் கிடைத்திருக்கிறது. சாலொமோன் இதை நினைத்து கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கிறார்.

கர்த்தர் சாலொமோனுக்கு மிகப்பெரிய நிர்வாகப் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் சாலொமோனை தாவீதின் ஸ்தானத்திலே ராஜாவாக்கியிருக்கிறார். சாலொமோன் இப்போது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருக்கிறார். கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற மகாபெரிய ராஜரீகப் பொறுப்பை நல்லமுறையில் நிறைவேற்றுவதற்கு, தன்னிடத்தில் தகுதியுமில்லை, பெலனுமில்லை, ஞானமுமில்லை என்று சாலொமோன் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில், "இப்போதும் என் தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் உமது அடியேனை என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே ராஜாவாக்கினீரே, நானோவென்றால் போக்கு வரவு அறியாத சிறுபிள்ளையாயிருக்கிறேன். நீர் தெரிந்துகொண்டதும் ஏராளத்தினால் எண்ணிக்கைக்கு அடங்காததும் இலக்கத்திற்கு உட்படாததுமான திரளான ஜனங்களாகிய உமது ஜனத்தின் நடுவில் அடியேன் இருக்கிறேன்" (1இராஜா 3:7,8) என்று தன்னைப்பற்றி மிகவும் தாழ்மையாகச் சொல்லுகிறார்.

சாலொமோன் தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார். சாலொமோனுக்கு ஞானம் தேவைப்படுகிறது. ஞானமுள்ளவர்களால் மாத்திரமே சமஸ்த இஸ்ரவேலையும் நீதியாய் ராஜ்யபாரம் பண்ண முடியும். தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து ஆளுகை செய்ய, தன்னிடத்தில் ஞானமில்லை என்றும், தனக்கு ஞானம் தேவைப்படுகிறது என்றும் சாலொமோன் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். சாலொமோன் தன்னைப்பற்றி கர்த்தரிடத்தில் சொல்லும்போது, "நானோவென்றால் போக்கு வரவு அறியாத சிறுபிள்ளையாயிருக்கிறேன்" என்று சொல்லுகிறார். இஸ்ரவேலின் ராஜாசனத்தில் அன்றாட ராஜ்யபார ஆளுகையைக்கூட தன்னால் செய்ய முடியவில்லை என்று, சாலொமோன் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகிறார்.

"இப்போதும் என் தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் உமது அடியேனை என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே ராஜாவாக்கினீரே" (1இராஜா 3:7) என்று சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணிவிட்டு, "ஏராளமாயிருக்கிற இந்த உமது ஜனங்களை நியாயம் விசாரிக்க யாராலே ஆகும்" (1இராஜா 3:9) என்று கேட்கிறார்.

அப்சலோம் ஒரு மதியீனன். அவன் இஸ்ரவேல் தேசத்திற்கு நியாயாதிபதியாயிருக்க விரும்பினான். அவன் தன்னுடைய சுயபுத்தியினாலும், சுயஆலோசனையினாலும், சாதுரியமான வார்த்தைகளினாலும், தந்திரமான யோசனைகளினாலும் இஸ்ரவேலை நியாயம் விசாரிக்கலாம் என்று நினைத்தான். ஆனால் அவனுடைய முயற்சிகள் சித்திக்கவில்லை.

சாலொமோனோ புத்தியும் ஞானமுமுள்ளவர். கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கும் ராஜாசன பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவதற்கு சாலொமோன் தயங்குகிறார், நடுங்குகிறார். இந்தப் பெரிய ஊழியத்திற்கு தான் தகுதியானவரல்ல என்று சாலொமோன் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஞானத்தைக் கேட்கிறார். கர்த்தர் சாலொமோனிடத்தில், "நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள்" என்று சொன்னார். சாலொமோன் கர்த்தரிடத்தில் "உமது ஜனங்களை நியாயம்விசாரிக்கவும், நன்மைதீமை இன்னதென்று வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்" (1இராஜா 3:9) என்று கேட்கிறார்.

சாலொமோனுடைய தகப்பனாகிய தாவீதும் கர்த்தரிடத்தில் இதுபோலவே விண்ணப்பம்பண்ணினார். "நான் உமது அடியேன்; உம்முடைய சாட்சிகளை நான் அறியும்படி என்னை உணர்வுள்ளவனாக்கும்" (சங் 119:125). தாவீது தன்னை கர்த்தருடைய அடியான் என்று சொல்லுகிறார். உணர்வுள்ள இருதயம் கர்த்தர் கொடுக்கும் ஈவு. "கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்" (நீதி 2:6).

நாம் கர்த்தரிடத்தில் ஞானத்தைக் கேட்கவேண்டும். கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் ஊழியத்தை செய்வதற்கு தெய்வீக ஞானம் தேவை. நம்முடைய சுயபுத்தியினாலோ, சுயஞானத்தினாலோ நம்மால் ஒன்றையும் செய்யமுடியாது. நமக்கு கர்த்தருடைய கிருபையும், அநுக்கிரகமும், ஞானமும் தேவைப்படுகிறது. நமக்கு தேவையான ஞானத்தை நாம் கர்த்தரிடத்தில் கேட்கவேண்டும்.

"உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்" (யாக் 1:5).

கர்த்தர் சாலொமோனுடைய விண்ணப்பத்திற்கு சாதகமான பிரதியுத்தரம் கொடுக்கிறார். சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தை தந்தருளும்" என்று விண்ணப்பம்பண்ணுகிறார். சாலொமோன் இந்தக் காரியத்தைக் கேட்டது ஆண்டவருடைய பார்வைக்கு உகந்த விண்ணப்பமாயிருக்கிறது (1இராஜா 3:10).

கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்டவர்கள், கர்த்தரிடத்திலிருந்து ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள விரும்புவார்கள். சாலொமோனுடைய விண்ணப்பம் கர்த்தருடைய பார்வைக்கு உகந்த விண்ணப்பமாயிருப்பதோடு, அது ஜெயவிண்ணப்பமாகவும் இருக்கிறது. சாலொமோன் கர்த்தரிடத்தில் கேட்டுக்கொண்டதைவிட அதிகமாக பெற்றுக்கொள்கிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தை தந்தருளும்" என்று விண்ணப்பம்பண்ணினார். கர்த்தர் சாலொமோனுடைய விண்ணப்பத்தை அங்கீகரித்து, அவருக்கு ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தைத் தருகிறார்.

தேவன் சாலொமோனை நோக்கி: "நீ உனக்கு நீடித்த நாட்களைக் கேளாமலும், ஐசுவரியத்தைக் கேளாமலும், உன் சத்துருக்களின் பிராணனைக் கேளாமலும், நீ இந்தக் காரியத்தையே கேட்டு, நியாயம் விசாரிக்கிறதற்கு ஏற்ற ஞானத்தை உனக்கு வேண்டிக்கொண்டபடியினால், உன் வார்த்தைகளின்படி செய்தேன்; ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன்" (1இராஜா 3:11,12) என்றும் சொல்லுகிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் கேட்டுக்கொண்ட பிரகாரம், கர்த்தர் அவருக்கு ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தைத் தருகிறார். "இதிலே உனக்குச் சரியானவன் உனக்குமுன் இருந்ததுமில்லை, உனக்குச் சரியானவன் உனக்குப்பின் எழும்புவதுமில்லை" (1இராஜா 3:12) என்றும் கர்த்தர் சாலொமோனுக்கு சொல்லுகிறார். இதுபோன்ற ஞானத்தை கர்த்தர் இதற்கு முன்பு வேறு யாருக்கும் கொடுத்ததில்லை. கர்த்தருடைய ஆசீர்வாதம் சாலொமோனுக்கு விசேஷித்த விதமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சாலொமோன் கர்த்தரிடத்தில் தனக்கு ஐசுவரியத்தையோ, மகிமையையோ கேட்கவில்லை. கர்த்தரோ சாலொமோன் தம்மிடத்தில் கேட்காததையும் அவருக்கு கொடுக்கிறார். கர்த்தர் சாலொமோனை நோக்கி "இதுவுமின்றி, நீ கேளாத ஐசுவரியத்தையும் மகிமையையும் உனக்குத் தந்தேன்; உன் நாட்களில் இருக்கிற ராஜாக்களில் ஒருவனும் உனக்குச் சரியானவன் இருப்பதில்லை" (1இராஜா 3:13) என்று சொல்லுகிறார்.

இவையெல்லாம் கர்த்தருடைய ஈவு. முதலாவதாக நாம் தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடவேண்டும். அப்போது கர்த்தர் நமக்கு இம்மைக்குரிய ஆசீர்வாதங்களை தாராளமாகக் கொடுப்பார். "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" (மத் 6:33).

சாலொமோனுடைய ஜெபம் நமக்கு எடுத்துக்காட்டாக இங்கு எழுதப்பட்டிருக்கிறது. நாமும் கர்த்தரிடத்தில் பிரயோஜனமுள்ள காரியங்களை கேட்க கற்றுக்கொள்ளவேண்டும். தெய்வபக்தியின் வேஷத்தைத் தரித்துக்கொள்ளாமல், அதன் மெய்யான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும். நமக்கு கர்த்தருடைய கிருபையும், இரக்கமும், ஞானமும் வேண்டும். இவையே நம்முடைய ஆத்துமாவுக்கும் சரீரத்திற்கும் மெய்யான ஆசீர்வாதம்.

நம்மிடத்தில் கர்த்தருடைய ஞானமும் கிருபையும் இருக்கும்போது, நாம் உலகப்பிரகாரமான சம்பத்துக்களையும் பெற்றுக்கொள்வோம். நம்முடைய ஐசுவரியங்களை கர்த்தருடைய நாமத்தின் மகிமைக்காக பயன்படுத்துவோம். நாம் கர்த்தரிடத்திலே ஐசுவரியத்தைக் கேட்கும்போது, நம்முடைய சுயநலத்திற்காக கேட்காமல், கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக கேட்போம். கர்த்தர் கொடுக்கும் ஐசுவரியம் நமக்கு மெய்யான சந்தோஷத்தை தரும்.

கர்த்தர் சாலொமோனுக்கு ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தையும், ஐசுவரியத்தையும், மகிமையையும், நீடித்த ஆயுசையும் தருவதாக வாக்குப்பண்ணுகிறார். சாலொமோனுடைய நாட்கள் நீடித்திருக்க வேண்டுமென்றால், கர்த்தர் அவருக்கு ஒரு நிபந்தனையையும் சொல்லுகிறார்.

கர்த்தர் சாலொமோனை நோக்கி, "உன் தகப்பனாகிய தாவீது நடந்தது போல, நீயும் என் கட்டளைகளையும் என் நியமங்களையும் கைக்கொண்டு, என் வழிகளில் நடப்பாயாகில், உன் நாட்களையும் நீடித்திருக்கப்பண்ணுவேன்" (1இராஜா 3:14) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் சொல்லும் நிபந்தனைக்கு சாலொமோன் கீழ்ப்படியாவிட்டால் அவருடைய ஆயுசுகாலம் நீடித்திருக்காது. சாலொமோனிடத்தில் ஐசுவரியமும், மகிமையும், ஞானமும் இருக்கும். ஆனால் அதை அனுபவிப்பதற்கு, அவருடைய ஆயுசுகாலம் நீடித்த நாட்களாயிராது. உலகப்பிரகாரமான ஆசீர்வாதம் இருக்கும். ஆனால் அதை அனுபவிக்க முடியாமல், அவருக்கு சீக்கிரத்தில் மரணம் வந்துவிடும்.

நம்முடைய ஜீவியத்தில் நாம் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றால், அவற்றை கருத்தாய் நேசிக்கவேண்டும். ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக கர்த்தரிடத்தில் தொடர்ந்து விண்ணப்பம்பண்ணவேண்டும். சாலொமோன் கர்த்தரிடத்தில் ஞானமுள்ள இருதயத்திற்காக ஜெபம்பண்ணியதுபோல, நமக்கும் கர்த்தர் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் கொடுக்க வேண்டுமென்று விண்ணப்பம்பண்ண வேண்டும். "தேவையானது ஒன்றே". நம்முடைய ஜீவியத்தில் நாம் நல்ல பங்கைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

நாம் உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், முதலாவதாக தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடவேண்டும். உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களுக்காக ஜெபிக்காமல், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக ஜெபிக்கவேண்டும். கர்த்தர் நமக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் கொடுக்கும்போது, அதோடு சேர்ந்து உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களையும் கொடுப்பார்.

சாலொமோன் கர்த்தரிடத்திலிருந்து ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தைப் பெற்றுக்கொண்டார். அவர் கர்த்தரிடத்தில் ஞானமுள்ள இருதயத்திற்காக ஜெபம்பண்ணினார். சாலொமோன் கர்த்தரிடத்திலிருந்து ஐசுவரியத்தையும், மகிமையையும் பெற்றுக்கொண்டார். அவர் கர்த்தரிடத்தில் ஐசுவரியத்திற்காகவோ, மகிமைக்காகவோ ஜெபம்பண்ணவில்லை. நம்முடைய தேவைகளை கர்த்தர் அறிந்திருக்கிறார். கர்த்தர் நம்மைப் போஷித்து பராமரிக்கிறவர்.

சாலொமோனுக்கு நித்திரை தெளிந்தபோது, அது சொப்பனம் என்று அறிந்து கொள்கிறார்; சாலொமோன் எருசலேமுக்கு வந்து, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக நின்று, சர்வாங்க தகனபலிகளையிட்டு, சமாதானபலி களைச் செலுத்தி, தன் ஊழியக்காரர் எல்லாருக்கும் விருந்துசெய்கிறார் (1இராஜா 3:15).

கர்த்தர் தனக்கு கொடுத்த ஆசீர்வாதங்களுக்காக சாலொமோன் கர்த்தரை நன்றியோடு துதிக்கிறார். அவர் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகளையும், சமாதானபலிகளையும் செலுத்துகிறார். சாலொமோனுக்கு நித்திரை தெளிந்தபோது, அவருடைய இருதயம் முழுவதும் சந்தோஷத்தினால் நிரம்பியிருக்கிறது. கர்த்தருடைய கிருபையும், சிலாக்கியமும் சாலொமோனுக்கு தாராளமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிறது. தனக்கு இவ்வளவு தாராளமான ஆசீர்வாதங்களைக் கொடுத்த கர்த்தருக்கு, "நான் என்னத்தை செலுத்துவேன்" என்னும் எண்ணம் சாலொமோனுடைய மனதில் நிரம்பியிருக்கிறது.

சாலொமோன் கிபியோனிலே உள்ள, உயர்ந்த மேடையிலே கர்த்தருக்கு பலிகளை செலுத்தி அவரிடத்தில் விண்ணப்பம்பண்ணினார். கர்த்தரும் தமது கிருபையினால் அங்கே சாலொமோனை சந்தித்தார். கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி எருசலேமிலிருக்கிறது. சாலொமோன் கிபியோனிலிருந்து எருசலேமுக்கு திரும்பி வருகிறார். கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக நின்று சர்வாங்க தகனபலியிட்டு, சமாதான பலிகளை செலுத்துகிறார்.

சாலொமோன் எருசலேமிலே உள்ள கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக ஜெபம்பண்ணியிருக்கவேண்டும். கர்த்தருடைய பெட்டி அவருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாயிருக்கிறது. ஆனால் சாலொமோனோ கர்த்தருக்கு பலிசெலுத்த கிபியோனுக்குப் போனார். கர்த்தர் சாலொமோனை கிபியோனிலே சந்தித்தார். கர்த்தரால் சாலொமோனை எருசலேமிலும் சந்தித்திருக்க முடியும். கர்த்தர் சர்வ வியாபகர் என்பதை சாலொமோன் அறிந்துகொள்கிறார். தான் கிபியோனுக்கு போகாமல், எருசலேமிலே, கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக பலிகளை செலுத்தியிருக்கவேண்டும் என்பதையும் சாலொமோன் இப்போது உணர்ந்துகொள்கிறார். கர்த்தர் சாலொமோனுக்கு ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தைத் தந்திருக்கிறார்.

சாலொமோனைப்போலவே நாமும் சில சமயங்களில், ஆவிக்குரிய காரியங்களில் தவறு செய்து விடுகிறோம். நம்முடைய தப்பிதங்களை நாம் திருத்திக்கொள்ள வேண்டும். கர்த்தர் கொடுக்கும் நல்ல வாய்ப்புக்களை பயன்படுத்தி, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் வளர்ந்து முன்னேறவேண்டும்.

சாலொமோனுடைய இருதயம் உணர்வடைகிறது. அவர் இப்போது எருசலேமுக்கு வந்து, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக நின்று, ஏராளமான பலிகளை செலுத்துகிறார். சாலொமோன் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியிட்டு, சமாதானபலிகளை செலுத்தி, தன் ஊழியக்காரர் எல்லோருக்கும் விருந்து செய்கிறார். சாலொமோனுடைய ஊழியக்காரரும், கர்த்தர் அவருக்கு கொடுத்த சகல கிருபைகளுக்காக, கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கிறார்கள்.

சாலொமோனின் நியாயவிசாரிப்பு 1இராஜா 3:16-28

1இராஜா 3:16. அப்பொழுது வேசிகளான இரண்டு ஸ்திரீகள் ராஜாவினிடத்தில் வந்து, அவனுக்கு முன்பாக நின்றார்கள்.

1இராஜா 3:17. அவர்களில் ஒருத்தி: என் ஆண்டவனே, நானும் இந்த ஸ்திரீயும் ஒரே வீட்டிலே குடியிருக்கிறோம்; நான் இவளோடே வீட்டிலிருக்கையில் ஆண்பிள்ளை பெற்றேன்.

1இராஜா 3:18. நான் பிள்ளைபெற்ற மூன்றாம் நாளிலே, இந்த ஸ்திரீயும் ஆண்பிள்ளை பெற்றாள்; நாங்கள் ஒருமித்திருந்தோம், எங்கள் இருவரையும் தவிர, வீட்டுக்குள்ளே வேறொருவரும் இல்லை.

1இராஜா 3:19. இராத்திரி தூக்கத்திலே இந்த ஸ்திரீ தன் பிள்ளையின்மேல் புரண்டுபடுத்ததினால் அது செத்துப்போயிற்று.

1இராஜா 3:20. அப்பொழுது, உமது அடியாள் நித்திரைபண்ணுகையில், இவள் நடுஜாமத்தில் எழுந்து, என் பக்கத்திலே கிடக்கிற என் பிள்ளையை எடுத்து, தன் மார்பிலே கிடத்திக்கொண்டு, செத்த தன் பிள்ளையை எடுத்து, என் மார்பிலே கிடத்திவிட்டாள்.

1இராஜா 3:21. என் பிள்ளைக்குப் பால்கொடுக்கக் காலமே நான் எழுந்திருந்தபோது, அது செத்துக்கிடந்தது; பொழுது விடிந்தபின் நான் அதை உற்றுப்பார்க்கும்போது, அது நான் பெற்ற பிள்ளை அல்லவென்று கண்டேன் என்றாள்.

1இராஜா 3:22. அதற்கு மற்ற ஸ்திரீ: அப்படியல்ல, உயிரோடிருக்கிறது என் பிள்ளை, செத்தது உன் பிள்ளை என்றாள். இவளோ: இல்லை, செத்தது உன் பிள்ளை, உயிரோடிருக்கிறது என் பிள்ளை என்றாள்; இப்படி ராஜாவுக்கு முன்பாக வாதாடினார்கள்.

1இராஜா 3:23. அப்பொழுது ராஜா: உயிரோடிருக்கிறது என் பிள்ளை, செத்தது உன் பிள்ளை என்று இவள் சொல்லுகிறாள்; அப்படியல்ல, செத்தது உன் பிள்ளை, உயிரோடிருக்கிறது என் பிள்ளை என்று அவள் சொல்லுகிறாள் என்று சொல்லி,

1இராஜா 3:24. ஒரு பட்டயத்தைக் கொண்டுவாருங்கள் என்றான்; அவர்கள் ஒரு பட்டயத்தை ராஜாவினிடத்தில் கொண்டுவந்தார்கள்.

1இராஜா 3:25. ராஜா உயிரோடிருக்கிற பிள்ளையை இரண்டாகப் பிளந்து, பாதியை இவளுக்கும் பாதியை அவளுக்கும் கொடுங்கள் என்றான்.

1இராஜா 3:26. அப்பொழுது உயிரோடிருக்கிற பிள்ளையின் தாய், தன் பிள்ளைக்காக அவள் குடல் துடித்ததினால், ராஜாவை நோக்கி: ஐயோ, என் ஆண்டவனே, உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்லவேண்டாம்; அதை அவளுக்கே கொடுத்துவிடும் என்றாள்; மற்றவள் அது எனக்கும் வேண்டாம், உனக்கும் வேண்டாம், பிளந்து போடுங்கள் என்றாள்.

1இராஜா 3:27. அப்பொழுது ராஜா உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்லாமல், அவளுக்குக் கொடுத்துவிடுங்கள்; அவளே அதின் தாய் என்றான்.

1இராஜா 3:28. ராஜா தீர்த்த இந்த நியாயத்தை இஸ்ரவேலர் எல்லாரும் கேள்விப்பட்டு, நியாயம் விசாரிக்கிறதற்கு தேவன் அருளின ஞானம் ராஜாவுக்கு உண்டென்று கண்டு, அவனுக்குப் பயந்தார்கள்.

சாலொமோனுடைய ஞானத்தை விவரிக்கும் ஒரு சம்பவம் இங்கே எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தர் சாலொமோனை ஆசீர்வதித்திருக்கிறார். அவருக்கு ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தைக் கொடுத்திருக்கிறார். சாலொமோன் தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்திருந்து, சமஸ்த இஸ்ரவேலரையும் ராஜ்யபாரம் பண்ணுகிறார்.

சாலொமோன் இஸ்ரவேல் தேசத்தாரின் வழக்குகளை விசாரிக்கும்போது, கர்த்தர் அவருக்கு கொடுத்த ஞானம் தாராளமாக வெளிப்படுகிறது. சாலொமோனுடைய ஞானத்திற்கு எடுத்துக்காட்டாக, இந்த வசனப்பகுதியில் ஒரு சம்பவம் எழுதப்பட்டிருக்கிறது.

இரண்டு ஸ்திரீகள் சாலொமோன் ராஜாவினிடத்தில் வந்து அவருக்கு முன்பாக நிற்கிறார்கள். அவர்கள் தங்கள் வழக்குகளை சாலொமோன் ராஜாவினிடத்தில் சொல்லுகிறார்கள். இந்த ஸ்திரீகளுக்காக வழக்காட வழக்கறிஞர்கள் யாரும் வரவில்லை. இந்த ஸ்திரீகளே ராஜாவினிடத்தில் தங்களுடைய வழக்குகளை சொல்லுகிறார்கள். இவ்விரண்டு ஸ்திரீகளும் வேசிகளாயிருக்கிறார்கள்.

சாலொமோனுடைய நியாயாசனம் உச்சநீதிமன்றம் போன்றது. சாலொமோனுடைய நியாயசனத்திற்கு கீழே, ஒவ்வொரு ஊரிலும் வழக்குகளை விசாரிப்பதற்கு, சாலொமோன் நியாயாதிபதிகளை நியமித்திருக்கிறார். இந்த ஸ்திரீகளுடைய வழக்கு ஏற்கெனவே, தங்கள் ஊரிலுள்ள நியாயாதிபதிகளுக்கு முன்பாக விசாரிக்கப்பட்டிருக்கும். ஆனால் அந்த நியாயாதிபதிகளால் இந்த ஸ்திரீகளுக்கு நீதியான தீர்ப்பை சொல்ல முடியவில்லை. ஆகையினால் வேசிகளான இவ்விரண்டு ஸ்திரீகளும் ராஜாவினிடத்தில் வந்து, அவருக்கு முன்பாக நிற்கிறார்கள்.

இவ்விரண்டு வேசிகளும் ஒரே வீட்டில் வாசம்பண்ணுகிறார்கள். ஒரு ஸ்திரீ ஆண்பிள்ளையைப் பெற்றாள். அவள் பிள்ளை பெற்ற மூன்றாம் நாளிலே, மற்றொரு ஸ்திரீயும் ஆண்பிள்ளை பெற்றாள். இவ்விரண்டு ஸ்திரீகளும் தங்கள் வீட்டிலே ஒருமித்திருந்தார்கள். இவர்கள் இருவரையும் தவிர, அந்த வீட்டிற்குள்ளே வேறு ஒருவருமில்லை.

செத்துப்போன பிள்ளையை எளிதாக அடக்கம்பண்ணிவிடலாம். அடக்கச் செலவு மிகவும் குறைவாக ஆகும். உயிரோடிருக்கிற பிள்ளையை வளர்ப்பதற்கு அதிமாய் செலவாகும். ஆனாலும் இவ்விரண்டு ஸ்திரீகளும் செலவைப்பற்றி கவலைப்படவில்லை. உயிரோடிருக்கிற பிள்ளைக்கு இவ்விரண்டு ஸ்திரீகளும் சொந்தங்கொண்டாடுகிறார்கள்.

இரண்டு ஸ்திரீகளும் ஒரே வீட்டில் குடியிருக்கிறார்கள். அவர்களுடைய பக்கத்து வீட்டுக்காரர்களும், ஒருவேளை அவர்களோடுகூட வழக்கு விசாரணைக்கு வந்திருக்கலாம். இரண்டு ஸ்திரீகளும் சாலொமோன் ராஜாவுக்கு முன்னாக நிற்கும்போது, அவர்களுடைய அயலகத்தாரும் அவர்களுக்கு அருகாமையில் நின்றிருக்கலாம்.

இரண்டு பிள்ளைகளுமே ஆண்பிள்ளைகள். யூதருடைய மார்க்க வழக்கத்தின் பிரகாரம், எட்டாம் நாளிலே ஆண்பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ணுவது வழக்கம். இந்த ஸ்திரீகளின் அயலகத்தார், பிள்ளைகளின் விருத்தசேதன வைபவத்தில் கலந்திருப்பார்கள். ஆனாலும் அவர்களில் ஒருவருக்கும் அந்தப் பிள்ளையை அடையாளம் தெரியவில்லை. உயிரோடிருக்கிற பிள்ளைக்கு தாயார் யார் என்பதையும், செத்துப்போன பிள்ளைக்கு தாயார் யார் என்பதையும், அந்த ஸ்திரீகளின் அயலகத்தாரால் சொல்ல முடியவில்லை.

சாலொமோன் ஸ்திரீகளின் வழக்கை கவனமாய் விசாரிக்கிறார். அவர்கள் சொல்லுவதை பொறுமையாக செவிகொடுத்து கேட்கிறார். அப்பொழுது சாலொமோன் ராஜா: "உயிரோடிருக்கிறது என் பிள்ளை, செத்தது உன் பிள்ளை என்று இவள் சொல்லுகிறாள்; அப்படியல்ல, செத்தது உன் பிள்ளை, உயிரோடிருக்கிறது என் பிள்ளை என்று அவள் சொல்லுகிறாள்" (1இராஜா 3:23) என்று வழக்கின் சுருக்கத்தை சொல்லுகிறார். அப்பொழுது சாலொமோன் "ஒரு பட்டயத்தைக் கொண்டுவாருங்கள்" என்று சொல்லுகிறார்; அரண்மனை ஊழியக்காரர்கள் ஒரு பட்டயத்தை சாலொமோன் ராஜாவினிடத்தில் கொண்டுவருகிறார்கள் (1இராஜா 3:24).

சாலொமோன் தன்னுடைய ஊழியக்காரரைப் பார்த்து, "ராஜா உயிரோடிருக்கிற பிள்ளையை இரண்டாகப் பிளந்து, பாதியை இவளுக்கும் பாதியை அவளுக்கும் கொடுங்கள்" (1இராஜா 3:25) என்று சொல்லுகிறார். சாலொமோன் உண்மையைக் கண்டுபிடிப்பதற்காக இவ்வாறு தீர்ப்பு சொல்லுகிறார்.

இரண்டு ஸ்திரீகளும் சாலொமோன் ராஜாவினிடத்தில் தங்களுடைய வழக்குகளை சொல்லும்போதே, அவர்கள் இருவரில் உயிரோடிருக்கிற பிள்ளைக்கு தாயார் யார் என்பதை சாலொமோன் ஏற்கெனவே அறிந்திருப்பார். ஏனெனில் கர்த்தர் சாலொமோனுக்கு ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தைக் கொடுத்திருக்கிறார். அந்த ஸ்திரீகளின் முகபாவனையையும், அவர்கள் தங்கள் வழக்குகளை பேசுகிற தோரணையையும் பார்த்து, உயிரோடிருக்கிற பிள்ளைக்கு உண்மையான தாய் யார் என்பதை சாலொமோன் கண்டுபிடித்திருப்பார்.

யாரிடத்தில் பிள்ளைப் பாசம் அதிகமாயிருக்கிறது என்பதை அவர்களுடைய வார்த்தைகளினால் கண்டுபிடிக்க முடியாது. இரண்டு ஸ்திரீகளுமே உயிரோடிருக்கிற பிள்ளையின்மீது அன்பாயிருப்பதாக சொல்லுகிறார்கள். ஆனால் யாருடைய பிள்ளைப் பாசம் உண்மையானது என்பதை சாலொமோன் கண்டுபிடிக்கவேண்டும். பிள்ளைக்கு ஆபத்து வரும்போது, அந்த பிள்ளையின்மீது யார் பாசம் காண்பிக்கிறாளோ, அவளே அந்தப் பிள்ளைக்கு உண்மையான தாயாயிருப்பாள்.

சாலொமோன் ராஜா, தன் ஊழியக்காரிடத்தில், "உயிரோடிருக்கிற பிள்ளையை இரண்டாகப் பிளந்து, பாதியை இவளுக்கும் பாதியை அவளுக்கும் கொடுங்கள்" என்று சொல்லுகிறார். அப்பொழுது உயிரோடிருக்கிற பிள்ளையின் தாய், தன் பிள்ளைக்காக அவள் குடல் துடிக்கிறது. ஆகையினால் அவள் ராஜாவை நோக்கி: "ஐயோ, என் ஆண்டவனே, உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்லவேண்டாம்; அதை அவளுக்கே கொடுத்துவிடும்" என்று சொல்லுகிறாள்; மற்றவள் "அது எனக்கும் வேண்டாம், உனக்கும் வேண்டாம், பிளந்து போடுங்கள்" (1இராஜா 3:26) என்று சொல்லுகிறாள்.

உண்மையான தாய் தன் பிள்ளையின்மீது உண்மையான பாசத்தை வெளிப்படுத்துகிறாள். மற்ற ஸ்திரீக்கு அந்தப் பிள்ளையின்மீது பாசமோ, கரிசனையோ இல்லை. அந்தப் பிள்ளை செத்துப்போனாலும் பரவாயில்லை என்று நினைக்கிறாள். தனக்கு இழப்பு ஏற்பட்டதுபோல, அவளுக்கும் இழப்பு ஏற்படவேண்டும் என்று ஆசைப்படுகிறாள்.

உயிரோடிருக்கிற பிள்ளையின் உண்மையான தாய், தன்னுடைய பிள்ளையின்மீது கரிசனையாயிருக்கிறாள். தன்னுடைய பிள்ளை செத்துப்போவதை அவள் விரும்பவில்லை. அந்தப் பிள்ளை யாரிடத்திலிருந்தாலும், அது உயிரோடிருக்க வேண்டுமென்று உண்மையான தாய் நினைக்கிறாள்.

சாலொமோன் ராஜா இரண்டு ஸ்திரீகளின் வாக்குமூலத்தையும் கேட்டு தன்னுடைய தீர்ப்பை சொல்லுகிறார். அப்பொழுது சாலொமோன் ராஜா "உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்லாமல், அவளுக்குக் கொடுத்துவிடுங்கள்; அவளே அதின் தாய்" (1இராஜா 3:27) என்று சொல்லுகிறாள்.

சாலொமோன் ராஜா தீர்த்த இந்த நியாயத்தை இஸ்ரவேலர் எல்லாரும் கேள்விப்படுகிறார்கள். நியாயம் விசாரிக்கிறதற்கு தேவன் அருளின ஞானம் ராஜாவுக்கு உண்டென்று அவர்கள் காண்கிறார்கள். இந்த சம்பவத்தின் மூலமாகவும், இன்னும் அநேக சம்பவங்கள் மூலமாகவும் சாலொமோனுடைய ஞானம் வெளிப்படுகிறது. இஸ்ரவேல் ஜனங்கள் அனைவரும் சாலொமோனுக்குப் பயப்படுகிறார்கள் (1இராஜா 3:28).

கர்த்தர் சாலொமோனுக்கு, "ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்கு தந்தேன்" என்று சொன்னார். கர்த்தர் சொன்ன பிரகாரம், சாலொமோனுக்கு ஞானத்தைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற விசேஷித்த ஞானத்தை சாலொமோன் வெளிப்படுத்துகிறார். சாலொமோன் கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார்.

4 அதிகாரம்

கர்த்தர் சாலொமோனுக்கு ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தைக் கொடுத்திருக்கிறார். சாலொமோன் தன்னுடைய ஞானத்தை பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்துகிறார். இந்த அதிகாரத்தில் சாலொமோனுடைய ஐசுவரியமும், அவருடைய செழிப்பும் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.

சாலொமோனுக்கு இருந்த பிரபுக்கள் (1இராஜா 4:1-6). சாலொமோனுக்கு இருந்த மணியகாரர் (1இராஜா 4:7-19). மணியகாரரின் வேலைகள் (1இராஜா 4:27,28).

நாள் ஒன்றிற்கு சாலொமோனுக்கு செல்லும் சாப்பாட்டுச் செலவு (1இராஜா 4:22,23). சாலொமோனுடைய ஆட்சிக்காலத்தில் இஸ்ரவேல் தேசத்தின் எல்லை (1இராஜா 4:21-24). சாலொமோனுடைய நாளெல்லாம் யூதாவும் இஸ்ரவேலும் அமைதியாயும், சமாதானமாயும் ஜீவிக்கிறார்கள் (1இராஜா 4:20-25). சாலொமோனுடைய குதிரை லாயங்கள் (1இராஜா 4:26). சாலொமோனுடைய மிகுதியான ஞானமும் புத்தியும் (1இராஜா 4:29-34).

சாலொமோனின் பிரபுக்கள் 1இராஜா 4:1-6

1இராஜா 4:1. ராஜாவாகிய சாலொமோன் சமஸ்த இஸ்ரவேலின்மேலும் ராஜாவாயிருந்தான்.

1இராஜா 4:2. அவனுக்கு இருந்த பிரபுக்கள்: சாதோக்கின் குமாரனாகிய அசரியா பிரதான மந்திரியாயிருந்தான்.

1இராஜா 4:3. சீசாவின் குமாரராகிய ஏலிகோரேப்பும் அகியாவும் சம்பிரதிகளாயிருந்தார்கள்; அகிலூதின் குமாரன் யோசபாத் மந்திரியாயிருந்தான்.

1இராஜா 4:4. யோய்தாவின் குமாரன் பெனாயா படைத்தலைவனும், சாதோக்கும் அபியத்தாரும் ஆசாரியர்களுமாயிருந்தார்கள்.

1இராஜா 4:5. நாத்தானின் குமாரன் அசரியா மணியகாரரின் தலைவனாயிருந்தான்; நாத்தானின் குமாரன் சாபூத் ராஜாவின் பிரதானியும் இஷ்டனுமாயிருந்தான்.

1இராஜா 4:6. அகீஷார் அரமனை விசாரிப்புக்காரனும், அப்தாவின் குமாரன் அதோனீராம் பகுதி விசாரிப்புக்காரனுமாய் இருந்தான்.

ராஜாவாகிய சாலொமோன் சமஸ்த இஸ்ரவேலின்மேலும் ராஜாவாயிருக்கிறார். அவருடைய ராஜாசனம் ஸ்திரப்பட்டு உறுதியாயிருக்கிறது. சாலொமோனுடைய அரண்மனையிலே உயர்ந்த பதவி வகிக்கும் அதிகாரிகள் அநேகர் இருக்கிறார்கள்.

சாலொமோனுக்கு இருந்த பிரபுக்களில் சிலர், தாவீதுக்கும் பிரபுக்களாகயிருந்தவர்கள். சாதோக்கும் அபியத்தாரும் தாவீதின் காலத்தில் ஆசாரியர்களாயிருந்தவர்கள்.

"சேவா சம்பிரதியும், சாதோக்கும் அபியத்தாரும் ஆசாரியருமாயிருந்தார்கள்" (2சாமு 20:25).

யோசபாத் தாவீதின் காலத்தில் சம்பிரதியாயிருந்தவர். பெனாயா தாவீதின் காலத்தில் இராணுவத்தளபதியாயிருந்தவர். சாலொமோனுடைய பிரபுக்களில் அநேகர் ஆசாரியருடைய குமாரர்கள். அசரியா சாலொமோனுக்கு பிரதான மந்திரி. இவன் ஆசாரியனாகிய சாதோக்கின் குமாரன்.

நாத்தானின் குமாரன் அசரியா மணியகாரரின் தலைவனாயிருக்கிறான்; நாத்தானின் குமாரன் சாபூத் ராஜாவின் பிரதானியும் இஷ்டனுமாயிருக்கிறான் (1இராஜா 4:5).

சாலொமோனின் பிரபுக்கள்

1. அசரியா (Azariah) - சாதோக்கின் குமாரன் - பிரதான மந்திரி (1இராஜா 4:2)
2. ஏலிகோரேப் (Elihoreph) - சம்பிரதி (1இராஜா 4:3)
3. அகியா (Ahiah) - சம்பிரதி
4. யோசபாத் (Jehoshaphat) - மந்திரி (1நாளா 18:15)
5. பெனாயா (Benaiah) - படைத்தலைவன் (1இராஜா 4:4)
6. சாதோக் (Zadok) - ஆசாரியன் (1இராஜா 2:26-27)
7. அபியத்தார் (Abiathar) - ஆசாரியன் (1இராஜா 2:26-27)
8. அசரியா (Azariah) - மணியகாரரின் தலைவன் (1இராஜா 4:5)
9. சாபூத் (Zabud) - சாலொமோனின் பிரதானியும் இஷ்டனும்.
10. அகீஷார் (Ahishar) - அரமனை விசாரிப்புக்காரன். (1இராஜா 4:6)
11. அதோனீராம் (Adoniram) - பகுதி விசாரிப்புக்காரன் (1இராஜா 4:6)

சாலொமோனின் மணியகாரர் 1இராஜா 4:7-19

1இராஜா 4:7. ராஜாவுக்கும் அவன் அரமனைக்கும் வேண்டிய உணவுப்பொருள்களைச் சேகரிக்கிற பன்னிரண்டு மணியகாரர் சாலொமோனுக்கு இஸ்ரவேல் தேசமெங்கும் வைக்கப்பட்டிருந்தார்கள்; அவர்கள் மாதத்துக்கு ஒவ்வொருவராக வருஷ முழுவதும் பராமரித்துவந்தார்கள்.

1இராஜா 4:8. அவர்கள் நாமங்களாவன: ஊரின் குமாரன், இவன் எப்பிராயீம் மலைத்தேசத்தில் இருந்தான்.

1இராஜா 4:9. தேக்கேரின் குமாரன், இவன் மாக்காத்சிலும், சால்பீமிலும், பெத்ஷிமேசிலும், ஏலோன்பெத்தானானிலும் இருந்தான்.

1இராஜா 4:10. ஏசேதின் குமாரன், இவன் அறுபோத்தில் இருந்தான்; சோகோவும் எப்பேர் சீமையனைத்தும் இவன் விசாரிப்பில் இருந்தது.

1இராஜா 4:11. அபினதாபின் குமாரன், இவன் தோரின் நாட்டுப்புறமனைத்திற்கும் விசாரிப்புக்காரனாயிருந்தான்; சாலொமோனின் குமாரத்தியாகிய தாபாத் இவனுக்கு மனைவியாயிருந்தாள்.

1இராஜா 4:12. அகிலூதின் குமாரனாகிய பானா இவன் விசாரிப்பில், தானாகும், மெகிதோவும், சர்த்தனாவுக்குப் பக்கமாகவும் யெஸ்ரயேலுக்குக் கீழாகவும் பெத்செயான் தொடங்கி ஆபேல் மெகொல்லாமட்டும் யக்மெயாமுக்கு அப்புறத்துமட்டும் இருக்கிற பெத்செயான் அனைத்தும் இருந்தது.

1இராஜா 4:13. கேபேரின் குமாரன், இவன் கீலேயாத்திலுள்ள ராமோத்தில் இருந்தான்; கீலேயாத்திலுள்ள மனாசேயின் குமாரனாகிய யாவீரின் கிராமங்களும் மதில்களும் வெண்கலத் தாழ்ப்பாள்களுமுள்ள பாசான்தேசத்திலுடைய அறுபது பெரிய பட்டணங்களுள்ள அர்கோப் சீமையும் இவன் விசாரிப்பில் இருந்தது.

1இராஜா 4:14. இத்தோவின் குமாரன் அகினதாப், இவன் மக்னாயீமில் இருந்தான்.

1இராஜா 4:15. அகிமாஸ், இவன் நப்தலியில் இருந்தான்; இவன் சாலொமோனுக்கு இருந்த ஒரு குமாரத்தியாகிய பஸ்மாத் என்பவளை விவாகம்பண்ணினான்.

1இராஜா 4:16. ஊசாயின் குமாரன் பானா, இவன் ஆசேரிலும் ஆலோத்திலும் இருந்தான்.

1இராஜா 4:17. பருவாவின் குமாரன் யோசபாத், இவன் இசக்காரில் இருந்தான்.

1இராஜா 4:18. ஏலாவின் குமாரன் சீமேயி இவன் பென்யமீனில் இருந்தான்.

1இராஜா 4:19. ஊரியின் குமாரன் கேபேர், இவன் எமோரியரின் ராஜாவாகிய சீகோனுக்கும் பாசானின் ராஜாவாகிய ஓகுக்கும் இருந்த தேசமாகிய கீலேயாத்தேசத்தில் இருந்தான்; இவன்மாத்திரம் அத்தேசத்தில் அதிபதியாய் இருந்தான்.

சாலொமோன் ராஜாவுக்கும் அவருடைய அரமனைக்கும் வேண்டிய உணவுப்பொருள்களைச் சேகரிக்கிற பன்னிரண்டு மணியகாரர் சாலொமோனுக்கு இஸ்ரவேல் தேசமெங்கும் வைக்கப்பட்டிருக்கிறார்கள்; அவர்கள் மாதத்துக்கு ஒவ்வொருவராக வருஷ முழுவதும் பராமரித்துவருகிறார்கள்.

சாலொமோனுடைய அரண்மனைக்கு வேண்டிய உணவு பொருட்கள், அதன் களஞ்சியத்தில் சேமித்து வைக்கப் பட்டிருக்கும். களஞ்சியம் குறைவில்லாமல் நிறைவாக இருக்கவேண்டும். களஞ்சியத்தை உணவுப்பொருட்களினால் நிரப்புவது மணியகாரருடைய வேலை.

மணியகாரர் அரண்மனையின் உணவு பொருள் சம்பந்தமான வேலைகளை குறைவில்லாமல் பார்த்துக்கொள்வதினால், சாலொமோன் ராஜாவும், அவருடைய பிரபுக்களும் சமஸ்த இஸ்ரவேலையும் ராஜரீகம்பண்ணுகிற வேலையில் முழுக்கவனம் செலுத்துகிறார்கள்.

சாலொமோனுடைய மணியகாரர் இஸ்ரவேல் தேசம் எங்கும் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் தேசத்தின் எல்லா பாகங்களிலும் விளைகிற தானியங்களை சந்தைப்படுத்த முடிகிறது. ராஜாவின் கஜானாவிலிருந்து தானியத்திற்கு பணம் கிரயமாக செலுத்தப்படுகிறது. இஸ்ரவேல் தேசத்தின் எல்லா பாகங்களிலும் இருக்கிற ஜனங்களுக்கு அரண்மனை கஜானாவிலிருந்து பணம் கிடைக்கிறது. அவர்களுடைய விளைபொருட்கள் விற்பனையாகிறது.

சாலொமோன் சமஸ்த இஸ்ரவேலிலும் எல்லா தொழில்களையும் ஆதரிக்கிறார். இதனால் தேசத்தின் பொருளாதாரம் வளர்ச்சி பெறுகிறது. இஸ்ரவேல் கோத்திரத்தாரில் சிலர் எருசலேமைவிட்டு தூரமான தேசங்களில் வாசம்பண்ணுகிறார்கள். இவர்களுக்கும் ராஜாவின் அரண்மனையிலிருந்து பணம் போய்ச் சேருகிறது. அவர்களிடமிருந்தும் உணவு தானியங்கள் ராஜாவின் பண்டகசாலைக்கு வருகிறது.

சாலொமோன் ராஜா எல்லா அதிகாரங்களையும் ஒரே இடத்தில் குவித்து வைக்கவில்லை. அதிகாரங்களை மணியகாரரிடத்தில் பிரித்துக்கொடுக்கிறார். இதனால் சாலொமோனின் மணியகாரர் எல்லோரும் சோர்வில்லாமல் வேலை செய்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு கொடுக்கப்படும் உத்தியோகத்தை நேர்த்தியாய்ச் செய்து முடிக்கிறார்கள்.

சாலொமோனின் மணியகாரர்

1. ஊரின் குமாரன் (1இராஜா 4:7-8)
2. தேக்கேரின் குமாரன் (1இராஜா 4:9)
3. ஏசேதின் குமாரன் (1இராஜா 4:10)
4. அபினதாபின் குமாரன் (1இராஜா 4:11)
5. பானா (Baana) - அகிலூதின் குமாரன் (1இராஜா 4:12)
6. கேபேரின் குமாரன் (1இராஜா 4:13)
7. அகினதாப் (Ahinadab) - இத்தோவின் குமாரன் (1இராஜா 4:14)
8. அகிமாஸ் (Ahimaaz) (1இராஜா 4:15)
9. பானா (Baanah) - ஊசாயின் குமாரன் (1இராஜா 4:16)

10. யோசபாத் (Jehoshaphat) - பருவாவின் குமாரன் (1இராஜா 4:17)

11. சீமேயி (Shimei) - ஏலாவின் குமாரன் (1இராஜா 4:18)

12. கேபேர் (Geber) - ஊரியின் குமாரன் (1இராஜா 4:19)

யூதாவும் இஸ்ரவேலும் 1இராஜா 4:20-28

1இராஜா 4:20. யூதாவும் இஸ்ரவேலும் கடற்கரை மணலத்தனை ஏராளமாயிருந்து, புசித்துக் குடித்து மகிழ்ந்துகொண்டிருந்தார்கள்.

1இராஜா 4:21. நதிதொடங்கி, பெலிஸ்தர் தேசவழியாய் எகிப்தின் எல்லைமட்டும் இருக்கிற சகல ராஜ்யங்களையும் சாலொமோன் ஆண்டுகொண்டிருந்தான்; அவர்கள் சாலொமோனுக்குக் காணிக்கைகளைக் கொண்டுவந்து, அவன் உயிரோடிருந்த நாளெல்லாம் அவனைச் சேவித்தார்கள்.

1இராஜா 4:22. நாள் ஒன்றிற்குச் சாலொமோனுக்குச் செல்லும் சாப்பாட்டுச் செலவு முப்பது மரக்கால் மெல்லிய மாவும், அறுபது மரக்கால் மாவும்,

1இராஜா 4:23. கலைமான்களையும் வெளிமான்களையும் வரையாடுகளையும் கொழுமையான பறவைகளையும் தவிர, கொழுக்கப்பட்ட பத்து மாடுகளும், மேய்ச்சலிலிருந்து வந்த இருபது மாடுகளும் நூறு ஆடுகளுமாம்.

1இராஜா 4:24. நதிக்கு இப்புறத்தில் இருக்கிற திப்சாமுதற்கொண்டு ஆசா மட்டுமுள்ளவையெல்லாவற்றையும், நதிக்கு இப்புறத்திலுள்ள சகல ராஜாக்களையும் ஆண்டுவந்தான்; அவனைச் சுற்றி எங்கும் சமாதானமாயிருந்தது.

1இராஜா 4:25. சாலொமோனுடைய நாளெல்லாம் தாண் துவக்கிப் பெயெர்செபாமட்டும், யூதாவும் இஸ்ரவேலும் அவரவர் தங்கள் தங்கள் திராட்சச்செடியின் நிழலிலும், தங்கள் தங்கள் அத்திமரத்தின் நிழலிலும் சுகமாய்க் குடியிருந்தார்கள்.

1இராஜா 4:26. சாலொமோனுக்கு நாலாயிரம் இரதக் குதிரைலாயங்களும், பன்னீராயிரம் குதிரைவீரரும் இருந்தார்கள்.

1இராஜா 4:27. மேற்சொல்லிய மணியகாரரில் ஒவ்வொருவரும் தன்தன் மாதத்திலே சாலொமோன் ராஜாவுக்கும், ராஜாவின் பந்திக்கு வரும் யாவருக்கும் வேண்டியவைகளை ஒரு குறைவுமின்றி பராமரித்து,

1இராஜா 4:28. குதிரைகளுக்கும் ஒட்டகங்களுக்கும் வேண்டிய வாற்கோதுமையையும், வைக்கோலையும், அவரவர் தங்களுக்கு இடப்பட்ட கட்டளையின்படி அவைகள் இருக்கும் ஸ்தலத்திற்குக் கொண்டுவருவார்கள்.

சாலொமோனுடைய ராஜாங்கம் மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. சாலொமோனைப்போல, அக்காலத்தில் வேறு யாரும், இவ்வளவு சிறப்பாக ராஜரீகம் பண்ணவில்லை. சாலொமோனுடைய ராஜ்யத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

சாலொமோனின் ராஜ்யம் எவ்வாறு செழிப்பாயிருக்கும் என்று ஏற்கெனவே தீர்க்கதரிசனமாக முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. 72-ஆவது சங்கீதம் சாலொமோனுக்காக எழுதப்பட்ட சங்கீதமாகும். இந்த சங்கீதம் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும் குறிக்கிறது.

சாலொமோனுடைய ஆட்சிக்காலத்திலே யூதாவும் இஸ்ரவேலும் கடற்கரை மணலத்தனை ஏராளமாயிருந்து, புசித்துக் குடித்து மகிழ்ந்துகொண்டிருக்கிறார்கள். நதிதொடங்கி, பெலிஸ்தர் தேசவழியாய் எகிப்தின் எல்லைமட்டும் இருக்கிற சகல ராஜ்யங்களையும் சாலொமோன் ஆண்டுகொண்டிருக்கிறார்; அவர்கள் சாலொமோனுக்குக் காணிக்கைகளைக் கொண்டுவந்து, அவர் உயிரோடிருந்த நாளெல்லாம் அவரைச் சேவிக்கிறார்கள் (1இராஜா 4:20,21).

சாலொமோனுடைய ஆட்சிக்காலத்தில், சமஸ்த இஸ்ரவேலின் எல்லை விஸ்தாரமாய்ப் பரவியிருக்கிறது. அந்நிய தேசத்து ராஜாக்கள் சாலொமோனுக்கு காணிக்கைகளைக் கொண்டு வருகிறார்கள். சாலொமோனுடைய ராஜ்யம் ஒரு சமுத்திரம் தொடங்கி, மறுசமுத்திரம் வரைக்கும் இருக்கும் என்று தீர்க்கதரிசனமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

"ஒரு சமுத்திரந்தொடங்கி மறுசமுத்திரம்வரைக்கும், நதிதொடங்கி பூமியின் எல்லைகள்வரைக்கும் அவர் அரசாளுவார். வனாந்தரத்தார் அவருக்கு முன்பாகக் குனிந்து வணங்குவார்கள்; அவருடைய சத்துருக்கள் மண்ணை நக்குவார்கள். தர்ஷீசின் ராஜாக்களும் தீவுகளின் ராஜாக்களும் காணிக்கைகளைக் கொண்டுவருவார்கள்; ஷேபாவிலும் சேபாவிலுமுள்ள ராஜாக்கள் வெகுமானங்களைக் கொண்டுவருவார்கள். சகல ராஜாக்களும் அவரைப் பணிந்துகொள்வார்கள்; சகல ஜாதிகளும் அவரைச் சேவிப்பார்கள்" (சங் 72:8-11).

சாலொமோன் சமஸ்த இஸ்ரவேலையும் ஆளுகை செய்வதோடு, இஸ்ரவேல் தேசத்திற்கு அருகாமையிலிருக்கிற அந்நிய தேசங்களையும் ஆளுகை செய்கிறார். அந்த தேசங்களிலே ராஜாக்கள் இருந்தாலும், அவர்கள் சாலொமோனுக்கு காணிக்கைகளைக் கொண்டுவந்து, அவருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, அவரை சேவிக்கிறார்கள்.

எகிப்து தேசத்தின் பிரபுக்கள் எல்லோரும் சாலொமோனை சேவிக்கிறார்கள். அவர்கள் சாலொமோனுக்கு காணிக்கைகளைக் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். சாலொமோன் நதிக்கு இப்புறத்தில் இருக்கிற திப்சாமுதற்கொண்டு ஆசாமட்டு முள்ளவையெல்லாவற்றையும், நதிக்கு இப்புறத்திலுள்ள சகல ராஜாக்களையும் ஆண்டுவருகிறார்; சாலொமோனைச் சுற்றி எங்கும் சமாதானமாயிருக்கிறது (1இராஜா 4:24).

சாலொமோனுடைய ராஜாசனத்தின் கீழிருக்கிறவர்கள் சமாதானமாயும் சந்தோஷமாயும் இருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணிக்கை திரளாயிருக்கிறது. யூதாவும் இஸ்ரவேலும் கடற்கரை மணலத்தனை ஏராளமாயிருக்கிறார்கள். அவர்களுக்கு போஜனகுறைவு இல்லை. சகலமும் தாராளமாய்க் கிடைக்கிறது. யூதாவும் இஸ்ரவேலும் புசித்து குடித்து மகிழ்ந்துகொண்டிருக்கிறார்கள். கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். யூதாவும் இஸ்ரவேலும் கடற்கரை மணலத்தனை ஏராளமாயிருந்தாலும், அவர்களுக்கு தேவையான தானியங்களும், போஜனங்களும் கானான் தேசத்தில் குறைவில்லாமல் தாராளமாய்க் கிடைக்கிறது.

இஸ்ரவேல் தேசத்தார் அந்நிய தேசத்தாருடைய தொந்தரவில்லாமல் சமாதானமாயும் பாதுகாப்பாயும் ஜீவிக்கிறார்கள். சாலொமோனுடைய நாளெல்லாம் தாண் துவக்கிப் பெயெர்செபாமட்டும், யூதாவும் இஸ்ரவேலும் அவரவர் தங்கள் தங்கள் திராட்சச்செடியின் நிழலிலும், தங்கள் தங்கள் அத்திமரத்தின் நிழலிலும் சுகமாய்க் குடியிருக்கிறார்கள் (1இராஜா 4:25).

சாலொமோன் எந்த தேசத்திற்கு விரோதமாகவும் யுத்தம்பண்ணப் போகவில்லை. அவர் பிறருடைய சொத்துக்களை அபகரிக்கவுமில்லை. ஆனாலும் அந்நிய தேசத்தார் தங்களுடைய சொத்துக்களை, சாலொமோனுக்கு காணிக்கையாய்க் கொடுக்கிறார்கள். சாலொமோன் அந்நிய தேசத்தாரின் சொத்துக்களையும் பாதுகாக்கிறார். சாலொமோனின் ராஜ்யபாரத்தில் இஸ்ரவேல் தேசத்திற்கும், அவர்களுக்கு அருகாமையிலிருக்கிற அண்டை தேசத்தாருக்கும் பாதுகாப்பு கிடைக்கிறது. ஆகையினால் அண்டை தேசங்களின் பிரபுக்கள், சாலொமோனுக்கு காணிக்கைகளைக் கொண்டு வந்து, அவர் உயிரோடிருக்கிற நாளெல்லாம் அவரை சேவிக்கிறார்கள்.

சாலொமோனுடைய ஆட்சிக்காலத்தில் சமஸ்த இஸ்ரவேல் தேசத்தில் இருக்கிற எல்லா ஜனங்களும் சந்தோஷமாயிருக்கிறார்கள். அவர்கள் புசித்து குடித்து மகிழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்தில் எங்கு பார்த்தாலும் தாராளமும், சமாதானமும், திருப்தியும் உண்டாயிருக்கிறது.

விசுவாசிகளாகிய நமக்கு இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்தில் ஆவிக்குரிய சந்தோஷமும், சமாதானமும், பரிசுத்தமான பாதுகாப்பும் உண்டாயிருக்கும். சாலொமோனுடைய ராஜ்யம், கர்த்தருடைய ராஜ்யத்திற்கு அடையாளமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. சாலொமோனுடைய ராஜ்யத்தில் ஜனங்கள் புசித்து குடித்து மகிழ்ந்துகொண்டிருந்தார்கள். கர்த்தருடைய ராஜ்யத்தில் புசிப்பதினாலும் குடிப்பதினாலும் சந்தோஷம் இருக்காது. அதற்கு பதிலாக நீதியின் சந்தோஷமும், சமாதானத்தின் சந்தோஷமும், பரிசுத்த ஆவியானவரின் சந்தோஷமும் கர்த்தருடைய ராஜ்யத்தில் விசுவாசிகளுக்கு தாராளமாய்க் கிடைக்கும்.

சாலொமோனுக்கு நாள் ஒன்றிற்கு செல்லும் சாப்பாட்டு செலவைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது. "நாள் ஒன்றிற்குச் சாலொமோனுக்குச் செல்லும் சாப்பாட்டுச் செலவு முப்பது மரக்கால் மெல்லிய மாவும், அறுபது மரக்கால் மாவும், கலைமான்களையும் வெளிமான்களையும் வரையாடுகளையும் கொழுமையான பறவைகளையும் தவிர, கொழுக்கப்பட்ட பத்து மாடுகளும், மேய்ச்சலிலிருந்து வந்த இருபது மாடுகளும் நூறு ஆடுகளுமாம்" *(1இராஜா 4:22,23)*.

சாலொமோனுடைய பந்தியில் எப்போதுமே விருந்து நடைபெறுகிறது. சாலொமோனுடைய அரண்மனை விருந்திற்கு ஒப்பாக எந்த விருந்தையும் சொல்ல முடியாது. அகாஸ்வேரு ராஜா, தன்னுடைய ராஜ்யபாரத்தில், ஒரே ஒரு நாள் மாத்திரமே, மிகப்பெரிய விருந்து செய்தான்.

"அவன் தன் ராஜ்யபாரத்தின் மூன்றாம் வருஷத்திலே தன்னுடைய பிரபுக்களுக்கும் ஊழியக்காரருக்கும் விருந்து பண்ணினான். அப்பொழுது பெர்சியா மேதியா தேசங்களிலுள்ள மகத்தானவர்களும், நாடுகளின் அதிபதிகளும், பிரபுக்களும், அவன் சமுகத்தில் வந்திருந்தார்கள். அவன் தன் ராஜ்யத்தின் மகிமையான ஐசுவரியத்தையும், தன் மகத்துவத்தின் சிறந்த பிரதாபத்தையும் அநேக நாளாகிய நூற்றெண்பது நாளளவும் விளங்கச்செய்து கொண்டிருந்தான்" *(எஸ் 1:3,4)*.

சாலொமோனுடைய அரண்மனையில் நடைபெறுகிற விருந்து அனுதினமும் நடைபெறுகிறது. அகாஸ்வேருவின் விருந்து எப்போதாவது நடைபெறும். சாலொமோனுடைய விருந்தோ நித்திய விருந்து. சாலொமோனுடைய ஞானத்தைப்பற்றி விசாரிக்க ஏராளமான ஞானிகள் வருவார்கள். சாலொமோன் அவர்களுக்கு நேர்த்தியான போஜனத்தைக் கொடுத்து விருந்து செய்கிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், தம்முடைய உபதேசத்தைக் கேட்ட திரளான ஜனங்களுக்கு போஜனம் கொடுத்தார். விசுவாசிகளாகிய நாம், கர்த்தருடைய பந்தியில், நிரந்தரமாக பங்குபெறுவோம். சாலொமோன் அழிந்துபோகிற போஜனங்களினால் விருந்து பண்ணினார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ, நித்திய ஜீவனுக்கு ஏதுவாயிருக்கிற ஆவிக்குரிய போஜனங்களினால் நம்மைப் போஷிக்கிறார்.

சாலொமோன் ராஜாவுக்கு ஏராளமான குதிரைகளும் ஒட்டகங்களும் இருக்கிறது. சாலொமோனின் மணியகாரர், அரண்மனைக்கு தேவையான குதிரைகளையும், ஒட்டகங்களையும், அவற்றிற்கு தேவையான தீனிகளையும் கொண்டு வருவார்கள்.

சாலொமோனுக்கு நாலாயிரம் இரதக் குதிரைலாயங்களும், பன்னீராயிரம் குதிரைவீரரும் இருக்கிறார்கள். மேற்சொல்லிய மணியகாரரில் ஒவ்வொருவரும் தன்தன் மாதத்திலே சாலொமோன் ராஜாவுக்கும், ராஜாவின் பந்திக்கு வரும் யாவருக்கும் வேண்டியவைகளை ஒரு குறைவுமின்றி பராமரித்து, குதிரைகளுக்கும் ஒட்டகங்களுக்கும் வேண்டிய வாற்கோதுமையையும், வைக்கோலையும், அவரவர் தங்களுக்கு இடப்பட்ட கட்டளையின்படி அவைகள் இருக்கும் ஸ்தலத்திற்குக் கொண்டுவருவார்கள் (1இராஜா 4:26-28).

சாலொமோனின் ஞானம் 1இராஜா 4:29-34

1இராஜா 4:29. தேவன் சாலொமோனுக்கு மிகுதியான ஞானத்தையும் புத்தியையும், கடற்கரை மணலத்தனையான மனோவிருத்தியையும் கொடுத்தார்.

1இராஜா 4:30. சகல கிழக்கத்திப் புத்திரரின் ஞானத்தையும் எகிப்தியரின் சகல ஞானத்தையும் பார்க்கிலும் சாலொமோனின் ஞானம் சிறந்ததாயிருந்தது.

1இராஜா 4:31. அவன் எஸ்ராகியனாகிய ஏத்தானிலும், ஏமான், கல்கோல், தர்தா என்னும் மாகோலின் குமாரரிலும், மற்ற எல்லா மனுஷரிலும் ஞானவானாயிருந்தான்; சுற்றிலும் இருந்த சகல ஜாதிகளிலும் அவன் கீர்த்தி பிரபலமாயிருந்தது.

1இராஜா 4:32. அவன் மூவாயிரம் நீதிமொழிகளைச் சொன்னான்; அவனுடைய பாட்டுகள் ஆயிரத்து ஐந்து.

1இராஜா 4:33. லீபனோனில் இருக்கிற கேதுருமரங்கள் முதற்கொண்டு சுவரில் முளைக்கிற ஈசோப்புப் பூண்டுவரைக்குமுள்ள மரமுதலிய தாபரங்களைக்குறித்தும், மிருகங்கள் பறவைகள் ஊரும்பிராணிகள் மச்சங்கள் ஆகிய இவைகளைக்குறித்தும் வாக்கியங்களைச் சொன்னான்.

1இராஜா 4:34. சாலொமோனின் ஞானத்தைக் குறித்துக் கேள்விப்பட்ட பூமியின் சகல ராஜாக்களிடத்திலுமிருந்து நானாஜாதியான ஜனங்களும் அவனுடைய ஞானத்தைக் கேட்கிறதற்கு வந்தார்கள்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் "உமது அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தை தந்தருளும்" (1இராஜா 3:9) என்று ஜெபம்பண்ணினார். தேவன் சாலொமோனுக்கு மிகுதியான ஞானத்தையும் புத்தியையும், கடற்கரை மணலத்தனையான மனோவிருத்தியையும் கொடுத்திருக்கிறார். சகல கிழக்கத்திப் புத்திரரின் ஞானத்தையும் எகிப்தியரின் சகல ஞானத்தையும் பார்க்கிலும் சாலொமோனின் ஞானம் சிறந்ததாயிருக்கிறது (1இராஜா 3:29,30).

சாலொமோனுடைய ஞானம், அவருடைய சுயஞானமோ அல்லது சுயபுத்தியோ அல்ல. இது கர்த்தர் சாலொமோனுக்கு கொடுத்த ஞானம். கர்த்தர் சாலொமோனுக்கு மிகுதியான ஞானத்தையும், புத்தியையும் கொடுத்திருக்கிறார். சாலொமோனுடைய இருதயமும் விசாலமாயிருக்கிறது. இருதயம் விசாலமாயிருந்தால்தான், ஞானமும் புத்தியும் அதிகமாயிருக்கும். சாலொமோன் எல்லோரிடத்திலும் சரளமாகப் பேசுகிறார். அவருடைய பேச்சில், ஞானமும் புத்தியும் தாராளமாய் வெளிப்படுகிறது. சாலொமோனுடைய வார்த்தைகளைக் கேட்பதற்கு திரளான ஜனங்கள் கூடிவருகிறார்கள்.

கர்த்தர் சாலொமோனுக்கு அநேக தாலந்துகளைக் கொடுத்திருக்கிறார். சாலொமோன் அந்த தாலந்துகளையெல்லாம் கர்த்தருடைய நாமமகிமைக்காக பயன்படுத்துகிறார். சாலொமோன் எஸ்ராகியனாகிய ஏத்தானிலும், ஏமான், கல்கோல், தர்தா என்னும் மாகோலின் குமாரரிலும், மற்ற எல்லா மனுஷரிலும் ஞானவானாயிருக்கிறார்; சுற்றிலும் இருந்த சகல ஜாதிகளிலும் சாலொமோனுடைய கீர்த்தி பிரபல்யமாயிருக்கிறது (1இராஜா 3:31).

சாலொமோனுடைய ஞானத்தோடு மற்ற யாருடைய ஞானத்தையும் ஒப்பிட முடியவில்லை. சகல கிழக்கத்திப் புத்திரரின் ஞானத்தையும் எகிப்தியரின் சகல ஞானத்தையும் பார்க்கிலும் சாலொமோனின் ஞானம் சிறந்ததாயிருக்கிறது. "கிழக்கத்திப் புத்திரர்" என்னும் வாக்கியம் கல்தேயரைக் குறிக்கிறது. கிரேக்கர்கள் எகிப்தியரின் ஞானத்தையும், கல்தேயரின் ஞானத்தையும் கற்றுக்கொண்டார்கள். சாலொமோனுடைய ஞானமோ அவர்கள் எல்லோருடைய ஞானத்தைவிட சிறந்ததாயிருக்கிறது. சாலொமோனுடைய ஆலோசனைக்கு எல்லோரும் அதிகமாய் மதிப்பு கொடுக்கிறார்கள்.

இஸ்ரவேல் தேசத்தை சுற்றிலுமிருந்த சகல ஜாதிகளிலும், சாலொமோனுடைய கீர்த்தி பிரபல்யமாயிருக்கிறது. சாலொமோன் தன்னிடத்திலுள்ள தாலந்துகளை மூடி மறைக்கவில்லை. யாருக்கும் பிரயோஜனமில்லாமல் அதை மண்ணிலே புதைத்து வைக்கவில்லை. சாலொமோன் தன்னுடைய ஞானத்தை எல்லோருக்கும் பிரயோஜனம் உண்டாகும் வண்ணமாக பயன்படுத்துகிறார்.

சாலொமோன் மூவாயிரம் நீதிமொழிகளைச் சொல்லியிருக்கிறார்; அவருடைய பாட்டுகள் ஆயிரத்து ஐந்து. சாலொமோன் லீபனோனில் இருக்கிற கேதுருமரங்கள் முதற்கொண்டு சுவரில் முளைக்கிற ஈசோப்புப் பூண்டுவரைக்குமுள்ள மரமுதலிய தாபரங்களைக்குறித்தும், மிருகங்கள் பறவைகள் ஊரும்பிராணிகள் மச்சங்கள் ஆகிய இவைகளைக்குறித்தும் வாக்கியங்களைச் சொல்லியிருக்கிறார் (1இராஜா 4:32,33).

சாலொமோன் சொன்ன நீதிமொழிகள் நம்முடைய அன்றாட ஜீவியத்திற்கு பிரயோஜனமுள்ளவை. நீதிமொழிகள் புஸ்தகத்தில் கோர்க்கப்பட்டுள்ள வாக்கியங்கள், சாலொமோன் சொன்ன மூவாயிரம் நீதிமொழிகளிலிருந்து எடுக்கப்பட்டதா என்பது தெரியவில்லை.

சாலொமோனுடைய பாட்டுக்கள் ஆயிரத்து ஐந்தாகயிருந்தாலும், "உன்னதப்பாட்டு" மாத்திரமே நமக்கு கிடைத்திருக்கிறது. சாலொமோனுடைய மற்ற பாட்டுக்களைப்பற்றி நமக்கு அதிகமாய்த் தெரியவில்லை. சாலொமோன் இயற்கையை நேசிக்கிறார். எல்லா தாவரங்களுக்கும், மிருகங்களுக்கும், பறவைகளுக்கும், மச்சங்களுக்கும், ஊரும் பிராணிகளுக்கும் பெயர்களைச் சொல்லுகிறார்.

சாலொமோனின் ஞானத்தைக் குறித்துக் கேள்விப்பட்ட பூமியின் சகல ராஜாக்களிடத்திலுமிருந்து நானாஜாதியான ஜனங்களும் அவருடைய ஞானத்தைக் கேட்கிறதற்கு வருகிறார்கள் (1இராஜா 4:34).

5 அதிகாரம்

சாலொமோன் கர்த்தருக்கு ஆலயம் கட்டுகிறார். ஆலயம் கட்டுவதற்கு தேவையான ஆயத்த வேலைகளை சாலொமோன் மேற்கொள்கிறார். அவர் கர்த்தருடைய ஆலயத்தையும், மேலும் சில கட்டிடங்களையும் கட்டுவதற்கு ஆயத்தம்பண்ணுகிறார். சாலொமோனின் தகப்பனாராகிய தாவீது, ஆலயம் கட்டுவதற்கு தேவையான பொன்னையும் வெள்ளியையும் தாராளமாய் சேகரித்து வைத்திருக்கிறார்.

ஆலயம் கட்டுவதற்கு கேதுரு மரங்களும், தேவதாரி மரங்களும் தேவைப்படுகிறது. மேலும் ஆலயத்திற்கு அஸ்திபாரம்போட வெட்டின கற்களும், விலையேறப்பெற்றதுமான கற்களும் தேவைப்படுகிறது. சாலொமோன் தீருவின் ராஜாவாகிய ஈராமோடு உடன்படிக்கை பண்ணி, இந்த மரங்களையும் கற்களையும் பெற்றுக்கொள்கிறார்.

சாலொமோன் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவானதை தீருவின் ராஜாவாகிய ஈராம் கேள்விப்பட்டு, அவருக்கு வாழ்த்து செய்தியை சொல்லுகிறார் (1இராஜா 5:1). சாலொமோன் ஈராமிடம் ஆலயக்கட்டுமான வேலைகளைப்பற்றியும் அதன் திட்டங்களைப் பற்றியும் பகிர்ந்துகொள்கிறார்.

கேதுரு மரங்களை வெட்டுவதற்குத் தேவையான ஆட்களை தனக்கு கொடுத்து உதவிபுரியுமாறு சாலொமோன் ஈராமிடம் கேட்டுக்கொள்கிறார் (1இராஜா 5:2-6). ஈராமும் சாலொமோனுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொள்கிறார் (1இராஜா 5:7-9).

சாலொமோனுடைய வேலைகள் திட்டமிட்ட பிரகாரம் நன்றாய் நடைபெறுகிறது. ஈராமின் வேலையாட்களுக்கும் சம்பளம் தாராளமாய்க் கொடுக்கப்படுகிறது (1இராஜா 5:10-18).

தீருவின் ராஜாவாகிய ஈராம் 1இராஜா 5:1-9

1இராஜா 5:1. சாலொமோனை அவனுடைய பிதாவின் ஸ்தானத்தில் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள் என்று தீருவின் ராஜாவாகிய ஈராம் கேள்விப்பட்டு, தன் ஊழியக்காரரை அவனிடத்தில் அனுப்பினான்; ஈராம் தாவீதுக்குச் சகலநாளும் சிநேகிதனாயிருந்தான்.

1இராஜா 5:2. அப்பொழுது சாலொமோன் ஈராமினிடத்தில் ஆட்களை அனுப்பி:

1இராஜா 5:3. என் தகப்பனாகிய தாவீதின் சத்துருக்களைக் கர்த்தர் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்திவிடுமளவும், அவர்கள் தம்மைச் சுற்றிலும் செய்கிற யுத்தத்தினால், அவர் தம்முடைய தேவனாகிய கர்த்தருடைய நாமத்திற்கு ஆலயத்தைக் கட்ட, அவருக்குக் கூடாதிருந்தது என்று நீர் அறிந்திருக்கிறீர்.

1இராஜா 5:4. ஆனாலும் இப்பொழுதோ என் தேவனாகிய கர்த்தர் எங்கும் எனக்கு இளைப்பாறுதலைத் தந்தார்; விரோதியும் இல்லை, இடையூறும் இல்லை.

1இராஜா 5:5. ஆகையால்: நான் உன் ஸ்தானத்தில் உன் சிங்காசனத்தின்மேல் வைக்கும் உன் குமாரனே என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டுவான் என்று கர்த்தர் என் தகப்பனாகிய தாவீதினிடத்தில் சொன்னபடியே, என் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்று இருக்கிறேன்.

1இராஜா 5:6. ஆதலால் லீபனோனில் எனக்காக கேதுருமரங்களை வெட்டக் கட்டளையிடும்; சீதோனியரைப்போல மரவெட்டு வேலை அறிந்தவர்கள் எங்களுக்குள்ளே ஒருவருமில்லை என்பது உமக்குத் தெரியும்; அதற்காக என் வேலைக்காரர் உம்முடைய வேலைக்காரரோடே இருப்பார்கள்; நீர் சொல்வதின்படியெல்லாம் உம்முடைய வேலைக்காரரின் சம்பளத்தை உமக்குக் கொடுப்பேன் என்று சொல்லச் சொன்னான்.

1இராஜா 5:7. ஈராம் சாலொமோனின் வார்த்தைகளைக் கேட்டபோது, மிகவும் சந்தோஷப்பட்டு: அந்த ஏராளமான ஜனங்களை ஆளும்படி, தாவீதுக்கு ஒரு ஞானமுள்ள குமாரனைக் கொடுத்த கர்த்தர் இன்று ஸ்தோத்திரிக்கப் படுவாராக என்று சொல்லி;

1இராஜா 5:8. ஈராம் சாலொமோனிடத்தில் மனுஷரை அனுப்பி: நீர் எனக்குச் சொல்லியனுப்பின காரியத்தை நான் கேட்டேன்; கேதுருமரங்களுக்காகவும், தேவதாரி விருட்சங்களுக்காகவும், உம்முடைய விருப்பத்தின்படியெல்லாம் நான் செய்வேன்.

1இராஜா 5:9. என் வேலைக்காரர் லீபனோனில் இருந்து அவைகளை இறக்கிக் கடலிலே கொண்டுவருவர்கள்; அங்கே நான் அவைகளைத் தெப்பங்களாகக் கட்டி, நீர் நியமிக்கும் இடத்துக்குக் கடல்வழியாய் அனுப்பி, அவைகளை அவிழ்த்து ஒப்பிப்பேன்; அங்கே நீர் அவைகளை ஒப்புக்கொண்டு என் ஜனங்களுக்கு ஆகாரங்கொடுத்து, என் விருப்பத்தின்படி செய்யவேண்டும் என்று சொல்லச்சொன்னான்.

தீரு சாலொமோனுடைய காலத்தில் மிகவும் பிரசித்திப்பெற்ற வியாபார பட்டணம். இது கடற்கரைக்கு அருகாமையில் அமைந்திருக்கிற துறைமுகப்பட்டணம். தீரு இஸ்ரவேலின் எல்லையில் உள்ளது. ஈராம் என்பவர் தீருவின் ராஜாவாயிருக்கிறார். இவர் தாவீதுக்கு நெருங்கிய சிநேகிதர். தாவீதுக்கு பின்பு, சாலொமோன் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவானார் என்பதை ஈராம் கேள்விப்படுகிறார்.

தீருவிலே விக்கிரகாராதனை நிரம்பியிருக்கிறது. தீருவின் ராஜாவாகிய ஈராமோ, விக்கிரகங்களை ஆராதியாமல், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை ஆராதிக்கிறார் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஈராம் கர்த்தரை ஆராதித்தாலும், அவர் தீருவிலே ஆவிக்குரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு ஒரு முயற்சியும் செய்யவில்லை. ஈராம் விக்கிரகாராதனைக்கு விரோதமாக ஒன்றும் பண்ணவில்லை.

சாலொமோனை அவருடைய பிதாவின் ஸ்தானத்தில் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள் என்று தீருவின் ராஜாவாகிய ஈராம் கேள்விப்படுகிறார். ஈராம் தன் ஊழியக்காரரை சாலொமோனிடத்தில் அனுப்புகிறார்; ஈராம் தாவீதுக்குச் சகலநாளும் சிநேகிதனாயிருந்தார் (1இராஜா 5:1). ஈராம் தன்னுடைய ஊழியக்காரர் மூலமாக சாலொமோனுக்கு வாழ்த்து செய்திகளையும், வெகுமதிகளையும் கொடுத்தனுப்புகிறார்.

சாலொமோன் ஈராமின் வாழ்த்துதல் களைப் பெற்றுக்கொண்டு, அவருடைய வெகுமதிகளையும் ஏற்றுக்கொள்கிறார். சாலொமோனும் ஈராமுக்கு தன்னுடைய ஊழியக்காரர் மூலமாக வாழ்த்து செய்திகளை அனுப்புகிறார். ஈராம் தாவீதுக்கு சிநேகிதர். சாலொமோன் ஈராமோடு வியாபார ஒப்பந்தம் செய்து கொள்ள விரும்புகிறார்.

சாலொமோன் தேவனுடைய நாமமகிமைக்காக எருசலேமிலே கர்த்தருக்கு ஒரு ஆலயம் கட்டவேண்டுமென்று தீர்மானம்பண்ணியிருக்கிறார். சாலொமோன் தன்னுடைய விருப்பத்தை தன் ஊழியக்காரர் மூலமாக ஈராமுக்கு சொல்லியனுப்புகிறார். தேவாலயம் கட்டப்படவேண்டும் என்னும் செய்தியை ஈராமும் ஏற்கெனவே அறிந்திருக்கிறார்.

அப்பொழுது சாலொமோன் ஈராமினிடத்தில் ஆட்களை அனுப்பி: "என் தகப்பனாகிய தாவீதின் சத்துருக்களைக் கர்த்தர் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்திவிடுமளவும், அவர்கள் தம்மைச் சுற்றிலும் செய்கிற யுத்தத்தினால், அவர் தம்முடைய தேவனாகிய கர்த்தருடைய நாமத்திற்கு ஆலயத்தைக் கட்ட, அவருக்குக் கூடாதிருந்தது என்று நீர் அறிந்திருக்கிறீர்" (1இராஜா 5:2,3) என்று சொல்லியனுப்புகிறார்.

தாவீது பல யுத்தங்களை நடத்தினார். இதனால் அவரால் தேவாலயம் கட்ட முடியவில்லை. கர்த்தருக்கு ஆலயம் கட்டவேண்டும் என்னும் ஆர்வமும், திட்டமும் தாவீதின் மனதிலே இருந்தது. ஆனாலும் அவர் செய்த யுத்தங்கள் ஆலயம் கட்டுவதற்கு தடையாயிற்று.

இப்போது சாலொமோனுடைய ஆட்சிக்காலத்தில் யுத்தம் நடைபெறவில்லை. இஸ்ரவேல் தேசம் அமைதியாயிருக்கிறது. சாலொமோன் தன்னுடைய தேசத்தில் நிலவுகிற அமைதியைப்பற்றி ஈராமுக்கு செய்தி சொல்லியனுப்புகிறார். "ஆனாலும் இப்பொழுதோ என் தேவனாகிய கர்த்தர் எங்கும் எனக்கு இளைப்பாறுதலைத் தந்தார்; விரோதியும் இல்லை, இடையூறும் இல்லை" (1இராஜா 5:4) என்று சாலொமோன் சொல்லுகிறார்.

"விரோதி" என்னும் வார்த்தைக்கு சாத்தான் என்று பொருள். நாம் கர்த்தருக்காக ஒரு வேலையை செய்யும்போது சாத்தான் அதைத் தடைபண்ணுவான். அந்த வேலைக்கு எதிர்த்து நிற்பான். நாம் அந்த வேலையை செய்யக்கூடாதபடிக்கு நம்மை திசை திருப்ப முயற்சி பண்ணுவான். இதுவே சாத்தானுடைய வேலை. சாலொமோனுடைய ஆட்சிக்காலத்தில், சாத்தான் அவருக்கு விரோதமாக கிரியை செய்யவில்லை.

சூழ்நிலைகளும், காலங்களும் தனக்கு சாதகமாயிருப்பதினால் சாலொமோன் கர்த்தருக்கு ஆலயம் கட்ட விரும்புகிறார். தாவீது தேவனுடைய ஆலயத்தைக் கட்டமாட்டார் என்றும், அவருடைய குமாரனே ஆலயத்தைக் கட்டுவார் என்றும், கர்த்தர் ஏற்கெனவே தாவீதுக்கு சொல்லியிருக்கிறார். இது சாலொமோனுக்கும் தெரியும்.

சாலொமோன் கர்த்தருடைய விருப்பத்தை ஈராமுக்கு சொல்லியனுப்புகிறார். "நான் உன் ஸ்தானத்தில் உன் சிங்காசனத்தின்மேல் வைக்கும் உன் குமாரனே என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டுவான் என்று கர்த்தர் என் தகப்பனாகிய தாவீதினிடத்தில் சொன்னார்" (1இராஜா 5:5) என்று சாலொமோன் ஈராமுக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் தன் தகப்பனாகிய தாவீதினிடத்தில் சொன்னபடியே, "என் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்று இருக்கிறேன்" (1இராஜா 5:5) என்று சாலொமோன், தன்னுடைய மனதின் விருப்பத்தை, தீருவின் ராஜாவாகிய ஈராமுக்கு, தன்னுடைய ஆட்கள் மூலமாக சொல்லியனுப்புகிறார்.

தேவனுக்கு ஆலயம் கட்ட ஈராம் தனக்கு உதவி செய்வார் என்று சாலொமோன் எதிர்பார்க்கிறார். அவர் ஈராமின் உதவியை விரும்புகிறார். லீபனோன் அடர்த்தியான வனதேசம். இது கானான் தேசத்தின் வடக்கு பகுதியிலுள்ளது. லீபனோன் வனத்திலே ஏராளமான விருட்சங்களும் மரங்களும் அடத்தியாய் வளர்ந்திருக்கிறது.

லீபனோன் வனம் இஸ்ரவேல் தேசத்தின் சுதந்தரவீதத்திற்குள்ளே இருக்கிறது. "கிப்லியரின் நாடும், சூரியோதயப்புறத்தில் எர்மோன் மலையடிவாரத்தில் இருக்கிற பாகால்காத் முதற்கொண்டு ஆமாத்துக்குள் பிரவேசிக்குமட்டுமுள்ள லீபனோன் முழுவதும், லீபனோன் துவக்கி மிஸ்ரபோத்மாயீம்மட்டும் மலைகளில் குடியிருக்கிற யாவருடைய நாடும், சீதோனியருடைய எல்லா நாடும்தானே. நான் அவர்களை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்துவேன்; நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, நீ இஸ்ரவேலுக்குச் சுதந்தரமாகச் சீட்டுகளைமாத்திரம் போட்டு தேசத்தைப் பங்கிடவேண்டும்" (யோசு 3:5,6).

சாலொமோன் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருக்கிறார். லீபனோன் வனத்திற்கும் சாலொமோனே சொந்தக்காரர். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தார் மரவெட்டு வேலை அறியாதவர்கள். சீதோனியரோ மரவெட்டு வேலை அறிந்தவர்கள். சீதோனியர் ஈராமின் ஆளுகைக்குட்பட்டவர்கள். தனக்கு மரவெட்டுவேலை அறிந்தவர்களை அனுப்பி உதவி செய்யவேண்டுமென்று, சாலொமோன் ஈராமிடத்தில் கேட்டுக்கொள்கிறார்.

சாலொமோன் தன்னுடைய வேலைக்காரர் மூலமாக ஈராமுக்கு செய்தி சொல்லியனுப்புகிறார். சாலொமோன் அவர்களிடத்தில், "லீபனோனில் எனக்காக கேதுருமரங்களை வெட்டக் கட்டளையிடும்; சீதோனியரைப்போல மரவெட்டு வேலை அறிந்தவர்கள் எங்களுக்குள்ளே ஒருவருமில்லை என்பது உமக்குத் தெரியும்; அதற்காக என் வேலைக்காரர் உம்முடைய வேலைக்காரரோடே இருப்பார்கள்; நீர் சொல்வதின்படியெல்லாம் உம்முடைய வேலைக்காரரின் சம்பளத்தை உமக்குக் கொடுப்பேன்" (1இராஜா 5:6) என்று ஈராமுக்கு சொல்லச் சொல்லுகிறார்.

ஈராமின் வேலைக்காரர் மரங்களை வெட்டினாலும், சாலொமோனின் வேலைக்காரரும் அவருடைய வேலைக்காரரோடு கூடயிருப்பார்கள். சாலொமோன் ஈராமின் வேலைக்காரருக்கு உரிய சம்பளத்தை கொடுப்பதாகவும் சம்மதிக்கிறார். அந்த சம்பளம் ஈராம் சொல்லுவதின் படியெல்லாம் அவர்களுக்கு கொடுக்கப்படும்.

ஊழியம் கர்த்தருடையது. ஊழியக்காரர்கள் கர்த்தருக்காகவே ஊழியம் செய்கிறார்கள். கர்த்தருக்காக ஊழியம் செய்கிறவர்களை, கர்த்தர் ஆசீர்வதிப்பார் என்று, வாயின் வார்த்தைகளினால் ஆசீர்வதித்து, அவர்களுக்கு சம்பளம் கொடுக்காமல், அவர்களை வெறுங்கையோடு அனுப்பி விடக்கூடாது. வேலைக்காரன் தன் ஊதியத்திற்கு பாத்திரவானாயிருக்கிறான். திருச்சபைகளில் வேலை செய்கிறவர்களுக்கும், ஊழிய ஸ்தாபனங்களில் வேலை செய்கிறவர்களுக்கும், அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற சம்பளங்களைக் கொடுத்து அவர்களை ஆதரிக்கவேண்டும்.

தேவனுடைய ஆலயம் எருசலேமிலே கட்டப்படுகிறது. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். கர்த்தருடைய ஜனம் ஆலயத்தைக் கட்டும்போது, சீதோனியரைப்போல புறஜாதியாரும், கர்த்தருடைய ஆலய கட்டுமான வேலைகளில் உதவியாயிருக்கிறார்கள். ஏசாயா தீர்க்கதரிசி இந்த சம்பவத்தை ஏற்கெனவே தீர்க்கதரிசனமாய் சொல்லியிருக்கிறார்.

"அந்நியரின் புத்திரர் உன் மதில்களைக் கட்டி, அவர்களுடைய ராஜாக்கள் உன்னைச் சேவிப்பார்கள்; என் கடுங்கோபத்தினால் உன்னை அடித்தேன்; ஆனாலும் என் கிருபையினால் உனக்கு இரங்கினேன். உன்னிடத்துக்கு ஜாதிகளின் பலத்த சேனையைக் கொண்டுவரும்படிக்கும், அவர்களுடைய ராஜாக்களை அழைத்துவரும்படிக்கும், உன் வாசல்கள் இரவும்பகலும் பூட்டப்படாமல் எப்பொழுதும் திறந்திருக்கும்" (ஏசா 60:10,11).

"உன்னைச் சேவிக்காத ஜாதியும் ராஜ்யமும் அழியும்; அந்த ஜாதிகள் நிச்சயமாய்ப் பாழாகும். என் பரிசுத்த ஸ்தானத்தைச் சிங்காரிக்கும்படிக்கு, லீபனோனின் மகிமையும், தேவதாரு விருட்சங்களும், பாய்மர விருட்சங்களும், புன்னைமரங்களுங்கூட உன்னிடத்திற்குக் கொண்டு வரப்படும்; என் பாதஸ்தானத்தை மகிமைப்படுத்துவேன்" (ஏசா 60:12,13).

ஈராம் சாலொமோனின் வார்த்தைகளைக் கேட்டபோது, மிகவும் சந்தோஷப்படுகிறார். "அந்த ஏராளமான ஜனங்களை ஆளும்படி, தாவீதுக்கு ஒரு ஞானமுள்ள குமாரனைக் கொடுத்த கர்த்தர் இன்று ஸ்தோத்திரிக்கப்படுவாராக" (1இராஜா 5:7) என்று சொல்லி ஈராம் கர்த்தரைத் துதிக்கிறார்.

சாலொமோனுடைய வேண்டுகோளை ஈராம் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்கிறார். சாலொமோன் தாவீதின் அடிச்சுவடுகளில் நடக்கிறார். ஈராமின் இருதயம் உதாரத்துவமாய் உதவி செய்யக்கூடியது. சாலொமோன் தேவனுக்கு ஆலயம் கட்டவேண்டுமென்று தீர்மானித்திருப்பது ஈராமுக்கு சந்தோஷமாயிருக்கிறது. சாலொமோனுடைய ஞானத்தையும், அவருடைய ராஜரீகத்தையும் கேள்விப்பட்டு ஈராம் கர்த்தருக்குள் சந்தோஷப்படுகிறார். அவர் சாலொமோனுக்காக கர்த்தரைத் துதிக்கிறார்.

ஈராமின் நல்ல சுபாவம் நமக்கு இங்கே எடுத்துக்காட்டாக சொல்லப்பட்டிருக்கிறது. மற்றவர்கள் நம்மைவிட பொருளாதாரத்திலும், அந்தஸ்திலும் உயரும்போது, நாம் அவர்களைப் பார்த்து பொறாமைப்படக்கூடாது. அவர்களுக்கு விரோதமாக தூஷணவார்த்தைகளைப் பேசக்கூடாது. நாம் அவர்களுக்காக கர்த்தரைத் துதிக்கவேண்டும். பிறருடைய புத்தியும் ஞானமும் நம்முடைய ஞானத்தைவிட அதிகமாயிருக்கும்போது, நாம் அவர்கள்மீது பொறாமைப்படாமல், அவர்களுக்காக நாம் கர்த்தருக்குள் சந்தோஷப்படவேண்டும்.

சாலொமோன் சொல்லியனுப்பின செய்தியை கேள்விப்பட்டு ஈராம் சந்தோஷப்படுகிறார். அவர் காலதாமதம்பண்ணாமல் உடனே தன்னுடைய மனுஷரை சாலொமோனிடத்தில் அனுப்புகிறார். ஈராம் சாலொமோனுக்கு "நீர் எனக்குச் சொல்லியனுப்பின காரியத்தை நான் கேட்டேன்; கேதுருமரங்களுக்காகவும், தேவதாரி விருட்சங்களுக்காகவும், உம்முடைய விருப்பத்தின்படியெல்லாம் நான் செய்வேன். என் வேலைக்காரர் லீபனோனில் இருந்து அவைகளை இறக்கிக் கடலிலே கொண்டுவருவார்கள்; அங்கே நான் அவைகளைத் தெப்பங்களாகக் கட்டி, நீர் நியமிக்கும் இடத்துக்குக் கடல்வழியாய் அனுப்பி, அவைகளை அவிழ்த்து ஒப்பிப்பேன்; அங்கே நீர் அவைகளை ஒப்புக்கொண்டு என் ஜனங்களுக்கு ஆகாரங்கொடுத்து, என் விருப்பத்தின்படி செய்யவேண்டும்" (1இராஜா 5:8,9) என்று தன்னுடைய மனுஷர் மூலமாய் செய்தி சொல்லியனுப்புகிறார்.

சாலொமோன் தேவனுக்கு ஆலயம் கட்டவேண்டுமென்று தீர்மானித்திருப்பது ஈராமுக்கு சந்தோஷமாயிருக்கிறது. சாலொமோன் தன்னிடத்தில் கேட்கிற எல்லா உதவிகளையும் அவருக்கு செய்து கொடுக்க ஈராம் ஆயத்தமாயிருக்கிறார். சாலொமோன் தன்னிடத்தில் கேட்ட உதவிகளைவிட, அவருக்கு அதிகமான உதவிகளை செய்ய ஈராம் விரும்புகிறார். சாலொமோனும் ஈராமும் இது சம்பந்தமாக உடன்படிக்கை பண்ணிக்கொள்கிறார்கள்.

ஈராம் சாலொமோனுக்கு உதவி செய்வதாக வாக்குப்பண்ணுகிறார். சாலொமோனிடத்திலிருந்து தனக்கு பிரதியுத்தரம் வருவதற்கு முன்பாகவே, தான் அவருக்கு செய்யப்போகிற உதவிகளை ஈராம் தன் மனுஷர் மூலமாக சாலொமோனுக்கு சொல்லியனுப்புகிறார். "கேதுருமரங்களுக்காகவும், தேவதாரி விருட்சங்களுக்காகவும், உம்முடைய விருப்பத்தின்படியெல்லாம் நான் செய்வேன்" (1இராஜா 5:8) என்று ஈராம் சாலொமோனுக்கு சொல்லுகிறார். ஈராம் தேவாலய கட்டுமான வேலைக்கு உதவிசெய்ய காலதாமதம்பண்ணவில்லை.

சாலொமோன் ஈராமிடம், "லீபனோனில் எனக்காக கேதுரு மரங்களை வெட்ட கட்டளையிடும்" (1இராஜா 5:6) என்று மாத்திரமே கேட்டுக்கொண்டார். ஈராமோ அந்த வேலையின் முழுவிவரத்தையும் சாலொமோனுக்கு தெளிவாகச் சொல்லுகிறார். தன்னுடைய ஊழியக்காரர் இந்த வேலையை எப்படி செய்வார்கள் என்பதையும் ஈராம் சாலொமோனுக்கு தெளிவுபடுத்துகிறார்.

ஈராம் சாலொமோனிடம், "என் வேலைக்காரர் லீபனோனில் இருந்து அவைகளை இறக்கிக் கடலிலே கொண்டுவருவார்கள்; அங்கே நான் அவைகளைத் தெப்பங்களாகக் கட்டி, நீர் நியமிக்கும் இடத்துக்குக் கடல்வழியாய் அனுப்பி, அவைகளை அவிழ்த்து ஒப்பிப்பேன்" (1இராஜா 5:9) என்று இந்த வேலையைப்பற்றி தெளிவாகச் சொல்லுகிறார்.

லீபனோனிலே கேதுரு மரங்களை வெட்டி, அந்த மரங்களை எருசலேமுக்கு கொண்டு வரவேண்டும் என்று சாலொமோன் ஈராமிடம் கேட்கவில்லை. சாலொமோன் கேட்காததையும் ஈராம் செய்ய ஆயத்தமாயிருக்கிறார். வெட்டப்பட்ட மரங்களை எங்கே கொண்டு வரவேண்டுமென்று சாலொமோன் தீர்மானம்பண்ணவேண்டும். சாலொமோன் நியமிக்கும் இடத்திற்கு, ஈராம் அந்த மரங்களை கடல் வழியாய் அனுப்பி வைப்பார். மரங்களை பாதுகாப்பாக அனுப்பும் பொறுப்பையும் ஈராம் ஏற்றுக்கொள்கிறார்.

சீதோனியர் இஸ்ரவேலரைவிட மரவெட்டு வேலையை நன்றாய் அறிந்தவர்கள். மரங்களை தெப்பங்களாகக் கட்டி கடலிலே அனுப்பும் வேலையையும் சீதோனியர் நன்றாய் அறிந்திருக்கிறார்கள். தீருவும் சீதோனும் கடல்துறை பட்டணங்கள்.

"சமுத்திரக் கரை துறையிலே குடியிருந்து, அநேகம் தீவுகளின் ஜனங்களோடே வியாபாரம்பண்ணுகிற தீருவை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், தீருவை, நீ உன்னைப் பூரண சௌந்தரியவதி என்கிறாய்" (எசே 27:3).

ஈராமின் ஆட்கள் சாலொமோனுக்காக இந்த வேலைகளை செய்யும்போது, சாலொமோன் அவர்களுக்கு நியாயமான சம்பளம் கொடுக்கவேண்டும் என்றும் ஈராம் எதிர்பார்க்கிறார். ஈராம் சாலொமோனிடம், "அங்கே நீர் அவைகளை ஒப்புக்கொண்டு என் ஜனங்களுக்கு ஆகாரங்கொடுத்து, என் விருப்பத்தின்படி செய்யவேண்டும்" (1இராஜா 5:9) என்று சொல்லச் சொல்லுகிறார்.

சாலொமோன் ஈராமின் வேலையாட்களுக்கும் சம்பளம் கொடுக்கவேண்டும், ஈராமின் வீட்டாருக்கும் ஆகாரம் கொடுக்கவேண்டும். தீரு இஸ்ரவேலுக்கு வேலையாட்களைக் கொடுக்கும்போது, இஸ்ரவேல் தீருவுக்கு தானியங்களைக் கொடுப்பார்கள்.

"யூதரும் இஸ்ரவேல் தேசத்தாரும் உன்னோடே வியாபாரம்பண்ணி, மின்னீத், பன்னாக் என்கிற ஊர்களின் கோதுமையையும், தேனையும், எண்ணெயையும், பிசின்தைலத்தையும் உன் தொழில்துறைக்குக் கொண்டுவந்தார்கள்" (எசே 27:17).

கர்த்தருடைய தெய்வீக பராமரிப்பினால் தேசங்கள் ஒன்றுக்கொன்று ஆதரவாயிருக்கிறது. ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தின் ஆசீர்வாதங்களை சார்ந்து ஜீவிக்கிறார்கள்.

சாலொமோனின் கரிசனை
1இராஜா 5:10-18

1இராஜா 5:10. அப்படியே ஈராம் சாலொமோனுக்கு வேண்டியமட்டும் கேதுருமரங்களையும் தேவதாரி விருட்சங்களையும் கொடுத்துக் கொண்டுவந்தான்.

1இராஜா 5:11. சாலொமோன் ஈராமின் அரமனைக்குப் போஜனத்திற்காக இருபதினாயிரக்கலம் கோதுமையையும், இடித்துப்பிழிந்த ஒலிவமரங்களின் இருபதுகல எண்ணெயையும் கொடுத்தான்; இப்படிச்சாலொமோன் ஈராமுக்கு வருஷாந்தரம் கொடுத்துவந்தான்.

1இராஜா 5:12. கர்த்தர் சாலொமோனுக்குச் சொல்லியிருந்தபடியே அவனுக்கு ஞானத்தைத் தந்தருளினார்; ஈராமுக்கும் சாலொமோனுக்கும் சமாதானம் உண்டாயிருந்து, இருவரும் உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்கள்.

1இராஜா 5:13. ராஜாவாகிய சாலொமோன் இஸ்ரவேலரெல்லாரிலும் ஊழியத்துக்கு முப்பதினாயிரம் அமஞ்சி ஆட்களைப் பிடித்தான்.

1இராஜா 5:14. அவர்களில் ஒவ்வொரு மாதத்திற்குப் பதினாயிரம்பேரை மாற்றி மாற்றி, லீபனோனுக்கு அனுப்பினான்; அவர்கள் ஒரு மாதம் லீபனோனிலும், இரண்டு மாதம் தங்கள் வீடுகளிலும் இருப்பார்கள்; அதோனீராம் அந்த அமஞ்சி ஆட்களின்மேல் விசாரிப்புக்காரனாயிருந்தான்.

1இராஜா 5:15. சாலொமோனிடத்தில் சுமை சுமக்கிறவர்கள் எழுபதினாயிரம்பேரும், மலைகளில் மரம் வெட்டுகிறவர்கள் எண்பதினாயிரம்பேரும்,

1இராஜா 5:16. இவர்களைத்தவிர வேலையை விசாரித்து வேலையாட்களைக் கண்காணிக்கிறதற்கு தலைமையான விசாரிப்புக்காரர் மூவாயிரத்து முந்நூறுபேரும் இருந்தார்கள்.

1இராஜா 5:17. வெட்டின கல்லால் ஆலயத்துக்கு அஸ்திபாரம் போட, பெரிதும் விலையேறப்பெற்றதுமான கற்களைக் கொண்டுவர ராஜா கட்டளையிட்டான்.

1இராஜா 5:18. ஆலயத்தைக் கட்ட, சாலொமோனின் சிற்பாசாரிகளும், ஈராமின் சிற்பாசாரிகளும், கிபலி ஊராரும், அந்த மரங்களையும் கற்களையும் வெட்டி ஆயத்தப்படுத்தினார்கள்.

சாலொமோனின் விண்ணப்பத்தை ஈராம் ஏற்றுக்கொள்கிறார். சாலொமோனும் ஈராமின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்கிறார். அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் உதவி செய்வதாக ஒப்புக்கொள்கிறார்கள். தங்களுடைய ஒப்பந்தத்தை உடன்படிக்கை செய்து உறுதிபண்ணிக்கொள்கிறார்கள்.

அப்படியே ஈராம் சாலொமோனுக்கு வேண்டியமட்டும் கேதுருமரங்களையும் தேவதாரி விருட்சங்களையும் கொடுத்துக் கொண்டுவருகிறார். சாலொமோன் ஈராமின் அரமனைக்குப் போஜனத்திற்காக இருபதினாயிரக்கலம் கோதுமையையும், இடித்துப்பிழிந்த ஒலிவமரங்களின் இருபதுகல எண்ணெயையும் கொடுக்கிறார்; இப்படிச்சாலொமோன் ஈராமுக்கு வருஷாந்தரம் கொடுத்துவருகிறார் (1இராஜா 5:10,11).

சாலொமோனும் ஈராமும் சிநேகிதர்களாயிருக்கிறார்கள். கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஞானத்தினால், மனுஷரோடு சிநேகத்தை பலப்படுத்திக்கொள்ளவேண்டும். நாம் மற்றவர்களிடத்தில் கண்ணியமாயும், நேர்மையாயும் பழகவேண்டும். பழைய சிநேகிதர்களைப்போலவே, புதிய சிநேகிதர்களும் தங்களுடைய சிநேகிதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். சிநேகிதர் மத்தியிலே உண்மையும் கண்ணியமும் காணப்படவேண்டும்.

கர்த்தர் சாலொமோனுக்குச் சொல்லியிருந்தபடியே அவருக்கு ஞானத்தைக் தந்தருளுகிறார்; ஈராமுக்கும் சாலொமோனுக்கும் சமாதானம் உண்டாயிருக்கிறது, இருவரும் உடன்படிக்கை பண்ணிக்கொள்கிறார்கள் (1இராஜா 5:12).

சாலொமோன் கேட்டுக்கொண்ட பிரகாரம், லீபனோன் வனத்திலே மரவெட்டு வேலை நடைபெறுகிறது. ஈராமுடைய மனுஷரும் அங்கே வேலை செய்கிறார்கள். சாலொமோனுடைய மனுஷரும் அவர்களோடுகூட வேலை செய்கிறார்கள்.

ராஜாவாகிய சாலொமோன் இஸ்ரவேலரெல்லாரிலும் ஊழியத்துக்கு முப்பதினாயிரம் அமஞ்சி ஆட்களைப் பிடிக்கிறார். அவர்களில் ஒவ்வொரு மாதத்திற்குப் பதினாயிரம்பேரை மாற்றி மாற்றி, லீபனோனுக்கு அனுப்புகிறார்; அவர்கள் ஒரு மாதம் லீபனோனிலும், இரண்டு மாதம் தங்கள் வீடுகளிலும் இருப்பார்கள்; அதோனீராம் அந்த அமஞ்சி ஆட்களின்மேல் விசாரிப்புக்காரனாயிருக்கிறான் (1இராஜா 5:13,14).

சாலொமோன் மரம் வெட்டும் வேலைக்கு முப்பதினாயிரம் அமஞ்சி ஆட்களைப் பிடித்தாலும், அவர்களில் பத்தாயிரம் பேரை மாத்திரம் மரம் வெட்டு வேலைக்கு அனுப்புகிறார். மற்ற இருபதினாயிரம் பேரும் தங்கள் வீடுகளிலிருக்கிறார்கள். மரம் வெட்டுகிற பத்தாயிரம் பேரும் ஒரு மாதம் முழுவதும் வேலை செய்யவேண்டும். அதன் பின்பு அவர்கள் தங்கள் வீடுகளுக்கு ஓய்வெடுக்கப்போவார்கள். இரண்டு மாதங்கள் அவர்களுக்கு ஓய்வு கொடுக்கப்படும்.

அப்போது தங்கள் வீடுகளில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிற இருபதினாயிரம் பேரில், பத்தாயிரம் பேர் லீபனோன் வனத்திலே மரம் வெட்டு வேலைக்குப்போவார்கள். இவ்வாறாக சாலொமோனின் அமஞ்சி ஆட்களுக்கு ஓய்வும் கொடுக்கப்படுகிறது. அவர்களுடைய வேலைகளை விசாரிப்பதற்காக சாலொமோன் அதோனிராம் என்பவனை விசாரிப்புக்காரனாக வைக்கிறான்.

சாலொமோனிடத்தில் சுமை சுமக்கிறவர்கள் எழுபதினாயிரம்பேரும், மலைகளில் மரம் வெட்டுகிறவர்கள் எண்பதினாயிரம்பேரும் இருக்கிறார்கள். இவர்களைத்தவிர வேலையை விசாரித்து வேலையாட்களைக் கண்காணிக்கிறதற்கு தலைமையான விசாரிப்புக்காரர் மூவாயிரத்து முந்நூறுபேரும் இருக்கிறார்கள் (1இராஜா 5:15,16).

இவர்களெல்லோரும் தேவாலயக்கட்டுமான வேலைகளுக்கு தேவையான பொருட்களை கொண்டு வருகிறார்கள். இவர்கள் மரங்களை வெட்டுகிறார்கள். சுமைகளை சுமக்கிறார்கள். சாலொமோன் இவர்களை தேவாலயக்கட்டுமான வேலைக்கும், மற்றும் தான் கட்டுகிற எல்லா கட்டிட வேலைகளுக்கும் பயன்படுத்துகிறார். இவர்கள் எருசலேமிலும் லீபனோன் வனத்திலும், மேலும் சாலொமோனின் காணியாட்சிக்குட்பட்ட மற்ற ஸ்தலங்களிலும் வேலை செய்கிறார்கள்.

சாலொமோன் அந்தக் கேசேர்பட்டணத்தையும், கீழ்ப்பெத்தொரோனையும், பாலாத்தையும், வனாந்தரவெளியிலுள்ள தத்மோரையும், தனக்கு இருக்கிற ரஸ்துக்களை வைக்கும் சகல பட்டணங்களையும், இரதங்கள் இருக்கும் பட்டணங்களையும், குதிரை வீரர் இருக்கும் பட்டணங்களையும், எருசலேமிலும் லீபனோனிலும், தான் அரசாண்ட தேசமெங்கும் தனக்கு இஷ்டமானதையெல்லாம் கட்டினான் (1இராஜா 19:17-19).

தேவாலயத்திற்கு அஸ்திபாரம் போடுவதற்கான ஆயத்த வேலைகளை சாலொமோன் மேற்கொள்கிறார். கட்டிடத்திற்கு அஸ்திபாரம் மிகவும் முக்கியமானது. அஸ்திபாரத்திற்குத் தேவையான கற்கள் எருசலேமுக்கு கொண்டு வரப்படுகிறது. ஆலயத்துக்கு அஸ்திபாரம் போட, பெரிதும் விலையேறப்பெற்றதுமான கற்களைக் கொண்டுவர சாலொமோன் ராஜா கட்டளையிடுகிறார் (1இராஜா 5:17).

தேவாலயத்திற்கு அஸ்திபாரம் போடுகிற வேலையில், சாலொமோன் நேரடியாக ஈடுபடுகிறார். அஸ்திபாரம் ஆலயத்திற்கு மிகவும் பிரதானமாயிருக்கிறது. அஸ்திபாரத்தில் போடப்படும் முதலாவது கல், ஜெபத்தோடும் துதியோடும் போடப்படும். சாலொமோன் தேவாலயத்தின் அஸ்திபாரம் போடுவதற்கு பெரிதும் விலையேறப்பெற்றதுமான கற்களைப் பயன்படுத்துகிறார்.

அஸ்திபாரம் பூமிக்கடியிலே இருக்கும். அதை நம்முடைய கண்களால் பார்க்க முடியாது. அஸ்திபாரத்தில் போடப்பட்டிருக்கிற கல் சாதாரண கல்லா அல்லது பெரிதும் விலையேறப்பெற்றதுமான கல்லா என்பதை நம்மால் பார்க்க முடியாது. ஆனால் சாலொமோனோ ஆலயத்திற்கு அஸ்திபாரம் போட பெரிதும் விலையேறப்பெற்றதுமான கற்களைப் பயன்படுத்துகிறார். அஸ்திபாரத்தைப் பார்க்க முடியாது என்பதற்காக சாலொமோன் மாய்மாலம் பண்ணவில்லை. கர்த்தருடைய கண்களுக்கு மறைவானது ஒன்றுமில்லை.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும் அஸ்திபாரம் உறுதியாயிருக்கவேண்டும். அது வலுவானதாகயிருக்கவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய அஸ்திபாரத்தை மற்றவர்கள் பார்க்கமாட்டார்கள். ஆனால் இந்த அஸ்திபாரத்தின்மீதுதான் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் கட்டியெழுப்பப்படும். அஸ்திபாரம் உறுதியாயிருந்தால்தான் அதின்மீது கட்டப்படும் கட்டிடமும் உறுதியாகயிருக்கும்.

சாலொமோன் ஆலயத்திற்கு அஸ்திபாரம் போட முக்கியத்துவம் கொடுக்கிறார். ஆலயத்தைக் கட்ட, சாலொமோனின் சிற்பாசாரிகளும், ஈராமின் சிற்பாசாரிகளும், கிபலி ஊராரும், அந்த மரங்களையும் கற்களையும் வெட்டி ஆயத்தப்படுத்துகிறார்கள் (1இராஜா 5:18). ஆலயம் கட்டுவதற்குத் தேவையான பொருட்களை சாலொமோன் எருசலேமுக்கு கொண்டு வர கட்டளையிடுகிறார்.

6 அதிகாரம்

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கான ஆயத்தவேலைகள் இதுவரையிலும் நடைபெற்று வந்தது. இப்போது கர்த்தருடைய ஆலயத்தை கட்டுவதற்கான கட்டுமான வேலைகள் ஆரம்பமாகிறது. கர்த்தருக்கு ஆலயம் கட்டுவது மகிமையான ஊழியம். கர்த்தருடைய ஆலயத்தில் ஆவிக்குரிய முக்கியத்துவமும், வியாக்கியானமும் அதிகமாயிருக்கிறது.

கர்த்தரின் ஆலயம் கட்டப்பட்ட காலம் (1இராஜா 6:1). ஆலயம் கட்டிமுடிக்க ஆன வருஷங்கள் (1இராஜா 6:37,38). ஆலயம் கட்டப்படுகையில் எந்த சத்தமும் கேட்கப்படாமல் அமைதியாக கட்டப்படுகிறது (1இராஜா 6:7).

கர்த்தருடைய ஆலயத்தின் அளவுகள் (1இராஜா 6:2,3). சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும்போது, கர்த்தர் சாலொமோனுக்கு சொன்ன செய்தி (1இராஜா 6:11-13).

ஆலயத்தின் ஜன்னல்கள் (1இராஜா 6:4). ஆலயத்தின் சுற்றுக்கட்டுகள் (1இராஜா 6:5,6,8-10). ஆலயத்து சுவர்களும் தளமும் (1இராஜா 6:15-18). கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி வைக்கப்பட்டிருக்கிற சந்நிதி ஸ்தானம் (1இராஜா 6:19-22). கேருபின்கள் (1இராஜா 6:23-30). சந்நிதி ஸ்தானத்தில் வாசலும் கதவுகளும் (1இராஜா 6:31-35). ஆலயத்தின் உட்பிரகாரம் (1இராஜா 6:36).

கர்த்தரின் ஆலயம் 1இராஜா 6:1-10

1இராஜா 6:1. இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாநூற்று எண்பதாம் வருஷத்திலும், சாலொமோன் இஸ்ரவேலின்மேல் ராஜாவான நாலாம் வருஷம் சீப்மாதமாகிய இரண்டாம் மாதத்திலும், அவன் கர்த்தரின் ஆலயத்தைக் கட்டத்தொடங்கினான்.

1இராஜா 6:2. சாலொமோன் ராஜா கர்த்தருக்குக் கட்டின ஆலயம் அறுபது முழ நீளமும், இருபது முழ அகலமும், முப்பது முழ உயரமுமாயிருந்தது.

1இராஜா 6:3. ஆலயமாகிய அந்த மாளிகையின் முகப்பிலே அவன் கட்டின மண்டபம் ஆலயத்தின் அகலத்திற்குச் சரியாய் இருபதுமுழ நீளமும், ஆலயத்துக்கு முன்னே பத்துமுழ அகலமுமாயிருந்தது.

1இராஜா 6:4. பார்வைக்குக் குறுகிப்போகிற ஒடுக்கமான ஜன்னல்களை ஆலயத்திற்குச் செய்வித்தான்.

1இராஜா 6:5. அவன் தேவாலயத்தின் சுவரும் சந்நிதி ஸ்தானச்சுவருமாகிய ஆலயத்தின் சுவர்களுக்கு அடுத்ததாய்ச் சுற்றுக்கட்டுகளைக் கட்டி, அவைகளில் அறைகளைச் சுற்றிலும் உண்டாக்கினான்.

1இராஜா 6:6. கீழே இருக்கிற சுற்றுக்கட்டு ஐந்து முழ அகலமும், நடுவே இருக்கிறது ஆறு முழ அகலமும், மூன்றாவதாயிருக்கிறது ஏழுமுழ அகலமுமாயிருந்தது; அவைகள் ஆலயத்தினுடைய சுவர்களிலே தாங்காதபடிக்கு ஆலயத்தைச் சுற்றிலும் புறம்பே ஒட்டுச்சுவர்களைக் கட்டுவித்தான்.

1இராஜா 6:7. ஆலயம் கட்டப்படுகையில், அது பணிதீர்த்து கொண்டுவரப்பட்ட கற்களாலே கட்டப்பட்டது; ஆகையால் அது கட்டப்படுகிறபோது, சுத்திகள் வாச்சிகள் முதலான எந்த இருப்பு ஆயுதங்களின் சத்தமும் அதிலே கேட்கப்படவில்லை.

1இராஜா 6:8. நடு அறைகளுக்குப் போகிற வாசற்படி ஆலயத்தின் வலதுபுறத்தில் இருந்தது; சுழற்படிகளால் நடு அறைகளுக்கும், நடு அறைகளிலிருந்து மூன்றாவது அறைகளுக்கும் ஏறுவார்கள்.

1இராஜா 6:9. இவ்விதமாய் அவன் ஆலயத்தைக் கட்டி, கேதுருமர உத்திரங்களாலும் பலகைகளாலும் ஆலயத்தை மச்சுப்பாவி முடித்தான்.

1இராஜா 6:10. அவன் ஐந்துமுழ உயரமான சுற்றுக் கட்டுகளை ஆலயத்தின்மேலெங்கும் கட்டுவித்தான்; அவைகள் கேதுருமரங்களால் ஆலயத்தோடே இணைக்கப்பட்டிருந்தது.

தேவாலயம் "கர்த்தரின் ஆலயம்" என்று அழைக்கப்படுகிறது (1இராஜா 6:1). கர்த்தரே தம்முடைய ஆலயத்தின் வடிவத்தை வெளிப்படுத்தினார். கர்த்தரின் ஆலயத்தைக் கட்டுவதற்கு அனந்த ஞானம் வேண்டும். கர்த்தரே தம்முடைய சர்வஞானத்தினால், தமக்கு ஆலயத்தைக் கட்டுகிறார். பரிசுத்த ஆவியானவர் ஆலயத்தின் மாதிரி வடிவத்தை தாவீதுக்கு வெளிப்படுத்தினார்.

தேவாலயம் கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணப்பட்டிருக்கிறது. அது கர்த்தருடைய நாமமகிமைக்காக கட்டப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய ஆலயம் அவருடைய ஊழியத்தில் முக்கியமான பங்கு வகிக்கிறது. கர்த்தருடைய மகிமை அவருடைய ஆலயத்தில் வந்து தங்கியிருக்கிறது. பரிசுத்தமே கர்த்தருடைய ஆலயத்திற்கு அழகும் அலங்காரமுமாயிருக்கிறது. இந்தப் பிரபஞ்சத்தில் ஏராளமான கட்டிடங்கள் இருந்தாலும், கர்த்தரின் ஆலயமே எல்லா கட்டிடங்களை விட, அழகாயும், அலங்காரமாயும் இருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நானூற்று எண்பதாம் வருஷத்திலும், சாலொமோன் இஸ்ரவேலின்மேல் ராஜாவான நாலாம் வருஷம் சீப்மாதமாகிய இரண்டாம் மாதத்திலும், அவன் கர்த்தரின் ஆலயத்தைக் கட்டத்தொடங்குகிறார் (1இராஜா 6:1).

மோசேயின் காலம் நாற்பது வருஷம். யோசுவாவின் காலம் பதினேழு வருஷம். நியாயாதிபதிகளின் காலம் 299 வருஷங்கள். ஏலியின் காலம் 40 வருஷம். சாமுவேல், சவுல் ஆகியோரின் காலம் 40 வருஷம். தாவீதின் காலம் 40 வருஷம். சாலொமோன் நாலு வருஷம் ராஜ்யபாரம் பண்ணின பின்பு, கர்த்தரின் ஆலயத்தைக் கட்டத் தொடங்குகிறார். இந்தக் காலங்களையெல்லாம் மொத்தமாய்க் கூட்டும்போது 480 வருஷங்களாகும்.

தாவீதின் நாட்களில், கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி ஆசரிப்புக்கூடாரத்திலிருந்தது. ஆசாரிப்புக்கூடாரம் பரிசுத்தமான ஸ்தலம். கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அது அடையாளம். ஆசரிப்புக்கூடாரத்தில் அலங்காரமோ ஐசுவரியமோ இல்லை. ஆனாலும் ஆசரிப்புக்கூடாரமும் கர்த்தருடைய ஆலயம் என்றே அழைக்கப்படுகிறது.

"அப்பொழுது தாவீது தரையை விட்டு எழுந்து, ஸ்நானம்பண்ணி, எண்ணெய் பூசிக்கொண்டு, தன் வஸ்திரங்களை மாற்றி, கர்த்தருடைய ஆலயத்தில் பிரவேசித்து, பணிந்துகொண்டு, தன் வீட்டுக்கு வந்து, போஜனம் கேட்டான்; அவன் முன்னே அதை வைத்தபோது புசித்தான்" (2சாமு 12:20).

சாலொமோன் கட்டின தேவாலயத்தில் கர்த்தருடைய மகிமை வந்து தங்கினதுபோல, ஆசரிப்புக்கூடாரத்திலும் கர்த்தருடைய மகிமை வந்து தங்கியிருந்தது. கர்த்தர் சாலொமோனுக்கு திரளான ஐசுவரியத்தையும், புத்தியையும் ஞானத்தையும், செல்வத்தையும் கொடுத்திருக்கிறார். கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்னும் ஆர்வத்தையும் கர்த்தரே சாலொமோனுடைய இருதயத்திலே ஏற்படுத்தியிருக்கிறார்.

கர்த்தர் தம்முடைய கிருபையினால் சாலொமோனை ஆலயம் கட்டுவதற்கு அனுமதிக்கிறார். கர்த்தரின் ஆலயம் நேர்த்தியாயும், அழகாயும், அலங்காரமாயும் இருக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம். இந்த ஆலயம் வரப்போகிற நன்மையான காரியங்களுக்கு அடையாளமாயிருக்கிறது.

"அந்தக் கூடாரம் இக்காலத்திற்கு உதவுகிற ஒப்பனையாயிருக்கிறது; அதற்கேற்றபடியே செலுத்தப்பட்டுவருகிற காணிக்கைகளும் பலிகளும் ஆராதனை செய்கிறவனுடைய மனச்சாட்சியைப் பூரணப்படுத்தக்கூடாதவைகளாம்" (எபி 9:9).

சாலொமோன் இஸ்ரவேலின்மேல் ராஜாவான நாலாம் வருஷம் ஆலயத்தைக் கட்ட ஆரம்பிக்கிறார். முதல் மூன்று வருஷங்களாக சாலொமோன் தன்னுடைய ராஜ்யபாரத்தை உறுதிபண்ணுகிறார். அதை வலுவாக ஸ்திரப்படுத்துகிறார். சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும்போது, இஸ்ரவேல் தேசத்தில் குழப்பங்கள் இருக்கக்கூடாது. ராஜாங்க காரியங்களில் கலவரங்கள் ஏற்படக்கூடாது. இவையெல்லாம் ஆலயக்கட்டுமான வேலைகளை பாதிக்கும். தேவாலயம் கட்டுவதற்கு முன்பாகவே, சாலொமோன் இஸ்ரவேல் தேசத்திலுள்ள பிரச்சனைகளையெல்லாம் நீக்கிப்போட்டு, அங்கே சமாதானத்தையும், நீதியையும் ஏற்படுத்துகிறார்.

சாலொமோன் ராஜாவான நாலாம் வருஷத்திலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்ட தொடங்குகிறார். அவர் அதற்காக மூன்று வருஷங்கள் ஆயத்த வேலைகளை செய்கிறார். கர்த்தருக்காக ஊழியம் செய்கிறவர்கள், தங்களை ஆயத்தம்பண்ணிக் கொள்ளவேண்டும். ஆயத்தம்பண்ணுகிற காலம் ஒருபோதும் வீணாய்ப்போவதில்லை. ஆயத்தக்காலம் நஷ்டகாலமல்ல. அது ஆதாயத்தின் காலம். நாம் கர்த்தருக்கு ஊழியம் செய்வதற்கு முன்பாக, ஊழியத்திற்கு தடையாகயிருக்கும் எல்லா காரியங்களையும் நம்மைவிட்டு விலக்கிவிடவேண்டும். முழுமனதோடும், முழுஇருதயத்தோடும், முழுபலத்தோடும் கர்த்தருக்கு ஊழியம் செய்ய முன்வரவேண்டும்.

எருசலேமிலே கர்த்தரின் ஆலயம் கட்டப்படுகிறது. ஆலயம் கட்டுவதற்கான பொருட்கள் தீரு தேசத்திலிருந்தும், மற்ற தேசங்களிலிருந்தும் எருசலேமுக்கு கொண்டு வரப்படுகிறது. ஆலயம் கட்டப்படுகையில், அது பணிதீர்ந்து கொண்டுவரப்பட்ட கற்களாலே கட்டப்படுகிறது; ஆகையால் அது கட்டப்படுகிறபோது, சுத்திகள் வாச்சிகள் முதலான எந்த இருப்பு ஆயுதங்களின் சத்தமும் அதிலே கேட்கப்படவில்லை (1இராஜா 6:7).

ஆலயம் கட்டப்படுகிற ஸ்தலத்திலே கூச்சலோ, கூக்குரலோ, உரத்த சத்தமோ கேட்கப்படவில்லை. சகலமும் அமைதியாயும் சமாதானமாயும் நடைபெறுகிறது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சமாதானத்தின் தேவன். அவருடைய ஆலயம் சமாதான ஆலயம். ஆகையினால் ஆலயம் கட்டப்படுகிறபோது, சுத்திகள் வாச்சிகள் முதலான எந்த இருப்பு ஆயுதங்களின் சத்தமும் அதிலே கேட்கப்படவில்லை.

மார்க்க ஆராதனையில் அமைதி இருக்கவேண்டும். அமைதியான சூழ்நிலையே ஆராதனைக்கு ஏற்ற சூழ்நிலை. அமைதியும் சாந்தமும் கர்த்தரைத் துதிப்பதற்கு துணை செய்யும். கர்த்தருடைய ஊழியத்தை மிகவும் கவனமாய்ச் செய்யவேண்டும். ஊழியத்திற்கு தேவையில்லாத சத்தங்களும், ஆரவாரங்களும் இடையூறாயிருக்கக்கூடாது. ஊழியம் செய்யும்போது சிறு சத்தம் ஏற்பட்டால்கூட, அது நம்முடைய செவிகளில் கேட்கும் அளவுக்கு அமைதி இருக்கவேண்டும்.

ஆலயத்திலே சுத்திகளுக்கும், வாச்சிகளுக்கும், வேறு எந்த இருப்பு ஆயுதங்களுக்கும் இடமில்லை. இந்த ஆயுதங்களை ஆலயத்திற்கு வெளியே பயன்படுத்தவேண்டும். ஆலயத்திற்குள்ளே சத்தமில்லாமல் ஆலயத்தைக் கட்டியெழுப்பவேண்டும். தேவையில்லாத ஆடம்பரங்கள், போட்டிகள், பொறாமைகள், கோபங்கள் ஆகியவை தேவனுடைய ஊழியத்தை தடைபண்ணும். ஊழியக்காரர்கள் தங்களுக்குள் சண்டை போட்டுக்கொண்டிருக்கும்போது, கர்த்தருடைய ஊழியத்தை கட்டியெழுப்புவது என்பது இயலாத காரியம்.

கர்த்தருக்கு கட்டப்படுகிற ஆலயத்தின் அளவுகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. சாலொமோன் ராஜா கர்த்தருக்குக் கட்டின ஆலயம் அறுபது முழ நீளமும், இருபது முழ அகலமும், முப்பது முழ உயரமுமாயிருக்கிறது. ஆலயமாகிய அந்த மாளிகையின் முகப்பிலே சாலொமோன் கட்டின மண்டபம் ஆலயத்தின் அகலத்திற்குச் சரியாய் இருபதுமுழ நீளமும், ஆலயத்துக்கு முன்னே பத்துமுழ அகலமுமாயிருக்கிறது (1இராஜா 6:2,3).

ஆசரிப்புக்கூடாரத்தின் நீள அகலத்தைப்போல, தேவாலயத்தின் நீள அளவு இரண்டு மடங்கு அதிகமாயிருப்பதாக வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஆலயத்திற்கு செய்யப்பட்டிருக்கிற ஜன்னல்களைப்பற்றி இங்கே விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சாலொமோன் பார்வைக்குக் குறுகிப்போகிற ஒடுக்கமான ஜன்னல்களை ஆலயத்திற்குச் செய்விக்கிறார் (1இராஜா 6:4).

தேவாலயத்தின் ஜன்னல்கள் உள்ளே அகலமாகவும் வெளியே குறுகலாகவும் இருக்கிறது. அவை பார்வைக்கு குறுகிப்போகிற ஒடுக்கமான ஜன்னல்கள். நம்முடைய மனதின் கண்களும் ஆலயத்தின் ஜன்னல்களைப்போல இருக்கவேண்டும். நம்முடைய மனது நம்மை அதிகமாய்ப் பார்க்கவேண்டும். மற்றவர்களைக் கொஞ்சமாகப் பார்க்கவேண்டும். மற்றவர்களிடத்திலுள்ள தப்பிதங்களை ஆராய்ந்து பார்க்காமல், நம்மிடத்திலுள்ள தப்பிதங்களையும், குற்றம் குறைகளையும் கவனித்துப் பார்க்கும் வண்ணமாக, நம்முடைய மனதின் கண்கள் உள்ளே பெரியதாகவும், வெளியே சிறியதாகவும் இருக்கவேண்டும். அது வெளிப்பார்வைக்கு குறுகிப்போகிற ஒடுக்கமான ஜன்னலைப்போல செயல்படவேண்டும்.

தேவாலயத்தின் சுற்றுக்கட்டுக்களைப் பற்றியும் இங்கே விவரிக்கப்பட்டிருக்கிறது. சாலொமோன் தேவாலயத்தின் சுவரும் சந்நிதி ஸ்தானச்சுவருமாகிய ஆலயத்தின் சுவர்களுக்கு அடுத்ததாய்ச் சுற்றுக்கட்டுகளைக் கட்டி, அவைகளில் அறைகளைச் சுற்றிலும் உண்டாக்குகிறார். கீழே இருக்கிற சுற்றுக்கட்டு ஐந்து முழ அகலமும், நடுவே இருக்கிறது ஆறு முழ அகலமும், மூன்றாவதாயிருக்கிறது ஏழுமுழ அகலமுமாயிருக்கிறது; அவைகள் ஆலயத்தினுடைய சுவர்களிலே தாங்காதபடிக்கு, சாலொமோன் ஆலயத்தைச் சுற்றிலும் புறம்பே ஒட்டுச்சுவர்களைக் கட்டுவிக்கிறார் (1இராஜா 6:5,6).

சாலொமோன் ஆலயத்தின் சுவர்களுக்கு அடுத்ததாய் சுற்றுக்கட்டுக்களைக் கட்டி, அவைகளில் அறைகளை சுற்றிலும் உண்டாக்குகிறார். இந்த அறைகளில் ஆசாரியர்கள் பரிசுத்த பணிமுட்டுக்களை பத்திரமாக வைத்திருப்பார்கள்.

ஆலயத்தின் சுற்றுச்சுவர்கள், ஆலயத்தின் சுவர்களில் ஒட்ட வைக்கப்படவில்லை. சாலொமோன் இதற்காக ஒட்டுச்சுவர்களை தனியாக கட்டுகிறார். இந்தப் பாரத்தை ஆலயத்தின் சுவர்களில் சுமத்தினால், சுவர்கள் பலவீனமாகும். சீக்கிரத்தில் சேதமடையும். ஆலயத்திற்கு அழகை சேர்க்கும்போது, அது ஆலயத்தைப் பலவீனப்படுத்திவிடக்கூடாது. அதுபோலவே திருச்சபைகளிலும் அழகையும், ஆடம்பரத்தையும், நூதன காரியங்களையும் சேர்த்து, சபையின் பரிசுத்தத்தைக் கெடுத்துவிடக்கூடாது.

கர்த்தருடைய ஆலயத்தில் லேவியர்கள் தங்கி ஊழியம் செய்வதற்காகவும், அங்கே பரிசுத்த பணிமுட்டுக்களை பத்திரமாக வைத்திருப்பதற்காகவும், சாலொமோன் ஒரு சில அறைகளைக் கட்டுகிறார். இதுபற்றிய விவரமும் இந்த வசனப்பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது.

நடு அறைகளுக்குப் போகிற வாசற்படி ஆலயத்தின் வலதுபுறத்தில் இருக்கிறது; சுழற்படிகளால் நடு அறைகளுக்கும், நடு அறைகளிலிருந்து மூன்றாவது அறைகளுக்கும் ஏறுவார்கள். இவ்விதமாய் சாலொமோன் ஆலயத்தைக் கட்டி, கேதுருமர உத்திரங்களாலும் பலகைகளாலும் ஆலயத்தை மச்சுப்பாவி முடிக்கிறார். சாலொமோன் ஐந்துமுழ உயரமான சுற்றுக் கட்டுகளை ஆலயத்தின்மேலெங்கும் கட்டுவிக்கிறார்; அவைகள் கேதுருமரங்களால் ஆலயத்தோடே இணைக்கப்பட்டிருக்கிறது (1இராஜா 6:8-10).

"உம்முடைய சத்துருக்கள் உம்முடைய ஆலயங்களுக்குள்ளே கெர்ச்சித்து, தங்கள் கொடிகளை அடையாளங்களாக நாட்டுகிறார்கள். கோடாரிகளை ஓங்கிச் சோலையிலே மரங்களை வெட்டுகிறவன் பேர்பெற்றவனானான். இப்பொழுதோ அவர்கள் அதின் சித்திரவேலைகள் முழுவதையும் வாச்சிகளாலும் சம்மட்டிகளாலும் தகர்த்துப்போடுகிறார்கள்" (சங் 74:4-6).

கர்த்தருடைய வார்த்தை 1இராஜா 6:11-14

1இராஜா 6:11. அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை சாலொமோனுக்கு உண்டாயிற்று; அவர்:

1இராஜா 6:12. நீ என் கட்டளைகளின்படி நடந்து, என் நீதி நியாயங்களை நிறைவேற்றி, என் கற்பனைகளின்படியெல்லாம் நடந்து கொள்ளும்படிக்கு, அவைகளைக் கைக்கொண்டால், நீ கட்டுகிற இந்த ஆலயத்தைக்குறித்து நான் உன் தகப்பனாகிய தாவீதோடே சொன்ன என் வார்த்தையை உன்னிடத்தில் நிறைவேற்றி,

1இராஜா 6:13. இஸ்ரவேல் புத்திரர் நடுவிலே வாசம்பண்ணி, என் ஜனமாகிய இஸ்ரவேலைக் கைவிடாதிருப்பேன் என்றார்.

1இராஜா 6:14. அப்படியே சாலொமோன் ஆலயத்தைக் கட்டி முடித்தான்.

கர்த்தருடைய வார்த்தை சாலொமோனுக்கு உண்டாயிற்று. சாலொமோன் கர்த்தரின் ஆலயத்தை கட்டுகிற வேலையிலே ஈடுபட்டிருக்கிறார். சாலொமோன் கர்த்தருடைய கட்டளைகளின் படி நடக்கவேண்டும். கர்த்தருடைய நீதி நியாயங்களை நிறைவேற்றவேண்டும். சாலொமோன் கர்த்தருடைய கற்பனைகளின் படியெல்லாம் நடந்துகொள்ளும்படிக்கு அவைகளை கைக்கொள்ளவேண்டும். தேவனுடைய தெய்வீக பிரமாணங்களுக்கு கீழ்ப்படிவதே மெய்யான ஆராதனை.

சாலொமோன் கர்த்தருடைய கட்டளைகளின்படி நடக்கும்போது, "நீ கட்டுகிற இந்த ஆலயத்தைக்குறித்து நான் உன் தகப்பனாகிய தாவீதோடே சொன்ன என் வார்த்தையை உன்னிடத்தில் நிறைவேற்றி, இஸ்ரவேல் புத்திரர் நடுவிலே வாசம்பண்ணி, என் ஜனமாகிய இஸ்ரவேலைக் கைவிடாதிருப்பேன்" (1இராஜா 6:12,13) என்று கர்த்தர் சாலொமோனுக்கு சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை தீர்க்கதரிசியின் மூலமாக சாலொமோனுக்கு சொல்லியிருக்கவேண்டும்.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டிக்கொண்டிருக்கிறார். கர்த்தருடைய வாக்குத்தத்தம் சாலொமோனை உற்சாகப்படுத்துகிறது. சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும்போது, கர்த்தர் சொன்ன வார்த்தைகள் அவருக்கு ஆறுதலைக் கொடுக்கிறது.

நாம் கர்த்தருடைய ஊழியத்தை செய்யும்போது, அவருடைய வாக்குத்தத்தையும் நினைவுகூரவேண்டும். ஊழியத்திலே நமக்கு கஷ்டங்களும் சோர்வுகளும் வந்தாலும், கர்த்தருடைய வாக்குத்தத்தம் நம்மை உற்சாகப்படுத்தும். நம்முடைய சோர்வுகளை நீக்கும். கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற ஊழியத்தை சந்தோஷமாய் செய்வதற்கு உதவிசெய்யும்.

கர்த்தருடைய உதவியில்லாமல், நம்முடைய சுயமுயற்சியினாலோ, சுயபிரயாசத்தினாலோ, நம்மால் கர்த்தருக்காக ஒன்றும் செய்யமுடியாது. நமக்கு கர்த்தருடைய உதவியும், ஒத்தாசையும், அநுக்கிரகமும் தேவை. கர்த்தருடைய பிரசன்னம் நம்மோடு கூடயிருக்கவேண்டும். நாம் கர்த்தருடைய கட்டளைகளின்படி நடந்து, அவருடைய நீதி நியாயங்களை நிறைவேற்றும்போது, கர்த்தர் நம் நடுவிலே வாசம்பண்ணுவதாக வாக்குப்பண்ணுகிறார்.

கர்த்தர் சாலொமோனுக்கு சொல்லுகிற வாக்குத்தத்தமான வார்த்தைகள் அவருக்கு ஆசீர்வாதமாயிருந்தாலும், இந்த வார்த்தைகள் அவருக்கு எச்சரிப்பாகவும் சொல்லப்படுகிறது. சாலொமோன் இப்போது கர்த்தருக்கு மிகப்பெரிய ஆலயத்தைக் கட்டிக்கொண்டிருக்கிறார். ஆலயத்தைக் கட்டினால் மாத்திரம் போதாது. ஆலயத்திலே கர்த்தருடைய பிரசன்னமும், அவருடைய மகிமையும் தங்கியிருக்கவேண்டும். சாலொமோன் ஆலயத்தைக் கட்டி முடிக்கும்போது, கர்த்தருடைய மகிமை ஆலயத்தைவிட்டு கடந்துபோய்விட்டால், ஆலயம் என்பது வெறும் கட்டிடமாகத்தான் இருக்கும். கர்த்தருடைய பிரசன்னமும், அவருடைய மகிமையும், இந்த ஆலயத்திலே தங்கவேண்டுமென்றால், அதற்கான நிபந்தனைகளையும் கர்த்தர் சாலொமோனுக்கு சொல்லுகிறார்.

சாலொமோனும், இஸ்ரவேல் ஜனத்தாரும் கர்த்தருடைய கட்டளைகளின்படி நடக்கவேண்டும், கர்த்தருடைய நீதி நியாயங்களை நிறைவேற்றவேண்டும். அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும். அப்போது கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் நடுவிலே வாசம்பண்ணுவார். கர்த்தருடைய மகிமை அவர்கள் கட்டுகிற தேவாலயத்திலே தங்கியிருக்கும்.

சாலொமோன் கர்த்தருக்காக ஆலயத்தைக் கட்டுகிறார். "சாலொமோன் ஆலயத்தைக் கட்டி முடிக்கிறார்" (1இராஜா 6:14). சாலொமோன் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டும்போது கர்த்தருடைய வார்த்தை அவருக்கு உண்டாயிற்று. சாலொமோன் கர்த்தருடைய கட்டளைகளின்படி நடக்கவில்லையென்றால், அவர் கர்த்தருடைய நீதி நியாயங்களை நிறைவேற்றவில்லையென்றால், அவர் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவில்லையென்றால், சாலொமோன் கட்டி முடித்திருக்கிற ஆலயம் கர்த்தருடைய ஆலயமாயிருக்காது. கர்த்தர் இந்த ஆலயத்தில் வாசம்பண்ணமாட்டார். ஆலயத்தில் கர்த்தர் வாசம்பண்ணவில்லையென்றால், அது வெறும் கட்டிடமாகவே இருக்கும். கர்த்தருடைய வார்த்தை சாலொமோனுக்கு தெளிவாக அறிவிக்கப்படுகிறது.

கர்த்தருடைய பரிசுத்தவான்கள் அவருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படியவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகள், அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிய நம்மை உற்சாகப்படுத்தவேண்டும். கர்த்தருடைய பிரமாணங்களைக் கேட்டு, அவற்றைவிட்டு விலகிப்போய்விடக்கூடாது. நாம் கர்த்தருடைய கட்டளைகளின்படி நடப்பதற்கு நம்மை கர்த்தருடைய சமுகத்திலே ஒப்புக்கொடுக்கவேண்டும்.

ஆலயத்தின் விவரம் 1இராஜா 6:15-38

1இராஜா 6:15. ஆலயத்துச் சுவர்களின் உட்புறத்தை, தளம்தொடங்கிச் சுவர்களின் மேல்மச்சுமட்டும், கேதுருப்பலகைகளால் மூடி, இப்படி உட்புறத்தை மரவேலையாக்கி, ஆலயத்தின் தளத்தை தேவதாரி விருட்சங்களின் பலகைகளால் தளவரிசைப்படுத்தினான்.

1இராஜா 6:16. தளவரிசை தொடங்கிச் சுவர்களின் உயரமட்டும் ஆலயத்தின் பக்கங்களைத் தொடர்ந்திருக்கிற இருபதுமுழ நீளமான மறைப்பையும் கேதுருப்பலகைகளால் உண்டாக்கி, உட்புறத்தை மகா பரிசுத்தமான சந்நிதி ஸ்தானமாகக் கட்டினான்.

1இராஜா 6:17. அதின் முன்னிருக்கிற தேவாலயமாகிய மாளிகை நாற்பதுமுழ நீளமாயிருந்தது.

1இராஜா 6:18. ஆலயத்திற்குள் இருக்கிற கேதுரு மரங்களில் மொக்குகளும் மலர்ந்த பூக்களுமான சித்திரவேலை செய்திருந்தது; பார்வைக்கு ஒரு கல்லாகிலும் காணப்படாமல் எல்லாம் கேதுருமரமாயிருந்தது.

1இராஜா 6:19. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை வைக்கிறதற்கு ஆலயத்துக்குள்ளே சந்நிதி ஸ்தானத்தை ஆயத்தப்படுத்தினான்.

1இராஜா 6:20. சந்நிதி ஸ்தானம் முன்புறமட்டும் இருபதுமுழ நீளமும், இருபதுமுழ அகலமும், இருபதுமுழ உயரமுமாயிருந்தது; அதைப் பசும்பொன்தகட்டால் மூடினான்; கேதுருமரப் பலிபீடத்தையும் அப்படியே மூடினான்.

1இராஜா 6:21. ஆலயத்தின் உட்புறத்தைச் சாலொமோன் பசும்பொன்தகட்டால் மூடி, சந்நிதி ஸ்தானத்தின் மறைப்புக்கும் பொன் சங்கிலிகளைக் குறுக்கே போட்டு, அதைப் பொன்தகட்டால் மூடினான்.

1இராஜா 6:22. இப்படி ஆலயம் முழுவதும் கட்டித் தீருமட்டும், அவன் ஆலயம் முழுவதையும் பொன்தகட்டால் மூடி, சந்நிதி ஸ்தானத்திற்கு முன்பாக இருக்கிற பலிபீடத்தை முழுவதும் பொன்தகட்டால் மூடினான்.

1இராஜா 6:23. சந்நிதி ஸ்தானத்தில் ஒலிவமரங்களால் இரண்டு கேருபீன்களைச் செய்து வைத்தான்; ஒவ்வொன்றும் பத்துமுழ உயரமாயிருந்தது.

1இராஜா 6:24. கேருபீனுக்கு இருக்கிற ஒரு செட்டை ஐந்து முழமும் கேருபீனின் மற்றச் செட்டை ஐந்து முழமுமாய், இப்படி ஒரு செட்டையின் கடைசிமுனை தொடங்கி மற்றச் செட்டையின் கடைசிமுனைமட்டும் பத்து முழமாயிருந்தது.

1இராஜா 6:25. மற்றக் கேருபீனும் பத்து முழமாயிருந்தது; இரண்டு கேருபீன்களும் ஒரே அளவும் ஒரே திட்டமுமாயிருந்தது.

1இராஜா 6:26. ஒரு கேருபீன் பத்துமுழ உயரமாயிருந்தது; மற்றக் கேருபீனும் அப்படியே இருந்தது.

1இராஜா 6:27. அந்தக் கேருபீன்களை உள் ஆலயத்திலே வைத்தான்; கேருபீன்களின் செட்டைகள் விரித்திருந்ததினால், ஒரு கேருபீனின் செட்டை ஒருபக்கத்துச் சுவரிலும், மற்றக் கேருபீனின் செட்டை மறுபக்கத்துச் சுவரிலும் தொடத்தக்கதாயிருந்தது; ஆலயத்தின் நடுமையத்தில், அவைகளின் செட்டைகள் ஒன்றோடொன்று தொடத்தக்கதாயிருந்தது.

1இராஜா 6:28. அந்தக் கேருபீன்களைப் பொன்தகட்டால் மூடினான்.

1இராஜா 6:29. ஆலயத்தின் சுவர்களையெல்லாம் அவன் சுற்றிலும் உள்ளும் புறம்புமாகக் கேருபீன்களும் பேரீந்துகளும் மலர்ந்த பூக்களுமான சித்திரங்களும் கொத்து வேலைகளுமாக்கினான்.

1இராஜா 6:30. உள்ளும் புறம்புமாயிருக்கிற ஆலயத்துத் தளவரிசையையும் பொன்தகட்டால் மூடினான்.

1இராஜா 6:31. சந்நிதி ஸ்தானத்தின் வாசலுக்கு ஒலிவமரங்களால் இரட்டைக் கதவுகளைச் செய்தான்; மேல்சட்டமும் நிலைகளும் மறைப்பின் அளவில் ஐந்தில் ஒரு பங்காயிருந்தது.

1இராஜா 6:32. ஒலிவமரமான அந்த இரட்டைக் கதவுகளில் அவன் கேருபீன்களும் பேரீந்துகளும் மலர்ந்த பூக்களுமான சித்திரங்களைச் செய்து, அந்தக் கேருபீன்களிலும் பேரீந்துகளிலும் பொன்பதியத்தக்கதாய்ப் பொன்தகட்டால் மூடினான்.

1இராஜா 6:33. இப்படி தேவாலயத்தின் வாசலுக்கும் ஒலிவமர நிலைகளைச் செய்தான்; அது சுவர் அளவில் நாலத்தொரு பங்காயிருந்தது.

1இராஜா 6:34. அதின் இரண்டு கதவுகளும் தேவதாரிப் பலகைகளால் செய்யப்பட்டிருந்தது; ஒரு கதவுக்கு இரண்டு மடிப்புப் பலகைகளும், மற்றக் கதவுக்கு இரண்டு மடிப்புப் பலகைகளும் இருந்தது.

1இராஜா 6:35. அவைகளில் கேருபீன்களும் பேரீந்துகளும் மலர்ந்த பூக்களுமான சித்திர வேலையைச் செய்து, சித்திரங்களுக்குச் சரியாக செய்யப்பட்ட பொன்தகட்டால் அவைகளை மூடினான்.

1இராஜா 6:36. அவன் உட்பிராகாரத்தை மூன்று வரிசை வெட்டின கற்களாலும், ஒரு வரிசை கேதுருப் பலகைகளாலும் கட்டினான்.

1இராஜா 6:37. நாலாம் வருஷம் சீப்மாதத்திலே கர்த்தருடைய ஆலயத்துக்கு அஸ்திபாரம் போட்டு,

1இராஜா 6:38. பதினோராம் வருஷம் பூல் என்னும் எட்டாம் மாதத்திலே, அந்த ஆலயமுழுதும் சகல சட்டதிட்டத்தின்படியே ஒரு பங்கும் குறையாமல் கட்டித் தீர்ந்தது; அவன் அதைக் கட்டிமுடிக்க ஏழுவருஷம் சென்றது.

ஆலயத்தின் சுவர்களைப்பற்றியும், அதன் தளத்தைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சாலொமோன் ஆலயத்துச் சுவர்களின் உட்புறத்தை, தளம்தொடங்கிச் சுவர்களின் மேல்மச்சுமட்டும், கேதுருப்பலகைகளால் மூடி, இப்படி உட்புறத்தை மரவேலையாக்கி, ஆலயத்தின் தளத்தை தேவதாரி விருட்சங்களின் பலகைகளால் தளவரிசைப்படுத்துகிறார் (1இராஜா 6:15).

சாலொமோன் தளவரிசை தொடங்கிச் சுவர்களின் உயரமட்டும் ஆலயத்தின் பக்கங்களைத் தொடர்ந்திருக்கிற இருபதுமுழ நீளமான மறைப்பையும் கேதுருப்பலகைகளால் உண்டாக்கி, உட்புறத்தை மகா பரிசுத்தமான சந்நிதி ஸ்தானமாகக் கட்டுகிறார். அதின் முன்னிருக்கிற தேவாலயமாகிய மாளிகை நாற்பதுமுழ நீளமாயிருக்கிறது (1இராஜா 6:16,17).

ஆலயத்திற்குள் இருக்கிற கேதுரு மரங்களில் மொக்குகளும் மலர்ந்த பூக்களுமான சித்திரவேலை செய்திருக்கிறது; பார்வைக்கு ஒரு கல்லாகிலும் காணப்படாமல் எல்லாம் கேதுருமரமாயிருக்கிறது (1இராஜா 6:18). கேதுரு மரம் வலுவானது. நீடித்து உழைக்கக்கூடியது. கேதுரு மரம் நறுமணத்தைக் கொடுக்கக்கூடியது.

ஆலயத்தின் உட்புறத்தைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சாலொமோன் ஆலயத்தின் உட்புறத்தை பசும்பொன்தகட்டால் மூடி, சந்நிதி ஸ்தானத்தின் மறைப்புக்கும் பொன் சங்கிலிகளைக் குறுக்கே போட்டு, அதைப் பொன்தகட்டால் மூடுகிறார் (1இராஜா 6:21).

சாலொமோன் இப்படி ஆலயம் முழுவதும் கட்டித் தீருமட்டும், அவர் ஆலயம் முழுவதையும் பொன்தகட்டால் மூடி, சந்நிதி ஸ்தானத்திற்கு முன்பாக இருக்கிற பலிபீடத்தை முழுவதும் பொன்தகட்டால் மூடுகிறார் (1இராஜா 6:22). சாலொமோன் உள்ளும் புறம்புமாயிருக்கிற ஆலயத்துத் தளவரிசையையும் பொன்தகட்டால் மூடுகிறார் (1இராஜா 6:30).

சாலொமோன் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை வைக்கிறதற்கு ஆலயத்துக்குள்ளே சந்நிதி ஸ்தானத்தை ஆயத்தப்படுத்துகிறார். சந்நிதி ஸ்தானம் முன்புறமட்டும் இருபதுமுழ நீளமும், இருபதுமுழ அகலமும், இருபதுமுழ உயரமுமாயிருக்கிறது; சாலொமோன் அதைப் பசும்பொன்தகட்டால் மூடுகிறார்; கேதுருமரப் பலிபீடத்தையும் அப்படியே மூடுகிறார் (1இராஜா 6:19,20).

கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டி வைக்கப்பட்டிருக்கிற இடம் சந்நிதி ஸ்தானம் என்று அழைக்கப்படுகிறது. இது மகாபரிசுத்த ஸ்தலம். கர்த்தர் இந்த ஸ்தலத்திலே மோசேயோடு பேசினார். பிரதான ஆசாரியரோடு பேசினார். ஆகையினால் இந்த சந்நிதி ஸ்தானம், "கர்த்தர் பேசுகிற ஸ்தானம்" என்று அழைக்கப்படுகிறது.

சாலொமோன் எல்லாவற்றையும் புதிதாய்ச் செய்கிறார். ஆனாலும் அவர் உடன்படிக்கைப்பெட்டியை புதிதாய்ச் செய்யவுமில்லை. ஏற்கெனவே இருந்த உடன்படிக்கைப்பெட்டியை சாலொமோன் மாற்றி அமைக்கவுமில்லை. மோசே செய்த அதே உடன்படிக்கைப்பெட்டியை சாலொமோன் ஆலயத்திலுள்ள சந்நிதி ஸ்தானத்திலே வைக்கிறார்.

உடன்படிக்கைப் பெட்டி கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளம். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை ஆசரிப்புக்கூடாரத்திலே சந்திக்க வந்தாலும், ஆலயத்திலே சந்திக்க வந்தாலும், கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி இருக்கும் இடத்தில் அவருடைய பிரசன்னம் இருக்கிறது. கர்த்தர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர். அவர் ஒருபோதும் சூழ்நிலைகளுக்குத்தக்க பிரகாரம் தம்மை மாற்றிக்கொள்கிறவரல்ல.

இந்த வசனப்பகுதியில் கேருபீன்களைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. சாலொமோன் சந்நிதி ஸ்தானத்தில் ஒலிவமரங்களால் இரண்டு கேருபீன்களைச் செய்து வைக்கிறார்; ஒவ்வொன்றும் பத்துமுழ உயரமாயிருக்கிறது. கேருபீனுக்கு இருக்கிற ஒரு செட்டை ஐந்து முழமும் கேருபீனின் மற்றச் செட்டை ஐந்து முழமுமாய், இப்படி ஒரு செட்டையின் கடைசிமுனை தொடங்கி மற்றச் செட்டையின் கடைசிமுனைமட்டும் பத்து முழமாயிருக்கிறது (1இராஜா 6:23,24).

மற்றக் கேருபீனும் பத்து முழமாயிருக்கிறது; இரண்டு கேருபீன்களும் ஒரே அளவும் ஒரே திட்டமுமாயிருக்கிறது. ஒரு கேருபீன் பத்துமுழ உயரமாயிருக்கிறது; மற்றக் கேருபீனும் அப்படியே இருக்கிறது (1இராஜா 6:25,26).

சாலொமோன் அந்தக் கேருபீன்களை உள் ஆலயத்திலே வைக்கிறார்; கேருபீன்களின் செட்டைகள் விரித்திருந்ததினால், ஒரு கேருபீனின் செட்டை ஒருபக்கத்துச் சுவரிலும், மற்றக் கேருபீனின் செட்டை மறுபக்கத்துச் சுவரிலும் தொடத்தக்கதாயிருக்கிறது; ஆலயத்தின் நடுமையத்தில், அவைகளின் செட்டைகள் ஒன்றோடொன்று தொடத்தக்கதாயிருக்கிறது. சாலொமோன் அந்தக் கேருபீன்களைப் பொன்தகட்டால் மூடுகிறார் (1இராஜா 6:27,28).

புறஜாதியார் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். புறஜாதியார் தங்கள் தெய்வங்களுக்கு உருவங்களைக் கொடுத்து, அவற்றை விக்கிரகங்களாக செய்து, அவற்றை ஆராதிக்கிறார்கள். கர்த்தருடைய ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கிற கேருபீன்கள் புறஜாதியாரின் விக்கிரகங்களைப் போன்றதல்ல. கேருபீன்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு பணிவிடை செய்கிற பரிசுத்த தூதர்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கேருபீன்களை ஆராதிக்கமாட்டார்கள்.

சந்நிதி ஸ்தானத்தின் வாசலைப்பற்றியும், அதன் கதவுகளைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் விவரிக்கப்பட்டிருக்கிறது. சாலொமோன் சந்நிதி ஸ்தானத்தின் வாசலுக்கு ஒலிவமரங்களால் இரட்டைக் கதவுகளைச் செய்கிறார்; மேல்சட்டமும் நிலைகளும் மறைப்பின் அளவில் ஐந்தில் ஒரு பங்காயிருக்கிறது (1இராஜா 6:31).

சாலொமோன் ஒலிவமரமான அந்த இரட்டைக் கதவுகளில் கேருபீன்களும் பேரீந்துகளும் மலர்ந்த பூக்களுமான சித்திரங்களைச் செய்கிறார். அந்தக் கேருபீன்களிலும் பேரீந்துகளிலும் பொன்பதியத்தக்கதாய்ப் பொன்தகட்டால் மூடுகிறார் (1இராஜா 6:32).

சாலொமோன் இப்படி தேவாலயத்தின் வாசலுக்கும் ஒலிவமர நிலைகளைச் செய்கிறார்; அது சுவர் அளவில் நாலத்தொரு பங்காயிருக்கிறது. அதின் இரண்டு கதவுகளும் தேவதாரிப் பலகைகளால் செய்யப்பட்டிருக்கிறது; ஒரு கதவுக்கு இரண்டு மடிப்புப் பலகைகளும், மற்றக் கதவுக்கு இரண்டு மடிப்புப் பலகைகளும் இருக்கிறது (1இராஜா 6:33,34).

சாலொமோன் அவைகளில் கேருபீன்களும் பேரீந்துகளும் மலர்ந்த பூக்களுமான சித்திர வேலையைச் செய்கிறார். அவைகளை சித்திரங்களுக்குச் சரியாக செய்யப்பட்ட பொன்தகட்டால் மூடுகிறார் (1இராஜா 6:35).

சாலொமோன் தேவாலயத்தின் உட்பிராகாரத்தை மூன்று வரிசை வெட்டின கற்களாலும், ஒரு வரிசை கேதுருப் பலகைகளாலும் கட்டுகிறார் (1இராஜா 6:36). உட்பிரகாரத்தில் வெண்கல பலிபீடம் வைக்கப்பட்டிருக்கிறது. ஆசாரியர்கள் இந்தப் பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனபலிகளை செலுத்தி ஊழியம் செய்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் தேவாலயத்திற்குள்ளே பிரவேசிக்கும்போது, அவர்கள் வெளிப்பிரகாரத்திலிருப்பார்கள். வெண்கல பலிபீடம் உட்பிரகாரத்திலிருக்கும். இரண்டு பிரகாரங்களுக்கும் நடுவே மூன்று வரிசை வெட்டின கற்களால் கட்டப்பட்ட சிறிய சுவர் இருக்கிறது. மேலும் ஒரு வரிசை அங்கே கேதுரு பலகைகளால் கட்டப்பட்டிருக்கிறது. இந்த சுவர் உயரமாகயிராமல் தாழ்வாகயிருக்கும். வெளிப்பிரகாரத்திலிருக்கிற ஜனங்கள், உட்பிரகாரத்திலிருக்கிற ஆசாரியரை பார்க்க முடியும். அவர்களோடு பேசமுடியும். ஆசாரியர்கள் சொல்லுவதை கேட்க முடியும். அதற்கேற்றாற்போல் இந்த சுவர்கள் தணிவாகயிருக்கிறது.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தை கட்டி முடிக்க ஏழுவருஷமாயிற்று. அவர் நாலாம் வருஷம் சீப்மாதத்திலே கர்த்தருடைய ஆலயத்துக்கு அஸ்திபாரம் போட்டார். பதினோராம் வருஷம் பூல் என்னும் எட்டாம் மாதத்திலே, அந்த ஆலயமுழுதும் சகல சட்டதிட்டத்தின்படியே ஒரு பங்கும் குறையாமல் கட்டித் தீர்ந்தது (1இராஜா 6:37,38).

ஆலயத்தின் வியாக்கியானம்

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டினார். இந்த ஆலயம் ஆவிக்குரிய காரியங்களுக்கு அடையாளமாயிருக்கிறது. வேதபண்டிதர்கள் சாலொமோன் கட்டின ஆலயத்திற்கு ஞானஅர்த்தங்களையும், வியாக்கியானங்களையும், தாற்பரியங்களையும் சொல்லுகிறார்கள்.

சாலொமோன் கட்டின தேவாலயத்திற்கு வேதபண்டிதர்கள் நான்கு வியாக்கியானங்களை சொல்லுகிறார்கள். அவற்றின் விவரம் வருமாறு:

1. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே மெய்யான ஆலயமாயிருக்கிறார்.

2. ஒவ்வொரு விசுவாசியும் ஜீவனுள்ள ஆலயமாயிருக்கிறோம்.

3. சுவிசேஷ சபையானது இரகசிய ஆலயமாயிருக்கிறது.

4. பரலோகமே நித்திய ஆலயம். கர்த்தருடைய ஆலயம் பரலோகத்தில் நிரந்தரமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே மெய்யான ஆலயமாயிருக்கிறார். கிறிஸ்து தாமே தம்முடைய சரீரத்தை ஆலயம் என்று சொல்லியிருக்கிறார். "அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார்" (யோவா 2:21).

பிதாவானவர் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஒரு சரீரத்தை ஆயத்தம்பண்ணினார். "ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது: பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்" (எபி 10:5).

தேவத்துவத்தின் பரிபூரணம் இயேசுகிறிஸ்துவில் வாசம்பண்ணுகிறது. தேவனுடைய ஆலயத்தில் அவருடைய ஷேக்கைனா மகிமை தங்கியிருப்பதற்கு ஒப்பாக, கிறிஸ்து இயேசுவுக்குள்ளே தேவத்துவத்தின் பரிபூரணம் வாசம்பண்ணுகிறது.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை தம்முடைய சந்நிதி ஸ்தானத்தில் சந்திக்கிறார். பிதாவாகிய தேவன், தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்குள், தேவனுடைய ஆவிக்குரிய இஸ்ரவேலர் எல்லோரையும் சந்திக்கிறார். விசுவாசிகளாகிய நாம் இயேசுகிறிஸ்துவின் மூலமாக பிதாவினிடத்தில் கிட்டிச்சேருகிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

ஒவ்வொரு விசுவாசியும் ஜீவனுள்ள ஆலயமாயிருக்கிறோம். தேவனுடைய ஆவியானவர் நமக்குள்ளே வாசம்பண்ணுகிறார். "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?" (1கொரி 3:16).

நம்முடைய சரீரம் ஆத்துமாவோடு இணைக்கப்பட்டிருக்கிறது. "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?" (1கொரி 6:19).

தேவன் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக நம்மை அற்புதமாய் சிருஷ்டித்திருக்கிறார். கர்த்தர் தம்முடைய தெய்வீக கிருபையினால், நம்மை புதுப்பிக்கவும் செய்திருக்கிறார். ஜீவனுள்ள ஆலயமாயிருக்கிற நாம் கிறிஸ்துவின்மீது கட்டியெழுப்பப்பட்டிருக்கிறோம். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு கிறிஸ்துவே அஸ்திபாரம். ஏற்ற வேளையிலே விசுவாசிகளாகிய நாம் கிறிஸ்துவுக்குள் பரிபூரணமடைவோம்.

சுவிசேஷ சபையானது இரகசிய ஆலயமாயிருக்கிறது. சபை கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக கட்டியெழுப்பப்படுகிறது. "அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது" (எபே 2:21).

பரிசுத்த ஆவியானவரின் கிருபைகளினாலும் வரங்களினாலும் ஆலயம் அழகுபடுத்தப்படுகிறது. சாலொமோன் கட்டின தேவாலயம் பொன்னாலும், விலையேறப்பெற்ற கற்களாலும் அழகுபடுத்தப்பட்டதுபோல, சுவிசேஷ சபை பரிசுத்த ஆவியானவரின் கிருபைகளாலும் வரங்களாலும் அழகுபடுத்தப்பட்டு, அலங்காரமாயிருக்கிறது.

சுவிசேஷ சபையிலே, கர்த்தரைத் தொழுதுகொள்கிறவர்கள், பரிசுத்த அலங்காரத்துடனே அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்.

யூதர்கள் மாத்திரமே ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்டினார்கள். கர்த்தருடைய ஆலயத்தையோ, யூதரோடு புறஜாதியாரும் சேர்ந்து கட்டினார்கள். அந்நியரும் புறஜாதியாரும், பரிசுத்தவான்களோடே, தேவனுடைய வாசஸ்தலமாக கட்டப்பட்டு வருகிறார்கள்.

"ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து...............அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறீர்கள்" (எபே 2:19,22).

தேவாலயத்தில் பரிசுத்த ஸ்தலம், மகாபரிசுத்த ஸ்தலம் என்று இரண்டு பகுதிகள் உள்ளன. தேவாலயத்தின் பிரகாரங்களும், வெளிப்பிரகாரம், உட்பிரகாரம் என்று பிரிக்கப்பட்டிருக்கிறது. அதுபோலவே சபையும் தரிசன சபை என்றும், அதரிசன சபை என்றும், இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

தேவாலயத்தின் சந்நிதி ஸ்தானத்திற்குள் பிரவேசிக்கிற கதவைவிட தேவாலயத்தின் வெளிப்பிரகாரத்திற்குள் பிரவேசிக்கிற கதவு அகலமாகயிருக்கும். சந்நிதி ஸ்தானத்தில் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. தேவாலயத்தில் அநேகர் பிரவேசித்தாலும், ஒரு சிலர் மாத்திரமே சந்நிதி ஸ்தானத்திற்குள் பிரவேசிப்பார்கள். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை அநேகர் கேள்விப்பட்டாலும், ஒரு சிலருடைய ஆத்துமாக்கள் மாத்திரமே இரட்சிக்கப்படுகிறது.

பரலோகமே நித்திய ஆலயம். கர்த்தருடைய ஆலயம் பரலோகத்தில் நிரந்தரமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும். ஆசரிப்புக்கூடாரத்தை ஒரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பேர்த்தெடுத்து சென்றதுபோல, பரலோகத்திலுள்ள தேவாலயத்தை பேர்த்தெடுக்க முடியாது. அந்த ஆலயம் எந்த ஸ்தலத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதோ, அங்கே உறுதியாக நிலைத்திருக்கும்.

சாலொமோன் கட்டின தேவாலயத்தின் தளவரிசை கேதுரு மரத்தால் மூடப்பட்டிருக்கிறது. புதிய எருசலேமின் வீதிகளெல்லாம் பொன்னாயிருக்கும்.

"பன்னிரண்டு வாசல்களும், பன்னிரண்டு முத்துக்களாயிருந்தன; ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு முத்தாயிருந்தது. நகரத்தின் வீதி தெளிவுள்ள பளிங்குபோலச் சுத்தப்பொன்னாயிருந்தது" (வெளி 21:21).

பரலோகத்திலே கேருபீன்கள் கர்த்தருடைய மகிமையான சிங்காசனத்திற்கு முன்பாக, கர்த்தரை எப்போதும் துதித்துக்கொண்டிருக்கும். சாலொமோன் கட்டின தேவாலயம் ஒழுங்கும் கிரமமுமாக கட்டப்பட்டிருக்கிறது. ஆனாலும் இதில் சில குறைகள் இருக்கலாம். பரலோகத்தின் தேவாலயமோ அழகிலும், பரிசுத்தத்திலும், ஒற்றுமையிலும் பரிபூரணமானது.

1 இராஜாக்கள் - விரிவுரை
I KINGS - COMMENTARY

சாலொமோன் கட்டின தேவாலயத்தில் கத்திகள், வாச்சிகள் முதலான எந்த இருப்பு ஆயுதங்களின் சத்தமும் அதிலே கேட்கப்படவில்லை. பரலோகத்தில் எல்லாமே அமைதியாகயிருக்கும். கர்த்தரைத் துதிக்கும் துதியின் சத்தம் மாத்திரம் அங்கு கேட்கும்.

சாலொமோன் ஆலயத்தைக் கட்டும்போது, அது பணிதீர்ந்து கொண்டு வரப்பட்ட கற்களாலே கட்டப்பட்டது.

விசுவாசிகளாகிய நாம் கர்த்தருடைய ஆலயத்தின் கற்களாகயிருக்கிறோம். நாம் பூமியிலே ஜீவிக்கிற நாட்களிலே, பரிசுத்த ஆவியானவர் நம்மை தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக உருவாக்குகிறார். நாம் பரலோகத்திற்குள் பிரவேசிக்கும்போது பணிதீர்ந்த கற்களாக பிரவேசிப்போம்.

7 அதிகாரம்

சாலொமோன் தனக்காக அநேக கட்டிடங்களைக் கட்டுகிறார். இவையெல்லாம் அவருடைய சொந்த உபயோகத்திற்காக கட்டப்பட்டவையாகும் (1இராஜா 7:1-12). சாலொமோன் கர்த்தருக்கு கட்டின ஆலயத்திலே பரிசுத்த பணிமுட்டுக்களை வைக்கிறார். இரண்டு வெண்கல தூண்கள் (1இராஜா 7:13-22). ஒரு வெண்கலக்கடல் என்னும் கடல்தொட்டி (1இராஜா 7:23-26). பத்து வெண்கல ஆதாரங்கள் (1இராஜா 7:27-37). பத்து வெண்கலக் கொப்பரைகள் (1இராஜா 7:38,39). தேவாலயத்தில் பயன்படுத்தப்படும் இதர பணிமுட்டுகள் (1இராஜா 7:40-50).

தாவீது பரிசுத்தம்பண்ணும்படி நேர்ந்துகொண்ட வெள்ளியையும், பொன்னையும் பணிமுட்டுகளையும் சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களில் வைக்கிறார் (1இராஜா 7:51).

சாலொமோன் கட்டின கட்டிடங்கள் 1இராஜா 7:1-12

1இராஜா 7:1. சாலொமோன் தன் அரமனை முழுவதையும் கட்டிமுடிக்க பதின்மூன்று வருஷம் சென்றது.

1இராஜா 7:2. அவன் லீபனோன் வனம் என்னும் மாளிகையையும் கட்டினான்; அது நூறு முழ நீளமும், ஐம்பதுமுழ அகலமும், முப்பதுமுழ உயரமுமாயிருந்தது; அதைக் கேதுருமர உத்திரங்கள் பாவப்பட்ட கேதுருமரத்தூண்களின் நாலு வரிசைகளின்மேல் கட்டினான்.

1இராஜா 7:3. ஒவ்வொரு வரிசைக்குப் பதினைந்து தூண்களாக நாற்பத்தைந்து தூண்களின் மேல் வைக்கப்பட்ட உத்திரங்களின் மேல் கேதுருக்களால் மச்சுப்பாவியிருந்தது.

1இராஜா 7:4. மூன்று வரிசை ஜன்னல்கள் இருந்தது; மூன்று வரிசையிலும் ஜன்னல்கள், ஒன்றுக்கொன்று எதிராயிருந்தது.

1இராஜா 7:5. ஜன்னல்களின் வாசல்களும் சட்டங்களும் எல்லாம் சதுரமாயிருந்தது; மூன்று வரிசையிலும் ஜன்னல்கள் ஒன்றுக்கொன்று எதிராயிருந்தது.

1இராஜா 7:6. ஐம்பதுமுழ நீளமும் முப்பதுமுழ அகலமுமான மண்டபத்தையும் தூண்கள் நிறுத்திக் கட்டினான்; அந்த மண்டபமும், அதின் தூண்களும், உத்திரங்களும், மாளிகையின் தூண்களுக்கும் உத்திரங்களுக்கும் எதிராயிருந்தது.

1இராஜா 7:7. தான் இருந்து நியாயம் தீர்க்கிறதற்கு நியாயாசனம் போட்டிருக்கும் ஒரு நியாயவிசாரணை மண்டபத்தையும் கட்டி, அதின் ஒருபக்கம் துவக்கி மறுபக்கமட்டும் கேதுருப்பலகைகளால் தளவரிசைப்படுத்தினான்.

1இராஜா 7:8. அவன் வாசம்பண்ணும் அவனுடைய அரமனை மண்டபத்திற்குள்ளே அதேமாதிரியாகச் செய்யப்பட்ட வேறொரு மண்டபமும் இருந்தது. சாலொமோன் விவாகம்பண்ணின பார்வோனின் குமாரத்திக்கும் அந்த மண்டபத்தைப்போல ஒரு மாளிகையைக் கட்டுவித்தான்.

1இராஜா 7:9. இவைகளெல்லாம், உள்ளும் புறம்பும், அஸ்திபாரமுதல் மேல்திரணைகள்மட்டும் வெளியே இருக்கும் பெரிய முற்றம்வரைக்கும், அளவுபடி வெட்டி வாளால் அறுக்கப்பட்ட விலையேறப்பெற்ற கற்களால் செய்யப்பட்டது.

1இராஜா 7:10. அஸ்திபாரம் பத்துமுழக் கற்களும், எட்டுமுழக் கற்களுமான விலையேறப் பெற்ற பெரிய கற்களாயிருந்தது.

1இராஜா 7:11. அதின்மேல் உயர அளவுபடி பணிப்படுத்தின விலையேறப்பெற்ற கற்களும், கேதுருமரங்களும் வைக்கப்பட்டிருந்தது.

1இராஜா 7:12. பெரிய முற்றத்திற்குச் சுற்றிலும் மூன்று வரிசைக் கேதுருமர உத்திரங்களாலும் ஒரு வரிசை பணிப்படுத்தின கற்களாலும் செய்யப்பட்டிருந்தது; கர்த்தருடைய ஆலயத்தின் உட்பிராகாரத்திற்கும், அதின் முன்மண்டபத்திற்கும் அப்படியே செய்யப்பட்டிருந்தது.

சாலொமோனைப்போல வேறு யாரும் இத்தனை கட்டிடங்களை இதுவரையிலும் வெகுநேர்த்தியாகக் கட்டினதில்லை. சாலொமோன் ஒவ்வொரு கட்டிடத்தையும் ஒரு முக்கியமான நோக்கத்திற்காக கட்டுகிறார். சாலொமோன் கட்டின முதலாவது கட்டிடம் கர்த்தருக்கு தேவாலயமாகும். சாலொமோன் கர்த்தருக்காக முதலாவது கட்டுகிறார். அதன்பின்பு அவர் தனக்குத் தேவையான மற்ற கட்டிடங்களைக் கட்டுகிறார்.

சாலொமோன் தனக்கு ஒரு மாளிகையைக் கட்டுகிறார். சாலொமோன் இந்த அரமனை மண்டபத்திற்குள்ளே வாசம்பண்ணுகிறார் (1இராஜா 7:8).

தாவீது ராஜாவும் ஒரு மாளிகையைக் கட்டினார். ஆனாலும் சாலொமோன் அந்த மாளிகையில் திருப்தியடையாமல், தன்னுடைய திட்டத்தின் பிரகாரமாகவும், விருப்பத்தின் பிரகாரமாகவும் தனக்கு இந்த மாளிகையைக் கட்டியிருக்கிறார். நாம் கட்டுகிற வீடு நமக்கு திருப்தியாயிருக்கவேண்டும். அப்போதுதான் அந்த வீட்டிலே வாசம்பண்ணும்போது நமக்கு ஆறுதலும், சமாதானமும், சந்தோஷமும் இருக்கும்.

சாலொமோன் தன் அரமனை முழுவதும் கட்டி முடிக்க பதிமூன்று வருஷம் சென்றது (1இராஜா 7:1). அவர் தேவாலயத்தை கட்டி முடிக்க ஏழு வருஷம் சென்றது. சாலொமோன் தன்னுடைய சொந்த அரமனையை அவசரப்பட்டு கட்டவில்லை. நிதானமாகவும், பொறுமையாகவும் கட்டுகிறார். கர்த்தருடைய ஆலயத்தையோ, சீக்கிரமாகக் கட்டி முடிக்க வேண்டும் என்னும் வைராக்கியத்தோடு, அதை ஏழு வருஷத்தில் கட்டி முடித்துவிட்டார்.

சாலொமோன் லீபனோன் வனம் என்னும் மாளிகையையும் கட்டுகிறார்; அது நூறு முழ நீளமும், ஐம்பதுமுழ அகலமும், முப்பதுமுழ உயரமுமாயிருக்கிறது; அதைக் கேதுருமர உத்திரங்கள் பாவப்பட்ட கேதுருமரத்தூண்களின் நாலு வரிசைகளின்மேல் கட்டுகிறார் (1இராஜா 7:2).

லீபனோன் வனம் என்னும் மாளிகை பட்டணத்தில் கட்டப்படவில்லை. இது ஒரு கிராமப்பகுதியிலோ அல்லது பட்டணத்திற்கு சற்று தூரத்திலோ கட்டப்பட்டிருக்க வேண்டும். லீபனோன் வனம் என்னும் மாளிகையைச் சுற்றிலும் மரங்கள் அடர்ந்து வளர்ந்திருக்கிறது. சாலொமோன் எருசலேமிலும் கட்டிடம் கட்டுகிறார். லீபனோனிலும் கட்டிடம் கட்டுகிறார்.

"சாலொமோன் தனக்கு இருக்கிற ரஸ்துக்களை வைக்கும் சகல பட்டணங்களையும், இரதங்கள் இருக்கும் பட்டணங்களையும், குதிரை வீரர் இருக்கும் பட்டணங்களையும், எருசலேமிலும் லீபனோனிலும், தான் அரசாண்ட தேசமெங்கும் தனக்கு இஷ்டமானதையெல்லாம் கட்டினான்" (1இராஜா 9:19).

லீபனோனின் கோபுரத்தைப்பற்றி யூதருடைய சரித்திர புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இது தமஸ்கு பட்டணத்தை நோக்கிப் பார்த்த வண்ணமாக கட்டப்பட்டிருக்கிறது. லீபனோனின் கோபுரம் என்பது, லீபனோன் வனம் என்னும் மாளிகையின் ஒரு பகுதி என்று சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள்.

லீபனோன் வனம் என்னும் மாளிகையைப்பற்றிய விவரம் இந்த வசனப்பகுதியில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மாளிகை நூறு முழ நீளமும், ஐம்பதுமுழ அகலமும், முப்பதுமுழ உயரமுமாயிருக்கிறது; அது கேதுருமர உத்திரங்கள் பாவப்பட்ட கேதுருமரத்தூண்களின் நாலு வரிசைகளின்மேல் கட்டப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வரிசைக்குப் பதினைந்து தூண்களாக நாற்பத்தைந்து தூண்களின் மேல் வைக்கப்பட்ட உத்திரங்களின் மேல் கேதுருக்களால் மச்சுப்பாவியிருக்கிறது (1இராஜா 7:2,3).

லீபனோன் வனம் வாசம்பண்ணுவதற்கு அமைதியாகவும், சந்தோஷமாகவும் இருக்கும். காற்றோட்டம் தாராளமாயிருக்கும். மாளிகையில் மூன்று வரிசை ஜன்னல்கள் இருக்கிறது; ஜன்னல்களின் வாசல்களும் சட்டங்களும் எல்லாம் சதுரமாயிருக்கிறது; மூன்று வரிசையிலும் ஜன்னல்கள் ஒன்றுக்கொன்று எதிராயிருக்கிறது (1இராஜா 7:4,5).

லீபனோன் வனம் என்னும் இந்த மாளிகைக்குள்ளே காற்று வேகமாக வீசாது. தென்றல் போல மென்மையாக வீசும். அதற்கேற்ற பிரகாரம் ஜன்னல்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஜன்னல்கள் ஒன்றுக்கொன்று எதிராயிருப்பதினால், காற்று வீசாமலும் போகாது. காற்று கட்டுப்பாடோடு தாராளமாக வீசும்.

சாலொமோன் லீபனோன் வனம் என்னும் மாளிகையிலே மண்டபத்தையும் தூண்களையும் கட்டுகிறார். அவர் ஐம்பதுமுழ நீளமும் முப்பதுமுழ அகலமுமான மண்டபத்தையும் தூண்கள் நிறுத்திக் கட்டுகிறார்; அந்த மண்டபமும், அதின் தூண்களும், உத்திரங்களும், மாளிகையின் தூண்களுக்கும் உத்திரங்களுக்கும் எதிராயிருக்கிறது (1இராஜா 7:6).

சாலொமோன் சகல ஞானத்தோடும் தன்னுடைய வீட்டைக் கட்டுகிறார். ஞானமில்லாமல் வீட்டைக் கட்டமுடியாது. வீட்டுக்கட்டுவது பற்றி சாலொமோன் நீதிமொழிகள் புஸ்தகத்தில் இவ்வாறு சொல்லியிருக்கிறார். "ஞானம் தன் வீட்டைக் கட்டி, தன் ஏழு தூண்களையும் சித்திரந்தீர்த்து" (நீதி 9:1).

சாலொமோன் எருசலேமிலே கட்டியிருக்கிற தன்னுடைய மாளிகையில் ஒரு நியாயவிசாரணை மண்டபத்தையும் கட்டுகிறார். இந்த மண்டபத்தில் நியாயாசனம் போடப்பட்டிருக்கிறது. சாலொமோன் இந்த நியாயசனத்தின்மீது அமர்ந்து நியாயந்தீர்க்கிறார். இந்த மண்டபத்தின் ஒரு பக்கம் துவக்கி, மறுபக்கம் மட்டும், கேதுரு பலகைகளால் தளவரிசைப்படுத்தப் பட்டிருக்கிறது (1இராஜா 7:7).

சாலொமோன் தனக்கு கட்டின அரமனைக்கு அருகாமையில் மற்றொரு மண்டபத்தையும் கட்டுகிறார். சாலொமோன் வாசம்பண்ணும் அவருடைய அரமனை மண்டபத்திற்குள்ளே அதேமாதிரியாகச் செய்யப்பட்ட வேறொரு மண்டபமும் இருக்கிறது (1இராஜா 7:8).

சாலொமோன் விவாகம்பண்ணின பார்வோனின் குமாரத்திக்கும் அந்த மண்டபத்தைப்போல ஒரு மாளிகையைக் கட்டுகிறார் (1இராஜா 7:8). சாலொமோன் வாசம்பண்ணும் அரமனையும், பார்வோன் குமாரத்திக்காக கட்டப்பட்ட மாளிகையும், அதிலுள்ள மண்டபங்களும் மிகவும் நேர்த்தியாக கட்டப்பட்டிருக்கிறது. இந்த மாளிகைகளின் கட்டுமான விவரங்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.

இந்த மாளிகைகளெல்லாம் உள்ளும் புறம்பும், அஸ்திபாரமுதல் மேல்திரணைகள்மட்டும் வெளியே இருக்கும் பெரிய முற்றம்வரைக்கும், அளவுபடி வெட்டி வாளால் அறுக்கப்பட்ட விலையேறப்பெற்ற கற்களால் செய்யப்பட்டிருக்கிறது. அஸ்திபாரம் பத்துமுழக் கற்களும், எட்டுமுழக் கற்களுமான விலையேறப் பெற்ற பெரிய கற்களாயிருக்கிறது. அதின்மேல் உயர அளவுபடி பணிப்படுத்தின விலையேறப்பெற்ற கற்களும், கேதுருமரங்களும் வைக்கப்பட்டிருக்கிறது. பெரிய முற்றத்திற்குச் சுற்றிலும் மூன்று வரிசைக் கேதுருமர உத்திரங்களாலும் ஒரு வரிசை பணிப்படுத்தின கற்களாலும் செய்யப்பட்டிருக்கிறது (1இராஜா 7:9-12).

சாலொமோன் தன்னுடைய அரமனைக்கும், மாளிகைக்கும், மண்டபங்களுக்கும் வலுவான அஸ்திபாரங்களைப் போட்டிருக்கிறார். பணிப்படுத்தின விலையேறப்பெற்ற கற்களையும், கேதுரு மரங்களையும் பயன்படுத்தி இந்தக் கட்டிடங்களைக் கட்டியிருக்கிறார்.

கர்த்தருடைய ஆலயத்தின் உட்பிராகாரத்திற்கும், அதின் முன்மண்டபத்திற்கும் இதுபோலவே நேர்த்தியான கற்களும், கேதுரு மரங்களும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (1இராஜா 7:12).

வெண்கலவேலை
1இராஜா 7:13,14

1இராஜா 7:13. ராஜாவாகிய சாலொமோன் ஈராம் என்னும் ஒருவனைத் தீருவிலிருந்து அழைப்பித்தான்.

1இராஜா 7:14. இவன் நப்தலி கோத்திரத்தாளாகிய ஒரு கைம்பெண்ணின் மகன்; இவன் தகப்பன் தீருநகரத்தானான கன்னான்; இவன் சகலவித வெண்கலவேலையையும் செய்யத் தக்க யுக்தியும் புத்தியும் அறிவும் உள்ளவனாயிருந்தான்; இவன் ராஜாவாகிய சாலொமோனிடத்தில் வந்து, அவன் வேலையையெல்லாம் செய்தான்.

கர்த்தருடைய ஆலயத்திலே வெண்கல வேலைகளும், பொன்வேலைகளும் தாராளமாய்ச் செய்யப்பட்டிருக்கிறது. இந்த வசனப்பகுதியில் தேவாலயத்தின் வெண்கல வேலைகளைப்பற்றி விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

தாவீது தேவாலயம் கட்டுவதற்கு தேவையான இரும்பு பொருட்களையெல்லாம் சேகரித்தார். "நான் என்னாலே இயன்றமட்டும் என் தேவனுடைய ஆலயத்துக்கென்று பொன்வேலைக்குப் பொன்னையும், வெள்ளி வேலைக்கு வெள்ளியையும், வெண்கல வேலைக்கு வெண்கலத்தையும், இரும்பு வேலைக்கு இரும்பையும், மரவேலைக்கு மரத்தையும், பதிக்கப்படத்தக்க காந்தியுள்ள கற்களையும், பலவருணக் கற்களையும், விலையேறப்பெற்ற சகலவித ரத்தினங்களையும், வெண்கற்பாளங்களையும், கோமேதக முதலிய கற்களையும் ஏராளமாகச் சவதரித்தேன்" (1நாளா 29:2). ஆனால் சாலொமோனோ தேவாலயக்கட்டுமான வேலைகளில் இரும்பை பயன்படுத்தவில்லை.

தேவாலயத்தின் வெண்கல வேலைகளை செய்வதற்கு திறமையான ஒருவனை சாலொமோன் தேடி கண்டுபிடிக்கிறார். அவனுடைய பெயர் ஈராம். அவன் தீரு தேசத்திலிருக்கிறான். சாலொமோன் ஈராமை தீருவிலிருந்து வரவழைக்கிறார்.

ஈராம் நப்தலி கோத்திரத்தாளாகிய ஒரு கைம்பெண்ணின் மகன்; இவன் தகப்பன் தீருநகரத்தானான கன்னான்; இவன் சகலவித வெண்கலவேலையையும் செய்யத் தக்க யுக்தியும் புத்தியும் அறிவும் உள்ளவனாயிருக்கிறான்; இவன் ராஜாவாகிய சாலொமோனிடத்தில் வந்து, அவருடைய வேலையையெல்லாம் செய்கிறான் (1இராஜா 7:13,14).

ஈராம் தன்னுடைய தாயார் வழியில் நப்தலி கோத்திரத்தைச் சேர்ந்த இஸ்ரவேலன். இவன் தன்னுடைய தகப்பனார் வழியில் தீரு ஊரைச் சேர்ந்தவன். இவன் தீருவிலே வாசம்பண்ணினாலும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர்மீது பக்தியுள்ளவனாயிருக்கிறான். தேவனுடைய ஆலயம் கட்டப்பட்டவேண்டும் என்னும் பக்திவைராக்கியம் ஈராமின் இருதயத்தில் நிரம்பியிருக்கிறது.

ஈராமுக்குள்ளே இஸ்ரவேலின் இரத்தமும், தீருவின் இரத்தமும் கலந்திருக்கிறது. கர்த்தருடைய ஆலயத்தை கட்டுவதற்கு ஈராம் தகுதியானவன் என்பதை சாலொமோன் அறிந்துகொள்கிறார். தேவாலயத்திற்கு தேவையான வெண்கல வேலைகளை செய்யும் பொறுப்பை சாலொமோன் ஈராமினிடத்தில் ஒப்புக்கொடுக்கிறார். ஈராமும் ராஜாவாகிய சாலொமோனிடத்தில் வந்து, அவருடைய வேலைகளையெல்லாம் செய்கிறான்.

கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரம் எகிப்து தேசத்தின் பொக்கிஷங்களினால் கட்டப்பட்டது. கர்த்தருடைய ஆலயமோ தீரு தேசத்தாரின் கைத்திறமைகளினாலும், யுக்தியினாலும், புத்தியினாலும், அறிவினாலும் கட்டப்படுகிறது.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்திற்கு சாதாரண வெண்கலத்தைப் பயன்படுத்தாமல் சுத்தமான வெண்கலத்தை பயன்படுத்துகிறார். "கர்த்தரின் ஆலயத்துக்காக ராஜாவாகிய சாலொமோனுக்கு ஈராம் செய்த இந்த எல்லாப் பணிமுட்டுகளும் சுத்தமான வெண்கலமாயிருக்கிறது (1இராஜா 7:45). சுத்தமான வெண்கலம் வலுவாகயிருக்கும். பார்ப்பதற்கு பளபளப்பாயும் இருக்கும். கல்தேயருடைய பாஷையில் "சுத்தமான வெண்கலம்" என்னும் வார்த்தை "நல்ல வெண்கலம்" என்று பொருள்படுமாறு எழுதப்பட்டிருக்கிறது.

சாலொமோன் வெண்கலங்களை யோர்தானுக்கு அடுத்த சமனான பூமியிலே வார்ப்பிக்கிறார். "யோர்தானுக்கு அடுத்த சமனான பூமியிலே, சுக்கோத்துக்கும் சர்தானுக்கும் நடுவே களிமண்தரையிலே ராஜா இவைகளை வார்ப்பிக்கிறார்" (1இராஜா 7:46).

இந்தப் பூமியின் களிமண் தரை வெண்கலத்தை வார்ப்பிப்பதற்கு அதிக பக்குவமாயிருக்கிறது. இங்கு வார்ப்பிக்கப்படும் வெண்கலமும் உறுதியாயிருக்கிறது. சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தை எருசலேமிலே கட்டுகிறார். வெண்கலம் வார்ப்பிக்கப்படும் இடத்திலே புகையும் தூசியும் அதிகமாயிருக்கும். இந்தப் புகையினாலும் தூசியினாலும் எருசலேம் நகரம் பாதிப்படையக்கூடாது என்று தீர்மானித்து, சாலொமோன் வெண்கலத்தை வார்ப்பிக்கும் வேலையை, எருசலேமுக்கு தூரத்திலுள்ள, யோர்தானுக்கடுத்த சமனான பூமியிலே செய்கிறார்.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்திற்குத் தேவையான பரிசுத்த பணிமுட்டுக்கள் எல்லாவற்றையும் செய்கிறார். சாலொமோனிடத்தில் வெண்கலத்திற்கு குறைவில்லை. சகலமும் தாராளமாயும், தேவைக்கு அதிகமாயும் இருக்கிறது.

இந்தச் சகல பணிமுட்டுகளின் வெண்கலம் மிகவும் ஏராளமுமாயிருந்தபடியால், சாலொமோன் அவைகளை நிறுக்கவில்லை; அதினுடைய நிறை இவ்வளவென்று ஆராய்ந்து பார்க்கவுமில்லை (1இராஜா 7:47). தேவாலயத்திற்கு தேவையான வெண்கல வேலைகளை செய்கிறவர்கள் எல்லோருமே உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமானவர் களாயிருக்கிறார்கள். கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவர்களாயும் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் கொடுக்கப்படும் வெண்கலம் நெருக்கப்படவில்லை. ஆனாலும் அவர்கள் தங்களிடத்தில் கொடுக்கப்பட்ட வெண்கலத்தை உண்மையாய் பயன்படுத்துகிறார்கள். இதனால் வெண்கலத்திற்கு குறைவும் உண்டாகவில்லை.

இரண்டு வெண்கலத் தூண்கள் 1இராஜா 7:15-22

1இராஜா 7:15. இவன் இரண்டு வெண்கலத் தூண்களை உண்டாக்கினான்; ஒவ்வொரு தூண் பதினெட்டு முழ உயரமும், ஒவ்வொரு தூணின் சுற்றளவு பன்னிரண்டு முழ நூலளவுமாயிருந்தது.

1இராஜா 7:16. அந்தத் தூண்களுடைய தலைப்பில் வைக்க, வெண்கலத்தால் வார்க்கப்பட்ட இரண்டு கும்பங்களை உண்டாக்கினான்; ஒவ்வொரு கும்பமும் ஐந்துமுழ உயரமாயிருந்தது.

1இராஜா 7:17. தூண்களுடைய முனையின்மேலுள்ள கும்பங்களுக்கு வலைபோன்ற பின்னல்களும் சங்கிலி போன்ற தொங்கல்களும், ஒவ்வொரு கும்பத்திற்கும் ஏழாக இருந்தது.

1இராஜா 7:18. தூண்களைப் பண்ணின விதமாவது: தலைப்பின்மேலுள்ள கும்பங்களை மூடும்படிக்கு, கும்பங்கள் ஒவ்வொன்றிலும் பின்னலின்மேல் சுற்றிலும் இரண்டு வரிசை மாதளம்பழங்களைச் செய்வித்தான்.

1இராஜா 7:19. மண்டபத்தின் முன்னிருக்கும் அந்தத் தூண்களுடைய தலைப்பின்மேலுள்ள கும்பங்கள் லீலி புஷ்பங்களின் வேலையும், நாலுமுழ உயரமுமாயிருந்தது.

1இராஜா 7:20. இரண்டு தூண்களின்மேலுமுள்ள கும்பங்களில் செய்யப்பட்ட பின்னலுக்கு அருகே இருந்த இடத்தில் விம்மிய இருநூறு மாதளம்பழங்களின் வரிசைகள் சுற்றிலும் இருந்தது; மற்றக் கும்பத்திலும் அப்படியே இருந்தது.

1இராஜா 7:21. அந்தத் தூண்களை தேவாலய வாசல் மண்டபத்தில் நிறுத்தினான்; அவன் வலதுபுறத்தில் நிறுத்தின தூணுக்கு யாகீன் என்றும், இடதுபுறத்தில் நிறுத்தின தூணுக்கு போவாஸ் என்றும் பேரிட்டான்.

1இராஜா 7:22. தூண்களுடைய சிகரத்தில் லீலி புஷ்பவேலை செய்யப்பட்டிருந்தது; இவ்விதமாய்த் தூண்களின் வேலை முடிந்தது.

தேவாலய வாசல் மண்டபத்தில் நிறுத்துவதற்கு ஈராம் இரண்டு வெண்கல தூண்களை செய்கிறான் (1இராஜா 7:21). இந்தத் தூண்கள் தேவாலயத்திற்கும், ஆசாரியரின் மண்டபத்திற்கும் நடுவிலே நிறுத்தப்படுகிறது. இது தேவாலயத்தின் அழகுக்காகவும், அலங்காரத்திற்காகவும் செய்யப்பட்டிருக்கிறது.

ஈராம் இரண்டு வெண்கல தூண்களையும் மிகவும் நேர்த்தியாகச் செய்கிறான். இதில் கும்பங்கள், வலைப்பின்னல்கள், சங்கிலி போன்ற தொங்கல்கள் ஆகியவை இடம் பெற்றிருக்கிறது.

ஒவ்வொரு தூணும் பதினெட்டு முழ உயரமும், ஒவ்வொரு தூணின் சுற்றளவு பன்னிரண்டு முழ நூலளவுமாயிருக்கிறது. அந்தத் தூண்களுடைய தலைப்பில் வைக்க, வெண்கலத்தால் வார்க்கப்பட்ட இரண்டு கும்பங்களை உண்டாக்கப்பட்டிருக்கிறது; ஒவ்வொரு கும்பமும் ஐந்துமுழ உயரமாயிருக்கிறது. தூண்களுடைய முனையின்மேலுள்ள கும்பங்களுக்கு வலைபோன்ற பின்னல்களும் சங்கிலிபோன்ற தொங்கல்களும், ஒவ்வொரு கும்பத்திற்கும் எவ்வேழாக இருக்கிறது (1இராஜா 7:15-17).

தலைப்பின்மேலுள்ள கும்பங்களை மூடும்படிக்கு, கும்பங்கள் ஒவ்வொன்றிலும் பின்னலின்மேல் சுற்றிலும் இரண்டு வரிசை மாதளம்பழங்கள் செய்யப்பட்டிருக்கிறது. மண்டபத்தின் முன்னிருக்கும் அந்தத் தூண்களுடைய தலைப்பின்மேலுள்ள கும்பங்கள் லீலி புஷ்பங்களின் வேலையும், நாலுமுழ உயரமுமாயிருக்கிறது. இரண்டு தூண்களின்மேலுமுள்ள கும்பங்களில் செய்யப்பட்ட பின்னலுக்கு அருகே இருந்த இடத்தில் விம்மிய இருநூறு மாதளம்பழங்களின் வரிசைகள் சுற்றிலும் இருக்கிறது; மற்றக் கும்பத்திலும் அப்படியே இருக்கிறது. தூண்களுடைய சிகரத்தில் லீலி புஷ்பவேலை செய்யப்பட்டிருந்தது (1இராஜா 7:18-20,22).

ஈராம் அந்தத் தூண்களை தேவாலய வாசல் மண்டபத்தில் நிறுத்துகிறான்; அவன் வலதுபுறத்தில் நிறுத்தின தூணுக்கு யாகீன் என்றும், இடதுபுறத்தில் நிறுத்தின தூணுக்கு போவாஸ் என்றும் பேரிடுகிறான் (1இராஜா 7:21). இந்தத் தூண்களுக்கு சாலொமோன் பேரிட்டிருக்கவேண்டும் என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

இவ்விரண்டு தூண்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் பெயர் மிகவும் விசேஷமானது. அது ஞானஅர்த்தமுள்ளது.

வலதுபுறத்தில் நிறுத்தப்பட்டிருக்கிற தூணுக்கு யாகீன் என்று பெயர். யாகீன் என்னும் பெயருக்கு "அவர் ஸ்தாபிப்பார்" என்று பொருள். இடதுபுறத்தில் நிறுத்தப்பட்டிருக்கிற தூணுக்கு "போவாஸ்" என்று பெயர். போவாஸ் என்னும் பெயருக்கு "அவரில் வல்லமையுள்ளது" என்று பொருள்.

இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, வனாந்தரத்தின் வழியாக பிரயாணம்பண்ணினார்கள். அப்போது கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை அக்கினி ஸ்தம்பத்தினாலும், மேகஸ்தம்பத்தினாலும் வழிநடத்தினார். தேவாலய வாசல் மண்டபத்தில் நிறுத்தப்பட்டிருக்கிற இரண்டு தூண்களும், அக்கினி ஸ்தம்பத்திற்கும், மேகஸ்தம்பத்திற்கும் அடையாளமென்று வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள்.

தேவாலயத்திலே கர்த்தருக்கு ஊழியம் செய்கிற ஆசாரியரும், கர்த்தரை ஆராதிக்க வருகிறவர்களும் தேவாலய வாசல் மண்டப வழியாக பிரவேசிக்க வேண்டும். அவர்கள் இவ்விரண்டு வெண்கல தூண்கள் வழியாக ஆலயத்திற்குள் பிரவேசிப்பார்கள். அப்போது இவ்விரண்டு தூண்களும், ஆசாரியருக்கும் ஆராதிக்கிற வருகிற ஜனங்களுக்கும் ஆவிக்குரிய உபதேசம் பண்ணும் என்று வேதபண்டிதர்களில் வேறு சிலர் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொருவரும், தங்களுடைய ஆவிக்குரிய பெலத்திற்கும், தாங்கள் கர்த்தருக்குள் நிலைத்திருப்பதற்கும், கர்த்தரையே சார்ந்திருக்கவேண்டும். நாம் கர்த்தரை ஆராதிக்க வரும்போது நம்முடைய இருதயம் கர்த்தருக்குள் நிலைத்திருக்காமல், அங்கும் இங்குமாக அலைபாய்ந்து கொண்டிருக்கக்கூடாது. அலைபாய்கிற இருதயம் ஒருமனப்படவேண்டும். அது ஸ்திரத்தன்மையோடு நிலைத்திருக்கவேண்டும். நாம் பரலோகத்திலிருந்து கர்த்தருடைய பெலனைப் பெற்றுக்கொள்ளும்போது, நம்முடைய இருதயம் அலைபாயாமல், கர்த்தருக்குள் நிலைத்திருக்கும். "யாகீன்" என்னும் பெயருக்கு "கர்த்தர் அலைபாய்கிற இருதயத்தை நிலைப்படுத்துகிறவர்" என்று பொருள்.

"போவாஸ்" என்னும் பெயருக்கு "கர்த்தருக்குள் நம்முடைய பெலன் இருக்கிறது" என்று பொருள். கர்த்தர் நமக்குள் கிரியை செய்கிறார். நம்முடைய சித்தத்தையும், நம்முடைய செயல்களையும் ஆளுகை செய்கிறார். தேவாலயத்திற்குள் பிரவேசிக்கிறவர்கள் "கர்த்தர் கொடுக்கும் பெலத்தினால் ஆலயத்திற்குள் பிரவேசிக்கிறேன்" என்று விசுவாசித்து நம்பிக்கையோடு பிரவேசிக்கவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளின் விசுவாசம் உறுதியாய் நிலைத்திருக்கவேண்டும். விசுவாசிகளின் இருதயத்தில் ஆவிக்குரிய பெலமும், ஆவிக்குரிய ஸ்திரத்தன்மையும் காணப்படவேண்டும். கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசிக்கும்போது, தேவாலய வாசல்மண்டபத்திலே, கர்த்தருடைய பெலத்தைப் பெற்றுக் கொள்கிறோம். மேலும் நம்முடைய இருதயம் அலைபாயாமல் ஸ்திரத்தன்மையோடிருப்பதற்கு தேவைப்படும் தேவகிருபைகளையும் பெற்றுக்கொள்கிறோம். தேவாலய வாசல் பிரகாரத்திலே கிருபையின் வரங்களுக்காக காத்திருக்கவேண்டும். கர்த்தர் கொடுக்கும் கிருபைகளினால் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் பெலப்பட்டு ஸ்திரப்படவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியில் தேவனுடைய ஆலயம் பெலத்தோடு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு தேவாலய வாசல் மண்டபத்தில் நிறுத்தப்பட்டிருக்கிற தூண்கள் அடையாளமாயிருக்கிறது.

"கர்த்தருடைய ஆலயத்திலிருந்த வெண்கலத் தூண்களையும், அதிலிருந்த ஆதாரங்களையும், கர்த்தருடைய ஆலயத்திலிருந்த வெண்கலக் கடல்தொட்டியையும், கல்தேயர் உடைத்துப் போட்டு, அவைகளின் வெண்கலத்தைப் பாபிலோனுக்கு எடுத்துக்கொண்டு போனார்கள்" *(2இராஜா 25:13)*

"ஒரு தூணின் உயரம் பதினெட்டு முழமாயிருந்தது; அதின்மேல் அதற்கு மூன்றுமுழ உயரமான வெண்கலத் தலைப்பும் உண்டாயிருந்தது; குமிழிலே சுற்றிலும் செய்யப்பட்டிருந்த பின்னலும் மாதளம்பழங்களும் எல்லாம் வெண்கலமாயிருந்தது; மற்றத் தூணும் அதின் பின்னலும் அதைப்போல் இருந்தது" *(2இராஜா 25:17)*.

நேபுகாத்நேச்சார் தேவாலயத்தை இடித்துப்போட்ட சம்பவத்தைப்பற்றி சொல்லும்போது, அவன் தேவாலயத்தின் தூண்களை இடித்துப்போட்டான் என்று அடையாளமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை விட்டு பின்வாங்கிப்போய்விட்டால், அந்நிய தேசத்தார், தேவாலயத்தின் தூண்களை இடித்து கொண்டு போய்விடுவார்கள்.

வெண்கலக் கடல் என்னும் தொட்டி 1இராஜா 7:23-26

1இராஜா 7:23. வெண்கலக் கடல் என்னும் தொட்டியையும் வார்ப்பித்தான்; சுற்றிலும் சக்கராகாரமான அதினுடைய ஒரு விளிம்பு தொடங்கி மறுவிளிம்புமட்டும், அகலம் பத்துமுழமும், உயரம் ஐந்துமுழமும், சுற்றளவு முப்பதுமுழ நூலளவுமாயிருந்தது.

1இராஜா 7:24. அந்தக் கடல்தொட்டியைச் சுற்றி விளிம்புக்குக் கீழே அதைச் சுற்றிலும் மொக்குகள் ஒவ்வொரு முழத்திற்குப் பத்து பத்தாகச் செய்யப்பட்டிருந்தது; வார்க்கப்பட்ட அந்த மொக்குகளின் வரிசைகள் இரண்டும் தொட்டியோடு ஒன்றாய் வார்க்கப்பட்டிருந்தது.

1இராஜா 7:25. அது பன்னிரண்டு ரிஷபங்களின் மேல் நின்றது; அவைகளில் மூன்று வடக்கேயும், மூன்று மேற்கேயும், மூன்று தெற்கேயும், மூன்று கிழக்கேயும் நோக்கியிருந்தது; கடல்தொட்டி ரிஷபங்களின் மேலாகவும், அவைகளின் பின்புறங்களெல்லாம் உள்ளாகவும் இருந்தது.

1இராஜா 7:26. அதின் கனம் நாலு விரற்கடையும், அதின் விளிம்பு பானபாத்திரத்தின் விளிம்புபோலும், லீலிபுஷ்பம்போலும் இருந்தது; அது இரண்டாயிரம் குடம் தண்ணீர் பிடிக்கும்.

வெண்கலக்கடல் என்னும் தொட்டி மிகப்பெரிய பாத்திரம். இதன் விட்டம் சுமார் ஐந்து மீட்டர் அளவுள்ளது. இந்தத் தொட்டியில் சுமார் 500 பீப்பாய்கள் தண்ணீர் ஊற்றலாம். ஆசாரியர்கள் தங்களைச் சுத்தம்பண்ணுவதற்கும், பலிபீடத்தில் பலிசெலுத்தப்படும் மிருகங்களை சுத்தம்பண்ணுவதற்கும் இந்தத் தண்ணீரை பயன்படுத்துவார்கள். மேலும் தேவாலயத்தின் பிரகாரங்களை சுத்திகரிப்பதற்கும் இந்த தண்ணீரை பயன்படுத்துவார்கள்.

வெண்கலக் கடல் என்னும் தொட்டியை சுற்றிலும் சக்கராகாரமான அதினுடைய ஒரு விளிம்பு தொடங்கி மறுவிளிம்புமட்டும், அகலம் பத்துமுழமும், உயரம் ஐந்துமுழமும், சுற்றளவு முப்பதுமுழ நூலளவுமாயிருக்கிறது. அந்தக் கடல்தொட்டியைச் சுற்றி விளிம்புக்குக் கீழே அதைச் சுற்றிலும் மொக்குகள் ஒவ்வொரு முழத்திற்குப் பத்து பத்தாகச் செய்யப்பட்டிருக்கிறது; வார்க்கப்பட்ட அந்த மொக்குகளின் வரிசைகள் இரண்டும் தொட்டியோடு ஒன்றாய் வார்க்கப்பட்டிருக்கிறது *(1இராஜா 7:23,24).*

வெண்கலக்கடல் என்னும் தொட்டி பன்னிரண்டு ரிஷபங்களின் மேல் நிற்கிறது; அவைகளில் மூன்று வடக்கேயும், மூன்று மேற்கேயும், மூன்று தெற்கேயும், மூன்று கிழக்கேயும் நோக்கியிருக்கிறது; கடல்தொட்டி ரிஷபங்களின் மேலாகவும், அவைகளின் பின்புறங்களெல்லாம் உள்ளாகவும் இருக்கிறது *(1இராஜா 7:25).*

"ரிஷபம்" என்னும் வார்த்தை காளைமாட்டைக் குறிக்கிறது. வெண்கல கடல் என்னும் தொட்டியில் கிபியோனியர் என்னும் நிதனீமியர் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றுவார்கள். தேவனுடைய ஆலயத்திற்கு தண்ணீர் சுமக்கிற வேலை நிதனீமியருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. வெண்கல கடல் என்னும் தொட்டியில் தண்ணீர் குறையாமல், எப்போதும் நிறைவாயிருக்குமாறு பார்த்துக்கொள்வது நிதனீமியரின் பணிவிடை.

இஸ்ரவேல் ஜனத்தாரில் அநேகர் வனாந்தரத்தில் பொன்கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதை தங்கள் தெய்வமாக ஆராதித்தார்கள். கன்றுக்குட்டி எகிப்தியரின் தெய்வம். வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டிக்கு ஜீவனுமில்லை, வல்லமையுமில்லை. ஆனால் எகிப்தியரும், புறஜாதியாரும் அதைத் தங்கள் தெய்வமாகப் பாவித்து ஆராதிக்கிறார்கள்.

எகிப்தியரின் தெய்வமான ரிஷபங்களாகிய காளைமாடுகளுக்கு வல்லமையில்லை என்பதை சாலொமோன் ராஜா இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தெளிவுபடுத்த விரும்புகிறார். இதற்காக அவர் பன்னிரண்டு ரிஷபங்களை செய்து, அவற்றின்மேல் வெண்கலக்கடல் என்னும் தொட்டியை வைக்கிறார். தொட்டியை சுமப்பதற்கு தான் தகுதியானவை. ரிஷபங்கள் மனுஷரை ஆசீர்வதிப்பதற்கு ரிஷபங்கள் தகுதியற்றவை. இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். ரிஷபங்களை ஆராதிக்கக்கூடாது.

வெண்கலக்கடல் என்னும் தொட்டியில் இரண்டாயிரம் குடம் தண்ணீர் பிடிக்கும். அவ்வளவு தண்ணீரையும் சேமிக்குமாறு, கடல் தொட்டி கனமான வெண்கலத்தினால் செய்யப்பட்டிருக்கிறது. அதின் கனம் நாலு விரற்கடையும், அதின் விளிம்பு பானபாத்திரத்தின் விளிம்புபோலும், லீலி புஷ்பம்போலும் இருக்கிறது *(1இராஜா 7:26).*

பத்து வெண்கல ஆதாரங்கள் 1இராஜா 7:27-39

1இராஜா 7:27. பத்து வெண்கல ஆதாரங்களையும் செய்தான்; ஒவ்வொரு ஆதாரமும் நாலுமுழ நீளமும், நாலுமுழ அகலமும், மூன்று முழ உயரமுமாயிருந்தது.

1இராஜா 7:28. அந்த ஆதாரங்களின் வேலைப்பாடு என்னவெனில், அவைகளுக்குச் சவுக்கைகள் உண்டாயிருந்தது; சவுக்கைகளோ சட்டங்களின் நடுவில் இருந்தது.

1இராஜா 7:29. சட்டங்களுக்கு நடுவே இருக்கிற அந்தச் சவுக்கைகளில் சிங்கங்களும், காளைகளும், கேருபீன்களும், சட்டங்களுக்கு மேலாக ஒரு திரனையும், சிங்கங்களுக்கும் காளைகளுக்கும் கீழாக சாய்வான வேலைப்பாடுள்ள ஜலதாரைகளும் அதனோடே இருந்தது.

1இராஜா 7:30. ஒவ்வொரு ஆதாரத்திற்கு நாலு வெண்கல உருளைகளும், வெண்கலத் தட்டுகளும், அதின் நாலு கோடிகளுக்கு அச்சுகளும் இருந்தது; கொப்பரையின் கீழிருக்க, அந்தக் கொம்மைகள் ஒவ்வொன்றும் வார்ப்பு வேலையாக ஜலதாரைகளுக்கு நேராயிருந்தது.

1இராஜா 7:31. திரனைகளுக்குள்ளான அதின் வாய் மேலாக ஒருமுழம் உயர்ந்திருந்தது; அதின் வாய் ஒன்றரைமுழ சக்கராகாரமும் தட்டையுமாய், அதின் வாய்மேல் சித்திரங்களும் செய்யப்பட்டிருந்தது; அவைகளின் சவுக்கைகள் விருத்தமாயிராமல் சதுரமாயிருந்தது.

1இராஜா 7:32. அந்த நாலு உருளைகள் சவுக்கைகளின் கீழும், உருளைகளின் அச்சுகள் ஆதாரத்திலும் இருந்தது; ஒவ்வொரு உருளை ஒன்றரைமுழ உயரமாயிருந்தது.

1இராஜா 7:33. உருளைகளின் வேலை இரதத்து உருளைகளின் வேலைக்கு ஒத்திருந்தது; அவைகளின் அச்சுகளும், சக்கரங்களும், வட்டங்களும், கம்பிகளும் எல்லாம் வார்ப்புவேலையாயிருந்தது.

1இராஜா 7:34. ஒவ்வொரு ஆதாரத்தினுடைய நாலு கோடிகளிலும், ஆதாரத்திலிருந்து புறப்படுகிற நாலு கொம்மைகள் இருந்தது.

1இராஜா 7:35. ஒவ்வொரு ஆதாரத்தின் தலைப்பிலும் அரைமுழ உயரமான சக்கராகாரமும், ஒவ்வொரு ஆதாரத்தினுடைய தலைப்பின்மேலும் அதிலிருந்து புறப்படுகிற அதின் கைப்பிடிகளும் சவுக்கைகளும் இருந்தது.

1இராஜா 7:36. அவைகளிலிருக்கிற கைப்பிடிகளுக்கும் சவுக்கைகளுக்கும் இருக்கிற சந்துகளிலே, கேருபீன்கள் சிங்கங்கள் பேரீந்துகளுடைய சித்திரங்களைத் தீர்த்திருந்தான்; சுற்றிலும் ஒவ்வொன்றிலும், ஜலதாரைகளிலும் இருக்கும் இடங்களுக்குத் தக்கதாய்ச் செய்தான்.

1இராஜா 7:37. இந்தப்பிரகாரமாக அந்தப் பத்து ஆதாரங்களையும் செய்தான்; அவைகளெல்லாம் ஒரே வார்ப்பும், ஒரே அளவும், ஒரேவித கொத்துவேலையுமாயிருந்தது.

1இராஜா 7:38. பத்து வெண்கலக் கொப்பரைகளையும் உண்டாக்கினான்; ஒவ்வொரு கொப்பரை நாற்பது குடம் பிடிக்கும்; நாலு முழ அகலமான ஒவ்வொரு கொப்பரையும் அந்தப் பத்து ஆதாரங்களில் ஒவ்வொன்றின்மேலும் வைக்கப்பட்டது.

1இராஜா 7:39. ஐந்து ஆதாரங்களை ஆலயத்தின் வலதுபுறத்திலும், ஐந்து ஆதாரங்களை ஆலயத்தின் இடதுபுறத்திலும் வைத்தான்; கடல்தொட்டியைக் கிழக்கில் ஆலயத்தின் வலதுபுறத்திலே தெற்குக்கு நேராக வைத்தான்.

தேவாலயத்தின் பணிவிடைக்காக பத்து வெண்கல ஆதாரங்கள் செய்யப்பட்டிருக்கிறது; ஒவ்வொரு ஆதாரமும் நாலுமுழ நீளமும், நாலுமுழ அகலமும், மூன்று முழ உயரமுமாயிருக்கிறது (1இராஜா 7:27). வெண்கல கடல் என்னும் தொட்டி அளவில் மிகவும் பெரியது. அது இரண்டாயிரம் குடம் தண்ணீர் பிடிக்கக்கூடியது. தேவாலயத்தின் ஆராதனைக்கு கடல் தொட்டியிலுள்ள தண்ணீர் தேவைப்படுகிறது. ஆனால் தேவாலயத்திற்குள்ளே இவ்வளவு பெரிய கடல் தொட்டியை வைப்பதற்கு இடமில்லை.

கடல் தொட்டி ஒரே இடத்தில் நிலையாக வைக்கப்பட்டிருக்கும். தொட்டியிலுள்ள தண்ணீரை ஓரிடத்திலிருந்து, மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்ல, வெண்கல கொப்பரைகள் உண்டாக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் பத்து வெண்கலக் கொப்பரைகள் உண்டாக்கப்பட்டிருக்கிறது; ஒவ்வொரு கொப்பரையும் நாற்பது குடம் பிடிக்கும்; நாலு முழ அகலமான ஒவ்வொரு கொப்பரையும் அந்தப் பத்து ஆதாரங்களில் ஒவ்வொன்றின்மேலும் வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வெண்லக ஆதாரத்தின்மேலும், ஒவ்வொரு கொப்பரை வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆதாரங்கள் சக்கரம்போல சுற்றக்கூடியவை. ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு, இந்த ஆதாரத்தையும், இந்த ஆதாரத்தின்மீது வைக்கப்பட்டிருக்கிற கொப்பரையையும் இழுத்துச் செல்ல முடியும். ஒவ்வொரு கொப்பரையிலும் நாற்பது குடம் தண்ணீர் பிடிக்கக்கூடியது. ஆசாரியர்களுக்கு தேவைப்படும் தண்ணீரை, ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்ல, இந்த ஆதாரங்கள் உபயோகமாயிருக்கும்.

சாலொமோன் ராஜாவுடைய கட்டளைப் பிரகாரம் ஈராம், பத்து வெண்கல ஆதாரங்களை செய்து, அவற்றில் ஐந்து ஆதாரங்களை ஆலயத்தின் வலதுபுறத்திலும், ஐந்து ஆதாரங்களை ஆலயத்தின் இடதுபுறத்திலும் வைக்கிறான்; கடல்தொட்டியைக் கிழக்கில் ஆலயத்தின் வலதுபுறத்திலே தெற்குக்கு நேராக வைக்கிறான் (1இராஜா 7:39).

ஈராம் சாலொமோனுடைய கட்டளைப் பிரகாரம் ஆதாரங்களில் ஏராளமான வேலைப்பாடுகளை செய்து அதை அழகுபடுத்துகிறான். இந்த வசனப்பகுதியில் ஆதாரங்களின் வேலைப்பாட்டு விவரம் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது.

அந்த ஆதாரங்களின் வேலைப்பாடு என்னவெனில், அவைகளுக்குச் சவுக்கைகள் உண்டாயிருக்கிறது; சவுக்கைகளோ சட்டங்களின் நடுவில் இருக்கிறது. சட்டங்களுக்கு நடுவே இருக்கிற அந்தச் சவுக்கைகளில் சிங்கங்களும், காளைகளும், கேருபீன்களும், சட்டங்களுக்கு மேலாக ஒரு திரணையும், சிங்கங்களுக்கும் காளைகளுக்கும் கீழாக சாய்வான வேலைப்பாடுள்ள ஜலதாரைகளும் அதனோடே இருக்கிறது (1இராஜா 7:28,29).

ஒவ்வொரு ஆதாரத்திற்கு நாலு வெண்கல உருளைகளும், வெண்கலத் தட்டுகளும், அதின் நாலு கோடிகளுக்கு அச்சுகளும் இருக்கிறது; கொப்பரையின் கீழிருக்க, அந்தக் கொம்மைகள் ஒவ்வொன்றும் வார்ப்பு வேலையாக ஜலதாரைகளுக்கு நேராயிருக்கிறது. திரணைகளுக்குள்ளான அதின் வாய் மேலாக ஒருமுழம் உயர்ந்திருக்கிறது; அதின் வாய் ஒன்றரைமுழ சக்கராகாரமும் தட்டையுமாய், அதின் வாய்மேல் சித்திரங்களும் செய்யப்பட்டிருக்கிறது; அவைகளின் சவுக்கைகள் விருத்தமாயிராமல் சதுரமாயிருக்கிறது (1இராஜா 7:30,31).

அந்த நாலு உருளைகள் சவுக்கைகளின் கீழும், உருளைகளின் அச்சுகள் ஆதாரத்திலும் இருக்கிறது; ஒவ்வொரு உருளை ஒன்றரை முழ உயரமாயிருக்கிறது. உருளைகளின் வேலை இரதத்து உருளைகளின் வேலைக்கு ஒத்திருக்கிறது; அவைகளின் அச்சுகளும், சக்கரங்களும், வட்டங்களும், கம்பிகளும் எல்லாம் வார்ப்புவேலையாயிருக்கிறது (1இராஜா 7:32,33).

ஒவ்வொரு ஆதாரத்தினுடைய நாலு கோடிகளிலும், ஆதாரத்திலிருந்து புறப்படுகிற நாலு கொம்மைகள் இருக்கிறது. ஒவ்வொரு ஆதாரத்தின் தலைப்பிலும் அரைமுழ உயரமான சக்கராகாரமும், ஒவ்வொரு ஆதாரத்தினுடைய தலைப்பின்மேலும் அதிலிருந்து புறப்படுகிற அதின் கைப்பிடிகளும் சவுக்கைகளும் இருக்கிறது (1இராஜா 7:34,35).

அவைகளிலிருக்கிற கைப்பிடிகளுக்கும் சவுக்கைகளுக்கும் இருக்கிற சந்துகளிலே, கேருபீன்கள் சிங்கங்கள் பேரீந்துகளுடைய சித்திரங்கள் தீர்க்கப்பட்டிருக்கிறது. சுற்றிலும் ஒவ்வொன்றிலும், ஜலதாரைகளிலும் இருக்கும் இடங்களுக்குத் தக்கதாய்ச் செய்யப்பட்டிருக்கிறது (1இராஜா 7:36).

வெண்கல கொப்பரைகள் முதலானவை 1இராஜா 7:40-47

1இராஜா 7:40. பின்பு ஈராம் கொப்பரைகளையும் சாம்பல் எடுக்கிற கரண்டிகளையும் கலங்களையும் செய்தான். இவ்விதமாய் ஈராம் கர்த்தருடைய ஆலயத்துக்காக ராஜாவாகிய சாலொமோனுக்குச் செய்யவேண்டிய எல்லா வேலையையும் செய்து முடித்தான்.

1இராஜா 7:41. அவைகள் என்னவெனில்: இரண்டு தூண்களும், இரண்டு தூண்களுடைய முனையின்மேல் இருக்கிற இரண்டு உருண்டைக் கும்பங்களும், தூண்களுடைய முனையின்மேல் இருக்கிற இரண்டு உருண்டைக் கும்பங்களை மூடும் இரண்டு வலைப் பின்னல்களும்,

1இராஜா 7:42. தூண்களின்மேலுள்ள இரண்டு உருண்டைக் கும்பங்களை மூடும்படி, ஒவ்வொரு வலைப்பின்னலுக்கும் பண்ணின இரண்டு வரிசை மாதளம்பழங்களும், ஆக இரண்டு வலைப்பின்னலுக்கும் நானூறு மாதளம்பழங்களும்,

1இராஜா 7:43. பத்து ஆதாரங்களும், ஆதாரங்களின்மேல் வைத்த பத்துக் கொப்பரைகளும்,

1இராஜா 7:44. ஒரு கடல்தொட்டியும், கடல் தொட்டியின் கீழிருக்கிற பன்னிரண்டு ரிஷபங்களும்,

1இராஜா 7:45. செப்புச்சட்டிகளும், சாம்பல் கரண்டிகளும், கலங்களும் செய்தான்; கர்த்தரின் ஆலயத்துக்காக ராஜாவாகிய சாலொமோனுக்கு ஈராம் செய்த இந்த எல்லாப் பணிமுட்டுகளும் சுத்தமான வெண்கலமாயிருந்தது.

1இராஜா 7:46. யோர்தானுக்கு அடுத்த சமனான பூமியிலே, சுக்கோத்துக்கும் சர்தானுக்கும் நடுவே களிமண்தரையிலே ராஜா இவைகளை வார்ப்பித்தான்.

1இராஜா 7:47. இந்தச் சகல பணிமுட்டுகளின் வெண்கலம் மிகவும் ஏராளமுமாயிருந்தபடியால், சாலொமோன் அவைகளை நிறுக்கவில்லை; அதினுடைய நிறை இவ்வளவென்று ஆராய்ந்து பார்க்கவுமில்லை.

சமாதானபலியாக செலுத்தப்படும் மிருகங்களின் மாம்சங்களை வேகவைப்பதற்கு வெண்கல கொப்பரைகள் செய்யப்பட்டிருக்கிறது. இவற்றின் எண்ணிக்கை ஏராளம். வெண்கல கொப்பரைகளில் வேகவைக்கப்பட்ட மாம்சத்தை ஆசாரியர்களும் பலிசெலுத்தியவர்களும் புசிப்பார்கள்.

"அதினாலே, கொப்பரையிலாவது பானையிலாவது சருவத்திலாவது சட்டியிலாவது குத்துவான்; அந்த ஆயுதத்தில் வருகிறதையெல்லாம் ஆசாரியன் எடுத்துக்கொள்ளுவான்; அப்படி அங்கே சீலோவிலே வருகிற இஸ்ரவேலருக்கெல்லாம் செய்தார்கள்" (1சாமு 2:14).

சாலொமோனுடைய கட்டளைப் பிரகாரம் ஈராம் கொப்பரைகளையும் சாம்பல் எடுக்கிற கரண்டிகளையும் கலங்களையும் செய்கிறான். இவ்விதமாய் ஈராம் கர்த்தருடைய ஆலயத்துக்காக ராஜாவாகிய சாலொமோனுக்குச் செய்யவேண்டிய எல்லா வேலையையும் செய்து முடிக்கிறான் (1இராஜா 7:40).

சாலொமோனுடைய கட்டளைப் பிரகாரம் ஈராம் செய்த எல்லா வெண்கல வேலைகளின் விவரமும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றின் விவரம் வருமாறு :

1. இரண்டு தூண்கள்
2. இரண்டு தூண்களுடைய முனையின்மேல் இருக்கிற இரண்டு உருண்டைக் கும்பங்கள்
3. தூண்களுடைய முனையின்மேல் இருக்கிற இரண்டு உருண்டைக் கும்பங்களை மூடும் இரண்டு வலைப் பின்னல்கள்.
4. தூண்களின் மேலுள்ள இரண்டு உருண்டைக் கும்பங்களை மூடும்படி ஒவ்வொரு வலைப்பின்னலுக்கும் பண்ணின இரண்டு வரிசை மாதளம்பழங்கள். ஆக இரண்டு வலைப்பின்னலுக்கும் நானூறு மாதளம்பழங்கள்.
5. பத்து ஆதாரங்கள்.
6. ஆதாரங்களின்மேல் வைத்த பத்துக் கொப்பரைகள்.
7. ஒரு கடல்தொட்டி
8. கடல் தொட்டியின் கீழிருக்கிற பன்னிரண்டு ரிஷபங்கள்.
9. செப்புச்சட்டிகள்
10. சாம்பல் கரண்டிகள்
11. கலங்கள்

கர்த்தரின் ஆலயத்துக்காக ராஜாவாகிய சாலொமோனுக்கு ஈராம் செய்த இந்த எல்லாப் பணிமுட்டுகளும் சுத்தமான வெண்கலமாயிருக்கிறது. யோர்தானுக்கு அடுத்த சமனான பூமியிலே, சுக்கோத்துக்கும் சர்தானுக்கும் நடுவே களிமண்தரையிலே சாலொமோன் ராஜா இவைகளை வார்ப்பிக்கிறார். இந்தச் சகல பணிமுட்டுகளின் வெண்கலம் மிகவும் ஏராளமுமாயிருந்தபடியால், சாலொமோன் அவைகளை நிறுக்கவில்லை; அதினுடைய நிறை இவ்வளவென்று ஆராய்ந்து பார்க்கவுமில்லை (1இராஜா 7:45-47).

பொன்வேலைகள் 1இராஜா 7:48-51

1இராஜா 7:48. பின்னும் கர்த்தருடைய ஆலயத்துக்குத் தேவையான பணிமுட்டுகளையெல்லாம் சாலொமோன் உண்டாக்கினான்; அவையாவன, பொன் பலிபீடத்தையும் சமுகத்தப்பங்களை வைக்கும் பொன் மேஜையையும்,

1இராஜா 7:49. சந்நிதி ஸ்தானத்திற்கு முன்பாக வைக்கும் பசும்பொன் விளக்குத்தண்டுகள், வலதுபுறமாக ஐந்தையும் இடதுபுறமாக ஐந்தையும், பொன்னான அதின் பூக்களோடும் விளக்குகளோடும் கத்தரிகளோடுங்கூட உண்டாக்கினான்.

1இராஜா 7:50. பசும்பொன் கிண்ணங்களையும், வெட்டுக் கத்திகளையும், கலங்களையும், கலயங்களையும், தூபகலசங்களையும், மகா பரிசுத்தமான உள் ஆலயத்தினுடைய கதவுகளின் பொன்னான முளைகளையும், தேவாலயமாகிய மாளிகைக் கதவுகளின் பொன்னான முளைகளையும் செய்தான்.

1இராஜா 7:51. இவ்விதமாய் ராஜாவாகிய சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்துக்காகச் செய்த வேலைகளெல்லாம் முடிந்தது; அப்பொழுது சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீது பரிசுத்தம் பண்ணும்படி நேர்ந்துகொண்ட வெள்ளியையும் பொன்னையும் பணிமுட்டுகளையும் கொண்டுவந்து, கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களில் வைத்தான்.

கர்த்தருடைய ஆலயத்திற்காக ராஜாவாகிய சாலொமோனுக்கு, ஈராம் முதலில் வெண்கல வேலைகளை செய்து கொடுக்கிறான். அதன் பின்பு பொன் வேலைகளை செய்கிறான். பொன்வேலைகளை செய்து முடிக்கும்போது, ராஜாவாகிய சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்திற்காக செய்த வேலைகளெல்லாம் முடிவு பெறுகிறது. தேவாலயத்தின் கதவுகளுக்குள்ளே இருப்பது எல்லாம் பொன்னால் செய்யப்பட்டிருக்கிறது.

தேவாலயத்தின் மகாபரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டிருக்கும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி, அதிலுள்ள கிருபாசனம், கேரூபின்கள் ஆகியவற்றை தவிர மற்றவையெல்லாமே புதிதாய் செய்யப்பட்டிருக்கிறது. பொன்னால் செய்யப்பட்ட பழைய பணிமுட்டுக்களெல்லாம் மறுபடியும் உருக்கப்பட்டு புதிதாய் செய்யப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய ஆலயத்திற்குத் தேவையான பணிமுட்டுக்களையெல்லாம் சாலொமோன் உண்டாக்குகிறார். அவற்றின் விவரம் வருமாறு:

1. பொன் பலிபீடம்
2. சமுகத்தப்பங்களை வைக்கும் பொன் மேஜை
3. சந்நிதி ஸ்தானத்திற்கு முன்பாக வைக்கும் பசும்பொன் விளக்குத்தண்டுகள். இவை வலதுபுறமாக ஐந்தும் இடதுபுறமாக ஐந்தும் வைக்கப்பட்டிருக்கிறது. இவை பொன்னான அதின் பூக்களோடும் விளக்குகளோடும் கத்தரிகளோடுங்கூட உண்டாக்கப்பட்டிருக்கிறது.
4. பசும்பொன் கிண்ணங்கள்
5. வெட்டுக்கத்திகள்
6. கலங்கள்
7. கலயங்கள்
8. தூபகலசங்கள்
9. மகா பரிசுத்தமான உள் ஆலயத்தினுடைய கதவுகளின் பொன்னான முளைகள்.
10. தேவாலயமாகிய மாளிகைக் கதவுகளின் பொன்னான முளைகள்.

சாலொமோன் ஒரு பொன்பலிபீடம் மாத்திரமே உண்டாக்குகிறார். மோசேயின் ஆசாரிப்புக்கூடாரத்திலும் ஒரு பொன்பலிபீடம் மாத்திரமே இருந்தது. சாலொமோன் கட்டின தேவாலயத்திலும் ஒரு பொன்பலிபீடம் மாத்திரமே இருக்கிறது. கிறிஸ்துவானவர் ஒருவரே என்பதற்கும், அவருடைய பரிந்துபேசுதலும் ஒன்றே என்பதற்கு இது அடையாளம்.

சாலொமோன் ஐந்து பொன்மேஜைகளை உண்டாக்குகிறார். "பத்து மேஜைகளையும் செய்து, அவைகளை தேவாலயத்தில் வலதுபுறத்திலே ஐந்தும் இடதுபுறத்திலே ஐந்துமாக வைத்து, நூறு பொன் கலங்களையும் பண்ணினான்" (2நாளா 4:8).

கர்த்தருடைய ஆலயத்தில் ஆவிக்குரிய போஜனம் தாராளமாய்க் கிடைக்கும் என்பதற்கு அடையாளமாக சமுகத்தப்பங்களை வைக்கும் ஐந்து பொன்மேஜைகளை சாலொமோன் உண்டாக்கியிருக்கிறார்.

சாலொமோன் பத்து பசும்பொன் விளக்குத் தண்டுகளை உண்டாக்குகிறார் (1இராஜா 7:49). சுவிசேஷத்தின் மூலமாய் நமக்கு பரலோகத்தின் வெளிச்சம் தாராளமாய்க் கிடைக்கிறது. மோசேயின் நியாயப்பிரமாணத்தின் மூலமாக நமக்கு வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களைவிட, சுவிசேஷத்தின் மூலமாய் வெளிப்படுத்தப்பட்ட சத்தியம் அதிகம். இதற்கு அடையாளமாக, சாலொமோன் பத்து பசும்பொன் விளக்குத் தண்டுகளை உண்டாக்குகிறார் (1இராஜா 7:49).

இவ்விதமாய் ராஜாவாகிய சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்துக்காகச் செய்த வேலைகளெல்லாம் முடிவு பெறுகிறது;

அப்பொழுது சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீது பரிசுத்தம்பண்ணும்படி நேர்ந்துகொண்ட வெள்ளியையும் பொன்னையும் பணிமுட்டுகளையும் கொண்டுவந்து, கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களில் வைக்கிறார்.

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்காக தாவீது ராஜா பொன்னையும் வெள்ளியையும் ஏராளமாக சேகரித்து வைத்திருந்தார். தாவீது சேகரித்து வைத்திருந்த பொன் வெள்ளியினால், சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறார். செலவு பண்ணப்பட்ட பொன் வெள்ளியைத் தவிர, இன்னும் மீதமாயிருக்கிற பொன்னும் வெள்ளியும் தாராளமாயிருக்கிறது.

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டி முடித்தாலும், அதை ஒவ்வொரு வருஷமும் பழுதுபார்த்து பராமரிக்கவேண்டும். தேவாலயத்தில் எப்போதும் ஆராதனை நடைபெறவேண்டும். தேவாலயத்தின் நிர்வாக செலவுகளுக்கு பணம் வேண்டும். இதற்காக கர்த்தருடைய ஆலயத்தில் ஒரு பொக்கிஷம் நியமிக்கப்பட்டிருக்கிறது. தாவீது ராஜா பரிசுத்தம்பண்ணும்படி நேர்ந்துகொண்ட பொன்னையும் வெள்ளியையும், சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷத்தில் வைக்கிறார். இந்தப் பொக்கிஷம் கர்த்தருடைய ஊழியத்தில் பயன்படுத்தப்படும்.

கர்த்தருடைய ஊழியத்திற்காக பெற்றோர் பரிசுத்தம்பண்ணி நேர்ந்துகொண்டதை, அவர்களுடைய பிள்ளைகள் அதற்காக செலவு பண்ணவேண்டும். கர்த்தருடைய ஊழியத்திற்காக பெற்றோர் ஒதுக்கி வைத்திருந்த பணத்தை, அவர்களுடைய பிள்ளைகள் வேறு வழிகளில் செலவு பண்ணக்கூடாது. பெற்றோர் கர்த்தருடைய ஊழியத்திற்கு நேர்ந்துகொண்டதை, அவர்களுடைய பிள்ளைகள் பயபக்தியோடு பயன்படுத்தவேண்டும். பெற்றோர் ஆரம்பித்த ஊழியத்தை, அவர்களுடைய பிள்ளைகள் தொடர்ந்து செய்யவேண்டும். ஊழியம் கர்த்தருடையது. பிள்ளைகள் கர்த்தருக்கும் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும், தங்கள் பெற்றோருக்கும் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

8 அதிகாரம்

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டி, அதற்கான பணிமுட்டுகளையும் செய்து முடிக்கிறார். இவையெல்லாமே மகிமையாயிருக்கிறது. இந்த அதிகாரத்தில், சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தை பிரதிஷ்டைபண்ணும் சம்பவம் எழுதப்பட்டிருக்கிறது. கற்களை பணிதீர்ப்பதின் சத்தம், கேதுரு மரங்களை அறுக்கிற சத்தம் ஆகிய சத்தங்களைவிட, துதியின் சத்தமும், ஸ்தோத்திரத்தின் சத்தமும் அதிக மகிமையாயிருக்கிறது.

கர்த்தரும் அவருடைய ஜனங்களும் ஒருவரையொருவர் சந்தித்து, ஒருவருக்கொருவர் சம்பாஷணை பண்ணிக்கொள்ளும் பரிசுத்த ஸ்தலமே கர்த்தருடைய ஆலயம். தேவாலய பிரதிஷ்டையின்போது, கர்த்தரும் அவருடைய பிள்ளைகளும் சந்திக்கும் முதலாவது பரிசுத்தமான சந்திப்பு ஏற்படுகிறது.

தேவாலய பிரதிஷ்டைக்கு கூடிவந்திருக்கிற இஸ்ரவேல் ஜனங்கள் (1இராஜா 8:1,2). பிரதிஷ்டைக்கு வந்திருக்கிற பெரிய கூட்டமாகிய இஸ்ரவேல் அனைத்தும், தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் பதினாலு நாள் வரைக்கும் பண்டிகையை ஆசரிக்கிறார்கள் (1இராஜா 8:65).

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை ஆசாரியர்கள் எடுத்துக்கொண்டு வந்து, மகாபரிசுத்த ஸ்தானத்திலே வைக்கிறார்கள் (1இராஜா 8:3-9). கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று (1இராஜா 8:10,11).

சாலொமோன் கர்த்தரை நன்றியோடு துதிக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் தேவாலய பிரதிஷ்டைக்கு வந்திருப்பதன் நோக்கத்தையும், இந்தப் பிரதிஷ்டையைப்பற்றியும் சாலொமோன் ஜனங்களுக்கு எடுத்து சொல்லுகிறார் (1இராஜா 8:12-21).

கர்த்தருடைய ஆலயத்தில் ஏறெடுக்கப்படும் எல்லா ஜெபங்களுக்கும் கர்த்தர் தம்முடைய கிருபையினால் பதில் கொடுக்கவேண்டுமென்று, சாலொமோன் கர்த்தரிடத்தில் பயபக்தியோடு ஜெபிக்கிறார் (1இராஜா 8:22-53).

சாலொமோன் இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோருக்கும் ஆசீர்வாதமும், ஆவிக்குரிய ஆலோசனைகளும் சொல்லி, அவர்களை அனுப்பி வைக்கிறார் (1இராஜா 8:54-63). சாலொமோனும் அவரோடு கூடயிருக்கிற இஸ்ரவேலர் அனைவரும் கர்த்தருடைய சந்நிதியில் ஏராளமான பலிகளை செலுத்தி, கர்த்தருடைய ஆலயத்தை பிரதிஷ்டைபண்ணுகிறார்கள் (1இராஜா 8:62-66).

கர்த்தருடைய ஆலயம் பிரதிஷ்டைபண்ணப்பட்ட சம்பவம் இஸ்ரவேலர் அனைவருக்கும் மகிமையான சரித்திர சம்பவமாகும். இந்த நாட்கள் இயேசுகிறிஸ்துவின் மகிமையான நாட்களுக்கு அடையாளமாயிருக்கிறது.

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி.
1இராஜா 8:1-9

1இராஜா 8:1. அப்பொழுது கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சீயோன் என்னும் தாவீதின் நகரத்திலிருந்து கொண்டு வரும்படி சாலொமோன் இஸ்ரவேலின் மூப்பரையும், கோத்திரப் பிரபுக்களாகிய இஸ்ரவேல் புத்திரரிலுள்ள பிதாக்களின் தலைவர் அனைவரையும், எருசலேமில் ராஜாவாகிய சாலொமோன் தன்னிடத்திலே கூடிவரச்செய்தான்.

1இராஜா 8:2. இஸ்ரவேல் மனுஷரெல்லாரும் ஏழாம் மாதமாகிய ஏத்தானீம்மாதத்துப் பண்டிகையிலே, ராஜாவாகிய சாலொமோனிடத்தில் கூடிவந்தார்கள்.

1இராஜா 8:3. இஸ்ரவேலின் மூப்பர் அனைவரும் வந்திருக்கையில், ஆசாரியர் கர்த்தருடைய பெட்டியை எடுத்து,

1இராஜா 8:4. பெட்டியையும், ஆசரிப்புக் கூடாரத்தையும், கூடாரத்திலிருந்த பரிசுத்த பணிமுட்டுகள் அனைத்தையும் சுமந்து கொண்டுவந்தார்கள்; ஆசாரியரும், லேவியரும், அவைகளைச் சுமந்தார்கள்.

1இராஜா 8:5. ராஜாவாகிய சாலொமோனும் அவனோடேகூடின இஸ்ரவேல் சபையனைத்தும் பெட்டிக்கு முன்பாக நடந்து, எண்ணிக்கையும் கணக்குமில்லாத திரளான ஆடுகளையும் மாடுகளையும் பலி யிட்டார்கள்.

1இராஜா 8:6. அப்படியே ஆசாரியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டியை ஆலயத்தின் சந்நிதி ஸ்தானமாகிய மகாபரிசுத்த ஸ்தானத்திலே கேருபீன்களுடைய செட்டைகளின்கீழே கொண்டுவந்து வைத்தார்கள்.

1இராஜா 8:7. கேருபீன்கள் பெட்டியிருக்கும் ஸ்தானத்திலே தங்கள் இரண்டு செட்டைகளையும் விரித்து, உயர இருந்து பெட்டியையும் அதின் தண்டுகளையும் மூடிக்கொண்டிருந்தது.

1இராஜா 8:8. தண்டுகளின் முனைகள் சந்நிதி ஸ்தானத்திற்கு முன்னான பரிசுத்த ஸ்தலத்திலே காணப்படத்தக்கதாய் அந்தத் தண்டுகளை முன்னுக்கு இழுத்தார்கள்; ஆகிலும் வெளியே அவைகள் காணப்படவில்லை; அவைகள் இந்நாள்வரைக்கும் அங்கேதான் இருக்கிறது.

1இராஜா 8:9. இஸ்ரவேல் புத்திரர் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்டபின் கர்த்தர் அவர்களோடே உடன்படிக்கை பண்ணுகிறபோது, மோசே ஓரேபிலே அந்தப் பெட்டியில் வைத்த இரண்டு கற்பலகைகளே அல்லாமல் அதிலே வேறொன்றும் இருந்ததில்லை.

சாலொமோன் ராஜா கர்த்தருடைய ஆலயத்திற்காக செய்த வேலைகளெல்லாம் முடிவு பெறுகிறது. ஆலயத்திலுள்ள மகாபரிசுத்த ஸ்தலத்தில், இன்னும் உடன்படிக்கைப் பெட்டி வைக்கப்படவில்லை.

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி இல்லாத ஆலயம், ஆத்துமா இல்லாத சரீரம் போலவும், விளக்கு இல்லாத விளக்குத்தண்டுபோலவும், குடியிருப்போர் இல்லாத வீடு போலவும் வெறுமையாயிருக்கும்.

சாலொமோன் கட்டின தேவாலயத்தையும், அவர் செய்த பரிசுத்த பணிமுட்டுகளையும் கர்த்தர் அங்கீகரிக்கவேண்டும். கர்த்தர் அவற்றை அங்கீகரிக்கவில்லையென்றால் சாலொமோனுடைய முயற்சிகளெல்லாமே பிரயோஜனமற்றுப்போகும். அவை வீணாய்ப்போகும்.

"இவ்விதமாய் ராஜாவாகிய சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்திற்காக செய்த வேலைகளெல்லாம் முடிந்தது" (1இராஜா 8:51) என்று எழுதப்பட்டிருந்தாலும், இன்னும் ஒரு வேலை முடியாமலிருக்கிறது. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி, கர்த்தருடைய ஆலயத்திற்குள் கொண்டு வரப்படவேண்டும். இதுவே கர்த்தருடைய ஆலயத்திற்காக செய்யப்படும் வேலைகளில் பிரதான வேலையாகும்.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்திற்காக செய்கிற எல்லா வேலைகளையும் நேர்த்தியாய்ச் செய்து முடிக்கிறார். கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியையும் கர்த்தருடைய ஆலயத்திற்குக் கொண்டு வர ஒழுங்கு செய்கிறார்.

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டி முடித்த பின்பு, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சீயோன் என்னும் தாவீதின் நகரத்திலிருந்து கொண்டு வரும்படி, சாலொமோன் இஸ்ரவேலின் மூப்பரையும், கோத்திரப் பிரபுக்களாகிய இஸ்ரவேல் புத்திரரிலுள்ள பிதாக்களின் தலைவர் அனைவரையும், தன்னிடத்திலே கூடிவரச்செய்கிறார் (1இராஜா 8:1).

இஸ்ரவேல் மனுஷரெல்லாரும் ஏழாம் மாதமாகிய ஏத்தானீம்மாதத்துப் பண்டிகையிலே, ராஜாவாகிய சாலொமோனிடத்தில் கூடிவருகிறார்கள் (1இராஜா 8:2). ஏத்தானீம் மாதத்துப் பண்டிகை என்பது கூடாரங்களின் பண்டிகையைக் குறிக்கிறது. இந்தப் பண்டிகை ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதியிலே ஆசரிக்கப்படும்.

"பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: அந்த ஏழாம் மாதம் பதினைந்தாந்தேதிமுதல் ஏழுநாளளவும் கர்த்தருக்கு ஆசரிக்கும் கூடாரப்பண்டிகையாயிருப்பதாக" *(லேவி 23:33,34).*

தாவீது கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை, தனக்கு அருகாமையில் தாவீதின் நகரத்திற்கு கொண்டு வந்தார். சாலொமோனோ அந்தப் பெட்டியை கர்த்தருடைய ஆலயத்திற்கு கொண்டு வருகிறார். தாவீது செய்த ஊழியத்தை சாலொமோன் தொடர்ந்து செய்கிறார். பிள்ளைகள் தங்கள் பெற்றோர் விட்டுச் சென்ற ஊழியத்தை தொடர்ந்து செய்யவேண்டும். பெற்றோர் செய்த ஊழியம் அவர்களோடு நின்றுவிடக்கூடாது.

சாலொமோனுடைய அழைப்பை ஏற்று, இஸ்ரவேலின் மூப்பரும், கோத்திரப்பிரபுக்களாகிய இஸ்ரவேல் புத்திரரிலுள்ள பிதாக்களின் தலைவர் அனைவரும், எருசலேமில் ராஜாவாகிய சாலொமோனிடத்தில் கூடிவருகிறார்கள். இராணுவத்தலைவர்களும், நியாயாதிபதிகளும் சாலொமோனிடத்தில் கூடிவருகிறார்கள். இவர்களெல்லோருமே ஒரே நோக்கத்திற்காக கூடிவந்திருக்கிறார்கள். கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை சீயோன் என்னும் தாவீதின் நகரத்திலிருந்து, எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திற்கு கொண்டு வரவேண்டும். இதுவே அவர்கள் கூடிவந்திருப்பதன் நோக்கம்.

இஸ்ரவேலின் மூப்பரும், கோத்திரப்பிதாக்களின் தலைவரும் சாலொமோனின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து அவரைக் கனம்பண்ணுகிறார்கள். சாலொமோன் இஸ்ரவேல் தேசத்திற்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறார். அவருடைய ராஜ்யபாரத்தில் இஸ்ரவேல் தேசம் சமாதானமாயும், சந்தோஷமாயும், செழிப்பாயும் இருக்கிறது. சாலொமோன் தங்களுக்கு செய்த நன்மைகளை நினைவுகூர்ந்து, அவருக்கு நன்றி சொல்லுவதற்காக, இஸ்ரவேலின் மூப்பரும், கோத்திரப்பிதாக்களின் தலைவர் அனைவரும் சாலொமோனிடத்தில் கூடிவந்திருக்கிறார்கள்.

அவர்கள் எல்லோரும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை கனம்பண்ணுவதற்காக வந்திருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருக்கும் தம்முடைய கிருபையையும், இரக்கத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார். கர்த்தர் தங்களுக்கு செய்த பொதுவான நன்மைகளை நினைவுகூர்ந்து, அவரைத் துதிப்பதற்காக, இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் கூடிவந்திருக்கிறார்கள்.

சாலொமோனிடத்தில் கூடிவந்திருக்கிற இஸ்ரவேலர் ஒருவரும் வெறுங்கையோடு வரவில்லை. அவர்கள் எல்லோரும் கர்த்தருக்கு பலியிடுவதற்காக எண்ணிக்கையும் கணக்குமில்லாத திரளான ஆடுகளையும் மாடுகளையும் தங்களோடு கொண்டு வந்திருக்கிறார்கள் *(1இராஜா 8:5).*

கர்த்தருடைய ஊழியத்தில் ஆசாரியருக்கென்று விசேஷித்த ஊழியம் நியமிக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் பிரயாணம் செய்தபோது, லேவியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை சுமந்தார்கள். இங்கே ஆசாரியர்கள் கர்த்தருடைய பெட்டியை சுமக்கிறார்கள். கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி சுமக்கப்படும் கடைசி சம்பவம் இதுதான்.

யோசுவாவின் காலத்தில், இஸ்ரவேல் ஜனத்தார் எரிகோ கோட்டையை சுற்றி நடந்தபோது, ஆசாரியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை சுமந்தார்கள். இது கர்த்தரிடத்திலிருந்து வந்த விசேஷித்த கட்டளை. அதன் பின்பு இப்போது, சாலொமோனுடைய காலத்தில், ஆசாரியர்கள் கர்த்தருடைய பெட்டியை சுமக்கிறார்கள். இது உடன்படிக்கைப் பெட்டி சுமக்கப்படும் கடைசி நிகழ்ச்சி.

இஸ்ரவேலின் மூப்பர் அனைவரும் வந்திருக்கையில், ஆசாரியர் கர்த்தருடைய பெட்டியை எடுத்து, பெட்டியையும், ஆசரிப்புக் கூடாரத்தையும், கூடாரத்திலிருந்த பரிசுத்த பணிமுட்டுகள் அனைத்தையும் சுமந்து கொண்டுவருகிறார்கள்; ஆசாரியரும், லேவியரும், அவைகளைச் சுமக்கிறார்கள் *(1இராஜா 8:3,4).*

கர்த்தருடைய பெட்டியில் என்ன இருக்கிறது என்பதும் இந்த வசனப்பகுதியில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்டபின் கர்த்தர் அவர்களோடே உடன்படிக்கை பண்ணுகிறபோது, மோசே ஓரேபிலே அந்தப் பெட்டியில் வைத்த இரண்டு கற்பலகைகளே அல்லாமல் அதிலே வேறொன்றும் இருந்ததில்லை (1இராஜா 8:9). அந்தப் பெட்டியிலே இரண்டு கற்பலகைகள் மாத்திரமே இருக்கிறது. மன்னா வைக்கப்பட்டிருக்கிற பாத்திரமும், ஆரோனுடைய கோலும் உடன்படிக்கைப் பெட்டிக்குள்ளே இல்லை. அவை உடன்படிக்கைப் பெட்டிக்கு பக்கத்திலிருக்கிறது.

தாவீதும் சாலொமோனும் கர்த்தருடைய ஆலயத்திற்காக ஏராளமான பொன்னையும் வெள்ளியையும் பரிசுத்தம்பண்ணும்படி நேர்ந்துகொண்டார்கள். அவர்கள் நேர்ந்துகொண்ட வெள்ளியையும், பொன்னையும், சகல பணிமுட்டுகளையும்விட, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியும், அந்தப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருக்கிற இரண்டு கற்பலகைகளும் அவர்களுக்கு விலையேறப்பெற்றதாயிருக்கிறது.

ஆசாரியர் கர்த்தருடைய பெட்டியை எடுத்துக்கொண்டு வரும்போது, பெட்டியோடுகூட ஆசரிப்புக்கூடாரத்தையும், கூடாரத்திலிருந்த பரிசுத்த பணிமுட்டுகள் அனைத்தையும் சுமந்துகொண்டு வருகிறார்கள் (1இராஜா 8:4). மோசே வனாந்தரத்திலே கர்த்தருக்கு ஆசரிப்புக்கூடாரத்தைப் போட்டார். அந்தக் கூடாரம் கிபியோனிலிருந்தது. தாவீது கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தை தாவீதின் நகரமாகிய சீயோனிலே போட்டார்.

இப்போது ஆசாரியர் கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தை, கர்த்தருடைய ஆலயத்திற்கு சுமந்துகொண்டு வருகிறார்கள். ஆசரிப்புக்கூடாரத்தின் எல்லா பரிசுத்தங்களையும், கர்த்தருடைய ஆலயத்திலே சமர்ப்பிக்கிறார்கள். இனிமேல் கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் அவருடைய ஆலயத்தில் பரிபூரணமாய் தங்கியிருக்கும் என்பதற்கு இது அடையாளம். கர்த்தரைத் தேடுகிறவர்கள் வேறு எங்கும் போய் தேடாமல், கர்த்தருடைய ஆலயத்தில் வந்து தேடவேண்டும் என்பதற்கு இது அடையாளம்.

கர்த்தருடைய சபையில், சபையின் பரிசுத்தமான காரியங்களெல்லாம் சமர்ப்பிக்கப்படவேண்டும். கர்த்தருடைய சபையில் சந்தோஷமும், மகிமையும் நிரம்பியிருக்கவேண்டும். பரலோகத்திலிருந்து வரும் பரிசுத்தம் சபையின்மீது நிறைவாக தங்கியிருக்கவேண்டும்.

ஆசாரியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டியை ஆலயத்தின் சந்நிதி ஸ்தானமாகிய மகாபரிசுத்த ஸ்தானத்திலே கேருபீன்களுடைய செட்டைகளின்கீழே கொண்டுவந்து வைக்கிறார்கள் (1இராஜா 8:6). இதுவரையிலும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி பல இடங்களுக்கும் சுமந்து கொண்டு போகப்பட்டது. இப்போதோ கர்த்தருடைய பெட்டி, அதற்குரிய ஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்படுகிறது. இதன் பின்பு கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி எங்கும் எடுத்துச் செல்லப்படவில்லை. "அவைகள் இந்நாள் வரைக்கும் அங்கே தான் இருக்கிறது" (1இராஜா 8:8).

கேருபீன்கள் பெட்டியிருக்கும் ஸ்தானத்திலே தங்கள் இரண்டு செட்டைகளையும் விரித்து, உயர இருந்து பெட்டியையும் அதின் தண்டுகளையும் மூடிக்கொண்டிருக்கிறது. ஆசாரியர்கள் தண்டுகளின் முனைகள் சந்நிதி ஸ்தானத்திற்கு முன்னான பரிசுத்த ஸ்தலத்திலே காணப்படத்தக்கதாய் அந்தத் தண்டுகளை முன்னுக்கு இழுக்கிறார்கள்; ஆகிலும் வெளியே அவைகள் காணப்படவில்லை; அவைகள் இந்நாள்வரைக்கும் அங்கேதான் இருக்கிறது (1இராஜா 8:7,8).

கர்த்தர் ஆலயத்தின் சந்நிதி ஸ்தானமாகிய மகாபரிசுத்த ஸ்தானத்திலிருந்து தம்முடைய ஜனங்களோடு பேசுகிறார். கர்த்தர் மகாபரிசுத்த ஸ்தலத்திலிருந்து தங்களோடு பேசுவார் என்று ஜனங்களும் எதிர்பார்க்கிறார்கள். மகாபரிசுத்த ஸ்தலம், கர்த்தருடைய பிரசன்னம் வாசம்பண்ணுகிற ஸ்தலம். இந்தப் பரிசுத்த ஸ்தலத்தில் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பெட்டி கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளம்.

ஆசாரியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை கேருபீன்களுடைய செட்டைகளின்கீழ் கொண்டு வந்து வைக்கிறார்கள். சாலொமோன் ராஜா கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டினபோது, மகாபரிசுத்த ஸ்தலத்திலே கேருபீன்களையும் உள்ஆலயத்திலே வைத்திருக்கிறார்.

"ஒரு கேருபீன் பத்துமுழ உயரமாயிருந்தது; மற்றக் கேருபீனும் அப்படியே இருந்தது. அந்தக் கேருபீன்களை உள் ஆலயத்திலே வைத்தான்; கேருபீன்களின் செட்டைகள் விரித்திருந்ததினால், ஒரு கேருபீனின் செட்டை ஒருபக்கத்துச் சுவரிலும், மற்றக் கேருபீனின் செட்டை மறுபக்கத்துச் சுவரிலும் தொடத்தக்கதாயிருந்தது; ஆலயத்தின் நடுமையத்தில், அவைகளின் செட்டைகள் ஒன்றோடொன்று தொடத்தக்கதாயிருந்தது. அந்தக் கேருபீன்களைப் பொன்தகட்டால் மூடினான்" (1இராஜா 6:26-28)

கேருபீன்கள் விசேஷித்த பாதுகாப்புக்கு அடையாளம். தேவதூதர்கள் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தைப் பாதுகாக்கிறார்கள். கர்த்தருடைய ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கிற தேவனுடைய பிரமாணங்களும், கர்த்தருடைய ஆலயத்திலே தேவனை ஆராதிக்க வருகிற ஜனங்களும், தேவதூதர்களின் விசேஷித்த பாதுகாப்பிலிருக்கிறார்கள்.

கர்த்தருடைய மகிமை 1இராஜா 8:10,11

1இராஜா 8:10. அப்பொழுது ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படுகையில், மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று.

1இராஜா 8:11. மேகத்தினிமித்தம் ஆசாரியர்கள் ஊழியஞ்செய்கிறதற்கு நிற்கக்கூடாமற் போயிற்று; கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று.

கர்த்தர் தமக்காக கட்டப்பட்டிருக்கும் ஆலயத்தை தமது கிருபையினால் அங்கீகரிக்கிறார். கர்த்தர் தம்முடைய மகிமையை, மகாபரிசுத்த ஸ்தலத்திலே நிரப்பும் வரையிலும், ஆசாரியர்களால் அந்த ஸ்தலத்தில் நிற்க முடிகிறது. அது வரையிலும் ஆசாரியர்களால் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே வரமுடிகிறது.

ஆசாரியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை, ஆலயத்தின் சந்நிதி ஸ்தானமாகிய மகாபரிசுத்த ஸ்தானத்திலே கொண்டு வந்து வைத்தபோது, ஆசாரியர்களால் மகாபரிசுத்த ஸ்தலத்திலே ஊழியம் செய்கிறதற்கு நிற்கக்கூடாமல் போயிற்று. மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே யாரும் பிரவேசிக்க முடியவில்லை.

பாவநிவாரண நாளின்போது மாத்திரம், பிரதான ஆசாரியன், மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே பிரவேசிக்கலாம். அந்த நாளில் பிரதான ஆசாரியனைத் தவிர வேறு யாரும் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க முடியாது. மற்ற நாட்களில், மகாபிரதான ஆசாரியனும், வேறுயாரும், உடன்படிக்கைப் பெட்டி வைக்கப்பட்டிருக்கிற மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க முடியாது.

ஆசாரியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை மகாபரிசுத்த ஸ்தலத்தில் கொண்டு வந்து வைத்துவிட்டு அவர்கள் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படும் வரையிலும், கர்த்தருடைய மகிமை, மகாபரிசுத்த ஸ்தலத்தை நிரப்பவில்லை. ஆசாரியர்கள் மகாபரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்பட்ட பின்பு, மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. மேகம் கர்த்தருடைய மகிமைக்கு அடையாளம். கர்த்தருடைய மகிமை மகாபரிசுத்த ஸ்தலத்தை நிரப்புவதோடு, ஆலயம் முழுவதையும் நிரப்பிற்று.

கர்த்தருடைய மகிமைக்கு அடையாளமாயிருக்கிற மேகத்தினிமித்தம், ஆசாரியர்கள் ஊழியம் செய்கிறதற்கு நிற்கக்கூடாமற்போயிற்று. இந்த ஆசாரியர்கள் பொன்பலிபீடத்தில் தூபவர்க்கங்களை பலியாக செலுத்துகிறவர்கள். அவர்களால் அங்கே நின்று ஊழியம் செய்ய முடியவில்லை. கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. தேவனுடைய மகிமை அவருடைய ஆலயத்தில் பிரத்தியட்சமாக வெளிப்படுகிறது.

கர்த்தர் தம்முடைய உடன்படிக்கைப் பெட்டியை கனம்பண்ணுகிறார். உடன்படிக்கைப் பெட்டி கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளம் என்பதை கர்த்தர் தாமே அங்கீரிக்கிறார். இதுவரையிலும் உடன்படிக்கைப் பெட்டி அங்கும் இங்குமாக சுற்றி அலைந்துகொண்டிருந்தது. இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது, லேவியர்கள் சாதாரண ஸ்தலங்களில் உடன்படிக்கைப் பெட்டியை வைத்தார்கள்.

ஆசரிப்புக்கூடாரத்தில் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி எல்லோரும் பார்க்கும் வண்ணமாக வெளிப்படையாக வைக்கப்பட்டிருந்தது. ஆகையினால் கர்த்தர் அப்போது தம்முடைய மகிமையை பிரத்தியட்சமாக அங்கே வெளிப்படுத்தவில்லை.

இப்போதோ கர்த்தருடைய ஆலயத்திலே, அவருடைய உடன்படிக்கைப் பெட்டி பரிசுத்த ஸ்தானத்தில் வைக்கப்பட்டபோது, கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்புகிறது. மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. கர்த்தர் உடன்படிக்கைப் பெட்டியையும், அது இப்போது வைக்கப்பட்டிருக்கிற சந்நிதி ஸ்தானமாகிய மகாபரிசுத்த ஸ்தலத்தையும் அங்கீகரித்திருக்கிறார் என்பதற்கு இது அடையாளம். மோசே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை ஆசாரிப்புக்கூடாரத்திலே முதன் முதலில் வைத்தபோது, அங்கு காணப்பட்ட கர்த்தருடைய மகிமையைவிட, இப்போது கர்த்தருடைய மகிமை அதிகமாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

சாலொமோன் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டியிருக்கிறார். கர்த்தருடைய ஆலயத்திற்காக பரிசுத்தமான பணிமுட்டுகளை செய்திருக்கிறார். கர்த்தர் தேவாலயக் கட்டிடத்தையும், பரிசுத்த பணிமுட்டுகளையும் அங்கீரித்திருக்கிறார் என்பதற்கு அடையாளமாக, கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. கர்த்தருடைய ஆலயமும், பரிசுத்த பணிமுட்டுகளும் கர்த்தருடைய நாமமகிமைக்காக பரிசுத்தமாய் பயன்படுத்தப்படவேண்டும். மனுஷர் மத்தியிலே தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படவேண்டும். இதுவே கர்த்தருடைய சித்தம்.

ஆசாரியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை சுமந்துகொண்டு போனபோது, சாலொமோன் ராஜாவும், இஸ்ரவேல் சபை அனைத்தும் பெட்டிக்கு முன்பாக நடக்கிறார்கள். ஆசாரியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை ஆலயத்தின் சந்நிதி ஸ்தானமாகிய மகாபரிசுத்த ஸ்தலத்திலே வைத்தபோது, இஸ்ரவேல் சபை அனைத்தும் கர்த்தருடைய ஆலயத்திலே கூடிவந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோருமே மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பியதை பிரத்தியட்சமாய்ப் பார்க்கிறார்கள். அவர்கள் கண்ட தரிசனம் அவர்களுடைய இருதயத்திற்குள் திகிலையும், நடுக்கத்தையும் உண்டாக்கிற்று.

இஸ்ரவேல் சபையார் அனைவரும் கர்த்தருடைய மகிமையைப்பற்றி இதுவரையிலும் மோசேயின் ஆகமங்களில் படித்திருக்கிறார்கள். கர்த்தருடைய மகிமையை இஸ்ரவேலின் முற்பிதாக்கள் தரிசித்ததை இவர்கள் மோசேயின் ஆகமங்களில் வாசித்திருக்கிறார்கள். ஆனால் இவர்கள் இதுவரையிலும் கர்த்தருடைய மகிமையை பிரத்தியட்சமாய்ப் பார்த்ததில்லை. இப்போது கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி, ஆலயத்தின் மகாபரிசுத்த ஸ்தானத்திலே வைக்கப்பட்டபோது, அங்கே கூடியிருந்த இஸ்ரவேல் சபையார் அனைவரும், கர்த்தருடைய மகிமை, கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பியதை பிரத்தியட்சமாய்ப் பார்க்கிறார்கள். கர்த்தருடைய மகிமையை திகிலோடும், பயத்தோடும், நடுக்கத்தோடும் பார்க்கிறார்கள். இதனால் இஸ்ரவேல் சபையார் அனைவருக்கும் கர்த்தரைக் குறித்து பயத்தோடு கூடிய பக்தி உண்டாயிற்று.

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணப்போகிறார். சாலொமோன் ஏறெடுக்கும் ஜெபங்களுக்கு செவிகொடுக்க கர்த்தர் ஆயத்தமாயிருக்கிறார் என்பதற்கு கர்த்தருடைய மகிமை இஸ்ரவேல் சபையாருக்கு அடையாளமாயிருக்கிறது.

கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பியபோது, மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. கர்த்தருடைய மகிமை மேகமாகவும், காரிருளாகவும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. கர்த்தர் காரிருளிலே வாசம்பண்ணுகிறார் என்று சாலொமோனும் சொல்லுகிறார் (1இராஜா 8:12).

சுவிசேஷத்தின் காலம் வெளிச்சத்தின் காலம். இது ஒளியின் காலம். சுவிசேஷத்தின் வெளிச்சமான காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சாலொமோனுடைய காலமானது காரிருளின் காலமாயிருக்கிறது.

இனிமேல் வரப்போகிற பரலோகத்தின் மகிமையான காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நாம் ஜீவிக்கிற இந்தக் காலம் காரிருளின் காலமாயிருக்கிறது. பரலோகத்தின் தெய்வீக மகிமையும், நித்திய சந்தோஷமும் நமக்கு இன்னும் பூரணமாய் வெளிப்படுத்தப்படவில்லை.

சாலொமோனுடைய வார்த்தைகள் 1இராஜா 8:12,13

1இராஜா 8:12. அப்பொழுது சாலொமோன்: காரிருளிலே வாசம்பண்ணுவேன் என்று கர்த்தர் சொன்னார் என்றும்,

1இராஜா 8:13. தேவரீர் வாசம்பண்ணத்தக்க வீடும், நீர் என்றைக்கும் தங்கத்தக்க நிலையான ஸ்தானமுமாகிய ஆலயத்தை உமக்குக் கட்டினேன் என்றும் சொல்லி,

சாலொமோன் ஆசாரியரை உற்சாகப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்து மறுரூபமலையிலே ஜெபம்பண்ணுகையில் அவருடைய முகரூபம் மாறிற்று. இயேசுவோடுகூட பேதுருவும், யோவானும், யாக்கோபும் இருந்தார்கள். பேதுரு இயேசுவோடு பேசுகையில் "ஒரு மேகம் வந்து அவர்கள்மேல் நிழலிட்டது; அவர்கள் அந்த மேகத்துக்குள் பிரவேசிக்கையில் சீஷர்கள் பயந்தார்கள்" (லூக் 9:34).

சீஷர்கள் தங்கள்மேல் நிழலிட்ட மேகத்தைப் பார்த்து பயந்ததுபோல, மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பியபோது ஆசாரியர்களும் பயப்படுகிறார்கள். மேகத்தினிமித்தம் ஆசாரியர்கள் ஊழியம் செய்கிறதற்கு நிற்கக்கூடாமல் போயிற்று. ஆசாரியர்கள் ஒன்றும் பேசாமல் அமைதியாயிருக்கிறார்கள்.

சாலொமோன் ஆசாரியர்களை உற்சாகப்படுத்துகிறார். அவர்களுடைய பயத்தைப் போக்குவதற்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். சாலொமோன் ஆசாரியர்களிடம், "காரிருளிலே வாசம்பண்ணுவேன் என்று கர்த்தர் சொன்னார்" (1இராஜா 8:12) என்று சொல்லுகிறார். காரிருளானது தேவனுடைய பிரசன்னத்திற்கு அடையாளம் என்பதை சாலொமோன் ஆசாரியருக்கு ஞாபகப்படுத்துகிறார்.

கர்த்தருடைய கிருபையும் அநுக்கிரகமும் இஸ்ரவேல் சபையாருக்கு கிடைத்திருக்கிறது. இதற்கு அடையாளமாகவே மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று.

"ஆரோனின் இரண்டு குமாரர் கர்த்தருடைய சந்நிதியிலே சேர்ந்து மரித்துப் போனபின்பு, கர்த்தர் மோசேயை நோக்கி: கிருபாசனத்தின்மேல் ஒரு மேகத்தில் நான் காணப்படுவேன்; ஆதலால் உன் சகோதரனாகிய ஆரோன் சாகாதபடி, பரிசுத்த ஸ்தலத்திலே திரைக்கு உட்புறத்திலிருக்கிற பெட்டியின்மேலுள்ள கிருபாசன மூடிக்கு முன்பாகச் சகல வேளையிலும் வரவேண்டாம் என்று அவனுக்குச் சொல்" (லேவி 16:1,2).

கர்த்தர் மோசேயிடத்தில், "கிருபாசனத்தின்மேல் ஒரு மேகத்தில் நான் காணப்படுவேன்" என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். கர்த்தருடைய வார்த்தை இப்போது பிரத்தியட்சமாய் நிறைவேறியிருக்கிறது. கர்த்தர் சொன்ன பிரகாரம் அவர் மேகத்தில் காணப்படுகிறார்.

சாலொமோன் கர்த்தருக்காக தான் கட்டின தேவாலயத்தைப்பற்றிச் சொல்லும்போது, இது தேவரீர் வாசம்பண்ணத்தக்க வீடு என்றும், தேவரீர் என்றைக்கும் தங்கத்தக்க நிலையான ஸ்தானாகிய ஆலயம் என்றும் சொல்லுகிறார். சாலொமோன் இந்த ஆலயத்தைப்பற்றி கர்த்தரிடத்தில் சொல்லும்போது, "ஆலயத்தை உமக்கு கட்டினேன்" என்று சொல்லுகிறார். சாலொமோன் கர்த்தருக்காகவே இந்த ஆலயத்தைக் கட்டியிருக்கிறார். இது கர்த்தருடைய ஆலயம்.

மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பியதைப் பார்த்து சாலொமோன் சந்தோஷப்படுகிறார். கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாக, கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. சாலொமோன் இதையே எதிர்பார்த்தார். இதையே விரும்பினார். கர்த்தர் தம்முடைய ஆலயத்தில் வாசம்பண்ணவேண்டுமென்று சாலொமோன் விரும்பினார். சாலொமோன் விரும்பிய பிரகாரம், கர்த்தர் தம்முடைய ஆலயத்தில் வாசம்பண்ணுகிறார். கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஸ்தலத்தில் தங்கியிருக்கிறார்.

ஆகையினால் மேகம் கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பியதைப் பார்த்து ஆசாரியர்கள் பயப்படவேண்டியதில்லை என்று சாலொமோன் அவர்களுக்கு ஆறுதல் சொல்லுகிறார். கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பியதினால் ஆசாரியர்கள் சந்தோஷப்படவேண்டுமென்றும், அவர்கள் கர்த்தருக்குள் களிகூரவேண்டுமென்றும் சாலொமோன் அவர்களுக்கு உற்சாகமான வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

சாலொமோனுடைய உபதேசங்கள் 1இராஜா 8:14-21

1இராஜா 8:14. ராஜா முகம் திரும்பி, இஸ்ரவேல் சபையெல்லாம் ஆசீர்வதித்தான்; இஸ்ரவேல் சபையாரெல்லாரும் நின்றார்கள்.

1இராஜா 8:15. அவன் சொன்னது: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; அவர் என் தகப்பனாகிய தாவீதுக்குத் தம்முடைய வாக்கினால் சொன்னதைத் தம்முடைய கரத்தினால் நிறைவேற்றினார்.

1இராஜா 8:16. அவர் நான் என் ஜனமாகிய இஸ்ரவேலை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணின நாள்முதற்கொண்டு, என் நாமம் விளங்கும்படி, ஒரு ஆலயத்தைக் கட்ட வேண்டும் என்று நான் இஸ்ரவேலுடைய எல்லாக் கோத்திரங்களிலுமுள்ள ஒரு பட்டணத்தையும் தெரிந்துகொள்ளாமல் என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் அதிகாரியாயிருக்கும்படி தாவீதையே தெரிந்துகொண்டேன் என்றார்.

1இராஜா 8:17. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்கிற விருப்பம் என் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தில் இருந்தது.

1இராஜா 8:18. ஆனாலும் கர்த்தர் என் தகப்பனாகிய தாவீதை நோக்கி: என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்கிற விருப்பம் உன் மனதிலே இருந்தது நல்லகாரியந்தான்.

1இராஜா 8:19. ஆகிலும் நீ அந்த ஆலயத்தைக் கட்டமாட்டாய், உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் குமாரனே என் நாமத்திற்கு அந்த ஆலயத்தைக் கட்டுவான் என்றார்.

1இராஜா 8:20. இப்போதும் கர்த்தர் சொல்லிய தம்முடைய வார்த்தையை நிறைவேற்றினார்; கர்த்தர் சொன்னபடியே, நான் என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்தில் எழும்பி, இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டினேன்.

1இராஜா 8:21. கர்த்தர் நம்முடைய பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபோது, அவர்களோடே பண்ணின உடன்படிக்கை இருக்கிற பெட்டிக்காக அதிலே ஒரு ஸ்தானத்தை உண்டாக்கினேன் என்றான்.

சாலொமோன் ஆசாரியர் மத்தியிலே சுருக்கமாகப் பேசினார். அதன் பின்பு அவர் முகம் திரும்பி, இஸ்ரவேல் சபையையெல்லாம் ஆசீர்வதித்தார். ஆசாரியர்கள் ஆலயத்தின் உட்பிரகாரத்திலிருக்கிறார்கள். இஸ்ரவேல் சபையாரெல்லாரும் ஆலயத்தின் வெளிப்பிரகாரத்தில் நிற்கிறார்கள் (1இராஜா 8:14). இஸ்ரவேலின் சபையார் திரளான எண்ணிக்கையிலிருக்கிறார்கள். சாலொமோன் அவர்கள் எல்லோருக்கும் உபதேசம் பண்ணுகிறார்.

சாலொமோன் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு உபதேசம்பண்ணுவதற்கு முன்பாக, இஸ்ரவேல் சபையையெல்லாம் ஆசீர்வதிக்கிறார். கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. இஸ்ரவேல் சபையார் எல்லோரும் மேகத்தையும், அதனால் ஏற்பட்டிருக்கிற காரிருளையும் பார்க்கிறார்கள். அவர்கள் அதைப் பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். இஸ்ரவேல் சபையார் காரிருளைப் பார்த்து மிகவும் பயப்படுகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தில் மேகத்தையோ, காரிருளையோ எதிர்பார்க்கவில்லை.

இஸ்ரவேல் சபையார் எல்லோரும், ஆலயத்தின் வெளிப்பிரகாரத்தில், ஆச்சரியத்தோடும், பயத்தோடும் நிற்கிறார்கள். அப்போது சாலொமோன் அவர்களை ஆசீர்வதிக்கிறார். அவர்களுக்கு சமாதானம் சொல்லுகிறார். அவர்களை சாந்தப்படுத்துகிறார். அவர்களை அமைதிப்படுத்துகிறார். தங்களுக்கு ஏற்பட்டிருக்கிற பயத்திலிருந்து அவர்கள் விடுதலை பெறுவதற்கு, சாலொமோன் அவர்களுக்கு உதவிசெய்கிறார். சாலொமோனுடைய உபதேச வார்த்தைகள் இஸ்ரவேல் சபையாருக்கு ஆசீர்வாதமாயிருக்கிறது.

சாலொமோன் இஸ்ரவேல் சபையாரிடத்தில் கர்த்தருடைய ஆலயத்தைப்பற்றியும், அது இப்போது கட்டப்பட்டு பிரதிஷ்டைபண்ணப்பட்டிருப்பது பற்றியும் விரிவாகப் பேசுகிறார். சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைப்பற்றி பேசுவதற்கு முன்பாக கர்த்தரை ஸ்தோத்திரம் பண்ணுகிறார். "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்னும் ஸ்தோத்திர வார்த்தையோடு சாலொமோன் தன்னுடைய உபதேச வார்த்தைகளை ஆரம்பிக்கிறார்.

கர்த்தருடைய கிருபையுள்ள நல்ல கரம் இதுவரையிலும் சாலொமோனோடு கூடயிருந்திருக்கிறது. தேவாலயத்திற்கு அஸ்திபாரம் போடப்பட்ட நாள் முதல், தேவாலயம் பிரதிஷ்டைபண்ணப்படுகிற இந்த நாள் வரையிலும் கர்த்தருடைய உதவியும், ஒத்தாசையும், வழிநடத்துதலும் சாலொமோனுக்கு கிடைத்திருக்கிறது. சாலொமோன் கர்த்தருடைய உதவிகளையும், கிருபைகளையும் அங்கீகரித்து, "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று கர்த்தரை நன்றியோடு துதிக்கிறார்.

விசுவாசிகளாகிய நமக்கு கர்த்தரைத் துதிப்பதே சந்தோஷமாயிருக்கவேண்டும். கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளை நினைத்துப் பார்த்து அவரை நன்றியோடு துதிக்கவேண்டும். கர்த்தர் நமக்கு செய்யப்போவதாக சொல்லியிருக்கும் வாக்குத்தத்தங்களையும் நினைவுகூர்ந்து, கர்த்தரை நன்றியோடு துதிக்கவேண்டும். தேவனாகிய கர்த்தர் நம்முடைய துதிகளுக்கு பாத்திரர். கர்த்தரைத் துதிப்பதே நமக்கு பெலன்.

இஸ்ரவேல் சபையார் எல்லோரும் ஆலயத்தின் வெளிப்பிரகாரத்தில் பயத்தோடும் ஆச்சரியத்தோடும் நின்றுகொண்டிருக்கிறார்கள். மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பினதை பார்த்து, அவர்களுடைய இருதயங்களில் பயமும், திகிலும், ஆச்சரியமும் நிரம்பியிருக்கிறது. அவர்களுடைய இருதயங்களில் கர்த்தரைத் துதிக்கும் துதி நிரம்பியிருக்கவேண்டும். சாலொமோன் கர்த்தரைத் துதிக்கிறார். இஸ்ரவேல் சபையார் எல்லோரும் கர்த்தரைத் துதிப்பதற்கு சாலொமோன் அவர்களை வழிநடத்துகிறார்.

கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவர். தன்னுடைய தகப்பனாராகிய தாவீதுக்கு, கர்த்தர் சொன்னதையும், செய்ததையும் சாலொமோன் இந்த சந்தர்ப்பத்தில் நினைவுகூருகிறார். "கர்த்தர் என் தகப்பனாகிய தாவீதுக்குத் தம்முடைய வாக்கினால் சொன்னதைத் தம்முடைய கரத்தினால் நிறைவேற்றினார்" (1இராஜா 8:15) என்று சாலொமோன் கர்த்தர் தாவீதுக்குச் செய்த நன்மைகளை சாலொமோன் நினைவுகூருகிறார்.

கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தங்களை, தம்முடைய வாயினால் சொல்லுகிறார். தாம் சொன்ன வார்த்தைகளை கர்த்தர் தம்முடைய கரத்தினால் நிறைவேற்றுகிறார். கர்த்தர் நமக்கு செய்வதையும், அவர் நமக்கு சொல்லுவதையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். அப்போது கர்த்தர் நமக்கு காண்பிக்கும் கிருபைகளையும் இரக்கங்களையும் நாம் புரிந்துகொள்வோம்.

சாலொமோன் கர்த்தருக்கு ஆலயம் கட்டியிருக்கிறார். சாலொமோன் இப்போது கர்த்தருடைய ஆலயத்தை கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணுகிறார். கர்த்தருடைய ஆலயம் கட்டப்பட்ட சரித்திரத்தை சாலொமோன் இஸ்ரவேல் சபையாருக்கு தெளிவுபடுத்துகிறார். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவும், அவருடைய வழிநடத்துதலின் பிரகாரமாகவும் கர்த்தருக்கு ஆலயம் கட்டப்பட்டிருக்கிறது.

தம்முடைய நாமம் விளங்கும்படி ஒரு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாகவும் தீர்மானமாகவும் இருக்கிறது. தம்முடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு கர்த்தர் ஒரு பட்டணத்தையோ, அல்லது ஒரு தேசத்தையோ அல்லது ஒரு கோத்திரத்தையோ தேர்ந்தெடுக்கவில்லை. கர்த்தர் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாகயிருக்கிற தாவீதை தேர்ந்தெடுத்தார். சாலொமோன் இஸ்ரவேல் சபையாருக்கு இந்த சத்தியத்தைத் தெளிவுபடுத்துகிறார்.

"நான் என் ஜனமாகிய இஸ்ரவேலை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணின நாள்முதற்கொண்டு, என் நாமம் விளங்கும்படி, ஒரு ஆலயத்தைக் கட்ட வேண்டும் என்று நான் இஸ்ரவேலுடைய எல்லாக் கோத்திரங்களிலுமுள்ள ஒரு பட்டணத்தையும் தெரிந்துகொள்ளாமல் என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் அதிகாரியாயிருக்கும்படி தாவீதையே தெரிந்துகொண்டேன்" (1இராஜா 8:16) என்று கர்த்தர் சொன்னார். இவ்வாறு, கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவும், அவருடைய வழிநடத்துதலின் பிரகாரமாகவும், கர்த்தருடைய நாமம் விளங்கும்படி இந்த ஆலயம் கட்டப்பட்டிருக்கிறது. இதை சாலொமோன் ஜனங்களுக்கு விரிவாக எடுத்துச் சொல்லுகிறார்.

தாவீது கர்த்தருக்கு இப்படிப்பட்ட ஆலயம் கட்டவேண்டும் என்று விரும்பினார். தம்முடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு கர்த்தர் தாவீதைத் தெரிந்துகொண்டதினால், "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்கிற விருப்பம் தாவீதின் இருதயத்தில் இருந்தது" (1இராஜா 8:17). கர்த்தரின் நாமத்திற்கு ஆலயம் கட்டவேண்டும் என்பது தாவீதின் சுயவிருப்பமல்ல. இது கர்த்தரால் உண்டான விருப்பம். சாலொமோன் இஸ்ரவேல் சபையாருக்கு இந்த சத்தியத்தையும் தெளிவுபடுத்துகிறார்.

கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்னும் விருப்பம் தாவீதின் இருதயத்திலிருந்தது. ஆனால் கர்த்தருடைய ஆலயத்தை தாவீது கட்டகூடாது என்பதும், தாவீதின் குமாரன் அந்த ஆலயத்தை கட்டுவான் என்பதும் கர்த்தருடைய சித்தமாயிற்று. சாலொமோன் இந்த சத்தியத்தையும் இஸ்ரவேல் சபையாருக்கு தெளிவுபடுத்துகிறார்.

ஆனாலும் கர்த்தர் என் தகப்பனாகிய தாவீதை நோக்கி: "என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்கிற விருப்பம் உன் மனதிலே இருந்தது நல்லகாரியந்தான். ஆகிலும் நீ அந்த ஆலயத்தைக் கட்டமாட்டாய், உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் குமாரனே என் நாமத்திற்கு அந்த ஆலயத்தைக் கட்டுவான்" (1இராஜா 8:18,19) என்று கர்த்தர் சொன்னதை சாலொமோன் இஸ்ரவேல் சபையாருக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் தாவீதின் மனதிலிருந்த விருப்பத்தை அங்கீகரிக்கிறார். கர்த்தருடைய நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்கிற விருப்பம் தாவீதின் மனதிலே இருந்தது நல்ல காரியம் தான் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும் கர்த்தருடைய விருப்பத்தின் பிரகாரம், சாலொமோன் இந்த ஆலயத்தைக் கட்டியிருக்கிறார்.

சாலொமோன் கர்த்தருக்கு கட்டின ஆலயம் அவருடைய சொந்த விருப்பமல்ல. இந்த யோசனை ஆரம்பத்தில் சாலொமோனுடைய மனதிலே உண்டாகவில்லை. சாலொமோன் தன்னுடைய நாமம் விளங்கும்படியாகவோ அல்லது தன்னுடைய நாமமகிமைக்காகவோ இந்த ஆலயத்தைக் கட்டவில்லை. சாலொமோன் இந்த ஆலயத்தைக் கட்டினாலும், இந்த ஆலயத்தை, தாவீது ராஜாவே சாலொமோனுக்கு திட்டமிட்டுக்கொடுத்தார். கர்த்தரே தம்முடைய ஆலயத்தின் திட்டத்தை தாவீதுக்கு கொடுத்தார். கர்த்தருடைய ஆலயம் மனுஷருடைய திட்டத்தினால் கட்டப்படவில்லை. இது தேவனுடைய தெய்வீக திட்டத்தின் பிரகாரமாகவும், சித்தத்தின் பிரகாரமாகவும் கட்டப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய திட்டத்தின் பிரகாரமாக, தான் இந்த ஆலயத்தைக் கட்டியிருப்பதாக சாலொமோன் இஸ்ரவேல் சபையாருக்கு சொல்லுகிறார். சாலொமோன் இஸ்ரவேல் சபையார் எல்லோரையும் நோக்கி, "இப்போதும் கர்த்தர் சொல்லிய தம்முடைய வார்த்தையை நிறைவேற்றினார்; கர்த்தர் சொன்னபடியே, நான் என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்தில் எழும்பி,

இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டினேன். கர்த்தர் நம்முடைய பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபோது, அவர்களோடே பண்ணின உடன்படிக்கை இருக்கிற பெட்டிக்காக அதிலே ஒரு ஸ்தானத்தை உண்டாக்கினேன்" (1இராஜா 8:20,21) என்று சொல்லுகிறார்.

சாலொமோன் தன்னுடைய நாமத்திற்காக இந்த ஆலயத்தைக் கட்டவில்லை. அவர் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு இந்த ஆலயத்தைக் கட்டியிருக்கிறார். அவர் இந்த ஆலயத்தில் ஒரு பரிசுத்த ஸ்தானத்தை உண்டாக்கி, அதிலே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை வைத்திருக்கிறார். நாம் கர்த்தருக்காக அதிகமாய் ஊழியம் செய்யும்போது, அந்த ஊழியத்தை கர்த்தருடைய நாமமகிமைக்காகவே செய்கிறோம் என்னும் உணர்வு நம்முடைய இருதயத்தில் காணப்படவேண்டும். கர்த்தருக்காக ஊழியம் செய்யும்போது நம்முடைய மனதில் திருப்தி உண்டாகும். கர்த்தர் நமக்கு போதுமானவராயிருப்பார். கர்த்தருடைய ஊழியத்தை நம்முடைய நாமத்திற்காக செய்யும்போது, நம்முடைய மனதில் திருப்தி உண்டாகாது.

சாலொமோனின் ஜெபம் 1இராஜா 8:22-30

1இராஜா 8:22. பின்பு சாலொமோன்: கர்த்தருடைய பலிபீடத்திற்குமுன்னே இஸ்ரவேல் சபையாரெல்லாருக்கும் எதிராக நின்று, வானத்திற்கு நேராய்த் தன் கைகளை விரித்து:

1இராஜா 8:23. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, மேலே வானத்திலும் கீழே பூமியிலும் உமக்கு ஒப்பான தேவன் இல்லை; தங்கள் முழு இருதயத்தோடும் உமக்கு முன்பாக நடக்கிற உமது அடியாருக்கு உடன்படிக்கையையும் கிருபையையும் காத்துவருகிறீர்.

1இராஜா 8:24. தேவரீர் என் தகப்பனாகிய தாவீது என்னும் உம்முடைய தாசனுக்குச் செய்த வாக்குத்தத்தைக் காத்தருளினீர்; அதை உம்முடைய வாக்கினால் சொன்னீர்; இந்நாளில் இருக்கிறபடி, உம்முடைய கரத்தினால் அதை நிறைவேற்றினீர்.

1இராஜா 8:25. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் என் தகப்பனாகிய தாவீது என்னும் உம்முடைய தாசனை நோக்கி: நீ எனக்கு முன்பாக நடந்தது போல, உன் குமாரரும் எனக்கு முன்பாக நடக்கும்படி தங்கள் வழியைக் காப்பார்களேயானால், இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் புருஷன் எனக்கு முன்பாக உனக்கு இல்லாமற்போவதில்லை என்று சொன்னதை இப்பொழுது அவனுக்கு நிறைவேற்றும்.

1இராஜா 8:26. இஸ்ரவேலின் தேவனே, என் தகப்பனாகிய தாவீது என்னும் உம்முடைய தாசனுக்குச் சொன்ன உம்முடைய வார்த்தை மெய்யென்று விளங்குவதாக.

1இராஜா 8:27. தேவன் மெய்யாக பூமியிலே வாசம் பண்ணுவாரோ? இதோ, வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்?

1இராஜா 8:28. என் தேவனாகிய கர்த்தாவே, உமது அடியேன் இன்று உமது சந்நிதியில் செய்கிற விண்ணப்பத்தையும் மன்றாட்டையும் கேட்டு, உமது அடியேனுடைய விண்ணப்பத்தையும் வேண்டுதலையும் திருவுளத்தில் கொண்டருளும்.

1இராஜா 8:29. உமது அடியேன் இவ்விடத்திலே செய்யும் விண்ணப்பத்தைக் கேட்கும்படி என்னுடைய நாமம் விளங்குமென்று நீர் சொன்ன ஸ்தலமாகிய இந்த ஆலயத்தின் மேல் உம்முடைய கண்கள் இரவும் பகலும் திறந்திருப்பதாக.

1இராஜா 8:30. உமது அடியானும், இந்த ஸ்தலத்திலே விண்ணப்பஞ் செய்யப்போகிற உமது ஜனமாகிய இஸ்ரவேலும் பண்ணும் ஜெபத்தைக் கேட்டருளும்; பரலோகமாகிய உம்முடைய வாசஸ்தலத்திலே அதை நீர் கேட்பீராக, கேட்டு மன்னிப்பீராக.

சாலொமோன் தேவாலயத்தை கர்த்தருடைய சமுகத்திலே பிரதிஷ்டைபண்ணுகிறார். தேவாலயத்தையும், தேவாலயத்திலுள்ள சகல பணிமுட்டுக்களையும் கர்த்தருடைய பாதபடியில் சமர்ப்பிக்கிறார். கர்த்தரும் சாலொமோன் செய்த பிரதிஷ்டையை அங்கீகரிக்கிறார். தம்முடைய நாமத்திற்காக கட்டப்பட்டிருக்கும் இந்த ஆலயத்தில் கர்த்தர் வந்து வாசம்பண்ணுகிறார். கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாக, கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. சாலொமோன் ஆசாரியருக்கும், இஸ்ரவேல் சபையார் அனைவருக்கும் கர்த்தருடைய வாக்குத்தத்தையும், கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்தை இன்றைய தினம் நிறைவேற்றியதையும் தெளிவாக எடுத்து சொல்லுகிறார்.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தை பிரதிஷ்டைபண்ணின பின்பு, அவர் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். கர்த்தருடைய ஆலயம் அவருக்கு பலிகளை செலுத்தும் ஆலயம் மாத்திரமல்ல. கர்த்தருடைய ஆலயம் எல்லா ஜனங்களுக்கும் ஜெபவீடாயிருக்கவேண்டும் என்பது சாலொமோனின் விருப்பம். சாலொமோன் கட்டின தேவாலயம் சுவிசேஷ சபைக்கு அடையாளமாயிருக்கிறது.

"நான் என் பரிசுத்த பர்வதத்துக்குக் கொண்டுவந்து: என் ஜெபவீட்டிலே அவர்களை மகிழ்ப்பண்ணுவேன்; அவர்களுடைய சர்வாங்கதகனங்களும், அவர்களுடைய பலிகளும், என் பலிபீடத்தின்மேல் அங்கிகரிக்கப்பட்டிருக்கும்; என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும்" (ஏசா 56:7).

"என்னுடைய வீடு ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார்" (மத் 21:13).

கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவதற்கும், இஸ்ரவேல் சபையார் அனைவரையும் ஆசீர்வதிப்பதற்கும் சாலொமோன் ஆசாரியர்களையோ, தீர்க்கதரிசிகளையோ நியமிக்கவில்லை. சாலொமோனே கர்த்தருடைய சமுகத்தில் ஜெபம்பண்ணுகிறார். அவரே இஸ்ரவேல் சபையாரை கர்த்தருடைய நாமத்தினால் ஆசீர்வதிக்கிறார். சாலொமோன் கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்னே, இஸ்ரவேல் சபையார் எல்லாருக்கும் எதிராக நின்று, வானத்திற்கு நேராக தன் கைகளை விரித்து, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

சாலொமோனுக்கு கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ண தெரிந்திருக்கிறது. சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருக்கிற சாலொமோன், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவது மிகவும் நல்ல காரியம். சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவதற்கு ஏற்கெனவே கற்றுக்கொண்டிருக்கிறார். அதற்கு அடையாளமாக சாலொமோன் இப்போது வானத்திற்கு நேராக தன் கைகளை விரித்து, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

ஒவ்வொரு சூழ்நிலையிலும் கர்த்தரிடத்தில் எப்படி ஜெபம்பண்ணவேண்டும் என்பதும் சாலொமோனுக்கு தெரிந்திருக்கிறது. சாலொமோனுடைய கையில் எழுதிக் கொடுக்கப்பட்ட ஜெபவார்த்தைகள் இல்லை. ஜெபத்தின் ஆவியானவர் சாலொமோனின் இருதயத்தில் வாசம்பண்ணுகிறார். ஆவியானவர் சாலொமோனை ஏவுகிறார். அவரை வழிநடத்துகிறார். சாலொமோன் வானத்திற்கு நேராக தன் கைகளை விரித்து கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

சாலொமோன் தன்னுடைய அரமனையில், சிங்காசனத்தில் வீற்றிருந்து ராஜ்யபாரம் பண்ணவேண்டியவர். ஆசரிப்புக்கூடாரத்திலும், ஆலயத்திலும் ஆராதனை செய்வது, ஜெபம்பண்ணுவது, ஜனங்களை ஆசீர்வதிப்பது ஆகியவையெல்லாம் ஆசாரியரின் ஊழியங்கள். சாலொமோனோ இப்போது கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்னே இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் எதிராக நிற்கிறார். வானத்திற்கு நேராக தன் கைகளை விரித்து கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜவாயிருக்கிற சாலொமோன், ஒரு ஆசாரியரைப்போல, இஸ்ரவேல் சபையார் எல்லாருக்கும் எதிராக நின்று, தன் கைகளை வானத்திற்கு நேராய் விரித்து, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். இதற்காக அவர் வெட்கப்படவில்லை.

கர்த்தர் சாலொமோனை அதிகமாய் ஆசீர்வதித்திருக்கிறார். அவரை அதிகமாய் உயர்த்தியிருக்கிறார். சாலொமோனுக்கு ஏராளமான மேன்மைகளும், மகிமைகளும் உண்டாயிருக்கிறது. அவர் தந்தத்தினால் செய்யப்பட்ட சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து ராஜாசனம் செய்வது அவருக்கு கிடைத்திருக்கிற பெரிய மகிமை. இந்த மகிமையைவிட, கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்னே இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் எதிராக நின்று, வானத்திற்கு நேராக தன் கைகளை விரித்து, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவது, சாலொமோனுக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய மகிமையாகும்.

சாலொமோனைப்போலவே நாம் உலகப்பிரகாரமாக உயர்ந்த அந்தஸ்துக்களிலிருந்தாலும், கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி, அவரிடத்தில் நம்முடைய துதிகளையும், ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்க வேண்டும். கர்த்தரிடத்தில் நம்முடைய ஜெபவிண்ணப்பங்களை சொல்லுவது, நமக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். இதுவே நமக்கு உன்னதமான ஆசீர்வாதம்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, முழங்கால் படியிட்டு ஜெபம்பண்ணுகிறார். "சாலொமோன் கர்த்தரை நோக்கி, இந்த ஜெபத்தையும் வேண்டுதலையும் எல்லாம் செய்து முடித்தபின்பு, அவன் கர்த்தருடைய பலி பீடத்திற்கு முன்பாகத் தன் கைகளை வானத்திற்கு நேராக விரித்து, முழங்காற்படியிட்டிருந்ததை விட்டெழுந்தான்" (1இராஜா 8:54).

சாலொமோன் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக முழங்கால் படியிட்டு ஜெபம்பண்ணுகிறார். முழங்கால் படியிடுவது நம்முடைய பக்திக்கும், மனத்தாழ்மைக்கும், கர்த்தரிடத்தில் கருத்தாய் ஜெபம்பண்ணுவதற்கும் அடையாளம். "சாலொமோன் முழங்கால் பட்டியிட்டிருந்ததை விட்டெழுந்தார்" (1இராஜா 8:54) என்று இந்த வசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

"சாலொமோன் ஐந்து முழ நீளமும், ஐந்து முழ அகலமும், மூன்று முழ உயரமுமான ஒரு வெண்கலப் பிரசங்கபீடத்தை உண்டாக்கி, அதை நடுப்பிரகாரத்திலே வைத்திருந்தான்; அதின்மேல் அவன் நின்று, இஸ்ரவேலின் சபையார் எல்லாருக்கும் எதிராக முழங்காற்படியிட்டு, தன் கைகளை வானத்திற்கு நேராக விரித்து" (2நாளா 6:13) என்று இந்த வசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

"நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால் படியிட்டு" (எபே 3:15) என்று அப்போஸ்தலர் பவுல் எழுதுகிறார்.

கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக, முழங்கால்படியிட்டு ஜெபம்பண்ணுவதினால், நம்முடைய முழங்கால்கள் தேய்ந்துபோகாது. சாலொமோன் கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்பாக ஜெபம்பண்ணியபோது, தன் கைகளை வானத்திற்கு நேராக விரித்து ஜெபம்பண்ணுகிறார் (1இராஜா 8:54). தன்னுடைய ஜெபம் முடியும் வரையிலும், சாலொமோன் தன் கைகளை வானத்திற்கு நேராக விரித்திருக்கிறார். கர்த்தர் பரலோகப் பிதாவாகயிருக்கிறார். சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, பரலோகப் பிதாவினிடத்தில் ஆர்வமாயும், எதிர்பார்ப்போடும் ஜெபம்பண்ணுகிறார்.

கைகளை விரித்து ஜெபம்பண்ணுவது, நம்முடைய இருதயத்தை கர்த்தருக்கு நேராக விரிவாய்த் திறப்பதற்கு அடையாளம். நாம் கர்த்தருடைய சமுகத்திலே நம்முடைய இருதயங்களை சமர்ப்பித்து ஜெபம்பண்ணுகிறோம். நம்முடைய இரண்டு கைகளையும் வானத்திற்கு நேராக விரிக்கும்போது, கர்த்தருடைய கிருபைகளையும் இரக்கங்களையும் பெற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாயிருக்கிறோம்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் நீண்ட ஜெபம்பண்ணுகிறார். சாலொமோனுடைய ஜெபத்தின் சுருக்கம் மாத்திரமே இந்த வசனப்பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். மற்றவர்கள் தன்னை பார்க்கவேண்டும் என்பதற்காக சாலொமோன் நீண்ட ஜெபம்பண்ணவில்லை. கருத்தாய் ஜெபம்பண்ணுகிறார். சாலொமோனுக்கு கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டிய காரியங்கள் ஏராளமாயிருக்கிறது.

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ண ஆரம்பிக்கும்போது, அவர் கர்த்தரை மகிமைப்படுத்தி துதிக்கிறார். நம்முடைய ஜெபத்தின் ஆரம்ப வார்த்தைகள் கர்த்தரைத் துதிக்கும் வார்த்தைகளாயிருக்கவேண்டும். சாலொமோன் வானத்திற்கு நேராக தன் கைகளை விரித்து, "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, மேலே வானத்திலும் கீழே பூமியிலும் உமக்கு ஒப்பான தேவன் இல்லை" (1இராஜா 8:23) என்று சொல்லி கர்த்தரைத் துதிக்கிறார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு நல்ல எஜனமானரதாயிருக்கிறார். அவர் கிருபையும் இரக்கமுமுள்ள எஜமான். சாலொமோன் கர்த்தரைத் துதிக்கும்போது, "தங்கள் முழு இருதயத்தோடும் உமக்கு முன்பாக நடக்கிற உமது அடியாருக்கு உடன்படிக்கையையும் கிருபையையும் காத்துவருகிறீர்" (1இராஜா 8:23) என்று சொல்லி துதிக்கிறார்.

நம்முடைய முழுஇருதயத்தோடு நாம் கர்த்தருக்கு முன்பாக நடக்கும்போது மாத்திரமே, கர்த்தர் நமக்கு தம்முடைய உடன்படிக்கையையும் கிருபையையும் காத்து வருவார். கர்த்தருடைய ஆசீர்வாதம் நிபந்தனையோடு கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய முழுஇருதயத்தோடு நாம் கர்த்தருக்கு முன்பாக நடக்கவில்லையென்றால், நமக்கு கர்த்தருடைய உடன்படிக்கையும் கிருபையும் வாக்குப்பண்ணப்படவில்லை.

கர்த்தர் இதுவரையிலும் தாவீதின் குடும்பத்தாரை ஆசீர்வதித்து வந்திருக்கிறார். சாலொமோன் கர்த்தரைத் துதிக்கும்போது, "தேவரீர் என் தகப்பனாகிய தாவீது என்னும் உம்முடைய தாசனுக்குச் செய்த வாக்குத்தத்தைக் காத்தருளினீர்; அதை உம்முடைய வாக்கினால் சொன்னீர்; இந்நாளில் இருக்கிறபடி, உம்முடைய கரத்தினால் அதை நிறைவேற்றினீர்" (1இராஜா 8:24) என்று சொல்லி துதிக்கிறார்.

சாலொமோனுக்கு கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் தேவைப்படுகிறது. கர்த்தர் வாக்குப்பண்ணியிருக்கிற கிருபையும் இரக்கமும் தனக்கு கிடைக்கவேண்டுமென்று சாலொமோன் விண்ணப்பம்பண்ணுகிறார். கர்த்தர் தாவீதுக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். அந்த வாக்குத்தத்தத்தை கர்த்தர் நிறைவேற்றவேண்டுமென்று சாலொமோன் விண்ணப்பம்பண்ணுகிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில், "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் என் தகப்பனாகிய தாவீது என்னும் உம்முடைய தாசனை நோக்கி: நீ எனக்கு முன்பாக நடந்தது போல, உன் குமாரரும் எனக்கு முன்பாக நடக்கும்படி தங்கள் வழியைக் காப்பார்களேயானால், இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் புருஷன் எனக்கு முன்பாக உனக்கு இல்லாமற்போவதில்லை என்று சொன்னதை இப்பொழுது அவனுக்கு நிறைவேற்றும். இஸ்ரவேலின் தேவனே, என் தகப்பனாகிய தாவீது என்னும் உம்முடைய தாசனுக்குச் சொன்ன உம்முடைய வார்த்தை மெய்யென்று விளங்குவதாக" (1இராஜா 8:25,26) என்று ஜெபம்பண்ணுகிறார்.

வாக்குத்தத்தம் பண்ணின கர்த்தர் உண்மையுள்ளவர். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை இதுவரையிலும் நிறைவேற்றியிருக்கிறார். அவர் இனிமேலும் நிறைவேற்றுவார்.

"நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன் மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்" (2கொரி 1:9,10).

கர்த்தர் தாவீதுக்கு சொன்ன வாக்குத்தத்தத்தை, சாலொமோன் இங்கு தன்னுடைய ஜெபத்தில் பயன்படுத்துகிறார். "இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் புருஷன் எனக்கு முன்பாக உனக்கு இல்லாமற்போவதில்லை" (1இராஜா 8:25) என்று கர்த்தர் தாவீதுக்கு வாக்குப்பண்ணியிருக்கிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் தாவீதுக்கு சொன்ன வாக்குத்தத்தத்தை இங்கு பயன்படுத்துகிறார். சாலொமோன் இந்த வார்த்தைகளைச் சொல்லும்போது, இந்த வாக்குத்தத்தம் நிறைவேற, கர்த்தர் தாவீதுக்கு சொன்ன நிபந்தனைகளையும், சாலொமோன் தன்னுடைய ஜெபத்தில் சொல்லுகிறார். "நீ எனக்கு முன்பாக நடந்தது போல, உன் குமாரரும் எனக்கு முன்பாக நடக்கும்படி தங்கள் வழியைக் காப்பார்களேயானால்" (1இராஜா 8:25) என்பது கர்த்தர் தாவீதுக்கு சொன்ன நிபந்தனை.

கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்தை நமக்கு நிபந்தனைகளோடு சொல்லும்போது, நாம் அந்த நிபந்தனைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளுக்கு நாம் கீழ்ப்படியவில்லையென்றால், கர்த்தருடைய வாக்குத்தத்தமான வார்த்தைகள் நமக்கு நிறைவேற வாய்ப்பில்லை.

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, கர்த்தருக்கு முன்பாக தன்னை வெகுவாகத் தாழ்த்துகிறார். சாலொமோனுடைய வார்த்தைகளில் பணிவும் தாழ்மையும் இருக்கிறது. சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "இஸ்ரவேலின் தேவனே, என் தகப்பனாகிய தாவீது என்னும் உம்முடைய தாசனுக்குச் சொன்ன உம்முடைய வார்த்தை மெய்யென்று விளங்குவதாக" (1இராஜா 8:26) என்று சொல்லி பணிவோடும் மனத்தாழ்மையோடும் ஜெபம்பண்ணுகிறார்.

சாலொமோன் கட்டின தேவாலயத்தை கர்த்தர் அங்கீகரித்திருக்கிறார். அவர் தம்முடைய கிருபையினால் இந்த தேவாலயத்தில் வாசம்பண்ணுகிறார். மனுஷர் கட்டியிருக்கிற ஆலயத்தில் கர்த்தர் வாசம்பண்ணுவது, அவருடைய மகாபெரிய கிருபை. சாலொமோன் இந்த சத்தியத்தைச் சொல்லும்போது, "தேவன் மெய்யாக பூமியிலே வாசம் பண்ணுவாரோ?" (1இராஜா 8:27) என்று ஆச்சரியத்தோடு கேட்கிறார்.

கர்த்தர் உயர்ந்தவர். அவர் உன்னதமானவர். அவர் மகாபரிசுத்தர். கர்த்தர் மகிமையும் மாட்சிமையும் நிறைந்தவர். சர்வவல்லமையுள்ள தேவன், பூமியிலே வாசம்பண்ணுவாரோ என்னும் ஆச்சரியம் சாலொமோனுடைய இருதயத்தில் உண்டாயிற்று. பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர், இந்தப் பூமியிலே வாசம்பண்ணுவார் என்று நாம் எதிர்பார்க்கவும் முடியாது.

ஒருவேளை கர்த்தர் இந்தப் பூமியிலே வாசம்பண்ணவேண்டுமென்று சித்தங்கொண்டிருந்தாலும், அவருக்கேற்ற ஆலயத்தை யாராலும் கட்டமுடியாது. "இதோ, வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே" என்று சாலொமோன் சொல்லுகிறார். சாலொமோன் கட்டின தேவாலயத்தை, கர்த்தருடைய மகிமையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இது மிகவும் சிறிய ஆலயம். ஆகையினால் சாலொமோன் "நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்?" என்று கேட்கிறார். கர்த்தர் வாசம்பண்ணுவதற்கும், அவருடைய மகிமை வெளிப்படுவதற்கும் தான் கட்டின தேவாலயம் மிகவும் சிறியது என்று சாலொமோன் மனத்தாழ்மையோடு சொல்லுகிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் பொதுவான வேண்டுதல்களையும், விண்ணப்பங்களையும் ஏறெடுக்கிறார். கர்த்தர் தன்னுடைய விண்ணப்பத்திற்கும் மன்றாட்டுக்கும் செவிகொடுக்க வேண்டுமென்று சாலொமோன் கர்த்தரிடத்தில் முதலாவதாக ஜெபிக்கிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது "என் தேவனாகிய கர்த்தாவே, உமது அடியேன் இன்று உமது சந்நிதியில் செய்கிற விண்ணப்பத்தையும் மன்றாட்டையும் கேட்டு, உமது அடியேனுடைய விண்ணப்பத்தையும் வேண்டுதலையும் திருவுளத்தில் கொண்டருளும்" (1இராஜா 8:28) என்று சொல்லுகிறார்.

சாலொமோன் மிகுந்த மனத்தாழ்மையோடு கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். அவர் கருத்தாய் ஜெபிக்கிறார். விசுவாசத்தோடு ஜெபிக்கிறார். சாலொமோன் கர்த்தரிடத்தில் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, தன்னை சமஸ்த இஸ்ரவேலின் ராஜா என்று சொல்லி பெருமைப்படவில்லை. சாலொமோன் கர்த்தரிடத்தில் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "என் தேவனாகிய கர்த்தாவே, உமது அடியேன்" என்றும், "உமது அடியேனுடைய விண்ணப்பத்தையும் வேண்டுதலையும் திருவுளத்தில் கொண்டருளும்" என்றும் சொல்லி ஜெபம்பண்ணுகிறார்.

சாலொமோன் கர்த்தருக்கு ஆலயம் கட்டியிருக்கிறார். சாலொமோன் இந்த ஸ்தலத்தில் ஏறெடுக்கும் விண்ணப்பங்களுக்கும், இஸ்ரவேல் ஜனத்தார் இந்த ஸ்தலத்திலே ஏறெடுக்கும் விண்ணப்பங்களுக்கும் கர்த்தர் செவிகொடுக்கவேண்டுமென்று சாலொமோன் பொதுவாக ஜெபிக்கிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் "உமது அடியேன் இவ்விடத்திலே செய்யும் விண்ணப்பத்தைக் கேட்கும்படி என்னுடைய நாமம் விளங்குமென்று நீர் சொன்ன ஸ்தலமாகிய இந்த ஆலயத்தின் மேல் உம்முடைய கண்கள் இரவும் பகலும் திறந்திருப்பதாக. உமது அடியானும், இந்த ஸ்தலத்திலே விண்ணப்பஞ் செய்யப்போகிற உமது ஜனமாகிய இஸ்ரவேலும் பண்ணும் ஜெபத்தைக் கேட்டருளும்" (1இராஜா 8:29,30) என்று சொல்லி ஜெபிக்கிறார்.

பரலோகமே கர்த்தருடைய வாசஸ்தலம். சாலொமோன் கட்டின தேவாலயம் இந்தப் பூமியிலிருக்கிறது. ஆனாலும் பூமியிலிருக்கிற இந்த தேவாலயத்திலிருந்து ஜெபம்பண்ணும் போது, "பரலோகமாகிய உம்முடைய வாசஸ்தலத்திலே அதை நீர் கேட்பீராக, கேட்டு மன்னிப்பீராக" (1இராஜா 8:30) என்று சொல்லி சாலொமோன் ஜெபம்பண்ணுகிறார்.

தேவாலயத்திலுள்ள பரிசுத்த ஸ்தலத்தில் ஆசாரியர் மாத்திரமே பிரவேசிக்க முடியும். இஸ்ரவேல் ஜனத்தார் ஆலயத்தின் வெளிப்பிரகாரத்தில் கூடிவந்து கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவார்கள். கர்த்தர் ஆசாரியரின் விண்ணப்பத்தைக் கேட்டருளுவதுபோல, இஸ்ரவேல் ஜனத்தாருடைய விண்ணப்பங்களையும் கேட்டருளவேண்டுமென்று சாலொமோன் ஜெபம்பண்ணுகிறார்.

ஆசாரியர்கள் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஆவிக்குரிய காரியங்களில் உதவிசெய்கிறார்கள். ஆசாரியர்கள் இஸ்ரவேல் புத்திரருக்காக கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்கிறார்கள். ஜனங்களுடைய விசுவாசம் பலவீனமாயிருக்கும்போது, ஆசாரியர்கள் அந்தப் பலவீனத்தை நீக்கி, அவர்களுடைய விசுவாசம் பலப்படவும், ஸ்திரப்படவும் உதவிசெய்கிறார்கள்.

இந்த ஆலயத்தின்மேல் கர்த்தருடைய கண்கள் இரவும் பகலும் திறந்திருக்கும். இந்த ஆலயத்திலிருந்து ஏறெடுக்கப்படும் எல்லா விண்ணப்பங்களையும், பரலோகத்திலிருக்கிற தேவன் செவிகொடுத்து கேட்பார். கர்த்தருடைய நாமத்திற்காக கட்டப்பட்டிருக்கிற தேவாலயம் ஜனங்களுக்கு ஆறுதலாயும், அவர்களுடைய விசுவாசத்தை வர்த்திப்பதற்கு உதவியாயும் இருக்கிறது. கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலம் இஸ்ரவேல் ஜனங்களுக்காக பரிந்து பேசுகிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மெய்யான ஆலயமாயிருக்கிறார். சாலொமோன் கட்டின தேவாலயம் கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறது. இது இயேசுகிறிஸ்துவின் பரிந்து பேசும் ஊழியத்திற்கு அடையாளமாயிருக்கிறது.

உமது அடியாரை நியாயந்தீர்ப்பீராக 1இராஜா 8:31,32

1இராஜா 8:31. ஒருவன் தன் அயலானுக்குக் குற்றஞ்செய்திருக்கையில், இவன் அவனை ஆணையிடச்சொல்லும்போது, அந்த ஆணை இந்த ஆலயத்திலே உம்முடைய பலிபீடத்திற்கு முன் வந்தால்,

1இராஜா 8:32. அப்பொழுது பரலோகத்தில் இருக்கிற தேவரீர் கேட்டு, துன்மார்க்கனுடைய நடக்கையை அவன் தலையின்மேல் சுமரப்பண்ணி, அவனைக் குற்றவாளியாகத் தீர்க்கவும், நீதிமானுக்கு அவனுடைய நீதிக்குத் தக்கதாய்ச் செய்து அவனை நீதிமானாக்கவும் தக்கதாய் உமது அடியாரை நியாயந்தீர்ப்பீராக.

சாலொமோன் கர்த்தரிடத்தில் பல காரியங்களுக்காக ஜெபம்பண்ணுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போதும், மற்றவர்கள்மீது தங்களுக்கு வழக்குகள் உண்டாகும்போதும், அவர்கள் கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்பாக வந்து ஆணையிடுவது வழக்கம். தங்களிடத்தில் சத்தியமும் உண்மையும் இருக்கிறது என்பதை உறுதிபண்ணுவதற்காக மனுஷர் கர்த்தருடைய சமுகத்தில் ஆணையிடுகிறார்கள். கர்த்தர் மனுஷருடைய இருதயத்தை அறிந்து வைத்திருக்கிறார். கர்த்தருக்கு மறைவான இரகசியம் ஒன்றுமே இல்லை.

ஒரு சில வழக்குகளை மனுஷரால் விசாரித்து நியாயமான தீர்ப்பு கொடுக்க முடியாது. வழக்காடுகிற இருவர் பக்கத்திலும் நியாயமிருப்பதுபோல தெரியும். பொய்யை பேசுகிறவர்கள்கூட, அதை உண்மை போல பேசி மாய்மாலம் பண்ணுவார்கள். வழக்காடுகிறவர்கள் கர்த்தருடைய ஆலயத்திலே வந்து, தங்களுடைய வழக்குகளை சொல்லும்போது, கர்த்தர் தாமே அவர்களை நியாயந்தீர்க்கவேண்டுமென்று, சாலொமோன் ஜெபம்பண்ணுகிறார்.

கடினமான வழக்குகளை விசாரிக்கும்போது, கிருபையின் ஆசனம், நியாயத்தின் ஆசனமாயிருக்கவேண்டுமென்று சாலொமோன் ஜெபம்பண்ணுகிறார். சாலொமோன் கர்த்தரிடத்தில் "ஒருவன் தன் அயலானுக்குக் குற்றஞ்செய்திருக்கையில், இவன் அவனை ஆணையிடச்சொல்லும்போது, அந்த ஆணை இந்த ஆலயத்திலே உம்முடைய பலிபீடத்திற்கு முன் வந்தால், அப்பொழுது பரலோகத்தில் இருக்கிற தேவரீர் கேட்டு, துன்மார்க்கனுடைய நடக்கையை அவன் தலையின்மேல் சுமரப்பண்ணி, அவனைக் குற்றவாளியாகத் தீர்க்கவும், நீதிமானுக்கு அவனுடைய நீதிக்குத்தக்கதாய்ச் செய்து அவனை நீதிமானாக்கவும் தக்கதாய் உமது அடியாரை நியாயந்தீர்ப்பீராக" (1இராஜா 8:31,32) என்று சொல்லி ஜெபம்பண்ணுகிறார்.

பாவங்களை மன்னித்து அடிமைத்தனத்தை நீக்குவீராக 1இராஜா 8:33,34

1இராஜா 8:33. உம்முடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்ததினிமித்தம் சத்துருவுக்கு முன்பாக முறிந்துபோய், உம்மிடத்திற்குத் திரும்பி, உம்முடைய நாமத்தை அறிக்கைபண்ணி, இந்த ஆலயத்துக்கு நேராக உம்மை நோக்கி விண்ணப்பத்தையும் வேண்டுதலையும் செய்தால்,

1இராஜா 8:34. பரலோகத்தில் இருக்கிற தேவரீர் கேட்டு, உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலின் பாவத்தை மன்னித்து, அவர்கள் பிதாக்களுக்கு நீர் கொடுத்த தேசத்துக்கு அவர்களைத் திரும்பிவரப்பண்ணுவீராக.

இஸ்ரவேல் தேசத்தாருக்கு பாடுகளும், நெருக்கங்களும் வேதனைகளும் வரலாம். பாவத்தின் சம்பளம் மரணம். இஸ்ரவேலர் கர்த்தருடைய ஜனங்களாக இருந்தாலும், அவர்கள் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்யும்போது, அவர்களுக்கும் பாடுகள் வருகிறது. அவர்கள் சத்துருவுக்கு முன்பாக முறிந்துபோகிறார்கள். அந்நிய தேசத்திற்கு அடிமைப்பட்டுப்போகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் பாடுகளையும் வேதனைகளையும் அனுபவிக்கும்போது, அவர்கள் கர்த்தருடைய ஆலயத்திற்கு நேராக ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னிக்கவேண்டுமென்றும், கர்த்தர் தாமே அவர்களை மறுபடியும் இஸ்ரவேல் தேசத்திற்கு திரும்பப்பண்ணவேண்டும் சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

சாலொமோனுக்கு பாடுகளும், நெருக்கங்களும் வரும்போது, அவர் தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பினால் போதுமானது. கர்த்தர் தம்முடைய கிருபையினால் சாலொமோனுடைய பாவங்களை மன்னித்து, அவருக்கு ஏற்பட்டிருக்கும் பாடுகளையும் நெருக்கங்களையும் அவரை விட்டு நீக்கிப்போடுவார்.

இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருக்கும் பாடுகளும் நெருக்கங்களும் வரும்போது, அவர்கள் எல்லோரும் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தாருடைய பாவங்களுக்காக, சாலொமோன் மனந்திரும்ப முடியாது. யார் பாவம் செய்தார்களோ, அவர்களே தங்களுடைய பாவத்திற்கு மனந்திரும்ப வேண்டும்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் "உம்முடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்ததினிமித்தம் சத்துருவுக்கு முன்பாக முறிந்துபோய், உம்மிடத்திற்குத் திரும்பி, உம்முடைய நாமத்தை அறிக்கைபண்ணி, இந்த ஆலயத்துக்கு நேராக உம்மை நோக்கி விண்ணப்பத்தையும் வேண்டுதலையும் செய்தால், பரலோகத்தில் இருக்கிற தேவரீர் கேட்டு, உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலின் பாவத்தை மன்னித்து, அவர்கள் பிதாக்களுக்கு நீர் கொடுத்த தேசத்துக்கு அவர்களைத் திரும்பிவரப்பண்ணுவீராக" (1இராஜா 8:33,34) என்று ஜெபம்பண்ணுகிறார்.

தேசத்தில் மழை பெய்யக் கட்டளையிடுவீராக 1இராஜா 8:35,36

1இராஜா 8:35. அவர்கள் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்ததினால் வானம் அடைபட்டு மழைபெய்யாதிருக்கும்போது, அவர்கள் இந்த ஸ்தலத்திற்கு நேராக விண்ணப்பஞ்செய்து, உம்முடைய நாமத்தை அறிக்கைபண்ணி, தங்களை தேவரீர் கிலேசப்படுத்துகையில் தங்கள் பாவங்களை விட்டுத் திரும்பினால்,

1இராஜா 8:36. பரலோகத்தில் இருக்கிற தேவரீர் கேட்டு, உமது அடியாரும் உமது ஜனமாகிய இஸ்ரவேலும் செய்த பாவத்தை மன்னித்து, அவர்கள் நடக்கவேண்டிய நல்வழியை அவர்களுக்குப் போதித்து, தேவரீர் உமது ஜனத்திற்குச் சுதந்தரமாகக் கொடுத்த உமது தேசத்தில் மழை பெய்யக் கட்டளையிடுவீராக.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது, கர்த்தர் வானத்தை அடைத்து, இஸ்ரவேல் தேசத்தின்மீது மழை பெய்வதை நிறுத்திவிடுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அவரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டும். அவர்கள் கர்த்தருடைய ஆலயத்திற்கு நேராக விண்ணப்பம் செய்யும்போது, கர்த்தர் அவர்களுடைய ஜெபத்தைக் கேட்டு, தேசத்தில் மழை பெய்ய கட்டளையிடவேண்டுமென்று சாலொமோன் ஜெபம்பண்ணுகிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் "அவர்கள் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்ததினால் வானம் அடைபட்டு மழைபெய்யாதிருக்கும்போது, அவர்கள் இந்த ஸ்தலத்திற்கு நேராக விண்ணப்பஞ்செய்து, உம்முடைய நாமத்தை அறிக்கைபண்ணி, தங்களை தேவரீர் கிலேசப்படுத்துகையில் தங்கள் பாவங்களை விட்டுத் திரும்பினால், பரலோகத்தில் இருக்கிற தேவரீர் கேட்டு, உமது அடியாரும் உமது ஜனமாகிய இஸ்ரவேலும் செய்த பாவத்தை மன்னித்து, அவர்கள் நடக்கவேண்டிய நல்வழியை அவர்களுக்குப் போதித்து, தேவரீர் உமது ஜனத்திற்குச் சுதந்தரமாகக் கொடுத்த உமது தேசத்தில் மழை பெய்யக் கட்டளையிடுவீராக" (1இராஜா 8:35,36) என்று ஜெபம்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னிப்பார். அவர்கள் நடக்கவேண்டிய நல்வழியை அவர்களுக்குப் போதிப்பார். கர்த்தருடைய ஆவியானவர் சகல சத்தியத்திற்குள்ளும் அவர்களை வழிநடத்துவார். கர்த்தருடைய தீர்க்கதரிசிகளும், ஊழியக்காரர்களும் விசுவாசிகளுக்கு சத்தியத்தை உபதேசம்பண்ணுவார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் பாவம் செய்யும்போது, அவர்களுக்கு மழை பெய்யாமல் பஞ்சம், கொள்ளைநோய் ஆகியவை உண்டாகும். அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பும் போது, அவர்களுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதமுண்டாகும். இஸ்ரவேல் ஜனத்தார் தண்டனைகளை அனுபவித்தாலும் நன்மைகளைப் பெற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் கர்த்தரைவிட்டு வழிவிலகிப்போயிருந்தாலும், அவர்கள் மறுபடியும் நல்வழியில் நடக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய கிருபைக்காகவும் இரக்கத்திற்காகவும் ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பை அவர்களைவிட்டு நீக்குகிறார். அவர்களுடைய வேண்டுதல்களுக்கும் விண்ணப்பங்களுக்கும் செவிகொடுக்கிறார். கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

வாதையையும் வியாதியையும் நீக்குவீராக 1இராஜா 8:37-40

1இராஜா 8:37. தேசத்திலே பஞ்சம் உண்டாகிற போதும், கொள்ளைநோய் உண்டாகிற போதும், வறட்சி, சாவி, வெட்டுக்கிளி, பச்சைக்கிளி உண்டாகிறபோதும், அவர்கள் சத்துருக்கள் தேசத்திலுள்ள பட்டணங்களை முற்றிக்கைபோடுகிறபோதும், யாதொரு வாதையாகிலும் யாதொரு வியாதியாகிலும் வருகிறபோதும்,

1இராஜா 8:38. உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் அனைவரிலும் எந்த மனுஷனானாலும் தன் இருதயத்தின் வாதையை உணர்ந்து, இந்த ஆலயத்துக்கு நேராகத் தன் கைகளை விரித்துச் செய்யும் சகல விண்ணப்பத்தையும், சகல வேண்டுதலையும்,

1இராஜா 8:39. உம்முடைய வாசஸ்தலமாகிய பரலோகத்தில் இருக்கிற தேவரீர் கேட்டு மன்னித்து,

1இராஜா 8:40. தேவரீர் எங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்தில் அவர்கள் உயிரோடிருக்கும் நாளெல்லாம் உமக்குப் பயப்படும்படிக்கு தேவரீர் ஒருவரே எல்லா மனுப்புத்திரரின் இருதயத்தையும் அறிந்தவராதலால், நீர் அவனவன் இருதயத்தை அறிந்திருக்கிறபடியே, அவனவனுடைய வழிகளுக்குத்தக்கதாகச் செய்து, அவனவனுக்குப் பலன் அளிப்பீராக.

இஸ்ரவேல் புத்திரருக்கு பல பிரச்சனைகள் வருவதற்கு வாய்ப்புள்ளது. இஸ்ரவேல் தேசத்திலே பஞ்சமும் கொள்ளை நோயும் உண்டாகலாம். அங்கே வறட்சி, சாவி, வெட்டுக்கிளி, பச்சைக்கிளி ஆகியவையும் உண்டாகலாம். இஸ்ரவேல் புத்திரருடைய சத்துருக்கள் இஸ்ரவேலின் பட்டணங்களை முற்றிக்கைப்போடும்போது, தேசத்திலே பஞ்சமுண்டாகலாம். இவை தவிர இஸ்ரவேல் தேசத்தில் பொதுவான வாதையும் வியாதியும் வரலாம்.

சாலொமோன் ராஜா இஸ்ரவேல் தேசத்தில் வரும் பல பிரச்சனைகளைப் பற்றி இங்கு சொல்லுகிறார். பிரச்சனைகள் ஏராளமாயும் பலவிதமாயும் இருக்கிறது. இவையெல்லாம் மனுபுத்திரருக்கு வேதனைகளையும், பாடுகளையும் உபத்திரவங்களையும் கொடுக்கும். அவர்களுடைய இருதயத்தில் வாதை உண்டாகும். இஸ்ரவேல் புத்திரர் தங்கள் இருதயத்தின் பாரத்தையும், வாதையையும் உணரவேண்டும். அவர்கள் கர்த்தருடைய வாசஸ்தலத்திற்கு நேராக தங்கள் வேண்டுதல்களையும் விண்ணப்பங்களையும் ஏறெடுக்கவேண்டும்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "தேசத்திலே பஞ்சம் உண்டாகிற போதும், கொள்ளைநோய் உண்டாகிற போதும், வறட்சி, சாவி, வெட்டுக்கிளி, பச்சைக்கிளி உண்டாகிறபோதும், அவர்கள் சத்துருக்கள் தேசத்திலுள்ள பட்டணங்களை முற்றிக்கைபோடுகிறபோதும், யாதொரு வாதையாகிலும் யாதொரு வியாதியாகிலும் வருகிறபோதும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் அனைவரிலும் எந்த மனுஷனானாலும் தன் இருதயத்தின் வாதையை உணர்ந்து, இந்த ஆலயத்துக்கு நேராகத் தன் கைகளை விரித்துச் செய்யும் சகல விண்ணப்பத்தையும், சகல வேண்டுதலையும், உம்முடைய வாசஸ்தலமாகிய பரலோகத்தில் இருக்கிற தேவரீர் கேட்டு மன்னிப்பீராக" (1இராஜா 8:37-39) என்று ஜெபம்பண்ணுகிறார்.

எசேக்கியா ராஜா சத்துருவின் நிருபத்தை கர்த்தருடைய சமுகத்திலே விரித்து வைத்து ஜெபம்பண்ணினார். கர்த்தர் அவருக்கு இரங்கினார். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு பல பிரச்சனைகள் வரலாம். அவை அவர்களுடைய சரீரத்திலோ அல்லது மனதிலோ உண்டாகலாம். கர்த்தருடைய ஜனம் தங்கள் பிரச்சனைகளெல்லாவற்றையும் கர்த்தருடைய சமுகத்திலே வந்து சொல்லவேண்டும். அவர்கள் கர்த்தர்மீது தங்கள் பாரத்தை வைத்துவிடவேண்டும்.

கர்த்தர் சர்வஞானமுள்ளவர். அவர் நீதிபரர். தேவரீர் ஒருவரே எல்லா மனுபுத்திரரின் இருதயத்தையும் அறிந்தவர். கர்த்தர் மனுஷருடைய வழிகளுக்குத்தக்கதாக அவர்களுக்கு பலனளிக்கிறவர். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை தம்முடைய கிருபையினால் ஆளுகை செய்யவேண்டும் என்று சாலொமோன் கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறார். சாலொமோன் கர்த்தருடைய கிருபைக்காகவும், அவருடைய இரக்கத்திற்காகவும் கெஞ்சி மன்றாடுகிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில், "தேவரீர் எங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்தில் அவர்கள் உயிரோடிருக்கும் நாளெல்லாம் உமக்குப் பயப்படும்படிக்கு தேவரீர் ஒருவரே எல்லா மனுப்புத்திரரின் இருதயத்தையும் அறிந்தவராதலால், நீர் அவனவன் இருதயத்தை அறிந்திருக்கிறபடியே, அவனவனுடைய வழிகளுக்குத்தக்கதாகச் செய்து, அவனவனுக்குப் பலன் அளிப்பீராக" (1இராஜா 8:40) என்று விண்ணப்பம்பண்ணுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கவேண்டும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய விண்ணப்பத்தைக் கேட்டு அவர்களை மன்னிக்கவேண்டும். இதுவே சாலொமோனுடைய பிரதான ஜெபமாகும்.

அந்நிய ஜாதியாரையும் ஆசீர்வதிப்பீராக 1இராஜா 8:41-43

1இராஜா 8:41. உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் ஜாதியல்லாத அந்நிய ஜாதியார் உமது மகத்துவமான நாமத்தையும், உமது பலத்த கரத்தையும், உமது ஓங்கிய புயத்தையும் கேள்விப்படுவார்களே.

1இராஜா 8:42. அப்படிக்கொத்த அந்நிய ஜாதியானும், உமது நாமத்தினிமித்தம் தூர தேசத்திலிருந்து வந்து, இந்த ஆலயத்துக்கு நேராக விண்ணப்பம்பண்ணினால்,

1இராஜா 8:43. உமது வாசஸ்தலமாகிய பரலோகத்தில் இருக்கிற தேவரீர் அதைக் கேட்டு, பூமியின் ஜனங்களெல்லாரும் உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலைப்போல உமக்குப் பயப்படும்படிக்கும், நான் கட்டின இந்த ஆலயத்துக்கு உம்முடைய நாமம் தரிக்கப்பட்டதென்று அறியும்படிக்கும், உம்முடைய நாமத்தை அறியத்தக்கதாக, அந்த அந்நிய ஜாதியான் உம்மை நோக்கி வேண்டிக்கொள்வதின்படியெல்லாம் தேவரீர் செய்வீராக.

சாலொமோன் இதுவரையிலும் இஸ்ரவேல் புத்திரருக்காக ஜெபம்பண்ணினார். இப்போது இஸ்ரவேல் ஜாதியல்லாத அந்நிய ஜாதியாருக்காக ஜெபம்பண்ணுகிறார். இவர்கள் யூதமார்க்கத்தமைந்தவர்கள். அந்நிய ஜாதியார் இஸ்ரவேல் தேசத்தைச் சேர்ந்தவர்களல்ல. ஆனாலும் இவர்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை ஆராதிப்பதற்கு, கர்த்தருடைய தேவாலயத்திற்கு வருகிறார்கள். தங்கள் தேசத்திலுள்ள விக்கிரகங்களை ஆராதிப்பது மதியீனமான காரியம் என்பதை இவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

சாலொமோன் அந்நிய ஜாதியாரைப்பற்றி கர்த்தரிடத்தில், "உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் ஜாதியல்லாத அந்நிய ஜாதியார் உமது மகத்துவமான நாமத்தையும், உமது பலத்த கரத்தையும், உமது ஓங்கிய புயத்தையும் கேள்விப்படுவார்களே" (1இராஜா 8:41) என்று சொல்லுகிறார்.

அந்நிய ஜாதியாரும் தூரதேசத்திலிருந்து கர்த்தருடைய ஆலயத்திற்கு வருவார்கள். இவர்களும் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுவார்கள். கர்த்தர் இவர்களுடைய விண்ணப்பங்களுக்கும் செவிகொடுத்து, இவர்களையும் ஆசீர்வதிக்கவேண்டுமென்று சாலொமோன் இவர்களுக்காக பரிந்து பேசுகிறார்.

"அப்படிக்கொத்த அந்நிய ஜாதியானும், உமது நாமத்தினிமித்தம் தூர தேசத்திலிருந்து வந்து, இந்த ஆலயத்துக்கு நேராக விண்ணப்பம்பண்ணினால், உமது வாசஸ்தலமாகிய பரலோகத்தில் இருக்கிற தேவரீர் அதைக் கேட்டு, பூமியின் ஜனங்களெல்லாரும் உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலைப்போல உமக்குப் பயப்படும்படிக்கும், நான் கட்டின இந்த ஆலயத்துக்கு உம்முடைய நாமம் தரிக்கப்பட்டதென்று அறியும்படிக்கும், உம்முடைய நாமத்தை அறியத்தக்கதாக, அந்த அந்நிய ஜாதியான் உம்மை நோக்கி வேண்டிக்கொள்வதின்படியெல்லாம் தேவரீர் செய்வீராக" (1இராஜா 8:42,43) என்று சாலொமோன் அந்நிய ஜாதியாருக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்வதுபோல, அந்நிய ஜாதியாரும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவதுபோல, அந்நிய ஜனத்தாரும் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கும், அந்நியருக்கும் ஒரேவிதமான பிரமாணம் இருக்கவேண்டும் என்பது கர்த்தருடைய பிரமாணம். "சுதேசிக்கும் உங்களிடத்தில் தங்கும் பரதேசிக்கும் ஒரே பிரமாணம் இருக்கக்கடவது" (யாத் 12:49).

யுத்தத்தில் இஸ்ரவேலை பாதுகாப்பீராக 1இராஜா 8:44,45

1இராஜா 8:44. நீர் உம்முடைய ஜனங்களை அனுப்பும் வழியிலே அவர்கள் தங்கள் சத்துருக்களோடு யுத்தம்பண்ணப் புறப்படும் போது, நீர் தெரிந்துகொண்ட இந்த நகரத்துக்கும், உம்முடைய நாமத்துக்கு நான் கட்டின இந்த ஆலயத்துக்கும் நேராகக் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினால்,

1இராஜா 8:45. பரலோகத்தில் இருக்கிற தேவரீர் அவர்கள் விண்ணப்பத்தையும் வேண்டுதலையும் கேட்டு, அவர்கள் நியாயத்தை விசாரிப்பீராக.

இஸ்ரவேல் ஜனத்தார் அந்நிய தேசத்தாரோடு யுத்தம்பண்ணப்போகும்போது, கர்த்தருடைய விசேஷித்த பாதுகாப்பும் பராமரிப்பும், இஸ்ரவேல் புத்திரரோடு கூடயிருக்கவேண்டும் என்று சாலொமோன் ஜெபம்பண்ணுகிறார். இஸ்ரவேல் புத்திரர் யுத்தம்பண்ணப்போகும்போது, தேவாலயத்தைவிட்டு தூரமான இடங்களில் பாளயமிறங்கியிருப்பார்கள். அங்கே அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தேவாலயத்தைவிட்டு தூரமாயிருந்தாலும், அவர்கள் கர்த்தருடைய ஆலயத்திற்கு நேராக கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணும் போது, கர்த்தர் அவர்களுக்கு கிருபை காண்பிக்கவேண்டும் என்று சாலொமோன் ஜெபம்பண்ணுகிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் "நீர் உம்முடைய ஜனங்களை அனுப்பும் வழியிலே அவர்கள் தங்கள் சத்துருக்களோடு யுத்தம்பண்ணப் புறப்படும் போது, நீர் தெரிந்துகொண்ட இந்த நகரத்துக்கும், உம்முடைய நாமத்துக்கு நான் கட்டின இந்த ஆலயத்துக்கும் நேராகக் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினால், பரலோகத்தில் இருக்கிற தேவரீர் அவர்கள் விண்ணப்பத்தையும் வேண்டுதலையும் கேட்டு, அவர்கள் நியாயத்தை விசாரிப்பீராக" (1இராஜா 8:44,45) என்று விண்ணப்பம்பண்ணுகிறார்.

பாவங்களை மன்னித்து அடிமைத்தனத்தை நீக்குவீராக 1இராஜா 8:46-53

1இராஜா 8:46. பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே; ஆகையால், அவர்கள் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து, தேவரீர் அவர்கள்மேல் கோபங்கொண்டு, அவர்கள்சத்துருக்கள் கையில் அவர்களை ஒப்புக் கொடுத்து, அந்தச் சத்துருக்கள் அவர்களைத் தூரத்திலாகிலும் சமீபத்திலாகிலும் இருக்கிற தங்கள் தேசத்திற்குச் சிறைபிடித்துக் கொண்டுபோகும்போது,

1இராஜா 8:47. அவர்கள் சிறைப்பட்டுப் போயிருக்கிற தேசத்திலே தங்களில் உணர்வடைந்து, மனந்திரும்பி: நாங்கள் பாவஞ்செய்து, அக்கிரமம்பண்ணி, துன்மார்க்கமாய் நடந்தோம் என்று தங்கள் சிறையிருப்பான தேசத்திலே உம்மை நோக்கி வேண்டுதல் செய்து,

1இராஜா 8:48. தங்களைச் சிறைபிடித்துக்கொண்ட தங்கள் சத்துருக்களின் தேசத்திலே தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமாவோடும் உம்மிடத்தில் திரும்பி, தேவரீர் தங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தங்கள் தேசத்திற்கும், தேவரீர் தெரிந்துகொண்ட இந்த நகரத்திற்கும், உம்முடைய நாமத்திற்கு நான் கட்டின இந்த ஆலயத்திற்கும் நேராக உம்மை நோக்கி விண்ணப்பம்பண்ணும்போது,

1இராஜா 8:49. உமது வாசஸ்தலமாகிய பரலோகத்தில் இருக்கிற தேவரீர் அவர்கள் விண்ணப்பத்தையும் வேண்டுதலையும் கேட்டு, அவர்கள் நியாயத்தை விசாரித்து,

1இராஜா 8:50. உம்முடைய ஜனங்கள் உமக்கு விரோதமாய்ச் செய்த பாவத்தையும், அவர்கள் உம்முடைய கட்டளையை மீறிய அவர்கள் துரோகங்களையும் எல்லாம் மன்னித்து, அவர்களைச் சிறைபிடித்துக் கொண்டுபோகிறவர்கள் அவர்களுக்கு இரங்கத்தக்கதான இரக்கத்தை அவர்களுக்குக் கிடைக்கப்பண்ணுவீராக.

1இராஜா 8:51. அவர்கள் எகிப்தென்கிற இருப்புக் காளவாயின் நடுவிலிருந்து தேவரீர் புறப்படப்பண்ணின உம்முடைய ஜனமும் உம்முடைய சுதந்தரமுமாய் இருக்கிறார்களே.

1இராஜா 8:52. அவர்கள் உம்மை நோக்கி வேண்டிக் கொள்வதின்படியெல்லாம் தேவரீர் அவர்களுக்குச் செய்யும்படி, உம்முடைய கண்கள் உமது அடியானின் வேண்டுதலுக்கும், உமது ஜனமாகிய இஸ்ரவேலின் வேண்டுதலுக்கும் திறந்திருப்பதாக.

1இராஜா 8:53. கர்த்தராகிய ஆண்டவரே, நீர் எங்கள் பிதாக்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணும்போது, உம்முடைய தாசனாகிய மோசேயைக்கொண்டு சொன்னபடியே, தேவரீர் பூமியின் சகல ஜனங்களிலும் அவர்களை உமக்குச் சுதந்தரமாகப் பிரித்தெடுத்தீரே என்று விண்ணப்பம் பண்ணினான்.

சாலொமோன் சிறைப்பட்டுப் போகிறவர்களுக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். கர்த்தருடைய ஜனம் இஸ்ரவேல் தேசத்திலிருந்தாலும், அவர்கள் அந்நிய தேசத்திலே சிறைப்பட்டுப்போனாலும், கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் அவர்களுக்கு கிடைக்கவேண்டுமென்று சாலொமோன் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தாரின் பாவத்தினிமித்தமாக கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வரும். எல்லோரும் பாவம் செய்வார்கள் என்பதை சாலொமோன் அங்கீகரிக்கிறார். "பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே" என்று சாலொமோன் சொல்லுகிறார். சாலொமோனுக்கு தன்னைப்பற்றியும் தெரிந்திருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தாரைப்பற்றியும் தெரிந்திருக்கிறது. மனுஷருடைய இயல்பான சுபாவத்தைப்பற்றியும் தெரிந்திருக்கிறது.

மனுஷன் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது, கர்த்தருடைய கோபம் அவன்மீது வரும். கர்த்தர் அவனை அவனுடைய சத்துருக்களின் கையில் ஒப்புக்கொடுப்பார். மனுஷன் சுகமாயிருக்கும்போது கர்த்தரை மறக்கிறான். அவன் பாடுகளையும் வேதனைகளையும் அனுபவிக்கும்போது கர்த்தரை நினைக்கிறான். அவன் அந்நிய தேசத்திலே சிறைப்பட்டுப்போகும்போது, உணர்வடைந்து, தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, அங்கேயிருந்து கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுவதற்கு வாய்ப்புள்ளது.

சாலொமோன் கர்த்தரிடத்தில் சிறைப்பட்டுப்போனவர்களுக்காக ஜெபம்பண்ணுகிறார். "பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே; ஆகையால், அவர்கள் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து, தேவரீர் அவர்கள்மேல் கோபங்கொண்டு, அவர்கள் சத்துருக்கள் கையில் அவர்களை ஒப்புக்கொடுத்து, அந்தச் சத்துருக்கள் அவர்களைத் தூரத்திலாகிலும் சமீபத்திலாகிலும் இருக்கிற தங்கள் தேசத்திற்குச் சிறைபிடித்துக் கொண்டுபோகும்போது, அவர்கள் சிறைப்பட்டுப் போயிருக்கிற தேசத்திலே தங்களில் உணர்வடைந்து, மனந்திரும்பி: நாங்கள் பாவஞ்செய்து, அக்கிரமம்பண்ணி, துன்மார்க்கமாய் நடந்தோம் என்று தங்கள் சிறையிருப்பான தேசத்திலே உம்மை நோக்கி வேண்டுதல் செய்து" (1இராஜா 8:46,47) என்றும்,

"தங்களைச் சிறைபிடித்துக்கொண்ட தங்கள் சத்துருக்களின் தேசத்திலே தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமாவோடும் உம்மிடத்தில் திரும்பி, தேவரீர் தங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தங்கள் தேசத்திற்கும், தேவரீர் தெரிந்துகொண்ட இந்த நகரத்திற்கும், உம்முடைய நாமத்திற்கு நான் கட்டின இந்த ஆலயத்திற்கும் நேராக உம்மை நோக்கி விண்ணப்பம்பண்ணும்போது" (1இராஜா 8:48) என்றும் சாலொமோன் கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் அந்நிய தேசத்தில் சிறைப்பட்டுப்போனாலும், அவர்கள் அங்கேயிருந்து கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுவதற்கு வாய்ப்புள்ளது. அவர்கள் எங்கே உணர்வடைகிறார்களோ அங்கே மனந்திரும்புகிறார்கள். அவர்கள் எங்கே மனந்திரும்புகிறார்களோ அங்கே, "நாங்கள் பாவம் செய்து, அக்கிரமம் பண்ணி, துன்மார்க்கமாய் நடந்தோம்" என்று தங்கள் பாவங்களை அங்கீகரிக்கிறார்கள்.

சிறைப்பட்டுப்போன இஸ்ரவேல் ஜனத்தார் அந்நிய தேசத்திலிருந்தாலும் அவர்கள் எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திற்கு நேராக, கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணும்போது, கர்த்தர் அவர்களுடைய ஜெபத்தைக் கேட்டு அவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

சாலொமோன் சிறையிருப்புக்குப்போன இஸ்ரவேலருக்காக ஜெபம்பண்ணுகிறார். "அவர்கள் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, உமது வாசஸ்தலமாகிய பரலோகத்தில் இருக்கிற தேவரீர் அவர்கள் விண்ணப்பத்தையும் வேண்டுதலையும் கேட்டு, அவர்கள் நியாயத்தை விசாரித்து, உம்முடைய ஜனங்கள் உமக்கு விரோதமாய்ச் செய்த பாவத்தையும், அவர்கள் உம்முடைய கட்டளையை மீறிய அவர்கள் துரோகங்களையும் எல்லாம் மன்னித்து, அவர்களைச் சிறைபிடித்துக் கொண்டுபோகிறவர்கள் அவர்களுக்கு இரங்கத்தக்கதான இரக்கத்தை அவர்களுக்குக் கிடைக்கப்பண்ணுவீராக" (1இராஜா 8:49,50) என்று சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

சிறையிருப்புக்குப்போனவர்கள் எருசலேம் நகரத்திற்கும், கர்த்தருடைய ஆலயத்திற்கும் நேராக நோக்கி, கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் தேசம் கர்த்தருடைய பரிசுத்த தேசம். எருசலேம் நகரம் கர்த்தருடைய பரிசுத்த நகரம். தேவாலயம் கர்த்தருடைய பரிசுத்த வாசஸ்தலம். சிறையிருப்புக்குப்போன இஸ்ரவேல் தேசத்தார், அந்நிய தேசத்திலுள்ள விக்கிரகங்களை நோக்கி விண்ணப்பம்பண்ணாமல், தங்கள் சொந்த தேசத்திலுள்ள, கர்த்தருடைய ஆலயத்தை நோக்கி விண்ணப்பம்பண்ணும்போது, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அவர்களுடைய விண்ணப்பங்களுக்கு பதிலளிப்பார்.

சிறையிருப்புக்குப்போனவர்கள் கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணும்போது, அவர்கள் தமக்கு விரோதமாக செய்த பாவங்களை மன்னிப்பார். அவர்கள் தம்முடைய கட்டளையை மீறிய துரோகங்களை கர்த்தர் மன்னிப்பார். அவர்களை சிறைப்பிடித்துக் கொண்டுபோனவர்கள் அவர்களுக்கு இரக்கம் காண்பிக்கச் செய்வார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, கர்த்தருக்கும் இஸ்ரவேல் ஜனத்திற்கும் இடையே உள்ள ஐக்கியத்தைப்பற்றிச் சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய ஜனமாயும் அவருடைய சுதந்தரமாயும் இருக்கிறார்கள். "அவர்கள் எகிப்தென்கிற இருப்புக் காளவாயின் நடுவிலிருந்து தேவரீர் புறப்படப்பண்ணின உம்முடைய ஜனமும் உம்முடைய சுதந்தரமுமாய் இருக்கிறார்களே" (1இராஜா 8:51) என்று சாலொமோன் கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய ஜனமாயும், அவருடைய சுதந்தரமாயும் இருப்பதினால், கர்த்தர் அவர்களுடைய விண்ணப்பங்களுக்கு செவிகொடுக்குமாறு சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். "அவர்கள் உம்மை நோக்கி வேண்டிக் கொள்வதின்படியெல்லாம் தேவரீர் அவர்களுக்குச் செய்யும்படி, உம்முடைய கண்கள் உமது அடியானின் வேண்டுதலுக்கும், உமது ஜனமாகிய இஸ்ரவேலின் வேண்டுதலுக்கும் திறந்திருப்பதாக" (1இராஜா 8:52) என்று சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை தமக்கு சுதந்தரமாகப் பிரித்தெடுத்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விசேஷித்த ஜனமாயிருக்கிறார்கள். கர்த்தரே இஸ்ரவேல் புத்திரரின் முற்பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினார். சாலொமோன் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணும்போது, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு பூர்வகாலங்களில் செய்த நன்மைகளையெல்லாம் சொல்லி ஜெபம்பண்ணுகிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் "கர்த்தராகிய ஆண்டவரே, நீர் எங்கள் பிதாக்களை எகிப்திலிருந்து புறப்படப் பண்ணும்போது, உம்முடைய தாசனாகிய மோசேயைக்கொண்டு சொன்னபடியே, தேவரீர் பூமியின் சகல ஜனங்களிலும் அவர்களை உமக்குச் சுதந்தரமாகப் பிரித்தெடுத்தீரே" (1இராஜா 8:53) என்று விண்ணப்பம்பண்ணுகிறார்.

சாலொமோன் சொன்ன ஆசீர்வாதம் 1இராஜா 8:54-61

1இராஜா 8:54. சாலொமோன் கர்த்தரை நோக்கி, இந்த ஜெபத்தையும் வேண்டுதலையும் எல்லாம் செய்து முடித்தபின்பு, அவன் கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்பாகத் தன் கைகளை வானத்திற்கு நேராக விரித்து, முழங்காற்படியிட்டிருந்ததை விட்டெழுந்து,

1இராஜா 8:55. நின்றுகொண்டு, இஸ்ரவேல் சபையையெல்லாம் ஆசீர்வதித்து, உரத்த சத்தத்தோடே சொன்னது:

1இராஜா 8:56. தாம் வாக்குத்தத்தம் பண்ணினபடியெல்லாம் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு இளைப்பாறுதலை அருளின கர்த்தருக்கு ஸ்தோத்திரம், அவர் தம்முடைய தாசனாகிய மோசேயைக்கொண்டு சொன்ன அவருடைய நல்வார்த்தைகளில் எல்லாம் ஒரு வார்த்தையானாலும் தவறிப் போகவில்லை.

1இராஜா 8:57. நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மைக் கைவிடாமலும், நம்மை நெகிழவிடாமலும், அவர் நம்முடைய பிதாக்களோடு இருந்ததுபோல, நம்மோடும் இருந்து,

1இராஜா 8:58. நாம் அவருடைய வழிகளில் எல்லாம் நடக்கிறதற்கும், அவர் நம்முடைய பிதாக்களுக்குக் கட்டளையிட்ட அவருடைய கற்பனைகளையும், அவருடைய கட்டளைகளையும், அவருடைய நியாயங்களையும் கைக்கொள்ளுகிறதற்கும், நம்முடைய இருதயத்தைத் தம்மிடத்தில் சாயப்பண்ணுவாராக.

1இராஜா 8:59. கர்த்தரே தேவன், வேறொருவரும் இல்லையென்பதைப் பூமியின் ஜனங்களெல்லாம் அறியும்படியாக,

1இராஜா 8:60. அவர் தமது அடியானுடைய நியாயத்தையும், தமது ஜனமாகிய இஸ்ரவேலின் நியாயத்தையும், அந்தந்த நாளில் நடக்கும் காரியத்துக்குத்தக்கதாய் விசாரிப்பதற்கும், நான் கர்த்தருக்கு முன்பாக விண்ணப்பம்பண்ணின இந்த என்னுடைய வார்த்தைகள் இரவும்பகலும் நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் இருப்பதாக.

1இராஜா 8:61. ஆதலால் இந்நாளில் இருக்கிறதுபோல, நீங்கள் அவர் கட்டளைகளில் நடந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்ள, உங்கள் இருதயம் நம்முடைய தேவனாகிய கர்த்தரோடு உத்தமமாய் இருக்கக்கடவது என்றான்.

சாலொமோன் கர்த்தரை நோக்கி, இந்த ஜெபத்தையும் வேண்டுதலையும் எல்லாம் செய்து முடிக்கிறார். அதன்பின்பு, சாலொமோன் கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்பாகத் தன் கைகளை வானத்திற்கு நேராக விரித்து, முழங்காற்படியிட்டிருந்ததை விட்டெழுந்து, நின்றுகொண்டு, இஸ்ரவேல் சபையையெல்லாம் ஆசீர்வதித்து, உரத்த சத்தத்தோடே ஆசீர்வாதமான வார்த்தைகளைச் சொல்லுகிறார். (1இராஜா 8:54,55).

சாலொமோன் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிப்பதற்கு முன்பாக, அவர் கர்த்தரை முதலாவதாக ஸ்தோத்திரம்பண்ணுகிறார். "தாம் வாக்குத்தத்தம் பண்ணினபடியெல்லாம் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு இளைப்பாறுதலை அருளின கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" (1இராஜா 8:56) என்று சொல்லி சாலொமோன் கர்த்தரைக் கனம்பண்ணுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஐசுவரியத்தையோ, சம்பத்தையோ, மகிமையையோ, கனத்தையோ, வல்லமையையோ, ஜெயத்தையோ ஆசீர்வாதமாக அருளவில்லை. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு இளைப்பாறுதலை ஆசீர்வாதமாக அருளுகிறார். எல்லா ஆசீர்வாதங்களையும்விட இளைப்பாறுதலே மேன்மையான ஆசீர்வாதம். இளைப்பாறுதல் இருந்தால் மாத்திரமே, ஐசுவரியத்தையும் சம்பத்தையும் அனுபவிக்க முடியும். ஆகையினால் இளைப்பாறுதலே உன்னதமானது. அதுவே உயர்ந்தது.

"கர்த்தர் தம்முடைய தாசனாகிய மோசேயைக்கொண்டு சொன்ன அவருடைய நல்வார்த்தைகளில் எல்லாம் ஒரு வார்த்தையானாலும் தவறிப் போகவில்லை" (1இராஜா 8:56) என்று சொல்லி சாலொமோன் கர்த்தருடைய வாக்குத்தத்தங்களையும், அவருடைய ஆசீர்வாதங்களையும் அங்கீகரிக்கிறார்.

கர்த்தர் தாவீதுக்கு சொன்ன ஆசீர்வாதங்களைப்பற்றி சாலொமோன் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; அவர் என் தகப்பனாகிய தாவீதுக்குத் தம்முடைய வாக்கினால் சொன்னதைத் தம்முடைய கரத்தினால் நிறைவேற்றினார்" (1இராஜா 8:15).

"தேவரீர் என் தகப்பனாகிய தாவீது என்னும் உம்முடைய தாசனுக்குச் செய்த வாக்குத்தத்தத்தைக் காத்தருளினீர்; அதை உம்முடைய வாக்கினால் சொன்னீர்; இந்நாளில் இருக்கிறபடி, உம்முடைய கரத்தினால் அதை நிறைவேற்றினீர்" (1இராஜா 8:24).

கர்த்தர் மோசேயைக் கொண்டு சொன்ன ஆசீர்வாதமான வார்த்தைகளை சாலொமோன் இங்கே சொல்லுகிறார். வாக்குத்தத்தம் பண்ணின கர்த்தர் உண்மையுள்ளவர். சாலொமோன் கர்த்தருடைய வார்த்தைகளைப்பற்றிச் சொல்லும்போது, "கர்த்தர் தம்முடைய தாசனாகிய மோசேயைக்கொண்டு சொன்ன அவருடைய நல்வார்த்தைகளில் எல்லாம் ஒரு வார்த்தையானாலும் தவறிப் போகவில்லை" (1இராஜா 8:56) என்று சொல்லுகிறார்.

சாலொமோன் இஸ்ரவேல் சபையாரை ஆசீர்வதிக்கும்போது, நான்கு விசேஷித்த ஆசீர்வாதங்களை அவர்களுக்கு சொல்லுகிறார். அவையாவன: 1. கர்த்தருடைய பிரசன்னம் அவர்களோடு கூடயிருக்கும். 2. கர்த்தருடைய கிருபையின் வல்லமை அவர்களோடு தங்கியிருக்கும். 3. சாலொமோன் கர்த்தருக்கு முன்பாக விண்ணப்பம்பண்ணின வார்த்தைகள், இரவும் பகலும் கர்த்தருடைய சந்நிதியில் இருக்கும். 4. இஸ்ரவேல் புத்திரருடைய இருதயம் கர்த்தரோடு உத்தமமாய் இருக்கவேண்டும்.

சாலொமோன் இஸ்ரவேல் சபையாரை ஆசீர்வதிக்கும்போது, "நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மைக் கைவிடாமலும், நம்மை நெகிழவிடாமலும், அவர் நம்முடைய பிதாக்களோடு இருந்ததுபோல, நம்மோடும் இருப்பாராக" (1இராஜா 8:57) என்று சொல்லி ஆசீர்வதிக்கிறார்.

இஸ்ரவேல் சபையார் எல்லோரும் சாலொமோன் கட்டின தேவாலயத்தை பிரதிஷ்டைபண்ணுவதற்கு ஏகமாய்க் கூடிவந்திருக்கிறார்கள். அவர்களெல்லோரும் இன்னும் சிறிது நேரத்தில் தங்கள் ஊர்களுக்கு திரும்பிப்போய்விடுவார்கள். கூட்டமாய்க் கூடியிருக்கிறவர்கள் கலைந்துவிடுவார்கள். இந்தப் பிரபஞ்சத்தில் அவர்களெல்லோரும் மறுபடியும் இதுபோல கூடிவருவதற்கு வாய்ப்பு வருமா என்பது தெரியவில்லை. ஆகையினால் சாலொமோன் அவர்களை தன்னுடைய ஆசீர்வாதமான வார்த்தைகளினால் ஆசீர்வதித்து அனுப்புகிறார். "நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மோடு கூடயிருப்பாராக" என்று சொல்லி சாலொமோன் அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரோடு கூடயிருப்பது அவர்களுக்கு மிகப்பெரிய ஆசீர்வாதமாயும், ஆறுதலாயும் இருக்கும். இஸ்ரவேல் புத்திரர் கலைந்துபோனாலும், அவர்கள் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்து போனாலும், கர்த்தர் அவர்களைவிட்டுப் பிரியாமல் அவர்களோடு கூடவே இருப்பார். சாலொமோன் இந்த ஆசீர்வாதத்தைச் சொல்லும்போது, "கர்த்தர் நம்முடைய பிதாக்களோடு இருந்ததுபோல நம்மோடும் இருப்பார்" என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. கர்த்தருடைய பிரசன்னம் இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே பிரத்தியட்சமாய் வெளிப்பட்டிருக்கிறது. கர்த்தர் இன்று இஸ்ரவேல் புத்திரரோடு கூடயிருக்கிறார். கர்த்தர் இன்று அவர்களோடு கூடயிருப்பதுபோல, அவர் எப்போதும் அவர்களோடு கூடயிருப்பார் என்று சாலொமோன் அவர்களை ஆசீர்வதிக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் தேவாலயத்தின் பிரதிஷ்டையை முடித்து, தங்களுடைய வீடுகளுக்கு திரும்பிச் செல்லும்போது, கர்த்தருடைய பிரசன்னமும் அவர்களுக்கு முன்பாக செல்லும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை கைவிடமாட்டார். கர்த்தர் அவர்களை நெகிழவிடமாட்டார்.

சாலொமோன் இஸ்ரவேல் சபையாரை ஆசீர்வதித்து வாழ்த்தும்போது "கர்த்தருடைய கிருபையின் வல்லமை அவர்களோடுகூட தங்கியிருக்கும்" என்று சொல்லி வாழ்த்துகிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு எந்நாளும் கூடயிருப்பார். கர்த்தர் அவர்களோடு கூடயிருப்பதற்கு தெய்வீக நோக்கமுள்ளது. இஸ்ரவேல் ஜனத்தாருடைய எல்லைகளை விஸ்தாரம்பண்ணுவதற்கோ அல்லது அவர்களுடைய ஐசுவரியங்களை திரளாய் விருத்தியடையச் செய்வதற்கோ கர்த்தர் அவர்களோடு கூடயிருக்கமாட்டார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய வழிகளில் நடக்கவேண்டும். கர்த்தருடைய கட்டளைகளையும், அவருடைய நியாயங்களையும் அவர்கள் கைக்கொள்ளவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தாருடைய இருதயம் கர்த்தரிடத்தில் சாய்ந்திருக்கவேண்டும். இதற்காகவே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு எந்நாளும் கூடயிருப்பார்.

சாலொமோன் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் இந்த சத்தியத்தைச் சொல்லி, அவர்களை இவ்வாறு ஆசீர்வதிக்கிறார். "நாம் அவருடைய வழிகளில் எல்லாம் நடக்கிறதற்கும், அவர் நம்முடைய பிதாக்களுக்குக் கட்டளையிட்ட அவருடைய கற்பனைகளையும், அவருடைய கட்டளைகளையும், அவருடைய நியாயங்களையும் கைக்கொள்ளுகிறதற்கும், நம்முடைய இருதயத்தைத் தம்மிடத்தில் சாயப்பண்ணுவாராக" (1இராஜா 8:58).

கர்த்தருடைய ஆலயத்திலிருந்து ஏறெடுக்கப்படும் எல்லா ஜெபங்களுக்கும், கர்த்தர் செவிகொடுத்து பதிலளிப்பார். சாலொமோன் கர்த்தருக்கு முன்பாக தன்னுடைய ஜெபங்களையும் விண்ணப்பங்களையும் ஏறெடுத்தார். அவர் தன்னுடைய விண்ணப்பங்களைப்பற்றிச் சொல்லும்போது, "நான் கர்த்தருக்கு முன்பாக விண்ணப்பம்பண்ணின இந்த என்னுடைய வார்த்தைகள் இரவும்பகலும் நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் இருப்பதாக" (1இராஜா 8:60) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் சாலொமோனுடைய ஜெபத்திற்கும் விண்ணப்பத்திற்கும் பதில் கொடுக்கிறார். சாலொமோனுக்கு மாத்திரமல்ல, கர்த்தருடைய ஆலயத்திற்கு வந்து, யாரெல்லாம் கர்த்தருக்கு முன்பாக தங்களுடைய ஜெபங்களையும் விண்ணப்பங்களையும் ஏறெடுக்கிறார்களோ,

அவர்களெல்லோருக்கும் கர்த்தர் பதில் கொடுப்பார். கர்த்தருடைய ஆலயத்தில் ஏறெடுக்கப்படும் ஜெபம் ஒருபோதும் வீணாய்ப்போகாது. நம்முடைய ஜெபவார்த்தைகளும், விண்ணப்பத்தின் வார்த்தைகளும், நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் இரவும் பகலும் இருக்கும். கர்த்தர் நம்முடைய ஜெபத்திற்கு இரவும் பகலும் ஓய்வில்லாமல் பதில் கொடுத்துக்கொண்டிருப்பார். கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறவர்களுக்கு, அவருடைய கிருபைகளும் இரக்கங்களும், ஆசீர்வாதங்களும் அநுகூலங்களும் தொடர்ந்து கொடுக்கப்படும்.

கர்த்தர் தம்முடைய நாமமகிமைக்காக நம்முடைய ஜெபங்களுக்கு பதில் கொடுக்கிறார். "கர்த்தரே தேவன், வேறொருவரும் இல்லையென்பதைப் பூமியின் ஜனங்களெல்லாம் அறியும்படியாக" (1இராஜா 8:59). கர்த்தர் தம்முடைய ஜனங்களின் ஜெபத்திற்கு பதில் கொடுத்து, அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஏறெடுத்த தன்னுடைய விண்ணப்ப வார்த்தைகளைப்பற்றிச் சொல்லும்போது, "கர்த்தர் தமது அடியானுடைய நியாயத்தையும், தமது ஜனமாகிய இஸ்ரவேலின் நியாயத்தையும், அந்தந்த நாளில் நடக்கும் காரியத்துக்குத்தக்கதாய் விசாரிப்பதற்கும், நான் கர்த்தருக்கு முன்பாக விண்ணப்பம்பண்ணின இந்த என்னுடைய வார்த்தைகள் இரவும்பகலும் நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் இருப்பதாக" (1இராஜா 8:60) என்று சொல்லுகிறார்.

சாலொமோன் கர்த்தருக்கு முன்பாக விண்ணப்பம்பண்ணின அவருடைய வார்த்தைகள், தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் இரவும் பகலும் இருக்கும் என்பது, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பரிந்துபேசும் ஜெபத்தில் நிறைவேறியிருக்கிறது. கிறிஸ்துவானவர் தம்முடைய பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்து, பிதாவினிடத்தில் இரவும் பகலும் நமக்காக பரிந்துபேசுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் எந்நாளும் கர்த்தருடைய கட்டளைகளில் நடக்கவேண்டும் என்று சாலொமோன் அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார். அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும். அவர்களுடைய இருதயம் கர்த்தரோடு உத்தமமாயிருக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்தில் உண்மையுள்ளவர். கர்த்தர் தம்முடைய வாயினால் சொல்லுவதை, தம்முடைய கையினால் நிறைவேற்றுகிறவர். கர்த்தர் உண்மையுள்ளவராயிருப்பதுபோல, கர்த்தருடைய ஜனமும் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

சாலொமோன் இதுவரையிலும் இஸ்ரவேல் ஜனத்தாருக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணினார். இப்போது சாலொமோன் கர்த்தருடைய வார்த்தைகளை இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொல்லுகிறார். "ஆதலால் இந்நாளில் இருக்கிறதுபோல, நீங்கள் அவர் கட்டளைகளில் நடந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்ள, உங்கள் இருதயம் நம்முடைய தேவனாகிய கர்த்தரோடு உத்தமமாய் இருக்கக்கடவது" (1இராஜா 8:61) என்று சாலொமோன் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு உபதேச வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

சாலொமோன் செலுத்தின பலிகள்
1இராஜா 8:62-66

1இராஜா 8:62. பின்பு ராஜாவும் அவனோடே இருந்த இஸ்ரவேலர் அனைவரும், கர்த்தருடைய சந்நிதியில் பலிகளைச் செலுத்தினார்கள்.

1இராஜா 8:63. சாலொமோன் கர்த்தருக்குச் சமாதானபலிகளாக, இருபத்தீராயிரம் மாடுகளையும், இலட்சத்திருபதினாயிரம் ஆடுகளையும் பலியிட்டான்; இவ்விதமாய் ராஜாவும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் கர்த்தருடைய ஆலயத்தைப் பிரதிஷ்டை பண்ணினார்கள்.

1இராஜா 8:64. கர்த்தருடைய சந்நிதியில் இருந்த வெண்கலப் பலிபீடம் சர்வாங்க தகனபலிகளையும், போஜனபலிகளையும், சமாதான பலிகளின் நிணத்தையும் கொள்ளமாட்டாமல் சிறிதாயிருந்தபடியினால், ராஜா கர்த்தருடைய ஆலயத்திற்குமுன் இருக்கிற பிராகாரத்தின் நடுமையத்தைப் பரிசுத்தப்படுத்தி, அன்றைய தினம் அங்கே சர்வாங்க தகனபலிகளையும், போஜனபலிகளையும், சமாதானபலிகளின் நிணத்தையும் செலுத்தினான்.

1இராஜா 8:65. அக்காலத்தில்தானே சாலொமோனும், ஆமாத்தின் எல்லைதொடங்கி எகிப்தின் நதிமட்டும் இருந்துவந்து, அவனோடே இருந்த பெரிய கூட்டமாகிய இஸ்ரவேல் அனைத்தும் நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் ஏழுநாளும், அதற்குப்பின்பு வேறே ஏழுநாளும், ஆகப் பதினாலு நாள்வரைக்கும் பண்டிகையை ஆசரித்தார்கள்.

1இராஜா 8:66. எட்டாம்நாளிலே ஜனங்களுக்கு விடைகொடுத்து அனுப்பினான்; அவர்கள் ராஜாவை வாழ்த்தி, கர்த்தர் தமது தாசனாகிய தாவீதுக்கும் தமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கும் செய்த எல்லா நன்மைக்காகவும் சந்தோஷப்பட்டு மனமகிழ்ச்சியோடே தங்கள் கூடாரங்களுக்குப் போய்விட்டார்கள்.

சாலொமோனும் அவரோடு கூடயிருக்கிற இஸ்ரவேலர் அனைவரும் கர்த்தருடைய ஆலயத்தில் சந்தோஷமாயிருக்கிறார்கள். சாலொமோன் ராஜாவும் அவரோடே இருக்கிற இஸ்ரவேலர் அனைவரும், கர்த்தருடைய சந்நிதியில் பலிகளைச் செலுத்துகிறார்கள் (1இராஜா 8:62).

இஸ்ரவேல் சபையார் எல்லோரும் கர்த்தருடைய ஆலயத்திலே கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருக்கிறார்கள். சாலொமோனுடைய ஆசீர்வாதமான வார்த்தைகள் இஸ்ரவேல் புத்திரருடைய இருதயங்களை உற்சாகப்படுத்துகிறது. கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தில் வந்து தங்கியிருப்பதைப் பார்த்து, சாலொமோனும், ஆசாரியர் அனைவரும், இஸ்ரவேலர் அனைவரும் கர்த்தருடைய சமுகத்திலே பயபக்தியாயிருக்கிறார்கள்.

சாலொமோன் கர்த்தருக்குச் சமாதானபலிகளாக, இருபத்தீராயிரம் மாடுகளையும், இலட்சத்திருபதினாயிரம் ஆடுகளையும் பலியிடுகிறார்; இவ்விதமாய் ராஜாவும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் கர்த்தருடைய ஆலயத்தைப் பிரதிஷ்டை பண்ணுகிறார்கள் (1இராஜா 8:63).

கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். சாலொமோன் கர்த்தருக்கு 22,000 மாடுகளையும், 1,20,000 ஆடுகளையும் பலியிட்டாலும், இஸ்ரவேல் தேசத்தில் இன்னும் ஏராளமான ஆடுகளும் மாடுகளும் இருக்கிறது. கர்த்தருக்கு ஆடுகளையும் மாடுகளையும் பலியிட்டதினால், தேசத்தில் அவற்றின் எண்ணிக்கை குறைந்துபோகவில்லை. கர்த்தர் ஆடுகளையும் மாடுகளையும் பலுகிப் பெருகச் செய்கிறார். நாம் கர்த்தருக்காக காணிக்கைகளைச் செலுத்தும்போது, நம்முடைய ஐசுவரியம் குறைந்துபோகாது. கர்த்தர் நம்முடைய ஐசுவரித்தைப் பெருகப்பண்ணுவார்.

22,000 மாடுகளையும், 1,20,000 மாடுகளையும் ஒரே நாளில் பலியிட முடியாது. இவையெல்லாவற்றையும் பலியிடுவதற்கு பல நாட்களாகும். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய சந்நிதியில் பதினாலு நாள் வரைக்கும் பண்டிகையை ஆசரிக்கிறார்கள். இந்தப் பண்டிகை நாட்களில் சாலொமோனும், இஸ்ரவேல் சபையாரும் கர்த்தருக்கு பலிகளை செலுத்துகிறார்கள்.

கர்த்தருடைய சந்நிதியில் இருந்த வெண்கலப் பலிபீடம் சர்வாங்க தகனபலி களையும், போஜனபலிகளையும், சமாதான பலிகளின் நிணத்தையும் கொள்ளமாட்டாமல் சிறிதாயிருக்கிறது. ஆனபடியினால், சாலொமோன் ராஜா கர்த்தருடைய ஆலயத்திற்குமுன் இருக்கிற பிராகாரத்தின் நடுமையத்தைப் பரிசுத்தப்படுத்தி, அன்றைய தினம் அங்கே சர்வாங்க தகனபலிகளையும், போஜனபலிகளையும், சமாதானபலிகளின் நிணத்தையும் செலுத்துகிறார் (1இராஜா 8:64).

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைப் பிரதிஷ்டைபண்ணுகிறார். பிரதிஷ்டை பண்டிகையை தொடர்ந்து, சாலொமோன் கூடாரங்களின் பண்டிகையையும் ஆசரிக்கிறார். இவ்விரண்டு பண்டிகைகளும் பதினான்கு நாட்களுக்கு ஆசரிக்கப்படுகிறது.

அக்காலத்தில்தானே சாலொமோனும், ஆமாத்தின் எல்லைதொடங்கி எகிப்தின் நதிமட்டும் இருந்துவந்து, அவரோடே இருந்த பெரிய கூட்டமாகிய இஸ்ரவேல் அனைத்தும் நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் ஏழுநாளும், அதற்குப்பின்பு வேறே ஏழுநாளும், ஆகப் பதினாலு நாள்வரைக்கும் பண்டிகையை ஆசரிக்கிறார்கள் (1இராஜா 8:65).

எட்டாம்நாளிலே சாலொமோன் ஜனங்களுக்கு விடைகொடுத்து அனுப்புகிறார்; அவர்கள் ராஜாவை வாழ்த்தி, கர்த்தர் தமது தாசனாகிய தாவீதுக்கும் தமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கும் செய்த எல்லா நன்மைக்காகவும் சந்தோஷப்பட்டு மனமகிழ்ச்சியோடே தங்கள் கூடாரங்களுக்குப் போய்விடுகிறார்கள் (1இராஜா 8:66).

இஸ்ரவேல் சபையார் தேவாலய பிரதிஷ்டை பண்டிகைக்கு மிகுந்த சந்தோஷத்தோடு வந்தார்கள். சந்தோஷத்தோடு தேவாலயத்தை கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணினார்கள். இப்போது மிகுந்த சந்தோஷத்தோடு தங்கள் வீடுகளுக்கு திரும்பிப்போகிறார்கள். கர்த்தருடைய ஆராதனையில் பங்குபெறுகிறவர்களுக்கு எப்போதும் சந்தோஷம் இருக்கும். அவர்கள் வருகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள். போகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள். கர்த்தர் அவர்களோடு கூடயிருப்பார். கர்த்தரே நம்முடைய சந்தோஷம்.

9 அதிகாரம்

சாலொமோனுடைய ஜெபத்திற்கு கர்த்தர் பதில் கொடுக்கிறார் (1இராஜா 9:1-9). சாலொமோனும் ஈராமும் தங்களுடைய சிநேகத்தை பரஸ்பரம் பரிமாறிக்கொள்கிறார்கள் (1இராஜா 9:10-14). சாலொமோனுடைய வேலையாட்களும், அவர் கட்டின கட்டிடங்களும் (1இராஜா 9:15-24). சாலொமோன் கர்த்தருக்கு செலுத்துகிற பலிகள் (1இராஜா 9:25). சாலொமோனுடைய வியாபாரக் கப்பல்கள் (1இராஜா 9:26-28).

கர்த்தருடைய வார்த்தை 1இராஜா 9:1-9

1இராஜா 9:1. சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தையும் ராஜ அரமனையையும், தான் செய்யவேண்டும் என்று விரும்பின எல்லாவற்றையும் கட்டி முடித்தபின்பு,

1இராஜா 9:2. கர்த்தர் கிபியோனிலே சாலொமோனுக்குத் தரிசனமானதுபோல, இரண்டாந்தரமும் அவனுக்குத் தரிசனமானார்.

1இராஜா 9:3. கர்த்தர் அவனை நோக்கி: நீ என் சமுகத்தில் செய்த உன் விண்ணப்பத்தையும் உன் வேண்டுதலையும் கேட்டேன்; நீ கட்டின இந்த ஆலயத்தில் என் நாமம் என்றைக்கும் விளங்கத்தக்கதாக, அதைப் பரிசுத்தமாக்கினேன்; என் கண்களும் என் இருதயமும் எந்நாளும் அங்கேயிருக்கும்.

1இராஜா 9:4. நான் உனக்குக் கட்டளையிட்ட எல்லாவற்றையும் நீ செய்து, என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்ளும்படிக்கு, என் சமுகத்தில் மன உத்தமமும் செம்மையுமாய் உன் தகப்பனாகிய தாவீது நடந்ததுபோல நடப்பாயானால்,

1இராஜா 9:5. இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் உட்காரும் புருஷன் உனக்கு இல்லாமற்போவதில்லை என்று உன் தகப்பனாகிய தாவீதோடே நான் சொன்னபடியே, இஸ்ரவேலின்மேலுள்ள உன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன்.

1இராஜா 9:6. நீங்களும் உங்கள் பிள்ளைகளும் என்னைவிட்டுப் பின்வாங்கி, நான் உங்களுக்கு முன்வைத்த என் கற்பனைகளையும் என் கட்டளைகளையும் கைக்கொள்ளாமற் போய் வேறே தேவர்களைச் சேவித்து, அவைகளைப் பணிந்துகொள்வீர்களாகில்,

1இராஜா 9:7. நான் இஸ்ரவேலுக்குக் கொடுத்த தேசத்திலே அவர்களை வைக்காதபடிக்கு நிர்மூலமாக்கி, என் நாமம் விளங்க நான் பரிசுத்தமாக்கின இந்த ஆலயத்தை என் சமுகத்தைவிட்டுத் தள்ளுவேன்; அப்பொழுது இஸ்ரவேல் சகல ஜனங்களுக்குள்ளும் பழமொழியாகவும் வசைச் சொல்லாகவும் இருப்பார்கள்.

1இராஜா 9:8. அப்பொழுது உன்னதமாயிருக்கிற இந்த ஆலயத்தைக் கடந்துபோகிறவன் எவனும் பிரமித்து, பகிடியாய் ஈசலிட்டு: கர்த்தர் இந்த தேசத்துக்கும் இந்த ஆலயத்துக்கும் இப்படிச் செய்தது என்ன? என்று கேட்பார்கள்.

1இராஜா 9:9. அதற்கு அவர்கள்: தங்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின தங்கள் தேவனாகிய கர்த்தரை விட்டு, வேறே தேவர்களைப் பற்றிக்கொண்டு, அவர்களை நமஸ்கரித்துச் சேவித்தபடியினால், கர்த்தர் இந்தத் தீங்கையெல்லாம் அவர்கள்மேல் வரப்பண்ணினார் என்று சொல்லுவார்கள் என்றார்.

கர்த்தர் சாலொமோனுடைய ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறார். சாலொமோன் தேவாலயத்தை பிரதிஷ்டைபண்ணி கர்த்தருக்கு பலிகளை செலுத்துகிறார். கர்த்தர் சாலொமோனுடைய ஜெபத்தையும், அவர் செலுத்தின பலிகளையும் அங்கீகரிக்கிறார். அதற்கு அடையாளமாக, சாலொமோன் ஜெபம்பண்ணி முடிக்கிறபோது, அக்கினி வானத்திலிருந்து இறங்கி, சர்வாங்க தகனபலியையும் மற்ற பலிகளையும் பட்சிக்கிறது. கர்த்தருடைய மகிமை ஆலயத்தை நிரப்பிற்று *(2நாளா 7:1)*.

கர்த்தர் இங்கே சாலொமோனுக்கு தரிசனமாகிறார். சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தையும் ராஜ அரமனையையும், தான் செய்யவேண்டும் என்று விரும்பின எல்லாவற்றையும் கட்டி முடிக்கிறார். அதன்பின்பு, கர்த்தர் கிபியோனிலே சாலொமோனுக்குத் தரிசனமானதுபோல, இரண்டாந்தரமும் அவருக்குத் தரிசனமாகிறார் *(1இராஜா 9:1,2)*.

சாலொமோனுடைய ராஜ்யபாரத்தின் ஆரம்ப நாட்களில், கர்த்தர் அவருக்கு சொப்பனத்திலே தரிசனமானார். இப்போது மறுபடியும் அவருக்கு சொப்பனத்தின் மூலமாகவோ அல்லது தரிசனத்தின் மூலமாகவோ தரிசனமாகிறார்.

சாலொமோன் கர்த்தருடைய சந்நிதியில் சர்வாங்க தகனபலிகளையும், போஜனபலிகளையும், சமாதான பலிகளையும் செலுத்துகிறார். அவர் பகல் முழுவதும் கர்த்தருக்கு பலிகளை செலுத்தியிருக்க வேண்டும். பலிகளை செலுத்திய பின்பு, பண்டிகையை ஆசரித்து முடித்த பின்பு, இரவு வேளையிலே கர்த்தர் சாலொமோனுக்கு தரிசனமாகிறார்.

"அங்கே சாலொமோன் ஆசரிப்புக் கூடாரத்திற்கு முன்பாகக் கர்த்தரின் சந்நிதியிலிருக்கிற வெண்கலப் பலிபீடத்தின் மேல் ஆயிரம் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்திப் பலியிட்டான். அன்று ராத்திரியிலே தேவன் சாலொமோனுக்குத் தரிசனமாகி: நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்றார்" *(2நாளா 1:6,7)*.

சாலொமோன் கர்த்தருக்கு இந்த ஆலயத்தைக் கட்டியிருக்கிறார். கர்த்தருடைய நாமம் இந்த ஆலயத்தில் என்றென்றைக்கும் விளங்கவேண்டும். அதற்காக கர்த்தர் இந்த ஆலயத்தை பரிசுத்தமாக்கியிருக்கிறார். கர்த்தருடைய கண்களும், அவருடைய இருதயமும் எந்நாளும் இந்த ஆலயத்திலிருக்கும்.

சாலொமோன் கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பங்களையும், வேண்டுதல்களையும் செய்தார். கர்த்தர் அவருடைய ஜெபத்தை கேட்டார். கர்த்தரே தம்முடைய ஆலயத்தை பரிசுத்தமாக்குகிறார். சாலொமோன் தான் கட்டின ஆலயத்தை கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணுகிறார். சாலொமோன் இதை பிரதிஷ்டைபண்ணினாலும், கர்த்தரே தம்முடைய ஆலயத்தை பரிசுத்தமாக்குகிறார் *(1இராஜா 9:3)*

சாலொமோனும், இஸ்ரவேல் ஜனத்தாரும் கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கவேண்டும். கர்த்தர் அவர்களுக்கு கட்டளையிட்ட எல்லாவற்றையும் செய்யவேண்டும். அப்போது கர்த்தருடைய ஆசீர்வாதம் அவர்கள் மத்தியில் தங்கியிருக்கும்.

கர்த்தர் சாலொமோனை நோக்கி, "நான் உனக்குக் கட்டளையிட்ட எல்லாவற்றையும் நீ செய்து, என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்ளும்படிக்கு, என் சமுகத்தில் மன உத்தமமும் செம்மையுமாய் உன் தகப்பனாகிய தாவீது நடந்ததுபோல நடப்பாயானால், இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் உட்காரும் புருஷன் உனக்கு இல்லாமற்போவதில்லை என்று உன் தகப்பனாகிய தாவீதோடே நான் சொன்னபடியே, இஸ்ரவேலின்மேலுள்ள உன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன்" *(1இராஜா 9:4,5)* என்று சொல்லுகிறார்.

சாலொமோன் இப்போது தான் கட்டின ஆலயத்தை கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணியிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் பதினாலு நாள் வரைக்கும் பண்டிகையை ஆசரிக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கிறார்கள். கர்த்தருக்கு பயபக்தியோடு பலிகளை செலுத்துகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியில் கர்த்தருடைய ஆலயம் இருக்கிறது. இந்த ஆலயம் கர்த்தருடைய வாசஸ்தலம். கர்த்தருடைய கண்களும், அவருடைய இருதயமும் இந்த ஆலயத்திலிருக்கும்.

தங்கள் மத்தியில் கர்த்தருடைய ஆலயம் இருப்பதினால், இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாக ஜீவிக்கக்கூடாது. அவருக்கு விரோதமாகப் பாவம் செய்யக்கூடாது. கர்த்தருடைய ஆலயம் இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலிருந்தாலும், அவர்கள் கர்த்தருடைய சமுகத்தில் மனஉத்தமமும், செம்மையுமாய் நடக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளையும், அவருடைய நியாயங்களையும் கைக்கொள்ளவேண்டும். தாங்கள் எப்படி வேண்டுமானாலும் ஜீவிக்கலாம் என்று நினைத்து, இஸ்ரவேல் ஜனத்தார், கர்த்தரைவிட்டு விலகி துன்மார்க்கமாய் ஜீவிக்கக்கூடாது.

“கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம் இதுவே என்று சொல்லி, பொய்வார்த்தைகளை நம்பிக்கொள்ளாதிருங்கள்” *(எரே 7:3).*

கர்த்தர் சாலொமோனுக்கு ஆசீர்வாதமான வார்த்தைகளைச் சொல்லும்போது, சில நிபந்தனைகளையும் சேர்த்து சொல்லுகிறார். கர்த்தர் சாலொமோனை நோக்கி, “என் சமுகத்தில் மன உத்தமமும் செம்மையுமாய் உன் தகப்பனாகிய தாவீது நடந்ததுபோல நடப்பாயானால், இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் உட்காரும் புருஷன் உனக்கு இல்லாமற்போவதில்லை” *(1இராஜா 9:4,5)* என்று சொல்லுகிறார்.

சாலொமோன் கர்த்தருடைய சமுகத்தில் மனஉத்தமமும், செம்மையுமாய் நடக்கவில்லையென்றால், கர்த்தர் சொல்லும் ஆசீர்வாதம் சாலொமோனுக்கு சித்திக்காது.

“உன் குமாரர் என் உடன்படிக்கையையும், நான் போதிக்கும் என் சாட்சிகளையும், காத்து நடந்தால், அவர்கள் குமாரரும் என்றென்றைக்கும் உன் சிங்காசனத்தில் வீற்றிருப்பார்கள் என்றும், கர்த்தர் தாவீதுக்கு உண்மையாய் ஆணையிட்டார்; அவர் தவறமாட்டார்” *(சங் 132:12).*

சாலொமோனும் அவருடைய வீட்டாரும் கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் ஜீவித்தால், அவர்களுக்கு கர்த்தருடைய ஆசீர்வாதம் கிடைக்காது. ஆசீர்வாதத்திற்கு பதிலாக அவர்களுக்கு சாபம் கிடைக்கும்.

கர்த்தர் சாலொமோனை நோக்கி, “நீங்களும் உங்கள் பிள்ளைகளும் என்னைவிட்டுப் பின்வாங்கி, நான் உங்களுக்கு முன்வைத்த என் கற்பனைகளையும் என் கட்டளைகளையும் கைக்கொள்ளாமற் போய் வேறே தேவர்களைச் சேவித்து, அவைகளைப் பணிந்துகொள்வீர்களாகில், நான் இஸ்ரவேலுக்குக் கொடுத்த தேசத்திலே அவர்களை வைக்காதபடிக்கு நிர்மூலமாக்கி, என் நாமம் விளங்க நான் பரிசுத்தமாக்கின இந்த ஆலயத்தை என் சமுகத்தைவிட்டுத் தள்ளுவேன்; அப்பொழுது இஸ்ரவேல் சகல ஜனங்களுக்குள்ளும் பழமொழியாகவும் வசைச் சொல்லாகவும் இருப்பார்கள்” *(1இராஜா 9:6,7)* என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட விசேஷித்த ஜாதியாயிருந்தாலும், அவர்கள் பரிசுத்த ஜனமாயிருந்தாலும், இஸ்ரவேல் தேசம் பரிசுத்த தேசமாயிருந்தாலும், அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தால், கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தாரை நிர்மூலமாக்குவார். தம்முடைய நாமம் விளங்க கர்த்தர் பரிசுத்தமாக்கின இந்த ஆலயத்தை, கர்த்தர் தம்முடைய சமுகத்தை விட்டு தள்ளிவிடுவார். இஸ்ரவேல் ஜனத்தார் ஆசீர்வாதமாயிருக்கமாட்டார்கள். அவர்கள் சாபமாயிருப்பார்கள்.

கர்த்தருடைய ஆலயம் இப்போது உன்னதமாயிருக்கிறது. கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் ஆலயத்தில் வாசம்பண்ணவில்லையென்றால், இந்த ஆலயம் ஒரு சாதாரண கட்டிடமாகவே இருக்கும். இஸ்ரவேல் தேசம் இப்போது கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட தேசமாயிருக்கிறது. இந்த தேசத்தில் கர்த்தருடைய ஆசீர்வாதம் இல்லையென்றால், இது சபிக்கப்பட்ட தேசமாயிருக்கும்.

இந்த தேசத்தையும், இந்த ஆலயத்தையும் கடந்துபோகிறவர்கள், இதன் அழிவைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள். பிரமிப்பார்கள். கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தை நிர்மூலமாக்கி, இந்த ஆலயத்தை தம்முடைய சமுகத்தைவிட்டு தள்ளும்போது, தேசமும் ஆலயமும், இவற்றை பார்க்கிறவர்களின் பார்வைக்கு எப்படியிருக்கும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் சாலொமோனை நோக்கி, "அப்பொழுது உன்னதமாயிருக்கிற இந்த ஆலயத்தைக் கடந்துபோகிறவன் எவனும் பிரமித்து, பகிடியாய் ஈசலிட்டு: கர்த்தர் இந்த தேசத்துக்கும் இந்த ஆலயத்துக்கும் இப்படிச் செய்தது என்ன? என்று கேட்பார்கள். அதற்கு அவர்கள்: தங்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின தங்கள் தேவனாகிய கர்த்தரை விட்டு, வேறே தேவர்களைப் பற்றிக் கொண்டு, அவர்களை நமஸ்கரித்துச் சேவித்தபடியினால், கர்த்தர் இந்தத் தீங்கையெல்லாம் அவர்கள்மேல் வரப்பண்ணினார் என்று சொல்லுவார்கள்" *(1இரஜா 9:8,9)* என்று சொல்லுகிறார்.

இப்போது உன்னதமான இந்த ஆலயத்தைக் கடந்துபோகிறவர்கள், இதன் அழகையும், மகிமையையும் பார்த்து பிரமிப்பார்கள். கர்த்தர் இந்த ஆலயத்தை தம்முடைய சமுகத்தைவிட்டு தள்ளிவிடும்போது, இந்த ஆலயம் உன்னதமாயிராது. இந்த ஆலயத்தில் அழகும் மகிமையும் இருக்காது. அவர்கள் ஏற்கெனவே உன்னதமான ஆலயத்தைப் பார்த்தவர்கள். அவர்கள் அழகான ஆலயத்தையும், மகிமையான ஆலயத்தையும் பார்த்தவர்கள். இப்போது மகிமையில்லாமல், அழகில்லாமல், நிர்மூலமாய் கிடக்கிற ஆலயத்தைப் பார்த்து பிரமிப்பார்கள்.

சாலொமோன் தேவாலயத்தை பிரதிஷ்டைபண்ணும் நாளிலே, கர்த்தர் அவருக்கு எச்சரிப்பின் வார்த்தைகளை சொல்லுகிறார். புதிய ஆலயம், புதிய பிரதிஷ்டை எல்லாம் நல்லதுதான். ஆனால் ஜனங்கள் ஆலயத்தின் அழகைப் பார்த்து பெருமைப்படக்கூடாது. தங்கள் இருதயத்தில் இறுமாப்பாய் ஜீவிக்கக்கூடாது. அவர்கள் மனமேட்டிமையாயிருக்கக்கூடாது. அவர்கள் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாய் ஜீவிக்கவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் கர்த்தருக்கு பயந்து, அவருடைய கட்டளைகளையும், நியாயங்களையும் கைக்கொள்ளவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு பிரியமானவர்களாயும், பிரயோஜனமானவர்களாயும் இருக்கவேண்டும்.

சாலொமோனும் ஈராமும்
1இராஜா 9:10-14

1இராஜா 9:10. சாலொமோன் கர்த்தருடைய ஆலயமும் ராஜ அரமனையுமாகிய இரண்டு மாளிகைகளையும் கட்டி நிறைவேற்றுகிற இருபதாம் வருஷம் முடிவிலே,

1இராஜா 9:11. தன்னுடைய விருப்பத்தின்படியெல்லாம் தனக்குக் கேதுருமரங்களையும், தேவதாரி விருட்சங்களையும், பொன்னையும் கொடுத்துவந்த தீருவின் ராஜாவாகிய ஈராமுக்கு, ராஜாவாகிய சாலொமோன் கலிலேயா நாட்டிலுள்ள இருபது பட்டணங்களைக் கொடுத்தான்.

1இராஜா 9:12. ஈராம் தனக்குச் சாலொமோன் கொடுத்த பட்டணங்களைப் பார்க்கிறதற்குத் தீருவிலிருந்து புறப்பட்டுவந்தான்; அவைகளில் அவன் பிரியப்படவில்லை.

1இராஜா 9:13. அதனாலே அவன்: என் சகோதரனே, நீர் எனக்குக் கொடுத்த இந்தப் பட்டணங்கள் என்ன பட்டணங்கள்? என்றான். அவைகளுக்கு இந்நாள்மட்டும் வழங்கி வருகிறபடி காபூல் நாடு என்று பேரிட்டான்.

1இராஜா 9:14. ஈராம் ராஜாவுக்கு நூற்றிருபது தாலந்து பொன் அனுப்பியிருந்தான்.

சாலொமோன் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டினபோது, ஈராம் தீரு தேசத்திலிருந்து தேவதாரி மரங்களை அனுப்பி வைத்தார். தேவாலயம் கட்டி முடிக்கப்பட்டு பிரதிஷ்டை பண்ணப்பட்டிருக்கிறது. சாலொமோனும் ஈராமும் சமாதானமாக விடைபெற்றுக் கொள்கிறார்கள்.

இஸ்ரவேல் தேசத்திலே மரவெட்டு வேலையை திறமையைச் செய்யக்கூடியவர்கள் இல்லை. ஈராம் தீரு தேசத்திலிருந்து மரவெட்டுவேலை அறிந்த ஆட்களை சாலொமோனுக்கு கொடுத்து உதவிசெய்தார். சாலொமோன் ஈராமின் உதவிகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ளாமல், ஈராமின் வேலையாட்களுக்கு சம்பளமும், ஈராமின் அரமனைக்கு போஜனமும் கொடுத்தார்.

ஈராம் சாலொமோனுக்கு உதவி செய்தாலும், சாலொமோன் ஈராமைவிட உயர்ந்தவராயிருக்கிறார். சாலொமோனுக்கு இஸ்ரவேல் தேசத்திலும், மற்ற தேசங்களிலும் மதிப்பும் மரியாதையும், அந்தஸ்தும் உயர்ந்திருக்கிறது. ஈராம் சாலொமோனுடைய வளர்ச்சியைப் பார்த்து பொறாமைப்படவில்லை. சாலொமோன் இன்னும் மேன்மேலும் வளர்ச்சி பெறுவதற்கு, ஈராம் உதவி செய்கிறார்.

ஈராம் தனக்கு செய்த உதவிகளை சாலொமோனும் மறக்கவில்லை. அவர் ஈராமுக்கு கலிலேயா நாட்டிலுள்ள இருபது பட்டணங்களைக் கொடுக்கிறார்.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயமும் ராஜ அரமனையுமாகிய இரண்டு மாளிகைகளையும் கட்டி நிறைவேற்றுகிற இருபதாம் வருஷம் முடிவிலே, தன்னுடைய விருப்பத்தின்படியெல்லாம் தனக்குக் கேதுருமரங்களையும், தேவதாரி விருட்சங்களையும், பொன்னையும் கொடுத்துவந்த தீருவின் ராஜாவாகிய ஈராமுக்கு, ராஜாவாகிய சாலொமோன் கலிலேயா நாட்டிலுள்ள இருபது பட்டணங்களைக் கொடுக்கிறார் *(1இராஜா 9:10,11).*

ஈராம் சாலொமோனுக்கு ஏராளமான உதவிகளை செய்திருக்கிறார். ஈராம் செய்த உதவிகளுக்கு, சாலொமோன் அவர் கேட்டுக்கொண்ட பிரகாரம், எல்லாவற்றையும் குறைவில்லாமல் கொடுத்திருக்கிறார்.

"ஈராம் சாலொமோனிடத்தில் மனுஷரை அனுப்பி: நீர் எனக்குச் சொல்லியனுப்பின காரியத்தை நான் கேட்டேன்; கேதுருமரங்களுக்காகவும், தேவதாரி விருட்சங்களுக்காகவும், உம்முடைய விருப்பத்தின்படியெல்லாம் நான் செய்வேன். என் வேலைக்காரர் லீபனோனில் இருந்து அவைகளை இறக்கிக் கடலிலே கொண்டுவருவர்கள்; அங்கே நான் அவைகளைத் தெப்பங்களாகக் கட்டி, நீர் நியமிக்கும் இடத்துக்குக் கடல்வழியாய் அனுப்பி, அவைகளை அவிழ்த்து ஒப்பிப்பேன்; அங்கே நீர் அவைகளை ஒப்புக்கொண்டு என் ஜனங்களுக்கு ஆகாரங்கொடுத்து, என் விருப்பத்தின்படி செய்யவேண்டும் என்று சொல்லச்சொன்னான்" *(1இராஜா 5:8,9).*

ஈராம் சாலொமோனிடத்தில் பட்டணங்களைக் கேட்கவில்லை. ஆனாலும் சாலொமோன் ராஜா தீருவின் ராஜாவாகிய ஈராமுக்கு, கலிலேயா நாட்டிலுள்ள இருபது பட்டணங்களைக் கொடுக்கிறார். இவையெல்லாம் சிறிய ஊர்கள். சாலொமோன் தனக்கு கொடுத்த பட்டணங்களை பார்க்கவேண்டுமென்று ஈராம் விரும்புகிறார். இதற்காக ஈராம் தீருவிலிருந்து கலிலேயா நாட்டிற்கு புறப்பட்டு வருகிறார். ஆனால் ஈராம் இந்தப் பட்டணங்களில் பிரியப்படவில்லை *(1இராஜா 9:12).*

சாலொமோன் தனக்கு கொடுத்த இருபது பட்டணங்களையும், ஈராம் "காபூல்நாடு" என்று அழைக்கிறார். காபூல் என்பது பொனீஷிய பாஷையின் வார்த்தை. காபூல் என்னும் பேருக்கு, "திருப்தியில்லை" என்று பொருள். ஈராமுக்கு இந்தப் பட்டணங்கள் பிடிக்கவில்லை. ஆகையினால் அவர் இதை "காபூல் நாடு" என்று சொல்லுகிறார்.

ஈராம் சாலொமோனை நோக்கி, "என் சகோதரனே, நீர் எனக்குக் கொடுத்த இந்தப் பட்டணங்கள் என்ன பட்டணங்கள்?" என்று கேட்கிறார். ஈராம் அவைகளுக்கு இந்நாள்மட்டும் வழங்கி வருகிறபடி காபூல் நாடு என்று பேரிடுகிறார் *(1இராஜா 9:13).*

ஈராம் கலிலேயா நாட்டிலுள்ள இந்த இருபது பட்டணங்களையும் சாலொமோனிடத்தில் திரும்பக் கொடுத்துவிடுகிறார். சாலொமோன் அந்தப் பட்டணங்களை பழுதுபார்த்து, சீர்படுத்தி, அவற்றில் இஸ்ரவேல் புத்திரரை குடியேற்றுகிறார்.

"ஈராம் தனக்குக் கொடுத்திருந்த பட்டணங்களைச் சாலொமோன் கட்டி, அவைகளில் இஸ்ரவேல் புத்திரரைக் குடியேற்றினான்" *(2நாளா 8:2).*

கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். இஸ்ரவேல் தேசத்திலுள்ள பட்டணங்களும் மிகவும் பிரயோஜனமானவை. ஆனால் இந்தப் பட்டணங்கள் ஈராமுக்கு பிடிக்கவில்லை. தீரு தேசத்தார் வியாபாரிகள். அவர்கள் பெரிய மாளிகைகளில் வாசம்பண்ணுவார்கள். தீரு தேசத்தார் கடல்கடந்து பலதேசங்களுக்கும்போய் வியாபாரம்பண்ணுகிறவர்கள். அவர்களுக்கு கடற்கரையிலுள்ள துறைமுகப்பட்டணங்கள் மிகவும் பிரயோஜனமாயிருக்கும்.

சாலொமோன் ஈராமுக்கு கொடுத்த இருபது பட்டணங்களும் கலிலேயாவிலுள்ள விவசாய நிலத்திலுள்ளது. ஈராமுக்கு விவசாயம் பண்ண தெரியாது. ஆகையினால் ஈராம் இந்தப் பட்டணங்களில் பிரியப்படவில்லை. ஒரு சிலர் விவசாய தொழிலை விரும்புவார்கள். வேறு சிலரோ வியாபாரம்பண்ணுவார்கள். அவர்கள் தங்கள் தொழிலுக்கேற்ற ஸ்தலங்களை தங்களுக்கு சொந்தமாக்கிக்கொள்வார்கள். ஈராமின் பார்வைக்கு கலிலேயா நாட்டிலுள்ள இருபது பட்டணங்களும், "காபூல் நாடாக" தெரிகிறது.

சாலொமோன் தனக்கு கொடுத்த இருபது பட்டணங்களை ஈராம் விரும்பவில்லை. அதற்கு பதிலாக ஈராம் சாலொமோனை தன்னுடைய கடல் வணிகத்தில் பங்குதாரராக சேர்த்து கொள்ள விரும்புகிறார். ஈராம் சாலொமோன் ராஜாவுக்கு நூற்றிருபது தாலந்து பொன் அனுப்பியிருக்கிறார் (1இராஜா 9:14)

"ராஜாவாகிய சாலொமோன் ஏதோம் தேசத்தில் சிவந்த சமுத்திரக்கரையிலே ஏலோத்துக்குச் சமீபத்திலுள்ள எசியோன்கேபேரிலே கப்பல்களைச் செய்வித்தான். அந்தக் கப்பல்களில் ஈராம் சமுத்திர யாத்திரையில் பழகின கப்பலாட்களாகிய தன் வேலைக்காரரைச் சாலொமோனுடைய வேலைக்காரரோடேகூட அனுப்பினான். அவர்கள் ஓப்பீருக்குப்போய், அவ்விடத்திலிருந்து நானூற்று இருபது தாலந்து பொன்னை ராஜாவாகிய சாலொமோனிடத்தில் கொண்டுவந்தார்கள்" (1இராஜா 9:26-28).

சாலொமோனின் கட்டிடங்கள் 1இராஜா 9:15-19,24

1இராஜா 9:15. பிடித்த அமஞ்சி ஆட்டுகளைக்கொண்டு சாலொமோன் ராஜா தான் கர்த்தருடைய ஆலயத்தையும், தன் அரமனையையும், மில்லோவையும், எருசலேமின் மதிலையும், ஆத்சோரையும், மெகிதோவையும், கேசேரையும் கட்டினான்.

1இராஜா 9:16. கேசேரை ஏன் கட்டினான் என்றால், எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் புறப்பட்டுவந்து, அந்தக் கேசேர்பட்டணத்தைப் பிடித்து, அதை அக்கினியால் சுட்டெரித்து, அதிலே குடியிருந்த கானானியரைக் கொன்றுபோட்டு, அதைச் சாலொமோனின் மனைவியாகிய தன் குமாரத்திக்குச் சீதனமாகக் கொடுத்திருந்தான்.

1இராஜா 9:17. சாலொமோன் அந்தக் கேசேர்பட்டணத்தையும், கீழ்ப்பெத்தொரோனையும்,

1இராஜா 9:18. பாலாத்தையும், வனாந்தரவெளியிலுள்ள தத்மோரையும்,

1இராஜா 9:19. தனக்கு இருக்கிற ரஸ்துக்களை வைக்கும் சகல பட்டணங்களையும், இரதங்கள் இருக்கும் பட்டணங்களையும், குதிரை வீரர் இருக்கும் பட்டணங்களையும், எருசலேமிலும் லீபனோனிலும், தான் அரசாண்ட தேசமெங்கும் தனக்கு இஷ்டமானதையெல்லாம் கட்டினான்.

1இராஜா 9:24. பார்வோனின் குமாரத்தி, தாவீதின் நகரத்திலிருந்து சாலொமோன் தனக்குக் கட்டின தன் மாளிகையிலே குடிவந்தாள்; அப்பொழுது மில்லோவைக் கட்டினான்.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கும், தன்னுடைய அரமனையைக் கட்டுவதற்கும் அமஞ்சி ஆட்களைப் பயன்படுத்துகிறார். இஸ்ரவேல் ஜனத்தாரிடத்தில் வரிவசூல் பண்ணுகிறார். அவர்கள் ராஜாவுக்கு பணத்தை வரியாக செலுத்துகிறார்கள். சாலொமோன் அந்நிய தேசத்தாரை அமஞ்சி வேலை செய்ய அடிமைப்படுத்திக்கொள்கிறார்.

சாலொமோன் கட்டுகிற கட்டிடங்கள் எல்லாமே மிகவும் பெரியவை. பெரிய கட்டிடங்களாகயிருப்பதினால் அவற்றை கட்டுவதற்கு ஏராளமான வேலையாட்கள் தேவைப்படுகிறார்கள். பெரிய கட்டிடங்களை கட்ட பணமும் அதிகமாய் செலவாகும்.

சாலொமோன் கட்டிடங்களைக் கட்டுவதற்குத் தேவையான பணத்தையும், வேலையாட்களையும் சம்பாதிக்கிறார். மற்ற ராஜாக்கள் எதிரி தேசத்தோடு யுத்தம்பண்ணுவதற்கு பணத்தையும், யுத்தவீரர்களையும் சம்பாதிப்பார்கள். யுத்தம்பண்ணுகிறவர்கள் தங்களுடைய இரத்தத்தை சிந்தி, தங்கள் தேசத்தைப் பாதுகாப்பார்கள். சாலொமோனோ இஸ்ரவேல் தேசத்தாருடைய இரத்தத்தைப் பயன்படுத்தவில்லை. அவர்களுடைய பணத்தையும், உழைப்பையும் மாத்திரமே பயன்படுத்துகிறார்.

சாலொமோனுடைய ஞானம் தாவீதுக்கு ஏற்கெனவே தெரிந்திருக்கிறது. சாலொமோன் ஏராளமான கட்டிடங்களை நேர்த்தியாகக் கட்டுவார் என்பதை தாவீது முன்னறிந்திருக்கிறார். அவரிடத்தில் கட்டிடங்களைக் கட்டுவதற்கு ஏராளமான வேலையாட்கள் இருப்பார்கள் என்பது தாவீதுக்கு ஏற்கெனவே தெரிந்திருக்கிறது. சாலொமோன் ராஜாவுக்கு கீழே, ஏராளமான கைகளும், ஏராளமான வேலையாட்களும் வேலை செய்வார்கள் என்பதை தாவீது முன்னறிந்திருக்கிறார்.

"கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா" (சங் 127:1). தாவீது இந்த சங்கீத வாக்கியத்தை எழுதியபோது, சாலொமோனுடைய கட்டிட வேலையை மனதில் வைத்து எழுதியிருக்கவேண்டும்.

சாலொமோன் ஞானமாய்த் திட்டமிட்டு கட்டிடங்களைக் கட்டுகிறார். எந்தக் கட்டிடத்தை முதலாவது கட்டவேண்டும் என்றும், எந்தக் கட்டிடத்தை கடைசியில் கட்டிக்கொள்ளலாம் என்றும் சாலொமோன் ஏற்கெனவே திட்டமிடுகிறார். சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தை முதலாவதாக கட்டுகிறார். அதன்பின்பு அவர் தன்னுடைய அரமனையைக் கட்டுகிறார். கர்த்தர் சாலொமோனை ஆசீர்வதிக்கிறார். கர்த்தர் சாலொமோனுடைய கைகளின் பிரயாசங்களையும் ஆசீர்வதிக்கிறார். சாலொமோன் கர்த்தருடைய கிருபையினால் ஏராளமான கட்டிடங்களைக் கட்டுகிறார்.

சாலொமோன் ராஜா, தான் பிடித்த அமஞ்சி ஆட்டுகளைக்கொண்டு கர்த்தருடைய ஆலயத்தையும், தன் அரமனையையும், மில்லோவையும், எருசலேமின் மதிலையும், ஆத்சோரையும், மெகிதோவையும், கேசேரையும் கட்டுகிறார் (1இராஜா 9:15).

சாலொமோன் கேசேரைக் கட்டுவதற்கு ஒரு முக்கியமான நோக்கமுள்ளது. சாலொமோன் கேசேரை ஏன் கட்டினார் என்றால், எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் புறப்பட்டுவந்து, அந்தக் கேசேர்பட்டணத்தைப் பிடித்து, அதை அக்கினியால் சுட்டெரித்து, அதிலே குடியிருந்த கானானியரைக் கொன்றுபோட்டு, அதைச் சாலொமோனின் மனைவியாகிய தன் குமாரத்திக்குச் சீதனமாகக் கொடுத்திருந்தான் (1இராஜா 9:16). தன்னுடைய மனைவிக்கு சீதனமாகக் கொடுக்கப்பட்ட கேசேரை, சாலொமோன் நேர்த்தியாகக் கட்டுகிறார்.

சாலொமோன் அந்தக் கேசேர் பட்டணத்தையும், கீழ்ப்பெத்தொரோனையும், பாலாத்தையும், வனாந்தரவெளியிலுள்ள தத்மோரையும், தனக்கு இருக்கிற ரஸ்துக்களை வைக்கும் சகல பட்டணங்களையும், இரதங்கள் இருக்கும் பட்டணங்களையும், குதிரை வீரர் இருக்கும் பட்டணங்களையும், எருசலேமிலும் லீபனோனிலும், தான் அரசாண்ட தேசமெங்கும் தனக்கு இஷ்டமானதையெல்லாம் கட்டுகிறார் (1இராஜா 9:17-19).

பார்வோனின் குமாரத்தி, தாவீதின் நகரத்திலிருந்து சாலொமோன் தனக்குக் கட்டின மாளிகையிலே குடிவருகிறாள்; அப்பொழுது சாலொமோன் மில்லோவைக் கட்டுகிறார் *(1இராஜா 9:24)*.

சாலொமோன் முதலாவதாக கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறார். அதன்பின்பு தன்னுடைய சொந்த உபயோகத்திற்குப் பயன்படும் கட்டிடங்களைக் கட்டுகிறார். சாலொமோன் தன்னுடைய மனைவிக்கும் ஒரு கட்டிடத்தைக் கட்டுகிறார். இந்தக் கட்டிடம் கட்டப்பட்டு முடிந்தவுடன், சாலொமோனின் மனைவி, இந்த மாளிகைக்கு குடிவருகிறாள்.

மில்லோ என்பது பட்டணத்திலுள்ள ஒரு வீடு. இதன் பின்பு சாலொமோன் எருசலேமுக்கு அலங்கத்தைக் கட்டி அதைப் பலப்படுத்துகிறார். எருசலேம் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜதானி பட்டணமாயிருக்கிறது. சாலொமோன் எருசலேமைத் தவிர மேலும் பல பட்டணங்களையும் கட்டுகிறார். இவற்றிற்கு அலங்கங்கள் கட்டப்படவில்லை. மெகித்தோ, ஆத்சோ ஆகியவை அலங்கமில்லாத பட்டணங்களாகும்.

சாலொமோனின் வேலையாட்கள் 1இராஜா 9:20-23

1இராஜா 9:20. இஸ்ரவேல் புத்திரர் சங்காரம் பண்ணக்கூடாமல் மீந்திருந்த இஸ்ரவேல் புத்திரரின் ஜாதியல்லாத எமோரியர், ஏத்தியர், பெரிசியர், ஏவியர், எபூசியருமான சகல ஜனத்திலும்,

1இராஜா 9:21. அவர்களுக்குப் பிறகு தேசத்தில் மீந்திருந்த சகல ஜனங்களுடைய பிள்ளைகளையும், சாலொமோன் இந்நாள்வரைக்கும் நடக்கிறதுபோல், அமஞ்சிவேலை செய்ய அடிமைப்படுத்திக்கொண்டான்.

1இராஜா 9:22. இஸ்ரவேல் புத்திரரில் ஒருவரையும் சாலொமோன் அடிமைப்படுத்தவில்லை; அவர்கள் யுத்தமனுஷரும், அவனுக்குப் பணிவிடைக்காரரும், பிரபுக்களும், சேர்வைக்காரரும், இரதவீரரும், குதிரைவீரருமாயிருந்தார்கள்.

1இராஜா 9:23. ஐந்நூற்றைம்பதுபேர் சாலொமோனின் வேலையை விசாரித்து, வேலையாட்களைக் கண்காணிக்கிறதற்குத் தலைமையான விசாரிப்புக்காரராயிருந்தார்கள்.

சாலொமோன் தான் கட்டுகிற கட்டிட வேலைகளில் அமஞ்சி ஆட்களை பயன்படுத்துகிறார். இவர்கள் இஸ்ரவேல் தேசத்தில் வாசம்பண்ணுகிற அந்நிய ஜாதியார். இஸ்ரவேல் புத்திரர் சங்காரம் பண்ணக்கூடாமல் மீந்திருந்த இஸ்ரவேல் புத்திரரின் ஜாதியல்லாத எமோரியர், ஏத்தியர், பெரிசியர், ஏவியர், எபூசியருமான சகல ஜனத்தாரும் இஸ்ரவேல் தேசத்திலிருக்கிறார்கள். அவர்களுக்குப் பிறகு இஸ்ரவேல் தேசத்தில் மீந்திருந்த சகல ஜனங்களுடைய பிள்ளைகளையும், சாலொமோன் இந்நாள்வரைக்கும் நடக்கிறதுபோல, அமஞ்சிவேலை செய்ய அடிமைப்படுத்திக்கொள்கிறார் *(1இராஜா 9:20,21)*.

சாலொமோன் அந்நிய ஜாதியாரை மாத்திரம் அமஞ்சி வேலை செய்ய அடிமைப்படுத்துகிறார். சாலொமோன் இஸ்ரவேல் புத்திரரில் ஒருவரையும் அடிமைப்படுத்தவில்லை; அவர்கள் யுத்தமனுஷரும், அவருக்குப் பணிவிடைக்காரரும், பிரபுக்களும், சேர்வைக்காரரும், இரதவீரரும், குதிரைவீரருமாயிருக்கிறார்கள் *(1இராஜா 9:22)*.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விசேஷித்தவர்கள். கர்த்தர் அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்திருக்கிறார். கர்த்தர் விடுவித்த ஜனங்களை, சாலொமோன் அமஞ்சி வேலை செய்ய அடிமைப்படுத்தவில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பிள்ளைகள். அவர்களுக்கும் கர்த்தருக்கும் விசேஷித்த ஐக்கியம் இருக்கிறது.

சாலெலாமோனின் பக்தி
1இராஜா 9:25

1இராஜா 9:25. சாலொமோன் கர்த்தரின் ஆலயத்தை முடித்தபின்பு, அவருக்குக் கட்டின பலிபீடத்தின்மேல் வருஷத்தில் மூன்றுமுறை சர்வாங்க தகனபலிகளையும் சமாதான பலிகளையும் இட்டு, கர்த்தரின் சந்நிதியில் இருக்கிற பலிபீடத்தின்மேல் தூபங்காட்டிவந்தான்.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதோடு, அவர் கர்த்தரிடத்தில் பயபக்தியாயும் இருக்கிறார். சாலொமோன் வருஷத்தில் மூன்றுமுறை பலிசெலுத்துகிறார். இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொரு வருஷமும் மூன்று விசேஷித்த பண்டிகைகளை ஆசரிப்பது வழக்கம். அவையாவன : 1. பஸ்கா பண்டிகை 2. அறுப்பின் பண்டிகை அல்லது பெந்தெகொஸ்தே பண்டிகை 3. கூடாரங்களின் பண்டிகை.

சாலொமோன் கர்த்தரின் ஆலயத்தைக்கட்டி முடித்தபின்பு, அவருக்குக் கட்டின பலிபீடத்தின்மேல் வருஷத்தில் மூன்றுமுறை சர்வாங்க தகனபலிகளையும் சமாதான பலிகளையும் இட்டு, கர்த்தரின் சந்நிதியில் இருக்கிற பலிபீடத்தின்மேல் தூபங்காட்டிவருகிறார்.

சாலொமோன் கர்த்தருக்கு பலிபீடத்தையும் கட்டுகிறார் தான் கட்டின பலிபீடத்தில் சாலொமோன் கர்த்தருக்கு பலிகளையும் செலுத்துகிறார். சாலொமோன் பலிபீடத்தை பயன்படுத்துகிறார். ஒரு சிலர் பலிபீடத்தைக் கட்டுவார்கள். ஆனால் அதில் பலி செலுத்தமாட்டார்கள். இப்படிப்பட்டவர்கள் மற்றவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு உதவிசெய்ய முன்வருவார்கள். தங்களுடைய சொந்த ஆவிக்குரிய ஜீவியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், அதைப் புறக்கணித்துவிடுவார்கள்.

சாலொமோனோ கர்த்தருக்காக பலிபீடத்தையும் கட்டுகிறார். அந்தப் பலிபீடத்திலே கர்த்தருக்கு பலிகளையும் செலுத்துகிறார். சாலொமோன் கர்த்தரிடத்திலிருந்து தன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்கிறார். அவர் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவும், கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கவும் சாலொமோன் உதவிசெய்கிறார்.

சாலெலாமோனின் வியாபாரக் கப்பல்கள்
1இராஜா 9:26-28

1இராஜா 9:26. ராஜாவாகிய சாலொமோன் ஏதோம் தேசத்தில் சிவந்த சமுத்திரக்கரையிலே ஏலோத்துக்குச் சமீபத்திலுள்ள எசியோன்கேபேரிலே கப்பல்களைச் செய்வித்தான்.

1இராஜா 9:27. அந்தக் கப்பல்களில் ஈராம் சமுத்திர யாத்திரையில் பழகின கப்பலாட்களாகிய தன் வேலைக்காரரைச் சாலொமோனுடைய வேலைக்காரரோடேகூட அனுப்பினான்.

1இராஜா 9:28. அவர்கள் ஓப்பீருக்குப்போய், அவ்விடத்திலிருந்து நானூற்று இருபது தாலந்து பொன்னை ராஜாவாகிய சாலொமோனிடத்தில் கொண்டுவந்தார்கள்.

ராஜாவாகிய சாலொமோன் ஏதோம் தேசத்தில் சிவந்த சமுத்திரக்கரையிலே ஏலோத்துக்குச் சமீபத்திலுள்ள எசியோன்கேபேரிலே கப்பல்களைச் செய்விக்கிறார். இவையெல்லாம் வியாபாரக் கப்பல்கள். எசியோன்கேபேர் சிவந்த சமுத்திரத்திலுள்ள துறைமுகப்பட்டணம். இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் சுற்றி அலைந்தபோது, அவர்கள் எசியோன்கேபேரிலே பாளயமிறங்கினார்கள். "எப்ரோனாவிலிருந்து புறப்பட்டுப்போய், எசியோன் கேபேரிலே பாளயமிறங்கினார்கள்" (எண் 33:35).

சாலொமோனுடைய வியாபாரக்கப்பலில் வேலை செய்கிறவர்கள் ஓப்பீருக்குப்போய், அவ்விடத்திலிருந்து நானூற்று இருபது தாலந்து பொன்னை ராஜாவாகிய சாலொமோனிடத்தில் கொண்டுவருகிறார்கள் (1இராஜா 9:28). ஓப்பீர் என்பது இக்காலத்து இலங்கை அல்லது ஸ்ரீலங்காவைக் குறிக்கும் என்று சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். சாலொமோனுடைய காலத்தில் பொன் வணிகம் பிரதானமாக நடைபெறுகிறது.

சாலொமோனுடைய கப்பல்களில், ஈராமின் கப்பலாட்களும் உதவிக்கு போகிறார்கள். ஈராம் அந்தக் கப்பல்களில் சமுத்திர யாத்திரையில் பழகின கப்பலாட்களாகிய தன் வேலைக்காரரைச் சாலொமோனுடைய வேலைக்காரரோடேகூட அனுப்புகிறார். இதற்காக ஈராம் சாலொமோன் ராஜாவுக்கு நூற்றிருபது தாலந்து பொன் அனுப்பியிருந்தார் (1இராஜா 9:14).

சாலொமோன் இப்போது தனக்கு தனியாக கப்பல்களைக் கட்டுகிறார். இந்தக் கப்பல்களில் ஈராமின் கப்பலாட்கள் கூடப்போகவில்லை. சாலொமோன் சொந்தமாக வியாபாரம்பண்ணுகிறார். சாலொமோன் ஈராமோடு சேர்ந்து கூட்டாக வியாபாரம் பண்ணாவிட்டாலும், தன்னுடைய வேலைக்காரரோடு, ஈராமின் கப்பலாட்களையும், தன்னுடைய கப்பல்களில் அனுப்புகிறார். தீருவின் கப்பலாட்களுக்கு சாலொமோன் தனியாக சம்பளம் கொடுத்து, அவர்களை வேலைக்கு அமர்த்திக்கொள்கிறார். ஈராமின் கப்பலாட்களுக்கு சமுத்திர யாத்திரையில் பழக்கமுண்டு.

ஒரு தேசம் மற்றொரு தேசத்தை சார்ந்திருக்கிறது. ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தாருக்கு உதவிசெய்யவேண்டும். தங்களுடைய தேசத்திலுள்ள பொருட்களை விற்கவேண்டும். மற்ற தேசத்திலுள்ள பொருட்களை வாங்கவேண்டும். அப்போதுதான் எல்லா தேசத்தாருக்கும் செழிப்பு வரும். விசுவாசிகளாகிய நாமும் ஒருவருக்கொருவர் உதவியாயிருக்க வேண்டும். விசுவாசிகளெல்லோருமே, ஒரே சரீரமாகிய சபையில், வெவ்வேறு அவயவங்களாயிருக்கிறோம்.

சாலொமோனுடைய வேலைக்காரர் அவருக்கு நானூற்று இருபது தாலந்து பொன்னைக் கொண்டு வருகிறார்கள். சாலொமோன் வியாபாரம்பண்ணி இந்தப் பொன்னை சம்பாதிக்கிறார். சாலொமோனுடைய தகப்பனாராகிய தாவீதோ, தேசங்கள்மீதும் ஜாதிகள்மீதும் யுத்தம்பண்ணி, இதைவிட அதிகமான பொன்னை, கொள்ளைப்பொருளாய்க் கொண்டு வந்தார். சாலொமோன் சம்பாதித்தது நானூற்று இருபது தாலந்து பொன். தாவீது சம்பாதித்ததோ ஒருலட்சம் தாலந்து பொன்.

"இதோ, நான் என் சிறுமையிலே கர்த்தருடைய ஆலயத்திற்காக ஒரு லட்சம் தாலந்து பொன்னையும், பத்துலட்சம் தாலந்து வெள்ளியையும், நிறுத்து முடியாத திரளான வெண்கலத்தையும் இரும்பையும் சவதரித்தும், மரங்களையும் கற்களையும் சவதரித்தும் வைத்தேன்; நீ இன்னும் அவைகளுக்கு அதிகமாய்ச் சவதரிப்பாய்" (1நாளா 22:14).

"அறைகளின் சுவர்களை மூடுவதற்காகவும், பொன்வேலைக்குப் பொன்னும், வெள்ளிவேலைக்கு வெள்ளியும் உண்டாயிருக்கிறதற்காகவும், கம்மாளர் செய்யும் வேலை அனைத்திற்காகவும், ஓப்பீரின் தங்கமாகிய மூவாயிரம் தாலந்து தங்கத்தையும், சுத்த வெள்ளியாகிய ஏழாயிரம் தாலந்து வெள்ளியையும் கொடுக்கிறேன்" (1நாளா 29:4).

சாலொமோன் கப்பல்களை அனுப்பி வியாபாரம்பண்ணினாலும், பொன்னை சம்பாதித்தாலும், அவர் இதைவிட பெரிய ஊழியத்தையும் செய்கிறார். கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற விசேஷித்த ஞானத்தை மற்றவர்களுக்கு பகிர்ந்துகொடுக்கிறார்.

"ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள். அதின் வர்த்தகம் வெள்ளி வர்த்தகத்திலும், அதின் ஆதாயம் பசும்பொன்னிலும் உத்தமமானது" (நீதி 3:13,14).

10 அதிகாரம்

சாலொமோனுக்கு உண்டாயிருந்த கீர்த்தி அதிகமாயிருக்கிறது. சாலொமோனுடைய வர்த்தமானங்கள் யாவும், அவருடைய கீர்த்தியை இன்னும் அதிகமாய் உயர்த்துகிறது. சாலொமோன் பிறருக்கு உதவி செய்ததாக ஒரு சம்பவம்கூட எழுதப்படவில்லை. ஆனாலும் அவர் தரித்திரருக்கு இரக்கம் காண்பித்திருப்பார். சாலொமோனுடைய பந்தியில் நேர்த்தியான போஜனம் இருக்கிறது. அவர் இஸ்ரவேல் தேசத்தில் ஒருவரையும் பசியாகவும் பட்டினியாகவும் கைவிட்டிருக்கமாட்டார்.

சாலொமோன் கட்டின தேவாலயத்திற்கு ஒப்பாக, வேறு யாரும் ஒரு கட்டிடமும் கட்டவில்லை. கர்த்தருடைய ஆலயம் உன்னதமாயிருக்கிறது. சாலொமோன் பாடசாலைகளையோ, கல்லூரிகளையோ கட்டவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. சாலொமோனிடத்தில் விசேஷித்த ஞானம் இருக்கிறது. சாலொமோன் தங்கியிருக்கும் அரமனையே, மிகப்பெரிய பாடசாலையாகவும், பல்கலைக் கழகமாகவும் இருக்கிறது.

சாலொமோனுடைய விசேஷித்த ஞானத்தைக் குறித்து சேபாவின் ராஜஸ்திரீ கேள்விப்பட்டு சாலொமோன் ராஜாவினிடத்தில் வருகிறாள். அவள் எல்லாவற்றையும் குறித்து சாலொமோனிடத்தில் சம்பாஷிக்கிறாள். சேபாவின் ராஜஸ்திரீக்கு சாலொமோனுடைய ஞானத்தில் பூரண திருப்தி உண்டாயிற்று. அவள் சாலொமோன் ராஜாவுக்கு வெகுமதிகளைக் கொடுக்கிறாள். சாலொமோன் ராஜாவும் சேபாவின் ராஜஸ்திரீக்கு வெகுமதிகளைக் கொடுக்கிறார் (1இராஜா 10:1-13).

சாலொமோனின் இருதயத்திலே தேவன் அருளிய ஞானத்தைக் கேட்கிறதற்காக, சகல தேசத்தாரும் அவருடைய முக தரிசனத்தைத் தேடுகிறார்கள் (1இராஜா 10:24).

சாலொமோனுக்கு வியாபாரத்தின் மூலமாக ஒவ்வொரு வருஷமும் ஏராளமான பொன் அவருடைய பொக்கிஷ சாலைக்கு வருகிறது (1இராஜா 10:14,15). இவை தவிர தர்ஷீசின் கப்பல்கள் மூன்று வருஷத்திற்கு ஒரு தரம் சாலொமோனுடைய அரமனைக்கு பொன்னையும், மற்ற பொருட்களையும் கொண்டு வரும் (1இராஜா 10:22). சாலொமோனுடைய முகதரிசனத்தைத் தேடிவருகிறவர்கள், வருஷாவருஷம், காணிக்கையாக பொன்னையும், வெள்ளியையும் மற்றும் அநேக வெகுமதிகளையும் கொண்டு வருகிறார்கள் (1இராஜா 10:25).

சாலொமோன் ராஜா பொன்தகட்டால் பரிசைகளையும், கேடகங்களையும் செய்கிறார் (1இராஜா 10:16,17). அவர் பானபாத்திரங்களையும், லீபனோன் வனம் என்னும் மாளிகையின் பணிமுட்டுகளையும் பொன்னால் செய்கிறார் (1இராஜா 10:21). சாலொமோன் தந்தத்தினால் ஒரு பெரிய சிங்காசனத்தை செய்கிறார் (1இராஜா 10:18-20).

சாலொமோன் சேர்த்த இரதங்களும் குதிரைவீரரும் (1இராஜா 10:26). சாலொமோன் எகிப்து தேசத்திலிருந்து தனக்கு குதிரைகளையும், புடவைகளையும், இரதங்களையும் வரவழைக்கிறார் (1இராஜா 10:28,29).

சாலொமோன் ராஜா எருசலேமிலே வெள்ளியையும் கேதுரு மரங்களையும் அதிகமாக்குகிறார் (1இராஜா 10:27). சாலொமோனிடத்தில் ஏராளமான ஐசுவரியமும், அதிகமான ஞானமும் இருக்கிறது. ஆகையினால், பூமியின் சகல ராஜாக்களைப்பார்க்கிலும், ராஜாவாகிய சாலொமோன் ஐசுவரியத்திலும் ஞானத்திலும் சிறந்தவராயிருக்கிறார் (1இராஜா 10:23).

சாலொமோன் ராஜா சகல ராஜாக்களைப் பார்க்கிலும் சிறந்தவராயிருந்தாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ராஜாதி ராஜாவாகவும், சாலொமோனிலும் பெரியவராகவும் இருக்கிறார்.

சேபாவின் ராஜஸ்திரீ
1இராஜா 10:1-13

1இராஜா 10:1. கர்த்தருடைய நாமத்தைக்குறித்துச் சாலொமோனுக்கு உண்டாயிருந்த கீர்த்தி சேபாவின் ராஜஸ்திரீக்குக் கேள்வியானபோது, அவள் விடுகதைகளினால் அவனைச் சோதிக்கிறதற்காக,

1இராஜா 10:2. மிகுந்த பரிவாரத்தோடும், கந்தவர்க்கங்களையும், மிகுதியான பொன்னையும் இரத்தினங்களையும் சுமக்கிற ஒட்டகங்களோடும், எருசலேமுக்கு வந்தாள்; அவள் சாலொமோனிடத்தில் வந்தபோது, தன் மனதில் இருந்த எல்லாவற்றையுங் குறித்து அவனிடத்தில் சம்பாஷித்தாள்.

1இராஜா 10:3. அப்பொழுது சாலொமோன் அவள் கேட்டவைகளை யெல்லாம் விடுவித்தான், அவளுக்கு விடுவிக்கக்கூடாதபடிக்கு, ஒன்றாகிலும் ராஜாவுக்கு மறைபொருளாயிருக்க வில்லை.

1இராஜா 10:4. சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுடைய சகல ஞானத்தையும், அவன் கட்டின அரமனையையும்,

1இராஜா 10:5. அவன் பந்தியின் போஜனபதார்த்தங்களையும், அவன் ஊழியக்காரரின் வீடுகளையும், அவன் உத்தியோகஸ்தரின் வரிசையையும், அவர்கள் வஸ்திரங்களையும், அவனுடைய பானபாத்திரக்காரரையும், அவன் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கும் நடைமண்டபத்தையும் கண்டபோது அவள் ஆச்சரியத்தால் பிரமைகொண்டு,

1இராஜா 10:6. ராஜாவை நோக்கி: உம்முடைய வர்த்தமானங்களையும் உம்முடைய ஞானத்தையும் குறித்து நான் என் தேசத்தில் கேட்ட செய்தி மெய்யாயிற்று.

1இராஜா 10:7. நான் வந்து அதை என் கண்களால் காணுமட்டும் அந்த வார்த்தைகளை நான் நம்பவில்லை; இவைகளில் பாதியாகிலும் எனக்கு அறிவிக்கப்படவில்லை என்று காண்கிறேன். நான் கேள்விப்பட்ட பிரஸ்தாபத்தைப்பார்க்கிலும், உம்முடைய ஞானமும் செல்வமும் அதிகமாயிருக்கிறது.

1இராஜா 10:8. உம்முடைய ஜனங்கள் பாக்கியவான்கள்; எப்போதும் உமக்கு முன்பாக நின்று, உம்முடைய ஞானத்தைக் கேட்கிற உம்முடைய ஊழியக்காரரும் பாக்கியவான்கள்.

1இராஜா 10:9. உம்மை இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் வைக்க, உன்மேல் பிரியங்கொண்ட உம்முடைய தேவனாகிய கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்படுவாராக: கர்த்தர் இஸ்ரவேலை என்றைக்கும் சிநேகிக்கிறபடியினால், நியாயமும் நீதியும் செய்கிறதற்கு உம்மை ராஜாவாக ஏற்படுத்தினார் என்றாள்.

1இராஜா 10:10. அவள் ராஜாவுக்கு நூற்றிருபது தாலந்து பொன்னையும், மிகுதியான கந்தவர்க்கங்களையும், இரத்தினங்களையும் கொடுத்தாள்; சேபாவின் ராஜஸ்திரீ ராஜாவாகிய சாலொமோனுக்குக் கொடுத்த அவ்வளவு கந்தவர்க்கங்கள் பிற்பாடு ஒருக்காலும் வரவில்லை.

1இராஜா 10:11. ஓப்பீரிலிருந்து பொன்னைக் கொண்டுவருகிற ஈராமின் கப்பல்களும், ஓப்பீரிலிருந்து மிகுந்த வாசனைமரங்களையும் இரத்தினங்களையும் கொண்டுவந்தது.

1இராஜா 10:12. அந்த வாசனைமரங்களால் ராஜா கர்த்தருடைய ஆலயத்திற்கும் ராஜ அரமனைக்கும் ஊன்றுகால்களையும், சங்கீதக்காரருக்குச் சுரமண்டலங்களையும் தம்புருகளையும் உண்டாக்கினான்; அப்படிப்பட்ட வாசனைமரங்கள் பிற்பாடு வந்ததுமில்லை, இந்நாள்வரைக்கும் காணப்படவுமில்லை.

1இராஜா 10:13. ராஜாவாகிய சாலொமோன்தானே சந்தோஷமாய்ச் சேபாவின் ராஜஸ்திரீக்கு வெகுமதிகள் கொடுத்ததும் அல்லாமல், அவள் விருப்பப்பட்டுக் கேட்டது எல்லாவற்றையும் அவளுக்குக் கொடுத்தான்; பின்பு அவள் தன் பரிவாரத்தோடே தன் தேசத்திற்குத் திரும்பிப் போனாள்.

கர்த்தருடைய நாமத்தைக்குறித்துச் சாலொமோனுக்கு உண்டாயிருந்த கீர்த்தியைக்குறித்து சேபாவின் ராஜஸ்திரீ கேள்விப்படுகிறாள். சாலொமோன் தன்னுடைய மகிமையிலும் மேன்மையிலும் உயர்ந்தவராயிருக்கிறார். அவரிடத்தில் திரளான ஐசுவரியம் இருக்கிறது. சாலொமோன் வருஷத்திற்கு மூன்று தரம் கர்த்தருடைய பலிபீடத்திலே பலிகளை செலுத்துகிறார். சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனின் பெயர் பிரஸ்தாபத்தையெல்லாம் கேள்விப்படுகிறாள்.

சேபா கானான் தேசத்திற்கு தென்திசையிலுள்ளது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இவளை "தென்தேசத்து ராஜஸ்திரீ" என்று சொல்லுகிறார். சேபா தேசம் ஆப்பிரிக்காவிலுள்ளது என்று சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். எத்தியோப்பியாவிலுள்ள கிறிஸ்தவர்கள், சேபாவின் ராஜஸ்திரீயைப்பற்றிச் சொல்லும்போது, அவள் தங்கள் தேசத்தைச் சேர்ந்தவள் என்று நிச்சயத்தோடு சொல்லுகிறார்கள்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற, "எத்தியோப்பியான் ராஜஸ்திரீயாகிய காந்தாகே" என்பவள், சேபாவின் ராஜஸ்திரீயினுடைய ராஜவம்சத்தை சேர்ந்தவளாயிருக்கவேண்டும். இவள் அரபு தேசத்தின் தென்பகுதியிலிருந்து வந்தவள் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள்.

"அந்தப்படி அவன் எழுந்துபோனான். அப்பொழுது எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும் அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனுமாயிருந்த எத்தியோப்பியனாகிய ஒருவன் பணிந்துகொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்து" (அப் 8:27).

சேபாவின் ராஜஸ்திரீ எருசலேமுக்கு வருகிறாள். அவள் சாலொமோன் ராஜாவோடு வியாபாரம்பண்ணுவதற்காகவோ அல்லது இராணுவ ஒப்பந்தம் பண்ணுவதற்காகவோ வரவில்லை. அவள் கர்த்தருடைய நாமத்தைக் குறித்து சாலொமோனுக்கு உண்டாயிருந்த கீர்த்தியைக் கேள்விப்பட்டிருக்கிறாள். சேபாவின் ராஜஸ்திரீ தன்னுடைய விடுகதைகளினால் சாலொமோனை சோதிக்கிறதற்காக, சாலொமோனிடத்தில் வருகிறாள்.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுடைய உபதேசத்தைக் கேட்பதற்காக வந்திருக்கிறாள். அவள் சாலொமோனின் ஞானத்தைக் குறித்தும், கீர்த்தியைக் குறித்தும் ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கிறாள். சாலொமோனோடு சம்பாஷித்து தன்னுடைய ஞானத்தை விருத்திபண்ணுவதற்காக சேபாவின் ராஜஸ்திரீ அவரிடத்தில் வந்திருக்கிறாள்.

"தென்தேசத்து ராஜஸ்திரீ பூமியின் எல்லைகளிலிருந்து சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்க வந்தாள். இதோ, சாலொமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார். ஆதலால் நியாயத்தீர்ப்புநாளிலே அந்த ராஜஸ்திரீ இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள்மேல் குற்றஞ்சுமத்துவாள்" (மத் 12:42).

சாலொமோன் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருக்கிறார். அவர் தன்னுடைய ராஜாங்க காரியங்கள் அனைத்தையும் சீராகவும், சிறப்பாகவும், நேர்த்தியாகவும் நிர்வாகம்பண்ணுகிறார். சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுடைய ஆலோசனைகளைக் கேட்டு, தன்னுடைய ராஜாங்க திறமையை வளர்த்துக்கொள்வதற்காக சாலொமோனிடத்தில் வந்திருக்கிறாள். விசேஷமாக தேவனுடைய சத்தியங்களைக் குறித்து சாலொமோனிடத்தில் விளக்கம் பெறுவதற்காக அவள் இங்கே வந்திருக்கிறாள்.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனைப் பார்ப்பதற்கு வெறுங்கையோடு வராமல், மிகுந்த பரிவாரத்தோடும், கந்தவர்க்கங்களையும், மிகுதியான பொன்னையும், இரத்தினங்களையும் சுமக்கிற ஒட்டகங்களோடும் எருசலேமுக்கு வருகிறாள். சாலொமோனிடத்தில் ஞானத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அவள் வந்திருந்தாலும், ஞானத்தை இலவசமாகப் பெற்றுக்கொள்ளாமல், அதற்குரிய கிரயத்தை கொண்டு வந்திருக்கிறாள்.

சாலொமோனிடத்திலும் ஏராளமான பொக்கிஷம் இருக்கிறது. அவர் தங்கத்திற்காகவோ, விலையேறப்பெற்ற கற்களுக்காகவோ தன்னுடைய ஞானத்தை விற்கவில்லை. சாலொமோனிடத்திலுள்ள ஞானம், கர்த்தர் அவருக்கு இலவசமாகக் கொடுத்தது. தான் கர்த்தரிடத்திலிருந்து இலவசமாகப் பெற்றுக்கொண்ட ஞானத்தை, சாலொமோன் சேபாவின் ராஜஸ்திரீக்கு இலவசமாகக் கொடுக்கிறார்.

சேபாவின் ராஜஸ்திரீ தனக்கு காணிக்கையாக கொண்டு வந்த கந்தவர்க்கங்களையும், பொன்னையும், இரத்தினங்களையும் சாலொமோன் ஏற்றுக்கொள்கிறார். அதே வேளையில், ராஜாவாகிய சாலொமோன்தானே சந்தோஷமாய்ச் சேபாவின் ராஜஸ்திரீக்கு வெகுமதிகள் கொடுத்ததும் அல்லாமல், அவள் விருப்பப்பட்டுக் கேட்டது எல்லாவற்றையும் அவளுக்குக் கொடுக்கிறார் (1இராஜா 10:13).

சேபாவின் ராஜாஸ்திரீ, ஒரு ஸ்திரீயாகயிருப்பதினால் சாலொமோன் அவளை தாழ்வாக நினைத்து ஒதுக்கி தள்ளிவிடவில்லை. சாலொமோன் தன்னுடைய அரமனையில் அவளை வரவேற்கிறார். அவள் சாலொமோனிடத்தில் வந்தபோது, தன் மனதில் இருந்த எல்லாவற்றையுங் குறித்து சாலொமோன் ராஜாவினிடத்தில் சம்பாஷிக்கிறாள். அப்பொழுது சாலொமோன் அவள் கேட்டவைகளையெல்லாம் விடுவிக்கிறார் (1இராஜா 10:2,3).

சேபாவின் ராஜஸ்திரீ விடுகதை களினால்சாலொமோனை சோதிக்கிறதற்காக அவரிடத்தில் வந்திருக்கிறாள் (1இராஜா 10:1). அவளுக்கு விடுவிக்கக்கூடாதபடிக்கு, ஒன்றாகிலும் சாலொமோன் ராஜாவுக்கு மறைபொருளாயிருக்கவில்லை. ராஜஸ்திரீ அரசியலைப்பற்றிக் கேட்டாலும், தெய்வீக சத்தியங்களைப்பற்றிக் கேட்டாலும், இயற்கையான காரியங்களைப்பற்றிக் கேட்டாலும், நீதிநெறி சம்பந்தமான காரியங்களைப்பற்றிக் கேட்டாலும் சாலொமோன் அவள் கேட்டவைகளை யெல்லாம் விடுவிக்கிறார்.

சாலொமோன் சேபாவின் ராஜஸ்திரீக்கு சகல காரியங்களையும் உபதேசம்பண்ணினாலும், இஸ்ரவேலின் மெய்யான தேவனைப்பற்றியும், தேவனுடைய நியாயப்பிரமாணத்தைப்பற்றியும், தேவனை உண்மையாய் ஆராதிப்பதுபற்றியும், சாலொமோன் அவளுக்கு தெளிவாக உபதேசம்பண்ணுகிறார்.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுடைய வர்த்தமானங்களையும், அவருடைய ஞானத்தையும் குறித்து, தன்னுடைய தேசத்தில் ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கிறாள். ராஜஸ்திரீ தன்னுடைய செவிகளால் கேள்விப்பட்டதை, இப்போது தன்னுடைய கண்களால் காண்கிறாள்.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுடைய சகல ஞானத்தையும், அவர் கட்டின அரமனையையும், அவர் பந்தியின் போஜனபதார்த்தங்களையும், அவர் ஊழியக்காரரின் வீடுகளையும், அவர் உத்தியோகஸ்தரின் வரிசையையும், அவர்கள் வஸ்திரங்களையும், அவருடைய பானபாத்திரக்காரரையும், அவர் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கும் நடைமண்டபத்தையும் கண்டபோது அவள் ஆச்சரியத்தால் பிரமைகொள்கிறாள் (1இராஜா 10:4,5).

சாலொமோனுடைய சகல வர்த்தமானங்களைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றில் சாலொமோனுடைய ஞானமே இங்கு முதலாவதாக சொல்லப்பட்டிருக்கிறது. அதன் பின்பு கடைசியாக, சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசிக்கும் நடை மண்டபத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. கடைசியாக சொல்லப்பட்டிருக்கிற காரியமே, சாலொமோனுடைய வர்த்தமானக ளெல்லாவற்றிலும், மிகவும் உன்னதமான தாயிருக்கிறது. ஆவிக்குரிய காரியமே, எல்லா காரியங்களிலும் மேன்மையானது.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுடைய வர்த்தமானங்களைப்பற்றி தன் தேசத்தில் ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கிறாள். இப்போது தான் ஏற்கெனவே கேள்விப்பட்டதை, தன்னுடைய கண்களால் காண்கிறாள். அவளுடைய மனதில் மிகுந்த ஆச்சரியமுண்டாயிற்று. அவளுடைய இருதயத்தில் பிரமை உண்டாயிற்று.

சேபாவின் ராஜஸ்திரீ, சாலொமோன் ராஜாவை நோக்கி, "உம்முடைய வர்த்தமானங்களையும் உம்முடைய ஞானத்தையும் குறித்து நான் என் தேசத்தில் கேட்ட செய்தி மெய்யாயிற்று. நான் வந்து அதை என் கண்களால் காணுமட்டும் அந்த வார்த்தைகளை நான் நம்பவில்லை; இவைகளில் பாதியாகிலும் எனக்கு அறிவிக்கப்படவில்லை என்று காண்கிறேன். நான் கேள்விப்பட்ட பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும், உம்முடைய ஞானமும் செல்வமும் அதிகமாயிருக்கிறது" (1இராஜா 10:6,7) என்று சொல்லுகிறாள்.

சேபாவின் ராஜஸ்திரீ தூரதேசத்திலிருந்து எருசலேமுக்கு வந்திருக்கிறாள். அவள் நீண்ட தூரம் பிரயாணம்பண்ணியதற்காக வருத்தப்படவில்லை. தன்னுடைய பிரயாணம் வீணாய்ப்போயிற்று என்று நினைத்து வேதனைப்படவில்லை. தான் மதியீனமாக இந்தப் பிரயாணத்தை மேற்கொண்டதாக நினைத்து அவள் கலக்கமடையவில்லை. சாலொமோனுடைய வர்த்தமானங்களைப் பார்ப்பதற்கு தனக்கு கிடைத்த வாய்ப்புக்காக சேபாவின் ராஜஸ்திரீ மிகவும் சந்தோஷப்படுகிறாள்.

ராஜஸ்திரீ ஏற்கெனவே சாலொமோனுடைய வர்த்தமானங்களையும், அவருடைய ஞானத்தையும் குறித்து தன்னுடைய தேசத்தில் கேள்விப்பட்டிருக்கிறாள். ஆனால் இவற்றை ராஜஸ்திரீக்கு அறிவித்தவர்கள், சாலொமோனுடைய வர்த்தமானங்களிலும், அவருடைய ஞானத்திலும் பாதியைக்கூட அவளுக்கு அறிவிக்கவில்லை. சேபாவின் ராஜஸ்திரீ எருசலேமுக்கு வந்து, சாலொமோனுடைய வர்த்தமானங்களை நேரிலே பார்த்தபோதுதான், அவளுடைய மனதிலே மீதியும் அறிவிக்கப்படுகிறது.

சேபாவின் ராஜஸ்திரீ, சாலொமோனின் வர்த்தமானங்களையெல்லாம் பார்த்து, "நான் கேள்விப்பட்ட பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும், உம்முடைய ஞானமும் செல்வமும் அதிகமாயிருக்கிறது" என்று சொல்லுகிறாள்.

விசுவாசிகளாகிய நாம் கர்த்தருடைய கிருபையினால் அவரோடு ஐக்கியமாயிருக்கிறோம். கர்த்தரைப்பற்றிய சத்தியங்கள் நமக்கு ஓரளவு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நாம் கர்த்தரைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டிய சத்தியங்கள் இன்னும் ஏராளமாயிருக்கிறது. நாம் ஏற்கெனவே தெரிந்துகொண்டதைவிட, இன்னும் தெரிந்துகொள்ளவேண்டியது மிகவும் அதிகம்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் நமக்கு இயேசுகிறிஸ்துவின் மகிமையைப்பற்றி எவ்வளவுதான் உபதேசம்பண்ணினாலும், அவர்களால் கிறிஸ்துவின் மகிமையை நமக்கு பூரணமாக சொல்ல முடியாது. நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முகமுகமாய்த் தரிசிக்கும்போது, நாம் கிறிஸ்துவின் பூரண மகிமையைக் காண்போம்.

"எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை" (1கொரி 2:9).

சாலொமோனுடைய அரமனையிலே ஏராளமான ஊழியக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லோரும் பாக்கியவான்கள் என்று சேபாவின் ராஜஸ்திரீ அவர்களை வாழ்த்துகிறாள். சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனை நோக்கி, "உம்முடைய ஜனங்கள் பாக்கியவான்கள்; எப்போதும் உமக்கு முன்பாக நின்று, உம்முடைய ஞானத்தைக் கேட்கிற உம்முடைய ஊழியக்காரரும் பாக்கியவான்கள்" (1இராஜா 10:8) என்று சொல்லுகிறாள். அவர்களெல்லோரும் சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்டு, தங்களுடைய ஞானத்தை விருத்திபண்ணிக்கொள்வார்கள்.

சாலொமோனிடத்தில் விசேஷித்த ஞானம் இருந்தாலும், இந்த ஞானம் அவருடைய சுயஞானமல்ல என்பதையும், இது கர்த்தர் அவருக்கு கொடுத்திருக்கிற விசேஷித்த ஞானம் என்பதையும் சேபாவின் ராஜஸ்திரீ அறிந்துகொள்கிறாள். அதற்காக அவள் கர்த்தரை ஸ்தோத்திரம் பண்ணுகிறாள்.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனை நோக்கி, "உம்மை இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் வைக்க, உன்மேல் பிரியங்கொண்ட உம்முடைய தேவனாகிய கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்படுவாராக: கர்த்தர் இஸ்ரவேலை என்றைக்கும் சிநேகிக்கிறபடியினால், நியாயமும் நீதியும் செய்கிறதற்கு உம்மை ராஜாவாக ஏற்படுத்தினார்" (1இராஜா 10:9) என்று சொல்லுகிறாள்.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோன் ராஜாவை விடுகதைகளினால் சோதிக்க வந்தாள். சாலொமோன் ராஜாவும் அவள் தன்னிடத்தில் கேட்டவைகளையெல்லாம் விடுவிக்கிறார். ராஜஸ்திரீ இஸ்ரவேல் ஜனத்தாரையும், சாலொமோனுடைய ஊழியக்காரரையும் வாழ்த்துகிறாள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைத் துதிக்கிறாள். இப்போது அவள் எருசலேமிலிருந்து தன்னுடைய சொந்த தேசத்திற்கு திரும்பிப்போக ஆயத்தமாகிறாள்.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனைப் பார்க்க எருசலேமுக்கு வந்தபோது, மிகுந்த பரிவாரத்தோடும், கந்தவர்க்கங்களையும், மிகுதியான பொன்னையும் இரத்தினங்களையும் சுமக்கிற ஒட்டகங்களோடும் வந்தாள். ராஜஸ்திரீ தான்கொண்டு வந்த பொருட்களை ராஜாவுக்கு வெகுமதியாகக் கொடுக்கிறாள்.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோன் ராஜாவுக்கு நூற்றிருபது தாலந்து பொன்னையும், மிகுதியான கந்தவர்க்கங்களையும், இரத்தினங்களையும் கொடுக்கிறாள்; சேபாவின் ராஜஸ்திரீ ராஜாவாகிய சாலொமோனுக்குக்கொடுத்த அவ்வளவு கந்தவர்க்கங்கள் பிற்பாடு ஒருக்காலும் வரவில்லை (1இராஜா 10:10).

கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் பொன்னையும் கந்தவர்க்கங்களையும் இயேசுகிறிஸ்துவுக்கு காணிக்கையாக கொண்டு வந்தார்கள்.

"அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மாரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்" (மத் 2:11).

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனிடத்திலிருந்து தான் பெற்றுக்கொண்ட ஞானத்திற்கு, அவருக்கு கிரயம் செலுத்துகிறாள். அவள் எதையும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளவில்லை. குறைந்த செலவில் அதிக லாபம் பெறவேண்டும் என்றும் அவள் பேராசைப்படவில்லை. ராஜஸ்திரீ சாலொமோனுக்கு பொன்னையும் கந்தவர்க்கங்களையும் இரத்தினங்களையும் காணிக்கையாகக் கொடுக்கிறாள்.

பரிசுத்த ஆவியானவர் நமக்கு கர்த்தரைப்பற்றிய சகல சத்தியங்களையும் போதிக்கிறார். நாம் கர்த்தரைப்பற்றிய உபதேசங்களை கிரயம் செலுத்தி பெற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தருக்கு நம்முடைய இருதயங்களையே காணிக்கையாய்க் கொடுக்கவேண்டும். பொன்னையும் கந்தவர்க்கங்களையும், இரத்தினங்களையும்விட, நம்முடைய சுத்தமான இருதயமே கர்த்தர் விரும்புகிற காணிக்கையாயிருக்கிறது.

சாலொமோன் ராஜா சேபாவின் ராஜஸ்திரீயை அவளுடைய தேசத்திற்கு திருப்பி அனுப்பும்போது, அவளை வெறுங்கையோடு அனுப்பவில்லை. அவளுக்கு ஏராளமான வெகுமதிகளைக் கொடுத்து, அவளுடைய தேசத்திற்கு திருப்பி அனுப்புகிறார்.

ராஜாவாகிய சாலொமோன்தானே சந்தோஷமாய்ச் சேபாவின் ராஜஸ்திரீக்கு வெகுமதிகள் கொடுத்ததும் அல்லாமல், அவள் விருப்பப்பட்டுக் கேட்டது எல்லாவற்றையும் அவளுக்குக் கொடுக்கிறார்; பின்பு அவள் தன் பரிவாரத்தோடே தன் தேசத்திற்குத் திரும்பிப் போகிறாள் (1இராஜா 10:13).

இந்த வசனப்பகுதியில் வாசனை மரங்களைப்பற்றியும் விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. சேபாவின் ராஜஸ்திரீ இந்த வாசனை மரங்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டிருக்கவேண்டும். ஓப்பிரிலிருந்து பொன்னைக் கொண்டுவருகிற ஈராமின் கப்பல்களும், ஓப்பீரிலிருந்து மிகுந்த வாசனைமரங்களையும் இரத்தினங்களையும் கொண்டுவருகிறது (1இராஜா 10:11).

சாலொமோன் ராஜா, அந்த வாசனைமரங்களால் கர்த்தருடைய ஆலயத்திற்கும் ராஜ அரமனைக்கும் ஊன்றுகால்களையும், சங்கீதக்காரருக்குச் சுரமண்டலங்களையும் தம்புருகளையும் உண்டாக்குகிறார். அப்படிப்பட்ட வாசனைமரங்கள் பிற்பாடு வந்ததுமில்லை, இந்நாள்வரைக்கும் காணப்படவுமில்லை (1இராஜா 10:12).

சாலொமோனின் ஐசுவரியம் 1இராஜா 10:14-29

1இராஜா 10:14. சாலொமோனுக்கு வியாபாரிகளாலும், சுகந்த திரவிய வர்த்தகராலும், அரபிதேசத்து சகல ராஜாக்களாலும், மகாணங்களின் அதிபதிகளாலும் வந்த பொன்னையல்லாமல்,

1இராஜா 10:15. ஒவ்வொரு வருஷத்தில் அவனுக்கு வந்த பொன் அறுநூற்று அறுபத்தாறு தாலந்து நிறையாயிருந்தது.

1இராஜா 10:16. சாலொமோன் ராஜா, அடித்த பொன்தகட்டால் இருநூறு பரிசைகளைச் செய்வித்தான்; ஒவ்வொரு பரிசைக்கு அறுநூறு சேக்கல் நிறைபொன் சென்றது.

1இராஜா 10:17. அடித்த பொன்தகட்டால் முந்நூறு கேடகங்களையும் செய்வித்தான்; ஒவ்வொரு கேடகத்திற்கு மூன்று இராத்தல் பொன் சென்றது; அவைகளை ராஜா லீபனோன் வனம் என்னும் மாளிகையிலே வைத்தான்.

1இராஜா 10:18. ராஜா தந்தத்தினால் பெரிய ஒரு சிங்காசனத்தையும் செய்வித்து, அதைப் பசும்பொன்தகட்டால் மூடினான்.

1இராஜா 10:19. அந்தச் சிங்காசனத்திற்கு ஆறு படிகள் இருந்தது; சிங்காசனத்தின் தலைப்பு பின்னாக வளைவாயிருந்தது; உட்காரும் இடத்திற்கு இருபுறமும் கைச்சாய்மானங்கள் இருந்தது; இரண்டு சிங்கங்கள் கைச்சாய்மானங்கள் அருகே நின்றது.

1இராஜா 10:20. ஆறு படிகளின்மேலும், இரண்டு பக்கத்திலும், பன்னிரண்டு சிங்கங்கள் நின்றது; எந்த ராஜ்யத்திலும் இப்படிப் பண்ணப்படவில்லை.

1இராஜா 10:21. ராஜாவாகிய சாலொமோனுக்கு இருந்த பானபாத்திரங்களெல்லாம் பொன்னும், லீபனோன் வனம் என்கிற மாளிகையின் பணிமுட்டுகளெல்லாம் பசும்பொன்னுமாயிருந்தது; ஒன்றும் வெள்ளியினால் செய்யப்படவில்லை; சாலொமோனின் நாட்களில் வெள்ளி ஒரு பொருளாய் எண்ணப்படவில்லை.

1இராஜா 10:22. ராஜாவுக்குச் சமுத்திரத்திலே ஈராமின் கப்பல்களோடேகூடத் தர்ஷீசின் கப்பல்களும் இருந்தது; தர்ஷீசின் கப்பல்கள் மூன்று வருஷத்துக்கு ஒருதரம் பொன்னையும், வெள்ளியையும், யானைத் தந்தங்களையும், குரங்குகளையும், மயில்களையும் கொண்டுவரும்.

1இராஜா 10:23. பூமியின் சகல ராஜாக்களைப்பார்க்கிலும், ராஜாவாகிய சாலொமோன் ஐசுவரியத்திலும் ஞானத்திலும் சிறந்தவனாயிருந்தான்.

1இராஜா 10:24. சாலொமோனின் இருதயத்திலே தேவன் அருளிய ஞானத்தைக் கேட்கிறதற்காக, சகல தேசத்தாரும் அவன் முக தரிசனத்தைத் தேடினார்கள்.

1இராஜா 10:25. வருஷாவருஷம் அவரவர் தங்கள் காணிக்கையாகிய வெள்ளிப்பாத்திரங்களையும், பொற்பாத்திரங்களையும், வஸ்திரங்களையும், ஆயுதங்களையும், கந்தவர்க்கங்களையும், குதிரைகளையும், கோவேறு கழுதைகளையும் கொண்டுவருவார்கள்.

1இராஜா 10:26. சாலொமோன் இரதங்களையும் குதிரைவீரரையும் சேர்த்தான்; அவனுக்கு ஆயிரத்து நானூறு இரதங்கள் இருந்தது, பன்னீராயிரம் குதிரைவீரரும் இருந்தார்கள்; அவைகளை இரதங்கள் வைக்கும் பட்டணங்களிலும், அவர்களை எருசலேமில் தன்னிடத்திலும் வைத்திருந்தான்.

1இராஜா 10:27. எருசலேமிலே ராஜா வெள்ளியைக் கற்கள்போலவும், கேதுருமரங்களைப் பள்ளத்தாக்குகளில் இருக்கும் காட்டத்தி மரங்கள்போலவும் அதிகமாக்கினான்.

1இராஜா 10:28. சாலொமோன் தனக்குக் குதிரைகளையும் புடவைகளையும் எகிப்திலிருந்து அழைப்பித்தான்; ராஜாவின் வர்த்தகர் புடவைகளை ஒப்பந்த விலைக்கிரயத்திற்கு வாங்கினார்கள்.

1இராஜா 10:29. எகிப்திலிருந்து வந்த ஒவ்வொரு இரதத்தின் விலை அறுநூறு வெள்ளிக்காசும், ஒவ்வொரு குதிரையின் விலையும் நூற்றைம்பது வெள்ளிக் காசுமாயிருந்தது; இந்தப்பிரகாரம் ஏத்தியரின் ராஜாக்களெல்லாருக்கும், சீரியாவின் ராஜாக்களுக்கும், அவர்கள் மூலமாய்க் கொண்டுவரப்பட்டது.

சாலொமோனுடைய கீர்த்தியைப்பற்றி இந்த வசனப்பகுதியில் இன்னும் அதிகமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய ஐசுவரியம் மிகவும் அதிகமாயிருக்கிறது.

சாலொமோனுக்கு வியாபாரிகளாலும், சுகந்த திரவிய வர்த்தகராலும், அரபிதேசத்து சகல ராஜாக்களாலும், மகாணங்களின் அதிபதிகளாலும் வந்த பொன்னையல்லாமல், ஒவ்வொரு வருஷத்தில் அவருக்கு வந்த பொன் அறுநூற்று அறுபத்தாறு தாலந்து நிறையாயிருக்கிறது (1இராஜா 10:14,15).

சாலொமோனுக்கு ஏற்கெனவே ஒப்பீரிலிருந்து நானூற்று இருபது தாலந்து பொன் வந்தது. அது தவிர இப்போது ஒவ்வொரு வருஷத்திலும் 666 தாலந்து பொன் வருகிறது. வியாபாரிகள் இஸ்ரவேல் தேசத்திலே வியாபாரம் பண்ண வரும்போது, சாலொமோன் அவர்களிடத்திலிருந்து சுங்கவரி வசூலிக்கிறார். சாலொமோனுடைய ஆளுகைக்கு கீழ்ப்பட்டிருக்கிற ராஜாக்கள் அவருக்கு வருஷாவருஷம் கப்பம் செலுத்துகிறார்கள். சாலொமோனின் பொக்கிஷசாலை பொன்னால் நிரம்பி வழிகிறது.

சாலொமோன் ராஜாவுக்குச் சமுத்திரத்திலே ஈராமின் கப்பல்களோடேகூடத் தர்ஷீசின் கப்பல்களும் இருக்கிறது; தர்ஷீசின் கப்பல்கள் மூன்று வருஷத்துக்கு ஒருதரம் பொன்னையும், வெள்ளியையும், யானைத்தந்தங்களையும், குரங்குகளையும், மயில்களையும் கொண்டுவரும் (1இராஜா 10:22).

சாலொமோனின் இருதயத்திலே தேவன் அருளிய ஞானத்தைக் கேட்கிறதற்காக, சகல தேசத்தாரும் அவருடைய முக தரிசனத்தைத் தேடுகிறார்கள். வருஷாவருஷம் அவரவர் தங்கள் காணிக்கையாகிய வெள்ளிப் பாத்திரங்களையும், பொற்பாத்திரங்களையும், வஸ்திரங்களையும், ஆயுதங்களையும், கந்தவர்க்கங்களையும், குதிரைகளையும், கோவேறு கழுதைகளையும் கொண்டுவருகிறார்கள் (1இராஜா 10:24,25).

சாலொமோன் எகிப்து தேசத்தாரோடு வியாபாரம்பண்ணுகிறார். சாலொமோன் தனக்குக் குதிரைகளையும் புடவைகளையும் எகிப்திலிருந்து அழைப்பிக்கிறார்; ராஜாவின் வர்த்தகர் புடவைகளை ஒப்பந்த விலைக்கிரயத்திற்கு வாங்குகிறார்கள். எகிப்திலிருந்து வந்த ஒவ்வொரு இரதத்தின் விலை அறுநூறு வெள்ளிக்காசும், ஒவ்வொரு குதிரையின் விலையும் நூற்றைம்பது வெள்ளிக் காசுமாயிருக்கிறது; இந்தப்பிரகாரம் ஏத்தியரின் ராஜாக்களெல்லாருக்கும், சீரியாவின் ராஜாக்களுக்கும், அவர்கள் மூலமாய்க் கொண்டுவரப்படுகிறது (1இராஜா 10:28,29).

சாலொமோனுக்கு ஒவ்வொரு வருஷமும் வருகிற பொன் 666 தாலந்து நிறையாயிருக்கிறது. சாலொமோன் இந்தப் பொன்னையெல்லாம் தன்னுடைய பொக்கிஷ சாலையில் சேகரித்து வைக்கிறார். கர்த்தருடைய ஆலயத்திற்குத் தேவையான பரிசுத்தமான பணிமுட்டுகளை பொன்னால் செய்கிறார்.

சாலொமோன் ராஜா, அடித்த பொன்தகட்டால் இருநூறு பரிசைகளைச் செய்விக்கிறார்; ஒவ்வொரு பரிசைக்கு அறுநூறு சேக்கல் நிறைபொன் செல்கிறது. அடித்த பொன்தகட்டால் முந்நூறு கேடகங்களையும் செய்விக்கிறார்; ஒவ்வொரு கேடகத்திற்கு மூன்று இராத்தல் பொன் செல்கிறது; சாலொமோன் ராஜா அவைகளை லீபனோன் வனம் என்னும் மாளிகையிலே வைக்கிறார் (1இராஜா 10:16,17).

பொன்தகட்டால் செய்யப்பட்ட பரிசைகளையும் கேடங்களையும் யுத்தக்களத்திலே பயன்படுத்த முடியாது. இவையெல்லாம் சாலொமோனுடைய பெயர் பிரஸ்தாபத்திற்காக செய்யப்பட்டிருக்கிறது. சாலொமோன் ராஜபவனியாக வரும்போது, அவருக்கு முன்பாக யுத்தவீரர்கள் பொன்பரிசைகளையும், பொன்கேடகங்களையும் ஏந்திக்கொண்டு போவார்கள். சாலொமோனின் ராஜபவனி ஆடம்பரமாயும் கம்பீரமாயும் இருக்கும்.

சாலொமோன் தன்னுடைய பெலத்தை யுத்தம்பண்ணுவதற்கு செலவுபண்ணவில்லை. தேசத்தின் பாதுகாப்புக்காகவும், ஐசுவரியங்களை பாதுகாப்பதற்காகவும் சாலொமோன் தன்னுடைய பெலத்தை செலவு பண்ணுகிறார். இதற்கு அடையாளமாக பொன்தகட்டால் பரிசைகளையும் கேடகங்களையும் செய்து, லீபனோன் வனம் என்னும் மாளிகையில் வைக்கிறார்.

சாலொமோன் ராஜா தந்தத்தினால் பெரிய சிங்காசனத்தையும் செய்வித்து, அதைப் பசும்பொன்தகட்டால் மூடிகிறார். அந்தச் சிங்காசனத்திற்கு ஆறு படிகள் இருக்கிறது; சிங்காசனத்தின் தலைப்பு பின்னாக வளைவாயிருக்கிறது; உட்காரும் இடத்திற்கு இருபுறமும் கைச்சாய்மானங்கள் இருக்கிறது; இரண்டு சிங்கங்கள் கைச்சாய்மானங்கள் அருகே நிற்கிறது. ஆறு படிகளின்மேலும், இரண்டு பக்கத்திலும், பன்னிரண்டு சிங்கங்கள் நிற்கிறது; எந்த ராஜ்யத்திலும் இப்படிப் பண்ணப்படவில்லை (1இராஜா 10:18-20).

யானைத்தந்தம் விலையேறப்பெற்றது. சாலொமோன் தந்தத்தினால் பெரிய சிங்காசனத்தை செய்கிறார். அவரிடத்தில் பொன்னும் ஏராளமாயிருக்கிறது. தன்னிடத்திலுள்ள பொன்னை என்ன செய்வது என்று சாலொமோனுக்கு தெரியவில்லை. ஆகையினால் தந்தத்தினால் செய்யப்பட்ட பெரிய சிங்காசனத்தை, பொன்தகட்டால் மூடுகிறார்.

ராஜாவாகிய சாலொமோனுக்கு இருந்த பானபாத்திரங்களெல்லாம் பொன்னாயிருக்கிறது. லீபனோன் வனம் என்கிற மாளிகையின் பணிமுட்டுகளெல்லாம் பசும்பொன்னுமாயிருக்கிறது; ஒன்றும் வெள்ளியினால் செய்யப்படவில்லை; சாலொமோனின் நாட்களில் வெள்ளி ஒரு பொருளாய் எண்ணப்படவில்லை (1இராஜா 10:21).

சாலொமோனிடத்தில் பசும்பொன் ஏராளமாயிருப்பதினால், அவருடைய ராஜ்யத்தில் வெள்ளிக்கு மதிப்பில்லாமல் போயிற்று. சாலொமோனின் நாட்களில் வெள்ளி ஒரு பொருளாய் எண்ணப்படவில்லை. நம்மிடத்தில் பரலோகத்தின் ஞானமும், பரலோகத்தின் ஐசுவரியமும் ஏராளமாயிருக்கும்போது, நாம் உலகப்பிரகாரமான ஞானத்திற்கும், உலகப்பிரகாரமான ஐசுவரியத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கமாட்டோம். பரலோகத்தின் ஞானம் பசும்பொன்னைவிட மேலானது. கர்த்தருடைய கிருபை உலகப்பிரகாரமான ஐசுவரியத்தைவிட உன்னதமானது.

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஐசுவரியத்தைக் கேட்கவில்லை. அவர் ஞானத்தையும், உணர்வுள்ள இருதயத்தையும் கேட்டார். கர்த்தரோ அவருக்கு ஞானத்தையும் கொடுத்தார். உணர்வுள்ள இருதயத்தையும் கொடுத்தார். அவர் கேட்காத ஐசுவரியத்தையும் கொடுத்தார். சாலொமோனிடத்தில் திரளான ஐசுவரியம் இருந்தாலும், சாலொமோன் முடிவிலே "எல்லாம் மாயை" என்று சொல்லுகிறார். உலகப்பிரகாரமான ஐசுவரியம் எப்போதுமே மாயையாயிருக்கும். பரலோகத்தின் ஆவிக்குரிய ஐசுவரியமே மெய்யான ஆசீர்வாதம்.

11 அதிகாரம்

இதுவரையிலும் சாலொமோனுடைய மேன்மையைப்பற்றியும், உயர்வைப்பற்றியும், மகத்துவத்தைப்பற்றியும் எழுதப்பட்டிருக்கிறது. உன்னதமான உயர்ந்த நிலையிலிருந்த சாலொமோன், ஆவிக்குரிய ஜீவியத்திலே பின்மாற்றமடைகிறார். கர்த்தரைவிட்டு விலகிப்போகிறார். அவருடைய மேன்மை மங்கிப்போயிற்று.

சாலொமோன் அந்நிய ஜாதியாரான அநேகம் ஸ்திரீகள்மேல் ஆசைவைக்கிறார். அவர்களோடு ஐக்கியமாயிருக்கிறார். அந்த ஸ்திரீகள் சாலொமோனுடைய இருதயத்தை வழுவிப்போகப்பண்ணுகிறார்கள் (1இராஜா 11:1-8).

சாலொமோன் கர்த்தரைவிட்டு பின்வாங்கிப்போகிறார். அந்நிய தெய்வங்களை ஆராதிக்கிறார். இதனால் கர்த்தருடைய கோபம் சாலொமோன்மீது வருகிறது (1இராஜா 11:9-13). கர்த்தர் சாலொமோனுக்கு விரோதிகளை எழுப்புகிறார் (1இராஜா 11:14-25). யெரொபெயாம் (1இராஜா 11:26-40). சாலொமோனுடைய நடபடிகள் (1இராஜா 11:41-43).

சாலொமோனுடைய பின்மாற்றம் 1இராஜா 11:1-8

1இராஜா 11:1. ராஜாவாகிய சாலொமோன், பார்வோனின் குமாரத்தியை நேசித்ததுமல்லாமல், மோவாபியரும், அம்மோனியரும், ஏதோமியரும், சீதோனியரும், ஏத்தியருமாகிய அந்நிய ஜாதியாரான அநேகம் ஸ்திரீகள்மேலும் ஆசைவைத்தான்.

1இராஜா 11:2. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: நீங்கள் அவர்களண்டைக்கும் அவர்கள் உங்களண்டைக்கும் பிரவேசிக்கலாகாது; அவர்கள் நிச்சயமாய்த் தங்கள் தேவர்களைப் பின்பற்றும்படி உங்கள் இருதயத்தைச் சாயப்பண்ணுவார்கள் என்று சொல்லியிருந்தார்; சாலொமோன் அவர்கள்மேல் ஆசைவைத்து, அவர்களோடு ஐக்கியமாயிருந்தான்.

1இராஜா 11:3. அவனுக்குப் பிரபுக்கள் குலமான எழுநூறு மனையாட்டிகளும், முந்நூறு மறுமனையாட்டிகளும் இருந்தார்கள்; அவனுடைய ஸ்திரீகள் அவன் இருதயத்தை வழுவிப்போகப் பண்ணினார்கள்.

1இராஜா 11:4. சாலொமோன் வயதுசென்றபோது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நியதேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்; அதினால் அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை.

1இராஜா 11:5. சாலொமோன் சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும், அம்மோனியரின் அருவருப்பாகிய மில்கோமையும் பின்பற்றினான்.

1இராஜா 11:6. சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதைப்போல கர்த்தரைப் பூரணமாய்ப் பின்பற்றாமல், கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

1இராஜா 11:7. அப்பொழுது சாலொமோன் எருசலேமுக்கு எதிரான மலையிலே மோவாபியரின் அருவருப்பாகிய காமோசுக்கும், அம்மோன் புத்திரரின் அருவருப்பாகிய மோளோகுக்கும் மேடையைக் கட்டினான்.

1இராஜா 11:8. இப்படியே தங்கள் தேவர்களுக்குத் தூபங்காட்டிப் பலியிடுகிற அந்நியஜாதியாரான தன் ஸ்திரீகள் எல்லாருக்காகவும் செய்தான்.

பூமியின் சகல ராஜாக்களைப் பார்க்கிலும், ராஜாவாகிய சாலொமோன் ஐசுவரியத்திலும், ஞானத்திலும் சிறந்தவராயிருந்தார். கர்த்தர் சாலொமோன்மீது பிரியமாயிருந்தார். சாலொமோனோ கர்த்தர்மீது பிரியம் வைக்காமல், அந்நிய ஜாதியாரான அநேகம் ஸ்திரீகள்மேல் பிரியம் வைக்கிறார். கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார். அந்நிய ஸ்திரீகள் சாலொமோனுடைய இருதயத்தை வழுவிப்போகப் பண்ணுகிறார்கள்.

சாலொமோனுடைய தாயாராகிய பத்சேபாள், அவருக்கு ஸ்திரீகளைக் குறித்து ஏற்கெனவே எச்சரிப்பான வார்த்தைகளைச் சொல்லியிருக்கிறாள்.

"என் மகனே, என் கர்ப்பத்தின் குமாரனே, என் பொருத்தனைகளின் புத்திரனே, ஸ்திரீகளுக்கு உன் பெலனையும் ராஜாக்களைக் கெடுக்கும் காரியங்களுக்கு உன் வழிகளையும் கொடாதே" (நீதி 31:2,3).

பத்சேபாள் சிம்சோனுடைய பரிதாபமான முடிவை நினைவுகூர்ந்து, சாலொமோனுக்கு இந்த ஆலோசனையைச் சொல்லியிருக்கவேண்டும். சிம்சோன் தெலீலாள் மேல் ஆசைப்பட்டு, தன்னைப்பற்றிய இரகசியத்தை அவளுக்கு வெளிப்படுத்தினார். சிம்சோனுடைய பலமும் பராக்கிரமமும் அவரை விட்டு நீங்கிற்று.

சாலொமோனுடைய தகப்பனாராகிய தாவீதும் மாம்சத்தின் இச்சைக்கு கீழ்ப்படிந்து, பத்சேபாளோடு விபசாரம் பண்ணினார். இதனால் கர்த்தருடைய கோபம் தாவீதின்மேல் வந்தது. சாலொமோன் ஸ்திரீகள் விஷயத்தில் ஒழுக்கமாயும், கட்டுப்பாடோடும் இருக்கவேண்டும் என்று, அவருடைய தாயார் அவருக்கு புத்திமதிகளை சொல்லியிருக்கிறாள்.

"உன் இருதயம் அவள் வழியிலே சாயவேண்டாம்; அவள் பாதையிலே மயங்கித் திரியாதே. அவள் அநேகரைக் காயப்படுத்தி, விழப்பண்ணினாள்; பலவான்கள் அநேகரைக் கொலைசெய்தாள். அவள் வீடு பாதாளத்துக்குப்போம் வழி; அது மரண அறைகளுக்குக் கொண்டுபோய்விடும்" (நீதி 7:25-27).

கர்த்தரும் இஸ்ரவேல் புத்திரருக்கு ஸ்திரீகளைப்பற்றி எச்சரித்து சொல்லியிருக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: "நீங்கள் அவர்களண்டைக்கும் அவர்கள் உங்களண்டைக்கும் பிரவேசிக்கலாகாது; அவர்கள் நிச்சயமாய்த் தங்கள் தேவர்களைப் பின்பற்றும்படி உங்கள் இருதயத்தைச் சாயப்பண்ணுவார்கள்" (1இராஜா 11:2) என்று சொல்லியிருக்கிறார்; ஆனால் சாலொமோனோ அவர்கள்மேல் ஆசைவைத்து, அவர்களோடு ஐக்கியமாயிருக்கிறார்.

ராஜாவாகிய சாலொமோன், பார்வோனின் குமாரத்தியை நேசித்ததுமல்லாமல், மோவாபியரும், அம்மோனியரும், ஏதோமியரும், சீதோனியரும், ஏத்தியருமாகிய அந்நிய ஜாதியாரான அநேகம் ஸ்திரீகள்மேலும் ஆசைவைக்கிறார் (1இராஜா 11:1).

சாலொமோனுக்கு பிரபுக்கள் குலமான எழுநூறு மனையாட்டிகளும், முந்நூறு மறுமனையாட்டிகளும் இருக்கிறார்கள்; சாலொமோனுடைய ஸ்திரீகள் அவர் இருதயத்தை வழுவிப்போகப் பண்ணுகிறார்கள் (1இராஜா 11:3). சாலொமோனுக்கு மொத்தம் ஆயிரம் ஸ்திரீகள் இருக்கிறார்கள்.

ஒரு மனுஷனுக்கு ஒரு ஸ்திரீ என்பது தேவனுடைய பிரமாணம். ஒரு ஸ்திரீ தனக்குப் போதாது என்று நினைக்கிற புருஷர்கள், அநேகம் ஸ்திரீகளை தேடுவார்கள். அவர்களுக்கு எத்தனை ஸ்திரீகள் இருந்தாலும், அவர்களுக்கு திருப்தி இருக்காது.

சாலொமோனுடைய ஸ்திரீகள் அந்நிய ஜாதியாரானவர்கள். சாலொமோன் மோவாபியர், அம்மோனியர், ஏதோமியர், சீதோனியர், ஏத்தியர் ஆகிய அந்நிய ஜாதியாரான ஸ்திரீகள்மேல் ஆசை வைக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் அந்நிய ஜாதியாரோடு விவாகம்பண்ணுவதை கர்த்தர் தடைபண்ணியிருக்கிறார்.

சாலொமோன் அந்நிய ஸ்திரீகளை விவாகம்பண்ணியதற்கு, சரித்திர ஆசிரியர்கள் அரசியல் சம்பந்தமான விளக்கம் சொல்லுகிறார்கள். பல தேசத்து ஸ்திரீகளை விவாகம்பண்ணுவதினால், அந்த தேசங்களோடு சிநேகமாயிருக்க முடியும் என்றும், அந்த தேசத்தைப்பற்றிய இரகசியங்களை அறிந்துகொள்ள முடியும் என்றும் சரித்திர ஆசிரியர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். சாலொமோன் இஸ்ரவேல் தேசத்தின் நன்மைக்காக, ஆயிரம் ஸ்திரீகளை விவாகம்பண்ணினார் என்று சரித்திர ஆசிரியர்கள் கருத்து சொல்லுகிறார்கள்.

கர்த்தர் சாலொமோனுக்கு விசேஷித்த ஞானத்தைக் கொடுத்திருக்கிறார். ஆனால் சாலொமோனோ கர்த்தரோடு ஐக்கியமாயிராமல் அந்நிய ஸ்திரீகள்மேல் ஆசைவைத்து, அவர்களோடு ஐக்கியமாயிருக்கிறார். சாலொமோனுக்கு ஏராளமான ஞானம் இருந்தாலும், அவர் தன்னுடைய ஞானத்தை சரியாக நிர்வாகம்பண்ணவில்லை. கர்த்தருக்குப் பிரியமாகவும், பிரயோஜனமாகவும் ஜீவிப்பதற்கு சாலொமோன் தன்னுடைய ஞானத்தைப் பயன்படுத்தவில்லை.

கர்த்தர் நமக்கு ஏராளமான தாலந்துகளைக் கொடுத்தாலும், நாம் அந்த தாலந்துகளை சரியாகப் பயன்படுத்தவில்லையென்றால், அவற்றால் நமக்கு ஒரு பிரயோஜனமும் இருக்காது. கர்த்தர் நமக்கு கொடுக்கும் தாலந்துகளை, கர்த்தருடைய நாமமகிமைக்காகவும், அவருடைய பிள்ளைகளின் பிரயோனத்திற்காகவும், அவருடைய ராஜ்யத்தின் விஸ்தாரத்திற்காகவும் பயன்படுத்தவேண்டும்.

அந்நிய ஸ்திரீகள் தங்கள் தேவர்களைப் பின்பற்றும்படி, இஸ்ரவேல் புத்திரருடைய இருதயத்தை சாயப்பண்ணுவார்கள் என்று கர்த்தர் அவர்களுக்கு ஏற்கெனவே எச்சரித்துச் சொல்லியிருக்கிறார். சாலொமோன் கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைக்கு செவிகொடுக்காமல், அந்நிய ஸ்திரீகள்மேல் ஆசை வைத்து, அவர்களோடு ஐக்கியமாயிருக்கிறார். அந்நிய ஸ்திரீகள் சாலொமோனுடைய இருதயத்தை வழுவிப்போகப்பண்ணுகிறார்கள்.

அந்நிய ஸ்திரீகள் அந்நிய தெய்வங்களை ஆராதிக்கிறவர்கள். மோவாபின் குமாரத்திகள் பாகால்பேயோரை ஆராதிக்கிறார்கள். சாலொமோன் வயதுசென்றபோது, அவருடைய மனைவிகள் அவருடைய இருதயத்தை அந்நியதேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணுகிறார்கள் (1இராஜா 11:4). சாலொமோன் அந்நிய ஸ்திரீகள்மேல் ஆசை வைத்து சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும், அம்மோனியரின் அருவருப்பாகிய மில்கோமையும் பின்பற்றுகிறார் (1இராஜா 11:5).

சாலொமோன் கர்த்தர்மீது வைத்திருந்த பக்தி வைராக்கியம் குறைந்துபோயிற்று. அவருடைய இருதயம் கர்த்தரைவிட்டு வழிவிலகிப்போயிற்று. சாலொமோன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப் பின்பற்றாமல், அந்நிய தெய்வங்களைப் பின்பற்றுகிறார். சாலொமோனுடைய ஸ்திரீகள், அவருடைய இருதயத்தை வழுவிப்போகப்பண்ணுகிறார்கள்.

அதினால் சாலொமோனுடைய இருதயம் அவருடைய தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை (1இராஜா 11:4). சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதைப்போல கர்த்தரைப் பூரணமாய்ப் பின்பற்றாமல், கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்கிறார் (1இராஜா 11:6).

சாலொமோன் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்ததினால், அவருடைய இருதயம் கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை. சாலொமோன் அந்நிய ஸ்திரீகள்மேல் ஆசை வைத்து அவர்களோடு ஐக்கியமாயிருக்கிறார். அவர்கள் சாலொமோனை தங்கள் தேவர்களைப் பின்பற்றும்படி, அவருடைய இருதயத்தை சாயப்பண்ணுகிறார்கள். சாலொமோனும் தன்னுடைய ஸ்திரீகளின் விருப்பத்தின் பிரகாரம், அந்நிய தெய்வங்களை ஆராதிக்கிறார்.

சாலொமோன் எருசலேமுக்கு எதிரான மலையிலே மோவாபியரின் அருவருப்பாகிய காமோசுக்கும், அம்மோன் புத்திரரின் அருவருப்பாகிய மோளோகுக்கும் மேடையைக் கட்டுகிறார். இப்படியே தங்கள் தேவர்களுக்குத் தூபங்காட்டிப் பலியிடுகிற அந்நியஜாதியாரான தன் ஸ்திரீகள் எல்லாருக்காகவும் செய்கிறார் (1இராஜா 11:7,8).

சாலொமோனுடைய பொக்கிஷம் அந்நிய தெய்வங்களை ஆராதிப்பதற்காக பயன்படுத்தப்படுகிறது. அவர் அந்நிய தேவர்களின் ஆசாரியர்களை பராமரிக்கிறார். அந்நிய தெய்வங்களுக்கு மேடைகளைக் கட்டுகிறார். எல்லா தெய்வங்களும் ஒன்றுதான் என்று சாலொமோன் சமத்துவமும் சமரசமும் பேசுகிறார்.

சாலொமோன் கட்டின மேடைகள் யோசியா ராஜாவின் காலம் வரையிலும் இஸ்ரவேல் தேசத்திலிருக்கிறது. சாலொமோன் செய்த பாவம் இஸ்ரவேல் தேசத்திலே பல வருஷங்களுக்கு அருவருப்பின் சின்னமாகயிருக்கிறது.

"எருசலேமுக்கு எதிரே இருக்கிற நாசமலையின் வலதுபுறத்தில் இஸ்ரவேலின் ராஜாவாகிய சாலொமோன் சீதோனியரின் அருவருப்பாகிய அஸ்தரோத்திற்கும், மோவாபியரின் அருவருப்பாகிய காமோசுக்கும், அம்மோன் புத்திரரின் அருவருப்பாகிய மில்கோமுக்கும் கட்டியிருந்த மேடைகளையும் ராஜா தீட்டாக்கி, சிலைகளை உடைத்து, விக்கிரகத்தோப்புகளை நிர்மூலமாக்கி, அவைகளின் ஸ்தலத்தை மனுஷரின் எலும்புகளால் நிரப்பினான்" (2இராஜா 23:13,14).

சாலொமோன் தன்னுடைய வயதான காலத்தில் மாம்சத்தின் இச்சைகளுக்கு இடங்கொடுக்கிறார். வாலிபத்தின் ஆசைகளை பின்பற்றிப்போகிறார். சாலொமோனிடத்தில் விசேஷித்த ஞானம் இருந்தாலும், மதியீனமாய் நடந்துகொள்கிறார்.

சாலொமோன் அநேகருக்கு உபதேசம் பண்ணுகிறவர். ஆனால் அவர் தனக்கு தானே உபதேசம்பண்ணி, எச்சரிப்பாய் ஜீவிக்கவில்லை. பிறருக்கு உபதேசம்பண்ணுவது எளிது. நமக்கு நாமே உபதேசம்பண்ணி, அந்த உபதேசத்திற்கு கீழ்ப்படியும்போதுதான் நமக்கு ஆசீர்வாதம் கிடைக்கும். மற்றவர்களுடைய தப்பிதங்களை சுட்டிக்காண்பிப்பது எளிது. அந்த தப்பிதங்களை நாம் செய்யாதவாறு எச்சரிக்கையாயிருப்பதே நமக்கு நல்லது.

சாலொமோன் ஞானத்தில் சிறந்தவர். ஐசுவரியம் மிகுந்தவர். கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டினவர். கர்த்தருக்கு பலிபீடத்தைக் கட்டி அதிலே ஏராளமான பலிகளை செலுத்தினவர். ஆனாலும் சாலொமோன் அந்நிய ஜாதியாரான அநேகம் ஸ்திரீகள்மேல் ஆசை வைத்து, அவர்களோடு ஐக்கியமாயிருந்து, கர்த்தரை விட்டு விலகிப்போய்விடுகிறார். கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்.

ஆதியிலே கர்த்தர் மனுஷனுடைய விலாவிலிருந்து ஸ்திரீயை உண்டு பண்ணினார். மனுஷன் ஸ்திரீகள் விஷயத்தில் கவனமாயிருக்கவேண்டும். இல்லையென்றால் அவனுடைய விலா எலும்பே, அவனுடைய தலையை உடைத்துப்போடும்.

ஆகையினால் தன்னை நிற்கிறேன் என்று நினைக்கிறவன், கீழே விழுந்துவிடாதவாறு எச்சரிக்கையாயிருக்க வேண்டும். மனுஷர் பலவீனமானவர்கள். தேவனுடைய கிருபையில்லாமல், மனுஷரால் பரிசுத்தமாய் ஜீவிக்க முடியாது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலே, நாம் எப்போதும் கர்த்தருடைய கிருபையை சார்ந்து ஜீவிக்கவேண்டும்.

கர்த்தர் சாலொமோனுக்கு விசேஷித்த ஞானத்தையும் ஏராளமான ஐசுவரியத்தையும் கொடுத்தார். சாலொமோனுடைய பொக்கிஷ சாலையிலே பொன்னும் வெள்ளியும் நிரம்பி வழிந்தது. சாலொமோன் அந்த ஐசுவரியத்தை சரியாக ஆளுகை செய்யவில்லை. அந்த ஐசுவரியமே அவருக்கு கண்ணியாயிற்று. சாலொமோன் கர்த்தருடைய பொக்கிஷத்தை எடுத்து, அந்நிய தெய்வங்களுக்கு மேடைகளைக் கட்டுகிறார்.

நம்முடைய ஜீவியத்தில் ஐசுவரியமும், செழிப்பும் வரும்போது நாம் மிகவும் எச்சரிப்பாயிருக்கவேண்டும். இல்லையென்றால், ஐசுவரியம் நமக்கு ஆசீர்வாதமாயிராமல், ஆபத்தாயிருக்கும். ஐசுவரியத்தினால் வரும் சோதனைகளை மேற்கொள்வது மிகவும் கடினமாயிருக்கும்.

தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெற்று, முன்னணியிலிருக்கிறவர்கள் மிகவும் எச்சரிப்பாயிருக்கவேண்டும். பிசாசானவன் அவர்களை வலுவாய்த் தாக்குவதற்கு வாய்ப்புள்ளது. ஆவிக்குரிய தலைவர்கள் வழுவிப்போய்விட்டால், அதனால் ஏற்படும் சேதம் மிகவும் அதிகமாயிருக்கும். தலைவர்களுடைய பின்மாற்றத்தினால், கர்த்தருடைய நாமம் அதிகமாய்த் தூஷிக்கப்படும்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், கர்த்தர் நமக்கு நியமித்திருக்கும் இலக்கை நோக்கி, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி, பயபக்தியோடு ஓடவேண்டும். கர்த்தருடைய கிருபைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். நம்முடைய சுயபுத்தியையோ, சுயபலத்தையோ, சுயபக்தியையோ சார்ந்திராமல், கர்த்தருடைய கிருபையை சார்ந்து கொள்ளவேண்டும்.

கர்த்தருடைய கோபம் 1இராஜா 11:9-13

1இராஜா 11:9. ஆகையால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சாலொமோனுக்கு இரண்டுவிசை தரிசனமாகி, அந்நியதேவர்களைப் பின்பற்றவேண்டாம் என்று கட்டளையிட்டிருந்தும், அவன் கர்த்தரை விட்டுத் தன் இருதயத்தைத் திருப்பி,

1இராஜா 11:10. அவர் கற்பித்ததைக் கைக்கொள்ளாமற் போனதினால் கர்த்தர் அவன்மேல் கோபமானார்.

1இராஜா 11:11. ஆகையால் கர்த்தர் சாலொமோனை நோக்கி: நான் உனக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையையும் என் கட்டளைகளையும் நீ கைக்கொள்ளாமற்போய் இந்தக் காரியத்தைச் செய்தபடியினால், ராஜ்யபாரத்தை உன்னிடத்திலிருந்து பிடுங்கி, அதை உன் ஊழியக்காரனுக்குக் கொடுப்பேன்.

1இராஜா 11:12. ஆகிலும் உன் தகப்பனாகிய தாவீதினிமித்தம், நான் அதை உன் நாட்களிலே செய்வதில்லை; உன் குமாரனுடைய கையினின்று அதைப் பிடுங்குவேன்.

1இராஜா 11:13. ஆனாலும் ராஜ்யம் முழுவதையும் நான் பிடுங்காமலும், என் தாசனாகிய தாவீதினிமித்தமும், நான் தெரிந்துகொண்ட எருசலேமினிமித்தமும், ஒரு கோத்திரத்தை நான் உன் குமாரனுக்குக் கொடுப்பேன் என்றார்.

சாலொமோன் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார். இதன் நிமித்தமாக கர்த்தருடைய கோபம் சாலொமோன்மேல் வருகிறது. சாலொமோன் அந்நிய ஸ்திரீகள்மேல் ஆசைவைத்து அவர்களோடே ஐக்கியமாயிருக்கிறார். சாலொமோன் தன்னுடைய அந்நிய ஸ்திரீகளோடு சேர்ந்து விக்கிரகங்களை ஆராதிக்கிறார். காமோசுக்கும், மோளோகுக்கும் மேடைகளைக் கட்டுகிறார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சாலொமோனுக்கு இரண்டுவிசை தரிசனமாகி, "அந்நியதேவர்களைப் பின்பற்றவேண்டாம்" என்று கட்டளையிட்டிருக்கிறார். ஆனால் சாலொமோனோ கர்த்தரை விட்டுத் தன் இருதயத்தைத் திருப்பி, விக்கிரகங்களைப் பின்பற்றிப்போகிறார். கர்த்தர் தனக்கு கற்பித்ததை சாலொமோன் கைக்கொள்ளவில்லை. இதனால் கர்த்தர் சாலொமோன்மேல் கோபமாகிறார்.

கர்த்தர் சாலொமோனுக்கு தம்முடைய கோபத்தின் வார்த்தைகளைச் சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசி மூலமாய் சாலொமோனிடத்தில் இந்தச் செய்தியைச் சொல்லியிருக்கவேண்டும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். சாலொமோன் இப்போது கர்த்தரைவிட்டு வழிவிலகிப்போயிருக்கிறார். அவர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்.

கர்த்தர் சாலொமோனை நோக்கி: "நான் உனக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையையும் என் கட்டளைகளையும் நீ கைக்கொள்ளாமற்போய் இந்தக் காரியத்தைச் செய்தபடியினால், ராஜ்யபாரத்தை உன்னிடத்திலிருந்து பிடுங்கி, அதை உன் ஊழியக்காரனுக்குக் கொடுப்பேன்" (1இராஜா 11:11) என்று சொல்லுகிறார்.

சாலொமோன் கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணுகிறார். கர்த்தரைவிட்டுப் பிரிந்துபோகிறார். ஆகையினால் சாலொமோனுடைய ராஜ்யத்தின் ஒரு பகுதி, அவருடைய குடும்பத்தாரைவிட்டுப் பிரிந்துபோகும். அவர்கள் சாலொமோனுடைய குடும்பத்திற்கு விரோதமாகக் கலகம்பண்ணுவார்கள். பாவத்தினால் குடும்பங்களுக்கு அழிவு வரும். தேசத்தில் பஞ்சம் வரும். மனுஷருடைய மேன்மையும், மதிப்பும் மண்ணோடு மண்ணாய்ப்போகும்.

கர்த்தர் சாலொமோனுக்கு கோபமான வார்த்தைகளைச் சொன்னாலும், அவர் தாவீதின் குடும்பத்தார்மீது இன்னும் பிரியமாயிருக்கிறார். கர்த்தர் சாலொமோனை நோக்கி, "ஆகிலும் உன் தகப்பனாகிய தாவீதினிமித்தம், நான் அதை உன் நாட்களிலே செய்வதில்லை; உன் குமாரனுடைய கையினின்று அதைப் பிடுங்குவேன். ஆனாலும் ராஜ்யம் முழுவதையும் நான் பிடுங்காமலும், என் தாசனாகிய தாவீதினிமித்தமும், நான் தெரிந்துகொண்ட எருசலேமினிமித்தமும், ஒரு கோத்திரத்தை நான் உன் குமாரனுக்குக் கொடுப்பேன்" (1இராஜா 11:12,13) என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு சாலொமோன்மீது வருகிறது. ஆனாலும் கர்த்தர் தாவீதின் நிமித்தமாக, தம்முடைய கோபத்தைக் குறைத்துக்கொள்கிறார். நியாயத்தீர்ப்பின் வேகத்தையும் குறைத்துக்கொள்கிறார். சாலொமோனுடைய ராஜ்யபாரத்தின் ஒரு பகுதியை கர்த்தர் பிடுங்குவார். ஆனாலும் கர்த்தர் அதை சாலொமோனுடைய நாட்களில் செய்யாமல், அவருடைய குமாரரின் நாட்களில் செய்வார்.

தன்னுடைய ராஜ்யபாரம் தன்னைவிட்டுப் பிடுங்கப்படுவதை சாலொமோன் பார்க்கமாட்டார். இந்த சம்பவம் அவர் மரித்த பின்பு நடைபெறும். கர்த்தர் சாலொமோனுடைய ராஜ்யபாரத்தை அவரிடத்திலிருந்து பிடுங்கி, அதை அவருடைய குமாரனுக்கு கொடுப்பார்.

ரெகொபெயாம் சாலொமோனுடைய குமாரர்களில் ஒருவர். அம்மோன் ஜாதியான அவன் தாய்க்கு நாமாள் என்று பேர் (1இராஜா 14:31). அம்மோன் ஜாதியான நாமாள் சாலொமோனுடைய மனைவிகளில் ஒருத்தி. இவள் இஸ்ரவேல் தேசத்தை சேர்ந்தவளல்ல. சாலொமோனுக்கும் இவளுக்கும் பிறந்த மகனுடைய பெயர் ரெகொபெயாம். சாலொமோனுக்கு பின்பு ரெகொபெயாம் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாகிறான். கர்த்தர் ரெகொபெயாமின் கையிலிருந்து, இஸ்ரவேலின் ராஜ்யபாரத்தில் ஒரு பகுதியை பிடுங்குகிறார்.

யூதாகோத்திரத்தார் பலமுள்ளவர்களாயும், திரளான எண்ணிக்கையுள்ளவர்களாயும் இருக்கிறார்கள். இவர்கள் தாவீதின் குடும்பத்தாருக்கு உண்மையுள்ளவர்களாயிருப்பார்கள். தாவீது எருசலேமைக் கட்டினார். எருசலேமிலே கர்த்தருடைய ஆலயம் இருக்கிறது. கர்த்தர் தாவீதையும், எருசலேமையும் நோக்கிப் பார்க்கிறார். தாவீதின் நிமித்தமாகவும், எருசலேமின் நிமித்தமாகவும், கர்த்தர் சாலொமோனுடைய குமாரனுக்கு, யூதாகோத்திரத்தைக் கொடுக்கிறார்.

கர்த்தருடைய செய்தி சாலொமோனுடைய இருதயத்தைத் தொடுகிறது. சாலொமோன் கர்த்தருடைய உடன்படிக்கையையும், அவருடைய கட்டளைகளையும் கைக்கொள்ளவில்லை. சாலொமோன் கர்த்தருக்கு பிரியமான காரியத்தைச் செய்யாமல், கர்த்தரைக் கோபப்படுத்தும் காரியத்தை செய்கிறார். கர்த்தர் சாலொமோனுடைய தப்பிதத்தை உணர்த்துகிறார். சாலொமோனுடைய மனச்சாட்சி தட்டியெழுப்பப்படுகிறது.

சாலொமோன் தன்னுடைய பாவங்களை உணருகிறார். தன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்புகிறார். அவர் கர்த்தருடைய சமுகத்திலே தன்னை வெகுவாகத் தாழ்த்தி, தன்னுடைய பாவங்களை அறிக்கை செய்கிறார். கர்த்தர் தமது கிருபையினால் தன்னுடைய பாவங்களை மன்னிக்க வேண்டுமென்று விண்ணப்பம்பண்ணுகிறார்.

கர்த்தர் தம்முடைய பாவங்களை மன்னிப்பார் என்னும் நிச்சயம் சாலொமோனுடைய இருதயத்தில் உண்டாயிற்று. அதன்பின்பு சாலொமோன் முன்புபோல, கர்த்தருக்கு பிரியமானவராகவும், பிரயோஜனமானவராகவும் ஜீவிக்கிறார். கர்த்தருடைய ஊழியத்தை தொடர்ந்து செய்கிறார்.

சாலொமோன் தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பிய பின்பு, "பிரசங்கி"யின் புஸ்தகத்தை எழுதியிருக்கவேண்டும். சாலொமோனுடைய மனந்திரும்புதலின் செய்தி, அவருடைய மனந்திரும்பின இருதயத்திற்கு அடையாளமாயிருக்கிறது. பாவத்தினால் சாலொமோனுடைய இருதயம் நொறுங்கிப்போயிருக்கிறது.

தாவீது தன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, கர்த்தருடைய சமுகத்திலே தன்னைத் தாழ்த்தினார். தாவீதின் சங்கீதங்கள் அவருடைய மனந்திரும்பின இருதயத்திற்கு சாட்சியாயிருக்கிறது. கர்த்தர் தம்முடைய பிள்ளைகள் மத்தியிலே, தம்முடைய கிருபைகளை வெளிப்படுத்துகிறார். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளெல்லோருக்கும் கிருபைகளைக் கொடுக்கிறார். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான கிருபையைக் கொடுக்கிறார்.

சாலொமோன் பாவத்திலே விழுந்தாலும், அவர் மொத்தமாய் முறிந்துபோகவில்லை. கர்த்தர் தாவீதுக்கு சாலொமோனைக் குறித்து சொன்ன வார்த்தைகளை நிறைவேற்றுகிறார்.

"நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன், அவன் எனக்குக் குமாரனாயிருப்பான்; அவன் அக்கிரமம் செய்தால், நான் அவனை மனுஷருடைய மிலாற்றினாலும் மனுபுத்திரருடைய அடிகளினாலும் தண்டிப்பேன். உனக்கு முன்பாக நான் தள்ளிவிட்ட சவுலிடத்திலிருந்து என் கிருபையை விலக்கினதுபோல அவனைவிட்டு விலக்கமாட்டேன்" *(2சாமு 7:14,15)*.

விசுவாசிகளாகிய நாம் பாவத்திலே விழுந்தாலும், அதிலே தங்கி வாசம்பண்ணக்கூடாது. பாவத்தைவிட்டு வெளியேறவேண்டும். பாவத்தை வெறுக்கவேண்டும். நாம் பாவத்தை நேசிக்காமல், பரிசுத்தத்தை நேசிக்கவேண்டும்.

சாலொமோனின் விரோதிகள் 1இராஜா 11:14-25

1இராஜா 11:14. கர்த்தர் ஏதோமியனாகிய ஆதாத் என்னும் ஒரு விரோதியைச் சாலொமோனுக்கு எழுப்பினார்; இவன் ஏதோமிலிருந்த ராஜகுலமானவன்.

1இராஜா 11:15. தாவீது ஏதோமில் இருக்கும்போது படைத்தலைவனாகிய யோவாப் ஏதோமிலுள்ள ஆண்மக்களையெல்லாம் சங்கரித்து, வெட்டுண்டவர்களை அடக்கம்பண்ணப் போனான்.

1இராஜா 11:16. அவர்களெல்லாம் சங்கரிக்குமளவும், தானும் இஸ்ரவேல் அனைத்தும் அங்கே ஆறுமாதம் இருக்கும்போது,

1இராஜா 11:17. ஆதாதும் அவனோடேகூட அவன் தகப்பனுடைய ஊழியக்காரரில் சில ஏதோமியரும் எகிப்திற்குப்போக ஓடிப் போனார்கள்; ஆதாத் அப்பொழுது ஒரு சிறுபிள்ளையாயிருந்தான்.

1இராஜா 11:18. அவர்கள் மீதியானிலிருந்து எழுந்து, பாரானுக்குச் சென்று, பாரானிலே சில மனுஷரைக் கூட்டிக்கொண்டு, எகிப்திற்குப் பார்வோன் என்னும் எகிப்தின் ராஜாவினிடத்திற்குப் போனார்கள்; அவன் இவனுக்கு ஒரு வீடுகொடுத்து, இஷ்னுக்கு ஆகாரத்தைத் திட்டம்பண்ணி, நிலத்தையும் கொடுத்தான்.

1இராஜா 11:19. ஆதாதுக்குப் பார்வோனின் கண்களில் மிகுந்த தயைகிடைத்தபடியினால், அவன் ராஜஸ்திரீயாகிய தாப்பெனேஸ் என்னும் தன் மனைவியின் சகோதரியை அவனுக்கு விவாகஞ்செய்துகொடுத்தான்.

1இராஜா 11:20. தாப்பெனேசின் சகோதரியாகிய இவள் அவனுக்குக் கேனுபாத் என்னும் ஒரு குமாரனைப் பெற்றாள்; அவனைத் தாப்பெனேஸ் பார்வோனின் வீட்டிலே வளர்த்தாள்; அப்படியே கேனுபாத் பார்வோனின் வீட்டில் அவனுடைய குமாரருடன் இருந்தான்.

1இராஜா 11:21. தாவீது தன் பிதாக்களோடே நித்திரையடைந்தான் என்றும், படைத்தலைவனாகிய யோவாப் இறந்துபோனான் என்றும், எகிப்திலே ஆதாத் கேள்விப்பட்ட போது, ஆதாத் பார்வோனை நோக்கி: நான் என் சுயதேசத்துக்குப் போக என்னை அனுப்பவேண்டும் என்றான்.

1இராஜா 11:22. அதற்குப் பார்வோன்: இதோ, நீ உன் சுயதேசத்துக்குப்போக விரும்புகிறதற்கு, என்னிடத்தில் உனக்கு என்ன குறைவு இருக்கிறது என்றான்; அதற்கு அவன்: ஒரு குறைவும் இல்லை; ஆகிலும் என்னை அனுப்பிவிடவேண்டும் என்றான்.

1இராஜா 11:23. எலியாதாவின் குமாரனாகிய ரேசோன் என்னும் வேறொரு விரோதியை தேவன் எழுப்பினார்; இவன் தன் ஆண்டவனாகிய ஆதாதேசர் என்னும் சோபாவின் ராஜாவை விட்டு ஓடிப்போய்,

1இராஜா 11:24. தாவீது சோபாவில் உள்ளவர்களைக் கொன்று போடுகையில், அவன் தன்னோடே சில மனுஷரைச் சேர்த்துக்கொண்டு, அந்தக் கூட்டத்திற்குத் தலைவனானான்; இவர்கள் தமஸ்குவுக்குப் போய், அங்கே குடியிருந்து, தமஸ்குவில் ஆண்டார்கள்.

1இராஜா 11:25. ஆதாத் பொல்லாப்புச் செய்ததுமல்லாமல், ரேசோன் சாலொமோனுடைய நாளெல்லாம் இஸ்ரவேலுக்கு விரோதியாகி, சீரியாவின்மேல் ராஜாவாயிருந்து, இஸ்ரவேலைப் பகைத்தான்.

கர்த்தர் சாலொமோனுக்கு விரோதமாக இரண்டு விரோதிகளை எழுப்புகிறார். சாலொமோன் கர்த்தருக்கு விரோதியாகிவிட்டார். ஆகையினால் சாலொமோனுக்கு விரோதமாக விரோதிகள் எழும்புகிறார்கள். சாலொமோன் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, அவரோடு ஐக்கியமாயிருந்திருந்தால், அவருக்கு விரோதமாக எந்த எதிரியும் எழும்பமாட்டார்கள். சாலொமோன் கர்த்தருக்கு விரோதியாகும்போது, கர்த்தர் சாலொமோனுக்கு விரோதிகளை எழுப்புகிறார்.

இந்த வசனப்பகுதியில் ஆதாத், ரேசோன் ஆகிய இருவரைபற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் இருவரும் சாலொமோனுக்கு விரோதிகள். சாலொமோன் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருக்கிறார். சாலொமோனின் படைபலம் மிகவும் பெரியது. சாலொமோனுக்கு முன்பாக ஆதாத்தும், ரேசோனும் மிகவும் சாதாரணமானவர்கள். ஆனாலும் சாலொமோனுடைய பாவம் அவரை தாழ்த்துகிறது. அவரைப் பலவீனமாக்குகிறது. ஆதாத்தும், ரேசோனும் சாதாரணமானவர்களாகயிருந்தாலும், கர்த்தர் அவர்கள் இருவரையும் சாலொமோனுக்கு விரோதிகளாக எழுப்புகிறார்.

ஆதாத்தும், ரேசோனும் தாங்களாகவே சாலொமோனுக்கு விரோதிகளாக எழும்பவில்லை. கர்த்தரே இவர்கள் இருவரையும் சாலொமோனுக்கு விரோதமாக எழுப்புகிறார்.

"கர்த்தர் ஏதோமியனாகிய ஆதாத் என்னும் ஒரு விரோதியைச் சாலொமோனுக்கு எழுப்பினார்; இவன் ஏதோமிலிருந்த ராஜகுலமானவன்" (1இராஜா 11:14).

"எலியாதாவின் குமாரனாகிய ரேசோன் என்னும் வேறொரு விரோதியை தேவன் எழுப்பினார்; இவன் தன் ஆண்டவனாகிய ஆதாதேசர் என்னும் சோபாவின் ராஜாவை விட்டு ஓடிப்போனவன்" (1இராஜா 11:23).

ஆதாத்தும், ரேசோனும் தாவீதின் காலத்தில், இஸ்ரவேலுக்கு விரோதமாக கோபமாயும், பகையாயும் இருந்தார்கள். தாவீது ஏதோமின்மீதும், சோபாவின்மீதும் யுத்தம்பண்ணியபோது, இவர்கள் இருவரும் இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதியானார்கள்.

"தாவீது ஏதோமில் இருக்கும்போது படைத்தலைவனாகிய யோவாப் ஏதோமிலுள்ள ஆண்மக்களையெல்லாம் சங்கரித்து, வெட்டுண்டவர்களை அடக்கம்பண்ணப் போனான்" (1இராஜா 11:15).

தாவீது சோபாவில் உள்ளவர்களைக் கொன்றுபோடுகையில், அவன் தன்னோடே சில மனுஷரைச் சேர்த்துக்கொண்டு, அந்தக் கூட்டத்திற்குத் தலைவனானான்; இவர்கள் தமஸ்குவுக்குப் போய், அங்கே குடியிருந்து, தமஸ்குவில் ஆண்டார்கள் (1இராஜா 11:24).

தாவீதுக்கு பின்பு சாலொமோன் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாகிறார். சாலொமோனுடைய ஐசுவரியங்களும், அரமனைகளும், சேனை வீரர்களும் சாலொமோனுடைய ஆளுகைக்கு வருகிறது. தாவீது இஸ்ரவேல் தேசத்தின் எல்லைகளை ஏற்கெனவே விஸ்தாரம்பண்ணியிருக்கிறார். ராஜாங்கத்தின் பொக்கிஷங்களை பொன்னினாலும், வெள்ளியினாலும் நிரப்பியிருக்கிறார். இவையெல்லாம் சாலொமோனுக்கு, அவருடைய தகப்பனாராகிய தாவீதின் மூலமாய் வந்த ஆசீர்வாதங்கள்.

சாலொமோன் தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்த நாளிலிருந்து, ஆசீர்வாதங்களை மாத்திரமே அனுபவித்து வந்திருக்கிறார். அவர் எந்த ஒரு கஷ்டங்களையும், துன்பங்களையும் அனுபவித்ததில்லை.

தாவீதின் ஆசீர்வாதங்களை சாலொமோன் தொடர்ந்து அனுபவிக்கவேண்டுமென்றால், அவர் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, கர்த்தரோடு ஐக்கியமாய் ஜீவிக்கவேண்டும். சாலொமோனோ கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார். கர்த்தரை பின்பற்றாமல் அந்நிய தெய்வங்களை பின்பற்றுகிறார். இதனால் கர்த்தர் சாலொமோனுக்கு விரோதிகளை எழுப்புகிறார்.

ஆதாத் ஒரு ஏதோமியன். இவன் ராஜகுலத்தை சேர்ந்தவன். தாவீது ஏதோமின்மீது யுத்தம்பண்ணி அதை ஜெயித்தார்.

"ஏதோமில் தாணையங்களை வைத்தான்; ஏதோம் எங்கும் அவன் தாணையங்களை வைத்ததினாலே, ஏதோமியர் எல்லாரும் தாவீதைச் சேவிக்கிறவர்களானார்கள்; தாவீது போன எல்லா இடத்திலும் கர்த்தர் அவனைக் காப்பாற்றினார்" (2சாமு 8:14).

தாவீது ஏதோமில் இருக்கும்போது படைத்தலைவனாகிய யோவாப் ஏதோமிலுள்ள ஆண்மக்களையெல்லாம் சங்கரித்து, வெட்டுண்டவர்களை அடக்கம்பண்ணப் போனான். அவர்களெல்லாம் சங்கரிக்குமளவும், தானும் இஸ்ரவேல் அனைத்தும் அங்கே ஆறுமாதம் இருந்தார்கள் (1இராஜா 11:15,16).

ஏதோமியர் இஸ்ரவேலருக்கு பூர்வகாலத்து சத்துருக்கள். இதன் நிமித்தமாய் தாவீது ஏதோமியரை மகாசங்காரமாய் சங்கரித்தார். அப்போது ஆதாத் ஒரு சிறுபிள்ளையாயிருந்தான். அவன் ராஜகுலத்தை சேர்ந்தவன்.

ஆதாதும் அவனோடேகூட அவன் தகப்பனுடைய ஊழியக்காரரில் சில ஏதோமியரும் எகிப்திற்குப்போக ஓடிப் போனார்கள்; ஆதாத் அப்பொழுது ஒரு சிறுபிள்ளையாயிருந்தான் (1இராஜா 11:17).

ஏதோமியரின் ஊழியக்காரர்கள் சிறுபிள்ளையாயிருந்த ஆதாத்தை பாதுகாத்தார்கள்.

அவர்கள் மீதியானிலிருந்து எழுந்து, பாரானுக்குச் சென்று, பாரானிலே சில மனுஷரைக் கூட்டிக்கொண்டு, எகிப்திற்குப் பார்வோன் என்னும் எகிப்தின் ராஜாவினிடத்திற்குப் போனார்கள்; பார்வோன் ஆதாத்துக்கு ஒரு வீடுகொடுத்து, இவனுக்கு ஆகாரத்தைத் திட்டம்பண்ணி, நிலத்தையும் கொடுத்தான் (1இராஜா 11:18).

ஏதோமின் ஊழியக்காரர்கள், ஏதோம் தேசத்திலிருந்து சிறுபிள்ளையாயிருந்த ஆதாத்தைத் தூக்கிக்கொண்டு தப்பி ஓடினபோது, முதலாவதாக அவர்கள் மீதியான் தேசத்திற்குப் போனார்கள். அதன் பின்பு அவர்கள் பாரான் தேசத்திற்கு சென்றார்கள். அங்கே அவர்கள் தங்களோடு சில மனுஷரைக் கூட்டிக்கொண்டார்கள். அவர்கள் அதன்பின்பு பாரானிலிருந்து எகிப்து தேசத்திற்கு போனார்கள். அங்கே பார்வோன் எகிப்தின் ராஜாவாயிருந்தான்.

எகிப்தின் ராஜா ஆதாத்தை தன்னுடைய தேசத்தில் ஏற்றுக்கொண்டான். ஆதாதுக்குப் பார்வோனின் கண்களில் மிகுந்த தயைகிடைத்தபடியினால், அவன் ராஜஸ்திரீயாகிய தாப்பெனேஸ் என்னும் தன் மனைவியின் சகோதரியை அவனுக்கு விவாகஞ்செய்துகொடுத்தான் (1இராஜா 11:19).

எகிப்தின் ராஜாவாகிய பார்வோன், ஆதாத்தை தன்னுடைய தேசத்திலே ஒரு இளவரசனைப்போல நடத்தினான். அவனுக்கு சகல மரியாதைகளையும் கொடுத்தான். ஆதாத்திற்கு ராஜகுடும்பத்தில் விவாகம் நடைபெற்றது.

தாப்பெனேசின் சகோதரியாகிய இவள் அவனுக்குக் கேனுபாத் என்னும் ஒரு குமாரனைப் பெற்றாள்; அவனைத் தாப்பெனேஸ் பார்வோனின் வீட்டிலே வளர்த்தாள்; அப்படியே கேனுபாத் பார்வோனின் வீட்டில் அவனுடைய குமாரருடன் இருந்தான் (1இராஜா 11:20).

பார்வோனின் அரமனையில், ராஜாவின் பிள்ளைகள் வளருகிறார்கள். அந்த அரமனையில் ஆதாத்தின் குமாரனாகிய கேனுபாத்தும் வளருகிறான். எகிப்தின் அரமனையில், ஆதாத்திற்கு, ராஜகுமாரருக்கு ஒப்பான மதிப்பும் மரியாதையும் கொடுக்கப்படுகிறது.

ஆதாத் எகிப்து தேசத்திலிருக்கும்போது, தாவீது இஸ்ரவேல் தேசத்திலே மரித்துப்போகிறார். இந்தச் செய்தியை எகிப்திலிருக்கிற ஆதாத் கேள்விப்படுகிறான்.

தாவீது தன் பிதாக்களோடே நித்திரையடைந்தான் என்றும், படைத்தலைவனாகிய யோவாப் இறந்துபோனான் என்றும், எகிப்திலே ஆதாத் கேள்விப்பட்டபோது, ஆதாத் பார்வோனை நோக்கி: "நான் என் சுயதேசத்துக்குப் போக என்னை அனுப்பவேண்டும்" (1இராஜா 11:21) என்று கேட்கிறான்.

தாவீது மரித்துப்போன பின்பு, அவருடைய ஸ்தானத்திலே, சாலொமோன் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாகிறார். சாலொமோன் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்தில் ஜீவித்த வரையிலும், ஆதாத் சாலொமோனுக்கு விரோதமாக இருந்ததில்லை. ஆதாத் பார்வோனின் அரமனையில் சந்தோஷமாயிருக்கிறார். அக்காலத்தில் சாலொமோனும் கர்த்தருக்கு பயந்து ஜீவித்தார். இஸ்ரவேல் தேசத்தை கர்த்தருக்கு பயந்து ராஜ்யபாரம் பண்ணினார்.

அதன் பின்பு சாலொமோன் அந்நிய ஸ்திரீகளை விவாகம்பண்ணி, அந்நிய தெய்வங்களை ஆராதனை செய்தார். அவர் கர்த்தரைவிட்டு விலகிப்போனார். சாலொமோன் கர்த்தருக்கு சத்துருவானார். இந்த சூழ்நிலையில் கர்த்தர் ஆதாத்தை சாலொமோனுக்கு விரோதியாக எழுப்புகிறார். ஆதாத் பார்வோனை நோக்கி, "நான் என் சுயதேசத்திற்குப்போக என்னை அனுப்பவேண்டும்" (1இராஜா 11:21) என்று கேட்கிறான்.

பார்வோன் ஆதாத்தின்மீது பிரியமாயிருக்கிறான். ஆதாத்தின் சுயதேசத்திற்கு அவனை அனுப்ப பார்வோனுக்கு இஷ்டமில்லை. பார்வோன் ஆதாத்தை நோக்கி, "இதோ, நீ உன் சுயதேசத்துக்குப்போக விரும்புகிறதற்கு, என்னிடத்தில் உனக்கு என்ன குறைவு இருக்கிறது" என்று கேட்கிறான்; அதற்கு ஆதாத்: "ஒரு குறைவும் இல்லை; ஆகிலும் என்னை அனுப்பிவிடவேண்டும்" (1இராஜா 11:22) என்று சொல்லுகிறான்.

கர்த்தர் ஆதாத்தை சாலொமோனுக்கு சத்துருவாக எழுப்புகிறார். ஆகையினால் ஆதாத்தால் எகிப்து தேசத்தில் அமைதியாக இருக்கமுடியவில்லை. கர்த்தர் அனுப்பும்போது ஆதாத்தால் போகாமலிருக்கவும் முடியாது.

கர்த்தர் ரேசோன் என்னும் வேறொரு விரோதியை சாலொமோனுக்கு எழுப்புகிறார். இவன் சீரிய தேசத்தைச் சேர்ந்தவன். இவன் எலியாதாவின் குமாரன்.

ரேசோன் தன் ஆண்டவனாகிய ஆதாதேசர் என்னும் சோபாவின் ராஜாவை விட்டு ஓடிப்போய், தாவீது சோபாவில் உள்ளவர்களைக் கொன்றுபோடுகையில், அவன் தன்னோடே சில மனுஷரைச் சேர்த்துக்கொண்டு, அந்தக் கூட்டத்திற்குத் தலைவனானான்; இவர்கள் தமஸ்குவுக்குப் போய், அங்கே குடியிருந்து, தமஸ்குவில் ஆண்டார்கள் (1இராஜா 11:23,24).

ரேசோன் சாலொமோனுடைய நாளெல்லாம் இஸ்ரவேலுக்கு விரோதியாகி, சீரியாவின்மேல் ராஜாவாயிருந்து, இஸ்ரவேலைப் பகைக்கிறான் (1இராஜா 11:25).

சாலொமோன் கர்த்தருக்கு பயந்து ஜீவித்த நாட்கள் வரையிலும், ரேசோன் தமஸ்குவிலே ஆளுகை செய்கிறான். அதுவரையிலும் அவன் சாலொமோனுக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை. சாலொமோன் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்ய ஆரம்பித்தபோது, ரேசோன் சாலொமோனுடைய நாளெல்லாம் இஸ்ரவேலுக்கு விரோதியாகிறான். ரேசோன் ஒருவேளை ஆதாத்தோடு உடன்படிக்கை செய்து, சாலொமோனுடைய நாளெல்லாம் இஸ்ரவேலுக்கு விரோதியாகயிருந்திருக்க வேண்டும். சாலொமோன் கர்த்தரை விட்டு விலகிப்போனபோது, கர்த்தருடைய பாதுகாப்பும், பராமரிப்பும் அவருக்கு கிடைக்கவில்லை.

யெரொபெயாம்

1இராஜா 11:26-40

1இராஜா 11:26. சேரேதா ஊரிலுள்ள எப்பிராயீம் மனுஷனாகிய நேபாத்தின் குமாரன் யெரொபெயாம் என்னும் சாலொமோனின் ஊழியக்காரனும் ராஜாவுக்கு விரோதமாய்க் கையெடுத்தான்; அவனுடைய தாய் செரூகாள் என்னும் பேருள்ள ஒரு விதவை.

1இராஜா 11:27. அவன் ராஜாவுக்கு விரோதமாய்க் கையெடுத்த முகாந்தரம் என்னவென்றால், சாலொமோன் மில்லோவைக்கட்டி, தன் தகப்பனாகிய தாவீதுடைய நகரத்தின் இடிந்துபோன இடங்களைப் பழுது பார்த்தபோது,

1இராஜா 11:28. யெரொபெயாம் என்பவன் பராக்கிரமசாலியாயிருந்தான்; அவன் காரிய சமர்த்தனான வாலிபன் என்று சாலொமோன் கண்டு, யோசேப்பு வம்சத்தாரின் காரியத்தையெல்லாம் அவன் விசாரிப்புக்கு ஒப்புவித்தான்.

1இராஜா 11:29. அக்காலத்திலே யெரொபெயாம் எருசலேமிலிருந்து வெளியே போகிற போது, சீலோனியனான அகியா என்னும் தீர்க்கதரிசி புதுச்சால்வையைப் போர்த்துக் கொண்டிருந்து, வழியிலே அவனைக் கண்டான்; இருவரும் வயல்வெளியிலே தனித்திருக்கையில்,

1இராஜா 11:30. அகியா தான் போர்த்துக் கொண்டிருந்த புதுச்சால்வையைப் பிடித்து, அதைப் பன்னிரண்டு துண்டாகக் கிழித்துப்போட்டு,

1இராஜா 11:31. யெரொபெயாமை நோக்கி: பத்துத் துண்டுகளை எடுத்துக்கொள்; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் ராஜ்யபாரத்தைச் சாலொமோனுடைய கையிலிருந்து எடுத்துக் கிழித்து, உனக்குப் பத்துக் கோத்திரங்களைக் கொடுப்பேன்.

1இராஜா 11:32. ஆனாலும் என் தாசனாகிய தாவீதுக்காகவும், நான் இஸ்ரவேல் கோத்திரங்களில் எல்லாம் தெரிந்துகொண்ட எருசலேம் நகரத்துக்காகவும், ஒரு கோத்திரம் அவனுக்கு இருக்கும்.

1இராஜா 11:33. அவர்கள் என்னைவிட்டு, சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும், மோவாபியரின் தேவனாகிய காமோசையும், அம்மோன் புத்திரரின் தேவனாகிய மில்கோமையும் பணிந்துகொண்டு, அவன் தகப்பனாகிய தாவீதைப்போல என் பார்வைக்குச் செம்மையாய் இருக்கிறதைச் செய்யவும், என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்ளவும், அவர்கள் என் வழிகளில் நடவாமற்போனபடியினால் அப்படிச் செய்வேன்.

1இராஜா 11:34. ஆனாலும் ராஜ்யபார முழுவதையும் நான் அவன் கையிலிருந்து எடுத்துப் போடுவதில்லை; நான் தெரிந்துகொண்டவனும், என் கற்பனைகளையும் என் கட்டளைகளையும் கைக்கொண்டவனுமான என் தாசனாகிய தாவீதினிமித்தம், அவன் உயிரோடிருக்கும் நாளெல்லாம் அவனை அதிபதியாக வைப்பேன்.

1இராஜா 11:35. ஆனாலும் ராஜ்யபாரத்தை அவன் குமாரன் கையிலிருந்து எடுத்து, அதிலே பத்துக் கோத்திரங்களை உனக்குத் தருவேன்.

1இராஜா 11:36. என் நாமம் விளங்கும்படிக்கு, நான் தெரிந்துகொண்ட நகரமாகிய எருசலேமிலே என் சமுகத்தில் என் தாசனாகிய தாவீதுக்கு எந்நாளும் ஒரு விளக்கு இருக்கத்தக்கதாக, அவன் குமாரனுக்கு ஒரு கோத்திரத்தைக் கொடுப்பேன்.

1இராஜா 11:37. நீ உன் மனவிருப்பத்தின்படி ஆண்டுகொண்டு, இஸ்ரவேலின்மேல் ராஜாவாய் இருப்பதற்காக நான் உன்னைத் தெரிந்துகொண்டேன்.

1இராஜா 11:38. நான் உனக்குக் கட்டளையிட்டதையெல்லாம் நீ கேட்டுக் கைக்கொண்டு, நீ என் வழிகளில் நடந்து, என் தாசனாகிய தாவீது செய்ததுபோல, என் கட்டளைகளையும் என் கற்பனைகளையும் கைக்கொள்ளும்படிக்கு என் பார்வைக்குச் செம்மையானதைச் செய்கிறதுண்டானால், நான் உன்னோடிருந்து, நான் தாவீதுக்குக் கட்டினதுபோல உனக்கும் நிலையான வீட்டைக் கட்டி இஸ்ரவேலை உனக்குத் தருவேன்.

1இராஜா 11:39. இப்படி நான் இந்தக் காரியத்தினிமித்தம் தாவீதின் சந்ததியைச் சிறுமைப்படுத்துவேன்; ஆகிலும் எந்நாளும் அப்படியிராது என்று சொன்னான்.

1இராஜா 11:40. அதினிமித்தம் சாலொமோன் யெரொபெயாமைக் கொல்ல வகைதேடினான்; யெரொபெயாம் எழுந்து, எகிப்திற்குச் சீஷாக் என்னும் எகிப்தின் ராஜாவினிடத்தில் ஓடிப்போய், சாலொமோன் மரணமடையுமட்டும் எகிப்தில் இருந்தான்.

இந்த வசனப்பகுதியில் யெரொபெயாமைப்பற்றி முதன் முறையாக சொல்லப்பட்டிருக்கிறது. இவன் சேரேதா ஊரிலுள்ள எப்பிராயீம் மனுஷனாகிய நேபாத்தின் குமாரன். அவனுடைய தாய் செரூகாள் என்னும் பேருள்ள ஒரு விதவை (1இராஜா 11:26). யெரொபெயாம் இஸ்ரவேலை பாவம் செய்யப்பண்ணினான்.

கர்த்தர் சாலொமோனை நோக்கி: "நான் உனக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையையும் என் கட்டளைகளையும் நீ கைக்கொள்ளாமற்போய் இந்தக் காரியத்தைச் செய்தபடியினால், ராஜ்யபாரத்தை உன்னிடத்திலிருந்து பிடுங்கி, அதை உன் ஊழியக்காரனுக்குக் கொடுப்பேன்" (1இராஜா 11:11) என்று சொன்னார்.

கர்த்தர் சாலொமோனுக்கு சொன்ன தம்முடைய வார்த்தையில் யெரொபெயாமின் பெயரைச் சொல்லவில்லை. அதற்கு பதிலாக, "உன் ஊழியக்காரன்" என்று சொல்லுகிறார். யெரொபெயாமே கர்த்தர் சொன்ன சாலொமோனுடைய ஊழியக்காரன். கர்த்தர் தாம் சொன்ன பிரகாரம், இஸ்ரவேலின் ராஜ்யபாரத்தை, சாலொமோனிடத்திலிருந்து பிடுங்கி, அதை அவருடைய ஊழியக்காரனாகிய யெரொபெயாமுக்கு கொடுக்கிறார்.

யெரொபெயாம் எப்பிராயீம் கோத்திரத்தைச் சேர்ந்தவன். இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரில் யூதாகோத்திரத்தார் முதன்மையானவர்களாயிருக்கிறார்கள். யூதாவுக்கு அடுத்தபடியாக எப்பிராயீம் கோத்திரத்தார் மேன்மை பெற்றவர்கள். யெரொபெயாமின் தாயாருடைய பெயர் செருகாள். இவள் ஒரு விதவை.

சாலொமோன் கர்த்தருக்கு பயந்து, அவருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்து ஜீவித்தபோது, அவர் மில்லோவைக் கட்டினார். இஸ்ரவேல் தேசத்திலே காரியசமர்த்தரை சாலொமோன் தன்னோடு சேர்த்துக்கொண்டார்.

சாலொமோன் மில்லோவைக்கட்டி, தன் தகப்பனாகிய தாவீதுடைய நகரத்தின் இடிந்துபோன இடங்களைப் பழுது பார்த்தார். அப்போது, யெரொபெயாம் என்பவன் பராக்கிரமசாலியாயிருந்தான்; அவன் காரிய சமர்த்தனான வாலிபன் என்று சாலொமோன் கண்டு, யோசேப்பு வம்சத்தாரின் காரியத்தையெல்லாம் அவன் விசாரிப்புக்கு ஒப்புவித்தார் (1இராஜா 11:27,28).

யெரொபெயாம் யோசேப்பு வம்சத்தாரிடமிருந்து சாலொமோனுக்கு வரிவசூல் பண்ணவேண்டும். அந்த வம்சத்தாரின் இராணுவ காரியங்களையெல்லாம் பராமரிக்கவேண்டும். யோசேப்பு வம்சத்தாரிலிருந்து, சாலொமோனுடைய சேனைக்கு யுத்தவீரர்களை தேர்ந்தெடுக்கும் பொறுப்பு யெரொபெயாமுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கவேண்டும்.

சவுலுக்கும் சாமுவேலுக்கும் ஒரு வித்தியாசமுண்டு. சவுல் பராக்கிரமசாலிகளையும் பலசாலிகளையும் தன்னிடத்தில் சேர்த்துக்கொண்டார். சாலொமோனோ காரியசமர்த்தரை தன்னிடமாகச் சேர்த்துக்கொள்கிறார்.

"சவுல் இருந்த நாளெல்லாம் பெலிஸ்தரின்மேல் கடினமான யுத்தம் நடந்தது; சவுல் ஒரு பராக்கிரமசாலியையாகிலும் ஒரு பலசாலியையாகிலும் காணும்போது, அவர்கள் எல்லாரையும் தன்னிடமாகச் சேர்த்துக்கொள்ளுவான்" (1சாமு 14:52).

யெரொபெயாம் சாலொமோனுடைய ஆளுகையின் கீழிருக்கிறான். யோசேப்பு வம்சத்தாரின் காரியத்தையெல்லாம் யெரொபெயாம் விசாரிக்கிறான்.

அக்காலத்திலே யெரொபெயாம் எருசலேமிலிருந்து வெளியே போகிற போது, சீலோனியனான அகியா என்னும் தீர்க்கதரிசி புதுச்சால்வையைப் போர்த்துக்கொண்டிருந்து, வழியிலே அவனைக் காண்கிறான்; இருவரும் வயல்வெளியிலே தனித்திருக்கையில், அகியா தான் போர்த்துக்கொண்டிருந்த புதுச்சால்வையைப் பிடித்து, அதைப் பன்னிரண்டு துண்டாகக் கிழித்துப்போடுகிறார் (1இராஜா 11:29,30).

அகியா என்னும் தீர்க்கதரிசி யெரொபெயாமை நோக்கி, "பத்துத் துண்டுகளை எடுத்துக்கொள்" என்று சொல்லுகிறார். அகியா யெரொபெயாமுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: "இதோ, நான் ராஜ்யபாரத்தைச் சாலொமோனுடைய கையிலிருந்து எடுத்துக் கிழித்து, உனக்குப் பத்துக் கோத்திரங்களைக் கொடுப்பேன். ஆனாலும் என் தாசனாகிய தாவீதுக்காகவும், நான் இஸ்ரவேல் கோத்திரங்களில் எல்லாம் தெரிந்துகொண்ட எருசலேம் நகரத்துக்காகவும், ஒரு கோத்திரம் அவனுக்கு இருக்கும்" (1இராஜா 11:31,32).

இஸ்ரவேலின் ராஜ்யபாரத்தை கர்த்தர் தாவீதின் கையிலிருந்து எடுத்து, பத்துக்கோத்திரங்களை யெரொபெயாமின் கையிலே கொடுப்பார். கர்த்தர் இவ்வாறு செய்வதற்கான காரணத்தையும் சொல்லுகிறார்.

சாலொமோனும், அவருடைய பின்சந்ததியாரும் கர்த்தரைவிட்டு விலகி அந்நிய தெய்வங்களை பின்பற்றுகிறார்கள். "அவர்கள் என்னைவிட்டு, சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும், மோவாபியரின் தேவனாகிய காமோசையும், அம்மோன் புத்திரரின் தேவனாகிய மில்கோமையும் பணிந்துகொண்டு, அவன் தகப்பனாகிய தாவீதைப்போல என் பார்வைக்குச் செம்மையாய் இருக்கிறதைச் செய்யவும், என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்ளவும், அவர்கள் என் வழிகளில் நடவாமற்போனபடியினால் அப்படிச் செய்வேன்" (1இராஜா 11:33) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தை அகியா மூலமாக யெரொபெயாமுக்கு வெளிப்படுத்தப்படுகிறது.

சாலொமோன் மரித்துப்போன பின்பு, சமஸ்த இஸ்ரவேல் தேசம் இரண்டாகப் பிரிக்கப்படும். வடக்கு இஸ்ரவேல் தேசத்தில் பத்துக்கோத்திரத்தார் இருப்பார்கள். தெற்கு யூதாதேசத்தில் இரண்டு கோத்திரத்தார் இருப்பார்கள்.

சாலொமோன் மில்லோவைக் கட்டியபோது, அவர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆதரவைக் காண்பிக்கவில்லை. அதற்கு பதிலாக, அவர்களிடத்தில் அதிகமான வரிகளை வசூலித்து, அவர்களுக்கு பாரத்தை உண்டுபண்ணினார் என்று சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். இஸ்ரவேலின் ஒரு சில கோத்திரத்தார் சாலொமோனுக்கு மனப்பூர்வமாய் வரிசெலுத்தவில்லை. அவர்கள் சாலொமோனை விட்டுப்பிரிந்துபோக ஆயத்தமாயிருந்தார்கள்.

சாலொமோன் யெரொபெயாமை யோசேப்பு வம்சத்தாரின் காரியத்தையெல்லாம் விசாரிப்பதற்காக ஏற்படுத்துகிறார். யெரொபெயாம் யோசேப்பு வம்சத்தாரை, சாலொமோனுக்கு பதிலாக ஆளுகை செய்யவேண்டும். ஒருவேளை யோசேப்பு வம்சத்தார் சாலொமோனுக்கு வரிசெலுத்த மறுத்திருக்கலாம். சாலொமோனுடைய கட்டளைப் பிரகாரம், யெரொபெயாம் யோசேப்பு வம்சத்தாரின் காரியங்களை விசாரிப்பதற்காக, அவன் எருசலேமிலிருந்து வெளியே போகிறான்.

அப்பொழுது அகியா என்னும் தீர்க்கதரிசி யெரொபெயாமை சந்திக்கிறார். அகியா கர்த்தருடைய நாமத்தினால் யெரொபெயாமுக்கு தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். கர்த்தர் யெரொபெயாமை இஸ்ரவேலின் ஒரு பகுதிக்கு ராஜாவாக நியமித்திருக்கிறார். யெரொபெயாம் யோசேப்பு வம்சத்தாரை விசாரிப்பதற்காக போகிறார். கர்த்தரோ யெரொபெயாமை யோசேப்பு வம்சத்தாருக்கும், மேலும் இஸ்ரவேலின் சில கோத்திரங்களுக்கும் ராஜாவாக நியமிக்கிறார்.

அகியா சீலோ ஊரைச் சேர்ந்தவர். அகியாவைப்பற்றி 1இராஜா 14-ஆவது அதிகாரத்தில் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் சீலோவை முற்றிலுமாய் மறந்துவிடவில்லை. கர்த்தர் பூர்வநாட்களை நினைத்துப் பார்க்கிறார். கர்த்தர் சீலோவிலிருந்து அகியா என்னும் தீர்க்கதரிசியை எழுப்பி, சீலோ ஊராரை ஆசீர்வதிக்கிறார்.

அகியா யெரொபெயாமைச் சந்தித்து, தான் போர்த்துக்கொண்டிருந்த சால்வையைப் பிடித்து, அதை பன்னிரண்டு துண்டாகக் கிழித்துப்போடுகிறார். கர்த்தருடைய வார்த்தையை சொல்லுவதற்கு முன்பாக, அகியா அதை ஒரு அடையாளத்தின் மூலமாய் வெளிப்படுத்துகிறார். புதிய ஏற்பாட்டில் அகபு தீர்க்கதரிசி இதுபோல கர்த்தருடைய செய்தியை ஒரு அடையாளத்தின் மூலமாய் வெளிப்படுத்தியிருக்கிறார்.

"நாங்கள் அநேகநாள் அங்கே தங்கியிருக்கையில், அகபு என்னும் பேர் கொண்ட ஒரு தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து வந்தான். அவன் எங்களிடத்தில் வந்து, பவுலினுடைய கச்சையை எடுத்துத் தன் கைகளையும் கால்களையும் கட்டிக்கொண்டு: இந்தக் கச்சையையுடையவனை எருசலேமிலுள்ள யூதர் இவ்விதமாய்க் கட்டிப் புறஜாதியார் கைகளில் ஒப்புக்கொடுப்பார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார் என்றான்" (அப் 21:10,11).

அகியா சொன்ன தீர்க்கதரிசன செய்தி மிகவும் தெளிவாகவும், சுருக்கமாகவும் இருக்கிறது. அகியா கர்த்தருடைய நாமத்தினால் பேசுகிறார். கர்த்தர் ராஜ்யபாரத்தை சாலொமோனுடைய கையிலிருந்து எடுத்து, கிழித்து, யெரொபெயாமுக்கு பத்துக்கோத்திரங்களைக் கொடுப்பார். யெரொபெயாம் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களில், பத்துக்கோத்திரங்களுக்கு ராஜாவாயிருப்பார் (1இராஜா 11:31).

கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தை இவ்வாறு இரண்டாகப் பிரிப்பதற்கான காரணத்தையும் அகியா சொல்லுகிறார். யெரொபெயாமின் நற்குணத்தினிமித்தமாகவோ, அவர் செய்கிற விசேஷித்த ஊழியங்களினிமித்தமாகவோ, கர்த்தர் யெரொபெயாமின் ராஜ்யபாரத்திற்கு பத்துக்கோத்திரங்களைக் கொடுக்கவில்லை. கர்த்தர் சாலொமோன்மீது கோபமாயிருக்கிறார். சாலொமோன் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியாமல், அவரை விட்டு விலகிப்போய்விடுகிறார். சாலொமோனுடைய பின்மாற்றத்திற்கு தண்டனையாக, கர்த்தர் சாலொமோனுடைய கையிலிருந்து ராஜ்யபாரத்தை எடுத்து, அதில் பத்துக்கோத்திரத்தை யெரொபெயாமுக்கு கொடுக்கிறார்.

சாலொமோனும், அவருடைய குடும்பத்தாரும், அவரோடுகூடயிருக்கிற ஜனங்களும் கர்த்தரைவிட்டு அந்நிய தெய்வங்களை பின்பற்றிப்போகிறார்கள். அவர்கள் சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும், மோவாபியரின் தேவனாகிய காமோசையும், அம்மோன் புத்திரரின் தேவனாகிய மில்கோமையும் பணிந்துகொள்கிறார்கள் (1இராஜா 11:33).

சாலொமோன் தன்னுடைய தகப்பனாகிய தாவீதைப்போல, கர்த்தருடைய பார்வைக்கு செம்மையாயிருக்கிறதை செய்யவில்லை. அவர் கர்த்தருடைய கட்டளைகளையும், அவருடைய நியாயங்களையும் கைக்கொள்ளவில்லை. சாலொமோன் கர்த்தருடைய வழிகளில் நடக்கவுமில்லை. இதனால் கர்த்தர் சாலொமோனிடமிருந்து ராஜ்யபாரத்தை எடுத்து, அதில் பத்துக்கோத்திரத்தை யெரொபெயாமிடத்தில் கொடுக்கிறார்.

யெரொபெயாம் இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்திற்கு ராஜாவாயிருக்க அவனுக்கு ஒரு தகுதியுமில்லை. இஸ்ரவேலை ராஜ்யபாரம் பண்ணுகிற நல்ல ஊழியத்திற்கு யெரொபெயாம் பாத்திரமானவனுமல்ல. யெரொபெயாம் மோசமானவன். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்ததினால், யெரொபெயாமைப்போல ஒரு மோசமான ராஜா அவர்களை ராஜ்யபாரம் பண்ணவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிற்று. யெரொபெயாம் நன்மைக்கு பாத்திரவானல்ல. ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ தீங்குக்கு பாத்திரவான்களாயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் பன்னிரண்டு கோத்திரத்தாராயிருக்கிறார்கள். பன்னிரண்டு கோத்திரங்களில் பத்துக்கோத்திரத்தாரை மாத்திரமே கர்த்தர் யெரொபெயாமின் ஆளுகைக்கு ஒப்புக்கொடுக்கிறார். யெரொபெயாம் பேராசைப்பட்டு, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரையும் ராஜ்யபாரம் பண்ணவேண்டும் என்று நினைக்கக்கூடாது. அகபு இப்போது கர்த்தருடைய வார்த்தையை யெரொபெயாமுக்கு சொல்லுகிறார். சாலொமோன் உயிரோடிருக்கும்போதே, கர்த்தருடைய வார்த்தைகள் தனக்கு சித்திக்கவேண்டும் என்றும் யெரொபெயாம் அவசரப்படக்கூடாது. சாலொமோன் மரித்த பின்புதான், இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாரை ராஜ்யபாரம் பண்ணும் உரிமை யெரொபெயாமுக்கு கொடுக்கப்படும்.

கர்த்தருடைய வார்த்தை யெரொபெயாமுக்கு தெளிவாகச் சொல்லப்படுகிறது. இல்லையென்றால் அவன் அவசரப்பட்டு, சாலொமோன் உயிரோடிருக்கும்போதே, அவருடைய ராஜாசனத்திற்கு விரோதமாக கலகம் செய்ய ஆரம்பித்துவிடுவான். தேசத்திலே குழப்பத்தை ஏற்படுத்திவிடுவான். யெரொபெயாம் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாகவேண்டுமென்று ஆசைப்படுவான்.

கர்த்தர் அகியா மூலமாக, யெரொபெயாமுக்கு தம்முடைய வார்த்தையைச் சொல்லும்போது, "ஆனாலும் ராஜ்யபார முழுவதையும் நான் அவன் கையிலிருந்து எடுத்துப் போடுவதில்லை; நான் தெரிந்துகொண்டவனும், என் கற்பனைகளையும் என் கட்டளைகளையும் கைக்கொண்டவனுமான என் தாசனாகிய தாவீதினிமித்தம், அவன் உயிரோடிருக்கும் நாளெல்லாம் அவனை அதிபதியாக வைப்பேன். ஆனாலும் ராஜ்யபாரத்தை அவன் குமாரன் கையிலிருந்து எடுத்து, அதிலே பத்துக் கோத்திரங்களை உனக்குத் தருவேன்" (1இராஜா 11:34,35) என்று சொல்லுகிறார்.

யெரொபெயாம் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு அதற்கு கீழ்ப்படியவேண்டும். சாலொமோனை அவருடைய சிங்காசனத்திலிருந்து கீழே தள்ளுவதற்கு சதிவேலைகளை செய்யக்கூடாது. சாலொமோனுடைய ராஜ்யபாரத்திற்கு விரோதமாக கலகம்பண்ணக்கூடாது. கர்த்தர் தனக்கு நியமித்திருக்கிற காலம் வரையிலும், யெரொபெயாம் பொறுமையோடு காத்திருக்கவேண்டும்.

சாலொமோன் மரித்துப்போன பின்புதான் யெரொபெயாமுக்கு ராஜ்யபாரம் கொடுக்கப்படும். "என் தாசனாகிய தாவீதினிமித்தம், சாலொமோன் உயிரோடிருக்கும் நாளெல்லாம் அவனை அதிபதியாக வைப்பேன்" என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். யெரொபெயாம் அவசரப்பட்டு சாலொமோனைக் கொன்றுபோடக்கூடாது. யெரொபெயாம் தன்னுடைய நாளுக்காக பொறுமையோடு காத்திருக்கவேண்டும்.

இக்காலத்திலும், சில குடும்பங்களில் பிள்ளைகள் துன்மார்க்கராயும், அவர்களுடைய பெற்றோர் நீதிமான்களாயும் இருக்கிறார்கள். துன்மார்க்கமான பிள்ளைகள்கூட உலகப்பிரகாரமான காரியங்களில் செழித்திருக்கிறார்கள். அவர்களுடைய பெற்றோரின் பக்தியும், அவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து ஜீவித்த வாழ்க்கையும், பிள்ளைகளின் வாழ்க்கையில் ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறது.

சாலொமோனும், அவருடைய குடும்பத்தாரும், இஸ்ரவேல் ஜனங்களும் கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதை செய்யவில்லை. அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளையும், அவருடைய கட்டளைகளையும் கைக்கொள்ளவில்லை. இதன் நிமித்தமாக கர்த்தர் இஸ்ரவேலின் ராஜ்யபாரத்தை சாலொமோனின் கையிலிருந்து எடுத்துப்போடுகிறார்.

யெரொபெயாமுக்கு இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாரை ராஜ்யபாரம்பண்ணும் சிலாக்கியம் கிடைக்கிறது. யெரொபெயாமும் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். யெரொபெயாம் கர்த்தருக்கு கீழ்ப்படிந்தால், கர்த்தர் அவனையும், அவனுடைய வீட்டாரையும் ஆசீர்வதிப்பார்.

கர்த்தர் யெரொபெயாமை நோக்கி, "நான் உனக்குக் கட்டளையிட்டதையெல்லாம் நீ கேட்டுக் கைக்கொண்டு, நீ என் வழிகளில் நடந்து, என் தாசனாகிய தாவீது செய்ததுபோல, என் கட்டளைகளையும் என் கற்பனைகளையும் கைக்கொள்ளும்படிக்கு என் பார்வைக்குச் செம்மையானதைச் செய்கிறதுண்டானால், நான் உன்னோடிருந்து, நான் தாவீதுக்குக் கட்டினதுபோல உனக்கும் நிலையான வீட்டைக் கட்டி இஸ்ரவேலை உனக்குத் தருவேன்" (1இராஜா 11:38) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் எருசலேமை நேசிக்கிறார். அவர் தாவீதின்மேல் பிரியமாயிருக்கிறார். சாலொமோன் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தாலும், கர்த்தர் தாவீதின் நற்குணங்களை நினைத்துப் பார்க்கிறார். கர்த்தர் யெரொபெயாமிடம், "என் நாமம் விளங்கும்படிக்கு, நான் தெரிந்துகொண்ட நகரமாகிய எருசலேமிலே என் சமுகத்தில் என் தாசனாகிய தாவீதுக்கு எந்நாளும் ஒரு விளக்கு இருக்கத்தக்கதாக, அவன் குமாரனுக்கு ஒரு கோத்திரத்தைக் கொடுப்பேன்" (1இராஜா 11:36) என்று சொல்லுகிறார்.

ஆனாலும் சாலொமோன் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்ததினால், கர்த்தர் இஸ்ரவேலின் ராஜ்யபாரத்தை, சாலொமோனுடைய கையிலிருந்து எடுத்து, அதிலே பத்துக்கோத்திரங்களை யெரொபெயாமுக்கு தருவதாக சொல்லுகிறார். மேலும் கர்த்தர் யெரொபெயாமை நோக்கி, "நீ உன் மனவிருப்பத்தின்படி ஆண்டுகொண்டு, இஸ்ரவேலின்மேல் ராஜாவாய் இருப்பதற்காக நான் உன்னைத் தெரிந்துகொண்டேன்" (1இராஜா 11:37) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் தாவீதின் சந்ததியைச் சிறுமைப்படுத்துகிறார். அகியா யெரொபெயாமுக்கு கர்த்தருடைய வார்த்தைதயைச் சொல்லும்போது, "இப்படி நான் இந்தக் காரியத்தினிமித்தம் தாவீதின் சந்ததியைச் சிறுமைப்படுத்துவேன்; ஆகிலும் எந்நாளும் அப்படியிராது" (1இராஜா 11:39) என்று சொல்லுகிறார்.

அகியா யெரொபெயாமுக்கு சொன்ன கர்த்தருடைய வார்த்தைகளை சாலொமோனும் கேள்விப்படுகிறார். ஒருவேளை யெரொபெயாமே கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை, இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே பிரஸ்தாபம்பண்ணியிருக்கவேண்டும்.

சாலொமோன் கர்த்தரை ஆராதித்தபோது, கர்த்தருடைய விசேஷித்த ஞானம், சாலொமோனிடத்திலிருந்தது. சாலொமோனோ இப்போது கர்த்தரைவிட்டு விலகி, விக்கிரகங்களை ஆராதிக்கிறார். சாலொமோனிடத்தில் இப்போது ஞானத்திற்கு பதிலாக மதியீனம் இருக்கிறது. சாலொமோன் புத்தியீனமாய் யோசிக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேலின் ராஜ்யபாரத்தை தன் கையிலிருந்து எடுத்து, அதிலே பத்துக்கோத்திரங்களை யெரொபெயாமுக்கு தருவார் என்பதை சாலொமோனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதினிமித்தம் சாலொமோன் யெரொபெயாமைக் கொல்ல வகைதேடுகிறார். சாலொமோன் மதியீனமாய் சிந்திக்கிறார்.

யெரொபெயாமோ ஞானமாக சிந்தித்து, சாலொமோனின் கைக்கு தப்பி, எகிப்திற்கு ஓடிப்போகிறான். யெரொபெயாம் எழுந்து, எகிப்திற்குச் சீஷாக் என்னும் எகிப்தின் ராஜாவினிடத்தில் ஓடிப்போய், சாலொமோன் மரணமடையுமட்டும் எகிப்தில் இருக்கிறான் (1இராஜா 11:40).

சாலொமோனுடைய நடபடிகள் 1இராஜா 11:41-43

1இராஜா 11:41. சாலொமோனின் மற்ற நடபடிகளும், அவன் செய்தவை அனைத்தும், அவனுடைய ஞானமும், சாலொமோனுடைய நடபடிப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

1இராஜா 11:42. சாலொமோன் எருசலேமிலே இஸ்ரவேலையெல்லாம் அரசாண்ட நாட்கள் நாற்பது வருஷம்.

1இராஜா 11:43. சாலொமோன் தன் பிதாக்களோடே நித்திரையடைந்து, தன் தகப்பனாகிய தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணப்பட்டான்; அவன் குமாரனாகிய ரெகொபெயாம் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

சாலொமோனைப்பற்றிய சரித்திரம் இந்த வசனப்பகுதியில் நிறைவுபெறுகிறது. "சாலொமோனுடைய நடபடிப்புஸ்தகம்" என்று ஒரு புதிய புஸ்தகத்தைப்பற்றி இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. இதில் சாலொமோனுடைய சரித்திரங்களெல்லாம் விரிவாக எழுதப்பட்டிருக்கலாம். சாலொமோன் தன்னுடைய சரித்திரத்தை எழுதுவதற்காக சரித்திர ஆசிரியர்களை நியமித்திருக்கலாம்.

சாலொமோனின் மற்ற நடபடிகளும், அவர் செய்தவை அனைத்தும், அவருடைய ஞானமும், சாலொமோனுடைய நடபடிப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது (1இராஜா 11:41). சாலொமோனுடைய சரித்திரத்தில், கர்த்தருக்கு சித்தமான சம்பவங்கள் மாத்திரம், பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

சாலொமோன் எருசலேமிலே இஸ்ரவேலையெல்லாம் அரசாண்ட நாட்கள் நாற்பது வருஷம் (1இராஜா 11:42). தாவீதின் ஆட்சிக்காலத்தைப்போலவே, சாலொமோனுடைய ஆட்சிக்காலமும், நீண்ட ஆட்சிக்காலமாயிருக்கிறது. ஆனால் தாவீதைப்போல சாலொமோன் நீடித்த ஆயுசோடு ஜீவிக்கவில்லை. சாலொமோன் பூரண ஆயுசு காலம் வரையிலும் ஜீவிக்காமல் சீக்கிரத்தில் மரித்துப்போகிறார். சாலொமோனுடைய பாவம், அவருடைய ஜீவியகாலத்தை குறைத்துவிடுகிறது. பாவத்தின் சம்பளம் மரணம்.

சாலொமோன் தன் பிதாக்களோடே நித்திரையடைந்து, தன் தகப்பனாகிய தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணப் படுகிறார். சாலொமோனுடைய குமாரனாகிய ரெகொபெயாம் அவருடைய ஸ்தானத்தில் ராஜாவாகிறான் (1இராஜா 11:43).

சாலொமோன் கர்த்தருடைய கட்டளைகளையும், அவருடைய நியாயங்களையும் கைக்கொள்ளவில்லை. அவர் தாவீதைப்போல கர்த்தருடைய வழிகளில் நடக்கவில்லை. ஆனால் அடக்கம்பண்ணப்படுவதற்கு, அவர் தன் தகப்பனாகிய தாவீதின் வழிகளில் நடக்கிறார். சாலொமோன் தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணப்படுகிறார்.

12 அதிகாரம்

இஸ்ரவேல் தேசத்தின் மகிமை உன்னதமான நிலமைக்கு வளர்ந்து வந்தது. சாலொமோனுடைய ராஜ்யபாரத்திலே இஸ்ரவேல் தேசம் பரிபூரணமான வளர்ச்சி பெற்றிருந்தது. இஸ்ரவேல் தேசம் பரிபூரண வளர்ச்சியடைவதற்கு பல வருஷங்களாயிற்று. ஆனாலும் இஸ்ரவேல் தேசத்தின் மகிமை சீக்கிரத்தில் மங்கிப்போயிற்று. இஸ்ரவேல் தேசம் தாழ்ச்சியடைந்தது.

சாலொமோனுக்கு பின்பு அவருடைய குமாரன் ரெகொபெயாம் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாகிறான். யெரொபெயாம் எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேல் தேசத்திற்கு திரும்பி வருகிறான் (1இராஜா 12:1,2).

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய குறைகளையும், வருத்தங்களையும் வேதனைகளையும் ரெகொபெயாமினிடத்தில் முறையிருக்கிறார்கள். ரெகொபெயாம் இஸ்ரவேல் ஜனங்களுடைய குறைகளை தீர்த்து வைப்பதற்கு பதிலாக, அவர்களுக்கு ஆணவமான பதிலைச் சொல்லுகிறான். ரெகொபெயாம் முதியோரின் ஆலோசனைக்கு செவிகொடுக்காமல், தன்னைப்போன்ற வாலிபரின் பொல்லாத ஆலோசனைக்கு செவிகொடுக்கிறான் (1இராஜா 12:3-15).

இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் ரெகொபெயாமுக்கு விரோதமாக கலகம்பண்ணுகிறார்கள். அவர்கள் யெரொபெயாமை தங்களுக்கு ராஜாவாக்குகிறார்கள் (1இராஜா 12:16-20). தனக்கு விரோதமாக கலகம்பண்ணுகிறவர்களை ரெகொபெயாம் ஒடுக்க முயற்சி பண்ணுகிறான். கர்த்தரோ அவனுடைய முயற்சிகளை தடைபண்ணிவிடுகிறார் (1இராஜா 12:21-24).

யெரொபெயாம் தன்னுடைய ராஜ்யபாரத்தை விக்கிரகாராதனையின்மீது ஸ்தாபிக்கிறான் (1இராஜா 12:25-33). இஸ்ரவேல் புத்திரரில் பத்துக்கோத்திரத்தார் தனியாக பிரிந்துபோனதினால், யூதாதேசம் பலவீனமாயிற்று. இஸ்ரவேல் தேசத்தார் கர்த்தரைவிட்டுப் பிரிந்துபோனதினால், அவர்களுடைய தேசமும் பலவீனமாயிற்று.

ரெகொபெயாம்
1இராஜா 12:1-15

1இராஜா 12:1. ரெகொபெயாமை ராஜாவாக்கும்படி, இஸ்ரவேலர் எல்லாரும் சீகேமுக்கு வந்திருந்தபடியால், அவனும் சீகேமுக்குப் போனான்.

1இராஜா 12:2. ராஜாவாகிய சாலொமோனை விட்டு ஓடிப்போய், எகிப்திலே குடியிருந்த நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமோ, எகிப்தில் இருக்கையில் இதைக் கேள்விப்பட்டான்.

1இராஜா 12:3. அவர்கள் யெரொபெயாமுக்கு ஆள் அனுப்பி அவனை அழைப்பித்தார்கள்; அவனும் இஸ்ரவேல் சபை அனைத்தும் வந்து, ரெகொபெயாமை நோக்கி:

1இராஜா 12:4. உம்முடைய தகப்பன் பாரமான நுகத்தை எங்கள்மேல் வைத்தார்; இப்போதும் நீர் உம்முடைய தகப்பன் சுமத்தின கடினமான வேலையையும், அவர் எங்கள்மேல் வைத்த பாரமான நுகத்தையும் லகுவாக்கும்; அப்பொழுது உம்மைச் சேவிப்போம் என்றார்கள்.

1இராஜா 12:5. அதற்கு அவன்: நீங்கள் போய், மூன்றுநாள் பொறுத்து என்னிடத்தில் திரும்பிவாருங்கள் என்றான்; அப்படியே ஜனங்கள் போயிருந்தார்கள்.

1இராஜா 12:6. அப்பொழுது ராஜாவாகிய ரெகொபெயாம் தன் தகப்பனாகிய சாலொமோன் உயிரோடிருக்கையில் அவன் சமுகத்தில் நின்ற முதியோரோடே ஆலோசனை பண்ணி, இந்த ஜனங்களுக்கு மறுஉத்தரவு கொடுக்க, நீங்கள் என்ன யோசனை சொல்லுகிறீர்கள் என்று கேட்டான்.

1இராஜா 12:7. அதற்கு அவர்கள்: நீர் இன்று இந்த ஜனங்களுக்கு சேவகனாகி, அவர்களுக்கு இணங்கி, அவர்கள் சொற்படி செய்து, மறுமொழியாக நல்வார்த்தைகளைச் சொல்வீரானால், எந்நாளும் அவர்கள் உமக்கு ஊழியக்காரராயிருப்பார்கள் என்றார்கள்.

1இராஜா 12:8. முதியோர் தனக்குச் சொன்ன ஆலோசனையை அவன் தள்ளிவிட்டு, தன்னோடே வளர்ந்து தன் சமுகத்தில் நிற்கிற வாலிபரோடே ஆலோசனைபண்ணி,

1இராஜா 12:9. அவர்களை நோக்கி: உம்முடைய தகப்பன் எங்கள்மேல் வைத்த நுகத்தை லகுவாக்கும் என்று என்னிடத்தில் சொன்ன இந்த ஜனங்களுக்கு மறுமொழி கொடுக்க, நீங்கள் என்ன யோசனை சொல்லுகிறீர்கள் என்று கேட்டான்.

1இராஜா 12:10. அப்பொழுது அவனோடே வளர்ந்த வாலிபர் அவனை நோக்கி: உம்முடைய தகப்பன் எங்கள் நுகத்தைப் பாரமாக்கினார், நீர் அதை எங்களுக்கு லகுவாக்கும் என்று உம்மிடத்தில் சொன்ன இந்த ஜனத்திற்கு நீர் சொல்லவேண்டியது என்னவென்றால்: என் சுண்டுவிரல் என் தகப்பனாருடைய இடுப்பைப் பார்க்கிலும் பருமனாயிருக்கும்.

1இராஜா 12:11. இப்போதும் என் தகப்பன் பாரமான நுகத்தை உங்கள்மேல் வைத்தார், நான் உங்கள் நுகத்தை அதிக பாரமாக்குவேன்; என் தகப்பன் உங்களைச் சவுக்குகளினாலே தண்டித்தார், நான் உங்களைத் தேள்களினாலே தண்டிப்பேன் என்று நீர் அவர்களோடே சொல்லவேண்டும் என்றார்கள்.

1இராஜா 12:12. மூன்றாம்நாள் என்னிடத்தில் வாருங்கள் என்று ராஜா சொல்லியிருந்தபடியே, யெரொபெயாமும் சகல ஜனங்களும் மூன்றாம் நாளிலே ரெகொபெயாமிடத்தில் வந்தார்கள்.

1இராஜா 12:13. ராஜா முதியோர் தனக்குச் சொன்ன ஆலோசனையைத் தள்ளிவிட்டு, வாலிபருடைய ஆலோசனையின்படியே அவர்களோடே பேசி:

1இராஜா 12:14. என் தகப்பன் உங்கள் நுகத்தைப் பாரமாக்கினார், நான் உங்கள் நுகத்தை அதிக பாரமாக்குவேன்; என் தகப்பன் உங்களைச் சவுக்குகளினாலே தண்டித்தார், நான் உங்களைத் தேள்களினாலே தண்டிப்பேன் என்று ஜனங்களுக்குக் கடினமான உத்தரவு கொடுத்தான்.

1இராஜா 12:15. ராஜா ஜனங்களுக்குச் செவிகொடாமற்போனான்; கர்த்தர் சீலோனியனான அகியாவைக்கொண்டு நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமுக்குச் சொன்ன தம்முடைய வார்த்தையை உறுதிப்படுத்தும்படி கர்த்தரால் இப்படி நடந்தது.

சாலொமோனுக்கு எழுநூறு மனையாட்டிகளும் முந்நூறு மறுமனையாட்டிகளும் இருந்தார்கள். சாலொமோனுக்கு இவர்கள் மூலமாக ஏராளமான குழந்தைகள் பிறந்திருக்கவேண்டும். ஆனாலும் சாலொமோனுடைய குமாரரில், ரெகொபெயாம் என்னும் ஒருவனைப்பற்றி மாத்திரமே இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. சாலொமோனிடத்தில் விசேஷித்த ஞானம் இருந்தது. அவருடைய குமாரனாகிய ரெகொபெயாமோ மதியீனனாயிருக்கிறான்.

பாவத்தினால் கட்டப்படும் குடும்பம் ஆசீர்வாதமாயிராது. சாலொமோன் கர்த்தருக்கு ஆலயம் கட்டினாலும், அவர் அந்நிய தெய்வங்களுக்கும் கோவில்களை கட்டினார். சாலொமோன் கர்த்தருக்கு பலிசெலுத்தினாலும், அவர் அந்நிய தெய்வங்களுக்கும் தூபங்காட்டினார். சாலொமோனுடைய குடும்பத்தில் பாவம் நிரம்பியிருக்கிறது. சாலொமோனுடைய குடும்பத்தாரை பாவம் ஆளுகை செய்கிறது.

ரெகொபெயாமின் தகப்பனாராகிய சாலொமோன் மிகப்பெரிய ஞானி. ஆனால் ரெகொபெயாமோ சாலொமோனுடைய ஞானத்தை சுதந்தரித்துக்கொள்ளவில்லை. ஞானமும் கிருபையும் சந்ததி பரம்பரையாக வருவதில்லை. அவை முன்னோர்களுடைய இரத்தத்தில் கலந்து, அவர்களுடைய பின்சந்ததியாருக்கு கிடைப்பதில்லை.

சாலொமோனுடைய ராஜாசனம் ஞானம் வெளிப்படும் ஸ்தலமாயிருக்கிறது. அங்கே ஞானிகளும் பிரபுக்களும் அமர்ந்திருக்கிறார்கள். ரெகொபெயாம் சாலொமோனுடைய அரமனையில் வளர்ந்தவன். அவன் ஞானிகள் மத்தியிலே உலாவினவன். ஆனாலும் ரெகொபெயாமினிடத்தில் ஞானமில்லை. அவன் ஞானிகள் மத்தியிலே வளர்ந்தவனாயிருந்தாலும், அவன் மதியீனனாயிருக்கிறான்.

இஸ்ரவேலர் எல்லோரும் ரெகொபெயாமை ராஜாவாக்கும்படி சீகேமுக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் ரெகொபெயாமோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்ள விரும்புகிறார்கள். ரெகொபெயாமை ராஜாவாக்க வேண்டுமென்று இஸ்ரவேலரெல்லாரும் தங்கள் வாயினால் சொல்லுகிறார்கள். ஆனால் ரெகொபெயாம் இஸ்ரவேலுக்கு ராஜாவாகக்கூடாது என்னும் திட்டம் அவர்களுடைய இருதயத்திலிருக்கிறது.

ரெகொபெயாமை ராஜாவாக்க வேண்டுமென்றால், அவனை தாவீதின் நகரத்திலே, ராஜாவாக அபிஷேகம் பண்ணலாம். ஆனால் இஸ்ரவேலரோ தாவீதின் நகரத்தை தெரிந்தெடுக்காமல், சீமேமைத் தெரிந்தெடுக்கிறார்கள். தாவீதின் நகரத்தில் ரெகொபெயாமை ராஜாவாக்கினால் அவன் யூதாகோத்திரத்தாருக்கு மாத்திரம் ராஜாவானதுபோல இருக்கும். அவனை சீகேமிலே ராஜாவாக்கினால், இஸ்ரவேலர் எல்லோருக்கும் ராஜாவாக்கினதாக ஆகும்.

இஸ்ரவேலுடைய சரித்திரத்திலே, சீகேம் பிரசித்திப் பெற்ற ஸ்தலம். அபிமெலேக்கு சீகேமிலே தன்னைத்தானே ராஜாவாக்கிக் கொண்டான் (நியா 11-ஆவது அதிகாரம்). யோசுவாவின் காலத்திலிருந்து, இஸ்ரவேல் புத்திரர் அனைவரும், முக்கியமான காரியங்களை விவாதிப்பதற்காக சீகேமிலே கூடிவருவது வழக்கம்.

"பின்பு யோசுவா இஸ்ரவேலின் கோத்திரங்களையெல்லாம் சீகேமிலே கூடிவரப்பண்ணி, இஸ்ரவேலின் மூப்பரையும், தலைவரையும், நியாயாதிபதிகளையும், அதிபதிகளையும் வரவழைத்தான்; அவர்கள் தேவனுடைய சந்நிதியில் வந்து நின்றார்கள்" (யோசு 24:1).

தன்னுடைய ராஜ்யபாரத்திற்கு வந்திருக்கும் ஆபத்து ரெகொபெயாமுக்கும் தெரிகிறது. இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் தன்னுடைய ராஜாங்கத்தைவிட்டு பிரிந்துபோய் விடுவார்கள் என்பதை ரெகொபெயாமும் உணர்ந்திருக்கிறான். ஆகையினால் ரெகொபெயாமும் சீகேமுக்குப்போய், அவர்களோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறான். இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாரும் தன்னைவிட்டுப் பிரிந்துபோய்விடாமல், அவர்களை தன்னிடத்தில் தக்க வைத்துக்கொள்ள ரெகொபெயாம் முயற்சிபண்ணுகிறான்.

ரெகொபெயாம் நல்ல நோக்கத்தோடு சீகேமுக்குப்போனாலும், அவனுடைய தீயசுபாவமும், மதியீனமும், அவனுடைய திட்டத்தை கெடுத்துப்போடுகிறது. ரெகொபெயாம் அவசரப்படுகிறான். மதியீனமாக செயல்படுகிறான்.

இஸ்ரவேலர் எல்லோரும் சீகேமுக்கு வந்திருக்கிறார்கள் என்னும் செய்தியை யெரொபெயாமும் கேள்விப்படுகிறான். ரெகொபெயாமை ராஜாவாக்கும்படி, இஸ்ரவேலர் எல்லாரும் சீகேமுக்கு வந்திருந்தபடியால், அவனும் சீகேமுக்குப் போகிறான். ராஜாவாகிய சாலொமோனை விட்டு ஓடிப்போய், எகிப்திலே குடியிருந்த நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமும், எகிப்தில் இருக்கையில் இதைக் கேள்விப்படுகிறான் (1இராஜா 12:1,2).

இஸ்ரவேலர் எல்லோரும் யெரொபெயாமுக்கு ஆள் அனுப்பி அவனை அழைப்பிக்கிறார்கள். யெரொபெயாமும் எகிப்து தேசத்திலிருந்து சீகேமுக்கு வருகிறான். ரெகொபெயாமும் அப்போது சீகேமிலே இருக்கிறான் (1இராஜா 12:3).

யெரொபெயாமும், இஸ்ரவேல் சபை அனைத்தும் ரெகொபெயாமை சந்திக்கிறார்கள். அவனிடத்தில் தங்களுடைய குறைகளை முறையிடுகிறார்கள். அவர்கள் ரெகொபெயாமை நோக்கி, "உம்முடைய தகப்பன் பாரமான நுகத்தை எங்கள்மேல் வைத்தார்; இப்போதும் நீர் உம்முடைய தகப்பன் சுமத்தின கடினமான வேலையையும், அவர் எங்கள்மேல் வைத்த பாரமான நுகத்தையும் லகுவாக்கும்; அப்பொழுது உம்மைச் சேவிப்போம்" (1இராஜா 12:4) என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் சாலொமோனுடைய காலத்திலே அரமனைக்கு அதிகமான வரிகளை செலுத்தினார்கள். சாலொமோனும் ஜனங்கள்மீது கடினமான வேலைகளை சுமத்தினார். ரெகொபெயாம் இந்தப் பாரங்களையெல்லாம் ஜனங்களைவிட்டு நீக்கவேண்டும் என்று இஸ்ரவேல் சபை அனைத்தும், முறையிடுகிறார்கள்.

இஸ்ரவேல் சபையார் ரெகொபெயாமிடத்தில் தாங்களாக போய் பேசாமல், எகிப்து தேசத்திலிருக்கிற யெரொபெயாமை தங்களிடத்திற்கு அழைத்து வந்து, அவனை தங்களுக்கு தலைவனாக்கி, அவனோடுகூட ரெகொபெயாமை சந்தித்து பேசுகிறார்கள்.

"உம்முடைய தகப்பன் பாரமான நுகத்தை எங்கள்மேல் வைத்தார்" என்பதே இஸ்ரவேல் சபையார் ரெகொபெயாமிடம் சொல்லுகிற முதலாவது குற்றச்சாட்டு. அவர்கள் சாலொமோனுடைய விக்கிரகாராதனையைப்பற்றி குற்றம் சொல்லவில்லை. இஸ்ரவேலர் எல்லோரும் ஆவிக்குரிய காரியங்களில் அனலுமில்லாமல், குளிருமில்லாமலிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய ஆராதனையையும், கர்த்தரையும் அசட்டைபண்ணி, நிர்விசாரமாக ஜீவிக்கிறார்கள். சாலொமோன் கர்த்தரை ஆராதித்தாலும், விக்கிரகங்களை ஆராதித்தாலும், அதினால் தங்களுக்கு ஒன்றும் பிரச்சனையில்லை என்பதுபோல இஸ்ரவேல் சபையார் பேசுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போயிருக்கிறார்கள். அவர்களுக்கு கர்த்தருக்கும் மோளேகுக்கும் வித்தியாசம் தெரியவில்லை. இரண்டுபேருமே ஒன்றுதான் என்று நினைக்கிறார்கள். இஸ்ரவேல் சபையார் ஆவிக்குரிய காரியங்களில் கவனம் செலுத்தாமல், தங்கள்மீது வைக்கப்பட்டிருக்கிற பாரத்தையும், கடினமான வேலையையும், பாரமான நுகத்தையும் குறித்து கவனம் செலுத்துகிறார்கள்.

ஜனங்கள் நிர்விசாரமாக ஜீவித்தாலும் பரவாயில்லை. ஆனால் அவர்கள் ராஜாவுக்கு வரிசெலுத்தக்கூடாது என்பதே இஸ்ரவேல் சபையாரின் குற்றச்சாட்டு. அவர்களுடைய குற்றச்சாட்டில் ஆதாரம் எதுவுமில்லை. சாலொமோனுடைய ஆட்சிக்காலத்தில் இஸ்ரவேல் சபையாருக்கு ஒரு குறைவும் வரவில்லை. எல்லாம் தாராளமாயிருந்தது. தேசம் சுபிட்சமாயிருந்தது. சாலொமோன் இஸ்ரவேல் சபையாரிடத்தில் அதிகமான வரிகளையும் வசூலிக்கவில்லை. அவர்கள் வரிகளை செலுத்தினாலும், தங்களுடைய தேசத்தின் வளர்ச்சிக்காகவும், அதைப் பலப்படுத்துவதற்காகவும் தான் வரிகளை செலுத்தினார்கள்.

சாலொமோன் அநேக கட்டிடங்களை கட்டினார். இஸ்ரவேல் ஜனத்தார் அந்தக் கட்டிட வேலைகளுக்கு தங்களுடைய பணத்தை மாத்திரமே கொடுத்தார்கள். சாலொமோன் அந்நிய தேசத்தாரோடு யுத்தம்பண்ணவில்லை. சாலொமோன் யுத்தங்களை நடத்தியிருந்தால், இஸ்ரவேல் சபையார் சாலொமோனுக்கு, அதோடு தங்கள் பணத்தையும் கொடுக்கவேண்டும், தங்கள் இரத்தத்தையும் கொடுக்கவேண்டும், அதோடு தங்கள் ஜீவனையும் கொடுக்கவேண்டும். அப்படிப்பட்ட ஆபத்தான சூழ்நிலை இஸ்ரவேல் சபையாருக்கு சாலொமோனுடைய காலத்திலே ஏற்படவில்லை.

ஆனால் இஸ்ரவேல் சபையாரோ, சாலொமோனைக் குறித்து ஏதாவது குற்றம் சொல்லவேண்டும் என்னும் வேகத்தில், தங்களுடைய வாயில் வந்ததையெல்லாம் பேசிவிடுகிறார்கள். மற்றவர்கள்மீது குறை சொல்லுகிறவர்கள், எப்போதும் குறை சொல்லிக்கொண்டே இருப்பார்கள். குறை சொல்லுவதற்கான காரணங்களை தேடி கண்டுபிடிப்பார்கள்.

இஸ்ரவேல் சபையார் சாலொமோனைப்பற்றி ரெகொபெயாமிடம் இரண்டு குற்றச்சாட்டுக்களை சொல்லுகிறார்கள். அவையாவன: 1. சாலொமோன் தங்கள்மேல் பாரமான நுகத்தை வைத்தார். 2. சாலொமோன் தங்கள்மேல் கடினமான வேலையை சுமத்தினார்.

சாலொமோன் பேராசை பிடித்தவரல்ல. அவருடைய தகப்பனாராகிய தாவீது, சாலொமோனுக்கு தேவையான பொக்கிஷங்களை சேகரித்து வைத்திருக்கிறார். சாலொமோனைப் பார்ப்பதற்கு ஏராளமான ராஜாக்கள் வருகிறார்கள். அவர்களெல்லோரும் ராஜாவுக்கு ஏராளமான பொன்னையும் வெள்ளியையும் வெகுமதியாகக் கொண்டு வருகிறார்கள். சாலொமோனுடைய பொக்கிஷசாலை எப்போதும் நிரம்பி வழிகிறது. அவர் பேராசைப்பட்டு இஸ்ரவேல் சபையாரிடத்தில் அதிகமான வரிகளை வசூலிக்கவில்லை.

சாலொமோன் ஒருபோதும் இஸ்ரவேல் சபையார்மீது பாரமான நுகத்தை வைக்கவில்லை. சாலொமோனுடைய அந்நிய ஸ்திரீகள் அவரை வழிவிலகப்போகப்பண்ணினார்கள். அந்த ஸ்திரீகள் ஒருவேளை இஸ்ரவேல் சபையார்மீது பாரமான நுகத்தை வைத்திருப்பார்கள். இஸ்ரவேல் ஜனத்தாரை அந்த ஸ்திரீகள் ஒடுக்கியிருப்பார்கள்.

தங்கள்மீது வைக்கப்பட்ட பாரமான நுகத்தையும், சுமத்தப்பட்ட கடினமான வேலையையும் ரெகொபெயாம் இலகுவாக்கவேண்டும். "அப்பொழுது உம்மை சேவிப்போம்" (1இராஜா 12:4) என்று யெரொபெயாமும் இஸ்ரவேல் சபையாரும் ரெகொபெயாமினிடத்தில் சொல்லுகிறார்கள். இஸ்ரவேல் சபையார் ரெகொபெயாமின் ராஜ்யபாரத்திலிருந்து விடுதலை பெற விரும்புகிறார்கள். அப்போது தாவீதின் குடும்பத்தாரை தாங்கள் சேவிப்பதாக வாக்குப்பண்ணுகிறார்கள்.

யெரொபெயாமும், இஸ்ரவேல் சபையாரும் தன்னிடத்தில் சொல்லுகிற குற்றச்சாட்டுக்களை ரெகொபெயாம் செவிகொடுத்து கேட்கிறான். அவன் அவர்களிடத்தில் உடனே பதில் சொல்லாமல், அவர்களை நோக்கி, "நீங்கள் போய், மூன்றுநாள் பொறுத்து என்னிடத்தில் திரும்பிவாருங்கள்" (1இராஜா 12:5) என்று சொல்லுகிறான்; அப்படியே ஜனங்களும் அவனைவிட்டுப் போகிறார்கள்.

இஸ்ரவேல் சபையார் தன்னிடத்தில் சொன்ன குற்றச்சாட்டுக்களைப்பற்றியும், அவர்களுக்கு எப்படிப்பட்ட மறுஉத்தரவு கொடுக்கவேண்டும் என்பது பற்றியும், ரெகொபெயாம் தன்னோடு கூடயிருக்கிறவர்களிடத்தில் யோசனை கேட்கிறான்.

ரெகொபெயாமுக்கு ஆலோசனை சொல்ல இரண்டுவிதமான கூட்டத்தார் இருக்கிறார்கள். அவர்களில் ஒரு பிரிவினர், சாலொமோன் உயிரோடிருக்கையில், அவருடைய சமுகத்தில் நின்ற முதியவர்கள். மற்றொரு பிரிவினர் ரெகொபெயாமோடுகூட வளர்ந்த வாலிபர்கள்.

ரெகொபெயாம் முதலாவதாக முதியோரிடத்தில் ஆலோசனை பண்ணுகிறான். அப்பொழுது ராஜாவாகிய ரெகொபெயாம் தன் தகப்பனாகிய சாலொமோன் உயிரோடிருக்கையில் அவன் சமுகத்தில் நின்ற முதியோரோடே ஆலோசனைபண்ணுகிறான். "இந்த ஜனங்களுக்கு மறுஉத்தரவு கொடுக்க, நீங்கள் என்ன யோசனை சொல்லுகிறீர்கள்" (1இராஜா 12:6) என்று ரெகொபெயாம் முதியோரிடத்தில் கேட்கிறான்.

முதியோரும் ரெகொபெயாமுக்கு நல்ல ஆலோசனைகளை சொல்லுகிறார்கள். முதியோர்கள் ரெகொபெயாமை நோக்கி, "நீர் இன்று இந்த ஜனங்களுக்கு சேவகனாகி, அவர்களுக்கு இணங்கி, அவர்கள் சொற்படி செய்து, மறுமொழியாக நல்வார்த்தைகளைச் சொல்வீரானால், எந்நாளும் அவர்கள் உமக்கு ஊழியக்காரராயிருப்பார்கள்" (1இராஜா 12:7) என்று சொல்லுகிறார்கள்.

முதியோர்களிடத்தில் அனுபவம் இருக்கிறது. அவர்களுடைய ஆலோசனையில் அன்பும், கரிசனையும் இருக்கிறது. முதியோர்களுடைய ஆலோசனைப்பிரகாரம் செயல்பட்டால் பிரச்சனைகள் குறையும். ஆளுகை செய்கிற ராஜா ஜனங்களுக்கு சேவை செய்யவேண்டும். அவர் தன் தேசத்து ஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டும். தான் செய்யும் நன்மைகளை அதிகமாயும், காலதாமதமில்லாமல் வேகமாயும் செய்யவேண்டும்.

ராஜா தன் தேசத்திலுள்ள எல்லோருக்கும் எல்லாமுமாக இருக்கவேண்டும். அப்போதுதான் அவர்களுடைய இருதயங்களை ராஜாவால் கவர்ந்துகொள்ள முடியும். தேசத்தை ஆளுகை செய்கிற ராஜா, தேசத்திலுள்ள ஜனங்களின் இருதயத்தில் இடம் பெறவேண்டும். அவர்களுடைய இருதயங்களை ஆளுகை செய்யவேண்டும்.

ரெகொபெயாமோ முதியோர் தனக்கு சொன்ன ஆலோசனையை தள்ளிவிடுகிறான். அவர்கள் அவனுக்கு நல்ல ஆலோசனையை சொன்னாலும், அந்த ஆலோசனைகள் ரெகொபெயாமுக்கு துர்ஆலோசனையாயிருக்கிறது. ஆகையினால் ரெகொபெயாம் தன்னோடே வளர்ந்து, தன் சமுகத்தில் நிற்கிற வாலிபரோடே ஆலோசனை பண்ணுகிறான்.

ரெகொபெயாம் தன்னோடே கூடயிருக்கிற வாலிபர்களை நோக்கி, "உம்முடைய தகப்பன் எங்கள்மேல் வைத்த நுகத்தை லகுவாக்கும் என்று என்னிடத்தில் சொன்ன இந்த ஜனங்களுக்கு மறுமொழி கொடுக்க, நீங்கள் என்ன யோசனை சொல்லுகிறீர்கள்" (1இராஜா 12:9) என்று கேட்கிறான்.

ரெகொபெயாமோடு கூட நிற்கிற வாலிபரும் அவனுக்கு உடனே ஆலோசனை சொல்லுகிறார்கள். அப்பொழுது அவனோடே வளர்ந்த வாலிபர் அவனை நோக்கி: "உம்முடைய தகப்பன் எங்கள் நுகத்தைப் பாரமாக்கினார், நீர் அதை எங்களுக்கு லகுவாக்கும் என்று உம்மிடத்தில் சொன்ன இந்த ஜனத்திற்கு நீர் சொல்லவேண்டியது என்னவென்றால்: என் சுண்டுவிரல் என் தகப்பனாருடைய இடுப்பைப்பார்க்கிலும் பருமனாயிருக்கும். இப்போதும் என் தகப்பன் பாரமான நுகத்தை உங்கள்மேல் வைத்தார், நான் உங்கள் நுகத்தை அதிக பாரமாக்குவேன்; என் தகப்பன் உங்களைச் சவுக்குகளினாலே தண்டித்தார், நான் உங்களைத் தேள்களினாலே தண்டிப்பேன் என்று நீர் அவர்களோடே சொல்லவேண்டும்" (1இராஜா 12:10,11) என்று ஆலோசனை சொல்லுகிறார்கள்.

வாலிபரின் ஆலோசனையில் வேகமும் கோபமும் இருக்கிறது. ரெகொபெயாம் ஜனங்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளாமல், அவர்களை பயமுறுத்தவேண்டுமென்று வாலிபர்கள் ஆலோசனை சொல்லுகிறார்கள். ரெகொபெயாம் வாலிபரின் ஆலோசனையைக் கேட்பது அவனுடைய பலவீனமாயிருக்கிறது.

முதியோர் தனக்கு சொன்ன ஆலோசனையை ரெகொபெயாம் தள்ளிவிடுகிறான். அவன் முதியோரின் அனுபவத்திற்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்கவில்லை. தன்னுடைய மனதிற்கு ஏற்ற பிரகாரமும், பிரியமான பிரகாரமும் ஆலோசனை சொல்லுகிற வாலிபரின் ஆலோசனையை ரெகொபெயாம் ஏற்றுக்கொள்கிறான். முதியோர் தேசத்தின் நன்மையை சிந்திக்கிறார்கள். வாலிபரோ உலகப்பிரகாரமாய் சிந்திக்கிறார்கள்.

வாலிபரின் ஆலோசனையில் பெருமையும், ஆணவமும், அகம்பாவமும் இருக்கிறது. அவர்களுடைய வார்த்தைகளில் ஞானமில்லை. ரெகொபெயாமோடு கூட நிற்கிற வாலிபர், அவனுக்கு நெருங்கிய சிநேகிதர்களாயிருந்தாலும், அவனுடைய நல்வாழ்வுக்கேற்ற ஆலோசனைகளைச் சொல்லாமல், அவனுடைய அழிவுக்கேற்ற ஆலோசனைகளைச் சொல்லுகிறார்கள்.

முதியோருடைய ஆலோசனையில் நிதானமும் இணக்கமும் இருக்கிறது. அவர்களுடைய ஆலோசனையின் பிரகாரம் செயல்பட்டால் சமாதானமும் சந்தோஷமும் உண்டாகும். அதினால் ராஜாவுக்கும் நன்மை உண்டாகும். ஜனங்களுக்கும் நன்மை உண்டாகும். முதியோர் ரெகொபெயாமிடத்தில் "அவர்களுடைய நுகத்தை இலகுவாக்கும்" என்று ஆலோசனை சொல்லுகிறார்கள். வாலிபரோ "அவர்கள் நுகத்தை அதிக பாரமாக்கும்" என்று ஆலோசனை சொல்லுகிறார்கள்.

நுகத்தை இலகுவாக்கினால் வருமானம் குறையும். நுகத்தை அதிக பாரமாக்கினால் வருமானம் அதிகரிக்கும். ரெகொபெயாம் ஜனங்கள்மீது கரிசனை வைக்கவில்லை. அவன் வருமானத்தின்மீது கவனமாயிருக்கிறான். ஜனங்கள் தன்னை சேவித்தால்தான் தனக்கு வருமானம் வரும் என்பதை ரெகொபெயாம் சிந்திக்கவில்லை. ஜனங்களை தண்டித்து, அடக்கி, ஒடுக்கி, அவர்களிடத்தில் வரிவசூலித்துவிடலாம் என்று நினைக்கிறான்.

முதியோருக்கு சாதுரியமான வார்த்தைகளைப் பேச தெரியவில்லை. அவர்கள் நிதானமான வார்த்தைகளை பேசுகிறார்கள். வாலிபரோ அலங்காரமான வார்த்தைகளை சாதுரியமாய் சொல்லுகிறார்கள். வாலிபர் ரெகொபெயாமிடம், "என் சுண்டுவிரல் என் தகப்பனாருடைய இடுப்பைப்பார்க்கிலும் பருமனாயிருக்கும்" என்பதுபோன்ற அலங்காரமான வார்த்தைகளை ஆலோசனையாய்ச் சொல்லுகிறார்கள். சாதுரிய வார்த்தைகளிலும், அலங்காரமான வார்த்தைகளிலும் நீதியோ, நிதானமோ, புத்தியோ, ஞானமோ இருக்காது.

ரெகொபெயாம் இஸ்ரவேல் சபையாரிடம் "நீங்கள்போய் மூன்று நாள் பொறுத்து என்னிடத்தில் திரும்பி வாருங்கள்" (1இராஜா 12:5) என்று சொல்லியிருந்தான். மூன்றாம்நாள் என்னிடத்தில் வாருங்கள் என்று ராஜா சொல்லியிருந்தபடியே, யெரொபெயாமும் சகல ஜனங்களும் மூன்றாம் நாளிலே ரெகொபெயாமிடத்தில் வருகிறார்கள் (1இராஜா 12:12).

ரெகொபெயாம் முதியோர் தனக்குச் சொன்ன ஆலோசனையைத் தள்ளிவிட்டு, வாலிபருடைய ஆலோசனையின்படியே அவர்களோடே பேசுகிறான் (1இராஜா 12:13). இஸ்ரவேல் சபையாரை தன்னால் அடக்கி ஒடுக்கி ஆளுகை செய்ய முடியுமென்று ரெகொபெயாம் நினைக்கிறான். இஸ்ரவேல் சபையார், தன்னுடைய தகப்பனாரைப்பற்றிச் சொன்ன குற்றச்சாட்டை, ரெகொபெயாம் மறுக்கவில்லை. அந்தக் குற்றச்சாட்டை அங்கீகரிக்கிறான். "என் தகப்பன் உங்கள் நுகத்தை பாரமாக்கினார்" (1இராஜா 12:14) என்று ரெகொபெயாம் சொல்லுகிறான். சாலொமோன் இஸ்ரவேல் சபையாருடைய நுகத்தை ஒருபோதும் பாரமாக்கவில்லை. ரெகொபெயாமுக்கு சாலொமோனைப்பற்றி சரியாகத் தெரியவில்லை.

சாலொமோனைவிட தனக்கு அதிகமான ஞானமும், அதிகமான ஆளுகை திறமையும் இருப்பதாக ரெகொபெயாம் நினைக்கிறான். அவன் இஸ்ரவேல் சபையாரிடத்தில், "நான் உங்கள் நுகத்தை அதிக பாரமாக்குவேன்; என் தகப்பன் உங்களைச் சவுக்குகளினாலே தண்டித்தார், நான் உங்களைத் தேள்களினாலே தண்டிப்பேன்" (1இராஜா 12:14) என்று ஜனங்களுக்குக் கடினமான உத்தரவு கொடுக்கிறான்.

ரெகொபெயாம் இஸ்ரவேல் ஜனத்தார்மீது நுகத்தையும் பாரமாக்குகிறான். அவர்களை அடக்கி ஒடுக்குவதற்கு கடுமையான சட்டங்களையும் இயற்றுகிறான். இஸ்ரவேல் ஜனத்தார் நீண்டகாலமாக எந்தக் குறையுமில்லாமல், செழிப்பாய் வாழ்ந்தவர்கள். அவர்கள் ஐசுவரியவான்களாயும், பலமுள்ளவர்களாயும் இருந்தவர்கள். ரெகொபெயாம் இப்போது அவர்களுடைய நுகத்தை அதிக பாரமாக்கி, அவர்கள்மீது கடினமான சட்டங்களையும் சுமத்தி அவர்களை கட்டுப்படுத்துகிறான். இஸ்ரவேல் சபையாரோ ரெகொபெயாமுக்கு கட்டுப்பட மறுக்கிறார்கள். அவனுக்கு விரோதமாகக் கலகம்பண்ண ஆயத்தமாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் சபையார் யெரொபெயாமை தங்களுக்கு தலைவராக ஏற்கெனவே தெரிந்தெடுத்துவிட்டார்கள்.

ரெகொபெயாமும் ஜனங்களுக்கு செவிகொடுக்கவில்லை. ஜனங்களும் ரெகொபெயாமுக்கு செவிகொடுக்கவில்லை. கர்த்தர் சீலோனியனான அகியாவைக்கொண்டு நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமுக்குச் சொன்ன தம்முடைய வார்த்தையை உறுதிப்படுத்தும்படி கர்த்தரால் இப்படி நடக்கிறது (1இராஜா 11:15).

ரெகொபெயாம் சமாதானத்திற்கேதுவான காரியங்களை பார்க்காதபடிக்கு தன்னுடைய கண்களை அடைத்துக்கொள்கிறான். இஸ்ரவேல் தேசத்தை ராஜ்யபாரம்பண்ண அவனுக்கு நல்ல வாய்ப்பு கிடைத்தபோதிலும், ரெகொபெயாம் அதைப் பயன்படுத்தவில்லை. ரெகொபெயாமுடைய மதியீனமும், துன்மார்க்கமான சிநேகமும் அவனுடைய அழிவுக்கு காரணமாயிற்று. அவன் தனக்குத்தானே அழிவைத் தேடிக் கொள்கிறான். ரெகொபெயாமைப்போலவே, ஏராளமான ஜனங்கள், பரலோக ராஜ்யத்தின் சிலாக்கியத்தை இழந்துவிடுகிறார்கள். இந்த இழப்புக்கு இவர்களுடைய மதியீனமே காரணம்.

பிரிந்த ராஜ்யம்
1இராஜா 12:16-24

1இராஜா 12:16. ராஜா தங்களுக்குச் செவிகொடாததை இஸ்ரவேலர் எல்லாரும் கண்டபோது, ஜனங்கள் ராஜாவுக்கு மறுஉத்தரவாக: தாவீதோடே எங்களுக்குப் பங்கேது? ஈசாயின் குமாரனிடத்தில் எங்களுக்குச் சுதந்தரம் இல்லை; இஸ்ரவேலே, உன் கூடாரங்களுக்குப் போய்விடு; இப்போது தாவீதே, உன் சொந்த வீட்டைப் பார்த்துக்கொள் என்று சொல்லி, இஸ்ரவேலர் தங்கள் கூடாரங்களுக்குப் போய் விட்டார்கள்.

1இராஜா 12:17. ஆனாலும் யூதாவின் பட்டணங்களிலே குடியிருந்த இஸ்ரவேல் புத்திரர்மேல் ரெகொபெயாம் ராஜாவாயிருந்தான்.

1இராஜா 12:18. பின்பு ராஜாவாகிய ரெகொபெயாம் பகுதி விசாரிப்புக்காரனாகிய அதோராமை அனுப்பினான்; இஸ்ரவேலர் எல்லாரும் அவனைக் கல்லெறிந்து கொன்றார்கள்; அப்பொழுது ராஜாவாகிய ரெகொபெயாம் தீவிரமாய் இரதத்தின்மேல் ஏறி, எருசலேமுக்கு ஓடிப்போனான்.

1இராஜா 12:19. அப்படியே இந்நாள்வரைக்கும் இருக்கிறபடி இஸ்ரவேலர் தாவீதின் வம்சத்தை விட்டு கலகம்பண்ணிப் பிரிந்து போயிருக்கிறார்கள்.

1இராஜா 12:20. யெரொபெயாம் திரும்பிவந்தான் என்று இஸ்ரவேலருக்கெல்லாம் கேள்வியான போது, அவனைச் சபையினிடத்தில் அழைத்தனுப்பி, அவனைச் சமஸ்த இஸ்ரவேலின்மேலும் ராஜாவாக்கினார்கள்; யூதாகோத்திரம் மாத்திரமேயன்றி வேறொருவரும் தாவீதின் வம்சத்தைப் பின்பற்றவில்லை.

1இராஜா 12:21. ரெகொபெயாம் எருசலேமுக்கு வந்தபோது, இஸ்ரவேல் வம்சத்தாரோடே யுத்தம்பண்ணவும், ராஜ்யத்தைச் சாலொமோனின் குமாரனாகிய தன்னிடமாகத் திருப்பிக்கொள்ளவும், யூதா வம்சத்தார் பென்யமீன் கோத்திரத்தார் அனைவருமாகிய தெரிந்துகொள்ளப்பட்ட யுத்தவீரர் லட்சத்து எண்பதினாயிரம் பேரைக் கூட்டினான்.

1இராஜா 12:22. தேவனுடைய மனுஷனாகிய செமாயாவுக்கு தேவனுடைய வார்த்தையுண்டாகி அவர் சொன்னது :

1இராஜா 12:23. நீ யூதாவின் ராஜாவாகிய ரெகொபெயாம் என்னும் சாலொமோனின் குமாரனையும் யூதா வம்சத்தார் அனைவரையும் பென்யமீனரையும், மற்ற ஜனங்களையும் நோக்கி:

1இராஜா 12:24. நீங்கள் போகாமலும், இஸ்ரவேல் புத்திரரான உங்கள் சகோதரரோடு யுத்தம்பண்ணாமலும், அவரவர் தம்தம் வீட்டிற்குத் திரும்புங்கள்; என்னாலே இந்தக் காரியம் நடந்தது என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்; அப்பொழுது அவர்கள்: கர்த்தருடைய சொல்லைக் கேட்டு, கர்த்தருடைய வார்த்தையின்படியே திரும்பிப் போய்விட்டார்கள்.

ரெகொபெயாம் இஸ்ரவேல் சபையாருக்கு செவிகொடாமல் போகிறான். ரெகொபெயாம் தங்களுக்குச் செவிகொடாததை இஸ்ரவேலர் எல்லாரும் கண்டபோது, ஜனங்கள் அவனுக்கு மறுஉத்தரவாக: "தாவீதோடே எங்களுக்குப் பங்கேது? ஈசாயின் குமாரனிடத்தில் எங்களுக்குச் சுதந்தரம் இல்லை; இஸ்ரவேலே, உன் கூடாரங்களுக்குப் போய்விடு; இப்போது தாவீதே, உன் சொந்த வீட்டைப் பார்த்துக்கொள்" (1இராஜா 12:16) என்று சொல்லி, இஸ்ரவேலர் தங்கள் கூடாரங்களுக்குப் போய் விடுகிறார்கள்.

ரெகொபெயாமுக்கு மோசமான ஆலோசனைகளை சொன்னது யார் என்பதைப்பற்றி இஸ்ரவேல் சபையார் விசாரிக்கவில்லை. ரெகொபெயாமோடு கூட நிற்கிற வாலிபர்களை அவனை விட்டு விலக்கி வைத்து விடவேண்டும் என்றும் அவர்கள் முயற்சி பண்ணவில்லை. ஒருவேளை மோசமான ஆலோசனை சொல்லுகிறவர்கள் ரெகொபெயாமோடு கூடயில்லாவிட்டால், அவன் ஜனங்களுக்கு இவ்வளவு கடினமான உத்தரவு கொடுத்திருக்கமாட்டான்.

இஸ்ரவேல் சபையார் ஞானமாய் யோசித்து செயல்படாமல், தாவீதின் வீட்டாருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தாவீதுக்கும், அவருடைய குமாரருக்கும் மாறாத உடன்படிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார். இஸ்ரவேல் சபையாருக்கு கர்த்தருடைய உடன்படிக்கையைப்பற்றி நன்றாய்த் தெரிந்திருந்தும், அவர்கள் தாவீதின் குடும்பத்தாருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். இந்தக் கலகம் இஸ்ரவேல் சபையார்மீது வந்த மிகப்பெரிய பாவமாயிருக்கிறது.

"இஸ்ரவேலை என்றைக்கும் ஆளும் ராஜ்யபாரத்தை இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தாவீதுக்கும் அவன் குமாரருக்கும் மாறாத உடன்படிக்கையாய்க் கட்டளையிட்டதை நீங்கள் அறியீர்களா? ஆகிலும் தாவீதின் குமாரனாகிய சாலொமோனின் ஊழியக்காரனான யெரொபெயாம் என்னும் நேபாத்தின் குமாரன் எழும்பி, தன் எஜமானுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினான்" *(2நாளா 13:5,6).*

"பேலியாளின் மக்களாகிய வீணர் அவனோடேகூடி, சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாம் அவர்களை எதிர்க்கக்கூடாமல் வாலவயதும் திடனற்ற மனதுமாயிருக்கையில், அவனுக்கு விரோதமாய்த் தங்களைப் பலப்படுத்திக் கொண்டார்கள். இப்போதும் தாவீதுடைய குமாரன் கையிலிருக்கிற கர்த்தருடைய ராஜ்யத்திற்கு விரோதமாக நீங்கள் பெலன் கொள்ளலாமென்று நினைக்கிறீர்கள்; நீங்கள் ஏராளமான கூட்டம்; யெரொபெயாம் உங்களுக்கு தேவர்களாக உண்டாக்கின பொன் கன்றுக்குட்டிகளும் உங்களிடத்தில் இருக்கிறதே" *(2நாளா 13:7,8).*

இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் தாவீதின் குடும்பத்தாருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினாலும் யூதாகோத்திரத்தார், தாவீதின் குடும்பத்தாருக்கு ஆதரவாயிருக்கிறார்கள். யூதாவின் பட்டணங்களிலே குடியிருந்த இஸ்ரவேல் புத்திரர்மேல் ரெகொபெயாம் ராஜாவாயிருக்கிறான் (1இராஜா 12:17). யூதாகோத்திரம் மாத்திரமேயன்றி வேறொருவரும் தாவீதின் வம்சத்தைப் பின்பற்றவில்லை (1இராஜா 12:20).

ரெகொபெயாமின் வார்த்தைகள் மோசமானதாயிருந்தாலும், அவன் நல்லவனாயிருக்கிறான். ரெகொபெயாம் இஸ்ரவேல் சபையாருக்கு கடினமான உத்தரவு கொடுத்ததுபோல, அவர்களுடைய நுகத்தை அதிக பாரமாக்கவில்லை. அவர்களை தேள்களினால் தண்டிக்கவுமில்லை. யூதாகோத்திரத்தார் ரெகொபெயாமின் ஆளுகையை ஏற்றுக்கொள்கிறார்கள்.

ரெகொபெயாம் இஸ்ரவேல் தேசத்தை ஞானமாய் ஆளுகை செய்யவில்லை. ரெகொபெயாம் இஸ்ரவேல் ஜனத்தாரிடத்திலிருந்து வரிவசூலிப்பதற்காக, தன்னுடைய பகுதி விசாரிப்புக்காரனாகிய அதோராமை அவர்கள் மத்தியிலே அனுப்புகிறான். இஸ்ரவேலர் எல்லாரும் அவனைக் கல்லெறிந்து கொன்று போடுகிறார்கள்; அப்பொழுது ராஜாவாகிய ரெகொபெயாம் தீவிரமாய் இரதத்தின்மேல் ஏறி, எருசலேமுக்கு ஓடிப்போகிறான் (1இராஜா 12:18).

ரெகொபெயாமோடு கூட நிற்கிற வாலிபர்கள், அவனுக்கு இந்த தவறான ஆலோசனையை சொல்லியிருக்கவேண்டும். வாலிபரின் ஆலோசனையைக் கேட்டு ரெகொபெயாம் அதோராமை அனுப்புகிறான். இஸ்ரவேல் ஜனத்தாரோ ரெகொபெயாமினுடைய ஆளுகைக்கு கீழ்ப்படிய விரும்பவில்லை. "தாவீதே உன் சொந்த வீட்டைப் பார்த்துக்கொள்" என்று சொல்லி இஸ்ரவேல் சபையார் ரெகொபெயாமை விட்டுப் பிரிந்துபோய் விடுகிறார்கள். பிரிந்துபோனவர்கள் ரெகொபெயாமுக்கு வரிசெலுத்தமாட்டார்கள்.

இஸ்ரவேல் சபையார் ரெகொபெயாமைவிட்டுப் பிரிந்துபோனதை உறுதிபண்ணுகிறார்கள். அதோராமைக் கொன்றுபோடுகிறார்கள். வாலிபரின் தவறான ஆலோசனைகளுக்கு ரெகொபெயாம் செவிகொடுத்தான். தீயஆலோசனையின் விளைவாக அதோராம் செத்துப்போகிறான்.

ரெகொபெயாம் இப்போது சீகேமிலே இருக்கிறான். அதோராம் செத்துப்போன செய்தியைக் கேட்டவுடன், ரெகொபெயாம் தீவிரமாய் இரதத்தின்மேல் ஏறி எருசலேமுக்கு ஓடிப்போகிறான். அவன் சீகேமைவிட்டு உடனடியாக புறப்பட்டுப்போனதும் மதியீனமான செயல். ரெகொபெயாம் சீகேமைவிட்டு ஓடிப்போனதினால், அவன் தன்னுடைய சிநேகிதரை இழந்துவிடுகிறான். அவனுடைய விரோதிகளின் பெலன் அதிகரிக்கிறது. இஸ்ரவேல் சபையார் ரெகொபெயாமைவிட்டுப் பிரிந்து தங்கள் கூடாரங்களுக்கு போய்விடுகிறார்கள் (1இராஜா 12:16). ரெகொபெயாமோ, இஸ்ரவேலருக்கு பயந்து, சீகேமை விட்டே ஓடிப்போகிறான்.

ரெகொபெயாம் எருசலேமுக்கு ஓடிப்போன பின்பு, இஸ்ரவேல் சபையார் எல்லோரும், யெரொபெயாமை அழைத்தனுப்பி, அவனை சமஸ்த இஸ்ரவேலின்மேலும் ராஜாவாக்குகிறார்கள் (1இராஜா 12:20). ரெகொபெயாம் சீகேமிலே தங்களோடு கூடயிருக்கும் வரையிலும், இஸ்ரவேல் சபையார் யெரெபெயாமை தங்களுக்கு ராஜாவாக்கவில்லை. ரெகொபெயாம் எருசலேமுக்கு ஓடிப்போனபின்பு, இஸ்ரவேல் சபையார் யெரொபெயாமை தங்களுக்கு ராஜாவாக்குகிறார்கள்.

தான் இழந்துபோன ராஜ்யபாரத்தை எப்படியாவது திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ரெகொபெயாம் முயற்சி பண்ணுகிறான். இஸ்ரவேல் சபையாரை பயமுறுத்தி, அவர்களை அடக்கி ஆளுகை செய்யலாம் என்று ரெகொபெயாம் நினைத்தான். அது நிறைவேறவில்லை. இப்போது அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணலாம் என்று ரெகொபெயாம் தீர்மானம்பண்ணுகிறான். வாயின் வார்த்தைகளுக்கு அடங்காத இஸ்ரவேல் சபையாரை, பட்டயங்களினால் அடக்கலாம் என்று ரெகொபெயாம் தீர்மானித்திருக்கிறான்.

ரெகொபெயாம் எருசலேமுக்கு வந்தபோது, இஸ்ரவேல் வம்சத்தாரோடே யுத்தம்பண்ணவும், ராஜ்யத்தைச் சாலொமோனின் குமாரனாகிய தன்னிடமாகத் திருப்பிக்கொள்ளவும், யூதா வம்சத்தார் பென்யமீன் கோத்திரத்தார் அனைவருமாகிய தெரிந்துகொள்ளப்பட்ட யுத்தவீரர் லட்சத்து எண்பதினாயிரம் பேரைக் கூட்டுகிறான் (1இராஜா 12:21).

தனக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிற இஸ்ரவேல் சபையாரை அடக்கவேண்டுமென்று ரெகொபெயாம் தீர்மானிக்கிறான். அவனுடைய மனதில் உறுதியும் தைரியமும் இருக்கிறது. ரெகொபெயாம் சீகேமிலிருந்த வரையிலும் அவனுடைய மனதில் தைரியமில்லை. ரெகொபெயாம் எருசலேமுக்கு திரும்பி வந்த பின்போ, அவனுடைய மனதிலே தைரியமும், திடநம்பிக்கையும் உண்டாயிற்று.

யூதாகோத்திரத்தாரும், பென்யமீன் கோத்திரத்தாரும் கர்த்தருக்கும் தங்கள் ராஜாவுக்கும் உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணவில்லை. யூதாகோத்திரத்தாரும், பென்யமீன் கோத்திரத்தாரும் தாவீதின் வம்சத்தைப் பின்பற்றுகிறார்கள்.

ரெகொபெயாம் இவ்விரண்டு கோத்திரங்களிலுமிருந்து 1,80,000 யுத்தவீரர்களை தெரிந்து கொள்கிறான். இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் ரெகொபெயாமுக்கு விரோதமாகக் கலகம்பண்ணி அவனை விட்டுப் பிரிந்துபோயிருக்கிறார்கள். அவர்களுடைய கலகத்தை ஒடுக்கவும், அவர்களோடு யுத்தம்பண்ணி, அவர்களை தன்னிடமாகச் சேர்த்துக்கொள்ளவும், ரெகொபெயாம் அவர்கள்மீது யுத்தம்பண்ண 1,80,000 யுத்த வீரரைத் தெரிந்துகொள்கிறான். ரெகொபெயாமின் யுத்தவீரர்கள் எல்லோரும் யூதாவம்சத்தாரிலும், பென்யமீன் கோத்திரத்திலும் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்.

ரெகொபெயாம் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆயத்தமானது, அவனுடைய தைரியத்திற்கும் பலத்திற்கும் எடுத்துக்காட்டாயிருக்கிறது. ரெகொபெயாம் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, இஸ்ரவேல் புத்திரரோடு யுத்தம்பண்ணாமல் திரும்பிப்போனது, அவனுடைய அதிகமான தைரியத்திற்கும், அதிகமான பெலத்திற்கும் எடுத்துக்காட்டாயிருக்கிறது.

ரெகொபெயாம் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண 1,80,000 யுத்தவீரரை தெரிந்துகொள்கிறான். அப்போது தேவனுடைய மனுஷனாகிய சேமாயாவுக்கு தேவனுடைய வார்த்தையுண்டாயிற்று. கர்த்தர் சேமாயாவை நோக்கி, "நீ யூதாவின் ராஜாவாகிய ரெகொபெயாம் என்னும் சாலொமோனின் குமாரனையும் யூதா வம்சத்தார் அனைவரையும் பென்யமீனரையும், மற்ற ஜனங்களையும் நோக்கி: நீங்கள் போகாமலும், இஸ்ரவேல் புத்திரரான உங்கள் சகோதரரோடு யுத்தம்பண்ணாமலும், அவரவர் தம்தம் வீட்டிற்குத் திரும்புங்கள்; என்னாலே இந்தக் காரியம் நடந்தது என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல்" (1இராஜா 12:23,24) என்று சொல்லுகிறார்.

சேமாயா அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறார். அப்பொழுது ரெகொபெயாமும், அவனோடு கூடயிருக்கிற 1,80,000 யுத்தவீரரும், கர்த்தருடைய சொல்லைக் கேட்டு, கர்த்தருடைய வார்த்தையின்படியே திரும்பிப் போய்விடுகிறார்கள் (1இராஜா 12:24).

யூதாவம்சத்தார் இஸ்ரவேல் புத்திரரை சிநேகிக்கவேண்டும். அவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படியவேண்டும். தங்கள் சகோதரரோடு அவர்கள் யுத்தம்பண்ணக்கூடாது. ரெகொபெயாமுக்கு யுத்தம்பண்ணக்கூடிய ஆயத்தம் இருந்தாலும், அவன் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, யுத்தம்பண்ணாமல் திரும்பி விடுகிறான்.

சேமாயா தீர்க்கதரிசி மிகவும் பிரபல்யமானவரல்ல. இவர் தேவனுடைய மனுஷன். ரெகொபெயாமோ இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜா. அவனுக்கு கீழே 1,80,000 யுத்தவீரர்கள் இருக்கிறார்கள். சேமாயாவோ தனியாக இருக்கிறார். ரெகொபெயாம் சேமாயாவைப் பார்க்கும்போது, அவரோடு கூடயிருக்கிற கர்த்தரையும் பார்க்கிறான். சேமாயாவின் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, ரெகொபெயாம் இஸ்ரவேல் புத்திரரோடு யுத்தம்பண்ணாமல் திரும்பிப்போய்விடுகிறான்.

ரெகொபெயாம் ஆரம்பத்தில் தன்னுடைய ஆதாயத்தை மாத்திரமே பார்த்தான். யுத்தத்திலே ஜெயிப்பதற்கு ரெகொபெயாமுக்கு சாதகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ரெகொபெயாமின் பக்கத்தில் நீதியும் நியாயமும் இருக்கிறது. இஸ்ரவேல் சபையார் எல்லோரும் தாவீதின் குடும்பத்தாரைப் பின்பற்றவேண்டும். தாவீதின் குடும்பத்தாருடைய ஆளுகைக்கு அவர்கள் தங்களை கீழ்ப்படுத்தவேண்டும். இது கர்த்தருடைய கட்டளை.

ரெகொபெயாமுக்கு சாதகமான சூழ்நிலைகள் இருந்தாலும், அவன் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, இஸ்ரவேல் புத்திரரோடு யுத்தம்பண்ணாமல் திரும்பிப்போய்விடுகிறான். ரெகொபெயாம் கர்த்தருக்கு கீழ்ப்படியாமல், இஸ்ரவேல் புத்திரரோடு யுத்தம்பண்ணினால், அவனுக்கு யுத்தத்திலே ஜெயமுண்டாகாது. அவன் ஒருவேளை ஜெயித்தாலும், அவனுக்கு கர்த்தருடைய ஆசீர்வாதம் கிடைக்காது.

யெரொபெயாமின் ராஜ்யபாரம் 1இராஜா 12:25-33

1இராஜா 12:25. யெரொபெயாம் எப்பிராயீம் மலைத் தேசத்தில் சீகேமைக் கட்டி, அதிலே வாசம்பண்ணி, அங்கிருந்து போய்ப் பெனூவேலைக் கட்டினான்.

1இராஜா 12:26. யெரொபெயாம்: இப்போது ராஜ்யபாரம் தாவீது வம்சவசமாய்த் திரும்புகிறதாயிருக்கும்.

1இராஜா 12:27. இந்த ஜனங்கள் எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திலே பலிகளைச் செலுத்தப்போனால், இந்த ஜனங்களின் இருதயம் யூதாவின் ராஜாவாகிய ரெகொபெயாம் என்னும் தங்கள் ஆண்டவன் வசமாய்த் திரும்பி, அவர்கள் என்னைக் கொன்றுபோட்டு, யூதாவின் ராஜாவாகிய ரெகொபெயாமின் பாரிசமாய்ப் போய் விடுவார்கள் என்று தன் மனதிலே சிந்தித்துக்கொண்டிருந்தான்.

1இராஜா 12:28. ஆகையால் ராஜாவானவன் யோசனைபண்ணி, பொன்னினால் இரண்டு கன்றுக்குட்டிகளை உண்டாக்கி, ஜனங்களைப் பார்த்து: நீங்கள் எருசலேமுக்குப் போகிறது உங்களுக்கு வருத்தம்; இஸ்ரவேலரே, இதோ, இவைகள் உங்களை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணின உங்கள் தேவர்கள் என்று சொல்லி,

1இராஜா 12:29. ஒன்றைப் பெத்தேலிலும், ஒன்றைத் தாணிலும் ஸ்தாபித்தான்.

1இராஜா 12:30. இந்தக் காரியம் பாவமாயிற்று; ஜனங்கள் இந்த ஒரு கன்றுக்குட்டிக்காகத் தாண்மட்டும் போவார்கள்

1இராஜா 12:31. அவன் மேடையாகிய ஒரு கோவிலையும் கட்டி, லேவியின் புத்திரராயிராத ஜனத்தில் ஈனமானவர்களை ஆசாரியராக்கினான்.

1இராஜா 12:32. யூதாவில் ஆசரிக்கப்படும் பண்டிகைக்கொப்பாக எட்டாம் மாதம் பதினைந்தாம் தேதியிலே யெரொபெயாம் ஒரு பண்டிகையையும் கொண்டாடி, பலிபீடத்தின்மேல் பலியிட்டான்; அப்படியே பெத்தேலிலே தான் உண்டாக்கின கன்றுக்குட்டிகளுக்குப் பலியிட்டு, தான் உண்டுபண்ணின மேடைகளின் ஆசாரியர்களைப் பெத்தேலிலே ஸ்தாபித்து,

1இராஜா 12:33. தன் மனதிலே தானே நியமித்துக் கொண்ட எட்டாம் மாதம் பதினைந்தாம் தேதியிலே பெத்தேலில் தான் உண்டாக்கின பலிபீடத்தின்மேல் பலியிட்டு, இஸ்ரவேல் புத்திரருக்குப் பண்டிகையை ஏற்படுத்தி, பலிபீடத்தின்மேல் பலியிட்டுத் தூபங்காட்டினான்.

யெரொபெயாமின் ராஜ்யபாரம் ஆரம்பமாயிற்று. அவன் முதலாவதாக சீகேமைக் கட்டுகிறான். அதன் பின்பு பெனூவேலையும் கட்டுகிறான். யெரொபெயாம் இவ்விரண்டு பட்டணங்களையும் நேர்த்தியாகக் கட்டி அவற்றை அழகுபடுத்துகிறான். அவற்றின் பாதுகாப்புக்கு அரண்களையும் கட்டுகிறான். பட்டணங்களைக் கட்டுவது நல்லது. யெரொபெயாமோ பட்டணங்களைக் கட்டுவதோடு, கர்த்தருடைய ராஜ்யத்திற்கு விரோதமான காரியங்களையும் செய்கிறான்.

இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் ரெகொபெயாமைவிட்டு தனியாகப் பிரிந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் யெரொபெயாமை தங்களுக்கு ராஜாவாக்கியிருக்கிறார்கள். தன்னுடைய ஜனம் தன்னோடு கூடவே இருக்கவேண்டும் என்றும், அவர்கள் தாவீதின் குடும்பத்தாரிடத்தில் திரும்பிப்போய்விடக் கூடாது என்றும் யெரொபெயாம் தீவிர சிந்தனையிலிருக்கிறான்.

யெரொபெயாம்: "இப்போது ராஜ்யபாரம் தாவீது வம்சவசமாய்த் திரும்புகிறதாயிருக்கும். இந்த ஜனங்கள் எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திலே பலிகளைச் செலுத்தப்போனால், இந்த ஜனங்களின் இருதயம் யூதாவின் ராஜாவாகிய ரெகொபெயாம் என்னும் தங்கள் ஆண்டவன் வசமாய்த் திரும்பி, அவர்கள் என்னைக் கொன்றுபோட்டு, யூதாவின் ராஜாவாகிய ரெகொபெயாமின் பாரிசமாய்ப் போய்விடுவார்கள்" (1இராஜா 12:26,27) என்று தன் மனதிலே சிந்தித்துக்கொண்டிருக்கிறான்.

தன்னை ராஜாவாக ஆக்கின இஸ்ரவேல் சபையார், தனக்கு விரோதமாக எழும்புவார்களோ என்னும் சந்தேகம் யெரொபெயாமின் மனதில் உண்டாயிற்று. அவர்கள் தன்னைக் கொன்றுபோட்டு, ரெகொபெயாமிடத்தில் மறுபடியும் போய்விடுவார்களோ என்று யெரொபெயாம் பயப்படுகிறான். இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் யெரொபெயாமின்மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆனால் யெரொபெயாமுக்கு அவர்கள்மீது நம்பிக்கையில்லை. ஜனங்கள் இவன்மீது அன்பாயிருக்கிறார்கள். ஆனால் இவனோ ஜனங்கள்மீது அன்பாயில்லை.

யெரொபெயாமின் ராஜ்யபாரம் அவனுக்கு கலகத்தினால் கிடைத்தது. இஸ்ரவேல் சபையாரின் துரோகத்தினால் யெரொபெயாம் ராஜாவாயிருக்கிறான். தீயவழிகளில் சம்பாதித்த காரியம் நிலைத்திருக்காது. அதில் ஆசீர்வாதமும் இருக்காது. பாதுகாப்பும் இருக்காது. யெரொபெயாமின் ராஜ்யபாரம் அவனுக்கு நிலைக்கவில்லை.

யெரொபெயாம் இஸ்ரவேல் சபையாரையும் நம்பவில்லை. அவன் கர்த்தரையும் அவருடைய வார்த்தையையும் நம்பவில்லை. யெரொபெயாம் தன்னுடைய ராஜ்யபாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு தீயவழிகளில் யோசிக்கிறான். தீயவழிகள் பாவமான வழிகளாகவே இருக்கும். யெரொபெயாம் தன்னுடைய பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கிறான்.

கர்த்தர் எல்லா சூழ்நிலைகளிலும் நமக்கு போதுமானவர் என்னும் விசுவாசம் நமக்குள் இருக்கவேண்டும். கர்த்தர்மீது நமக்கு நம்பிக்கையில்லையென்றால், நாம் சீக்கிரத்தில் கர்த்தரைவிட்டு விலகிப்போய் விடுவோம். கர்த்தரை நம்புகிறவர்கள், அவருடைய கிருபையையும், இரக்கத்தையும், பாதுகாப்பையும், பராமரிப்பையும் நம்பவேண்டும்.

எருசலேமிலே கர்த்தருடைய ஆலயம் இருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை ஆராதிப்பதற்காக எருசலேமுக்குப் போவார்கள். அங்கே ரெகொபெயாம் ராஜாவாயிருக்கிறான். இஸ்ரவேல் புத்திரர் எருசலேமுக்குப்போகும்போது, அவர்கள் ரெகொபெயாமின் பக்கம் திரும்பி விடுவார்களோ என்று யெரொபெயாம் பயப்படுகிறான். எருசலேமிலுள்ள தேவாலயமும், தாவீது ராஜாவின் அரமனையும் மிகவும் பிரமாண்டமாயிருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் அவற்றின் அழகையும், அலங்காரத்தையும் பார்த்து, அவர்கள் தாவீதின் வீட்டாரை நேசிப்பார்களோ என்று யெரொபெயாம் அவர்கள்மீது சந்தேகப்படுகிறான்.

ரெகொபெயாம் இஸ்ரவேலில் புத்திரரின் பழையராஜா. எருசலேமுக்குப் போகிறவர்கள் தங்கள் பழைய ராஜாவினிடத்திற்கு போய்விடுவார்கள் என்னும் சந்தேகம் யெரொபெயாமின் மனதில் உண்டாயிற்று. இஸ்ரவேல் சபையார் தங்களுடைய பழைய மார்க்கத்தைப் பின்பற்றினால், அவர்கள் தங்கள் பழைய ராஜாவாகிய ரெகொபெயாமையும் பின்பற்றுவார்கள் என்று யெரொபெயாம் அவர்கள்மீது சந்தேகப்படுகிறான். இஸ்ரவேல் சபையாரை எருசலேமுக்குப் போகவிடாமல் தடுத்து நிறுத்துவதற்கு என்ன செய்யலாம் என்று யெரொபெயாம் யோசிக்கிறான்.

யெரொபெயாம் யோசனைபண்ணி, பொன்னினால் இரண்டு கன்றுக்குட்டிகளை உண்டாக்கி, ஜனங்களைப் பார்த்து: "நீங்கள் எருசலேமுக்குப் போகிறது உங்களுக்கு வருத்தம்; இஸ்ரவேலரே, இதோ, இவைகள் உங்களை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணின உங்கள் தேவர்கள்" (1இராஜா 12:28,29) என்று சொல்லி, ஒன்றைப் பெத்தேலிலும், ஒன்றைத் தாணிலும் ஸ்தாபிக்கிறான்.

கர்த்தரை ஆராதிப்பதற்கு இஸ்ரவேல் ஜனத்தார் எருசலேம் வரையிலும் போகவேண்டிய தேவையில்லை என்றும், அவர்கள் தாணிலும், பெத்தேலிலும் கர்த்தரை ஆராதிக்கலாம் என்றும் யெரொபெயாம் சொல்லுகிறான். இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேசத்திலேயே ஆராதனை செய்வதற்கு யெரொபெயாம் அவர்களுக்கு உதவிசெய்கிறான். ஒருவேளை யெரொபெயாம் தன்னுடைய அரசியல் ஆலோசகர்களை இது சம்பந்தமாக கலந்து யோசித்திருக்கவேண்டும்.

யெரொபெயாம் தீவிரமாய் யோசனைபண்ணி பொன்னினால் இரண்டு கன்றுக்குட்டிகளை உண்டாக்குகிறான். இவை இரண்டும் தெய்வீக பிரசன்னத்திற்கு அடையாளங்கள். கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியின்மீது கிருபாசனம் இருக்கிறது. பெட்டிக்கு மேலாக கேருபீன்கள் இருக்கிறது. யெரொபெயாம் இரண்டு கன்றுக்குட்டிகளை உண்டாக்கும்போது, அவற்றை கிருபாசனத்திற்கும், கேருபீன்களுக்கும் ஒப்பான ரூபத்தில் உண்டாக்கியிருக்க வேண்டுமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

யெரொபெயாம் எகிப்தியரின் விக்கிரகாராதனையைப் பின்பற்றுகிறவன். அவன் சாலொமோனுடைய காலத்தில் எகிப்திற்கு தப்பி ஓடி, அந்த தேசத்தில் சிறிது காலம் சஞ்சரித்தான். எகிப்தியர் ஆபீஸ் என்னும் தெய்வத்தை வழிபடுகிறவர்கள். ஆபீஸ் தெய்வம் கன்றுக்குட்டியின் உருவத்திலிருக்கும்.

மோளேகு, கேமோஷ் ஆகியவை புறஜாதியாரின் தெய்வங்கள். யெரொபெயாம் மிகவும் கவனமாக, இஸ்ரவேல் தேசத்திலே மோளேகுக்கோ, கேமேசுக்கோ விக்கிரகங்களை உண்டுபண்ணவில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் இந்த விக்கிரகங்களை ஆராதிக்கமாட்டார்கள் என்பது யெரொபெயாமுக்கு தெரியும். ஆகையினால் அவன் பொன்னினால் இரண்டு கன்றுக்குட்டிகளை மாத்திரம் உண்டுபண்ணுகிறான்.

பொன்கன்றுக்குட்டிகள் மோளேக்கைப்போலவோ, கேமோஷைப் போலவோ இருக்காது. அவை அந்நிய தெய்வங்களல்ல என்று யெரொபெயாம் சாதுரியமாகப் பேசுகிறான். இந்த கன்றுக்குட்டிகள் இஸ்ரவேல் ஜனத்தாரை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின அவர்களுடைய தேவர்கள் என்று யெரொபெயாம் சொல்லுகிறான். பொன்கன்றுக்குட்டிகளை இஸ்ரவேலின் தேவனுக்கு ஒப்பாக்குகிறான்.

யெரொபெயாம் ஒரு கன்றுக்குட்டியை செய்யாமல், இரண்டு பொன்கன்றுக்குட்டிகளை செய்கிறான். புறஜாதியார் பல தெய்வங்களை வணங்குகிறவர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கோ கர்த்தர் மாத்திரமே தேவனாயிருக்கிறார். அவர்களுக்கு கர்த்தரைத் தவிர வேறு தெய்வம் யாருமில்லை. யெரொபெயாம் இஸ்ரவேல் தேசத்தில், மிகவும் தந்திரமாக, பல தெய்வ ஆராதனையை பிரவேசிக்கப்பண்ணுகிறான். புறஜாதியாரின் பல தெய்வ ஆராதனை இஸ்ரவேல் தேசத்திலும் பிரவேசிக்கிறது.

யெரொபெயாம் இரண்டு கன்றுக்குட்டிகளையும் ஒரே ஊரில் ஸ்தாபிக்காமல், ஒன்றை பெத்தேலிலும், ஒன்றை தாணிலும் ஸ்தாபிக்கிறான். இந்தக் காரியம் பாவமாயிற்று. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை ஆராதிப்பதற்கு எருசலேம் வரைக்கும் போக கஷ்டப்பட்டார்கள். இப்போதோ அவர்கள் இந்த ஒரு கன்றுக்குட்டிக்காக, தாண் மட்டும் போகிறார்கள் (1இராஜா 12:30).

இஸ்ரவேல் தேசத்தார் எருசலேமுக்குப்போக எவ்வளவு தூரம் பிரயாணம்பண்ணவேண்டுமோ, அதைவிட இரண்டு மடங்கு அதிகமான தூரம் பிரயாணம்பண்ணி தாணுக்குப்போகிறார்கள். பொன்கன்றுக்குட்டி மனுஷரால் உண்டாக்கப்பட்டது. இது அவர்களுடைய கண்டுபிடிப்பு. இஸ்ரவேல் சபையார் சிருஷ்டிகரை ஆராதியாமல், சிருஷ்டிகளை ஆராதிக்கிறார்கள்.

எருசலேம் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலம். அவருடைய பரிசுத்த பிரசன்னம் எருசலேமிலே வாசமாயிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை எருசலேமில் மாத்திரமே ஆராதிக்கவேண்டும். இது கர்த்தருடைய பிரமாணம். இஸ்ரவேல் ஜனங்கள் ஆராதனை ஸ்தலத்தைப்பற்றிய பிரமாணத்தை மீறும்போது, கர்த்தர் அவர்களை உடனே தண்டியாமல், அவர்கள்மீது பொறுமையாயிருக்கிறார். ஆனால் அவர்கள் கர்த்தரை ஆராதியாமல், அந்நிய விக்கிரகங்களை ஆராதிக்கும்போது, கர்த்தருடைய கோபம் அவர்கள்மீது உடனே வருகிறது.

யெரொபெயாம் விக்கிர தெய்வங்களை உண்டுபண்ணி, அவை வாசம்பண்ணுவதற்கு கோவில்களையும் கட்டுகிறான். யெரொபெயாம் மேடையாகிய ஒரு கோவிலையும் கட்டி, லேவியின் புத்திரராயிராத ஜனத்தில் ஈனமானவர்களை ஆசாரியராக்குகிறான் (1இராஜா 12:31).

யெரொபெயாம் தாணிலும் பெத்தேலிலும் உயர்ந்த மேடைகளை கட்டுகிறான். உயர்ந்த மேடைகள் என்பது விக்கிரகங்களின் பலிபீடத்தைக் குறிக்கிறது. இரண்டு கோவில்களிலும் பலிபீடங்கள் இருக்கிறது.

யெரொபெயாம் விக்கிரகங்களுக்கு கோவில்களை கட்டுவதோடு, அந்தக் கோவில்களுக்கு ஆசாரியர்களையும் நியமிக்கிறான். லேவியின் புத்திரரே ஆசாரியராயிருக்கவேண்டும். இது மோசேயின் பிரமாணம். ஆனால் யெரொபெயாமோ லேவியின் புத்திரராயிராத ஜனத்தில் ஈனமானவர்களை ஆசாரியராக்குகிறான். அவர்கள் ஈனமானவர்களாயிருந்தாலும், பொன்கன்றுக் குட்டிகளுக்கு ஆசாரியர்களாயிருக்க தகுதியுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

யெரொபெயாம் இஸ்ரவேல் தேசத்தின் எல்லா பாகங்களிலும் ஆசாரியர்களை நியமிக்கிறான். ஜனத்தில் ஈனமானவர்கள் தேசமெங்கும் நிறைந்திருக்கிறார்கள். இவர்கள் விக்கிரகங்களுக்கு ஆசாரியர்கள். ஆனால் இவர்கள் லேவியின் புத்திரரல்ல.

எருசலேமிலுள்ள தேவாலயத்தில் ஆசாரியர்கள் ஊழியம் செய்கிறார்கள். யெரொபெயாமும் பெத்தேலிலே, தான் உண்டாக்கின கன்றுக்குட்டிகளுக்குப் பலியிட்டு, தான் உண்டுபண்ணின மேடைகளின் ஆசாரியர்களைப் பெத்தேலிலே ஸ்தாபிக்கிறான் (1இராஜா 12:32). இந்த ஆசாரியர்கள் பெத்தேலிலே ஜனங்களுக்கு ஊழியம் செய்கிறார்கள்.

யெரொபெயாம் பொன்கன்றுக்குட்டிகளை செய்து, அவற்றிற்கு கோவில்களை கட்டி, பலிபீடங்களையும், மேடைகளையும் கட்டி, அவற்றிற்கு பலியிட ஆசாரியர்களையும் ஸ்தாபிக்கிறான். அவனுடைய விக்கிரகாராதனை இத்தோடு முடிந்துபோகவில்லை. யூதாவில் ஆசரிக்கப்படும் பண்டிகைக்கு ஒப்பான பண்டிகையை இஸ்ரவேலிலும் கொண்டாடுகிறான்.

யூதாவிலே ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி கூடாரப்பண்டிகைகளை கொண்டாடுவது வழக்கம். யெரொபெயாம் அதே பண்டிகையை வேறு தேதியில் கொண்டாடுகிறான். ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி என்பதற்கு பதிலாக, எட்டாம் மாதம் பதினைந்தாம் தேதியிலே யெரொபெயாம் ஒரு பண்டிகையை கொண்டாடுகிறான்.

யெரொபெயாம் தன் மனதிலே தானே நியமித்துக் கொண்ட எட்டாம் மாதம் பதினைந்தாம் தேதியிலே பெத்தேலில் தான் உண்டாக்கின பலிபீடத்தின்மேல் பலியிடுகிறான். அவன் இஸ்ரவேல் புத்திரருக்குப் பண்டிகையை ஏற்படுத்தி, பலிபீடத்தின்மேல் பலியிட்டுத் தூபங்காட்டுகிறான் (1இராஜா 12:33).

பண்டிகையின் மாதத்தையும் நாளையும் யெரொபெயாம் தன் மனதிலே தானே நியமித்துக்கொள்கிறான். மார்க்க காரியங்களில் தனக்கு அதிகாரம் இருப்பதை இஸ்ரவேல் சபையாருக்கு காண்பிக்கும் வண்ணமாக, தானே பண்டிகை நாளை நியமித்துக்கொள்கிறான்.

ஆசாரியர்களை ஸ்தாபிக்க தனக்கு அதிகாரமுள்ளது என்பதை யெரொபெயாம் இஸ்ரவேல் புத்திரருக்கு தெளிவுபடுத்துவதற்காக, தான் உண்டுபண்ணின மேடைகளின் ஆசாரியர்களை பெத்தேலிலே, தானே ஸ்தாபிக்கிறான் (1இராஜா 12:32).

யெரொபெயாம் ஆசாரியர்களை ஸ்தாபிப்பதோடு, தான் உண்டாக்கின பலிபீடத்தின்மேல் தானே பலியிடுகிறான். பலிபீடத்தின்மேல் பலியிட்டு தூபமும் காட்டுகிறான். தன்னை பக்தியுள்ளவன்போல காண்பித்துக்கொள்கிறான்.

யெரொபெயாம் இந்தக் காரியங்களையெல்லாம் செய்து கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறான். சாலொமோனும் கர்த்தருக்கு பலியிட்டார். அதன்பின்பு அவரும் அந்நிய தெய்வங்களை ஆராதித்தார். ஒருவேளை யெரொபெயாம் தன்னுடைய பாவங்களுக்கு சாலொமோனை முன்உதாரணமாகச் சொல்லுவான். தான் புதிதாக பாவம் செய்யவில்லை என்றும், சாலொமோன் செய்ததை தானும் செய்வதாகவும் யெரொபெயாம் சொல்லுவான்.

யெரொபெயாம் இஸ்ரவேலை பாவம் செய்யப்பண்ணுகிறான். இஸ்ரவேல் சபையார் கர்த்தரை ஆராதிப்பதற்காக எருசலேமுக்குப்போவார்கள். யெரொபெயாமோ அவர்கள் எருசலேமுக்குப்போவதை தடுத்துவிடுகிறான். தான் நிறுவின பொன்கன்றுக்குட்டியை ஆராதிப்பதற்கு அவர்களை வழிநடத்துகிறான். யெரொபெயாமின் மூலமாய் இஸ்ரவேல் சபையாரின் சந்ததியில் விக்கிரகாராதனை பிரவேசிக்கிறது.

13 அதிகாரம்

யெரொபெயாம் பெத்தேலிலே ஒரு பலிபீடம் கட்டியிருக்கிறான். அவன் தூபங்காட்ட பலிபீடத்தண்டையில் நிற்கிறான். யெரொபெயாமின் விக்கிரகாராதனைக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. யெரொபெயாம் கர்த்தரைவிட்டு விலகிப்போயிருக்கிறான். தேவனுடைய மனுஷன் ஒருவன் யூதேயாவிலிருந்து பெத்தேலுக்கு வந்து, கர்த்தருடைய வார்த்தையை யெரொபெயாமுக்கு சொல்லுகிறான்.

தேவனுடைய மனுஷன் யெரொபெயாமின் பலிபீடத்திற்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறான் (1இராஜா 13:1,2). கர்த்தருடைய வார்த்தை நிறைவேறும் என்பதற்கு தேவனுடைய மனுஷன் அடையாளத்தையும் சொல்லுகிறான் (1இராஜா 13:3). அவன் சொன்ன அடையாளம் உடனே நிறைவேறிற்று (1இராஜா 13:5).

யெரொபெயாமின் கை மறுத்துப்போயிற்று. இது மற்றொரு அடையாளம் (1இராஜா 13:4). தேவனுடைய மனுஷன் யெரொபெயாமுக்காக கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணியபோது, அவனுடைய கை முன்னிருந்தபடி சீர்படுகிறது (1இராஜா 13:6).

யெரொபெயாம் தேவனுடைய மனுஷனுக்கு வெகுமதி கொடுக்க விரும்புகிறான். தேவனுடைய மனுஷனோ அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறான் (1இராஜா 13:7-10).

பெத்தேலிலே கிழவனான ஒரு தீர்க்கதரிசி குடியிருக்கிறான். இவன் தேவனுடைய மனுஷனிடத்தில் பொய்சொல்லி, அவனை தன்னுடைய வீட்டிலே போஜனம்பண்ண வைக்கிறான் (1இராஜா 13:11-19). தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய வாக்கை மீறியதினால், அவன் மரித்துப்போவான் என்று அவனுக்கு அறிவிக்கப்படுகிறது (1இராஜா 13:20-22).

தேவனுடைய மனுஷனை ஒரு சிங்கம் கொன்றுபோடுகிறது (1இராஜா 13:23,24). கிழவனான தீர்க்கதரிசி அவனுடைய சரீரத்தை பெத்தேலிலே அடக்கம்பண்ணுகிறான் (1இராஜா 13:25-32).

யெரொபெயாம் தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்தி, தொடர்ந்து விக்கிரகாராதனையில் ஈடுபடுகிறான் (1இராஜா 13:32-34). கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு யெரொபெயாமின் வீட்டாரை நிர்மூலம்பண்ணுகிறது.

பலிபீடமே, பலிபீடமே 1இராஜா 13:1-3

1இராஜா 13:1. யெரொபெயாம் தூபங்காட்ட பலிபீடத்தண்டையிலே நிற்கையில், இதோ, தேவனுடைய மனுஷன் ஒருவன் கர்த்தருடைய வார்த்தையின்படியே, யூதாவிலிருந்து பெத்தேலுக்கு வந்து,

1இராஜா 13:2. அந்தப் பலிபீடத்தை நோக்கி: பலிபீடமே பலிபீடமே, இதோ, தாவீதின் வம்சத்தில் யோசியா என்னும் பேருள்ள ஒரு குமாரன் பிறப்பான்; அவன் உன்மேல் தூபங்காட்டுகிற மேடைகளின் ஆசாரியர்களை உன்மேல் பலியிடுவான்; மனுஷரின் எலும்புகளும் உன்மேல் சுட்டெரிக்கப்படும் என்பதைக் கர்த்தர் உரைக்கிறார் என்று கர்த்தருடைய வார்த்தையைக் கூறி;

1இராஜா 13:3. அன்றையதினம் அவன் ஒரு அடையாளத்தையும் சொல்லி, இதோ, இந்தப் பலிபீடம் வெடித்து, அதின்மேலுள்ள சாம்பல் கொட்டுண்டு போம்; கர்த்தர் உரைத்ததற்கு இதுவே அடையாளம் என்றான்.

யெரொபெயாம் தேவனைவிட்டு விலகிப்போய்விடுகிறான். அவன் விக்கிரகங்களை பின்பற்றி, அவற்றிற்கு தூபங்காட்டுகிறான். கர்த்தர் யெரொபெயாமின்மீது கோபமாயிருக்கிறார். கர்த்தருடைய கோபத்திற்கு யெரொபெயாமின் விக்கிரகாராதனையே காரணம். கர்த்தர் தம்முடைய மனுஷன் ஒருவனை யெரொபெயாமினிடத்திற்கு அனுப்பி, தம்முடைய கோபத்தை வெளிப்படுத்துகிறார்.

ரெகொபெயாம் யூதாவின் மனுஷர் எல்லோரையும் கூட்டிச்சேர்த்து, யெரொபெயாமுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்தான். ஆனால் கர்த்தரோ ரெகொபெயாமின் யுத்த முயற்சிகளை தடைபண்ணினார். ரெகொபெயாமால் தன்னுடைய பட்டயத்தை யெரொபெயாமுக்கு விரோதமாக நீட்ட முடியவில்லை.

"நீங்கள் போகாமலும், இஸ்ரவேல் புத்திரரான உங்கள் சகோதரரோடு யுத்தம்பண்ணாமலும், அவரவர் தம்தம் வீட்டிற்குத் திரும்புங்கள்; என்னாலே இந்தக் காரியம் நடந்தது என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்; அப்பொழுது அவர்கள்: கர்த்தருடைய சொல்லைக் கேட்டு, கர்த்தருடைய வார்த்தையின்படியே திரும்பிப் போய்விட்டார்கள்" (1இராஜா 12:24).

கர்த்தர் யெரொபெயாமுக்கு விரோதமாக யுத்தம்பண்ண ரெகொபெயாமை அனுமதிக்கவில்லை. ஆனாலும் கர்த்தர் யூதேயாவிலுள்ள ஒரு மனுஷனை, யெரொபெயாமினிடத்திற்கு அனுப்புகிறார். யெரொபெயாம் பெத்தேலிலிருக்கிறான். அவன் விக்கிரகங்களுக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதை பிரதிஷ்டைபண்ணுவதற்கு ஆயத்தமாயிருக்கிறான். யெரொபெயாம் தூபங்காட்ட அந்தப் பலிபீடத்தண்டையில் நிற்கிறான்.

யெரொபெயாமை அழிப்பது கர்த்தருக்கு பிரியமல்ல. அவன் தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். யெரொபெயாம் விக்கிரகங்களைப் பின்பற்றிப்போவதை நிறுத்திவிட்டு, கர்த்தரைப் பின்பற்றவேண்டும். இதுவே கர்த்தருக்கு பிரியம். கர்த்தர் பாவிகளின் மரணத்தில் பிரியப்படுகிறவரல்ல. பாவிகள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, ஜீவனைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதே கர்த்தருக்கு பிரியம்.

யெரொபெயாமின் பாவங்களை உணர்த்துவதற்காக, கர்த்தர் தம்முடைய மனுஷன் ஒருவனை யூதேயாவிலிருந்து, பெத்தேலிலிருக்கிற அவனிடத்திற்கு அனுப்புகிறார். தேவனுடைய மனுஷனும் கர்த்தருடைய வார்த்தையின்படியே யூதாவிலிருந்து பெத்தேலுக்கு வருகிறான்.

தேவனுடைய மனுஷன் பெத்தேலுக்கு வந்து கர்த்தருடைய வார்த்தையை, அவருடைய நாமத்தினால் அறிவிக்கிறான். விக்கிரகாராதனைக்காரர் தங்கள் மனதிற்குள்ளே முணுமுணு என்று முணங்குவது போல அவன் முணங்கவில்லை. தேவனுடைய மனுஷன் உரத்த சத்தமாயும், தெளிவாயும் கர்த்தருடைய வார்த்தையைக் கூறுகிறான். அவனுடைய வார்த்தைகள், அவனுடைய தைரியத்திற்கும், கர்த்தருடைய வார்த்தையை உண்மையாய் அறிவிக்கவேண்டும் என்னும் வாஞ்சைக்கும் அடையாளமாயிருக்கிறது.

கர்த்தருடைய தீர்க்கதரிசி, கர்த்தருடைய வார்த்தையை யெரொபெயாமுக்கு சொல்லவில்லை. யெரொபெயாமோடு கூடயிருக்கிற இஸ்ரவேல் ஜனங்களுக்கும் தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தையை அறிவிக்கவில்லை. தேவனுடைய மனுஷன் பலிபீடத்தை நோக்கி, கர்த்தருடைய வார்த்தையைக் கூறுகிறான்.

கர்த்தருடைய வார்த்தை பலிபீடத்திற்கு விரோதமாக சொல்லப்பட்டாலும், அந்த வார்த்தைகள் பலிபீடத்தை ஸ்தாபித்த யெரொபெயாமுக்கு விரோதமாகவும், விக்கிரகங்களை ஆராதிக்கிற இஸ்ரவேல் ஜனத்தாருக்கு விரோதமாகவும் சொல்லப்படுகிறது.

யெரொபெயாம் கட்டின பலிபீடத்திற்கு ஜீவனில்லை. கர்த்தருடைய கோபம் அந்தப் பலிபீடத்திற்கு விரோதமாக எழும்பியிருக்கிறது. கர்த்தருடைய கோபம் ஜீவனில்லாத பலிபீடத்திற்கு விரோதமாக எழும்பும்போது, மெய்யாகவே அவருடைய கோபம் விக்கிரகங்களை ஆராதிக்கிற ஜீவனுள்ள மனுஷருக்கு விரோதமாக அதிகமாய் எழும்பும். விக்கிரகாராதனைக்காரர் கர்த்தருடைய கோபத்திற்கு தப்பிக்க முடியாது.

தேவனுடைய மனுஷன் அந்தப் பலிபீடத்தை நோக்கி: "பலிபீடமே பலிபீடமே, இதோ, தாவீதின் வம்சத்தில் யோசியா என்னும் பேருள்ள ஒரு குமாரன் பிறப்பான்; அவன் உன்மேல் தூபங்காட்டுகிற மேடைகளின் ஆசாரியர்களை உன்மேல் பலியிடுவான்; மனுஷரின் எலும்புகளும் உன்மேல் சுட்டெரிக்கப்படும் என்பதைக் கர்த்தர் உரைக்கிறார்" (1இராஜா 13:2) என்று கர்த்தருடைய வார்த்தையைக் கூறுகிறான்.

கர்த்தருக்கு ஏற்ற வேளையில், தாவீதின் வம்சத்தில் பிறக்கிற யோசியா என்பவன், விக்கிரகங்களையும், அவற்றின் மேடைகளையும், நிர்மூலம்பண்ணுவான். மேடைகளின் ஆசாரியர்களுடைய எலும்புகளையும் சுட்டெரிப்பான். கர்த்தருடைய வார்த்தை யெரொபெயாமுக்கு எச்சரிப்பாகச் சொல்லப்படுகிறது.

யெரொபெயாம் இந்தப் பலிபீடத்தை கட்டி, அதைப் பிரதிஷ்டைபண்ணுகிறான். அதற்கு தூபங்காட்ட அவன் பலிபீடத்தண்டையில் நிற்கிறான். பிரதிஷ்டைபண்ணப்படுகிற பலிபீடம் இப்போது வெடித்து சாம்பலாய்ப்போகும்.

யெரொபெயாம் இந்தப் பலிபீடத்தின்மேல் தூபங்காட்டுவதற்கு மேடைகளின் ஆசாரியர்களை நியமித்திருக்கிறான். தேவனுடைய நியாயத்தீர்ப்பினால், இந்த ஆசாரியர்கள், இந்த மேடைகளின்மேல் பலியிடப்படுவார்கள்.

தாவீதின் வம்சத்தில் வருகிற ஒருவன் மூலமாய் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நிறைவேற்றப்படும். தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய வார்த்தையை பெத்தேலிலே, அறிவிக்கிறான். இந்த சம்பவம் நடைபெற்று 356 வருஷங்களுக்கு பின்பு, தேவனுடைய மனுஷன் சொன்ன வார்த்தைகள் நிறைவேறுகிறது. கர்த்தருடைய வார்த்தை உடனே நிறைவேறாவிட்டாலும், அவருக்கு சித்தமான காலத்தில் அது நிச்சயமாய் நிறைவேறும். கர்த்தருக்கு ஆயிரம் வருஷம் என்பது ஒரு நாளைப்போலிருக்கிறது.

"இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாம் பெத்தேலில் உண்டாக்கியிருந்த பலிபீடமும் மேடையும் ஆகிய அவ்விரண்டையும் அவன் இடித்து, அந்த மேடையைச் சுட்டெரித்துத் தூளாக்கி, விக்கிரகத்தோப்பையும் சுட்டெரித்தான். யோசியா திரும்பிப்பார்க்கிறபோது அங்கே அந்த மலையிலிருக்கிற கல்லறைகளைக் கண்டு, ஆட்களை அனுப்பி, அந்தக் கல்லறைகளிலுள்ள எலும்புகளை எடுத்து வரச்செய்து, இப்படி நடக்கும் என்று தேவனுடைய மனுஷன் கூறின கர்த்தருடைய வார்த்தையின்படியே, அவைகளை அந்தப் பலி பீடத்தின்மேல் சுட்டெரித்து அதைத் தீட்டாக்கினான்" (2இராஜா 23:15,16).

தேவனுடைய மனுஷன் பலிபீடத்திற்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தையை சொன்னபோது, அன்றையதினம் அவன் ஒரு அடையாளத்தையும் சொல்லுகிறான். "இதோ, இந்தப் பலிபீடம் வெடித்து, அதின்மேலுள்ள சாம்பல் கொட்டுண்டுபோம்; கர்த்தர் உரைத்ததற்கு இதுவே அடையாளம்" (1இராஜா 13:3) என்றும் அந்த தீர்க்கதரிசி சொல்லுகிறான்.

கர்த்தருடைய மனுஷன் சொன்ன அடையாளம் உடனே நிறைவேறுகிறது. தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய வார்த்தையால் குறித்திருந்த அடையாளத்தின் படியே பலிபீடம் வெடிக்கிறது. சாம்பல் பலிபீடத்திலிருந்து கொட்டுண்டுபோயிற்று (1இராஜா 13:5).

பலிபீடம் வெடித்த சம்பவம், தீர்க்கதரிசியின் வார்த்தையை உறுதிபண்ணுகிறது. தேவனுடைய மனுஷன் கர்த்தரால் அனுப்பப்பட்டவன் என்பதற்கு இது அடையாளமாயிருக்கிறது.

"அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென்" (மாற் 16:20).

தேவனுடைய மனுஷன் சொன்ன அடையாளம் அப்பொழுதே நிறைவேறுகிறது. கர்த்தர் விக்கிரகாராதனைக்காரருக்கு விரோதமாகவும், அவர்களுடைய மேடைகளுக்கும், பலிபீடங்களுக்கும், அவர்கள் விக்கிரகங்களுக்கு செலுத்துகிற பலிகளுக்கு விரோதமாகவும் மிகவும் கோபமாயிருக்கிறார் என்பதற்கும் இது அடையாளமாயிருக்கிறது.

பலிபீடம் ஜீவனில்லாத கற்களால் செய்யப்பட்டது. விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்களுடைய இருதயங்களும் இந்தக் கல்லைப்போலவே கடினமாயிருக்கிறது. கர்த்தருடைய வார்த்தையால் குறிக்கப்பட்ட அடையாளத்தின்படியே பலிபீடம் வெடித்து சிதறியது. அதுபோலவே மனுஷனுடைய இருதயம் கல்லைப்போல எவ்வளவு கடினமானதாகயிருந்தாலும், கர்த்தருடைய வார்த்தை மனுஷருடைய இருதயத்தை உடைத்து நொறுக்கும்.

தேவனுடைய மனுஷன் இனிமேல் நடைபெறப்போகிற சம்பவத்தை தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான். "இதோ, தாவீதின் வம்சத்தில் யோசியா என்னும் பேருள்ள ஒரு குமாரன் பிறப்பான்; அவன் உன்மேல் தூபங்காட்டுகிற மேடைகளின் ஆசாரியர்களை உன்மேல் பலியிடுவான்" (1இராஜா 13:2) என்று அவன் தீர்க்கதரிசனம் சொன்னான். அவன் சொன்ன தீர்க்கதரிசனம் ஏற்ற வேளையில், நிச்சயமாய் நிறைவேறும் என்பதற்கு அடையாளமாக, இப்போது பலிபீடம் வெடித்து சிதறுகிறது.

யெரொபெயாம்
1இராஜா 13:4-10

1இராஜா 13:4. பெத்தேலில் இருக்கிற அந்தப் பலிபீடத்திற்கு எதிராக தேவனுடைய மனுஷன் கூறின வார்த்தையை ராஜாவாகிய யெரொபெயாம் கேட்டபோது, அவனைப் பிடியுங்கள் என்று தன் கையைப் பலிபீடத்திலிருந்து நீட்டினான்; அவனுக்கு விரோதமாய் நீட்டின கை தன்னிடமாக முடக்கக் கூடாதபடிக்கு மரத்துப்போயிற்று.

1இராஜா 13:5. தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய வார்த்தையால் குறித்திருந்த அடையாளத்தின்படியே பலிபீடம் வெடித்து, சாம்பல் பலிபீடத்திலிருந்து கொட்டுண்டுபோயிற்று.

1இராஜா 13:6. அப்பொழுது ராஜா தேவனுடைய மனுஷனுக்குப் பிரதியுத்தரமாக: நீ உன் தேவனாகிய கர்த்தருடைய சமுகத்தை நோக்கி வேண்டிக்கொண்டு, என் கை முன்போலிருக்கும்படிக்கு எனக்காக விண்ணப்பம்பண்ணவேண்டும் என்றான்; அப்பொழுது தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய சமுகத்தை நோக்கி வருந்தி விண்ணப்பம் செய்தான், ராஜாவின் கை முன்னிருந்தபடி சீர்ப்பட்டது.

1இராஜா 13:7. அப்பொழுது ராஜா தேவனுடைய மனுஷனை நோக்கி: நீ என்னோடேகூட வீட்டுக்கு வந்து இளைப்பாறு; உனக்கு வெகுமானம் தருவேன் என்றான்.

1இராஜா 13:8. தேவனுடைய மனுஷன் ராஜாவை நோக்கி: நீர் எனக்கு உம்முடைய வீட்டில் பாதி கொடுத்தாலும், நான் உம்மோடே வருவதுமில்லை, இந்த ஸ்தலத்தில் அப்பம் புசிப்பதுமில்லை, தண்ணீர் குடிப்பதுமில்லை.

1இராஜா 13:9. ஏனென்றால் நீ அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும், போனவழியாய்த் திரும்பாமலும் இருவென்று கர்த்தர் தம்முடைய வார்த்தையால் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார் என்று சொல்லி,

1இராஜா 13:10. அவன் பெத்தேலுக்கு வந்தவழியாய்த் திரும்பாமல், வேறுவழியாய்ப் போய்விட்டான்.

தேவனுடைய மனுஷன் பலிபீடத்திற்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொன்னபோது, யெரொபெயாம் தூபங்காட்ட அந்தப் பலிபீடத்தண்டையில் நிற்கிறான். பெத்தேலில் இருக்கிற அந்தப் பலிபீடத்திற்கு எதிராக தேவனுடைய மனுஷன் கூறின வார்த்தையை ராஜாவாகிய யெரொபெயாம் கேட்கிறான். அப்போது யெரொபெயாம், "அவனைப் பிடியுங்கள்" என்று தன் கையைப் பலிபீடத்திலிருந்து நீட்டுகிறான்; அவனுக்கு விரோதமாய் நீட்டின யெரொபெயாமின் கை தன்னிடமாக முடக்கக்கூடாதபடிக்கு மரத்துப்போயிற்று (1இராஜா 13:4).

யெரொபெயாம் தேவனுடைய மனுஷனைப் பிடித்து அவனை அழித்துப்போடவேண்டுமென்று நினைத்தான். ஆனால் யெரொபெயாமின் கை மரத்துப்போயிற்று. அது செயல்படவில்லை. யெரொபெயாம் தேவனுடைய மனுஷனுக்கு விரோதமாக தன்னுடைய கையை நீட்டினான். ஆனால் நீட்டப்பட்ட தன்னுடைய கையை அவனால் மறுபடியும் தன்னிடத்தில் மடக்க முடியவில்லை. பலிபீடத்திற்கு அருகாமையிலிருக்கிற இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் யெரொபெயாமின் மரத்துப்போன கையைப் பார்க்கிறார்கள். ஜனங்கள் எல்லோருக்கும் திகிலும், நடுக்கமும், கலக்கமும் உண்டாயிற்று.

கர்த்தர் பல சமயங்களில், தம்முடைய தெய்வீக நீதியினால், பாவிகளின் இருதயங்களை கடினப்படுத்துகிறார். அவர்கள் தங்கள் பாவங்களில் மூழ்கி, பாவக்கறைகளினால் நீட்டின கைகளை, அவர்களால் மடக்க முடியாமல் போகிறது. கர்த்தர் பாவிகளின் இருதயத்தைக் கடினப்படுத்தும்போது, அவர்களால் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவும் முடியாது. பாவத்தினால் நீட்டப்பட்ட கைகள், மறுபடியும் முடக்கக்கூடாதபடிக்கு மரத்துப்போகும். இது பாவிகளுக்கு விரோதமாக கர்த்தர் கொடுக்கும் ஆவிக்குரிய நியாயத்தீர்ப்பாக இருக்கிறது. துணிகரமாகப் பாவம் செய்கிறவர்கள், தங்கள் பாவத்தைவிட்டு மீளமுடியாமல், தங்கள் பாவத்திலேயே மூழ்கிவிடுகிறார்கள்.

யெரொபெயாமின் கை திடீரென்று மரத்துப்போயிற்று. அவன் தனக்கு வந்த தண்டனையைப் பார்த்து பயப்படுகிறான். தேவனுடைய மனுஷன் யெரொபெயாமிடம் கர்த்தருடைய வார்த்தையை சொன்னபோது, அது அவனுடைய இருதயத்தைத் தொடவில்லை. அவன் தேவனுக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தவில்லை. இப்போது கர்த்தர் யெரொபெயாமின் எலும்பையும் மாம்சத்தையும் தொடுகிறார். அவன் உடனே கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகிறான்.

அப்பொழுது யெரொபெயாம் ராஜா தேவனுடைய மனுஷனுக்குப் பிரதியுத்தரமாக: "நீ உன் தேவனாகிய கர்த்தருடைய சமுகத்தை நோக்கி வேண்டிக்கொண்டு, என் கை முன்போலிருக்கும்படிக்கு எனக்காக விண்ணப்பம்பண்ண வேண்டும்" (1இராஜா 13:6) என்று சொல்லுகிறான்; அப்பொழுது தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய சமுகத்தை நோக்கி வருந்தி விண்ணப்பம் செய்கிறான். யெரொபெயாம் ராஜாவின் கை முன்னிருந்தபடி சீர்ப்படுகிறது.

யெரொபெயாமின் கை மரத்துப்போனபோது, அவன் நிறுவின பொன்கன்றுக்குட்டியோ, அல்லது அவனுடைய பலிபீடமோ அவனுக்கு உதவிசெய்யவில்லை. அவன் தன்னுடைய விக்கிரகத்திடம் உதவி கேட்காமல் தேவனுடைய மனுஷனிடத்தில் உதவி கேட்கிறான். தேவனாகிய கர்த்தருடைய சமுகத்தை நோக்கி விண்ணப்பம் பண்ணுமாறு வேண்டிக்கொள்கிறான். கர்த்தருடைய வல்லமையும், அவருடைய கிருபையும் தனக்கு உதவி செய்யும் என்று யெரொபெயாம் எதிர்பார்க்கிறான்.

யெரொபெயாம் விக்கிரகத்திற்கு பலியிடுகிறான். பலிபீடத்தண்டையில் தூபங்காட்டுகிறான். இவை தனக்கு உதவிசெய்யுமென்று யெரொபெயாம் நம்பவில்லை. தேவனுடைய மனுஷன், தேவனாகிய கர்த்தருடைய சமுகத்தில் தனக்காக ஜெபம்பண்ணினால், கர்த்தர் தனக்கு உதவிசெய்வார் என்று யெரொபெயாம் நம்புகிறான். விக்கிரகத்திற்கு பலியிடுவதினாலோ, அவற்றிற்கு தூபங்காட்டுவதினாலோ தனக்கு ஒரு நன்மையும் உண்டாகாது என்பது யெரொபெயாமுக்கு தெரிந்திருக்கிறது.

பலிபீடம் வெடித்து சிதறிப்போகும் என்று தேவனுடைய மனுஷன் சற்று நேரத்திற்கு முன்பு கர்த்தருடைய வார்த்தையைச் சொன்னான். அவன் சொன்ன பிரகாரமாகவே பலிபீடம் வெடித்தது. சாம்பல் பலிபீடத்திலிருந்து கொட்டுண்டு போயிற்று. யெரொபெயாம் இந்த சம்பவத்தையெல்லாம் பார்த்து, பலிபீடத்தின்மீதும், விக்கிரகங்களின்மீதும் நம்பிக்கை வைக்காமல், தேவனாகிய கர்த்தர்மீது நம்பிக்கை வைக்கிறான்.

யெரொபெயாம் தேவனுடைய மனுஷனிடத்தில், "என் கை முன்போலிருக்கும்படிக்கு எனக்காக விண்ணப்பம்பண்ண வேண்டும்" என்று கேட்டுக்கொள்கிறான். தன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்படவேண்டும் என்றோ, தன்னுடைய இருதயத்தில் ஒரு மாற்றமுண்டாகவேண்டும் என்றோ விண்ணப்பம்பண்ணுமாறு யெரொபெயாம் தேவனுடைய மனுஷனைக் கேட்டுக்கொள்ளவில்லை. தன்னுடைய சரீரத்திலே சுகம் கிடைத்தால் போதுமென்று நினைக்கிறான். யெரொபெயாம் தன் ஆத்துமாவைக் குறித்து சிறிதும் கவலைப்படவில்லை.

தேவனுடைய மனுஷனும் யெரொபெயாமுக்காக உடனே ஜெபம்பண்ணுகிறான். அப்பொழுது தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய சமுகத்தை நோக்கி வருந்தி விண்ணப்பம் செய்கிறான். யெரொபெயாம் ராஜாவின் கை முன்னிருந்தபடி சீர்ப்படுகிறது.

கர்த்தர் தீர்க்கதரிசியின் விண்ணப்பத்திற்கு பதில் கொடுத்து, தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார். கர்த்தருடைய வல்லமையினால் பலிபீடம் வெடித்தது, கர்த்தருடைய நியாயத்தீர்ப்பினாலேயே யெரொபெயாமின் கை மரத்துப்போயிற்று. இப்போது கர்த்தருடைய குணமாக்கும் வல்லமையினால் யெரொபெயாமின் மரத்துப்போன கை முன்னிருந்தபடி சீர்ப்படுகிறது.

யெரொபெயாம் தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி சீர்படவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். கர்த்தர் தம்முடைய கோபத்தினாலும் நியாயத்தீர்ப்பினாலும் யெரொபெயாமைத் தண்டித்தார். ஆனால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பினால் யெரொபெயாமின் இருதயம் உடையவில்லை. நியாயத்தீர்ப்பினால் உடையாத இருதயம், கர்த்தருடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும் உருகும். கர்த்தர் யெரொபெயாமின் மரத்துப்போன கையை குணப்படுத்தி, தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் அவனுக்கு வெளிப்படுத்துகிறார்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பும், அவருடைய கிருபையுள்ள இரக்கமும் யெரொபெயாமின் இருதயத்தில் ஓரளவு கிரியை செய்கிறது. அவனுடைய இருதயத்தில் மனமாற்றமுண்டாயிற்று. ஆனால் இந்த மனமாற்றம் தற்காலிக மனமாற்றமாகவே இருக்கிறது. யெரொபெயாம் மறுபடியும் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறான். கர்த்தருடைய வல்லமையையும், அவருடைய நியாயத்தீர்ப்பையும், அவருடைய கிருபையையும், இரக்கத்தையும் யெரொபெயாம் சீக்கிரத்தில் மறந்துவிடுகிறான்.

தனக்காக விண்ணப்பம் செய்த தேவனுடைய மனுஷன்மீது யெரொபெயாம் அன்பாயிருக்கிறான். அவனுக்கு வெகுமானம்கொடுத்து அவனை கனம்பண்ணவேண்டுமென்று விரும்புகிறான்.

அப்பொழுது யெரொபெயாம் ராஜா தேவனுடைய மனுஷனை நோக்கி: "நீ என்னோடேகூட வீட்டுக்கு வந்து இளைப்பாறு; உனக்கு வெகுமானம் தருவேன்" (1இராஜா 13:7) என்று சொல்லுகிறான்.

யெரொபெயாமின் வெகுமானத்தை தேவனுடைய மனுஷன் ஏற்றுக்கொள்ளவில்லை. அவனுடைய அழைப்பை ஏற்று, அவனுடைய வீட்டிற்குப்போய் இளைப்பாறவும் மறுத்துவிடுகிறான்.

தேவனுடைய மனுஷன் யெரொபெயாம் ராஜாவை நோக்கி: "நீர் எனக்கு உம்முடைய வீட்டில் பாதி கொடுத்தாலும், நான் உம்மோடே வருவதுமில்லை, இந்த ஸ்தலத்தில் அப்பம் புசிப்பதுமில்லை, தண்ணீர் குடிப்பதுமில்லை" (1இராஜா 13:8) என்று சொல்லுகிறான்.

பெத்தேலில் அப்பம் புசிக்கவும், தண்ணீர் குடிக்கவும் கர்த்தர் தேவனுடைய மனுஷனுக்கு அனுமதி கொடுக்கவில்லை. பெத்தேலிலுள்ளவர்கள் கர்த்தரைவிட்டு விலகி, விக்கிரகங்களைப் பின்பற்றிப்போயிருக்கிறார்கள். அவர்களுடைய இருதயங்கள் விக்கிரகாராதனையினால் அசுத்தமாயிருக்கிறது. கர்த்தர் அவர்கள்மீது பிரியமாயில்லை. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பும், கோபமும் அவர்கள்மீது வந்திருக்கிறது. இவற்றிற்கு அடையாளமாக, கர்த்தர் தம்முடைய மனுஷனுக்கு, "நீ அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும், போனவழியாய்த் திரும்பாமலும் இரு" (1இராஜா 13:9) என்று தம்முடைய வார்த்தையால் கட்டளையிட்டிருக்கிறார்.

யெரொபெயாமின் மரத்துப்போன கை இப்போது முன்னிருந்தபடி சீர்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் யெரொபெயாமுக்காக கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம்பண்ணினான். அவன் ஏறெடுத்த ஜெபத்திற்கு யெரொபெயாம் வெகுமானம் கொடுக்க விரும்புகிறான். அவனை அன்போடு உபசரித்து அவனுக்கு நன்றி சொல்ல விரும்புகிறான்.

தேவனுடைய மனுஷனும் யூதாதேசத்திலிருந்து பெத்தேலுக்கு வந்திருக்கிறான். அவன் பசியாயும் களைப்பாயும் இருக்கிறான். ஒருவேளை அவன் ஐசுவரியம் இல்லாத தரித்திரனாயிருப்பதற்கும் வாய்ப்புள்ளது. ஆனாலும் தேவனுடைய மனுஷன் கர்த்தர் தனக்கு கொடுத்த கட்டளைக்கு கீழ்ப்படிகிறான்.

தேவனுடைய மனுஷன் களைப்பாயிருந்தாலும், யெரொபெயாமோடுகூட அவனுடைய வீட்டிலே இளைப்பாற மறுத்துவிடுகிறான். தேவனுடைய மனுஷன் தாகமாயும், பசியாயும் இருந்தாலும், யெரொபெயாமின் அப்பத்தைப் புசிக்கவும், தண்ணீரைக் குடிக்கவும் மறுத்துவிடுகிறான். தேவனுடைய மனுஷன் தரித்திரனாயிருந்தாலும், யெரொபெயாம் தரவிரும்பும் வெகுமானத்தை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறான்.

தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, பெத்தேலுக்கு வந்தவழியாய்த் திரும்பாமல், வேறுவழியாய்ப் போய்விடுகிறான் (1இராஜா 13:10).

கிழவனான ஒரு தீர்க்கதரிசி 1இராஜா 13:11-22

1இராஜா 13:11. கிழவனான ஒரு தீர்க்கதரிசி பெத்தேலிலே குடியிருந்தான்; அவன் குமாரர் வந்து தேவனுடைய மனுஷன் அன்றைய தினம் பெத்தேலிலே செய்த எல்லாச் செய்கைகளையும், அவன் ராஜாவோடே சொன்ன வார்த்தைகளையும், தங்கள் தகப்பனுக்கு அறிவித்தார்கள்.

1இராஜா 13:12. அப்பொழுது அவர்கள் தகப்பன்: அவன் எந்த வழி போனான் என்று அவர்களைக் கேட்டான். யூதாவிலிருந்து வந்த தேவனுடைய மனுஷன் போனவழி இன்னதென்று அவன் குமாரர் பார்த்திருந்தபடியால்,

1இராஜா 13:13. அவன் தன் குமாரருடனே: கழுதையின்மேல் சேணம்வைத்துக் கொடுங்கள் என்றான்; அவர்கள் கழுதையின்மேல் சேணம் வைத்துக் கொடுத்தபின், அவன் அதின்மேல் ஏறி,

1இராஜா 13:14. தேவனுடைய மனுஷனைத் தொடர்ந்துபோய், ஒரு கர்வாலி மரத்தின்கீழ் உட்கார்ந்திருக்கிற அவனைக் கண்டு: யூதாவிலிருந்து வந்த தேவனுடைய மனுஷன் நீர்தானா என்று அவனைக் கேட்டதற்கு; அவன், நான்தான் என்றான்.

1இராஜா 13:15. அப்பொழுது அவனை நோக்கி: என்னோடே வீட்டுக்கு வந்து அப்பம் புசியும் என்றான்.

1இராஜா 13:16. அதற்கு அவன்: நான் உம்மோடே திரும்பவும் உம்மோடே உள்ளே போகவுமாட்டேன்; இந்த ஸ்தலத்திலே உம்மோடே நான் அப்பம் புசிக்கவும் தண்ணீர் குடிக்கவுமாட்டேன்.

1இராஜா 13:17. ஏனென்றால் நீ அப்பம் புசியாமலும், அங்கே தண்ணீர் குடியாமலும், நீ போன வழியாய்த் திரும்பிவராமலும் இரு என்று கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாயிருக்கிறது என்றான்.

1இராஜா 13:18. அதற்கு அவன்: உம்மைப்போல நானும் தீர்க்கதரிசிதான்; அவன் அப்பம் புசித்துத் தண்ணீர் குடிக்க, நீ அவனைத் திருப்பி, உன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுவா என்று ஒரு தூதன் கர்த்தருடைய வார்த்தையாக என்னோடே சொன்னான் என்று அவனிடத்தில் பொய் சொன்னான்.

1இராஜா 13:19. அப்பொழுது அவன் இவனோடே திரும்பிப் போய், இவன் வீட்டிலே அப்பம் புசித்துத் தண்ணீர் குடித்தான்.

1இராஜா 13:20. அவர்கள் பந்தியில் உட்கார்ந்திருக்கிறபோது, அவனைத் திருப்பிக்கொண்டு வந்த தீர்க்கதரிசிக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டானதினால்,

1இராஜா 13:21. அவன் யூதாவிலிருந்து வந்த தேவனுடைய மனுஷனைப் பார்த்துச் சத்தமிட்டு உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கற்பித்த கட்டளையை நீ கைக்கொள்ளாமல் கர்த்தருடைய வாக்கை மீறி,

1இராஜா 13:22. அப்பம் புசிக்கவும் தண்ணீர் குடிக்கவும் வேண்டாம் என்று அவர் விலக்கின ஸ்தலத்திற்கு நீ திரும்பி, அப்பம் புசித்துத் தண்ணீர் குடித்தபடியினால், உன்னுடைய பிரேதம் உன் பிதாக்களின் கல்லறையிலே சேருவதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

யெரொபெயாம் தேவனுடைய மனுஷனுக்கு வெகுமானம் தருவதாக வாக்குப்பண்ணுகிறான். ஆனால் தேவனுடைய மனுஷனோ யெரொபெயாமின் வெகுமானத்தை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறான். அவனுக்கு கர்த்தருடைய வார்த்தையே பிரதானமாயிருக்கிறது. தேவனுடைய மனுஷன் ஐசுவரியத்திற்கோ, ராஜஉபசாரத்திற்கோ ஆசைப்படவில்லை.

தேவனுடைய மனுஷன் பெத்தேலுக்கு வந்த வழியாய்த் திரும்பாமல், வேறு வழியாய் போய்விடுகிறான். கர்த்தர் அவனுக்கு ஏற்கெனவே, "போனவழியாய்த் திரும்பாமலிரு" என்று கட்டளை கொடுத்திருக்கிறார். தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய கட்டளைக்கு அப்படியே கீழ்ப்படிகிறான்.

தேவனுடைய மனுஷன் யெரொபெயாம் ராஜாவின் ஆசை வார்த்தைகளுக்கு இணங்கவில்லை. ஆனாலும் கிழவனான ஒரு தீர்க்கதரிசி தேவனுடைய மனுஷனை வஞ்சித்துவிடுகிறான்.

கிழவனான ஒரு தீர்க்கதரிசி பெத்தேலிலே குடியிருக்கிறான்; அவன் குமாரர் வந்து தேவனுடைய மனுஷன் அன்றைய தினம் பெத்தேலிலே செய்த எல்லாச் செய்கைகளையும், அவன் ராஜாவோடே சொன்ன வார்த்தைகளையும், தங்கள் தகப்பனுக்கு அறிவிக்கிறார்கள் (1இராஜா 13:11).

கிழவனான தீர்க்கதரிசி தேவனுடைய மனுஷனை சந்தித்து தன்னுடைய வீட்டிற்கு அழைத்து வருகிறான். கிழவனான தீர்க்கதரிசியின் குமாரர், தேவனுடைய தீர்க்கதரிசியைப்பற்றிய விவரங்களை, தங்களுடைய தகப்பனாருக்கு சொல்லுகிறார்கள்.

அப்பொழுது அவர்கள் தகப்பன்: "அவன் எந்த வழி போனான்" என்று அவர்களைக் கேட்கிறான். யூதாவிலிருந்து வந்த தேவனுடைய மனுஷன் போனவழி இன்னதென்று அவன் குமாரர் பார்த்திருந்தபடியால், அவன் போன வழியை, அவர்கள் தங்களுடைய தகப்பனுக்கு அறிவிக்கிறார்கள் (1இராஜா 13:12).

கிழவனான தீர்க்கதரிசி, தேவனுடைய மனுஷனை பார்ப்பதற்கு உடனே புறப்பட்டுப்போகிறான். அவன் தன் குமாரருடனே: "கழுதையின்மேல் சேணம்வைத்துக் கொடுங்கள்" என்று கேட்கிறான்; அவர்கள் கழுதையின்மேல் சேணம்வைத்துக் கொடுத்தபின், அவன் அதின்மேல் ஏறி, தேவனுடைய மனுஷனைத் தொடர்ந்துபோகிறான். கிழவனான தீர்க்கதரிசி ஒரு கர்வாலி மரத்தின்கீழ் உட்கார்ந்திருக்கிற தேவனுடைய மனுஷனைக் காண்கிறான் (1இராஜா 13:13,14).

கிழவனான தீர்க்கதரிசி, தேவனுடைய மனுஷனிடத்தில், "யூதாவிலிருந்து வந்த தேவனுடைய மனுஷன் நீர்தானா" என்று கேட்கிறான். அதற்கு அவன் "நான்தான்" என்று பிரதியுத்தரம் சொல்லுகிறான்.

கிழவனான தீர்க்கதரிசிக்கும், தேவனுடைய மனுஷனுக்கும் ஒரு சிறிய சம்பாஷணை நடைபெறுகிறது. கிழவனான தீர்க்கதரிசி தேவனுடைய மனுஷனிடத்தில் பொய்சொல்லுகிறான். தேவனுடைய மனுஷனும் அவனுடைய வார்த்தைகளை நம்புகிறான்.

கிழவனான தீர்க்கதரிசி தேவனுடைய மனுஷனை நோக்கி, "என்னோடே வீட்டுக்கு வந்து அப்பம் புசியும்" என்று சொல்லுகிறான். அதற்கு தேவனுடைய மனுஷன்: "நான் உம்மோடே திரும்பவும் உம்மோடே உள்ளே போகவுமாட்டேன்; இந்த ஸ்தலத்திலே உம்மோடே நான் அப்பம் புசிக்கவும் தண்ணீர் குடிக்கவுமாட்டேன்" (1இராஜா 13:15,16) என்று சொல்லி, கிழவனான தீர்க்கதரிசியின் அழைப்பை ஏற்க மறுத்துவிடுகிறான்.

தேவனுடைய மனுஷன் ஆணவமாகவோ, அகம்பாவமாகவோ, மனமேட்டிமையாகவோ பேசவில்லை. மிகுந்த மனத்தாழ்மையோடு பேசுகிறான். கிழவனான தீர்க்கதரிசியின் அழைப்பை ஏற்க மறுப்பதற்கான காரணத்தையும், தேவனுடைய மனுஷன் அவனுக்கு தெளிவுபடுத்துகிறான்.

"ஏனென்றால் நீ அப்பம் புசியாமலும், அங்கே தண்ணீர் குடியாமலும், நீ போன வழியாய்த் திரும்பிவராமலும் இரு என்று கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாயிருக்கிறது" (1இராஜா 13:17) என்று தேவனுடைய மனுஷன் கிழவனான தீர்க்கதரிசிக்கு விளக்கமாய்ச் சொல்லுகிறான்.

தேவனுடைய மனுஷன் சொல்லும் வார்த்தைகள் கிழவனான தீர்க்கதரிசிக்கு நன்றாய்ப் புரிகிறது. ஆனாலும் கிழவன் தன்னுடைய விருப்பத்தை எப்படியாவது நிறைவேற்றவேண்டுமென்று நினைக்கிறான். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் பொய் சொல்லக்கூடாது. ஆனால் கிழவனான இந்த தீர்க்கதரிசியோ, தன்னுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக, தேவனுடைய மனுஷனிடத்தில் பொய்சொல்லுகிறான்.

கிழவனான தீர்க்கதரிசி, தேவனுடைய மனுஷனை நோக்கி, "உம்மைப்போல நானும் தீர்க்கதரிசிதான்; அவன் அப்பம் புசித்துத் தண்ணீர் குடிக்க, நீ அவனைத் திருப்பி, உன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுவா என்று ஒரு தூதன் கர்த்தருடைய வார்த்தையாக என்னோடே சொன்னான்" (1இராஜா 13:18) என்று அவனிடத்தில் பொய் சொல்லுகிறான்.

கிழவனான தீர்க்கதரிசி, ஒரு கள்ளத்தீர்க்கதரிசியைப்போல, தேவனுடைய மனுஷனிடத்தில் பொய்சொல்லுகிறான். சாமுவேலின் காலத்தில் தீர்க்கதரிசிகளின் கூட்டத்தார் இருந்தார்கள். தீர்க்கதரிசிகளின் புத்திரர் எல்லோரும் ஒரிடத்தில் கூடிவந்து, கர்த்தருடைய பிரமாணங்களையும், ஆவிக்குரிய காரியங்களையும் கற்றுக்கொள்வது வழக்கம். கிழவனான தீர்க்கதரிசி, இப்படிப்பட்ட தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவனாயிருக்கவேண்டும்.

தீர்க்கதரிசிகளின் கூட்டத்தார் பெத்தேலுக்கு அருகாமையிலிருந்தார்கள். இந்தக் கிழவனும் அவர்களோடு பயிற்சி பெற்றதினால், இவனும் தீர்க்கதரிசி என்று அழைக்கப்படுகிறான். இவன் ஆவிக்குரிய காரியங்களை கற்றவன். ஆனாலும் உலகப்பிரகாரமான காரியங்களில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, கர்த்தருக்கு பயப்படாமல், துணிகரமாக ஜீவிக்கிறான். தீர்க்கதரிசனத்தின் ஆவியானவர் இந்தக் கிழவனை விட்டு விலகிப்போய்விடுகிறார்.

கிழவனான தீர்க்கதரிசியினிடத்தில், கர்த்தருடைய ஆவியானவர் தங்கியிருந்தால், அவன் பொய் சொல்லமாட்டான். யெரொபெயாமின் விக்கிரகாரதனையையும் கிழவனான தீர்க்கதரிசி, கர்த்தருடைய நாமத்தினால் கடிந்து சொல்லியிருப்பான். ஆனால் இந்தக் கிழவனோ யெரொபெயாமோடு ஒரு வார்த்தையும் பேசவில்லை.

கிழவனான தீர்க்கதரிசி தேவனுடைய மனுஷனை தன்னுடைய வீட்டிற்கு ஏன் அழைத்துக்கொண்டு வருகிறான் என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. ஒருவேளை இவனுக்கு தேவனுடைய மனுஷன்மீது அன்பும் கரிசனையும் இருந்திருக்கலாம். அவனுக்கு போஜனமும், தண்ணீரும் கொடுத்து அவனை ஆதரிக்கவேண்டுமென்று கிழவனான தீர்க்கதரிசி விரும்பியிருக்கலாம்.

ஒருவேளை கிழவனான தீர்க்கதரிசியின் நோக்கம் கெட்டதாகவும் இருக்கலாம். கள்ளத்தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு சத்துருக்களாகவே இருப்பார்கள். கர்த்தருடைய நல்ல தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாக கள்ளத்தீர்க்கதரிசிகள் எப்போதும் கலகம்பண்ணுவார்கள். அவர்கள் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை அழித்துப்போட திட்டம்பண்ணுவார்கள். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள், தங்களுடைய ஊழியத்தை செய்யவிடாதவாறு, கள்ளத்தீர்க்கதரிசிகள் அவர்களை தடைபண்ணுவார்கள். அவர்களுக்கு இடையூறு செய்வார்கள்.

கிழவனான தீர்க்கதரிசி தேவனுடைய மனுஷனை தன்னுடைய வீட்டிற்கு அழைத்து வர, மிகவும் மோசமான உபாயத்தைப் பயன்படுத்துகிறான். கிழவனான தீர்க்கதரிசி, தேவனுடைய மனுஷனை நோக்கி, "என்னோடே வீட்டிற்கு வந்து அப்பம் புசியும்" என்று சொன்னபோது, தேவனுடைய மனுஷன் கிழவனிடத்தில், "நான் உம்மோடே திரும்பவும் உம்மோடே உள்ளே போகவுமாட்டேன்; இந்த ஸ்தலத்திலே உம்மோடே நான் அப்பம் புசிக்கவும் தண்ணீர் குடிக்கவுமாட்டேன்" (1இராஜா 13:16) என்று தெளிவாக பிரதியுத்தரம் சொன்னான்.

தேவனுடைய மனுஷன் சொன்ன பிரதியுத்தரமும், காரணமும் கிழவனான தீர்க்கதரிசிக்கு நன்றாகப் புரிகிறது. ஆனாலும் கிழவன் துன்மார்க்கமாய் சிந்திக்கிறான். தேவனுடைய மனுஷனை எவ்வாறு வஞ்சிப்பது என்று யோசிக்கிறான். கிழவன் தேவனுடைய மனுஷனிடத்தில், "உம்மைப்போல நானும் தீர்க்கதரிசிதான்" என்று சொல்லுகிறான். மேலும், "ஒரு தூதன் கர்த்தருடைய வார்த்தையாக என்னோடே சொன்னான்" என்றும் கிழவன் தேவனுடைய மனுஷனிடத்தில் பொய்சொல்லுகிறான். தேவனுடைய மனுஷனை திருப்பி, அவனை தன்னுடைய வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போகவேண்டும் என்பது, பரலோகத்திலிருந்து தனக்கு கொடுக்கப்பட்டிருக்கும் கட்டளை என்று கிழவன் பொய் சொல்லுகிறான்.

தேவனுடைய மனுஷனோ நல்ல தீர்க்கதரிசியாயிருந்தாலும், அவன் களைப்படைந்து, பசியோடும் தாகத்தோடும் இருக்கிறான். தேவனுடைய மனுஷன் கிழவனான தீர்க்கதரிசியின் வார்த்தைகளை நம்பி, அவனோடே திரும்பிப்போய், அவன் வீட்டில் அப்பம் புசித்து தண்ணீர் குடிக்கிறான் (1இராஜா 13:19).

யெரொபெயாம் ராஜா தேவனுடைய மனுஷனை நோக்கி, "நீ என்னோடேகூட வீட்டிற்கு வந்து இளைப்பாறு, உனக்கு வெகுமானம் தருவேன்" (1இராஜா 13:7) என்று சொன்னபோது, தேவனுடைய மனுஷன் மிகுந்த வைராக்கியத்தோடு, "நீர் எனக்கு உம்முடைய வீட்டில் பாதி கொடுத்தாலும், நான் உம்மோடே வருவதுமில்லை, இந்த ஸ்தலத்தில் அப்பம் புசிப்பதுமில்லை, தண்ணீர் குடிப்பதுமில்லை" (1இராஜா 13:8) என்று சொல்லி, யெரொபெயாமின் அழைப்பை ஏற்றுக்கொள்ள மறுத்தான். ஆனால் அதே மனுஷன், இப்போது கிழவனான தீர்க்கதரிசியின் அழைப்பை ஏற்று, அவனுடைய வீட்டிற்குப்போய், அப்பம் புசித்து தண்ணீர் குடிக்கிறான். கிழவன் மெய்யான தீர்க்கதரிசியுமல்ல. அவன் ஒரு கள்ளத்தீர்க்கதரிசி. தேவனுடைய மனுஷனால் கள்ளத்தீர்க்கதரிசியின் பொய்யான வார்த்தைகளை நிதானித்து அறிய முடியவில்லை.

தேவனுடைய மனுஷனும், கிழவனான தீர்க்கதரிசியும் பந்தியில் உட்கார்ந்திருக்கிறார்கள். அப்போது கிழவனான தீர்க்கதரிசிக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. இதுவரையிலும் பொய் சொன்ன கிழவனால், இப்போது கர்த்தருடைய வார்த்தையை சொல்லாமல், தனக்குள்ளே அடக்கி வைக்க முடியவில்லை.

கிழவனான தீர்க்கதரிசி யூதாவிலிருந்து வந்த தேவனுடைய மனுஷனைப் பார்த்துச் சத்தமிட்டு, "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கற்பித்த கட்டளையை நீ கைக்கொள்ளாமல் கர்த்தருடைய வாக்கை மீறி, அப்பம் புசிக்கவும் தண்ணீர் குடிக்கவும் வேண்டாம் என்று அவர் விலக்கின ஸ்தலத்திற்கு நீ திரும்பி, அப்பம் புசித்துத் தண்ணீர் குடித்தபடியினால், உன்னுடைய பிரேதம் உன் பிதாக்களின் கல்லறையிலே சேருவதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்" (1இராஜா 13:21,22) என்று சொல்லுகிறான்.

தேவனுடைய மனுஷனுக்கு சொல்லப்படுகிற வார்த்தை மிகவும் விநோதமாகயிருக்கிறது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு தேவனுடைய மனுஷன்மீது உடனே வருகிறது. அவனுடைய பிரேதம், அவனுடைய பிதாக்களின் கல்லறையிலே சேருவதில்லை என்பது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பாயிருக்கிறது.

கர்த்தருடைய வெளிப்பாடு விநோதமாயிருப்பதுபோலவே, இந்த வெளிப்பாடு கிழவனான தீர்க்கதரிசியின் மூலமாக சொல்லப்படுவதும் மிகவும் விநோதமாயிருக்கிறது. கர்த்தருடைய வார்த்தை கிழவனான தீர்க்கதரிசியின் மனதை வெகுவாக பாதிக்கிறது. ஆகையினால் கிழவன் தேவனுடைய மனுஷனைப் பார்த்து, மெதுவாகப் பேசாமல், சத்தமிட்டு பேசுகிறான். அவனால் கர்த்தருடைய வார்த்தைகளையும், அவனுடைய மனதின் உணர்ச்சிகளையும் அடக்க முடியவில்லை. கிழவனான தீர்க்கதரிசி மிகுந்த வியாகுலத்தோடு கர்த்தருடைய வார்த்தைகளை அறிவிக்கிறான்.

கர்த்தர் வெளிப்படுத்துகிற வார்த்தைகள், கிழவனான தீர்க்கதரிசிக்கும் எச்சரிப்பாகச் சொல்லப்படுகிறது. தேவனுடைய கோபாக்கினையின் வார்த்தைகளை சொல்லுகிறவர்கள், மிகுந்த பயத்தோடும், நடுக்கத்தோடும் சொல்லவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளை அறிவிக்கிறவர்கள் பயபக்தியோடும், பரிசுத்தத்தோடும் அறிவிக்கவேண்டும்.

கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. பாவிகள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள், கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது, கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அந்த தீர்க்கதரிசிகள்மீதும் வரும். கர்த்தருடைய வார்த்தைகளை பிரசங்கம்பண்ணுகிறவர்கள், இந்த சத்தியத்தை தங்கள் இருதயத்தில் பதியவைத்திருக்கவேண்டும். அவர்கள் கர்த்தருக்கு முன்பாக பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும். பரிசுத்தமில்லாமல் தேவனை தரிசிப்பதும், தேவனுக்கு ஊழியம் செய்வதும் இயலாத காரியம்.

தீர்க்கதரிசியின் மரணம்
1இராஜா 13:23-34

1இராஜா 13:23. அவன் போஜனபானம்பண்ணி முடிந்தபின்பு, அந்தத் தீர்க்கதரிசியைத் திருப்பிக்கொண்டுவந்தவன் அவனுக்குக் கழுதையின்மேல் சேணம்வைத்துக் கொடுத்தான்.

1இராஜா 13:24. அவன் போனபிற்பாடு வழியிலே ஒரு சிங்கம் அவனுக்கு எதிர்ப்பட்டு அவனைக் கொன்றுபோட்டது; அவன் பிரேதம் வழியிலே கிடந்தது; கழுதை அதினண்டையிலே நின்றது; சிங்கமும் பிரேதத்தண்டையிலே நின்றது.

1இராஜா 13:25. அந்த வழியே கடந்துவருகிற மனுஷர், வழியிலே கிடக்கிற பிரேதத்தையும், பிரேதத்தண்டையிலே நிற்கிற சிங்கத்தையும் கண்டு, கிழவனான தீர்க்கதரிசி குடியிருந்த பட்டணத்திலே வந்து சொன்னார்கள்.

1இராஜா 13:26. அவனை வழியிலிருந்து திரும்பப்பண்ணின தீர்க்கதரிசி அதைக் கேட்டபோது, அவன் கர்த்தருடைய வாக்கை மீறின தேவனுடைய மனுஷன்தான், கர்த்தர் அவனுக்குச் சொன்ன வார்த்தையின்படியே, கர்த்தர் அவனை ஒரு சிங்கத்திற்கு ஒப்புக்கொடுத்தார்; அது அவனை முறித்துக் கொன்றுபோட்டது என்று சொல்லி,

1இராஜா 13:27. தன் குமாரரை நோக்கி: எனக்குக் கழுதையின்மேல் சேணம்வைத்துக் கொடுங்கள் என்றான்; அவர்கள் சேணம் வைத்துக் கொடுத்தார்கள்.

1இராஜா 13:28. அப்பொழுது அவன் போய், வழியிலே கிடக்கிற அவன் பிரேதத்தையும், பிரேதத்தண்டையிலே கழுதையும் சிங்கமும் நிற்கிறதையும் கண்டான்; அந்தச் சிங்கம் பிரேதத்தைத் தின்னவுமில்லை, கழுதையை முறித்துப்போடவுமில்லை.

1இராஜா 13:29. அப்பொழுது கிழவனான அந்தத் தீர்க்கதரிசி தேவனுடைய மனுஷனின் பிரேதத்தை எடுத்து, அதைக் கழுதையின்மேல் வைத்து, அதற்காகத் துக்கங் கொண்டாடவும் அதை அடக்கம்பண்ணவும், அதைத் தன் பட்டணத்திற்குக் கொண்டுவந்து,

1இராஜா 13:30. அவன் பிரேதத்தைத் தன்னுடைய கல்லறையிலே வைத்தான். அவனுக்காக: ஐயோ, என் சகோதரனே என்று புலம்பி, துக்கங்கொண்டாடினார்கள்.

1இராஜா 13:31. அவனை அடக்கம்பண்ணினபின்பு, அவன் தன் குமாரரை நோக்கி: நான் மரிக்கும்போது, தேவனுடைய மனுஷன் அடக்கம்பண்ணப்பட்ட கல்லறையிலே என்னையும் நீங்கள் அடக்கம்பண்ணி, அவன் எலும்புகளண்டையிலே என் எலும்புகளையும் வையுங்கள்.

1இராஜா 13:32. அவன் பெத்தேலில் இருக்கிற பலிபீடத்திற்கும், சமாரியாவின் பட்டணங்களில் இருக்கிற மேடைகளாகிய சகல கோவில்களுக்கும் விரோதமாகக் கூறின கர்த்தருடைய வார்த்தை நிச்சயமாய் நிறைவேறும் என்றான்.

1இராஜா 13:33. இந்த நடபடிக்குப்பின்பு, யெரொபெயாம் தன் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பாமல், மறுபடியும் ஜனத்தில் ஈனமானவர்களை மேடைகளின் ஆசாரியராக்கினான்; எவன்மேல் அவனுக்கு மனதிருந்ததோ அவனைப் பிரதிஷ்டைபண்ணினான்; அப்படிப்பட்டவர்கள் மேடைகளின் ஆசாரியரானார்கள்.

1இராஜா 13:34. யெரொபெயாமின் வீட்டாரை பூமியின்மேல் வைக்காமல் அதம்பண்ணி அழிக்கும்படியாக இந்தக் காரியம் அவர்களுக்குப் பாவமாயிற்று.

தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லை. கிழவனான தீர்க்கதரிசி தேவனுடைய மனுஷனை வஞ்சித்துவிடுகிறான். தேவனுடைய மனுஷனும், கிழவனான தீர்க்கதரிசியும், பந்தியில் உட்கார்ந்திருக்கிறபோது, கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. தேவனுடைய மனுஷனோ பந்தியைவிட்டு உடனே எழுந்துவிடவில்லை. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளைக் கேட்ட பின்பும், அவன் போஜனம்பண்ணுகிறான்.

தேவனுடைய மனுஷன் போஜனபானம்பண்ணி முடிந்தபின்பு, அந்தத் தீர்க்கதரிசியைத் திருப்பிக்கொண்டுவந்தவன் அவனுக்குக் கழுதையின்மேல் சேணம் வைத்துக் கொடுக்கிறான் (1இராஜா 13:23). தேவனுடைய மனுஷனுக்கு விரோதமாக, கர்த்தருடைய வார்த்தையைச் சொன்ன கிழவனான தீர்க்கதரிசியே, அவனுக்கு பிரயாண உதவிகளையும் செய்கிறான்.

கிழவனான தீர்க்கதரிசி, தேவனுடைய மனுஷனிடத்தில், " உன்னுடைய பிரேதம் உன் பிதாக்களின் கல்லறையிலே சேருவதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்" (1இராஜா 13:22) என்று சொன்னான். தேவனுடைய மனுஷனுக்கு எப்போது மரணம் வரும் என்பது, இந்தச் செய்தியைச் சொன்ன கிழவனுக்கும் தெரியாது, இந்தச் செய்தியைக் கேட்ட தேவனுடைய மனுஷனுக்கும் தெரியாது.

கர்த்தருடைய வார்த்தை சீக்கிரத்தில் நிறைவேறாது என்று நினைத்து, கிழவனும் தேவனுடைய மனுஷனும் இறுமாப்பாயிருந்திருக்கலாம். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்கும் காலமாயிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தீர்க்கதரிசியாகயிருந்தாலும், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவன்மீது உடனே வருகிறது.

தேவனுடைய மனுஷன் போனபிற்பாடு வழியிலே ஒரு சிங்கம் அவனுக்கு எதிர்ப்பட்டு அவனைக் கொன்றுபோடுகிறது; அவன் பிரேதம் வழியிலே கிடக்கிறது; கழுதை அதினண்டையிலே நிற்கிறது; சிங்கமும் பிரேதத்தண்டையிலே நிற்கிறது (1இராஜா 13:24). தேவனுடைய மனுஷன் கழுதையின்மேல் ஏறிப்போனான். சிங்கமோ தேவனுடைய மனுஷனை மாத்திரமே கொன்றுபோடுகிறது.

கர்த்தர் தேவனுடைய மனுஷனிடத்தில், "நீ அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும், போன வழியாய்த் திரும்பாமலும் இரு" (1இராஜா 13:9) என்று சொல்லியிருந்தார். தேவனுடைய மனுஷனோ யெரொபெயாமின் அரண்மனையில் போஜனம்பண்ணுவதைவிட, கிழவனான தீர்க்கதரிசியின் வீட்டிலே போஜனம் பண்ணுவது தனக்கு பாதுகாப்பானது என்று நினைத்திருக்கலாம். கர்த்தரோ அப்பம் புசிக்கக்கூடாது என்றும் தண்ணீர் குடிக்கக்கூடாது என்றும் தீர்மானமாகக் கட்டளையிட்டிருக்கிறார்.

கர்த்தர் நம்மிடத்தில் தெளிவாகப் பேசும்போது, நாம் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு நூதனமான விளக்கங்களையும், வியாக்கியானங்களையும் தேடக்கூடாது. கர்த்தர் சர்வஞானமுள்ளவர். மனுஷனுடைய ஞானம் குறைவுள்ளது. கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமலிருப்பது மிகப்பெரிய பாவம்.

தம்முடைய ஜனம் தம்முடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியவேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். புறஜாதியார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். கர்த்தருடைய ஜனமோ அவருக்கு விசேஷித்தவர்களாயும், பரிசுத்த ஜாதியாயும் இருக்கிறார்கள். கர்த்தருடைய ஜனம் பாவம் செய்யும்போது, அவர்களுடைய பாவங்கள் கர்த்தருக்கு மிகவும் அருவருப்பாயிருக்கிறது.

மனுஷன் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியாமலிருக்கும்போது, கர்த்தருடைய கோபம் அவன்மீது வரும். மனுஷனுடைய சுயபுத்தியோ, சுயஞானமோ, சுயபலமோ கர்த்தருடைய கோபத்திலிருந்து அவனை பாதுகாக்காது. கர்த்தருக்கு கீழ்ப்படிவதே மனுஷனுக்கு ஞானம்.

ஒருவன் கர்த்தருக்காக ஊழியம் செய்தாலும், அவன் உயர்ந்த பதவிகளையும், உயர்ந்த அந்தஸ்துக்களையும் வகித்தாலும், அவன் கர்த்தருக்கு மிகவும் அருகாமையிலிருந்தாலும், அவன் மனுஷருக்கு ஏராளமான தானதருமங்களை செய்திருந்தாலும், அவன் மனுஷர் மத்தியிலே நற்பெயர் எடுத்திருந்தாலும், அவன் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியவில்லையென்றால், தேவனுடைய கோபம் அவன்மீது வரும்.

தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல், கிழவனான தீர்க்கதரிசியின் வீட்டிலே பந்தியில் அமர்ந்து அப்பம் புசிக்கிறான், தண்ணீர் குடிக்கிறான். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவனுக்கு அறிவிக்கப்படுகிறது. கர்த்தருடைய கோபம் வெளிப்படுத்தப்பட்டாலும், அந்தக் கோபத்திற்கு மத்தியிலும், கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் வெளிப்படுத்தப்படுகிறது.

தேவனுடைய மனுஷனை ஒரு சிங்கம் கொன்றுபோடுகிறது. ஆனாலும் அந்த சிங்கம் அவனுடைய சரீரத்தைப் பீறிப்போடவில்லை. செத்துப்போன தேவனுடைய மனுஷனின் பிரேதத்தை அந்த சிங்கம் தின்றுபோடவில்லை. அவனுடைய பிரேதம் வழியிலே கிடக்கிறது. அவனுடைய பிரேதத்தினண்டையில் கழுதை நிற்கிறது. சிங்கம் அந்தக் கழுதையை கொல்லவில்லை. அந்த வழியே மனுஷர்கள் கடந்து வருகிறார்கள். அந்த சிங்கம் அவர்களைக் கொன்றுபோடவில்லை. தேவனுடைய மனுஷனின் பிரேதத்தை எடுப்பதற்கு கிழவனான தீர்க்கதரிசி அங்கே வருகிறான். அந்த சிங்கம் கிழவனை கொல்லவில்லை.

தேவனுடைய மனுஷனின் பிரேதம் வழியிலே கிடக்கிறது; கழுதை அதினண்டையிலே நிற்கிறது; சிங்கமும் பிரேதத்தண்டையிலே நிற்கிறது. அந்த வழியே கடந்துவருகிற மனுஷர், வழியிலே கிடக்கிற பிரேதத்தையும், பிரேதத்தண்டையிலே நிற்கிற சிங்கத்தையும் கண்டு, கிழவனான தீர்க்கதரிசி குடியிருந்த பட்டணத்திலே வந்து சொல்லுகிறார்கள் (1இராஜா 13:24,25).

தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய வார்த்தையை யெரொபெயாமுக்கு அறிவிக்க வந்தவன். அவன் கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருந்தவன். கர்த்தருக்கு உண்மையாய் ஊழியம் செய்தவன். அவன் யெரொபெயாமுக்கு முன்பாக தைரியமாய் நின்று கர்த்தருடைய வார்த்தையை அறிவித்தவன். ஆனால் அந்த மனுஷன் இப்போது ஒரு குற்றவாளியைப்போல வழியிலே செத்துக்கிடக்கிறான்.

தேவனுடைய மனுஷனிடத்தில் பொய் சொல்லி, அவனை வஞ்சித்த கிழவனோ செத்துப்போகாமல் உயிரோடிருக்கிறான். விக்கிரகங்களை ஆராதிக்கிற யெரொபெயாம், தன்னுடைய அரண்மனையில் சுகமாய் ஜீவிக்கிறான். அவன் சகல அதிகாரத்தோடும் இஸ்ரவேல் தேசத்தை ராஜ்யபாரம் பண்ணுகிறான். எல்லோரும் சுகமாயிருக்கும்போது, தேவனுடைய மனுஷன் செத்துப்போனதற்கான காரணம் தெரியவில்லை.

மனுஷர் அனுபவிக்கும் பாடுகளை ஆதாரமாக வைத்து நாம் அவர்களை நியாயந்தீர்க்கக்கூடாது. மனுஷர் அனுபவிக்கும் எல்லா பாடுகளுக்கும் அவர்களுடைய பாவங்களும், அக்கிரமங்களுமே காரணமென்று ஒட்டுமொத்தமாக தீர்மானம்பண்ணிவிடக்கூடாது.

கர்த்தர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நம்மைத் தண்டிக்கிறார். ஆனாலும் நாம் அனுபவிக்கும் எல்லா பாடுகளும், நம்முடைய பாவங்களுக்கு தண்டனைகளாக வருவதில்லை. பல சமயங்களில், நம்முடைய மாம்சம் மரிக்கவேண்டும் என்பதற்காகவும், நம்முடைய ஆத்துமா இரட்சிக்கப்பட்டு ஜீவனோடிருக்கவேண்டும் என்பதற்காகவும் கர்த்தர் நமக்கு பாடுகளை அனுமதிக்கிறார்.

தேவனுடைய மனுஷன் வழியிலே கிடப்பதைப் பார்த்த மனுஷர், கிழவனான தீர்க்கதரிசியினிடத்தில் இந்தச் செய்தியை சொல்லுகிறார்கள். தேவனுடைய மனுஷன் செத்துப்போனதற்கான காரணம் கிழவனான தீர்க்கதரிசிக்கு தெரிந்திருக்கிறது.

தேவனுடைய மனுஷனை வழியிலிருந்து திரும்பப்பண்ணின தீர்க்கதரிசி அதைக் கேட்டபோது, "அவன் கர்த்தருடைய வாக்கை மீறின தேவனுடைய மனுஷன்தான், கர்த்தர் அவனுக்குச் சொன்ன வார்த்தையின்படியே, கர்த்தர் அவனை ஒரு சிங்கத்திற்கு ஒப்புக்கொடுத்தார்; அது அவனை முறித்துக் கொன்றுபோட்டது" (1இராஜா 13:26) என்று சொல்லுகிறான்.

கிழவனான தீர்க்கதரிசி தன் குமாரரை நோக்கி: "எனக்குக் கழுதையின்மேல் சேணம்வைத்துக் கொடுங்கள்" என்று கேட்கிறான்; அவர்கள் சேணம் வைத்துக் கொடுக்கிறார்கள். அப்பொழுது கிழவன் போய், வழியிலே கிடக்கிற அவன் பிரேதத்தையும், பிரேதத்தண்டையிலே கழுதையும் சிங்கமும் நிற்கிறதையும் காண்கிறான்; அந்தச் சிங்கம் பிரேதத்தைத் தின்னவுமில்லை, கழுதையை முறித்துப்போடவுமில்லை (1இராஜா 13:27,28).

கிழவனான அந்தத் தீர்க்கதரிசி தேவனுடைய மனுஷனின் பிரேதத்தை எடுத்து, அதைக் கழுதையின்மேல் வைத்து, அதற்காகத் துக்கங் கொண்டாடவும் அதை அடக்கம்பண்ணவும், அதைத் தன் பட்டணத்திற்குக் கொண்டுவருகிறான். கிழவனான தீர்க்கதரிசி தேவனுடைய மனுஷனின் பிரேதத்தைத் தன்னுடைய கல்லறையிலே வைக்கிறான். அவனுக்காக: "ஐயோ, என் சகோதரனே" என்று புலம்பி, துக்கங்கொண்டாடுகிறார்கள் (1இராஜா 13:29,30).

கிழவனான தீர்க்கதரிசி ஒரு கள்ளத்தீர்க்கதரிசியாகயிருந்தாலும், அவன் தன்னுடைய பிரேதத்தை, தேவனுடைய மனுஷன் அடக்கம்பண்ணப்பட்ட கல்லறையில் அடக்கம்பண்ணவேண்டுமென்று விரும்புகிறான்.

தேவனுடைய மனுஷனை அடக்கம்பண்ணினபின்பு, கிழவனான தீர்க்கதரிசி தன் குமாரரை நோக்கி: "நான் மரிக்கும்போது, தேவனுடைய மனுஷன் அடக்கம்பண்ணப்பட்ட கல்லறையிலே என்னையும் நீங்கள் அடக்கம்பண்ணி, அவன் எலும்புகளண்டையிலே என் எலும்புகளையும் வையுங்கள்" (1இராஜா 13:31) என்று சொல்லுகிறான்.

தேவனுடைய மனுஷன் செத்துப்போனாலும், அவன் மூலமாக சொல்லப்பட்ட கர்த்தருடைய வார்த்தைகள் ஒருபோதும் செத்துப்போவதில்லை. செத்துப்போனவன் கர்த்தருடைய மெய்யான தீர்க்கதரிசி என்பதை, கிழவனான தீர்க்கதரிசி அங்கீகரிக்கிறான்.

தேவனுடைய மனுஷன் யெரொபெயாம் கட்டின பலிபீடத்திற்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தையைச் சொன்னான். தேவனுடைய மனுஷன் பலிபீடத்தை நோக்கி, "பலிபீடமே பலிபீடமே, இதோ, தாவீதின் வம்சத்தில் யோசியா என்னும் பேருள்ள ஒரு குமாரன் பிறப்பான்; அவன் உன்மேல் தூபங்காட்டுகிற மேடைகளின் ஆசாரியர்களை உன்மேல் பலியிடுவான்; மனுஷரின் எலும்புகளும் உன்மேல் சுட்டெரிக்கப்படும் என்பதைக் கர்த்தர் உரைக்கிறார்" (1இராஜா 13:2) என்று கர்த்தருடைய வார்த்தையைச் சொன்னான்.

தேவனுடைய மனுஷன் சொன்ன கர்த்தருடைய வார்த்தைகள் நிச்சயமாய் நிறைவேறும் என்பதை கிழவனான தீர்க்கதரிசியும் அங்கீகரிக்கிறான். கிழவனான தீர்க்கதரிசி தன் குமாரரை நோக்கி, "தேவனுடைய மனுஷன் பெத்தேலில் இருக்கிற பலிபீடத்திற்கும், சமாரியாவின் பட்டணங்களில் இருக்கிற மேடைகளாகிய சகல கோவில்களுக்கும் விரோதமாகக் கூறின கர்த்தருடைய வார்த்தை நிச்சயமாய் நிறைவேறும்" (1இராஜா 13:32) என்று சொல்லுகிறான்.

கிழவனான தீர்க்கதரிசியின் எலும்புகள், தேவனுடைய மனுஷனின் கல்லறையிலே அடக்கம்பண்ணப்படும்போது, அவனுடைய எலும்புகளுக்கு ஒரு சேதமும் உண்டாகாது. யோசியா யெரொபெயாம் கட்டின பலிபீடத்தின்மேல் மனுஷருடைய எலும்புகளை சுட்டெரிப்பான். அப்போது கிழவனான தீர்க்கதரிசியின் எலும்புகள் யோசியாவின் கோபத்திற்கு தப்பிக்கும்.

"அப்பொழுது அவன்: நான் காண்கிற அந்தக் குறிப்படையாளம் என்ன என்று கேட்டதற்கு, அந்தப் பட்டணத்து மனுஷர்: அது யூதாவிலிருந்து வந்து, நீர் செய்த இந்தக் கிரியைகளைப் பெத்தேலின் பலிபீடத்திற்கு விரோதமாய்க் கூறி, அறிவித்த தேவனுடைய மனுஷனின் கல்லறை என்றார்கள். அதற்கு அவன்: இருக்கட்டும், ஒருவனும் அவன் எலும்புகளைத் தொடவேண்டாம் என்றான்; அப்படியே அவன் எலும்புகளைச் சமாரியாவிலிருந்து வந்த தீர்க்கதரிசியின் எலும்புகளோடு விட்டுவிட்டார்கள்" (2இராஜா 23:17,18).

கிழவனான தீர்க்கதரிசி தேவனுடைய மனுஷனின் பிரேதத்தை தன்னுடைய கல்லறையிலே வைக்கிறான். அந்தக் கல்லறையின்மீது தீர்க்கதரிசியைப்பற்றிய வாசகம் எதுவும் எழுதப்படவில்லை. ஆனால் அந்தக் கல்லறையில் குறிப்படையாளம் போடப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது. யோசியா தேவனுடைய மனுஷனின் எலும்புகளை சுட்டெரிக்காமல் விட்டுவிடுகிறான்.

கிழவனான தீர்க்கதரிசி, தேவனுடைய மனுஷன் சொன்ன கர்த்தருடைய வார்த்தைகளை நம்புகிறான். யெரொபெயாமோ கர்த்தருடைய வார்த்தையை நம்பவில்லை. பலிபீடம் வெடித்தபோதும், யெரொபெயாமின் கை மறத்துப்போனபோதும், அவனுடைய மனதிலே சிறிது மாற்றமுண்டாயிற்று. ஆனால் அந்த மாற்றம் நிலைக்கவில்லை. அவன் சீக்கிரத்தில் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறான்.

இந்த நடபடிக்குப்பின்பு, யெரொபெயாம் தன் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பாமல், மறுபடியும் ஜனத்தில் ஈனமானவர்களை மேடைகளின் ஆசாரியராக்குகிறான்; எவன்மேல் அவனுக்கு மனதிருந்ததோ அவனைப் பிரதிஷ்டைபண்ணுகிறான்; அப்படிப்பட்டவர்கள் மேடைகளின் ஆசாரியராகிறார்கள். யெரொபெயாமின் வீட்டாரை பூமியின்மேல் வைக்காமல் அதம்பண்ணி அழிக்கும்படியாக இந்தக் காரியம் அவர்களுக்குப் பாவமாயிற்று (1இராஜா 13:33,34).

கர்த்தருடைய கோபத்தினால் யெரொபெயாம் கட்டின பலிபீடம் வெடித்தது. அதின்மேலுள்ள சாம்பல் கொட்டுண்டுபோயிற்று. யெரொபெயாமோ வெடித்து சிதறிய பலிபீடத்தை மறுபடியும் கட்டுகிறான். அவன் கர்த்தருக்கு விரோதமாக துணிகரமாய்ப் பாவம் செய்கிறான். யெரொபெயாம் விக்கிரகங்களுக்கு பலிபீடங்களைக் கட்டுவது மாத்திரமல்ல, அவைகளின்மீது மறுபடியும் தூபங்காட்டுகிறான்.

யெரொபெயாம் தன்னுடைய பொல்லாத வழியை விட்டுத் திரும்புவதற்கு, அவனுக்கு அநேக வாய்ப்புக்கள் உண்டாயிற்று. கர்த்தர் அவனைத் திருத்துவதற்கும், தம்முடைய கோபத்தை வெளிப்படுத்துவதற்கும் அநேக அடையாளங்களை காண்பித்தார். ஆனால் யெரொபெயாம் கர்த்தருடைய வார்த்தைக்கும் செவிகொடுக்கவில்லை. கர்த்தர் காண்பித்த அடையாளங்களைப் பார்த்து மனந்திரும்பவுமில்லை. தேவனுடைய நியாயத்தீர்ப்பும், அவருடைய கிருபையுள்ள இரக்கங்களும் யெரொபெயாமின் மனதை மாற்றவில்லை. யெரொபெயாம் இரண்டு கன்றுக்குட்டிகளை நிறுவி அவற்றோடு ஐக்கியமாகிவிடுகிறான்.

14 அதிகாரம்

சமஸ்த இஸ்ரவேல் ராஜ்யம் வடக்கு இஸ்ரவேல் தேசம் என்றும், தெற்கு யூதா என்றும் இரண்டாகப் பிரிகிறது. யெரொபெயாமின் வீட்டார்நிர்மூலமாவார்கள் என்னும் தீர்க்கதரிசனம் (1இராஜா 14:7-16). யெரொபெயாமின் குமாரனாகிய அபியா வியாதியில் விழுகிறான் (1இராஜா 14:1-6). அபியா செத்துப்போகிறான் (1இராஜா 14:17,18). யெரொபெயாமின் ராஜ்யபாரம் முடிவுபெறுகிறது (1இராஜா 14:19,20).

ரெகொபெயாமின் ஆட்சிக்காலம். ரெகொபெயாமுடைய வீட்டாரின் மகிமை மங்கிப்போகிறது. அவனுடைய ராஜ்யம் குறைவுபடுகிறது (1இராஜா 14:21-28). ரெகொபெயாமின் ராஜ்யபாரம் முடிவு பெறுகிறது (1இராஜா 14:29-31).

அபியாவின் வியாதி 1இராஜா 14:1-6

1இராஜா 14:1. அக்காலத்திலே யெரொபெயாமின் குமாரனாகிய அபியா வியாதியில் விழுந்தான்.

1இராஜா 14:2. அப்பொழுது யெரொபெயாம் தன் மனைவியைப் பார்த்து: நீ எழுந்து, நீ யெரொபெயாமின் மனைவியென்று ஒருவரும் அறியாதபடிக்கு வேஷம்மாறி சீலோவுக்குப் போ; இந்த ஜனத்தின்மேல் நான் ராஜாவாவேன் என்று என்னோடே சொன்ன தீர்க்கதரிசியாகிய அகியா அங்கே இருக்கிறான்.

1இராஜா 14:3. நீ உன் கையிலே பத்து அப்பங்களையும், பணியாரங்களையும், ஒரு கலசம் தேனையும் எடுத்துக்கொண்டு அவனிடத்துக்குப் போ; பிள்ளைக்குச் சம்பவிக்கப் போகிறது இன்னதென்று அவன் உனக்கு அறிவிப்பான் என்றான்.

1இராஜா 14:4. அப்படியே யெரொபெயாமின் மனைவி செய்தாள்; அவள் எழுந்து சீலோவுக்குப் போய், அகியாவின் வீட்டிற்குள் பிரவேசித்தாள்; அகியாவோ முதிர் வயதானதினால் அவன் கண்கள் மங்கலடைந்து பார்க்கக்கூடாதிருந்தான்.

1இராஜா 14:5. கர்த்தர் அகியாவினிடத்தில்: இதோ, யெரொபெயாமின் மனைவி வியாதியாயிருக்கிற தன் குமாரனுக்காக உன்னை ஒரு விசேஷம்கேட்க வருகிறாள்; நீ அவளுக்கு இன்ன இன்ன பிரகாரமாகச் சொல்ல வேண்டும்; அவள் உட்பிரவேசிக்கிற போது, தன்னை அந்நிய ஸ்திரீயாகக் காண்பிப்பாள் என்றார்.

1இராஜா 14:6. ஆகையால் வாசற்படிக்குள் பிரவேசிக்கும் அவளுடைய நடையின் சத்தத்தை அகியா கேட்டவுடனே, அவன்: யெரொபெயாமின் மனைவியே, உள்ளே வா; உன்னை அந்நிய ஸ்திரீயாகக் காண்பிக்கிறதென்ன? துக்கசெய்தியை உனக்கு அறிவிக்க நான் அனுப்பப்பட்டேன்.

யெரொபெயாம் கர்த்தருக்கு விரோதமாக துணிகரமாகப் பாவம் செய்கிறான். அவன் தன்னுடைய பொல்லாத வழியை விட்டுத் திரும்பவில்லை. யெரொபெயாம் கர்த்தரைவிட்டு விலகி விக்கிரகங்களைப் பின்பற்றுகிறான்.

அக்காலத்தில், யெரொபெயாமின் குமாரனாகிய அபியா வியாதியில் விழுகிறான். அபியா யெரொபெயாமின் மூத்த குமாரனாக இருக்கவேண்டுமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். அபியா சேஷ்ட புத்திரனாகயிருப்பதினால், யெரொபெயாமுக்கு பின்பு, அபியாவே இஸ்ரவேலின் சிங்காசனத்தில் வீற்றிருந்து, இஸ்ரவேலை ராஜ்யபாரம் பண்ணவேண்டும்.

அபியா செத்துப்போனபோது இஸ்ரவேலர் எல்லோரும் துக்கங்கொண்டாடி, அவனை அடக்கம்பண்ணுகிறார்கள் (1இராஜா 14:13). அபியா வியாதியில் விழுந்த காலத்தைப்பற்றியும் இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "அக்காலத்திலே" (1இராஜா 14:1) என்னும் வார்த்தைக்கு, "யெரொபெயாம் தன் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பாமல், மறுபடியும் ஜனத்தில் ஈனமானவர்களை மேடைகளின் ஆசாரியராக்கின காலத்தில்" (1இராஜா 13:33) என்று பொருள்.

எவன்மேல் யெரொபெயாமுக்கு மனதிருந்ததோ அவனைப் பிரதிஷ்டைபண்ணினான்; அப்படிப்பட்டவர்கள் மேடைகளின் ஆசாரியரானார்கள். யெரொபெயாம் கர்த்தரைவிட்டு விலகி, தன் பொல்லாத வழியை விட்டுத் திரும்பாத காலத்தில், அவனுடைய குமாரனாகிய அபியா வியாதியில் விழுகிறான்.

அகியா கர்த்தருடைய தீர்க்கதரிசி. இவன் யெரொபெயாமுக்கு ஏற்கனெவே தீர்க்கதரிசனம் சொன்னவன் (1இராஜா 11:29-39). யெரொபெயாம் அகியாவின்மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறான். தன்னுடைய குமாரனாகிய அகியா வியாதியில் விழுந்தபோது, யெரொபெயாம் தன்னுடைய மனைவியை தீர்க்கதரிசியாகிய அகியாவினிடத்தில் அனுப்புகிறான்.

யெரொபெயாம் தன் மனைவியைப் பார்த்து: "நீ எழுந்து, நீ யெரொபெயாமின் மனைவியென்று ஒருவரும் அறியாதபடிக்கு வேஷம்மாறி சீலோவுக்குப் போ; இந்த ஜனத்தின்மேல் நான் ராஜாவாவேன் என்று என்னோடே சொன்ன தீர்க்கதரிசியாகிய அகியா அங்கே இருக்கிறான். நீ உன் கையிலே பத்து அப்பங்களையும், பணியாரங்களையும், ஒரு கலசம் தேனையும் எடுத்துக்கொண்டு அவனிடத்துக்குப் போ; பிள்ளைக்குச் சம்பவிக்கப் போகிறது இன்னதென்று அவன் உனக்கு அறிவிப்பான்" (1இராஜா 14:2,3) என்று சொல்லுகிறான்.

அபியா வியாதியில் விழுந்தது யெரொபெயாமுக்கு மிகவும் வேதனையாயிருக்கிறது. தன்னுடைய பிள்ளைக்கு சம்பவிக்கப்போகிறது என்ன என்பதை அறிந்துகொள்ள யெரொபெயாம் விரும்புகிறான். அபியா வியாதி நீங்கி பிழைப்பானா அல்லது வியாதியில் விழுந்த அவன் செத்துப்போவானா என்பதை அறிந்துகொள்ள யெரொபெயாம் விரும்புகிறான்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே பரம வைத்தியர். வியாதியில் விழுந்திருக்கிற அபியா பிழைக்கவேண்டுமென்றால், யெரொபெயாம் பரம வைத்தியராகிய கர்த்தரிடத்தில் வந்து விண்ணப்பம்பண்ண வேண்டும். ஆனால் அவனோ கர்த்தரைவிட்டு விலகி விக்கிரகங்களைப் பின்பற்றுகிறான். கர்த்தருக்கு ஆராதனை செய்யாமல், விக்கிரகங்களுக்கு மேடைகளிலே தூபங்காட்டுகிறான்.

கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள். தம்மிடத்தில் வருகிறவர்களை கர்த்தர் ஒருபோதும் புறம்பே தள்ளிவிடமாட்டார். நம்முடைய பாவங்களுக்கு நாம் மனந்திரும்பும்போது, கர்த்தர் நம்முடைய பாவங்களை மன்னிப்பார். பாவத்தின் சாபத்தினால் வந்திருக்கும் நோய்களை நம்மை விட்டு நீக்குவார்.

அகசியா தன்னுடைய வியாதியைப்பற்றி பாகால்சேபூபிடத்தில் விசாரிக்கிறான். சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் கர்த்தரிடத்தில் விசாரிக்க சொல்லுகிறான். விக்கிரகங்களிடம் விசாரித்தால் வியாதி நீங்கும் என்பது புறஜாதியாரின் நம்பிக்கை. இது விக்கிரகாராதனையின் ஒரு பகுதி. இந்த நம்பிக்கை கர்த்தருடைய ஜனத்தாரிடமும் வந்திருக்கிறது. கர்த்தருடைய ஜனம் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்ப மறுக்கிறார்கள். ஆனாலும் கர்த்தரிடத்தில் விசாரித்தால், தங்களுடைய வியாதி நீங்கும் என்று நினைக்கிறார்கள். தங்களுடைய வியாதியைப்பற்றி, தீர்க்கதரிசிகளிடம் குறி கேட்பதுபோல விசாரிக்கிறார்கள்.

"அகசியா சமாரியாவிலிருக்கிற தன் மேல்வீட்டிலிருந்து கிராதியின் வழியாய் விழுந்து, வியாதிப்பட்டு: இந்த வியாதி நீங்கிப் பிழைப்பேனா என்று எக்ரோனின் தேவனாகிய பாகால்சேபூபிடத்தில் போய் விசாரியுங்கள் என்று ஆட்களை அனுப்பினான்" (2இராஜா 1:2).

"சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் வியாதியாருந்தான்; எலிசா தமஸ்குவுக்கு வந்தான்; தேவனுடைய மனுஷன் இவ்விடத்தில் வந்திருக்கிறான் என்று அவனுக்கு அறிவிக்கப்பட்டபோது, ராஜா ஆசகேலை நோக்கி: நீ உன் கையில் ஒரு காணிக்கையை எடுத்துக்கொண்டு, தேவனுடைய மனுஷனுக்கு எதிர்கொண்டுபோய், நான் இந்த வியாதி நீங்கிப் பிழைப்பேனா என்று அவனைக் கொண்டு கர்த்தரிடத்தில் விசாரிக்கச் சொன்னான்" (2இராஜா 8:8).

பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். தன்னுடைய பாவத்தை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ கர்த்தருடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்வான். யெரொபெயாம் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறான். கர்த்தருடைய வழியை விட்டு விலகி, விக்கிரகங்களின் வழியைப் பின்பற்றுகிறான். தன்னுடைய பொல்லாத வழியை விட்டுத் திரும்பாமலேயே, கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய அகியாவினிடத்தில் விசாரித்தால், தன்னுடைய பிள்ளைக்கு சம்பவிக்கப்போவதை அறிந்துகொள்ளலாம் என்று யெரொபெயாம் நினைக்கிறான்.

யெரொபெயாமுக்கு கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணத்தெரியாவிட்டால், அவன் அகியாவினிடத்தில்போய், அவனை தனக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுமாறு வேண்டிக்கொள்ளலாம். யெரொபெயாமும் விக்கிரகங்களைத் தன்னை விட்டு அகற்றவேண்டும். அப்போது கர்த்தருடைய கிருபையுள்ள கரம் யெரொபெயாமின்மீதும், அவனுடைய குமாரனாகிய அபியாவின்மீதும் வந்து தங்கும். வியாதியில் விழுந்திருக்கிற அபியா குணமடைவான்.

இக்காலத்திலும் அநேகர் தங்களுடைய பாவங்களையும், கடமைகளையும் உணராமல், தங்களுக்கு என்ன நேரிடும் என்பதை அறிந்துகொள்வதில் ஆர்வம் காண்பிக்கிறார்கள். தங்களுக்கு என்னென்ன ஆசீர்வாதங்களெல்லாம் கிடைக்கும் என்பதை தீர்க்கதரிசிகள் மூலமாய் கேள்விப்பட விரும்புகிறார்கள். தீர்க்கதரிசிகள் அவர்களுடைய பாவங்களையும், கடமைகளையும் அவர்களுக்கு எடுத்துச் சொன்னால், அவர்கள் இப்படிப்பட்ட வார்த்தைகளுக்கு செவிகொடுக்கமாட்டார்கள்.

தன்னுடைய பிள்ளைக்கு சம்பவிக்கப்போகிறது என்ன என்பதை யெரொபெயாம் அறிந்துகொள்ள விரும்புகிறான். இதற்காக அவன் தன் மனைவியை அகியா என்னும் தீர்க்கதரிசியினிடத்தில் அனுப்புகிறான். யெரொபெயாம் இஸ்ரவேல் ஜனத்தின்மேல் ராஜாவாவான் என்று இந்த அகியா அவனுக்கு ஏற்கெனவே தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறான்.

அகியாவுக்கு இப்போது முதிர்வயதாயிற்று. அதனால் அவனுடைய கண்கள் மங்கலடைந்து பார்க்கக்கூடாத நிலமையிலிருக்கிறது. தீர்க்கதரிசியாகிய அகியா இப்போது சீலோவிலே இருக்கிறான். அகியாவின் சரீரப்பிரகாரமான கண்கள் காணக்கூடாதபடிக்கு மங்கலாயிருந்தாலும், அவனுடைய ஆவிக்குரிய கண்கள் பிரகாசமாயிருக்கிறது. அகியாவால் கர்த்தருடைய தரிசனங்களை தெளிவாகப் பார்க்க முடிகிறது.

யெரொபெயாம் தன்னுடைய மனைவியை தீர்க்கதரிசியாகிய அகியாவினிடத்தில் அனுப்புகிறான். யெரொபெயாம் தாணிலும், பெத்தேலிலும் இரண்டு பொன்கன்றுக்குட்டிகளை நிறுவியிருக்கிறான். இந்தக் கன்றுக்குட்டிகளை நிறுவியது சம்பந்தமாக விசாரிப்பதற்காகவோ அல்லது ஜனத்தில் ஈனமானவர்களை மேடைகளின் ஆசாரியார்கள் ஆக்கினது பற்றி விசாரிப்பதற்காகவோ யெரொபெயாம் தன்னுடைய மனைவியை அகியாவினிடத்தில் அனுப்பவில்லை.

யெரொபெயாமின் குமாரனாகிய அபியா இப்போது வியாதியில் விழுந்திருக்கிறான். இதனால் யெரொபெயாமின் மனது கலக்கமடைந்திருக்கிறது. அவன் மிகுந்த வேதனையிலிருக்கிறான். யெரொபெயாம் நிறுவின பொன்கன்றுக்குட்டிகளோ, அவன் ஸ்தாபித்த மேடைகளோ, அவன் கட்டின பலிபீடங்களோ அவனுக்கு ஆறுதலைக் கொடுக்கவில்லை. அவை அவனுடைய வேதனைகளைக் குறைக்கவில்லை. வியாதியில் விழுந்துகிடக்கிற அபியாவை, அவன் ஆராதிக்கிற விக்கிரகங்கள் குணப்படுத்தவில்லை.

தீர்க்கதரிசியாகிய அகியா யெரொபெயாமுக்கு ஏற்கெனவே நல்ல செய்தியை சொல்லியிருக்கிறான். இஸ்ரவேல் ஜனத்தின்மேல் யெரொபெயாம் ராஜாவாவான் என்று அகியா ஏற்கெனவே தீர்க்கதரிசனம் சொன்னவன். அகியா தனக்கு ஏற்கெனவே நல்ல செய்தி சொன்னதினால், இப்போது அவன் மறுபடியுமாய் தனக்கு நல்ல செய்தி சொல்லுவான் என்று யெரொபெயாம் எதிர்பார்க்கிறான்.

யெரொபெயாமைப்போல ஏராளமான ஜனங்கள் தங்களுடைய பாவங்களினால், சந்தோஷத்தையும், சமாதானத்தையும், சரீர ஆரோக்கியத்தையும் இழந்துபோயிருக்கிறார்கள். இவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் இவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், தங்களுக்கு பிரியமான ஊழியக்காரர்கள், தங்களுக்கு ஆறுதலான வார்த்தைகளையும், ஆசீர்வாதமான வார்த்தைகளையும் சொல்லவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய பரிசுத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தங்களுடைய ஊழியக்காரரின் பரிசுத்தத்தில் நம்பிக்கை வைக்கிறார்கள். ஊழியக்காரர்கள் நல்லவர்களாகவும், பரிசுத்தவான்களாகவும் இருப்பதினால் அவர்கள் தங்களுக்கு சமாதானமான வார்த்தைகளையும், ஆறுதலான வார்த்தைகளையும், ஆசீர்வாதமான வார்த்தைகளையும் சொல்லுவார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்கிறார்கள். இந்த விஷயத்தில் இவர்கள் நம்புகிற ஊழியக்காரர்கள், இவர்களுடைய மனதின் எண்ணத்தை ஆதரித்தால், அப்படிப்பட்ட ஊழியக்காரர்களும் தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்கிறார்கள்.

யெரொபெயாம் தன்னுடைய மனைவியை, அகியா என்னும் தீர்க்கதரிசியினிடத்திற்கு அனுப்புகிறான். இவள் தீர்க்கதரிசிக்கு முன்பாக தன்னை அடையாளம் காண்பிக்கக்கூடாது. யெரொபெயாம் தன் மனைவியைப் பார்த்து, "நீ எழுந்து, நீ யெரொபெயாமின் மனைவி என்று ஒருவரும் அறியாதபடிக்கு வேஷம்மாறி சீலோவுக்குப்போ" (1இராஜா 14:2) என்று சொல்லுகிறான்.

யெரொபெயாமின் மனைவி அகியாவிடம் தன்னைப்பற்றி வெளிப்படுத்தாமல், பொதுவான காரியங்களை கேட்கவேண்டும். தனக்கு ஒரு பிள்ளை இருப்பதாகவும், அந்தப் பிள்ளை இப்போது வியாதியில் விழுந்திருப்பதாகவும், அந்தப் பிள்ளை வியாதி நீங்கி குணமடையுமா, குணமடையாதா என்பதை தனக்கு அறிவிக்கவேண்டும் என்றும், யெரொபெயாமின் மனைவி தீர்க்கதரிசியாகிய அகியாவினிடத்தில் பொதுவாக கேட்கவேண்டும்.

யெரொபெயாமின் மனைவி சீலோவுக்கு வேஷம்மாறிப்போகாமல், தன்னுடைய அரண்மனையிலேயே தங்கியிருந்து, வியாதியில் விழுந்து கிடக்கிற தன்னுடைய குமாரனை கவனிப்பது, அவளுக்கு நன்மையாக இருந்திருக்கும். அவள் தன்னை யெரொபெயாமின் மனைவி என்று ஒருவரும் அறியாதபடிக்கு வேஷம்மாறி சீலோவுக்குப்போகவேண்டும். அவள் தன்னுடைய அரமனையைவிட்டு வெளியேறி, இஸ்ரவேல் தேசத்திலிருந்து, யூதாதேசத்திற்கு புறப்பட்டுப்போகவேண்டும். இஸ்ரவேல் தேசத்தாருக்கும், யூதாதேசத்தாருக்கும் அவள் தன்னை யெரொபெயாமின் மனைவி என்று ஒருவரும் அறியாதபடிக்கு வேஷம்மாறிப்போகவேண்டும். சீலோவிலிருக்கிற தீர்க்கதரிசியாகிய அகியாவுக்கு முன்பாகவும், அவள் தன்னை யார் என்று வெளிப்படுத்தாமல், வேஷம்மாறிப்போகவேண்டும்.

யெரொபெயாமின் மனைவி தீர்க்கதரிசியாகிய அகியாவினிடத்தில், "பிள்ளைக்கு சம்பவிக்கப்போகிறது என்ன" என்று மாத்திரமே கேட்கவேண்டும். அவள் தன் புருஷனாகிய யெரொபெயாமின் பாவத்தைப்பற்றியோ, விக்கிரகாராதனையைப்பற்றியோ, அகியாவினிடத்தில் ஒன்றும் கேட்கக்கூடாது. யெரொபெயாம் கர்த்தரைவிட்டு விலகி பொல்லாத வழிகளில் நடக்கிறான். கர்த்தருடைய கோபம் அவன்மீது வந்திருக்கிறது. தன்னுடைய பிள்ளைக்கு என்ன சம்பவிக்கும் என்று கேட்பதற்கு பதிலாக, தன் புருஷனாகிய யெரொபெயாமுக்கு என்ன சம்பவிக்கும் என்பதைக் கேட்டால், அகியா அவர்களுக்கு பிரயோஜனமான ஆலோசனையை சொல்லியிருப்பான்.

யெரொபெயாம் தன்னுடைய மனைவியை தீர்க்கதரிசியாகிய அகியாவினிடத்தில் வெறுங்கையோடு அனுப்பவில்லை. பத்து அப்பங்களையும், பணியாரங்களையும், ஒரு கலசம் தேனையும் தன்னுடைய கையிலே எடுத்துக்கொண்டு, அகியாவினிடத்திற்குப்போகுமாறு, யெரொபெயாம் தன்னுடைய மனைவியினிடத்தில் சொல்லுகிறான்.

அப்படியே யெரொபெயாமின் மனைவி செய்கிறாள்; அவள் எழுந்து சீலோவுக்குப் போய், அகியாவின் வீட்டிற்குள் பிரவேசிக்கிறாள்; அகியாவோ முதிர் வயதானதினால் அவன் கண்கள் மங்கலடைந்து பார்க்கக்கூடாதிருக்கிறான் (1இராஜா 14:4).

யெரொபெயாமின் மனைவி அகியாவினிடத்தில் பேசுவதற்கு முன்பாகவே, கர்த்தர் அவளுடைய விஷயங்களை அகியாவுக்கு வெளிப்படுத்துகிறார். கர்த்தர் அகியாவினிடத்தில்: "இதோ, யெரொபெயாமின் மனைவி வியாதியாருக்கிற தன் குமாரனுக்காக உன்னை ஒரு விசேஷம்கேட்க வருகிறாள்; நீ அவளுக்கு இன்ன இன்ன பிரகாரமாகச் சொல்ல வேண்டும்; அவள் உட்பிரவேசிக்கிற போது, தன்னை அந்நிய ஸ்திரீயாகக் காண்பிப்பாள்" (1இராஜா 14:5) என்று சொல்லுகிறார்.

யெரொபெயாமின் மனைவி அகியாவின் வீட்டு வாசற்படியில் பிரவேசிக்கிறாள். அவளுடைய நடையின் சத்தத்தை அகியா கேட்கிறான். உடனே அவன், "யெரொபெயாமின் மனைவியே உள்ளே வா" என்று அவளை பெயர் சொல்லி அழைக்கிறான். யெரொபெயாமின் மனைவியோ ஒருவரும் அறியாதபடிக்கு வேஷம்மாறி வந்திருக்கிறாள். அகியாவோ அவளை பெயர் சொல்லி அழைக்கிறான். அவள் வேஷம்மாறி வந்திருப்பதையும் அவளுக்கு தெளிவுபடுத்துகிறான். "உன்னை அந்நிய ஸ்திரீயாக காண்பிக்கிறதென்ன" என்று அகியா அவளிடத்தில் கேட்கிறான்.

யெரொபெயாம் நல்ல செய்தியைக் கேட்கவேண்டும் என்று எதிர்பார்த்து, தன் மனைவியை சீலோவிலிருக்கிற தீர்க்கதரிசியாகிய அகியாவினிடத்திற்கு அனுப்பினான். செய்தி இனிப்பாக இருக்கவேண்டும் என்பதற்காக ஒரு கலசம் தேனையும் தீர்க்கதரிசிக்கு கொடுத்தனுப்பினான். அகியாவோ, யெரொபெயாமின் மனைவியினிடத்தில், நல்ல செய்தியை சொல்லாமல், "துக்க செய்தியை உனக்கு அறிவிக்க நான் அனுப்பப்பட்டேன்" என்று சொல்லுகிறான்.

அகியாவின் தீர்க்கதரிசனம் 1இராஜா 14:7-20

1இராஜா 14:7. நீ போய் யெரொபெயாமை நோக்கி: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: ஜனத்தினின்று உன்னை நான் உயர்த்தி, உன்னை இஸ்ரவேல் என்னும் என் ஜனத்தின்மேல் அதிபதியாக வைத்தேன்.

1இராஜா 14:8. நான் ராஜ்யபாரத்தைத் தாவீது வம்சத்தாரின் கையிலிருந்து பிடுங்கி உனக்குக் கொடுத்தேன்; ஆனாலும் என் கற்பனைகளைக் கைக்கொண்டு, என் பார்வைக்குச் செம்மையானதையே செய்ய, தன் முழு இருதயத்தோடும் என்னைப் பின்பற்றின என் தாசனாகிய தாவீதைப் போல நீ இராமல்,

1இராஜா 14:9. உனக்கு முன்னிருந்த எல்லாரைப் பார்க்கிலும் பொல்லாப்புச் செய்தாய்; எனக்குக் கோபம் உண்டாக்க, நீ போய் உனக்கு அந்நிய தேவர்களையும் வார்க்கப்பட்ட விக்கிரகங்களையும் உண்டுபண்ணி, உனக்குப் புறம்பே என்னைத் தள்ளிவிட்டாய்.

1இராஜா 14:10. ஆகையால் இதோ, நான் யெரொபெயாமுடைய வீட்டின்மேல் பொல்லாப்பை வரப்பண்ணி, யெரொபெயாமுக்கு, சுவர் மேல் நீர்விடும் ஒரு நாய் முதலாயிராதபடிக்கு, இஸ்ரவேலிலே அடைபட்டவனையும் விடுபட்டவனையும் சங்காரம்பண்ணி, குப்பை கழித்துப்போடப்படுகிறது போல யெரொபெயாமின் பின்னடியாரை அவர்கள் கட்டோடே அற்றுப் போகுமட்டும் கழித்துப்போடுவேன் என்றார்.

1இராஜா 14:11. யெரொபெயாமின் சந்ததியாரில் பட்டணத்திலே சாகிறவனை நாய்கள் தின்னும்; வெளியிலே சாகிறவனை ஆகாயத்தின் பறவைகள் தின்னும்; கர்த்தர் இதை உரைத்தார்.

1இராஜா 14:12. ஆகையால் நீ எழுந்து, உன் வீட்டுக்குப்போ, உன் கால்கள் பட்டணத்திற்குள் பிரவேசிக்கையில் பிள்ளையாண்டான் செத்துப்போவான்.

1இராஜா 14:13. அவனுக்காக இஸ்ரவேலரெல்லாரும் துக்கங்கொண்டாடி அவனை அடக்கம் பண்ணுவார்கள்; யெரொபெயாமின் வீட்டாரில் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக அவனிடத்திலே நல்ல காரியம் காணப்பட்டதினால், யெரொபெயாமின் சந்ததியில் அவன் ஒருவனே கல்லறைக்குட்படுவான்.

1இராஜா 14:14. ஆனாலும் கர்த்தர் தமக்கு இஸ்ரவேலின்மேல் ஒரு ராஜாவை எழும்பப்பண்ணுவார்; அவன் அந்நாளிலே யெரொபெயாமின் வீட்டாரைச் சங்கரிப்பான்; இப்போதே இது நடந்தேறும்.

1இராஜா 14:15. தண்ணீரிலே நாணல் அசைகிறது போல, கர்த்தர் இஸ்ரவேலை முறிந்தசையப்பண்ணி, அவர்கள் பிதாக்களுக்குத் தாம் கொடுத்த இந்த நல்ல தேசத்திலிருந்து இஸ்ரவேலை வேரோடே பிடுங்கி, அவர்கள் தங்களுக்கு தோப்பு விக்கிரகங்களை வைத்து, கர்த்தருக்குக் கோபம் உண்டாக்கினபடியினால், அவர்களை நதிக்கப்பாலே சிதறடித்து,

1இராஜா 14:16. யெரொபெயாம் செய்ததும் இஸ்ரவேலைச் செய்யப் பண்ணினதுமான பாவத்தினிமித்தம் இஸ்ரவேலை ஒப்புக் கொடுத்துவிடுவார் என்றான்.

1இராஜா 14:17. அப்பொழுது யெரொபெயாமின் மனைவி எழுந்து புறப்பட்டு திர்சாவுக்கு வந்தாள்; அவள் வாசற்படியிலே வருகையில் பிள்ளையாண்டான் செத்துப் போனான்.

1இராஜா 14:18. கர்த்தர் தீர்க்கதரிசியாகிய அகியா என்னும் தமது ஊழியக்காரனைக் கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, அவர்கள் அவனை அடக்கம்பண்ணி, இஸ்ரவேலர் எல்லாரும் அவனுக்காகத் துக்கங்கொண்டாடினார்கள்.

1இராஜா 14:19. யெரொபெயாம் யுத்தம்பண்ணினதும் ஆண்டதுமான அவனுடைய மற்ற வர்த்தமானங்கள் இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது.

1இராஜா 14:20. யெரொபெயாம் ராஜ்யபாரம்பண்ணின காலம் இருபத்திரண்டு வருஷம்; அவன் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவன் குமாரனாகிய நாதாப் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

தன்னுடைய பிள்ளைக்கு என்ன சம்பவிக்கப்போகிறது என்பதை அறிந்துகொள்ள யெரொபெயாமின் மனைவி தீர்க்கதரிசியாகிய அகியாவினிடத்தில் வந்திருக்கிறாள். அகியா தீர்க்கதரிசியோ பிள்ளைக்கு என்ன சம்பவிக்கப் போகிறது என்பதை முதலாவதாக சொல்லாமல், யெரொபெயாமுக்கு என்ன சம்பவிக்கப்போகிறது என்பதை முதலாவதாக சொல்லுகிறான்.

கர்த்தர் இந்த வாக்கியத்தில் தம்மைப்பற்றி வெளிப்படுத்தும்போது "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர்" என்று சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைவிட்டு விலகிப்போனாலும், கர்த்தர் இன்னும் அவர்களைவிட்டு விலகிப் போகவில்லை. அவர்களைக் கைவிடவில்லை. அவர்களை ஒதுக்கி தள்ளிவிடவுமில்லை. கர்த்தர் இன்னும் இஸ்ரவேலின் தேவனாகவே இருக்கிறார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேலின்மீது வைராக்கியமாயிருக்கிறார் இஸ்ரவேலுக்கு விரோதமாகத் தீங்கு செய்கிறவர்களை கர்த்தர் பழிவாங்குவார். இஸ்ரவேல் ஜனத்தாரை தம்மைவிட்டு விலகிப்போகப்பண்ணினவர்களை, கர்த்தர் சங்காரம்பண்ணுவார். யெரொபெயாம் கர்த்தரைவிட்டு விலகி விக்கிரகங்களைப் பின்பற்றினான். இஸ்ரவேல் ஜனத்தார் ஆராதிப்பதற்காக அவர்களுக்கு பொன்கன்றுக்குட்டிகளை நிறுவினான். அவன் இஸ்ரவேல் ஜனங்களை கர்த்தரைவிட்டு வழிவிலகிப் போகப்பண்ணினான்.

கர்த்தர் யெரொபெயாமுக்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறார். கர்த்தர் யெரொபெயாமை ஜனத்தினின்று உயர்த்தினார். கர்த்தர் அவனை இஸ்ரவேல் என்னும் தம்முடைய ஜனத்தின்மேல் அதிபதியாக வைத்தார். கர்த்தர் இஸ்ரவேலின் ராஜ்யபாரத்தை தாவீது வம்சத்தாரின் கையிலிருந்து பிடுங்கி யெரொபெயாமுக்கு கொடுத்தார். ஆனாலும் யெரொபெயாம் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவில்லை. அவன் கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதை செய்யாமல் பொல்லாப்பானதை செய்கிறான். கர்த்தருடைய தாசனாகிய தாவீது, தன்னுடைய முழுஇருதயத்தோடு கர்த்தரைப் பின்பற்றினார். யெரொபெயாமோ தாவீதைப்போல முழுஇருதயத்தோடு கர்த்தரைப் பின்பற்றவில்லை (1இராஜா 14:7,8).

கர்த்தர் யெரொபெயாமுக்கு அநேக நன்மைகளை செய்திருந்தாலும், அவன் கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதை செய்யவில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். அவர்கள் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். கர்த்தர் யெரொபெயாமை தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் அதிபதியாக வைத்தார்.

ஆனால் யெரொபெயாமோ தனக்கு முன்னிருந்த எல்லாரைப் பார்க்கிலும் பொல்லாப்பு செய்கிறான். அவன் கர்த்தருக்கு கோபமுண்டாக்க, தனக்கு அந்நிய தேவர்களையும், வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகங்களையும் உண்டுபண்ணுகிறான். யெரொபெயாம் கர்த்தரை தனக்கு புறம்பே தள்ளிவிடுகிறான் (1இராஜா 14:9).

யெரொபெயாம் இஸ்ரவேல் தேசத்திலே இரண்டு கன்றுக்குட்டிகளை நிறுவினான். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு மகிமை உண்டாகவேண்டும் என்னும் மாயமான நோக்கத்தோடு, யெரொபெயாம் இந்தக் கன்றுக்குட்டிகளை செய்தான். கர்த்தரோ இந்தக் கன்றுக்குட்டிகளை, "அந்நிய தேவர்கள்" என்றும், "வார்க்கப்பட்ட விக்கிரகங்கள்" என்றும் சொல்லுகிறார். இந்த விக்கிரகங்கள் கர்த்தருடைய சத்தியத்தை அவமாக்குகின்றன.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கும், யெரொபெயாம் வார்ப்பித்த விக்கிரகங்களுக்கும் சம்பந்தம் எதுவுமில்லை. யெரொபெயாம் கர்த்தரைவிட்டு வழிவிலகிப்போயிருக்கிறான். அவன் தான் கெட்டுப்போனது மாத்திரமல்லாமல், இஸ்ரவேல் ஜனத்தாரையும் கெடுத்துப் போடுகிறான். அவன் அவர்களை கர்த்தரைவிட்டு விலகிப்போகப்பண்ணுகிறான். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைவிட்டுப் பிரிந்து, விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு கொடுக்க வேண்டிய மகிமையை, வார்க்கப்பட்ட விக்கிரகங்களுக்கு கொடுக்கிறார்கள்.

யெரொபெயாம் தனக்கு முன்னிருந்த எல்லாரைப் பார்க்கிலும் அதிகமான பொல்லாப்பு செய்ததினால், கர்த்தருடைய கோபம் அவன்மீதும் அவனுடைய சந்ததிமீதும் வருகிறது. தீர்க்கதரிசியாகிய அகியா கர்த்தருடைய வார்த்தையை யெரொபெயாமின் மனைவியினிடத்தில் சொல்லுகிறான். யெரொபெயாமின் வீட்டார் முற்றிலுமாக அழிக்கப்படுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய வார்த்தை அகியா தீர்க்கதரிசி மூலமாக வெளிப்படுகிறது. கர்த்தர் அகியாவின் மூலமாக, யெரொபெயாமின் மனைவியை நோக்கி, "ஆகையால் இதோ, நான் யெரொபெயாமுடைய வீட்டின்மேல் பொல்லாப்பை வரப்பண்ணி, யெரொபெயாமுக்கு, சுவர் மேல் நீர்விடும் ஒரு நாய் முதலாயிராதபடிக்கு, இஸ்ரவேலிலே அடைபட்டவனையும் விடுபட்டவனையும் சங்காரம்பண்ணி, குப்பை கழித்துப்போடப்படுகிறது போல யெரொபெயாமின் பின்னடியாரை அவர்கள் கட்டோடே அற்றுப் போகுமட்டும் கழித்துப்போடுவேன்" (1இராஜா 14:10) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் யெரொபெயாமைப்பற்றி தம்முடைய வார்த்தைகளை மேலும் சொல்லும்போது, "யெரொபெயாமின் சந்ததியாரில் பட்டணத்திலே சாகிறவனை நாய்கள் தின்னும்; வெளியிலே சாகிறவனை ஆகாயத்தின் பறவைகள் தின்னும்; கர்த்தர் இதை உரைத்தார்" (1இராஜா 14:11) என்றும் சொல்லுகிறார்.

கர்த்தர் சொன்ன வார்த்தை யெரொபெயாமுக்கும், அவனுடைய பின்னடியாருக்கும் நிறைவேறுகிறது. "அப்பொழுது யெரொபெயாம் செய்ததும், இஸ்ரவேலைச் செய்யப்பண்ணினதுமான பாவங்களினிமித்தமும், அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு உண்டாக்கின கோபத்தினிமித்தமும், கர்த்தர் சீலோனியனான அகியா என்னும் தமது ஊழியக்காரனைக்கொண்டு சொல்லியிருந்த வார்த்தையின்படியே, அவன் ராஜாவானபின் அவன் யெரொபெயாமின் வீட்டாரையெல்லாம் வெட்டிப்போட்டான்; யெரொபெயாமுக்கு இருந்த சுவாசமுள்ளதொன்றையும் அவன் அழிக்காமல் விடவில்லை" (1இராஜா 15:29,30).

யெரொபெயாமின் மனைவி, தன்னுடைய பிள்ளைக்கு சம்பவிக்கப் போகிறதை கேட்பதற்காக சீலோவுக்கு வந்தாள். தன்னை யெரொபெயாமின் மனைவி என்று ஒருவரும் அறியாதபடிக்கு வேஷம் மாறி, தீர்க்கதரிசியாகிய அகியாவினிடத்தில் வந்தாள். அகியாவோ அவளுடைய பிள்ளைக்கு என்ன சம்பவிக்கும் என்பதை உடனே சொல்லாமல், யெரொபெயாமுக்கும், அவனுடைய பின்னடியாருக்கும் என்ன சம்பவிக்கும் என்பதை முதலவதாக சொல்லுகிறான். அதன் பின்பு வியாதியில் விழுந்திருக்கிற யெரொபெயாமின் குமாரனாகிய அபியா மரித்துப்போவான் என்னும் துக்க செய்தியையும் அவளுக்கு அறிவிக்கிறான்.

தீர்க்கதரிசியாகிய அகியா, யெரொபெயாமின் மனைவியை நோக்கி, "ஆகையால் நீ எழுந்து, உன் வீட்டுக்குப்போ, உன் கால்கள் பட்டணத்திற்குள் பிரவேசிக்கையில் பிள்ளையாண்டான் செத்துப்போவான். அவனுக்காக இஸ்ரவேலரெல்லாரும் துக்கங்கொண்டாடி அவனை அடக்கம் பண்ணுவார்கள்; யெரொபெயாமின் வீட்டாரில் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக அவனிடத்திலே நல்ல காரியம் காணப்பட்டதினால், யெரொபெயாமின் சந்ததியில் அவன் ஒருவனே கல்லறைக்குட்படுவான்" (1இராஜா 14:12,13) என்று சொல்லுகிறான்.

கர்த்தருடைய கோபம் யெரொபெயாமின் மீதும், அவனுடைய பின்னடியாரின்மீதும் வந்திருக்கிறது. ஆனாலும் கர்த்தர் வியாதியில் விழுந்திருக்கும் யெரொபெயாமின் குமாரனாகிய அபியாமுக்கு தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் காண்பிக்கிறார்.

கர்த்தர் யெரொபெயாமின் குமாரனாகிய அபியாமைப்பற்றிச் சொல்லும்போது, "யெரொபெயாமின் வீட்டாரில் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக அவனிடத்திலே நல்ல காரியம் காணப்பட்டது" (1இராஜா 14:13) என்று சொல்லுகிறார்.

யெரொபெயாமின் வீட்டாரில், அபியாமுக்கு மாத்திரமே கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்திருக்கிறது. யெரொபெயாமின் சந்தியில் அபியா ஒருவன் மாத்திரமே கல்லறைக்குட்படுகிறான். அபியாமுக்கு மாத்திரமே இஸ்ரவேலர் எல்லோரும் துக்கங்கொண்டாடுகிறார்கள். அவனை அடக்கம்பண்ணுகிறார்கள். அவன் இன்னும் சிறிதுகாலம் உயிரோடிருக்க வேண்டுமென்று இஸ்ரவேலர் எல்லோரும் நினைத்து, அவனுடைய ஜீவனை விரும்புகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரால் நேசிக்கப்பட்ட அபியா மரித்துப்போகிறான். யெரொபெயாமின் குடும்பத்தில், அபியாமுக்கு முதலாவதாக மரணம் வருகிறது. கர்த்தர் யாரை அதிகமாய் நேசிக்கிறாரோ, அவரை தம்முடைய சமுகத்திலே சீக்கிரமாகச் சேர்த்துக்கொள்கிறார். பரலோகமே அவர்களுக்கு ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ஸ்தலம். இந்தப் பிரபஞ்சம் அவர்களுக்கு பாத்திரமானதாயில்லை.

கர்த்தருடைய கோபம் யெரொபெயாமின்மீதும், அவனுடைய வீட்டார்மீதும் வந்து தங்குகிறது. கர்த்தர் யெரொபெயாமை தம்முடைய தெய்வீக நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜவாக்கினார். ஆனால் அவனோ கர்த்தருடைய விருப்பத்திற்கும், சித்தத்திற்கும் கீழ்ப்படியாமல் அவருக்கு விரோதமாகக் கலகம்பண்ணி, அவரை விட்டு விலகிப்போனான்.

கர்த்தர் யெரொபெயாமை உயர்த்தி, இஸ்ரவேல் என்னும் தம்முடைய ஜனத்தின்மேல் அதிபதியாக வைத்தார். இஸ்ரவேலின் ராஜ்யபாரத்தை தாவீது வம்சத்தாரின் கையிலிருந்து பிடுங்கி அவனுக்கு கொடுத்தார். ஆனால் யெரொபெயாமோ கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவில்லை. அவன் கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதை செய்யவில்லை.

யெரொபெயாம் தாவீதைப்போல தன்னுடைய முழுஇருதயத்தோடு கர்த்தரைப் பின்பற்றவில்லை. யெரொபெயாம் தனக்கு முன்னிருந்த எல்லாரைப் பார்க்கிலும் பொல்லாப்பு செய்தான். தனக்கு அந்நிய தேவர்களையும், வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகங்களையும் உண்டுபண்ணி கர்த்தரைத் தனக்கு புறம்பே தள்ளிவிட்டான். இதனால் கர்த்தருடைய கோபம் யெரொபெயாமின்மீதும் அவனுடைய பின்னடியார்மீதும் வருகிறது.

கர்த்தர் யெரொபெயாமுக்கு பதிலாக இஸ்ரவேலின்மேல் மற்றொரு ராஜாவை எழும்பப்பண்ணுகிறார். அவன் கர்த்தரால் நியமிக்கப்பட்ட நாளிலே யெரொபெயாமின் வீட்டாரை சங்கரிப்பான். "இப்போதே இது நடந்தேறும்'' என்று தீர்க்கதரிசியாகிய அகியா கர்த்தருடைய வார்த்தையை யெரொபெயாமின் மனைவியினிடத்தில் சொல்லுகிறான். கர்த்தர் இங்கு சொல்லுகிற தீர்க்கதரிசன வாக்கியம், இசக்கார் கோத்திரத்தைச் சேர்ந்த பாஷா என்பவன் மூலமாய் நிறைவேறிற்று. இவன் யெரொபெயாமின் குமாரனாகிய நாதாபுக்கு விரோதமாக சதிஆலோசனை செய்தான். நாதாபின் இரண்டாம் வருஷ ராஜ்யபாரத்தின்போது, பாஷா அவனுக்கு விரோதமாக சதிஆலோசனை செய்து அவனையும், அவனுடைய குடும்பத்தார் அனைவரையும் கொன்றுபோட்டான்.

யெரொபெயாம் இரண்டு பொன்கன்றுக்குட்டிகளை இஸ்ரவேல் தேசத்திலே நிறுவினான். அவன் கர்த்தரைவிட்டு வழி விலகிப்போனான். இஸ்ரவேல் ஜனத்தாரும் யெரொபெயாம் நிறுவின கன்றுக்குட்டிகளை ஆராதித்தார்கள். அவர்களும் கர்த்தரைவிட்டு விலகி விக்கிரகங்களைப் பின்பற்றிப்போனார்கள். இதனால் கர்த்தருடைய கோபம், யெரொபெயாமின்மீதும், அவனுடைய வீட்டாரின்மீதும் வந்ததுபோல, இஸ்ரவேல் ஜனத்தார்மீதும் வந்திருக்கிறது.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இஸ்ரவேல் ஜனத்தார்மீது வரும் என்பதை தீர்க்கதரிசியாகிய அகியா, தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறான். அகியா யெரொபெயாமின் மனைவியை நோக்கி, "தண்ணீரிலே நாணல் அசைகிறது போல, கர்த்தர் இஸ்ரவேலை முறிந்தசையப்பண்ணி, அவர்கள் பிதாக்களுக்குத் தாம் கொடுத்த இந்த நல்ல தேசத்திலிருந்து இஸ்ரவேலை வேரோடே பிடுங்கி, அவர்கள் தங்களுக்கு தோப்பு விக்கிரகங்களை வைத்து, கர்த்தருக்குக் கோபம் உண்டாக்கினபடியினால், அவர்களை நதிக்கப்பாலே சிதறடித்து, யெரொபெயாம் செய்ததும் இஸ்ரவேலைச் செய்யப்பண்ணினதுமான பாவத்தினிமித்தம் இஸ்ரவேலை ஒப்புக் கொடுத்துவிடுவார்" (1இராஜா 14:15,16) என்று இஸ்ரவேல் ஜனத்தார்மீது வரும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை சொல்லுகிறான்.

கானான் தேசம் கர்த்தருடைய தேசம். அது பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்தார்கள். கர்த்தர் தம்முடைய பலத்த கரத்தினால், இஸ்ரவேல் ஜனத்தாரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வந்து அங்கே அவர்களை குடியேற்றினார். கானான் தேசம் இஸ்ரவேல் புத்திரருடைய பிதாக்களுக்கு கர்த்தர் சுதந்தரமாய் கொடுத்த நல்ல தேசம்.

இஸ்ரவேல் ஜனத்தாரால் கானான் தேசத்தில் இனிமேல் சந்தோஷமாயும், சமாதானமாயும், நிரந்தரமாயும் குடியிருக்க முடியாது. கர்த்தர் இஸ்ரவேலை முறிந்தசையப்பண்ணுவார். தண்ணீரிலே நாணல் அசைகிறதுபோல, கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை அசையப்பண்ணுவார். அவர்கள் அங்கும் இங்குமாக அசைந்து கொண்டிருப்பார்கள். அவர்கள் வாசம்பண்ணுவதற்கு நிலையான தேசம் இருக்காது.

இஸ்ரவேல் ஜனத்தார் தாவீதின் வீட்டாரை விட்டுப் பிரிந்துபோய்விட்டார்கள். அவர்கள் யெரொபெயாமை தங்களுக்கு ராஜாவாக்கினார்கள். அவர்கள் தாவீதின் குடும்பத்தை விட்டுப் பிரிந்துபோனபின்பு, அவர்களுடைய ராஜாவும் ஒரே குடும்பத்திலிருந்து வரமாட்டார். இஸ்ரவேலின் ராஜாக்களுக்குள்ளே போட்டிகளும், பொறாமைகளும், சண்டைகளும் ஏற்பட்டு ஒருவரையொருவர் வஞ்சிப்பார்கள். ஒருவரையொருவர் அழித்துப்போடுவார்கள். தாவீதின் குடும்பத்தையும் விட்டுப் பிரிந்துபோனவர்கள் தங்களைத் தாங்களே அழித்துக்கொள்வார்கள். அவர்களுக்கு நிலையான ராஜா இருக்கமாட்டார்.

கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தாரை, கானான் என்னும் நல்ல தேசத்திலிருந்து வேரோடே பிடுங்கி, அவர்களை நதிக்கப்பாலே சிதறடிப்பார். கர்த்தர் இஸ்ரவேலை அந்நியருடைய கையிலே ஒப்புக்கொடுப்பார். வடக்கு இஸ்ரவேல் தேசத்திலுள்ள பத்துக்கோத்திரத்தாரையும் அசீரியாவின் ராஜா சிறைப்பிடித்துப்போனபோது, கர்த்தர் இங்கு சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுக்கு தோப்பு விக்கிரகங்களை வைத்து கர்த்தருக்கு கோபமுண்டாக்கினார்கள். இதன் நிமித்தமாக கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இஸ்ரவேல் ஜனத்தார்மீது வருகிறது. யெரொபெயாம் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தான். அவன் இஸ்ரவேல் ஜனத்தாரை கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யப்பண்ணினான். இதனால் கர்த்தர் இஸ்ரவேல்மீது கோபங்கொண்டு, அவர்களை அந்நிய தேசத்தாரின் கைகளிலே ஒப்புக்கொடுத்துவிடுகிறார்.

தீர்க்கதரிசியாகிய அகியா கர்த்தருடைய வார்த்தையை யெரொபெயாமின் மனைவிக்கு சொல்லுகிறான். அவளால் கர்த்தருடைய வார்த்தைக்கு எதிர்த்து பேசமுடியவில்லை. அவள் கர்த்தருடைய வார்த்தைக்கு விரோதமாக தன்னுடைய வாயைத் திறக்கவில்லை. தன்னுடைய பிள்ளைக்கு சம்பவிக்கப்போகிறது இன்னது என்பதை அறிந்துகொள்வதற்காக யெரொபெயாமின் மனைவி அகியாவைப் பார்க்க வந்தாள்.

அகியாவோ, அவளுடைய பிள்ளைக்கு என்ன சம்பவிக்கும் என்பதை சொன்னதோடு, யெரொபெயாமுக்கும், அவனுடைய குடும்பத்திற்கும், அவனுடைய பின்னடியாருக்கும், இஸ்ரவேல் ஜனத்தாருக்கும் என்ன சம்பவிக்கும் என்பதை தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறான். அப்பொழுது யெரொபெயாமின் மனைவி எழுந்து புறப்பட்டு திர்சாவுக்கு வருகிறாள்.

யெரொபெயாமின் மனைவி வாசற்படியிலே வருகையில் பிள்ளையாண்டானாகிய அபியா செத்துப் போகிறான் (1இராஜா 14:17). திர்சா என்னும் பெயருக்கு "இனிமையான, சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய ஸ்தலம்" என்று பொருள். திர்சா மிகவும் அழகான நகரம். ஆனால் நகரத்தின் அழகு யெரொபெயாமுக்கோ, அவனுடைய குடும்பத்தாருக்கோ சந்தோஷத்தைக் கொடுக்கவில்லை. அபியா செத்துப்போனதினால், யெரொபெயாமுக்கும், அவனுடைய வீட்டாருக்கும் இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருக்கும் துக்கமுண்டாயிற்று.

கர்த்தர் தீர்க்கதரிசியாகிய அகியா என்னும் தமது ஊழியக்காரனைக் கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, அவர்கள் அவனை அடக்கம்பண்ணி, இஸ்ரவேலர் எல்லாரும் அவனுக்காகத் துக்கங்கொண்டாடுகிறார்கள் (1இராஜா 14:18).

இந்த சம்பவம் நடைபெற்று சில வருஷங்களுக்கு பின்பு யெரொபெயாமும் செத்துப்போகிறான். யெரொபெயாம் ராஜ்யபாரம்பண்ணின காலம் இருபத்திரண்டு வருஷம்; அவன் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவன் குமாரனாகிய நாதாப் அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான் (1இராஜா 14:20). இரண்டு வருஷங்களுக்கு பின்பு பாஷா, யெரொபெயாமின் வீட்டார் எல்லோரையும் வெட்டிப்போடுகிறான் (1இராஜா 15:28-30).

யெரொபெயாம் யுத்தம்பண்ணினதும் ஆண்டதுமான அவனுடைய மற்ற வர்த்தமானங்கள் இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது (1இராஜா 14:19).

ரெகொபெயாமின் நடபடிகள் 1இராஜா 14:21-31

1இராஜா 14:21. சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாம் யூதாவிலே ராஜ்யபாரம் பண்ணினான்; ரெகொபெயாம் ராஜாவாகிறபோது நாற்பத்தொரு வயதாயிருந்து, கர்த்தர் தம்முடைய நாமம் விளங்கும்படி இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாம் தெரிந்துகொண்ட நகரமாகிய எருசலேமிலே பதினேழுவருஷம் ராஜ்யபாரம்பண்ணினான்; அம்மோன் ஜாதியான அவனுடைய தாயின்பேர் நாமாள்.

1இராஜா 14:22. யூதாஜனங்கள் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, தாங்கள் செய்துவருகிற தங்களுடைய பாவங்களினால் தங்கள் பிதாக்கள் செய்த எல்லாவற்றைப்பார்க்கிலும் அவருக்கு அதிக எரிச்சலை மூட்டினார்கள்.

1இராஜா 14:23. அவர்களும் உயர்ந்த சகல மேட்டின் மேலும், பச்சையான சகல மரத்தின் கீழும், மேடைகளையும் சிலைகளையும் தோப்பு விக்கிரகங்களையும் தங்களுக்கு உண்டாக்கினார்கள்.

1இராஜா 14:24. தேசத்திலே இலச்சையான புணர்ச்சிக்காரரும் இருந்தார்கள்; கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்திவிட்ட ஜாதிகளுடைய அருவருப்புகளின் படியெல்லாம் செய்தார்கள்.

1இராஜா 14:25. ரெகொபெயாம் ராஜ்யபாரம்பண்ணும் ஐந்தாம் வருஷத்திலே, எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் எருசலேமுக்கு விரோதமாய் வந்து,

1இராஜா 14:26. கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களையும், ராஜாவுடைய அரமனையின் பொக்கிஷங்களையும், சாலொமோன் செய்வித்த பொன் பரிசைகள் ஆகிய சகலத்தையும் எடுத்துக்கொண்டு போய்விட்டான்.

1இராஜா 14:27. அவைகளுக்குப் பதிலாக ராஜாவாகிய ரெகொபெயாம் வெண்கலப் பரிசைகளைச் செய்வித்து, அவைகளை ராஜாவின் வாசற்படியைக் காக்கிற சேவகருடைய தலைவரின் கையில் ஒப்பித்தான்.

1இராஜா 14:28. ராஜா கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கும்போது, அரமனைச் சேவகர் அவைகளைப் பிடித்துக்கொண்டு போய், திரும்பத் தங்கள் அறையிலே வைப்பார்கள்.

1இராஜா 14:29. ரெகொபெயாமின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும், யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

1இராஜா 14:30. ரெகொபெயாமுக்கும் யெரொபெயாமுக்கும் அவர்கள் இருந்த நாட்களிலெல்லாம் யுத்தம் நடந்துகொண்டிருந்தது.

1இராஜா 14:31. ரெகொபெயாம் தன் பிதாக்களோடே நித்திரையடைந்து, தாவீதின் நகரத்தில் தன் பிதாக்களண்டையில் அடக்கம்பண்ணப்பட்டான்; அம்மோன் ஜாதியான அவன் தாய்க்கு நாமாள் என்று பேர்; அவன் குமாரனாகிய அபியாம் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

பரிசுத்த வேதாகமத்தில், யூதாவின் சரித்திரமும், இஸ்ரவேலின் சரித்திரமும் கலந்து எழுதப்பட்டிருக்கிறது. யெரொபெயாம் ரெகொபெயாமுக்கு நான்கு அல்லது ஐந்து வருஷங்களுக்கு முன்பாக மரித்துப்போகிறான். ஆனாலும் யெரொபெயாமின் சரித்திரமே முதலாவதாக எழுதப்பட்டிருக்கிறது. இவனுடைய சரித்திரத்தோடு ரெகொபெயாமின் சரித்திரமும் சேர்ந்து இணைக்கப்பட்டிருக்கிறது.

ரெகொபெயாமைப்பற்றி உயர்வாய்ப் பேசுவதற்கு ஒன்றுமில்லை. அவன் சாலொமோனின் குமாரன். ரெகொபெயாம் ராஜாவாகிறபோது நாற்பத்தொரு வயதாயிருந்தான். அவன் எருசலேமிலே பதினேழு வருஷம் ராஜ்யபாரம்பண்ணினான். கர்த்தர் தம்முடைய நாமம் விளங்கும்படி இஸ்ரவேல் கோத்திரங்களெல்லாம், எருசலேம் நகரத்தைத் தெரிந்துகொண்டார்.

எருசலேமிலே கர்த்தருடைய ஆலயம் கட்டப்பட்டிருக்கிறது. ரெகொபெயாம் எருசலேமிலே ராஜ்யபாரம்பண்ணினதினால், கர்த்தருடைய பிரமாணத்தைப்பற்றியும், தன்னுடைய ஆவிக்குரிய கடமைகளைப்பற்றியும் அறிந்துகொள்வதற்கு அவனுக்கு அதிக வாய்ப்பு கிடைத்தது. கர்த்தரைத் தேடுகிறவர்கள் மாத்திரமே அவரை கண்டுகொள்ள முடியும். ரெகொபெயாம் எருசலேமிலே ராஜ்யபாரம் பண்ணினாலும் அவன் கர்த்தரைத் தேடவில்லை. அவன் தன்னுடைய முழுஇருதயத்தோடு கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவில்லை.

ரெகொபெயாமினுடைய தாயின் பெயர் நாமாள். இவள் அம்மோன் ஜாதியான ஸ்திரீ. இவளைப்பற்றி இரண்டு வசனங்களில் எழுதப்பட்டிருக்கிறது (1இராஜா 14:21,31). தாவீது மக்னாயீமிலே சேர்ந்தபோது, அம்மோன் புத்திரரின் தேசத்தில் ரப்பா பட்டணத்தானாகிய சோபி என்னும் நாகாசின் குமாரன், தாவீதின்மீது பிரியமாயிருந்தான். அவன் தாவீதுக்கு ஆதரவு காண்பித்தான் (2சாமு 17:27). அம்மோன் ஜாதியான நாமாள், சோபியின் குமாரத்தியாக இருக்கவேண்டும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். தாவீதின் மனவிருப்பத்தின் பிரகாரம், சோபியின் குமாரத்தியாகிய நாமாள், சாலொமோனுக்கு மனைவியானாள். தாவீது நாமாளை தன்னுடைய குடும்பத்தில் சேர்த்துக்கொண்டார்.

ரெகொபெயாமுக்கும் யெரொபெயாமுக்கும் அவர்கள் இருந்த நாட்களிலெல்லாம் யுத்தம் நடந்துகொண்டிருந்தது (1இராஜா 14:30). இதனால் யூதாதேசத்தில் எப்போதுமே அமைதியில்லை. அவர்களுக்கு யுத்தத்தினால் ஓயாத பிரச்சனைகளும் வேதனைகளும் உண்டாயிற்று.

ரெகொபெயாம் எருசலேமிலே பதினேழு வருஷம் ராஜ்யபாரம்பண்ணினான். அதன்பின்பு ரெகொபெயாம் தன் பிதாக்களோடே நித்திரையடைந்து, தாவீதின் நகரத்தில் தன் பிதாக்களண்டையில் அடக்கம்பண்ணப்பட்டான்; அவன் குமாரனாகிய அபியாம் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான் (1இராஜா 14:31).

ரெகொபெயாமின் ராஜ்யபாரத்தின் போது, யூதாஜனங்கள் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தார்கள். இந்த வசனப்பகுதியில் அவர்களுடைய பாவமான சுபாவங்களும், அவர்களுடைய காலத்தின் சூழ்நிலைகளும் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.

யூதாஜனங்கள் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, தாங்கள் செய்துவருகிற தங்களுடைய பாவங்களினால் தங்கள் பிதாக்கள் செய்த எல்லாவற்றைப்பார்க்கிலும் அவருக்கு அதிக எரிச்சலை மூட்டினார்கள். யூதாஜனங்கள் கர்த்தரை விட்டு விலகிப்போய்விட்டார்கள் (1இராஜா 14:22).

அவர்கள் உயர்ந்த சகல மேட்டின் மேலும், பச்சையான சகல மரத்தின் கீழும், மேடைகளையும் சிலைகளையும் தோப்பு விக்கிரகங்களையும் தங்களுக்கு உண்டாக்கினார்கள். தேசத்திலே இலச்சையான புணர்ச்சிக்காரரும் இருந்தார்கள்; கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்திவிட்ட ஜாதிகளுடைய அருவருப்புகளின்படியெல்லாம் செய்தார்கள் (1இராஜா 14:23,24).

இந்தப் பிரபஞ்சத்தில் யூதாஜனத்தார் மாத்திரமே கர்த்தருடைய ஜனமாயிருந்தார்கள். ஆனால் அவர்களும் கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தார்கள். அவர்களுடைய முற்பிதாக்களும் கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தார்கள். நியாயாதிபதிகளின் காலத்தில், யூதாஜனங்களின் முற்பிதாக்களுடைய பாவங்கள் மிகவும் அதிகமாயிருந்தது.

ரெகொபெயாமின் காலத்தில் யூதாஜனத்தாரின் பாவங்கள், அவர்களுடைய முற்பிதாக்களின் பாவங்களைப் பார்க்கிலும் அதிகமாயிருந்தது. பரலோகத்திலிருந்து கர்த்தருடைய ஆவியானவர் இறங்கி வந்து, யூதாஜனத்தாரை ஆளுகை செய்தால் மாத்திரமே, அவர்கள் கர்த்தருக்கு பிரியமானவர்களாயிருப்பார்கள்.

யூதாஜனங்கள் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்து, கர்த்தருக்கு அதிக எரிச்சலை மூட்டினார்கள். அவர்கள் தங்களுக்கு சிலைகளையும், தோப்பு விக்கிரகங்களையும் உண்டாக்கினார்கள். அவர்கள் உயர்ந்த சகல மேட்டின்மேலும், பச்சையான சகல மரத்தின்கீழும் விக்கிரகங்களை ஆராதித்தார்கள். தாங்கள் உண்டாக்கின விக்கிரகங்களுக்கு, கர்த்தருடைய நாமத்தைக் கொடுத்து, அவருடைய நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்கினார்கள்.

இஸ்ரவேல் தேசத்திலே இலச்சையான புணர்ச்சிக்காரரும் இருந்தார்கள். விக்கிரகாராதனைக்காரரின் சுபாவங்களைப்பற்றி அப்போஸ்தலர் பவுல், ரோமருக்கு எழுதின நிருபத்தில், விரிவாக எழுதியிருக்கிறார்.

"இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சைரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்; அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள். அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர்மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து, தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள்" (ரோம 1:26,27).

அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக பாவத்தை செய்து, கர்த்தருடைய நாமத்தைத் தூஷித்தார்கள். கர்த்தரோ அவர்களை அழிவுக்கு ஒப்புக்கொடுத்து விட்டார். அவர்கள் தங்களைத் தாங்களே அழித்துக்கொண்டார்கள்.

யூதாஜனங்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து ஜீவித்த காலம் வரையிலும், கர்த்தர் அவர்களை பாதுகாத்தார், பராமரித்தார், பலப்படுத்தினார். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து, கர்த்தரைவிட்டு விலகிப்போனபோது, கர்த்தரும் அவர்களை விட்டு விலகிப்போய்விட்டார். யூதா ஜனத்தார் இப்போது பலவீனமாயிருக்கிறார்கள். அவர்களுக்கு கர்த்தருடைய பாதுகாப்பு இல்லை.

ரெகொபெயாம் ராஜ்யபாரம்பண்ணும் ஐந்தாம் வருஷத்திலே, எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் எருசலேமுக்கு விரோதமாய் வந்து, கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களையும், ராஜாவுடைய அரமனையின் பொக்கிஷங்களையும், சாலொமோன் செய்வித்த பொன் பரிசைகள் ஆகிய சகலத்தையும் எடுத்துக்கொண்டு போய்விடுகிறான் (1இராஜா 14:25,26).

கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களும், தாவீது ராஜாவினுடைய குடும்பத்தாரின் அரண்மனை பொக்கிஷங்களும் இப்போது எகிப்து தேசத்திலே இருக்கிறது. யூதாஜனங்களுக்கு கர்த்தருடைய பாதுகாப்பு இல்லை. அவர்கள் இப்போது எல்லாவற்றையும் இழந்து தரித்திரராயிருக்கிறார்கள்.

ரெகொபெயாமின் மகிமை மங்கிப்போயிற்று. எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் தேவாலயத்திலுள்ள பொன்பரிசைகளை எடுத்துக்கொண்டு போய்விடுகிறான். அவைகளுக்குப் பதிலாக ராஜாவாகிய ரெகொபெயாம் வெண்கலப் பரிசைகளைச் செய்வித்து, அவைகளை ராஜாவின் வாசற்படியைக் காக்கிற சேவகருடைய தலைவரின் கையில் ஒப்பிக்கிறான்.

ரெகொபெயாம் ராஜா கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கும்போது, அரமனைச் சேவகர் அவைகளைப் பிடித்துக்கொண்டு போய், திரும்பத் தங்கள் அறையிலே வைப்பார்கள் (1இராஜா 14:28).

பாவத்தின் சம்பளம் மரணம். ரெகொபெயாம் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறான். அவனுடைய ராஜ்யபாரத்தின் மேன்மை மங்கிப்போகிறது. பாவத்தினால் பொன்பரிசைகள் வெண்கல பரிசைகளாகிறது.

ரெகொபெயாமின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும், யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது (1இராஜா 14:29).

15 அதிகாரம்

இந்த அதிகாரத்தில் சரித்திர சம்பவங்கள் எழுதப்பட்டிருக்கிறது. யூதாவின் ராஜாக்களாகிய அபியாம், ஆசா ஆகியோரின் ராஜ்யபாரத்தில் நடைபெற்ற சரித்திர சம்பவங்கள் இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அபியாம் கொஞ்சகாலம் மாத்திரமே யூதாதேசத்தை ராஜ்யபாரம்பண்ணுகிறான். அவன் கர்த்தருக்கு முன்பாக உத்தமமாயிருக்கவில்லை (1இராஜா 15:1-8). ஆசா கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதை செய்கிறான். அவன் யூதாதேசத்தை நீண்டகாலம் ராஜ்யபாரம் பண்ணுகிறான் (1இராஜா 15:9-24).

இந்த அதிகாரத்தில் இஸ்ரவேல் தேசத்தின் இரண்டு ராஜாக்களைப்பற்றியும் எழுதப்பட்டிருக்கிறது. இவர்களில் ஒருவன் யெரொபெயாமின் குமாரனாகிய நாதாப். மற்றொருவன் யெரொபெயாமின் வீட்டை சங்காரம்பண்ணின பாஷா (1இராஜா 15:25-34).

அபியாம்
1இராஜா 15:1-8

1இராஜா 15:1. நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாம் என்னும் ராஜாவின் பதினெட்டாம் வருஷத்திலே அபியாம் யூதாவின்மேல் ராஜாவாகி,

1இராஜா 15:2. மூன்று வருஷம் எருசலேமில் ராஜ்யபாரம்பண்ணினான்; அப்சலோமின் குமாரத்தியாகிய அவனுடைய தாயின் பேர் மாகாள்.

1இராஜா 15:3. தன் தகப்பன் தனக்கு முன்செய்த எல்லாப் பாவங்களிலும் அவன் நடந்தான்; அவன் இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப் போல், தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக உத்தமமாயிருக்கவில்லை.

1இராஜா 15:4. ஆனாலும் தாவீதினிமித்தம் அவனுடைய தேவனாகிய கர்த்தர், அவனுக்குப் பிற்பாடு அவன் குமாரனை எழும்பப்பண்ணுகிறதினாலும், எருசலேமை நிலைநிறுத்துகிறதினாலும், அவனுக்கு எருசலேமில் ஒரு விளக்கைக் கட்டளையிட்டு வந்தார்.

1இராஜா 15:5. தாவீது ஏத்தியனாகிய உரியாவின் சங்கதி ஒன்றுதவிர கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டதிலே தான் உயிரோடிருந்த நாளெல்லாம் ஒன்றையும் விட்டு விலகாமல், அவர் பார்வைக்குச் செம்மையானதைச் செய்துவந்தான்.

1இராஜா 15:6. ரெகொபெயாமுக்கும் யெரொபெயாமுக்கும் அவர்கள் இருந்த நாட்களிலெல்லாம் யுத்தம் நடந்துகொண்டிருந்தது.

1இராஜா 15:7. அபியாமின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும் யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது; அபியாமுக்கும் யெரொபெயாமுக்கும் யுத்தம் நடந்துகொண்டிருந்தது.

1இராஜா 15:8. அபியாம் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவனைத் தாவீதின் நகரத்தில் அடக்கம் பண்ணினார்கள்; அவன் குமாரனாகிய ஆசா அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

அபியாம் யூதாவின்மேல் ராஜாவாகி, மூன்று வருஷம் எருசலேமில் ராஜ்யபாரம்பண்ணுகிறான். இவன் யூதாவின் ராஜாவாகிய ரெகொபெயாமின் குமாரன். அபியாம் யெரொபெயாமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணின சம்பவம் 2நாளா 13-ஆவது அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

நாளாகமம் புஸ்தகத்தில் அபியாமின் பெயர் "அபியா" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அபியா என்னும் பெயருக்கு "என் பிதா என் கர்த்தராயிருக்கிறார்" என்று பொருள். நாளாகமம் புஸ்தகத்தில் அபியாவின் துன்மார்க்கத்தைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை.

ராஜாக்கள் புஸ்தகத்திலோ அபியாமின் துன்மார்க்கமான கிரியைகளைப்பற்றி விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. அபியாம் தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக உத்தமமாயிருக்கவில்லை.

அபியாம் தன் தகப்பன் தனக்கு முன்செய்த எல்லாப் பாவங்களிலும் நடக்கிறான்; அவன் இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப் போல், தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக உத்தமமாயிருக்கவில்லை (1இராஜா 15:3).

"அபியாம்" என்னும் பெயரில் "யா" என்னும் வார்த்தை நீக்கப்பட்டிருக்கிறது. "யா" என்பது கர்த்தருடைய நாமத்தைக் குறிக்கிறது. "அபியாம்" என்னும் பெயரில் கர்த்தருடைய நாமம் நீக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் ராஜாக்களின் புஸ்தகத்தில், இவன் "அபியா" என்று அழைக்கப்படாமல், "அபியாம்" என்று அழைக்கப்படுகிறான்.

இந்த அதிகாரத்தில் அபியாமின் ராஜரீகத்தைப்பற்றி சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாம் என்னும் ராஜாவின் பதினெட்டாம் வருஷத்திலே அபியாம் யூதாவின்மேல் ராஜாவாகிறான் (1இராஜா 15:1).

ரெகொபெயாம் எருசலேமிலே பதினேழு வருஷம் ராஜ்யபாரம்பண்ணினான். "சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாம் யூதாவிலே ராஜ்யபாரம் பண்ணினான்; ரெகொபெயாம் ராஜாவாகிறபோது நாற்பத்தொரு வயதாயிருந்து, கர்த்தர் தம்முடைய நாமம் விளங்கும்படி இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாம் தெரிந்துகொண்ட நகரமாகிய எருசலேமிலே பதினேழுவருஷம் ராஜ்யபாரம்பண்ணினான்; அம்மோன் ஜாதியான அவனுடைய தாயின்பேர் நாமாள்" (1இராஜா 14:21).

யெரொபெயாமின் ஆயுசுகாலம், ரெகொபெயாமின் ஆயுசு காலத்தைவிட அதிகமாயிருக்கிறது. ரெகொபெயாமின் குமாரனாகிய அபியா, தன் தகப்பனுக்கு பின் யூதாதேசத்திற்கு ராஜாவாகிறான். அபியா யெரொபெயாமுக்கு விரோதமாக தொடர்ந்து யுத்தம்பண்ணுகிறான்.

யெரெபெயாமுக்கும் அபியா என்னும் பெயரில் ஒரு குமாரன் இருந்தான். இவன் வியாதியில் விழுந்து, சீக்கிரத்தில் செத்துப்போனான் (1இராஜா 14:1). ரெகொபெயாமின் குமாரனாகிய அபியா மரித்துப்போவதற்கு முன்பாக, யெரொபெயாமின் குமாரனாகிய அபியா மரித்துப்போனான்.

அபியாம் யூதாவின்மேல் ராஜாவாகி மூன்றுவருஷம் எருசலேமில் ராஜ்யபாரம்பண்ணுகிறான். யெரொபெயாமின் இருபதாம் வருஷ ராஜ்யபாரம் முடிவதற்கு முன்பாக, அபியாம் மரித்துப்போகிறான். "இஸ்ரவேலின் ராஜாவாகிய யெரொபெயாமின் இருபதாம் வருஷத்திலே ஆசா யூதாவின்மேல் ராஜாவாகிறான்" (1இராஜா 15:9).

அபியாம் யெரொபெயாமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறான். இந்த யுத்தத்திலே அபியாமுக்கு ஜெயமுண்டாயிற்று. இதனால் அவன் மனமேட்டிமையாயிருக்கிறான்.

"அபியா யெரொபெயாமைப் பின்தொடர்ந்து, அவனுக்கு உண்டான பட்டணங்களாகிய பெத்தேலையும் அதின் கிராமங்களையும், எஷானாவையும் அதின் கிராமங்களையும், எப்பெரோனையும் அதின் கிராமங்களையும் பிடித்தான். அப்புறம் அபியாவின் நாட்களில் யெரொபெயாம் பலங்கொள்ள மாட்டாதேபோய், கர்த்தர் அவனை அடித்ததினால் மரணமடைந்தான். அபியா பலத்துப்போனான்; அவன் பதினாலு ஸ்திரீகளை விவாகம்பண்ணி, இருபத்திரண்டு குமாரரையும் பதினாறு குமாரத்திகளையும் பெற்றான்" (2நாளா 13:19-21).

அபியாம் கர்த்தருக்கு முன்பாக உத்தமமாயிருக்கவில்லை. ஆகையினால் அபியாமின் ராஜ்யபாரம் நீண்டகாலத்திற்கு நிலைக்கவில்லை. அவன் மூன்றுவருஷம் மாத்திரமே எருசலேமில் ராஜ்யபாரம் பண்ணுகிறான். கர்த்தர் அபியாமை அகற்றிப்போடுகிறார். அபியாம் தன் பிதாக்களோடே நித்திரையடைகிறான். அவன் குமாரனாகிய ஆசா அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான்.

அபியாமினுடைய தாயின் பெயர் மாகாள். இவள் அப்சலோமின் குமாரத்தி. இந்த அப்சலோம் தாவீதின் குமாரனாயிருக்கவேண்டுமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

அபியாமின் தகப்பனாராகிய ரெகொபெயாம் உயிரோடிருந்த நாட்களெல்லாம், அவனுக்கும், இஸ்ரவேலின் ராஜாவாகிய யெரொபெயாமுக்கும் யுத்தம் நடைபெற்றது. "ரெகொபெயாமுக்கும் யெரொபெயாமுக்கும் அவர்கள் இருந்த நாட்களிலெல்லாம் யுத்தம் நடந்துகொண்டிருந்தது" (1இராஜா 15:6) ரெகொபெயாம் மரித்துப்போனபின்பு, அவனுடைய குமாரனாகிய அபியாம், யெரொபெயாமுக்கு விரோதமாக தொடர்ந்து யுத்தம்பண்ணுகிறான்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்தின் எல்லைப்பகுதியும், தெற்கு யூதாதேசத்தின் எல்லைப்பகுதியும் சரியாக முறைப்படுத்தப்படவில்லை. இதனால் இரண்டு தேசங்களுக்கும் இடையே எல்லைப் பிரச்சனைகள் உண்டாயிற்று. இந்தப் பிரச்சனைகளை பெரிதுபடுத்தி ரெகொபெயாமுக்கும் யெரொபெயாமுக்கும் அவர்கள் இருந்த நாட்களிலெல்லாம் யுத்தம் நடந்துகொண்டிருந்தது. ரெகொபெயாம் மரித்துப்போனபின்பு, அவனுடைய குமாரனாகிய அபியாமுக்கும் யெரொபெயாமுக்கும் யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது (1இராஜா 15:7).

யெரொபெயாம் தனக்கு மிகப்பெரிய சேனையைத் திரட்டி அபியாமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனான். அபியாமும் யூதாதேசத்தைப் பாதுகாப்பதற்காக, யெரொபெயாமை பின்தொடர்ந்து, அவனுக்கு உண்டான பட்டணங்களாகிய பெத்தேலையும் அதின் கிராமங்களையும், எஷானாவையும் அதின் கிராமங்களையும், எப்பெரோனையும் அதின் கிராமங்களையும் பிடித்தான் (2நாளா 13:19).

ரெகொபெயாமின் குமாரனாகிய அபியாம், தன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல், தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக உத்தமமாயிருக்கவில்லை. கர்த்தருடைய பிரமாணங்கள்மேல் அபியாம் பிரியப்படவில்லை. அவன் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியவுமில்லை.

யெரொபெயாமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவது அபியாமுக்கு பிரியமாயிருந்தது. எருசலேமிலே கர்த்தருடைய ஆலயம் இருப்பதற்காகவும், கர்த்தருடைய ஆசாரியரும் லேவியரும் தங்கள் பக்கத்தில் இருப்பதற்காகவும் அபியாம் பெருமைப்படுகிறான். வடக்கு இஸ்ரவேல் தேசத்திலே கர்த்தருடைய ஆலயமும் இல்லை. அங்கே கர்த்தருடைய ஆசாரியரும் லேவியரும் இல்லை.

ரெகொபெயாமின் குமாரனாகிய அபியா, யெரொபெயாமுக்கு விரோதமாக தன்னுடைய வார்த்தைகளை சொல்லும்போது, "இப்போதும் தாவீதுடைய குமாரன் கையிலிருக்கிற கர்த்தருடைய ராஜ்யத்திற்கு விரோதமாக நீங்கள் பெலன் கொள்ளலாமென்று நினைக்கிறீர்கள்; நீங்கள் ஏராளமான கூட்டம்; யெரொபெயாம் உங்களுக்கு தேவர்களாக உண்டாக்கின பொன் கன்றுக்குட்டிகளும் உங்களிடத்தில் இருக்கிறதே. நீங்கள் ஆரோனின் குமாரராகிய கர்த்தருடைய ஆசாரியரையும் லேவியரையும் தள்ளிவிட்டு, தேசாதேசங்களின் ஜனங்களைப்போல உங்களுக்கு ஆசாரியர்களை உண்டுபண்ணவில்லையோ? இளங்காளையினாலும், ஏழு கடாக்களினாலும், தன்னைப் பிரதிஷ்டையாக்கும்படி வருகிற எவனும் தெய்வம் அல்லாதவைகளுக்கு ஆசாரியனாகிறானே" (2நாளா 13:8,9) என்றும்,

"எங்களுக்கோ கர்த்தரே தேவன்; நாங்கள் அவரைவிட்டு விலகவில்லை; கர்த்தருக்கு ஊழியஞ்செய்கிற ஆசாரியர்கள் ஆரோனின் குமாரரும், பணிவிடை செய்கிறவர்கள் லேவியருமாமே. அவர்கள் தினந்தோறும் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகளையும் சுகந்த வாசனையான தூபத்தையும் செலுத்தி, காலையிலும் மாலையிலும் பரிசுத்தமான மேஜையின்மேல் சமுகத்தப்பங்களை அடுக்கிவைக்கிறதையும், பொன் குத்துவிளக்கையும் அதின் விளக்குகளைச் சாயங்காலந்தோறும் ஏற்றுகிறதையும் விசாரிக்கிறார்கள்; நாங்கள் எங்கள் தேவனாகிய கர்த்தரின் காவலைக் காக்கிறோம்; நீங்களோ அவரை விட்டு விலகினீர்கள்" (2நாளா 13:10,11) என்றும்,

"இதோ, தேவன் எங்கள் சேனாபதியாய் எங்களோடேகூட இருக்கிறார்; உங்களுக்கு விரோதமாகப் பூரிகைகளைப் பெருந்தொனியாய் முழக்குகிற ஆசாரியர்களும் இருக்கிறார்கள்; இஸ்ரவேல் புத்திரரே, உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக யுத்தஞ்செய்யாதேயுங்கள்; செய்தால் உங்களுக்குச் சித்திக்காது" (2நாளா 13:12) என்றும் சொல்லுகிறான்.

அபியாமினிடத்தில் கர்த்தருடைய ஆலயத்தைக் குறித்தும், கர்த்தருடைய ஆசாரியரைக் குறித்தும், லேவியரைக் குறித்தும் வைராக்கியம் இருக்கிறது. ஆனால் அபியாம் கர்த்தருடைய கற்பனைகளுக்கு பயப்படவில்லை. அவனிடத்தில் உண்மையில்லை. அவனுடைய ஆரம்பம் நன்றாயிருந்தது. ஆனால் அவனுடைய முடிவு சீர்கெட்டுப்போயிற்று. அபியாம் தன் தகப்பன் ரெகொபெயாம் தனக்கு முன்செய்த எல்லா பாவங்களிலும் நடக்கிறான் (1இராஜா 15:3).

அபியாமின் இருதயம் தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக உத்தமமாயிருக்கவில்லை. ஆனாலும் தாவீதினிமித்தம் அவனுடைய தேவனாகிய கர்த்தர், அவனுக்குப் பிற்பாடு அவன் குமாரனை எழும்பப்பண்ணுகிறதினாலும், எருசலேமை நிலைநிறுத்துகிறதினாலும், அவனுக்கு எருசலேமில் ஒரு விளக்கைக் கட்டளையிட்டு வந்தார் (1இராஜா 15:4).

தாவீது ஏத்தியனாகிய உரியாவின் சங்கதி ஒன்றுதவிர கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டதிலே தான் உயிரோடிருந்த நாளெல்லாம் ஒன்றையும் விட்டு விலகாமல், அவர் பார்வைக்குச் செம்மையானதைச் செய்துவந்தான் (1இராஜா 15:5).

அபியாமின் நிமித்தமாகவோ அல்லது அவனுடைய தகப்பனாகிய ரெகொபெயாமின் நிமித்தமாகவோ கர்த்தர் அவனுக்கு எருசலேமில் ஒரு விளக்கை கட்டளையிடவில்லை. கர்த்தர் தாவீதின் நிமித்தம் அவனுக்கு எருசலேமில் ஒரு விளக்கைக் கட்டளையிடுகிறார். அபியாமின் இருதயம், தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக உத்தமமாயிருக்கவில்லை. ஆனாலும் கர்த்தர் அவனுக்கு எருசலேமிலே ஒரு விளக்கைக் கட்டளையிடுகிறார்.

தாவீதின் சந்ததியார், தாவீதைப்போல கர்த்தருக்கு முன்பாக உத்தமமாயிருக்கவில்லை. ஆனாலும் கர்த்தர் தாவீதுக்கு சொன்ன ஆசீர்வாதம், தாவீதின் சந்ததியாருக்கும் கடந்துவருகிறது. கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு, தாவீதின் சந்ததியார் அபாத்திரராயிருக்கிறார்கள். ஆனாலும் தாவீதின் நிமித்தம், கர்த்தர், தாவீதின் சந்ததியாரையும் ஆசீர்வதிக்கிறார்.

அபியாமின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும் யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது; அபியாமுக்கும் யெரொபெயாமுக்கும் யுத்தம் நடந்துகொண்டிருந்தது. அபியாம் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவனைத் தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணுகிறார்கள்; அவன் குமாரனாகிய ஆசா அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான் (1இராஜா 15:7,8).

ஆசா
1இராஜா 15:9-24

1இராஜா 15:9. இஸ்ரவேலின் ராஜாவாகிய யெரொபெயாமின் இருபதாம் வருஷத்திலே ஆசா யூதாவின்மேல் ராஜாவாகி,

1இராஜா 15:10. நாற்பத்தொரு வருஷம் எருசலேமில் ராஜ்யபாரம்பண்ணினான்; அப்சலோமின் குமாரத்தியாகிய அவனுடைய தாயின் பேர் மாகாள்.

1இராஜா 15:11. ஆசா தன் தகப்பனாகிய தாவீதைப் போல் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்.

1இராஜா 15:12. அவன் இலச்சையான புணர்ச்சிக்காரரை தேசத்திலிருந்து அகற்றி, தன் பிதாக்கள் உண்டுபண்ணின நரகலான விக்கிரகங்களையெல்லாம் விலக்கி,

1இராஜா 15:13. தோப்பிலே அருவருப்பான விக்கிரகத்தை உண்டுபண்ணின தன் தாயாகிய மாகாளையும் ராஜாத்தியாய் இராதபடிக்கு விலக்கிவிட்டான்; அவனுடைய விக்கிரகத்தையும் ஆசா நிர்மூலமாக்கி, கீதரோன் ஆற்றண்டையிலே சுட்டெரித்துப்போட்டான்.

1இராஜா 15:14. மேடைகளோ தகர்க்கப்படவில்லை; ஆனாலும் ஆசா உயிரோடிருந்த நாளெல்லாம் அவன் இருதயம் கர்த்தரோடே உத்தமமாயிருந்தது.

1இராஜா 15:15. தன் தகப்பனும் தானும் பரிசுத்தப்படுத்தும்படி நேர்ந்துகொண்ட வெள்ளியையும் பொன்னையும் பணிமுட்டுகளையும் அவன் கர்த்தருடைய ஆலயத்திலே கொண்டுவந்தான்.

1இராஜா 15:16. ஆசாவுக்கும் இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷாவுக்கும் அவர்களுடைய நாட்களிலெல்லாம் யுத்தம் நடந்து கொண்டிருந்தது.

1இராஜா 15:17. ஒருவரும் யூதாவின் ராஜாவாகிய ஆசாவினிடத்தில் போக்குவரத்தாயிராதபடிக்கு, இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷா யூதாவுக்கு விரோதமாக வந்து ராமாவைக் கட்டினான்.

1இராஜா 15:18. அப்பொழுது ஆசா கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களில் மீதியான எல்லா வெள்ளியையும் பொன்னையும், ராஜாவின் அரமனையின் பொக்கிஷங்களையும் எடுத்து, அவைகளைத் தன் ஊழியக்காரர் கையிலே தமஸ்குவில் வாசமாயிருக்கிற எசியோனின் மகனாகிய தப்ரிமோனின் குமாரன் பெனாதாத் என்னும் சீரியாவின் ராஜாவுக்குக் கொடுத்தனுப்பி:

1இராஜா 15:19. எனக்கும் உமக்கும் என் தகப்பனுக்கும் உம்முடைய தகப்பனுக்கும் உடன்படிக்கை உண்டே; இதோ, உமக்கு வெகுமதியாய் வெள்ளியையும் பொன்னையும் அனுப்புகிறேன்; இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷா என்னைவிட்டு விலகிப்போகும்படிக்கு, நீர் வந்து அவனோடு செய்த உடன்படிக்கையைத் தள்ளிப்போடும் என்று சொல்லச்சொன்னான்.

1இராஜா 15:20. பெனாதாத், ராஜாவாகிய ஆசாவுக்குச் செவிகொடுத்து, தனக்கு உண்டான சேனாபதிகளை இஸ்ரவேலின் பட்டணங்களுக்கு விரோதமாக அனுப்பி, ஈயோனையும், தாணையும் பெத்மாக்கா என்னும் ஆபேலையும் கின்னரோத் அனைத்தையும் நப்தலியின் முழுத்தேசத்தோடுங்கூட முறிய அடித்தான்.

1இராஜா 15:21. பாஷா அதைக் கேட்டபோது, ராமாவைக் கட்டுகிறதை விட்டு திர்சாவிலிருந்துவிட்டான்.

1இராஜா 15:22. அப்பொழுது ராஜாவாகிய ஆசா யூதா எங்கும் ஒருவரும் தப்பாமல் எல்லாரும் போய், பாஷா கட்டின ராமாவின் கற்களையும் அதின் மரங்களையும் எடுத்துவர பறைமுறை இடுவித்து; அவைகளினால் பென்யமீன் கோத்திரத்திலுள்ள கேபாவையும் மிஸ்பாவையும் கட்டினான்.

1இராஜா 15:23. ஆசாவின் மற்ற எல்லா வர்த்தமானங்களும், அவனுடைய எல்லா வல்லமையும், அவன் செய்தவை யாவும், அவன் கட்டின பட்டணங்களின் வரலாறும், யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது; அவன் முதிர்வயதான காலத்தில் அவனுடைய கால்களில் வியாதி கண்டிருந்தது.

1இராஜா 15:24. ஆசா தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், தன் தகப்பனாகிய தாவீதின் நகரத்திலே தன் பிதாக்களண்டையில் அடக்கம்பண்ணப்பட்டான்; அவன் குமாரனாகிய யோசபாத் அவன் ஸ்தானத்திலே ராஜாவானான்.

ஆசாவின் ராஜ்யபாரத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆசாவின் விரிவான சரித்திரம் 2நாளா 14-16 ஆகிய அதிகாரங்களில் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது.

அபியாமின் குமாரனாகிய ஆசா, அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான். அவன் நாற்பத்தொரு வருஷம் எருசலேமில் ராஜ்யபாரம்பண்ணுகிறான் (1இராஜா 15:10). ராஜாக்கள் புஸ்தகத்திலும், நாளாகமம் புஸ்தகத்திலும் யூதாவின் ராஜாக்களைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. அவர்களில் கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதை செய்த நல்ல ராஜாக்களும், கர்த்தருடைய பார்வைக்கு உத்தமமாய் இராமல் பொல்லாப்பானதை செய்த கெட்ட ராஜாக்களும் சமஎண்ணிக்கையிலிருக்கிறார்கள்.

கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதை செய்த நல்ல ராஜாக்கள் நீண்டகாலம் ஆட்சி செய்கிறார்கள். துன்மார்க்கமான ராஜாக்களின் ஆட்சிக்காலம் சீக்கிரத்தில் முடிந்துபோகிறது.

அபியாமின் குமாரனாகிய ஆசா, தன் தகப்பனாகிய தாவீதைப் போல் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்கிறான் (1இராஜா 15:11). ஆசாவின் நடபடிகள் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதாயிருக்கிறது. ஆசா தாவீதைப்போல கர்த்தரிடத்தில் நெருங்கிய ஐக்கியத்தோடிருக்கிறான். தாவீது ஒரு தீர்க்கதரிசி. அவர் ஒரு சங்கீதக்காரர். ஆசா தாவீதைப்போல ஒரு தீர்க்கதரிசியோ அல்லது ஒரு சங்கீதக்காரரோ அல்ல. ஆனாலும் ஆசா தாவீதைப்போல் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதை செய்கிறான்.

ஆசாவைப்போல நாமும், நம்முடைய முன்னோர்களைப்போல, ஏராளமான தாலந்துகளை உடையவர்களாயிருக்கமாட்டோம். ஆனாலும் கர்த்தருடைய கிருபை நமக்கும் போதுமானதாயிருக்கிறது. கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் தாலந்துகளை, அவருடைய நாமமகிமைக்காக பயன்படுத்தவேண்டும். நம்மிடத்தில் தாலந்துகள் குறைவாயிருந்தாலும், அவற்றை பயன்படுத்தாமல் சும்மா வைத்திருக்கக்கூடாது. கர்த்தர் நமக்குக் கொடுக்கும் தாலந்துகள், அவருடைய நாமமகிமைக்காக எப்போதும் பயன்படுத்தப்படவேண்டும்.

ஆசா கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவனாயிருக்கிறான். இவனுடைய ஆட்சிக்காலத்தில், யூதாதேசம் சீர்கெட்டுப்போயிருக்கிறது. யூதாதேசத்தார் மத்தியிலே மனமாற்றமும், மறுமலர்ச்சியும் தேவைப்படுகிறது.

ஆசா இலச்சையான புணர்ச்சிக்காரரை தேசத்திலிருந்து அகற்றுகிறான். தன் பிதாக்கள் உண்டுபண்ணின நரகலான விக்கிரகங்களையெல்லாம் விலக்குகிறான். தோப்பிலே அருவருப்பான விக்கிரகத்தை உண்டுபண்ணின தன் தாயாகிய மாகாளையும் ராஜாத்தியாய் இராதபடிக்கு விலக்கிவிடுகிறான்; அவளுடைய விக்கிரகத்தையும் ஆசா நிர்மூலமாக்கி, கீதரோன் ஆற்றண்டையிலே சுட்டெரித்துப் போடுகிறான் (1இராஜா 15:12,13).

ஆசா இலச்சையான புணர்ச்சிக்காரரை யூதாதேசத்திலிருந்து அகற்றுகிறான். இவர்கள் ஆண்புணர்ச்சிக்காரர்களாயும், வேசிகளாயும் இருக்கிறார்கள். தேசத்தில் இவர்களைப்போல அசுத்தமானவர்கள் இருக்கும்போது, கர்த்தருடைய ஆசீர்வாதம் அந்த தேசத்திற்கு சித்திக்காது. தேசத்தின் ராஜாவோ, அல்லது தேசத்தின் ஜனங்களோ சந்தோஷமாயும், சமாதானமாயும், செழிப்பாயும் இருக்கமாட்டார்கள். தேசத்திலே இலச்சையான புணர்ச்சிக்காரர் இருக்கும் வரையிலும், கர்த்தருடைய சாபம் அந்த தேசத்தின்மீது தங்கியிருக்கும்.

ஆசா யூதாதேசத்திலிருந்து, இலச்சையான புணர்ச்சிக்காரரை அகற்றின பின்பு, நரகலான விக்கிரகங்களையெல்லாம் விலக்குகிறான். இந்த விக்கிரகங்களெல்லாம் அவனுடைய பிதாக்கள் உண்டுபண்ணினவை. அப்சலோமின் குமாரத்தியாகிய மாகாள் ஆசாவின் தாயார் என்று சொல்லப்பட்டிருக்கிறது (1இராஜா 15:10). இவள் ஆசாவின் தாயாரல்ல. இவள் ஆசாவின் பாட்டி. ஆசா சிறுபிள்ளையாயிருந்த காலத்திலிருந்து, தன்னுடைய பாட்டியாகிய மாகாளின் பராமரிப்பில் வளர்ந்தவன். மாகாள் தனக்கு தோப்பு விக்கிரகங்களை உண்டுபண்ணியிருந்தாள்.

ஆசா யூதாதேசத்திற்கு ராஜாவானவுடன், தோப்பிலே அருவருப்பான விக்கிரகத்தை உண்டுபண்ணின தன் தாயாகிய மாகாளையும் ராஜாத்தியாய் இராதபடிக்கு விலக்கிவிடுகிறான்; அவளுடைய விக்கிரகத்தையும் ஆசா நிர்மூலமாக்கி, கீதரோன் ஆற்றண்டையிலே சுட்டெரித்துப்போடுகிறான் (1இராஜா 15:13). மனமாற்றமும், மறுமலர்ச்சியும் நம்முடைய வீட்டிலே ஆரம்பமாகவேண்டும்.

ஆசா தன் தாயாராகிய மாகாள்மீது பிரியமாயிருக்கிறான். அவள்மீது அன்பு வைக்கிறான். ஆனாலும் ஆசா மாகாளைவிட கர்த்தரை அதிகமாய் நேசிக்கிறான். ஆசா மாகாளை நேசித்தாலும், அவளுடைய விக்கிராராதனையை அருவருக்கிறான்.

ஆசா கர்த்தரைக்குறித்த ஆவிக்குரிய காரியங்களில் லேவியரைப்போல இருக்கிறான். "தன் தகப்பனுக்கும் தன் தாய்க்கும்: நான் உங்களைப் பாரேன் என்று சொல்லி, தன் சகோதரரை அங்கீகரியாமல், தன் பிள்ளைகளையும் அறியாமலிருக்கிறவன் வசமாய் அவைகள் இருப்பதாக; அவர்கள் உம்முடைய வார்த்தைகளைக் கைக்கொண்டு, உம்முடைய உடன்படிக்கையைக் காக்கிறவர்கள்" (உபா 33:9).

ஆசா மாகாளின் விக்கிரகங்களை நிர்மூலமாக்குகிறான். அவற்றை கீதரோன் ஆற்றண்டையில் சுட்டெரித்துப்போடுகிறான். ஆசா மாகாளை ராஜாத்தியாயிராதபடிக்கு விலக்கி விடுகிறான். ராஜாவின் அரண்மனைக்குள் பிரவேசிப்பதற்கு மாகாளுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. அவள் தனிமையான வீட்டிலே சிறை வைக்கப்படுகிறாள். ஆசாவின் மனைவியோடு பேசுவதற்குக்கூட, மாகாளுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

மேடைகளோ தகர்க்கப்படவில்லை; ஆனாலும் ஆசா உயிரோடிருந்த நாளெல்லாம் அவன் இருதயம் கர்த்தரோடே உத்தமமாயிருக்கிறது (1இராஜா 15:14).

ஆசா யூதாதேசத்திலே கர்த்தருக்கு பிரியமான காரியங்களை மறுபடியும் ஸ்தாபிக்கிறான். தன் தகப்பனும் தானும் பரிசுத்தப்படுத்தும்படி நேர்ந்துகொண்ட வெள்ளியையும் பொன்னையும் பணிமுட்டுகளையும் அவன் கர்த்தருடைய ஆலயத்திலே கொண்டுவருகிறான் (1இராஜா 15:15).

எத்தியோப்பியர்மீது நடைபெற்ற யுத்தத்தில் ஆசாவுக்கு ஜெயமுண்டாயிற்று. எத்தியோப்பியருடைய தேசத்திலிருந்து ஆசா ஏராளமான கொள்ளைப்பொருளை எருசலேமுக்கு கொண்டு வந்தான். தான் கர்த்தருக்கு நேர்ந்துகொண்ட பிரகாரம், கர்த்தருடைய ஆலயத்திலே, பொன்னையும் வெள்ளியையும் காணிக்கையாக செலுத்துகிறான்.

கர்த்தருக்கு நேர்ந்துகொண்டதை கர்த்தருக்கு செலுத்தவேண்டும். நம்முடைய குடும்பத்திலுள்ளவர்களை கர்த்தருடைய ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்தால், ஏற்றகாலம் வரும்போது, அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தை செய்யவேண்டும். இந்த விஷயத்தில் பிரதிஷ்டை பண்ணினவர்களும், பிரதிஷ்டை பண்ணப்பட்டவர்களும் ஒத்துழைத்து, கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்த வேண்டும். பெற்றோர் கர்த்தருக்காக நேர்ந்துகொண்டவற்றை, அவர்களுடைய பிள்ளைகளும் செலுத்தவேண்டும்.

ஆசா தனக்காகவும், யூதாஜனங்களுக்காகவும் பட்டணங்களைக் கட்டுகிறான். இதனால் யூதாமனுஷருக்கு வேலை வாய்ப்பு அதிகரிக்கிறது. அவர்களுக்கு போதுமான அளவு வருமானமும் கிடைக்கிறது. ஆசாவின் மற்ற எல்லா வர்த்தமானங்களும், அவனுடைய எல்லா வல்லமையும், அவன் செய்தவை யாவும், அவன் கட்டின பட்டணங்களின் வரலாறும், யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது (1இராஜா 15:23).

ஆசாவின் ராஜ்யபாரம் சிறப்பாகயிருந்தாலும், அவனுடைய ராஜாசனத்திலும் ஒரு சில தப்பிதங்கள் ஏற்படுகிறது. அவன் யூதாதேசத்திலே அநேக நல்ல காரியங்களை செய்திருக்கிறான். இலச்சையான புணர்ச்சிக்காரரை தேசத்திலிருந்து அகற்றிப்போட்டான். நரகலான விக்கிரகங்களையெல்லாம் யூதாதேசத்திலிருந்து விலக்கிப்போட்டான். ஆனாலும் அவன் மேடைகளை தகர்க்கவில்லை (1இராஜா 15:14).

ஆசாவினிடத்தில் நல்ல சுபாவங்கள் ஏராளமாயிருக்கிறது. ஆனாலும் அவன் செய்யவேண்டிய சில காரியங்களை செய்யாமல் விட்டுவிடுகிறான். தன்னுடைய தாயாகிய மாகாளின் விக்கிரகத்தை ஆசா நிர்மூலமாக்கினான். அதை கீதரோன் ஆற்றண்டையில் சுட்டெரித்துப்போட்டான். அவள் மேடைகளையும் தோப்புகளையும் உண்டாக்கி, அவற்றிலே அருவருப்பான விக்கிரகங்களை உண்டுபண்ணினாள். ஆசா அவளுடைய விக்கிரகங்களை நிர்மூலம்பண்ணினாலும், அவள் உண்டுபண்ணின மேடைகளை தகர்க்கவில்லை. இதனால் ஆவிக்குரிய மறுமலர்ச்சியில் தடை உண்டாயிற்று. மேடைகள் தகர்க்கப்படாமலிருப்பதினால், அங்கே விக்கிரகாராதனை மறுபடியும் ஆரம்பிக்கப்படுவதற்கு வாய்ப்பு உண்டாயிற்று.

ஆசா விக்கிரகங்களின் மேடைகளை தகர்க்காவிட்டாலும், அவன் தன் தகப்பனாகிய தாவீதைப்போல் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதை செய்கிறான். அவனுடைய இருதயம் கர்த்தரோடு செம்மையாயிருக்கிறது.

ஆசாவைப்போல கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அநேகர் நிறைவுள்ளவர்களாயும், குறைவுள்ளவர்களாயும் இருக்கிறார்கள். இவர்கள் கர்த்தருக்கு நன்றாய் ஊழியம் செய்வார்கள். அவர்களுடைய இருதயம் கர்த்தரோடு செம்மையாயிருக்கும். கர்த்தர் அவர்களையும், அவர்களுடைய ஊழியங்களையும் அங்கீகரிப்பார். ஆனாலும் அவர்கள் ஒரு சில காரியங்களில் குறைவுள்ளவர்களாகயிருப்பார்கள். சில காரியங்களை அவர்களால் செய்திருக்க முடியும். ஆனால் அவர்கள் அதை செய்யமாட்டார்கள்.

நாம் கிறிஸ்துவுக்குள் பரிபூரணமாயிருக்கவேண்டும் என்பது கர்த்தருடைய விருப்பம். பாவமில்லாத மனுஷன் ஒருவனுமில்லை. பரிபூரணம் என்னும் வார்த்தை பாவமே இல்லாத ஜீவியத்தை குறிக்கவில்லை. நம்முடைய எண்ணத்திலும், கிரியையிலும் நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். இதுவே கர்த்தர் நம்மிடத்திலிருந்து எதிர்பார்க்கும் பரிபூரணம்.

ஆசா தானும் தன் தகப்பனும் நேர்ந்துகொண்ட பொக்கிஷங்களை கர்த்தருடைய ஆலயத்திலே கொண்டு வருகிறான். இது மிகவும் நல்ல காரியம். ஆனால் இதற்கு பின்பு ஆசா ஒரு பாவமான காரியத்தையும் செய்கிறான்.

ஆசா கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களில் மீதியான எல்லா வெள்ளியையும் பொன்னையும், ராஜாவின் அரமனையின் பொக்கிஷங்களையும் எடுத்து, அவைகளைத் தன் ஊழியக்காரர் கையிலே தமஸ்குவில் வாசமாயிருக்கிற எசியோனின் மகனாகிய தப்ரிமோனின் குமாரன் பெனாதாத் என்னும் சீரியாவின் ராஜாவுக்குக் கொடுத்தனுப்புகிறான் (1இராஜா 15:18).

சீரியாவின் ராஜா, இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷாவோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறான். அந்த உடன்படிக்கையை முறித்துப்போடுவதற்கு, ஆசா சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத்திற்கு லஞ்சம் கொடுக்கிறான். ஆசா தன்னுடைய அரண்மனையின் பொக்கிஷத்திலிருந்து பெனாதாத்திற்கு எடுத்துக்கொடுப்பதோடு, கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களிலிருந்தும் எடுத்து கொடுக்கிறான்.

ஆசா பெனாதாத்திற்கு லஞ்சத்தைக் கொடுத்தனுப்பி, அவர்கள் மூலமாய் பெனாதாத்திற்கு, "எனக்கும் உமக்கும் என் தகப்பனுக்கும் உம்முடைய தகப்பனுக்கும் உடன்படிக்கை உண்டே; இதோ, உமக்கு வெகுமதியாய் வெள்ளியையும் பொன்னையும் அனுப்புகிறேன்; இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷா என்னைவிட்டு விலகிப்போகும்படிக்கு, நீர் வந்து அவனோடு செய்த உடன்படிக்கையைத் தள்ளிப்போடும்" (1இராஜா 15:19) என்று செய்தி சொல்லி அனுப்புகிறான்.

உடன்படிக்கைப்பண்ணினவர்கள், தாங்கள் பண்ணின உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். உடன்படிக்கையை முறித்துப்போடக்கூடாது. ஆனால் ஆசாவோ, பெனாதாத்திற்கு லஞ்சம் கொடுத்து, அவனை உடன்படிக்கையை முறித்துப்போடச் சொல்லுகிறான். ஆசா கர்த்தருடைய ஆலயத்திலிருந்து பொக்கிஷத்தை எடுத்து, பெனாதாத்திற்கு லஞ்சம் கொடுக்கிறான். பிறரை பாவம் செய்யத் தூண்டுவது பாவமான காரியம். ஆசா கர்த்தருடைய ஆலயத்திலே நேர்ந்துகொண்ட பொக்கிஷங்களை வைக்கிறான். ஆனாலும், அவன் கர்த்தரை முழுஇருதயத்தோடும் முழுமனதோடும் விசுவாசிக்கவில்லை. ஆசா கர்த்தரை நம்பாமல் சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத்தை நம்புகிறான்.

கர்த்தர் ஆசாவுக்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறார். யூதாதேசத்தாருக்கும், இஸ்ரவேல் தேசத்தாருக்கும் தொடர்ந்து சண்டை நடைபெற்றாலும், கர்த்தர் ஆசாவுக்கு இதுவரையிலும் உதவி செய்திருக்கிறார். ஆனால் ஆசாவோ கர்த்தர்மீது நம்பிக்கை வைக்காமல், பெனாதாத்தின் மீது நம்பிக்கை வைத்து, அவனுக்கு வெகுமதிகளைக் கொடுத்தனுப்புகிறான்.

ஆசா பொன்னையும் வெள்ளியையும் தேவாலயத்திலே கொண்டு வந்து வைத்தான். இது கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்கள். ஆசா இந்தப் பொக்கிஷங்களை தன்னுடைய சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்தக்கூடாது. கர்த்தருக்கு நேர்ந்துகொண்டதை அவருடைய ஊழியத்திற்கு மாத்திரமே பயன்படுத்தவேண்டும். ஆனால் ஆசாவோ கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களில் மீதியான எல்லா வெள்ளியையும் பொன்னையும் சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத்திற்கு வெகுமதியாகக் கொடுக்கிறான். தன்னுடைய சொந்த ஆசைகளையும், விருப்பங்களையும் நிறைவேற்றுவதற்கு, ஆசா தேவாலயத்தின் பொக்கிஷங்களை, பெனாதாத்திற்கு லஞ்சமாகக் கொடுக்கிறான்.

பெனாதாத்தும் ஆசாவின் வெகுமதிகளைப் பெற்றுக்கொண்டு, அவனுக்கு சாதகமாக நடக்கிறான். பெனாதாத், ராஜாவாகிய ஆசாவுக்குச் செவிகொடுத்து, தனக்கு உண்டான சேனாபதிகளை இஸ்ரவேலின் பட்டணங்களுக்கு விரோதமாக அனுப்பி, ஈயோனையும், தாணையும் பெத்மாக்கா என்னும் ஆபேலையும் கின்னரோத் அனைத்தையும் நப்தலியின் முழுத்தேசத்தோடுங்கூட முறிய அடிக்கிறான். பாஷா அதைக் கேட்டபோது, ராமாவைக் கட்டுகிறதை விட்டு திர்சாவிலிருந்துவிடுகிறான் (1இராஜா 15:20,21).

ஆசா யூதாதேசத்திலே ஏராளமான பட்டணங்களைக் கட்டுகிறான். ஆசாவைப்போல, பாஷாவும் இஸ்ரவேல் தேசத்தில் ராமாவைக் கட்டுகிறான். ஆசாவின் சதித்திட்டத்தினால், பாஷா பாதிக்கப்படுகிறான். அவனால் ராமாவை தொடர்ந்து கட்ட முடியவில்லை. பாஷா கட்டின ராமாவின் கற்களையும் மரங்களையும் ஆசா பயன்படுத்தி, தனக்கு பட்டணங்களைக் கட்டுகிறான்.

பாஷா ராமாவைக் கட்டுகிறதை விட்டுவிட்டு திர்சாவிலிருந்துவிடுகிறான். அப்பொழுது ராஜாவாகிய ஆசா யூதா எங்கும் ஒருவரும் தப்பாமல் எல்லாரும் போய், பாஷா கட்டின ராமாவின் கற்களையும் அதின் மரங்களையும் எடுத்துவர பறைமுறை இடுவிக்கிறான். அவைகளினால் பென்யமீன் கோத்திரத்திலுள்ள கேபாவையும் மிஸ்பாவையும் கட்டுகிறான் (1இராஜா 15:22).

ஆசாவின் விருப்பம் நிறைவேறுகிறது. ஆனால் ஆசா செய்த காரியம் கர்த்தருக்கு பிரியமானதாயில்லை. ஆசா தன்னுடைய விருப்பத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறான். அவன் கர்த்தருடைய சித்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இதனால் கர்த்தருடைய கோபம் ஆசாவின்மீது வருகிறது. கர்த்தருடைய வார்த்தை அனானி என்னும் தீர்க்கதரிசியின் மூலமாய் ஆசாவுக்கு உண்டாயிற்று.

அக்காலத்திலே ஞானதிருஷ்டிக்காரனாகிய அனானி யூதாவின் ராஜாவாகிய ஆசாவினிடத்தில் வந்து, அவனை நோக்கி: "நீர் உம்முடைய தேவனாகிய கர்த்தரைச் சார்ந்துகொள்ளாமல், சீரியாவின் ராஜாவைச் சார்ந்துகொண்டபடியினால், சீரியா ராஜாவின் இராணுவம் உமது கைக்குத்தப்பிப்போயிற்று" (2நாளா 16:7) என்றும்,

"மிகவும் ஏராளமான இரதங்களும் குதிரைவீரருமுள்ள எத்தியோப்பியரும் லூபியரும் மகா சேனையாயிருந்தார்கள் அல்லவா? நீர் கர்த்தரைச் சார்ந்து கொண்டபோதோவெனில், அவர்களை உமது கையில் ஒப்புக்கொடுத்தாரே" (2நாளா 16:8) என்றும்,

"தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது; இந்த விஷயத்தில் மதியில்லாதவராயிருந்தீர்; ஆகையால் இதுமுதற்கொண்டு உமக்கு யுத்தங்கள் நேரிடும்" (2நாளா 16:9) என்றும் சொல்லுகிறான்.

ஆசாவின் ராஜ்யபாரம் சீராக நடைபெறுகிறது. ஆனாலும் அவன் முதிர்வயதான காலத்தில், அவனுடைய கால்களில் வியாதி உண்டாயிற்று. ஆசாவுக்கு அநேக யுத்தங்களில் ஜெயமுண்டாயிற்று. ஆனாலும் இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷா, ஆசாவுக்கு நிரந்தர பிரச்சனையாயும், தொல்லையாயும் இருக்கிறான்.

இஸ்ரவேல் தேசமும், யூதாதேசமும் தங்களுக்குள்ளே தொடர்ந்து சண்டைபோட்டுக்கொள்கிறார்கள். இவர்களுடைய சண்டையினால் சீரியர்களைப்போன்ற தேசத்தாருக்கு அதிகமான நன்மைகள் உண்டாயிற்று. கர்த்தருடைய ஜனம் தங்களுக்குள்ளே சண்டைபோட்டு பலவீனப்படுகிறார்கள். அவர்களுக்கு விரோதமாக எழும்பின சத்துருக்களோ பலப்படுகிறார்கள்.

ஆசா யூதாவின்மேல் ராஜாவாகி, நாற்பத்தொரு வருஷம் எருசலேமிலே ஆட்சிபண்ணுகிறான். இவனுடைய ராஜ்யபாரம் நீண்டகாலத்திற்கு நடைபெறுகிறது. ஆசா தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், தன் தகப்பனாகிய தாவீதின் நகரத்திலே தன் பிதாக்களண்டையில் அடக்கம்பண்ணப் படுகிறான்; அவன் குமாரனாகிய யோசபாத் அவன் ஸ்தானத்திலே ராஜாவாகிறான் (1இராஜா 15:24).

நாதாபும் பாஷாவும்
1இராஜா 15:25-34

1இராஜா 15:25. யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் இரண்டாம் வருஷத்திலே யெரொபெயாமின் குமாரனாகிய நாதாப் இஸ்ரவேலின் மேல் ராஜாவாகி, இரண்டு வருஷம் இஸ்ரவேலின்மேல் ராஜ்யபாரம்பண்ணினான்.

1இராஜா 15:26. அவன் கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, தன் தகப்பன் வழியிலும், அவன் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின அவனுடைய பாவத்திலும் நடந்தான்.

1இராஜா 15:27. இசக்கார் வம்சத்தானாகிய அகியாவின் குமாரனான பாஷா, அவனுக்கு விரோதமாய்க் கட்டுப்பாடுபண்ணி, நாதபும் இஸ்ரவேலனைத்தும் பெலிஸ்தருக்கு இருந்த கிபெத்தோனை முற்றிக்கைபோட்டிருக்கையில், பாஷா அவனைக் கிபெத்தோனிலே வெட்டிப்போட்டான்.

1இராஜா 15:28. பாஷா யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் மூன்றாம் வருஷத்திலே அவனைக் கொன்றுபோட்டபின், அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

1இராஜா 15:29. அப்பொழுது யெரொபெயாம் செய்ததும், இஸ்ரவேலைச் செய்யப்பண்ணினதுமான பாவங்களினிமித்தமும், அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு உண்டாக்கின கோபத்தினிமித்தமும், கர்த்தர் சீலோனியனான அகியா என்னும் தமது ஊழியக்காரனைக்கொண்டு சொல்லியிருந்த வார்த்தையின்படியே,

1இராஜா 15:30. அவன் ராஜாவானபின் அவன் யெரொபெயாமின் வீட்டாரையெல்லாம் வெட்டிப் போட்டான்; யெரொபெயாமுக்கு இருந்த சுவாசமுள்ளதொன்றையும் அவன் அழிக்காமல் விடவில்லை.

1இராஜா 15:31. நாதாபின் மற்ற வர்த்தமானங்களும் அவன் செய்தவை யாவும் இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

1இராஜா 15:32. ஆசாவுக்கும் இஸ்ரவேல் ராஜாவாகிய பாஷாவுக்கும் அவர்கள் நாட்களிலெல்லாம் யுத்தம் நடந்துகொண்டிருந்தது.

1இராஜா 15:33. யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் மூன்றாம் வருஷத்திலே அகியாவின் குமாரனாகிய பாஷா, இஸ்ரவேலனைத்தின் மேலும் திர்சாவிலே ராஜாவாகி இருபத்து நாலு வருஷம் ஆண்டு,

1இராஜா 15:34. கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, யெரொபெயாமின் வழியிலும், அவன் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின அவனுடைய பாவத்திலும் நடந்தான்.

ஆசாவின் ராஜ்யபாரத்தில் யூதாதேசம் செழிப்பாயிருக்கிறது. ஆனால் இஸ்ரவேல் தேசமோ சீர்குலைந்து பாழாய்ப்போயிற்று. கர்த்தருடைய கோபம் இஸ்ரவேல் தேசத்தின்மீது வருகிறது.

தண்ணீரிலே நாணல் அசைகிறதுபோல, கர்த்தர் இஸ்ரவேலை முறிந்தசையப்பண்ணுகிறார். அவர்கள் பிதாக்களுக்குத் தாம் கொடுத்த இந்த நல்ல தேசத்திலிருந்து இஸ்ரவேலை வேரோடே பிடுங்குகிறார். அவர்கள் தங்களுக்கு தோப்பு விக்கிரகங்களை வைத்து, கர்த்தருக்குக் கோபம் உண்டாக்கினபடியினால், கர்த்தர் அவர்களை நதிக்கப்பாலே சிதறடிக்கிறார் (1இராஜா 14:15).

கர்த்தர் சொன்ன பிரகாரம், இஸ்ரவேல் ஜனத்தார் தண்ணீரிலே நாணல் அசைகிறதுபோல அசைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஸ்திரமான ராஜ்யபாரம் நடைபெறவில்லை. யூதாதேசத்திலே ஆசா என்னும் ஒரே ராஜா ராஜ்யபாரம் பண்ணின காலத்தில், இஸ்ரவேல் தேசத்தின் ராஜ்யபாரம் ஆறு அல்லது ஏழு ராஜாக்களின் கைகளுக்கு மாறி மாறி வருகிறது.

ஆசா யூதாவின்மேல் ராஜாவானபோது, இஸ்ரவேல் தேசத்திலே யெரொபெயாம் ராஜ்யபாரம் பண்ணினான். அவனுடைய இருபதாம் வருஷ ராஜ்யபாரத்தில், ஆசா யூதாவின்மேல் ராஜாவானான். ஆகாப் யூதாதேசத்திற்கு ராஜாவானபோது, இஸ்ரவேல் தேசத்திலே யெரொபெயாம் ராஜாவாயிருக்கிறான். ஆசாவின் ராஜ்யபாரம் முடியும்போது, இஸ்ரவேல் தேசத்தில் உம்ரி ராஜாவாயிருக்கிறான்.

யூதாதேசத்தில் ஆசா ராஜாவாயிருக்கும்போது, இஸ்ரவேல் தேசத்திலே யெரொபெயாம், நாதாப், பாஷா, ஏலா, சிம்ரி, திப்னி, உம்ரி என்று ஒவ்வொருவராக மாறி மாறி, ராஜாவாயிருக்கிறார்கள். இஸ்ரவேலின் ராஜாக்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குள்ளே சண்டைபோட்டுக்கொண்டு, ஒருவரையொருவர் அழித்துப்போட முயற்சிபண்ணுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைவிட்டும், தாவீதின் வீட்டாரை விட்டும் பிரிந்துபோனதினால், அவர்களுக்கு இப்படிப்பட்ட பிரச்சனைகள் வந்திருக்கிறது.

அகியா தீர்க்கதரிசனமாய்ச் சொன்ன பிரகாரம் யெரொபெயாமின் குடும்பம் நிர்மூலமாகிறது. யெரொபெயாமுக்கு பின்பு, அவனுடைய குமாரன் நாதாப் இஸ்ரவேலுக்கு ராஜாவாகிறான்.

யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் இரண்டாம் வருஷத்திலே யெரொபெயாமின் குமாரனாகிய நாதாப் இஸ்ரவேலின் மேல் ராஜாவாகி, இரண்டு வருஷம் இஸ்ரவேலின்மேல் ராஜ்யபாரம்பண்ணுகிறான். அவன் கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, தன் தகப்பன் வழியிலும், அவன் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின அவனுடைய பாவத்திலும் நடக்கிறான் (1இராஜா 15:25,26).

நாதாபின் சகோதரன் அபியா வியாதியில் விழுந்து செத்துப்போனான். நாதாப் தன் சகோதரனுடைய மரணத்தைப் பார்த்து, தன்னுடைய பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பி வரவேண்டும். அவனுடைய இருதயம் கர்த்தருக்கு முன்பாக செம்மையாயிருக்கவேண்டும். ஆனால் நாதாபோ கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறான். அவன் பாவமான வழிகளில் நடக்கிறான்.

யெரொபெயாம் தாணிலும் பெத்தேலிலும் கன்றுக்குட்டிகளை நிறுவினான். அவனுடைய குமாரன் நாதாப், தன் தகப்பன் நிறுவின கன்றுக்குட்டிகளை ஆராதிக்கிறான். இஸ்ரவேல் ஜனத்தார் எருசலேமிலுள்ள தேவாலயத்திற்குப்போய், கர்த்தரை ஆராதிப்பதை நாதாப் தடைபண்ணிவிடுகிறான். நாதாப் பாவம் செய்வதோடு, இஸ்ரவேலையும் பாவம் செய்யப்பண்ணுகிறான்.

இதன் நிமித்தமாய் கர்த்தருடைய கோபம் நாதாபின்மீது வருகிறது. கர்த்தர் அவனை சீக்கிரமாய் அழித்துப்போடுகிறார். யெரொபெயாமின் குமாரனாகிய நாதாப் இஸ்ரவேலின்மேல் ராஜாவாகி, இரண்டு வருஷம் மாத்திரமே இஸ்ரவேலின்மேல் ராஜ்யபாரம் பண்ணுகிறான். நாதாபின் ஆட்சிக்காலம் சீக்கிரத்தில் முடிந்துபோகிறது.

நாதாபும் இஸ்ரவேல் அனைத்தும் பெலிஸ்தருடைய பட்டணமாகிய கிபெத்தோனை முற்றிக்கைப் போட்டிருக்கிறார்கள். அப்போது இசக்கார் வம்சத்தானாகிய அகியாவின் குமாரனான பாஷா என்பவன், நாதாபுக்கு விரோதமாக கட்டுப்பாடு பண்ணுகிறான். பாஷா நாதாபை கிபெத்தோனிலே வெட்டிப்போடுகிறான்.

நாதாப் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருந்தாலும், இஸ்ரவேல் ஜனத்தார் நாதாபின்மீது பிரியமாயில்லை. அவர்கள் நாதாபை பாதுகாக்கவில்லை. பாஷா நாதாபுக்கு விரோதமாக கட்டுப்பாடு பண்ணியபோது, இஸ்ரவேல் ஜனத்தார் பாஷாவோடு சேர்ந்துகொள்கிறார்கள்.

பாஷா யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் மூன்றாம் வருஷத்திலே அவனைக் கொன்றுபோட்டபின், அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான் (1இராஜா 15:28).

நாதாபின் மற்ற வர்த்தமானங்களும் அவன் செய்தவை யாவும் இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது (1இராஜா 15:31)

பாஷா இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவானவுடன், முதல் வேலையாக யெரொபெயாமின் வீட்டாரையெல்லாம் வெட்டிப்போடுகிறான். யெரொபெயாமுக்கு இருந்த சுவாசமுள்ளதொன்றையும் அவன் அழிக்காமல் விடவில்லை (1இராஜா 15:30).

பாஷா யெரொபெயாமின் வீட்டாரை அழித்துப்போட்டது கர்த்தர் ஏற்கெனவே சொன்ன தீர்க்கதரிசனமாயிருக்கிறது. யெரொபெயாம் செய்ததும், இஸ்ரவேலைச் செய்யப்பண்ணினதுமான பாவங்களினிமித்தமும், அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு உண்டாக்கின கோபத்தினிமித்தமும், கர்த்தர் சீலோனியனான அகியா என்னும் தமது ஊழியக்காரனைக்கொண்டு சொல்லியிருந்த வார்த்தையின்படியே, இந்த சம்பவம் நடைபெறுகிறது (1இராஜா 15:29).

கர்த்தர் இஸ்ரவேல் தேசத்திலே பாஷாவை உயர்த்துகிறார். கர்த்தர் யெரொபெயாமை சோதித்ததுபோல, பாஷாவையும் சோதிக்கிறார். பாஷாவோ கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, யெரொபெயாமின் வழியிலும், அவன் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின அவனுடைய பாவத்திலும் நடக்கிறான் (1இராஜா 15:34).

ஆசாவுக்கும் இஸ்ரவேல் ராஜாவாகிய பாஷாவுக்கும் அவர்கள் நாட்களிலெல்லாம் யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் மூன்றாம் வருஷத்திலே அகியாவின் குமாரனாகிய பாஷா, இஸ்ரவேலனைத்தின் மேலும் திர்சாவிலே ராஜாவாகி இருபத்து நாலு வருஷம் ராஜ்யபாரம் பண்ணுகிறான் (1இராஜா 15:32,33).

பாஷாவின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்ததும், அவனுடைய வல்லமையும், இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது. பாஷா தன் பிதாக்களோடே நித்திரையடைந்து திர்சாவில் அடக்கம்பண்ணப்படுகிறான்; அவன் குமாரனாகிய ஏலா அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான் (1இராஜா 16:5,6).

16 அதிகாரம்

இந்த அதிகாரம் முழுவதும் வடக்கு இஸ்ரவேல் தேசத்தைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்தில் குழப்பங்களும், பிரச்சனைகளும் ஆட்சி மாற்றங்களும் உண்டாயிற்று. கர்த்தருடைய தீர்க்கதரிசி முன்னறிவித்த பிரகாரம் பாஷாவின் குடும்பத்தார் அழிந்துபோகிறார்கள். பாஷாவின் குடும்பத்தார் இஸ்ரவேல் தேசத்தில் இருபத்தாறு வருஷங்கள் ராஜ்யபாரம் பண்ணுகிறார்கள் (1இராஜா 15:1-7).

பாஷாவின் இராணுவத்தலைவர்களில் ஒருவனாகிய சிம்ரி என்பவன் பாஷாவின் குமாரனாகிய ஏலா என்பவனை வெட்டிக்கொன்றுபோடுகிறான் (1இராஜா 15:8-14). சிம்ரி ஏழுநாள் மாத்திரமே ராஜாவாயிருக்கிறான் (1இராஜா 15:15-20).

இஸ்ரவேல் ஜனங்கள் இரண்டு வகுப்பாய் பிரிகிறார்கள். பாதி ஜனங்கள் திப்னியையும், மீதி ஜனங்கள் உம்ரியையும் பின்பற்றுகிறார்கள். உம்ரியின் ராஜ்யபாரம் பலக்கிறது (1இராஜா 15:21-28).

ஆகாப் இஸ்ரவேலின்மேல் ராஜாவாகிறான் (1இராஜா 15:29-33). எரிகோ பட்டணம் மறுபடியும் கட்டப்படுகிறது (1இராஜா 15:34). இக்காலத்தில் யூதாதேசம் அமைதியாயிருக்கிறது. அங்கே சகலமும் நன்றாயிருக்கிறது.

பாஷா, ஏலா, சிம்ரி
1இராஜா 16:1-14

1இராஜா 16:1. பாஷாவுக்கும் விரோதமாகக் கர்த்தருடைய வார்த்தை ஆனானியின் குமாரனாகிய யெகூவுக்கு உண்டாயிற்று, அவர்:

1இராஜா 16:2. நான் உன்னைத் தூளிலிருந்து உயர்த்தி, உன்னை என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் தலைவனாக வைத்திருக்கையில், நீ யெரொபெயாமின் வழியிலே நடந்து, என் ஜனமாகிய இஸ்ரவேல் தங்கள் பாவங்களால் எனக்குக் கோபமுண்டாக்கும்படி அவர்களைப் பாவஞ்செய்யப்பண்ணுகிறபடியினால்,

1இராஜா 16:3. இதோ, நான் பாஷாவின் பின்னடி யாரையும் அவன் வீட்டாரின் பின்னடி யாரையும் அழித்துப்போட்டு, உன் வீட்டை நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் வீட்டைப்போல ஆக்குவேன்.

1இராஜா 16:4. பாஷாவின் சந்ததியிலே பட்டணத்தில் சாகிறவனை நாய்கள் தின்னும்; வெளியிலே சாகிறவனை ஆகாயத்துப் பறவைகள் தின்னும் என்றார்.

1இராஜா 16:5. பாஷாவின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்ததும், அவனுடைய வல்லமையும், இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

1இராஜா 16:6. பாஷா தன் பிதாக்களோடே நித்திரையடைந்து திர்சாவில் அடக்கம்பண்ணப்பட்டான்; அவன் குமாரனாகிய ஏலா அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

1இராஜா 16:7. பாஷா தன் கைகளின் செய்கையால் கர்த்தருக்குக் கோபமுண்டாக்கி, அவர் பார்வைக்குச் செய்த எல்லாப் பொல்லாப்பினிமித்தமும், அவன் யெரொபெயாமின் வீட்டாரை வெட்டிப்போட்டதினிமித்தமும், இவர்களைப்போல் ஆவான் என்று அவனுக்கும், அவன் வீட்டுக்கும் விரோதமாக ஆனானியின் குமாரனாகிய யெகூ என்னும் தீர்க்கதரிசியினால் கர்த்தருடைய வார்த்தை பின்னும் உண்டாயிற்று.

1இராஜா 16:8. யூதாவின் ராஜாவான ஆசாவின் இருபத்தாறாம் வருஷத்திலே பாஷாவின் குமாரனாகிய ஏலா இஸ்ரவேலின்மேல் திர்சாவிலே ராஜாவாகி இரண்டு வருஷம் அரசாண்டான்.

1இராஜா 16:9. இரதங்களில் பாதிபங்குக்குத் தலைவனாகிய சிம்ரி என்னும் அவன் ஊழியக்காரன் அவனுக்கு விரோதமாய்க் கட்டுப்பாடுபண்ணி, அவன் திர்சாவிலே அவ்வீடத்து அரமனை உக்கிராணக்காரனாகிய அர்சாவின் வீட்டிலே குடித்து வெறிகொண்டிருக்கையில்,

1இராஜா 16:10. சிம்ரி உள்ளே புகுந்து, யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் இருபத்தேழாம் வருஷத்தில் அவனை வெட்டிக் கொன்று போட்டு, அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

1இராஜா 16:11. அவன் ராஜாவாகி, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தபோது, அவன் பாஷாவின் வீட்டாரையெல்லாம் வெட்டிப்போட்டான்; அவன் இனத்தாரையாகிலும், அவன் சிநேகிதரையாகிலும், சுவரில் நீர் விடும் ஒரு நாயையாகிலும் அவன் உயிரோடே வைக்கவில்லை.

1இராஜா 16:12. அப்படியே பாஷாவும், அவன் குமாரனாகிய ஏலாவும், தங்கள் வீணான விக்கிரகங்களினாலே இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குக் கோபமுண்டாக்கிச் செய்ததும் இஸ்ரவேலைச் செய்யப்பண்ணினதுமான அவர்களுடைய எல்லாப் பாவங்களினிமித்தமும்,

1இராஜா 16:13. கர்த்தர் தீர்க்கதரிசியாகிய யெகூவினால் பாஷாவைக்குறித்துச் சொல்லியிருந்த அவருடைய வார்த்தையின்படியே, சிம்ரி பாஷாவின் வீட்டாரையெல்லாம் அழித்துப்போட்டான்.

1இராஜா 16:14. ஏலாவின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும் இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

பாஷா விக்கிரகங்களை ஆராதிக்கிறான். இவன் ராஜதந்திரமுள்ளவன். இஸ்ரவேல் ஜனத்தார் பாஷாவை நேசிக்கிறார்கள். இவன் இஸ்ரவேல் தேசத்திற்காக சுறுசுறுப்பாய் உழைக்கிறான். ஆனாலும் பாஷா கர்த்தரைவிட்டு விலகி விக்கிரகங்களைப் பின்பற்றிப்போகிறான். இதனால் பாஷா தன்னுடைய குடும்பத்தின்மீது அழிவை கொண்டு வருகிறான். பாஷாவின் குடும்பத்தார் அழிந்துபோவார்கள் என்று தீர்க்கதரிசனம் சொல்லப்படுகிறது.

பாஷாவுக்கும் விரோதமாகக் கர்த்தருடைய வார்த்தை ஆனானியின் குமாரனாகிய யெகூவுக்கு உண்டாயிற்று (1இராஜா 16:1). கர்த்தர் பாஷாவை எச்சரிக்கிறார். பாஷா கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு செவிகொடுத்து, தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். பாஷாவின் இருதயம் புதுப்பிக்கப்படவேண்டும். அப்போது பாஷா தனக்கு வரப்போகும் அழிவுக்கு தப்பித்துக்கொள்ளலாம்.

பாஷா தன் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லையென்றால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவன்மீது வரும். பாஷாவுக்கும் அவனுடைய குடும்பத்தாருக்கும் அழிவு வரும். பாஷாவின் பாவத்தினிமித்தமாகவே அவனுக்கு அழிவு வருகிறது. கர்த்தர் தம்முடைய நீதியை நிலைநாட்ட, தமக்கு சித்தமானவர்களை, தம்முடைய கருவிகளாகப் பயன்படுத்துவார்.

ஆனானியின் குமாரனாகிய யெகூ என்பவன் மூலமாய் பாஷாவுக்கு விரோதமான கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. ஆனானி ஒரு ஞானதிருஷ்டிக்காரன். அதாவது, அவன் ஒரு தீர்க்கதரிசி. இவன் யூதாவின் ராஜாவாகிய ஆசாவுக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தையை தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான்.

"அக்காலத்திலே ஞானதிருஷ்டிக்காரனாகிய அனானி யூதாவின் ராஜாவாகிய ஆசாவினிடத்தில் வந்து, அவனை நோக்கி: நீர் உம்முடைய தேவனாகிய கர்த்தரைச் சார்ந்துகொள்ளாமல், சீரியாவின் ராஜாவைச் சார்ந்துகொண்டபடியினால், சீரியா ராஜாவின் இராணுவம் உமது கைக்குத்தப்பிப்போயிற்று" (2நாளா 16:7).

ஆனானியின் குமாரனாகிய யெகூ ஒரு வாலிபன். கர்த்தர் யெகூவுக்கு ஆபத்தான ஊழியத்தைக் கொடுக்கிறார். இவன் இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷாவுக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தையை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லவேண்டும்.

யெகூ கர்த்தருடைய தீர்க்கதரிசியாக அநேக வருஷங்களுக்கு ஊழியம் செய்கிறான். இவன் பாஷாவுக்கு விரோதமாய் கர்த்தருடைய வார்த்தையை அறிவித்து, நாற்பது வருஷங்களுக்கு பின்பு, யோசபாத்தையும் கர்த்தருடைய நாமத்தினால் கடிந்துகொள்கிறான்.

"அப்பொழுது அனானியின் குமாரனாகிய யெகூ என்னும் ஞானதிருஷ்டிக்காரன் புறப்பட்டு, அவனைச் சந்தித்து, ராஜாவாகிய யோசபாத்தை நோக்கி: துன்மார்க்கனுக்குத் துணைநின்று, கர்த்தரைப் பகைக்கிறவர்களை நீர் சிநேகிக்கலாமா? இதினிமித்தம் கர்த்தருடைய கடுங்கோபம் உம்மேல் வர இருந்தது. ஆகிலும் நீர் விக்கிரகத்தோப்புகளை தேசத்தை விட்டகற்றி, தேவனைத் தேட உம்முடைய இருதயத்தை நேராக்கின விஷயத்தில் நன்மையான காரியங்கள் உம்மிடத்தில் காணப்பட்டது உண்டு என்றான்" (2நாளா 19:2,3)

யெகூ இஸ்ரவேல் ராஜாக்களின் வர்த்தமான புஸ்தகங்களை எழுதினவன் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். "யோசபாத்தின் ஆதியந்தமான மற்ற வர்த்தமானங்கள் இஸ்ரவேல் ராஜாக்களின் புஸ்தகத்தில் கண்டிருக்கிற ஆனானியின் குமாரனாகிய யெகூவின் வசனங்களில் எழுதியிருக்கிறது" (2நாளா 20:34).

கர்த்தர் பாஷாவுக்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறார். சாதாரணமாகயிருந்த பாஷாவை கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தார்மீது தலைவனாக வைத்திருக்கிறார். கர்த்தர் பாஷாவுக்கு செய்த நன்மைகளை யெகூ அவனுக்கு நினைவுபடுத்துகிறான். "நான் உன்னைத் தூளிலிருந்து உயர்த்தி, உன்னை என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் தலைவனாக வைத்திருக்கையில்", (1இராஜா 16:2) என்று கர்த்தர் பாஷாவுக்கு செய்த நன்மைகளை, யெகூ கர்த்தருடைய நாமத்தினால் அறிவிக்கிறான்.

பாஷா கர்த்தரைவிட்டு விலகிப்போயிருக்கிறான். கர்த்தரோ இஸ்ரவேல் தேசத்தை ராஜ்யபாரம்பண்ணும் அதிகாரத்தை ஒரு துன்மார்க்கனுடைய கைகளில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் தேசத்தின் சரித்திரத்தில், ஒரு முக்கியமான காலத்தில் கர்த்தர் பாஷாவை உயர்த்தி அவனை இஸ்ரவேல் ஜனத்தின்மேல் தலைவனாக வைத்திருக்கிறான்.

கர்த்தர் தனக்கு செய்த நன்மைகளுக்கு பாஷா நன்றியுள்ளவனாயிருக்கவில்லை. அவன் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியவில்லை. அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றவில்லை. பாஷா யெரொபெயாமின் வழியிலே நடக்கிறான். அவனைப்போல விக்கிரகங்களை ஆராதிக்கிறான்.

கர்த்தர் பாஷாவிடம், "நீ யெரொபெயாமின் வழியிலே நடந்து, என் ஜனமாகிய இஸ்ரவேல் தங்கள் பாவங்களால் எனக்குக் கோபமுண்டாக்கும்படி அவர்களைப் பாவஞ்செய்யப்பண்ணுகிறாய்" (1இராஜா 16:2) என்று சொல்லுகிறார்.

பாஷா கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்வதோடு, அவன் இஸ்ரவேல் ஜனங்களையும் பாவம் செய்யப்பண்ணுகிறான். அவன் விக்கிரகங்களை ஆராதிப்பதோடு, இஸ்ரவேல் ஜனங்களையும் விக்கிரகங்களை ஆராதிப்பதற்கு வழிநடத்துகிறான். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை ஆராதியாமல், நரகலான விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். அவரே சர்வசிருஷ்டிகர். பாஷாவோ மனுஷருடைய கைகளினால் விக்கிரகங்களை செய்து, அவற்றை தெய்வங்களாக ஆராதிக்கிறான். இதனால் கர்த்தருக்கு பாஷாவின்மீதும், விக்கிரகங்களை ஆராதிக்கிற இஸ்ரவேல் ஜனத்தார்மீதும் கோபம் உண்டாகிறது. கர்த்தருடைய ஜனமாகிய இஸ்ரவேலர் தங்கள் பாவங்களால் கர்த்தருக்கு கோபமுண்டாக்குகிறார்கள்.

கர்த்தர் யெரொபெயாமின் வீட்டை அழித்துப்போட்டார். பாஷா யெரொபெயாமின் குமாரனாகிய நாதாபுக்கு விரோதமாய் கட்டுப்பாடுபண்ணி, அவனை கிபெத்தோனிலே வெட்டிப்போட்டான். அதன்பின்பு அவன் யெரொபெயாமின் வீட்டாரையெல்லாம் வெட்டிப்போட்டான். யெரொபெயாம் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்ததினால், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவனுடைய குடும்பத்தார்மீது வந்தது.

இப்பொழுது பாஷா யெரொபெயாமின் வழியிலே நடக்கிறான். அவனும் யெரொபெயாமைப்போல, இஸ்ரவேல் ஜனத்தாரை பாவம் செய்யப்பண்ணுகிறான். ஆகையினால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு பாஷாவின்மீதும் வருகிறது.

கர்த்தர் பாஷாவுக்கு விரோதமாக தம்முடைய நியாயத்தீர்ப்பை சொல்லுகிறார். "இதோ, நான் பாஷாவின் பின்னடி யாரையும் அவன் வீட்டாரின் பின்னடி யாரையும் அழித்துப்போட்டு, உன் வீட்டை நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் வீட்டைப்போல ஆக்குவேன்" (1இராஜா 16:3) என்று பாஷாவுக்கு விரோதமான கர்த்தருடைய வார்த்தை யெகூவின் மூலமாய் உண்டாயிற்று.

யெரொபெயாமின் வீட்டாரை அழிப்பதற்கு பாஷா காரணமாயிருந்தான். இப்போது பாஷாவும் யெரொபெயாமைப்போல பாவம் செய்வதினால், அவனுக்கு வந்த அழிவைப்போல, பாஷாவுக்கும் அழிவு வரும். யெரொபெயாமின் வீட்டைப்போல பாஷாவின் வீடும் அழிந்துபோகும். "பாஷாவின் சந்ததியிலே பட்டணத்தில் சாகிறவனை நாய்கள் தின்னும்; வெளியிலே சாகிறவனை ஆகாயத்துப் பறவைகள் தின்னும்" (1இராஜா 16:4) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாஷாவின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்ததும், அவனுடைய வல்லமையும், இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது. பாஷா தன் பிதாக்களோடே நித்திரையடைந்து திர்சாவில் அடக்கம்பண்ணப்படுகிறான்; அவன் குமாரனாகிய ஏலா அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான்" (1இராஜா 16:5,6).

பாஷாவுக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தை அறிவிக்கப்பட்டாலும், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு பாஷாவின்மீது உடனே நிறைவேற்றப்படவில்லை. பாஷா இஸ்ரவேல் தேசத்தை ராஜ்யபாரம் பண்ணி சமாதானத்தோடு மரித்துப்போகிறான். இஸ்ரவேல் ஜனத்தார் அவனை திர்சாவிலே அடக்கம்பண்ணுகிறார்கள்.

கர்த்தர் பாஷாவின் சந்ததியைப்பற்றிச் சொன்னபோது, "பாஷாவின் சந்ததியிலே பட்டணத்தில் சாகிறவனை நாய்கள் தின்னும்; வெளியிலே சாகிறவனை ஆகாயத்துப் பறவைகள் தின்னும்" (1இராஜா 16:4) என்று சொன்னார். ஆனால் பாஷாவுக்கு, இங்கு சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் மரணம் உண்டாகவில்லை. பாஷாவின் பிரேதத்தை நாய்களோ அல்லது ஆகாயத்துப் பறவைகளோ தின்னவில்லை. பாஷா தன் பிதாக்களோடே நித்திரையடைகிறான். இஸ்ரவேல் ஜனத்தார் பாஷாவை திர்சாவிலே அடக்கம்பண்ணுகிறார்கள்.

யூதாவின் ராஜாவான ஆசாவின் இருபத்தாறாம் வருஷத்திலே பாஷாவின் குமாரனாகிய ஏலா இஸ்ரவேலின்மேல் திர்சாவிலே ராஜாவாகி இரண்டு வருஷம் அரசாளுகிறான் (1இராஜா 16:8).

யெரொபெயாமின் குமாரனாகிய நாதாபைப்போல, பாஷாவின் குமாரனாகிய ஏலாவும் இரண்டு வருஷம் மாத்திரமே ராஜ்யபாரம்பண்ணுகிறான். நாதாபை பாஷா வெட்டிப்போட்டான். ஏலாவை அவனுடைய படைத்தலைவர்களில் ஒருவனாகிய சிம்ரி என்பவன் வெட்டிப்போடுகிறான். கர்த்தர் பாஷாவின் வீட்டை யெரொபெயாமின் வீட்டைப்போலாக்குவதாக சொன்னார். அதன் பிரகாரம் யெரொபெயாமின் வீட்டைப்போல பாஷாவின் வீடும் ஆயிற்று.

நாதாபுக்கு கண்ணியமான மரணமுண்டாயிற்று. நாதாபும் இஸ்ரவேல் அனைத்தும் பெலிஸ்தருடைய பட்டணமான கிபெத்தோனை முற்றிக்கைப்போட்டிருக்கையில், பாஷா நாதாபை கிபெத்தோனிலே வெட்டிப்போட்டான். நாதாப் யுத்தத்தில் பங்குபெற்றபோது, பாஷா அவனைக் கொன்றுபோட்டான் (1இராஜா 15:27).

ஏலாவுக்கு யுத்தக்களத்தில் மரணமுண்டாகவில்லை. ஏலா திர்சாவிலே அவ்விடத்து அரண்மனை உக்கிராணக்காரனாகிய அர்சாவின் வீட்டிலே குடித்து வெறித்துக்கொண்டிருக்கிறான். அப்போது ஏலாவுக்கு மரணமுண்டாகிறது. குடித்து வெறிக்கும்போது உண்டாகும் மரணம் அவமானமான மரணமாகும்.

இரதங்களில் பாதிபங்குக்குத் தலைவனாகிய சிம்ரி என்னும் ஏலாவின் ஊழியக்காரன் ஏலாவுக்கு விரோதமாய்க் கட்டுப்பாடுபண்ணுகிறான். ஏலா திர்சாவிலே அவ்விடத்து அரமனை உக்கிராணக்காரனாகிய அர்சாவின் வீட்டிலே குடித்து வெறிகொண்டிருக்கிறான். அப்பொழுது சிம்ரி உள்ளே புகுந்து, யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் இருபத்தேழாம் வருஷத்தில் அவனை வெட்டிக் கொன்று போட்டு, அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான் (1இராஜா 16:9,10).

ஏலா யுத்தக்களத்திலே இருக்கவேண்டியவன். ஆனால் அவனோ சோம்பேறியாக, அர்சாவின் வீட்டிலே குடித்து வெறிகொண்டிருக்கிறான். அவன் யுத்தக்களத்திற்குப்போகாமல் ஒருவனுடைய வீட்டிலே தங்கியிருக்கிறான். மனுஷர் குடித்து வெறிகொண்டிருக்கும்போது அவர்களுக்கு மரணம் சடுதியில் வரும். அதிகமாக குடிக்கிறவர்கள் சரீர ஆரோக்கியம் கெட்டுப்போய் சீக்கிரத்தில் செத்துப்போவார்கள்.

குடிகாரருக்கு பூரண ஆயுசு இருக்காது. அவர்கள் தங்கள் ஆயுசு காலத்தின் பாதியிலேயே மரணத்தை சந்திப்பார்கள். சத்துரு குடிகாரர்களை எளிதாக மேற்கொள்வான். அப்சலோம் அம்னோனை கொன்றுபோட்டதுபோல, சிம்ரி ஏலாவை எளிதாக வெட்டிக்கொன்றுபோடுகிறான்.

ஏலாவால் தன்னை பாதுகாத்துக்கொள்ள முடியவில்லை. ஏலா குடித்து வெறிகொண்டிருந்தபோது சிம்ரி உள்ளே புகுந்து அவனை வெட்டிக்கொன்றுபோடுகிறான்.

சிம்ரி ஏலாவைக் கொன்றதோடு அமைதியாகிவிடவில்லை. சிம்ரி ராஜாவாகி, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தபோது, அவன் பாஷாவின் வீட்டாரையெல்லாம் வெட்டிப்போடுகிறான்; பாஷாவின் இனத்தாரையாகிலும், அவன் சிநேகிதரையாகிலும், சுவரில் நீர் விடும் ஒரு நாயையாகிலும் சிம்ரி உயிரோடே வைக்கவில்லை (1இராஜா 16:11).

அப்படியே பாஷாவும், அவன் குமாரனாகிய ஏலாவும், தங்கள் வீணான விக்கிரகங்களினாலே இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குக் கோபமுண்டாக்கிச் செய்ததும் இஸ்ரவேலைச் செய்யப்பண்ணினதுமான அவர்களுடைய எல்லாப் பாவங்களினிமித்தமும், கர்த்தர் தீர்க்கதரிசியாகிய யெகூவினால் பாஷாவைக்குறித்துச் சொல்லியிருந்த அவருடைய வார்த்தையின்படியே, சிம்ரி பாஷாவின் வீட்டாரையெல்லாம் அழித்துப்போடுகிறான் (1இராஜா 16:12,13).

ஏலாவின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும் இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது (1இராஜா 16:14).

சிம்ரி, உம்ரி, திப்னி
1இராஜா 16:15-28

1இராஜா 16:15. யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் இருபத்தேழாம் வருஷத்திலே சிம்ரி திர்சாவிலே ஏழுநாள் ராஜாவாயிருந்தான்; ஜனங்கள் அப்பொழுது பெலிஸ்தருக்கு இருக்கிற கிபெத்தோனுக்கு எதிராகப் பாளயமிறங்கியிருந்தார்கள்.

1இராஜா 16:16. சிம்ரி கட்டுப்பாடுபண்ணி, ராஜாவைக் கொன்றுபோட்டான் என்பதை அங்கே பாளயமிறங்கின ஜனங்கள் கேட்டபோது, இஸ்ரவேலரெல்லாம் அந்நாளிலேதானே பாளயத்திலே படைத்தலைவனாகிய உம்ரியை இஸ்ரவேல்மேல் ராஜாவாக்கினார்கள்.

1இராஜா 16:17. அப்பொழுது உம்ரியும் அவனோடே கூட இஸ்ரவேல் அனைத்தும் கிபெத்தோனிலிருந்து வந்து, திர்சாவை முற்றிக்கை போட்டார்கள்.

1இராஜா 16:18. பட்டணம் பிடிபட்டதைச் சிம்ரி கண்டபோது, அவன் ராஜாவின் வீடாகிய அரமனைக்குள் பிரவேசித்து, தான் இருக்கிற ராஜ அரமனையைத் தீக்கொளுத்தி, அதிலே செத்தான்.

1இராஜா 16:19. அவன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, யெரொபெயாமின் வழியிலும் அவன் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின அவன் பாவத்திலும் நடந்ததினால், கட்டிக்கொண்ட அவனுடைய பாவங்களினிமித்தம் அப்படி நடந்தது.

1இராஜா 16:20. சிம்ரியின் மற்ற வர்த்தமானங்களும், அவன் பண்ணின அவனுடைய கட்டுப்பாடும் இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

1இராஜா 16:21. அப்பொழுது இஸ்ரவேல் ஜனங்கள் இரண்டு வகுப்பாய்ப் பிரிந்து, பாதி ஜனங்கள் கீனாத்தின் குமாரனாகிய திப்னியை ராஜாவாக்க அவனைப் பின்பற்றினார்கள்; பாதி ஜனங்கள் உம்ரியைப் பின்பற்றினார்கள்.

1இராஜா 16:22. ஆனாலும் கீனாத்தின் குமாரனாகிய திப்னியைப் பின்பற்றின ஜனங்களைப் பார்க்கிலும், உம்ரியைப் பின்பற்றின ஜனங்கள் பலத்துப்போனார்கள்; திப்னி செத்துப்போனான்; உம்ரி அரசாண்டான்.

1இராஜா 16:23. யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் முப்பத்தோராம் வருஷத்தில், உம்ரி இஸ்ரவேல்மேல் ராஜாவாகி, பன்னிரண்டு வருஷம் ராஜ்யபாரம்பண்ணினான்; அவன் திர்சாவிலே ஆறுவருஷம் அரசாண்டு,

1இராஜா 16:24. பின்பு சேமேரின் கையிலிருந்து சமாரியா மலையை இரண்டு தாலந்து வெள்ளிக்கு வாங்கி, அந்த மலையின்மேல் ஒரு பட்டணத்தைக் கட்டி, அதற்கு மலையினுடைய எஜமானாயிருந்த சேமேருடைய பேரின்படியே சமாரியா என்னும்பேரைத் தரித்தான்.

1இராஜா 16:25. உம்ரி கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, தனக்கு முன்னிருந்த எல்லாரைப்பார்க்கிலும் கேடாய் நடந்து,

1இராஜா 16:26. நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் சகல வழியிலும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குத் தங்கள் வீணான விக்கிரகங்களாலே கோபம் மூட்டும்படியாய் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப் பண்ணின அவனுடைய பாவங்களிலும் நடந்தான்.

1இராஜா 16:27. உம்ரி செய்த அவனுடைய மற்ற வர்த்தமானங்களும், அவன் காண்பித்த வல்லமையும், இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

1இராஜா 16:28. உம்ரி தன் பிதாக்களோடே நித்திரையடைந்து, சமாரியாவிலே அடக்கம் பண்ணப்பட்டான்; அவன் குமாரனாகிய ஆகாப் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

சிம்ரி, திப்னி, உம்ரி ஆகிய மூன்றுபேரும் இஸ்ரவேலின் ராஜாசனத்திற்காக தங்களுக்குள்ளே போட்டி போடுகிறார்கள். இருதயத்தில் பெருமையும் மேட்டிமையுமுள்ளவர்கள், தங்களுக்குள்ளே சண்டைபோட்டு, தங்களைத்தாங்களே அழித்துக் கொள்வார்கள். இந்த அழிவிலே அவர்கள் மற்றவர்களையும் ஈடுபடுத்தி, அவர்களையும் அழித்துப்போடுவார்கள்.

இஸ்ரவேல் தேசத்தில் குழப்பமுண்டாயிற்று. சிம்ரி ஏலாவை வெட்டிக்கொன்றுபோடுகிறான். சிம்ரியால் நீண்டகாலத்திற்கு இஸ்ரவேல் தேசத்தின்மீது ராஜ்யபாரம்பண்ண முடியவில்லை. சிம்ரி திர்சாவிலே ஏழுநாள் மாத்திரமே ராஜாவாயிருக்கிறான். அப்போது இஸ்ரவேலர் எல்லோரும் தங்கள் படைத்தலைவனாகிய உம்ரியை இஸ்ரவேல்மேல் ராஜாவாக்குகிறார்கள்.

ஆனால், இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் உம்ரியை இஸ்ரவேலுக்கு ராஜாவாக ஏற்றுக்கொள்ளவில்லை. இஸ்ரவேல் ஜனங்கள் இரண்டு வகுப்பாய்ப் பிரிந்து, பாதி ஜனங்கள் கீனாத்தின் குமாரனாகிய திப்னியை ராஜாவாக்க அவனைப் பின்பற்றுகிறார்கள்; பாதி ஜனங்கள் உம்ரியைப் பின்பற்றுகிறார்கள். ஆனாலும் கீனாத்தின் குமாரனாகிய திப்னியைப் பின்பற்றின ஜனங்களைப் பார்க்கிலும், உம்ரியைப் பின்பற்றின ஜனங்கள் பலத்துப்போகிறார்கள்; திப்னி செத்துப்போகிறான்; உம்ரி இஸ்ரவேலை ராஜ்யபாரம்பண்ணுகிறான் (1இராஜா 16:21,22).

உம்ரி இஸ்ரவேலுக்கு ராஜாவானபோது, இஸ்ரவேல் தேசத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் முடிவுக்கு வருகிறது. ஏலாவின் படைத்தலைவர்களில் ஒருவனாகிய சிம்ரி ஏலாவுக்கு விரோதமாக கட்டுப்பாடுபண்ணி, அவனை வெட்டிக்கொன்றுபோடுகிறான். அப்பொழுது இஸ்ரவேலர் எல்லோரும் கிபெத்தோனிலே இருக்கிறார்கள். அவர்கள் பெலிஸ்தரின் பட்டணமாகிய கிபெத்தோனுக்கு விரோதமாய் முற்றிக்கைப்போட்டிருக்கிறார்கள்.

யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் இருபத்தேழாம் வருஷத்திலே சிம்ரி திர்சாவிலே ஏழுநாள் ராஜாவாயிருக்கிறான்; ஜனங்கள் அப்பொழுது பெலிஸ்தருக்கு இருக்கிற கிபெத்தோனுக்கு எதிராகப் பாளயமிறங்கியிருக்கிறார்கள் (1இராஜா 16:15).

சிம்ரி கட்டுப்பாடுபண்ணி, ராஜாவைக் கொன்றுபோட்டான் என்பதை அங்கே பாளயமிறங்கின ஜனங்கள் கேள்விப்படுகிறார்கள், அப்போது, இஸ்ரவேலரெல்லாம் அந்நாளிலேதானே பாளயத்திலே படைத்தலைவனாகிய உம்ரியை இஸ்ரவேல்மேல் ராஜாவாக்குகிறார்கள் (1இராஜா 16:16).

இஸ்ரவேலருக்கு கிபெத்தோனுக்கு எதிராக முற்றிக்கைப்போடுவதைவிட, ஏலாவை வெட்டிக்கொன்றுபோட்ட சிம்ரியை பழிவாங்குவது மிகவும் முக்கியமானதாயிருக்கிறது. அவர்கள் கிபெத்தோனுக்கு விரோதமான முற்றிக்கையை விலக்கிக்கொள்கிறார்கள். பெலிஸ்தருடைய கிபெத்தோன் பட்டணம் இஸ்ரவேலரின் முற்றிகையிலிருந்து தப்பிக்கிறது. இஸ்ரவேலர் எல்லாரும், அவர்கள் பாளயமிறங்கியிருக்கிற பாளயத்திலேயே, படைத்தலைவனாகிய உம்ரியை, இஸ்ரவேல்மேல் ராஜாவாக்குகிறார்கள்.

அப்பொழுது உம்ரியும் அவனோடே கூட இஸ்ரவேல் அனைத்தும் கிபெத்தோனிலிருந்து வந்து, திர்சாவை முற்றிக்கை போடுகிறார்கள் (1இராஜா 16:17).

சிம்ரி திர்சாவிலே ஏழுநாள் மாத்திரமே ராஜாவாயிருக்கிறான். அவன் தன்னை ராஜாவாக பிரகடனம் செய்வதற்கு முன்பாக, உம்ரியும் இஸ்ரவேலர் அனைவரும், அவனை சதிகாரனாகவும், தேசத்துரோகியாகவும் பிரகடனம் செய்கிறார்கள்.

திர்சா என்னும் பெயருக்கு அழகு அல்லது ரம்மியம் என்று பொருள். திர்சா தன்னுடைய பெயருக்கு ஏற்ற பிரகாரம் ரம்மியமான பட்டணமாயிருக்கிறது. ஆனால் இந்தப் பட்டணத்தைப் பாதுகாப்பதற்கு அலங்கங்கள் கட்டப்படவில்லை. உம்ரியும் இஸ்ரவேலர் அனைவரும் திர்சாவை முற்றிக்கைப்போடுகிறார்கள். அவர்கள் முற்றிக்கைப்போடுவதை சிம்ரி பார்க்கிறான். திர்சா பட்டணம் பிடிபட்டதை அவன் அறிந்துகொள்கிறான்.

சிம்ரிக்கு உம்ரியின் கையினால் செத்துப்போகப் பிடிக்கவில்லை. உம்ரி தன்னை எப்படி கொல்லுவான் என்பதுகூட சிம்ரிக்குத் தெரியாது. உம்ரி தன்னை சித்திரவதை பண்ணி கொன்றுபோடுவான் என்று நினைத்து சிம்ரி பயப்படுகிறான். இதனால் சிம்ரி ராஜாவின் வீடாகிய அரமனைக்குள் பிரவேசித்து, தான் இருக்கிற ராஜ அரமனையைத் தீக்கொளுத்தி, அதிலே செத்துப்போகிறான் (1இராஜா 16:18).

சிம்ரியால் அரண்மனையிலிருந்து தப்பிக்கவும் முடியவில்லை. திர்சாவை முற்றிக்கைப்போட்டிருக்கும் உம்ரிக்கும், அவனோடு கூடயிருக்கிற இஸ்ரவேல் அனைத்திற்கும் விரோதமாக சிம்ரியால் யுத்தம்பண்ணவும் முடியவில்லை. அவனால் தன்னைப் பாதுகாக்கவும் முடியவில்லை. அதே வேளையில் சிம்ரி உம்ரியிடம் சரணடையவும் விரும்பவில்லை. இந்த சூழ்நிலையில் சிம்ரி தான் இருக்கிற ராஜஅரண்மனையைத் தீக்கொளுத்தி அதிலே செத்துப்போகிறான்.

சிம்ரி கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, யெரொபெயாமின் வழியிலும் அவன் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின அவன் பாவத்திலும் நடந்ததினால், கட்டிக்கொண்ட அவனுடைய பாவங்களினிமித்தம், சிம்ரிக்கு இவ்வாறு நடக்கிறது (1இராஜா 16:19).

சிம்ரியின் மற்ற வர்த்தமானங்களும், அவன் பண்ணின அவனுடைய கட்டுப்பாடும் இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது (1இராஜா 16:20).

இஸ்ரவேலர் எல்லோரும் பெலிஸ்தரின் பட்டணமான கிபெத்தோனுக்கு விரோதமாக முற்றிக்கைப்போட்டிருக்கும்போது, அவர்கள் தங்களுடைய பாளயத்திலே, தங்களுடைய படைத்தலைவனாகிய உம்ரியை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக்கினார்கள். சிம்ரியும் உம்ரிக்கு பயந்து ராஜஅரண்மனையை தீக்கொளுத்தி, அதிலே செத்துப்போகிறான். ஆனாலும் இஸ்ரவேலர் எல்லோரும் உம்ரியை தங்களுடைய ராஜாவாக ஏற்றுக்கொள்ளவில்லை.

இஸ்ரவேல் ஜனங்கள் இரண்டு வகுப்பாய்ப் பிரிந்து, பாதி ஜனங்கள் கீனாத்தின் குமாரனாகிய திப்னியைப் பின்பற்றுகிறார்கள்; பாதி ஜனங்கள் உம்ரியைப் பின்பற்றுகிறார்கள் (1இராஜா 16:21). திப்னாவை பின்பற்றுகிறவர்கள் ஒருவேளை சிம்ரியை சேர்ந்தவர்களாகயிருக்கலாம்.

திப்னியின் ஆதரவாளர்களுக்கும், உம்ரியின் ஆதரவாளர்களுக்கும் இடையே நாலுவருஷங்களாக பிரச்சனைகளும், சண்டைகளும், போட்டிகளும் இருந்துவருகிறது. யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் இருபத்தேழாம் வருஷத்திலே, சிம்ரி திர்சாவிலே ஏழு நாள் ராஜாவாயிருந்தான் (1இராஜா 16:15). யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் முப்பத்தோராம் வருஷத்தில் உம்ரி இஸ்ரவேல்மேல் ராஜாவானான் (1இராஜா 16:23).

இஸ்ரவேலர் எல்லோரும், பாளயத்திலே உம்ரியை இஸ்ரவேல்மேல் ராஜாவாக்கினாலும், அவன் நான்கு வருஷங்களாக, திப்னியின் மூலமாகவும், அவனை பின்பற்றியவர்கள் மூலமாகவும் எதிர்ப்புகளை சந்திக்கிறான். ஆனாலும் கீனாத்தின் குமாரனாகிய திப்னியைப் பின்பற்றின ஜனங்களைப் பார்க்கிலும், உம்ரியைப் பின்பற்றின ஜனங்கள் பலத்துப்போகிறார்கள்; திப்னி செத்துப்போகிறான்; உம்ரி இஸ்ரவேலை ராஜ்யபாரம்பண்ணுகிறான் (1இராஜா 16:22).

உம்ரியின் ராஜ்யபாரத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் முப்பத்தோராம் வருஷத்தில், உம்ரி இஸ்ரவேல்மேல் ராஜாவாகி, பன்னிரண்டு வருஷம் ராஜ்யபாரம்பண்ணுகிறான்; அவன் திர்சாவிலே ஆறுவருஷம் அரசாண்டு, பின்பு சேமேரின் கையிலிருந்து சமாரியா மலையை இரண்டு தாலந்து வெள்ளிக்கு வாங்குகிறான். அவன் அந்த மலையின்மேல் ஒரு பட்டணத்தைக் கட்டி, அதற்கு மலையினுடைய எஜமானாயிருந்த சேமேருடைய பேரின்படியே சமாரியா என்னும்பேரைத் தரிக்கிறான் (1இராஜா 16:23,24).

உம்ரி சமாரியா மலையின்மீது கட்டின பட்டணம் மிகவும் பிரசித்திப்பெற்றது. பிற்காலத்தில் சமாரியா பட்டணமே இஸ்ரவேலின் ராஜாக்களுக்கு ராஜதானி பட்டணமாய் விளங்கிற்று. சமாரியா மலை ஒரு காலத்தில் சேமேருக்கு சொந்தமானது. சேமேர் என்பவன் இந்த மலைக்கு எஜமானாயிருந்தான். சேமேர் என்னும் பெயர் எபிரெய பாஷையில் சமாரியா என்று அழைக்கப்படுகிறது.

இஸ்ரவேலின் ராஜாக்கள் ஆரம்பத்தில் சீகேமிலிருந்து இஸ்ரவேல் தேசத்தை ராஜ்யபாரம்பண்ணினார்கள். அதன் பின்பு அவர்கள் திர்சாவிலிருந்து இஸ்ரவேலை ராஜ்யபாரம் செய்தார்கள். இப்போது அவர்கள் சமாரியாவிலிருந்து இஸ்ரவேலை ராஜ்யபாரம்பண்ணுகிறார்கள். யூதாவின் ராஜாக்களோ, எப்போதும்போல எருசலேமிலிருந்து, யூதாதேசத்தை ராஜ்யபாரம்பண்ணுகிறார்கள். எருசலேம் கர்த்தருடைய நகரம். யூதாவின் ராஜாக்கள் தங்கள் தலைநகரத்தை எருசலேமிலிருந்து மாற்றவில்லை.

உம்ரி கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்கிறான். அவன் தனக்கு முன்னிருந்த எல்லாரைப்பார்க்கிலும் கேடாய் நடக்கிறான். உம்ரி நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் சகல வழியிலும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குத் தங்கள் வீணான விக்கிரகங்களாலே கோபம் மூட்டும்படியாய் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப் பண்ணின அவனுடைய பாவங்களிலும் நடக்கிறான் (1இராஜா 16:25,26).

உம்ரி செய்த அவனுடைய மற்ற வர்த்தமானங்களும், அவன் காண்பித்த வல்லமையும், இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது (1இராஜா 16:27).

ஆகாப்
1இராஜா 16:29-34

1இராஜா 16:29. யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் முப்பத்தெட்டாம் வருஷத்தில் உம்ரியின் குமாரனாகிய ஆகாப் இஸ்ரவேலின்மேல் ராஜாவாகி, சமாரியாவில் இஸ்ரவேலின் மேல் இருபத்திரண்டு வருஷம் ராஜ்யபாரம்பண்ணினான்.

1இராஜா 16:30. உம்ரியின் குமாரனாகிய ஆகாப், தனக்கு முன்னிருந்த எல்லாரைப்பார்க்கிலும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

1இராஜா 16:31. நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்களில் நடப்பது அவனுக்குக் கொஞ்சக்காரியமென்று நினைத்தாற்போல் அவன் சீதோனியரின் ராஜாவாகிய ஏத்பாகாலின் குமாரத்தி யேசபேலை விவாகம் பண்ணினதுமல்லாமல், அவன் போய் பாகாலையும் சேவித்து அதைப் பணிந்துகொண்டு,

1இராஜா 16:32. தான் சமாரியாவிலே கட்டின பாகாலின் கோவிலில் பாகாலுக்குப் பலிபீடத்தை எடுப்பித்தான்.

1இராஜா 16:33. ஆகாப் ஒரு விக்கிரகத்தோப்பையும் வைத்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குக் கோபம் உண்டாக்கும்படிக்கு தனக்கு முன்னிருந்த இஸ்ரவேலின் ராஜாக்களெல்லாம் செய்ததைப்பார்க்கிலும் அதிகமாய்ச் செய்துவந்தான்.

1இராஜா 16:34. அவன் நாட்களிலே பெத்தேல் ஊரானாகிய ஈயேல் எரிகோவைக் கட்டினான்; கர்த்தர் நூனின் குமாரனாகிய யோசுவாவைக்கொண்டு சொல்லியிருந்த வார்த்தையின்படியே, அவன் அதின் அஸ்திபாரத்தைப் போடுகிறபோது, அபிராம் என்னும் தன் மூத்த குமாரனையும், அதின் வாசல்களை வைக்கிறபோது செகூப் என்னும் தன் இளையகுமாரனையும் சாகக்கொடுத்தான்.

ஆகாபின் ராஜ்யபாரம் இந்த வசனப்பகுதியில் ஆரம்பமாகிறது. இஸ்ரவேலின் ராஜாக்களில், மற்ற எல்லா ராஜாக்களையும்விட, ஆகாபைப்பற்றியே அதிகமாய் எழுதப்பட்டிருக்கிறது. இவன் உம்ரியின் குமாரன்.

உம்ரி தன் பிதாக்களோடே நித்திரையடைந்து, சமாரியாவிலே அடக்கம் பண்ணப்பட்டான்; அவன் குமாரனாகிய ஆகாப் அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான் (1இராஜா 16:28). உம்ரியின் குமாரனாகிய ஆகாப், தனக்கு முன்னிருந்த எல்லாரைப்பார்க்கிலும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்கிறான் (1இராஜா 16:30).

ஆகாப் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கும், கர்த்தருடைய இஸ்ரவேலுக்கும் விரோதமாகப் பாவம் செய்கிறான். ஆகாப் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குக் கோபம் உண்டாக்கும்படிக்கு தனக்கு முன்னிருந்த இஸ்ரவேலின் ராஜாக்களெல்லாம் செய்ததைப்பார்க்கிலும் அதிகமாய்ச் செய்துவருகிறான் (1இராஜா 16:33).

யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் முப்பத்தெட்டாம் வருஷத்தில் உம்ரியின் குமாரனாகிய ஆகாப் இஸ்ரவேலின்மேல் ராஜாவாகி, சமாரியாவில் இஸ்ரவேலின் மேல் இருபத்திரண்டு வருஷம் ராஜ்யபாரம்பண்ணுகிறான் (1இராஜா 16:29).

நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்களில் நடப்பது ஆகாபுக்கு கொஞ்சக்காரியமென்று நினைத்தாற்போல், அவன் சீதோனியரின் ராஜாவாகிய ஏத்பாகாலின் குமாரத்தி யேசபேலை விவாகம் பண்ணுகிறான் (1இராஜா 16:31).

யேசபேல் விக்கிரகங்களை ஆராதிக்கிறவள். இவள் துன்மார்க்கமான ஸ்திரீ. யேசபேல் தன்னை வேசித்தனத்திலும், பில்லிசூனியங்களிலும் ஈடுபடுத்திக்கொண்டவள்.

"யோராம் யெகூவைக் கண்டவுடனே: யெகூவே, சமாதானமா என்றான். அதற்கு யெகூ: உன் தாயாகிய யேசபேலின் வேசித்தனங்களும் அவளுடைய பில்லி சூனியங்களும், இத்தனை ஏராளமாயிருக்கையில் சமாதானம் ஏது என்றான்" *(2இராஜா 9:22)*

யேசபேல் கர்த்தருடைய ஜனத்திற்கு அதிகமாய்த் தீங்கு செய்தவள். முடிவில் அவள் தனக்குத்தானே தீங்கு வரவழைத்துக்கொள்கிறாள். "அப்பொழுது அவன்: அவளைக் கீழே தள்ளுங்கள் என்றான்; அப்படியே அவளைக் கீழே தள்ளினதினால், அவளுடைய இரத்தம் சுவரிலும் குதிரைகளிலும் தெறித்தது" *(2இராஜா 9:33).*

ஆகாப் பாகாலை சேவித்து அதைப் பணிந்துகொள்கிறான். அவன் சமாரியாவிலே பாகாலுக்கு ஒரு கோவிலைக் கட்டுகிறான். அங்கே அவன் பாகாலுக்கு ஒரு பலிபீடத்தையும் எடுப்பிக்கிறான். ஆகாப் ஒரு விக்கிரக தோப்பையும் வைக்கிறான்.

பாகால் சீதோனியரின் தெய்வம். ஆகாபின் மனைவி யேசபேல் சீதோனியரின் ராஜாவாகிய ஏத்பாகாலின் குமாரத்தி. சீதோனியர் யூப்பித்தர் என்னும் தெய்வத்தையும் வணங்குகிறார்கள். பொனிஷியர்கள் மத்தியில் யூப்பித்தர் மிகவும் பிரசித்திப்பெற்ற தெய்வமாய் விளங்கிற்று. சீதோனியர் யூப்பித்தர் தெய்வத்தையே பாகால் என்று அழைக்கிறார்கள் என்று சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள்.

ஆகாப் சமாரியாவிலே பாகாலுக்கு கோவிலைக் கட்டுகிறான். சமாரியா ஆகாபின் ராஜதானி பட்டணம். யூதாதேசத்தாருக்கு எருசலேம் ராஜதானி பட்டணமாயிருக்கிறது. எருசலேமில் கர்த்தருடைய ஆலயம் இருக்கிறது. எருசலேமைப்போல, தன்னுடைய ராஜதானி பட்டணமாகிய சமாரியாவிலும் ஒரு கோவில் இருக்கவேண்டும் என்று ஆசைப்பட்டு, ஆகாப் சமாரியாவிலே பாகாலுக்கு கோவிலைக் கட்டுகிறான்.

ஆகாப் பாகாலின் கோவிலிலே ஒரு பலிபீடத்தையும் கட்டுகிறான். அவன் பாகாலை சேவித்து, அதைப் பணிந்துகொண்டு, அதற்கு பலிசெலுத்துகிறான். பாகாலின் கோவிலைச் சுற்றிலும் ஒரு விக்கிரகத்தோப்பையும் வைக்கிறான்.

ஆகாபின் ராஜ்யத்திலுள்ள ஈயேல் என்பவன், ஆகாபைப் பின்பற்றி எரிகோவை கட்டுவதற்கு துணிகிறான். எரிகோவை திரும்பக் கட்டுகிறவர்கள்மீது சாபம் வரும் என்று யோசுவாவின் காலத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஈயேல் தன் பிள்ளைகளுக்காக எரிகோவைக் கட்டுகிறான். இவன் பெத்தேல் ஊரைச் சேர்ந்தவன்.

ஈயேல் எரிகோவின் அஸ்திபாரத்தைப் போடுகிறபோது, அபிராம் என்னும் தன் மூத்த குமாரனையும், அதின் வாசல்களை வைக்கிறபோது செகூப் என்னும் தன் இளையகுமாரனையும் சாகக்கொடுக்கிறான் (1இராஜா 16:34). கர்த்தர் நூனின் குமாரனாகிய யோசுவாவைக்கொண்டு சொல்லியிருந்த வார்த்தையின்படியே, இந்த சம்பவம் நடைபெறுகிறது. கர்த்தருக்கு விரோதமாக தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தியவர்கள் யாரும் செழித்ததில்லை. ஈயேல் எரிகோவை கட்டி முடித்தபோது, அவன் தன்னுடைய குமாரர்கள் எல்லோரையும் சாகக்கொடுத்திருப்பான் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

17 அதிகாரம்

இஸ்ரவேல் தேசத்தின் ராஜா துன்மார்க்கனாயிருக்கிறான். ஆனாலும் இந்தக் காலத்தில் கர்த்தர் இஸ்ரவேல் தேசத்திற்கு நல்ல தீர்க்கதரிசியை அனுப்பி இஸ்ரவேலை ஆசீர்வதிக்கிறார். இஸ்ரவேல் தேசத்தின் ராஜாவாகிய ஆகாபைப்போல துணிகரமாகப் பாவம் செய்த ராஜா வேறு ஒருவருமில்லை. தீர்க்கதரிசியாகிய எலியாவைப்போல, ராஜாக்களைக் கடிந்துகொண்ட தீர்க்கதரிசியும் வேறு ஒருவருமில்லை.

எலியாவின் சரித்திரம் இந்த அதிகாரத்தில் ஆரம்பமாகிறது. கர்த்தர் எலியா மூலமாக ஏராளமான அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பிக்கிறார்.

ஏனோக்கு மரணத்தைப் பாராமல் வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். ஏனோக்கைப்போலவே தீர்க்கதரிசியாகிய எலியாவும் மரணத்தைப் பாராமல் வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறார்.

இயேசுகிறிஸ்து மறுரூபமலையிலே மறுரூபமாகும்போது அவரோடுகூட மோசேயும் எலியாவும் இருக்கிறார்கள். மோசேக்கு கிடைத்த சிலாக்கியம் எலியாவுக்கும் கிடைக்கிறது.

தீர்க்கதரிசிகள் பொதுவாக கர்த்தருடைய வார்த்தையை தீர்க்கதரிசனமாகச் சொல்லி, அதை ஆகமங்களில் எழுதுவார்கள். எலியாவோ தீர்க்கதரிசனம் சொல்லி, கிரியை செய்கிறார். அவர் தன்னுடைய தீர்க்கதரிசன வார்த்தைகளை எழுதவில்லை.

தீர்க்கதரிசிகளின் எழுதப்பட்ட ஆகமங்களைவிட, எலியாவின் கிரியைகள் அதிக வல்லமையுள்ளதாயிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்திலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று எலியா கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறார். (1இராஜா 17:1).

இஸ்ரவேல் தேசத்திலே பஞ்சமுண்டாகும்போது, கர்த்தர் எலியாவை அற்புதமாகப் போஷிக்கிறார். எலியா கேரீத் ஆற்றண்டையில் இருக்கிறார். கர்த்தர் எலியாவைப் போஷிக்க காகங்களுக்கு கட்டளையிடுகிறார் (1இராஜா 17:2-7).

இதன்பின்பு எலியா சாறிபாத் ஊருக்குப்போய் அங்கே தங்கியிருக்கிறார். அந்த ஊரிலுள்ள ஒரு விதவை, எலியா தீர்க்கதரிசியை கர்த்தருடைய நாமத்தினால் ஏற்றுக்கொள்கிறாள். அவளுடைய பானையிலே மா செலவழிந்துபோகவில்லை. அவளுடைய கலசத்தின் எண்ணெய் குறைந்துபோகவில்லை (1இராஜா 17:8-16).

சாறிபாத் ஊர் விதவையின் மகனை எலியா உயிரோடு எழுப்புகிறார் (1இராஜா 17:17-24). எலியாவின் சரித்திரம் நியாயத்தீர்ப்புகளோடும், அற்புதங்களோடும் ஆரம்பமாகிறது. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைவிட்டு விலகிப்போயிருக்கிறார்கள். அவர்கள் விக்கிரகாராதனையில் மூழ்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட காலத்தில், இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தம்முடைய மகிமையை வெளிப்படுத்துவதற்கு கர்த்தர் எலியாவை அவர்கள் மத்தியில் அனுப்புகிறார்.

எலியா
1இராஜா 17:1,2

1இராஜா 17:1. கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியனாகிய எலியா ஆகாபை நோக்கி: என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்.

1இராஜா 17:2. பின்பு கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாயிற்று, அவர்:

எலியாவின் சரித்திரம் முன்னுரை எதுவும் சொல்லப்படாமல் ஆரம்பமாகிறது. மெல்கிசேதேக்கைப்போல எலியாவின் சரித்திரமும் தெரியவில்லை. அவருடைய தகப்பனார் யார் என்பதும், தாயார் யார் என்பதும், அவருடைய சந்தியாரும் முன்னோரும் யார் என்பதும் வேதவாக்கியங்களில் சொல்லப்படவில்லை.

யாக்கோபு எலியாவைப்பற்றிச் சொல்லும்போது, "எலியா என்பவன் நம்மைப்போல பாடுள்ள மனுஷன்" என்று சொல்லுகிறார்.

"எலியா என்பவன் நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை. மறுபடியும் ஜெபம்பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது" (யாக் 5:17,18).

எலியா என்னும் பெயருக்கு, "என் தேவன் கர்த்தராயிருக்கிறார்" என்று பொருள். கர்த்தரே எலியாவை அனுப்பினவர். கர்த்தரே எலியாவுக்கு சொந்தக்காரர். கர்த்தர் எலியாவை இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே தம்முடைய சித்தத்தை நிறைவேற்ற பயன்படுத்துகிறார். எலியா இஸ்ரவேல் ஜனத்தாரை விக்கிரகாராதனையிலிருந்து திருப்பி, மறுபடியும் கர்த்தரை ஆராதிப்பதற்கு அழைத்து வருவார். எலியா ஒருவராயிருந்து பெரிய காரியங்களை செய்வார்.

எலியாாவைப்பற்றிச் சொல்லும்போது, "கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியனாகிய எலியா" என்று சொல்லப்பட்டிருக்கிறது. எலியா கீலேயாத் தேசத்தைச் சேர்ந்தவர். இது யோர்தானுக்கு அப்புறத்திலே இருக்கிறது. கீலேயாத் தேசத்திலே காத் கோத்திரத்தாரும், மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரும் வாசம்பண்ணுகிறார்கள். ஆகையினால் எலியா காத் கோத்திரத்தையோ அல்லது மனாசேயின் பாதிக்கோத்திரத்தையோ சேர்ந்தவராயிருக்கவேண்டும்.

நாம் ஒரு மனுஷனைப்பற்றி விசாரிக்கும்போது, அவர் எங்கேயிருந்து வந்திருக்கிறார் என்பது நமக்கு முக்கியமல்ல. அவர் எப்படிப்பட்டவர் என்பதும், அவர் என்ன செய்யப்போகிறார் என்பதும் நமக்கு முக்கியம். நல்ல காரியம் எங்கே இருந்து வந்தாலும் அதை நாம் ஏற்றுக்கொள்ளலாம். நாசரேத்திலிருந்து நன்மையான எந்தக் காரியமும் உண்டாகாது என்று யூதர்கள் சொல்லுவார்கள். நன்மையான காரியம் நாசரேத்திலிருந்து வந்தாலும், அதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

எலியா கீலேயாத்திலுள்ள திஸ்பி ஊரைச்சேர்ந்தவர். ஆகையினால் இவர் "திஸ்பியனாகிய எலியா" என்று அழைக்கப்படுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விட்டார்கள். அவர்கள் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். இஸ்ரவேலர் கர்த்தருக்கு விரோதமாக துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தாருடைய பாவங்கள் நிமித்தமாய் அவர்கள்மீது தண்டனை வருகிறது. இஸ்ரவேல் தேசத்திலே பஞ்சமுண்டாகும் என்று முன்னறிவிக்கப்படுகிறது.

கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்கு உண்டாயிற்று. தீர்க்கதரிசியாகிய எலியா, இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபை நோக்கி, "என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (1இராஜா 17:1) என்று கர்த்தருடைய வார்த்தையை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்.

எலியா இஸ்ரவேலின் ராஜாவுக்கு கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறார். ஆகாப் இஸ்ரவேலின் சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறான். தேசத்தின்மீது அவனுக்கு ஆளுகையும் அதிகாரமும் இருக்கிறது. இஸ்ரவேல் தேசத்தின்மீது வரப்போகும் நியாயத்தீர்ப்பை நிறுத்தவேண்டுமென்றால், இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். இஸ்ரவேல் தேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஏற்படவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் மனந்திரும்பவேண்டுமென்றால், முதலாவதாக அவர்களுடைய ராஜாவாகிய ஆகாப் மனந்திரும்பவேண்டும். அவனுடைய இருதயம் புதுப்பிக்கப்படவேண்டும். அப்போதுதான் ராஜா கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பிப்பான். அவன் இஸ்ரவேல் தேசத்தையும் கர்த்தருடைய கோபத்திற்கு தப்பிக்கப்பண்ணுவான்.

எலியா ஆகாபினிடத்தில் கர்த்தருடைய வார்த்தையை சொல்லும்போது "இந்த வருஷங்களிலே மழையும் பனியும் பெய்யாதிருக்கும்" என்று சொல்லுகிறார். இஸ்ரவேல் தேசத்தின்மீது மழை பெய்யக்கூடாது என்று எலியா கருத்தாய் ஜெபம்பண்ணுகிறார். தேசத்தில் மழையோ பனியோ பெய்யவில்லை.

இஸ்ரவேல் தேசத்தில் மழை பெய்யக்கூடாது என்று எலியா ஜெபம்பண்ணியவுடன், வானத்திலுள்ள மேகங்கள் கலைந்துபோகிறது. மேகத்தில் நீர் ஆதாரம் வறண்டுபோகிறது. எலியா மறுபடியும் இஸ்ரவேல் தேசத்திலே மழை பெய்யவேண்டுமென்று ஜெபம்பண்ணும் வரையிலும், அந்த தேசத்தின்மீது மழை பெய்யாது. கர்த்தர் எலியாவின் விண்ணப்பத்தைக்கேட்டு வானத்தை அடைத்துவிடுகிறார். வானம் மழை பெய்யாத வெண்கலம் போலாகிவிடுகிறது.

ஆகாப் இஸ்ரவேல் தேசத்தின் ராஜாவாயிருந்தாலும் அவனுக்கு கர்த்தரைப்பற்றி தெரியவில்லை. அவனுக்கு கர்த்தரிடத்தில் பயமோ, பக்தியோ இல்லை. கர்த்தர், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தராயிருக்கிறார் என்பதை ஆகாப் அறிந்துகொள்ளவேண்டும். அவன் கர்த்தரை விட்டு விலகிப்போயிருக்கிறான். விக்கிரகங்களைப் பின்பற்றுகிறான்.

கர்த்தர் ஜீவனுள்ளவர் என்பதை ஆகாப் அறிந்துகொள்ளவேண்டும். அவன் விக்கிரகங்களை ஆராதிக்கிறான். அவற்றிற்கு ஜீவனில்லை. விக்கிரகங்களுக்கு செவிகள் இருந்தாலும், அவை கேட்காது. அவற்றிற்கு கண்கள் இருந்தாலும் அவை பார்க்காது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் ஜீவனுள்ளவர். அவர் நம்முடைய விண்ணப்பங்களைக் கேட்கிறவர். அவர் நம்மை கண்ணோக்கிப் பார்க்கிறவர்.

எலியா கர்த்தருடைய தீர்க்கதரிசி என்பதை ஆகாப் அறிந்துகொள்ள வேண்டும். கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்கு உண்டாயிற்று என்பதையும், தம்முடைய வார்த்தையை சொல்லுவதற்கு கர்த்தரே எலியாவை அனுப்பியிருக்கிறார் என்பதையும் ஆகாப் புரிந்துகொள்ளவேண்டும். எலியா கர்த்தருடைய ஊழியக்காரர்.

இஸ்ரவேல் தேசத்திலே இப்போது சமாதானமும் செழிப்பும் இருக்கிறது. ஆனால் கர்த்தர் அவர்கள்மீது பிரியமாயில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் அவர்களைத் தண்டிக்கிறார். இஸ்ரவேல் தேசத்தில் பனியும் மழையும் பெய்யாதபடிக்கு, அங்கே பஞ்சத்தை வருவிக்கிறார்.

இஸ்ரவேல் தேசத்தில் ஏராளமான விக்கிரகங்கள் இருக்கிறது. தோப்புகளும் மேடைகளும் இருக்கிறது. தோப்பு விக்கிரகங்களுக்கு ஜீவனுமில்லை. வல்லமையுமில்லை. கர்த்தர் பனியும் மழையும் பெய்யாதபடிக்கு வானத்தை அடைத்துவிடுகிறார். கர்த்தர் அடைத்த வானத்தை விக்கிரகங்களால் திறக்க முடியவில்லை. இஸ்ரவேல் தேசத்திலே மழையையும், பனியையும் பெய்யப்பண்ணுவதற்கு விக்கிரகங்களுக்கு வல்லமையில்லை.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் மாத்திரமே ஜீவனுள்ளவர் என்பதையும், விக்கிரகங்கள் ஜீவனும் வல்லமையும் இல்லாதவை என்பதையும் இஸ்ரவேல் ஜனத்தார் புரிந்துகொள்ளவேண்டும். அவர்கள் ஜீவனுள்ள தேவனை விட்டு விட்டு, ஜீவனில்லாத விக்கிரகங்களை பின்பற்றுகிறார்கள். இது அவர்களுடைய மதியீனம். விக்கிரகங்களால் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு நன்மையும் செய்யமுடியாது, தீமையும் செய்யமுடியாது.

எலியா ஆகாபை நோக்கி, "என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களில் பனியும் மழையும் பெய்யாதிருக்கும்" என்று சொல்லுகிறார். கர்த்தருக்கு வானத்தின்மேலும் பூமியின்மேலும் அதிகாரமிருப்பதுபோல, கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எலியாவுக்கும் வானத்தின்மீது அதிகாரமுள்ளது. எலியாவின் வாக்கின்படி இஸ்ரவேல் தேசத்தில் மழை பெய்யாதிருக்கும். அவருடைய வாக்கின்படியே இந்த தேசத்தில் மறுபடியும் மழை பெய்யும். கர்த்தர் தம்முடைய வார்த்தையை அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் உறுதிபண்ணுகிறார்.

காகங்கள்
1இராஜா 17:3-7

1இராஜா 17:3. நீ இவ்விடத்தை விட்டுக் கீழ்த்திசையை நோக்கிப் போய், யோர்தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையில் ஒளித்துக்கொண்டிரு.

1இராஜா 17:4. அந்த ஆற்றின் தண்ணீரைக் குடிப்பாய்; அங்கே உன்னைப் போஷிக்க, காகங்களுக்குக் கட்டளையிடுவேன் என்றார்.

1இராஜா 17:5. அவன் போய், கர்த்தருடைய வார்த்தையின்படியே யோர்தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையிலே தங்கியிருந்தான்.

1இராஜா 17:6. காகங்கள் அவனுக்கு விடியற்காலத்தில் அப்பமும் இறைச்சியும், சாயங்காலத்தில் அப்பமும் இறைச்சியும் கொண்டுவந்தது; தாகத்திற்கு அந்த ஆற்றின் தண்ணீரைக் குடித்தான்.

1இராஜா 17:7. தேசத்தில் மழை பெய்யாதபடியினால், சிலநாளுக்குப்பின்பு அந்த ஆறு வற்றிப்போயிற்று.

கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்கும் உண்டாயிற்று. இஸ்ரவேல் தேசத்தில் பனியும் மழையும் பெய்யவில்லை. அங்கே பஞ்சமுண்டாயிற்று. இஸ்ரவேல் தேசத்தின் ராஜாவாகிய ஆகாபும், இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் பஞ்சத்தின் கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். தேசத்திலே பஞ்சம் வந்திருக்கிற இந்தக் காலத்தில், கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசியாகிய எலியாவுக்கு விசேஷித்த பராமரிப்புக்களைக் கொடுக்கிறார்.

கர்த்தர் எலியாவை நோக்கி, "நீ இவ்விடத்தை விட்டுக் கீழ்த்திசையை நோக்கிப் போய், யோர்தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையில் ஒளித்துக்கொண்டிரு. அந்த ஆற்றின் தண்ணீரைக் குடிப்பாய்; அங்கே உன்னைப் போஷிக்க, காகங்களுக்குக் கட்டளையிடுவேன்" (1இராஜா 17:3,4) என்று சொல்லுகிறார்.

எலியாவும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறார். எலியா கர்த்தருடைய வார்த்தையின்படியே போய், யோர்தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையிலே தங்கியிருக்கிறார் (1இராஜா 17:5). கேரீத் ஆற்றண்டையிலே அதிகமாய் வளர்ந்திருக்கிற நாணல்களுக்கு மத்தியிலே, எலியா தன்னை ஒளித்துக்கொள்கிறார். இங்கு ஆட்களுடைய நடமாட்டம் அதிகமாயில்லை.

கர்த்தருடைய வழிநடத்துதல், சில சமயங்களில் நம்மை தனிமையான இடத்திற்கு அழைத்துக்கொண்டு போகலாம். அங்கே நமக்கு ஒரு வேலையும் இல்லாமல் சும்மாயிருக்கவேண்டியது வரலாம். நாம் போகும் இடமும், அங்கே உள்ள சூழ்நிலையும் எப்படிப்பட்டதாகயிருந்தாலும், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதே நமக்கு ஆசீர்வாதம்.

கர்த்தர் நம்மை வழிநடத்தும் இடத்திலே, நமக்கு பிரசங்க வாய்ப்புக்கள் கிடைக்காமல் போகலாம். நம்முடைய தாலந்துகளை பயன்படுத்த முடியாமல் போகலாம். நம்மால் கர்த்தருக்காக ஊழியம் செய்ய முடியாவிட்டாலும், நாம் கர்த்தருடைய சமுகத்திலே பொறுமையோடு அமைதியாய்க் காத்திருக்கவேண்டும். கர்த்தருடைய சமுகத்தில் அமைதியாய் அமர்ந்து, ஜெபத்தில் தரித்திருக்கவேண்டும்.

கர்த்தர் எலியாவை அற்புதமாய்ப் போஷிக்கிறார். எலியாவைப் போஷிப்பதற்கு கர்த்தர் காகங்களுக்கு கட்டளையிடுகிறார். காகங்கள் எலியாவுக்கு விடியற்காலத்தில் அப்பமும் இறைச்சியும், சாயங்காலத்தில் அப்பமும் இறைச்சியும் கொண்டுவருகிறது; எலியா தன்னுடைய தாகத்திற்கு அந்த ஆற்றின் தண்ணீரைக் குடிக்கிறார் (1இராஜா 17:6).

வெளிப்படுத்தின விசேஷத்தில் ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போன சம்பவத்தைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தர் ஸ்திரீயானவளை ஒரு காலமும், காலங்களும் அரைக்காலமும் போஷிக்கிறார். எலியாவும் கேரீத் ஆற்றண்டையிலே மூன்றரை வருஷங்களாக ஒளித்துக்கொண்டிருக்கிறார்.

கர்த்தர் ஸ்திரீயானவளை வனாந்தரத்தில் மூன்றரை வருஷம் போஷித்ததுபோல, எலியாவை கேரீத் ஆற்றண்டையிலே மூன்றரை வருஷம் போஷிக்கிறார்.

"ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள்; அங்கே ஆயிரத்திருநூற்றறுபதுநாளளவும் அவளைப் போஷிப்பதற்காக தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது" (வெளி 12:6)

"ஸ்திரீயானவள் அந்தப் பாம்பின் முகத்திற்கு விலகி, ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமுமாகப் போஷிக்கப்படத்தக்கதாய் வனாந்தரத்திலுள்ள தன் இடத்திற்குப் பறந்துபோகும்படி பெருங்கழுகின் இரண்டு சிறகுகள் அவளுக்குக் கொடுக்கப்பட்டது" (வெளி 12:14).

கர்த்தர் எலியாவை நோக்கி, "நீ அந்த ஆற்றின் தண்ணீரைக் குடிப்பாய்; அங்கே உன்னைப் போஷிக்க, காகங்களுக்குக் கட்டளையிடுவேன்" (1இராஜா 17:4) என்று சொன்னார். கர்த்தர் சொன்ன பிரகாரம், காகங்கள் அவனுக்கு விடியற்காலத்தில் அப்பமும் இறைச்சியும், சாயங்காலத்தில் அப்பமும் இறைச்சியும் கொண்டுவருகிறது; எலியா தன்னுடைய தாகத்திற்கு அந்த ஆற்றின் தண்ணீரைக் குடிக்கிறார் (1இராஜா 17:6).

கர்த்தர் எலியாவை தாராளமாய்ப் போஷிக்கிறார். கர்த்தருடைய பராமரிப்பு எலியாவுக்கு தாராளமாயும், தொடர்ச்சியாயும் கிடைக்கிறது. ஒவ்வொருநாளும் இரண்டு வேளையும் எலியாவுக்கு போஜனம் கிடைக்கிறது. காகங்கள் விடியற்காலத்திலும், சாயங்காலத்திலும் அப்பத்தையும் இறைச்சியையும் கொண்டு வருகிறது.

கர்த்தர் தம்முடைய ஊழியக்காரரை போஷிக்கிறார். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் தங்களுடைய போஜனங்களைக் குறித்து கவலைப்படக்கூடாது. உலகப்பிரகாரமான ஜனங்கள் நம்மைவிட செல்வந்தராயிருக்கலாம். நமக்கு கிடைக்கும் போஜனங்களைவிட, அவர்களுக்கு விதவிதமான போஜனங்கள் கிடைக்கலாம்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மற்றவர்களுடைய வசதிகளையும், போஜனங்களையும் பார்த்து பொறாமைப்படக்கூடாது. ஊழியக்காரர்கள் தங்களுக்குள்ளே ஏமாற்றமடையவும் கூடாது. கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள். கர்த்தர் தம்முடைய ஊழியக்காரரை ஒருபோதும் கைவிடமாட்டார். நாம் வேண்டிக்கொள்வதற்கும், விரும்புவதற்கும் அதிகமாகவே கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார். கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் பாத்திரவான்களாயில்லாவிட்டாலும், கர்த்தர் நம்மை தாராளமாய் ஆசீர்வதிப்பார்.

எலியா கேரீத் ஆற்றண்டையில் ஒளித்துக்கொண்டிருக்கிறார். எலியாவைப் போஷிக்க கர்த்தர் காகங்களுக்கு கட்டளையிடுகிறார். எலியாவின் காலத்தில், இஸ்ரவேல் தேசத்திலே, ஒபதியா என்பவர் ஆகாபின் அரண்மனையில் பணிபுரிகிறார். யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளை சங்கரித்தபோது, ஒபதியா நூறு தீர்க்கதரிசிகளை சேர்த்து அவர்களை கெபிகளிலே ஒளித்து வைத்து, அவர்களுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுத்து அவர்களை பராமரித்து வந்தார் (1இராஜா 18:4).

நூறு தீர்க்கதரிசிகளை போஷித்து பராமரித்த ஒபதியா, எலியாவையும் சந்தோஷமாய் போஷித்து பராமரிப்பார். ஆனால் எலியாவோ கேரீத் ஆற்றண்டையில் தனிமையிலிருக்கவேண்டும் என்பதே கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. எலியா யோவான்ஸ்நானனைப்போல விசேஷித்தவராயிருக்கிறார். யோவான்ஸ்நானனுக்கு வெட்டுக்கிளிகளும், காட்டுத்தேனும் போஜனமாயிருக்கிறது. எலியாவுக்கு காகங்கள் கொண்டு வரும் அப்பமும் இறைச்சியும், கேரீத் ஆற்றின் தண்ணீரும் போஜனமாயிருக்கிறது.

இந்தக் காகங்கள் எலியாவுக்கு எங்கே இருந்து போஜனத்தைக் கொண்டு வந்தது என்பது தெரியவில்லை. இந்த அப்பமும் இறைச்சியும் எங்கே சமைக்கப்பட்டது என்பதும் தெரியவில்லை. அவை கண்ணியமான முறையிலே வந்ததா என்பதும் தெரியவில்லை.

எலியாவிடம் யாராவது வந்து, இந்த அப்பமும் இறைச்சியும் உனக்கு எப்படி கிடைத்தது என்று கேட்டால், எலியா யாக்கோபைப்போல, "தேவனாகிய கர்த்தர் எனக்கு நேரிடப்பண்ணினார்" என்று சொல்லுவார்.

"அப்பொழுது ஈசாக்குத் தன் குமாரனை நோக்கி: என் மகனே, இது உனக்கு இத்தனை சீக்கிரமாய் எப்படி அகப்பட்டது என்றான். அவன்: உம்முடைய தேவனாகிய கர்த்தர் எனக்கு நேரிடப் பண்ணினார் என்றான்" (ஆதி 27:20).

காகங்களும் இரைதேடி பிழைக்கும். எலியாவிடம் அப்பமும் இறைச்சியும் இருந்தால், அதை காகங்கள் கொத்திக்கொண்டு போய்விடும்.

"தகப்பனைப் பரியாசம்பண்ணி, தாயின் கட்டளையை அசட்டைபண்ணுகிற கண்ணை நதியின் காகங்கள் பிடுங்கும், கழுகின் குஞ்சுகள் தின்னும்" (நீதி 30:17).

காகம் நம்மைப் போஷிக்கும் என்று நாம் எதிர்பார்க்கமாட்டோம். ஆனால் சிம்சோன் விடுகதை சொன்ன பிரகாரமாக "பட்சிக்கிறவனிடத்திலிருந்து பட்சணம் வருகிறது". மனுஷரிடத்திலிருந்து இரையைப் பிடுங்கி தின்னும் காகம், எலியாவுக்கு விடியற்காலத்திலும், சாயங்காலத்திலும் அப்பமும் இறைச்சியும் கொண்டு வந்து கொடுக்கிறது.

மோசேயின் நியாயப்பிரமாணத்தில் காகங்கள் அசுத்த மிருகங்களின் அட்டவணையில் சேர்க்கப்பட்டிருக்கிறது. காகம் அருவருக்கப்படவேண்டிய பறவை.

"பறவைகளில் நீங்கள் புசியாமல் அருவருக்கவேண்டியவைகள் யாதெனில்: கழுகும், கருடனும், கடலுராஞ்சியும், பருந்தும், சகலவித வல்லூறும், சகலவித காகங்களும், தீக்குருவியும், கூகையும், செம்புகமும், சகலவித டேகையும், ஆந்தையும், நீர்க்காகமும், கோட்டானும், நாரையும், கூழக்கடாவும், குருகும், கொக்கும், சகலவித ராஜாளியும், புழுக்கொத்தியும், வௌவாலும் ஆகிய இவைகளே" (லேவி 11:13-19).

எலியா கேரீத் ஆற்றண்டையில் தங்கியிருக்கும்போது, காகங்கள் அவருக்கு விடியற்காலத்திலும் சாயங்காலத்திலும் அப்பமும் இறைச்சியும் கொண்டு வருகிறது. எலியாவோ அந்த இறைச்சியையும் அப்பத்தையும் அசுத்தமானதாய் நினைக்கவில்லை. அவர் அதை அருவருக்கவில்லை. எலியா கர்த்தருக்கு ஸ்தோத்திரங்களை செலுத்தி, காகங்கள் தனக்கு கொண்டு வந்த அப்பத்தையும் இறைச்சியையும் புசிக்கிறார். அவர் தன்னுடைய மனச்சாட்சியினிமித்தம் ஒரு கேள்வியும் கேட்கவில்லை.

காகங்கள் பூச்சிகளையும், இறைச்சிகளையும் புசிக்கும். காகங்கள் எதை வேண்டுமானாலும் புசிக்கும். ஆனாலும் அவை எலியா தீர்க்கதரிசிக்கு மனுஷர் புசிக்கும் போஜனத்தைக் கொண்டு வருகிறது.

காகம் சிறிய பறவை. காகத்தால் பெரிய இறைச்சியை கொண்டு வந்து கொடுக்க முடியாது. காகங்கள் எலியாவுக்கு கொடுக்கும் அப்பமும் இறைச்சியும் கொஞ்சமாயிருந்தாலும், எலியா அந்தப் போஜனத்திற்காக கர்த்தரைத் துதிக்கிறார். காகங்கள் எலியாவுக்கு விருந்து வைக்கவில்லை. ஆனாலும் எலியா தனக்குக் கிடைத்த போஜனத்தில் திருப்தியாயிருக்கிறார்.

காகங்கள் இரை தேடப்போகும்போது, தன்னுடைய குஞ்சுகளுக்கும் இரையைக் கொண்டு வரும். ஆனால் எலியாவுக்கு போஜனம் கொண்டு வரும் காகங்களோ, தன்னுடைய குஞ்சுகளுக்கு போஜனம் கொண்டு போகாமல், எலியாவுக்கு போஜனம் கொண்டு வருகிறது. கர்த்தருடைய சித்தத்திற்கும், விருப்பத்திற்கும் காகங்கள் கீழ்ப்படிகிறது.

கர்த்தருடைய விசேஷித்த பராமரிப்பினாலேயே காகங்களுக்கும் ஆகாரம் கிடைக்கிறது. இந்தக் காகங்களோ, கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம், எலியாவுக்கு ஆகாரம் கொண்டு வந்து கொடுக்கிறது.

"காக்கைக்குஞ்சுகள் தேவனை நோக்கிக் கூப்பிட்டு, ஆகாரமில்லாமல் பறந்து அலைகிறபோது, அவைகளுக்கு இரையைச் சவதரித்துக் கொடுக்கிறவர் யார்? (யோபு 38:41).

"அவர் மிருகஜீவன்களுக்கும் கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரங்கொடுக்கிறார்" (சங் 147:9).

எலியா கேரீத் ஆற்றண்டையில் ஒளித்திருந்த காலம் வரையிலும், காகங்கள் அவருக்கு அப்பத்தையும் இறைச்சியையும் கொண்டு வருகிறது. எலியாவும் அந்த அப்பத்தையும் இறைச்சியையும் ஸ்தோத்திரத்தோடே புசிக்கிறார். தாகத்திற்கு கேரீத் ஆற்றின் தண்ணீரை அவர் குடிக்கிறார்.

கேரீத் ஆற்றின் தண்ணீர் எலியாவுக்கு இயற்கையில் கிடைத்திருக்கிறது. ஆனால் இயற்கைகூட எலியாவுக்கு உதவிசெய்யவில்லை. தேசத்தில் மழை பெய்யாதபடியினால், சிலநாளுக்குப்பின்பு அந்த ஆறு வற்றிப்போயிற்று (1இராஜா 17:7). கேரீத் ஆறு எலியாவைக் கைவிட்டு விடுகிறது. கர்த்தரோ தம்முடைய பிள்ளைகளை ஒருபோதும் கைவிடமாட்டார்.

இயற்கையின் வல்லமைகள் ஒரு குறிப்பிட்ட வரையறைக்கு உட்பட்டிருக்கிறது. இயற்கையின்மீது தேவன் காண்பிக்கும் தெய்வீக வல்லமையோ அளவில்லாதது. கர்த்தருடைய வல்லமைக்கு எந்த வரையறையுமில்லை. கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர்.

சாறிபாத் ஊர் விதவை
1இராஜா 17:8-16

1இராஜா 17:8. அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாயிற்று அவர்:

1இராஜா 17:9. நீ எழுந்து, சீதோனுக்கடுத்த சாறிபாத் ஊருக்குப் போய், அங்கே தங்கியிரு; உன்னைப் பராமரிக்கும்படி அங்கே இருக்கிற ஒரு விதவைக்குக் கட்டளையிட்டேன் என்றார்.

1இராஜா 17:10. அப்படியே அவன் எழுந்து, சாறிபாத்துக்குப் போனான்; அந்தப் பட்டணத்தின் ஒலி முகவாசலுக்கு அவன் வந்தபோது, அங்கே ஒரு விதவை விறகு பொறுக்கிக்கொண்டிருந்தாள்; அவன் அவளைப் பார்த்துக் கூப்பிட்டு, நான் குடிக்கிறதற்குக் கொஞ்சம் தண்ணீர் ஒரு பாத்திரத்தில் எனக்குக் கொண்டுவா என்றான்.

1இராஜா 17:11. கொண்டுவர அவள் போகிறபோது அவன் அவளை நோக்கிக் கூப்பிட்டு, கொஞ்சம் அப்பமும் உன் கையிலே எனக்குக் கொண்டுவா என்றான்.

1இராஜா 17:12. அதற்கு அவள்: பானையில் ஒரு பிடிமாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அல்லாமல், என்னிடத்தில் ஒரு அடையும் இல்லையென்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்; இதோ, நானும் என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப்போக, அதை எனக்கும் அவனுக்கும் ஆயத்தப்படுத்துகிறதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன் என்றாள்.

1இராஜா 17:13. அப்பொழுது எலியா அவளைப் பார்த்து: பயப்படாதே; நீ போய் உன்வார்த்தையின்படி ஆயத்தப்படுத்து; ஆனாலும் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டுவா; பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம்.

1இராஜா 17:14. கர்த்தர் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடும் நாள்மட்டும் பானையின் மா செலவழிந்துபோவதும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்துபோவதும் இல்லை என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

1இராஜா 17:15. அவள் போய், எலியாவின் சொற்படி செய்தாள்; அவளும், இவனும், அவள் வீட்டாரும் அநேகநாள் சாப்பிட்டார்கள்.

1இராஜா 17:16. கர்த்தர் எலியாவைக்கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, பானையிலே மா செலவழிந்துபோகவும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்துபோகவும் இல்லை.

இஸ்ரவேல் தேசத்தில் மழை பெய்யவில்லை. ஆனபடியினால் கேரீத் ஆறு சில நாளுக்குப் பின்பு வற்றிப்போயிற்று. கேரீத் ஆறு வற்றிப்போனாலும் யோர்தான் நதி வற்றிப்போவதில்லை. கர்த்தர் எலியாவை கேரீத் ஆற்றண்டைக்கு ஏன் அனுப்பினார் என்பது தெரியவில்லை. ஒருவேளை கர்த்தர் தம்முடைய தெய்வீக பராமரிப்பை எலியாவுக்கு வெளிப்படுத்துவதற்காக, அவரை அங்கே அனுப்பியிருக்கலாம்.

கர்த்தருடைய பராமரிப்புக்கள் எப்போதும் ஒன்றுபோலிருப்பதில்லை. அவர் பல வழிகளில் தம்முடைய பிள்ளைகளின் தேவைகளை சந்திக்கிறார். கர்த்தருடைய தெய்வீக பராமரிப்புக்கள் ஒவ்வொரு சூழ்நிலையிலும், ஒவ்வொரு காலத்திலும் வித்தியாசமாயிருக்கும் என்பதை தெளிவுபடுத்துவதற்காக, கர்த்தர் எலியாவை கேரீத் ஆற்றண்டைக்கு அனுப்பினார்.

கேரீத் ஆறு வற்றிப்போனபோது கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்கு மறுபடியுமாய் உண்டாயிற்று. கர்த்தர் எலியாவை நோக்கி, "நீ எழுந்து, சீதோனுக்கடுத்த சாறிபாத் ஊருக்குப் போய், அங்கே தங்கியிரு; உன்னைப் பராமரிக்கும்படி அங்கே இருக்கிற ஒரு விதவைக்குக் கட்டளையிட்டேன்" (1இராஜா 17:9) என்று சொல்லுகிறார்.

சாறிபாத் சீதோனிலுள்ள பட்டணம். இது இஸ்ரவேல் தேசத்தின் எல்லைகளுக்கு அப்பால் உள்ளது. சாறிபாத் ஊரிலுள்ளவர்கள் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்கள். அவர்கள் புறஜாதி ஜனங்கள்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் புறஜாதியார் மத்தியிலும் அறிவிக்கப்படுகிறது. தம்முடைய கிருபை புறஜாதியாருக்கும் கிடைக்கும் என்பதை கர்த்தர் பூர்வகாலங்களிலேயே, இந்த சம்பவத்தின் மூலமாக தெளிவுபடுத்துகிறார். எலியா புறஜாதியார் மத்தியில் அனுப்பப்பட்ட முதலாவது தீர்க்கதரிசி.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், இந்த சம்பவத்தை தெளிவுபடுத்தியிருக்கிறார். "அன்றியும் எலியாவின் நாட்களிலே மூன்று வருஷமும் ஆறுமாதமும் வானம் அடைபட்டு, தேசமெங்கும் மிகுந்த பஞ்சம் உண்டாயிருந்தபோது, இஸ்ரவேலருக்குள் அநேகம் விதவைகள் இருந்தார்கள். ஆயினும் எலியா சீதோன் நாட்டிலுள்ள சரெப்தா ஊரிலிருந்த ஒரு விதவையினிடத்திற்கு அனுப்பப்பட்டானேயல்லாமல் மற்றொருத்தியினிடத்திற்கும் அனுப்பப்படவில்லை" (லூக் 4:25,26).

இஸ்ரவேல் ஜனத்தார் எலியாவை நேசிக்கவில்லை. அவருடைய சொந்த தேசத்து ஜனங்களே, அவரை தங்கள் தேசத்தைவிட்டு துரத்திவிட்டார்கள். ஆகையினால் அவர் புறஜாதியாரின் ஊராகிய சாறிபாத்திற்கு போகவேண்டியதாயிற்று.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் யூதர்கள் மத்தியிலே சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். யூதர்கள் சுவிசேஷத்தையும் அப்போஸ்தலர்களையும் ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்தபோது, அப்போஸ்தலர்கள் புறஜாதியாரிடத்தில் புறப்பட்டுப்போய் அவர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தார்கள்.

"அவர்கள் எதிர்த்துநின்று தூஷித்த போது, அவன் தன் வஸ்திரங்களை உதறி: உங்கள் இரத்தப்பழி உங்கள் தலையின் மேல் இருக்கும்; நான் சுத்தமாயிருக்கிறேன்; இதுமுதல் புறஜாதியாரிடத்திற்குப் போகிறேனென்று அவர்களுடனே சொல்லி, அவ்விடத்தைவிட்டு, தேவனை வணங்குகிறவனாகிய யுஸ்து என்னும் பேருள்ள ஒருவனுடைய வீட்டிற்கு வந்தான்; அவன் வீடு ஜெபஆலயத்திற்கு அடுத்ததாயிருந்தது" (அப் 18:6,7).

புறஜாதியாரின் பட்டணங்கள் ஏராளமாயிருந்தாலும், கர்த்தர் எலியாவை சீதோனுக்கடுத்த சாறிபாத் ஊருக்குப் போகச்சொல்லுகிறார். ஆகாபின் மனைவியாகிய யேசபேல் சீதோனைச் சேர்ந்தவள். சீதோனியர் பாகாலை ஆராதிக்கிறவர்கள்.

"நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்களில் நடப்பது அவனுக்குக் கொஞ்சக்காரியமென்று நினைத்தாற்போல் அவன் சீதோனியரின் ராஜாவாகிய ஏத்பாகாலின் குமாரத்தி யேசபேலை விவாகம் பண்ணினதுமல்லாமல், அவன் போய் பாகாலையும் சேவித்து அதைப் பணிந்துகொண்டு, தான் சமாரியாவிலே கட்டின பாகாலின் கோவிலில் பாகாலுக்குப் பலிபீடத்தை எடுப்பித்தான்" (1இராஜா 16:31,32).

யேசபேல் எலியாவுக்கு பிரதான சத்துருவாயிக்கிறாள். கர்த்தர் எலியாவைப் பாதுகாக்கிறார். யேசபேலால் எலியாவை ஒன்றும் செய்ய முடியாது என்பதை தெளிவுபடுத்துவதற்காக, கர்த்தர் அவரை யேசபேலின் தேசத்திற்கே போகச்சொல்லுகிறார். எலியா யேசபேலின் தேசமாகிய சீதோனிலே தங்கியிருக்கிறார். ஆனாலும் யேசபேலால் எலியாவுக்கு ஒரு தீங்கும் செய்யமுடியவில்லை. எலியா சீதோனிலே இருந்தாலும், கர்த்தருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் அவரை சூழ்ந்து கொள்கிறது.

எலியாவைப் பராமரிக்கும்படி கர்த்தர் ஒரு விதவைக்கு கட்டளையிட்டிருக்கிறார். இவள் சமுதாயத்திலே பிரபல்யமானவள் அல்ல. இவள் ஒரு ஏழை விதவை. தனிமையிலிருக்கிறாள். பிறருக்கு உதவி செய்ய இவளிடத்தில் திரளான பொக்கிஷமோ, களஞ்சியம் நிறைய தானியமோ இல்லை. ஆனாலும் எலியாவைப் பராமரிக்கும்படி கர்த்தர் இந்த விதவையைத் தெரிந்தெடுக்கிறார்.

இந்தப் பிரபஞ்சத்தில் பலவீனமாயிருக்கிறவர்களையும், பயித்தியமாயிருக்கிறவர்களையும் கர்த்தர் பயன்படுத்தி தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார். சாறிபாத் ஊர் விதவை ஒரு ஏழையாயிருந்தாலும், கர்த்தருடைய தெய்வீக திட்டத்தில் அவளுக்கும் ஒரு பங்கு கிடைக்கிறது.

எலியா கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து சாறிபாத்திற்குப்போகிறார். சாறிபாத் ஊரின் வாசலிலேயே கர்த்தருடைய பராமரிப்பு எலியாவுக்கு காத்துகொண்டிருக்கிறது. எலியா அந்தப் பட்டணத்தின் ஒலிமுகவாசலுக்கு வந்தபோது, அங்கே ஒரு விதவை விறகு பொறுக்கிக்கொண்டிருக்கிறாள் (1இராஜா 17:10).

எலியா அவளைப் பார்த்துக் கூப்பிட்டு, "நான் குடிக்கிறதற்குக் கொஞ்சம் தண்ணீர் ஒரு பாத்திரத்தில் எனக்குக் கொண்டுவா" என்று கேட்கிறார். கொண்டுவர அவள் போகிறபோது எலியா அவளை நோக்கிக் கூப்பிட்டு, "கொஞ்சம் அப்பமும் உன் கையிலே எனக்குக் கொண்டுவா" (1இராஜா 17:11) என்றும் கேட்கிறார்.

சாறிபாத் ஊர் விதவை பரம ஏழையாயிருக்கிறாள். அவளிடத்தில் பானையில் ஒரு பிடி மாவும், கலயத்தில் கொஞ்சம் எண்ணெயும் மாத்திரமே இருக்கிறது. இவற்றை தவிர அவளிடத்தில் வேறு எதுவுமில்லை. இதை சாப்பிட்டு தீர்ந்துவிட்டால், இதன் பிறகு சாப்பிடுவதற்கு அவளிடத்தில் வேறு ஒன்றுமே இல்லை. இந்த விதவைக்கு ஒரு குமாரனும் இருக்கிறான்.

சாறிபாத் ஊர் விதவை, எலியாவை நோக்கி "பானையில் ஒரு பிடிமாவும் கலயத்தில் கொஞ்சம் என்ணெயுமே அல்லாமல், என்னிடத்தில் ஒரு அடையும் இல்லையென்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்; இதோ, நானும் என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப்போக, அதை எனக்கும் அவனுக்கும் ஆயத்தப்படுத்துகிறதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன்" (1இராஜா 17:12) என்று சொல்லுகிறாள்.

அந்த ஸ்திரீயின் வீட்டில் அப்பம் சுடுவதற்கு விறகுகள்கூட இல்லை. அவள் தெருவில் வந்து இரண்டு விறகுகளைப் பொறுக்குகிறாள். இப்படிப்பட்ட ஏழை ஸ்திரீயினிடத்தில் கர்த்தர் எலியாவை அனுப்புகிறார். கர்த்தர் எலியாவை கேரீத் ஆற்றண்டையில் போஷித்தார். காகங்கள் அவருக்கு அப்பமும் இறைச்சியும் கொண்டு வந்தது. எலியாவை போஷிப்பதற்கு காகங்களைப் பயன்படுத்திய கர்த்தரால், இந்த ஏழை விதவையையும் பயன்படுத்த முடியும்.

தீர்க்கதரிசியாகிய எலியா தன்னுடைய நிலமையை மிகவும் பரிதாபமாக எடுத்துச் சொல்லி, அந்த ஸ்திரீயினிடத்தில் பிச்சை கேட்கவேண்டியதில்லை. எலியாவும் அவளோடு சேர்ந்து சாப்பிடுவார். தீர்க்கதரிசிக்கு போஜனம் கொடுத்ததினால், அந்த ஸ்திரீயின் வீட்டில் கர்த்தருடைய ஆசீர்வாதம் தங்கியிருக்கும். எலியா சாறிபாத் ஊர் விதவையின் வீட்டிற்கு, அவளை வெறுமையாக்க வராமல், அவளை கர்த்தருடைய நாமத்தினால் ஆசீர்வதிக்கவே வந்திருக்கிறார்.

சாறிபாத் ஊர் விதவை மனத்தாழ்மையுள்ளவள். அவள் சோம்பேறியாயிராமல் சுறுசுறுப்பாய் வேலை செய்கிறாள். இரண்டு விறகுகளைப் பொறுக்கி, தனக்கும் தன் குமாரனுக்கும் அப்பம் சுடுவதற்கு ஆயத்தம்பண்ணுகிறாள். எலியா இந்த ஸ்திரீயினிடத்தில், ஆரம்பத்திலே, குடிக்கிறதற்கு கொஞ்சம் தண்ணீர் ஒரு பாத்திரத்தில் கொண்டு வருமாறு கேட்டார்.

சாறிபாத் ஊர் விதவையோ அந்நியரை உபசரிக்கும் சுபாவமுள்ளவள். எலியா தண்ணீர் கேட்டவுடன், அந்த ஸ்திரீ தண்ணீர் கொண்டு வர உடனே புறப்பட்டுப்போகிறாள். அவள் எலியாவிடம் தன்னுடைய வறுமையைப்பற்றி புலம்பவில்லை. எலியா தனக்கு ஏதாவது உதவி செய்வாரா என்று அவள் அவரிடத்தில் உதவியும் எதிர்பார்க்கவில்லை. எலியா ஒரு அந்நியராகயிருப்பதினால், அவருக்கு தண்ணீர் கொடுக்க அவள் மறுக்கவுமில்லை.

எலியா சாறிபாத் ஊர் விதவையினிடத்தில் குடிக்கிறதற்கு தண்ணீர் கேட்டபோது, அவள் சும்மா உட்கார்ந்திருக்கவில்லை. அவள் ஒலிமுகவாசலிலே விறகு பொறுக்கிக்கொண்டிருக்கிறாள். இதன் பின்பு அவள் தனக்கும் தன் குமாரனுக்கும் அப்பம் சுடவேண்டும். அவள் இப்போது சுறுசுறுப்பாய் வேலை செய்கிறாள். அவள் இன்னும் செய்யவேண்டிய வேலையும் அதிகமாயிருக்கிறது. ஆனாலும் எலியா அந்த ஸ்திரீயினிடத்தில், தனக்கு குடிக்கிறதற்கு தண்ணீர் கேட்டபோது, அவள் தன்னுடைய சொந்த வேலைகளை நிறுத்திவிட்டு, எலியாவுக்கு தண்ணீர் கொண்டு வரப்போகிறாள்.

எலியா தனக்கு தண்ணீர் கொண்டுவரப்போகும் அந்த ஸ்திரீயினிடத்தில், "கொஞ்சம் அப்பமும் உன் கையிலே எனக்கு கொண்டு வா" என்று கேட்கிறார். அந்த ஸ்திரீ தன்னிடத்தில் எவ்வளவு மாவும், எவ்வளவு எண்ணெயும் இருக்கிறது என்பதை எலியாவினிடத்தில் சொல்லுகிறாள்.

ஆனால் எலியாவோ, அவளைப் பார்த்து "நீ போய் உன்வார்த்தையின்படி ஆயத்தப்படுத்து; ஆனாலும் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டுவா; பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம்" (1இராஜா 17:13) என்று சொல்லுகிறார். சாறிபாத் ஊர் விதவையின் விசுவாசமும், கீழ்ப்படிதலும் சோதிக்கப்படுகிறது.

சாறிபாத் ஊர் விதவை முதலாவதாக எலியாவுக்கு ஒரு சிறிய அடையைப்பண்ணி அவருக்கு கொடுக்கவேண்டும். அதன் பின்பு, அவள் தனக்கும் தன் குமாரனுக்கும், மீதமிருக்கும் மாவிலும் எண்ணெயிலும், அப்பத்தையோ அடையையோ உண்டு வேண்டும்.

எலியா சாறிபாத் ஊர் விதவையினிடத்தில் பேசும்போது, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப்பற்றியும் சொல்லுகிறார். எலியா அந்த ஸ்திரீயை நோக்கி, "கர்த்தர் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடும் நாள்மட்டும் பானையின் மா செலவழிந்துபோவதும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்துபோவதும் இல்லை என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்" (1இராஜா 17:14) என்று சொல்லுகிறார்.

சாறிபாத் ஊர் விதவைக்கு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப்பற்றி ஒன்றும் தெரியாது. அவள் புறஜாதி தேசமான சீதோனை சேர்ந்த ஸ்திரீ. சீதோனியர் பாகாலை ஆராதிக்கிறவர்கள். அவர்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப்பற்றி கேள்விப்படாதவர்கள். ஆனாலும் எலியா அந்த ஸ்திரீயினிடத்தில் பேசும்போது, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைப்பற்றிச் சொல்லுகிறார்.

எலியா அந்நிய ஸ்திரீயினிடத்தில் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப்பற்றி சொல்லவேண்டிய அவசியம் எதுவுமில்லை. எலியா இப்போது பசியாயிருக்கிறார். அவருக்கு போஜனம் தேவைப்படுகிறது. சாறிபாத் ஊர் விதவையினிடத்தில் உதவி செய்ய மனம் இருக்கிறது. ஆனால் அவளுடைய வீட்டிலோ போதுமான அளவு மாவும் எண்ணெயும் இல்லை.

இந்த சூழ்நிலையில் எலியா அந்த ஸ்திரீக்கு கர்த்தருடைய நாமத்தினால் ஆசீர்வாதமான வார்த்தைகளை சொல்லுகிறார். அந்த ஸ்திரீக்கு ஆசீர்வாதம் உண்டாகவேண்டுமென்றால், அவள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை நம்பவேண்டும். கர்த்தருடைய வாக்குத்தத்தம் தனக்கு நிறைவேறவேண்டுமென்றால், அவள் கர்த்தரை விசுவாசித்து, அவருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியவேண்டும்.

கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணுகிறவர்கள் விசுவாசத்தோடு உடன்படிக்கை பண்ணவேண்டும். விசுவாசமில்லாமல் கர்த்தருக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடவேண்டும். அதன்பின்பு உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களெல்லாம் நமக்கு கூடக்கொடுக்கப்படும்.

சாறிபாத் ஊர் விதவை எலியாவின் வார்த்தைகளை நம்புகிறாள். அவள் தன்னுடைய தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், கர்த்தருடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறாள். அந்த விதவை தேவனுடைய தெய்வீக வாக்குத்தத்தத்தை நம்புகிறாள். சாறிபாத் ஊர் விதவையின் விசுவாசம் தேவனுடைய கிருபையின் ராஜ்யத்தில் நடைபெறுகிற மிகப்பெரிய அற்புதமாயிருக்கிறது. அவளுடைய பானையில் மா செலவழிந்துபோகாமலும் கலசத்தில் எண்ணெய் குறைந்துபோகாமலும் இருப்பது, கர்த்தருடைய தெய்வீக பராமரிப்பின் ராஜ்யத்தில் நடைபெறுகிற மிகப்பெரிய அற்புதமாயிருக்கிறது.

கர்த்தர் எலியாவைக்கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, பானையிலே மா செலவழிந்துபோகவும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்துபோகவும் இல்லை (1இராஜா 17:16). அவர்கள் பானையிலிருந்தும், கலயத்திலிருந்தும் எவ்வளவு பொருட்களை வெளியே எடுக்கிறார்களோ, அவ்வளவு பொருட்கள், தெய்வீக வல்லமையினால், அவற்றிலே வந்து சேருகிறது. பானையிலுள்ள மாவின் அளவும், கலயத்திலுள்ள எண்ணெயின் அளவும் அதிகரிக்கவுமில்லை. அது குறைந்துபோகவுமில்லை.

"விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச்செய்வார்" (2கொரி 9:10).

சாறிபாத் ஊர் விதவை கர்த்தருடைய தீர்க்கதரிசிக்கு நன்மை செய்யும்போது, கர்த்தர் அவளுக்கு நன்மை செய்கிறார். அவள் பானையிலிருந்து மாவையும், கலயத்திலிருந்து எண்ணெயையும் எடுக்காமல் போனால், அதிலே மாவும் எண்ணெயும் அதிகரிக்காது. அதே வேளையில் மாவும் எண்ணெயும் அவற்றிலிருந்து எடுக்கப்படுவதினால், அவை குறைந்துபோகவில்லை. செலவழித்தால் குறைந்துபோகும். இது இயற்கையின் பொதுவான பிரமாணம். ஆனால் இங்கோ செலவழித்தும் குறைந்துபோகமலிருக்கிறது. இது கர்த்தருடைய அற்புதத்தின் பிரமாணம்.

கர்த்தர் எலியாவை இதுவரையிலும் காகங்களினால் போஷித்தார். இது ஒரு அற்புதம். எலியாவுக்கு அன்றாட போஜனம் கிடைக்கிறது. ஒரு மாதத்திற்குத் தேவையான மொத்த போஜனமும் அவருடைய சேமிப்பில் இல்லை. ஒவ்வொரு நாளும் அதிகாலையிலும், சாயங்காலத்திலும் காகங்கள் அவருக்கு அப்பத்தையும் இறைச்சியையும் கொண்டு வந்து கொடுத்தது.

எலியா இப்போது சாறிபாத்திலிருக்கும்போதும், கர்த்தர் அவருக்கு அன்றாட போஜனத்தைக் கொடுக்கிறார். எண்ணெயில் சுடப்பட்ட அப்பம் அவருக்கு அன்றாட போஜனமாகக் கொடுக்கப்படுகிறது. கர்த்தர் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடும் நாள் மட்டும் எலியா அந்த ஸ்திரீயின் வீட்டிலே போஜனம்பண்ணுகிறார். அதுவரையிலும் பானையின் மா செலவழிந்து போகவுமில்லை. கலசத்தின் எண்ணெய் குறைந்து போகவுமில்லை.

சாறிபாத் ஊர் விதவை எலியாவுக்கு அப்பம் சுட்டுக் கொடுப்பதற்கு முன்பாக, அவளுடைய வீட்டிலே பானையில் ஒரு பிடி மாவும், கலயத்தில் கொஞ்சம் எண்ணெயும் மாத்திரமே இருந்தது. அந்த ஸ்திரீயும் அவளுடைய குமாரனும் இந்த மாவையும் எண்ணெயையும் பயன்படுத்தி ஒரு வேளை சாப்பிடலாம். இதை சாப்பிட்ட பின்பு அவர்கள் இரண்டு பேரும் செத்துப்போகவேண்டும் என்பதே அந்த ஸ்திரீயின் திட்டம்.

இப்போதோ கர்த்தர் அவர்களுடைய மாவையும் எண்ணெயையும் ஆசீர்வதிக்கிறார். கர்த்தர் அவர்களையும் போஷிக்கிறார். சாறிபாத் ஊர் விதவை கர்த்தருடைய தீர்க்கதரிசிக்கு போஜனம் கொடுத்தாள். கர்த்தர் அந்த ஸ்திரீக்கும் அவளுடைய குமாரனுக்கும் போஜனம் கொடுக்கிறார். தேசத்தின்மேல் கர்த்தர் மழையைக் கட்டளையிடும் நாள் மட்டும், அவர்களுக்குத் தேவையான போஜனம் தொடர்ந்து கிடைக்கிறது.

"இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்" (வெளி 3:20) என்று கர்த்தர் சொல்லுகிறார். நம்முடைய இருதயத்தில் நாம் கர்த்தருக்கு இடங்கொடுக்கவேண்டும். அப்போது கர்த்தரும் நம்மோடுகூட போஜனம்பண்ணுவார்.

சாறிபாத் ஊர் விதவை கர்த்தருடைய தீர்க்கதரிசியோடுகூட போஜனம்பண்ணினாள். நமக்கு அதைவிட பெரிய சிலாக்கியம் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. நாம் கர்த்தரோடுகூட போஜனம்பண்ணுவோம். அப்போது நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்கு ஆவிக்குரிய போஜனத்தையும், ஜீவத்தண்ணீரையும் கொடுப்பார்.

"அவர்கள் ஆபத்துக்காலத்திலே வெட்கப்பட்டுப்போகாதிருந்து, பஞ்சகாலத்திலே திருப்தியடைவார்கள்" (சங் 37:19).

சாறிபாத் ஊர் விதவையின் மகன் 1இராஜா 17:17-24

1இராஜா 17:17. இவைகள் நடந்தபின்பு, வீட்டுக்காரியாகிய அந்த ஸ்திரீயின் மகன் வியாதியில் விழுந்தான்; அவனுடைய சுவாசம் போகுமட்டும் அவனுடைய வியாதி அதிகரித்துக்கொண்டே இருந்தது.

1இராஜா 17:18. அப்பொழுது அவள் எலியாவை நோக்கி: தேவனுடைய மனுஷனே, எனக்கும் உமக்கும் என்ன? என் அக்கிரமத்தை நினைக்கப்பண்ணவும், என் குமாரனைச் சாகப்பண்ணவுமா? என்னிடத்தில் வந்தீர் என்றாள்.

1இராஜா 17:19. அதற்கு அவன்: உன் குமாரனை என்னிடத்தில் தா என்று சொல்லி, அவனை அவள் மடியிலிருந்து எடுத்து, தான் தங்கியிருக்கிற மேல்வீட்டிலே அவனைக் கொண்டுபோய், தன் கட்டிலின்மேல் வைத்து:

1இராஜா 17:20. என் தேவனாகிய கர்த்தாவே, நான் தங்கியிருக்க இடங்கொடுத்த இந்த விதவையின் மகனைச் சாகப்பண்ணினதினால் அவளுக்குத் துக்கத்தை வருவித்தீரோ என்று கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு;

1இராஜா 17:21. அந்தப் பிள்ளையின்மேல் மூன்றுதரம் குப்புறவிழுந்து: என் தேவனாகிய கர்த்தாவே, இந்தப் பிள்ளையின் ஆத்துமா அவனுக்குள் திரும்பிவரப்பண்ணும் என்று கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான்.

1இராஜா 17:22. கர்த்தர் எலியாவின் சத்தத்தைக் கேட்டார்; பிள்ளையினுடைய ஆத்துமா அவனுள் திரும்பிவந்தது; அவன் பிழைத்தான்.

1இராஜா 17:23. அப்பொழுது எலியா பிள்ளையை எடுத்து, மேல்வீட்டிலிருந்து அவனைக் கீழ்வீட்டிற்குள் கொண்டுவந்து, அவனை அவன் தாயினிடத்தில் கொடுத்து: பார் உன் பிள்ளை உயிரோடிருக்கிறான் என்று சொன்னான்.

1இராஜா 17:24. அப்பொழுது அந்த ஸ்திரீ எலியாவை நோக்கி: நீர் தேவனுடைய மனுஷன் என்றும், உம்முடைய வாயிலிருந்து பிறக்கும் கர்த்தரின் வார்த்தை உண்மை என்றும், இதினால் இப்போது அறிந்திருக்கிறேன் என்றாள்.

கர்த்தருடைய தீர்க்கதரிசிக்கு போஜனம் கொடுத்து ஆதரித்த விதவையை கர்த்தர் ஆசீர்வதிக்கிறார். அவளுடைய வீட்டிலே பானையிலே மா செலவழிந்து போகவில்லை. கலசத்தின் எண்ணெய் குறைந்துபோகவில்லை. அந்த ஸ்திரீயின் குமாரன் வியாதியில் விழுந்து செத்துப்போகிறான். கர்த்தர் தம்முடைய பெரிதான கிருபையினால் செத்துப்போன அவனுக்கு மறுபடியும் உயிர்கொடுத்து, அவனைப் பிழைக்கப்பண்ணுகிறார்.

இவைகள் நடந்தபின்பு, வீட்டுக்காரியாகிய அந்த ஸ்திரீயின் மகன் வியாதியில் விழுகிறான்; அவனுடைய சுவாசம் போகுமட்டும் அவனுடைய வியாதி அதிகரித்துக்கொண்டே இருக்கிறது (1இராஜா 17:17).

சாறிபாத் ஊர் விதவைக்கு ஒரே ஒரு குமாரன் மாத்திரமே இருக்கிறான். இவனே அவளுக்கு ஆதரவும், ஆறுதலும், சந்தோஷமுமாயிருக்கிறான். சாறிபாத் ஊர் விதவை கர்த்தருடைய தீர்க்கதரிசிக்கு நன்மை செய்தாள். எலியா பசியாயிருந்தபோது அவருக்கு போஜனம் கொடுத்தாள். தான் கர்த்தருடைய ஊழியக்காரருக்கு நன்மை செய்ததினால், கர்த்தர் தனக்கு நன்மை செய்வார் என்று அந்த ஸ்திரீ எதிர்பார்க்கிறாள். ஆனால் அந்த ஸ்திரீயின் மகன் வியாதியில் விழுந்து செத்துப்போகிறான்.

இதுவரையிலும் கர்த்தருடைய அற்புதம் அவளுடைய வீட்டிலே அநுதினமும் நடைபெறுகிறது. அவள் எலியாவுக்கும், தனக்கும், தன் குமாரனுக்கும் தினமும் போஜனத்தை ஆயத்தப்படுத்துகிறாள். கர்த்தருடைய தெய்வீக வல்லமையினால், அவளுடைய பானையின் மா செலவழிந்துபோகவில்லை. கலசத்தின் எண்ணெய் குறைந்துபோகவுமில்லை. பானையிலும் கலயத்திலும் எவ்வளவு வெளியே எடுத்தாலும், மாவும் எண்ணெயும் குறையாமல் அப்படியே இருக்கிறது. இது கர்த்தர் செய்த அற்புதம். இந்த அற்புதம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, ஒருநாள் அந்த ஸ்திரீயின் மகன் வியாதியில் விழுந்து செத்துப்போகிறான்.

அப்பொழுது அந்த ஸ்திரீ எலியாவை நோக்கி: "தேவனுடைய மனுஷனே, எனக்கும் உமக்கும் என்ன? என் அக்கிரமத்தை நினைக்கப்பண்ணவும், என் குமாரனைச் சாகப்பண்ணவுமா? என்னிடத்தில் வந்தீர்" (1இராஜா 17:18) என்று கேட்கிறாள்.

தன்னுடைய குமாரன் செத்துப்போனது அந்த ஸ்திரீக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. அவளுடைய வீட்டிலே திடீரென்று, எதிர்பாராத வேளையிலே துக்கமும் சோகமும் வந்திருக்கிறது. ஒரு பக்கத்தில் சந்தோஷமும் சமாதானமும் நிரம்பியிருக்கிறது. அவளுடைய வீட்டிலே அநுதினமும் அற்புதம் நடைபெறுகிறது. ஒன்றும் குறையாமல் சகலமும் சம்பூரண நிறைவாயிருக்கிறது. இவற்றிற்கு மத்தியிலே அவளுடைய குமாரன் வியாதியில் விழுந்து செத்துப்போகிறான்.

சாறிபாத் ஊர் விதவையால் அவளுடைய துக்கத்தை அடக்க முடியவில்லை. அவள் எலியாவை நோக்கி, "தேவனுடைய மனுஷனே" என்று அழைக்கிறாள். தன்னுடைய குமாரன் செத்துப்போனதற்கு எலியாவே காரணமென்று நினைத்து, அவரை சந்தேகப்படுகிறாள். "எனக்கும் உமக்கும் என்ன" என்று அந்த ஸ்திரீ எலியாவினிடத்தில் கேட்கிறாள்.

எலியா தன்னுடைய வீட்டிற்கு வந்ததினால்தான், தன்னுடைய குமாரன் செத்துப்போனதாகவும், எலியாவே தன்னுடைய குமாரனை சாகப்பண்ணினார் என்றும், சாறிபாத் ஊர் விதவை எலியாவின்மீது சந்தேகப்படுகிறாள். "என் குமாரனை சாகப்பண்ண என்னிடத்தில் வந்தீரா" என்று கேட்கிறாள்.

சாறிபாத் ஊர் விதவைக்கு தன்மீதே சந்தேகம் வந்துவிடுகிறது. தன்னுடைய மகன் செத்துப்போனதற்கு தன்னுடைய பாவம் காரணமாயிருக்கலாம் என்றும் நினைக்கிறாள். அவள் இதை நினைத்து, எலியாவிடம், "என் அக்கிரமத்தை நினைக்கப்பண்ண வந்தீரா" என்றும் கேட்கிறாள்.

இஸ்ரவேல் தேசத்தில் விக்கிரகாராதனை அதிகமாய் நடைபெறுகிறது. எலியா இஸ்ரவேலுக்கு விரோதமாக சாபமான வார்த்தைகளை சொன்னதை சாறிபாத் ஊர் விதவையும் அறிந்திருக்கிறாள். அவர்கள் பாகாலை ஆராதிப்பதினால் கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வந்திருக்கிறது. சாறிபாத் சீதோனிலிருக்கிறது. சீதோனியர் பாகாலை தங்கள் தெய்வமாக ஆராதிக்கிறவர்கள். இந்த ஸ்திரீயும் சீதோன் தேசத்து ஸ்திரீயாகயிருப்பதினால், எலியா தன்னுடைய அக்கிரமத்தை நினைத்து, தன்னுடைய குமாரனை சாகப்பண்ணியிருப்பாரோ என்று இந்த விதவை சந்தேகப்படுகிறாள்.

சாறிபாத் ஊர் விதவையின் வார்த்தைகளை எலியா பொறுமையோடு கேட்கிறார். அவர் அந்த ஸ்திரீயை நோக்கி, "உன் குமாரனை என்னிடத்தில் தா" என்று சொல்லுகிறார். எலியா அவனை அவள் மடியிலிருந்து எடுத்து, தான் தங்கியிருக்கிற மேல்வீட்டிலே அவனைக் கொண்டுபோய், தன் கட்டிலின்மேல் வைக்கிறாள் (1இராஜா 17:19).

சாறிபாத் ஊர் விதவையின் கேள்விகளுக்கு என்ன பதில் சொல்லுவது என்று எலியாவுக்கும் தெரியவில்லை. ஆகையினால் அவர் அவளுக்கு ஒரு பிரதியுத்தரமும் சொல்லாமல், செத்துப்போன அவளுடைய குமாரனை, தான் தங்கியிருக்கிற மேல் வீட்டிலே, தன் கட்டிலிலே கொண்டு போய் வைத்து, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எலியா அந்த ஸ்திரீயின்மீதும், அவளுடைய குமாரன்மீதும் அன்பாயிருக்கிறார். அவர்கள் இதுவரையிலும் எலியாவுக்கு தினமும் போஜனம் ஆயத்தம்பண்ணிக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் தனக்கு செய்த உபகாரத்தை எலியா மறக்கவில்லை. எலியா கர்த்தரிடத்தில் கருத்தாய் ஜெபிக்கிறார்.

எலியா கர்த்தரை நோக்கி, "என் தேவனாகிய கர்த்தாவே, நான் தங்கியிருக்க இடங்கொடுத்த இந்த விதவையின் மகனைச் சாகப்பண்ணினதினால் அவளுக்குத் துக்கத்தை வருவித்தீரோ" (1இராஜா 17:20) என்று கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்.

பரிசுத்த வேதாகமத்தில் இதுவரையிலும் ஒருவரும் செத்துப்போனவர்களை உயிரோடு எழுப்பியதாக வசனம் எதுவுமில்லை. எலியா தான் முதன் முதலாக, பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால், "என் தேவனாகிய கர்த்தாவே, இந்தப் பிள்ளையின் ஆத்துமா அவனுக்குள் திரும்பி வரப்பண்ணும்" (1இராஜா 17:21) என்று கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறார்.

தாவீதுக்கும் பத்சேபாளுக்கும் பிறந்த குமாரன் வியாதிப்பட்டு செத்துப்போனான். அந்த வேளையில் தாவீது உபவாசத்தோடு ஜெபம்பண்ணினார். அப்போதுகூட தாவீது, செத்துப்போன தன்னுடைய குமாரன் உயிரோடு பிழைக்கவேண்டுமென்று ஜெபம்பண்ணவில்லை.

"அது மரித்திருக்கிற இப்போது நான் உபவாசிக்கவேண்டியது என்ன? இனி நான் அதைத் திரும்பிவரப்பண்ணக் கூடுமோ? நான் அதினிடத்துக்குப் போவேனே அல்லாமல், அது என்னிடத்துக்குத் திரும்பி வரப்போகிறது இல்லை என்றான்" (2சாமு 12:23).

எலியாவினிடத்தில் அற்புதங்கள் செய்யும் வல்லமையிருக்கிறது. தாவீதினிடத்தில் அந்த வல்லமையில்லை. எலியா செத்துப்போன அந்தப் பிள்ளையின்மேல் மூன்றுதரம் குப்புற விழுகிறார். "என் தேவனாகிய கர்த்தாவே, இந்தப் பிள்ளையின் ஆத்துமா அவனுக்குள் திரும்பி வரப்பண்ணும்" என்று கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறார்.

கர்த்தர் எலியாவின் சத்தத்தைக் கேட்கிறார்; பிள்ளையினுடைய ஆத்துமா அவனுள் திரும்பிவருகிறது; அவன் பிழைக்கிறான் (1இராஜா 17:22).

எலியா கர்த்தரிடத்தில் கருத்தாய் விண்ணப்பம்பண்ணுகிறார். "இந்தப் பிள்ளையின் ஆத்துமா அவனுக்குள் திரும்பி வரப்பண்ணும்" என்று எலியா சொல்லுகிறார். செத்துப்போன அந்தப் பிள்ளையின் சரீரம் அங்கே இருக்கிறது. அந்தப் பிள்ளை மரிக்கும்போது, அதன் ஆத்துமா, அந்த சரீரத்தைவிட்டுப் பிரிந்துபோய்விடுகிறது. சரீரத்தைவிட்டுப் பிரிந்துபோன ஆத்துமா மறுபடியும் அந்த சரீரத்திற்குள் திரும்பி வரவேண்டும் என்று எலியா விண்ணப்பம்பண்ணுகிறார்.

கர்த்தரும் எலியாவின் விண்ணப்பத்தை அங்கீகரிக்கிறார். கர்த்தர் பிள்ளையினுடைய ஆத்துமாவை அவனுக்குள் திரும்பி வரப்பண்ணுகிறார். தம்முடைய ஜனம் பாடுகளையும், துக்கங்களையும், வேதனைகளையும் அனுபவிக்கும்போது, கர்த்தர் அவர்களுக்கு ஆறுதலைத் தருவார் என்பதற்கு இந்த அற்புத சம்பவம் ஓர் அடையாளமாயிருக்கிறது.

செத்துப்போன பிள்ளை மறுபடியும் பிழைத்ததைப் பார்த்து எலியா மிகவும் சந்தோஷப்படுகிறார். அப்பொழுது எலியா பிள்ளையை எடுத்து, மேல்வீட்டிலிருந்து அவனைக் கீழ்வீட்டிற்குள் கொண்டுவருகிறார். அவனை அவன் தாயினிடத்தில் கொடுக்கிறார். எலியா அந்த ஸ்திரீயை நோக்கி, "பார் உன் பிள்ளை உயிரோடிருக்கிறான்" (1இராஜா 17:23) என்று சொல்லுகிறார்.

எலியா சாறிபாத் ஊர் விதவையிடம், "பார்" என்று சொல்லும்போது, "ஜெபத்தின் வல்லமையைப் பார், ஜெபத்திற்கு செவிகொடுக்கிற தேவனுடைய வல்லமையைப் பார்" என்று பொருள்படுமாறு சொல்லுகிறார். கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். அவரால் ஜீவனைக் கொடுக்கவும் முடியும். ஜீவனை எடுக்கவும் முடியும்.

சற்று நேரத்திற்கு முன்பு செத்துப்போன பிள்ளை, இப்போது அவளுடைய தாயினிடத்தில் உயிரோடிருக்கிறான். அப்பொழுது அந்த ஸ்திரீ எலியாவை நோக்கி: "நீர் தேவனுடைய மனுஷன் என்றும், உம்முடைய வாயிலிருந்து பிறக்கும் கர்த்தரின் வார்த்தை உண்மை என்றும், இதினால் இப்போது அறிந்திருக்கிறேன்" (1இராஜா 17:34) என்று சொல்லுகிறாள்.

எலியா தேவனுடைய மனுஷன் என்பதை அவள் ஏற்கெனவே அறிந்திருக்கிறாள். அவருடைய வாயில் பிறக்கும் கர்த்தரின் வார்த்தை உண்மை என்பதையும் அவள் இதற்கு முன்பே அறிந்திருக்கிறாள். பானையிலே மா செலவழிந்து போகாமலிருந்ததும், கலசத்தின் எண்ணெய் குறைந்துபோகாமலிருந்ததும், எலியா தேவனுடைய மனுஷன் என்பதற்கு அடையாளமாயிருக்கிறது.

ஆனாலும் அந்த ஸ்திரீயின் குமாரன் செத்துப்போனபோது, அவளுடைய மனதிலே எலியாவின்மீது கோபமும், சந்தேகமும் வந்தது. "தேவனுடைய மனுஷனே, எனக்கும் உனக்கும் என்ன, என் அக்கிரமத்தை நினைக்கப்பண்ணவும், என் குமாரனை சாகப்பண்ணவுமா என்னிடத்தில் வந்தீர்" என்று கோபத்தோடும், அழுகையோடும் கேட்டாள். இப்போதோ அவளுடைய மனதில் கோபமில்லை. அவளுடைய துக்கம் சந்தோஷமாய் மாறிற்று.

அந்த ஸ்திரீ எலியாவை நோக்கி, "நீர் தேவனுடைய மனுஷன்" என்பதை இப்போது அறிந்திருக்கிறேன் என்று சாட்சியாய் சொல்லுகிறாள். சாறிபாத் ஊர் விதவையின் குமாரன் செத்துப்போனதினாலும், அவன் மறுபடியும் உயிரோடு பிழைத்தினாலும் கர்த்தருடைய நாமம் மகிமைப்படுகிறது. அவருடைய தீர்க்கதரிசிக்கு கனமும் மேன்மையும் உண்டாகிறது.

18 அதிகாரம்

சாறிபாத் ஊரிலே கர்த்தருடைய அற்புத வல்லமையினால் அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெறுகிறது. கர்த்தர் எலியாவை சாறிபாத் ஊரிலே தங்கியிருக்கச் சொன்ன காலமும் முடிவு பெறுகிறது. இப்போது கர்த்தர் எலியாவிடம், "நீ போய் ஆகாபுக்கு உன்னைக் காண்பி" (1இராஜா 18:1) என்று சொல்லுகிறார். பூமியின்மேல் மழை பெய்யும் என்பதை எலியா விசுவாசிக்கவேண்டும்.

ஒபதியா என்பவன் ஆகாபின் அரமனை விசாரிப்புக்காரன். எலியா ஒபதியாவை சந்தித்து பேசுகிறார். தான் வந்திருக்கும் செய்தியை ஆகாபிடம் சொல்லுமாறு, எலியா ஒபதியாவுக்கு சொல்லுகிறார் (1இராஜா 18:2-16).

ஆகாப் எலியாவை சந்திக்கப் போகிறான். ஆகாபுக்கும் எலியாவுக்கும் நடைபெற்ற சம்பாஷணை (1இராஜா 18:17-20). ஆகாப் கர்மேல் பர்வதத்திலே பாகாலின் தீர்க்கதரிசிகளை கூடிவரும்படி செய்கிறார். கர்த்தர் அக்கினியினால் உத்தரவு அருளி, தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார் (1இராஜா 18:21-39).

எலியா பாகாலின் தீர்க்கதரிசிகளை கீசோன் ஆற்றங்கரையிலே வெட்டிப் போடுகிறார் (1இராஜா 18:40). கர்த்தருடைய கிருபையினால், எலியாவின் வார்த்தையின் பிரகாரம் தேசத்திலே மறுபடியும் மழைபெய்கிறது (1இராஜா 18:41-46).

எலியாவும் ஒபதியாவும்
1இராஜா 18:1-16

1இராஜா 18:1. அநேகநாள் சென்று, மூன்றாம் வருஷமாகையில், கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்கு உண்டாகி: நீ போய் ஆகாபுக்கு உன்னைக் காண்பி; நான் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடுவேன் என்றார்.

1இராஜா 18:2. அப்பொழுது எலியா ஆகாபுக்குத் தன்னைக் காண்பிக்கப்போனான்; பஞ்சமோவெனில் சமாரியாவிலே கொடிதாயிருந்தது.

1இராஜா 18:3. ஆனபடியால் ஆகாப் அரமனை விசாரிப்புக்காரனாகிய ஒபதியாவை அழைப்பித்தான்; ஒபதியா கர்த்தருக்கு மிகவும் பயந்து நடக்கிறவனாயிருந்தான்.

1இராஜா 18:4. யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளைச் சங்கரிக்கிறபோது, ஒபதியா நூறு தீர்க்கதரிசிகளைச் சேர்த்து, அவர்களைக் கெபிக்கு ஐம்பது ஐம்பது பேராக ஒளித்துவைத்து, அவர்களுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுத்து, அவர்களைப் பராமரித்துவந்தான்.

1இராஜா 18:5. ஆகாப் ஒபதியாவைப் பார்த்து: நீ தேசத்திலிருக்கிற எல்லா நீரூற்றுகளிடத்திலும், எல்லா ஆறுகளிடத்திலும் போ; நாம் சகல மிருகஜீவன்களையும் சாகக்கொடாமல், குதிரைகளையும் கோவேறுகழுதைகளையுமாவது உயிரோடே காப்பாற்றும்படிக்கு நமக்குப் புல் அகப்படுமா என்று பார் என்றான்.

1இராஜா 18:6. அப்படியே தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி, அதைப் பகுத்துக்கொண்டு, ஆகாப் ஒரு வழியாயும், ஒபதியா வேறொரு வழியாயும் போனார்கள்.

1இராஜா 18:7. ஒபதியா வழியில் போகும்போது, எலியா அவனுக்கு எதிர்ப்பட்டான்; அவன் இவனை இன்னான் என்று அறிந்து, முகங்குப்புற விழுந்து, நீர் என் ஆண்டவனாகிய எலியா அல்லவா என்று கேட்டதற்கு;

1இராஜா 18:8. அவன், நான்தான்; நீ போய், இதோ, எலியா வந்திருக்கிறான் என்று உன் ஆண்டவனுக்குச் சொல் என்றான்.

1இராஜா 18:9. அதற்கு அவன்: ஆகாப் என்னைக் கொன்றுபோடும்படிக்கு, நீர் உமது அடியானை அவன் கையில் ஒப்புக்கொடுக்க நான் என்ன பாவம் செய்தேன்.

1இராஜா 18:10. உம்மைத் தேடும்படி என் ஆண்டவன் மனுஷரை அனுப்பாத ஜாதியும் ராஜ்யமும் இல்லை என்று உம்முடைய தேவனாகிய கர்த்தரின் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; நீர் இல்லையென்று அவர்கள் சொன்னபோது, அவன் அந்த ராஜ்யத்தையும் அந்த ஜாதியையும் உம்மைக் காணவில்லை என்று சத்தியம் வாங்கிக்கொண்டான்.

1இராஜா 18:11. இப்போதும் நீ போய், உன் ஆண்டவனுக்கு, இதோ, எலியா வந்திருக்கிறான் என்று சொல் என்று நீர் சொல்லுகிறீரே.

1இராஜா 18:12. நான் உம்மை விட்டுப்போனவுடனே ஒருவேளை கர்த்தருடைய ஆவியானவர் உம்மை எடுத்து, நான் அறியாத இடத்திற்குக் கொண்டுபோவார்; அப்பொழுது நான் ஆகாபிடத்திற்குப் போய் அறிவித்தபின்பு, அவன் உம்மைக் காணாவிட்டால், என்னைக் கொன்றுபோடுவானே; உமது அடியானாகிய நான் சிறுவயதுமுதல் கர்த்தருக்குப் பயந்துநடக்கிறவன்.

1இராஜா 18:13. யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசகளைக் கொன்றுபோடுகிறபோது, நான் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளில் நூறு பேரை ஒவ்வொரு கெபியிலே ஐம்பது ஐம்பது பேராக ஒளித்துவைத்து, அவர்களுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுத்து, பராமரித்துவந்த என்னுடைய செய்கை என் ஆண்டவனுக்கு அறிவிக்கப்படவில்லையோ?

1இராஜா 18:14. இப்போதும் என் ஆண்டவன் என்னைக் கொன்றுபோடும்படியாக, நீர்: இதோ, எலியா வந்திருக்கிறான் என்று போய் அவனுக்குச் சொல் என்று சொல்லுகிறீரே என்றான்.

1இராஜா 18:15. அதற்கு எலியா: இன்றைக்கு என்னை அவனுக்குக் காண்பிப்பேன் என்று சேனைகளின் கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்றான்.

1இராஜா 18:16. அப்பொழுது ஒபதியா போய், ஆகாபைச் சந்தித்து அவனுக்கு அதை அறிவித்தவுடனே, ஆகாப் எலியாவைச் சந்திக்கப்போனான்.

இஸ்ரவேல் தேசத்திலே துக்கமான சம்பவங்கள் நடைபெறுகிறது. யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளை சங்கரிக்கிறாள் (1இராஜா 18:4). அவள் கர்த்தரின் தீர்க்கதரிசிகளைக் கொன்றுபோடுகிறாள் (1இராஜா 18:13).

யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளை கொன்றுபோடும்போது, கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தைத் தண்டிக்கிறார். தேசத்தில் மூன்று வருஷமாக மழை பெய்யவில்லை. அங்கே மிகப்பெரிய பஞ்சமுண்டாயிற்று. ஜனங்களுக்கு புசிக்க போஜனமோ பானம்பண்ண தண்ணீரோ கிடைக்கவில்லை. யேசபேல் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாக தீங்கு செய்தபோது, கர்த்தர் இஸ்ரவேல் தேசத்திற்கு நன்மை செய்வதை நிறுத்திவிடுகிறார்.

யேசபேல் விக்கிரகங்களை ஆராதிக்கிறவள். அவள் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை உபத்திரவப்படுத்துகிறாள். இஸ்ரவேல் தேசத்திலே ஆகாபின் அதிகாரத்தைவிட, யேசபேலின் அதிகாரம் பெரிதாயிருக்கிறது. இஸ்ரவேல் தேசம் சீர்கெட்டுப்போயிருக்கிறது.

இந்த சூழ்நிலையிலும், இஸ்ரவேல் தேசத்தில் கர்த்தருக்கு பயப்படுகிற நீதிமான்கள் ஒரு சிலர் இருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரை மாத்திரமே சேவிக்கிறார்கள். அவர்களுடைய ஆவிக்குரிய ஆராதனைக்கும், வேததியானத்திற்கும், பயபக்தியாய் ஜீவிப்பதற்கும் உதவிசெய்ய கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் சிலரும் இஸ்ரவேல் தேசத்தில் இருக்கிறார்கள்.

இஸ்ரவேல் தேசத்திலிருந்து ஆசாரியர்களும் லேவியரும் யூதாதேசத்திற்கும் எருசலேமுக்கும் போய்விடுகிறார்கள்.

"இஸ்ரவேலெங்கும் இருக்கிற ஆசாரியரும் லேவியரும் தங்கள் எல்லா எல்லைகளிலுமிருந்து அவனிடத்தில் வந்தார்கள். லேவியர் கர்த்தருக்கு ஆசாரிய ஊழியஞ்செய்யாதபடிக்கு யெரொபெயாமும் அவன் குமாரரும் அவர்களைத் தள்ளிப் போட்டபடியினால், தங்கள் வெளிநிலங்களையும் தங்கள் காணியாட்சிகளையும் விட்டு, யூதாதேசத்துக்கும் எருசலேமுக்கும் வந்தார்கள்" (2நாளா 11:13,14).

இஸ்ரவேல் தேசத்தில் ஆசாரியரும் லேவியரும் இல்லாவிட்டாலும், கர்த்தர் இந்த தீர்க்கதரிசிகளை எழுப்புகிறார். இவர்கள் யூதர்களுடைய குடும்பங்களிலே, குடும்ப ஜெபங்களிலும், குடும்ப தியானங்களிலும் பங்கு பெறுகிறார்கள். தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்கு நியாயப்பிரமாணத்தை வாசித்து, அதற்கு வியாக்கியானம் சொல்லுகிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கவும், ஆவிக்குரிய ஜீவியத்தில் உண்மையுள்ளவர்களாயிருந்து வளர்ச்சி பெறவும், தீர்க்கதரிசிகள் அவர்களுக்கு உதவிசெய்கிறார்கள்.

இந்த தீர்க்கதரிசிகள் எலியா தீர்க்கதரிசியைப்போல பிரபல்யமானவர்களல்ல. எலியாவினிடத்தில் காணப்பட்ட தீர்க்கதரிசன ஆவியைப்போல, இந்த தீர்க்கதரிசிகளிடத்தில் காணப்படவில்லை. இவர்கள் கர்த்தருக்கு பலிகளையும் செலுத்தவில்லை. தூபமும் காட்டவில்லை. ஆனாலும் இந்த தீர்க்கதரிசிகள் இஸ்ரவேல் ஜனங்களுக்கு கர்த்தருடைய சத்தியத்தை உபதேசம்பண்ணுகிறார்கள். கர்த்தருக்கு பயந்து எவ்வாறு ஜீவிப்பது என்று போதிக்கிறார்கள்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு பிரியமுள்ளவர்களாயும், பிரயோஜனமுள்ளவர்களாயும் எவ்வாறு ஜீவிப்பது என்றும் இந்தத் தீர்க்கதரிசிகள் இஸ்ரவேல் ஜனங்களுக்கு உபதேசம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார், தங்கள் தேவனாகிய கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்தில் ஜீவிப்பதற்கு, தீர்க்கதரிசிகளின் உபதேசங்களும், போதனைகளும் மிகவும் உதவியாயிருக்கிறது.

இஸ்ரவேல் தேசத்தில், கர்த்தருடைய தீர்க்கதரிசிகள், இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே ஆவிக்குரிய சத்தியங்களை உபதேசிப்பதும், அவர்களை ஆவிக்குரிய ஜீவியத்தில் வழிநடத்துவதும் யேசபேலுக்கு பிடிக்கவில்லை. இஸ்ரவேல் தேசத்தில் நடைபெறுகிற கர்த்தருடைய ஊழியங்களை முற்றிலுமாக ஒழித்துப்போடவேண்டுமென்று யேசபேல் திட்டமிடுகிறாள். இதன் நிமித்தமாக அவள் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை சங்காரம்பண்ணுகிறாள்.

இஸ்ரவேல் தேசத்தில் கர்த்தருடைய ஜனம் சொற்ப எண்ணிக்கையிலிருக்கிறார்கள். ஆசாரியரும் லேவியரும் யூதாதேசத்திற்கு போய்விடுகிறார்கள். இஸ்ரவேலில் மீதமானவர்களும் யேசபேலுக்கு பயந்து, கர்த்தரை ஆராதியாமல், பாகாலை ஆராதிக்கிறார்கள். இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபும் பாகாலை ஆராதிக்கிறான். இஸ்ரவேல் தேசத்தில் யூதமார்க்கம் அழிந்துபோகும் ஆபத்திலிருக்கிறது.

இஸ்ரவேல் தேசத்திலே, கர்த்தருக்கு உண்மையுள்ள தீர்க்கதரிசிகள், யேசபேலின் கொலைவெறிக்கும், சங்காரத்திற்கும் தப்பிக்கிறார்கள். அவர்கள் காடுகளிலும், கெபிகளிலும் தங்களை ஒளித்துக்கொள்கிறாகள். அவர்களால் இஸ்ரவேல் தேசத்திற்கு வந்து, இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே கர்த்தருடைய ஊழியத்தை செய்ய முடியவில்லை. அவர்களிடத்தில் ஊழியம் செய்யக்கூடிய தாலந்துகள் இருந்தாலும், அந்தத் தாலந்துகளை அவர்களால் பயன்படுத்த முடியவில்லை.

யேசபேலுக்கு தப்பிக்கிறவர்கள் குகைகளில் ஒளிந்திருக்கிறார்கள். அவர்களிடத்தில் ஜீவன் இருக்கிறது. ஆனாலும் அவர்கள் மரித்தவர்களைப்போல, கர்த்தருக்கு ஊழியம் செய்ய முடியாதவர்களாயும், ஜனங்களுக்கு பிரயோஜனமில்லாதவர்களாயும் இருக்கிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகள் அவருக்கு பிரியமுள்ளவர்களாயும், பிரயோஜனமுள்ளவர்களாயும் இருக்கவேண்டும். நாம் கர்த்தருக்கு பிரயோஜனமில்லாதவர்களாய் ஜீவிப்போமென்றால், நாம் ஜீவிப்பதில் அர்த்தம் எதுவுமில்லை. இப்படிப்பட்ட ஜீவியம், ஜீவனின் முடிவுக்கும், மரணத்திற்கும் அடையாளம்.

இஸ்ரவேல் தேசத்தில் ஆவிக்குரிய காரியங்கள் சீர்கெட்டுப்போயிருக்கிறது. அங்கே ஜனங்கள் கர்த்தரை ஆராதியாமல் பாகாலை ஆராதிக்கிறார்கள். யேசேபேலின் அதிகாரமும் பெரிதாயிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்தில் துன்பமும், சோகமும் நிரம்பியிருக்கிற இந்தக் காலத்தில், ஆகாப் ராஜாவின் அரண்மனையில், கர்த்தருக்குப் பிரியமான ஒரு நல்ல மனுஷன் இருக்கிறான். அவனுடைய பெயர் ஒபதியா. இவன் ஆகாபுடைய அரண்மனையின் விசாரிப்புக்காரன். ஒபதியா கர்த்தருக்கு மிகவும் பயந்து நடக்கிறவன் (1இராஜா 18:3). ஒபதியா தன் சிறுவயது முதல் கர்த்தருக்கு பயந்து நடக்கிறவன் (1இராஜா 18:12).

ஒபதியா என்னும் பெயருக்கு "கர்த்தருடைய ஊழியக்காரன்" என்று பொருள். இவன் கர்த்தருக்கு உண்மையுள்ளவனாயிருக்கிறான். ஆனாலும் இவன் ஆகாபின் அரண்மனையில், அவனுக்கு விசாரிப்புக்காரனாக பணி செய்கிறான். ஆகாப் ஒரு துன்மார்க்கன். ஒபதியா ஒரு நீதிமான். ஆகாப் ஒபதியாவை தன்னுடைய அரண்மனை விசாரிப்புக்காரனாய் வைத்திருப்பது ஆச்சரியமான காரியம்.

கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கிறவர்கள், தங்கள் கடமைகளிலும் உண்மையுள்ளவர்களாயிருப்பார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் நீதிமான்களாகவும், உண்மையும் சத்தியமுள்ளவர்களாகவும், சுறுசுறுப்புள்ளவர்களாகவும், நம்பிக்கைக்குரியவர்களாகவும் இருப்பார்கள். ஒபதியாவின் நல்ல சுபாவங்கள் ஆகாபுக்கு பிடித்திருக்கிறது.

ஆகையினால் ஆகாப் ஒபதியாவை தன்னுடைய நம்பிக்கைக்கு பாத்திரவானாக கருதி அவனை தன்னுடைய அரண்மனை விசாரிப்புக்காரனாக நியமிக்கிறான்.

ஆகாப் பல சமயங்களில் தன்னை நம்பாவிட்டாலும், ஒபதியாவை நம்புகிறான். ஒரு சமயம் ஆகாப் ஒபதியாவைப் பார்த்து: "நீ தேசத்திலிருக்கிற எல்லா நீரூற்றுகளிடத்திலும், எல்லா ஆறுகளிடத்திலும் போ; நாம் சகல மிருகஜீவன்களையும் சாகக்கொடாமல், குதிரைகளையும் கோவேறு கழுதைகளையுமாவது உயிரோடே காப்பாற்றும்படிக்கு நமக்குப் புல் அகப்படுமா என்று பார்" (1இராஜா 18:5) என்று சொல்லுகிறான். தேசத்தின் முக்கியமான வேலைகளெல்லாவற்றையும், ஆகாப் ஒபதியாவிடம் நம்பி ஒப்படைக்கிறான்.

ஒபதியா கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கிற நீதிமானாயிருந்தாலும், அவன் துன்மார்க்கனான ஆகாபின் அரண்மனை விசாரிப்புக்காரனாயிருப்பதும் ஆச்சரியமான காரியம். ஆகாபின் அரண்மனையிலே விக்கிரகாராதனை நிரம்பியிருக்கிறது. அங்கே துன்மார்க்கமும் அதிகரித்திருக்கிறது. இப்படிப்பட்ட பாவமான சூழ்நிலையில், ஒபதியா ஆகாபுக்கு அரண்மனை விசாரிப்புக்காரனாக இருக்கிறான்.

ஒபதியா ஆகாபின் அரண்மனையில் பணிபுரிந்தாலும், பாகாலுக்கு தன்னுடைய முழங்கால்களை முடக்குமாறு, அவனை யாரும் கட்டாயம் பண்ணவில்லை. ஆகையினால்தான், ஒபதியா ஆகாபுடைய அரண்மனையின் துன்மார்க்கங்களையெல்லாம் சகித்துக் கொண்டு, அங்கே விசாரிப்புக்காரனாக வேலை செய்கிறான்.

ஒபதியாவின் மனச்சாட்சி சுத்தமாயிருக்கிறது. அவன் கர்த்தருக்கு மாத்திரமே பயந்து ஜீவிக்கிறான். கர்த்தருக்கு உண்மையுள்ளவனாயிருக்கிறான். ஆகையினால் அவன், தான் வேலைபார்க்கும் ஸ்தலத்தைப்பற்றிக் கவலைப்படாமல், ஆகாபின் அரண்மனையிலே விசாரிப்புக்காரனாக பணிபுரிகிறான்.

இந்தப் பிரபஞ்சம் பொல்லாததாயிருக்கிறது. விசுவாசிகளாகிய நாம் பொல்லாதவர்கள் மத்தியிலே இருக்கக்கூடாது என்று தீர்மானம்பண்ணினால், நம்மால் இந்தப் பிரபஞ்சத்தில் எங்கும் இருக்க முடியாது. எந்த வேலையிலும் சேரமுடியாது. நாம் எந்த ஸ்தலத்திலிருந்தாலும், எந்த சூழ்நிலையிலிருந்தாலும், நம்முடைய மனச்சாட்சி கர்த்தருக்கு முன்பாக சுத்தமாயிருக்கவேண்டும். நாம் கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கவேண்டும். நம்முடைய கடமைகளை நாம் உண்மையாகவும், உத்தமமாகவும் நிறைவேற்றவேண்டும்.

ஒபதியா ஆகாபின் அரண்மனையில் விசாரிப்புக்காரனாக வேலை செய்தாலும், அவன் தன்னுடைய நன்மையை மாத்திரம் பார்த்துக்கொண்டு, மற்றவர்களுடைய நன்மைகளை விசாரிக்காமல் இருந்துவிடவில்லை. அவன் கர்த்தருடைய தீர்க்கதரிசிகள்மீது கரிசனையோடிருக்கிறான்.

யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளைச் சங்கரிக்கிறபோது, ஒபதியா நூறு தீர்க்கதரிசிகளைச் சேர்த்து, அவர்களைக் கெபிக்கு ஐம்பது ஐம்பது பேராக ஒளித்துவைத்து, அவர்களுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுத்து, அவர்களைப் பராமரித்துவருகிறான் (1இராஜா 18:4).

இஸ்ரவேல் தேசத்தில் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளுக்கு உபத்திரவம் அதிகரிக்கிறது. ஒபதியா தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை உபத்திரவங்களிலிருந்து பாதுகாக்கிறான். அவர்களின் நூறு பேரை இரண்டு கெபிகளில், ஒவ்வொரு கெபிக்கும் ஐம்பது ஐம்பது பேராக ஒளித்து வைக்கிறான். தீர்க்கதரிசிகளால் குகைகளை விட்டு வெளியே வரமுடியவில்லை. ஒபதியாவோ, கர்த்தருடைய தீர்க்கதரிசிகளுக்கு, அந்த குகைகளுக்குள்ளே அப்பமும் தண்ணீரும் கொடுத்து, அவர்களை பராமரித்து வருகிறான். இந்த சம்பவம் யேசபேலுக்கு தெரியவந்தால், ஒபதியா சங்காரமாவது நிச்சயம்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை கைவிடாமல் பாதுகாக்கிறார். உபத்திரவமான காலங்களில்கூட, கர்த்தருடைய பிள்ளைகளுக்கும், அவருடைய ஊழியக்காரர்களுக்கும், தெய்வீக கிருபையினால் பாதுகாப்பு கிடைக்கிறது. தம்முடைய ஜனத்திற்கு உதவிசெய்ய, கர்த்தர் தமக்கு ஏற்ற வேளையிலே சகாயம்பண்ணுகிறவர்களை எழுப்புகிறார்.

யேசேபேலின் கைகளுக்கு தங்களால் தப்பிக்கவே முடியாது என்று கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் நினைத்தார்கள். தாங்கள் பிழைப்பதற்கு வழியே இல்லை என்று நினைத்து அவர்கள் சோர்ந்துபோனார்கள். ஆனாலும் கர்த்தர் அவர்களைக் கைவிடவில்லை. கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளைப் பாதுகாக்கிறார்.

யேசபேல் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை சங்காரம்பண்ணும்போது, கர்த்தர் இஸ்ரவேல் தேசத்திற்கு கொடுத்து வரும் தம்முடைய பராமரிப்புக்களை நிறுத்திவிடுகிறார். தேசத்தில் மழை பெய்யவில்லை. மிகப்பெரிய பஞ்சமுண்டாயிற்று.

இஸ்ரவேல் தேசத்தில் மழை பெய்யாமல் பஞ்சம் உண்டாயிருப்பதற்கு கர்த்தருடைய தீர்க்கதரிசிகளே காரணம் என்று நினைத்து, யேசபேல் அவர்களை சங்காரம் செய்திருக்கலாம். எலியா ஏற்கெனவே ஆகாபை நோக்கி, "என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (1இராஜா 17:1) என்று தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறார்.

தேசத்தில் மழை பெய்யாமல் பஞ்சம் வருவதற்கு கர்த்தருடைய தீர்க்கதரிசிகளே காரணம் என்று யேசபேல் நினைக்கிறாள். அவள் கர்த்தரின் தீர்க்கதரிசிகளை சங்காரம் பண்ணுகிறாள். கர்த்தருடைய சித்தமும் திட்டமுமோ வேறுவிதமாயிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்தில் பாகாலின் தீர்க்கதரிசிகள் சங்காரம்பண்ணப்பட்ட பிறகு, தேசத்தில் பெருமழை பெய்கிறது. தேசத்தில் மழை பெய்யாமலிருப்பதற்கு கர்த்தரின் தீர்க்கதரிசிகள் காரணமல்ல. இதற்கு பாகாலின் தீர்க்கதரிசிகளும், அவர்களுடைய விக்கிரகாராதனையுமே காரணம்.

இஸ்ரவேல் தேசத்தில் மூன்று வருஷமாக மழை பெய்யவில்லை. தேசத்திலே மூன்றரை வருஷம் மழை பெய்யாமல் கொடிய பஞ்சமுண்டாயிற்று என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஆகாபின் அரண்மனையில்கூட தண்ணீர் இல்லை. தண்ணீர் பஞ்சம் அதிகமாயிருப்பதினால், ஆகாப் ராஜாவே தன் அரண்மனையைவிட்டு, தன்னுடைய தேசத்தில், தண்ணீர் இருக்கும் இடத்தை தேடிப்பார்க்க போகவேண்டியதாயிற்று.

ஆகாப் ஒபதியாவைப் பார்த்து: "நீ தேசத்திலிருக்கிற எல்லா நீரூற்றுகளிடத்திலும், எல்லா ஆறுகளிடத்திலும் போ; நாம் சகல மிருகஜீவன்களையும் சாகக்கொடாமல், குதிரைகளையும் கோவேறு கழுதைகளையுமாவது உயிரோடே காப்பாற்றும்படிக்கு நமக்குப் புல் அகப்படுமா என்று பார்" என்று சொல்லுகிறான். அப்படியே தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி, அதைப் பகுத்துக்கொண்டு, ஆகாப் ஒரு வழியாயும், ஒபதியா வேறொரு வழியாயும் போகிறார்கள் (1இராஜா 18:5,6).

இஸ்ரவேல் தேசத்தில் கொடிய பஞ்சமுண்டானதினால், ஏராளமான மிருகஜீவன்கள் செத்துப்போயிற்று. அவைகள் மொத்தமாய் அழிந்துபோவதை ஆகாப் விரும்பவில்லை. இப்போது உயிரோடிருக்கிற மிருகஜீவன்களையாவது சாகக்கொடாமல் உயிரோடே காப்பாற்றவேண்டுமென்று ஆகாப் தீர்மானமாயிருக்கிறான்.

ஆகாபின் ஆத்துமா கர்த்தரைவிட்டு விலகிப்போயிருக்கிறது. அது சீர்கெட்டு கிடக்கிறது. ஆகாபுக்கு தன்னுடைய ஆத்துமாவைக்குறித்து கவலையில்லை. ஆனால் அவனோ தன்னுடைய குதிரைகளையும் கோவேறு கழுதைகளையும் குறித்து கவலைப்படுகிறான்.

ஆகாப் கர்த்தருடைய கிருபையை தேடிப் பார்க்காமல், தன்னுடைய குதிரைகளுக்கும், கோவேறு கழுதைகளுக்கும் புல் அகப்படுமா என்று தேடிப்பார்க்கிறான். கர்த்தர் தேசத்தில் மழை பெய்யாமல் தடுத்திருக்கிறார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பும், சாபமும் இஸ்ரவேல் தேசத்தின்மேல் வந்திருக்கிறது. இதனால் தேசத்தில் மழை பெய்யாமல் போயிற்று. அங்கே கொடிய பஞ்சமுண்டாயிற்று. இஸ்ரவேல் ஜனத்தாரின் பாவமும், விக்கிரகாராதனையுமே, தேசத்தில் ஏற்பட்டிருக்கிற பஞ்சத்திற்கு காரணம்.

ஆகாப் புல் அகப்படுமா என்று தேடிப்போவதற்கு பதிலாக, கர்த்தரைத் தேடவேண்டும். கர்த்தருடைய கிருபையை பெற்றுக்கொள்ள நடவேண்டும். சாபத்திற்கு காரணமாகயிருக்கும் பாவங்களை இஸ்ரவேல் தேசத்தைவிட்டு நீக்கிப்போடவேண்டும். ஆகாப் ராஜாவும், இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். அவர்கள் பாகாலை ஆராதிப்பதை விட்டு விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டும். அப்போது கர்த்தர் இஸ்ரவேல் தேசத்திலே க்ஷேமத்தை கட்டளையிடுவார்.

யூதாதேசம் இஸ்ரவேல் தேசத்திற்கு அருகாமையிலிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்திலே மூன்றரை வருஷங்களாக மழை பெய்யாமல், கொடிய பஞ்சம் உண்டானபோது, இப்படிப்பட்ட பஞ்சம் யூதாதேசத்தில் உண்டாகவில்லை. யூதாதேசத்திலே மழை பெய்கிறது. தானியம் தாராளமாய் விளைகிறது. தேசத்தில் செழிப்பு நிரம்பியிருக்கிறது. அவர்களுக்கு சகலமும் தாராளமாயும், சம்பூரணமாயும், குறைவில்லாமலும் கிடைக்கிறது. கர்த்தர் யூதாவை ஆளுகை செய்கிறார். இஸ்ரவேல் தேசத்தையோ ஆகாபும், விக்கிரகாராதனைக்காரியாகிய யேசபேலும் ஆளுகை செய்கிறார்கள்.

மூன்று வருஷங்களுக்கு முன்பு, எலியா ஆகாபுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொன்னார். இஸ்ரவேல் தேசத்தில் மழை பெய்யாது என்பது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு. கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரம் தேசத்தில் மூன்று வருஷம் மழை பெய்யாமல் கொடிய பஞ்சமுண்டாயிற்று.

அநேகநாள் சென்று, மூன்றாம் வருஷமாகையில், கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்கு உண்டாயிற்று. கர்த்தர் எலியாவை நோக்கி, "நீ போய் ஆகாபுக்கு உன்னைக் காண்பி; நான் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடுவேன்" என்று சொல்லுகிறார். அப்பொழுது எலியா ஆகாபுக்குத் தன்னைக் காண்பிக்கப் போகிறார்; பஞ்சமோவெனில் சமாரியாவிலே கொடிதாயிருக்கிறது (1இராஜா 18:1,2).

எலியாவைப்பற்றிச் சொல்லும்போது, அவர் "திஸ்பியனாகிய எலியா" என்று சொல்லப்பட்டிருக்கிறது. திஸ்பியன் என்னும் பெயருக்கு "மாற்றுகிறவர்" அல்லது "மறுமலர்ச்சி உண்டுபண்ணுகிறவர்" என்று பொருள். எலியா இஸ்ரவேலை மாற்றுகிறவராகவும், இஸ்ரவேலிலே மறுமலர்ச்சி ஏற்படுத்துகிறவராகவும் இருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைவிட்டு விலகி பாகால்களைப் பின்பற்றிப்போயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியாமல், அவருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். எலியா இஸ்ரவேல் ஜனத்தாரை, மறுபடியும் கர்த்தரிடத்தில் அழைத்து வரவேண்டும். கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணின அவர்களை, கர்த்தருக்கு கீழ்ப்படியச் செய்யவேண்டும்.

கர்த்தர் சீக்கிரத்தில் சமாரியாவிலே மழையைக் கட்டளையிடுவார். இதுவரையிலும் ஏற்பட்ட கொடிய பஞ்சம் முடிவுக்கு வரும். எலியா செய்ய வேண்டியதை எலியா செய்யவேண்டும். அப்போது தாம் செய்ய வேண்டியதை கர்த்தர் செய்வார்.

"அவன் இஸ்ரவேல் சந்ததியாரில் அநேகரை அவர்கள் தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திருப்புவான். பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் என்றான்" (லூக் 1:16,17).

இஸ்ரவேல் தேசத்தில் மழை பெய்யாது என்று எலியா ஆகாபுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொன்னார். அவர் சொன்ன பிரகாரம் இஸ்ரவேல் தேசத்தில் மழை பெய்யவில்லை. பஞ்சமோவெனில் சமாரியாவிலே கொடியதாயிருக்கிறது. ஆகாப் எலியாவைப் பிடிக்க வகை தேடுகிறான். ஆனால் அவனால் எலியாவைப் பிடிக்க முடியவில்லை. கர்த்தர் எலியாவை தம்முடைய பாதுகாப்பில் ஒளித்து வைத்திருக்கிறார்.

ஆகாப் எலியாவைப் பிடிக்க எப்படியெல்லாம் முயற்சி பண்ணினான் என்பதை, ஒபதியா எலியாவுக்கு சொல்லுகிறான். ஒபதியா எலியாவை நோக்கி, "உம்மைத் தேடும்படி என் ஆண்டவன் மனுஷரை அனுப்பாத ஜாதியும் ராஜ்யமும் இல்லை என்று உம்முடைய தேவனாகிய கர்த்தரின் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; நீர் இல்லையென்று அவர்கள் சொன்னபோது, அவன் அந்த ராஜ்யத்தையும் அந்த ஜாதியையும் உம்மைக் காணவில்லை என்று சத்தியம் வாங்கிக்கொண்டான்" (1இராஜா 18:10) என்று சொல்லுகிறான்.

எலியாவைப் பிடித்து கொடுக்கிறவர்களுக்கு அதிகமான சன்மானம் கொடுக்கப்படும் என்றுகூட ஆகாப் பிரகடனம் செய்திருப்பான். எலியாவைத் தேடி கண்டுபிடித்து, அவர் இஸ்ரவேல் தேசத்திற்கு சொன்ன சாபமான வார்த்தைகளை திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று ஆகாப் எலியாவினிடத்தில் பணிவோடு விண்ணப்பம்பண்ண வேண்டும். ஆனால் ஆகாபினிடத்தில் பணிவுமில்லை. அவனிடத்தில் மனமாற்றமும் மனந்திரும்புதலும் இல்லை.

எலியாவைத் தேடி கண்டுபிடித்து, அவர் சொன்ன வார்த்தைகளினிமித்தமாய், அவரைத் தண்டிக்கவேண்டும் என்னும் கோபவெறி மாத்திரமே ஆகாபினிடத்திலிருக்கிறது. எலியா கர்த்தருடைய வார்த்தையைச் சொன்னார். ஆகாப் எலியாவை எதிர்க்கும்போது, அவன் எலியாவை அனுப்பின கர்த்தரையே எதிர்க்கிறான்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு முடிவு பெறும் காலம் வருகிறது. கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரம் இஸ்ரவேல் தேசத்தில் மழை பெய்யவில்லை. இப்போது கர்த்தர், "நான் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடுவேன்" (1இராஜா 18:1) என்று சொல்லுகிறார். கர்த்தர் எலியாவிடம் "நீ போய் ஆகாபுக்கு உன்னைக் காண்பி" என்றும் சொல்லுகிறார். கர்த்தர் இதுவரையிலும் எலியாவை ஆகாபுக்கு மறைத்து வைத்திருந்தார். இப்போதோ ஒளிந்திருக்கும் காலம் முடிவுபெறுகிறது. எலியா இனிமேலும் ஒளிந்திருக்காமல், ஆகாபுக்கு தன்னைக் காண்பிக்கவேண்டும்

எலியா இரண்டு வருஷங்கள் சாறிபாத் ஊரிலே இருந்தார். அவர் இதற்கு முன்பு ஒரு வருஷம் கேரீத் ஆற்றண்டையில் ஒளித்திருந்தார். மூன்று வருஷங்களாக எலியா ஆகாபுக்கு தன்னைக் காண்பிக்கவில்லை. இந்தக் காலத்தில் சமாரியாவிலே பஞ்சம் கொடிதாயிருகிறது. இந்தப் பஞ்சத்தைப்பற்றி லூக்கா எழுதின சுவிசேஷத்திலும், யாக்கோபு எழுதின நிருபத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

"அன்றியும் எலியாவின் நாட்களிலே மூன்று வருஷமும் ஆறுமாதமும் வானம் அடைபட்டு, தேசமெங்கும் மிகுந்த பஞ்சம் உண்டாயிருந்தபோது, இஸ்ரவேலருக்குள் அநேகம் விதவைகள் இருந்தார்கள்" (லூக் 4:25).

"எலியா என்பவன் நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்று வருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை" (யாக் 5:17).

ஆகாபால் எலியாவைத் தேடி கண்டுபிடிக்க முடியவில்லை. எலியாவே ஆகாபுக்கு தன்னைக் காண்பிக்கப்போகிறார். ஆகாபை எங்கே சந்திக்கவேண்டும் என்று எலியாவுக்கு தெரியும். கர்த்தருடைய ஆவியானவர் எலியாவை வழிநடத்துகிறார்.

எலியா ஆகாபை சந்திக்கும் முன்பாக, ஆகாபின் அரண்மனை விசாரிப்புக்காரனாகிய, ஒபதியாவை சந்திக்கிறார். ஒபதியா வழியில் போகும்போது, எலியா அவனுக்கு எதிர்ப்படுகிறார்; அவன் எலியாவை இன்னார் என்று அறிந்து, முகங்குப்புற விழுந்து, "நீர் என் ஆண்டவனாகிய எலியா அல்லவா" (1இராஜா 18:7) என்று கேட்கிறான்.

ஒபதியா தீர்க்கதரிசிகளின் புத்திரருக்கு அதிக மதிப்பும் மரியாதையும் கொடுக்கிறவன். அவர்களைக் கனம்பண்ணுகிறவன். எலியாவோ தீர்க்கதரிசிகளின் புத்திரர்களுக்கு, பிதாவைப்போல இருக்கிறார். ஆகையினால் ஒபதியா எலியாவைப் பார்த்தவுடனே, அவருக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து அவரைப் பணிந்துகொள்கிறான். ஒபதியா கர்த்தருக்கு மிகவும் பயந்து நடக்கிறவன். அவன் கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எலியாவுக்கும் பயந்து நடக்கிறான்.

எலியா ஒபதியாவுக்கு மென்மையான பிரதியுத்தரம் சொல்லுகிறார். எலியா ஒபதியாவை நோக்கி, "நான்தான்; நீ போய், இதோ, எலியா வந்திருக்கிறான் என்று உன் ஆண்டவனுக்குச் சொல்" (1இராஜா 18:8). என்று சொல்லுகிறார்.

ஒபதியா எலியாவைப்பற்றி சொன்னபோது, "நீர் என் ஆண்டவனாகிய எலியா அல்லவா" என்று சொல்லுகிறான். ஆனால் எலியாவோ தன்னை ஆண்டவனாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஒபதியா தன்னை ஆண்டவன் என்று அழைப்பதையும் எலியா விரும்பவில்லை. எலியா "ஆண்டவன்" என்னும் ஸ்தானத்தை ஆகாபுக்கே கொடுக்கிறார். எலியா ஆகாபைப்பற்றிச் சொல்லும்போது, "உன் ஆண்டவனுக்குச் சொல்" என்று சொல்லுகிறார். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் மனுஷரிடத்திலிருந்து மகிமையைத் தேடமாட்டார்கள்.

தீர்க்கதரிசிகளை தரிசனக்காரர், மேய்ப்பர்கள், ஜாமக்காரர், ஊழியக்காரர் என்று அழைப்பது வழக்கம். இதுவே கர்த்தர் அவர்களுக்கு நியமித்திருக்கிற ஊழிய அந்தஸ்து. கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய தன்னை "ஆண்டவன்" என்று அழைக்கவேண்டாம் என்று எலியா நினைக்கிறார். எலியா யாரையும் ஆளுகை செய்ய வரவில்லை. இயேசுகிறிஸ்துவும் இந்தப் பிரபஞ்சத்திற்கு வந்தபோது, ஊழியம் கொள்ளாமல், ஊழியம் செய்வதற்காகவே வந்தார்.

எலியா ஒபதியாவை நோக்கி, "நீ போய், இதோ, எலியா வந்திருக்கிறான் என்று உன் ஆண்டவனுக்குச் சொல்" (1இராஜா 18:8) என்று சொல்லுகிறார். ஒபதியா ஆகாபினிடத்தில் தன்னைப்பற்றிச் சொல்லவேண்டும். ஆனால் ஒபதியாவோ எலியாவின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிய பயப்படுகிறார். எலியாவின் வார்த்தையின் பிரகாரம், அவரைப்பற்றி ஆகாபினிடத்தில் சொன்னால், தனக்கு மரணமுண்டாகும் என்னும் பயம் ஒபதியாவின் மனதிலிருக்கிறது.

ஒபதியா எலியாவிடம், "ஆகாப் என்னைக் கொன்றுபோடும்படிக்கு, நீர் உமது அடியானை அவன் கையில் ஒப்புக்கொடுக்க நான் என்ன பாவம் செய்தேன்" (1இராஜா 18:9) என்று கேட்கிறார். எலியா தன்னை நல்ல நோக்கத்தோடு ஆகாபினிடத்தில் அனுப்புகிறார் என்னும் நம்பிக்கை ஒபதியாவின் மனதில் இல்லை. எலியா தன் ஜீவனுக்கு விரோதமாக சதிபண்ணுவதாக ஒபதியா சந்தேகப்படுகிறான்.

ஆகாப் ஒரு துன்மார்க்கன். எலியா கர்த்தருடைய தீர்க்கதரிசி. எலியாவிடமிருந்து அன்பான வார்த்தைகளையோ, ஆசீர்வாதமான வார்த்தைகளையோ பெற்றுக்கொள்வதற்கு, ஆகாபுக்கு எந்த தகுதியுமில்லை. அவன் எலியாவுக்கு விரோதமாக ஏராளமாய்த் தீங்கு செய்திருக்கிறான். ஆகாபால் எலியாவைப் பிடிக்க முடியாது என்பதும் ஒபதியாவுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. எலியாவைப் பிடித்தாலும், ஆகாபால் எலியாவின்மீது கைபோடமுடியாது. கர்த்தர் எலியாவை விசேஷித்த விதமாய் பாதுகாக்கிறார் என்பதை ஒபதியா அறிந்திருக்கிறான்.

ஒபதியா எலியாவுக்கும் கர்த்தருக்கும் இடையேயுள்ள தொடர்பைப்பற்றி நன்றாய் அறிந்திருக்கிறான். ஒபதியா எலியாவினிடத்தில், "இப்போதும் நீ போய், உன் ஆண்டவனுக்கு, இதோ, எலியா வந்திருக்கிறான் என்று சொல் என்று நீர் சொல்லுகிறீரே. நான் உம்மை விட்டுப்போனவுடனே ஒருவேளை கர்த்தருடைய ஆவியானவர் உம்மை எடுத்து, நான் அறியாத இடத்திற்குக் கொண்டுபோவார்; அப்பொழுது நான் ஆகாபிடத்திற்குப்போய் அறிவித்தபின்பு, அவன் உம்மைக் காணாவிட்டால், என்னைக் கொன்றுபோடுவானே" (1இராஜா 18:11,12) என்று பயத்தோடும் நடுக்கத்தோடும் சொல்லுகிறான்.

ஒபதியா தன்னுடைய சிறுவயது முதல் கர்த்தருக்கு பயந்து நடக்கிறவன். இப்போது அவன் எலியாவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, ஆகாபினிடத்தில் எலியாவைப்பற்றிச் சொன்னால், ஆகாப் தன்னைக் கொன்றுபோடுவான் என்று ஒபதியா பயப்படுகிறான். ஆகாபின் கையினால் செத்துப்போகுமளவுக்கு, தான் எந்தப் பாவமும் செய்யவில்லை என்று ஒபதியா நினைக்கிறான்.

ஒபதியா ஆகாபினிடத்தில் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "ஆகாப் என்னைக் கொன்றுபோடும்படிக்கு, நீர் உமது அடியானை அவன் கையில் ஒப்புக்கொடுக்க நான் என்ன பாவம் செய்தேன்" (1இராஜா 18:9) என்றும்,

"யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசகளைக் கொன்றுபோடுகிறபோது, நான் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளில் நூறு பேரை ஒவ்வொரு கெபியிலே ஐம்பது ஐம்பது பேராக ஒளித்துவைத்து, அவர்களுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுத்து, பராமரித்துவந்த என்னுடைய செய்கை என் ஆண்டவனுக்கு அறிவிக்கப்படவில்லையோ?" (1இராஜா 18:13) என்றும் சொல்லுகிறான்.

ஒபதியா ஆகாபின் அரண்மனை விசாரிப்புக்காரனாயிருந்தாலும், அவன் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளுக்கு ஆதரவாயிருக்கிறவன். ஒபதியாவுக்கு ஆகாபின்மீது உண்மையான பாசமில்லை. ஆகாபின்மீது ஒபதியாவுக்கு அக்கரையுமில்லை. ஒபதியா நூறு தீர்க்கதரிசிகளை யேசபேலின் கைகளுக்கு விலக்கி பாதுகாத்தவன். ஆனால் இப்போது பெரிய தீர்க்கதரிசியாகிய எலியா, தன்னை ஆகாபின் கையிலே ஏன் ஒப்புக்கொடுக்கிறார் என்று ஒபதியாவுக்கு புரியவில்லை.

நூறு தீர்க்கதரிசிகளைப் பாதுகாத்ததினால், எலியா தன்னை ஆகாபின் கையிலிருந்து பாதுகாப்பார் என்று ஒபதியா நம்புகிறான். ஆனால் எலியாவின் வார்த்தைகளோ ஒபதியாவின் நம்பிக்கையை சீர்குலைத்துவிடுகிறது. எலியா தன்னை ஆகாபின் கையிலே ஒப்புக்கொடுக்கிறார் என்று ஒபதியா சந்தேகப்படுகிறான்.

ஒபதியா எலியாவின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிய மறுக்கிறான். ஒபதியா எலியாவை நோக்கி, "உம்மைத் தேடும்படி என் ஆண்டவன் மனுஷரை அனுப்பாத ஜாதியும் ராஜ்யமும் இல்லை என்று உம்முடைய தேவனாகிய கர்த்தரின் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; நீர் இல்லையென்று அவர்கள் சொன்னபோது, அவன் அந்த ராஜ்யத்தையும் அந்த ஜாதியையும் உம்மைக் காணவில்லை என்று சத்தியம் வாங்கிக்கொண்டான்" (1இராஜா 18:10) என்றும்,

"இப்போதும் என் ஆண்டவன் என்னைக் கொன்றுபோடும்படியாக, நீர்: இதோ, எலியா வந்திருக்கிறான் என்று போய் அவனுக்குச் சொல் என்று சொல்லுகிறீரே" (1இராஜா 18:14) என்றும் சொல்லுகிறான்.

எலியா ஒபதியாவை சமாதானம்பண்ணுகிறார். தன்னுடைய வார்த்தையின் பிரகாரம் இன்றைக்கு தன்னை ஆகாபுக்கு முன்பாக நிச்சயமாய் காண்பிக்கப்போவதாக, எலியா உறுதிபண்ணுகிறார். எலியா ஒபதியாவை நோக்கி, "இன்றைக்கு என்னை அவனுக்குக் காண்பிப்பேன் என்று சேனைகளின் கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்" (1இராஜா 18:15) என்று சொல்லுகிறார்.

ஒபதியா எலியாவின் வார்த்தைகளை நம்புகிறான். அப்பொழுது ஒபதியா போய், ஆகாபைச் சந்தித்து, எலியா தன்னிடத்தில் சொன்ன செய்தியை அவனுக்கு அறிவிக்கிறான் (1இராஜா 18:16). ஆகாப் எந்த வழியில் போனான் என்பது ஒபதியாவுக்கு தெரியும் (1இராஜா 18:6).

எலியாவைப்பற்றிய செய்தியைக் கேட்டவுடனேயே, ஆகாப் எலியாவை சந்திக்க வருகிறான். எலியாவைப்பற்றிய செய்தியைக் கேட்பது ஆகாபுக்கு அதிர்ச்சியாயும், ஆச்சரியமாயும் இருக்கிறது. ஆகாப் எலியாவை கடந்த மூன்றரை வருஷங்களாக தேடிக்கொண்டிருக்கிறான். ஆனால் அவனால் எலியாவைப் பிடிக்க முடியவில்லை.

இப்போது ஆகாப் எலியாவைத் தேடவில்லை. அவன் தேடாமலிருக்கும்போது, எலியா ஆகாபை சந்திப்பதாக சொல்லுகிறார். "இன்றைக்கு என்னை அவனுக்குக் காண்பிப்பேன்" என்று எலியா கர்த்தருடைய நாமத்தினாலே சொல்லுகிறார்.

ஆகாப் தன்னுடைய குதிரைகளையும் கோவேறு கழுதைகளையும் உயிரோடே காப்பாற்றும்படி புல் அகப்படுமா என்று தேடிப்பார்க்கப்போனவன். புல்லைத் தேடிப்போனவன், எலியாவைக் கண்டுபிடிக்கிறான். எலியா ஆகாபுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுவார். "நான் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடுவேன்" (1இராஜா 18:1) என்பதே கர்த்தருடைய வார்த்தை.

கர்த்தருடைய வார்த்தை ஆகாபுக்கும் இஸ்ரவேல் ஜனத்தாருக்கும் ஆசீர்வாதமான வார்த்தை. ஆனால் ஆகாபின் மனச்சாட்சியோ குற்றமுள்ளதாயிருக்கிறது. கர்த்தர் ஆகாபுக்கு ஆசீர்வாதமான செய்தியைச் சொன்னாலும், அவனுடைய பாவத்தின் நிமித்தமாகவும், அக்கிரமத்தின் நிமித்தமாகவும், கர்த்தருடைய ஆசீர்வாதமான செய்தியை, அவனால் நம்பமுடியவில்லை. ஆகாப் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்குப் பயப்படுகிறான். கர்த்தருடைய ஆசீர்வாதத்தை அவன் எதிர்பார்க்கவில்லை.

எலியாவும் ஆகாபும்
1இராஜா 18:17-20

1இராஜா 18:17. ஆகாப் எலியாவைக் கண்டபோது, ஆகாப் அவனை நோக்கி: இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நீயல்லவா என்றான்.

1இராஜா 18:18. அதற்கு அவன்: இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நான் அல்ல; கர்த்தரின் கட்டளைகளை விட்டு பாகால்களைப் பின்பற்றினதினால் நீரும் உம்முடைய தகப்பன் வீட்டாருமே இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவர்கள்.

1இராஜா 18:19. இப்போதும் கர்மேல் பர்வதத்திலே இஸ்ரவேலனைத்தையும், பாகாலின் தீர்க்கதரிசிகள் நானூற்றைம்பது பேரையும், யேசபேலின் பந்தியிலே சாப்பிடுகிறதோப்பு விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகள் நானூறுபேரையும் என்னிடத்தில் கூட்டிக்கொண்டுவர ஆட்களை அனுப்பும் என்றான்.

1இராஜா 18:20. அப்படியே ஆகாப்: இஸ்ரவேல் புத்திரர் எல்லாரிடத்திலும் ஆட்களை அனுப்பி, கர்மேல்பர்வதத்திலே அந்தத் தீர்க்கதரிசிகளைக் கூடிவரும்படி செய்தான்.

ஆகாப் எலியாவை சந்திக்க வருகிறான். இஸ்ரவேலின் சரித்திரத்திலே ஆகாபைப்போல துன்மார்க்கமான ராஜா வேறு ஒருவரும் எழும்பினதில்லை. அதுபோலவே இஸ்ரவேலரை ஆசீர்வதிப்பதற்காக எலியாவைப்போல நல்ல தீர்க்கதரிசி வேறு ஒருவரும் எழும்பினதுமில்லை.

ஆகாப் ஒரு துன்மார்க்கன். அவனுடைய சுபாவங்களும் துன்மார்க்கமாயிருக்கிறது. அவன் எந்தவித ஆதாரமுமில்லாமல் எலியாவின்மீது குற்றம் சொல்லுகிறான். ஆகாபுக்கு, யெரொபெயாமின் சரித்திரம் தெரியும். யெரொபெயாம் கர்த்தருடைய தீர்க்கதரிசியைப் பிடிக்க தன்னுடைய கையை நீட்டியபோது, அவனுடைய கை மறத்துப்போயிற்று. ஆகாப் அந்த சம்பவத்தை நினைத்து மிகவும்எச்சரிக்கையாயிருக்கிறான். எலியாவைப் பிடிக்க தன்னுடைய கையை நீட்டினால், தன்னுடைய கையும் மறத்துப்போகும் என்னும் பயம் அவனுடைய மனதிலிருக்கிறது. ஆகையினால் ஆகாப் எலியாவுக்கு விரோதமாக தன்னுடைய கையை நீட்டவில்லை.

ஆகாப் எலியாவுக்கு விரோதமாக தன் கையை நீட்டாவிட்டாலும், ஆகாபின் வாய் நீளமாயிருக்கிறது. அவன் எலியாவுக்கு விரோதமாகத் தூஷண வார்த்தைகளைப் பேசுகிறான். ஆகாப் எலியாவைக் கண்டபோது, ஆகாப் அவனை நோக்கி: "இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நீயல்லவா" (1இராஜா 18:17) என்று சொல்லுகிறான். ஆகாப் தன்னுடைய வார்த்தையினால் தீர்க்கதரிசியாகிய எலியாவையும் தூஷிக்கிறான், எலியாவை அவனிடத்தில் அனுப்பின கர்த்தரையும் தூஷிக்கிறான். கர்த்தருடைய ஊழியக்காரருக்கு விரோதமாகப் பேசுகிறவர்கள், கர்த்தருக்கு விரோதமாகப் பேசுகிறார்கள்.

ஒபதியா எலியாவைப் பார்த்தபோது, அவன் எலியாவுக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து, "நீர் என் ஆண்டவனாகிய எலியா அல்லவா" (1இராஜா 18:7) என்று கேட்டான். ஒபதியா கர்த்தருக்குப் பயப்படுகிறவன். ஆகாபோ கர்த்தருக்கு விரோதமாய் துணிகரமாய் பாவம்செய்கிறவன். அவன் தன்னை துன்மார்க்கத்திற்கு முழுவதுமாக விற்றுப்போட்டவன். அவர்கள் இருவருமே எலியா தீர்க்கதரிசியைப் பார்த்தபோது, அவர்களுடைய வாயிலிருந்து புறப்படுகிற வார்த்தை, அவர்களுடைய சுபாவத்தை வெளிப்படுத்துகிறது.

எலியாவைப்போலவே இந்தப் பிரபஞ்சத்தில் நல்லவர்களும், நீதிமான்களும் அநேகர் இருக்கிறார்கள். துன்மார்க்கமான இந்த உலகம் அவர்களைப் பகைக்கிறது. நல்லவர்கள் மூலமாக மனுஷருக்கு நன்மை உண்டாகும். ஆனால் துன்மார்க்கமான ஜனங்களோ, நல்லவர்களுடைய சுபாவங்களைப் புரிந்துகொள்வதில்லை. அவர்கள் நல்லவர்களையும் நீதிமான்களையும் பார்த்து, "தேசத்தையும் மனுஷரையும் கலங்கப்பண்ணுகிறவர்கள் நீங்களல்லவா" என்று கேட்கிறார்கள். நல்லவர்கள் மனுஷருக்கு எவ்வளவுதான் நன்மை செய்தாலும், அவர்கள் ஜனங்களுக்கு தீமை செய்வதாக நினைத்து, அவர்கள்மீது தூஷணவார்த்தைகளைச் சொல்லுகிறார்கள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்தப் பிரபஞ்சத்திலிருந்தபோது, தாம் செல்லும் இடங்களிலெல்லாம், நன்மை செய்கிறராகவே சுற்றித்திரிந்தார். ஆனால் அக்காலத்திலிருந்த ஜனங்களோ, இயேசுகிறிஸ்துவையும், அவருடைய அப்போஸ்தலர்களையும் தூஷித்தார்கள்.

"அவர்களைக் காணாமல், யாசோனையும் சில சகோதரரையும் பட்டணத்து அதிகாரிகளிடத்தில் இழுத்துக்கொண்டு வந்து: உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள்" (அப் 17:6) என்று சொன்னார்கள்.

எலியா ஆகாபின் தூஷண வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் ஆகாபின்மீது குற்றம் சொல்லுகிறார். எலியா ஆகாபை நோக்கி, "இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நான் அல்ல; கர்த்தரின் கட்டளைகளை விட்டு பாகால்களைப் பின்பற்றினதினால் நீரும் உம்முடைய தகப்பன் வீட்டாருமே இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவர்கள்" (1இராஜா 18:18) என்று சொல்லுகிறார்.

துன்மார்க்கர்கள் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு பாத்திரவான்களாயிருப்பார்கள். அவர்கள் தங்களுக்கு கேடுண்டாக, தீமையான காரியங்களை செய்வார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் துன்மார்க்கரை எச்சரிக்கிறார்கள். அவர்கள்மீது வரப்போகும் நியாயத்தீர்ப்புக்களையும் அவர்களுக்கு முன்னறிவிக்கிறார்கள். துன்மார்க்கர் மனந்திரும்ப வேண்டும் என்பதும், அவர்கள் அழிவுக்கு தப்பிக்க வேண்டும் என்பதும் கர்த்தருடைய விருப்பம். கர்த்தர் இஸ்ரவேலைக் குணப்படுத்த விரும்புகிறார். ஆனால் இஸ்ரவேலரோ குணப்பட மறுக்கிறார்கள்.

ஆகாப் இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறான். அவன் கர்த்தரைப் பின்பற்றாமல் பாகால்களைப் பின்பற்றுகிறான். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை ஆராதியாமல், பாகால்களை ஆராதிப்பதினால், கர்த்தருடைய கோபமும் நியாயத்தீர்ப்பும் இஸ்ரவேல் தேசத்தின்மீது வந்திருக்கிறது. பாகால்களும், தோப்பு விக்கிரகங்களும் கர்த்தருக்கு அருவருப்பானவை.

ஆகாப் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருந்தாலும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறார். எலியா கர்த்தருடைய நாமத்தினால் ஆகாபுக்கு முன்பாக நிற்கிறார். எலியா கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார்.

எலியா ஆகாபை நோக்கி "இப்போதும் கர்மேல் பர்வதத்திலே இஸ்ரவேலனைத்தையும், பாகாலின் தீர்க்கதரிசிகள் நானூற்றைம்பதுபேரையும், யேசபேலின் பந்தியிலே சாப்பிடுகிறதோப்பு விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகள் நானூறுபேரையும் என்னிடத்தில் கூட்டிக்கொண்டுவர ஆட்களை அனுப்பும்" (1இராஜா 18:19) என்று சொல்லுகிறார்.

கர்மேல் பர்வதத்திற்கு இஸ்ரவேலர் அனைவரும் வரவேண்டும். இஸ்ரவேல் தேசத்திலே எல்லா பகுதிகளிலும் சிதறியிருக்கிற பாகால்களின் தீர்க்கதரிசிகளும் வரவேண்டும். அவர்களின் எண்ணிக்கை நானூற்று ஐம்பது. இவர்கள் தவிர யேசபேலுக்கு சொந்தமாக தோப்பு விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகள் நானூறு பேர் இருக்கிறார்கள்.

ஆகாப் எலியாவின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்கிறார். எலியா சொன்ன பிரகாரம் ஆகாப் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரிடத்திலும் ஆட்களை அனுப்புகிறார். அவர்களை கர்மேல் பர்வதத்தில் கூடிவரச் செய்கிறார். மேலும் பாகாலின் தீர்க்கதரிசிகள் நானூற்று ஐம்பது பேரையும், தோப்பு விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகள் நானூறுபேரையும் கர்மேல் பர்வதத்தில் கூடிவரச்செய்கிறார்.

ஆகாப் எலியாவைப் பார்த்து பயப்படுகிறார். எலியாவுக்கு எதிர்த்து நிற்கும் துணிச்சலோ, அவருடைய வார்த்தைக்கு எதிர்த்து பேசும் தைரியமோ ஆகாபிடத்தில் இல்லை. எலியா ஒருவேளை இஸ்ரவேல் தேசத்தை ஆசீர்வதிப்பார் என்றும் ஆகாப் எதிர்பார்க்கிறான். எலியா ஏற்கெனவே ஆகாபிடம் "என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும்" (1இராஜா 17:1) என்று சொல்லியிருக்கிறார். எலியா ஒருவேளை இஸ்ரவேல் தேசத்திலே மறுபடியும் மழை பெய்யச் சொல்லுவார் என்னும் எதிர்பார்ப்பு ஆகாபினிடத்தில் இருக்கிறது. தனக்கும் இஸ்ரவேல் தேசத்திற்கும் நன்மை உண்டாகும் என்று எதிர்பார்த்து, ஆகாப் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரையும், பாகாலின் தீர்க்கதரிசிகளையும், தோப்பு விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகளையும் கர்மேல் பர்வதத்திற்கு கூடிவரச்செய்கிறான்.

பாகாலின் தீர்க்கதரிசிகள் 1இராஜா 18:21-28

1இராஜா 18:21. அப்பொழுது எலியா சகல ஜனத்தண்டைக்கும் வந்து: நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றான், ஜனங்கள் பிரதியுத்தரமாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை.

1இராஜா 18:22. அப்பொழுது எலியா ஜனங்களை நோக்கி: கர்த்தரின் தீர்க்கதரிசிகளில் மீந்திருக்கிறவன் நான் ஒருவன்; பாகாலின் தீர்க்கதரிசிகளோ நானூற்றைம்பதுபேர்.

1இராஜா 18:23. இப்போதும் இரண்டு காளைகளை எங்களிடத்தில் கொண்டுவரட்டும்; ஒரு காளையை அவர்கள் தெரிந்துகொண்டு, அதைச் சந்துசந்தாகத் துண்டித்து, நெருப்புப் போடாமல் விறகுகளின்மேல் வைக்கக் கடவர்கள்; நான் மற்றக் காளையை அப்படியே செய்து, நெருப்புப் போடாமல் விறகுகளின்மேல் வைப்பேன்.

1இராஜா 18:24. நீங்கள் உங்கள் தேவனுடைய நாமத்தைச்சொல்லிக் கூப்பிடுங்கள்; நான் கர்த்தருடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுவேன்; அப்பொழுது அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம் என்றான்; அதற்கு ஜனங்களெல்லாரும் இது நல்ல வார்த்தை என்றார்கள்.

1இராஜா 18:25. அப்பொழுது எலியா பாகாலின் தீர்க்கதரிசிகளை நோக்கி: நீங்கள் அநேகரானதால் நீங்களே முந்தி ஒரு காளையைத் தெரிந்துகொண்டு அதை ஆயத்தம்பண்ணி, நெருப்புப்போடாமல் உங்கள் தேவனுடைய நாமத்தைச் சொல்லிக்கூப்பிடுங்கள் என்றான்.

1இராஜா 18:26. தங்களுக்குக் கொடுக்கப்பட்ட காளையைஅவர்கள் வாங்கி, அதை ஆயத்தம்பண்ணி: பாகாலே, எங்களுக்கு உத்தரவு அருளும் என்று காலமேதொடங்கி மத்தியானமட்டும் பாகாலின் நாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டார்கள்; ஆனாலும் ஒரு சத்தமும் பிறக்கவில்லை, மறு உத்தரவு கொடுப்பாரும் இல்லை. அவர்கள் கட்டின பலிபீடத்திற்கு எதிரே குதித்து ஆடினார்கள்.

1இராஜா 18:27. மத்தியானவேளையிலே எலியா அவர்களைப் பரியாசம்பண்ணி: உரத்த சத்தமாய்க் கூப்பிடுங்கள்; அவன் தேவனாமே, அவன் தியானத்தில் இருப்பான்; அல்லது அலுவலாயிருப்பான்; அல்லது பிரயாணம்போயிருப்பான்; அல்லது தூங்கினாலும் தூங்குவான்; அவனை எழுப்பவேண்டியதாக்கும் என்றான்.

1இராஜா 18:28. அவர்கள் உரத்தசத்தமாய்க் கூப்பிட்டு? தங்கள் வழக்கத்தின்படியே இரத்தம் தங்கள்மேல் வடியுமட்டும் கத்திகளாலும் ஈட்டிகளாலும் தங்களைக் கீறிக்கொண்டார்கள்.

எலியா இஸ்ரவேல் தேசத்தை ஆசீர்வதிப்பார் என்றும், தேசத்தின்மீது மழை பெய்யவேண்டும் என்று ஜெபம்பண்ணுவார் என்றும் ஆகாபும், ஜனங்களும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் எலியாவோ தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக பேசாமல், கர்த்தருடைய நாம மகிமைக்காக பேசுகிறார். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரைவிட்டு விலகி பாகால்களை பின்பற்றிப்போயிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். அவர்களுடைய இருதயங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு விரோதமாக எழும்பியிருக்கும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்களைவிட்டு நீங்கும். அது வரையிலும் அவர்களுக்கு மழையுமில்லை. ஆசீர்வாதமுமில்லை.

கர்த்தரைவிட்டு விலகிப்போனவர்கள், கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதங்களையோ, கிருபைகளையோ, சிலாக்கியங்களையோ எதிர்பார்க்க முடியாது. அவர்கள் மறுபடியும் கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டும். அப்போதுதான் கர்த்தருடைய கிருபை அவர்களுக்கு கிடைக்கும். இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாதபோது, தேசத்திலே மழை பெய்யவேண்டுமென்று எலியா எத்தனை தரம் ஜெபம்பண்ணினாலும், கர்த்தர் அவருடைய ஜெபத்திற்கு பதில் கொடுக்கமாட்டார்.

எலியா கர்த்தருடைய ஊழியக்காரராயிருந்தாலும், இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டியதுஅவசியமாயிருக்கிறது. முதலாவது பாவமன்னிப்பு. அதன்பின்பு ஆசீர்வாதம். இதுவே கர்த்தருடைய பிரமாணம். எலியாவுக்கு கர்த்தருடைய சித்தமும், அவருடைய பிரமாணமும் தெரியும். ஆகையினால் எலியா தேசத்திலே மழை பெய்யவேண்டுமென்று முதலாவதாக ஜெபம்பண்ணாமல், ஜனங்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டுமென்று அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார்.

கர்த்தருடைய கிரியைகளெல்லாம் நீதியும் நியாயமுமுள்ளது. கர்த்தர் அநீதியான காரியங்களை செய்கிறவரல்ல. கர்த்தருடைய நீதியினாலும், நியாயத்தீர்ப்பினாலுமே இஸ்ரவேல் தேசத்திலே மழை பெய்யாதிருக்கிறது. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அவருடைய சித்தத்தையும், திட்டத்தையும் அறிந்திருக்கவேண்டும். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் ஜெபம்பண்ணவேண்டும். அப்போதுதான் ஜெபத்திற்கு பதில் கிடைக்கும்.

இஸ்ரவேல் ஜனத்தாரிடம் கர்த்தருக்கு பயப்படும் பயம் இருக்கவேண்டும். தாங்கள் கர்த்தரை விட்டு விலகிப்போய்விட்டால், கர்த்தரும் தங்களை விட்டு விலகிப்போய்விடுவார் என்னும் சிந்தனை அவர்களுடைய மனதிலே நிலைத்திருக்க வேண்டும். கர்த்தருக்கு விரோதமாய் துணிகரமாய்ப் பாவம் செய்யக்கூடாது.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரையும் ஆராதிக்கிறார்கள். பாகால்களையும் ஆராதிக்கிறார்கள். ஒரு சிலர் கர்த்தரை மாத்திரம் ஆராதிக்கிறார்கள். வேறு சிலர் பாகால்களை மாத்திரம் ஆராதிக்கிறார்கள். ஆனாலும், இஸ்ரவேலரில் அநேகர் கர்த்தரையும் பாகால்களையும் ஆராதிக்கிறார்கள். அவர்களுக்கு ஜீவனுள்ள கர்த்தருக்கும், ஜீவனில்லாத பாகால்களுக்கும் வித்தியாசம் தெரியவில்லை.

அப்பொழுது எலியா சகல ஜனத்தண்டைக்கும் வந்து: "நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள்" (1இராஜா 18:21) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் தீர்க்கதரிசிகளைப் பிரியப்படுத்துவதற்காக கர்த்தரை ஆராதிக்கிறார்கள். அவர்கள் யேசபேலையும், ஆகாபின் அரண்மனையிலுள்ள பாகாலின் தீர்க்கதரிசிகளையும் பிரியப்படுத்துவதற்காக பாகால்களையும் ஆராதிக்கிறார்கள்.

கர்த்தர் ஒருவரே. கர்த்தரைத் தொழுதுகொள்கிறவர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் மாத்திரமே தேவனானவர். அவர் மாத்திரமே சர்வவல்லமையுள்ளவர். கர்த்தரையல்லாமல் வேறு தெய்வமில்லை. இஸ்ரவேல் தேசத்திலே கர்த்தருக்கு உதவிசெய்ய, பாகால்கள் தேவையில்லை. கர்த்தர் ஒருவராகவே பெரிய காரியங்களை செய்கிறவர். அவர் மாத்திரமே போதுமானவர். அவரே சர்வவல்லமையும், சர்வஞானமுமுள்ளவர்.

இஸ்ரவேல் ஜனத்தார் சர்வவல்லரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். ஆனால் அவர்களுக்கு சர்வவல்லமையுள்ள தேவன் யார் என்பது தெரியவில்லை. ஒரு சிலர் கர்த்தரே தெய்வம் என்று சொல்லுகிறார்கள். வேறு சிலரோ பாகால்களை தெய்வம் என்கிறார்கள். அவர்களில் அநேகர் கர்த்தரும் பாகால்களும் ஏகோபித்து தெய்வங்களாயிருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் இரண்டு நினைவுகளால் தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் குந்திக்குந்தி நடக்கிறார்கள். கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறவர்கள் சீராக நடப்பார்கள். அவர்கள் வலதுபக்கமும், இடதுபக்கமும் சாயாமல் நேராக நடப்பார்கள். கர்த்தருடைய ஜனத்தார் அவருடைய வழிகளில் நடக்கும்போது இடறி விழமாட்டார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாரிடத்தில் கர்த்தரைக் குறித்து தெளிந்த சிந்தனையில்லை. எலியா அவர்களிடத்தில், "கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள், பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள்" என்று தெளிவாகச் சொல்லுகிறார். எலியாவின் வார்த்தையில் உறுதியும், நிச்சயமும் இருக்கிறது.

பாகால் ஒரு விக்கிரகம். அதற்கு ஜீவனில்லை. பாகால் மனுஷரை வஞ்சிக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தாருக்கும் பாகாலுக்கும் சம்பந்தமில்லை. ஆனால் இஸ்ரவேல் ஜனங்களில் அநேகர், பாகாலை தங்கள் தெய்வமாக நம்பி, அதைப் பின்பற்றுகிறார்கள்.

கர்த்தரையும் பாகாலையும் பின்பற்றுகிறவர்கள் தங்கள் நடைகளில் உறுதியில்லாமலிருப்பார்கள். அவர்களிடத்தில் தெளிந்த சிந்தனையிருக்காது. அவர்களுடைய நோக்கமும், இலக்கும் உறுதியானதாயிராது. பாகால்கள் இஸ்ரவேல் ஜனங்களுக்கு வாக்குத்தத்தம் கொடுக்காது. பாகாலின் தீர்க்கதரிசிகள், வாக்குத்தத்தமான வார்த்தைகளைச் சொன்னாலும், பாகால்கள் அதை நிறைவேற்றாது. பாகாலுக்கு ஜீவனுமில்லை வல்லமையுமில்லை.

கர்த்தரை விசுவாசிக்கிறவர்கள், அவரைத் தங்களுடைய முழுஇருதயத்தோடும், முழுஆத்துமாவோடும், முழுமனதோடும் விசுவாசிக்கவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தாருடைய இருதயங்களோ பிரிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய இருதயத்தின் ஒரு பகுதி கர்த்தரை விசுவாசிக்கிறது. மற்றொரு பகுதி பாகாலை விசுவாசிக்கிறது.

"அவர்கள் இருதயம் பிரிக்கப்பட்டிருக்கிறது; இப்போதும் குற்றஞ்சுமத்தப்படுவார்கள்; அவர்கள் பலிபீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளை நாசமாக்குவார்" (ஓசி 10:2).

தம்மை விசுவாசிக்கிறவர்கள், தம்மை முழுஇருதயத்தோடு விசுவாசிக்க வேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். நம்முடைய முழுஇருதயத்தையும் அற்பணித்தால் மாத்திரமே, கர்த்தர் நம்முடைய இருதயங்களை ஏற்றுக்கொள்வார். நம்முடைய இருதயத்தை கர்த்தருக்கு அரையும் குறையுமாக அற்பணித்தால், கர்த்தர் நம்முடைய இருதயத்தை அங்கீகரிமாட்டார்.

நாம் யாரை ஆராதிக்கப்போகிறோம் என்னும் நிச்சயம் நமக்குள் இருக்கவேண்டும். தானும் தன்னுடைய வீட்டாரும் கர்த்தரையே சேவிக்கவேண்டும் என்பதில் யோசுவா முழுநிச்சயத்தோடிருந்தார்.

"கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம்பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான்" (யோசு 24:15).

எலியா இஸ்ரவேல் ஜனத்தாரிடம் மிகவும் தெளிவாகப் பேசுகிறார். எலியாவின் வார்த்தைகள் ஜனங்களுக்கு நன்றாய்ப் புரிகிறது. ஆனாலும் அவர்கள் எலியாவுக்கு பிரதியுத்தரம் சொல்லாமல் அமைதியாயிருக்கிறார்கள். "ஜனங்கள் பிரதியுத்தரமாக எலியாவுக்கு ஒன்றும் சொல்லவில்லை" (1இராஜா 18:21).

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபும், அவனுடைய அரண்மனையும் பாகாலின் பக்கத்திலே இருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தாரில் அநேகர் பாகாலைப் பின்பற்றுகிறார்கள். பாகாலின் தீர்க்கதரிசிகளோ நானூற்று ஐம்பதுபேராயிருக்கிறார்கள். இவர்கள் தவிர யேசபேலின் பந்தியிலே சாப்பிடுகிற தோப்பு விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகள் நானூறு பேரும் இருக்கிறார்கள். வெளிப்பிரகாரமாகப் பார்க்கும்போது, பாகாலுக்கு அநுகூலமான சூழ்நிலைகள் உள்ளதுபோல இருக்கிறது. இந்த சூழ்நிலையில் எலியா கர்மேல் பர்வதத்தில் கூடியிருக்கிற ஜனங்களிடம் கர்த்தருடைய நாமத்தினால் பேசுகிறார்.

கர்மேல் பர்வதத்தில் ஏராளமான ஜனங்கள் இருந்தாலும் எலியா ஒருவர் மாத்திரமே கர்த்தருடைய வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருக்கிறார். கர்த்தரின் தீர்க்கதரிசிகளில் எலியா ஒருவர் மாத்திரமே மீந்திருக்கிறார். கர்த்தருடைய மற்ற தீர்க்கதரிசிகளில் அநேகரை யேசபேல் சங்காரம்பண்ணிவிட்டாள். தீர்க்கதரிசிகளில் நூறு பேரை ஒபதியா கெபிகளிலே ஒளித்து வைத்திருக்கிறார்.

எலியா இஸ்ரவேல் தேசத்திற்கு மூன்று வருஷத்திற்கு பின்பு இப்போதுதான் வந்திருக்கிறார். அவர் இஸ்ரவேல் தேசத்தைவிட்டு தப்பிப்போன நாளிலிருந்து சரியாக சாப்பிடவில்லை. கேரீத் ஆற்றண்டையிலே எலியாவுக்கு காகங்கள் கொண்டு வந்து கொடுத்த அப்பமும் இறைச்சியும் மாத்திரமே கிடைத்தது. அவர் சாறிபாத் ஊர் விதவையின் வீட்டிலே, சுமார் இரண்டு வருஷகாலமாக, அப்பமும் அடையும் புசித்து தன்னுடைய பசியை ஆற்றிக்கொண்டார். கர்த்தருடைய கிருபையினால் எலியா பஞ்சத்தினாலும் பசியினாலும், பட்டினியினாலும் செத்துப் போகாதவாறு பாதுகாக்கப்பட்டிருக்கிறார்.

கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்த எலியாவின் சரீர ஆரோக்கியம் தேவைப்படவில்லை. இஸ்ரவேல் தேசத்திலுள்ள பொருளாதார ஆசீர்வாதங்கள் கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்த தேவைப்படவில்லை. மனுஷர் கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தினாலும், மகிமைப்படுத்தாவிட்டாலும், கர்த்தர் எப்போதும் மகிமையுள்ளவராகவே இருப்பார். அவருடைய மகிமை ஒருபோதும் குறைந்துபோவதில்லை.

கர்மேல் பர்வதத்தில் எல்லா ஜனங்களும் கூடிவந்திருக்கிறார்கள். அப்பொழுது எலியா ஜனங்களை நோக்கி: "கர்த்தரின் தீர்க்கதரிசிகளில் மீந்திருக்கிறவன் நான் ஒருவன்; பாகாலின் தீர்க்கதரிசிகளோ நானூற்றைம்பதுபேர். இப்போதும் இரண்டு காளைகளை எங்களிடத்தில் கொண்டுவரட்டும்; ஒரு காளையை அவர்கள் தெரிந்துகொண்டு, அதைச் சந்துசந்தாகத் துண்டித்து, நெருப்புப் போடாமல் விறகுகளின்மேல் வைக்கக்கடவர்கள்; நான் மற்றக் காளையை அப்படியே செய்து, நெருப்புப் போடாமல் விறகுகளின்மேல் வைப்பேன். நீங்கள் உங்கள் தேவனுடைய நாமத்தைச்சொல்லிக் கூப்பிடுங்கள்; நான் கர்த்தருடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுவேன்; அப்பொழுது அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம்" (1இராஜா 18:22-24) என்று சொல்லுகிறார்.

பாகாலின் தீர்க்கதரிசிகளும் பலியை ஆயத்தம்பண்ணவேண்டும். எலியாவும் பலியை ஆயத்தம்பண்ணுவார். "அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம்" என்று எலியா சொல்லுகிறார். எலியாவின் வார்த்தைகளை கேட்ட ஜனங்கள் எல்லோரும், "இது நல்ல வார்த்தை" என்று சொல்லுகிறார்கள். கர்த்தரும், பாகாலும் அவர்களுக்கு அக்கினியினால் உத்தரவு அருளவில்லையென்றால், இஸ்ரவேல் ஜனத்தார் எந்த தெய்வத்தையும் நம்பாமல் நாஸ்திகர்களாக போய்விடுவதற்கும் வாய்ப்புள்ளது. இரண்டு தெய்வங்களுமே அக்கினியினால் உத்தரவு அருளினால், ஜனங்கள் இரண்டு தெய்வங்களையும் பின்பற்றி, குந்திக்குந்தி நடப்பதற்கும் வாய்ப்புள்ளது.

எலியா இந்த சூழ்நிலையில் கர்த்தரை நம்பி பேசுகிறார். பரிசுத்த ஆவியானவர் எலியாவின் இருதயத்திலே தைரியத்தையும், திடநம்பிக்கையையும் கொடுத்திருக்கிறார். பாகாலை ஆராதிக்கிறவர்களின் எண்ணிக்கை அதிகமாயிருந்தாலும், கர்த்தரை ஆராதிக்கிறவர் எலியா ஒருவர் மாத்திரம் இருந்தாலும், எலியா கர்த்தருடைய நாமத்தினாலே தைரியமாய்ப் பேசுகிறார். கர்த்தருக்காக அவர் தைரியமாய்ச் சாட்சி சொல்லுகிறார்.

எலியா இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை, தன்னுடைய முழுஆத்துமாவோடும், முழுபலத்தோடும், முழுமனதோடும் விசுவாசிக்கிறார். கர்த்தருக்கு சாட்சி சொல்லுகிறவர்கள் மனுஷருடைய முகத்தைப் பார்த்து பயப்படக்கூடாது. கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் மனுஷருக்கு பயப்படமாட்டார்கள்.

எலியா தன்னுடைய வார்த்தைகளை சொன்னபோது, கர்மேல் பர்வதத்தில் கூடியிருக்கிற ஜனங்களெல்லோரும், "இது நல்ல வார்த்தை" என்று அங்கீகரிக்கிறார்கள். ஆகாபும், பாகாலின் தீர்க்கதரிசிகளும் எலியாவின் வார்த்தைக்கு எதிர்த்து பேசவில்லை. ஒருவேளை அவர்கள் அங்கே கூடியிருக்கிற திரளான ஜனங்களுக்கு பயந்திருக்கலாம்.

கர்மேல் பர்வதம் ஒரு யுத்தக்களம் போலிருக்கிறது. இங்கே மாம்சப்பிரகாரமான யுத்தம் நடைபெறுவதற்கு பதிலாக, ஆவிக்குரிய யுத்தம் நடைபெறுவதற்கு ஆயத்தமாயிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்தில் பாகால்களுக்கும், அதன் தீர்க்கதரிசிகளுக்கும் அதிக செல்வாக்கு இருக்கிறது. அவர்கள் திரளான எண்ணிக்கையிலிருக்கிறார்கள். இவையெல்லாம் தாங்கள் ஜெயிப்பதற்கு சாதகமான சூழ்நிலைகள் என்று பாகாலின் தீர்க்கதரிசிகள் நினைக்கிறார்கள்.

கர்மேல் பர்வதத்திலே, பாகாலின் பக்கத்தில் நானூற்றைம்பது தீர்க்கதரிசிகளும், தோப்பு விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகள் நானூறு பேரும் ஒரு பக்கத்தில் நிற்கிறார்கள். கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எலியா ஒருவர் மாத்திரம் இன்னொரு பக்கத்தில் நிற்கிறார். எலியா ஒருவராயிருந்தாலும், கர்த்தர் அவரோடு கூடயிருக்கிறார். எலியாவுக்குள் இருக்கிறவர் பெரியவராயிருக்கிறார்.

இந்தப் போட்டியில் முதலாவதாக பங்குபெறும் வாய்ப்பு பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கு கொடுக்கப்படுகிறது. எலியா பாகாலின் தீர்க்கதரிசிகளை நோக்கி: "நீங்கள் அநேகரானதால் நீங்களே முந்தி ஒரு காளையைத் தெரிந்துகொண்டு அதை ஆயத்தம்பண்ணி, நெருப்புப்போடாமல் உங்கள் தேவனுடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுங்கள்" (1இராஜா 18:25) என்று சொல்லுகிறார்.

பாகாலின் தீர்க்கதரிசிகள் ஏற்கெனவே குழப்பத்திலிருக்கிறார்கள். இப்போது இன்னும் அதிகமாய் குழம்புகிறார்கள். ஆவிக்குரிய யுத்தத்திலே பாகாலின் தீர்க்கதரிசிகள் முதலாவதாக பங்குபெறப்போகிறார்கள். எலியா சொன்ன பிரகாரம், அவர்கள் இரண்டு காளைகளில் ஒரு காளையை தெரிந்துகொள்ளவேண்டும். அதை சந்து சந்தாக துண்டிக்கவேண்டும். அதன்பின்பு காளையின் துண்டிக்கப்பட்ட சந்துகளை நெருப்புப்போடாமல் பலிபீடத்திலுள்ள விறகுகளின்மேல் வைக்கவேண்டும்.

பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கு காளை கொடுக்கப்படுகிறது. அவர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட காளையை வாங்கி, அதை பலிபீடத்தின்மேல் ஆயத்தம்பண்ணி வைக்கிறார்கள். உடனே அவர்கள் பாகாலை நோக்கி ஜெபம்பண்ண ஆரம்பிக்கிறார்கள், "பாகாலே, எங்களுக்கு உத்தரவு அருளும்" என்று காலைதொடங்கி மத்தியானமட்டும் பாகாலின் நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுகிறார்கள்; ஆனாலும் ஒரு சத்தமும் பிறக்கவில்லை, மறு உத்தரவு கொடுப்பாரும் இல்லை. அவர்கள் கட்டின பலிபீடத்திற்கு எதிரே குதித்து ஆடுகிறார்கள்" (1இராஜா 18:26).

பாகாலை ஆராதிக்கிறவர்கள் மதியீனராயிருக்கிறார்கள். அவர்கள் பாகாலின் பலிபீடத்திற்கு எதிரே மதியீனரைப்போல குதித்து ஆடுகிறார்கள். பலியாக கொல்லப்படும் காளை துள்ளுவதுபோல, பாகாலின் தீர்க்கதரிசிகளும் தங்களையே பலியாக செலுத்துவதுபோல துள்ளுகிறார்கள். பலிபீடத்திற்கு எதிரே குதித்து ஆடினால் பாகால் சந்தோஷப்படும் என்னு நினைத்து, அவர்கள் குதித்து ஆடி பாகாலை சந்தோஷப்படுத்துகிறார்கள்.

பாகாலின் தீர்க்கதரிசிகள் உரத்தசத்தமாய்க் கூப்பிட்டு, தங்கள் வழக்கத்தின்படியே இரத்தம் தங்கள்மேல் வடியுமட்டும் கத்திகளாலும் ஈட்டிகளாலும் தங்களைக் கீறிக்கொள்கிறார்கள் (1இராஜா 18:28). பாகாலின் தீர்க்கதரிசிகள் குதித்து ஆடியபோது, பாகால் அவர்களுக்கு உத்தரவு அருளவில்லை. இப்போது பாகாலின் இரக்கத்தைப் பெறுவதற்காக, அதன் தீர்க்கதரிசிகள் தங்கள் சரீரத்தை கத்திகளாலும் ஈட்டிகளாலும் கீறி, தங்களுடைய சொந்த இரத்தத்தையே, பாகாலுக்கு பலியாக செலுத்துகிறார்கள். மனுஷர் தங்கள் சரீரத்தைக் கீறிக்கொள்வதை கர்த்தர் அங்கீகரிக்கவில்லை.

"நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரின் பிள்ளைகள்; செத்தவனுக்காகக் கீறிக்கொள்ளாமலும், உங்கள் கண்களுக்கு இடையிலே சவரம்பண்ணாமலும் இருப்பீர்களாக" (உபா 14:1).

பாகாலின் தீர்க்கதரிசிகள் குதித்து ஆடுவதை எலியா பார்த்துக்கொண்டிருக்கிறார். அவர்கள் காலை தொடங்கி மத்தியானம் மட்டும் பாகாலின் நாமத்தைச் சொல்லி கூப்பிடுகிறார்கள். பாகால் அவர்களுக்கு உத்தரவு அருளவில்லை.

மத்தியானவேளையிலே எலியா அவர்களைப் பரியாசம்பண்ணுகிறார். எலியா பாகாலின் தீர்க்கதரிசிகளை நோக்கி, "உரத்த சத்தமாய்க் கூப்பிடுங்கள்; அவன் தேவனாமே, அவன் தியானத்தில் இருப்பான்; அல்லது அலுவலாயிருப்பான்; அல்லது பிரயாணம்போயிருப்பான்; அல்லது தூங்கினாலும் தூங்குவான்; அவனை எழுப்பவேண்டியதாக்கும்" (1இராஜா 18:27) என்று சொல்லி பரியாசம்பண்ணுகிறார்.

பாகாலின் தீர்க்கதரிசிகள் காலை தொடங்கி மத்தியானம் மட்டும் பாகாலின் நாமத்தைச் சொல்லிக்கூப்பிடும்போது, எலியாவும் அவர்களுடைய வார்த்தைகளை பொறுமையோடு கேட்டுக்கொண்டிருக்கிறார். அவர்கள் ஜீவனில்லாத விக்கிரகத்திடம் பலமணி நேராக ஜெபம்பண்ணுகிறார்கள். அவர்கள் நீண்ட ஜெபம்பண்ணினபோதிலும், அவர்கள் பலிபீடத்திற்கு எதிரே குதித்து ஆடினபோதிலும், அவர்கள் தங்கள் வழக்கத்தின்படியே இரத்தம் தங்கள்மேல் வடியுமட்டும் கத்திகளாலும் ஈட்டிகளாலும் தங்களை கீறிக்கொண்டபோதிலும், பாகால் அவர்களுக்கு மறுஉத்தரவு கொடுக்கவில்லை. பாகாலின் பலிபீடத்திலிருந்து ஒரு சத்தமும் பிறக்கவில்லை. எலியா பாகாலின் தீர்க்கதரிசிகளையும், பாகாலையும் பரியாசம் பண்ணுகிறார். அதன்பின்பும் பாகால் அவர்களுக்கு மறுஉத்தரவு கொடுக்கவில்லை.

பாகாலுடைய தீர்க்கதரிசிகளின் மனதிலே எலியாவின்மீது கோபமுண்டாயிற்று. இந்த அவமானத்திற்கு எலியாவே காரணமென்று நினைத்து பாகாலின் தீர்க்கதரிசிகள் அவர்மீது கோபமாயிருக்கிறார்கள். அவர்கள் மத்தியான வேளை சென்றபின்பு, அந்தப்பலி செலுத்தும் நேரமட்டாக சன்னதம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். சன்னதம் சொல்லுவது என்னும் வார்த்தைக்கு, மந்திர வார்த்தைகளை ஓதுவது என்று பொருள். அவர்கள் எலியாவை பாகாலின் நாமத்தினால் சபித்து சன்னதம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

பாகாலின் தீர்க்கதரிசிகள் பல உபாயங்களை கையாளுகிறார்கள். பலிபீடத்தின்மேல் வைக்கப்பட்ட, காளையின் துண்டிக்கப்பட்ட சந்துகளைப் பார்க்கிறார்கள். அவை நெருப்பு போடாமல் விறகுகளின்மேல் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி பாகாலின் பலிபீடத்திலுள்ள காளையை பட்சித்துப்போடவில்லை. சாயங்கால நேரம் வந்த பின்பும், பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கு ஒரு சத்தமும் பிறக்கவில்லை. அவர்களுக்கு மறுஉத்தரவு கொடுப்பாருமில்லை. அவர்களை கவனிப்பாருமில்லை.

எலியாவும் சாயங்கால வேளை வரையிலும் பாகாலின் தீர்க்கதரிசிகளை தொந்தரவு பண்ணவுமில்லை. அவர்கள் அந்திப்பலி செலுத்தும் சாயந்தர நேரமட்டாகவும் சன்னதம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களையோ, அவர்கள் சொல்லும் சன்னதத்தையோ கவனிப்பார் ஒருவருமில்லை.

கர்த்தர் அக்கினியினால் உத்தரவு அருளுகிறார் 1இராஜா 18:29-40

1இராஜா 18:29. மத்தியானவேளை சென்றபின்பு, அந்திப்பலிசெலுத்தும் நேரமட்டாகச் சன்னதம் சொல்லிக் கொண்டிருந்தார்கள்; ஆனாலும் ஒரு சத்தமும்பிறக்கவில்லை, மறு உத்தரவு கொடுப்பாரும் இல்லை, கவனிப்பாரும் இல்லை.

1இராஜா 18:30. அப்பொழுது எலியா சகல ஜனங்களையும் நோக்கி: என் கிட்டே வாருங்கள் என்றான்; சகல ஜனங்களும் அவன் கிட்டே வந்தபோது, தகர்க்கப்பட்ட கர்த்தருடைய பலிபீடத்தை அவன் செப்பனிட்டு:

1இராஜா 18:31. உனக்கு இஸ்ரவேல் என்னும் பேர் இருப்பதாக என்று சொல்லி, கர்த்தருடைய வார்த்தையைப்பெற்ற யாக்கோபுடைய குமாரரால் உண்டான கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே, பன்னிரண்டு கற்களை எடுத்து,

1இராஜா 18:32. அந்தக் கற்களாலே கர்த்தருடைய நாமத்திற்கென்று ஒரு பலிபீடத்தைக் கட்டி, பலிபீடத்தைச் சுற்றிலும் தானியம் அளக்கிற இரண்டுபடிவிதை விதைக்கத்தக்க இடமான ஒரு வாய்க்காலை உண்டாக்கி,

1இராஜா 18:33. விறகுகளை அடுக்கி, ஒரு காளையைச் சந்துசந்தாகத் துண்டித்து விறகுகளின்மேல் வைத்தான்.

1இராஜா 18:34. பிற்பாடு அவன்: நீங்கள் நாலுகுடம் தண்ணீர் கொண்டுவந்து, சர்வாங்க தகனபலியின்மேலும், விறகுகளின்மேலும் ஊற்றுங்கள் என்றான்; பின்பு இரண்டாந்தரமும் அப்படியே ஊற்றுங்கள் என்றான்; இரண்டாந்தரமும் ஊற்றினார்கள்; அதற்குப்பின்பு மூன்றாந்தரமும் அப்படியே ஊற்றுங்கள் என்றான்; மூன்றாந்தரமும் ஊற்றினார்கள்.

1இராஜா 18:35. அப்பொழுது தண்ணீர் பலிபீடத்தைச் சுற்றிலும் ஓடினது; வாய்க்காலையும் தண்ணீரால் நிரப்பினான்.

1இராஜா 18:36. அந்திப்பலி செலுத்தும் நேரத்திலே, தீர்க்கதரிசியாகிய எலியா வந்து: ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், நான் இந்தக் காரியங்களையெல்லாம் உம்முடைய வார்த்தையின்படி செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப்பண்ணும்.

1இராஜா 18:37. கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு, என்னைக் கேட்டருளும், என்னைக் கேட்டருளும் என்றான்.

1இராஜா 18:38. அப்பொழுது: கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது.

1இராஜா 18:39. ஜனங்களெல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து: கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம் என்றார்கள்.

1இராஜா 18:40. அப்பொழுது எலியா அவர்களை நோக்கி: நீங்கள் பாகாலின் தீர்க்கதரிசிகளில் ஒருவனும் தப்பிப்போகாதபடிக்கு அவர்களைப் பிடியுங்கள் என்றான்; அவர்களைப் பிடித்தபோது, எலியா அவர்களைக் கீழே கீசோன் ஆற்றங்கரையிலே கொண்டுபோய், அங்கே அவர்களை வெட்டிப்போட்டான்.

கர்த்தர் எலியாவுக்கு அக்கினியினால் உத்தரவு அருளுகிறார். கர்த்தர் அருளுகிற உத்தரவை கர்மேல் பர்வதத்தில் கூடியிருக்கிற எல்லோரும் காண்கிறார்கள். எலியா பாகாலின் தீர்க்கதரிசிகளையும், பாகாலையும் பரியாசம்பண்ணின பின்பு, சகல ஜனங்களையும் நோக்கி, "என் கிட்டே வாருங்கள்" என்று சொல்லுகிறார். சகல ஜனங்களும் எலியாவின்கிட்டே வருகிறார்கள்.

ஆகாப் கர்த்தருடைய பலிபீடத்தை ஏற்கெனவே தகர்த்துப்போட்டான். தகர்க்கப்பட்ட கர்த்தருடைய பலிபீடத்தை எலியா செப்பனிடுகிறார். அந்தப் பலிபீடத்திற்கு, "இஸ்ரவேல் என்னும் பேர் உனக்கு இருப்பதாக" என்று சொல்லுகிறார்.

எலியா பன்னிரண்டு கற்களை எடுத்து, அந்தக் கற்களாலே கர்த்தருடைய நாமத்திற்கென்று ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார். கர்த்தருடைய வார்த்தையைப்பெற்ற யாக்கோபுடைய குமாரரால் உண்டான கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே, எலியா பன்னிரண்டு கற்களை எடுத்து, அந்தக் கற்களாலே கர்த்தருடைய நாமத்திற்கு ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார்.

எலியா பாகாலின் தீர்க்கதரிசிகள் பயன்படுத்தின பலிபீடத்தை பயன்படுத்தவில்லை. அந்தப் பலிபீடம் பாகாலுக்கு செலுத்தப்பட்ட பலிகளினாலும், பாகாலின் தீர்க்கதரிசிகளுடைய ஜெபங்களினாலும், விக்கிரகாராதனையினாலும், சன்னதத்தினாலும் தீட்டுப்பட்டிருக்கிறது. எலியா தீட்டான பலிபீடத்தை கர்த்தருக்கு பலிசெலுத்த பயன்படுத்த விரும்பவில்லை.

அங்கே தகர்க்கப்பட்ட ஒரு பலிபீடம் இருக்கிறது. அது கர்த்தருடைய பலிபீடம். இஸ்ரவேல் ஜனத்தார் இதற்கு முன்பு இந்தப் பலிபீடத்தில் கர்த்தருக்கு பலிசெலுத்தினார்கள். ஆகாபோ யேசபேலின் உத்தரவுப்படி, கர்த்தருடைய பலிபீடத்தை தகர்த்துப்போடுகிறான். எலியா தகர்க்கப்பட்ட கர்த்தருடைய பலிபீடத்தை செப்பனிட்டு, கர்த்தருக்கு பலிசெலுத்த அதைப் பயன்படுத்துகிறார்.

எலியா தகர்க்கப்பட்ட பலிபீடத்தை செப்பனிட்டு பயன்படுத்துவதற்கு ஒரு ஆவிக்குரிய வியாக்கியானமுள்ளது. எலியா இஸ்ரவேல் ஜனங்களுக்கு புதிய மார்க்கத்தை அறிமுகப்படுத்தவில்லை. அவர்களுடைய முன்னோர்கள் ஆராதித்த கர்த்தரையே எலியாவும் ஆராதிக்கிறார். அவர்களுடைய விசுவாசமும், ஆராதனையும் புதுப்பிக்கப்படவேண்டும். கர்த்தர் மாறாதவர்.

இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரில், பத்துக்கோத்திரத்தார் வடக்கு இஸ்ரவேல் தேசமாகப் பிரிந்துபோயிருக்கிறார்கள். அவர்களில் இரண்டு கோத்திரத்தார் மாத்திரமே தெற்கு யூதாதேசத்திலிருக்கிறார்கள். வடக்கு இஸ்ரவேல் தேசத்திலுள்ள பத்துக்கோத்திரத்தாரும் கர்த்தரைவிட்டு விலகி பாகாலை பின்பற்றுகிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணி, துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள்.

ஆனாலும் எலியா இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரின் இலக்கத்தின்படியே, பன்னிரண்டு கற்களை எடுத்து, அந்தக் கற்களாலே கர்த்தருடைய நாமத்திக்கென்று ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார். எலியா இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாரை, இன்னும் கர்த்தருக்கு சொந்தமானவர்களாகவே பாவிக்கிறார். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணி பிரிந்துபோனாலும், கர்த்தர் அவர்களுக்கும் அக்கினியினால் உத்தரவு அருளுவார் என்று எலியா எதிர்பார்க்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேலின் முற்பிதாக்களோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். அந்தப் பழைய உடன்படிக்கையின் நீதியை நினைவுகூர்ந்து, எலியா இங்கே இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருக்கு அடையாளமாக, பன்னிரண்டு கற்களினால், கர்த்தருக்கு பலிபீடம் கட்டுகிறார்.

ஆகாபும் யேசபேலும் பாகாலுக்கு பலிபீடம் கட்டியிருக்கிறார்கள். எலியாவோ கர்த்தருடைய நாமத்திற்கென்று பலிபீடம் கட்டுகிறார். எலியா அந்த பலிபீடத்தைச் சுற்றிலும் தானியம் அளக்கிற இரண்டுபடிவிதை விதைக்கத்தக்க இடமான ஒரு வாய்க்காலை உண்டாக்குகிறார். அவர் அந்தப் பலிபீடத்தின்மேல் விறகுகளை அடுக்கி, ஒரு காளையைச் சந்துசந்தாகத் துண்டித்து விறகுகளின்மேல் வைக்கிறார் (1இராஜா 18:32,33).

எலியா கர்த்தருக்கு பலிசெலுத்த ஆயத்தமாயிருக்கிறார். பழைய ஏற்பாட்டுக்காலத்திலே, இஸ்ரவேலரின் முற்பிதாவாகிய ஆபிரகாம், தன்னுடைய குமாரனாகிய ஈசாக்கை கர்த்தருக்கு பலிசெலுத்த ஆயத்தமாயிருந்தார்.

"அப்பொழுது ஈசாக்கு தன் தகப்பனாகிய ஆபிரகாமை நோக்கி: என் தகப்பனே என்றான்; அதற்கு அவன்: என் மகனே, இதோ, இருக்கிறேன் என்றான்; அப்பொழுது அவன்: இதோ, நெருப்பும் கட்டையும் இருக்கிறது, தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்றான். அதற்கு ஆபிரகாம்: என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார் என்றான்" (ஆதி 22:7,8).

ஆபிரகாமைப்போலவே எலியாவும் பலிபீடத்திலே பலியை ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறார். பலியை பட்சிக்கும் அக்கினியை கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்று எலியா கர்த்தருக்குள் விசுவாசமாயிருக்கிறார். நாம் கர்த்தருடைய சமுகத்தில் நம்முடைய இருதயங்களை உண்மையாய் சமர்ப்பிக்கும்போது, கர்த்தர் தம்முடைய கிருபையினால், நம்முடைய இருதயங்களில் பரிசுத்தமான அக்கினியின் அபிஷேகத்தை கட்டளையிடுவார். நமக்குள்ளே எரிந்துகொண்டிருக்கும் பரிசுத்தமான அக்கினியை, கர்த்தர் அனல்மூட்டி எழுப்பிவிடுவார்.

எலியா ஒரு ஆசாரியரல்ல. பழைய ஏற்பாட்டுக்காலத்திலே ஆசாரியருக்கு உதவியாக லேவியர்கள் பலிசெலுத்த உதவியாயிருந்தார்கள். எலியாவுக்கு உதவியாக இங்கே லேவியர் யாருமில்லை. கர்மேலிலே கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரமோ, அவருடைய ஆலயமோ இல்லை. ஆனாலும் கர்த்தர் எலியா கட்டின பலிபீடத்தை அங்கீகரிக்கிறார். எலியா தமக்காக செலுத்துகிற பலியையும் கர்த்தர் அங்கீகரிக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தாரின் சரித்திரத்திலே, கர்த்தர் கர்மேல் பர்வதத்திலே, தமக்காக செலுத்தப்பட்ட பலியை அங்கீகரித்ததுபோல, வேறு எந்த ஸ்தலத்திலும் அங்கீகரித்ததில்லை.

நாம் கர்த்தருக்காக எங்கே பலிசெலுத்துகிறோம் என்பது முக்கியமல்ல. நாம் உண்மையான மனதோடும், உண்மையான இருதயத்தோடும் கர்த்தருக்கு பலிகளை செலுத்தவேண்டும். அப்போது கர்த்தர் நம்முடைய பலிகளை அங்கீகரிப்பார். நாம் ஸ்தோத்திர பலிகளையும், துதிகளின் பலிகளையும் கர்த்தருக்கு செலுத்தும்போது, கர்த்தர் நம்முடைய பலிகளை அங்கீகரித்து, நம்முடைய இருதயத்திலே அக்கினியின் அபிஷேகத்தைக் கொடுத்து, நமக்கு அக்கினியினால் உத்தரவு அருளுவார்.

கர்த்தர் அக்கினியினால் உத்தரவு அருளும்போது, கர்மேல் பர்வதத்திலே கூடியிருக்கிற ஜனங்களுக்கு சந்தேகமோ, குழப்பமோ வரக்கூடாது என்பதில் எலியா உறுதியாயிருக்கிறார்.

எலியா ஜனங்களுக்கு சந்தேகம் ஏற்படாத வண்ணம், அங்கே கூடியிருக்கிறவர்களிடம், "நீங்கள் நாலுகுடம் தண்ணீர் கொண்டுவந்து, சர்வாங்க தகனபலியின்மேலும், விறகுகளின்மேலும் ஊற்றுங்கள்" என்று சொல்லுகிறார். பின்பு இரண்டாந்தரமும் "அப்படியே ஊற்றுங்கள்" என்று சொல்லுகிறார்; அவர்கள் இரண்டாந்தரமும் ஊற்றுகிறார்கள்; அதற்குப்பின்பு எலியா மூன்றாந்தரமும் "அப்படியே ஊற்றுங்கள்" என்று சொல்லுகிறார்; அவர்கள் மூன்றாந்தரமும் ஊற்றுகிறார்கள். அப்பொழுது தண்ணீர் பலிபீடத்தைச் சுற்றிலும் ஓடுகிறது; எலியா வாய்க்காலையும் தண்ணீரால் நிரப்புகிறார் (1இராஜா 18:34,35).

இஸ்ரவேல் தேசத்திலே கடந்த மூன்று வருஷங்களாக மழை பெய்யவில்லை. தேசத்தில் தண்ணீரில்லாமல் பஞ்சமுண்டாயிற்று. எலியாவோ இங்கே பலிபீடத்தின்மீது நாலுகுடமாக, மொத்தம் மூன்றுதரம் தண்ணீர் ஊற்றச் சொல்லுகிறார். எலியா கர்த்தருடைய நாமத்திற்கென்று கட்டின பலிபீடத்தின்மேல் மொத்தம் பன்னிரண்டு குடம் தண்ணீர் ஊற்றப்படுகிறது. இந்தத் தண்ணீர் கடல் தண்ணீராக இருக்கவேண்டுமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். கர்மேல் பர்வதம் மத்திய தரைக்கடலுக்கு அருகாமையிலிருக்கிறது.

பலிபீடத்தின்மேலும், சர்வாங்க தகனபலியின்மேலும் விறகுகள்மேலும் தாராளமாய் தண்ணீர் ஊற்றப்பட்டிருக்கிறது. பலிபீடத்தைச் சுற்றிலுமுள்ள வாய்க்காலிலும் தண்ணீர் நிரப்பப்பட்டிருக்கிறது. ஆகையினால் எலியா யாருக்கும் தெரியாமல், இரகசியமாக, பலிபீடத்திற்கு அடியிலோ, சர்வாங்க தகனபலிக்கு அடியிலோ அல்லது விறகுகளுக்கு அடியிலோ நெருப்பு வைத்திருப்பதற்கு வாய்ப்பில்லை. ஜனங்களுடைய மனதிலே சந்தேகம் வரக்கூடாது என்பதில் எலியா உறுதியாயிருக்கிறார்.

கர்த்தரை நம்புகிறவர்கள் சந்தேகத்தோடு நம்பக்கூடாது. அவர்கள் கர்த்தரை முழுமனதோடும், முழுஇருதயத்தோடும் நம்பவேண்டும். அரைகுறை மனதோடு தம்மை விசுவாசிப்பதை கர்த்தர் அங்கீகரிக்கமாட்டார்.

பலிபீடத்தின்மேல் பன்னிரண்டு குடம் தண்ணீரை ஊற்றின பின்பு, எலியா பலிபீடத்திற்கு முன்பாக நின்று, கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறார். இது அந்திப்பலி செலுத்தும் நேரமாயிருக்கிறது.

எலியா கர்த்தரை நோக்கி, "ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், நான் இந்தக் காரியங்களையெல்லாம் உம்முடைய வார்த்தையின்படி செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப்பண்ணும்" (1இராஜா 18:36) என்றும்,

"கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு, என்னைக் கேட்டருளும், என்னைக் கேட்டருளும்" (1இராஜா 18:37) என்றும் விண்ணப்பம்பண்ணுகிறார்.

தான் செலுத்திய பலிகளை அங்கீகரிக்கும் வண்ணமாக, கர்த்தர் அதைப் பட்சித்துப்போடவேண்டும் என்பது எலியாவின் விண்ணப்பம். எலியா சுருக்கமாக ஜெபம்பண்ணுகிறார். எலியாவின் இருதயத்தில் கர்த்தர்மீது உறுதியான விசுவாசம் இருக்கிறது. அவர் கருத்தாய் ஜெபம்பண்ணுகிறார்.

பாகாலின் தீர்க்கதரிசிகள், பலிபீடத்திற்கு முன்பாக குதித்து ஆடினதுபோல எலியா குதிக்கவுமில்லை. ஆடவுமில்லை. பாகாலின் தீர்க்கதரிசிகள் காலை தொடங்கி மத்தியான மட்டும் பாகாலின் நாமத்தைச் சொல்லி கூப்பிட்டதுபோல, எலியா நீண்ட நேரமாக கர்த்தருடைய நாமத்தைச் சொல்லி கூப்பிடவில்லை. பாகாலின் தீர்க்கதரிசிகள் தங்கள்மேல் இரத்தம் வழியும் மட்டும் கத்திகளாலும், ஈட்டிகளாலும் தங்களைக் கீறிக்கொண்டதுபோல, எலியா தன்னுடைய சரீரத்தை கீறிக்கொள்ளவில்லை. கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்பாக எலியா தன்னுடைய இரத்தத்தை சிந்தி, தன்னுடைய சரீரத்தை சேதப்படுத்திக்கொள்ளவுமில்லை.

எலியா கர்த்தரை நோக்கிக் கூப்பிடும்போது, "ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் தேவனாகிய கர்த்தாவே" என்று கூப்பிடுகிறார். கர்மேல் பர்வதத்திலே இஸ்ரவேல் ஜனங்கள் ஏராளமானோர் கூடியிருக்கிறார்கள். அவர்களுக்கும், அவர்களுடைய முற்பிதாக்களுக்கும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கும் இடையே உள்ள ஐக்கியத்தை அவர்களுக்கு நினைவுபடுத்தும் வண்ணமாக, எலியா கர்த்தரைக் கூப்பிடும்போது, இவ்வாறு பெயர் சொல்லி கூப்பிடுகிறார்.

எலியா தன்னுடைய விண்ணப்பத்தில் இரண்டு காரியங்களைப்பற்றி முக்கியமாகச் சொல்லுகிறார் அவையாவன: 1. தேவனுடைய மகிமை. 2. ஜனங்களுக்கு ஆவிக்குரிய உபதேசம். கர்த்தர் அற்புதம் செய்யும்போது, அவரே இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் என்பதை ஜனங்கள் அறிந்துகொள்ளவேண்டும். கர்த்தர் தாமே அவர்களுடைய இருதயத்தை மறுபடியும் திருப்பியிருக்கிறார் என்பதையும் இந்த ஜனங்கள் அறிந்துகொள்ளவேண்டும். அவர்கள் கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது, கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் அவர்களுக்கு கிடைக்கும்.

எலியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "என்னைக் கேட்டருளும், என்னைக் கேட்டருளும்" என்று சொல்லுகிறார். கர்த்தரும் எலியாவின் ஜெபத்தைக் கேட்டருளுகிறார்.

அப்பொழுது: கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்குகிறது. அது அந்தச் சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்துப்போடுகிறது. மேலும் அந்த அக்கினி வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போடுகிறது (1இராஜா 18:38).

எலியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கும்போதே இந்த அற்புதம் நடைபெறுகிறது. கர்த்தருடைய அற்புத வல்லமை அங்கே அதிகமாய் வெளிப்படுகிறது. கர்த்தரிடத்திலிருந்து இறங்கின அக்கினி சர்வாங்க தகனபலியையும் விறகுகளையும் பட்சித்துப்போடுவதோடு, பலிபீடத்திலுள்ள கற்களையும் மண்ணையும் பட்சித்துப்போடுகிறது.

மோசேயும் சாலொமோனும் பலிபீடம் கட்டினார்கள். வானத்திலிருந்து இறங்கி வந்த அக்கினி அவர்கள் கட்டின பலிபீடங்களை பரிசுத்தப்படுத்தினது. இப்போதோ கர்த்தரிடத்திலிருந்து இறங்கி வந்த அக்கினி பலிபீடத்தையே பட்சித்துப்போடுகிறது. இனிமேல் அந்தப் பலிபீடத்தை பயன்படுத்த முடியாது.

பலிபீடத்தைச் சுற்றிலும், கர்மேல் பர்வதத்திலே ஆகாபும், அவனுடைய அரண்மனையிலுள்ளவர்களும், பாகாலை ஆராதிக்கிறவர்களும் இஸ்ரவேல் ஜனங்களும் திரளான எண்ணிக்கையில் கூடியிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் கர்த்தருடைய அக்கினி சகலத்தையும் பட்சித்துப்போட்டதைப் பார்த்து திகிலடைகிறார்கள். அவர்களுடைய இருதயத்திலே பயமும் நடுக்கமும் உண்டாயிற்று.

கர்மேல் பர்வதத்தில் ஆவிக்குரிய யுத்தம் நடைபெறுகிறது. இந்த யுத்தத்தில் பாகாலும், அதன் தீர்க்கதரிசிகளும் தோற்றுப்போகிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே ஜீவனுள்ளவர் என்பதும், அவர் மாத்திரமே சர்வவல்லமையுள்ளவர் என்பதும் எல்லா ஜனங்களுக்கு முன்பாகவும் பிரத்தியட்சமாய் நிரூபிக்கப்படுகிறது.

ஜனங்களெல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து: "கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம்" (1இராஜா 18:39) என்று சொல்லுகிறார்கள். இங்கு நடைபெறுகிற ஆவிக்குரிய யுத்தத்திலே, கர்மேல் பர்வதத்தில் கூடியிருக்கிற ஜனங்களே, நியாயாதிபதிகளாயிருந்து சத்தியத்தை தீர்மானம்பண்ணவேண்டும். கர்த்தர் தெய்வமா அல்லது பாகால் தெய்வமா என்பதை அவர்கள் முடிவு பண்ணவேண்டும். எந்த தெய்வம் அக்கினியினால் மறுஉத்தரவு அருளியது என்பதை ஜனங்களே உறுதிபண்ணவேண்டும். இதைக் கண்ட ஜனங்களெல்லோரும் முகங்குப்புற விழுந்து, "கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம்" என்று அறிக்கை செய்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் இதுவரையிலும் பாகாலை ஆராதித்தார்கள். அவர்களில் அநேகர் பாகாலையும், கர்த்தரையும் ஆராதித்தார்கள். இப்போதோ அவர்கள் "பாகாலே தெய்வம்" என்று சொல்லாமல், "கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம்" என்று தங்கள் இருதயத்தின் ஆழத்திலிருந்து சொல்லி, கர்த்தரை மகிமைப்படுத்துகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் "கர்த்தரே தெய்வம்" என்று அறிக்கை செய்யும்போது, "கர்த்தர் தெய்வமாகயிருப்பதினால், அவர் எங்களுடைய தெய்வமாகயிருக்கிறார்" என்றும், "நாங்கள் அவரை மாத்திரமே சேவிப்போம்" என்றும் இஸ்ரவேல் ஜனங்கள் அறிக்கை பண்ணுகிறார்கள்.

கர்மேல் பர்வதத்திலே நடைபெற்ற அற்புதத்தைப் பார்த்து இஸ்ரவேல் ஜனத்தாரில் சிலருடைய இருதயம் கர்த்தரிடத்தில் திரும்புகிறது. மற்றவர்கள் உணர்த்தப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்பவில்லை. கர்த்தரே தெய்வம் என்பதை அவர்கள் அறிந்துகொள்கிறார்கள். ஆனாலும் அவர்கள் கர்த்தரிடத்தில் உடன்படிக்கை பண்ணிக்கொள்ள இன்னும் ஆயத்தமாயில்லை. கர்த்தர் அவர்களுக்கு இன்னும் தெய்வமாகவில்லை.

பாகாலின் தீர்க்கதரிசிகளோ, அவர்களுடைய பலிபீடத்திற்கு முன்பாக குற்றவாளிகளைப்போல இருக்கிறார்கள். அப்பொழுது எலியா அங்கே கூடியிருக்கிற ஜனங்களை நோக்கி: "நீங்கள் பாகாலின் தீர்க்கதரிசிகளில் ஒருவனும் தப்பிப்போகாதபடிக்கு அவர்களைப் பிடியுங்கள்" என்று சொல்லுகிறார்; அவர்களைப் பிடித்தபோது, எலியா அவர்களைக் கீழே கீசோன் ஆற்றங்கரையிலே கொண்டுபோய், அங்கே அவர்களை வெட்டிப்போடுகிறார் (1இராஜா 18:40).

பாகாலின் தீர்க்கதரிசிகள் நானூற்றைம்பதுபேரையும், யேசபேலின் பந்தியிலே சாப்பிடுகிற தோப்பு விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகள் நானூறு பேரையும் எலியா வெட்டிப்போடுகிறார். இவர்களெல்லோருமே சீதோனியர்கள். ஆகாப் இவர்களெல்லோரையும் கர்மேல் பர்வதத்திலே கூட்டிச்சேர்த்தான். எலியா அவர்களெல்லோரையும் வெட்டிக் கொன்றுபோடுகிறார்.

இஸ்ரவேல் தேசத்தில் கர்மேல் பர்வதத்திற்கு வராத பாகாலின் தீர்க்கதரிசிகளும் இருக்கிறார்கள். அவர்கள் இந்த சங்காரத்திற்கு தப்பித்துக்கொள்கிறார்கள். துன்மார்க்கமான பாகாலின் தீர்க்கதரிசிகள் ஆகாபின் அழிவுக்கு காரணமாயிருக்கிறார்கள். பாகாலின் தீர்க்கதரிசிகளில் நானூறு பேர் ஆகாபை கீலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ணப்போகுமாறு அனுப்புகிறார்கள். இந்த தீர்க்கதரிசிகள் தங்களை பாகாலின் தீர்க்கதரிசிகள் என்று சொல்லிக்கொள்ளாமல் கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் என்று சொல்லிக்கொண்டவர்கள்.

"அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா ஏறக்குறைய நானூறு தீர்க்கதரிசிகளைக் கூடிவரச்செய்து: நான் கீலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ணப்போகலாமா ,போகலாகாதா என்று அவர்களைக் கேட்டதற்கு; அவர்கள், போம், ஆண்டவர் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றார்கள்" (2இராஜா 22:6).

பெருமழை
1இராஜா 18:41-46

1இராஜா 18:41. பின்பு எலியா ஆகாபை நோக்கி: நீர் போம், போஜனபானம் பண்ணும்; பெருமழையின் இரைச்சல் கேட்கப்படுகிறது என்றான்.

1இராஜா 18:42. ஆகாப் போஜனபானம் பண்ணப்போனான்; பின்பு எலியா கர்மேல் பர்வதத்தினுடைய சிகரத்தின்மேல் ஏறி, தரையிலே பணிந்து, தன் முகம் தன் முழங்காலில் பட குனிந்து,

1இராஜா 18:43. தன் ஊழியக்காரனை நோக்கி: நீ போய்ச் சமுத்திரமுகமாய்ப் பார் என்றான்; அவன் போய்ப் பார்த்து, ஒன்றும் இல்லை என்றான்; நீ இன்னும் ஏழுதரம் போய்ப் பார் என்றான்.

1இராஜா 18:44. ஏழாந்தரம் இவன்: இதோ, சமுத்திரத்திலிருந்து ஒரு மனுஷனுடைய உள்ளங்கை அத்தனைச் சிறிய மேகம் எழும்புகிறது என்றான்; அப்பொழுது அவன் நீ போய், ஆகாபை நோக்கி: மழை உம்மைத் தடைசெய்யாதபடிக்கு இரதத்தைப் பூட்டி, போய்விடும் என்று சொல் என்றான்.

1இராஜா 18:45. அதற்குள்ளாக வானம் மேகங்களினாலும் காற்றினாலும் கறுத்து பெருமழை உண்டாயிற்று; ஆகாப் இரதத்தில் ஏறி யெஸ்ரயேலுக்குப் போனான்.

1இராஜா 18:46. கர்த்தருடைய கை எலியாவின்மேல் இருந்ததினால், அவன் தன் அரையைக் கட்டிக்கொண்டு, யெஸ்ரயேலுக்கு வருமட்டாக ஆகாபுக்குமுன் ஓடினான்.

இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே ஓரளவு ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாயிருக்கிறது. கர்த்தர் தங்கள் மத்தியிலே செய்த பலத்த கிரியைகளைப் பார்த்து, ஜனங்கள் பயத்தோடும் நடுக்கத்தோடும், கர்த்தரிடத்தில் திரும்பி வருகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பியதினால், கர்த்தர் இதுவரையிலும் அடைத்து வைத்திருந்த வானத்தை திறந்து, தேசத்திலே மழை பெய்யப்பண்ணுகிறார். கர்த்தருடைய ஆசீர்வாதமான மழை, இஸ்ரவேல் தேசத்தின்மீது, அன்று சாயங்காலமே உண்டாயிற்று.

பின்பு எலியா ஆகாபை நோக்கி: "நீர் போம், போஜனபானம்பண்ணும்; பெருமழையின் இரைச்சல் கேட்கப்படுகிறது" (1இராஜா 18:41) என்று சொல்லுகிறார். ஆகாபும் எலியாவின் வார்த்தையைக் கேட்டு போஜனம்பண்ணப்போகிறான்.

ஆகாப் அன்று முழுவதும் போஜனம்பண்ணவில்லை. கர்மேல் பர்வதத்திலே ஆவிக்குரிய யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஒருவேளை ஆகாப் பாகால்மீது நம்பிக்கை வைத்து, உபவாசம்பண்ணியிருக்கலாம். ஆகாப் சாப்பிடவில்லை என்பது எலியாவுக்கும் தெரிந்திருக்கிறது. ஆகையினால் எலியா ஆகாபை நோக்கி "போஜனபானம்பண்ணும்" என்று சொல்லுகிறார்.

எலியாவின் செவிகளில் மாத்திரம் பெருமழையும் இரைச்சல் கேட்கப்படுகிறது. இந்த இரைச்சல் வேறு யாருடைய செவிகளிலும் கேட்கவில்லை. கர்த்தர் எலியாவின் செவிகளை விசேஷித்த விதமாய் திறந்திருப்பதினால், அவருக்கு பெருமழையின் இரைச்சல் கேட்கிறது. கர்த்தர் அக்கினியினால் உத்தரவு கொடுத்தார். இப்போது அவர் மழைத்தண்ணீரால் உத்தரவு கொடுக்கப்போகிறார்.

எலியா பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலினால் கர்த்தரைத் துதிப்பதற்காக கர்மேல் பர்வதத்தினுடைய சிகரத்தின்மேல் ஏறுகிறார். அங்கே அவர் தன் முகம் தன் முழங்காலில்பட குனிந்து கர்த்தரைத் துதிக்கிறார். எலியா இதுவரையிலும் இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே, திரள்கூட்டத்திற்கு நடுவிலே இருந்தார். இப்போதோ கர்மேல் பர்வதத்தின் சிகரத்தில், கர்த்தரோடு தனிமையிலிருப்பதற்காக, அங்கே ஏறிப்போகிறார். கர்மேலின் கொடுமுடியிலே ஒளித்துக்கொண்டவர்களைப்பற்றி ஆமோஸ் தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

"அவர்கள் கர்மேலின் கொடுமுடியிலே ஒளித்துக்கொண்டாலும், அங்கே அவர்களைத் தேடிப்பிடிப்பேன்; அவர்கள் சமுத்திரத்தின் ஆழத்திலே போய் என் கண்களுக்கு மறைந்துகொண்டாலும், அங்கே அவர்களைக் கடிக்கப் பாம்புகளுக்குக் கட்டளையிடுவேன்" (ஆமோ 9:3).

எலியா கர்மேல் பர்வதத்தின் சிகரத்திலே கர்த்தரோடு தனிமையிலிருக்கிறார். கர்த்தருடைய ஊழியத்தை திரளான ஜனங்களுக்கு முன்பாக செய்கிறவர்கள், எலியாவைப்போல, கர்த்தருடைய சமுகத்திலே தனிமையிலிருக்கப் பழகிக்கொள்ளவேண்டும். கர்த்தரோடு தனிமையாகப் பேசவேண்டும். கர்த்தர் சொல்லுகிற வார்த்தைகளை கவனமாய்ச் செவிகொடுத்து கேட்கவேண்டும். கர்த்தரோடு ஐக்கியமாயிருப்பதற்கு தனிமை அநுகூலமான நல்ல ஸ்தலம்.

கர்மேல் பர்வதத்தில் கர்த்தர் எலியாவை உயர்த்தினார். கர்த்தர் எலியாவின் ஜெபத்தைக் கேட்டு, வானத்திலிருந்து தம்முடைய அக்கினியை அனுப்பினார். எலியாவோ கர்த்தருக்கு முன்பாக பெருமைப்படவில்லை. அவர் தன்னைத் தாழ்த்துகிறார். எலியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "தரையிலே பணிந்து, தன் முகம் தன் முழங்காலில்பட குனிந்து" ஜெபம்பண்ணுகிறார். இது அவருடைய தாழ்மைக்கு அடையாளம்.

எலியா கர்மேல் பர்வதத்தினுடைய சிகரத்தின்மேல் ஏறியபோது, அங்கே அவருடைய ஊழியக்காரன் ஒருவனும் அவரோடுகூடயிருக்கிறான். எலியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணிவிட்டு, தன் ஊழியக்காரனை நோக்கி, "நீ போய்ச் சமுத்திரமுகமாய்ப் பார்" என்று சொல்லுகிறார். அவன் போய்ப் பார்த்து, "ஒன்றும் இல்லை" என்று எலியாவுக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறான்; எலியாவோ தன்னுடைய வேலைக்காரனிடத்தில், "நீ இன்னும் ஏழுதரம் போய்ப் பார்" (1இராஜா 18:43) என்று சொல்லுகிறார்.

கர்மேல் பர்வத்தின் சிகரத்திலிருந்து பார்க்கும்போது சமுத்திரம் பிரத்தியட்சமாய்த் தெரிகிறது. இது மத்தியதரைக்கடலாகும். மத்தியதரைக்கடலிலே பிரயாணம்பண்ணுகிற மாலுமிகள், இந்தப் பகுதியை "கர்மேல் நம்பிக்கை முனை" என்று அழைக்கிறார்கள்.

வேலைக்காரன், எலியா தனக்கு சொன்ன பிரகாரம், கர்மேல் பர்வதத்தின் சிகரத்திலிருந்து, மத்தியதரைக்கடலைப் பார்க்கிறான். அங்கே தண்ணீர் மாத்திரம்தான் இருக்கிறது. எலியாவுக்கு விசேஷமாய்ச் சொல்லுவதற்கு, அவருடைய வேலைக்காரனிடத்தில் ஒரு செய்தியுமில்லை.

எலியாவோ சோர்ந்துபோகாமல் தொடர்ந்து ஜெபம் பண்ணுகிறார். தன்னுடைய வேலைக்காரனை "நீ இன்னும் ஏழுதரம் போய்ப்பார்" என்று சொல்லி அனுப்புகிறார். எலியா ஜெபத்தில் தரித்திருக்கிறார். கர்த்தர் தன்னுடைய ஜெபத்திற்கு பதில் கொடுப்பார் என்னும் நம்பிக்கை எலியாவின் மனதிலே உறுதியாயிருக்கிறது.

யாக்கோபு கர்த்தருடைய தூதனானவரிடத்தில் யுத்தம்பண்ணி, "நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய, உம்மைப் போகவிடமாட்டேன்" என்று சொன்னார். யாக்கோபு கர்த்தரிடத்தில் தீர்மானத்தோடு ஜெபம்பண்ணினார். யாக்கோபைப்போலவே இப்போது எலியாவும், விசுவாசத்தோடு ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர் தன்னுடைய ஜெபத்திற்கு பதிலைக் கொடுக்கும் வரையிலும், தன்னுடைய வேலைக்காரனை நோக்கி, "நீ போய் சமுத்திர முகமாய்ப்பார்" என்று சொல்லுகிறார்.

அப்போது சமுத்திரத்திலிருந்து சிறிய மேகம் எழும்புகிறது. இது ஒரு மனுஷனுடைய உள்ளங்கை அத்தனை மிகவும் சிறியதாயிருக்கிறது. எலியாவின் வேலைக்காரன் இந்த சிறிய மேகத்தைப் பார்த்து, இந்தச் செய்தியை எலியாவுக்கு சொல்லுகிறான். ஆரம்பம் அற்பமானதாயிருந்தாலும் முடிவு மகிமையாகவும், சம்பூரணமாகவும் இருக்கும். மிகப்பெரிய ஆசீர்வாதங்கள், ஆரம்பத்தில் சிறிதாகவே ஆரம்பமாகும்.

எலியா தன்னுடைய வேலைக்காரனிடத்தில், "நீ போய், ஆகாபை நோக்கி: மழை உம்மைத் தடைசெய்யாதபடிக்கு இரதத்தைப் பூட்டி, போய்விடும் என்று சொல்" (1இராஜா 18:44) என்று சொல்லுகிறார். அதற்குள்ளாக வானம் மேகங்களினாலும் காற்றினாலும் கறுத்து பெருமழை உண்டாயிற்று; ஆகாப் இரதத்தில் ஏறி யெஸ்ரயேலுக்குப் போகிறான் (1இராஜா 18:45).

எலியா ஆகாபை தன்னுடைய அரண்மனைக்கு சீக்கிரத்தில் போகுமாறு துரிதப்படுத்துகிறார். ஆகாப் இரதத்தில் ஏறிப்போகிறார். எலியாவோ தன்னுடைய கால்களினால் ஓடுகிறார். ஆனாலும் எலியா இரதத்தில் ஏறிப்போகும் ஆகாபுக்கு முன்பாக வேகமாக ஓடுகிறார்.

கர்த்தருடைய கை எலியாவின்மேல் இருக்கிறது. ஆகையினால், எலியா தன் அரையைக் கட்டிக்கொண்டு, யெஸ்ரயேலுக்கு வருமட்டாக ஆகாபுக்குமுன் ஓடுகிறார் (1இராஜா 18:46). ஆகாபுக்கு எலியாவின்மீது மதிப்போ மரியாதையோ இல்லை. ஆகாப் எலியாவை கர்த்தருடைய தீர்க்கதரிசியாக அங்கீகரித்து, அவருக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்க விரும்பினால், அவன் எலியாவை தன்னுடைய இரதத்தில் ஏற்றி, தன்னுடைய அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு போயிருப்பார்.

எகிப்து தேசத்தின் அதிகாரி பிலிப்புவை தன்னுடைய இரத்தில் ஏற்றிக்கொண்டு போனதுபோல, ஆகாபும் எலியாவை தன் இரத்திலே ஏற்றி அவரைக் கனம்பண்ணியிருப்பான். எலியாவை இஸ்ரவேலின் மூப்பர்களுக்கு முன்பாக உயர்த்தியிருப்பான். இஸ்ரவேல் தேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு என்ன செய்யவேண்டுமென்று, எலியாவின் ஆலோசனையைக் கேட்டிருப்பான். ஆவிக்குரிய காரியங்களில் தனக்கும் இஸ்ரவேல் ஜனங்களுக்கும் எலியா உதவிசெய்ய வேண்டுமென்று ஆகாப் அவரிடத்தில் உதவி கேட்டிருப்பான்.

ஆனால் ஆகாபோ எலியாவைவிட்டு சீக்கிரத்தில் ஓடிப்போகவேண்டுமென்று விரும்புகிறான். கர்மேல் பர்வதத்தில் நடைபெற்ற அற்புத சம்பவம் ஆகாபின் மனதை பாதித்திருக்கிறது. ஆனால் அவனுக்குள் மனமாற்றம் ஏற்படவில்லை. எலியாவைவிட்டு விலகிப்போய்விட்டால் அதுவே தனக்கு நல்லது என்று ஆகாப் நினைக்கிறான்.

தேசாதிபதியாகிய பேலிக்ஸ் அப்போஸ்தலர் பவுலின் உபதேசத்தைக் கேட்க மனதில்லாதவனாக, பவுலை அனுப்பிவிட்டான். தனக்கு சாதகமான மற்றொரு வேளையிலே, பவுலின் வார்த்தைகளைக் கேட்பதாக சாக்குபோக்கு சொன்னான். ஆகாபும் எலியாவை விட்டு விலகி தன்னுடைய இரதத்தில் ஏறி யெஸ்ரயேலுக்கு வேகமாகப் போகிறான்.

19 அதிகாரம்

எலியா கர்மேல் பர்வதத்தினுடைய சிகரத்தின்மேல் ஏறி கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணிய பிறகு அவர் யெஸ்ரயேலுக்கு புறப்பட்டுப்போகிறார். எல்லா ஜனங்களுடைய கண்களும் எலியாவின்மீது பதிந்திருக்கிறது. எலியா எங்கும் ஓடி ஒளியாமல், ஜனங்கள் மத்தியிலே தன்னை பிரத்தியட்சமாகக் காண்பிக்கிறார்.

எலியா தன்னுடைய ஜீவனைப் பாதுகாத்துக்கொள்ள மறுபடியும் தப்பித்து ஓடி ஒளிந்துகொள்ள வேண்டியதாயிற்று. எலியா கர்த்தருடைய தீர்க்கதரிசி. எலியாவின் ஊழியம் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தேவைப்படுகிறது. ஆனால் எலியாவோ இஸ்ரவேல் தேசத்தைவிட்டு தப்பித்து ஓடிப்போகிறார்.

யேசபேல் இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபின் மனைவி. ஆகாப் சிங்காசனத்தில் அமர்ந்திருந்தாலும், யேசபேலுக்கே தேசத்தின்மீது முழுஅதிகாரமும் இருக்கிறது. அவளே ஆகாபின் பெயரால் இஸ்ரவேல் தேசத்தை ராஜ்யபாரம்பண்ணுகிறாள்.

எலியா பாகாலின் தீர்க்கதரிசிகளை பட்டயத்தாலே கொன்றுபோட்ட செய்தி யேசபேலுக்கு அறிவிக்கப்படுகிறது. யேசபேல் எலியாவை கொன்றுபோடப்போவதாக சொல்லுகிறாள் (1இராஜா 19:1-3).

எலியா தன் பிராணனைக்காக்க வனாந்தரத்திலே ஒளிந்துகொள்கிறார். அங்கே கர்த்தருடைய கிருபை அவருக்கு வெளிப்படுகிறது. கர்த்தருடைய தூதன் எலியாவை அற்புதமாய்ப் போஷிக்கிறார் (1இராஜா 19:4-8).

எலியாவுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. எலியா செய்ய வேண்டிய ஊழியத்தை கர்த்தர் அவருக்கு தெளிவுபடுத்துகிறார் (1இராஜா 19:9-13).

எலியாவுக்கும் கர்த்தருக்கும் இடையே சம்பாஷணை நடைபெறுகிறது. எலியா கர்த்தரிடத்தில் தன்னுடைய நிலமையை முறையிடுகிறார் (1இராஜா 19:10-14). எலியா என்ன செய்யவேண்டுமென்று கர்த்தர் அவருக்கு சொல்லுகிறார் (1இராஜா 19:15-18).

எலியா கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு பெலனடைந்து, இதற்கு மேலும் ஒளித்திராமல் வெளியே வருகிறார். எலியா எலிசாவை சந்திக்கிறார். எலிசா எலியாவோடு சேர்ந்த பின்பு, எலியாவின் கரம் பலப்படுகிறது (1இராஜா 19:19-21).

யேசபேலின் கோபம்
1இராஜா 19:1,2

1இராஜா 19:1. எலியா செய்த எல்லாவற்றையும், அவன் தீர்க்கதரிசிகளெல்லாரையும் பட்டயத்தாலே கொன்றுபோட்ட செய்தி அனைத்தையும், ஆகாப் யேசபேலுக்கு அறிவித்தான்.

1இராஜா 19:2. அப்பொழுது யேசபேல் எலியாவினிடத்தில் ஆள் அனுப்பி: அவர்களில் ஒவ்வொருவனுடைய பிராணனுக்குச் செய்யப்பட்டதுபோல, நான் நாளை இந்நேரத்தில் உன் பிராணனுக்குச் செய்யாதேபோனால், தேவர்கள் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்கள் என்று சொல்லச்சொன்னாள்.

கர்த்தர் கர்மேல் பர்வதத்திலே தம்முடைய வல்லமையை அற்புதமாய் வெளிப்படுத்துகிறார். தேவனுடைய மகிமை அங்கே வந்து இறங்கியதை இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் பார்க்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய மகிமையை பிரத்தியட்சமாய்ப் பார்த்த பின்பு, அவர்களெல்லோரும் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பியிருக்கவேண்டும். பாகால்களை ஆராதிப்பதை விட்டு விட்டு, கர்த்தரை ஆராதிக்க முன்வரவேண்டும். இஸ்ரவேல் தேசம் முழுவதிலும் ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கவேண்டும்.

கர்த்தர் கர்மேல் பர்வதத்தில் அக்கினியினால் உத்தரவு அருளினார். இதைப் பார்த்த ஜனங்கள், எலியாவை தங்களுக்கு ஆவிக்குரிய தலைவராக ஏற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளையும், அவருடைய பிரமாணத்தையும் தங்களுக்கு போதிக்குமாறு அவர்கள் எலியாவிடம் வேண்டிக்கொள்ளவேண்டும். ஆனால் இஸ்ரவேல் தேசத்தில் ஆவிக்குரிய மனமாற்றம் ஏற்படவில்லை. ஜனங்கள் எப்போதும்போல தங்கள் பாவத்தில் ஜீவிக்கிறார்கள்.

கர்த்தர் எலியாவைக் கனப்படுத்தியிருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ எலியாவை புறக்கணித்து விடுகிறார்கள். அவர்கள் எலியாவுக்கு மதிப்போ, மரியாதையோ காண்பிக்கவில்லை. அவர்கள் எலியாவை பராமரிக்கவும் முன்வரவில்லை. இஸ்ரவேல் தேசம் எலியாவுக்கு ஆதரவாயில்லை. யேசபேல் எலியாவின்மீது கோபமாயிருக்கிறாள்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபுக்கும் எலியாவைப் பிடிக்கவில்லை. ஆனால் ஆகாபால் எலியாவை ஒன்றும் செய்ய முடியவில்லை. தன்னால் எலியாவுக்கு விரோதமாக ஒன்றும் செய்ய முடியாவிட்டாலும், தன்னுடைய மனைவி யேசபேல் எலியாவை ஒழித்துவிடுவாள் என்று ஆகாப் நினைக்கிறான்.

யேசபேல் துன்மார்க்கமான ஸ்திரீ. அவள் இஸ்ரவேல் தேசத்திற்கு ராணியாக இருந்தாலும், தேசத்தின் சர்வஅதிகாரங்களும் அவளுடைய கையிலிருக்கிறது. அவளே தன் புருஷன் ஆகாபையும், இஸ்ரவேல் தேசம் முழுவதையும் ஆளுகை செய்கிறாள். இஸ்ரவேல் தேசத்தில் யேசபேலின் உத்தரவு இல்லாமல் ஒரு காரியமும் நடக்காது. அவளுடைய உத்தரவு நிறைவேறாமலும் போகாது.

ஆகாப் கர்மேல் பர்வதத்தில், கர்த்தருடைய மகிமை இறங்கி வந்ததை பிரத்தியட்சமாய்ப் பார்த்தான். அங்கே கூடியிருந்த ஜனங்களெல்லோரும் "கர்த்தரே தெய்வம்" என்று சொன்னதை ஆகாபும் தன்னுடைய செவிகளால் கேட்டான். எலியா ஜெபம்பண்ணியபோது அங்கு நடைபெற்ற அற்புதத்தை ஆகாப் மறக்கவில்லை.

ஆகாபுக்கு எலியாவின்மீது கோபம் இருந்தாலும், ஜனங்களெல்லோரும் எலியாவை ஆதரிப்பதினால், ஆகாப் எலியாவை ஒன்றும் செய்யவில்லை.

எலியாவுக்கு விரோதமாகத் தீங்கு செய்யக்கூடாது என்று ஆகாபின் மனச்சாட்சியும் அவனுக்கு சாட்சி சொல்லுகிறது. ஆகையினால் ஆகாப் எலியாவைத் துன்பப்படுத்தவில்லை. ஆனாலும், எலியா செய்த எல்லாவற்றையும் ஆகாப் யேசபேலுக்கு அறிவிக்கிறான். எலியா பாகாலின் தீர்க்கதரிசிகள் எல்லோரையும் பட்டயத்தால் கொன்றுபோட்ட செய்தி அனைத்தையும் ஆகாப் யேசபேலுக்கு அறிவிக்கிறான் (1இராஜா 19:1).

யேசபேல் பாகாலை ஆராதிக்கிறவள். ஆகாப் அவளிடத்தில், கர்த்தர் கர்மேல் பர்வதத்தில் செய்த அற்புதங்களைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. யேசபேல் பாகாலை ஆராதியாமல், கர்த்தரை ஆராதிக்கவேண்டும் என்னும் விருப்பமும் ஆகாபின் மனதில் இல்லை. எலியாவைத் தண்டிக்கவேண்டும் என்பதே ஆகாபின் விருப்பம். இதற்காக, எலியா பாகாலின் தீர்க்கதரிசிகள் எல்லோரையும் பட்டயத்தால் கொன்றுபோட்ட செய்தியை, ஆகாப் யேசபேலுக்கு சொல்லுகிறான்.

கர்மேல் பர்வதத்திலே கர்த்தர் என்ன செய்தார் என்பதை ஆகாப் யேசபேலுக்கு சொல்லியிருக்கவேண்டும். ஆனால் அவனோ கர்த்தரைப்பற்றி ஒரு வார்த்தையும் பேசாமல், எலியா செய்த எல்லாவற்றையும் சொல்லுகிறான். எலியா ஏதோ மந்திரம் ஓதினார் என்றும், அதன் நிமித்தமாக வானத்திலிருந்து அக்கினி இறங்கி வந்தது என்றும் பொருள்படுமாறு, ஆகாப் யேசபேலிடத்தில் சொல்லுகிறான்.

கர்த்தரே வானத்திலிருந்து அக்கினி அனுப்பினார் என்றோ, அந்த அக்கினி எலியாவின் பலிபீடத்திலுள்ள தகனபலியை பட்சித்துப்போட்டது என்றோ ஆகாப் சாட்சியாய்ச் சொல்லவில்லை. இந்த அக்கினிக்கும் கர்த்தருக்கும் சம்பந்தம் இல்லாததுபோல ஆகாப் பேசுகிறான்.

கர்த்தர் கர்மேல் பர்வதத்திலே செய்த அற்புதத்தைப்பற்றி, ஆகாப் யேசபேலிடத்தில் ஒன்றும் சொல்லவில்லை. அதற்கு பதிலாக எலியா பாகாலின் தீர்க்கதரிசிகள் எல்லோரையும் வெட்டிக்கொன்றுபோட்ட செய்தியை ஆகாப் யேசபேலுக்கு விரிவாகச் சொல்லுகிறான்.

ஆகாப் சொன்ன செய்தியைக் கேட்டு யேசபேலின் கோபம் அதிகரிக்கிறது. அப்பொழுது யேசபேல் எலியாவினிடத்தில் ஆள் அனுப்பி: "அவர்களில் ஒவ்வொருவனுடைய பிராணனுக்குச் செய்யப்பட்டதுபோல, நான் நாளை இந்நேரத்தில் உன் பிராணனுக்குச் செய்யாதேபோனால், தேவர்கள் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்கள்" (1இராஜா 19:2) என்று சொல்லச்சொல்லுகிறாள்.

இன்னும் இருபத்து நான்கு மணி நேரத்திற்குள்ளாக எலியா கொல்லப்படுவார் என்று யேசபேல் பயமுறுத்துகிறாள். யேசபேல் எலியாவை பயமுறுத்த மாத்திரமே செய்கிறாள். எலியாவைக் கொல்லுவதற்கு யேசபேல் ஆட்களை அனுப்பவில்லை. எலியாவை பயமுறுத்தும் செய்தியை மாத்திரமே யேசபேல் அவருக்கு சொல்லியனுப்புகிறாள். தன்னை பயமுறுத்தும் இந்தச் செய்தியைக் கேட்டவுடன் எலியா தப்பித்து ஓடிப்போய்விடுவார் என்பதும் யேசபேலுக்கு நன்றாய்த் தெரியும். ஆனாலும் அவள் எலியாவை உடனே கொல்லவில்லை.

இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் எலியாவை தீர்க்கதரிசியாக மதிக்கிறார்கள். ஜனங்களுடைய ஆதரவு எலியாவுக்கு இருக்கிறது. யேசபேல் இஸ்ரவேல் ஜனங்களுக்கு பயப்படுவதினால், அவள் உடனே எலியாவைக் கொன்றுபோடவில்லை. எலியாவை பயமுறுத்தி, அவரை இஸ்ரவேல் தேசத்தைவிட்டே துரத்திவிடவேண்டும் என்பது யேசபேலின் திட்டம்.

எலியாவின் பயம்
1இராஜா 19:3-8

1இராஜா 19:3. அவனுக்கு அது தெரிந்தபோது எழுந்து, தன் பிராணனைக் காக்க யூதாவைச் சேர்ந்த பெயெர்செபாவுக்குப் புறப்பட்டுப்போய், தன் வேலைக்காரனை அங்கே நிறுத்திவிட்டான்.

1இராஜா 19:4. அவன் வனாந்தரத்தில் ஒருநாள் பிரயாணம் போய், ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து, தான் சாகவேண்டும் என்று கோரி: போதும் கர்த்தவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்; நான் என் பிதாக்களைப்பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொல்லி,

1இராஜா 19:5. ஒரு சூரைச்செடியின்கீழ்ப் படுத்துக் கொண்டு நித்திரைபண்ணினான்; அப்பொழுது ஒரு தூதன் அவனைத் தட்டியெழுப்பி; எழுந்திருந்து போஜனம் பண்ணு என்றான்.

1இராஜா 19:6. அவன் விழித்துப் பார்க்கிறபோது, இதோ, தழலில் சுடப்பட்ட அடையும், ஒரு பாத்திரத்தில் தண்ணீரும் அவன் தலைமாட்டில் இருந்தது; அப்பொழுது அவன், புசித்துக் குடித்துத் திரும்பப் படுத்துக்கொண்டான்.

1இராஜா 19:7. கர்த்தருடைய தூதன் திரும்ப இரண்டாந்தரம் வந்து அவனைத் தட்டியெழுப்பி: எழுந்திருந்து போஜனம்பண்ணு; நீ பண்ணவேண்டிய பிரயாணம் வெகுதூரம் என்றான்.

1இராஜா 19:8. அப்பொழுது அவன் எழுந்திருந்து புசித்துக் குடித்து, அந்தப் போஜனத்தின் பலத்தினால் நாற்பதுநாள் இரவுபகல் ஓரேப் என்னும் தேவனுடைய பர்வதமட்டும் நடந்துபோனான்.

யேசபேலின் திட்டமும் நிறைவேறுகிறது. யேசபேல் அனுப்பிய ஆட்கள், எலியாவுக்கு அவள் சொல்லியனுப்பிய செய்தியை சொல்லுகிறார்கள். எலியாவுக்கு அது தெரிந்தபோது எழுந்து, தன் பிராணனைக் காக்க யூதாவைச்சேர்ந்த பெயெர்செபாவுக்குப் புறப்பட்டுப்போகிறார். எலியா, தன் வேலைக்காரனை அங்கே நிறுத்திவிடுகிறார் (1இராஜா 19:3).

தனக்கு செய்தி கிடைத்த அன்று இரவே, எலியா யெஸ்ரயேலிருந்து, யூதாவைச் சேர்ந்த பெயர்செபாவுக்கு தப்பித்து ஓடிப்போய்விடுகிறார். எலியா கர்மேல் பர்வதத்தில், கர்த்தருக்காக பக்திவைராக்கியதோடு பேசினார். இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபோடும், பாகாலின் தீர்க்கதரிசிகளோடும் சிறிதும் பயமில்லாமல், அதிக தைரியமாய்ப் பேசினார்.

கர்த்தரும் கர்மேல் பர்வதத்தில் கூடியிருந்த எல்லோருடைய கண்களுக்கு முன்பாக, அக்கினியினால் பிரதியுத்தரம் சொன்னார். இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் "கர்த்தரே தெய்வம்" என்று தங்கள் வாயினால் அறிக்கை செய்தார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாருடைய மனதிலே ஆவிக்குரிய மாற்றம் ஏற்பட ஆரம்பித்திருக்கிறது. இந்த சூழ்நிலையில் எலியா இஸ்ரவேல் தேசத்தில் தங்கியிருப்பது மிகவும் நல்லது. அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கும், பிரயோஜனத்திற்கும் எலியாவால் ஊழியம் செய்ய முடியும். கர்த்தருடைய சத்தியங்களை அவர்களுக்கு உபதேசம் பண்ண முடியும்.

தான் கர்த்தருடைய ஊழியத்தை செய்யும்போது கர்த்தர் தன்னை பாதுகாப்பார் என்று எலியா நம்பவேண்டும். ஆனால் எலியாவோ கர்த்தரை நம்பாமல் தன் பிராணனைக் காக்க ஓடிப்போகிறார்.

எலியாவுக்கு இதற்கு முன்பு இதுபோன்ற ஆபத்து வந்தது. அப்போது கர்த்தர் எலியாவை ஒளித்துக்கொண்டார். கர்த்தர் எலியாவிடம் "நீ இவ்விடத்தை விட்டுக் கீழ்த்திசையை நோக்கிப் போய், யோர்தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையில் ஒளித்துக்கொண்டிரு" (1இராஜா 17:3) என்று சொன்னார். ஏற்கெனவே தன்னைப் பாதுகாத்த கர்த்தர், இப்போதும் பாதுகாப்பார் என்று எலியா நம்பவேண்டும்.

எலியா யெஸ்ரயேலிலிருந்து யூதாவைச் சேர்ந்த பெயர்செபாவுக்கு புறப்பட்டுப்போகிறார். அவர் அங்கே தங்கிவிடாமல் வனாந்தரத்தில் மேலும் ஒரு நாள் பிரயாணம் பண்ணுகிறார். இந்த வனாந்தரம், இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, கானான் தேசத்திற்கு பிரயாணம் பண்ணியபோது, சுற்றி அலைந்து திரிந்த வனாந்தரமாகும்.

யெஸ்ரயேலுக்கும் பெயர்செபாவுக்கும் இடையில் வெகுதூரமுள்ளது. யெஸ்ரயேல் இஸ்ரவேல் தேசத்திலுள்ளது. ஆகாப் அந்த தேசத்திற்கு ராஜா. பெயர்செபாவோ யூதாதேசத்தைச் சேர்ந்தது. யூதாதேசத்திலே யோசபாத் என்னும் நல்ல ராஜா ராஜ்யபாரம்பண்ணுகிறான். எலியா பெயர்செபாவிலே தங்கியிருக்கலாம். யூதாதேசத்திலே அவருக்கு யேசபேல் மூலமாய் ஆபத்து வராது. ஆனாலும் எலியாவின் மனதில் பயம் அதிகமாயிருக்கிறது. யேசபேலின் ஆட்கள் யூதாதேசத்திற்கும் வந்து தன்னைக் கொன்றுபோடுவார்களோ என்று நினைத்து எலியா மிகவும் பயப்படுகிறார்.

எலியா தன் பிராணனைக் காக்க, பெயர்செபாவிலிருந்து வனாந்தரத்திலே மேலும் ஒரு நாள் பிரயாணம்பண்ணுகிறார். வனாந்தர பிரயாணம் மிகவும் கடினமானது. தான் கஷ்டப்படும்போது, தன்னோடுகூட தன்னுடைய வேலைக்காரனும் வனாந்தரத்திலே கஷ்டப்படக்கூடாது என்று எலியா நினைக்கிறார். இதன் நிமித்தமாக, எலியா தன் வேலைக்காரனை, பெயர்செபாவிலே நிறுத்திவிடுகிறார். எலியா வனாந்தரத்தில் ஒரு நாள் பிரயாணம் செய்து ஒரு சூரைச்செடியின்கீழ் உட்கார்ந்திருக்கிறார்.

எலியா வனாந்தரத்திற்கு ஓடிப்போனாலும், அவருடைய மனதை விட்டு பயம் நீங்கவில்லை. இந்த உலகத்தை விட்டே போனால்தான் தனக்கு பாதுகாப்பு கிடைக்குமென்று எலியா நினைக்கிறார். ஆகையினால் அவர் சூரைச்செடியின்கீழ் உட்கார்ந்து, "தான் சாகவேண்டும்" என்று வேதனையோடு சொல்லுகிறார். எலியாவினிடத்தில் பிரயாணக்களைப்பு அதிகமாயிருக்கிறது. அவர் சிறுபிள்ளையைப்போல அங்கலாய்ப்பில் பேசுகிறார்.

எலியாவைப்போல, "தான் சாகவேண்டும்" என்று சொல்லுகிறவர்கள், மெய்யாகவே செத்துப்போவதற்கு ஆயத்தமாயிருக்கமாட்டார்கள். எலியா, "தான் சாகக்கூடாது" என்று நினைத்துதான், தன் பிராணனைக்காக்க, வனாந்தரத்திற்கு ஓடி வந்திருக்கிறார். எலியா உண்மையிலேயே செத்துப்போக ஆயத்தமாயிருந்திருந்தால், யேசபேல் அவரைக் கொன்றுபோடுவதாகச் சொன்னபோது, எலியா பயந்து ஓடி வந்திருக்கமாட்டார்.

எலியா ஒருவேளை யேசபேலின் கையினால் சாகவிரும்பாதிருக்கலாம். அவர் கர்த்தருடைய சமுகத்திலே செத்துப்போக ஆயத்தமாயிருக்கலாம். கர்த்தருடைய கரத்தினால் சாவது ஆசீர்வாதம் என்று எலியா நினைத்திருக்கலாம். எலியா கர்த்தரிடத்தில், "போதும் கர்த்தவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்; நான் என் பிதாக்களைப்பார்க்கிலும் நல்லவன் அல்ல" (1இராஜா 19:4) என்று சொல்லுகிறார்.

யேசபேலின் தீர்க்கதரிசிகள் செத்துப்போனதுபோல, எலியா யேசபேலின் பட்டயத்தினால் சாக விரும்பவில்லை. யேசபேலின் கையினால் செத்துப்போனால், பாகாலின் தீர்க்கதரிசிகள் சந்தோஷப்படுவார்கள். கர்த்தருடைய நாமம் தூஷிக்கப்படும். ஆகையினால் எலியா யேசபேலுக்கு தப்பித்து, தன் பிராணனைக் காக்க வனாந்தரத்திற்கு வந்திருக்கிறார்.

எலியா வனாந்தரத்தில் தனிமையாயிருக்கிறார். அவர் கர்த்தரிடத்தில் "போதும் கர்த்தாவே" என்று சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு, "தான் ஜீவனோடு வாழ்ந்தது போதும்" என்று அர்த்தமாகும். தான் கர்த்தருக்கு போதுமான அளவு ஊழியம் செய்திருப்பதாகவும், தான் கர்த்தருக்காக போதுமான அளவு பாடுகளை அனுபவித்திருப்பதாகவும் பொருள்படுமாறு எலியா "போதும் கர்த்தாவே" என்று சொல்லுகிறார்.

எலியா கர்த்தரிடத்தில் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, தன்னையும், தன்னுடைய முற்பிதாக்களையும் ஒப்பிட்டுச் சொல்லுகிறார். "நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவனல்ல" என்று எலியா கர்த்தரிடத்தில் மனவேதனையோடு சொல்லுகிறார். கர்மேல் பர்வதத்தில் தைரியமாகப் பேசின எலியாவின் வார்த்தைகளுக்கும், வனாந்தரத்திலே மனம் சோர்ந்துபோய் பேசுகிற எலியாவின் வார்த்தைகளுக்கும் வித்தியாசமுள்ளது.

எலியாவைப்போல பெரிய தீர்க்கதரிசிகள், இதுபோல மனம் உடைந்து போகமாட்டார்கள். அவர்கள் தங்கள் ஆவியிலே இந்த அளவுக்கு சோர்ந்து போகமாட்டார்கள். கர்த்தர் எலியாவோடு கூடயிருக்கும்போது, எலியா நல்லவராகவும், பெலமுள்ளவராகவும் இருக்கிறார். எலியாவுக்குள் இருக்கும் கர்த்தரே, அவரைப் பெலப்படுத்துகிறார்.

கர்த்தர் எலியாவுக்குள் இல்லையென்றால், எலியா மிகவும் சாதாரணமான மனுஷரைப்போலவே இருப்பார். எலியாவுக்கு கர்த்தருடைய உதவியும் ஒத்தாசையும் இல்லையென்றால், அவர் "நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவனல்ல" என்று சொன்ன பிரகாரமாகவே இருப்பார்.

கர்த்தர் எலியாவை தம்முடைய தூதன் மூலமாக இந்த வனாந்தரத்தில் போஷிக்கிறார். எலியா பிரயாணக்களைப்போடும், பசியோடும் இருக்கிறார். அவர் ஒரு சூரைச்செடியின் கீழ் படுத்துக்கொண்டு நித்திரைபண்ணுகிறார். அப்பொழுது ஒரு தூதன், எலியாவை தட்டியெழுப்பி, "எழுந்திருந்து போஜனம்பண்ணு" (1இராஜா 19:5) என்று சொல்லுகிறார்.

எலியாவோ "தான் சாகவேண்டும்" என்று விரும்புகிறார். கர்த்தரோ அவர் ஜீவனோடிருக்கவேண்டுமென்று விரும்புகிறார். எலியா இப்போது செத்துப்போவது கர்த்தருடைய சித்தமல்ல. கர்த்தர் எலியாவுக்கு ஒரு விசேஷித்த ஊழியத்தை நியமித்து வைத்திருக்கிறார். கர்த்தர் அவரைப் பாதுகாத்து, அவரை உயர்த்த விரும்புகிறார். எலியாவை ஜீவனோடு பாதுகாப்பதற்கு, கர்த்தர் தம்முடைய தூதனை அங்கே அனுப்புகிறார்.

கர்த்தர் எலியாவின் வார்த்தையைக் கேட்டு, அவரை உடனே கொன்றுபோடவில்லை. எலியா கர்த்தரிடத்தில், "போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்" என்று விண்ணப்பம்பண்ணினார் கர்த்தர் எலியாவின் விண்ணப்பத்தை அங்கீகரிக்காமல் நிராகரித்துவிடுகிறார்.

கர்த்தர் எலியாவின் வார்த்தைகளை நிராகரித்ததுபோல, சில சமயங்களில் நம்முடைய விண்ணப்ப வார்த்தைகளையும் சிலசமயங்களில் நிராகரித்துவிடுகிறார். கர்த்தர் எலியாவின் விண்ணப்பத்தை அங்கீகரித்திருந்தால், எலியா அப்போதே செத்துப்போயிருப்பார். அதுபோலவே கர்த்தர் நம்முடைய விண்ணப்ப வார்த்தைகள் எல்லாவற்றையும் அங்கீகரிப்பாரென்றால், நம்முடைய ஜீவனுக்கும் மோசம் வருவதற்கு வாய்ப்புள்ளது.

சில சமயங்களில் நமக்கு எப்படி ஜெபம்பண்ணுவது என்பதுகூட தெரியாது. கர்த்தரிடத்தில் கேட்கக்கூடாத காரியங்களை கேட்டுவிடுவோம். கர்த்தரோ நம்மீது கிருபையோடிருந்து, நமக்குள்ளே தம்முடைய சித்தத்தை மாத்திரம் நிறைவேற்றுகிறார். கர்த்தருக்கு சித்தமான காரியம் மாத்திரமே நமக்கு வாய்க்கும். கர்த்தர் நமக்கு செய்கிற காரியங்கள் எல்லாமே, நம்முடைய நன்மைக்கு ஏதுவாயிருக்கும்.

எலியா கர்த்தரிடத்தில், "தான் சாகவேண்டும்" என்று சொன்னார். கர்த்தரோ எலியாவுக்கு தம்முடைய தூதன் மூலம் தழலில் சுடப்பட்ட அடையையும், ஒரு பாத்திரத்தில் தண்ணீரையும் கொடுத்து ஆதரிக்கிறார். எலியா ஒரு சூரைச்செடியின்கீழ் படுத்துக்கொண்டு நித்திரைபண்ணுகிறார். நித்திரை பண்ணிக்கொண்டே செத்துப்போகவேண்டும் என்பது எலியாவின் விருப்பம். ஆனால் கர்த்தருடைய தூதன் எலியாவைத் தட்டி எழுப்புகிறார். அவருடைய நித்திரையை கலத்துப்போடுகிறார். அவர் எலியாவை எழுப்பி, "எழுந்திருந்து போஜனம்பண்ணு" என்று சொல்லுகிறார்.

எலியா விழித்துப் பார்க்கிறபோது, இதோ, தழலில் சுடப்பட்ட அடையும், ஒரு பாத்திரத்தில் தண்ணீரும் அவருடைய தலைமாட்டில் இருக்கிறது; அப்பொழுது எலியா, புசித்துக் குடித்துத் திரும்பப் படுத்துக்கொள்கிறார் (1இராஜா 19:6). எலியா படுத்துக்கொண்டு நித்திரைபண்ணும்போது, தேவதூதன் அவருக்கு காவலாய் நிற்கிறார்.

கர்த்தருடைய தூதன் திரும்ப இரண்டாந்தரம் வந்து எலியாவைத் தட்டியெழுப்புகிறார். "எழுந்திருந்து போஜனம்பண்ணு; நீ பண்ணவேண்டிய பிரயாணம் வெகுதூரம்" (1இராஜா 19:7) என்று தேவதூதன் எலியாவுக்கு சொல்லுகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகள் எங்கே இருந்தாலும், அவர்கள் கர்த்தருடைய பாதுகாப்பிலே இருக்கிறார்கள். கர்த்தருடைய கண்கள் அவர்கள்மீது நோக்கமாயிருக்கிறது. அவர்களுக்கு கர்த்தருடைய பாதுகாப்பும், பராமரிப்பும் கிடைத்துக்கொண்டே இருக்கிறது. கர்த்தருடைய ஜனம் ஒருவேளை எலியாவைப்போல, வனாந்தரத்திலே காணாமல்போனவர்களாக இருக்கலாம். அவர்கள் எங்கே இருந்தாலும், கர்த்தருடைய பார்வை அவர்கள்மீது இருக்கும். கர்த்தர் ஒருபோதும் தம்முடைய பிள்ளைகளை காணாமல் போகவிடமாட்டார்.

எலியா எழுந்திருந்து புசித்துக் குடித்து, அந்தப் போஜனத்தின் பலத்தினால் நாற்பதுநாள் இரவுபகல் ஒரேப் என்னும் தேவனுடைய பர்வதமட்டும் நடந்துபோகிறார் (1இராஜா 19:8).

எலியாவுக்கு எங்கே போகவேண்டும் என்று தெரியாது. ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு போகவேண்டும் என்னும் திட்டமோ, தீர்மானமோ எலியாவினிடத்தில் இல்லை. எலியா போஜனத்தின் பலம எலியாவை எங்கே வழிநடத்துகிறதோ, அங்கே எலியா புறப்பட்டுப்போகிறார்.

எலியா நாற்பதுநாள் இரவு பகலாக நடக்கிறார். இந்த நாற்பது நாட்களில் அவருக்கு பசி உண்டாகவில்லை. தாகமுண்டாகவில்லை. எலியா இரவும் பகலும் நடக்கிறார். இரவு வேளையிலே அவருக்கு நித்திரையும் வரவில்லை. எலியாவின் சரீரத்தில் சோர்வும் உண்டாகவில்லை.

பரிசுத்த வேதாகமத்தில் பல பர்வதங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பர்வதங்களில் ஒரேப் என்னும் பர்வதம் மிகவும் விசேஷமானது. இது தேவனுடைய பர்வதம். மோசே இந்தப் பர்வதத்தில் கர்த்தரோடு முகமுகமாகப் பேசினார்.

கர்த்தருடைய தூதன் எலியாவை இரண்டாந்தரம் தட்டி எழுப்பி, "நீ பண்ண வேண்டிய பிரயாணம் வெகுதூரம்" (1இராஜா 18:7) என்று சொன்னார். எலியா பிரயாணம்பண்ணும் முன்பாக கர்த்தருடைய தூதன் எலியாவைப் பார்த்து, இரண்டாந்தரமும், "எழுந்திருந்து போஜனம்பண்ணு" என்று சொன்னார்.

கர்த்தர் தம்முடைய திட்டத்தை அறிந்து வைத்திருக்கிறார். நாம் கர்த்தருடைய திட்டத்திற்கும், அவருடைய சித்தத்திற்கும் கீழ்ப்படியும்போது, அவருடைய கிருபை நமக்குப் போதுமானதாயிருக்கும். எலியா பண்ண வேண்டிய பிரயாணம் வெகுதூரம். அந்த தூரத்தைப் பிரயாணம் பண்ணுவதற்கு, கர்த்தர் அவருக்கு விசேஷித்த போஜனத்தைக் கொடுக்கிறார். இந்த போஜனம் நாற்பது நாட்களாக, இரவும் பகலும், வனாந்தரத்திலே நடப்பதற்கு தேவையான, பெலத்தையும் தெம்பையும் கொடுக்கிறது.

கர்த்தர் எலியாவை உயிரோடு பாதுகாப்பதற்காக பல்வேறு உபாயங்களைக் கையாளுகிறார். ஆரம்பத்திலே கர்த்தர் காகங்களைக் கொண்டு எலியாவைப் போஷித்தார். இப்போது கர்த்தர் எலியாவை தம்முடைய தூதனைக் கொண்டு போஷிக்கிறார். எலியா நாற்பது நாட்களாக இரவும் பகலும் நடக்கும்போது, கர்த்தர் அவருக்கு போஜனம் கொடுக்கவில்லை.

எலியா போஜனம் பண்ணாமல், நாற்பது நாட்களாக வனாந்தரத்திலே நடக்கும்போது, "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து பிறக்கும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்னும் சத்தியத்தை அறிந்து கொள்கிறார். கர்த்தர் எலியாவைப் பாதுகாக்கிறார். நாற்பது நாட்களாக எலியாவுக்கு போஜனம் கிடைக்காவிட்டாலும், எலியா பசியானாலோ, பட்டினியினாலோ மரித்துப்போகவில்லை.

எலியா போஜனம்பண்ணாமலே, நாற்பதுநாள் இரவு பகலாக, ஒரேப் என்னும் தேவனுடைய பர்வதம் மட்டும் நடந்துபோகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் இந்த வனாந்தரத்திலே நாற்பது வருஷங்களாக நடந்தார்கள். அதற்கு அடையாளமாக, எலியா நாற்பது வருஷங்களுக்கு பதிலாக, நாற்பது நாட்களாக நடக்கிறார். எலியாவுக்கு இந்த நாற்பது நாட்களில் பசியோ, தாகமோ ஏற்படவில்லை.

எலியா இந்த நாட்களில், "போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்" என்று மனச்சோர்வோடு கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவுமில்லை. தேவனுடைய பர்வதத்தை நோக்கி போகிறவர்கள் ஒருபோதும் களைப்படையமாட்டார்கள். கர்த்தரையே நோக்கிப் பார்க்கிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள்.

கர்த்தரும் எலியாவும்

1இராஜா 19:9-18

1இராஜா 19:9. அங்கே அவன் ஒரு கெபிக்குள் போய்த் தங்கினான்; இதோ, கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி, அவர்: எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம் என்றார்.

1இராஜா 19:10. அதற்கு அவன்: சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்தி வைராக்கியமாயிருந்தேன்; இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள்; உம்முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள்; நான் ஒருவன்மாத்திரம் மீதியாயிருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள் என்றான்.

1இராஜா 19:11. அப்பொழுது அவர்: நீ வெளியே வந்து கர்த்தருக்கு முன்பாகப் பர்வதத்தில் நில் என்றார்; அப்பொழுது, இதோ, கர்த்தர் கடந்துபோனார்; கர்த்தருக்கு முன்பாகப் பர்வதங்களைப் பிளக்கிறதும் கன்மலைகளை உடைக்கிறதுமான பலத்த பெருங்காற்று உண்டாயிற்று; ஆனாலும் அந்தக் காற்றிலே கர்த்தர் இருக்கவில்லை; காற்றிற்குப்பின் பூமிஅதிர்ச்சி உண்டாயிற்று; பூமி அதிர்ச்சியிலும் கர்த்தர் இருக்கவில்லை.

1இராஜா 19:12. பூமி அதிர்ச்சிக்குப்பின் அக்கினி உண்டாயிற்று; அக்கினியிலும் கர்த்தர் இருக்கவில்லை; அக்கினிக்குப்பின் அமர்ந்த மெல்லிய சத்தம் உண்டாயிற்று.

1இராஜா 19:13. அதை எலியா கேட்டபோது, தன் சால்வையினால் தன் முகத்தை மூடிக்கொண்டு வெளியே வந்து, கெபியின் வாசலில் நின்றான். அப்பொழுது, இதோ, எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம் என்கிற சத்தம் அவனுக்கு உண்டாயிற்று.

1இராஜா 19:14. அதற்கு அவன்: சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்திவைராக்கியமாயிருந்தேன்; இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள். உம்முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள், நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன்: என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள் என்றான்.

1இராஜா 19:15. அப்பொழுது கர்த்தர் அவனைப் பார்த்து: நீ தமஸ்குவின் வழியாய் வனாந்தரத்திற்குத் திரும்பிப்போய், ஆசகேலைச் சீரியாவின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணி,

1இராஜா 19:16. பின்பு நிம்சியின் குமாரனாகிய யெகூவை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணி, ஆபேல்மேகொலா ஊரானான சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவை உன் ஸ்தானத்திலே தீர்க்கதரிசியாக அபிஷேகம்பண்ணு.

1இராஜா 19:17. சம்பவிப்பதாவது: ஆசகேலின் பட்டயத்திற்குத் தப்பினவனை யெகூ கொன்றுபோடுவான்; யெகூவின் பட்டயத்திற்குத் தப்பினவனை எலிசா கொன்று போடுவான்.

1இராஜா 19:18. ஆனாலும் பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களையும், அவனை முத்தஞ்செய்யாதிருக்கிற வாய்களையுமுடைய ஏழாயிரம்பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன் என்றார்.

எலியா ஓரேப் என்னும் தேவனுடைய பர்வதத்திற்குப்போய், அங்கே ஒரு கெபிக்குள் தங்கியிருக்கிறார். இந்தப் பர்வதம் தேவனுடைய பர்வதம் என்று அழைக்கப்படுகிறது. தேவன் இந்தப் பர்வதத்திலே தம்முடைய மகிமையை ஏற்கெனவே வெளிப்படுத்தியிருக்கிறார்.

கர்த்தர் இந்தக் கெபியில் அல்லது இந்தக் கன்மலையின் வெடிப்பிலே மோசேயை வைத்தார். கர்த்தர் இந்த ஸ்தலத்திலே மோசேக்கு தம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினார்.

"பின்னும் கர்த்தர்: இதோ, என்னண்டையில் ஒரு இடம் உண்டு; நீ அங்கே கன்மலையில் நில்லு. என் மகிமை கடந்துபோகும்போது, நான் உன்னை அந்தக் கன்மலையின் வெடிப்பிலே வைத்து, நான் கடந்துபோகுமட்டும் என் கரத்தினால் உன்னை மூடுவேன்; பின்பு, என் கரத்தை எடுப்பேன்; அப்பொழுது என் பின்பக்கத்தைக் காண்பாய்; என் முகமோ காணப்படாது என்றார்" (யாத் 33:21-23).

இதுவரையிலும் கர்த்தருடைய தூதன் எலியாவோடு இரண்டு தரம் பேசினார். இப்போது கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்கு உண்டாயிற்று. கர்த்தர் எலியாவை நோக்கி, "எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம்" (1இராஜா 19:9) என்று கேட்கிறார். நாம் எங்கே போனாலும் கர்த்தருடைய கண்கள் நம்மை நோக்கிப் பார்க்கும். கர்த்தருடைய கரம் நம்மைத் தொடும். கர்த்தருடைய வார்த்தைகள் நம்முடைய செவிகளில் கேட்கும். கர்த்தருக்கு மறைவாக நம்மால் எங்கும் ஓடி ஒளிந்துகொள்ள முடியாது.

யோவான் பத்மு தீவிலே தனிமையிலிருந்தார். அப்போது கர்த்தருடைய வார்த்தை அவருக்கு உண்டாயிற்று. யோவான் பத்மு தீவிலே தனியாயிருந்தாலும், அங்கே கர்த்தரும் அவரோடு கூடயிருக்கிறார். கர்த்தர் சர்வவியாபகர்.

"உங்கள் சகோதரனும், இயேசுகிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும் அவருடைய ராஜ்யத்திற்கும் அவருடைய பொறுமைக்கும் உங்கள் உடன்பங்காளனுமாயிருக்கிற யோவானாகிய நான் தேவவசனத்தினிமித்தமும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியினிமித்தமும், பத்மு என்னும் தீவிலே இருந்தேன். கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காளசத்தம்போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன்" (வெளி 1:9,10).

கர்த்தர் எலியாவைப் பார்த்து, "எலியாவே இங்கே உனக்கு என்ன காரியம்" (1இராஜா 19:9) என்று கேட்கிறார். இதே கேள்வியை கர்த்தர் எலியாவிடம் மறுபடியும் கேட்கிறார் (1இராஜா 19:13). கர்த்தர் எலியாவை இந்த வார்த்தைகளினால் கடிந்துகொள்கிறார். எலியா தன்னுடைய பிராணனுக்காக யெஸ்யேலை விட்டு ஓடிவந்திருக்கிறார்.

எலியா யெஸ்ரயேலில் இருக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம். ஆனால் எலியாவோ தன்னுடைய வீட்டைவிட்டு, யெஸ்ரயேல் ஊரைவிட்டு, இஸ்ரவேல் தேசத்தைவிட்டு வெகுதூரத்திற்கு ஓடிவந்திருக்கிறார். எலியா கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாய் இங்கே வரவில்லை. ஆகையினால் கர்த்தர் எலியாவிடம், "இங்கே உனக்கு என்ன காரியம்" என்று கேட்கிறார்.

எலியா இப்போது ஓரேப் பர்வதத்திலுள்ள ஒரு கெபியிலே தங்கியிருக்கிறார். கர்த்தர் அவரிடம், "எலியாவே, இந்தக் கெபியிலே உனக்கு என்ன காரியம்" என்று கேட்கிறார். "எலியாவே, கர்த்தருடைய தீர்க்கதரிசி இப்படிப்பட்ட கெபியிலே தங்கியிருக்கலாமா" என்றும், "எலியாவைப்போல தீர்க்கதரிசி, இப்படிப்பட்ட காலத்தில் யெஸ்ரயேலில் இருக்காமல், தன்னுடைய பிராணனைக் காக்க, இந்த கெபிக்கு ஓடி வரலாமா" என்றும், "இஸ்ரவேலிலுள்ள ஜனங்களுக்கு எலியா தேவைப்படும்போது, அவர் இந்தக் கெபியிலே தங்கியிருக்கலாமா" என்றும் பொருள்படும் படியாக, கர்த்தர் எலியாவிடம் கேட்கிறார்.

எலியாவோ ஒரு தீர்மானத்தோடுதான் இந்தக் கெபியில் வந்து தங்கியிருக்கிறார். கர்த்தர் தன்னிடத்தில் எத்தனை கேள்விகளைக் கேட்டாலும், அந்தக் கேள்விகளுக்கு பதில் சொல்ல எலியாவும் ஆயத்தமாயிருக்கிறார். எலியாவின் மனதும், அவருடைய மனச்சாட்சியும் கர்த்தருக்கு தெரியும்.

எலியா கர்மேல் பர்வதத்திலே கர்த்தருக்கு பக்திவைராக்கியமாயிருந்தார். எலியா கர்த்தருடைய கேள்விக்கு பிரதியுத்தரமாக, "சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்திவைராக்கியமாயிருந்தேன்; இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள்; உம்முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள்; நான் ஒருவன்மாத்திரம் மீதியாயிருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள்" (1இராஜா 19:10) என்று சொல்லுகிறார்.

தன்னுடைய பக்திவைராக்கியமும், ஊழியங்களும் வீணாய்ப்போயிற்றோ என்று எலியா சந்தேகப்படுகிறார். ஆகையினால் எலியா தன்னுடைய ஊழியத்தைவிட்டு விட்டு, ஓரேப் என்னும் தேவனுடைய பர்வதத்திலுள்ள கெபியிலே தங்கியிருக்கிறார்.

எலியா கர்த்தரிடத்தில் தன்னுடைய பக்திவைராக்கியத்தைப்பற்றிச் சொன்னபின்பு, அவர் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றி குறை சொல்லுகிறார். "இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையை தள்ளிவிட்டார்கள்" என்று எலியா கர்த்தரிடத்தில் இஸ்ரவேலர்மீது குற்றம் சொல்லுகிறார். இஸ்ரவேலர் கர்த்தருடைய உடன்படிக்கையை தள்ளிவிட்டதினால், எலியா அவர்களோடுகூட தங்கியிருக்காமல், அவர்களைப் புறக்கணித்துவிட்டு, இங்கே வந்து தங்கியிருக்கிறார்.

இஸ்ரவேல் தேசத்திலே கர்த்தருக்கு பரிசுத்தமானது ஒன்றுமே இல்லை. எல்லாமே பாகாலுடையதாயிருக்கிறது. ஆகாப் கர்த்தருடைய பலிபீடங்களை அழித்துப்போட்டான். இஸ்ரவேல் ஜனங்களும் கர்த்தரைவிட்டு விலகி பாகால்களைப் பின்பற்றிப்போகிறார்கள். எலியா இதுவரையிலும் கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் ஜனங்களுக்காக பரிந்து பேசினார். இப்போதோ, எலியா கர்த்தருக்கு முன்பாக, இஸ்ரவேலர்மீது குற்றம் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் விருத்தசேதனம்பண்ணியிருக்கிறார்கள். இது கர்த்தருடைய உடன்படிக்கைக்கு அடையாளம். ஆனால் அவர்களிடத்தில் அடையாளம் மாத்திரமே இருக்கிறது. அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கையைத் தள்ளிவிடுகிறார்கள். அவர்கள் கர்த்தரை ஆராதியாமல் பாகாலை ஆராதிக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்யாமல் பாகாலுக்கு ஊழியம் செய்கிறார்கள். இதன் நிமித்தமாக எலியா இஸ்ரவேல் தேசத்தைவிட்டு ஓரேப் பர்வதத்திலுள்ள கெபியிலே வந்து தங்கியிருக்கிறார்.

எலியா கர்த்தரிடத்தில், "இஸ்ரவேல் புத்திரர் உம்முடைய பலிபீடங்களை இடித்துப்போட்டார்கள்" என்றும் சொல்லுகிறார். அவர்கள் கர்த்தரை ஆராதியாமல் கர்த்தருடைய பலிபீடங்களை புறக்கணித்தார்கள். அவர்கள் கர்த்தருடைய பலிபீடங்களை செப்பனிடவில்லை. இதனால் பலிபீடங்கள் பழுதடைந்து பாழாய்ப்போயிற்று மேலும், இஸ்ரவேல் புத்திரர், பாகால்களை வைராக்கியமாய் ஆராதிக்கிறார்கள். பாகாலின்மீதுள்ள பக்திவைராக்கியத்தினால், இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பலிபீடங்களை இடித்துப்போடுகிறார்கள்.

பலிபீடம் இடிந்துபோனாலும், கர்த்தருடைய ஜனம் இடிந்துபோன பலிபீடங்களை மறுபடியும் புதுப்பித்துக் கட்டவேண்டும். அதை செப்பனிடவேண்டும். சபையிலே விசுவாசிகளுக்குள்ளே ஐக்கியம் சிதறிப்போகலாம். சபையில் ஐக்கியமில்லாமல், அது இடிந்துபோன பலிபீடத்தைப்போல இருக்கலாம். இந்த சூழ்நிலையிலும், கர்த்தருடைய பரிசுத்தவான்கள், கர்த்தருடைய நாமமகிமைக்காக, விசுவாசிகள் மத்தியிலே, மறுபடியும் ஐக்கியம் ஏற்படுவதற்கு முயற்சி பண்ணவேண்டும். இடிந்துபோன பலிபீடத்தை செப்பனிடுவதுபோல, முறிந்துபோன ஐக்கியத்தை மறுபடியும் ஒன்றுசேர்க்கவேண்டும்.

எலியா கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் புத்திரர்மீது இன்னும் குற்றம் சொல்லுகிறார். "அவர்கள் உம்முடைய தீர்க்கதரிசிகளை பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள்" என்று எலியா கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றிச் சொல்லுகிறார். இந்த தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய பலிபீடத்திலே ஊழியம் செய்கிறவர்கள் யேசபேல் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளைக் கொன்றுபோட்டாள்.

"யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளைச் சங்கரிக்கிறபோது, ஒபதியா நூறு தீர்க்கதரிசிகளைச் சேர்த்து, அவர்களைக் கெபிக்கு ஐம்பது ஐம்பது பேராக ஒளித்துவைத்து, அவர்களுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுத்து, அவர்களைப் பராமரித்துவந்தான்" (1இராஜா 18:4).

யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளை சங்கரித்தாலும், எலியா இந்தக் குற்றத்தை இஸ்ரவேல் புத்திரர்மீது சுமத்துகிறார். யேசபேல் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை சங்கரித்தபோது, இஸ்ரவேல் புத்திரர் அவளுடைய செய்கையை அங்கீகரித்தார்கள். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் சங்கரிக்கப்பட்டதற்காக, இஸ்ரவேல் புத்திரர் சந்தோஷப்பட்டார்கள்.

எலியா யெஸ்ரயேலை விட்டு, வனாந்தரத்திற்கு வந்து, ஒரேப் என்னும் தேவனுடைய பர்வதத்திலுள்ள ஒரு கெபியிலே ஒளிந்துகொண்டிருப்பதற்கு காரணம் சொல்லுகிறார். "நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன்" என்பதே எலியா சொல்லும் பிரதான காரணம். பாகாலை ஆராதிக்கிறவர்கள் ஆயிரக்கணக்கானோர் இருக்கிறார்கள். அவர்களுக்கு விரோதமாக, தான் ஒருவனால் என்ன செய்ய முடியுமென்று எலியா தயங்குகிறார்.

இஸ்ரவேல் தேசத்திலே எலியாவுக்கு பாதுகாப்பு இல்லை. அவர்கள் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை ஏற்கெனவே கொன்றுபோட்டார்கள். அவர்கள் இப்போது "என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள்" என்று எலியா கர்த்தரிடத்திலே முறையிடுகிறார்.

ஒரேப் பர்வதத்திலுள்ள கெபி தனிமையான இடமாகயிருந்தாலும் இங்கு எலியாவால் ஜீவனோடிருக்க முடியும். இஸ்ரவேல் தேசம் ஜனம் பெருத்த தேசமாயிருந்தாலும், எலியா அங்கே போனால், அங்கே அவர் ஜீவனோடிருக்கமாட்டார். பாகாலை ஆராதிக்கிறவர்கள் எலியாவைக் கொன்றுபோடுவார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய உடன்படிக்கையை தள்ளிவிட்டவர்கள். அவர்கள் மத்தியிலே எவ்வளவுதான் உபதேசம்பண்ணினாலும், எவ்வளவுதான் ஊழியம் செய்தாலும், அவர்களிடத்தில் மனமாற்றம் உண்டாகவில்லை. அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்ப மறுக்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்திலே கனியில்லாத ஊழியத்தை செய்வதற்கு பதிலாக, ஒரேப் பர்வதத்திலுள்ள கெபியிலே, எலியா தனிமையில், உயிரோடிருக்கலாம் என்று தீர்மானித்திருக்கிறார்.

கர்த்தர் எலியாவுக்கு தம்மை வெளிப்படுத்துகிறார். எலியா ஒரேப் என்னும் தேவனுடைய பர்வதத்திற்கு கர்த்தரை சந்திப்பதற்காக வரவில்லை. தேவனுடைய மகிமை மோசேக்கு முன்பாக கடந்து சென்றபோது, கர்த்தர் மோசேயை, இந்தக் கெபியிலே அதாவது கன்மலையின் பிளவிலே மறைத்து வைத்தார். ஆனால் இப்போதோ கர்த்தர் எலியாவை, கெபிக்குள்ளிருந்து வெளியே வருமாறு அழைக்கிறார்.

கர்த்தர் எலியாவை நோக்கி, "நீ வெளியே வந்து கர்த்தருக்கு முன்பாக பர்வதத்தில் நில்" (1இராஜா 19:11) என்று சொல்லுகிறார். அப்பொழுது, இதோ கர்த்தர், எலியாவைக் கடந்து போகிறார்.

கர்த்தருக்கு முன்பாகப் பர்வதங்களைப் பிளக்கிறதும் கன்மலைகளை உடைக்கிறதுமான பலத்த பெருங்காற்று உண்டாயிற்று; ஆனாலும் அந்தக் காற்றிலே கர்த்தர் இருக்கவில்லை; காற்றிற்குப்பின் பூமிஅதிர்ச்சி உண்டாயிற்று; பூமி அதிர்ச்சியிலும் கர்த்தர் இருக்கவில்லை. பூமி அதிர்ச்சிக்குப்பின் அக்கினி உண்டாயிற்று; அக்கினியிலும் கர்த்தர் இருக்கவில்லை (1இராஜா 19:11,12).

எலியா பலத்த பெருங்காற்றின் சத்தத்தைக் கேட்கிறார். அதன்பின்பு அவர் பூமியதிர்ச்சியைப் பார்க்கிறார். பலத்த பெருங்காற்று பர்வதங்களைப் பிளக்கிறதும், கன்மலைகளை உடைக்கிறதுமான பலத்த சத்தமாயிருக்கிறது. ஆனாலும் அந்தக் காற்றிலே கர்த்தர் இருக்கவில்லை . பூமியதிர்ச்சியிலும் கர்த்தர் இருக்கவில்லை. அக்னியிலும் கர்த்தர் இருக்கவில்லை.

அக்கினிக்குப்பின் அமர்ந்த மெல்லிய சத்தம் உண்டாயிற்று. இந்த மெல்லிய சத்தத்தில் கர்த்தர் இருக்கிறார். கர்த்தர் மெல்லிய சத்தத்தினால் எலியாவோடு பேசுகிறார். எலியா மெல்லிய சத்தத்தைக் கேட்டபோது தன் சால்வையினால் தன் முகத்தை மூடிக்கொண்டு வெளியே வந்து, கெபியின் வாசலில் நிற்கிறார். அப்பொழுது, "இதோ, எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம்" (1இராஜா 19:13) என்கிற சத்தம் எலியாவுக்கு உண்டாயிற்று.

எலியா தன் சால்வையினால் தன் முகத்தை மூடிக்கொள்வது அவருடைய பயத்திற்கு அடையாளம். அவர் கர்த்தருடைய மகிமையைப் பார்ப்பதற்கு பயப்படுகிறார். எலியா வெட்கத்தினாலும் அவமானத்தினாலும் தன்னுடைய முகத்தை மூடிக்கொள்கிறார். கர்த்தருடைய வல்லமை எலியாவோடு கூடயிருக்கிறது. ஆனாலும் எலியா, கர்த்தர் தனக்கு கொடுத்த ஊழியத்தை செய்யாமல், ஒரு கோழையைப்போல இஸ்ரவேல் தேசத்திலிருந்து தப்பித்து, ஓரேப் பர்வதத்திலே வந்து ஒரு கெபியிலே ஒளிந்திருக்கிறார். எலியா தன்னுடைய பயத்தையும், பலவீனத்தையும், கோழைத்தனத்தையும் நினைத்து வெட்கப்பட்டு தன்னுடைய முகத்தை தன் சால்வையினால் மூடிக்கொள்கிறார்.

பலத்த பெருங்காற்றும், பூமியதிர்ச்சியும், அக்கினியும் உண்டானபோது எலியா தன்னுடைய முகத்தை மூடவில்லை. ஆனாலும் அமர்ந்த மெல்லிய சத்தம் உண்டானபோதோ எலியா தன் முகத்தை தன் சால்வையினால் மூடிக்கொள்கிறார். நம்முடைய இருதயமும் ஆத்துமாவும் மென்மையாயிருக்கும்போது, கர்த்தருடைய கிருபைகளையும் இரக்கங்களையும் தியானித்து, நம்முடைய இருதயங்கள் உடைந்துபோகும். கர்த்தருடைய பயங்கரமான கிரியைகளைவிட, கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் நம்முடைய இருதயத்தில் பலத்த கிரியைகளைச் செய்யும். எலியா அமர்ந்த மெல்லிய சத்தத்தைக் கேட்டு, தன் முகத்தை மூடிக்கொண்டு, கெபியின் வாசலில் வந்து நிற்கிறார். கர்த்தர் தன்னோடு பேசப்போவதை, எலியா செவிகொடுத்து கேட்க ஆயத்தமாயிருக்கிறார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் எலியாவுக்கு தம்மைப்பற்றி வெளிப்படுத்துகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைவிட்டு விலகி, பாகால்களைப் பின்பற்றிப்போயிருக்கிறார்கள். அவர்கள் மனந்திரும்புவதற்கு, அவர்கள் மத்தியிலே பலத்த பெருங்காற்றோ, பூமியதிர்ச்சியோ, அக்கினியோ உண்டாகவேண்டியதில்லை. அவர்கள் கர்த்தருடைய அமர்ந்த மெல்லிய சத்தத்தைக் கேட்டு தங்கள் இருதயத்தில் குத்தப்படுவார்கள். கர்த்தருக்கு விரோதமாக தாங்கள் துணிகரமாகச் செய்யும் பாவங்களுக்கு மனந்திரும்புவார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் மனந்திரும்புவதற்கும், அவர்களுடைய இருதயங்கள் புதுப்பிக்கப்படுவதற்கும் பலத்த பெருங்காற்றைப்போன்ற அற்புதங்களோ, பூமியதிர்ச்சியைப்போன்ற அற்புதங்களோ அல்லது அக்கினியைப்போன்ற அற்புதங்களோ தேவையில்லை. கர்த்தருடைய மெல்லிய சத்தமே இஸ்ரவேல் ஜனத்தாரின் இருதயத்தை அசையப்பண்ணும். கர்த்தருடைய வார்த்தை இஸ்ரவேல் புத்திரருக்கு அவர்களுடைய பாவங்களை உணர்த்தும். விசுவாசம் கர்த்தருடைய வார்த்தையை கேட்பதினால் வரும். அற்புதங்களும் அடையாளங்களும் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்பதற்கு மனுஷரை வழிநடத்தும். இதற்கான வழிகளையும் ஆயத்தம்பண்ணும்.

கர்த்தர் எலியாவிடம் ஏற்கெனவே கேட்ட கேள்வியை, இங்கே மறுபடியும் கேட்கிறார். கர்த்தர் எலியாவைப் பார்த்து, "இதோ, எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம்" (1இராஜா 19:13) என்று கேட்கிறார். கர்த்தருடைய சத்தம் அமர்ந்த மெல்லிய சத்தமாயிருக்கிறது. எலியா இப்போது ஓரேப் என்னும் தேவனுடைய பர்வதத்திலுள்ள ஒரு கெபியின் வாசலிலே நிற்கிறார். எலியா நிற்கவேண்டிய ஸ்தலம் இதுவல்ல. அவர் இஸ்ரவேல் தேசத்திலே ஆகாபுக்கு முன்பாக நிற்கவேண்டும். அவர் யேசபேலுக்கு முன்பாக நிற்கவேண்டும். எலியா பாகால்களை ஆராதிக்கிற இஸ்ரவேல் ஜனத்தாருக்கு முன்பாக நிற்கவேண்டும். ஆனால் எலியாவோ அங்கே நிற்காமல், இங்கே, ஓரேப் பர்வதத்திலே நிற்கிறார். கர்த்தர் எலியாவைப் பார்த்து, "இங்கே உனக்கு என்ன காரியம்" என்று கேட்கிறார்.

எலியா கர்த்தருக்கு ஏற்கெனவே சொன்ன பிரதியுத்தரத்தை (1இராஜா 19:10) இங்கே மறுபடியும் சொல்லுகிறார். எலியா கர்த்தரிடத்தில், "சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்திவைராக்கியமாயிருந்தேன்; இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள். உம்முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள், நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள்" (1இராஜா 19:14) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விட்டார்கள். இஸ்ரவேல் மனுஷர் மத்தியிலே கர்த்தரைப்பற்றிய உபதேசம் காணப்படவில்லை. இஸ்ரவேல் தேசத்தில் கர்த்தரை ஆராதிக்கும் ஆராதனை அழிந்துபோயிற்று. அங்கே பாகால்களை ஆராதிப்பது அதிகமாயிருக்கிறது.

எலியா ஓரேப் பர்வதத்திற்கு வந்த காரணத்தை சொன்னாலும், கர்த்தர் தம்முடைய சித்தத்தையும், திட்டத்தையும் எலியாவுக்கு தெளிவுபடுத்துகிறார். கர்த்தர் எலியாவை இங்கே இருந்து தமஸ்குவுக்கு அனுப்புகிறார். எலியா செய்ய வேண்டிய காரியங்களை கர்த்தர் அவருக்கு விரிவாகச் சொல்லுகிறார்.

கர்த்தர் எலியாவைப் பார்த்து, "நீ தமஸ்குவின் வழியாய் வனாந்தரத்திற்குத் திரும்பிப்போய், ஆசகேலைச் சீரியாவின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணு" (1இராஜா 19:15) என்றும்,

"பின்பு நிம்சியின் குமாரனாகிய யெகூவை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணு" (1இராஜா 19:16) என்றும், "பின்பு, ஆபேல்மேகொலா ஊரானான சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவை உன் ஸ்தானத்திலே தீர்க்கதரிசியாக அபிஷேகம்பண்ணு" (1இராஜா 19:16) என்றும் சொல்லுகிறார்.

எலியா மூன்று காரியங்களை செய்யுமாறு கர்த்தர் அவருக்கு கட்டளை கொடுக்கிறார். அவையாவன : 1. அவர் ஆசகேலை சீரியாவின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணவேண்டும். 2. யெகூவை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணவேண்டும். 3. எலிசாவை தன்னுடைய ஸ்தானத்தில் தீர்க்கதரிசியாக அபிஷேகம்பண்ணவேண்டும்.

எலியா இந்த மூன்று காரியங்களையும் செய்யும்போது, கர்த்தர் தாம் செய்யவேண்டிய காரியங்களை ஒவ்வொன்றாய்ச் செய்து முடிப்பார். எலியா இம்மூன்று காரியங்களையும் செய்து முடிக்கும்போது என்ன சம்பவிக்கும் என்பதையும் கர்த்தர் எலியாவுக்கு தெளிவுபடுத்துகிறார்.

கர்த்தர் எலியாவை நோக்கி, "சம்பவிப்பதாவது: ஆசகேலின் பட்டயத்திற்குத் தப்பினவனை யெகூ கொன்றுபோடுவான்; யெகூவின் பட்டயத்திற்குத் தப்பினவனை எலிசா கொன்று போடுவான்" (1இராஜா 19:17) என்று சொல்லுகிறார்.

எலியாவின் கையில் ஆவியானவரின் பட்டயம் இருக்கும். யுத்தத்திலே ஆசகேலின் பட்டயத்திற்கு தப்பினவர்களையும், யெகூவினுடைய நீதியின் பட்டயத்திற்கு தப்பினவர்களையும், எலிசா ஆவியின் பட்டயத்தினால் சந்திப்பார். அவர்களுடைய மனச்சாட்சிகளை காயப்படுத்துவார். அவர்களுக்கு சத்தியத்தை உணர்த்துவார். அவர்கள்மீது வரப்போகும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை எச்சரித்து சொல்லுவார்.

எலியா கர்த்தரிடத்தில் தன்னைச் சொன்னபோது, "நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன்" என்றும், "என் பிராணனையும் வாங்கத்தேடுகிறார்கள்" என்றும் சொன்னார். கர்த்தர் எலியாவுக்கு இஸ்ரவேல் தேசத்திலுள்ள உண்மை நிலமையை எடுத்துச் சொல்லி அவரை ஆறுதல் படுத்துகிறார்.

கர்த்தர் எலியாவை நோக்கி, "பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களையும், அவனை முத்தஞ்செய்யாதிருக்கிற வாய்களையுமுடைய ஏழாயிரம்பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன்" (1இராஜா 19:18) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் தேசத்திலே இருக்கிற ஏழாயிரம் பேரை தவிர, யூதாதேசத்திலே பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் தங்கள் முழங்கால்களை பாகால்களுக்கு முடக்கவில்லை. அவர்களெல்லோரும் சேனைகளின் தேவனாகிய கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கிறார்கள். எலியாவுக்கு இது ஆறுதலான செய்தியாயிருக்கிறது. தான் ஒருவனாய்த் தனித்து நின்று, பாகாலை ஆராதிக்கிற திரளான ஜனங்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணவேண்டுமென்று எலியா சோர்ந்துபோயிருந்தார். இப்போதோ தன்னோடேகூட ஏழாயிரம் பேர் இருப்பது எலியாவுக்கு உற்சாகத்தைக் கொடுக்கிறது.

ஏராளமான ஜனங்கள் கர்த்தரைவிட்டு விலகிப்போனாலும், அவர்கள் தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்திலே பின்மாற்றமடைந்தாலும், எல்லா காலங்களிலும், எல்லா தேசங்களிலும், எல்லா ஜாதிகளிலும் கர்த்தருக்கு சொந்தமான மீதியான ஜனங்கள் இருப்பார்கள். இவர்கள் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாய் மீந்திருப்பார்கள். இவர்கள் வெள்ளத்தின் நீரோடையோடு அடித்துச் செல்லப்படாதவர்கள். கர்த்தர் இவர்களை பெலப்படுத்தி எதிர்நீச்சல் போடவைப்பார்.

தமக்கு மீதியானவர்களைப் பாதுகாப்பது கர்த்தருடைய கிரியை. கர்த்தருக்கு மீதனமானவர்களுக்கும், கர்த்தரைவிட்டு விலகி பின்வாங்கிப்போனவர்களுக்கும் வித்தியாசமிருக்கும். இந்த வித்தியாசம் கர்த்தருடைய கிருபையினால் உண்டாயிற்று. இவர்கள் தங்களுடைய சுயபக்தியினாலோ, சுயபரிசுத்தத்தினாலோ கர்த்தருக்கு மீதமானவர்களல்ல. கர்த்தர் தாமே தம்முடைய கிருபையினால், இவர்களை தமக்கு மீதமானவர்களாக பாதுகாத்துக்கொள்கிறார்.

கர்த்தருக்கு உண்மையுள்ளவர்கள், அவரால்மறைக்கப்பட்டவர்களாகயிருப்பார்கள். கர்த்தருடைய ஜனம் அவரது மறைவில் பாதுகாப்பாயிருப்பார்கள்.

"உமது ஜனத்துக்கு விரோதமாக உபாய தந்திரங்களை யோசித்து, உமது மறைவிலிருக்கிறவர்களுக்கு விரோதமாக ஆலோசனைபண்ணுகிறார்கள்" *(சங் 83:3).*

பிரத்தியட்சமான சபை மாம்சப்பிரகாரமான கண்களுக்கு வெளிப்படையாய்த் தெரியாது. கோதுமை பதறில் மறைந்திருப்பதுபோல பொன்களிம்பில் கலந்திருப்பதுபோல, கர்த்தருக்கு மீதமானவர்களும் இந்த உலகத்தில் மறைந்திருப்பார்கள். கோதுமையை புடைக்கும்போதுதான், கோதுமையும் பதரும் வெவ்வேறாகப் பிரியும். பொன்னைப் புடமிடும்போதுதான் சுத்தப்பொன்னும் களிம்பும் வெவ்றோகப் பிரியும்.

கர்த்தர் தமக்கு சொந்தமானவர்களை அறிந்து வைத்திருக்கிறார். கர்த்தருக்கு சொந்தமானவர்கள் யார் என்பது நமக்கு தெரியாமல் போகலாம். ஆனாலும் கர்த்தருக்கு மறைவான இரகசியம் என்று எதுவுமில்லை. அவர் சர்வத்தையும் அறிந்தவர். கர்த்தர் சர்வஞானமுள்ளவர்.

இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எல்லோருமே துன்மார்க்கராயும் மோசமானவர்களாயும் இருப்பதாக உலகத்தார் சொல்லுகிறார்கள். ஆனாலும் நாம் நினைப்பதைவிடவும், நாம் எதிர்பார்ப்பதைவிடவும் இந்தப் பிரபஞ்சத்தில் நல்லவர்களும், ஞானிகளும், பரிசுத்தவான்களும் ஏராளமானோர் இருக்கிறார்கள்.

நாம் பரலோகத்திற்குப் போகும்போதுதான் இந்த சத்தியம் நமக்கு தெளிவாகத் தெரியும். இந்தப் பிரபஞ்சத்தில் நமக்கு தெரிந்த அநேகர் பரலோகத்தில் பிரவேசிக்கமாட்டார்கள் என்று நாம் நினைப்போம். ஆனாலும் கர்த்தருடைய பெரிதான கிருபையினால் அவர்களும் பரலோகத்திற்குள்ளே பிரவேசித்திருப்பார்கள். நாம் எதிர்பாராத ஜனங்களெல்லாம் கர்த்தருடைய நித்திய இளைப்பாறுதலில் தங்கியிருப்பார்கள். அவர்களைப் பார்க்கும்போது நமக்கு ஆச்சரியமாயிருக்கும். கர்த்தருடைய அன்பு பெரியது. நம்மால் கர்த்தருடைய அன்பை பூரணமாக தியானிக்க முடியாது. நாம் தியானிப்பதற்கும், நாம் நினைப்பதற்கும், நாம் கற்பனை பண்ணுவதற்கும் மேலாக, கர்த்தருடைய அன்பு மிகவும் பெரிதாயிருக்கிறது.

எலியாவும் எலிசாவும் 1இராஜா 19:19-21

1இராஜா 19:19. அப்படியே அவன் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப்போய், பன்னிரண்டு ஏர் பூட்டி உழுத சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவைக் கண்டான்; அவன் பன்னிரண்டாம் ஏரை ஓட்டிக்கொண்டிருந்தான்; எலியா அவன் இருக்கும் இடமட்டும் போய், அவன்மேல் தன் சால்வையைப் போட்டான்.

1இராஜா 19:20. அப்பொழுது அவன் மாடுகளை விட்டு, எலியாவின் பிறகே ஓடி: நான் என் தகப்பனையும் என் தாயையும் முத்தஞ்செய்ய உத்தரவுகொடும், அதற்குப்பின் உம்மைப் பின்தொடர்வேன் என்றான். அதற்கு அவன்: போய்த் திரும்பிவா; நான் உனக்குச் செய்ததை நினைத்துக் கொள் என்றான்.

1இராஜா 19:21. அப்பொழுது அவன் இவனை விட்டுப்போய், ஓர் ஏர்மாடுகளைப் பிடித்து அடித்து, ஏரின்மரமுட்டுகளால் அவைகளின் இறைச்சியைச் சமைத்து ஜனங்களுக்குக் கொடுத்தான்; அவர்கள் சாப்பிட்ட பிற்பாடு, அவன் எழுந்து, எலியாவுக்குப் பின்சென்று அவனுக்கு ஊழியஞ்செய்தான்.

கர்த்தர் எலியாவிடம் "எலிசாவை தீர்க்கதரிசியாக அபிஷேகம்பண்ணு" என்று மூன்றாவது காரியமாகச் சொல்லுகிறார். ஆனால் எலியாவோ எலிசாவை முதலாவதாக சந்திக்கிறார்.

எலியா அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப்போய், பன்னிரண்டு ஏர் பூட்டி உழுத சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவைக் காண்கிறார்; எலிசா பன்னிரண்டாம் ஏரை ஓட்டிக்கொண்டிருக்கிறார்; எலியா அவர் இருக்கும் இடமட்டும் போய், அவர்மேல் தன் சால்வையைப் போடுகிறார் (1இராஜா 19:19).

எலியா எலிசாவை தன்னுடைய ஸ்தானத்திலே தீர்க்கதரிசியாக அபிஷேகம்பண்ணவேண்டும். கர்த்தருடைய ஊழியத்தை எலிசாவைப்போன்ற நல்ல மனுஷனுடைய கரத்திலே ஒப்படைப்பது எலியாவுக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது.

எலியா தன்னை சந்திக்க வருவார் என்று எலிசா எதிர்பார்க்கவில்லை. எலியா வரும்போது, எலிசா தன்னுடைய வயலிலே வேலை செய்துகொண்டிருக்கிறார். எலிசா எலியா வரும்போது வேதம் வாசிக்கவில்லை, ஜெபம்பண்ணவில்லை. கர்த்தருக்கு பலிசெலுத்தவில்லை. அவர் பன்னிரண்டாம் ஏரை ஓட்டிக்கொண்டிருக்கிறார். நிலத்தில் உழுது விவசாய வேலை செய்கிறார்.

எலிசா பெருநிலத்திற்கு சொந்தக்காரர் அவருக்கு ஏராளமான மாடுகளும், எருதுகளும், வேலைக்காரரும் இருக்கிறார்கள். எலிசா ஒரு எஜமானாயிருந்தாலும் அவர் வேலை செய்யாமல் சும்மாயிருக்கவில்லை. அவர் பன்னிரண்டு ஏர் பூட்டி உழுகிற எஜமானாயிருந்தாலும், அவரும் பன்னிரண்டாம் ஏரை ஓட்டிக்கொண்டிருக்கிறார்.

நாம் இந்த உலகத்தில் கண்ணியமான வேலை செய்வதினால், கர்த்தருக்கு ஊழியம் செய்யக்கூடாது என்று ஒதுங்கிப்போய்விடக்கூடாது. எல்லோரும் கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும். கர்த்தருடைய ஊழிய அழைப்புக்கு எல்லோரும் கீழ்ப்படியவேண்டும்.

எலிசா தன்னுடைய நிலத்தை உழுது, விவசாயம் செய்து, இஸ்ரவேல் ஜனத்தாரை போஷிப்பதற்காக, தன்னுடைய நிலத்திலே தானியத்தை விதைக்கிறார். விவசாயம் ஜனங்களுக்கு பிரயோஜனமுள்ள வேலை. எலிசா தன்னுடைய நிலத்திலே தானியத்தை விதைத்தாலும், கர்த்தருடைய வசனத்தை இஸ்ரவேல் ஜனத்தாருடைய இருதயத்திலே, விதைப்பதற்கு, கர்த்தர் எலிசாவைத் தெரிந்தெடுத்திருக்கிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, மீன்களைப் பிடித்துக்கொண்டிருந்தவர்களை, மனுஷரைப் பிடிக்கிறவர்களாக தெரிந்துகொண்டார்.

கர்த்தருடைய ஊழிய அழைப்பு மிகவும் விசேஷமானது. இது வல்லமையுள்ள அழைப்பு. கர்த்தருக்கு ஊழியம் செய்வது மிகப்பெரிய பாக்கியம். எலியா எலிசா இருக்கும் இடமட்டும்போய் அவர்மேல் தன் சால்வையைப் போடுகிறார். தன்னுடைய சிநேகத்திற்கு அடையாளமாக எலியா அவர்மீது சால்வையைப்போடுகிறார். எலியா எலிசாவை தன்னுடைய பராமரிப்புக்கு கீழ் ஏற்றுக்கொள்வதற்கு அடையாளமாக அவர்மீது சால்வையைப்போடுகிறார்.

எலியா இனிமேல் தன்னுடைய சால்வையின்கீழே, எலிசாவுக்கு ஆவிக்குரிய சத்தியங்களை உபதேசம் பண்ணுவார். எலியாவினிடத்திலுள்ள பரிசுத்த ஆவியானவர், எலிசாவின்மீதும் தங்கியிருப்பார் என்பதற்கு இது அடையாளம். எலியா தன்னுடைய மேன்மையில் ஒரு பகுதியை எலிசாவுக்கு பகிர்ந்துகொடுக்கிறார்.

மோசே தன்னுடைய மேன்மையில் ஒரு பகுதியை யோசுவாவுக்கு பகிர்ந்துகொடுத்தார். "இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் அவனுக்குக் கீழ்ப்படியும்படிக்கு, உன் கனத்தில் கொஞ்சம் அவனுக்குக் கொடு" *(எண் 27:20)*.

எலியா பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அவருடைய சால்வை கீழே விழுந்தது. அதை எலிசா பிடித்துக்கொள்கிறார். "பின்பு அவன் எலியாவின் மேலிருந்து கீழே விழுந்த சால்வையை எடுத்துத் திரும்பிப்போய், யோர்தானின் கரையிலே நின்று, எலியாவின்மேலிருந்து கீழே விழுந்த சால்வையைப் பிடித்து: எலியாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே என்று சொல்லித் தண்ணீரை அடித்தான்; தண்ணீரை அடித்தவுடனே அது இருபக்கமாகப் பிரிந்ததினால் எலிசா இக்கரைப்பட்டான். *(2இராஜா 2:13,14)*.

எலியா எலிசாவின்மேல் தன் சால்வையைப்போடுகிறார். அப்பொழுது எலிசா தன் மாடுகளை விட்டு எலியாவின் பிறகு ஓடுகிறார். அவர் காலதாமதம்பண்ணாமல் எலியாவைப் பின்பற்ற ஆயத்தமாயிருக்கிறார். கர்த்தருடைய தெய்வீக கரம் எலிசாவின் இருதயத்தைத் தொடுகிறது.

எலியா எலிசாவின்மேல் தன் சால்வைப் போட்டபோது, அங்கே பிரத்தியட்சமான அற்புதம் எதுவும் நடைபெறவில்லை. ஆனாலும் எலிசா தன்னுடைய விவசாய வேலையை விட்டுவிட்டு, கர்த்தருடைய ஊழியத்தை செய்ய தன்னை அர்ப்பணிக்கிறார்.

எலிசா எலியாவிடம், "நான் என் தகப்பனையும் என் தாயையும் முத்தஞ்செய்ய உத்தரவுகொடும், அதற்குப்பின் உம்மைப் பின்தொடர்வேன்" என்று சொல்லுகிறார். அதற்கு எலியா எலிசாவிடம், "போய்த் திரும்பிவா; நான் உனக்குச் செய்ததை நினைத்துக் கொள்" *(1இராஜா 19:20)* என்று சொல்லுகிறார்.

தன்னோடுகூட ஊழியத்திற்கு வருமாறு எலியா எலிசாவை கட்டாயப்படுத்தவில்லை. கர்த்தருடைய ஊழியத்தை செய்யவேண்டுமென்றால், எலிசாதான் தன்னைப்பற்றி தீர்மானம்பண்ணவேண்டும். எலிசா முதலாவதாக அமர்ந்திருந்து, செல்லும் செலவைக் கணக்குப் பார்க்கவேண்டும். அதன் பின்புதான் அவர் கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கு எலியாவின் பிறகே போகவேண்டும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மனப்பூர்வமாய் ஊழியம் செய்யவேண்டும். யாரும் கட்டாயம்பண்ணி செய்யப்படுகிற ஊழியம் ஆசீர்வாதமாயிருக்காது. கர்த்தர் நமக்கு சுயாதீன சித்தத்தைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளை நினைவுகூர்ந்து, நாம் கர்த்தருடைய ஊழியத்திலே பங்குபெறவேண்டும்.

எலிசா எலியாவைப் பின்பற்றிப்போவதற்கு முன்பாக, தன்னுடைய ஜனங்களுக்கு ஒரு விருந்து கொடுக்கிறார். எலிசா எலியாவை விட்டுப்போய், ஓர் ஏர்மாடுகளைப் பிடித்து அடித்து, ஏரின் மரமுட்டுகளால் அவைகளின் இறைச்சியைச் சமைத்து ஜனங்களுக்குக் கொடுக்கிறார்; அவர்கள் சாப்பிட்ட பிற்பாடு, எலிசா எழுந்து, எலியாவுக்குப் பின்சென்று அவருக்கு ஊழியஞ்செய்கிறார் *(1இராஜா 19:21)*.

எலிசா ஐசுவரியவானாயிருந்தாலும் அவரிடத்தில் உலக சிநேகம் இல்லை. திரளான சம்பத்துக்களையும் ஐசுவரியங்களையும் வைத்திருக்கிறவர்கள், அவைகளை வெறுத்து ஒதுக்கிவிட்டு, கர்த்தருடைய ஊழியத்தை செய்ய சீக்கிரத்தில் முன்வரமாட்டார்கள். ஆனால் எலிசாவோ எல்லாவற்றையும் விட்டுவிட்டு, எலியாவைப் பின்பற்றிப்போக ஆயத்தமாயிருக்கிறார். எலியா எலிசாவை கட்டாயம்பண்ணவில்லை. ஆனாலும் எலிசா எலியாவுக்கு ஊழியம் செய்ய ஆயத்தமாகிறார்.

எலிசா எலியாவுக்கு செய்த ஊழியத்தைப்பற்றி, "எலியாவின் கைகளுக்குத் தண்ணீர் வார்த்த சாப்பாத்தின் குமாரனாகிய எலிசா இங்கே இருக்கிறான்" (2இராஜா 3:11) என்று சொல்லப்பட்டிருக்கிறது. எலிசா ஊழியம் கொள்ளவில்லை. அவர் ஊழியம் செய்கிறார். மற்றவர்களுக்கு போதிக்கிறவர்கள், முதலாவது கற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கவேண்டும். மற்றவர்களை உயர்ந்த ஸ்தானத்திலிருந்து ஆளுகை செய்ய விரும்புகிறவர்கள், தங்களுக்கு தாழ்மையான ஸ்தானத்தை தெரிந்துகொண்டு, அநேகருக்கு பணிவிடை செய்யவேண்டும்.

20 அதிகாரம்

சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத்திற்கும், இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபுக்கும் இடையே நடைபெற்ற யுத்தங்களைப்பற்றி இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு யுத்தங்களிலும் ஆகாப் ஜெயம் பெறுகிறான்.

இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கும் சரித்திர சம்பவத்தில், எலியாவைப்பற்றியோ, எலிசாவைப்பற்றியோ ஒன்றும் சொல்லப்படவில்லை. யேசபேலின் ஆணவம் ஒரளவு அடங்கியிருக்கிறது. கர்த்தருடைய தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாக எழும்பின உபத்திரவங்கள் குறைந்திருக்கிறது. எலியாவும் பிரச்சனைகளும், அச்சுறுத்துதல்களும் இல்லாமல் அமைதியாயிருக்கிறார்.

எலியா ஆகாபின் அரண்மனையிலே வந்து கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லவில்லை. கர்த்தர் எலியாவிடம், பாகாலுக்கு தங்கள் முழங்கால்களை முடக்காத ஏழாயிரம்பேர் இஸ்ரவேல் தேசத்தில் இருப்பதாக சொன்னார். எலியா அவர்களை தேடி கண்டுபிடித்து அவர்களோடு ஐக்கியமாயிருக்கிறார். அவர்களுக்காக தீர்க்கதரிசிகளின் பாடசாலைகளை எலியா ஆரம்பிக்கிறார். அவர் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு வேதப்பிரமாணத்தைப் போதிக்கிறார்.

இஸ்ரவேல் தேசம் முழுவதிலும் தீர்க்கதரிசிகளின் பாடசாலைகள் ஆங்காங்கே ஸ்தாபிக்கப்படுகிறது. இந்தப் பாடசாலைகள் கர்த்தருடைய சத்தியங்களை கற்றுத்தரும் காலாசாலைகளாயிருக்கிறது.

இஸ்ரவேல் தேசத்தின் ராஜா இரட்சிக்கப்படவில்லை. ராஜாவின் அரண்மனையிலுள்ளவர்கள் கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில், இஸ்ரவேல் தேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு, தீர்க்கதரிசிகளின் பாடசாலைகளும், பயிற்சி முகாம்களும் தேவைப்படுகிறது.

எலியா இஸ்ரவேல் தேசத்திலே கர்த்தருடைய ஊழியத்தை உற்சாகமாய்ச் செய்துகொண்டிருக்கிறார். இந்த சூழ்நிலையில் இஸ்ரவேல் தேசத்திற்கும் சீரிய தேசத்திற்கும் இடையே யுத்தம் நடைபெறுகிறது. கர்த்தருடைய கிருபையினால் இந்த யுத்தத்தில் இஸ்ரவேல் தேசம் ஜெயம் பெறுகிறது.

கர்த்தர் எலியாவிடம் ஆசகேலை சீரியாவின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணுமாறும், யெகூவை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணுமாறும் சொன்னார். இப்போது சீரிய தேசத்திற்கு பெனாதாத் ராஜாவாகவும், இஸ்ரவேல் தேசத்திற்கு ஆகாப் ராஜாவாகவும் இருக்கிறார்கள். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக, இவர்களுக்கு பதிலாக, புதிய ராஜாக்களை அபிஷேகம் பண்ணுவதற்கு சாதகமான சூழ்நிலைகள் உருவாயிற்று.

சீரியாவுக்கு விரோதமாக நடைபெற்ற யுத்தத்தில், இஸ்ரவேல் தேசத்திற்கு ஜெயம் கிடைத்திருக்கிறது. தங்களுக்கு தோல்வி உண்டானதை சீரியர்கள் எதிர்பார்க்கவில்லை. அதுபோலவே தங்களுக்கு ஜெயமுண்டானதை இஸ்ரவேலர்களும் எதிர்பார்க்கவில்லை. கர்த்தர் தம்முடைய கிருபையினால் இஸ்ரவேலருக்கு நன்மை செய்திருக்கிறார்.

கர்த்தர் தங்களுக்கு காண்பித்த நன்மைகளையும் கிருபைகளையும் நினைவுகூர்ந்து, இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். பாகால்களை ஆராதிப்பதை விட்டுவிட்டு, கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டும். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ இன்னும் கர்த்தரைவிட்டு விலகி, பாகால்களைப்பற்றிக்கொண்டு, நிர்விசாரமாய் ஜீவிக்கிறார்கள்.

சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத், இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபுக்கு தன்னுடைய கோரிக்கைகளை சொல்லியனுப்புகிறான். பெனாதாத்தின் கோரிக்கைகளை ஆகாப் முதலில் ஏற்றுக்கொள்கிறான். அதன் பின்பு ஆகாப் பெனாதாத்தின் கோரிக்கைகளை ஏற்க மறுத்துவிடுகிறான். இதனால் சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத், இஸ்ரவேலின்மேல் யுத்தம்பண்ண ஆயத்தமாகிறான் (1இராஜா 20:1-11).

கர்த்தருடைய தீர்க்கதரிசி இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபினிடத்தில் வந்து, அவருக்கு ஆறுதலான வார்த்தைகளையும், உற்சாகமான வார்த்தைகளையும் சொல்லுகிறார். இந்த யுத்தத்திலே இஸ்ரவேலருக்கு சீரியர்மீது ஜெயமுண்டாயிற்று (1இராஜா 20:12-21).

சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத், மறுபடியும் இரண்டாம் முறையாக, இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறான். இந்த யுத்தத்திலும் பெனாதாத்திற்கு தோல்வி உண்டாயிற்று (1இராஜா 20:22-30).

ஆகாபுக்கும் பெனாதாத்திற்கும் இடையே சமாதான உடன்படிக்கை உண்டாயிற்று (1இராஜா 20:31-34). ஆகாப் பெனாதாத்தை கொன்றுபோடாமல் உயிரோடு தப்ப விடுகிறான். தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவர் மூலமாய் ஆகாபுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. பெனாதாத் சங்காரத்திற்கு நியமிக்கப்பட்டவன். ஆகாபோ பெனாதாத்தை தப்பவிட்டுவிடுகிறான். இதனால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு ஆகாபின்மீது வருகிறது (1இராஜா 20:35-43).

பெனாதாத்தின் கோரிக்கை 1இராஜா 20:1-11

1இராஜா 20:1. சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் தன்சேனையையெல்லாம் கூட்டிக்கொண்டுபோய், சமாரியாவை முற்றிக்கைபோட்டு அதின்மேல் யுத்தம்பண்ணினான்; அவனோடேகூட முப்பத்திரண்டு ராஜாக்கள் இருந்ததுமல்லாமல், குதிரைகளும் இரதங்களும் இருந்தது.

1இராஜா 20:2. அவன் நகரத்திற்குள் இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபிடத்தில் ஸ்தானாபதிகளை அனுப்பி:

1இராஜா 20:3. உன்னுடைய வெள்ளியும் உன்னுடைய பொன்னும் என்னுடையது; உன்னுடைய ஸ்திரீகளும் உன்னுடைய குமாரருக்குள் சமர்த்தராயிருக்கிறவர்களும் என்னுடையவர்கள் என்று பெனாதாத் சொல்லுகிறான் என்று அவனுக்குச் சொல்லச்சொன்னான்.

1இராஜா 20:4. இஸ்ரவேலின் ராஜா அதற்குப் பிரதியுத்தரமாக: ராஜாவாகிய என் ஆண்டவனே, உம்முடைய வார்த்தையின்படியே, நானும் எனக்கு உண்டான யாவும் உம்முடையவைகள்தான் என்று சொல்லியனுப்பினான்.

1இராஜா 20:5. அந்த ஸ்தானாபதிகள் திரும்பவும் வந்து: பெனாதாத் சொல்லுகிறது என்னவென்றால், உன் வெள்ளியையும், உன் பொன்னையும், உன் ஸ்திரீகளையும், உன் குமாரர்களையும் நீ எனக்குக் கொடுக்கவேண்டும் என்று உமக்குச் சொல்லியனுப்பினேனே.

1இராஜா 20:6. ஆனாலும் நாளை இந்நேரத்தில் என் ஊழியக்காரரை உன்னிடத்தில் அனுப்புவேன்; அவர்கள் என் வீட்டையும் உன் ஊழியக்காரரின் வீடுகளையும் சோதித்து, உன் கண்ணுக்குப் பிரியமானவைகள் எல்லாவற்றையும் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டுபோவார்கள் என்றார் என்று சொன்னார்கள்.

1இராஜா 20:7. அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா, தேசத்தின் மூப்பரையெல்லாம் அழைப்பித்து: இவன் பொல்லாப்புத் தேடுகிற விதத்தைக் கவனித்துப்பாருங்கள்; என் ஸ்திரீகளையும், என் குமாரர்களையும், என் வெள்ளியையும், என் பொன்னையும் கேட்க, இவன் என்னிடத்தில் ஆள் அனுப்பினபோது, நான் கொடுக்கமாட்டேன் என்று இவனுக்கு மறுக்கவில்லையே என்றான்.

1இராஜா 20:8. அப்பொழுது சகல மூப்பரும் சகல ஜனங்களும் அவனைப் பார்த்து: நீர் அவனுக்குச் செவிகொடுக்கவும், அவனுக்குச் சம்மதிக்கவும் வேண்டாம் என்றார்கள்.

1இராஜா 20:9. அதினால் அவன் பெனாதாத்தின் ஸ்தானாபதிகளை நோக்கி: நீங்கள் ராஜாவாகிய என் ஆண்டவனுக்குச் சொல்ல வேண்டியது என்னவென்றால், நீர் முதல் விசை உமது அடியானுக்குச் சொல்லியனுப்பின யாவும் செய்வேன்; இந்தக் காரியத்தையோ நான் செய்யக்கூடாது என்று சொல்லுங்கள் என்றான்; ஸ்தானாபதிகள் போய், இந்த மறுமொழியை அவனுக்குச் சொன்னார்கள்.

1இராஜா 20:10. அப்பொழுது பெனாதாத் அவனிடத்தில் ஆள் அனுப்பி: எனக்குப் பின் செல்லுகிற ஜனங்கள் எல்லாரும் கைக்கு ஒரு பிடியாவது வாரிக்கொள்ள சமாரியாவின் தூள் போதுமானதாயிருந்தால், தேவர்கள் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்கள் என்று சொல்லச்சொன்னான்.

1இராஜா 20:11. அதற்கு இஸ்ரவேலின் ராஜா பிரதியுத்தரமாக: ஆயுதம் தரித்திருக்கிறவன், ஆயுதம் உரிந்து போடுகிறவனைப்போலப் பெருமைபாராட்டலாகாது என்று அவனுக்குச் சொல்லுங்கள் என்றான்.

சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் தன்சேனையையெல்லாம் கூட்டிக்கொண்டுபோய், சமாரியாவை முற்றிக்கைபோட்டு அதின்மேல் யுத்தம்பண்ணுகிறான்; அவனோடேகூட முப்பத்திரண்டு ராஜாக்கள் இருந்ததுமல்லாமல், குதிரைகளும் இரதங்களும் இருக்கிறது (1இராஜா 20:1).

சமாரியா இஸ்ரவேல் தேசத்தின் தலைநகரம். பெனாதாத் இஸ்ரவேலின் ராஜதானி பட்டணமாகிய சமாரியாவை முற்றிக்கையிடுகிறான். தாவீது ராஜா தன்னுடைய காலத்திலே சீரிய தேசத்தை அடைக்கி ஒடுக்கி வைத்திருந்தார். அக்காலத்தில் சீரியர்கள் இஸ்ரவேல் தேசத்திற்கு பகுதி கட்டினார்கள்.

இப்போதோ இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை விட்டு விலகிப்போயிருக்கிறார்கள். ஆகையினால் இதுவரையிலும் அடங்கியிருந்த சீரியர்கள், இப்போது இஸ்ரவேலருக்கு விரோதமாக சத்துருக்களாக எழும்புகிறார்கள்.

யூதாவின் ராஜாவாகிய ஆசா, சீரியாவின் ராஜாவாகிய பெனதாத்திற்கு லஞ்சம் கொடுத்து, இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுமாறு சொன்னான்.

"அப்பொழுது ஆசா கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களில் மீதியான எல்லா வெள்ளியையும் பொன்னையும், ராஜாவின் அரமனையின் பொக்கிஷங்களையும் எடுத்து, அவைகளைத் தன் ஊழியக்காரர் கையிலே தமஸ்குவில் வாசமாயிருக்கிற எசியோனின் மகனாகிய தப்ரிமோனின் குமாரன் பெனாதாத் என்னும் சீரியாவின் ராஜாவுக்குக் கொடுத்தனுப்பி: எனக்கும் உமக்கும் என் தகப்பனுக்கும் உம்முடைய தகப்பனுக்கும் உடன்படிக்கை உண்டே; இதோ, உமக்கு வெகுமதியாய் வெள்ளியையும் பொன்னையும் அனுப்புகிறேன்; இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷா என்னைவிட்டு விலகிப்போகும்படிக்கு, நீர் வந்து அவனோடு செய்த உடன்படிக்கையைத் தள்ளிப்போடும் என்று சொல்லச்சொன்னான்".

"பெனாதாத், ராஜாவாகிய ஆசாவுக்குச் செவிகொடுத்து, தனக்கு உண்டான சேனாபதிகளை இஸ்ரவேலின் பட்டணங்களுக்கு விரோதமாக அனுப்பி, ஈயோனையும், தாணையும் பெத்மாக்கா என்னும் ஆபேலையும் கின்னரோத் அனைத்தையும் நப்தலியின் முழுத்தேசத்தோடுங்கூட முறிய அடித்தான்" (1இராஜா 15:18-20).

இப்போது இஸ்ரவேலுக்கு விரோதமாய் யுத்தம்பண்ண பெனாதாத்திற்கு யாரும் லஞ்சம் கொடுக்கவில்லை. ஆனாலும், பெனாதாத் சுயமாய்த் தீர்மானம் செய்து, தன்னுடைய சேனையை எல்லாம் கூட்டிக்கொண்டு, சமாரியாவை முற்றிக்கைப்போட வந்திருக்கிறான்.

அந்நிய தேசத்தாரின் சேனையை ஒரு தேசத்திற்குள் பிரவேசிக்க அனுமதிப்பது மிகவும் ஆபத்தானது. இதனால் அந்த தேசத்தாரின் பின்சந்ததியார் அதிகமாய்ப் பாதிக்கப்படுவார்கள். முன்னோர்கள் செய்த தப்பிதத்திற்கு, அவர்களுடைய பின்னடியார்கள் அதிகமான கிரயம் செலுத்த வேண்டியது வரும்.

சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் பெருமைக்காரன். அவன் இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபினிடத்தில் அதிகமாய் எதிர்பார்க்கிறான். பெனாதாத் தன்னுடைய ஸ்தானாபதிகளை அனுப்பி, தன்னுடைய கோரிக்கைகளையெல்லாம் ஆகாபுக்கு சொல்லியனுப்புகிறான்.

பெனாதாத்தின் சேனை சமாரியா பட்டணத்தை முற்றிக்கைப் போட்டிருக்கிறார்கள். இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபோ சமாரியா நகரத்திற்குள்ளே இருக்கிறான். பெனாதாத் ஆகாபினிடத்தில் தன்னுடைய ஸ்தானாபதிகளை அனுப்பி, "உன்னுடைய வெள்ளியும் உன்னுடைய பொன்னும் என்னுடையது; உன்னுடைய ஸ்திரீகளும் உன்னுடைய குமாரருக்குள் சமர்த்தராயிருக்கிறவர்களும் என்னுடையவர்கள் என்று பெனாதாத் சொல்லுகிறான்" (1இராஜா 20:2,3) என்று அவனுக்குச் சொல்லச்சொல்லுகிறான்.

பெனாதாத் சமாரியாவுக்கு விரோதமாகப் போட்டிருக்கும் முற்றிக்கையை விலக்கிக்கொள்ளவேண்டுமென்றால், ஆகாப் பெனாதாத்தின் கோரிக்கைகளையெல்லாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆகாப் சீரிய தேசத்திற்கு கப்பம் கட்டவேண்டும். இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபுக்கு சொந்தமானது எல்லாம், சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத்திற்கு சொந்தமாகும். சாசனபத்திரங்கள் கைமாறும்.

ஆகாபின் வெள்ளியும், அவனுடைய பொன்னும் பெனாதாத்தினுடையதாயிருக்கும். பொருட்கள் மாத்திரமல்லாமல் ஆகாபின் ஸ்திரீகளும், அவனுடைய குமாரருக்குள் சமர்த்தராயிருக்கிறவர்களும் பெனாதாத்தினுடையவர்களாயிருப்பார்கள். ஆகாபின் உயிரில்லாத சொத்துக்களும், உயிரோடிருக்கிறவர்களும் பெனாதாத்திற்கு சொந்தமாவார்கள்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் சமாரியா பட்டணத்திற்குள்ளே பயத்தோடும் நடுக்கத்தோடும் இருக்கிறான். பெனாதாத்தின் சேனையெல்லாம், சமாரியாவுக்கு வெளியே முற்றிக்கைப்போட்டிருக்கிறார்கள். பெனாதாத்தின் கோரிக்கைகள் அநீதியும், அநியாயமுமானதாகயிருந்தாலும், அதை மறுப்பதற்கோ, நிராகரிப்பதற்கோ ஆகாபின் மனதிலே துணிச்சலோ தைரியமோ இல்லை.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் பெனாதாத்திற்கு பிரதியுத்தரமாக: "ராஜாவாகிய என் ஆண்டவனே, உம்முடைய வார்த்தையின்படியே, நானும் எனக்கு உண்டான யாவும் உம்முடையவைகள்தான்" (1இராஜா 20:4) என்று சொல்லியனுப்புகிறான்.

பாவத்தின் சம்பளம் மரணம். ஆகாபின் பாவத்தினால் அவனுக்கு சாபங்கள் வருகிறது. அவன் கர்த்தரைவிட்டு விலகிப்போனான். அவன் கர்த்தருக்கு விரோதமாக துணிகரமாய்ப் பாவம் செய்தான். இப்போது பெனாதாத் ஆகாபுக்கு விரோதமாக வந்திருக்கிறான். ஆகாப் கர்த்தருக்கு பயந்து ஜீவித்திருந்தால், பெனாதாத்தைப்போன்ற சத்துருக்கள் ஆகாபுக்கு விரோதமாக வரமாட்டார்கள். இப்படிப்பட்ட அநியாயமான கோரிக்கைகளையும் அவனுக்கு சொல்லமாட்டார்கள்.

கர்த்தர் நம்மை ஆளுகை செய்யவில்லையென்றால், நம்முடைய சத்துருக்கள் நம்மை ஆளுகை செய்வார்கள். கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறவர்கள், கர்த்தரை தவிர எல்லோருக்கும் அடிமைகளாயிருப்பார்கள்.

ஆகாபின் மனச்சாட்சி அவனைக் குற்றப்படுத்துகிறது. தன்னுடைய பாவத்திற்கு தண்டனையாகவே, பெனாதாத் தன்னிடத்தில் இப்படிப்பட்ட கோரிக்கைகளை சொல்லுகிறான் என்பதை ஆகாப் உணருகிறான். ஆகையினால் ஆகாப் பெனாதாத்திற்கு எதிர்த்து நிற்கவுமில்லை. அவனுடைய கோரிக்கைகளுக்கு மறுப்பு சொல்லவுமில்லை.

கர்த்தர் ஆகாபோடு கூடயில்லை. ஆகையினால் ஆகாப் மிகப்பெரிய கோழையாயிருக்கிறான். ஆகாப் யுத்தம்பண்ணாமலேயே, சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத்திடம் சரணடைகிறான். பாவம் மனுஷனைக் கோழையாக்கும். குற்றவுணர்வு மனுஷனுடைய ஆவியை பலவீனப்படுத்தும்.

பெனாதாத் அனுப்பின ஸ்தானாபதிகள், ஆகாபினிடத்தில் அவனுடைய வார்த்தைகளை சொன்னார்கள். ஆகாபும் அவர்கள் மூலமாக பெனாதாத்திற்கு பிரதியுத்தரம் சொல்லியனுப்பினான். இப்போது அவர்கள் பெனாதாத்திடம் திரும்பி வந்து, ஆகாப் அவனுக்கு சொன்ன வார்த்தைகளை சொல்லுகிறார்கள்.

"உன்னுடையவைகள் என்னுடையவைகள்" என்றும், "உன்னுடையவர்கள் என்னுடையவர்கள்" என்றும் பெனாதாத் தன்னுடைய கோரிக்கையை ஆகாபுக்குச் சொன்னான். ஆகாபும் பெனாதாத்தின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, "உம்முடைய வார்த்தையின்படியே நானும் எனக்கு உண்டான யாவும் உம்முடையவைகள்தான்" என்று பிரதியுத்தரம் சொல்லியனுப்புகிறான். ஆனால் பெனாதாத்தோ பேராசை பிடித்தவனாயிருக்கிறான். ஆகாபின் பிரதியுத்தரத்தில் பெனாதாத்திற்கு திருப்தி உண்டாகவில்லை. பெனாதாத் ஆகாபிடமிருந்து இன்னும் அதிகமாய் எதிர்பார்க்கிறான்.

சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் தன்னுடைய ஸ்தானாபதிகளை திரும்பவும் ஆகாபினிடத்திற்கு அனுப்புகிறான். பெனாதாத் தன்னுடைய ஆசைகளையெல்லாம் புதிய கோரிக்கைகளாக, ஆகாபுக்கு சொல்லியனுப்புகிறான்.

பெனாதாத்தின் ஸ்தானாபதிகள் திரும்பவும் ஆகாபினிடத்தில் வந்து, "பெனாதாத் சொல்லுகிறது என்னவென்றால், உன் வெள்ளியையும், உன் பொன்னையும், உன் ஸ்திரீகளையும், உன் குமாரர்களையும் நீ எனக்குக் கொடுக்கவேண்டும் என்று உமக்குச் சொல்லியனுப்பினேனே. ஆனாலும் நாளை இந்நேரத்தில் என் ஊழியக்காரரை உன்னிடத்தில் அனுப்புவேன்; அவர்கள் என் வீட்டையும் உன் ஊழியக்காரரின் வீடுகளையும் சோதித்து, உன் கண்ணுக்குப் பிரியமானவைகள் எல்லாவற்றையும் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டுபோவார்கள் என்றார்" (1இராஜா *20:5,6*) என்று சொல்லுகிறார்கள்.

பெனாதாத் பெருமை பிடித்தவனாக இருப்பது மாத்திரமல்ல, அவன் பேராசை பிடித்தவனாகவும் இருக்கிறான். ஆகாபுக்குரியதெல்லாம் தன்னுடையதாய் ஆகவேண்டும் என்னும் ஆசை பெனாதாத்தின் மனதிலிருக்கிறது. சாசனபத்திரம் கைமாறினால் மாத்திரம் போதாது. ஆகாபுக்கு சொந்தமானதெல்லாமே, தன்னுடையதாக வேண்டும் என்றும், அவற்றை தன்னோடேகூட சீரிய தேசத்திற்கு கொண்டுபோகவேண்டும் என்றும் பெனாதாத் ஆசைப்படுகிறான்.

பெனாதாத் மிகவும் தந்திரமாய் யோசிக்கிறான். அவனிடத்தில் உண்மையில்லை. அவன் ஒரு துன்மார்க்கன். பெனாதாத்தைப்போலவே ஆகாபும் ஒரு தேசத்திற்கு ராஜா. ஆகாபின் தலையில் கிரீடம் சூட்டப்பட்டிருக்கிறது. ஆனால் சீரியாவின் ராஜா, இஸ்ரவேலின் ராஜாவை மதிக்கவில்லை.

ஆகாபின் வெள்ளியையும், பொன்னையும், ஸ்திரீகளையும் குமாரரையும் பெனாதாத் வந்து எடுத்துக்கொள்ளமாட்டான். அதற்கு பதிலாக அவன் தன் ஊழியக்காரரை ஆகாபினிடத்தில் அனுப்புவான். அவர்கள் ஆகாபின் பொன்னையும் வெள்ளியையும், ஸ்திரீகளையும் குமாரரையும் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு போவார்கள். பெனாதாத் ஆகாபை அவமானப்படுத்துகிறான். ஆகாபின் கண்ணுக்கு பிரியமானவைகள் எல்லாவற்றையும், பெனாதாத்தின் ஊழியக்காரர்கள் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு போவார்கள்.

பெனாதாத்தின் கோரிக்கையில் நீதியுமில்லை நியாயமுமில்லை. ஆகாப் தனக்கு முன்பாக சரணடையவேண்டும் என்பதே பெனாதாத்தின் விருப்பம். ஆகாப் சரணடையும்போது அவனுடையது எல்லாமே பெனாதாத்திற்கு சொந்தமாகும். பெனாதாத்தின் படைபலம் பெரியது. பெனாதாத்தோடுகூட முப்பத்திரண்டு ராஜாக்கள் இருக்கிறார்கள். இஸ்ரவேலின் சேனையோ மிகவும் சிறியது. தன்னால் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அவர்களை எளிதாக மேற்கொள்ள முடியுமென்று பெனாதாத் தீர்மானித்திருக்கிறான்.

பெனாதாத்தின் ஸ்தானாதிபதிகள் தன்னிடத்தில் திரும்பவும் வந்து சொன்ன வார்த்தைகளைக் கேட்டு ஆகாப் மனங்கலங்குகிறான். ஆகாபின் இருதயத்தில் தைரியமில்லை. அவனிடத்தில் தெளிந்த சிந்தனையுமில்லை. ஆகாப் பெனாதாத்திற்கு எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு, தன்னுடைய ஜீவனைக் காத்துக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறான். ஆனால் பெனாதாத்திடம் இரக்கமில்லை. கருணையுமில்லை. ஆகாப் குழப்பத்திலிருப்பதினால், அவனால் தெளிவாக சிந்திக்கவும் முடியவில்லை.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் தேசத்தின் மூப்பரையெல்லாம் அழைப்பித்து, அவர்களோடு ஆலோசனைபண்ணுகிறான். ஆகாப் மூப்பர்களை நோக்கி, "பெனாதாத் பொல்லாப்புத் தேடுகிற விதத்தைக் கவனித்துப்பாருங்கள்; என் ஸ்திரீகளையும், என் குமாரர்களையும், என் வெள்ளியையும், என் பொன்னையும் கேட்க, இவன் என்னிடத்தில் ஆள் அனுப்பினபோது, நான் கொடுக்கமாட்டேன் என்று இவனுக்கு மறுக்கவில்லையே" (1இராஜா 20:7) என்று சொல்லுகிறான்.

இஸ்ரவேல் தேசத்தின் சகல மூப்பர்களும் ஆகாபுக்கு நல்ல யோசனை சொல்லுகிறார்கள். அப்பொழுது சகல மூப்பரும் சகல ஜனங்களும் ஆகாபைப் பார்த்து: "நீர் பெனாதாத்திற்குச் செவிகொடுக்கவும், அவனுக்குச் சம்மதிக்கவும் வேண்டாம்" (1இராஜா 20:8) என்று சொல்லுகிறார்கள்.

தன்னுடைய தேசத்து மூப்பர்கள் சொன்ன ஆலோசனைகளை ஆகாப் ஏற்றுக்கொள்கிறான். பெனாதாத் தனக்கு சொல்லியனுப்பின கோரிக்கைகளை ஆகாப் ஏற்றுக்கொள்ளாமல் கண்ணியமாக மறுத்துவிடுகிறான்.

ஆகாப் பெனாதாத்தின் ஸ்தானாபதிகளை நோக்கி: "நீங்கள் ராஜாவாகிய என் ஆண்டவனுக்குச் சொல்ல வேண்டியது என்னவென்றால், நீர் முதல் விசை உமது அடியானுக்குச் சொல்லியனுப்பின யாவும் செய்வேன்; இந்தக் காரியத்தையோ நான் செய்யக்கூடாது என்று சொல்லுங்கள்" (1இராஜா 20:9) என்று சொல்லுகிறான்; ஸ்தானாபதிகள் போய், இந்த மறுமொழியை பெனாதாத்திற்குச் சொல்லுகிறார்கள்.

ஆகாபின் வார்த்தைகள் பெனாதாத்தின் கோபத்தை அதிகப்படுத்துகிறது. அவன் சமாரியாவை அழித்துப்போடவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறான்.

அப்பொழுது பெனாதாத் ஆகாபினிடத்தில் ஆள் அனுப்பி: "எனக்குப் பின் செல்லுகிற ஜனங்கள் எல்லாரும் கைக்கு ஒரு பிடியாவது வாரிக்கொள்ள சமாரியாவின் தூள் போதுமானதாயிருந்தால், தேவர்கள் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்கள்" (1இராஜா 20:10) என்று சொல்லச் சொல்லுகிறான்.

பெனாதாத்தின் வார்த்தைகளை அவனுடைய ஸ்தானாபதிகள் ஆகாபினிடத்தில் சொல்லுகிறார்கள். அதற்கு இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் பிரதியுத்தரமாக: "ஆயுதம் தரித்திருக்கிறவன், ஆயுதம் உரிந்து போடுகிறவனைப்போலப் பெருமைபாராட்டலாகாது என்று அவனுக்குச் சொல்லுங்கள்" (1இராஜா 20:11) என்று சொல்லுகிறான்.

சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத்தை நேருக்கு நேராக எதிர்க்கும் தைரியம் ஆகாபினிடத்தில் இல்லை. பெனாதாத்தின் வார்த்தைகளுக்கு எதிர்த்து பேசும் துணிச்சலும் ஆகாபுக்கு இல்லை. பெனாதாத்தின் கோரிக்கைகள் அநீதியானது என்றோ, அநியாயமானது என்றோ ஆகாபால் சொல்ல முடியவில்லை. ஆகாப் இன்னும் கோழையாகவே இருக்கிறான். ஆனாலும் ஆகாப் பெனாதாத்தின் துணிச்சலை மென்மையாகக் கடிந்துகொள்கிறான். யுத்தத்தில் யார் ஜெயிப்பார்கள் என்பதை நிச்சயமாய்ச் சொல்லமுடியாது.

பெனாதாத் ஆயுதம் தரித்திருக்கிறவன். இந்த வாக்கியத்திற்கு, "அவன் யுத்தம் பண்ணுகிறவன்" என்று பொருள். அவன் இன்னும் "ஆயுதம் உரிந்துபோடுகிறவனல்ல". யுத்தத்தில் ஜெயிக்கிறவனே, ஆயுதம் உரிந்துபோடுகிறவன். பெனாதாத் யுத்தத்தில் ஜெயிப்பதற்கு முன்பாகவே, ஜெயித்தவனைப்போல பெருமை பாராட்டுகிறான் என்று ஆகாப் அவன்மீது குற்றம் சொல்லுகிறான்.

சீரியரில் மகாசங்காரம்
1இராஜா 20:12-21

1இராஜா 20:12. பெனாதாத்தும், மற்ற ராஜாக்களும் கூடாரங்களிலே குடித்துக்கொண்டிருக்கையில், இந்த வார்த்தையைக்கேட்டு, தன் ஊழியக்காரரை நோக்கி: ஆயத்தம் பண்ணுங்கள் என்றான்; அப்படியே நகரத்தின்மேல் சண்டை செய்ய ஆயத்தம்பண்ணினார்கள்.

1இராஜா 20:13. அப்பொழுது ஒரு தீர்க்கதரிசி இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபிடத்தில் வந்து: அந்த ஏராளமான ஜனக்கூட்டத்தையெல்லாம் கண்டாயா? இதோ, நானே கர்த்தர் என்று நீ அறியும்படி இன்றைக்கு அதை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

1இராஜா 20:14. யாரைக்கொண்டு என்று ஆகாப் கேட்டான்; அதற்கு அவன்: மாகாணங்களுடைய அதிபதிகளின் சேவகரைக் கொண்டு என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்; பின்பு அவன், யுத்தத்தை யார் துவக்கவேண்டும் என்று கேட்டதற்கு; அவன், நீர்தான் என்றான்.

1இராஜா 20:15. அவன் மாகாணங்களுடைய அதிபதிகளின் சேவகரை இலக்கம்பார்த்தான், அவர்கள் இருநூற்று முப்பத்திரண்டு பேர்; அவர்களுக்குப்பின்பு, இஸ்ரவேல் புத்திரராகிய சகல ஜனத்தின் இலக்கமும் பார்த்து ஏழாயிரம்பேர் என்று கண்டான்.

1இராஜா 20:16. அவர்கள் மத்தியானவேளையிலே வெளியே புறப்பட்டார்கள்; பெனாதாத்தும், அவனுக்கு உதவியாக வந்த முப்பத்திரண்டு ராஜாக்களாகிய மற்ற ராஜாக்களும், கூடாரங்களில் குடித்து வெறி கொண்டிருந்தார்கள்.

1இராஜா 20:17. மாகாணங்களுடைய அதிபதிகளின் சேவகர் முன்தண்டாகப் புறப்படுகிறபோது, பெனாதாத் அனுப்பின மனுஷர்: சமாரியாவிலிருந்து மனுஷர் புறப்பட்டு வருகிறார்கள் என்று அவனுக்கு அறிவித்தார்கள்.

1இராஜா 20:18. அப்பொழுது அவன்: அவர்கள் சமாதானத்திற்காகப் புறப்பட்டுவந்தாலும் அவர்களை உயிரோடே பிடியுங்கள்; அவர்கள் யுத்தத்திற்காகப் புறப்பட்டுவந்தாலும் அவர்களை உயிரோடே பிடியுங்கள் என்றான்.

1இராஜா 20:19. மாகாணங்களுடைய அதிபதிகளின் சேவகரான அவர்களும், அவர்கள் பின்னே வருகிற இராணுவமும், நகரத்திலிருந்து வெளியே வந்தபோது,

1இராஜா 20:20. அவர்கள் அவரவர் தங்களுக்கு எதிர்ப்படுகிறவர்களை வெட்டினார்கள்; சீரியர் முறிந்தோடிப்போனார்கள்; இஸ்ரவேலர் அவர்களைத் துரத்தினார்கள்; சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத், குதிரையின்மேல் ஏறிச் சில குதிரைவீரரோடுங்கூடத் தப்பியோடிப்போனான்.

1இராஜா 20:21. இஸ்ரவேலின் ராஜா புறப்பட்டு, குதிரைகளையும், இரதங்களையும் முறிய அடித்து, சீரியரில் மகா சங்காரம் உண்டாக வெட்டினான்.

சமாரியாவை முற்றிக்கைப்போட்டிருக்கிற சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத்திற்கும், சமாரியாவுக்குள்ளே இருக்கிற இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபுக்கும் உடன்படிக்கை உண்டாகவில்லை. பேச்சு வார்த்தைகள் முறிந்துபோகிறது. பெனாதாத் இஸ்ரவேல்மீது யுத்தம்பண்ண ஆயத்தம்பண்ணுகிறான்.

பெனாதாத்தின் சேனாபதிகள் ஆகாபிடம் பேசிக்கொண்டிருக்கும்போது, பெனாதாத்தும் மற்ற ராஜாக்களும் கூடாரங்களிலே குடித்துக் கொண்டிருக்கிறார்கள். பெனாதாத்தின் சேனாபதிகள், அவனிடத்தில் வந்து, ஆகாப் தங்களிடத்தில் சொல்லியனுப்பின பிரதியுத்தரத்தை சொல்லுகிறார்கள்.

ஆகாப் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு பெனாதாத் கோபப்படுகிறான். அவன் தன் ஊழியக்காரரை நோக்கி, "ஆயத்தம்பண்ணுங்கள்" என்று கட்டளையிடுகிறான். இந்த வாக்கியத்திற்கு, "சமாரியாவுக்கு விரோதமாய் யுத்தம்பண்ண ஆயத்தம்பண்ணுங்கள்" என்று பொருள். பெனாதாத்தின் சேனையிலுள்ளவர்கள், அவனுடைய கட்டளைப் பிரகாரம், சமாரியா நகரத்தின்மேல் சண்டை செய்ய ஆயத்தம்பண்ணுகிறார்கள்.

பெனாதாத் கூடாரங்களிலே குடித்துக்கொண்டிருக்கும்போது, மத்தியான வேளையாயிருக்கிறது. தான் பாதுகாப்பாக இருப்பதாகவும், தனக்கு ஒரு ஆபத்தும் வராது என்றும் பெனாதாத் நிச்சயத்திருக்கிறான். ஆகையினால்தான் அவன் மத்தியான வேளையிலே, தன் கூடாரங்களிலே குடித்துக்கொண்டிருக்கிறான். அவனோடுகூட முப்பத்திரண்டு ராஜாக்கள் இருக்கிறார்கள். இந்த ராஜாக்களும் பெனாதாத்தோடுகூட கூடாரங்களிலே குடித்து வெறித்திருக்கிறார்கள்.

குடித்தும் வெறித்தும் இருக்கிற ஜனங்கள் தங்கள் சுயநினைவை இழந்திருப்பார்கள். இவர்களுக்கு ஆபத்து வந்தாலும், தாங்கள் பாதுகாப்பாயிருப்பதாக நினைப்பார்கள். சோதோமின் ஜனங்கள், பெனாதாத்தைப்போலவே குடித்தும் வெறித்தும், நிர்விசாரமாய் ஜீவித்தார்கள். தங்கள்மீது தேவனுடைய கோபம் வந்திருக்கிறது என்பதை அவர்கள் அறியாதிருந்தார்கள். முடிவிலே வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வந்து அவர்களை அழித்துப்போட்டது.

"லோத்தினுடைய நாட்களில் நடந்ததுபோலவும் நடக்கும்; ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள், நட்டார்கள், கட்டினார்கள். லோத்து சோதோமை விட்டுப் புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்து, எல்லாரையும் அழித்துப்போட்டது" (லூக் 17:28,29).

பெனாதாத் மத்தியான வேளையிலே, தன் கூடாரங்களிலே மற்ற ராஜாக்களோடு குடித்துக்கொண்டிருந்தது, அவனுடைய அழிவுக்கு முக்கிய காரணமாயிற்று. பெல்ஷாத்சார் குடித்து வெறித்ததுபோல, (தானி 5-ஆவது அதிகாரம்) பெனாதாத்தும் குடித்து வெறித்திருக்கிறான்.

பெனாதாத் நிதானமில்லாமலிருக்கிறான். அவன் தன்னுடைய ஊழியக்காரரை நோக்கி, "சமாரியா நகரத்தின்மேல் சண்டை செய்ய ஆயத்தம்பண்ணுங்கள்" என்று கட்டளை கொடுக்கிறான். "சமாரியாவிலுள்ள ஜனங்கள், சமாதானத்திற்காகப் புறப்பட்டுவந்தாலும் அவர்களை உயிரோடே பிடியுங்கள்; அவர்கள் யுத்தத்திற்காகப் புறப்பட்டுவந்தாலும் அவர்களை உயிரோடே பிடியுங்கள்" (1இராஜா 20:18) என்று பெனாதாத் தன் ஊழியக்காரருக்கு கட்டளையிடுகிறான்.

பெனாதாத்தும் அவனுக்கு உதவியாக வந்த முப்பத்திரண்டு ராஜாக்களாகிய மற்ற ராஜாக்களும், மத்தியான வேளையிலே குடித்து வெறித்திருக்கிறார்கள். பெனாதாத்தின் சிந்தனை தெளிவாகயில்லை. அவனுக்குள் குழப்பம் காணப்படுகிறது. பெனாதாத்தின் சேனை சமாரியாவை முற்றிக்கையிட்டிருக்கிறார்கள். அவர்கள் நகரத்திற்குள் பிரவேசித்து, அங்கே இருக்கிறவர்களை எளிதாகக் கொன்றுபோடலாம். இதனால் பெனாதாத்திற்கும், அவனுடைய சேனைக்கும் சேதமுண்டாகாது.

ஆனால் பெனாதாத்தோ குடித்து வெறித்திருப்பதினால், தெளிவாக சிந்திக்க முடியாமலிருக்கிறான். சமாரியா நகரத்திலிருந்து புறப்பட்டு வருகிறவர்களை, கொன்றுபோடாமல், உயிரோடு பிடிக்குமாறு கட்டளையிடுகிறான். அவர்களை உயிரோடு பிடிப்பது சிரமம். இஸ்ரவேலரை உயிரோடு பிடிக்க முயற்சி பண்ணும்போது, அவர்கள் பெனாதாத்தின் ஊழியக்காரரை எதிர்ப்பார்கள். அதனால், பெனாதாத்தின் சேனைக்கு சேதாரமுண்டாகும்.

பெனாதாத்தின் சேனையிலுள்ளவர்கள் சமாரியா நகரத்தின்மேல் சண்டை செய்ய ஆயத்தம்பண்ணுகிறார்கள். அப்பொழுது ஒரு தீர்க்கதரிசி இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபிடத்தில் வந்து: "அந்த ஏராளமான ஜனக்கூட்டத்தையெல்லாம் கண்டாயா? இதோ, நானே கர்த்தர் என்று நீ அறியும்படி இன்றைக்கு அதை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (1இராஜா 20:13) என்று சொல்லுகிறான்.

இந்த மனுஷன் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளில் ஒருவன். ஆகாப் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை வெறுத்தாலும், அவர்களை உபத்திரவப்படுத்தினாலும், ஆகாபுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. இந்த வார்த்தையும் அவனுக்கு ஆசீர்வாதமாயிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் சமாரியா நகரத்திற்குள்ளே, முற்றிக்கைப்போடப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அப்போது கர்த்தர் ஆகாபுக்கு யுத்தத்திலே ஜெயத்தைக் கட்டளையிடுகிறார்.

ஆகாப் துன்மார்க்கமான ராஜா. அவன் கர்த்தரைவிட்டு விலகி பாகால்களைப் பின்பற்றிப்போகிறான். ஆகாப் துன்மார்க்கனாயிருந்தாலும், கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசியை அவனிடத்திற்கு அனுப்பி, அவனுக்கு ஆசீர்வாதமான செய்தியை சொல்லுகிறார். ஆகாபுக்கு கர்த்தருடைய ஆசீர்வாதமான செய்தி உண்டாவதே மிகப்பெரிய அற்புதம்.

கர்த்தர் ஆகாபின் நிமித்தமாக இஸ்ரவேலுக்கு ஜெயத்தைக் கட்டளையிடவில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் நிமித்தமாக கர்த்தர் அவர்களுக்கு ஜெயத்தைக் கட்டளையிடுகிறார். கர்த்தர் தம்முடைய கிருபையையும், இரக்கத்தையும் கனம்பண்ணுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் துன்மார்க்கராயிருக்கிறார்கள். கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளை அவர்கள் மறந்துவிட்டு, கர்த்தருக்கு நன்றியில்லாதவர்களாயிருக்கிறார்கள்.

கர்த்தர் தமது கிருபையினால் இஸ்ரவேல் புத்திரருக்கு இரக்கம் காண்பிக்கிறார். அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்ப வாய்ப்பு கொடுக்கிறார். கர்த்தர் கொடுக்கும் கிருபையான வாய்ப்பை அவர்கள் பயன்படுத்தவில்லையென்றால், அவர்கள்மீது கர்த்தருடைய கோபம் வரும். இனிமேல் அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப வாய்ப்பு கிடைக்காமல் போய்விடும்.

பெனாதாத் தன் இருதயத்தில் பெருமைக்காரனாயிருக்கிறான். அவனுடைய பெருமையை அடக்கி அழிப்பதற்காக, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு யுத்தத்திலே ஜெயத்தைக் கட்டளையிடுகிறார். பெனாதாத்தின் சேனை சமாரியா நகரத்தின்மேல் சண்டை செய்ய ஆயத்தம்பண்ணினபோது, இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் கர்த்தரைத் தேடவுமில்லை. கர்த்தரை நோக்கி கூப்பிடவுமில்லை. ஆனாலும் கர்த்தர் தம்முடைய கிருபையினால், தம்முடைய தீர்க்கதரிசிகளில் ஒருவனை ஆகாபினிடத்தில் அனுப்புகிறார். கர்த்தர் கிருபையும் இரக்கமுமுள்ளவர்.

கர்த்தருடைய தீர்க்கதரிசி ஆகாபுக்கு கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறான். ஆகாப் கர்த்தரிடத்தில் விசாரியாமல், இஸ்ரவேலின் சகல மூப்பர்களிடத்திலும் விசாரித்தான். அவர்கள் ஆகாபுக்கு, "நீர் பெனாதாத்திற்கு செவிகொடுக்கவும், சம்மதிக்கவும் வேண்டாம்" (1இராஜா 20:8) என்று ஆலோசனை சொன்னார்கள். ஆனாலும், இஸ்ரவேலின் மூப்பரால், இந்த யுத்தத்திலே ஆகாபுக்கு ஜெயமுண்டாகும் என்று சொல்ல முடியவில்லை.

யுத்தம் கர்த்தருடையது. கர்த்தர் தம்முடைய ஜனத்திற்காக யுத்தம்பண்ணுகிறார். கர்த்தர் இந்த யுத்தத்தின் மூலமாக, இஸ்ரவேல் ஜனத்தார்மீது தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுகிறார். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு இந்த யுத்தத்தில் வெற்றி கிடைக்கும்போது, இஸ்ரவேலின் தேவனே கர்த்தர் என்பதை ஆகாப் அறிந்துகொள்ளவேண்டும்.

கர்த்தருடைய தீர்க்கதரிசி ஆகாபுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லும்போது, "இதோ, நானே கர்த்தர் என்று நீ அறியும்படி இன்றைக்கு அதை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (1இராஜா 20:13).

கர்த்தருடைய வார்த்தைகள் ஆகாபுக்கு சந்தோஷமாயும் ஆறுதலாயும் இருக்கிறது. ஆகாப் தீர்க்கதரிசி சொன்ன வார்த்தைகளை நம்புகிறான். கர்த்தர் பெனாதாத்தின் சேனையை ஆகாபின் கையில் ஒப்புக்கொடுப்பதாக சொல்லுகிறார். ஆனால் "யாரைக் கொண்டு" கர்த்தர் அதைத் தன் கையில் ஒப்புக்கொடுப்பார் என்று ஆகாபுக்கு தெரியவில்லை.

ஆகாப் கர்த்தருடைய தீர்க்கதரிசியிடம் தன்னுடைய மனதிலுள்ள சந்தேகங்களை தீர்த்துக்கொள்கிறார். ஆகாப் தீர்க்கதரிசியினிடத்தில், "யாரைக் கொண்டு" கர்த்தர் பெனாதாத்தின் சேனையை தன் கையில் ஒப்புக்கொடுப்பார் என்று கேட்கிறான். அதற்கு கர்த்தருடைய தீர்க்கதரிசி, "மாகாணங்களுடைய அதிபதிகளின் சேவகரைக் கொண்டு என்று கர்த்தர் சொல்லுகிறார்" (1இராஜா 20:14) என்று சொல்லுகிறான்.

பெனாதாத்தின் சேனை சமாரியா நகரத்தின்மேல் சண்டை செய்ய வரும் வரையிலும், ஆகாப் சும்மாயிருக்கக்கூடாது. சீரியரின் சேனை இஸ்ரவேலர்மீது யுத்தம்பண்ணுவதற்கு முன்பாகவே, இஸ்ரவேலர் அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணவேண்டும். சீரியர்மீது திடீரென்று பாய்ந்து தாக்குதல் நடத்தவேண்டும். சீரியருக்கு அதிர்ச்சியும், ஆச்சரியமும், குழப்பமும் உண்டுபண்ணவேண்டும்.

சீரியருக்கு விரோதமாக மாகாணங்களுடைய அதிபதிகளின் சேவகர்கள் யுத்தம்பண்ணவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்களுடைய இலக்கம் இருநூற்று முப்பத்திரண்டாயிருக்கிறது. சீரியரின் திரளான சேனையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இஸ்ரவேலருடைய சேவகரின் எண்ணிக்கை மிகவும் குறைவாகயிருக்கிறது.

மாகாணங்களுடைய அதிபதிகளின் சேவகர்கள் யுத்தசன்னத்தர்களல்ல. இவர்களுக்கு யுத்தங்களிலே பழக்கமில்லை. இவர்கள் தங்கள் அதிபதிகளுக்கு சேவை செய்கிறவர்கள். கர்த்தரோ சீரியரின் சேனைக்கு விரோதமாக மாகாணங்களுடைய அதிபதிகளின் சேவகர்கள் யுத்தம்பண்ண வேண்டுமென்று கட்டளையிடுகிறார்.

ஆகாப் கர்த்தருடைய வார்த்தையை விசுவாசிக்கிறான். ஆகாபைச் சுற்றிலும் சீரியரின் சேனை முற்றிக்கைப்போட்டிருக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் ஆகாபுக்கு கர்த்தருடைய வார்த்தைகளை நம்புவதைத் தவிர வேறு வழியுமில்லை. ஆகாப் நம்புகிற பாகால்களும் அவனோடு பேசாது. ஆகாபை ஆபத்து சூழ்ந்திருக்கிறது.

ஆகாப் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டபோது, மாகாணங்களுடைய அதிபதிகளின் சேவகரை இலக்கம் பார்க்கிறான். அவர்களுடைய இலக்கம் சொற்ப எண்ணிக்கையிலிருக்கும்போது, தன்னுடைய பக்கத்தில் வேறு யாரெல்லாம் இருக்கிறார்கள் என்றும் இலக்கம் பார்க்கிறான். ஆகாப் மாகாணங்களுடைய அதிபதிகளின் சேவகரை இலக்கம் பார்த்த பின்பு, இஸ்ரவேல் புத்திரராகிய சகல ஜனத்தின் இலக்கமும் பார்த்து ஏழாயிரம்பேர் என்று காண்கிறான் (1இராஜா 20:15).

இஸ்ரவேல் தேசத்தில் ஏராளமான ஜனங்கள் இருந்தாலும், ஏழாயிரம் பேர் மாத்திரமே, சீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆயத்தமாயிருக்கிறார்கள். இவர்கள் மாத்திரமே சமாரியா நகரத்திற்குள்ளே இருக்கிறார்கள். மற்ற இஸ்ரவேலர் எல்லோரும், இஸ்ரவேல் தேசத்தின் மற்ற பகுதிகளில் இருக்கிறார்கள்.

கர்த்தர் எலியாவிடம் பாகாலுக்கு தங்கள் முழங்கால்களை முடக்காத ஏழாயிரம்பேர் இஸ்ரவேல் தேசத்திலிருப்பதாக சொன்னார். "ஆனாலும் பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களையும், அவனை முத்தஞ்செய்யாதிருக்கிற வாய்களையுமுடைய ஏழாயிரம்பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன் என்றார்" (1இராஜா 19:18).

ஆகாப் இலக்கம் பார்த்த இஸ்ரவேல் புத்திரரின் எண்ணிக்கையும், பாகாலுக்கு தங்கள் முழங்கால்களை முடக்காதிருக்கிற இஸ்ரவேலரின் எண்ணிக்கையும் ஒன்றாயிருக்கிறது. ஆகாப் இலக்கம் பார்த்த ஏழாயிரம்பேரும், பாகால்களுக்கு தங்கள் முழங்கால்களை முடக்காதவர்கள் என்று சொல்லமுடியாது. ஆனாலும் எண்ணிக்கை ஒன்றாயிருக்கிறது.

ஆகாப் கர்த்தருடைய தீர்க்கதரிசியினிடத்தில், "யுத்தத்தை யார் துவக்கவேண்டும்" (1இராஜா 20:14) என்று கேட்கிறான். அதற்கு கர்த்தருடைய தீர்க்கதரிசி ஆகாபிடம், "நீர் தான்" என்று சொல்லுகிறான். சீரியரின் சேனை தங்கள்மீது யுத்தம்பண்ண வரும் வரையிலும் ஆகாப் காத்திருக்கக்கூடாது. ஆகாப் யுத்தத்தை துவக்கவேண்டும்.

ஆகாப் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறான். மாகாணங்களுடைய அதிபதிகளின் சேவகராகிய இருநூற்று முப்பத்திரண்டு பேரும், மத்தியானவேளையிலே சமாரியா நகரத்திற்கு வெளியே புறப்படுகிறார்கள்; பெனாதாத்தும், அவனுக்கு உதவியாக வந்த முப்பத்திரண்டு ராஜாக்களாகிய மற்ற ராஜாக்களும், கூடாரங்களில் குடித்து வெறி கொண்டிருக்கிறார்கள் (1இராஜா 20:16).

மாகாணங்களுடைய அதிபதிகளின் சேவகர் முன்தண்டாகப் புறப்படுகிறார்கள். அப்போது, பெனாதாத் அனுப்பின மனுஷர்: "சமாரியாவிலிருந்து மனுஷர் புறப்பட்டு வருகிறார்கள்" (1இராஜா 20:17) என்று அவனுக்கு அறிவிக்கிறார்கள்.

பெனாதாத் மெத்தப் பெருமைக்காரன். அவனுடைய இருதயத்தில் ஆணவமும் அகந்தையுமிருக்கிறது. இஸ்ரவேலுக்கு விரோதமான யுத்தத்திலே சீரியர்கள் எளிதாக ஜெயித்துவிடுவார்கள் என்று பெனாதாத் நிச்சயித்திருக்கிறான். இஸ்ரவேலரால் சீரியரின் சேனையை எதிர்க்க முடியாது என்று நினைத்து பெனாதாத் துணிச்சலோடிருக்கிறான். அவன் மத்தியான வேளையிலே தன் ராஜாக்களோடு, குடித்து வெறித்திருக்கிறான்.

பெனாதாத்தின் சிந்தனையில் தெளிவில்லை. அவனுடைய வார்த்தையில் சுத்தமில்லை. இஸ்ரவேலர் சமாரியாவை விட்டு வெளியே எதற்காக புறப்பட்டு வருகிறார்கள் என்று பெனாதாத்திற்கு தெரியவில்லை.

பெனதாத் தன் ஊழியக்காரரிடம், "அவர்கள் சமாதானத்திற்காகப் புறப்பட்டுவந்தாலும் அவர்களை உயிரோடே பிடியுங்கள்; அவர்கள் யுத்தத்திற்காகப் புறப்பட்டுவந்தாலும் அவர்களை உயிரோடே பிடியுங்கள்" (1இராஜா 20:18) என்று சொல்லுகிறான்.

கர்த்தர் இஸ்ரவேலின் சேனையில், மாகாணங்களுடைய அதிபதிகளை பயன்படுத்தவில்லை. ஆனாலும் சீரியருக்கு விரோதமான இந்த யுத்தத்திலே இஸ்ரவேலருக்கு ஜெயமுண்டாயிற்று. கர்த்தர் சீரியரின் சேனையை ஆகாபின் கையிலே ஒப்புக்கொடுக்கிறார்.

மாகாணங்களுடைய அதிபதிகளின் சேவகரான அவர்களும், அவர்கள் பின்னே வருகிற இராணுவமும், சமாரியா நகரத்திலிருந்து வெளியே வருகிறார்கள். அவர்கள் அவரவர் தங்களுக்கு எதிர்ப்படுகிறவர்களை வெட்டுகிறார்கள்; சீரியர் முறிந்தோடிப்போகிறார்கள்; இஸ்ரவேலர் அவர்களைத் துரத்துகிறார்கள்" (1 இராஜா 20:19,20)

சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத், குதிரையின்மேல் ஏறிச் சில குதிரைவீரரோடுங்கூடத் தப்பியோடிப்போகிறான். இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் புறப்பட்டு, குதிரைகளையும், இரதங்களையும் முறிய அடித்து, சீரியரில் மகா சங்காரம் உண்டாக வெட்டுகிறான் (1இராஜா 20:21).

சமபூமியிலே யுத்தம்
1இராஜா 20:22-30

1இராஜா 20:22. பின்பு அந்தத் தீர்க்கதரிசி இஸ்ரவேலின் ராஜாவினிடத்தில் வந்து, அவனை நோக்கி: நீர் போய் உம்மைப் பலப்படுத்திக்கொண்டு, நீர் செய்யத்தக்கது இன்னதென்று கவனித்துப்பாரும்; மறுவருஷத்திலே சீரியாவின் ராஜா உமக்கு விரோதமாக வருவான் என்றான்.

1இராஜா 20:23. சீரியாவின் ராஜாவுடைய ஊழியக்காரர் அவனைப் பார்த்து: அவர்களுடைய தேவர்கள் மலைத்தேவர்கள், அதினால் அவர்கள் நம்மை மேற்கொண்டார்கள்; நாம் அவர்களோடே சமபூமியிலே யுத்தம்பண்ணினால் நல்லது; அப்பொழுது அவர்களை மேற்கொள்வது நிச்சயம்.

1இராஜா 20:24. அதற்காக நீர் செய்யவேண்டியது என்னவென்றால், இந்த ராஜாக்கள் ஒவ்வொருவரையும் தங்கள் ஸ்தலத்திலிருந்து மாற்றி, அவர்களுக்குப் பதிலாகச் சேனாபதிகளை ஏற்படுத்தி;

1இராஜா 20:25. நீர் மடியக்கொடுத்த சேனைக்குச் சரியாய்ச் சேனையையும், அந்தக் குதிரைகளுக்குச் சரியாய்க் குதிரைகளையும், இரதங்களுக்குச் சரியாய் இரதங்களையும் இலக்கம் பார்த்துக்கொள்ளும்; பிற்பாடு சமபூமியிலே நாம் அவர்களோடு யுத்தம்பண்ணி, நிச்சயமாய் அவர்களை மேற்கொள்வோம் என்றார்கள்; அவன் அவர்கள் சொற்கேட்டு அப்படியே செய்தான்.

1இராஜா 20:26. மறுவருஷத்திலே பெனாதாத் சீரியரை இலக்கம்பார்த்து, இஸ்ரவேலோடு யுத்தம்பண்ண ஆப்பெக்குக்கு வந்தான்.

1இராஜா 20:27. இஸ்ரவேல் புத்திரரும் இலக்கம் பார்க்கப்பட்டு, தேவையானதைச் சம்பாதித்துக்கொண்டு, அவர்களை எதிர்க்கப்புறப்பட்டு, அவர்களுக்கு எதிரே இரண்டு சிறிய வெள்ளாட்டுக் கிடைகளைப்போலப் பாளயமிறங்கினார்கள்; தேசம் சீரியரால் நிறைந்திருந்தது.

1இராஜா 20:28. அப்பொழுது தேவனுடைய மனுஷன் ஒருவன் வந்து, இஸ்ரவேலின் ராஜாவைப் பார்த்து: கர்த்தர் பள்ளத்தாக்குகளின் தேவனாயிராமல், மலைகளின் தேவனாயிருக்கிறார் என்று சீரியர் சொல்லியிருக்கிறபடியினால், நான் இந்த ஏராளமான ஜனக்கூட்டத்தையெல்லாம் உன் கையில் ஒப்புக்கொடுத்தேன்; அதினால் நானே கர்த்தர் என்று நீங்கள் அறிவீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

1இராஜா 20:29. ஏழுநாளளவும் அவர்கள் முகமுகமாய்ப் பாளயமிறங்கியிருந்தார்கள்; ஏழாம் நாளில் யுத்தம் கலந்து, இஸ்ரவேல் புத்திரர் ஒரேநாளிலே சீரியரில் லட்சம் காலாட்களை மடங்கடித்தார்கள்.

1இராஜா 20:30. மீதியானவர்கள் ஆப்பெக்பட்டணத்திற்குள் ஓடிப்போனார்கள்; அங்கே மீதியாயிருந்த இருபத்தேழாயிரம் பேரின் மேல் அலங்கம் இடிந்து விழுந்தது; பெனாதாத்தும் ஓடிப்போய் நகரத்திற்குள் புகுந்து, உள்ளறையிலே பதுங்கினான்.

இஸ்ரவேல் தேசத்தாருக்கும், சீரிய தேசத்தாருக்கும் இடையே மேலும் ஒரு யுத்தமுண்டாயிற்று. தேவனுடைய தெய்வீக உதவியினால், ஆகாப் இந்த யுத்தத்திலும் சீரியர்மீது வெற்றி பெறுகிறான். இதற்கு முந்தின யுத்தத்தில் சீரியருக்கு ஏற்பட்ட அழிவைவிட, இந்த இரண்டாவது யுத்தத்தில் சீரியருக்கு பேரழிவு உண்டாயிற்று.

ஆகாப் விக்கிரகாராதனைக்காரனாகயிருந்தாலும், அவனுக்கு யுத்தத்திலே ஜெயமுண்டாயிற்று. அவன் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை உபத்திரவப்படுத்துகிறவனாயிருந்தாலும், சீரியருக்கு விரோதமான யுத்தத்திலே ஆகாப் ஜெயம்பெறுகிறான்.

கர்த்தர் சர்வஞானமுள்ளவர். சகலமும் கர்த்தருடைய சித்தத்தின்படியே நடைபெறும். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது. இந்தப் பிரபஞ்சத்தில் துன்மார்க்கர் செழித்திருக்கிறார்கள். நீதிமான்களோ பாடுகளை அனுபவிக்கிறார்கள். ஆனாலும் எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு உண்டு. அது கர்த்தருடைய பரிசுத்தமான முடிவு. முடிவிலே துன்மார்க்கர் பாடுகளை அனுபவிப்பார்கள். நீதிமான்களோ நன்மைகளைப் பெற்றுக்கொள்வார்கள். இதுவே கர்த்தருடைய மாறாத பிரமாணம்.

சீரியருக்கு விரோதமான முதலாவது யுத்தத்தில், ஒரு தீர்க்கதரிசி ஆகாபிடத்தில் வந்து, அவனுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொன்னான். அதே தீர்க்கதரிசி இப்போது மறுபடியும் இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபினிடத்தில் வருகிறான். அவன் ஆகாபை நோக்கி, "நீர் போய் உம்மைப் பலப்படுத்திக்கொண்டு, நீர் செய்யத்தக்கது இன்னதென்று கவனித்துப்பாரும்; மறுவருஷத்திலே சீரியாவின் ராஜா உமக்கு விரோதமாக வருவான்" (1இராஜா 20:22) என்று சொல்லுகிறான்.

சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் ஆகாபுக்கு விரோதமாக மறுபடியும் யுத்தம்பண்ண வருவான். இது ஆகாபுக்கு நல்ல செய்தியல்ல. பெனாதாத் முதலாவது யுத்தத்தில் தன் மகிமையையும், மேன்மையையும் இழந்துபோனான். தான் இழந்துபோனதை திரும்பப் பெற்றுக்கொள்வதற்காகவும், தனக்கு ஏற்பட்ட இழப்புகளுக்காக ஆகாபைப் பழிவாங்குவதற்காகவும், பெனாதாத் மறுவருஷத்தில் இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருவான்.

முதலாவது யுத்தத்தின்போது இஸ்ரவேலின் மாகாணங்களுடைய அதிபதிகளில் சேவகர்கள், தங்களுக்கு எதிர்ப்பட்ட சீரியரை வெட்டிப்போட்டார்கள். இஸ்ரவேல் ராஜாவும் சீரியரின் குதிரைகளையும் இரதங்களையும் முறியடித்தான். ஆகாப் சீரியரில் மகாசங்காரம் உண்டாக வெட்டினான். பெனாதாத் தனக்கு கொடுக்கப்பட்ட அடிகளை, ஆகாபுக்கு திரும்பக் கொடுக்க வேண்டுமென்று தீர்மானமாயிருக்கிறான்.

பெனாதாத் நம்முடைய சத்துருவாகிய பிசாசைப்போல இருக்கிறான். நம்முடைய ஆவிக்குரிய சத்துருக்களை நாம் மேற்கொண்டாலும், அவர்கள் மறுபடியும் நம்மைத் தாக்குவதற்கு ஆயத்தமாயிருப்பார்கள். பிசாசுகளைத் துரத்தினாலும் அவை திரும்பவும் வருவதற்கு முயற்சி பண்ணும்.

சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் ஆகாபுக்கு விரோதமாக மறுபடியும் யுத்தம்பண்ண வருவான். அப்போது ஆகாப் என்ன செய்யவேண்டும் என்று தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறான். தீர்க்கதரிசி ஆகாபைப் பார்த்து, "நீர் போய் உம்மைப் பலப்படுத்திக்கொண்டு, நீர் செய்யத்தக்கது இன்னதென்று கவனித்துப்பாரும்" என்று சொல்லுகிறான்.

கர்த்தருடைய தீர்க்கதரிசி இங்கே ஆகாபுக்கு சொல்லுகிற ஆலோசனை, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு உதவியாக நமக்கும் சொல்லப்படுகிறது. நாமும் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நம்மைப் பலப்படுத்திக்கொண்டு, சத்துருவுக்கு விரோதமாக நாம் செய்யத்தக்கது இன்னதென்று கவனித்துப் பார்க்கவேண்டும்.

சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத்திற்கு அவனுடைய ஊழியக்காரர்கள் ஆலோசனை சொல்லுகிறார்கள். அவர்கள் பெனாதாத்தை நோக்கி, "அவர்களுடைய தேவர்கள் மலைத்தேவர்கள், அதினால் அவர்கள் நம்மை மேற்கொண்டார்கள்; நாம் அவர்களோடே சமபூமியிலே யுத்தம்பண்ணினால் நல்லது; அப்பொழுது அவர்களை மேற்கொள்வது நிச்சயம்" (1இராஜா 20:23) என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேலருக்கு விரோதமாக பெனாதாத் இரண்டாம் முறையாக யுத்தம்பண்ணும்போது, அவன் என்ன செய்யவேண்டும் என்றும் அவனுடைய ஊழியக்காரர்கள் அவனுக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள்.

பெனாதாத்தின் ஊழியக்காரர் அவனைப் பார்த்து, "அதற்காக நீர் செய்யவேண்டியது என்னவென்றால், இந்த ராஜாக்கள் ஒவ்வொருவரையும் தங்கள் ஸ்தலத்திலிருந்து மாற்றி, அவர்களுக்குப் பதிலாகச் சேனாபதிகளை ஏற்படுத்திக்கொள்ளும்" (1இராஜா 20:24) என்றும்,

"நீர் மடியக்கொடுத்த சேனைக்குச் சரியாய்ச் சேனையையும், அந்தக் குதிரைகளுக்குச் சரியாய்க் குதிரைகளையும், இரதங்களுக்குச் சரியாய் இரதங்களையும் இலக்கம்பார்த்துக்கொள்ளும்" (1இராஜா 20:25) என்றும் சொல்லுகிறார்கள்.

"பிற்பாடு சமபூமியிலே நாம் அவர்களோடு யுத்தம்பண்ணி, நிச்சயமாய் அவர்களை மேற்கொள்வோம்" (1இராஜா 20:25) என்றும் பெனதாத்தின் ஊழியக்காரர் அவனுக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள்; பெனாதாத்தும் அவர்கள் சொற்கேட்டு அப்படியே செய்கிறான்.

பெனதாத்தின் ஊழியக்காரர் யுத்தக்களத்தை மாற்றுமாறு சொல்லுகிறார்கள். மலைத்தேசத்தில் யுத்தம்பண்ணாமல், சமபூமியிலே யுத்தம்பண்ணவேண்டுமென்று அவர்கள் பெனாதாத்திற்கு ஆலோசனை சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேலருக்கு விரோதமாக நடைபெற்ற முதலாவது யுத்தத்திலே சீரியருக்கு தோல்வி உண்டாயிற்று. சீரியருக்கு இஸ்ரவேலரால் தோல்வி உண்டாகவில்லை என்றும், இஸ்ரவேலருடைய தேவர்களால் தோல்வி உண்டாயிற்று என்றும் பெனாதாத்தின் ஊழியக்காரர்கள் சொல்லுகிறார்கள்.

பெனாதாத்தின் ஊழியக்காரருக்கு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப்பற்றி சரியாகத் தெரியவில்லை. இஸ்ரவேலருக்கு தேவர்கள் இல்லை. அவர்களுக்கு கர்த்தர் ஒருவர் மாத்திரமே தேவனாயிருக்கிறார். அவர் கர்த்தாதி கர்த்தாவாகவும், ராஜாதி ராஜாவாகவும் இருக்கிறார்.

இஸ்ரவேலரின் தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேலுக்கும் தேவனாயிருக்கிறார். அவர் சர்வலோகத்திற்கும் தேவனாயிருக்கிறார். கர்த்தரே சர்வலோகத்தையும், சர்வசிருஷ்டிகளையும் சிருஷ்டித்தவர். கர்த்தரே மலைத்தேசத்தையும், சமபூமியையும் உண்டாக்கினவர்.

பெனாதாத்தின் ஊழியக்காரர் இஸ்ரவேலின் தேவனைப்பற்றிச் சொல்லும்போது, "அவர்களுடைய தேவர்கள் மலைத்தேவர்கள்" என்று சொல்லுகிறார்கள். அவர்கள் இவ்வாறு சொல்லும்போது, "இஸ்ரவேலருடைய தேவர்கள் சமபூமிக்கு தேவர்களல்ல" என்று பொருள்படுமாறு சொல்லுகிறார்கள்.

கர்த்தர் பள்ளத்தாக்குகளின் தேவனாயிராமல், மலைகளின் தேவனாயிருக்கிறார் என்று சீரியர் சொல்லுகிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரோ, பள்ளத்தாக்குகளுக்கும் தேவனாயிருக்கிறார். மலைகளுக்கும் தேவனாயிருக்கிறார்.

சீரியர்கள் இஸ்ரவேல் புத்திரரோடே சமபூமியிலே யுத்தம்பண்ணவேண்டுமென்றும், அப்பொழுது சீரியர்களால் இஸ்ரவேலரை நிச்சயமாய் மேற்கொள்ளலாம் என்றும் பெனாதாத்தின் ஊழியக்காரர்கள் சொல்லுகிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் பள்ளத்தாக்குகளின் தேவனாயிராமல், மலைகளின் தேவனாயிருக்கிறார் என்று சீரியர்கள் நினைக்கிறார்கள். ஆகையினால் யுத்தம்பண்ணும் களத்தை மாற்றவேண்டும் என்பது பெனாதாத்துடைய ஊழியக்காரரின் ஆலோசனை.

சீரியர்கள் இஸ்ரவேலரோடே மலைகளில் யுத்தம்பண்ணாமல், சமபூமியில் யுத்தம்பண்ணவேண்டும் என்றும், அதுவே தங்களுக்கு நல்லது என்றும், அப்பொழுது தங்களால் இஸ்ரவேலரை நிச்சயமாய் மேற்கொள்ளலாம் என்றும் பெனாதாத்தின் ஊழியக்காரர் அவனுக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள்.

பெனாதாத் யுத்தக்களத்தை மாற்றுவதோடு, சேனைகளின் தளபதிகளையும் மாற்றவேண்டுமென்று, அவனுடைய ஊழியக்காரர் அவனுக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள். பெனாதாத்திற்கு கீழே முப்பத்திரண்டு ராஜாக்கள் இருக்கிறார்கள். இந்த ராஜாக்களே அவர்களுடைய சேனைகளுக்கு தளபதிகளாயிருக்கிறார்கள். இந்த ராஜாக்கள் எல்லோரும் பிறப்பினால் ராஜாவானவர்கள். இவர்களுக்கு யுத்தம்பண்ணத் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும், இவர்களே சேனைகளுக்கு தளபதிகளாயிருப்பார்கள்.

சீரியருக்கும் இஸ்ரவேலருக்கும் நடைபெற்ற முதலாவது யுத்தத்தில், மாகாணங்களுடைய அதிபதிகளின் சேவகர்கள், மத்தியான வேளையிலே, சமாரியா நகரத்திலிருந்து வெளியே புறப்பட்டபோது, பெனாதாத்தும், அவனுக்கு உதவியாக வந்த முப்பத்திரண்டு ராஜாக்களாகிய மற்ற ராஜாக்களும், கூடாரங்களில் குடித்து வெறித்துக் கொண்டிருந்தார்கள் (1இராஜா 20:16). இந்த ராஜாக்கள் யுத்தம்பண்ணுவதற்கு ஆயத்தமாயில்லை.

ஆகையினால் பெனாதாத் இந்த முப்பத்திரண்டு ராஜாக்கள் ஒவ்வொருவரையும் தங்கள் ஸ்தானத்திலிருந்து மாற்றி, அவர்களுக்கு பதிலாக சேனாபதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று, அவனுடைய ஊழியக்காரர் அவனுக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள். இந்த சேனாபதிகள் யுத்தவீரர்களாயும், யுத்தவியூகங்களை அறிந்தவர்களாயும் இருப்பார்கள்.

முதலாவது யுத்தத்திலே சீரியருடைய சேனையில் அநேகர் சங்காரமானார்கள். பெனாதாத் அந்த யுத்தத்திலே தன்னுடைய குதிரைகளையும் இரதங்களையும் இழந்தான். தான் இழந்துபோனதையெல்லாம் அவன் திரும்பவும் உண்டுபண்ணவேண்டும். அதன் பிற்பாடு சீரியர்கள் சமபூமியிலே இஸ்ரவேலரோடு யுத்தம்பண்ணவேண்டும் என்று பெனாதாத்தின் ஊழியக்காரர் அவனுக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள்.

சீரியரின் சேனையும், இஸ்ரவேலரின் சேனையும் ஒருவருக்கு விரோதமாக ஒருவர் யுத்தம்பண்ண ஆயத்தமாயிருக்கிறார்கள். மறுவருஷத்திலே பெனாதாத் சீரியரை இலக்கம்பார்த்து, இஸ்ரவேலோடு யுத்தம்பண்ண ஆப்பெக்குக்கு வருகிறான். இஸ்ரவேல் புத்திரரும் இலக்கம் பார்க்கப்பட்டு, தேவையானதைச் சம்பாதித்துக்கொண்டு, அவர்களை எதிர்க்கப்புறப்பட்டு, அவர்களுக்கு எதிரே இரண்டு சிறிய வெள்ளாட்டுக் கிடைகளைப்போலப் பாளயமிறங்குகிறார்கள்; தேசம் சீரியரால் நிறைந்திருக்கிறது (1இராஜா 20:26,27)

சீரியரின் சேனைக்கும் இஸ்ரவேலரின் சேனைக்கும் அதிக வித்தியாசமிருக்கிறது. இஸ்ரவேலரின் சேனையில் இரண்டு படைப்பிரிவுகள் மாத்திரமே இருக்கிறது. சீரியரின் சேனைக்கு முன்பாக, இஸ்ரவேலரின் சேனை இரண்டு சிறிய வெள்ளாட்டுக்கிடைகளைப்போல இருக்கிறது. இஸ்ரவேலருடைய சேனையின் எண்ணிக்கையும் குறைவாகயிருக்கிறது. அவர்கள் வெள்ளாட்டுக்கடாக்களைப்போல பலவீனமாயிருக்கிறார்கள். சீரியரின் சேனையோ தேசம் முழுவதும் நிரம்பியிருக்கிறது. அவர்களுடைய பெருந்தொனியும் கெம்பீரமாயிருக்கிறது. அவர்களுக்கு திரளான குதிரைகளும், இரதங்களும் இருக்கிறது.

தேவனுடைய மனுஷன் மூலமாக ஆகாபுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. சீரியரின் சேனை திரளாகயிருந்தாலும், ஆகாப் அவர்களுக்கு விரோதமாக பயப்படாமல் யுத்தம்பண்ண வேண்டும். கர்த்தர் சீரியர்மீது ஆகாபுக்கு ஜெயத்தைக் கட்டளையிடுவார். உற்சாகமான செய்தியை சொல்லுவதற்காக தேவனுடைய மனுஷன் ஒருவன் ஆகாபினிடத்தில் அனுப்பப்பட்டிருக்கிறான்.

அப்பொழுது தேவனுடைய மனுஷன் ஒருவன் வந்து, இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபைப் பார்த்து: "கர்த்தர் பள்ளத்தாக்குகளின் தேவனாயிராமல், மலைகளின் தேவனாயிருக்கிறார் என்று சீரியர் சொல்லியிருக்கிறபடியினால், நான் இந்த ஏராளமான ஜனக்கூட்டத்தையெல்லாம் உன் கையில் ஒப்புக்கொடுத்தேன்; அதினால் நானே கர்த்தர் என்று நீங்கள் அறிவீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (1இராஜா 20:28) என்று சொல்லுகிறான்.

கர்த்தர் ஆகாபின் நிமித்தமாக சீரியரின் ஏராளமான ஜனக்கூட்டத்தை, அவனுடைய கையில் ஒப்புக்கொடுக்கமாட்டார். கர்த்தர் சீரியரை இஸ்ரவேலரின் கையில் ஒப்புக்கொடுப்பதினால், இஸ்ரவேலர் கர்த்தரை அறிந்துகொள்ளவேண்டும். "அதினால் நானே கர்த்தர் என்று நீங்கள் அறிவீர்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய இவ்வளவு பெரிதான கிருபையையும் இரக்கத்தையும் பெறுவதற்கு ஆகாபினிடத்தில் எந்த தகுதியுமில்லை. ஆனாலும் கர்த்தர் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தும் வண்ணமாக, இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தம்மை வெளிப்படுத்தும் வண்ணமாக, கர்த்தர் ஆகாபுக்கு இந்த அற்புதத்தை செய்கிறார். கர்த்தர் தம்முடைய நாமத்தினிமித்தமாகவே, சீரியரின் ஏராளமான ஜனக்கூட்டத்தை ஆகாபின் கையில் ஒப்புக்கொடுக்கிறார்.

ஏழுநாளளவும் சீரியரும் இஸ்ரவேலரும் முகமுகமாய்ப் பாளயமிறங்கியிருக்கிறார்கள்; ஏழாம் நாளில் யுத்தம் கலக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் ஒரேநாளிலே சீரியரில் லட்சம் காலாட்களை மடங்கடிக்கிறார்கள் (1இராஜா 20:29).

ஆப்பெக் பட்டணம் தனக்கு பாதுகாப்பாயிருக்குமென்று பெனாதாத் நினைக்கிறான். ஆனால் அந்தப் பட்டணம் அவனைப் பாதுகாக்கவில்லை. இஸ்ரவேல் புத்திரர் சீரியரில் ஒரே நாளில் லட்சம் காலாட்களை மடங்கடித்தபோது, சீரியரில் மீதியானவர்கள் ஆப்பெக்பட்டணத்திற்குள் ஓடிப்போகிறார்கள்; அங்கே மீதியாயிருந்த இருபத்தேழாயிரம்பேரின் மேல் அலங்கம் இடிந்து விழுகிறது; பெனாதாத்தும் ஓடிப்போய் ஆப்பெக் நகரத்திற்குள் புகுந்து, உள்ளறையிலே பதுங்குகிறான் (1இராஜா 20:30).

பெனாதாத் உள்ளறையிலே பதுங்கவில்லையென்றால் இஸ்ரவேல் புத்திரர் அவனைப் பிடித்து கைதுபண்ணிவிடுவார்கள். ஆனால் பெனாதாத்தோ இஸ்ரவேலரின் கைக்கு தப்பித்து, பதுங்கி தன்னை ஒளித்துக்கொள்கிறான். பெனாதாத் தன்னுடைய திரளான சேனையை நம்பினான். அவன் திரளான எண்ணிக்கையுள்ள குதிரைகளையும் இரதங்களையும் நம்பினான். ஆனால் அவை அவனுக்கு உதவி செய்யவில்லை. அவனுடைய நம்பிக்கை வீணாய்ப்போயிற்று. வீரமாகப் பேசினவன், இப்போது ஒரு கோழையைப்போல ஆப்பெக் நகரத்திலுள்ள ஒரு உள்ளறையிலே, தன் ஜீவனுக்குப் பயந்து பதுங்கியிருக்கிறான்.

ஆகாபுக்கும் பெனாதாத்துக்கும் உடன்படிக்கை 1இராஜா 20:31-43

1இராஜா 20:31. அப்பொழுது அவன் ஊழியக்காரர் அவனை நோக்கி: இதோ, இஸ்ரவேல் வம்சத்து ராஜாக்கள் தயவுள்ள ராஜாக்கள் என்று கேட்டிருக்கிறோம்; நாங்கள் இரட்டுகளை எங்கள் அரைகளில் கட்டி, கயிறுகளை எங்கள் தலைகளில் சுற்றிக்கொண்டு, இஸ்ரவேலின் ராஜாவினிடத்தில் போவோம்; ஒருவேளை உம்மை உயிரோடே வைப்பார் என்று சொல்லி,

1இராஜா 20:32. இரட்டைத் தங்கள் அரைகளில் கட்டி, கயிறுகளைத் தங்கள் தலைகளில் சுற்றிக்கொண்டு, இஸ்ரவேலின் ராஜாவினிடத்தில் வந்து: என்னை உயிரோடே வையும் என்று உமது அடியானாகிய பெனாதாத் விண்ணப்பம்பண்ணுகிறான் என்றார்கள். அதற்கு அவன், இன்னும் அவன் உயிரோடே இருக்கிறானா, அவன் என் சகோதரன் என்றான்.

1இராஜா 20:33. அந்த மனுஷர் நன்றாய்க் கவனித்து, அவன் வாயின் சொல்லை உடனே பிடித்து: உமது சகோதரனாகிய பெனாதாத் இருக்கிறான் என்றார்கள்; அப்பொழுது அவன்: நீங்கள் போய், அவனை அழைத்துக் கொண்டுவாருங்கள் என்றான்; பெனாதாத் அவனிடத்தில் வந்தபோது, அவனைத் தன் இரதத்தில் ஏற்றிக்கொண்டான்.

1இராஜா 20:34. அப்பொழுது பெனாதாத் இவனைப் பார்த்து: என் தகப்பன் உம்முடைய தகப்பனார் கையிலே பிடித்த பட்டணங்களைத் திரும்பக் கொடுத்துவிடுகிறேன்; என் தகப்பன் சமாரியாவிலே செய்ததுபோல, நீரும் தமஸ்குவிலே வீதிகளை உண்டாக்கிக்கொள்ளலாம் என்றான். அதற்கு அவன், இந்த உடன்படிக்கை செய்து நான் உம்மை அனுப்பிவிடுகிறேன் என்று சொல்லி, அவனோடு உடன்படிக்கைபண்ணி அவனை அனுப்பிவிட்டான்.

1இராஜா 20:35. அப்பொழுது தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவன் கர்த்தருடைய வார்த்தையின்படி தன் தோழனை நோக்கி: நீ என்னை அடி என்றான்; அந்த மனுஷன் அவனைப்பார்த்து அடிக்கமாட்டேன் என்றான்.

1இராஜா 20:36. அப்பொழுது அவன் இவனைப் பார்த்து: நீ கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படியாமற்போனபடியால், இதோ, நீ என்னைவிட்டுப் புறப்பட்டுப் போனவுடனே ஒரு சிங்கம் உன்னைக் கொல்லும் என்றான்; அப்படியே இவன் அவனை விட்டுப் புறப்பட்டவுடனே, ஒரு சிங்கம் இவனைக் கண்டு கொன்றுபோட்டது.

1இராஜா 20:37. அதின்பின் அவன் வேறொருவனைக் கண்டு: என்னை அடி என்றான்; அந்த மனுஷன், அவனைக் காயமுண்டாக அடித்தான்.

1இராஜா 20:38. அப்பொழுது அந்தத் தீர்க்கதரிசி போய், தன் முகத்தின்மேல் சாம்பலைப் போட்டு, வேஷமாறினவனாய் வழியிலே ராஜாவுக்காகக் காத்திருந்தான்.

1இராஜா 20:39. ராஜா அவ்வழியாய் வருகிறபோது, இவன் ராஜாவைப்பார்த்துக் கூப்பிட்டு: உமது அடியான் யுத்தத்தில் நின்றபோது, ஒருவன் விலகி, என்னிடத்தில் ஒருவனைக் கொண்டுவந்து, இந்த மனுஷனைப் பத்திரம்பண்ணு; இவன் தப்பிப்போனால், உன் பிராணன் அவன் பிராணனுக்கு ஈடாயிருக்கும், அல்லது ஒரு தாலந்து வெள்ளியை நீ கொடுக்கவேண்டும் என்றான்.

1இராஜா 20:40. ஆனாலும் உமது அடியான் இங்கும் அங்கும் அலுவலாயிருக்கும்போது, அவன் போய்விட்டான் என்றான். இஸ்ரவேலின் ராஜா அவனைப் பார்த்து: நீ சொன்ன தீர்ப்பின்படியே ஆகும் என்றான்.

1இராஜா 20:41. அப்பொழுது அவன் சீக்கிரமாய்த் தன் முகத்தின்மேலிருக்கும் சாம்பலைத் துடைத்துவிட்டதினால், இஸ்ரவேலின் ராஜா அவன் தீர்க்கதரிசிகளில் ஒருவன் என்று அறிந்துகொண்டான்.

1இராஜா 20:42. அப்பொழுது இவன் அவனை நோக்கி: சங்காரத்திற்கு நான் நியமித்த மனுஷனை உன் கையிலிருந்து தப்பிப்போகும்படி நீ விட்டபடியினால், உன் பிராணன் அவன் பிராணனுக்கு ஈடாகவும், உன் ஜனம் அவன் ஜனத்திற்கு ஈடாகவும் இருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

1இராஜா 20:43. அதினால் இஸ்ரவேலின் ராஜா சலிப்பும் விசனமுமாய்த் தன் வீட்டிற்குப் போகப் புறப்பட்டுச் சமாரியாவுக்கு வந்தான்.

சீரியருடைய சேனைக்கு விரோதமாக நடைபெற்ற யுத்தத்திலே இஸ்ரவேலருக்கு ஜெயமுண்டாயிற்று. இந்த ஜெயம் கர்த்தருடைய சித்தத்தினால் உண்டாயிற்று. இஸ்ரவேல் ஜனத்தார் தம்மை கர்த்தர் என்று அறிந்துகொள்வதற்காக, அவர் சீரியரின் சேனையை இஸ்ரவேலரின் கையிலே ஒப்புக்கொடுக்கிறார். இந்த யுத்தத்தில் பெனாதாத் தோற்று ஓடிப்போகிறான். அவன் ஒரு கோழையைப்போல ஆப்பெக் நகரத்திலுள்ள உள்ள ஒரு உள்ளறையில் பதுங்கி ஒளிந்துகொள்கிறான்.

பெனாதாத்தோடு கூடயிருக்கிற அவனுடைய ஊழியக்காரர்கள் அவனுக்காக பரிதாபப்படுகிறார்கள். பெனாதாத்தின் உயிரைக் காப்பாற்றுவதற்கு அவர்கள் முயற்சி பண்ணுகிறார்கள். இஸ்ரவேலரின் ராஜாவாகிய ஆகாபிடம் சரணடைவதை தவிர வேறு வழி எதுவும் அவர்களுக்கு தெரியவில்லை.

பெனதாத்தின் ஊழியக்காரர் அவனை நோக்கி, "இதோ, இஸ்ரவேல் வம்சத்து ராஜாக்கள் தயவுள்ள ராஜாக்கள் என்று கேட்டிருக்கிறோம்; நாங்கள் இரட்டுகளை எங்கள் அரைகளில் கட்டி, கயிறுகளை எங்கள் தலைகளில் சுற்றிக்கொண்டு, இஸ்ரவேலின் ராஜாவினிடத்தில் போவோம்; ஒருவேளை உம்மை உயிரோடே வைப்பார்" (1இராஜா 20:31) என்று சொல்லுகிறார்கள்.

பெனதாத்தின் ஊழியக்காரர் ஆகாபினிடத்தில் சரணடையவேண்டுமென்று தீர்மானிக்கிறார்கள். அவர்கள் தங்களை கைதிகளாகவும், இரக்கத்திற்காக கெஞ்சுகிறவர்களாகவும் ஆகாபுக்கு முன்பாக காண்பிக்கவேண்டும் என்று தீர்மானிக்கிறார்கள். ஆகாப் தங்களை உயிரோடே வைப்பானா என்னும் நிச்சயமும் அவர்களிடத்தில் இல்லை. ஆனாலும் அவர்கள் இந்த யோசனையை செயல்படுத்த முயற்சி பண்ணுகிறார்கள்.

பெனாதாத்தின் ஊழியக்காரர், தங்கள் ராஜாவாகிய பெனாதாத்தை ஆகாபினிடத்தில் முதலாவதாக அனுப்பாமல், தாங்களே ஆகாபினிடத்தில் முதலாவதாகப் ஆகாபின் மூலமாக ஜீவசேதாரம் வந்தால், அது முதலாவதாக தங்களுக்கு வரட்டும் என்று தீர்மானித்து, பெனாதாத்தின் ஊழியக்காரர் ஆகாபை சந்திக்கப்போகிறார்கள்.

சீரியர்கள் இஸ்ரவேல் வம்சத்து ராஜாக்களைப்பற்றியும், இஸ்ரவேலின் தேவனைப்பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறார்கள். இஸ்ரவேலின் தேவன் தயவும் இரக்கமுமுள்ளவர். அவரைப்போலவே, இஸ்ரவேல் வம்சத்து ராஜாக்களும் தயவுள்ளவர்கள் என்று சீரியர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்து ராஜாக்கள், தங்கள் தேவனாகிய கர்த்தரின் சுபாவத்தைப் பெற்றிருப்பார்கள் என்பது சீரியரின் நம்பிக்கை. ஆனால் ஆகாபோ, இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருந்தாலும், அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைவிட்டு வழிவிலகிப்போய்விட்டான்.

பெனாதாத்தின் ஊழியக்காரர், இஸ்ரவேலின் தேவனைப்பற்றி நம்புவது, பாவிகளாகிய எல்லோருக்கும் ஆறுதலாயிருக்கிறது. பாவிகள் தங்களுடைய பாவங்களை மறைக்கக்கூடாது. அவற்றை அறிக்கை செய்து விட்டுவிடவேண்டும். பாவிகள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி கர்த்தரிடத்தில் வரும்போது, அவர்கள் கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்வார்கள். கர்த்தர் தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையளிக்கிறார். பெருமையுள்ளவர்களுக்கோ எதிர்த்து நிற்கிறார்.

நாம் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக வரும்போது, அவருடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்ளும் வண்ணமாக, மிகுந்த பணிவோடும், மனத்தாழ்மையோடும் வரவேண்டும். நம்முடைய இருதயங்கள் கர்த்தரிடத்தில் திரும்பியிருக்கவேண்டும்.

"நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும், மனஉருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார்" (யோவே 2:13).

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் கிருபையும், இரக்கமும், நம்முடைய பாவங்களுக்கு மன்னிப்பும் உண்டு. பெனாதாத்தின் ஊழியக்காரர், ஆகாபினிடத்தில் போவதற்கு முன்பாக, தாங்கள் அவனிடத்தில் எவ்வாறு போகவேண்டும் என்றும், எப்படி பேசவேண்டும் என்றும் தங்களுக்குள்ளே தீர்மானித்திருக்கிறார்கள்.

தங்களுடைய ராஜாவாகிய பெனாதாத் தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்பியிருக்கிறான் என்பதை, அவனுடைய ஊழியக்காரர் ஆகாபுக்கு காண்பிக்க விரும்புகிறார்கள். இதற்காக அவர்கள் இரட்டை தங்கள் அரைகளில் கட்டி, கயிறுகளை தங்கள் தலைகளில் சுற்றிக்கொண்டு ஆகாபினிடத்தில் வருகிறார்கள். இரட்டை தங்கள் அரைகளில் கட்டுவது துக்கத்திற்கு அடையாளம். கயிறுகளை தங்கள் தலைகளில் சுற்றிக்கொள்வது, மரணதண்டனை பெறப்போகிற குற்றவாளிகளுக்கு அடையாளம்.

பெனாதாத்தின் ஊழியக்காரரிடத்தில், மனந்திரும்பியதற்கும், பணிவுக்கும் அடையாளம் மாத்திரமே இருக்கிறது. ஆனால் பெனாதாத் உண்மையிலேயே தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. அவன் மனந்திரும்பதுபோல மாய்மாலம்பண்ணுகிறான். ஆகாபின் இரக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்காக பெனாதாத்தும், அவனுடைய வேலைக்காரரும் வேஷம்போடுகிறார்கள்.

இக்காலத்திலும் அநேகர், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக பக்தியின் வேஷத்தை தரித்துக்கொள்கிறார்கள். தாங்கள் செய்த பாவங்களுக்கு மனந்திரும்புவதுபோல மாய்மாலம் பண்ணுகிறார்கள். தங்களுடைய வேஷமும் மாய்மாலமும் சித்திக்கவில்லையென்றால், இப்படிப்பட்ட மாய்மாலக்காரர்கள் தங்கள் பாவத்திலேயே நீடித்து நிலைத்திருப்பார்கள். தங்கள் பாவத்தின் மூலமாய் உலகப்பிரகாரமான ஆதாயத்தை சம்பாதிக்க முயற்சி பண்ணுவார்கள். தங்களுடைய பாவங்களை தாங்களே நியாயப்படுத்திக்கொண்டு, அதிலே பெருமைப்படுவார்கள்.

பெனாதாத் ஒரு பிச்சைக்காரனைப்போல இங்கே வர்ணிக்கப்படுகிறான். அவன் ஆகாபிடம் தன்னுடைய ஜீவனை பிச்சையாகக் கேட்கிறான். பெனாதாத்திற்கு பதிலாக, அவனுடைய ஊழியக்காரர் ஆகாபிடம் பரிந்து பேசுகிறார்கள். அவர்கள் ஆகாபினிடத்தில், "என்னை உயிரோடே வையும் என்று உமது அடியானாகிய பெனாதாத் விண்ணப்பம்பண்ணுகிறான்" (1இராஜா 20:32) என்று சொல்லுகிறார்கள்.

பெனாதாத்தின் ஜீவியத்தில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அவன் உயர்ந்த ஸ்தானத்திலிருந்து தாழ்ந்த ஸ்தானத்திற்கு வந்திருக்கிறான். அவன் இதற்கு முன்பு அதிகாரத்தின் உச்சத்திலிருந்தான். இப்போதோ தன்னுடைய ஜீவனுக்கு உயிர்ப்பிச்சை கேட்கிறான். பெனாதாத் இதற்கு முன்பு அதிகாரத்திலும் ஐசுவரியத்திலும் உயர்ந்தவனாயிருந்தான். இப்போதோ மிகவும் பரிதாபமாக, தன் ஜீவனுக்குக்கூட உத்தரவாதமில்லாதவனாக, உள்ளறையிலே பதுங்கி ஒளிந்திருக்கிறான்.

பெனாதாத் ஆரம்பத்தில் ஆகாபை எச்சரித்தான். அவனை பயமுறுத்தினான். தன்னுடைய கோரிக்கைளையெல்லாம் ஆகாப் நிறைவேற்றி தரவேண்டும் பிடிவாதமாயிருந்தான். ஆனால் இப்போதோ, பெனாதாத் ஆகாபிடம் தன் ஜீவனுக்காக பரிதாபமாகப் பணிந்து பேசுகிறான்.

ஆகாப் பெனாதாத்தின் ஊழியக்காரருடைய வார்த்தைகளை ஆச்சரியத்தோடு கேட்கிறான். "அவன் இன்னும் உயிரோடே இருக்கிறானா" என்றும், "அவன் என் சகோதரன்" என்றும் ஆகாப் பெனாதாத்தின் ஊழியக்காரரிடத்தில், அவனைப்பற்றிச் சொல்லுகிறான்.

ஆகாப் பெனாதாத்தின் பணிவான விண்ணப்பத்தை அங்கீகரிக்கிறான். பெனாதாத்தின் விண்ணப்பத்தை அங்கீகரிப்பது ஆகாபின் மதியீனம். ஆகாப் இதற்கு முன்பு பெனாதாத்திற்கு பயந்தவன். கர்த்தர் பெனாதாத்தையும், அவனுடைய சேனையையும் ஆகாபின் கையிலே ஒப்புக்கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் தம்மை கர்த்தர் என்று அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவே, கர்த்தர் இவ்வளவு பெரிய காரியத்தை இஸ்ரவேல் ஜனத்திற்கு செய்திருக்கிறார்.

ஆனால் ஆகாபோ இப்போதும் கர்த்தரைப்பற்றி நினைக்கவில்லை. அவன் இன்னும் கர்த்தரை அறிந்துகொள்ளவில்லை. தன்னுடைய சுயபலத்தினாலும், சுயபராக்கிரமத்தினாலும் தனக்கு பெனாதாத்தின்மீது வெற்றி கிடைத்திருக்கிறது என்று ஆகாப் பெருமையோடு நினைக்கிறான். தன்னுடைய பலத்தையும், பராக்கிரமத்தையும் நினைத்துப் பார்த்து, ஆகாப் சுயபெருமைப்படுகிறான்.

ஆகாப் இஸ்ரவேலுக்கு ராஜாவாயிருப்பதுபோல, பெனாதாத் சீரிய தேசத்திற்கு ராஜாவாயிருக்கிறான். பெனாதாத்தும் தன்னைப்போல ஒரு ராஜா என்று ஆகாப் அவனுக்கு இரக்கம் காண்பித்து, அவனை தன்னுடைய சகோதரன் என்று சொல்லுகிறான். பெனாதாத் சீரிய தேசத்திற்கு ராஜாவாயிருந்தாலும், அவன் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவன்.

ஆகாப் இஸ்ரவேல் தேசத்தை சேர்ந்தவன். இஸ்ரவேல் புத்திரர் மாத்திரமே ஆகாபுக்கு கர்த்தருக்குள்ளே சகோதரர்களாகயிருக்கிறார்கள். பெனாதாத் இஸ்ரவேலின் காணியாட்சிக்கு அந்நியன். ஆகாபோ தன்னுடைய சிங்காசனத்தையும், பெனாதாத்தின் சிங்காசனத்தையும் மாத்திரமே பார்க்கிறான். ஆகாப் கர்த்தரையும், அவருடைய பிரமாணத்தையும் நினைத்துப் பார்க்கவில்லை.

பெனாதாத் ஆகாபை தன் சகோதரனாக ஒருபோதும் பாவித்ததில்லை. ஆரம்பத்தில் பெனாதாத் ஆகாபுக்கு தன்னுடைய கோரிக்கைகளை சொல்லியனுப்பினான். அதிலே பெனாதாத்தின் மிருககுணம் வெளிப்பட்டது. ஆகாபின் வெள்ளியும், பொன்னும், அவனுடைய ஸ்திரீகளும், குமாரர்களும் தன்னுடையவர்கள் என்று பெனாதாத் சொன்னான். இது ஒரு சகோதரன் சொல்லுகிற வார்த்தையல்ல.

இஸ்ரவேலருக்கும் சீரியருக்கும் நடைபெற்ற யுத்தத்திலே, இஸ்ரவேலருக்கு ஜெயம் கிடைத்திருக்கிறது. இந்த ஜெயம் கர்த்தரால் உண்டாயிற்று. ஆனால் ஆகாபோ கர்த்தரை மறந்து விடுகிறான். தன்னுடைய சுயபலத்தினால் தனக்கு ஜெயம் கிடைத்திருப்பதாக நினைக்கிறான்.

ஆகையினால் ஆகாப் பெனாதாத்தை "என் சகோதரன்" என்று அழைக்கிறான். இந்த யுத்தத்தில், பெனாதாத் ஜெயித்திருந்தால், அவன் ஆகாபை, "என் சகோதரன்" என்று அழைப்பானா என்பது சந்தேகமே.

பெனாதாத்தின் ஊழியக்காரர் ஆகாபினிடத்தில் அவனைப்பற்றிச் சொல்லும்போது "உமது அடியானாகிய பெனாதாத்" என்று சொல்லுகிறார்கள். இந்த யுத்தத்தில், பெனாதாத் ஜெயித்திருந்தால், அவன் ஆகாபினிடத்தில் இப்படிப்பட்ட பணிவான வார்த்தைகளை பேசியிருப்பானா என்பது சந்தேகமே.

பெனாதாத்திடம் உண்மையான மனத்தாழ்மையில்லை. தன்னிடத்தில் தாழ்மையும் பணிவும் இருப்பதுபோல பெனாதாத் ஆகாபுக்கு முன்பாக நாடகமாடுகிறான். ஆனால் ஆகாபோ பெனாதாத்தின் நாடகத்தை நம்புகிறான். ஆகாப் பெனாதாத்தின் பணிவான வார்த்தைகளை நம்பி, அவனை தன்னுடைய இரதத்தில் ஏற்றிக்கொள்கிறான் (1இராஜா 20:33). ஆகாப் பெனாதாத்தோடு உடன்படிக்கை பண்ணி அவனை அனுப்பிவிடுகிறான் (1இராஜா 20:34).

ஆகாப் சீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ண போகும் முன்பாக கர்த்தருடைய தீர்க்கதரிசி ஆகாபை வந்து பார்த்தான். அவனுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொன்னான். கர்த்தர் சீரியரின் சேனையை ஆகாபின் கையிலே ஒப்புக்கொடுத்தார். இப்போது ஆகாப் கர்த்தரையும் விசாரிக்கவில்லை. கர்த்தருடைய தீர்க்கதரிசிகளையும் விசாரிக்கவில்லை. இஸ்ரவேலின் மூப்பரையும் விசாரிக்கவில்லை. பெனாதாத்தின் ஊழியக்காரருடைய மாய்மாலமான வார்த்தைகளைக் கேட்டு, ஆகாப் பெனாதாத்தை, "அவன் என் சகோதரன்" என்று சொல்லுகிறான். ஆகாப் பெனாதாத்தோடு உடன்படிக்கை பண்ணுகிறான்.

ஆகாப் பெனாதாத்தோடு உடன்படிக்கை பண்ணுவதற்கு முன்பு, பெனாதாத்தின் பட்டணங்களில் சிலவற்றை இஸ்ரவேல் தேசத்திற்கு கேட்டு பெற்றிருக்கலாம். ஆனால் ஆகாபோ, பெனாதாத்தின் ஊழியக்காரர் சொன்ன பாசாங்கான வார்த்தைகளை நம்பி, பெனாதாத்தை தன் சகோதரன் என்று சொல்லுகிறான்.

ஆகாப் பெனாதாத்தைப்பற்றி சொல்லும்போது, "இன்னும் அவன் உயிரோடே இருக்கிறானா, அவன் என் சகோதரன்" என்று சொல்லுகிறான். பெனாதாத்தின் ஊழியக்காரர்கள் ஆகாபின் வார்த்தைகளை நன்றாய்க் கவனித்து, அவன் வாயின் சொல்லை உடனே பிடித்து: "உமது சகோதரனாகிய பெனாதாத் இருக்கிறான்" என்று சொல்லுகிறார்கள்; அப்பொழுது ஆகாப் "நீங்கள் போய், பெனாதாத்தை அழைத்துக் கொண்டுவாருங்கள்" என்று சொல்லுகிறான்; பெனாதாத் ஆகாபினிடத்தில் வந்தபோது, ஆகாப் அவனைத் தன் இரதத்தில் ஏற்றிக்கொள்கிறான் (1இராஜா 20:33).

பெனாதாத் ஆகாபோடு சமாதான உடன்படிக்கை பண்ணிக்கொள்ள விரும்புகிறான். பெனாதாத் தனக்கு நஷ்டம் ஏற்படாதவாறு, மிகவும் சாதுரியமாக ஆகாபிடம் பேசுகிறான். பெனாதாத் ஆகாபைப் பார்த்து, "என் தகப்பன் உம்முடைய தகப்பனார் கையிலே பிடித்த பட்டணங்களைத் திரும்பக் கொடுத்துவிடுகிறேன்; என் தகப்பன் சமாரியாவிலே செய்ததுபோல, நீரும் தமஸ்குவிலே வீதிகளை உண்டாக்கிக்கொள்ளலாம்" (1இராஜா 20:34) என்று சொல்லுகிறான்.

இந்த உடன்படிக்கையினால் பெனாதாத்திற்கு நஷ்டம் ஒன்றுமில்லை. ஆகாப் தன்னுடைய சொந்த செலவில் தமஸ்குவிலே வீதிகளை உண்டாக்கிக் கொள்ளவேண்டும். பெனாதாத்தின் ஜீவன் இப்போது ஆகாபின் கையிலிருக்கிறது. ஆகாப் இப்போது பெனாதாத்திடமிருந்து எதை வேண்டுமானாலும் கேட்கலாம். ஆனால் ஆகாபுக்கு எதை கேட்கவேண்டும் என்றோ, அதை எப்படி கேட்கவேண்டும் என்றோ தெரியவில்லை.

ஆகாபுக்கு சீரியர்மீது எதிர்பாராத விதத்திலே வெற்றி கிடைத்திருக்கிறது. இந்த வெற்றியை நினைத்து ஆகாபும் ஆச்சரியப்படுகிறான். தன்னுடைய தோல்வியை நினைத்து பெனாதாத்தும் ஆச்சரியப்படுகிறான். திடீரென்று வெற்றி கிடைத்ததினால், அந்த வெற்றியை தன்னுடைய தேசத்தின் நன்மைக்காக எப்படி பயன்படுத்துவது என்று ஆகாபுக்கு தெரியவில்லை.

ஆகாபைப்போலவே இக்காலத்திலும் ஒரு சில விசுவாசிகள் இருக்கிறார்கள். கர்த்தர் இவர்களை தமது கிருபையினால் அதிகமாய் ஆசீர்வதிக்கும்போது, அந்த ஆசீர்வாதங்களை எப்படி நல்லமுறையில் பயன்படுத்தவேண்டும் என்று இவர்களுக்கு தெரிவதில்லை. தங்கள் சுயஇஷ்டம்போல அதைப் பயன்படுத்துகிறார்கள். இதில் கர்த்தருடைய சித்தம் என்ன என்பதை ஆராய்ந்து பார்க்க தவறிவிடுகிறார்கள். இலவசமாக வந்த ஆசீர்வாதத்தை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்தலாம் என்று நினைத்து, அதை தாறுமாறாக பயன்படுத்தி வீணாக்குகிறார்கள்.

கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக பெனாதாத்தை ஆகாபின் கையிலே ஒப்புக்கொடுத்திருக்கிறார். கர்த்தர் பெனாதாத்தை சங்காரத்திற்கு நியமித்திருக்கிறார். ஆனால் ஆகாபுக்கு கர்த்தருடைய சித்தம் தெரியவில்லை. கர்த்தர் பெனாதாத்தை ஆகாபின் கையில் சங்காரத்திற்கு ஒப்புக்கொடுத்தாலும், ஆகாபோ அவனை தன் கையிலிருந்து தப்பிப்போகும்படி விட்டுவிடுகிறான் (1இராஜா 20:42).

ஆகாப் பெனாதாத்திடம், "இந்த உடன்படிக்கை செய்து நான் உம்மை அனுப்பிவிடுகிறேன்" என்று சொல்லி, அவனோடு உடன்படிக்கைபண்ணி அவனை அனுப்பிவிடுகிறான் (1இராஜா 20:34). ஆகாப் பெனாதாத்தோடு உடன்படிக்கை செய்வது கர்த்தருடைய சித்தமல்ல. கர்த்தருடைய சித்தத்தை அறிந்துகொள்ளாதவர்கள், அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிய வாய்ப்பில்லை.

ஆகாப் தன்னை கிருபையுள்ளவன் போலவும், அன்புள்ளவன்போலவும், இரக்கமுள்ளவன் போலவும், பரிவுள்ளவன்போலவும் பெனாதாத்திற்கு காண்பிக்கிறான். தாராளமான ஷரத்துக்களோடு ஆகாப் பெனாதாத்தோடு உடன்படிக்கை செய்து, அவனை உயிரோடு தப்பவிடுகிறான். ஆகாப் பெனாதாத்தை தன் இரதத்தில் ஏற்றி அவனுக்கு மதிப்பும் மரியாதையும் காண்பிக்கிறான். இஸ்ரவேலின் தேவனைக் கனம்பண்ணாத ஆகாப், பெனாதாத்தை கனம்பண்ணுகிறான்.

கர்த்தர் ஆகாபின் மதியீனமான கிரியைகளை கண்ணோக்கிப் பார்க்கிறார். கர்த்தருக்கு மறைவாக ஆகாபால் ஒன்றும் செய்யமுடியாது. கர்த்தர் ஆகாபின் பாவத்தை அவனுக்கு உணர்த்த விரும்புகிறார். தம்முடைய தீர்க்கதரிசிகளின் புத்திரர் ஒருவர் மூலமாக கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளை ஆகாபுக்கு சொல்லுகிறார்.

ஆகாப் பெனாதாத்தோடு உடன்படிக்கை பண்ணியபோது, தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவன் கர்த்தருடைய வார்த்தையின்படி தன் தோழனை நோக்கி: "நீ என்னை அடி" என்று சொல்லுகிறான்; அந்த மனுஷன் அவனைப்பார்த்து "அடிக்கமாட்டேன்" (1இராஜா 20:35) என்று சொல்லுகிறான்.

இந்த சந்தர்ப்பத்தில் கர்த்தருடைய வார்த்தை மிகாயாவுக்கு உண்டாயிற்று என்று யூதர்களின் பாரம்பரிய வரலாறு சொல்லுகிறது. ஆனால் இந்த வார்த்தை மிகாயாவுக்கு உண்டாக வாய்ப்பில்லை என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஆகாப் மிகாயாவுக்கு விரோதமாக பேசின வார்த்தைகளை, வேதபண்டிதர்கள் காரணமாகச் சொல்லுகிறார்கள்.

"அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா, யோசபாத்தை நோக்கி: கர்த்தரிடத்தில் விசாரித்து அறிகிறதற்கு இம்லாவின் குமாரனாகிய மிகாயா என்னும் இன்னும் ஒருவன் இருக்கிறான்; ஆனாலும் நான் அவனைப் பகைக்கிறேன்; அவன் என்னைக் குறித்து நன்மையாக அல்ல, தீமையாகவே தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவன் என்றான். அதற்கு யோசபாத், ராஜாவே, அப்படிச் சொல்லவேண்டாம் என்றான்" (1இராஜா 22:8).

கர்த்தருடைய தீர்க்கதரிசி ஆகாபை ஒரு உவமையின் மூலமாக கடிந்துகொள்கிறான். தன்னுடைய உவமையை ஆகாபுக்கு தெளிவாகச் சொல்லும் வண்ணமாக, அதை அவன் நாடகம்போல நடித்து காண்பிக்கிறான். அந்த தீர்க்கதரிசி, யுத்தத்திலே காயமுண்டான போர்வீரனைப்போல ஆகாபுக்கு முன்பாக தன்னைக் காண்பிக்க விரும்புகிறான்.

தீர்க்கதரிசியால் தன்னைத்தானே அடித்து காயப்படுத்திக்கொள்ள முடியாது. ஆகையினால் அவன் தன்னுடைய தோழனை நோக்கி, "நீ என்னை அடி" என்று சொல்லுகிறான். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் மற்றவர்களை அடித்து பழக்கமில்லாதவர்கள். அவர்கள் மற்றவர்களிடத்தில் அடி வாங்கக்கூடியவர்கள். ஆகையினால் தீர்க்கதரிசியின் தோழனுக்கு, அவனை அடிக்க மனமில்லை. "நான் உன்னை அடிக்கமாட்டேன்" என்று சொல்லி, தீர்க்கதரிசியின் தோழன் அவனை அடிக்க மறுத்துவிடுகிறான்.

தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தையின்படியாகவே தன்னுடைய தோழனிடத்தில் பேசுகிறான். ஆனாலும் அவனுடைய தோழன் நல்ல சுபாவமுள்ளவனாயிருக்கிறான். ஒரு தீர்க்கதரிசியை அடிக்க அவனுக்கு மனமில்லை. தீர்க்கதரிசி சொன்னது கர்த்தருடைய வார்த்தையாகயிருந்தாலும், அவனுடைய தோழன் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய மறுத்துவிடுகிறான்.

கர்த்தருடைய பிள்ளைகள் தங்களை யாராவது அடித்தால் தாங்கிக்கொள்வார்கள். ஆனாலும் அவர்கள் யாரையும் அடிக்கமாட்டார்கள். காரணமில்லாமல் மற்றவர்களை அடிக்கும் பழக்கம் விசுவாசிகளிடத்தில் இருக்காது. தீர்க்கதரிசியின் தோழனோ நல்ல சுபாவமுள்ளவன். ஆனாலும் அவன் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லை. இதனால் தீர்க்கதரிசி தன்னுடைய தோழனை சபிக்கிறான்.

கர்த்தருடைய தீர்க்கதரிசி தன் தோழனைப் பார்த்து, "நீ கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படியாமற்போனபடியால், இதோ, நீ என்னைவிட்டுப் புறப்பட்டுப் போனவுடனே ஒரு சிங்கம் உன்னைக் கொல்லும்" என்று சொல்லுகிறான்; அப்படியே தீர்க்கதரிசியின் தோழன் அவனை விட்டுப் புறப்பட்டவுடனே, ஒரு சிங்கம் அவனைக் கண்டு கொன்றுபோடுகிறது (1இராஜா 20:36).

இந்த சம்பவம் ஆகாபுக்கு எச்சரிப்பாகச் சொல்லப்படுகிறது. தீர்க்கதரிசியின் தோழன் நல்ல சுபாவமுள்ளவனாகயிருந்தாலும், அவன் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாதபோது, அவனுக்கு தண்டனை கிடைக்கிறது. தீர்க்கதரிசியின் தோழன், தீர்க்கதரிசியை அடிக்கவில்லை. தீர்க்கதரிசியை அடிக்குமாறு கர்த்தர் கட்டளை கொடுக்கிறார். ஆனால் தீர்க்கதரிசியின் தோழனோ, அவன்மீது அன்பு வைத்து, அவனை அடிக்க மறுத்துவிடுகிறான். தீர்க்கதரிசியின் தோழன் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் போனதினால், அவனுக்கு தண்டனை கிடைக்கிறது.

கர்த்தர் பெனாதாத்தை சங்காரத்திற்கு நியமித்திருக்கிறார். அவர் ஆகாபிடம் பெனாதாத்தை சங்காரம்பண்ணுமாறு கட்டளையிடுகிறார். ஆகாபோ கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல், பெனாதாத்தை தப்ப விடுகிறான். ஆகாப் பெனாதாத்தை சங்காரம்பண்ணவில்லை. கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாதவர்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும். தீர்க்கதரிசியின் தோழனை ஒரு சிங்கம் கொன்றுபோடுகிறது. இது அவன்மீது வந்த தேவனுடைய நியாயத்தீர்ப்பாயிருக்கிறது. தீர்க்கதரிசியின் தோழனைப்போலவே, ஆகாபும் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவில்லை. ஆகையினால் ஆகாபின்மீதும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வரும்.

தீர்க்கதரிசியின் தோழன் செத்துப்போனபின்பு, அவன் வேறொருவனைக் கண்டு: "என்னை அடி" என்று சொல்லுகிறான்; அந்த மனுஷன், தீர்க்கதரிசியைக் காயமுண்டாக அடிக்கிறான் (1இராஜா 20:37). அந்த மனுஷன் தீர்க்கதரிசியின் முகத்தில் அடித்திருக்கவேண்டும். தீர்க்கதரிசிக்கு இரத்த காயமுண்டாயிற்று.

தீர்க்கதரிசி இப்போது இரத்த காயத்தோடு இருக்கிறான். அப்பொழுது அந்தத் தீர்க்கதரிசி போய், தன் முகத்தின்மேல் சாம்பலைப் போட்டு, வேஷமாறினவனாய் வழியிலே ராஜாவுக்காகக் காத்திருக்கிறான் (1இராஜா 20:38). அவன் ஆகாப் ராஜாவுக்கு முன்பாக தன்னை தீர்க்கதரிசியாக காட்டிக்கொள்ளவில்லை. யுத்தக்களத்திலே காயம் பட்டு வந்திருக்கிற ஒரு போர்வீரனைப்போல அவன் வேஷம் மாறியிருக்கிறான். ஆகாப் ராஜாவை சந்திப்பதற்காக காத்திருக்கிறான்.

ஆகாப் ராஜா அவ்வழியாய் வருகிறபோது, வேஷம் மாறியிருக்கிற தீர்க்கதரிசி ராஜாவைப்பார்த்துக் கூப்பிட்டு: "உமது அடியான் யுத்தத்தில் நின்றபோது, ஒருவன் விலகி, என்னிடத்தில் ஒருவனைக் கொண்டுவந்து, இந்த மனுஷனைப் பத்திரம்பண்ணு; இவன் தப்பிப்போனால், உன் பிராணன் அவன் பிராணனுக்கு ஈடாயிருக்கும், அல்லது ஒரு தாலந்து வெள்ளியை நீ கொடுக்கவேண்டும் என்றான். ஆனாலும் உமது அடியான் இங்கும் அங்கும் அலுவலாயிருக்கும்போது, அவன் போய்விட்டான்" (1இராஜா 20:39,40) என்றான்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் வேஷம் மாறின தீர்க்கதரிசியைப் பார்த்து: "நீ சொன்ன தீர்ப்பின்படியே ஆகும்" என்று சொல்லுகிறான்.

இந்த தீர்க்கதரிசி செய்த தப்பிதத்தைப்போலவே, ஆகாப் ராஜாவும் தப்பிதம் செய்திருக்கிறான். கர்த்தர் ஆகாபிடத்தில் பெனாதாத்தை ஒப்புக்கொடுத்தார். ஆனால் ஆகாபோ பெனாதாத்தை தன் கையிலிருந்து தப்ப விட்டுவிடுகிறான்.

ஆகாப் தீர்க்கதரிசிக்கு தன்னுடைய தீர்ப்பைச் சொன்னான். ஆகாப் சொன்ன தீர்ப்பு, இப்போது அவனுக்கே திரும்பவும் கொடுக்கப்படுகிறது. கைதி தப்பிப்போனால், அவனுடைய பிராணனுக்கு ஈடாக, அவன் யாரிடத்தில் ஒப்புவிக்கப்பட்டானோ, அவனுடைய பிராணனைக் கொடுக்கவேண்டும். ஆகாப் பெனாதாத்தை தப்பவிட்டான். ஆகையினால் பெனதாத்தின் பிராணனுக்கு ஈடாக, ஆகாப் தன்னுடைய பிராணனைக் கொடுக்கவேண்டும்.

ஆகாபின் கவனக்குறைவினாலேயே பெனாதாத் சங்காரத்திற்கு தப்பித்திருக்கிறான். ராஜாவின் கட்டளைக்கு விரோதமாக சேனாபதி செயல்படக்கூடாது. சேனாபதியின் கட்டளைக்கு விரோதமாக, போர்வீரன் செயல்படக்கூடாது. கர்த்தருடைய கட்டளைக்கு விரோதமாக யாரும் செயல்படக்கூடாது.

கர்த்தருடைய தீர்க்கதரிசி ஆகாபின் தப்பிதத்தை அவனுக்கு உணர்த்துகிறான். வேஷம் மாறியிருக்கிற தீர்க்கதரிசி தன் முகத்திலிருக்கிற சாம்பலைத் துடைத்துவிடுகிறான். அப்பொழுது இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப், அவன் தீர்க்கதரிசிகளில் ஒருவன் என்று அறிந்துகொள்கிறான்.

அப்பொழுது கர்த்தருடைய தீர்க்கதரிசி ஆகாபை நோக்கி, "சங்காரத்திற்கு நான் நியமித்த மனுஷனை உன் கையிலிருந்து தப்பிப்போகும்படி நீ விட்டபடியினால், உன் பிராணன் அவன் பிராணனுக்கு ஈடாகவும், உன் ஜனம் அவன் ஜனத்திற்கு ஈடாகவும் இருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (1இராஜா 20:42) என்று சொல்லுகிறான்.

ஆகாப் தன் வாயின் வார்த்தையினாலே, தனக்குத்தானே தீர்ப்பு சொல்லுகிறான். அவன் தன்னைத்தானே நியாயந்தீர்த்துக் கொள்கிறான். தீர்க்கதரிசியின் வார்த்தையைக் கேட்டபோது இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபுக்கு சலிப்பும் விசனமும் உண்டாயிற்று. இஸ்ரவேலின் ராஜா சலிப்பும் விசனமுமாய்த் தன் வீட்டிற்குப் போகப் புறப்பட்டுச் சமாரியாவுக்கு வருகிறான் (1இராஜா 20:43).

21 அதிகாரம்

ஆகாப் இஸ்ரவேலின் ராஜாவாயிருந்தாலும், அவன் எப்போதும் சலிப்பும் விசனமுமாயிருக்கிறான். இஸ்ரவேலின் பரிசுத்தமான சரித்திரத்திலே ஆகாபைப்போல துன்மார்க்கமான ராஜா வேறு ஒருவனும் எழும்பவில்லை. ஆகாபின் மூலமாய் எல்லோருக்கும் பிரச்சனை உண்டாயிற்று. அவன் அந்நிய தேசத்தாருக்கும் பிரச்சனையாயிருக்கிறான். தன்னுடைய சொந்த தேசத்தாருக்கும் பிரச்சனையாயிருக்கிறான்.

ஆகாபின் அரண்மனை அண்டையில் நாபோத்திற்கு ஒரு திராட்சத்தோட்டம் இருக்கிறது. ஆகாப் அந்த திராட்சத்தோட்டத்தை தனக்கு சொந்தமாக்கிக்கொள்ள ஆசைப்படுகிறான் (1இராஜா 21:1-4).

யேசபேலின் சதித்திட்டத்தினால் நாபோத் கொல்லப்படுகிறான். நாபோத்தின் திராட்சத்தோட்டம் ஆகாபின் வசமாயிற்று (1இராஜா 21:5-14). ஆகாப் நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை சொந்தமாய் எடுத்துக்கொள்ளும்படி புறப்பட்டுப்போகிறான் (1இராஜா 21:15-16).

அப்போது எலியா ஆகாபை சந்தித்து, கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை அவனுக்கு சொல்லுகிறார் (1இராஜா 21:17-24). ஆகாப் எலியாவின் வார்த்தைகளைக் கேட்டு கர்த்தருக்கு முன்பாக தாழ்மையாய் நடந்துகொள்கிறான் (1இராஜா 21:25-29).

நாபோத்தின் திராட்சத்தோட்டம் 1இராஜா 21:1-4

1இராஜா 21:1. இவைகளுக்குப் பின்பு, யெஸ்ரயேலனாகிய நாபோத்துக்கு யெஸ்ரயேலிலே சமாரியாவின் ராஜாவாகிய ஆகாபின் அரமனை அண்டையில் ஒரு திராட்சத்தோட்டம் இருந்தது.

1இராஜா 21:2. ஆகாப் நாபோத்தோடே பேசி: உன் திராட்சத்தோட்டம் என் வீட்டிற்கு அடுத்திருக்கிறபடியால், அதைக் கீரைக் கொல்லையாக்கும்படி எனக்குக் கொடு, அதைப்பார்க்கிலும் நல்ல திராட்சத்தோட்டத்தை அதற்குப் பதிலாக உனக்குத் தருவேன்; அல்லது உனக்கு வேண்டுமானால், அதின் விலைக்கிரயமான பணத்தைத் தருவேன் என்றான்.

1இராஜா 21:3. நாபோத் ஆகாபை நோக்கி: நான் என் பிதாக்களின் சுதந்தரத்தை உமக்குக் கொடாதபடி கர்த்தர் என்னைக் காப்பாராக என்றான்.

1இராஜா 21:4. இப்படி என் பிதாக்களின் சுதந்தரத்தை உமக்குக் கொடேன் என்று யெஸ்ரயேலனாகிய நாபோத் தன்னோடே சொன்ன வார்த்தைக்காக ஆகாப் சலிப்பும் சினமுமாய், தன் வீட்டிற்கு வந்து, போஜனம்பண்ணாமல், தன் கட்டிலின் மேல் படுத்து, தன் முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்தான்.

யெஸ்ரயேலனாகிய நாபோத்துக்கு யெஸ்ரயேலிலே சமாரியாவின் ராஜாவாகிய ஆகாபின் அரமனை அண்டையில் ஒரு திராட்சத்தோட்டம் இருக்கிறது (1இராஜா 21:1). ஆகாப் இந்த திராட்சத்தோட்டத்தை தனக்கு சொந்தமாக்கிக்கொள்ளவேண்டுமென்று ஆசைப்படுகிறான். நாபோத்தின் திராட்சத்தோட்டம், ஆகாபின் அரமனைக்கு அருகாமையிலிருப்பதினால், ஆகாப் அதைத் தனக்கு கீரைக்கொல்லை ஆக்கும்படி விரும்புகிறான்.

ஆகாப் தன்னுடைய விருப்பத்தை நாபோத்திற்கு சொல்லுகிறான். ஆகாப் நாபோத்தை நோக்கி, "உன் திராட்சத்தோட்டம் என் வீட்டிற்கு அடுத்திருக்கிறபடியால், அதைக் கீரைக் கொல்லையாக்கும்படி எனக்குக் கொடு, அதைப்பார்க்கிலும் நல்ல திராட்சத்தோட்டத்தை அதற்குப் பதிலாக உனக்குத் தருவேன்; அல்லது உனக்கு வேண்டுமானால், அதின் விலைக்கிரயமான பணத்தைத் தருவேன்" (1இராஜா 21:2) என்று சொல்லுகிறான்.

ஆகாபின் அரமனை மிகவும் பெரியது. அவனுக்கு ஏராளமான திராட்சத்தோட்டங்களும் இருக்கிறது. ஆனாலும் அவன் நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை தனக்கு சொந்தமாக்கிக்கொள்ள விரும்புகிறான். ஆகாபினிடத்தில் ஏராளமான நிலங்கள் இருந்தாலும், அதிலே அவனுக்கு திருப்தி உண்டாகவில்லை.

நாபோத்தின் திராட்சத்தோட்டத்திற்கு பதிலாக வேறொரு நல்ல தோட்டத்தையோ அல்லது அதற்குரிய விலைக்கிரயத்தையோ கொடுப்பதற்கும் ஆகாப் சம்மதிக்கிறான். பிறருடைய நிலங்களை கிரயத்திற்கு வாங்குவது பாவமல்ல. ஆனாலும் நம்முடைய சுயலாபத்திற்காக, மற்றவர்களுடைய பொருட்களை அபகரிக்கக்கூடாது. தன்னுடைய சொத்தை விற்பதற்கு ஒருவருக்கு மனமில்லையென்றால், அவரைக் கட்டாயப்படுத்தி, அவருடைய சொத்தை பலவந்தமாகப் பெற்றுக்கொள்ளக்கூடாது.

ஆகாப் நாபாத்தோடே நயமாய்ப் பேசுகிறான். ஆனால் நாபாத்திற்கோ தன்னுடைய திராட்சத்தோட்டத்தை யாருக்கும் கொடுக்க மனமில்லை. நாபோத் ஆகாபை நோக்கி: "நான் என் பிதாக்களின் சுதந்தரத்தை உமக்குக் கொடாதபடி கர்த்தர் என்னைக் காப்பாராக" (1இராஜா 21:3) என்று சொல்லுகிறான்.

கானான் தேசம் கர்த்தருடைய பரிசுத்தமான தேசம். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தைச் சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் புத்திரரின் ஒவ்வொரு வம்சத்திற்கும், கானான் தேசம் பங்குவீதமாகப் பிரித்துக்கொடுக்கப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய சுதந்தரவீதத்தை மற்றவர்களுக்கு விற்கக்கூடாது. அவர்கள் தங்கள் நிலங்களை பிறருக்கு குத்தகைக்கு கொடுத்தாலும், யூபிலி வருஷத்தின்போது, அந்த நிலம் அதன் சொந்தக்காரருக்கு திருப்பி கொடுப்படவேண்டும்.

"அப்படிக் கொடுப்பதற்கான நிர்வாகம் அவனுக்கு இல்லாவிட்டால், அவன் விற்றது வாங்கினவன் கையிலே யூபிலி வருஷம்மட்டும் இருந்து, யூபிலி வருஷத்திலே அது விடுதலையாகும்; அப்பொழுது அவன் தன் காணியாட்சிக்குத் திரும்பப் போவான்" (லேவி 25:28).

ஆகாபுக்கு இஸ்ரவேலரின் யூபிலி வருஷ பிரமாணம் நன்றாய்த் தெரியும். ஆகையினால் ஆகாப் நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை குத்தகைக்கு பெற்றுக்கொள்ள விரும்பவில்லை. அதை விலைக்கிரயம் கொடுத்து வாங்க விரும்புகிறான். அல்லது ஆகாப் நாபோத்தின் தோட்டத்திற்கு பதிலாக, தன்னுடைய தோட்டத்தை அவனுக்கு கொடுத்து, பரிவர்த்தனை செய்ய விரும்புகிறான். இதன் மூலமாக நாபோத்தின் திராட்சத்தோட்டம் ஆகாபுக்கு சொந்தமாகும். யூபிலி வருஷத்தின்போது இந்த தோட்டத்தை, ஆகாப் நாபோத்திற்கு திருப்பிக் கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்படாது.

நாபோத்தோ கர்த்தருக்கு பயப்படுகிறவன். அவன் ராஜாவுக்கு பயப்படுவதைப் பார்க்கிலும், கர்த்தருக்கு அதிகமாய்ப் பயப்படுகிறான். கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிய விரும்புகிறான். ஆகையினால் ஆகாப் நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை தனக்கு கேட்டபோது, நாபோத் ஆகாபை நோக்கி, "நான் என் பிதாக்களின் சுதந்தரத்தை உமக்குக் கொடாதபடி கர்த்தர் என்னைக் காப்பாராக" (1இராஜா 21:3) என்று சொல்லிவிடுகிறான்.

நாபோத் ஆகாப் ராஜாவுக்கு கீழ்ப்படிந்தால், அரமனையிலிருந்து அவனுக்கு சில சலுகைகள் கிடைக்கலாம். நாபோத்திற்கு ராஜாவின் சிநேகமும் கிடைக்கலாம். ஆனால் நாபோத்தோ, கர்த்தருக்கு கீழ்ப்படிவதே உத்தமம் என்று நினைக்கிறான்.

யூதர்கள் இந்தப் பிரபஞ்சத்திலுள்ள கானான் தேசத்தையும், பரலோகமாகிய பரமகானானையும் ஒப்பிட்டு தியானிப்பது வழக்கம். இந்தப் பிரபஞ்சத்தில், கானான் தேசத்திலே யூதர்களுக்கு பங்குவீதம் இருக்கவேண்டும். அப்போதுதான் அவர்கள் பரமகானானுக்குள் பிரவேசிக்கும்போது, கானானின் பங்குவீதத்திற்கு ஒப்பான பங்குவீதம், அவர்களுக்கு பரலோகத்திலும் கொடுக்கப்படும். இந்தப் பிரபஞ்சத்தில், கானான் தேசத்திலே பங்குவீதம் இல்லாதவர்களுக்கு, பரலோகமாகிய பரமகானானிலே பங்குமில்லை பாத்தியமுமில்லை என்பது யூதர்களின் பொதுவான நம்பிக்கை.

நாபோத்து தன்னுடைய பிதாக்களின் சுதந்தரத்தை ஆகாபுக்கு கொடுக்க மறுத்துவிடுகிறான். "என் பிதாக்களின் சுதந்தரத்தை உமக்குக் கொடேன்" என்று யெஸ்ரயேலனாகிய நாபோத் தன்னோடே சொன்ன வார்த்தைக்காக ஆகாப் சலிப்பும் சினமுமாய், தன் வீட்டிற்கு வந்து, போஜனம்பண்ணாமல், தன் கட்டிலின் மேல் படுத்து, தன் முகத்தைத் திருப்பிக் கொண்டிருக்கிறான் (1இராஜா 21:4).

கர்த்தருடைய தீர்க்கதரிசி ஆகாபுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லி, அவனைக் கடிந்துகொண்டபோது ஆகாப் சலிப்பும் விசனமுமாய் இருந்தான் (1இராஜா 20:43). இப்போது அதே போன்ற சலிப்பும் விசனமும் ஆகாபுக்கு மறுபடியும் வந்திருக்கிறது. தன்னுடைய ஆசை நிறைவேறாவிட்டாலோ, தனக்கு விரோதமாக ஏதாவது ஒரு வார்த்தை சொல்லப்பட்டாலோ ஆகாபுக்கு சலிப்பும் விசனமும் வந்துவிடும்.

இப்போது ஆகாபின் சலிப்பும் விசனமும் அதிகமாயிருக்கிறது. அவன் தன் வீட்டிற்கு வந்து போஜனம்பண்ணாமல் தன் கட்டிலின்மேல் படுத்திருக்கிறான். தன் முகத்தையோ வேறு பக்கமாய் திருப்பிக்கொள்கிறான். மிகுந்த துக்கத்திலிருக்கிறான். நாபோத்தின் மனச்சாட்சிக்காக ஆகாப் அவனை சபிக்கிறான். ஆகாப் தனிமையிலிருக்க விரும்புகிறான். அவன் யாரையும் தன்னிடமாகச் சேர்த்துக்கொள்ளவில்லை.

ஆகாபால் தோல்வியையோ, ஏமாற்றத்தையோ தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஏமாற்றம் ஏற்படும்போது அவனுடைய இருதயம் உடைந்துபோகிறது. அவனுடைய ஆசை நிறைவேறாதபோது அவனுடைய மனதில் சஞ்சலம் ஏற்படுகிறது. அவனுடைய சலிப்பும் அதிகரிக்கிறது.

ஆகாப் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜா. கானான் தேசத்திலே ஆகாபுக்கு ஏராளமான நிலங்கள் இருக்கிறது. அவை நல்ல விளைச்சல் நிலங்கள். அவனுக்கு நற்கனிதரும் திராட்சத்தோட்டங்களும் தாராளமாயிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்தின் அதிகாரமும், அதன் பொக்கிஷமும் ஆகாபின் ஆளுகையிலிருக்கிறது. ராஜாவுக்குரிய கனமும், அந்தஸ்தும், மேன்மையும் இஸ்ரவேல் தேசம் முழுவதிலும் ஆகாபுக்கு கொடுக்கப்படுகிறது.

ஆகாப் தன்னுடைய அரண்மனையில் சந்தோஷமாயிருக்கவேண்டியவன். சிங்காசனத்தின் அதிகாரத்தை அவன் சந்தோஷமாய் அனுபவிக்கவேண்டியவன். ஆனாலும் அவனுக்கு இவையெல்லாவற்றையும்விட, நாபோத்தின் திராட்சத்தோட்டமே முக்கியமானதாயிருக்கிறது. நாபோத்தின் திராட்சத்தோட்டம் ஆகாபுக்கு கிடைக்கவில்லையென்றால் அவனுடைய மனதிலே சந்தோஷமுமில்லை, சமாதானமுமில்லை. அவனுடைய இருதயத்தில் சலிப்பும், சஞ்சலமும் நிரம்பியிருக்கிறது.

யேசபேலின் சதித்திட்டம் 1இராஜா 21:5-16

1இராஜா 21:5. அப்பொழுது அவன் மனைவியாகிய யேசபேல் அவனிடத்தில் வந்து: நீர் போஜனம் பண்ணாதபடிக்கு, உம்முடைய மனம் சலிப்பாயிருக்கிறது என்ன என்று அவனைக் கேட்டதற்கு,

1இராஜா 21:6. அவன் அவளைப் பார்த்து: நான் யெஸ்ரயேலனாகிய நாபோத்தோடே பேசி: உன் திராட்சத்தோட்டத்தை எனக்கு விலைக்கிரயமாய்க் கொடு; அல்லது உனக்கு ராசியானால் அதற்குப் பதிலாக வேறே திராட்சத்தோட்டத்தை உனக்குத் தருவேன் என்றேன். அதற்கு அவன்: என் திராட்சத்தோட்டத்தை உமக்குக் கொடுக்கமாட்டேன் என்று சொன்னான் என்றான்.

1இராஜா 21:7. அப்பொழுது அவன் மனைவியாகிய யேசபேல் அவனை நோக்கி: நீர் இப்போது இஸ்ரவேலின்மேல் ராஜ்யபாரம்பண்ணுகிறவர் அல்லவா? நீர் எழுந்து போஜனம்பண்ணி மனமகிழ்ச்சியாயிரும்; யெஸ்ரயேலனாகிய நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை நான் உமக்குக் கொடுப்பேன் என்று சொன்னாள்.

1இராஜா 21:8. அவள் ஆகாபின் பெயரால் நிருபங்களை எழுதி, அவன் முத்திரையை அவைகளுக்குப் போட்டு, அந்த நிருபங்களை நாபோத் இருக்கும் பட்டணத்தில் அவனோடே குடியிருக்கிற மூப்பரிடத்துக்கும் பெரியோரிடத்துக்கும் அனுப்பினாள்.

1இராஜா 21:9. அந்த நிருபங்களில் அவள் எழுதினது என்னவென்றால்: நீங்கள் உபவாசம் என்று பிரசித்தப்படுத்தி, நாபோத்தை ஜனத்தின் முன் நிறுத்தி,

1இராஜா 21:10. தேவனையும் ராஜாவையும் தூஷித்தாய் என்று அவன்மேல் சாட்சிசொல்லுகிற பேலியாளின் மக்களாகிய இரண்டு பேரை அவனுக்கு எதிராக நிறுத்தி, அவனை வெளியே கொண்டுபோய் அவன் சாகும்படிக்கு அவனைக் கல்லெறியுங்கள் என்று எழுதினாள்.

1இராஜா 21:11. அவன் பட்டணத்திலே குடியிருக்கிற மூப்பரும் பெரியோருமாகிய அவன் பட்டணத்து மனுஷர், யேசபேல் தங்களுக்கு அனுப்பின நிருபங்களில் எழுதிக் கட்டளையிட்டிருந்தபடியே செய்தார்கள்.

1இராஜா 21:12. அவர்கள் உபவாசம் என்று பிரசித்தப்படுத்தி நாபோத்தை ஜனத்தின் முன்னே நிறுத்தினார்கள்.

1இராஜா 21:13. அப்பொழுது பேலியாளின் மக்களாகிய இரண்டுபேர் வந்து, அவனுக்கு எதிராக உட்கார்ந்து: நாபோத் தேவனையும் ராஜாவையும் தூஷித்தான் என்று ஜனத்திற்கு முன்பாக அவன்மேல் சாட்சி சொன்னார்கள்; அதற்குப்பின்பு அவனைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டு போய், அவன் சாகும்படிக்கு அவனைக் கல்லெறிந்து,

1இராஜா 21:14. பிற்பாடு யேசபேலுக்கு, நாபோத் கல்லெறியுண்டு செத்தான் என்று சொல்லியனுப்பினார்கள்.

1இராஜா 21:15. நாபோத் கல்லெறியுண்டு செத்ததை யேசபேல் கேட்டபோது, ஆகாபை நோக்கி: நீர் எழுந்திருந்து, யெஸ்ரயேலனாகிய நாபோத் உமக்கு விலைக்கிரயமாய்க் கொடுக்கமாட்டேன் என்று சொன்ன திராட்சத்தோட்டத்தைச் சொந்தமாய் எடுத்துக்கொள்ளும்; நாபோத் உயிரோடில்லை, அவன் செத்துப் போனான் என்றாள்.

1இராஜா 21:16. நாபோத் செத்துப்போனதை ஆகாப் கேட்டபோது, அவன் யெஸ்ரயேலனாகிய நாபோத்தின் திராட்சத்தோட்டத்தைச் சொந்தமாய் எடுத்துக்கொள்ளும்படி எழுந்துபோனான்.

யேசபேல் ஆகாபின் மனைவி. அவள் ஒரு சதிகாரி. துன்மார்க்கமான ஸ்திரீ. யேசபேல் ஒரு சபிக்கப்பட்ட ஸ்திரீ.

"உள்ளேபோய், புசித்துக் குடித்த பின்பு: நீங்கள் போய் சபிக்கப்பட்ட அந்த ஸ்திரீயைப் பார்த்து, அவளை அடக்கம்பண்ணுங்கள்; அவள் ஒரு ராஜகுமாரத்தி என்றான்" *(2இராஜா 9:34).*

யேசபேல் எங்கே இருக்கிறாளோ அங்கே பிரச்சனைகளும், குழப்பங்களும் இருக்கும். அங்கே அநீதிகளும், அநியாயங்களும், அக்கிரமங்களும் நடைபெறும். ஆகாப் தன் வீட்டிற்குள் வந்து, தன் கட்டிலின்மேல் படுத்துக்கொண்டிருக்கிறான். அப்பொழுது ஆகாபின் மனைவியாகிய யேசபேல் அவனிடத்தில் வருகிறாள்.

யேசபேல் ஆகாபைப் பார்த்து, "நீர் போஜனம்பண்ணாதபடிக்கு, உம்முடைய மனம் சலிப்பாயிருக்கிறது என்ன" (1இராஜா 21:5) என்று கேட்கிறாள். யேசபேல் ஆகாபுக்கு ஆறுதல் சொல்ல வந்திருக்கிறாள். ஆகாப் பல சமயங்களில் தன்னை மறந்துவிடுவான். தன்னுடைய ஸ்தானத்தையும் அந்தஸ்தையும் மறந்துவிடுவான். யேசபேல் அவ்வப்போது ஆகாபைப் பார்த்து, அவனுடைய ராஜமேன்மைகளை அவனுக்கு ஞாபகப்படுத்துவாள். அவனுடைய இருதயத்தில் பெருமையையும் மனமேட்டிமையையும் உண்டாக்குவாள். ஆகாபின் துன்மார்க்கமான சிந்தனைகளை அதிகரிக்கப்பண்ணுவாள்.

ஆகாப் தன் மனைவியாகிய யேசபேலைப் பாத்து, அவளிடத்தில் தன்னுடைய பிரச்சனைகளைச் சொல்லுகிறான். அவன் இதுவரையிலும் தன் கட்டிலின்மேல் படுத்து தன் முகத்தைத் திருப்பிக்கொண்டிருந்தான். இப்போது யேசபேல் அவனைப் பார்க்க வந்திருக்கிறாள். ஆகாப் தன் முகத்தை யேசபேல் பக்கமாகத் திருப்புகிறான்.

ஆகாப் யேசபேலைப் பார்த்து, "நான் யெஸ்ரயேலனாகிய நாபோத்தோடே பேசி: உன் திராட்சத்தோட்டத்தை எனக்கு விலைக்கிரயமாய்க் கொடு; அல்லது உனக்கு ராசியானால் அதற்குப் பதிலாக வேறே திராட்சத்தோட்டத்தை உனக்குத் தருவேன் என்றேன். அதற்கு அவன்: என் திராட்சத்தோட்டத்தை உமக்குக் கொடுக்கமாட்டேன் என்று சொன்னான்" (1இராஜா 21:6) என்று சொல்லுகிறான்.

ஆகாப் பாதிஉண்மையை மறைத்து, மீதி உண்மையை மாத்திரமே யேசபேலுக்கு சொல்லுகிறான். நாபோத் தன்னுடைய திராட்சத்தோட்டத்தை, ஆகாபுக்கு கொடுக்க மறுத்தது மெய்தான். ஆனால் அதற்கு நாபோத் சொன்ன காரணம் வேறு. இங்கே ஆகாப் சொல்லுகிற காரணம் வேறு.

நாபோத் ஆகாபிடம், "நான் என் பிதாக்களின் சுதந்தரத்தை உமக்கு கொடாதபடி கர்த்தர் என்னைக் காப்பாராக" (1இராஜா 21:3) என்று மிகுந்த மரியாதையோடும் பொறுப்போடும் சொன்னான். ஆனால் ஆகாபோ "என் திராட்சத்தோட்டத்தை உமக்கு கொடுக்கமாட்டேன்" (1இராஜா 21:6) என்று நாபோத் சொன்னதாக யேசபேலிடத்தில் சொல்லுகிறான்.

ஆகாப் நாபோத்தைப்பற்றிச் சொன்ன வார்த்தைகள் யேசபேலின் கோபத்தை அதிகரிக்கிறது. அப்பொழுது ஆகாபின் மனைவியாகிய யேசபேல் அவனை நோக்கி: "நீர் இப்போது இஸ்ரவேலின்மேல் ராஜ்யபாரம்பண்ணுகிறவர் அல்லவா? நீர் எழுந்து போஜனம்பண்ணி மனமகிழ்ச்சியாயிரும்; யெஸ்ரயேலனாகிய நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை நான் உமக்குக் கொடுப்பேன்" (1இராஜா 21:7) என்று சொல்லுகிறாள்.

ராஜா கேட்பதை அந்த தேசத்து ஜனங்கள் மறுக்காமல் கொடுக்கவேண்டும். இது ராஜாவின் அதிகாரம். இது அந்த தேசத்து ஜனங்களின் கடமை. ஆகாபுக்கு தன்னுடைய அதிகாரத்தைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை என்று யேசபேல் அவன்மீது குற்றம் சொல்லுகிறாள். ஆகாப் நாபோத்திடம் இவ்வளவு அதிகமாகப் பேசியிருக்கக்கூடாது என்றும், அவனுடைய திராட்சத்தோட்டத்தை தனக்கு கொடுக்குமாறு, ஆகாப் அவனுக்கு ஆணையிட்டிருக்கவேண்டும் என்றும் பொருள்படுமாறு யேசபேல் சொல்லுகிறாள்.

ராஜாவின் அதிகாரத்தை தனக்கு கொடுத்தால், தன்னுடைய ராஜரீகம் எவ்வளவு சிறப்பாகயிருக்கும் என்பதை ஆகாப் பார்க்கலாம் என்று பொருள்படுமாறும் யேசபேல் சொல்லுகிறாள். "நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை நான் உமக்கு கொடுப்பேன்" என்று யேசபேல் சொல்லுகிறாள். யேசபேலின் வார்த்தைகளில் அதிகார மமதை இருக்கிறது. யேசபேலுக்கு நீதிக்கும் அநீதிக்கும் வித்தியாசம் தெரியாது. அவள் தான் நினைத்ததை சாதிக்கக்கூடியவள்.

ஆகாப் இஸ்ரவேலுக்கு ராஜாவாகயிருந்தாலும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் ஆகாபுக்குமேல் ராஜாதி ராஜாவாயிருக்கிறார். யேசபேலோ கர்த்தருக்கு பயப்படவில்லை. அவள் ராஜாவின் அதிகாரத்தைப் பயன்படுத்தி, நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை ஆகாபுக்கு கொடுத்துவிடலாம் என்று, தீர்மானமாயிருக்கிறாள். ஆகாப் நாபோத்திற்கு அவனுடைய திராட்சத்தோட்டத்திற்கான விலைக்கிரயமும் கொடுக்கவேண்டியதில்லை, அவனுடைய நிலத்திற்கு மாற்றாக வேறே திராட்சத்தோட்டத்தையும் அவனுக்கு கொடுக்கவேண்டியவில்லை. நாபோத்தின் திராட்சத்தோட்டம் ஆகாபுக்கு இலவசமாகக் கொடுக்கப்படும். இதுவே யேசபேலின் திட்டம்.

யேசபேலின் வார்த்தைகள் ஆகாபுக்கு ஆறுதலைத் தருகிறது. தன்னுடைய ராஜஅதிகாரத்தைப் பயன்படுத்தும் உரிமையை ஆகாப் யேசபேலுக்கு கொடுக்கிறான். ஆகாப் தன்னுடைய ராஜமுத்திரையையும் பயன்படுத்திக்கொள்ள அவளுக்கு அனுமதி கொடுக்கிறான். துன்மார்க்கமான ஸ்திரீயின் கையில் இப்போது இஸ்ரவேலின் ராஜாசன பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

யேசபேல் ஆகாபின் பெயரால் நிருபங்களை எழுதி, அவன் முத்திரையை அவைகளுக்குப் போடுகிறாள். யேசபேல் அந்த நிருபங்களை நாபோத் இருக்கும் பட்டணத்தில் அவனோடே குடியிருக்கிற மூப்பரிடத்துக்கும் பெரியோரிடத்துக்கும் அனுப்புகிறாள் *(1இராஜா 21:8)*.

யேசபேல் அந்த நிருபத்தில் தன்னுடைய சதித்திட்டத்தை எழுதுகிறாள். நாபோத் செத்துப்போகவேண்டும் என்பதே யேசபேலின் திட்டம்.

அந்த நிருபங்களில் யேசபேல் எழுதினது என்னவென்றால்: "நீங்கள் உபவாசம் என்று பிரசித்தப்படுத்தி, நாபோத்தை ஜனத்தின் முன் நிறுத்தி, தேவனையும் ராஜாவையும் தூஷித்தாய் என்று அவன்மேல் சாட்சிசொல்லுகிற பேலியாளின் மக்களாகிய இரண்டு பேரை அவனுக்கு எதிராக நிறுத்தி, அவனை வெளியே கொண்டுபோய் அவன் சாகும்படிக்கு அவனைக் கல்லெறியுங்கள்" *(1இராஜா 21:9,10)* என்று எழுதுகிறாள்.

இஸ்ரவேலின் சரித்திரத்திலே யேசபேலைப்போல துன்மார்க்கமான நிருபத்தை வேறு யாரும் எழுதினதில்லை. அவள் தன்னுடைய நிருபத்தை பட்டணத்திலிருக்கும் மூப்பரிடத்திற்கும் பெரியோரிடத்திற்கும் அனுப்புகிறாள். இவர்கள் அந்த தேசத்தில் நியாயாதிபதிகளாய் வீற்றிருந்து, ஜனங்களுடைய வழக்குகளை விசாரித்து, அவர்களுக்கு நீதியான தீர்ப்பு சொல்லுகிறவர்கள்.

யேசபேல் ஆகாப் ராஜாவினிடத்தில் அவனுடைய முத்திரை மோதிரத்தைப் பெற்றுக்கொள்கிறாள். அவள் அந்த மோதிரத்தை என்ன செய்வாள் என்றோ, அதை எப்படி பயன்படுத்துவாள் என்றோ ஆகாபுக்கு தெரியாது. ஆனாலும் யேசபேல் கேட்டவுடன் ஆகாப் தன்னுடைய முத்திரை மோதிரத்தை அவளுக்கு கொடுத்துவிடுகிறான். யேசபேலோ ஆகாபின் முத்திரை மோதிரத்தை தன்னுடைய இஷ்டப்படி பயன்படுத்துகிறாள்.

யேசபேல் ஆகாபின் பெயரால் நிருபங்களை எழுதுகிறாள். அந்த நிருபங்களில் ஆகாப் ராஜாவின் முத்திரையைப் போடுகிறாள். யேசபேல் எழுதின நிருபத்தில் ஆகாபின் முத்திரை போடப்பட்டிருப்பதினால், இந்த நிருபங்களை ஆகாபே எழுதினான் என்று உறுதிபண்ணப்படுகிறது.

யேசபேல் இப்போது இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபின் பெயரால், யெஸ்ரயேலின் மூப்பருக்கும் பெரியோருக்கும் தன்னுடைய கட்டளையை சொல்லுகிறாள். நாபோத்தை கொன்றுபோடுமாறு யேசபேல் ஆகாபின் பெயரால் கட்டளை கொடுக்கிறாள். யெஸ்ரயேலின் மூப்பரும் பெரியோரும் ராஜாவின் கட்டளைக்கு கீழ்ப்படியவேண்டும். அவர்களோ நீதிமான்களாகவும், நியாயாதிபதிகளாகவும் இருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் நீதியையும் நியாயத்தையும் விட்டு விலகி, யேசபேலின் அநியாயமான கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டியதாயிற்று.

யேசபேல் யெஸ்ரயேலின் மூப்பருக்கு எழுதின நிருபத்தில் "நீங்கள் உபவாசம் என்று பிரசித்தப்படுத்துங்கள்" என்று சொல்லுகிறாள். மார்க்கத்தின் பெயரால் அநியாயம் நடைபெறுகிறது. உபவாசத்தின்போது, அந்த உபவாசத்தில் பங்குபெறாதவர்கள், இஸ்ரவேலின் தேவனையும், ராஜாவையும் தூஷிப்பதற்கு அடையாளம்.

உபவாச நாளின்போது இஸ்ரவேலரில் யாராவது உபவாசத்தில் பங்குபெறாமல், உபவாச பிரமாணத்தை மீறினால், கர்த்தருடைய கோபம் இஸ்ரவேல் தேசத்தின்மீதும், இஸ்ரவேல் ஜனங்கள்மீதும் வரும் என்பது இஸ்ரவேல் ஜனத்தாரின் பொதுவான நம்பிக்கை.

யெஸ்ரயேலின் மூப்பரும் பெரியோரும், தங்கள் நகரத்திலே உபவாசத்தை பிரகடனப்படுத்தியபோது, நாபோத்தால் அந்த உபவாசத்தில் பங்குபெற முடியவில்லை. அவன் ஏதோ ஒரு சூழ்நிலையினால் உபவாசம்பண்ணாமலிருக்கிறான். நாபோத்திற்கு விரோதமாக குற்றம் சொல்லுவதற்கும் பேலியாளின் மக்கள் இரண்டுபேர் நியமிக்கப்படுகிறார்கள்.

நாபோத் உபவாச பிரமாணத்தை மீறியது, கர்த்தருக்கு விரோதமான பாவம். கர்த்தருடைய கற்பனைகளை கைக்கொள்ளாதவர்களை தண்டிக்கும் அதிகாரம் மூப்பருக்குள்ளது. அவர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் மார்க்க அதிகாரத்தைப் பயன்படுத்தி, நாபோத்தைக் கொன்றுபோடவேண்டும் என்பது யேசபேலின் சதித்திட்டம்.

நாபோத்தின்மீது கொலைக்குற்றமோ, களவு, விபசாரம் போன்ற சமுதாயக்குற்றங்களோ சுமத்தப்படவில்லை. நாபோத் தேவனையும் ராஜாவையும் தூஷித்தான் என்று அவன்மீது குற்றம் சுமத்தப்படுகிறது.

யெஸ்ரயேல் பட்டணத்திலே குடியிருக்கிற மூப்பரும் பெரியோருமாகிய அவன் பட்டணத்து மனுஷர், யேசபேல் தங்களுக்கு அனுப்பின நிருபங்களில் எழுதிக் கட்டளையிட்டிருந்தபடியே செய்கிறார்கள் (1இராஜா 21:11).

அவர்கள் உபவாசம் என்று பிரசித்தப்படுத்தி நாபோத்தை ஜனத்தின் முன்னே நிறுத்துகிறார்கள். அப்பொழுது பேலியாளின் மக்களாகிய இரண்டுபேர் வந்து, அவனுக்கு எதிராக உட்கார்ந்து; "நாபோத் தேவனையும் ராஜாவையும் தூஷித்தான்" என்று ஜனத்திற்கு முன்பாக அவன்மேல் சாட்சி சொல்லுகிறார்கள்; அதற்குப்பின்பு அவனைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டு போய், அவன் சாகும்படிக்கு அவனைக் கல்லெறிந்து கொன்றுபோடுகிறார்கள் (1இராஜா 21:12,13).

யேசபேலின் சதித்திட்டம் நிறைவேறுகிறது. அவளுடைய திட்டத்தின் பிரகாரம் நாபோத் கொல்லப்படுகிறான். நாபோத் கர்த்தரையும் ராஜாவையும் தூஷித்தான் என்று அவனுக்கு விரோதமாக குற்றம் சுமத்தப்பட்டு, அவன் கொல்லப்படுகிறான்.

யெஸ்ரயேலின் மூப்பரும் பெரியோரும் ராஜாவாகிய ஆகாபுக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள். தங்களுக்கு அனுப்பப்பட்ட நிருபத்தை, ஆகாபின் பெயரால் யேசபேல் எழுதி அனுப்பினாள் என்பது மூப்பர்களுக்கு தெரியாது. அவர்கள் ஆகாப் ராஜாவின் கட்டளைக்கு கீழ்ப்படிவதாக நினைத்து, யேசபேலின் சதித்திட்டத்தை நிறைவேற்றித் தருகிறார்கள்.

நாபோத் கல்லெறியுண்டு செத்துப்போகிறான். அவன் செத்துப்போன செய்தியை, யெஸ்ரயேலின் மூப்பர் ஆகாபுக்கு சொல்லியனுப்பாமல் யேசபேலுக்கு சொல்லியனுப்புகிறார்கள். ஆகையினால், யேசபேலே இந்த சதித்திட்டத்திற்கு காரணம் என்பது யெஸ்ரயேலின் மூப்பர்களுக்கு தெரிந்திருப்பதற்கும் வாய்ப்புள்ளது.

நாபோத்திற்கு கர்த்தருடைய பெயராலும், யூதமார்க்கத்தின் பெயராலும் தண்டனை கொடுக்கப்படுகிறது. கர்த்தர் யெஸ்ரயேல் பட்டணத்தின்மீது கோபமாயிருக்கிறார் என்றும், நாபோத்தின் பாவமே கர்த்தருடைய கோபத்திற்கு காரணம் என்றும் பேலியாளின் மக்களாகிய இருவர் நாபோத்திற்கு விரோதமாக சாட்சி சொல்லுகிறார்கள்.

யெஸ்ரயேலின் மூப்பருக்கு முன்பாக நாபோத்தை ஒரு குற்றவாளியைப்போல நிறுத்துகிறார்கள். "நாபோத் தேவனையும் ராஜாவையும் தூஷித்தான்" என்று இரண்டு பேர் அவனுக்கு விரோதமாய் ஜனத்திற்கு முன்பாக சாட்சி சொல்லுகிறார்கள். இங்கே குற்றம் சாட்டப்படுகிறவன் நீதிமான். அவன் கர்த்தருக்கு பயப்படுகிறவன். இங்கே அவன்மீது குற்றம் சொல்லுகிறவர்களோ பேலியாளின் மக்கள்.

நாபோத் இஸ்ரவேல் தேசத்து நீதியின் பிரகாரமாகவும், நியாயத்தின் பிரகாரமாகவும் தண்டிக்கப்படவேண்டும் என்பது யேசபேலின் திட்டம். ஆகையினால் யெஸ்ரயேலின் மூப்பர், நாபோத்தைக் கொன்றுபோடுவதற்கு முன்பாக, அவனுடைய வழக்கை விசாரிப்பதாக சொல்லி, அவனை ஜனத்தின் முன்னே நிறுத்துகிறார்கள்.

நாபோத் தேவனையும் தூஷிக்கவில்லை, ராஜாவையும் தூஷிக்கவில்லை. ஆனால் நாபோத் தேவனையும் ராஜாவையும் தூஷித்தான் என்று அவன்மீது குற்றம் சொல்லுகிறார்கள். அவன் தூஷித்தது மெய்தான் என்பதை நிரூபிப்பதற்கு, பேலியாளின் மக்களாகிய இரண்டுபேர், அவனுக்கு விரோதமாக சாட்சியும் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் தேசத்தின் சரித்திரத்தில், யெஸ்ரயேலின் மூப்பர்களைப்போல, வேறு யாரும் இதுபோன்ற துன்மார்க்கமான நியாயத்தீர்ப்பு கொடுத்ததில்லை. இவர்களைப்போல வேறு யாரும் ராஜாக்களின் துன்மார்க்கமான கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்ததுமில்லை. யெஸ்ரயேலின் மூப்பர்கள், "யேசபேல் தங்களுக்கு அனுப்பின நிருபங்களில் எழுதி கட்டளையிட்டிருந்தபடியே செய்கிறார்கள்" (1இராஜா 21:14).

நாபோத்தை ஜனத்தின் முன்னே நிறுத்தும்போது யெஸ்ரயேலின் மூப்பர்களுக்கு ஒரு பிரச்சனையும் ஏற்படவில்லை. யெஸ்ரயேலின் ஜனங்களில் யாரும் மூப்பர்களை எதிர்க்கவுமில்லை. அவர்கள் யேசபேலின் துன்மார்க்கமான யோசனைகளை தந்திரமாய் நிறைவேற்றுகிறார்கள்.

யெஸ்ரயேலின் ஜனங்கள் நாபோத்தை தங்கள் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய், அவன் சாகும்படிக்கு அவனைக் கல்லெறிந்து கொன்றுபோடுகிறார்கள். நாபோத்திற்கு குமாரர்கள் இருந்தார்களா என்பது தெரியவில்லை. அவனுக்கு குமாரர்கள் இருந்திருப்பார்களென்றால், அவர்கள் நாபோத்தை கல்லெறிந்து கொன்றதுபோல, அவனுடைய குமாரரையும் கல்லெறிந்து கொன்றிருப்பார்கள். நாபோத்தின் குடும்பத்தில் ஒருவரும் இல்லாதிருந்தால் மாத்திரமே, அவனுடைய திராட்சத்தோட்டத்தை ஆகாபால் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும். நாபோத்திற்கு ஆண்பிள்ளைகள் இருந்தால், அவனுடைய திராட்சத்தோட்டம், அவனுடைய பிள்ளைகளுக்கு சுதந்தரமாகிவிடும்.

இஸ்ரவேல் தேசத்திலே துன்மார்க்கருடைய அக்கிரமம் மிகவும் அதிகமாயிருக்கிறது. கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் சாத்தானுடைய அந்தகார வல்லமை பலமாய்க் கிரியை செய்கிறது. நீதிமான்கள் ஒடுக்கப்படுகிறார்கள். அவர்கள் துன்பப்படுத்தபடுகிறார்கள். யெஸ்ரயேல் நகரத்திலே நீதிமான்களுக்காக வழக்காட, அவர்களுக்காக பரிந்துபேச ஒருவருமில்லை.

நாபோத்தைப்போல நாம் குற்றம் செய்யாதவர்களாகயிருந்தாலும், நம்முடைய கள்ளம் கபடமில்லாத சுபாவம் நமக்கு பாதுகாப்பைத் தராது. நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. ஆகையினால் நம்முடைய நல்ல சுபாவங்கள்மீது நாம் நம்பிக்கை வைக்காமல், கர்த்தர்மீது நம்பிக்கை வைத்து, இந்தப் பிரபஞ்சத்தில் கர்த்தருக்குள் ஆறுதல் பெறவேண்டும்.

பல சமயங்களில் துன்மார்க்கர் செழித்திருப்பதுபோலவும், நீதியை அநீதி மேற்கொள்வதுபோலவும் இருக்கும். ஆனாலும் கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு ஒரு நாள் நிச்சயமாய் வரப்போகிறது. நாம் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் நாளை சந்தோஷத்தோடு எதிர்பார்த்து, அதிலே ஆறுதல் பெறவேண்டும். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நாளின்போது, யேசபேலைப்போன்ற துன்மார்க்கமான சதிஆலோசனைகளுக்கு அங்கே இடம் இருக்காது. கர்த்தரிடத்தில் பட்சபாதம் இருக்காது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பில் அநீதியும் அநியாயமும் இருக்காது. கர்த்தர் நீதிபரர். அவருடைய நியாயத்தீர்ப்பும் நீதியும் நியாயமுள்ளதாகவே இருக்கும்.

நாபோத் கல்லெறியுண்டு செத்துப்போன செய்தியை யெஸ்ரயேலின் மூப்பர் யேசபேலுக்கு சொல்லியனுப்புகிறார்கள். நாபோத் கல்லெறியுண்டு செத்ததை யேசபேல் கேட்டபோது, அவள் ஆகாபை நோக்கி: "நீர் எழுந்திருந்து, யெஸ்ரயேலனாகிய நாபோத் உமக்கு விலைக்கிரயமாய்க் கொடுக்கமாட்டேன் என்று சொன்ன திராட்சத்தோட்டத்தைச் சொந்தமாய் எடுத்துக்கொள்ளும்; நாபோத் உயிரோடில்லை, அவன் செத்துப் போனான்" *(1இராஜா 21:15)* என்று சொல்லுகிறாள்.

யெஸ்ரயேலின் மூப்பருக்கு நீதியின்மேல் பசிதாகமில்லை. அவர்களுக்கு நாபோத்தின்மீது அன்போ, பாசமோ, கரிசனையோ இல்லை. நாபோத் கல்லெறியுண்டு செத்துப்போனதை இஸ்ரவேலின் மூப்பர் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. அவன் செத்துப்போனதை அங்கீகரிக்கிறார்கள். "நாபோத் கல்லெறியுண்டு செத்தான்" என்று சாதாரண செய்தியைச் சொல்லுவதுபோல, இஸ்ரவேலின் மூப்பர் யேசபேலுக்கு செய்தி சொல்லியனுப்புகிறார்கள்.

தன்னுடைய சதித்திட்டம் நிறைவேறியதை கேள்விப்பட்டு யேசபேல் சந்தோஷப்படுகிறாள். நாபோத் செத்துப்போனது அவளுக்கு சந்தோஷமான செய்தியாயிருக்கிறது. யேசபேல் ஆகாபிடம், "நாபோத் உயிரோடில்லை, அவன் செத்துப்போனான்" என்று ஒரு ஜெயசெய்தியை சொல்லுவதுபோல, சந்தோஷமாய்ச் சொல்லுகிறாள். மேலும் யேசபேல் ஆகாபிடம், "நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை சொந்தமாய் எடுத்துக்கொள்ளும்" என்றும் சொல்லுகிறாள்.

ஆகாப் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருக்கிறான். அவன் தன்னுடைய அதிகாரிகளில் ஒருவனை யெஸ்ரயேலுக்கு அனுப்பி, நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை தனக்கு சொந்தமாக்கிக்கொள்ளலாம். ஆனால் ஆகாபோ, நாபோத்தின் திராட்சத்தோட்டம் தனக்கு கிடைக்கப்போகிற சந்தோஷத்திலிருக்கிறான். ஆகாபே யெஸ்ரயேலுக்கு நேரடியாகப்போகிறான்.

நாபோத் செத்துப்போனதை ஆகாப் கேட்டபோது, அவன் யெஸ்ரயேலனாகிய நாபோத்தின் திராட்சத்தோட்டத்தைச் சொந்தமாய் எடுத்துக்கொள்ளும்படி எழுந்துபோகிறான் *(1இராஜா 21:16)*.

ஆகாப் மிகப்பெரிய யுத்தத்திலே வெற்றி கிடைத்ததுபோல சந்தோஷப்படுகிறான். பிற்காலத்தில் யெகூ இந்தத் திராட்சத்தோட்டத்தை மறவாமல் நினைவுகூர்ந்து, இதுபற்றி தன் சேவகனாகிய பித்கார் என்பவனிடத்தில் சொல்லுகிறான்.

"அப்பொழுது யெகூ, தன் சேனாபதியாகிய பித்காரை நோக்கி: அவனை எடுத்து, யெஸ்ரயேலியனாகிய நாபோத்தின் வயல்நிலத்தில் எறிந்து போடு; நானும் நீயும் ஒரு சோடாய் அவன் தகப்பனாகிய ஆகாபின் பிறகே குதிரை ஏறிவருகிறபோது, கர்த்தர் இந்த ஆக்கினையை அவன்மேல் சுமத்தினார் என்பதை நினைத்துக்கொள்" *(2இராஜா 9:25)*.

எலியாவும் ஆகாபும்
1இராஜா 21:17-29

1இராஜா 21:17. கர்த்தருடைய வார்த்தை திஸ்பியனாகிய எலியாவுக்கு உண்டாயிற்று; அவர்:

1இராஜா 21:18. நீ எழுந்து, சமாரியாவிலிருக்கிற இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபைச் சந்திக்கும்படி போ; இதோ, அவன் நாபோத்தின் திராட்சத்தோட்டத்தைச் சொந்தமாய் எடுத்துக்கொள்ள அங்கே போயிருக்கிறான்.

1இராஜா 21:19. நீ அவனைப் பார்த்து: நீ கொலை செய்ததும் எடுத்துக்கொண்டதும் இல்லையோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கின ஸ்தலத்திலே உன்னுடைய இரத்தத்தையும் நாய்கள் நக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்.

1இராஜா 21:20. அப்பொழுது ஆகாப் எலியாவை நோக்கி: என் பகைஞனே, என்னைக் கண்டுபிடித்தாயா என்றான். அதற்கு அவன்: கண்டுபிடித்தேன்; கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய நீ உன்னை விற்றுப்போட்டாய்.

1இராஜா 21:21. நான் உன்மேல் பொல்லாப்பு வரப்பண்ணி, உன் சந்ததியை அழித்துப் போட்டு, ஆகாபுக்கு சுவரில் நீர்விடும் ஒரு நாயாகிலும் இராதபடிக்கு இஸ்ரவேலில் அடைபட்டவனையும் விடுபட்டவனையும் சங்கரித்து,

1இராஜா 21:22. நீ எனக்குக் கோபம் உண்டாக்கி, இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப் பண்ணினதினிமித்தம், உன்னுடைய குடும்பத்தை நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் குடும்பத்துக்கும், அகியாவின் குமாரனாகிய பாஷாவின் குடும்பத்துக்கும் சமானமாக்குவேன் என்றார் என்று சொன்னான்.

1இராஜா 21:23. யேசபேலையும் குறித்துக் கர்த்தர்: நாய்கள் யேசபேலை யெஸ்ரயேலின் மதில் அருகே தின்னும்.

1இராஜா 21:24. ஆகாபின் சந்ததியில் பட்டணத்திலே சாகிறவனை நாய்களும், வெளியிலே சாகிறவனை ஆகாயத்துப்பறவைகளும் தின்னும் என்றார்.

1இராஜா 21:25. தன் மனைவியாகிய யேசபேல் தூண்டிவிட்டபடியே, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய, தன்னை விற்றுப்போட்ட ஆகாபைப்போல ஒருவனுமில்லை.

1இராஜா 21:26. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்னின்று துரத்திவிட்ட எமோரியர் செய்தபடியெல்லாம், அவன் நரகலான விக்கிரகங்களைப் பின்பற்றி, மகா அருவருப்பாய் நடந்துகொண்டான்.

1இராஜா 21:27. ஆகாப் இந்த வார்த்தைகளைக் கேட்டபோது, தன் வஸ்திரங்களைக் கிழித்து, தன் சரீரத்தின்மேல் இரட்டைப் போர்த்துக்கொண்டு, உபவாசம் பண்ணி, இரட்டிலே படுத்துத் தாழ்மையாய் நடந்துகொண்டான்.

1இராஜா 21:28. அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை திஸ்பியனாகிய எலியாவுக்கு உண்டாயிற்று, அவர்:

1இராஜா 21:29. ஆகாப் எனக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினதைக் கண்டாயா? அவன் எனக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்துகிறபடியினால், நான் அவன் நாட்களில் அந்தப் பொல்லாப்பை வரப்பண்ணாமல், அவன் குமாரன் நாட்களில் அதைஅவன் வீட்டின்மேல் வரப்பண்ணுவேன் என்றார்.

ஆகாபின் துன்மார்க்கமான கிரியைகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

"தன் மனைவியாகிய யேசபேல் தூண்டிவிட்டபடியே, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய, தன்னை விற்றுப்போட்ட ஆகாபைப்போல ஒருவனுமில்லை. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்னின்று துரத்திவிட்ட எமோரியர் செய்தபடியெல்லாம், அவன் நரகலான விக்கிரகங்களைப் பின்பற்றி, மகா அருவருப்பாய் நடந்துகொண்டான்" (1இராஜா 21:25,26).

ஆகாப் மிகப்பெரிய துன்மார்க்கனாயிருப்பதினால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவன்மீது கடினமாக வருகிறது. ஆகாப் நாபோத்திற்கு விரோதமாக மாத்திரமல்ல, இன்னும் ஏராளமான பாவங்களையும் செய்திருக்கிறான். கர்த்தர் ஆகாபின் மற்ற பாவங்களுக்காக அவனைத் தண்டித்தாலும், அவன் நாபோத்திற்கு விரோதமாக செய்த பாவத்தினிமித்தம், கர்த்தர் அவனைக் கடினமாய்த் தண்டிக்கிறார்.

ஆகாபினிடத்தில் நல்ல சுபாவம் எதுவுமே இல்லை. அவனுடைய மனைவியாகிய யேசபேலும் ஒரு துன்மார்க்கமான ஸ்திரீ. அவள் சபிக்கப்பட்டவளாயிருக்கிறாள். அவள் தன் புருஷன் ஆகாபை, கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்ய தூண்டிவிடுகிறாள். ஆகாப் நரகலான விக்கிரகங்களைப் பின்பற்றி, மகா அருவருப்பாய் நடந்துகொள்கிறான்.

ஆகாப் தன்னுடைய பாவங்களில் சந்தோஷப்படுகிறான். பாவத்தின் சம்பளம் மரணம். கர்த்தர் பாவிகளுக்கு நிச்சயமாகவே தண்டனை கொடுப்பார். பாவம் செய்கிறவர்கள் மனுஷரின் பார்வைக்கு தங்களை மறைத்துக்கொண்டாலும், அவர்களால் கர்த்தரின் பார்வைக்கு எதையும் மறைக்க முடியாது.

"பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்" (ரோம 6:23).

ஆகாபைப் பாவம் செய்ய அவனுடைய மனைவி யேசபேல் தூண்டிவிட்டாலும், ஆகாப் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்க முடியாது. ஒருவனை பாவம் செய்யத் தூண்டுகிறவனும் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறான். மற்றவர்களால் தூண்டப்பட்டாலும், பாவம் செய்கிறவனும் கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதையே செய்கிறான். ஆகாபின் வீட்டிலே, அவனும் அவனுடைய மனைவி யேசபேலும் குடும்பமாக பாவம் செய்கிறார்கள்.

ஆகாப் நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை தனக்கு சொந்தமாய் எடுத்துக்கொள்ளும்படி யெஸ்ரயேலுக்கு நடந்துபோகிறான். அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை திஸ்பியனாகிய எலியாவுக்கு உண்டாயிற்று. கர்த்தர் இதுவரையிலும் அமைதியாயிருக்கிறார். இப்போதோ ஆகாபுக்கு விரோதமாக தம்முடைய வார்த்தைகளை வெளிப்படுத்துகிறார்.

கர்த்தர் ஆகாபின் பாவங்களை கடிந்துகொள்கிறார். ஆகாபின் பாவங்கள் கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதாயிருக்கிறது. கர்த்தர் ஆகாபுக்கு விரோதமாக தம்முடைய வார்த்தையைச் சொல்ல, திஸ்பியனாகிய எலியாவை அனுப்புகிறார். கர்த்தர் இதுவரையிலும் அமைதியாயிருந்தாலும், தமக்கு ஏற்ற காலம் வரும்போது, அவர் ஆகாபைத் தண்டிக்கிறார்.

ஆகாப் நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை தனக்கு சொந்தமாய் எடுத்துக்கொள்ள யெஸ்ரயேலுக்கு போயிருக்கிறான். எலியா கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரமாக எழுந்து, சமாரியாவிலிருக்கிற, இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபை சந்திக்கும்படி புறப்பட்டுப்போகிறான். எலியா கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை ஆகாபுக்கு சொல்லுகிறான்.

ஆகாபோ நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை தனக்கு சொந்தமாய் எடுத்துக்கொண்டு, அதிலே சந்தோஷமாயிருக்கலாம் என்று நினைக்கிறான். துன்மார்க்கத்தினால் சம்பாதித்த ஐசுவரியம் சந்தோஷத்தைக் கொடுக்காது. துன்மார்க்கரின் ஐசுவரியங்கள் அவர்களுக்கு சாபமாகயிருக்கும். ஆகாப் யெஸ்ரயேலுக்குப்போய், நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை, தனக்கு கீரைக்கொல்லையாக மாற்றவேண்டும் என்பது அவனுடைய திட்டம். ஒருவேளை அவன் இந்த திராட்சத்தோட்டத்தை பூந்தோட்டமாக மாற்றவேண்டும் என்றும் திட்டமிட்டிருக்கலாம்.

எலியா ஆகாபை சந்தித்து கர்த்தருடைய வார்த்தையை சொல்லவேண்டும். கர்த்தர் எலியாவை பார்த்து, "நீ எழுந்து, சமாரியாவிலிருக்கிற இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபைச் சந்திக்கும்படி போ; இதோ, அவன் நாபோத்தின் திராட்சத்தோட்டத்தைச் சொந்தமாய் எடுத்துக்கொள்ள அங்கே போயிருக்கிறான். நீ அவனைப் பார்த்து: நீ கொலை செய்ததும் எடுத்துக்கொண்டதும் இல்லையோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கின ஸ்தலத்திலே உன்னுடைய இரத்தத்தையும் நாய்கள் நக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல்" (1இராஜா 21:18,19) என்று சொல்லுகிறார்.

எலியா கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரமாக சமாரியாவிலிருக்கிற இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபை சந்திக்கும்படி புறப்பட்டுப்போகிறார். இருவரும் யெஸ்ரயேலிலே சந்தித்துக் கொள்கிறார்கள். எலியா ஆகாபினிடத்தில் கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுவதற்கு முன்பாக, ஆகாப் எலியாவினிடத்தில் தன்னுடைய வார்த்தையை சொல்லுகிறான்.

அப்பொழுது ஆகாப் எலியாவை நோக்கி: "என் பகைஞனே, என்னைக் கண்டுபிடித்தாயா" (1இராஜா 21:20) என்று கேட்கிறான். ஆகாப் தீர்க்கதரிசியாகிய எலியாவைப் பார்த்து அவனுக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தவில்லை. ஆகாபுக்கு எலியாவின்மீது கோபம் இருக்கிறது. எலியாவின் முகத்தைப் பார்த்தவுடனேயே ஆகாபின் கோபம் அதிகரிக்கிறது.

ஆகாப் கர்த்தருக்கு முன்பாகவும் தன்னைத் தாழ்த்தவேண்டும். கர்த்தருடைய தீர்க்கதரிசிக்கு முன்பாகவும் தன்னைத் தாழ்த்தவேண்டும். ஆனால் ஆகாபினிடத்தில் மனத்தாழ்மையில்லை. அவன் தீர்க்கதரிசியாகிய எலியாவுக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தவில்லை. ஆகாப் எலியாவைப் பார்க்கும்போது, அவனை தன் பகைஞனைப்போல பார்க்கிறான்.

"தன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்; அவன் கர்த்தருடைய வாக்கை உரைத்த எரேமியா என்கிற தீர்க்கதரிசிக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தவில்லை" (2நாளா 36:12).

ஆகாப் எலியாவைப் பார்த்தவுடனேயே "என் பகைஞனே, என்னைக் கண்டுபிடித்தாயா" என்று கேட்கிறான். இதற்கு முன்பு ஆகாபும் எலியாவும் சந்தித்து பிரிந்துபோனபோது, அவர்கள் இருவரும் நண்பர்களாகவே பிரிந்தார்கள்.

"கர்த்தருடைய கை எலியாவின்மேல் இருந்ததினால், அவன் தன் அரையைக் கட்டிக்கொண்டு, யெஸ்ரயேலுக்கு வருமட்டாக ஆகாபுக்கு முன் ஓடினான்" (1இராஜா 18:46).

ஆகாபும் இஸ்ரவேல் தேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு எலியாவோடு ஒத்துழைத்தான். ஆகையினால் இவ்விரண்டு பேருக்கும் நடுவே அப்போது சிநேகம் இருந்தது. அப்போது ஆகாப் எலியாவுக்கு தீர்க்கதரிசிக்கு கொடுக்கவேண்டிய மரியாதையை கொடுத்தான். ஆனால் இப்போதோ ஆகாப் கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போய்விடுகிறான். ஆகாபின் பின்னிலைமை முன்னிலைமையிலும் மோசமாயிருக்கிறது. ஆகாப் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்ய தன்னை விற்றுப்போடுகிறான்.

ஆகாப் கர்த்தருக்கு சத்துருவாயிருக்கிறான். கர்த்தர் ஆகாபோடு சிநேகமாகத்தான் இருந்தார். ஆனால் ஆகாபோ தன்னுடைய துன்மார்க்கத்தினால், கர்த்தரைத் தனக்கு சத்துருவாக்கிவிட்டான். கர்த்தர் ஆகாபுக்கு சத்துருவாயிருப்பதினால், கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எலியாவும் அவனுக்கு சத்துருவாயிருக்கிறார். ஆகையினால் ஆகாப் எலியாவைப் பார்க்கும்போதே, "என் பகைஞனே" என்று சொல்லுகிறான்.

ஆகாப் எலியாவைப் பகைத்தாலும், அவன் எலியாவுக்கு பயப்படுகிறான். "என்னை கண்டுபிடித்தாயா" என்று ஆகாப் எலியாவிடம் கேட்கிறான். ஒரு குற்றவாளி தன்னைப் பிடிக்க வந்த காவல் அதிகாரியிடம், "என்னைக் கண்டுபிடித்துவிட்டீரா, என்னை கைதுபண்ணுவீரா" என்று கேட்பதுபோல, ஆகாப் எலியாவிடம் கேட்கிறான்.

காவல் அதிகாரி குற்றவாளியின் நலம் விசாரிக்க வரமாட்டார். அவனோடு சிநேகமாயிருக்கவோ அல்லது ஐக்கியமாயிருக்கவோ வரமாட்டார். குற்றவாளியை கைதுபண்ணி சிறையில் அடைத்து, அவனைத் தண்டிப்பதற்காகவே வருவார்.

எலியா ஆகாபுக்கு விரோதமாக கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை சொல்லுகிறார். எலியா ஆகாபைக் கண்டுபிடித்திருக்கிறார். ஆகாப் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்ய தன்னை விற்றுப்போட்டபடியினால், எலியா ஆகாபைக் கண்டுபிடித்திருக்கிறார் (1இராஜா 21:20).

ஆகாப் கர்த்தருக்கு விரோதமாய்த் துணிகரமான பாவம் செய்திருக்கிறான். அவன் நாபோத்தை கொலை செய்திருக்கிறான். நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை தனக்கு சொந்தமாய் எடுத்துக்கொண்டிருக்கிறான் (1இராஜா 21:19).

ஆகாபின் பொல்லாப்புகளினிமித்தமாய் கர்த்தர் அவனைத் தண்டிக்கிறார். கர்த்தர் ஆகாபுக்கு விரோதமாக தம்முடைய நியாயத்தீர்ப்பை சொல்லுகிறார். "நான் உன்மேல் பொல்லாப்பு வரப்பண்ணி, உன் சந்ததியை அழித்துப் போட்டு, ஆகாபுக்கு சுவரில் நீர்விடும் ஒரு நாயாகிலும் இராதபடிக்கு இஸ்ரவேலில் அடைபட்டவனையும் விடுபட்டவனையும் சங்கரித்து, நீ எனக்குக் கோபம் உண்டாக்கி, இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப் பண்ணினதினிமித்தம், உன்னுடைய குடும்பத்தை நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் குடும்பத்துக்கும், அகியாவின் குமாரனாகிய பாஷாவின் குடும்பத்துக்கும் சமானமாக்குவேன்" (1இராஜா 21:21,22) என்று சொல்லுகிறார்.

ஆகாபினுடைய பாவத்தினிமித்தமாய் அவனுக்கும், அவனுடைய குடும்பத்திற்கும் சாபம் வருகிறது. அவனுடைய முழுசந்ததியும் அழிந்துபோகும். ஆகாபின் இரத்தத்தை நாய்கள் நக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆகாபின் இரத்தம் இஸ்ரவேலின் ராஜசந்ததியை சேர்ந்த இரத்தமாயிருந்தாலும், அந்த இரத்தத்தை நாய்கள் நக்கும்.

"அந்த இரதத்தையும் அவனுடைய கவசத்தையும் சமாரியாவின் குளத்திலே கழுவுகிறபோது, கர்த்தர் சொல்லியிருந்த வார்த்தையின்படியே, நாய்கள் அவன் இரத்தத்தை நக்கினது" (1இராஜா 22:38).

ஆகாபின் இரத்த நாளங்களெல்லாம் பெருமையோடும் ஆணவத்தோடும் இருக்கிறது. அவனுடைய நரம்புகளெல்லாம் துன்மார்க்கத்தினால் நிரம்பியிருக்கிறது. நாய்களுக்கு ஆகாபின் இரத்தம் சுவையாகயிருக்கிறது. ஆகாப் நாபோத்தின் இரத்தத்தை சிந்துவதற்கு காரணமாயிருந்தான். குற்றமற்றவனுடைய இரத்தத்தை சிந்தினான். கர்த்தர் ஆகாபுக்கு தம்முடைய நீதியான தீர்ப்பை சொல்லுகிறார். ஆகாபின் இரத்தத்தை நாய்கள் நக்குகிறது.

ஆகாபுக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தை உண்டானதுபோல, யேசபேலுக்கு விரோதமாகவும் கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. யேசபேலையும் குறித்துக் கர்த்தர்: "நாய்கள் யேசபேலை யெஸ்ரயேலின் மதில் அருகே தின்னும்" (1இராஜா 21:23) என்று சொல்லுகிறார்.

ஆகாபின் சந்ததியில் பட்டணத்திலே சாகிறவனை நாய்களும், வெளியிலே சாகிறவனை ஆகாயத்துப்பறவைகளும் தின்னும் என்பது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பாயிருக்கிறது.

ஆகாப் இந்த வார்த்தைகளைக் கேட்டபோது, தன் வஸ்திரங்களைக் கிழித்து, தன் சரீரத்தின்மேல் இரட்டைப் போர்த்துக்கொண்டு, உபவாசம் பண்ணி, இரட்டிலே படுத்துத் தாழ்மையாய் நடந்துகொள்கிறான் (1இராஜா 21:27).

ஆகாப் கர்த்தருக்கு முன்பாக தன்னை தாழ்த்தியதினால், கர்த்தருடைய கிருபையுள்ள வார்த்தை அவனுக்கு உண்டாயிற்று. எலியா கர்த்தருடைய நாமத்தினால் ஆகாபுக்கு சாபமான வார்த்தைகளைச் சொன்னார். ஆகாப் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளைக் கேட்டு பயப்படுகிறான். தன்னுடைய வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்கிறான். உபவாசம்பண்ணி தாழ்மையாய் நடந்துகொள்கிறான்.

வஸ்திரங்களைக் கிழிப்பது, சரீரத்தின்மேல் இரட்டைப் போர்த்துக் கொள்வது ஆகியவை துக்கத்திற்கு அடையாளம். இருதயத்தில் ஏற்படும் துக்கமே மெய்யான துக்கம். இருதயத்தில் துக்கமில்லாமல், வெளிப்படையான அடையாளத்தை மாத்திரம் காண்பிப்பது மாய்மாலம்.

ஆகாப் தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டைப் போர்த்துக்கொண்டாலும், அவனுடைய இருதயத்தில் உண்மையான மனமாற்றம் ஏற்படவில்லை. அவனுடைய சரீரத்தில் தாழ்மைக்கான அடையாளம் உண்டாயிற்று. மனதிலோ இன்னும் தாழ்மை உண்டாகவில்லை.

ஆகாப் தன்னுடைய பாவங்களுக்கு முற்றிலுமாய் மனந்திரும்பாமல், அரையும் குறையுமாக மனந்திரும்புகிறான். கர்த்தரோ தம்முடைய கிருபையினால் அவனுடைய பாவங்களை மன்னிக்கிறார். அவனுக்கு கிருபை காண்பிக்கிறார். ஆகாப் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளைக் கேட்டு அழுது புலம்புகிறான். அவன் தன்னுடைய பாவங்களுக்காக மனம் வருந்தவில்லை.

ஆகாப் தன்னுடைய விக்கிரகங்களை விட்டு விலகி வரவுமில்லை. நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை, அவனுடைய சந்ததியாரிடத்தில் திரும்ப கொடுக்கவுமில்லை. ஆனாலும் கர்த்தர் ஆகாபுக்கு இரக்கம் காண்பிக்கிறார். இதன் மூலமாய் கர்த்தர் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார்.

எலியா தன் வஸ்திரங்களைக் கிழித்து, தன் சரீரத்தின்மேல் இரட்டைப் போர்த்துக்கொண்டு, உபவாசம் பண்ணி, இரட்டிலே படுத்துத் தாழ்மையாய் நடந்துகொள்வதை கர்த்தர் பார்க்கிறார். கர்த்தர் எலியாவிடம், "ஆகாப் எனக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினதைக் கண்டாயா?" (1இராஜா 21:29) என்று கேட்கிறார்.

கர்த்தர் நம்மைக் காண்கிறவர். அவர் நம்முடைய இருதயத்தை ஆராய்ந்து அறிகிறவர். நம்முடைய பாவங்களுக்கு நாம் மனந்திரும்பவேண்டும். சில சமயங்களில் நாம் நம்முடைய பாவங்களுக்கு முழுவதுமாக மனந்திரும்பாமலிருப்போம். நம்முடைய ஜீவியம் எப்படியிருக்கவேண்டுமோ அப்படி இருக்காது. நாம் எப்படி நன்மை செய்யவேண்டுமோ அப்படி நன்மை செய்யமாட்டோம். நம்மிடத்தில் குறைகள் இருக்கும். ஆனாலும் கர்த்தர் நம்முடைய குறைகளை பெரிதுபடுத்தாமல், தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் நமக்குக் காண்பிக்கிறார்.

கர்த்தருடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும், இந்தப் பிரபஞ்சத்தில், துன்மார்க்கரில் அநேகர் செழித்திருக்கிறார்கள். ஒரு சிலர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பமாட்டார்கள். ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய ஊழியங்களில் ஓரளவு பங்குபெறுவார்கள். கர்த்தர் தம்முடைய கிருபையினால் அவர்களையும் ஆசீர்வதிக்கிறார்.

நம்முடைய பாவங்களுக்கு மனந்திரும்புபோது, நாம் முற்றிலுமாய் மனந்திரும்பவேண்டும். அதுவே நமக்கு மெய்யான ஆசீர்வாதம். நம்முடைய முழுஇருதயத்தோடும், முழுஆத்துமாவோடும் கர்த்தரிடத்தில் அன்புகூரவேண்டும். அப்போது கர்த்தருடைய பரிபூரணமான ஆசீர்வாதம் நமக்கு கிடைக்கும்.

கர்த்தரை முழுஇருதயத்தோடு பின்பற்றாமல், அரைகுறை மனதோடு பின்பற்றுகிறவர்கள், கர்த்தரைவிட்டு பின்வாங்கிப்போய்விடுவதற்கு அதிக வாய்ப்புள்ளது.

ஆகாப் கர்த்தருக்கு முன்பாக தாழ்மையாய் நடந்துகொள்கிறான். அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை திஸ்பியனாகிய எலியாவுக்கு உண்டாயிற்று, கர்த்தர் எலியாவை நோக்கி, "ஆகாப் எனக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினதைக் கண்டாயா? அவன் எனக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்துகிறபடியினால், நான் அவன் நாட்களில் அந்தப் பொல்லாப்பை வரப்பண்ணாமல், அவன் குமாரன் நாட்களில் அதை அவன் வீட்டின்மேல் வரப்பண்ணுவேன்" (1இராஜா 21:28,29) என்று சொல்லுகிறார்.

தன்னுடைய பாவங்களுக்கு அரையும் குறையுமாக மனந்திரும்பிய ஆகாப், பொல்லாப்புக்கு தப்பித்து தன்னுடைய வீட்டிற்கு திரும்பிப்போகிறான். நம்முடைய பாவங்களுக்கு நாம் முற்றிலுமாய் மனந்திரும்பும்போது, நாம் நீதிமான்களாக்கப்பட்டு நம்முடைய வீட்டிற்கு திரும்பிப்போவோம்.

22 அதிகாரம்

கர்த்தர் ஆகாபுக்கு அவனுடைய நாட்களிலே பொல்லாப்பை வரப்பண்ணாமல், அவன் குமாரன் நாட்களில், அதை அவன் வீட்டின்மேல் வரப்பண்ணுவேன் என்று வாக்குப்பண்ணினார் (1இராஜா 21:29). ஆகாபின் நாட்களோ சீக்கிரத்தில் முடிந்துபோகிறது.

இந்த அதிகாரத்தில் கீலேயாத்திலுள்ள ராமோத்தில் சீரியருக்கு விரோதமாக நடைபெறும் யுத்தத்தைப்பற்றி விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. ஆகாப் இந்த யுத்தத்திற்கு தன்னை ஆயத்தப்படுத்துகிறான். ஆகாப் தன்னுடைய ஊழியக்காரரோடு யுத்தசம்பந்தமாக ஆலோசனை பண்ணுகிறான் (1இராஜா 22:1-3). யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தோடும் (1இராஜா 22:4) ஆலோசனை பண்ணுகிறான்.

சீரியரோடு யுத்தம்பண்ணுவது சம்பந்தமாக ஆகாப் தன்னுடைய தீர்க்கதரிசிகளோடும் ஆலோசனை பண்ணுகிறான். ஆகாபின் தீர்க்கதரிசிகள் சீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுமாறு அவனை உற்சாகப்படுத்துகிறார்கள் (1இராஜா 22:5,6). சிதேக்கியா என்னும் தீர்க்கதரிசி தனக்கு இருப்பு கொம்புகளை உண்டாக்கி, இவைகளினால் ஆகாப் சீரியரை முட்டி நிர்மூலமாக்கிப்போடுவான் என்று சொல்லுகிறான் (1இராஜா 22:11,12).

மிகாயா கர்த்தருடைய தீர்க்கதரிசி. யோசபாத் மிகாயாவிடம் விசாரிக்க வேண்டுமென்று சொல்லுகிறான் (1இராஜா 22:7,8). ஆகாப் மிகாயாவை அழைத்து வர தன்னுடைய பிரதானிகளில் ஒருவனை அனுப்புகிறான் (1இராஜா 22:9,10-13,14).

ஆகாப் ஏற்கெனவே கள்ளத்தீர்க்கதரிசிகளிடத்தில் ஆலோசனை செய்திருக்கிறான். ஆரம்பத்தில் மிகாயாவும் அவர்களுடைய வார்த்தைக்கு ஒத்துப்பேசுகிறான் (1இராஜா 22:15). மிகாயா அதன்பின்பு ஆகாபுக்கு கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறான். சீரியருக்கு விரோதமான யுத்தத்திலே ஆகாப் தோற்றுப்போவான் (1இராஜா 22:16-18).

மிகாயா ஆகாபிடம் தன்னுடைய தரிசனத்தைப்பற்றி விவரிக்கிறான். கள்ளத்தீர்க்கதரிசிகளின் வாயிலே பொய்யின் ஆவி இருப்பதைப்பற்றிச் சொல்லுகிறான் (1இராஜா 22:19-23). சிதேக்கியா மிகாயாவை கன்னத்தில் அடிக்கிறான் (1இராஜா 22:24,25). ஆகாப் மிகாயாவை சிறைச்சாலையில் வைக்கிறான் (1இராஜா 22:26-28).

சீரியாவுக்கு விரோதமாக ஆகாபும், யோசபாத்தும் யுத்தம்பண்ணுகிறார்கள். யோசபாத் ராஜவஸ்திரம் தரித்திருக்கிறான். ஆகாப் வேஷம் மாறிப்போகிறான். இந்த யுத்தத்தில் ஆகாப் செத்துப்போகிறான் (1இராஜா 22:29-40).

யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தின் வர்த்தமானங்கள் (1இராஜா 22:41-50). அகசியாவின் துன்மார்க்கமான ராஜரீகம் (1இராஜா 22:51-53).

ஆகாபும் யோசபாத்தும்
1இராஜா 22:1-4

1இராஜா 22:1. சீரியருக்கும் இஸ்ரவேலருக்கும் மூன்று வருஷம் யுத்தமில்லாமலிருந்தது.

1இராஜா 22:2. மூன்றாம் வருஷத்திலே யூதாவின் ராஜாவாகிய யோசேபாத் இஸ்ரவேலின் ராஜாவினிடத்திற்குப் போயிருக்கும்போது,

1இராஜா 22:3. இஸ்ரவேலின் ராஜா தன் ஊழியக்காரரை நோக்கி: கீலேயாத்திலுள்ள ராமோத் நம்முடையதென்று அறியீர்களா? நாம் அதைச் சீரியா ராஜாவின் கையிலிருந்து பிடித்துக்கொள்ளாமல், சும்மாயிருப்பானேன் என்று சொல்லி,

1இராஜா 22:4. யோசபாத்தை நோக்கி: கீலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ண என்னோடுகூட வருகிறீரா என்று கேட்டான். யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவை நோக்கி: நான்தான் நீர், என்னுடைய ஜனங்கள் உம்முடைய ஜனங்கள், என்னுடைய குதிரைகள் உம்முடைய குதிரைகள் என்றான்.

எலியா ஆகாபுக்கு கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளைச் சொன்னார். ஆகாப் அந்த வார்த்தைகளைக் கேட்டு, கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தினான். கர்த்தர் ஆகாபுக்கு தமது கிருபையை வெளிப்படுத்தினான். ஆகாபின் நாட்களில் அவனுக்கு பொல்லாப்பு வரவில்லை.

கர்த்தர் ஆகாபுக்கு பொல்லாப்பை வரப்பண்ணாமலிருந்தாலும், ஆகாப் இன்னும் துன்மார்க்கனாகவே இருக்கிறான். அவன் கர்த்தரைவிட்டு விலகி விக்கிரகங்களைப் பின்பற்றுகிறான். ஆகாப் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தியதினால், கர்த்தர் அவனையும் இஸ்ரவேல் தேசத்தையும் ஆசீர்வதிக்கிறார். சீரியருக்கும் இஸ்ரவேலருக்கும் மூன்று வருஷம் யுத்தமில்லாதிருக்கிறது (1இராஜா 22:1).

ஆகாப் இஸ்ரவேல் தேசத்தில் ராஜாவாயிருக்கும்போது, யோசபாத் யூதாதேசத்தை ராஜ்யபாரம்பண்ணுகிறான். மூன்றாம் வருஷத்திலே, யூதாவின் ராஜாவாகிய யோசபாத், இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபை சந்திக்க சமாரியாவுக்கு வருகிறான். யோசபாத் மரியாதையின் நிமித்தமாக ஆகாபை சந்திக்கிறான்.

ஆகாப் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தியதுபற்றி, யூதருடைய பாரம்பரிய சரித்திரத்தில், ஒரு சம்பவம் சொல்லப்படுகிறது . ஆகாப் தன் பாவத்திற்கு மனந்திரும்புகிறான். யூதாவின் ராஜாவாகிய யோசபாத் சமாரியாவுக்கு வந்து, தன்னுடைய பாவங்களினிமித்தமாய், தன்னை சிட்சிக்கவேண்டுமென்று ஆகாப் செய்தி சொல்லியனுப்புகிறான். யோசபாத்தும் ஆகாபின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு சமாரியாவிலே சிறிது காலம் தங்கியிருக்கிறான். யோசபாத் ஆகாபை ஒவ்வொரு நாளும் விசேஷமான வாரினால், குறிப்பிட்ட தடவைகளுக்கு அடித்தான் என்று யூதருடைய பாரம்பரிய சரித்திரம் சொல்லுகிறது. இந்த சம்பவத்திற்கு வேதாகமத்தில் ஆதாரம் எதுவுமில்லை.

ஆனாலும் யூதாவின் ராஜாவாகிய யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபினிடத்திற்கு வந்திருப்பதைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் இருவரும் தங்கள் தேசங்களைப்பற்றி கலந்து பேசிக்கொள்வதற்காக, ஒன்றாய்க் கூடிவந்திருக்கலாம். இந்தக் காலத்தில் சீரியர்கள் ஆகாபுக்கு எந்தப் பிரச்சனையும், தொந்தரவும் கொடுக்கவில்லை.

யோசபாத் ஆகாபினிடத்தில் வந்திருக்கும்போது, ஆகாப் தன் ஊழியக்காரரோடு சீரியாவின்மீது யுத்தம்பண்ணுவதுபற்றி கலந்து ஆலோசனை செய்துகொண்டிருக்கிறான்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் தன் ஊழியக்காரரை நோக்கி: "கீலேயாத்திலுள்ள ராமோத் நம்முடையதென்று அறியீர்களா? நாம் அதைச் சீரியா ராஜாவின் கையிலிருந்து பிடித்துக்கொள்ளாமல், சும்மாயிருப்பானேன்" (1இராஜா 22:3) என்று சொல்லுகிறான்.

ஆகாப் தன் ஊழியக்காரரோடு ஆலோசனை பண்ணுவதோடு, யோசபாத்தோடும் இது சம்பந்தமாகப் பேசுகிறான். ஆகாப் யோசபாத்தை நோக்கி: "கீலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ண என்னோடுகூட வருகிறீரா" என்று கேட்கிறான். யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவை நோக்கி: "நான்தான் நீர், என்னுடைய ஜனங்கள் உம்முடைய ஜனங்கள், என்னுடைய குதிரைகள் உம்முடைய குதிரைகள்" (1இராஜா 22:4) என்று சொல்லுகிறான்.

மூன்று வருஷங்களுக்கு முன்பு சீரியருக்கும் இஸ்ரவேலருக்கும் யுத்தம் நடைபெற்றது. இந்த யுத்தத்திலே கர்த்தர் சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத்தை ஆகாபின் கையிலே ஒப்புக்கொடுத்தார்.

"அப்பொழுது பெனாதாத் ஆகாபைப் பார்த்து: என் தகப்பன் உம்முடைய தகப்பனார் கையிலே பிடித்த பட்டணங்களைத் திரும்பக் கொடுத்துவிடுகிறேன்; என் தகப்பன் சமாரியாவிலே செய்ததுபோல, நீரும் தமஸ்குவிலே வீதிகளை உண்டாக்கிக் கொள்ளலாம் என்றான். அதற்கு அவன், இந்த உடன்படிக்கை செய்து நான் உம்மை அனுப்பிவிடுகிறேன் என்று சொல்லி, அவனோடு உடன்படிக்கைபண்ணி அவனை அனுப்பிவிட்டான்" (1இராஜா 20:34).

தன்னுடைய தகப்பன், ஆகாபின் தகப்பன் கையிலே பிடித்த பட்டணங்களை திரும்ப கொடுத்துவிடுவதாக, சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் வாக்குப்பண்ணினான். ஆகாபும் பெனாதாத்தின் வார்த்தைகளை நம்பினான். ஆனால் பெனாதாத்தோ தன் வார்த்தையில் உண்மையாயில்லை.

ஆகாபினிடத்தில் இரக்கம் பெறவேண்டுமென்பதற்காக பெனாதாத் அவனுக்கு ஆசை வார்த்தைகளை சொன்னான். ஆகாப் பெனாதாத்தோடு சமாதான உடன்படிக்கை செய்து கொண்ட பின்பு, பெனாதாத் ஆகாபுக்கு சொன்ன வார்த்தைகளை மறந்துவிடுகிறான். தனக்கு ஆதாயம் கிடைக்குமென்றால், தான் சொன்ன வார்த்தைகள் பெனாதாத்திற்கு ஞாபகம் வரும். தனக்கு ஆதாயமில்லாமல் நஷ்டம் வருமென்றால், தான் சொன்ன வார்த்தைகளை பெனாதாத் மறந்துவிடுவான்.

பெனாதாத்தைப்போல இக்காலத்திலும் ஏராளமானோர் இருக்கிறார்கள். இவர்கள் சுயநலமுள்ளவர்கள். இவர்கள் தங்களுடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கமாட்டார்கள். இவர்கள் சொல்லுவது ஒன்றாகவும், செய்வது வேறொன்றாகவும் இருக்கும்.

ஆகாப் பெனாதாத்தோடு சமாதான உடன்படிக்கை பண்ணிக்கொண்டு, அவன் கையிலிருந்து எத்தனை பட்டணங்களை திரும்பப் பெற்றுக்கொண்டான் என்பது தெரியவில்லை. இந்த வசனப்பகுதியில் கீலேயாத்திலுள்ள ராமோத்தைப்பற்றி மாத்திரமே சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பட்டணம் யோர்தானுக்கு அப்புறத்தில், காத் புத்திரரின் சுதந்தரத்திலிருக்கிறது.

கீலேயாத்திலுள்ள ராமோத் பட்டணத்தை சீரியா ராஜாவின் கையிலிருந்து இன்னும் பிடித்துக்கொள்ளாமலிருப்பதற்காக, ஆகாப் தன்னையும், தன்னுடைய ஜனங்களையும் குற்றம் சொல்லுகிறான். பெனாதாத் உடன்படிக்கையை மீறியதினால், ஆகாபும் அவனோடு செய்துகொண்ட சமாதான உடன்படிக்கையை மீறி, சீரியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண வேண்டுமென்று தீர்மானிக்கிறான்.

சீரியருக்கு விரோதமான யுத்தத்திலே, யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தையும், ஆகாப் தன்னுடைய பக்கத்தில் சேர்த்துக்கொள்கிறான். ஆகாப் யோசபாத்தை நோக்கி, "கீலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ண என்னோடேகூட வருகிறீரா" என்று கேட்கிறான். யோசபாத்தும் அவனோடுகூட வர சம்மதம் தெரிவிக்கிறான்.

யோசபாத் கர்த்தருக்கு பயந்து யூதாதேசத்தை ராஜ்யபாரம்பண்ணுகிறான். அவன் ஒரு நீதிமான். ஆகாபோ ஒரு துன்மார்க்கன். இஸ்ரவேல் தேசத்தில், ஆகாபின் பெயரால், யேசபேல் ராஜ்யபாரம் பண்ணுகிறாள். ஆனால் யோசபாத் ஆகாபை நோக்கி, "நான் தான் நீர்" என்றும், "என்னுடைய ஜனங்கள் உம்முடைய ஜனங்கள்" என்றும், "என்னுடைய குதிரைகள் உம்முடைய குதிரைகள்" என்றும் சொல்லுகிறான்.

யோசபாத் ஆகாபைப்போல ஒரு துன்மார்க்கனல்ல. யூதாஜனங்களும் இஸ்ரவேல் ஜனங்களைப்போல துன்மார்க்கரல்ல. ஆகாபும், இஸ்ரவேல் ஜனங்களும் அதிக துன்மார்க்கராயும், அதிக அக்கிரமக்காரராயும் இருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரைவிட்டு விலகி பாகால்களை ஆராதிக்கிறார்கள்.

ஆகாப் துன்மார்க்கனாயிருந்தாலும், யோசபாத் அவனோடு ஐக்கியம் வைக்கிறான். யோசபாத்தைப்போல நல்லவர்களில் அநேகர் துன்மார்க்கரோடு சவகாசம் வைத்து, முடிவிலே சீரழிந்துபோகிறார்கள். அவர்கள் தங்களுக்கு வரப்போகும் ஆபத்துக்களை அறியாதவர்களாயும், தங்களுக்கு மறைவாக வைக்கப்பட்டிருக்கும் கண்ணிகளை குறித்து கவலையில்லாதவர்களாயும் இருக்கிறார்கள். ஆகாப் இருளின் கிரியைகளை செய்கிறவன். அவன் அந்தகாரத்தின் புத்திரன்.

யோசபாத் ஆகாபை நோக்கி, "நான்தான் நீர்" என்று சொன்னான். யோசபாத் இப்படி சொன்னதற்கு, அவன் யுத்தக்களத்திலே மிகப்பெரிய கிரயத்தை செலுத்த வேண்டியதாயிற்று. சீரியர்கள் ஆகாபுக்கு பதிலாக யோசபாத்தை கொன்றுபோட வருகிறார்கள். யோசபாத் கர்த்தருடைய கிருபையினால் தப்பித்துக்கொள்கிறான்.

யோசபாத் இஸ்ரவேலோடு சேர்ந்து சீரியாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவதற்கு மற்றும் ஒரு காரணமுமுள்ளது. யோசபாத்தின் தகப்பனார் சீரியரோடு சேர்ந்துகொண்டு, இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணினார். தன்னுடைய தகப்பனார் செய்த பாவத்திற்கு பாவநிவாரணமாக, யோசபாத் ஆகாபோடு சேர்ந்துகொண்டு, சீரியாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறான்.

"எனக்கும் உமக்கும் என் தகப்பனுக்கும் உம்முடைய தகப்பனுக்கும் உடன்படிக்கை உண்டே; இதோ, உமக்கு வெகுமதியாய் வெள்ளியையும் பொன்னையும் அனுப்புகிறேன்; இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷா என்னைவிட்டு விலகிப்போகும்படிக்கு, நீர் வந்து அவனோடு செய்த உடன்படிக்கையைத் தள்ளிப்போடும் என்று சொல்லச்சொன்னான். பெனாதாத், ராஜாவாகிய ஆசாவுக்குச் செவிகொடுத்து, தனக்கு உண்டான சேனாபதிகளை இஸ்ரவேலின் பட்டணங்களுக்கு விரோதமாக அனுப்பி, ஈயோனையும், தாணையும் பெத்மாக்கா என்னும் ஆபேலையும் கின்னரோத் அனைத்தையும் நப்தலியின் முழுத்தேசத்தோடுங்கூட முறிய அடித்தான்" (1இராஜா 15:19,20)

தீர்க்கதரிசிகள்
1இராஜா 22:5-14

1இராஜா 22:5. பின்னும் யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவைப் பார்த்து: கர்த்தருடைய வார்த்தையை இன்றைக்கு விசாரித்து அறியும்.

1இராஜா 22:6. அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா ஏறக்குறைய நானூறு தீர்க்கதரிசிகளைக் கூடிவரச்செய்து: நான் கீலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம் பண்ணப்போகலாமா, போகலாகாதா என்று அவர்களைக் கேட்டதற்கு; அவர்கள், போம், ஆண்டவர் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றார்கள்.

1இராஜா 22:7. பின்பு யோசபாத்; நாம் விசாரித்து அறிகிறதற்கு இவர்களையல்லாமல் கர்த்தருடைய தீர்க்கதரிசி வேறே யாராகிலும் இங்கே இல்லையா என்று கேட்டான்.

1இராஜா 22:8. அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா, யோசபாத்தை நோக்கி: கர்த்தரிடத்தில் விசாரித்து அறிகிறதற்கு இம்லாவின் குமாரனாகிய மிகாயா என்னும் இன்னும் ஒருவன் இருக்கிறான்; ஆனாலும் நான் அவனைப் பகைக்கிறேன்; அவன் என்னைக் குறித்து நன்மையாக அல்ல, தீமையாகவே தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் என்றான். அதற்கு யோசபாத், ராஜாவே, அப்படிச் சொல்லவேண்டாம் என்றான்.

1இராஜா 22:9. அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா பிரதானிகளில் ஒருவனைக் கூப்பிட்டு: இம்லாவின் குமாரனாகிய மிகாயாவைச் சீக்கிரமாய் அழைத்துவா என்றான்.

1இராஜா 22:10. இஸ்ரவேலின் ராஜாவும், யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தும், சமாரியாவின் ஒலிமுகவாசலுக்கு முன்னிருக்கும் விசாலத்திலே ராஜவஸ்திரம் தரித்துக் கொண்டவர்களாய், அவரவர் தம்தம் சிங்காசனத்தில் உட்கார்ந்திருந்தார்கள்; சகல தீர்க்கதரிசிகளும் அவர்களுக்கு முன்பாகத் தீர்க்கதரிசனஞ்சொன்னார்கள்.

1இராஜா 22:11. கேனானாவின் குமாரனாகிய சிதேக்கியா தனக்கு இருப்புக்கொம்புகளை உண்டாக்கி, இவைகளால் நீர் சீரியரை முட்டி நிர்மூலமாக்கிப் போடுவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

1இராஜா 22:12. சகல தீர்க்கதரிசிகளும் அதற்கு இசைவாகத் தீர்க்கதரிசனம் சொல்லி, கீலேயாத்திலுள்ள ராமோத்துக்குப் போம், உமக்கு வாய்க்கும்; கர்த்தர் அதை ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றார்கள்.

1இராஜா 22:13. மிகாயாவை அழைக்கப்போன ஆள் அவனுடன் பேசி: இதோ, தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகள் ஏகவாக்காய் ராஜாவுக்கு நன்மையாயிருக்கிறது; உம்முடைய வார்த்தையும் அவர்களில் ஒருவர் வார்த்தையைப்போல இருக்கும்படி நன்மையாகச் சொல்லும் என்றான்.

1இராஜா 22:14. அதற்கு மிகாயா: கர்த்தர் என்னிடத்தில் சொல்வதையே சொல்லுவேன் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்.

சீரியாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போவதுபற்றி கர்த்தருடைய வார்த்தையை விசாரித்து அறியவேண்டுமென்று யோசபாத் ஆகாபுக்கு சொல்லுகிறான். யோசபாத் கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவன். அவன் கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கிறவன். ஆகையினால் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளிடத்தில் விசாரிக்கவேண்டும் என்னும் விருப்பம் யோசபாத்தின் மனதிலிருக்கிறது.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபோ கர்த்தருக்கு பயப்படாதவன். அவன் கர்த்தரிடத்தில் விசாரியாமல், தன் ஊழியக்காரரிடத்தில் இந்த யுத்தத்தைப்பற்றி விசாரித்தான் (1இராஜா 22:3). தன் ஊழியக்காரரிடத்தில் விசாரித்தது போதுமானது என்று ஆகாப் நினைக்கிறான். யோசபாத்தோ இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபைப் பார்த்து, "கர்த்தருடைய வார்த்தையே இன்றைக்கு விசாரித்தறியும்" (1இராஜா 22:5) என்று சொல்லுகிறான்.

கர்த்தருடைய ஜனம் எங்கே போனாலும், அங்கே அவர்கள் தங்களோடுகூட கர்த்தருடைய வார்த்தைகளையும் எடுத்துக்கொண்டு போவார்கள். நீதிமான்கள் எங்கே போனாலும் கர்த்தருடைய பிரசன்னமும் அவர்களோடு கூடயிருக்கும். அவர்கள் எல்லா இடங்களிலும் கர்த்தருக்கு பயந்து ஜீவிப்பார்கள். அவர்கள் கர்த்தரை ஆராதிக்க வெட்கப்படமாட்டார்கள்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் கர்த்தரை விட்டு விலகிப்போனவன். அவன் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை உபத்திரவப்படுத்துகிறவன். ஆகாபுக்கு கர்த்தருடைய தீர்க்கதரிசிகள்மேல் பிரியமாயில்லை. ஆனாலும் யூதாவின் ராஜாவாகிய யோசபாத், ஆகாபைப் பார்த்து, "கர்த்தருடைய வார்த்தையை இன்றைக்கு விசாரித்தறியும்" என்று சொல்லுகிறான்.

ஆகாபினிடத்தில் ஏறக்குறைய நானூறு தீர்க்கதரிசிகள் இருக்கிறார்கள். இவர்கள் தோப்பு விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகள். இவர்கள் எல்லோருமே கள்ளத்தீர்க்கதரிசிகள்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் ஏறக்குறைய நானூறு தீர்க்கதரிசிகளைக் கூடிவரச்செய்கிறான். ஆகாப் அவர்களிடத்தில், "நான் கீலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ணப்போகலாமா, போகலாகாதா" என்று கேட்கிறான். அதற்கு அவர்கள், "போம், ஆண்டவர் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார்" (1இராஜா 22:6) என்று சொல்லுகிறார்கள்.

ஆகாபின் நானூறு கள்ளத்தீர்க்கதரிசிகளும், அவனுடைய மனதிற்கு பிரியமான வார்த்தைகளைப் பேசுகிறார்கள். ஆகாப் தீர்க்கதரிசிளிடத்தில் கேட்கும்போதே, "யுத்தம்பண்ணப்போகலாமா, போகலாகாதா" என்று கேட்கிறான். ஆப்ாப் கேட்கும் முறையை வைத்தே, அவனுடைய மனதின் விருப்பத்தை கள்ளத்தீர்க்கதரிசிகள் அறிந்துகொள்கிறார்கள். ஆகாபுக்கு பிரியமாகப் பேசவேண்டும். இதுவே தீர்க்கதரிசிகளின் நோக்கம். ஆகாப் தன் மனதில் நினைத்திருப்பதை உறுதிபண்ணவேண்டும். இதற்காகவே ஆகாப் நானூறு கள்ளத்தீர்க்கதரிசிகளை தன்னிடத்தில் கூடிவரச்செய்திருக்கிறான்.

ஆகாபின் கள்ளத்தீர்க்கதரிசிகள் இதுவரையிலும் அவனுக்கு பிரியமான வார்த்தைகளை மாத்திரமே சொன்னார்கள். இப்போதோ ஆகாபோடுகூட, யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தும் இருக்கிறான். அவன் கர்த்தரை ஆராதிக்கிறவன். ஆகாபின் தீர்க்கதரிசிகள், சூழ்நிலைகளை நன்றாய் அறிந்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் ஆகாபுக்கு பிரதியுத்தரம் சொல்லும்போது, "ஆண்டவர் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார்" என்று சொல்லுகிறார்கள். ஆண்டவர் என்னும் பெயருக்கு அவர்கள் "அதோனாய்" என்னும் எபிரெய வார்த்தையைப் பயன்படுத்துகிறார்கள். இந்த வார்த்தை கர்த்தரைக் குறிக்கிறது.

கள்ளத்தீர்க்கதரிசிகள் ஆகாபை பிரியப்படுத்தும் வண்ணமாக, "போம்" என்று சொல்லுகிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகள் மத்தியிலே சிதேக்கியா என்பவன் இருக்கிறான். இவன் கள்ளத்தீர்க்கதரிசிகளில் பிரபல்யமானவன்.

கேனானாவின் குமாரனாகிய சிதேக்கியா தனக்கு இருப்புக்கொம்புகளை உண்டாக்கி, இவைகளால் நீர் சீரியரை முட்டி நிர்மூலமாக்கிப் போடுவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல்லுகிறான் (1இராஜா 22:11).

சிதேக்கியா உண்டாக்குகிற இரண்டு இருப்பு கொம்புகளும், ஆகாபையும், யோசபாத்தையும் குறிக்கும். இவ்விரண்டு ராஜாக்களும் இருப்பு கொம்புகளைப்போல வல்லமையுள்ளவர்கள். அவர்கள் பெலமிக்கவர்கள். ஆகாபும் யோசபாத்தும் தங்களுடைய இருப்பு கொம்புகளினால் சீரியரை முட்டி நிர்மூலமாக்கிப்போடுவார்கள்.

சிதேக்கியா சொல்லுகிற தீர்க்கதரிசனத்தை, அங்கே கூடியிருக்கிற மற்ற தீர்க்கதரிசிகள் எல்லோரும் அங்கீகரிக்கிறார்கள். சகல தீர்க்கதரிசிகளும் அதற்கு இசைவாகத் தீர்க்கதரிசனம் சொல்லி, "கீலேயாத்திலுள்ள ராமோத்துக்குப் போம், உமக்கு வாய்க்கும்; கர்த்தர் அதை ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார்" என்று சொல்லுகிறார்கள் (1இராஜா 22:12).

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் தன்னுடைய கள்ளத்தீர்க்கதரிசிகளிடத்தில் விசாரிப்பதும், அவர்கள் அவனுக்கு தீர்க்கதரிசனம் சொல்லுவதும், யூதாவின் ராஜாவாகிய யோசபாத்துக்கு மிகவும் விநோதமாயிருக்கிறது. யூதாதேசத்திலிருக்கிற கர்த்தருடைய தீர்க்கதரிசிகள், ஆகாபின் தீர்க்கதரிசிகளைப்போல தீர்க்கதரிசனம் சொல்லமாட்டார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகள் ஏறக்குறைய நானூறு பேரும் ஒன்றுபோல தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். இது யோசபாத்திற்கு புதுமையாயிருக்கிறது.

யூதாவின் ராஜாவாகிய யோசபாத் ஆவிகளைப் பகுத்தறிகிறவன். ஆகாபின் தீர்க்கதரிசிகளிடத்தில் தப்பிதம் இருப்பதை யோசபாத் தன் ஆவியில் உணருகிறான். ஆகையினால் யோசபாத் ஆகாபிடம், "நாம் விசாரித்து அறிகிறதற்கு இவர்களையல்லாமல் கர்த்தருடைய தீர்க்கதரிசி வேறே யாராகிலும் இங்கே இல்லையா" (1இராஜா 22:7) என்று கேட்கிறான்.

ஆகாபினிடத்தில் வேறொரு தீர்க்கதரிசி இருக்கிறான். ஆனால் ஆகாப் அவனை வெறுக்கிறான். அவனுடைய பெயர் மிகாயா. இவன் கர்த்தருடைய வார்த்தையை உண்மையாய் அறிவிக்கிறவன். மிகாயாவுக்கு கர்த்தருடைய மனதும், சித்தமும் தெரிந்திருக்கிறது.

அப்பொழுது இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப், யோசபாத்தை நோக்கி: "கர்த்தரிடத்தில் விசாரித்து அறிகிறதற்கு இம்லாவின் குமாரனாகிய மிகாயா என்னும் இன்னும் ஒருவன் இருக்கிறான்; ஆனாலும் நான் அவனைப் பகைக்கிறேன்; அவன் என்னைக் குறித்து நன்மையாக அல்ல, தீமையாகவே தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன்" (1இராஜா 22:8) என்று சொல்லுகிறான்.

ஆகாப் மிகாயாவைப்பற்றிச் சொல்லும்போது, "அவன் என்னைக் குறித்து நன்மையாகயல்ல, தீமையாகவே தீர்க்கதரிசனம் சொல்லுகிறவன்" என்று சொல்லுகிறான். ஆகாபைப்பற்றி நன்மையாகச் சொல்லுவதற்கு அவனிடத்தில் ஒன்றுமில்லை. இது மிகாயாவின் குற்றமல்ல. இது ஆகாபின் குற்றம். ஆகாப் கர்த்தருக்கு பயந்து ஜீவித்தால், கர்த்தரிடத்திலிருந்து அவனுக்கு நன்மையான வார்த்தைகள் வரும். ஆனால் ஆகாபோ தன் இருதயத்தைக் கடினப்படுத்தி, கர்த்தருக்கு விரோதமாக துணிகரமாய்ப் பாவம் செய்கிறான்.

ஆகாப் நல்லவனாகயிருப்பானென்றால், அவனுக்கு பரலோகத்திலிருந்து நன்மையான செய்தியே வரும். ஆகாபைப்போல அநேகர் பாவத்தில் மூழ்கியிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய அழிவுக்கு நேராக போய்க்கொண்டிருக்கிறார்கள். பாவிகள் கர்த்தரையும், கர்த்தருடைய தீர்க்கதரிசிகளையும் வெறுக்கிறார்கள். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் தங்களுடைய பாவங்களைக் குறித்து சொல்லுவதையும், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பைக் குறித்து சொல்லுவதையும், பாவிகள் விரும்புவதில்லை.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் மிகாயாவை சிறைச்சாலையில் அடைத்திருக்கிறான். ஆகாப் பெனாதாத்தோடு சமாதான உடன்படிக்கை பண்ணினபோது, மிகாயா ஆகாபை கர்த்தருடைய நாமத்தினால் கடிந்துகொண்டான் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள் (1இராஜா 20:38). இதன் நிமித்தமாய் ஆகாப் மிகாயாவின்மீது கோபப்பட்டு, அவனை சிறைச்சாலையில் அடைத்துவிடுகிறான். மிகாயா சிறைச்சாலையிலே மூன்று வருஷங்களாக அடைபட்டிருக்கிறான். ஆகையினால் ஆகாபுக்கு மிகாயா எங்கே இருக்கிறான் என்பது தெரிந்திருக்கிறது.

மிகாயா சிறையிலடைக்கப்பட்டாலும், கர்த்தருடைய வார்த்தை ஒருபோதும் அடைக்கப்படுவதில்லை. கர்த்தருடைய வார்த்தையை யாராலும் சிறைப்படுத்த முடியாது. ஆகாப் மிகாயாவைக் குறித்து சொல்லுகிற வார்த்தைகளை யோசபாத் ஏற்றுக்கொள்ளவில்லை. யோசபாத் ஆகாபை மென்மையான வார்த்தைகளினால் கடிந்துகொள்கிறான். யோசபாத் ஆகாபை நோக்கி, "ராஜாவே, அப்படிச் சொல்லவேண்டாம்" (1இராஜா 22:8) என்று சொல்லுகிறான். ஆகாபைப்போன்ற துன்மார்க்கரை மென்மையாகக் கடிந்துகொள்ளக்கூடாது. கடினமான வார்த்தைகளைப் பயன்படுத்தி, அவர்களுடைய இருதயத்தில் உணர்த்தும் வண்ணமாக கடிந்துசொல்லவேண்டும்.

ஆகாபுக்கு யோசபாத்தை பகைக்க மனமில்லை. ஆகாப் யோசபாத்திற்கு எதிர்த்து பேசினால், அவன் ஆகாபோடு சேர்ந்து, சீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ண வரமாட்டான். யூதாவின் ராஜாவாகிய யோசபாத், இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபோடு பண்ணியிருக்கிற சமாதான உடன்படிக்கைகளையெல்லாம் முறித்துப்போடுவான். ஆகையினால் ஆகாப் யோசபாத்தின் விருப்பத்தின் பிரகாரம், மிகாயாவை தன்னிடத்தில் அழைத்து வர சம்மதிக்கிறான்.

அப்பொழுது இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் பிரதானிகளில் ஒருவனைக் கூப்பிட்டு: "இம்லாவின் குமாரனாகிய மிகாயாவைச் சீக்கிரமாய் அழைத்துவா" என்று சொல்லுகிறான் (1இராஜா 22:9).

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபும், யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தும், சமாரியாவின் ஒலிமுகவாசலுக்கு முன்னிருக்கும் விசாலத்திலே ராஜவஸ்திரம் தரித்துக் கொண்டவர்களாய், அவரவர் தம்தம் சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்; சகல தீர்க்கதரிசிகளும் அவர்களுக்கு முன்பாகத் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறார்கள் (1இராஜா 22:10).

இரண்டு ராஜாக்களும் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த தீர்க்கதரிசிகள் எல்லோருமே தங்களுடைய சொந்த வார்த்தைகளைப் பேசுகிறார்கள். ராஜாக்களைப் பிரியப்படுத்தும் வண்ணமாக இனிமையான வார்த்தைகளை நயமாகச் சொல்லுகிறார்கள். அவர்கள் ஆகாபின் வீரத்தையும், யோசபாத்தின் வீரத்தையும் புகழ்ந்து சொல்லுகிறார்கள்.

சகல தீர்க்கதரிசிகளும் சிதேக்கியா சொன்ன வார்த்தைகளுக்கு இசைவாகத் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். அவர்கள் இஸ்ரவேலின் இராஜாவாகிய ஆகாபினிடத்தில், "கீலேயாத்திலுள்ள ராமோத்துக்குப் போம், உமக்கு வாய்க்கும்; கர்த்தர் அதை ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார்" என்று சொல்லுகிறார்கள் (1இராஜா 22:12).

இஸ்ரவேலின் இராஜாவாகிய ஆகாப், தன் பிரதானிகளில் ஒருவனை கூப்பிட்டு, "மிகாயாவை சீக்கிரமாய் அழைத்து வா" என்று சொன்னான். மிகாயாவை அழைக்கப்போன பிரதானி, மிகாயாவினிடத்தில் பேசுகிறான்.

பிரதானி மிகாயாவை நோக்கி, "இதோ, தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகள் ஏகவாக்காய் ராஜாவுக்கு நன்மையாயிருக்கிறது; உம்முடைய வார்த்தையும் அவர்களில் ஒருவர் வார்த்தையைப்போல இருக்கும்படி நன்மையாகச் சொல்லும்" (1இராஜா 22:13) என்று சொல்லுகிறான்.

கர்த்தர் தன்னிடத்தில் சொல்லுவதை மாத்திரமே மிகாயா சொல்லுவான். கர்த்தர் மிகாயாவுக்கு நன்மையான காரியங்களை வெளிப்படுத்தி இருக்கிறார். பிரதானி மிகாயாவிடம், "நன்மையாக சொல்லும்" என்று சொன்னான். மிகாயாவோ பிரதானியின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறான்.

மிகாயா பிரதானியை நோக்கி, "கர்த்தர் என்னிடத்தில் சொல்வதையே சொல்லுவேன் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (1இராஜா 22:14) என்று சொல்லுகிறான்.

மிகாயா கர்த்தருக்கு உண்மையுள்ளவன். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள், கர்த்தர் தங்களுக்கு வெளிப்படுத்தி இருக்கும் சத்தியத்தை மாத்திரமே சொல்லுவார்கள். தன்னுடைய வார்த்தையை பிரதானி ஏற்றுக்கொள்ள மறுப்பதற்கு வாய்ப்புள்ளது என்று மிகாயாவுக்கு தெரிந்திருக்கிறது. ஆகையினால் மிகாயா அவனிடம் "கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" என்று ஆணையிடுகிறான்.

மிகாயா
1இராஜா 22:15-28

1இராஜா 22:15. அவன் ராஜாவினிடத்தில் வந்தபோது, ராஜா அவனைப் பார்த்து: மிகாயாவே, நாங்கள் கீலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ணப் போகலாமா, போகலாகாதா என்று கேட்டான். அதற்கு அவன்: "போம் உமக்கு வாய்க்கும்; கர்த்தர் அதை ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார்" என்றான்.

1இராஜா 22:16. ராஜா அவனைப் பார்த்து: நீ கர்த்தருடைய நாமத்திலே உண்மையை அல்லாமல் வேறொன்றையும் என்னிடத்தில் சொல்லாதபடிக்கு, நான் எத்தனைதரம் உன்னை ஆணையிடுவிக்கவேண்டும் என்று சொன்னான்.

1இராஜா 22:17. அப்பொழுது அவன்: இஸ்ரவேலரெல்லாரும் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போல மலைகளிலே சிதறப்பட்டதைக் கண்டேன்; அப்பொழுது கர்த்தர்: இவர்களுக்கு எஜமான் இல்லை; அவரவர் தம்தம் வீட்டிற்குச் சமாதானத்தோடே திரும்பக்கடவர்கள் என்றார் என்று சொன்னான்.

1இராஜா 22:18. அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா யோசபாத்தை நோக்கி: இவன் என்னைக் குறித்து நன்மையாக அல்ல, தீமையாகவே தீர்க்கதரிசனம் சொல்லுகிறவன் என்று நான் உம்மோடே சொல்ல வில்லையா என்றான்.

1இராஜா 22:19. அப்பொழுது அவன் சொன்னது: கர்த்தருடைய வார்த்தையைக் கேளும்; கர்த்தர் தம்முடைய சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறதையும், பரமசேனையெல்லாம் அவரிடம் அவர் வலதுபக்கத்திலும் அவர் இடதுபக்கத்திலும் நிற்கிறதையும் கண்டேன்.

1இராஜா 22:20. அப்பொழுது கர்த்தர்: ஆகாப் போய், கீலேயாத்திலுள்ள ராமோத்தில் விழும்படிக்கு, அவனுக்குப் போதனை செய்கிறவன் யார் என்று கேட்டதற்கு, ஒருவன் இப்படியும் ஒருவன் அப்படியும் சொன்னார்கள்.

1இராஜா 22:21. அப்பொழுது ஒரு ஆவி புறப்பட்டு வந்து, கர்த்தருக்கு முன்பாக நின்று: நான் அவனுக்குப் போதனை செய்வேன் என்றது.

1இராஜா 22:22. எதினால் என்று கர்த்தர் அதைக் கேட்டார். அப்பொழுது அது: நான் போய், அவனுடைய தீர்க்கதரிசிகள் எல்லாரின் வாயிலும் பொய்யின் ஆவியாய் இருப்பேன் என்றது. அதற்கு அவர்: நீ அவனுக்குப் போதனைசெய்து அப்படி நடக்கப்பண்ணுவாய்; போய் அப்படிச் செய் என்றார்.

1இராஜா 22:23. ஆதலால் கர்த்தர் பொய்யின் ஆவியை இந்த உம்முடைய தீர்க்கதரிசிகளாகிய இவர்கள் எல்லாருடைய வாயிலும் கட்டளையிட்டார்; கர்த்தர் உம்மைக் குறித்துத் தீமையாகச் சொன்னார் என்றான்.

1இராஜா 22:24. அப்பொழுது கேனானாவின் குமாரனாகிய சிதேக்கியா கிட்டேவந்து, மிகாயாவைக் கன்னத்தில் அடித்து, கர்த்தருடைய ஆவி எந்தவழியாய் என்னைவிட்டு உன்னோடே பேசும்படி வந்தது என்றான்.

1இராஜா 22:25. அதற்கு மிகாயா: நீ ஒளித்துக் கொள்ள உள்ளறையிலே பதுங்கும் அந்நாளிலே அதைக் காண்பாய் என்றான்.

1இராஜா 22:26. அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா: மிகாயாவைப் பிடித்து, அவனைப் பட்டணத்துத் தலைவனாகிய ஆமோனிடத்திற்கும், ராஜாவின் குமாரனாகிய யோவாசிடத்திற்கும் திரும்பக் கொண்டுபோய்,

1இராஜா 22:27. இவனைச் சிறைச்சாலையிலே வைத்து, நான் சமாதானத்தோடே வருமளவும், இவனுக்கு இடுக்கத்தின் அப்பத்தையும் இடுக்கத்தின் தண்ணீரையும் சாப்பிடக் கொடுங்கள் என்று ராஜா சொன்னார் என்று சொல்லுங்கள் என்றான்.

1இராஜா 22:28. அப்பொழுது மிகாயா: நீர் சமாதானத்தோடே திரும்பிவருகிறது உண்டானால், கர்த்தர் என்னைக்கொண்டு பேசினதில்லை என்று சொல்லி; ஜனங்களே, நீங்கள் எல்லாரும் இதைக் கேளுங்கள் என்றான்.

கர்த்தர் தன்னிடத்தில் சொன்னதை மிகாயா இஸ்ரவேலின் இராஜாவாகிய ஆகாபுக்கு சொல்லுகிறான். தான் சொல்லப்போகும் செய்தியை, மிகாயா மூன்று விதமாக ஆகாபுக்கு சொல்லுகிறான். இம்மூன்றுமே ஆகாபுக்கு பிரியமாய் இல்லை.

மிகாயா ஆகாப் ராஜாவினிடத்தில் வந்தபோது, ராஜா அவனைப் பார்த்து: "மிகாயாவே, நாங்கள் கீலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ணப் போகலாமா, போகலாகாதா" (1இராஜா 22:15) என்று கேட்கிறான்.

மிகாயா ஆரம்பத்தில், மற்ற தீர்க்கதரிசிகள் ஏற்கனவே சொன்ன வார்த்தைகளுக்கு இசைவாக தீர்க்கதரிசனம் சொல்லுகிறான். "போம், உமக்கு வாய்க்கும்" என்று மிகாயா ஆகாபுக்கு சொல்லுகிறான்.

ஆகாப் இதே கேள்வியைத்தான் மற்றவர்களிடத்திலும் கேட்டான். "அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா ஏறக்குறைய நானூறு தீர்க்கதரிசிகளைக் கூடிவரச்செய்து: நான் கீலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ணப்போகலாமா, போகலாகாதா என்று அவர்களைக் கேட்டதற்கு; அவர்கள், போம், ஆண்டவர் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றார்கள்" (1இராஜா 22:6).

நானூறு தீர்க்கதரிசிகளும் தனக்கு தீர்க்கதரிசனம் சொன்ன பிரகாரமாகவே, மிகாயாவும் தனக்கு ஆறுதலான செய்தியை சொல்லுவான் என்று ஆகாப் எதிர்பார்க்கிறான். நானூறு தீர்க்கதரிசிகள் சொன்னது ஆகாபுக்கு கர்த்தருடைய வார்த்தையாக தெரியவில்லை. மிகாயா சொன்னால் அது கர்த்தருடைய வார்த்தையாக இருக்கும் என்று ஆகாப் நம்புகிறான். ஆனாலும் மிகாயா தனக்கு ஆறுதலான செய்தியை சொல்லவேண்டும் என்று ஆகாப் எதிர்பார்க்கிறான்.

மிகாயா மற்ற தீர்க்கதரிசிகள் சொன்ன வார்த்தைக்கு இசைவாக, "போம், உமக்கு வாய்க்கும், கர்த்தர் அதை இராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார்" என்று சொல்லுகிறான். ஆனால் ஆகாப் இராஜா மிகாயாவின் வார்த்தையை நம்பவில்லை.

ஆகாப் ராஜா மிகாயாவைப் பார்த்து: "நீ கர்த்தருடைய நாமத்திலே உண்மையை அல்லாமல் வேறொன்றையும் என்னிடத்தில் சொல்லாதபடிக்கு, நான் எத்தனைதரம் உன்னை ஆணையிடுவிக்கவேண்டும்" (1இராஜா 22:16). என்று சொல்லுகிறான்.

ஆகாப் தன்னிடத்தில் வருந்தி கேட்டபோது, மிகாயா அவனுக்கு எதையும் மறைக்காமல் கர்த்தர் தனக்கு சொன்னதை அவனிடத்தில் சொல்லுகிறான். கர்த்தர் மிகாயாவுக்கு ஒரு தரிசனத்தைக் கொடுத்திருக்கிறார். மிகாயா ஆகாபிடத்தில் தான் கண்ட தரிசனத்தை சொல்லுகிறான்.

மிகாயா ஆகாபை நோக்கி, "இஸ்ரவேலரெல்லாரும் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போல மலைகளிலே சிதறப்பட்டதைக் கண்டேன்" என்றும், "அப்பொழுது கர்த்தர்: இவர்களுக்கு எஜமான் இல்லை; அவரவர் தம்தம் வீட்டிற்குச் சமாதானத்தோடே திரும்பக்கடவர்கள் என்றார்" (1இராஜா 22:17) என்றும், சொல்லுகிறான்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் சீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும்போது அவனுக்கு தோல்வி உண்டாகும் என்றும், இந்த யுத்தத்திலே ஆகாப் செத்துப்போவான் என்றும், இஸ்ரவேலரின் சேனை சிதறிப்போகும் என்றும் மிகாயா ஆகாபுக்கு சொல்லுகிறான்.

இஸ்ரவேலர் எல்லோரும் ஆடுகளைப்போல இருக்கிறார்கள். ஆகாப் அவர்களெல்லோரையும் மேய்த்து வழிநடத்துகிற மேய்ப்பனைப்போல இருக்கிறான். ஆகாப் செத்துப்போனால் இஸ்ரவேலர் எல்லோரும் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல இருப்பார்கள். அவர்கள் மலைகளிலே சிதறப்பட்டிருப்பார்கள்.

ஆகாப் இஸ்ரவேலருக்கு ராஜாவாயிருக்கமாட்டான் என்னும் தீர்க்கதரிசன செய்தியை மிகாயா வெளிப்படுத்துகிறான். தங்களுடைய ராஜா செத்துப்போனதினால், இஸ்ரவேலர் எல்லோரும் அவரவர் தம்தம் வீட்டிற்கு சாதானத்தோடே திரும்புவார்கள். ஆகாப் ராஜா செத்துப்போன பின்பு, இஸ்ரவேலரின் சேனையில் அதிகமான ஜீவசேதாரம் ஏற்படாது.

மிகாயா ஆகாப் ராஜாவினிடத்தில் தான் கண்ட தரிசனத்தைப்பற்றியும், கர்த்தரிடத்திலிருந்து தான் கேட்ட செய்தியைப்பற்றியும் சொல்லுகிறான். மிகாயா சொன்ன செய்தி ஆகாபுக்கு பிடிக்கவில்லை. யூதாவின் ராஜாவாகிய யோசபாத் ஆகாபுக்கு அருகில் அமர்ந்திருக்கிறான்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் யோசபாத்தை நோக்கி: "இவன் என்னைக் குறித்து நன்மையாக அல்ல, தீமையாகவே தீர்க்கதரிசனம் சொல்லுகிறவன் என்று நான் உம்மோடே சொல்ல வில்லையா" (1இராஜா 22:18) என்று சொல்லுகிறான்.

ஆகாப் தன்னைப்பற்றி இகழ்ச்சியாகப் பேசினாலும், மிகாயா கர்த்தர் தன்னிடத்தில் சொன்னதை அப்படியே சொல்லுகிறான். ஆகாபினிடத்தில் நானூறு தீர்க்கதரிசிகள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் ஆகாபுக்கு சாதகமாக இசைவான வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள். அவர்கள் கள்ளத்தீர்க்கதரிசிகள். பொய்சொல்லுகிறவர்கள்.

ஆகாபின் தீர்க்கதரிசிகள் எவ்வாறு பொய்சொல்லுகிறார்கள் என்பதையும் மிகாயா ஆகாபுக்கு சொல்லுகிறான். மிகாயா ஆகாபை நோக்கி, "கர்த்தருடைய வார்த்தையைக் கேளும்; கர்த்தர் தம்முடைய சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறதையும், பரமசேனையெல்லாம் அவரிடம் அவர் வலதுபக்கத்திலும் அவர் இடதுபக்கத்திலும் நிற்கிறதையும் கண்டேன்" என்று சொல்லுகிறான்.

மிகாயா ஒரு தரிசனத்தைக் கண்டான். அந்த தரிசனத்தில் கர்த்தர் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார். பரமசேனையெல்லாம் அவருடைய வலதுபக்கத்திலும் இடதுபக்கத்திலும் வீற்றிருக்கிறார்கள்.

அப்பொழுது கர்த்தர்: "ஆகாபினிடத்தில் போய், கீலேயாத்திலுள்ள ராமோத்தில் விழும்படிக்கு, அவனுக்குப் போதனை செய்கிறவன் யார்" என்று கேட்கிறார். அதற்கு, ஒருவன் இப்படியும் ஒருவன் அப்படியும் சொல்லுகிறார்கள் (1இராஜா 22:20).

அப்பொழுது ஒரு ஆவி புறப்பட்டு வந்து, கர்த்தருக்கு முன்பாக நின்று: "நான் அவனுக்குப் போதனை செய்வேன்" என்று சொல்லுகிறது. "எதினால்" என்று கர்த்தர் அதைக் கேட்கிறார். அப்பொழுது அது: "நான் போய், அவனுடைய தீர்க்கதரிசிகள் எல்லாரின் வாயிலும் பொய்யின் ஆவியாய் இருப்பேன்" என்று சொல்லுகிறது. அதற்கு கர்த்தர்: "நீ அவனுக்குப் போதனைசெய்து அப்படி நடக்கப்பண்ணுவாய்; போய் அப்படிச் செய்" (1இராஜா 22:21,22) என்று சொல்லுகிறார்.

மிகாயா ஆகாபிடம், "ஆதலால் கர்த்தர் பொய்யின் ஆவியை இந்த உம்முடைய தீர்க்கதரிசிகளாகிய இவர்கள் எல்லாருடைய வாயிலும் கட்டளையிட்டார்; கர்த்தர் உம்மைக் குறித்துத் தீமையாகச் சொன்னார்" (1இராஜா 22:23) என்று சொல்லுகிறான்.

ஆகாபை வஞ்சித்து அவனை அழிப்பதற்கு, கர்த்தர் சாத்தானுக்கு அனுமதி கொடுக்கிறார். இந்த இரகசியத்தை மிகாயா ஒரு தரிசனத்தின் மூலமாய் காண்கிறான். ஆகாப் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருந்தாலும், கர்த்தரே எல்லா ராஜாக்களையும் விட உயர்ந்தவர். அவர் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறவர். கர்த்தருடைய சிங்காசனம் இந்தப் பூமியிலுள்ள எல்லா ராஜாக்களின் சிங்காசனத்தையும்விட உயர்ந்த ஸ்தானத்திலிருக்கிறது.

கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக இந்தப் பிரபஞ்சத்தின் ராஜாக்களை சிங்காசனத்தில் அமரச் செய்கிறார். தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிற ராஜாக்களை, கீழே தள்ளிவிடுகிறார். கர்த்தருடைய சித்தத்தினால் தேசங்கள் ஸ்தாபிக்கப்பட்டு எழும்புகிறது. அவருடைய சித்தத்தினாலேயே தேசங்கள் விழுந்து அழிந்துபோகிறது.

தேசங்கள் ஒன்றுக்கு விரோதமாக மற்றொன்று சண்டை போட்டுக்கொள்கிறது. மனுஷர் மத்தியிலே பேரழிவு உண்டாகிறது. பல தேசங்களிலே எதிர்பாராத சம்பவங்கள் நடைபெறுகிறது. மனுஷர் தங்களுடைய சுயஞானத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ராஜாக்களும் ஞானிகளுடைய ஆலோசனைகளுக்கு செவிகொடுக்கிறார்கள். மனுஷருடைய திட்டங்கள் எதுவாகயிருந்தாலும், கர்த்தருடைய தெய்வீக திட்டமே நிறைவேறும்.

கர்த்தர் சர்வஞானமுள்ளவர். இந்தப் பிரபஞ்சத்தில் நடக்கிற சிறிய காரியமாகயிருந்தாலும், பெரிய காரியமாகயிருந்தாலும், கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே நடைபெறும். கர்த்தரே சகல காரியங்களையும் வழிநடத்துகிறார். அவரே சர்வத்தையும் ஆளுகை செய்கிறார். கர்த்தர் சர்வஆளுநர்.

சாத்தான் மனுஷரை வஞ்சிக்கிறான். ஆனாலும் கர்த்தருடைய தெய்வீக அனுமதியில்லாமல், சாத்தானால் மனுஷரை வஞ்சிக்க முடியாது. மனுஷரை வஞ்சிப்பதற்கு, கர்த்தர் சாத்தானுக்கு அனுமதி கொடுத்தாலும், அதன் மூலமாகவும், கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தை நிறைவேற்றவும் செய்கிறார்.

மிகாயா கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லி, இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபை எச்சரிக்கிறான். கீலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ணப்போனால், ஆகாபுக்கு ஆபத்து உண்டாகும் என்று சொல்லுகிறான். ஆகாபின் நானூறு கள்ளத்தீர்க்கதரிசிகளும், ஆகாபினிடத்தில், "போம், ஆண்டவர் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார்" என்று பொய்சொல்லுகிறார்கள்.

ஆகாப் தன்னுடைய கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேட்டு, சீரியருக்கு விரோதமாக யுத்தம் பண்ணப்போனால் அவனுக்கு ஆபத்து வரும். ஆகாப் தன்னுடைய கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேட்டால், அவனுக்கு அதைவிட பெரிய ஆபத்து வரும்.

மிகாயா ஆகாபுக்கு கர்த்தருடைய வார்த்தையை உண்மையாய்ச் சொல்லுகிறான். ஆகாபும், அவனோடு கூடயிருக்கிற கள்ளத்தீர்க்கதரிசிகளும் துன்மார்க்கராயிருக்கிறார்கள். மிகாயா ஆகாபுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லும்போது, அங்கே சிதேக்கியா என்னும் கள்ளத்தீர்க்கதரிசியும் இருக்கிறான். இவன் கேனானாவின் குமாரன்.

சிதேக்கியா ஆகாபின் கிட்டே வந்து மிகாயாவைக் கன்னத்தில் அடிக்கிறான். சிதேக்கியா மிகாயாவிடம், "கர்த்தருடைய ஆவி எந்தவழியாய் என்னைவிட்டு உன்னோடே பேசும்படி வந்தது" என்று கேட்கிறான் (1இராஜா 22:24).

மிகாயா இதற்குமேல் பேசக்கூடாது என்பது சிதேக்கியாவின் திட்டம். மிகாயாவின் வாயை அடைத்து, அவனை பேசவிடாமல் தடுப்பதற்காக, சிதேக்கியா மிகாயாவை கன்னத்தில் அடிக்கிறான். இரண்டு ராஜாக்களுக்கு முன்பாக இந்த சம்பவம் நடைபெறுகிறது. இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபும், யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தும், சமாரியாவின் ஒலிமுகவாசலுக்கு முன்னிருக்கும் விசாலத்தில், ராஜவஸ்திரம் தரித்துக்கொண்டவர்களாய், அவரவர் தம் தம் சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்.

சிதேக்கியாவோ மிகவும் துணிச்சலாக, இரண்டு ராஜாக்களுக்கு முன்பாக, மிகாயாவைக் கன்னத்தில் அடிக்கிறான். மிகாயா கர்த்தருடைய தீர்க்கதரிசி. கர்த்தருடைய ஊழியக்காரர்களை அவமானப்படுத்துகிறவர்கள், கர்த்தரையே அவனமானப்படுத்துகிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசி கர்த்தருடைய தீர்க்கதரிசியை அடிக்கிறான். மிகாயாவோ சிதேக்கியாவைப் பதிலுக்குப் பதில் அடிக்கவில்லை.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் குற்றவாளியைப் பிடித்து தண்டிக்கவேண்டும். சிதேக்கியா மிகாயாவை கன்னத்தில் அடிக்கும்போது, ஆகாப் ஒன்றும் சொல்லாமல், ஒன்றும் செய்யாமல் அமைதியாயிருக்கிறான். ஆகாப் தன்னுடைய தப்பிதத்தை உணர்ந்து கொள்வான். அப்பொழுது மிகாயா: "நீ ஒளித்துக் கொள்ள உள்ளறையிலே பதுங்கும் அந்நாளிலே அதைக் காண்பாய்" (1இராஜா 22:25) என்று சொல்லுகிறான்.

ஆகாப் சீரியாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனபோது, சிதேக்கியாவும் அவனோடுகூட யுத்தத்திற்குப்போயிருக்க வேண்டும் என்று சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். அவன் யுத்தக்களத்திற்கு தன்னிடத்திலிருந்த இரண்டு இருப்பு கொம்புகளோடு போனான் என்றும், அந்தக் கொம்புகளைக் காண்பித்து, இஸ்ரவேலின் சேனையை உற்சாகப்படுத்தினான் என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

1இராஜா 22:30. இஸ்ரவேலின் ராஜா யோசபாத்தை நோக்கி: நான் வேஷம்மாறி யுத்தத்தில் பிரவேசிப்பேன்; நீரோ ராஜவஸ்திரம் தரித்திரும் என்று சொல்லி, இஸ்ரவேலின் ராஜா வேஷம்மாறி, யுத்தத்தில் பிரவேசித்தான்.

1இராஜா 22:31. சீரியாவின் ராஜா தனக்கு இருக்கிற இரதங்களின் முப்பத்திரண்டு தலைவரையும் நோக்கி: நீங்கள் சிறியவரோடும் பெரியவரோடும் யுத்தம்பண்ணாமல் இஸ்ரவேலின் ராஜா ஒருவனோடேமாத்திரம் யுத்தம்பண்ணுங்கள் என்று கட்டளையிட்டிருந்தான்.

1இராஜா 22:32. ஆதலால் இரதங்களின் தலைவர் யோசபாத்தைக் காண்கையில், இவன் தான் இஸ்ரவேலின் ராஜா என்று சொல்லி யுத்தம்பண்ண அவனுக்கு நேராகச் சாய்ந்துவந்தார்கள்; அப்பொழுது யோசபாத் கூக்குரலி ட்டான்.

1இராஜா 22:33. இவன் இஸ்ரவேலின் ராஜா அல்ல என்று இரதங்களின் தலைவர் கண்டு அவனைவிட்டு, விலகிப்போனார்கள்.

1இராஜா 22:34. ஒருவன் நினையாமல் வில்லை நாணேற்றி எய்தான்; அது இஸ்ரவேலின் ராஜாவினுடைய கவசத்தின் சந்துகளுக்குள் பட்டது; அப்பொழுது அவன் தன் சாரதியைப் பார்த்து: நீ திருப்பி என்னை இராணுவத்துக்கப்பால் கொண்டுபோ; எனக்குக் காயம்பட்டது என்றான்.

1இராஜா 22:35. அன்றையதினம் யுத்தம் அதிகரித்தது; ராஜாவைச் சீரியருக்கு எதிராக இரதத்தில் நிறுத்திவைத்தார்கள்; சாயங்காலத்திலே அவன் இறந்துபோனான்; காயத்தின் இரத்தம் இரதத்தின் தட்டிலே வடிந்தது.

1இராஜா 22:36. பொழுதுபோகும்போது அவரவர் தம்தம் பட்டணத்திற்கும், அவரவர் தம்தம் தேசத்திற்கும் போகலாம் என்று இராணுவத்தில் பறைசாற்றப்பட்டது.

1இராஜா 22:37. அப்படியே ராஜா இறந்தபின்பு, சமாரியாவுக்குக் கொண்டுவரப்பட்டான்; ராஜாவைச் சமாரியாவில் அடக்கம்பண்ணினார்கள்.

1இராஜா 22:38. அந்த இரதத்தையும் அவனுடைய கவசத்தையும் சமாரியாவின் குளத்திலே கழுவுகிறபோது, கர்த்தர் சொல்லியிருந்த வார்த்தையின்படியே, நாய்கள் அவன் இரத்தத்தை நக்கினது.

1இராஜா 22:39. ஆகாபின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும், அவன் கட்டின தந்த அரமனையின் வரலாறும், அவன் கட்டின எல்லாப் பட்டணங்களின் வரலாறும் இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

1இராஜா 22:40. ஆகாப் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவன் குமாரனாகிய அகசியா அவன் ஸ்தலத்தில் ராஜாவானான்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபும், யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தும் கீலேயாத்திலுள்ள ராமோத்துக்குப் போகிறார்கள் (1இராஜா 22:29). யோசபாத் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவன். அவன் சீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும் முன்பு, கர்த்தருடைய தீர்க்கதரிசியினிடத்தில் விசாரிக்க வேண்டும் என்று சொன்னான். யோசபாத் ஆகாபின் கள்ளத்தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகளை நம்பவில்லை.

மிகாயா கர்த்தருடைய தீர்க்கதரிசி. சீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப் போகவேண்டாம் என்று மிகாயா கர்த்தருடைய நாமத்தினால் எச்சரித்தான். ஆனால் யோசபாத்தோ மிகாயாவின் வார்த்தைக்கும் செவிகொடுக்கவில்லை. யோசபாத் ஆகாபோடு சேர்ந்து கீலேயாத்திலுள்ள ராமோத்திற்கு போகிறான்.

தீயசிநேகத்தினால் தீயசுபாவங்கள் உண்டாகும். யோசபாத் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவனாயிருந்தாலும், ஆகாபின் சிநேகம் அவனை கர்த்தரைவிட்டு வழிவிலகிப்போகப்பண்ணுகிறது. ஆகாபின் தீர்க்கதரிசிகள் நானூறு பேர் இருக்கிறார்கள். கர்த்தருடைய தீர்க்கதரிசியோ மிகாயா ஒருவன் மாத்திரம் இருக்கிறான். யோசபாத் திரளான எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறான். நானூறு தீர்க்கதரிசிகளும் சேர்ந்து, ஒரே செய்தியை ஏகமாய் சொன்னதினால், அவர்களுடைய வார்த்தை உண்மையாயிருக்கும் என்று யோசபாத் நம்புகிறான்.

ஆகாபும் யோசபாத்தும் சீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ண சேர்ந்துபோகிறார்கள். ஆகாப் யோசபாத்தை தன்னுடைய சிநேகிதன் என்று சொல்லிக்கொள்கிறான். ஆனால் ஆகாபின் இருதயத்தில் உண்மையான சிநேகமில்லை. அவனிடத்தில் சுயநலம் காணப்படுகிறது. சீரியருக்கு விரோதமான யுத்தத்தில் தனக்கு ஒரு தீங்கும் வரக்கூடாது என்றும், யோசபாத் தப்பிக்காவிட்டாலும், தான் தப்பித்துக்கொள்ளவேண்டும் என்றும் ஆகாப் சதிஆலோசனைபண்ணுகிறான்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் யோசபாத்தை நோக்கி: "நான் வேஷம்மாறி யுத்தத்தில் பிரவேசிப்பேன்; நீரோ ராஜவஸ்திரம் தரித்திரும்" என்று சொல்லுகிறான். இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் வேஷம்மாறி, யுத்தத்தில் பிரவேசிக்கிறான் (1இராஜா 22:30).

ஆகாப் ராஜவஸ்திரங்களைக் களைந்துபோட்டுவிட்டு, ஒரு சாதாரண யுத்தவீரனைப்போல வேஷம் தரித்து, யுத்தத்திற்குப் புறப்பட்டுப்போகிறான். இதன் மூலமாக ஆகாப் யோசபாத்தை கனம்பண்ணுவதுபோல மாய்மாலம் பண்ணுகிறான். யோசபாத்தே ராஜா என்றும், தான் அவனுக்கு கீழே சேவை செய்கிற சாதாரண யுத்தவீரன் என்றும் ஆகாப் தன்னை தாழ்த்தி வேஷம் போடுகிறான்.

ஆனால் ஆகாபின் மனதில் தீயசிந்தனை இருக்கிறது. யுத்தத்திலே தனக்கு ஆபத்து வரும் என்பது ஆகாபுக்கு நன்றாய்த் தெரியும். மிகாயா கர்த்தருடைய தீர்க்கதரிசி. அவன் பொய் சொல்லமாட்டான். ஆகாப் சீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனாலும், தனக்கு வரும் ஆபத்திலிருந்து எப்படி தப்பித்துக்கொள்வது என்னும் யோசனையே, ஆகாபின் மனதில் அதிகமாயிருக்கிறது. இதற்காக அவன் தன்னுடைய சாதுரிய வார்த்தைகளினால் யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தை வஞ்சிக்கிறான்.

யோசபாத் நற்குணமுள்ளவன். அவன் மெய்யாகவே ஆகாப் மீது சிநேகமாயிருக்கிறான். ஆனால் ஆகாபுக்கு யோசபாத் மீது மெய்யான அன்பு இல்லை. கர்த்தரை வஞ்சிக்கிறவர்கள் மனுஷரையும் வஞ்சிப்பார்கள். கர்த்தருக்கு உண்மையில்லாதவர்கள் மனுஷருக்கும் உண்மையுள்ளவர்களாயிருக்கமாட்டார்கள். ஆகாப் கர்த்தரை விட்டுப் பிரிந்துபோனவன். அவன் ஒரு துன்மார்க்கன். ஆகாபினிடத்தில் மெய்யான சகோதர சிநேகம் இருப்பதற்கு வாய்ப்பில்லை.

யூதாவின் ராஜாவாகிய யோசபாத் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவன். ஆனால் அவனுக்கு யுத்த தந்திரங்களும், யுத்தவியூகங்களும் தெரியவில்லை. அவன் ஆகாபின் வார்த்தைகளை நம்புகிறான். ஆகாப் தன்னை கனம்பண்ணுகிறான் என்று யோசபாத் நினைக்கிறான். ஆகாப் யோசபாத்தை கனம்பண்ணுவதுபோல கனம்பண்ணி, அவனை ஆபத்தான சூழ்நிலையில் சிக்க வைத்துவிடுகிறான். இதனால் யோசபாத்தின் ஜீவனுக்கு ஆபத்து வருகிறது. கர்த்தரோ தமது பெரிதான கிருபையினால் யோசபாத்தை மரணத்திற்கு தப்புவிக்கிறார்.

சீரியாவின் ராஜா தன்னுடைய யுத்த வியூகங்களை, தன்னுடைய சேனைத்தலைவர்களுக்கு சொல்லுகிறான். சீரியாவின் ராஜா தனக்கு இருக்கிற இரதங்களின் முப்பத்திரண்டு தலைவரையும் நோக்கி: "நீங்கள் சிறியவரோடும் பெரியவரோடும் யுத்தம்பண்ணாமல் இஸ்ரவேலின் ராஜா ஒருவனோடேமாத்திரம் யுத்தம்பண்ணுங்கள்" (1இராஜா 22:31) என்று கட்டளையிடுகிறான்.

சீரியருக்கு யூதாதேசத்தின்மீது பகையில்லை. அவர்களுக்கு இஸ்ரவேல் தேசத்தின்மீது மாத்திரமே பகை இருக்கிறது. இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் மாத்திரமே சீரியரின் பிரதான சத்துரு. ஆகாபை உயிரோடு பிடித்து அவனைக் கைதுபண்ணி சிறையிலடைக்கவேண்டுமென்பது, சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத்தின் திட்டம்.

சீரியாவின் படைத்தலைவர்கள், யுத்தக்களத்திலே, இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபைத் தேடி பார்க்கிறார்கள். ஆகாபோ அங்கே சாதாரண போர்வீரனைப்போல வேஷம்மாறி, யுத்தக்களத்திலே நிற்கிறான். சீரியரின் படைத்தலைவர்களால் ஆகாபை கண்டுபிடிக்க முடியவில்லை.

யுத்தக்களத்திலே, யூதாவின் ராஜாவாகிய யோசபாத், ராஜவஸ்திரம் தரித்து, ரதத்தில் ஏறி, சீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறான். சீரியரின் படைத்தலைவர்கள், ராஜவஸ்திரம் தரித்திருக்கிற யோசபாத்தை பார்க்கிறார்கள்.

இரதங்களின் தலைவர் யோசபாத்தைக் காண்கையில், "இவன் தான் இஸ்ரவேலின் ராஜா" என்று சொல்லி யுத்தம்பண்ண அவனுக்கு நேராகச் சாய்ந்துவருகிறார்கள் (1இராஜா *22:32*). அவர்கள் அவனை ஆகாப் என்று நினைத்து, யோசபாத்திற்கு அருகாமையில் வருகிறார்கள். தன்னுடைய ஜீவனுக்கு வரப்போகும் ஆபத்தை யோசபாத்தும் அறிந்துகொள்கிறான். அப்பொழுது யோசபாத் கூக்குரலிடுகிறான்.

சீரியருடைய இரதங்களின் தலைவர்கள், யோசபாத்திற்கு அருகாமையில் வரும்போது, அவன் இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் அல்ல என்பதை புரிந்துகொள்கிறார்கள். அவர்கள் யோசபாத்தை விட்டு விலகிப்போய்விடுகிறார்கள். யோசபாத்தைப் பிடிக்கவேண்டும் என்பது அவர்களுடைய நோக்கமல்ல. இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபைப் பிடிக்கவேண்டும் என்பதே அவர்களுடைய நோக்கம்..

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபோ, ஒரு சாதாரண யுத்தவீரனைப்போல வேஷம் மாறி, யுத்தக்களத்திலே யுத்தம்பண்ணுகிறான். அப்பொழுது ஒருவன் நினையாமல் வில்லை நாணேற்றி எய்கிறான்; அது இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபினுடைய கவசத்தின் சந்துகளுக்குள் படுகிறது; அப்பொழுது ஆகாப் தன் சாரதியைப் பார்த்து: "நீ திருப்பி என்னை இராணுவத்துக்கப்பால் கொண்டுபோ; எனக்குக் காயம்பட்டது" (1இராஜா *22:34*) என்று சொல்லுகிறான்.

பாவத்தின் சம்பளம் மரணம். கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு எந்த மனுஷனாலும் தப்பிக்க முடியாது. ஆகாப் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தான். கர்த்தர் அவனை மரணத்திற்கு நியமித்து விடுகிறார். ஆகாபோ, வேஷம் மாறி, மரணத்திற்கு தப்பிக்கலாம் என்று திட்டமிடுகிறான். கர்த்தருடைய திட்டத்திற்கு முன்பாக, மனுஷருடைய திட்டங்கள் செயலிழந்துபோகும். நம்முடைய திட்டங்களும், விருப்பங்களும், கர்த்தருடைய திட்டத்திற்கும், விருப்பத்திற்கும் ஒத்துப்போகவேண்டும். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது.

சீரியரில் ஒருவன் நினையாமல் வில்லை நாணேற்றி எய்கிறான். அவன் ஆகாபுக்கு விரோதமாக குறிபார்த்து வில்லை நாணேற்றவில்லை. ஆனால் அந்த வில் ஆகாபினுடைய கவசத்தின் சந்துகளுக்குள் படுகிறது. ஆகாபுக்கு விரோதமாக குறிபார்த்து எய்யப்பட்டதுபோல, அது அவனுடைய மார்பில் பாய்கிறது. ஆகாபுக்கு பெருங்காயமுண்டாயிற்று. ஆகாபின் மார்பு பகுதி முழுவதும் கவசத்தால் மூடப்பட்டிருக்கிறது. கவசத்தின் சந்துகள் மாத்திரமே, அம்பு ஊடுருவி பாயக்கூடிய இடம். சீரியன் நினையாமல் வில்லை நாணேற்றி எய்கிறான். அது சரியாக ஆகாபினுடைய கவசத்தின் சந்துகளுக்குள் ஊடுருவிப் பாய்கிறது.

சீரியன் நினையாமல் அம்பை எய்தாலும், அது சரியான ஆள் மீது தான் பாய்ந்திருக்கிறது. இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபின்மீது அம்பு பாய்கிறது. அந்த அம்பும், அவனுடைய சரீரத்தில், சரியான இடத்தில் பாய்கிறது. அவனுடைய கவசத்தின் சந்துகளுக்குள் அம்பு ஊடுருவுகிறது.

அன்றையதினம் யுத்தம் அதிகரிக்கிறது; ஆகாப் ராஜாவைச் சீரியருக்கு எதிராக இரதத்தில் நிறுத்திவைக்கிறார்கள்; சாயங்காலத்திலே ஆகாப் இறந்துபோகிறான்; காயத்தின் இரத்தம் இரதத்தின் தட்டிலே வடிகிறது (1இராஜா 22:35).

பொழுதுபோகும்போது அவரவர் தம்தம் பட்டணத்திற்கும், அவரவர் தம்தம் தேசத்திற்கும் போகலாம் என்று இராணுவத்தில் பறைசாற்றப்படுகிறது (1இராஜா 22:36).

மிகாயா கர்த்தருடைய வார்த்தையைத் தீர்க்கதரிசனமாக சொன்ன பிரகாரமாக, இஸ்ரவேலர் எல்லோரும் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல மலைகளிலே சிதறப்பட்டுப்போகிறார்கள். அவர்களுக்கு எஜமானில்லை. இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்கள் தம்தம் வீட்டிற்கு சாமாதானத்தோடே திரும்பிப்போகிறார்கள் (1இராஜா 22:17).

அப்படியே ஆகாப் ராஜா இறந்தபின்பு, சமாரியாவுக்குக் கொண்டுவரப்படுகிறான்; ஆகாப் ராஜாவைச் சமாரியாவில் அடக்கம்பண்ணுகிறார்கள். ஆகாபின் இரதத்தையும் அவனுடைய கவசத்தையும் சமாரியாவின் குளத்திலே கழுவுகிறபோது, கர்த்தர் சொல்லியிருந்த வார்த்தையின்படியே, நாய்கள் அவன் இரத்தத்தை நக்குகிறது (1இராஜா 22:37,38).

ஆகாப் நாபோத்தின் இரத்தத்தை சிந்தினான். இப்போது நாபோத்தின் குற்றமில்லாத இரத்தத்திற்கு பதிலாக, ஆகாப் தன்னுடைய சொந்த இரத்தத்தை சிந்துகிறான்.

"நீ அவனைப் பார்த்து: நீ கொலை செய்ததும் எடுத்துக்கொண்டதும் இல்லையோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கின ஸ்தலத்திலே உன்னுடைய இரத்தத்தையும் நாய்கள் நக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்" (1இராஜா 21:19).

"என் கால்கள் சத்துருக்களின் இரத்தத்தில் பதியும்படியாகவும், உன் நாய்களின் நாவு அதை நக்கும்படியாகவும், என்னுடைய ஜனத்தைப் பாசானிலிருந்து திரும்ப அழைத்துவருவேன்; அதைச் சமுத்திர ஆழங்களிலிருந்தும் திரும்ப அழைத்துவருவேன் என்று ஆண்டவர் சொன்னார்" (சங் 68:22,23) என்று தாவீது சொன்ன வாக்கியம் இங்கு நிறைவேறுகிறது.

ஆகாபின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும், அவன் கட்டின தந்த அரமனையின் வரலாறும், அவன் கட்டின எல்லாப் பட்டணங்களின் வரலாறும் இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது. ஆகாப் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவன் குமாரனாகிய அகசியா அவன் ஸ்தலத்தில் ராஜாவாகிறான் (1இராஜா 22:39,40).

ஆகாப் கட்டின தந்த அரமனை மிகவும் பிரசித்திப்பெற்றது. சாலொமோன் ராஜா எருசலேமிலே தன்னுடைய அரமனைகளைக் கட்டினார். யூதாவின் ராஜாக்கள், சாலொமோன் கட்டின அரமனையிலே வாசம்பண்ணுகிறார்கள். யூதாவின் ராஜாக்களுடைய அரமனைக்கு ஒப்பாக, சமாரியாவிலே ஒரு நேர்த்தியான அரமனையைக் கட்டவேண்டும் என்பது ஆகாபின் விருப்பம். ஆகாப் தன்னுடைய விருப்பத்தின் பிரகாரமாக சமாரியாவிலே ஒரு தந்த அரமனையைக் கட்டினான்.

யோசபாத்தின் ராஜ்யபாரம் 1இராஜா 22:41-50

1இராஜா 22:41. ஆசாவின் குமாரனாகிய யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபின் நாலாம் வருஷத்தில் யூதாவின்மேல் ராஜாவானான்.

1இராஜா 22:42. யோசபாத் ராஜாவாகிறபோது முப்பத்தைந்து வயதாயிருந்து, இருபத்தைந்து வருஷம் எருசலேமில் ராஜ்யபாரம்பண்ணினான்; சில்கியின் குமாரத்தியாகிய அவனுடைய தாயின் பேர் அசுபாள்.

1இராஜா 22:43. அவன் தன் தகப்பனாகிய ஆசாவின் வழிகளிலெல்லாம் நடந்தான்; அவன் அதை விட்டு விலகாமல் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்; ஆகிலும் மேடைகள் தகர்க்கப்படவில்லை; ஜனங்கள் இன்னும் மேடைகளின்மேல் பலியிட்டுத் தூபங்காட்டி வந்தார்கள்.

1இராஜா 22:44. யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவோடே சமாதானமாயிருந்தான்.

1இராஜா 22:45. யோசபாத்தின் மற்ற வர்த்தமானங்களும், அவன் காட்டிய வல்லமையும், அவன் பண்ணின யுத்தமும், யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

1இராஜா 22:46. தன் தகப்பனாகிய ஆசாவின் நாட்களில் மீதியாய் விட்டிருந்த இலச்சையான புணர்ச்சிக்காரரையும் அவன் தேசத்திலிருந்து அற்றுப்போகப்பண்ணினான்.

1இராஜா 22:47. அப்பொழுது ஏதோமில் ராஜா இல்லை; பிரதிராஜா ஒருவன் இருந்தான்.

1இராஜா 22:48. பொன்னுக்காக ஒப்பீருக்குப் போகும்படி, யோசபாத் தர்ஷீஸ் கப்பல்களைச் செய்தான்; ஆனால் அவைகள் போகவில்லை; அவைகள் எசியோன்கேபேரிலே உடைந்துபோயின.

1இராஜா 22:49. அப்பொழுது ஆகாபின் குமாரனாகிய அகசியா யோசபாத்தை நோக்கி: என் வேலைக்காரர் உம்முடைய வேலைக்காரரோடுங்கூடக் கப்பல்களிலே போகட்டும் என்றான்; அதற்கு யோசபாத் சம்மதிக்கவில்லை.

1இராஜா 22:50. யோசபாத் தன் பிதாக்களோடே நித்திரையடைந்து, தாவீதின் நகரத்திலே தன் பிதாக்களோடே அடக்கம் பண்ணப்பட்டான்; அவன் குமாரனாகிய யோராம் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தின் ராஜ்யபாரத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சுருக்கமாக எழுதப்பட்டிருக்கிறது. இவனுடைய ராஜ்யபாரத்தின் விரிவான விவரம் நாளாகமம் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. யோசபாத் கர்த்தருக்கு பயந்தவன். ஆனாலும் இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபின் வீட்டாரோடு இவன் சிநேகம் வைத்திருந்தான்.

யூதாவின் ராஜாவாகிய யோசபாத், இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபோடு சேர்ந்து, சீரியாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனான். அகசியா ஆகாபின் குமாரன்.

யோசபாத் பொன்னுக்காக ஒப்பீருக்குப் போகும்படி, தர்ஷீஸ் கப்பல்களைச் செய்கிறான்; ஆனால் அவைகள் போகவில்லை; அவைகள் எசியோன்கேபேரிலே உடைந்துபோயிற்று. அப்பொழுது ஆகாபின் குமாரனாகிய அகசியா யோசபாத்தை நோக்கி: "என் வேலைக்காரர் உம்முடைய வேலைக்காரரோடுங்கூடக் கப்பல்களிலே போகட்டும்" என்று சொல்லுகிறான்; அதற்கு யோசபாத் சம்மதிக்கவில்லை (1இராஜா 22:48,49).

யோசபாத் ஆகாபோடு உடன்படிக்கை செய்து, சீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனான். இந்த யுத்தத்தில் யோசபாத்திற்கு மிகப்பெரிய ஆபத்து உண்டாயிற்று. அதன் பின்பு யோசபாத் ஆகாபின் வீட்டாரோடு ஒப்பந்தம் பண்ண விரும்பவில்லை. யோசபாத் ஆகாபின் குமாரனாகிய அகசியாவோடு கப்பல் வியாபாரத்தில் சம்பந்தம் பண்ண விரும்பாமல் மறுத்துவிடுகிறான்.

கீலேயாத்திலுள்ள ராமோத்திலே தனக்கு வந்த ஆபத்தை யோசபாத் இன்னும் மறக்கவில்லை. ஆகாபைப்போன்ற துன்மார்க்கனோடு சிநேகம் வைத்துக்கொள்ளக்கூடாது என்று யோசபாத் தீர்மானம்பண்ணுகிறான்.

யோசபாத் யூதாதேசத்திலே அநேகம் வருஷங்களுக்கு ஆட்சி புரியவில்லை. ஆனாலும் யோசபாத்தின் ஆட்சிக்காலம் நல்ல ஆட்சிக்காலமாயிருக்கிறது. யோசபாத் ராஜாவாகிறபோது முப்பத்தைந்து வயதாயிருந்து, இருபத்தைந்து வருஷம் எருசலேமில் ராஜ்யபாரம்பண்ணுகிறான் (1இராஜா 22:42). சில்கியின் குமாரத்தியாகிய அவனுடைய தாயின் பேர் அசுபாள்.

யோசபாத் தன் தகப்பனாகிய ஆசாவின் வழிகளிலெல்லாம் நடக்கிறான்; அவன் அதை விட்டு விலகாமல் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்கிறான் (1இராஜா 22:43). யோசபாத்தின் ஆட்சிக்காலத்தில், யூதாதேசத்தில் அமைதியும் செழிப்பும் உண்டாயிற்று. ஜனங்கள் கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருக்கிறார்கள்.

யோசபாத் தன் தகப்பனாகிய ஆசாவின் நாட்களில் மீதியாய் விட்டிருந்த இலச்சையான புணர்ச்சிக்காரரையும் அவன் தேசத்திலிருந்து அற்றுப்போகப்பண்ணுகிறான்(1இராஜா 22:44).

ஆகிலும் மேடைகள் தகர்க்கப்படவில்லை; ஜனங்கள் இன்னும் மேடைகளின்மேல் பலியிட்டுத் தூபங்காட்டி வருகிறார்கள் (1இராஜா 22:43). யூதாகோத்திரத்தாரும் பென்யமீன் கோத்திரத்தாரும், மேடைகளின்மேல் பலியிட்டு தூபங்காட்டி வருகிறார்கள். இவர்கள் எருசலேமுக்கு அருகாமையிலிருந்தாலும், கர்த்தரை முழுஇருதயத்தோடும், முழுமனதோடும் பின்பற்றவில்லை.

யோசபாத்தின் ஆட்சிக்காலத்தில், யூதாதேசத்திலே சமாதானம் நிரம்பியிருக்கிறது. இவனுடைய காலத்தில் இஸ்ரவேலர் யூதாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வரவில்லை. யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவோடே சமாதானமாயிருக்கிறான் (1இராஜா 22:44).

யோசபாத் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவதை தவிர்க்கிறான். யுத்தம் இல்லாதிருந்தால்தான் சமாதானம் இருக்கும். அப்பொழுது ஏதோமில் ராஜா இல்லை; பிரதிராஜா ஒருவன் இருக்கிறான் (1இராஜா 22:47). ஏதோமின் பிரதிராஜா, யோசபாத்திற்கு பகுதி பணம் கட்டுகிறான்.

"மூத்தவன் இளையவனை சேவிப்பான்" என்னும் தீர்க்கதரிசனம் ஏசாவுக்கும் யாக்கோபுக்கும் சொல்லப்பட்டது. இது யோசபாத்தின் ராஜ்யபாரத்தில் நிறைவேறுகிறது. யோசபாத் கர்த்தரைக் கனம்பண்ணுகிறான். கர்த்தர் யோசபாத்தை ஆசீர்வதிக்கிறார்.

யோசபாத்தின் மற்ற வர்த்தமானங்களும், அவன் காட்டிய வல்லமையும், அவன் பண்ணின யுத்தமும், யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது (1இராஜா 22:45).

அகசியாவின் ராஜ்யபாரம் 1இராஜா 22:51-53

1இராஜா 22:51. ஆகாபின் குமாரனாகிய அகசியா யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தின் பதினேழாம் வருஷத்திலே சமாரியாவில் ராஜாவாகி, இஸ்ரவேலின் மேல் இரண்டு வருஷம் ராஜ்யபாரம்பண்ணி,

1இராஜா 22:52. கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, தன் தகப்பன் வழியிலும், தன் தாயின் வழியிலும், இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரன் யெரொபெயாமின் வழியிலும் நடந்து,

1இராஜா 22:53. பாகாலைச் சேவித்து, அவனைப் பணிந்துகொண்டு, தன் தகப்பன் செய்தபடியெல்லாம் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குக் கோபமுண்டாக்கினான்.

அகசியா ஆகாபின் குமாரன். இவன் இஸ்ரவேல் தேசத்தில் நீண்டகாலம் ராஜ்யபாரம் பண்ணவில்லை. இவன் இரண்டு வருஷம் மாத்திரமே ராஜ்யபாரம்பண்ணுகிறான். கர்த்தர் துன்மார்க்கருடைய ஜீவியத்தை சீக்கிரத்தில் முறிந்துபோகப்பண்ணுகிறார். அவர்களுடைய பாவமான கிரியைகளையும் சீக்கிரத்தில் அழித்துப்போடுகிறார்.

ஆகாபின் குமாரனாகிய அகசியா யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தின் பதினேழாம் வருஷத்திலே சமாரியாவில் ராஜாவாகி, இஸ்ரவேலின்மேல் இரண்டு வருஷம் ராஜ்யபாரம்பண்ணுகிறான் (1இராஜா 22:51).

அகசியாவின் துன்மார்க்கமான கிரியைகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லுப்பட்டிருக்கிறது. அகசியா கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, தன் தகப்பன் வழியிலும், தன் தாயின் வழியிலும், இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரன் யெரொபெயாமின் வழியிலும் நடக்கிறான் (1இராஜா 22:52).

அகசியா யெரொபெயாமின் விக்கிரகாராதனையையும் பின்பற்றுகிறான். அவன் பாகால்களையும் ஆராதிக்கிறான். யெரொபெயாம் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கி, விக்கிரகங்களைப் பின்பற்றிப்போனதினால், அவனுடைய முழுக்குடும்பமும் சங்காரமாயிற்று. யெரொபெயாமின் சோகமான சரித்திரம் அகசியாவுக்கு நன்றாய்த் தெரியும்.

ஆகாபோடுகூட பாகாலின் தீர்க்கதரிசிகள் இருந்தார்கள். இவர்களெல்லோருமே கள்ளத்தீர்க்கதரிசிகள். இவர்கள் ஆகாபின் அழிவுக்கு காரணமாயிருந்தவர்கள். ஆனாலும், ஆகாபின் குமாரனாகிய அகசியா, தன் தகப்பன் வழியிலும், தாயின் வழியிலும் நடக்கிறான்.

அகசியா பாகாலைச் சேவித்து, அவனைப் பணிந்துகொண்டு, தன் தகப்பன் செய்தபடியெல்லாம் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குக் கோபமுண்டாக்குகிறான் (1இராஜா 22:53).

ஆகாப் செத்துப்போனபின்பு, அவனுடைய குமாரன் அகசியா இஸ்ரவேலுக்கு ராஜாவாகிறான். ஆகாப் செத்துப்போனாலும், அகசியாவின் தாயாகிய யேசபேல் இன்னும் மரித்துப்போகவில்லை. அவள் இன்னும் ஜீவனோடிருந்து, தன்னுடைய குமாரன் அகசியாவுக்கு துன்மார்க்கமான ஆலோசனைகளை சொல்லுகிறாள். இதன் நிமித்தமாய் அகசியா பாகாலை சேவிக்கிறான்.